3897

# Index to
# Tamil Nadu Legislative Assembly Debates

*Seventh Session of the Fourth Legislative Assembly under the Constitution of India.*

*21st March 1970 to 25th March 1970.*

(Volume XXIX—Nos. 1 to 44)

TABLE OF CONTENTS.

*Saturday, 21st March 1970.*


| | Pages |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... ... | 1–20 |
| 2. Calling Attention— | |
| Failure of the Electricity Board to implement the recommendations of the Electricity Wage Board and the decision taken by the various Employees' Associations of the Board to resort to direct action and the consequent hardship to the public ... ... ... | 21–25 |
| 3. Presentation of Report— | |
| Report of the Estimates Committee on Madras Record Office ... ... ... ... ... | 25 |
| 4. Government Bill— | |
| Tamil Nadu Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1970 ... ... ... ... ... ... | 25 |
| 5. Point of Order— | |
| Allotment of separate seats for the party functioning under the leadership of Thiru G. Bhuvarahan ... ... ... ... ... ... | 26–35 |
| 6. Voting on Demands for Grants for 1970–71 (*cont.*) | |
| (*a*) Demand No. 2—Motor Vehicles Acts—Administration. | |
| (*b*) Demand No. 30—Road Transport Schemes. | |
| (*c*) Demand No. 43—Capital Outlay on Road Transport Schemes. | 36–111 |
| 7. Papers laid on the Table ... ... ... | 112 |




Y211,31 N70
31N71.2931
61484

Pages

*Monday, 23rd March 1970.*

1. Questions and Answers ... ... ... ... 161–218
2. Points of order *re.*—
   (*a*) Supplementary questions not pertaining to main question ... ... ... ... 164.
   (*b*) Chief Minister's statement on agitation at Coimbatore against rise in electricity charges ... ... ... ... ... 218
   (*c*) Minister's refusal to yield to a point of order raised by a Member ... ... ... 290–293
   (*d*) Permission from the Chair for the Chief Minister to quote from a bit notice ... 305–306
3. Announcements—
   (*a*) Postponement of consideration of Adjournment Motion and Privilege Matters, the next day. 218
   (*b*) Party-wise allotment of seats ... ... 219–221
   (*c*) The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... 227
   (*d*) Distortion of Chief Minister's speech by Thiru K. R. Nallasivan ... ... 271–275
4. Point raised by Thiru K. R. Nallasivan about the Chief Minister's reference to his party during the discussion on Coimbatore incidents 221–227
5. Government Bill—
   The Tamil Nadu Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1970 ... ... 227
6. Voting on Demands for Grants for 1970–71 (*cont.*)—
   (*a*) Demand No. 22—Khadi ... ... ...
   (*b*) Demand No. 23—Community Development Projects, etc. 285–305,
   (*c*) Demand No. 29—Public Works—Grants in-Aid. 306–307
7. Personal Explanation—
   Statement by Thiru A. R. Marimuthu regarding the agitation by the agriculturists of Coimbatore district against the increased electricity tariff ... ... ... ... 283–285
8. Papers laid on the Table ... ... ... ... 307



*Tuesday, 24th March 1970.*

Pages

1. Questions and Answers ... ... ... ... 357–383
2. Point of Order *re*—
   Questions remaining unanswered ... ... 383–384
3. Privilege Matter—
   Publication of certain portions of the Assembly Proceedings in " Malai Murasu " ... ... 385–387
4. Adjournment Motion—
   Non-acceptance of the Fourth Five-Year Plan by Tamil Nadu during the Chief Ministers' Conference ... ... ... ... ... 387–392
5. Voting on Demands for Grants for 1970-71 (*cont.*)—
   (i) Demand No. 9-A—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959.
   (ii) Demand No. 21—Cinchona.
   (iii) Demand No. 35—Forest Department.
   (iv) Demand No. 44—Capital Outlay on Forests. 392–459
6. Papers laid on the Table ... ... ... ... 460–461

*Wednesday, 25th March 1970.*

1. Questions and Answers ... ... ... ... 503–532
2. Announcement—
   Postponement of certain Adjournment Motions for consideration, the next day ... ... 532
3. Final Supplementary Statement of Expenditure for the year 1969–70 ... ... ... ... 533–536
4. Voting on Demands for Grants for 1970–71 (*cont.*)—
   (i) Demand No. 26—Irrigation.
   (ii) Demand No. 27—Public Works—Works.
   (iii) Demand No. 28—Public Works—Establishment and Tools and Plant.
   (iv) Demand No. 41—Capital Outlay on Irrigation.
   (v) Demand No. 42—Capital Outlay on Public Works. 536–654
5. Papers laid on the Table ... ... ... 654

## How to use the index.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement. etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading ' Bill(s) '.

Various bodies like Commmittees, Councils, Boards, Corporations , etc., are consolidated under the said Main Headings, i.e., ' Committee(s) ', ' Council(s) ', ' Corporation(s) ', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading " Papers laid on the Table ".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading " Chair ".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion |
| Ann. | ... | Announcement |
| B.O.H. | ... | Business of the House |
| C.A. | ... | Calling Attention to a matter of urgent public importance. |
| C.A. St. | ... | Calling Attention Statement. |

| | | |
|---|---|---|
| **Consid.** | ... | Consideration stage of a Bill. This stage includes :<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| D.S.D. or Dis. S.D. | ... | Discussion for Short Duration Duration on an urgent matter of administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | .. | Half-hour Discussion. |
| L.A. | ... | Legislative Assembly. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res. | ... | Resolution. |
| St. | ... | Statement. |

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

சர்தார் உஜ்ஜல் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதல் அமைச்சர்):** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி-விளம்பரம், திரைப்படச் சட்டம், உணவு உற்பத்தி, பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

2. **மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் (கல்வி-சுகாதார அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் . தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, பொதுச் சுகாதாரம், மருத்துவம், சட்ட மன்றம்.

3. **மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (நிதி அமைச்சர் :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

**4. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து (வேளாண்மை அரிசன நல அமைச்சர்) .** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, அரிசனநலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், சுற்றுலா.

5. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர்).** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பிற்பட்டோர் நலன், பத்திரப் பதிவு, எழுது பொருள்-அச்சுத்துறை, அரசாங்க அச்சகம்.

6. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு வணிக வரித் துறை அமைச்சர்) .** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, வணிக வரிகள், கால்நடை வளர்ப்பு, பால் வழங்கு துறை.

7. **மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் அமைச்சர்) .** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டம் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் 'அறக் கட்டளைகள் ('Waqfs ), போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், பூதான, கிராமதான இயக்கங்கள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி.

10. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். கூட்டுறவு, வேளாண்மை, மறுநிதி உதவி, துறைமுகங்கள்

11. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா (அறநிலையத் துறை அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அறக் கட்டளைகள், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள் சின்கோனா.

13. மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் (தொழிலாளர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழிலாளர். எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரங்கள், இரவலர்கள், அனாதை இல்லங்கள்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU

SARDAR UJJAL SINGH

---

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. The HON. THIRU M. KARUNANIDHI (Chief Minister) : Minister in charge of Public, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers and Deputy Collector's Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Food Production, Passports and Newsprint Control and Prices and Supplies of Goods Act.

The HON. THIRU V. R. NADUNCHAZHIYAN (Minister for Education and Health) : Minister in-charge of Education including Technical Education, Official Lalnguage, Public Health and Medicine and Legislature.

3. The HON. THIRU K. A. MATHIALAGAN (Minister for Finance) : Minister in-charge of Finance, Planning, Revenue Board of Revenue, District Revenue Establishments, Indian Overseas, Refugees and Evacuees.

4. The HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (Minister for Agriculture and Harijan Welfare) : Minister in-charge of Agriculture, Harijan Welfare, Women's and Children's Welfare Fisheries and Tourism.

5 The HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) : Minister in charge of Backward Classes, Registration, Stationery and Printing and Government Press.

6 The HON. THIRU P. U. SHANMUGHAM (Minister for Food and Commercial Taxes) : Minister in-charge of Food, Commercial Taxes Animal Husbandry and Milk.

7. The HON. THIRU S. MADHAVAN (Minister for Industries) : Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons

8. The HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Public Works) : Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Project Works, Highways and Waqfs, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

9 The HON. THIRU M. MUTHUSWAMY (Minister for Local Administration) : Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats Bhoodan and Gramdan, Khadi and Village Industries, Rural Industries Project, Ex servicemen and Prosperity Brigade.

10. The HON. THIRU Si. Pa. ADITANAR (Minister for Co-operation): Minister in-charge of Co-operation, Agricultural Refinance and Ports.

11. The HON. THIRU K. V. SUBBIAH (Minister for Religious Endowments): Minister in-charge of Religious Endowments, Housing, Accomodation Control, Approved Schools and Vigilance Services.

12. The HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity): Minister in-charge of Electricity, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU K. VEZHAVENDAN (Minister for Labour): Minister in-charge of Labour, Legislation on Weights and Measures and Statistics, Beggars and Orphanages.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்,

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன்.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. ந. தருமலிங்கம்.
திரு. ஆர். என். அரங்கநாதன்.
திரு. என். எஸ். வி. சித்தன்.
திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்.
திரு. எம். சுரேந்திரன்.
திரு. வி. டி. அண்ணாமலை.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. ஜி. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பட்டியல்.

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். | இராணிப்பேட்டை |
| 2 | ஆதித்தனார், சி. பா. (அமைச்சர்) | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்கினிராஜு, எஸ், | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து. ப. (அரசாங்கத் தலைமை ஆளுங்கட்சி இணைப்பாளர்) | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. | கடலாடி (செ. வ.) |
| 8 | ஆனந்தன், மு. | ரிஷிவந்தியம் (செ. வ.) |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ) |
| 10 | அண்ணாமலை, சி.வி.எம். | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. | மயிலாப்பூர். (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ் | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, ஏ. வி. பி. | எழும்பூர், (சென்னை மாநகரம்). |
| 19 | பாலன், எம். சி. | நாகர்கோவில். |
| 20 | பாலகிருஷ்ணன், ஏ. கோ. | வானூர் (செ. வ.) |
| 21 | பலராமன், இல. | கணியம்பாடி. |
| 22 | பாலசுப்பிரமணியன், ஏ. | திண்டுக்கல். |
| 23 | பெள்ளி கௌடர், ஜெ. | கூனூர் |
| 24 | பாரதிமோகன், கோ. | குத்தாலம். |
| 25 | பூபதி, எம். | கோயம்புத்தூர்—கிழக்கு. |
| 26 | பூவராகன், கோ. | விருத்தாசலம். |
| 27 | போஜன், கே. | உதகமண்டலம். |
| 28 | சீமைச்சாமி, கரு. | மானாமதுரை. |
| 29 | சின்னராஜி, சி. கே. | திருப்பத்தூர். |
| 30 | சின்னச்சாமி, மு. | ஈரோடு |
| 31 | சின்னச்சாமி, வி. | ஏர்க்காடு (ஆ. வா.) |
| 32 | சித்தன், என். எஸ். வி. | திருமங்கலம் |
| 33 | தனுஷ்கோடி, பி. எஸ். | திருவாரூர் (செ. வ.) |
| 34 | தருமலிங்கம், ந. | திருத்துறைப்பூண்டி. |
| 35 | துரைராஜ், சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 36 | துரைபாண்டியன், என். | நாங்குனேரி. |
| 37 | துரைராஜ், பி. | சங்கரன்கோவில், |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 38 | துரைசாமி, சு. | திருப்பூர். |
| 39 | துரையரசன், ஆ. | அறந்தாங்கி. |
| 40 | எட்மண்ட், ஜி. ஆர். (பேரவைத் துணைத் தலைவர்) | திருச்செந்தூர். |
| 41 | இளம்வழுதி, இரெ. | கடலூர். |
| 42 | எல்லப்பன், பி. எஸ். | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 43 | கணேசன், எல். | ஒரத்தநாடு. |
| 44 | கணேசன், எஸ். | செம்பனார்கோவில். |
| 45 | ஜார்ஜ், வ. | பத்மநாபபுரம். |
| 46 | ஞானசம்பந்தன், கொ. இர. | நாகப்பட்டினம். |
| 47 | கோமதிசங்கர தீட்சிதர், க. | அம்பாசமுத்திரம். |
| 48 | கோபால், எம். | குன்றத்தூர் (செ. வ.). |
| 49 | கோவிந்தன், கே. ஆர். | தாரமங்கலம். |
| 50 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 51 | கோவிந்தராசன், ம. சொ. | மதுரை சென்ட்ரல். |
| 52 | கோவிந்தராசன், சி. | நெல்லிக்குப்பம். |
| 53 | கோவிந்தராஜன், வி. எஸ். | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 54 | கோவிந்தராசுலு, கே. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 55 | கோவிந்தராசன், ஆ. | புவனகிரி. |
| 56 | ஹபிபுல்லா பேக், டாக்டர் | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 57 | ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 58 | இளஞ்செழியன், வீ. சா. | விராலிமலை |
| 59 | இராசரத்தினம், டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 60 | ஜேம்ஸ், ஜே. | திருவட்டார். |
| 61 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. | மதுரை-கிழக்கு. |
| 62 | ஜயராஜ், பி. | நன்னிலம் (செ. வ.). |
| 63 | ஜயராமன், கி. | சேலம்-1. |
| 64 | ஜெயராமன், பி. | பேர்ணாம்பட்டு (செ. வ.) |
| 65 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. | ஜெயங்கொண்டம் (செ.வ.). |
| 66 | கனகசபை, ரா. | சிதம்பரம். |
| 67 | கந்தசாமி கவுண்டர், செ. | அரவக்குறிச்சி. |
| 68 | கந்தசாமி, எம். | குளித்தலை. |
| 69 | கந்தசாமி படையாச்சி, மு. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 70 | கண்ணன், எம். ஆர். | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 71 | கணபபன், எம். | கிணத்துக்கடவு. |
| 72 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 73 | கருணாநிதி, மு. (முதல் அமைச்சர்) | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 74 | கருப்பையா, ஆ. | கங்கைகொண்டான் (செ. வ.). |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 75 | கருப்பையா, ஆர். | அரியலூர். |
| 76 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 77 | காசிராமன், நா. | கும்பகோணம். |
| 78 | கதிரவன், க. மு. | தென்காசி. |
| 79 | கேசவலு, தே. | கள்ளக்குறிச்சி. |
| 80 | கிட்டப்பா, என். | மாயூரம். |
| 81 | கொளத்தூர் கோதண்டம் | மதுராந்தகம். |
| 82 | கோதண்டராமன், வி. கே. | குடியாத்தம். |
| 83 | கோதண்டராமைய்யா, கே. எஸ். | உத்தனப்பள்ளி. |
| 84 | கிருஷ்ணமூர்த்தி, கு. | பழனி (செ.வ.). |
| 85 | கிருஷ்ணமூர்த்தி, சி. | கொடவாசல். |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, மு. | பேராவூரணி. |
| 87 | கிருஷ்ணன், அ. | மங்களூர் (செ.வ.) |
| 88 | கிருஷ்ணன், ஈ. ஆர். | சேலம்-2. |
| 89 | கிருட்டிணன், நா. | காஞ்சீபுரம். |
| 90 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. | அவிநாசி. |
| 91 | குமாரசாமி, கே. என். | பல்லடம். |
| 92 | குப்பம்மாள், திருமதி சு. | போளூர். |
| 93 | மாதவன், செ. (அமைச்சர்) | திருப்பத்தூர். |
| 94 | மகாதேவன், ப. | கன்யாகுமரி. |
| 95 | மலைச்சாமி, பெ. | மேலூர். |
| 96 | மலைக்கண்ணன், வீ. | இளையாங்குடி. |
| 97 | மணி, கே.பி.எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 98 | மணி, எம். எஸ். | திருச்சிராப்பள்ளி-1. |
| 99 | மணி, வி. எஸ். எஸ். | ஆத்தூர். |
| 00 | மாணிக்கவாசகம், இரா. | தொண்டாமுத்தூர். |
| 101 | மணியன், பி.எஸ். | சோழவந்தான். |
| 102 | மாரிமுத்து, அ. | ஆடுதுறை. |
| 103 | மாரிமுத்து, ஏ.ஆர். | பட்டுக்கோட்டை. |
| 104 | மாரிமுத்து, மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 105 | மார்டின், டி. | சாத்தான்குளம். |
| 106 | மருதாசலம், என். | பேரூர் (செ.வ.). |
| 107 | மதியழகன், கே. ஏ. (அமைச்சர்) | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 108 | மெய்யப்பன, ரா. | காரைக்குடி. |
| 109 | மேத்தா, எம். | பெரியகுளம். |
| 110 | மூக்கையா தேவர், பி.கே. | உசிலம்பட்டி. |
| 111 | முனுசாமி கௌண்டர், பி.எம். | கிருஷ்ணகிரி. |
| 112 | முனுசாமி, ரா.ரா. | மேல்மலையனூர். |
| 1.3 | முனியாண்டி, ஏ. | நீலக்கோட்டை [செ.வ.] |
| 114 | முனு. ஆதி | திருப்போரூர். |
| 115 | முருகையன், புலவர் க. | திருவையாறு. |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர் | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 116 | முருகையன், எஸ். | கலசபாக்கம். |
| 117 | முருகேசன், க. | பாலக்கோடு. |
| 118 | செஞ்சி முனுசாமி, வெ. | செஞ்சி. |
| 119 | முத்தையா, கே. கே. | கடலூர். |
| 120 | முத்தையா. மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 121 | முத்துலிங்கம், எஸ். | வந்தவாசி (செ.வ.) |
| 122 | முத்துசாமி, பா. கசி. | பெண்ணாகரம். |
| 123 | முத்துசாமி, மா. (அமைச்சர்) | நாமக்கல். |
| 124 | முத்துச்செல்வன், பு.செ. | முசிறி. |
| 125 | நாச்சிமுத்து, நா. | ஒட்டன்சத்திரம. |
| 126 | நாகலிங்கம், பா. | பொன்னேரி (செ.வ.) |
| 127 | நாகசுந்தரம், ஆர். | திருச்சிராப்பள்ளி-2. |
| 128 | நல்லசிவன், க. ர. | மொடக்குறிச்சி. |
| 129 | நல்லசாமி, தோ. மு. | கரூர். |
| 130 | நஞ்சன், சி. | கடலூர் (செ.வ.). |
| 131 | நரசிம்மன், ஏ. சி. | ஆரணி. |
| 132 | நாராயணன், இரா. | வரகூர். |
| 133 | நடராசன், மு. க. து. | லால்குடி. |
| 134 | நடராஜன், ஜி. | காட்பாடி. |
| 135 | நடராசன், ஈ. எம். | அந்தியூர். |
| 136 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர் பேரவை முன்னவர்) | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்). |
| 137 | பச்சையப்பன், எஸ். பி. | சங்கராபுரம். |
| 138 | பத்மாவதி, திருமதி, ஜி. | முகையூர். |
| 139 | பழனி, சி. | ஓமலூர் (செ.வ.). |
| 140 | பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம் (செ.வ.). |
| 141 | பழனிவேல் ராஜன் | தேனி. |
| 142 | பன்னீர்செல்வம், எம். | ஆம்பூர் (செ.வ.) |
| 143 | பரமசிவம் பி. என். | பொங்கலூர். |
| 144 | பரமசிவம், எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 145 | பரிசுத்த நாடார், ஏ. ஒய். எஸ். | தஞ்சாவூர். |
| 146 | பட்டாபி நாயுடு, எ. | காவேரிப்பட்டணம் |
| 147 | பீர் முஹம்மது, ஹாஜி. ம. மு. | மேலப்பாளையம். |
| 148 | பெரியசாமி, பெ. | ராசிபுரம். |
| 149 | பெருமாள், ஏ. ஆர். | கரியாப்பட்டி. |
| 150 | பொன்னம்பலம், புலவர் பொ. | திருமயம். |
| 151 | பொன்னப்ப நாடார், ஆர். | விளவங்கோடு. |
| 152 | பொன்னுமலை, தி. | பனமரத்துப்பட்டி. |
| 153 | இராஜா, வ. எம். | பவானி. |
| 154 | ராசகோபால், க. மு. | உத்திரமேரூர். |
| 155 | ராஜமன்னார், எஸ். ஏ. | வாணியம்பாடி. |
| 156 | இராசாங்கம், மா. | கம்பம். |
| 157 | ராஜாங்கம். என். | குறிஞ்சிப்பாடி (செ.வ) |

| தொடர் எண். | உறுப்பினர் பெயர் | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 158 | ராஜவேலு, டி. ஏ. | திருச்செங்கோடு. |
| 159 | ராமச்சந்திர துரை, ரா. | கந்தர்வக்கோட்டை. |
| 160 | இராமச்சந்திரன், க. ந. | ஆண்டிமடம். |
| 161 | ராமச்சந்திரன், எம். ஜி. | பரங்கிமலை. |
| 162 | இராமச்சந்திரன், எஸ். | பண்ருட்டி. |
| 163 | ராமலிங்கம், எஸ். | ஸ்ரீரங்கம் (செ.வ.) |
| 164 | இராமமூர்த்தி, க. | திண்டிவனம். |
| 165 | இராமன், மு. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 166 | இராமன், ஓ. பி. (அமைச்சர்) | மேலூர்-தெற்கு (செ.வ.) |
| 167 | இராமராசன், வ.க. | பவானிசாகர் (செ.வ.) |
| 168 | இராமசாமி, இ. | வால்பாறை (செ.வ.) |
| 169 | ராமசாமி கவுண்டர், கே.எம். | கோபிசெட்டிப்பாளையம். |
| 170 | ராமசாமி, எஸ்.ஜே. | அரக்கோணம். |
| 171 | இராசு, ஜே.எஸ். | பெரம்பலூர் (செ.வ.) |
| 172 | இரத்தினசபாபதி, மு. | விளாத்திகுளம். |
| 173 | ரெத்தினதேவர், ரா. | முதுகுளத்தூர். |
| 174 | சாதிக் பாட்சா, எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 175 | சகாதேவக் கண்டர், கே. | தண்டராம்பட்டு. |
| 176 | சாமிநாதன், கே. என். | வெள்ளக்கோயில். |
| 177 | சங்கரய்யா, என். | மதுரை—மேற்கு. |
| 178 | சந்தானம், பி.எஸ். | செங்கம் (செ.வ.) |
| 179 | சாரதி, மா.பா. | வேலூர். |
| 180 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) (சென்னை மாநகரம்) |
| 181 | சீனிவாச நாயக்கர், ஆர். | சாத்தூர். |
| 182 | சீனிவாசன், பெ. | விருதுநகர். |
| 183 | செல்லக் கவுண்டர், அ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 184 | சேனுபதி, அ. | காங்கேயம். |
| 185 | சேதுராமன், சி. | சிவகங்கை. |
| 186 | சண்முகம், எம் | விழுப்புரம். |
| 187 | சண்முகசுந்தரம், அ.ப. | பொள்ளாச்சி. |
| 188 | சிறைமீட்டான், தொ.க. | பரமக்குடி (செ.வ.). |
| 189 | சிவஞானம், ம. பொ. | தியாகராயநகர் (சென்னை மாநகரம்.) |
| 190 | சிவபெருமாள், க.ந. | ஆத்தூர். |
| 191 | சிவசாமி, மு.ச. | தூத்துக்குடி. |
| 192 | சிவசுப்பிரமணியன், எஸ். | காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 193 | சோமசுந்தரம், ந. | வளங்கைமான் (செ.வ.) |
| 194 | சௌந்தரபாண்டியன், நா. | ராதாபுரம். |
| 195 | சௌந்தரபாண்டியன், பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 196 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. | பாபநாசம். |
| 197 | சுந்தர பாரதி, சௌடி எஸ். | அருப்புக்கோட்டை. |
| 198 | சீனிவாசன், சு. | போடிநாயக்கனூர். |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 199 | சுவாரெஸ், திருமதி ஏ. | நியமன உறுப்பினர் |
| 200 | சுப்பராஜா, ஏ.அ. | இராஜபாளையம். |
| 201 | சுப்பையா, ஆ.கு. | கோட்டூர் (செ.வ.) |
| 202 | சுப்பையா, கே. வி. (அமைச்சர்) | ஆலங்குடி. |
| 203 | சுப்பையா முதலியார், ஏ.ஆர். | கடையநல்லூர். |
| 204 | சுப்பிரமணியம், அ.லெ. | திருநெல்வேலி. |
| 205 | சுப்பிரமணிய கவுண்டர், எம். | தர்மபுரி. |
| 206 | சுப்பிரமணியம், இ.எம். | திருக்கோவிலூர். |
| 207 | சுரேந்திரன், எம். | மேட்டூர். |
| 208 | சுவாமிநாத உடையார், த.சி. | மன்னார்குடி. |
| 209 | சுவாமிநாதன், வை. | திருவெறும்பூர். |
| 210 | தம்பி நாயக்கர், பா. | வடமதுரை. |
| 211 | தங்கப்பன், டி. | இராமநாதபுரம். |
| 212 | தவமணி தேவர், வி. | சேடப்பட்டி. |
| 213 | தீர்த்தகிரி, ந. | ஹரூர் (செ.வ.) |
| 214 | தீர்த்தகிரி கவுண்டர், தி. | ஊத்தங்கரை. |
| 215 | திம்மராய கவுண்டர், தி. சி. | நாட்ராம்பள்ளி. |
| 216 | திப்பையா, டி.டி.எஸ். | மேட்டுப்பாளையம். |
| 217 | வடிவேலு, எஸ்.கே. | தொட்டியம். |
| 218 | வரதராஜன், என். | வேடசந்தூர். |
| 219 | வேதாசலம், மு. | வண்ணாரப்பேட்டை. (சென்னை மாநகரம் |
| 220 | வீரமணி, சி. | சங்கரி (செ.வ.) |
| 221 | வீராசாமி, ந. | ஆர்க்காடு. |
| 222 | வேலப்பன், சி. வே. | கபிலமலை. |
| 223 | வெள்ளத்துரை, ஏ. | வாசுதேவநல்லூர். |
| 224 | வேலுசாமி, பி. | சிங்காநல்லூர். |
| 225 | வெங்கடாசல தேவர், பெ. | வேதாரண்யம். |
| 226 | வெங்கடசாமி, பி. | ஹோசூர். |
| 227 | வேழவேந்தன், கா. (அமைச்சர்) | கும்மிடிப்பூண்டி. |
| 228 | விஜய ரகுநாத தொண்டமான், மா.ஆர். | புதுக்கோட்டை. |
| 229 | விஜயராஜ், தா. | திருவண்ணாமலை. |
| 230 | விநயகம், கே. | திருத்தணி. |
| 231 | விசுவநாதன், செ. கோ. | செங்கற்பட்டு. |
| 232 | வில்லியம், எம். | கிள்ளியூர். |
| 233 | வெற்றிடம் | பெருந்துறை |
| 234 | வெற்றிடம் | கொளச்சல் |
| 235 | வெற்றிடம் | சேரன்மகாதேவி. |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| தொடர் எண். | பெயர். | |
|---|---|---|
| (1) | (2) | |
| 1 | திரு. என். வி. நடராசன் | அமைச்சர். |
| 2 | திரு. ப. உ. சண்முகம் | அமைச்சர் |
| 3 | திரு. எஸ். கோவிந்த சாமிநாதன் | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

*சனிக்கிழமை, 1970 மார்ச் 21.*

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

*Pilot project in medical Research*

* 469.*Q*.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether there are proposals under the consideration of the Government to open a pilot project in medicinal Research in Madras Medical College, Madras City?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவ இரசாயன ஆராய்ச்சி முன்னோடித் திட்டம் ஒன்றைத் தொடங்க ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது.

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, இந்த மருத்துவத் துறையில் ஆராய்ச்சி என்றால், அது எந்த பிரிவைக் கொண்டு செய்யப்படும் என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இங்கே மாநிலக் கல்லூரியிலும், மற்றும் பல்வேறு இடங்களிலும் 'பாட்டனி' துறையிலும் 'கெமிஸ்ட்ரி' துறையிலும் பல ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. அங்கே நடைபெறுகின்ற ஆராய்ச்சிக்கும் மருத்துவக் கல்லூரியில் நடைபெறும் ஆராய்ச்சிக்கும் தொடர்பு இல்லாமலிருக்கிறது. டிபார்ட்மென்ட் ஆஃப் பாட்டனி, டிபார்ட்மென்ட் ஆஃப் கெமிஸ்ட்ரி இருக்கின்றன. 'டிபார்ட்மென்ட் ஆஃப் பார்மகாலஜி அண்டு ரிசர்ச் செல்' மெடிகல் காலேஜில் இருக்கிறது. அவைகளுக்குள்ளே ஒரு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுவதற்காகவும், இங்கேயிருக்கின்ற நம்முடைய நாட்டு மருந்துகளினுடைய தாங்களை ஆராய்வதன் மூலமாக, அதிலே சில நன்மை ஏற்படக்கூடும் என்பதற்காக அதை 'அனலைஸ்' செய்வதற்கும், தாத்தைப் பிரித்துப் பார்த்துப் பயன்படுத்த வேண்டும் என்றும் ப்ரொஃபொஸர் ஆஃப் பாட்டனி, ப்ரொஃபொஸர் ஆஃப் கெமிஸ்ட்ரி, ப்ரொஃபொஸர் ஆஃப் பார்மகாலஜி ஆகியவர்களையெல்லாம் போட்டு, ப்ரொஃபொஸர் ஆஃப் மெடிஸினாக இருக்கிற டாக்டர் ஆர். எஸ். சுப்பிரமணியம் அவர்களை அமைப்பாளராக வைத்து இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இது 23—12—1969-இலிருந்து செயல்படத் தொடங்கியது.

[1970 மார்ச் 21

**திரு. நா. வீராசாமி :** சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவ இரசாயன ஆராய்ச்சி முன்னோடித் திட்டம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு இருப்பதாகச் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தில் எம்.டி. (டாக்டர் ஆஃப் மெடிஸின்) என்கிற டிக்ரிக்கான பயிற்சியைத் துவக்கிய நேரத்தில், எம்.டி. (செஸ்ட்) என்ற துறை இல்லாமலிருக்கிறது. மற்ற மாநிலங்களில் அப்படிப்பட்ட கல்வி சொல்லித் தரப்படுகிறது. இருதயக் கோளாறைப் பற்றிப் படித்து, அதிலே ஸ்பெஷலைஸ் பண்ணுவதற்கான படிப்பு நம்முடைய மருத்துவக் கல்லூரியில் இல்லை. ஆகவே, இந்த மருந்தைத் தயாரிக்கும் முன்னோடித் திட்டத்தில் எம்.டி. (செஸ்ட்) என்ற பிரிவை ஏற்படுத்தி, முன்னோடித் திட்டத்தில் இதுவும் சேர்த்துக் கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது மருந்து ஆராய்ச்சி பற்றியது, நோய் ஆராய்ச்சி பற்றியது அல்ல.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஒரு புதிய ஆராய்ச்சித் துறை—மருந்து ஆராய்ச்சித் துறைக்கான அடிப்படைக் காரணத்தை நான் சொன்னேன். பல்வேறு ஆராய்ச்சிகள் செய்கின்ற நிலையங்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் நோக்கம். 'இண்டிஜினஸ் மெடிஸின்' என்று சொல்லப்படுகிற நாட்டு மருந்துகளின் தரங்களை ஆராய்ந்து பார்ப்பதற்காக இது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எம்.டி. (செஸ்ட்) என்று தனியாகத் துறையொன்றை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதற்கான அவசியம் இருக்கிறதா, இப்பொழுதிருக்கும் வெறுபல துறைகளே அந்தத் தேவையை நிறைவேற்றுகின்ற அளவிலே அமைந்திருக்கின்றனவா என்று ஆராய்ந்து சொல்லப்படும்.

*Jaundice cases treated in Madura Erskine Hospital.*

* 470 Q.—Dr. H. V. HANDE : Will the Hon the Minister for Education and Health be pleased to state—

(a) the total number of 'Jaundice' cases treated both as in-patients and out-patients in the Madurai Erskine Hospital between January to April 1969 ; and

(b) the number of fatalities, month war?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :**

| | | |
|---|---|---|
| (அ) | சனவரி, 1969-இல் | 25 |
| | பிப்ரவரி, 1969-இல் | 16 |
| | மார்ச்சு, 1969-இல் | 18 |
| | ஏப்ரல், 1969-இல் | 24 |
| | | **83** |



1970 மார்ச் 21]

| | | |
|---|---|---|
| (இ) | சனவரி, 1969-இல் | 2 |
| | பிப்ரவரி, 1969-இல் | 4 |
| | மார்ச்சு, 1969-இல் | 5 |
| | ஏப்ரல், 1969-இல் | 2 |
| | | **13** |

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்த மஞ்சள் காமாலை நோயினால் நிறைய பேர் இறந்திருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த நோயைக் குணப்படுத்த ஆங்கில மருத்துவ முறையில் சரியான மருந்து இல்லாத காரணத்தால் நிறைய பேர் இறக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால், கீழாநெல்லி இலையைச் சாப்பிட்டால் மஞ்சள் காமாலை நோய் போய்விடும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, கீழாநெல்லி இலையைக்கொண்டு மருந்து தயாரிப்பதுபற்றி ஆராய்ச்சி செய்து, அதன்மூலம் இந்த மஞ்சள் காமாலை நோயைப் போக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மஞ்சள் காமாலை நோயைத் தடுக்க, அந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களைக் குணப்படுத்த வேண்டும் என்றுதான் நாம் சொல்ல முடியுமே தவிர, டாக்டர்களிடத்தில், இன்ன இன்ன மருந்துகளைத் தாருங்கள், இப்படி இப்படிப் பக்குவப்படுத்துங்கள் என்று நாம் சொல்லுவதற்கில்லை. அதற்கான முயற்சிகளில் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் டாக்டர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

**ஹாஜி. ம. மு. பீர்முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் காமாலை நோய், பொதுவாக நம்முடைய மாநிலமெங்கும் பல்வேறு இடங்களில் பரவியிருக்கிறது. வைசூரி, காலரா போன்ற நோய்களுக்குத் தடுப்பு ஊசி போடுவதைப் போன்று, பரவலாக நம்முடைய நாடெங்கிலும் உள்ள மக்களுக்கு மஞ்சள் காமாலை நோய் வராமல் இருக்க தடுப்பு ஊசி போட வாய்ப்பு இருக்கிறதா ? அப்படி வாய்ப்பு இருக்குமானால், அரசு அதுபற்றி நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியபடி, நோயை விரைவில் போக்க வேண்டுமென்றுதான் டாக்டர்களைக் கேட்கலாமே தவிர, அதற்கு ஊசி போட வேண்டுமா, அதற்கு என்ன செய்வது என்பதை டாக்டர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அந்த நோய் பரவாமல் அதை நீக்குகின்ற முயற்சிகளைப் பொது நலத் துறை, மருத்துவத் துறையினர் மேற்கொண்டு வருகிறார்கள்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, மஞ்சள் காமாலை, வாத நோய் போன்றவற்றைக் குணப்படுத்துவதற்கு அலோபதி வைத்திய முறை சுகமில்லை என்ற பொதுவான அபிப்பிராயம் இருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசு சித்த வைத்தியம் போன்ற

துறைகளுக்கு இப்படிப்பட்ட சில நோய்களைப் பிரித்துக் கொடுத்து, அவற்றின் மூலம் வெற்றி காண ஏதாவது தனி முயற்சி எடுத்துக் கொள்ள முடியுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியபடி, டாக்டர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அலோபதி வைத்திய முறையில் என்ன என்ன நோய்க்கு என்ன என்ன மருந்துகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். நோயாளிகள், தங்களுக்கு எது குணப்படுத்தும் என்ற நம்பிக்கை கொண்டிருக்கிறார்களோ, அந்த மருந்துகளைப் பயன்படுத்துகிற வாய்ப்பும் இருக்கிறது. சித்த மருத்துவ நிலையங்களும் ஆங்காங்கு இருக்கின்றன. ஆயுர்வேத மருத்துவ நிலையங்களும் இருக்கின்றன. அதிலே நம்பிக்கை இருந்து அதன்மூலம் நோய் போகக் கூடும் என்று கருதுகிறார்களே அந்த மருந்துகளை நோயாளிகள் பயன்படுத்திக் கொள்ளுவதிலே எந்த மறுப்பும் இல்லை.

**திரு. சி. நஞ்சன் :** சென்ற ஆண்டு நீலகிரிப் பகுதியில் இந்த மஞ்சள் காமாலை நோய் அதிகமாகப் பரவி, நூற்றுக்கு மேற்பட்ட தாய்மார்கள், குழந்தைகள் இறந்து போனார்கள். அந்தப் பகுதியில் சில கிராமங்களில் வைத்திய வசதிக் குறைவின் காரணமாகத் தான் இந்தச் சம்பவம் ஏற்படுகிறது என்பது எனது கருத்து. ஆகவே, அப்படிப்பட்ட பிரதேசங்களில் ஒவ்வொரு கிராமமாகச் சென்று, இந்த வியாதி பரவியிருப்பதைக் கண்டறிந்து, அதைப் போக்குவதற்கு உடனடியாகத் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு ஏதாவது முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்து விவரம் வேண்டுமானால், தனிக் கேள்வி போடவேண்டும். அதைப்பற்றிய குறிப்புகள் இங்கே இல்லை. ஆனால், பொதுவாக, மஞ்சள் காமாலை நோய் பரவுவதற்கான அடிப்படைக் காரணங்களை நீக்குவதற்குப் பொது நலத் துறையினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த நோய்த் தீர்ப்பதற்கும், மருத்துவ மனைகளில் தீவிரமான நடவடிக்கைகளை ஆங்காங்கு எடுத்து வருகிறார்கள்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, 'காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்' என்று சொல்லுவார்கள். இத்தகைய நோய் கண்டவர்கள் சமூகத்தில் நிறையபேர் இருப்பதால், இதைத் தடுப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கைகள் எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே எடுத்துச்சொல்லியபடி, குறிப்பிட்ட நேரத்தில் இந் நோய் வருகிறது. இப்பொழுது மஞ்சள் காமாலை நோய் அவ்வளவு அதிகமாகப் பரவவில்லை. இதற்கான தடுப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம் என்று நான் முதலிலேயே சொன்னேன்.





**திரு. கே. என். குமாரசாமி :** மஞ்சள் காமாலை வருகிறபோது, ஜெனரல் ஆஸ்பத்திரியில் சரியானமுறையில் ட்ரீட்மெண்ட் இல்லாததால், வசதி படைத்தவர்கள் ஸ்பெஷல் ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொள்ள ஸ்பெஷல் டாக்டர்களிடம் போகிறார்கள். ஆனால், ஏழைகள் அவ்வாறு போகமுடியாமல் மிகவும் பாதிக்கப்படுவதால், ஜெனரல் ஆஸ்பத்திரியில் இதற்கு ஸ்பெஷல் ட்ரீட்மெண்ட் கொடுப்பதற்கான முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த நோய் தீவிரமாகப் பரவியிருந்த நேரத்தில் இதற்கு முக்கியத்துவம் தந்து, இதனால் பாதிக்கப்பட்டவர்களைக் காப்பாற்ற வேண்டியது முக்கிய பொறுப்பாக இருந்ததால், அதற்கான வசதிகள் செய்து தருமாறு மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளுக்கெல்லாம் ஆணைகள் இடப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உயிரிழப்பு ஏற்படுகின்ற அபாயம் இருப்பதால் இதைத்தவிர்ப்பதற்கு வசதி செய்து தரவேண்டும் என்ற குறிப்பு இருக்கிறது. தீவிரமாகப் பரவிய நேரத்தில் முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன.

### திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு எக்ஸ் கதிர் வீச்சு நிலையம்.

* 471 வினா—**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம் திருமங்கலம் அரசினர் மருத்துவ மனையில் ஒரு எக்ஸ்ரே நிலையம் அமைக்க திட்டமிருந்தும் நிறைவேற்றப்படாமல் இருப்பது அரசு அறியுமா ?

(இ) ஆம் எனின், அதற்கான இடையூறுகளை நீக்கி துரிதமாக எக்ஸ்ரே நிலையம் ஏற்படுத்த அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) : திருமங்கலம் அரசு மருத்துவ மனையில் எக்ஸ் கதிர்வீச்சு நிலையம் ஒன்று ரூ. 37,000 செலவில் கட்டும் திட்டம் 1970-71 நிதியாண்டுக்காக பரிசீலிக்கப்பட்டு நிதி நிலைக் காரணத்தால் ஒத்திப் போடப்பட்டுள்ளது.

### National Cadet Corps

* 472. Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether syllabus for National Cadet Corps training in our State would be orientated; and

(b) whether the revised syllabus would be diversified?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) : தேசிய மாணவர் படையின் பயிற்சித் திட்டத்தை மாற்றி அமைக்கும் யோசனை எதுவும் இப்பொழுது இல்லை.

* 473.*Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether discarded garments have been supplied to the National Cadet Corps in this State?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இராணுவத்தில் உள்ள நடைமுறைகளைப் பின்பற்றியே பயன்படுத்தக்க பழைய உடைகளும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. நன்கு பழுதுபார்க்கப்பட்ட பின்பே அவைகள் அளிக்கப்படுகின்றன.

THIRU K. VINAYAKAM : Whereas the syllabus and the training for the National Cadet Corps were given mostly in Hindi language and whereas our Government has taken up a definite stand to discard Hindi, what exactly is the new form of syllabus or the new method of instruction that is now being followed for the National Cadet Corps training?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதிலே பெரிய மாற்றங்கள் ஒன்றும் செய்யப்படவில்லை. டைரக்டர் ஜெனரல், நேஷனல் கேடட்கோர அவர்கள் என்ன சிலபஸ் விதிக்கிறார்களோ, அது மேற்கொள்ளப்படும். முன்னால் 'கமாண்ட்' சொற்கள் இந்தியில் இருந்தன. அதற்கான பாடங்களை யெல்லாம் ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுக்கிறார்கள். கட்டளைச் சொற்களும் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினோம். பாடத் திட்டங்களில் சிறு சிறு மாற்றங்கள் அங்கங்கே செய்கிறார்கள். 1969, மே மாதம் சில கூடுதல் பாடங்கள், மிலிடரி இஸ்டரி, ஜாக்ரபி, ஆர்கனைசேஷன் போன்றவைகள் புகுத்தப்பட்டுச் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. ஆர்மியில் ஆர்ம்ட் ஆர்ட்டிலரி, எஞ்சினியரிங், ஸிக்னல்ஸ் போன்றவைகள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. நேவியில் டெக்னிகல், எக்ஸிக்யூடிவ் போன்றவைகளும், ஏர் ஃபோர்ஸில், ஃப்ளையிங், க்லைடிங், டெக்னிகல் போன்றவைகளும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. வேறு பெரிய மாறுதல்கள் செய்யப்படவில்லை. சிறு சிறு மாற்றங்கள் அங்கு அங்கு உள்ள சூழ்நிலைக்கு ஏற்ப புகுத்தப்பட்டிருக்கின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education whether the syllabus for the National Cadet Corps is prepared by the Central Government and whether the Central Government consult the State Government when they prepare the syllabus?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாநில அரசோடு கலந்து செய்ய வேண்டிய முடிவு இல்லை. போர்ப் படையை சேர்ந்தவர்கள் என்னென்ன ஸிலபஸ் வைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்களோ அந்த வகையில் டைரக்டர்-ஜெனரல், நேஷனல் கேடட் கோர், உத்தரவுப்படி வைக்கப்படுகிறது. அவர்கள் வகுத்துக் கொடுக்கும் திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். மாநில அரசைக் கலந்து செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அதற்கான வசதி வாய்ப்புக்களை நாம் செய்துகொடுக்கிறோம்.



**திரு. ந. தருமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மாணவர் படையினருக்கு பயிற்சி நேரங்களில் கொடுக்கப்படும் படி போதவில்லை என்றும், ஒவ்வொரு திங்களுக்கும் கொடுக்கப்படும் உடுப்பு வெளுப்புத் தொகை குறைவாக இருக்கிறது என்கிற கோரிக்கைகள் வந்தனவா ? அதை அதிகப்படுத்தும் எண்ணம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கைகள் அரசுக்கு வந்ததாகத் தெரியவில்லை.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, பொதுவாக மாணவர்களுக்கு ஒழுங்கு, கட்டுப்பாடு இவற்றைக் கற்றுக் கொடுக்க இது அடிப்படையாக இருப்பதால், இந்தப் பயிற்சியை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயப் பாடமாக்கி, ராணுவ பயிற்சி கொடுத்து, வேலை வாய்ப்புக்களில் விசேஷ சலுகை கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, யார் யாருக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்பதை அவரவர்கள் விருப்பத்தின் மேல் ஆப்ஷனலாக, அளிக்கப்படுகிறது. எல்லா மாணவர்களுக்கும் என்றால், அதனால் அதிகச் செலவு ஆகும் என்பதோடு, அத்தனை பேருக்கும் வேலை வாய்ப்புகள் ஏற்படும் சூழ்நிலை இராது. என்.ஸி.ஸி. படைப் பயிற்சி பெற்று நற்சான்றிதழ் வைத்திருப்பவர்களுக்கு வேலைகளில் சலுகை கொடுக்கப்படுகிறது, அப்படிப்பட்ட நற்சான்று இதழ் பெற்றிருப்பதால்.

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, தேசிய மாணவர் படையினருக்கு வழங்கப்படும் துணிகள் கதர் துணியா, கைத்தறித் துணியா, மில் துணியா ? மதிப்பு என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, போர்ப் படை வீரர்களுக்குக் கொடுக்கும் முறையில் கொடுப்பதால், ஆலைகளில் நெய்யப்பட்ட துணி கொடுக்கப்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தேசிய மாணவர் படை பயிற்சியில் கட்டளை சொற்கள் ஆங்கிலத்தில் இருந்தாலும், வெளி மாநிலங்களுக்கு சொல்லும்போது இந்திக் கட்டளைச் சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறதே, அதேபோல் தமிழிலும் உருவாக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அகில இந்தியத் தன்மையில் ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று, ஏற்கனவே அப்படி இருந்ததையே வைத்துக்கொள்ள வேண்டும் என்று, வற்புறுத்தினோம். 1958-க்கு முன்னால் ஆங்கிலத்தில்தான் இருந்தன. அந்தக் கட்டளைச் சொற்கள், அதுவே மீண்டும் வர வேண்டும் என்று வற்புறுத்தினோம். அகில இந்திய ரீதியில் வேலைக்குப் போகும்போது, அதற்கு 'ஈக்விவலண்ட்ஸ்' அதற்கு ஒத்ததாக வருகின்ற இந்திச் சொற்களையும் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று பயிற்சி கொடுக்கப்படுகிறது, இந்தி ஈக்விவலண்ட்

சொற்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. நடைமுறையில் அணிவகுப்பு நடைபெறும்போது, ஆங்கிலச் சொற்களே பயன் படுத்தப்படுகின்றன.

THIRU K. VINAYAKAM : Sir, whereas ther was a controversy over these command words, whertas our Government has given up training of National Cadets on this principal and whereas now the Government has struck upon some compromise formula in this matter, what exactly is the compromise formula and is this compromise formula conducive to the recruitment of our men in the Army?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தியிலே கட்டளைச் சொற்கள் இருக்கக் கூடாது என்று சொன்னோம். அவர்கள் முதலிலே அதை ஏற்க மறுத்தார்கள். மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் கடிதப் போக்குவரத்து நடைபெற்றது. அதன் பிறகு, தமிழக முதல் அமைச்சர், இந்திய அரசு போக்குவரத்து அமைச்சரோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, கட்டளைச் சொற்கள் ஆங்கிலத்தில் இருக்கலாம் என்றும் செய்யப் பட்டது. அது 100, 150 சொற்கள் இருக்கலாம். அதற்கு ஈக்விவலண்ட் இந்திச் சொற்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. அதில் இந்தி இலக்கணம், இலக்கியம் கிடையாது. என்னென்ன கட்டளைக்கு என்னென்ன இந்திச் சொற்கள் என்பதை தெரிந்துகொள்ள வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. பாட வகுப்புக்கள் எல்லாம் ஆங்கிலத்தில் தான் நடைபெறுகின்றன. அகில இந்திய அளவில் வேலைக்குப் போகும்போது, தேர்ந்தெடுக்கப்படும் போது, இந்திச் சொற்கள் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இல்லாவிட்டால் வேலை வாய்ப்பு கிடைக்காமல் போகும். ஒன்றரை, இரண்டு ஆண்டுகாலம் தேசிய மாணவர் பயிற்சி இல்லாமல் இருந்தும்கூட, நம் மாணவர்கள் 40 நாள் பயிற்சியில் இரண்டு பரிசுகளை நம்முடைய படையினர் பெற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் போர்ப் படையில் சேரும்போது, இடைஞ்சலாக இருக்குமா என்று கேட்டார்கள். அத்தகைய இடைஞ்சல் இருக்காது. எல்லோருக்கும் விதிக்கப்படும் திறமை அடிப்படையில் இவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

*Separate building for Girls High School at Tiruttani.*

* 474. Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether there are any proposals with the Government to construct a separate building for Girls High School at Tiruttani, Chingleput District; and

(b) if so, the estimate therefor?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.





**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, திருத்தணியிலே பெண்கள் உயர்தரக் கல்விக்காக அங்குள்ள பொதுமக்கள் பணத்தைக் கொடுத்து, நிலத்தை வாங்கி எஜுகேஷன் டிபார்ட்மெண்டிடம் ஒப்படைத்திருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? எஜுகேஷன் டிபார்ட்மெண்ட் அதற்கு கட்டிடம் கட்டுவதற்காக ஒரு எஸ்டிமேட் தயாரித்திருந்தும்கூட, பணத்தைச் செலவு செய்து கட்டிடம் கட்டவில்லையென்பது தெரியுமா? என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, திருத்தணியில் 2.68 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் ஊராட்சி ஒன்றியத்தால் வாங்கப்பட்டு, அரசுக்கு அளிக்க முன்வந்திருக்கிறது. அந்த நிலம் வாங்கப்பட்ட விவரங்களைக் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரை ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி அரசு கேட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, கல்வி இயக்குநர் கட்டிடம் கட்டுவதற்கான திட்டத்தை அனுப்பி வைப்பார்கள். அப்படி அனுப்பி வைக்கப்பட்ட பிறகு கட்டிடம் கட்டுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

*Sri Ramakrishna Mission schools in City.*

* 475. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether a number of schools of the Sri Ramakrishna Mission have been upgraded from this year in Madras City; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) :** சென்னை நகரத்தில் ராமகிருஷ்ண மிஷன் நிர்வாகத்திலுள்ள ஒரு நடுத்தரப் பள்ளி மட்டும் இவ்வருடம் உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தப்பட்டது.

**மதுரை மாவட்டத்தில் அரிசனங்களுக்காக பஸ் கம்பெனி**

* 476 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

மதுரை மாவட்டத்தில் அரிசன மக்கள், பின்தங்கிய வகுப்பினரின் பங்குத் தொகையுடன் புதிய பஸ் கம்பெனி துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையிலிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இல்லை, மதுரை மாவட்டத்தில் இதற்கு முன்பே அரிசனங்களுக்காக அவர்களாலேயே அவர்களுடைய பங்குத் தொகையைக் கொண்டு பஸ் கம்பெனி ஒன்று துவக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவர் அவர்களே, இந்த பஸ் கம்பெனி லாபத்தில் ஓடுகிறதா? லாபத்தில் ஓடினால் இதுபோல மற்ற மாவட்டங்களிலும் அரிசனமக்கள் பின்தங்கிய வகுப்பினரின் பங்குத் தொகையிலே கூட்டுறவு முறையிலே பஸ் கம்பெனி துவங்க அரசு உதவி செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின்மூலம் அரிசனங்களுக்கு மட்டும் தான் இப்படி உதவ கூட்டுறவுச் சங்கம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. தற்போது மதுரையில் ஓடுகின்ற பஸ் மூலம் இலாபம் இருப்பதாகக் கூறப்படுகிறது. வேறு ஒரு பஸ்ஸுக்கும் அரசாங்கம் உதவ வேண்டுமென்று அரசாங்கத்தை 1,50,000 ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. மற்றும் கோவை மாவட்டத்தில் இப்படி பஸ் விட ஆரம்பித்திருக்கிறார்கள். சில மாவட்டங்களில் பங்குத்தொகையை சேர்த்து வருகிறார்கள்.

**திரு. கரு. சீமைச்சாமி:** தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே அரிசனங்கள்-பின்தங்கிய மக்கள் பஸ் தொழிலை ஆரம்பித்தால் அரசாங்கம் என்னென்ன உதவிகள் செய்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, இப்போது அரிசனங்களுக்கு மட்டும்தான் இந்த உதவி செய்யப்பட்டு வருகிறது. பத்தாயிரம் ரூபாய் வரையிலும் அரசாங்கத்தின் பங்குத் தொகையாகக் கொடுத்து வருகிறது.

**திரு. மா. பா. சாரதி:** தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபிசர் மூலம் அரிசனங்கள் பஸ் தொழிலை நடத்த கூட்டுறவு முறையில் பங்குத் தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறதே, அது எந்த நிலைமையில் இருக்கிறது? எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தலைவர் அவர்களே, இன்னமும் அந்தப் பங்குத் தொகை பூர்த்தியாக்கப்படவில்லை யென்று தகவல் வந்திருக்கிறது. பங்குத் தொகை பூர்த்தியாக்கப்பட்ட பிறகு அதற்கான வேலைகள் தொடங்கப்படும்.

### சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்பட்ட கடன்கள்

*477 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்தும் தொழிலாளர்கள் செலுத்த வேண்டிய கடனை இந்த அரசு தள்ளுபடி செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) ஆம்.

(ஆ) ரூ. 2,26,471-95 பை.





**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவர் அவர்களே, இந்தக் கடன் எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு தரப்பட்டிருக்கிறது? எவ்வளவு தள்ளுபடிகள் செய்யப்பட்டிருக்கின்றன ? எந்த ஆண்டில் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, பின் தங்கிய மக்களில் முடிதிருத்தும் தொழில், சலவைத் தொழில் பயிற்சிபெற்றுள்ள தகுதியுள்ள வகுப்பினருக்கும், அவர்கள் தங்கள் தொழிலில் நிலையாக ஈடுபடும்படிச் செய்யும் வகையில் கடன் வழங்கும் திட்டம் 1960-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்தக் கடனுக்கு ஆண்டு ஒன்றுக்கு 5½ சதவீத வட்டி உண்டு. இந்தத் திட்டத்தை சில மாறுதல்களுடன் சென்னைமாநகர் நீங்கலாக மாவட்டங்கள் அனைத்திற்கும் 1961-62-ம் ஆண்டில் அரசு விரிவு படுத்தியது. கடன் கொடுக்கப்பட்டுள்ள விவரம் :

வட ஆர்க்காடு மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 4,093.10, முடிதிருத்துவோருக்கு ரூ. 4,926.12. செங்கற்பட்டு மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 3,250.70, முடிதிருத்துவோருக்கு ரூ. 1,757.00. திருநெல்வேலி மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 15,693.78, முடிதிருத்துவோருக்கு ரூ. 7,664.15. தென் ஆர்க்காடு மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 19,358.33, முடிதிருத்துவோருக்கு ரூ. 17,831.02. திருச்சி மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 5,510.50, முடிதிருத்துவோருக்கு ரூ. 5,583.79. இராமநாதபுரம் மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 25,038.83, முடிதிருத்துவோருக்கு ரூ. 23,680.50. கோயம்புத்தூர் மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 20,120.20, முடிதிருத்துவோருக்கு ரூ. 15,992.60. சேலம் மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 2,535.80, முடிதிருத்துவோருக்கு ரூ. 3,702.13. தஞ்சாவூர் மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 13,761.45, முடிதிருத்துவோருக்கு ரூ. 9,681.00. மதுரை மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 10,549.42, முடிதிருத்துவோருக்கு ரூ. 8,062.96. கன்னியாகுமரி மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 2,400.00, முடிதிருத்துவோருக்கு ரூ. 24.87. உதகமண்டலம் சலவைத் தொழிலாளருக்கு ரூ. 7,700.00, முடிதிருத்துவோருக்கு ரூ. 4,576.00. தருமபுரி மாவட்டம் சலவைத் தொழிலாளருக்கு ரூ.1,389.90, முடிதிருத்துவோருக்கு ரூ. 2,599.80. ஆக ரூ. 2,26,471.95 கடன் தொகை 1966-67-ம் ஆண்டுகளில் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

### மதுரை பால் பண்ணையில் தயார் செய்யப்பட்ட வெண்ணெய்

*478 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை பால் பண்ணையில் 1968-ம் ஆண்டில் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள வெண்ணெய் கெட்டுப்போய்விட்டது உண்மையா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நெய் விற்பனை குறைந்ததால் நெய் இருப்பு தேக்கமடைந்தது. இதனால் நெய்யின் தரம் கெட்டது.

[1970 மார்ச் 21

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, நெய் தரம் குறைந்ததோடு, பால் பண்ணையிலே இருக்கின்ற வெண்ணெயிலே பல மோசடிகள் நடந்ததாகச் சொல்லப்படுகிறதே, அதன்பேரில் யாராவது கைது செய்யப்பட்டார்களா? அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, வெண்ணெயிலே தகராறு இல்லை, மதுரையிலுள்ள பால்பண்ணையிலேதான் தகராறு. இது சம்பந்தமாக பல அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, யார் யார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அது பற்றிய முழு விவரம் என்னிடத்தில் இல்லை. அதுசம்பந்தமாக சில அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சிலர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, இதனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் லட்சத்தில் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இதனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்று சொல்ல முடியவில்லை. ' *List of irregularities and losses* ' என்ற வகையில் முழுவிவரம் இல்லை. வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் மொத்தமாகச் சொல்கிறேன். 25,15,000 ரூபாய் என்று அரசாங்கம் கண்டுபிடித்திருக்கிறது.

## திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெண்களுக்காகத் தொழிற் பயிற்சிப் பள்ளி

* 479 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெண்களுக்காக தொழிற் பயிற்சிப் பள்ளி அமைக்க தமிழக அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, திருச்சியில் உள்ள பாய்லர் தொழிற்சாலை, சிறுதொழிற்சாலைகள், சின்கோமீட்டர் போன்றவற்றில் பெண்களுக்குப் பயிற்சி அளித்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க சௌகரியமாக இருக்கும். இதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆண்களுக்கு வேலைவாய்ப்புக்களைத் தேடித் தந்துவிட்டு, அதற்குப் பின்னாலே இதுபற்றி யோசிக்கலாம்.



1970 மார்ச் 21]

## *Madras Women's Cottage Industries Central Co- operative Society*

* 480 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether the Government have donated lands in Madras City to the Madras Women's Cottage Industries Central Co-operative Society; and

(b) if so the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

## கோயம்புத்தூர் டெக்ஸ்டைல் கம்பெனி

* 481 வினா—திரு. எம். பூபதி : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு கோவையிலுள்ள டெக்ஸ்டைல் கம்பெனியை எடுத்து நடத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டெக்ஸ்டைல் தொழிற்சாலையின் சிக்கல்கள், அதனைப் பல்வகைப்படுத்துவதற்கான வாய்ப்புகள், அதனை முழுமையாகப் பயன்படுத்துவது முதலியவை குறித்து ஆராய்வதற்காக அரசு ஒரு குழுவினை அமைத்தது. இக்குழு அனுப்பிய அறிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, இந்தக் குழு கொடுத்துள்ள யோசனைகளை அரசு உடனடியாக பரிசீலனை செய்து, தக்க நடவடிக்கைகளை எப்போது எடுக்கும் என அறிய முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, குழுவினுடைய பரிசீலனைகளை நிறைவேற்ற கிட்டத்தட்ட 50 லட்சம் ரூபாய் அரசாங்கத்திலிருந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, அதை அரசு ஆழ்ந்து பரிசீலித்த பின்னர்தான் முடிவு சொல்லப்படும்.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, டெக்ஸ்டைல் கம்பெனியை இந்தக் குழுவின் மூலமாக எடுத்து நடத்த உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அறிக்கையைப் பற்றி நாம் முடிவு எடுத்ததற்குப் பின்னாலே எந்த எந்த வகையில் நடவடிக்கை எடுக்கலாம் என்பதுபற்றி முடிவு செய்யப்படும்.

திரு. சு. துரைசாமி : இந்தத் தொழிற்சாலையில் மூவாயிரம், நாலாயிரம் பேர்கள் வேலை செய்தார்கள். இது மூடப்பட்டு இரண்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்ட காரணத்தினால் இதை உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[1970 மார்ச் 21

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1967-68-ஆம் ஆண்டில் மட்டும் இந்தத் தொழிற்சாலைக்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டம் 81 லட்சமாகும். நாம் மேற்கொண்டும் 50 லட்சம் போடவேண்டிய சூழ்நிலை இருப்பதன் காரணமாக ஆழ்ந்து யோசித்துத்தான் செய்யவேண்டியிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசுவாமி :** ஆழ்ந்து யோசித்துத்தான் 50 லட்சம் ரூபாய் போடவேண்டும் என்று சொல்கிறார்கள். அதே அடிப்படையில் இது 6 ஆயிரம் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பிரச்சினை என்பதையும் யோசித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள இருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் இந்தத் தொழிற்சாலையில் நம் நாட்டு மக்களின் பணத்தை விரயம் ஆக்க வேண்டுமென்ற கருத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

**திரு. எம். பூபதி :** மக்கள் பணத்தை விரயம் ஆக்கவேண்டுமென்று சொல்லவில்லை. அங்கே ஆறாயிரம் தொழிலாளர்கள் வேலையின்றி அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலையை நல்லமுறையில் உடனடியாக எடுத்து நடத்த முடியாதா என்று கேட்கவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதும் அந்தத் தொழிற்சாலை நடந்துகொண்டு வருகிறது. முன்பு வேலை செய்து வந்த தொழிலாளர்களைவிட இப்போது எண்ணிக்கையில் குறைவாகத் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். இதுபற்றி நிபுணர்கள் சில சிபார்சுகளைச் செய்திருக்கிறார்கள். நாம் அரசாங்க பணத்தை எடுத்து முதலீடு செய்வதற்கு முன்னால் அடிப்படையில் ஆழ்ந்து சிலவற்றைப் பரிசீலிக்கவேண்டியிருக்கிறது. இல்லை என்றால் நாளை இதே மன்றத்தில் இப்படி பொதுப்பணத்தை எடுத்து நஷ்டம் ஏற்படும்படியாக ஏன் போட்டீர்கள் என்று கேட்கப்படுகிற கேள்விக்கும் பதில்சொல்ல வேண்டிய வாய்ப்பு ஏற்பட்டுவிடும்.

**திரு. எம். எஸ். மணி :** டெக்ஸ்டுல் கம்பெனியில் நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன ? எட்டு லட்சம் ரூபாயை காதி கமிஷனிடம் இருந்தும் பெற்றிருக்கிறார்களே, அது என்ன ஆயிற்று ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நல்லதொரு கருத்தையும் நினைவூட்டினார்கள். காதி கமிஷன் பல லட்சம் ரூபாய்களை தொடர்ந்து இந்தக் கம்பெனிக்குக் கொடுத்துவந்தார்கள். அதற்கு எந்தவித மான பயனும் கிடைக்கவில்லை என்பதை பின்னாலே தான் கண்டு பிடித்தோம். ஆகவேதான் இப்போதும் ஆழ்ந்து கவனித்தே ஒன்றைச் செய்யவேண்டியிருக்கிறது.



1970 மார்ச் 21]

## சிறு தொழில் உற்பத்திப் பொருள்கள்

*482 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் சிறு தொழில்களின் நிலையான பொருட்காட்சிகளை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அரசு இதனால் என்ன பயனை எதிர்பார்க்கின்றது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்குரிய வாய்ப்புகள், கிடைக்கக் கூடிய நிதி உதவி வகைகள், ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு தொழில்களைப் பெருக்குவதற்கான வாய்ப்புகள், அவற்றை உண்மையில் எந்த அளவுக்கு மேம்படுத்த முடியும் என்பது பற்றிய தொழிலறிவு ஆகியவை பற்றி ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சிறு தொழில் முனைவர்களுக்கும், பொது மக்களுக்கும் ஆலோசனைகள் கூற வகை செய்யப்பட வேண்டும் என்று கருதப்படுகிறது. மேற்சொன்னவை குறித்து சரியான தகவல்களை அளிப்பதற்கும் தனியார் துறையையும், அரசுத் துறையையும் சேர்ந்த தொழிற் பிரிவுகளின் உற்பத்திப் பொருள்களை இந்த பொருட்காட்சிகளில் விளம்பரப்படுத்தி வைக்கக் கருதப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியிலும், மதுரையிலும் நிலையான பொருட்காட்சிகளை அமைப்பதன் மூலம் மேற்சொன்ன குறிக்கோள்களை எய்த முடியும் என்பதுடன், அந்தந்த மாவட்டத்தில் உருவாகி வரும் மேம்பாடுகளை விரிவாக விளக்கிக் காட்டவும் உதவியாயிருக்கும். பொருட்களின் விற்பனைக்குரிய வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான வாயில்களாகவும், அந்தப் பொருட்காட்சிகள் அமையும். மேலும், சிறு தொழில் அதிபர்கள் தொழில் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில் குறிப்பாக, ஏற்றுமதி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்தப் பொருட்காட்சிகள் வாய்ப்புகள் அளிக்கும்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் எந்த எந்த நகரங்களில் நிலையான பொருட்காட்சி சாலைகள் இருக்கின்றன என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசாங்கம் திருச்சிராப்பள்ளியிலும், மதுரையிலும் நிலையான பொருட்காட்சியை நடத்துவதற்கு அனுமதி தந்திருக்கிறது. அதை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தொழில் துறை இயக்குநர் செய்து வருகிறார்.

## தூத்துக்குடியில் பெட்ரோலியத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை

*483 வினு—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் பெட்ரோலியத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை ஒன்று தொடங்கப்பட இருக்கிறதா?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) வினுவுக்கு இடமில்லை.

## திசையன்விளையில் தொழிற்பேட்டை

*484 வினு—திரு. நா. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பின்தங்கிய பிரதேசமான திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையில் தொழிற்பேட்டை ஒன்று நிறுவும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

## *Tiruchirappalli Central Jail*

*185 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there was an out break of Jaundice in Tiruchirappalli Central Jail about 6th September 1969?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆம்.

**திரு. வை. சுவாமிநாதன் :** இந்த நோயினுல் எவ்வளவு பேர் இறந்தார்கள் என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒருவரும் இறக்கவில்லை.

**திரு. என். வரதராஜன் :** சிறைச்சாலையில் இன்றைக்கு வைத்திய வசதி போதுமான அளவு இல்லாத காரணத்தினுல்தான் இந்த நோய் பெரிய அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சிறைச்சாலையில் வைத்திய வசதியை அபிவிருத்தி செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சிறைச்சாலையில் போதுமான வைத்திய வசதியைச் செய்து வருகிறுர்கள். இப்போதும் உடனடி மருத்துவ வசதியை தந்திருக்கிறேம். இந்த நோய் சிறைச்சாலையில் மட்டும் அல்ல வெளியிலேயும் அதிகமாகக் காணப்பட்டது. சில சட்டமன்ற உறுப்பினர்கள் அதன் காரணமாக இறந்திருப்பதும் நமக்குத் தெரியும்.



**திரு. எம். எஸ். மணி :** திருச்சியில் சிறைச்சாலை இருக்கிற இடம் கந்தக பூமி. மேலும் அந்த இடத்தில் தண்ணீர் பற்றுக்குறை வேறு. ஆகவே காவேரியில் இருந்து அந்தச் சிறைச்சாலைக்குத் தண்ணீர் கொண்டுபோக ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தச் சிறைச்சாலையில் தண்ணீர் இல்லாமல் நான் கஷ்டப்பட்டது கூட நினைவுக்கு வருகிறது. ஆகவே அங்கே போதுமான தண்ணீர் வசதி அளிக்க திட்டமிடப்படவேண்டும் என்று சிறைச்சாலை அதிகாரியிடத்தில் சொல்லியிருக்கிறேம். அவர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறுர்கள்.

**திரு. எம். பூபதி :** திருச்சி சிறைச்சாலையில் மஞ்சள் காமாலை காரணமாக எத்தனை பேர்கள் பாதிக்கப்பட்டார்கள்? எத்தனை பேர்கள் இறந்தார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒருவரும் இறக்கவில்லை என்று முன்பே சொன்னேன். 182 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

## கதர் துணிகளுக்கு சாயம் இடுதல்

*486 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968-வது ஆண்டில், காதி இலாகாவில் கையினுல் டை அடிப்பதற்கு பதிலாக, ஈரோடு மில்லில் ஆர்டர் கொடுத்து டை அடிக்கப்பட்டது உண்மையா?

(இ) அதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கையினுல் டை அடிப்பதற்குக் கட்டணம் ரூ. 1½. மில்லில் டை அடிப்பதற்கு 10 அணு. இப்படி ஊழல் நடந்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டு ஆடிட் ரிப்போர்ட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அப்படி குற்றங்கள் இருப்பதாக என்னிடத்தில் உள்ள ஆடிட் ரிப்போர்ட்டில் எதுவும் இல்லை.

## *Draft Ordinance on Co-operation.*

*487. Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(a) whether any draft Ordinance on the Co-operative Department in this State has been forwarded to the Union Government; and

(b) if so, the details thereof?

[1970 மார்ச் 21

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** 15—3—1965 தேதியிட்டு 24—3—1965-ல் இப்பேரவையில் வைக்கப்பட்ட வெள்ளை அறிக்கையின் அடிப்படையில் அவசரச்சட்ட வரைவு ஒன்று மத்திய அரசின் ஒப்புதலைப்பெற டெல்லிக்கு அனுப்பப்பட்டது. பின்னர் இப்பேரவைக் கூட்டத்திற்கு நாள் குறிப்பிடப்பட்டுவிட்டதால் அது சாதாரணச் சட்டமாக, 1969/14-ஆம் எண் சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இந்தக் கூட்டுறவுச் சட்டத்தை திருத்த வேண்டும் என்பதற்காக சந்தானம் கமிட்டி ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. அது எந்த நிலையில் இருக்கிறது? இன்னொன்று கேட்கவேண்டும். இப்போது கூட்டுறவு சப்-ரிஜிஸ்திரார் அவர்களே விசாரணை செய்கிறார்கள். அப்படியின்றி முன்சீப் கோர்ட்டுக்கு விசாரணைக்கு அனுப்ப எண்ணம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மூலவினா நிலவள வங்கி சட்டத்தைப் பற்றியது. இப்போது பொதுவான சட்டத்தைப் பற்றிக் கேட்கிறார்கள். தனிக் கேள்வி போட்டால் விவரமாகச் சொல்லமுடியும்.

ஓட்டல் தொழிலாளர்கள்

*488 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓட்டல் தொழிலாளர்களின் வேலை நிலைமையைப் பற்றி கண்டு ஆராய்ச்சி செய்ய சர்க்காரால் நியமிக்கப்பட்ட விசேஷ அதிகாரியின் அறிக்கையை அமுல்படுத்தும்படி சர்க்கார் உத்திரவு போட்டுள்ளதா?

(இ) மேற்படி அறிக்கை மேஜைமீது வைககப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** (அ) ஓட்டல் தொழிலுக்கான சிறப்பு அதிகாரியின் பரிவுரைகளின் மீது 30—5—1969-ஆம் நாளிட்ட 210 எண்ணுள்ள அரசு ஆணையில் அரசு பிறப்பித்துள்ளது.

(இ) முக்கிய பரிவுரைகளும், அவை மீது அரசு பிறப்பித்த ஆணைகளும் அடங்கிய மேற்குறிப்பிட்ட அரசு ஆணையின் நகல்* ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த விசேஷ அதிகாரி எந்தத் தேதியிலே நியமிக்கப்பட்டார்? அந்த அதிகாரியினுடைய ரிப்போர்ட்டுக்குப் பிறகு லேபர் கமிஷனர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து சில பிரச்னைகளை ஏற்றுக்கொள்வதாகக் கூறி சில பிரச்னைகள் பரிசீலனையில் இருந்துவருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பரிசீலனை முடிந்து விட்டதா? எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

* 112-117-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1970 மார்ச் 21]

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இந்த ஓட்டல் தொழிலாளர்கள் சம்மேளனம் தன்னுடைய கோரிக்கை மனுவைக் கொடுத்ததற்குப் பிறகு அரசாங்கம் சிறப்பு அதிகாரியை நியமித்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. விரைவாக தொழிலாளர் நல ஆணையர் எடுத்து வருகின்ற நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துவருகின்ற நடவடிக்கைகளையும்பற்றி விவரமாகக் கொடுத்திருக்கிறோம். எந்தக் குறிப்பிட்ட பிரச்னையைப் பற்றி மாண்புமிகு அங்கத்தினர் விவரம் அறிய விரும்புகிறார்கள் என்று சொன்னால் விவரம் தருகிறேன்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** தலைவர் அவர்களே, அந்தக் குழுவின் தலைவர் குறிப்பாக பல பரிந்துரைகள் செய்திருக்கிறார். மிகவும் முக்கியமாக ஓட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயம், 7 நாட்கள் அளவிற்கு சிக் லீவ், உணவுப் படியை அதிகப்படுத்தவேண்டும் என்ற இப்படிப்பட்ட மூன்று முக்கியமான பரிந்துரைகளைக் கொடுத்திருக்கிறார்கள். இதிலே ஏதாவது அமல் படுத்தப்பட்டிருக்கிறதா, இல்லையென்றால் என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் கொடுப்பதற்கு ஆராயப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்டு குழுவின்முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி மற்றப் பிரச்னைகளையும் ஒன்று ஒன்றாகக் கவனித்து ஆவன செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

**திரு. கோ. இரா. ஞானசம்பந்தன் :** தலைவர் அவர்களே, இந்தப் பரிந்துரையின் அடிப்படையிலே அதற்கு விரோதமாக உணவு நிலையங்களிலே வயது குறைவாக உள்ள சிறுவர்களை வைத்து சட்ட விரோதமாக வேலைவாங்குவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** நான் மீண்டும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பிட்ட எந்த ஓட்டல் நிறுவனத்தில் அப்படி இருக்கிறது என்ற புகார் மனுவைத் தந்தால் தொழிலாளர் நலத் துறையினர் மூலமாக நடவடிக்கை எடுக்கச்செய்து குறைபாட்டைப் போக்கலாம்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலேயும்சரி, உலகத்திலேயும் சரி வளர்ந்துவரக்கூடிய தொழில்களில் ஓட்டல் தொழிலும் ஒன்று. தொழிலாளர்கள் 7 ரூபாய், 5 ரூபாய் என்று மாதச் சம்பளத்திலே வாழ்க்கை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகளை 1967-ஆம் ஆண்டு ஆரம்பத்திலே கொடுத்து இருக்கிறார்கள். கிட்டத்தட்ட மூன்று, நான்கு வருடங்கள் ஆகப்போகிறது. இன்னும் ஏன் பரிசீலனை செய்யவில்லை? உடனடியாகப் பரிசீலனைசெய்து அடுத்த சில மாதங்களுக்குள் அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, குறைந்த பட்ச ஊதியம், மினிமம் வேஜஸ் சட்டத்தின்படி கோரிக்கைகளை கவனிப்பதற்கு குழு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்கு அரசாங்கமும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. அவர்கள் குறிப்பிடுவதைப்போல் ஏதாவது தடுப்புகள் இருக்குமானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, மேஜையின்மீது வைக்கப்பட்டுள்ள ஓட்டல் தொழிலாளர்பற்றிய அறிக்கையிலே சீருடை வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சீருடை வழங்குவதற்கு அரசாங்கம் முடிவெடுத்து விட்டதா? முடிவெடுத்து விட்டால் எப்பொழுது அமுல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** அறிக்கை இன்றைக்குத் தரப்பட்டிருக்கிறது. பரிசீலனையில் இருக்கிறது என்றால் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது என்று பொருள். விரைவாக முடிவுசெய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கொண்டிருக்கின்ற உணர்வை அமைச்சரும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** விசேஷ அதிகாரியினுடைய ரிப்போர்ட்டுக்குப் பிறகு லேபர் கமிஷனர் முன்னிலையில் ஓட்டல் அதிபர்கள், தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஒன்றுபட்டு ஏகோபித்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்பது உண்மையா? அப்படியிருந்தும் அந்த முடிவை அமுல்படுத்தவில்லையென்றால் என்ன காரணம்? உடனடியாக அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:** இந்த அறிக்கையைப் படிக்கிறபோதே எப்படிக் காரியங்கள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிந்துகொள்ளமுடியும். முக்கூட்டுத் தரப்பிலே ஆராய வேண்டும் என்று சம்மேளனத்தால் கோரிக்கை கொடுக்கப்பட்டது. அதையும் மனதிலேவைத்து முக்கூட்டுத் தரப்பிலே ஆராயப்பட்டது. நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். எந்த எந்த நிறுவனங்களிலே சரியாக அமுல்படுத்தப்படவில்லை என்று கோரிக்கை வந்தால் விரைவாக அமுல்படுத்த தொழிலாளர் நல ஆணையர் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. கவன ஈர்ப்பு

மின்சார ஊதிய வாரியத்தின் பரிந்துரைகளை மின்சார வாரியம் ஏற்க தவறியதும், நேரடி நடவடிக்கைகள் எடுக்க பணியாளர் சங்கங்கள் எடுத்த முடிவும் அதனால் மின்சாரம் பயன்படுத்துவோருக்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகளும் குறித்து.

*** திரு. எஸ். இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின் கீழ் அவசரப் பொதுமுக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மின்சார ஊதிய வாரியத்தின் ஒருமனதான பரிவுரைகளைச் செயல்படுத்த மின்சார வாரியம் தவறியதால், 'உரிமை நாள்' மேற்கொள்வது, ஒரு மொத்தமாகத் தற்செயல் விடுப்பு எடுப்பது, வேலை நிறுத்த வாக்கெடுப்பு முதலியவை மூலம் நேரடி நடவடிக்கை எடுக்கப் பல்வேறு பணியாளர் சங்கங்கள் எடுத்த முடிவு, அதன் விளைவாக, தமிழ் நாட்டில் மின்சாரம் பயன்படுத்துவோருக்கு ஏற்பட்ட இடர்பாடுகள் ஆகியவை குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

DR. H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Electricity to a matter of urgent public importance, namely, the failure of the Electricity Board to implement the unanimous recommendations of the Electricity Wage Board and the decision taken by the various employees associations of the Board to resort to direct action by observing "Rights Day" (Urimai Nal), mass casual leave, strike ballot etc., and the consequent inconvenience caused to the consumers of elecricity in Tamil Nadu.

THIRU K. RAMAMOORTHI: Sir, I wish to call the attention of the Hon. Minister for Electricity to a matter of urgent public importance, namely, the failure of the Electricity Board to implement the unanimous recommendations of the Electricity Wage Board and the decision taken by the various employees associations of the Board to resort to direct action by observing "Rights Day" (Urimai Nal), mass casual leave strike ballot etc., and the consequent inconvenience caused to the consumers of electricity in Tamil Nadu.

THE HON. THIRU O. P. RAMAN: Sir, in May 1966, the Government of India, Ministry of Labour, Employment and Rehabilitation constituted a Wage Board to go into the wage structure of the employees of the Electricity Undertakings in India, with the object of working out a wage structure based on the principles of fair wages. After a deliberation of over 3½ years the Central Wage Board submitted its report in November, 1969. The Government of India have called for the views of the State Government and the State Electricity Boards before taking a decision on the recommendations of the Central Wage Board. The matter is at present under the consideration of the State Govern-

ment and also the State Electricity Board. Meanwhile, the Unions of employees of the Tamil Nadu Electricity Board had been demanding the commencement of immediate negotiations between the Tamil Nadu Electricity Board and the recognised Unions of workers of the Electricity Board for considering the question of revision of the pay scales and allowances of the workmen of the Electricity Board based on the report of the Central Wage Board, on the Electricity Undertakings, although the Government of India have not yet announced their decision on the above recommendations of the Central Wage Board for Electricity Undertakings. However having regard to the cordial relations that had prevailed so far between the Electricity Board and its employees, the Tamil Nadu Electricity Board decided to commence negotiaitons immediately with the recognised Unions representing the workers of the Tamil Nadu Electricity Board. The Board had intimated that every effort will be made to complete the negotiations by 31st March 1970.

The observance of the "*Demands Day*" by the Tamil Nadu Electricity Board Workers' Federation is an *annual feature*. During this year they observed the "*Demands Day*" on 23rd February 1970. The Tamil Nadu Electricity Board Accounts Subordinate Union also joined the Federation in the observance of the "*Demands Day*". The Demonstrations were peaceful and were held outside office hours. They had not interfered with the normal functioning of the Board. The decisions of the Tamil Nadu Electricity Board Accounts Subordinate Union to take 'mass casual leave' and strike ballot' have been given up consequent on the decision of the Board to commence negotiations immediately for revision of pay based on the recommendations of the Central Wage Board for Electricity Undertakings with a view to arriving at anamicable settlement. Accordingly the Board nominated its representatives to negotiate in the matter while the Tamil Nadu Electricity Board Workers' Federation and the Accounts Subordinate Union the two Unions recognised under the 'Code of Discipline in the 'Industry' have nominated their representatives for partaking in the negotiations. The negotiations commenced on 26th February 1970 and the representatives of the employees agreed to give their proposals in the first instance and the next meeting was fixed on 10th March 1970.

In the meanwhile, some of the other Registered Trade Unions who have not been recognised under the Code of Discipline and have not represented in the negotiations became discontented and represented to the Commissioner of Labour that they should also be given representation in the negotiations and went on demonstration and hunger strike on the 6th and 7th March 1970. The Special Deputy Commissioner for Labour gave notice to the Board and to all the registered Unions that he would commence negotiations at 11 A.M. on 12th March 1970. The Tamil Nadu Electricity Workers' Federation and Accounts Subordinate Union however



to take the stand that it would be prepared to negotiate with all separately mentinable sections of employees provided the strength of the Unions which claim to represent them could be verified by the Commissioner of Labour or the Board.

The Tamil Nadu Electricity Board Workers' Federation and the Accounts Subordinate Union, to press their demand for the continuance of bilateral negotiations, organised a demonstration in front of the Board's offices at 10 a.m. on 12th March 1970. The demonstrations took place upto 2.30 p.m. on that day. The Commissioner of Labour has since kept the conciliation proceedings in abeyance and has advised the Board to continue the bilateral negotiations with the recognised Unions and also with the other registered Unions in separate sittings. Thus the situation is at present quite normal.

The Tamil Nadu Electricity Board reported that the Tamil Nadu Electricity Board Engineers' Association have been demanding the revision of their pay scales on a par with the scales of pay applicable to the Engineers under the Kerala State Electricity Board and the revision to the yardsticks adopted for sanction of posts of Engineers prior to the Indo-Pakistan conflict.

The Board has already constituted a Committee consisting of the Representatives of the Board and the representatives of the Engineers' Association to go into the question of yardsticks for sanction of posts of Engineers and the Committee had met twice.

The Engineers' Association however set a time limit for a decision on the issues relating to the revision of pay scales and yardstick and decided to observe "work to rule" from 16th February 1970.

As the Engineers wanted the immediate revision of pay scales and reversion to the earlier yardsticks for sanction of posts, they had embarked on their "work to rule" programme with effect from 23rd February 1970. The "work to rule" programme was peaceful and had not interfered with the operation and maintenance and construction work of the grid. Meanwhile the workload Committee constituted by the Board submitted its Report recommending revised yardsticks for sanction of posts of Engineers which more or less correspond to the yardsticks in vogue prior to the Indo-Pakistan conflict. The Board has since accepted the recommendations of the Committee and issued orders. As a result the Engineers' Association has with drawn its "work to rule" programme on 16th March 1970.

* திரு. எஸ். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தில் பணியாற்றுகின்றவர்களுடைய ஊதிய விகி தத்தை மாற்றியமைக்க வேண்டுமென்பதற்காக விடுத்த கோரிக்கை

களின் மீது தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டு கிறேன். ஆனால் மார்ச் 31, 1970-க்குள் இந்தப் பேச்சு வார்த்தைகளை முடிக்க வேண்டுமென்று மின்சார வாரியம் விரும்பியும் அங்கிருக் கும தொழிலாளர் சம்மேளனத்தில் இடது, வலது என்ற தகராறு இருப்பதன் காரணமாக அவர்களுக்கு அந்தக் குழுவில் இடம் இல்லை என்பதற்காக வேண்டுமென்றே மார்ச் 31-ம் தேதிக்குள் முடி யாத அளவுக்குத் தகராறு நடந்து வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? எக்காரணத்தைக் கொண்டும் தள்ளிப் போடாமல் மார்ச் 31-ம் தேதிக்குள் பேச்சு வார்த்தைகளை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** பேச்சு வார்த்தையை முடிப் பதிலே மாண்புமிகு உறுப்பினருக்குள்ள அக்கறை எல்லோருக்கும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் அவர்களுக்கிடையே தகராறு இருக்கிறது. இந்தியன் கோட் ஆப் டிசிப்ளின் என்ற முறையில் ரெகக்னைஸ்டு யூனியன் அண்டு சபார்டி னேட் சர்விஸ் யூனியன் என்றும், ரிஜிஸ்டர்டு யூனியன் என்றும் இருக்கிறது. இரண்டு சாராருக்குமிடையே உள்ள தகராறைத் தீர்க்க லேபர் கமிஷனர் மூலமாக கன்சிலியேஷன் ஆரம்பித்து பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. அது சுமுகமாக முடிந்துவிடும். அது நாளைக்கே முடிந்துவிட்டால் கூட சபைக்கு அறிவிக்கத் தயாராக இருக்கிறேன். தொழிலாளர்கள் ஒத்துழைப்புக் கொடுத்தால்தான் அது முடியும். அவர்கள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Dr. H. V HANDE : Sir, while we are thankful to the Hon. Minister for taking immediate steps to have conciliation talks, will he be pleased to tell us whether the degree-holders and diploma-holders have given demands separately as they are not in the recognised type of trade unions having outsiders as their leaders. Will this Government call them separately and discuss with them their demands so that their problem also will be solved along with the other problems?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** டிகிரி வைத்திருந்தாலும் சரி, டிப்ளோமா வைத்திருந்தாலும் சரி, ரெகக்னைஸ்டு யூனியனில் இருக்க வேண்டும் அல்லது ரிஜிஸ்டர்டு யூனியனில் இருக்க வேண்டும். ஏதாவது ஒன்றில் இருந்தால் கொடுப்பதில் ஆட்சேபனை இல்லை.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த எஞ்சினியர்களைப் பொறுத்தவரை மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு அதிருப்தியைத் தெரிவித்திருக் கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் நியாயம் என்று ஏற்றுக் கொள்ளுகின்ற நிலைமையில் அவர்களுடைய சம்பள விகிதத்தை உயர்த்தி மாற்றியமைக்க துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று மின்சார வாரியத்திற்கு உத்தரவிடுவார்களா?



**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** இரண்டு கோரிக்கைகளை அவர் கள் வைத்தார்கள். சம்பளத்தைக் அதிகமாக்க வேண்டுமென்பது ஒன்று; வேலைப் பளுவைக் குறைக்க வேண்டுமென்பது மற்றொன்று. வேலைப் பளுவைக் குறைத்து விட்டார்கள் என்பதை அவர்களே ஏற்றுக் கொண்டார்கள். சம்பள விகிதத்தை உயர்த்த வேண்டு மென்பதில் ஏனைய 70,000 பேருக்கும ஒரே காலத்தில் அறிவிக்க வேண்டுமென்று பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருப்பதால் கூடிய விரைவில் அறிவிக்கப்படும்.

## (3) அறிக்கை அளித்தல்

### தமிழ்நாடு ஆவணகாப்பகம் பற்றிய பரிந்துரைகள் மேல் அரசு எடுத்த நடவடிக்கை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு பதிவேட்டு அலுவலகம் (தற்போதைய தமிழ்நாடு ஆவண காப்பகம்) பற்றிய அறிக்கையில் அடங்கியுள்ள மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 14-வது அறிக்கையைப் பேரவை முன் வைக்கிறேன்.

## (4) அரசினர் மசோதா.

### தமிழ்நாடு 1970-ம் தொழில் நிறுவனங்கள் (தேசீய பண்டிகை விடுமுறைகள்) திருத்த மசோதா.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** பேரவைத் தலைவர் அவர் களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசீய பண்டிகை விடுமுறைகள்) திருத்த மசோதாவை இப்பேரவையில் அறிமுகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** இம் மசோதாவை இப் பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் இம் மசோதா அறிமுகப்படுத் தப்பட்டிருக்கிறது.

## (5) நடைமுறைக் கேள்வி

### திரு. கோ. பூவராகவன் தலைமையில் இயங்கும் கட்சி உறுப்பினர்களுக்கு அவையில் தனி இடம் ஒதுக்காதது குறித்து.

**திரு. கே. விநயகம் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இங்கு பிரதான எதிர்க்கட்சி காங்கிரஸ். கடந்த மூன்று ஆண்டு களாக எதிர்க்கட்சியில் அமர்ந்து எங்கள் பணியைச் செய்து கொண்டு வருகிறோம். எங்கள் கட்சியில் ஏற்பட்ட குழப்பம், பிளவு காரணமாக எங்கள் கட்சியில் ஒருசிலர் உயர்திரு பூவராகன்

தலைமையில் வேறு கட்சியாக இயங்குகிறோம் என்று கூறி தங்களுக்கும் அறிவித்தார்கள். வருகிற தேர்தலின்போது கூட அவர்கள் கட்சியின் சார்பில் ஒருவர் போட்டியிடுகிறார் என்பதெல்லாம் கூட உங்களுக்குத் தெரிந்த விஷயந்தான். தனியே இயங்குகின்ற அந்தக் கட்சிக்காரர்கள் எங்கள் கூடவே இருந்து நாங்கள் செய்கிற பணிகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருப்பதால் எங்களுக்குத் தொல்லையாக இருக்கிறது. அவர்கள் எங்களுடனே இருப்பதால் தனியே இயங்குகிற சூழ்நிலை உண்டாக முடியவில்லை. நாங்கள் அமைச்சர்களோடு ஏதோ பேசுவோம்; அப்போது பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்; கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்கு ஓட்டுப் போடக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுவோம். (மணி அடிக்கப்பட்டது) I am preparing the ground for the point of order. தயவு செய்து சிரமம் இல்லையென்றால் அவர்களுக்குத் தனி இடத்தை ஒதுக்கி விடுங்கள். அவர்கள் எங்களை விட உயர்ந்தவர்களாகக் கூட இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டரைச் சொல்லுங்கள்.

**திரு. கே. வினாயகம் :** தனியாக இடம் ஒதுக்க வேண்டுமென்று கோரி பத்துப் பதினைந்து நாட்கள் ஆகியும் கூட, வேண்டிக் கொண்டிருந்தும் கூட இதுவரை செயல்படுத்தாததற்கு, தாமதத்திற்கு என்ன காரணம் என்பதைத் தலைவர் அவர்கள் விளக்குவார்களா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாமதத்திற்குக் காரணம் கேட்கிறீர்கள். இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

**திரு. கே. வினாயகம் :** உங்கள் மீது குற்றம் சொல்லக் கூடாது. you must have done it on the day you have received it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு பூவராகன் அவர்கள் தாங்கள் தனியாக இயங்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். அதே போல ஃபார்வர்டு பிளாக்கைச் சேர்ந்தவர்களும் தனியாக இயங்கப் போவதாக அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதையொட்டி யார் யாருக்கு எந்த எந்த இடங்களை ஒதுக்கலாம் என்பதைப் பற்றிக் குறிப்பிட்டு கட்சித் தலைவர்களுக்கு அனுப்பி இருக்கிறோம்.

அது எல்லாக் கட்சித் தலைவர்களிடமிருந்தும் வரவில்லை. எதிர் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்துவிட்டார்கள். எல்லாத் தலைவர்களிடமிருந்தும் வரவில்லை. வந்தவுடன் இடங்கள் ஒதுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் கொடுத்தாகிவிட்டது. எங்கள் கட்சிப் பிரச்னையைப் பற்றிப் பேசும்போது தனியாக எங்களுக்கு இயங்க வேண்டும் என்று கேட்கிற உரிமை இல்லையா என்று கேட்கிறேன். முன்பு சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு கொடுத்தபோது கட்சிகளுக்கு இடம் சொந்தம் அல்ல, நான் கொடுக்கும் இடங்கள்தான் உறுப்பினர்களுக்குள்ள இடங்கள் என்று சொன்னீர்கள்.



பத்திரிகைகளில் தவறாக வந்திருக்கிறது, வெளியே தவறாக நினைக்கிறார்கள் பொது மக்கள். "கருத்திருமன் அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கிறது" என்று பத்திரிகைகளில் வந்திருக்கிறது. "சபாநாயகர் மறுப்பு" என்று வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நமது விதிமுறைப்படி பேரவைத் தலைவர் யார் யாருக்கு எங்கெங்கு இடம் ஒதுக்குகிறார்களோ, அங்குதான் உறுப்பினர்கள் உட்காரவேண்டும். உறுப்பினர்களுக்குத்தான் இடம் ஒதுக்கப்படுகிறது. இடம் , கட்சிக்கு இல்லை என்பதை மீண்டும் நான் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நமது விதிமுறைகள் கட்சிக்கு இடம் தரவில்லை. உறுப்பினர்களுக்கு இடம் தருவதற்காகத்தான் விதிமுறைகள் வழி வகுத்துக் கொடுத்திருக்கின்றன. அது பேரவைத் தலைவர் கட்சித் தலைவர்களோடு கலந்து கொண்டு செய்கிற ஒரு முறை. அதற்கு சட்டத்தில் இடம் இல்லை, ஒரு வசதியை செய்து கொள்வதற்காகவே பேரவைத் தலைவர் மற்றக் கட்சித் தலைவர்களோடு கலந்து எந்தெந்த உறுப்பினர்களுக்கு எங்கெங்கு இடம் ஒதுக்கலாம் என்பது குறித்து கலந்து கொண்டு செய்கிற ஒரு முறையே தவிர விதிமுறைகளில் அதற்கு இடமில்லை. அதைத்தான் சொன்னேன். அதையொட்டி இன்னின்ன இடங்கள் உங்களுக்கு என்று ஒதுக்கித் தரப்படுகிறது. யார் யாருக்கு எங்கெங்கு இடம் ஒதுக்கித் தரச்சொல்கிறீர்கள் என்று உங்கள் சம்மதம் கேட்பது என்பது விதிமுறையையொட்டியதல்ல. தலைவர்களோடு கலந்து கொண்டு நல்லதொரு முறையை உருவாக்கவேண்டும் என்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு வாய்ப்பு அது. பதில் எல்லாத் தலைவர்களிடமிருந்தும் வரவில்லை, ஒன்றிரண்டு கட்சித் தலைவர்களிடமிருந்து இன்னும் வரவில்லை. அவை வந்தவுடன் அறிவிக்கப்படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** விதிமுறையில் இடம் இல்லையென்றால் கன்வென்ஷன் இருக்கிறதா, கன்வென்ஷன் என்றால் மரபு இருக்கிறதா. இதுவரை அது கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறதா இல்லையா என்று கேட்கிறேன். இதுவரையில் தமிழ்நாடு சட்டசபையில். மதராஸ் சட்டசபையில், இதுமாதிரி ஏற்பட்டிருக்கிறதா ? அது உங்கள் காலத்தில் ஏற்பட வேண்டாம் என்பதுதான் என் கோரிக்கை. இவ்வளவுதூரம் கண்டிப்பாக இருக்கும் சபாநாயகர், இவ்வளவுதூரம் திறம்பட நடத்தும் சபாநாயகர், இவ்வளவுதூரம் நடவடிக்கைகள் எடுக்கும் சபாநாயகர், இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க ஏன் தயங்குகிறீர்கள் என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்கித் தரவேண்டிய பொறுப்பு பேரவைத் தலைவர் அவர்களைச் சார்ந்தது. ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் ஒரேயிடத்தில் அமர வாய்ப்பு வசதி செய்து ஏற்படுத்தித் தருவது ஒரு மரபாக இருந்துவருகிறது. அதைத் தலைவர் அவர்கள் மறுக்கவில்லை. அந்த மரபின் அடிப்படையில்தான் அந்த அந்தக் கட்சியைச் சார்ந்த

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 மார்ச் 21

வர்கள் ஒவ்வொரு இடத்தில் உட்கார இட வசதி ஏற்படுத்தித் தரும் நோக்கத்தில்தான் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள். திரு. பூவராகன் அவர்கள் தலைமையில் இயங்கும் கட்சியும் தனிக் குடித் தனம் போகவேண்டுமென்று விரும்பிக் கொண்டிருக்கிறார்கள். தனியாக உட்கார வேண்டுமென்று நீங்களும் கருதிக் கொண்டிருக்கிறீர்கள். தலைவர் அவர்களே, இதுகுறித்து விரைவில் முடிவு எடுத்து தனி இடம் ஒதுக்கித் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன். ஒருசில கட்சித் தலைவர்களிடமிருந்து யார் யாருக்கு எந்தெந்த இடங்களில் தருவது என்பதுபற்றிய குறிப்புகள் வராததால் காலத்தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. விரைவில் இதுபற்றி ஒரு முடிவு எடுத்து இடங்களை ஒதுக்கித் தரவேண்டுமென்று நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : "சபாநாயகர் அவர்களின் தீர்ப்பு .. ஏற்றுக்கொள்ளமுடியாது" .. என்று வந்தால் அதன் பொருள் என்ன? பத்திரிகைகளில் இப்படி வந்திருக்கிறது. நாளைக்கு இடம் ஒதுக்கப்படவில்லை என்றால் இந்த இடத்தில் வந்து நாங்கள் உட்கார மாட்டோம் என்று சொல்லிக்கொள்கிறேன். திங்கட்கிழமை அன்று இடம் மாற்றப்படவில்லை என்றால் நாங்கள் சபைக்கு வர மாட் டோம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஏற்றுக்கொள்ளமுடி யாது. தனி இடம் கொடுக்கப்பட மாட்டாது என்று தலைவர் அவர் கள் அன்றும் சொல்லவில்லை. தனி இடம் ஒதுக்கித் தரப்படுவதற் கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விரைவில் ஒதுக்கித் தருகிற தன்மையில் ஈடுபட்டிருக்கிறார்கள். என்றுதான் தலைவர் அவர்கள் சொன்னாரே தவிர எதிர்கட்சித் தலைவர் அவர்களின் கோரிக்கையை நிராகரிக்கிறேன் என்று அவைத்தலைவர் அவர்கள் தீர்ப்பு அளிக்கவில்லை. எல்லாக் கட்சித் தலைவர்களிடமிருந்தும் பதில்கள் வராததால்தான் இந்தக் காலத்தாழ்வு. அதனால்தான் இந்தக் காலதாமதம். விரைவில் அதை முடிக்கும் முயற்சிகளை எடுத்துக்கொள்ளும்படி தலைவர் அவர்களை நானும் கேட்டுக்கொண் டிருக்கிறேன். கட்சித் தலைவர்களோடு கலந்துகொண்டு அந்த முயற் சியை மேற்கொள்ளலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : " சபாநாயகர் அவர்கள் தீர்ப்பு— கருத்திருமனின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கிறது " என்று வந்திருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : சபாநாயகர் அவர்களின் தீர்ப்பை எதிர்த்து பயமுறுத்துவதுபோல். எச்சரிக்கை செய்வதுபோல் சபையில் பேசக்கூடாது என்பது விதிமுறை. ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தாங்கள் இந்தக் காரியத்தைச் செய்யப்போவதாக சொன்ன பிறகும் கூட நாளை மறுநாள்--நாளை ஞாயிற்றுக்கிழமை, நாளையே கூட—இங்கு வந்து உட்கார மாட்டோம் என்று, நாளைய தினம் உட்காரமாட்டோம் இங்கு வந்து என்று ஒரேவேகத்தில் எச்சரிக்கை செய்வது சபை விதிகளுக்கு உகந்ததா என்பதுபற்றி தீர்ப்பளிக்கும்படி வேண்டுகிறேன்.



1970 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பலமுறை சுட்டிக்காட்டி யிருப்பதைப் போல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த மன்றத்தில் உறுப்பினராக இருந்தவர், பாராளுமன்றத்திலும் உறுப்பினராக இருந்தவர். ஆளும் கட்சி கொறடாவாகவும் இருந் தவர். அவர்களுக்கு விதிமுறைகள் பற்றி நன்கு தெரியும். சபா நாயகர் அவர்களுக்கு எந்தஅளவிற்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியும். ஆனால் சில நேரங்களில் எழுந்து நிற்கிற நேரங்களில் அவர் தம்மையே மறந்து விடுகிறார். அப்போது சில வார்த்தைகளைச் சொல்கிறார்கள். இதுகுறித்து சபாநாயகர் வருத்தப்படுவதில்லை. அப்படி வருத்தப்படக்கூடிய நிலையில் நாம் இல்லை, அப்படி நம்மை ஆளாக்கிய தலைவரும் இல்லை, வள்ளுவரும் இருக்கிறார்.

" நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை."

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். ஆகவே சபாநாயகர் அவர் களை சாலெஞ்ச் செய்வது அல்லது சபாநாயகர் அவர்களுக்கு சவால் விடுவதுபோல் பேசுவதை எல்லாம் சவாலாகவே தலைவர் நினைப்ப தில்லை என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : நான் சவால் விடுக்கவில்லை. சபா நாயகர் அவர்களை அவமதிப்பது என்பது என் கொள்கை அல்ல, அது என் பழக்கமும் அல்ல. நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறேன், காங்கிரஸ் கட்சி கொறடாவாகவும் இருந்திருக் கிறேன். ஆனால் இதுமாதிரி ஒருவர் தனக்கு தனி இடம் வேண்டு மென்று சொல்லிவிட்டால் அடுத்த நாளே ஒதுக்கி வைத்திருக் கிறோம் என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்தவேண்டியது என் கடமை. நான் கொறடாவாக இருந்தபோது எப்போது எழுதிக் கொடுக்கிறார்களோ அடுத்த நாளே இடம் ஒதுக்கிக் கொடுக்கக்கூடிய மரபு இருந்தது. இதை ஞாபகப்படுத்த எனக்கு உரிமை இல்லையா? தங்கள் தீர்ப்பை எதிர்த்துப் பேசவில்லை. நான் பேசும்போது என்னை மறந்துவிட்டுப் பேசுவதில்லை. கடமை என்ற முறையில் சொன்னேன். நான் கையெழுத்துப் போட்டு அனுப்பியாகி விட்டது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பலமுறை தெளிவாகவே சொல்லியிருக்கிறேன். எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சபா நாயகரை அவமதிக்கவில்லை. எனக்கு நினைவூட்டுவதற்காக என்று சொன்னார்கள். அப்படி நினைவூட்டத் தேவையில்லை. மறந்திருந் தால்தானே நினைவூட்டுவதற்கு? என் கடமையை நான் சரிவர ஆற்றிவருகிறேன். நேற்று ஒரு முறை ஒரு சிறிய தவறுக்காக கட்சிச் செயலாளர் அவர்கள் வாங்கிய கடிதத்தை என்னிடம் உரிய நேரத்தில் கொடுக்கவில்லை என்பதற்காக அவர்களின் சார்பில் நான் மன்னிப்பு கேட்டுக்கொண்டேன். என் கடமையையும், பொறுப்பை யும் நிறைவேற்றும் வகையில்தான் இந்த இடத்தில் இருக்கிறேன். இடங்கள் ஒதுக்குவது என்பது மரபையொட்டியது. எதிர்கட்சி யினர் அந்தப் பகுதியில் என்றால் திரு. வீராசாமி அவர்கள் அந்தப்

பக்கத்தில் இல்லையா, வீராசாமி அவர்கள் உட்பட சாரதி அவர்கள் வரையில் அந்தப் பக்கத்தில் இருப்பதால் அவர்கள் எதிர்கட்சியைச் சார்ந்தவர்களா? இல்லை. ஆகவே மரபு இருப்பதை ஒப்புக்கொள் கிறேன். வசதிக்காகக் கொடுக்கிறோம். இன்ன இடத்தில் இன்ன உறுப்பினர் உட்காரவேண்டும் என்று சொல்கிற உரிமை சபாநாயகர் அவர்களுக்கு உண்டு. அவர்கள் கூறும் இடத்தில்தான் உறுப்பினர் கள் உட்காரவேண்டும். அது தெளிவாக இருக்கிறது விதியில். வேண்டுமானால் விதிமுறைகளை மாற்றுங்கள். கட்சிகளுக்கு இடம் ஒதுக்கவேண்டும், காங்கிரஸ் கட்சிக்கு இங்கே, அந்தக் கட்சிக்கு இங்கே, இன்னொரு கட்சி உருவாகுமானால் அதற்கு இங்கே, அடுத்த கட்சிக்கு இங்கே என்று சொல்லட்டும் விதிமுறைகளை மாற்றட்டும். சபாநாயகர் கூறும் இடத்தில்தான் உட்காரவேண்டும் என்று விதி முறை இருக்கிறது. தற்போதைய சட்டமன்ற விதிமுறைகளில் கட்சிகளுக்கு என்று இடமில்லை. வசதிக்காக செய்கிறோம். நாற் பது பேர்களுக்கு இங்கே இடம், பத்து பேர்களுக்கு அங்கே இடம் பதினைந்து பேர்களுக்கு அங்கே இடம் என்று உறுப்பினர்களுக்காக இடம் ஒதுக்கப்படுகிறது. உங்கள் உறுப்பினர்கள் இங்கே அமர வேண்டும் இங்கே அமரவேண்டும் என்று சொல்கிறீர்கள். அதைக் கூட கேட்கத் தேவை இல்லை. சபாநாயகரே போட்டு விடலாம். ஆனால் உங்கள் வசதிக்காகக் கேட்கிறோம், செய்கிறோம். நல்ல முறையில் அவை நடக்கவேண்டுமென்ற எண்ணத்தில் அது செய்யப் படுகிறது. எதிர்கட்சித் தலைவர் அவர்கள் நாளை இங்கு வந்து உட்காரமாட்டோம் என்று கூறுவது பொதுமக்களுக்கு அவர் ஆற்ற வேண்டிய கடமையிலிருந்து மீறுவதுபோலாகும்.

**திரு. எம். சுரேந்திரன் :** இடங்கள் ஒதுக்குவது, உறுப்பினர் களுக்கு இடங்கள் ஒதுக்குவதில் ஒரு மரபு இருக்கிறது. சபாநாயகரவர்கள் கூறும்பொழுது உறுப்பினர்களுக்கு மட்டும் ஒதுக்க வேண்டுமென்றும், ஆனால் அதே நேரத்தில் கட்சித் தலைவர்களைக் கூப்பிட்டுப் பேசுவது என்றும் சொல்வது முரண் பட்டதாக . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கட்சித் தலைவர்களை, என்ன சொன்னீர்கள்?

**திரு. எம். சுரேந்திரன் :** கட்சித் தலைவர்களின் விருப்பத்தை அறிய வேண்டுமென்று சொல்வதும், உறுப்பினர்களுக்கு மட்டும் இடம் ஒதுக்க வேண்டுமென்று கூறுவதும் ஒன்றுக்கொன்று முரண் பட்டதாக இருக்கிறதே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முரண்பாடு இல்லை என்று திரு. சுரேந்திரன் அவர்களுக்குச் சொல்கிறேன், முரண்பாடே இல்லை. நான் தெளிவாகச் சொல்லுகிறேன், பேரவைத் தலைவர் குறிப்பிட்ட இடத்திலேதான் உறுப்பினர்கள் உட்கார வேண்டும், உறுப்பினர் களுக்கு இடம் ஒதுக்கத்தான் விதி இடம் கொடுக்கிறதே தவிர, கட்சிக்கு இடம் ஒதுக்க விதி இடம் தரவில்லை. ஆனால் பேரவைத் தலைவருக்குத் துணை செய்யுமாறு, கட்சித் தலைவர்களை பேரவைத்





தலைவர் கேட்டுக் கொள்கிறார், எந்தெந்த இடத்திலே உட்காரலாம் என்று கேட்கிறாரே தவிர, விதிமுறைகளை ஒட்டி அல்ல. எனவே, இதில் எந்தவிதமான முரண்பாடும் இல்லை என்பதை திரு. சுரேந்திரன் அவர்கள் உணர வேண்டும்.

**திரு. எம். சுரேந்திரன் :** நான் சொல்வது, மரபுகளையும், விதி முறைகளையும் அனுசரித்துச் செய்யக்கூடிய காரியத்தில், சபையின் நேரத்தில் இவ்வளவு நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமா என்றுதான். அதே நேரத்தில் கனம் திரு. பூவராகன் அவர்களின் தலைமையில் இருக்கும் உறுப்பினர்களைப் பார்த்து, கனம் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மிரண்டு ஓடுகின்றேன் என்று சொல்லுகிறார் களே, அவர்களைப் பிடித்து வைக்கும் வேலையையும் சபாநாயக ரவர்கள் செய்வார்களா?

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர்கள், சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர்கள், கொறடாவாக இருந்தவர்கள், அவர்களுக்கு விதிமுறைகள் தெரியும், இருந்தாலும் நிலைமறந்து பேசுகிறார், அதற்காக அவைத் தலைவர் கவலைப்பட வில்லை என்று சொன்னீர்கள். அவைத் தலைவர் கவலைப்படுகிறாரா இல்லையா என்பது அல்ல. 'திங்கட்கிழமைக்குள் இடம் ஒதுக்கா விட்டால்' என்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மிரட்டுகிறார்கள், அப்படி அவைத் தலைவரவர்களை மிரட்டுவது முறைதானா என்பதற்குத் தீர்ப்பு அளிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொல்லிவிட்டேன், மிரட்டக்கூடாது என்பது நன்றாகத் தெரிந்துதான் சொன்னார்கள், நான் மிரட்டவில்லை, கருத்தைச் சொன்னேன் என்று மறுபடியும் சொல்லிவிட்டார்கள். அவர்களின் இயல்பே அதுதான். எழுந்து நின்று உணர்ச்சி வயப்பட்ட நிலையிலே சொல்லிவிடுவார், அது தானே தவிர அவருடைய உள்ளத்திலேயிருந்து சொல்வதாக யாரும் நினைப்பது இல்லை, நான் எப்பொழுதுமே, நினைப்பதும் இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உணர்ச்சி வயப்படுகிறேன் என்றால், ஏதோ நான் 'டபிள் ஸ்டாண்ட்' நிலையில் இருப்பதைப்போல் குறிப் பிடுகிறீர்கள். நான் எடுப்பது கண்டிப்பான ஸ்டாண்ட் தான். நான் எதற்காகக் கூறினேன் என்றால் அம்மாதிரியான சந்தர்ப்பத் திற்கு வர வேண்டியிருக்கும் என்பதற்காக, வாக் அவுட் செய்யும் நிலைமை ஏற்படுவதில்லையா, அதுபோல். கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறோம். எங்களுடைய பார்ட்டியில் சில விஷயங் களைப் பேச வேண்டியிருக்கும், அதற்காகத்தான் சொல்லுகிறோம். கையெழுத்துப்போட்டுக் கொடுத்தும், டிவிஷன் லிஸ்ட் போட்டுக் கொடுத்தும், ஏன் தாமதம் என்பதுதான். இன்னும் ஏன் ஒதுக்க வில்லை? நீங்கள் காப்பாற்றவில்லையென்றால், நாங்கள் அனாதை களைப்போல வெளியிலே நிற்க வேண்டியதுதான்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 மார்ச் 21

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கட்சிகளுக்கு இடம் ஒதுக்குவதைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவரவர் களின் ஒத்துழைப்பு வேண்டுமென்று அவைத் தலைவரவர்கள் கேட்டுக்கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் தலைமையில் உள்ள கட்சியினர் தனியாக உட்கார இடம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதைப்போன்றே, முற்போக்குக் கட்சியை சேர்ந்தவர்கள் தாங்கள் உட்கார இடம் ஒதுக்க வேண்டுமென்று தலைவரல்லாத மற்றவர் முதலில் எழுதினார். அவைத் தலைவரவர்கள், தலைவரே எழுதினால் கவனிக்கப்படும் என்று சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவரவர்களின் ஒத்துழைப்பு வேண்டுமென்று கேட்பதற்குக் காரணம், முற்போக்குக் கட்சியினர், 1—4—70 முதல் சட்டப் பேரவையில் ஃபார்வேர்ட் பிளாக் தனிக் கட்சியாக இயங்கவிருக்கிறது, எனவே, 1—4—70 முதல் இடம் ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். திரு. பூவராகன் அவர்களும் தனியிடத்தை முதலிலேயே கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஒரு வார காலம் எடுத்துக் கொண்டு, எங்கெங்கு உட்காருவது என்று சொல்லியிருக் கிறார்கள். அவர்களுக்கு ஒரு வார காலம் தேவைப்பட்டது, இவர் களுக்கு இரண்டு வார காலம் தேவைப்படுகிறது, மற்றவர்களுக்கு 10 நாட்கள் தேவைப்படலாம். எல்லாக் கட்சிகளும் ஒத்துழைப்பு தந்தால் திங்கட்கிழமை, செவ்வாய்கிழமைக்குள் முடிவு செய்து விடலாம். எல்லோரையும் கலந்து, ஒரு கட்சிக்கு மட்டும் இப் பொழுது இடம் அளித்துவிட்டு, மற்றொரு கட்சிக்குப் பிறகு ஒதுக்குவதை விட எல்லோரையும் கலந்து செய்வது நல்லது என்ற முறையில் அமைந்திருக்கிறதே தவிர, இதை அவைத் தலைவரவர் களோ, அல்லது துறையினரோ காலதாமதம் செய்யவில்லை. முயற் சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அவைத் தலைவரவர் களின் வேண்டுகோளுக்கிணங்கி கட்சித் தலைவர்கள் ஒத்துழைப்பு கொடுத்தால் விரைவிலே செய்ய முயற்சிக்கலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** டிவிஷன் லிஸ்டை வைத்து, பெயரைக் கொடுத்து, ஒரு வாரம் ஆகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் முதலிலேயே சொன் னேன், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் தங்களுடைய லிஸ்டைக் கொடுத்துவிட்டார் என்று. இல்லை என்று நான் சொல்ல வில்லை. இன்னும் சில தலைவர்கள் கொடுக்கவில்லை என்று தெளி வாகச் சொல்லியிருக்கிறேன். நான் கூறுகின்ற சொற்களை மாண்பு மிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். எல்லாத் தலைவர்களும் கொடுக்கவில்லை என்று நான் சொல்லவில்லை, சில தலைவர்கள் கொடுக்கவில்லை, அதுவும் வந்த பிறகு செய்கிறேன் என்றுதான் சொல்லியிருக்கிறேனே தவிர, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவ வர்கள் கொடுக்கவில்லை என்று சொல்லவில்லை. இடம் ஒதுக்கித்தர வில்லை என்றால் வெளிநடப்பு செய்வோம் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறுவது, அது பேரவைத் தலைவரின்



1970 மார்ச் 21] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

தீர்ப்பை எதிர்த்து செய்யக்கூடிய வெளிநடப்பாகும். அதுகூட் மரபு இல்லை. பேரவைத் தலைவரின் தீர்ப்பை எதிர்த்து வெளி நடப்பு செய்வது கூடாது. வெளிநடப்பு செய்வேன் என்று கூறு வது முறையல்ல. வெளிநடப்பு செய்வதற்கு முன்பே சொல்லுகி றேன், பேரவைத் தலைவரின் தீர்ப்பை எதிர்த்து வெளிநடப்பு செய் வது விதிமுறைகளை ஒட்டி வராது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தீர்ப்பு என்பது வேறு, இந்த இடம் ஒதுக்குவது என்பது வேறு. நான் இவ்வளவு நாள் இருக்கிறேன் என்று சொல்லுகிறீர்கள், பாராளுமன்றத்தில் இருந்தேன் என்று எனக்குப் பெருமையைக் கொடுத்துச் சொல்லும்பொழுது, இவ் வளவு கீழ்த்தரமாக, கூர்ந்து, கவனிக்கவில்லை என்று சொன்னால் அறிவு இல்லை என்று அர்த்தமா? எதிர்க் கட்சித் தலைவருக்குக் காட்டக்கூடிய மரியாதையா இது? கூர்ந்து நோக்கவில்லை என்று சொன்னால் அதன் பொருள் என்ன? கூர்மையே இல்லை என்று சபாநாயகரவர்கள் கூறுகிறார்களா? நான் அவ்வளவு அறிவில்லா தவனாக இருக்கலாம், அறிவுள்ள நீங்களாவது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் உணர்ச்சிவயப்பட்டுப் போய்விடக்கூடாது. நான் எல்லாத் தலைவர்களும் கொடுக்கவில்லை என்று சொல்லியிருந்தால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் நான் கொடுத்திருக் கிறேன் என்று கூறியிருக்கவேண்டும். நான் கொடுத்திருக்கிறேன் என்று சொல்லும்படியான நிலை ஏன் ஏற்பட்டது? நான் சொன்ன வார்த்தைகளைச் சரியாகக் கவனிக்காததால். சில தலைவர்கள் கொடுக்கவில்லை என்று நான் கூறியிருக்கும்போது நான் கொடுத் தாகிவிட்டது என்று சொல்ல வேண்டிய நிலை தேவையில்லை. அதற் காகத்தான் சொன்னேன். ஆகவே, நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்களை மீண்டும் கேட்டுக்கொள்ளுகின்றேன், அவர்கள் தெரியாமல் இருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்லவில்லை என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஒரே யொரு குறிப்பை மட்டும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். லீடர் ஆஃப் தி அப்போசிஷன் என்றால் எதிர்க் கட்சிகள் அத்தனைக்கும் லீடராக இருக்கிறார் என்று பொருள். அந்தப் பொருளிலே அவைத் தலைவரவர்களுக்கு அதிக இடைஞ்சல் இல்லாமல், எந்தெந்தக் கட்சி களுக்கு இடம் எங்கு ஒதுக்கித் தர வேண்டுமென்று சொல்லக்கூடிய பொறுப்பு எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்கு அமைந்திருக்கிறது. ஆகவே, அவர்கள் மற்றக் கட்சித் தலைவர்களைக் கலந்து எந்தெந்த இடம் என்று நிர்ணயித்து, அவைத் தலைவரவர்களுக்கு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டிருந்தார்களானால் இந்தப் பிரச்னைக்கு அதிகக் கஷ்டம் ஏற்பட்டிருக்காது. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இந்தப் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக்கொண் டிருக்கலாம். மற்றத் தலைவர்களோடும் கலந்து ஒரு முடிவை அவைத் தலைவரவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** டிவிஷன் போட்டு, எந்தெந்தத் தலைவர்கள் எங்கு உட்கார வேண்டுமென்று போட்டுக் கொடுத்திருக்கிறேன். வெளியிலே வந்து, எங்களுக்கு வேலை இல்லை, பொறுப்பு இல்லை என்பது போலக் கருதும்படியும், அவர்களுடைய தீர்ப்பிற்கு அடங்காதது மாதிரியும் சொல்லியிருப்பதற்கு வருந்துகிறேன். டிவிஷன் மேப் போட்டுக் கொடுத்திருக்கிறேன். எனவே, எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பொறுப்பில்லாமல் இருக்கிறார், மரபு தெரியாமல இருக்கிறார் என்று கூறுவதுதான் வருத்தமாக இருக்கிறது. எனக்கு இவ்வளவு மரியாதை கொடுக்கிறார்களே, அதற்கு நன்றி.

*** திரு. எஸ். இராமச்சந்திரன் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசுகின்ற பொழுது, ஏற்கனவே அவர்களுடைய கட்சிக்காக ஒரு லிஸ்டைக் கொடுத்திருப்பதாக்ச் சொன்னார்கள். இப்பொழுது சிண்டிகேட், இண்டிகேட் என்று தினந்தோறும் மாறிக்கொண்டு இருக்கும் பொழுது, எந்த லிஸ்டை வைத்து பேரவைத் தலைவரவர்கள் இடம் ஒதுக்கப்போகின்றீர்கள் ? இராஜ்ய சபைத் தேர்தல் முடியும் வரை காத்திருக்கலாமல்லவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** it is not a point of order.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் அவர்கள் கூறினார்கள், எதிர்க் கட்சித் தலைவர் என்றால் எல்லோருக்குமே தலைவர் என்று கூறினார்கள். நாங்கள்தான் எதிர்க் கட்சியே தவிர, அவர் எதிரிக் கட்சி. எங்களுக்கெல்லாம் அவர் தலைமை தாங்குவது என்றால் அதை நாங்களும் ஏற்றுக்கொள்ள முடியாது, அவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் தைரியம் இருக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆஃப் ஆர்டரைச் சொல்லுங்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஆகவே, அவர்கள் இப்படித் தலைவராகப் பொறுப்பேற்க அதிகாரம் இருக்கிறதா ? இன்னும் ஒரு வாரம் பொறுத்தும் செய்யலாம் அல்லவா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்னவென்று சொல்லுங்கள். இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. எதை எதையோ பேசிக்கொண்டு போகிறீர்களே ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எங்கள் கட்சி எதிரிக்கட்சி, அவர்களுடைய கட்சி எதிர்க்கட்சி என்று சொன்னார்கள். அவர்கள் மக்களுக்கு எதிர்க்கட்சி. நாங்கள் சாதாரண எதிர்க்கட்சி.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** எல்லா கட்சிகளுக்கும் அவர் தலைவர் என்று சொல்லக்கூடியதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. நீங்கள் உட்காருங்கள்.





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எதிர் வரிசையில் பல கட்சிகள் இருக்கின்றன. ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு தலைவர் இருக்கிறார். லீடர் ஆப் அப்பொஸிஷன் என்பது அப்பொஸிஷனுக்கு லீடர் என்பது ஒரு மரபு வழியாக வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் எல்லா கட்சிகளினுடைய லீடர் என்று சொல்லவில்லை. அவர் லீடர் ஆப் தி காங்கிரஸ். அது மாதிரி ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு லீடர் இருக்கிறார். லீடர் ஆப் தி அப்பொஸிஷன் வேறு, லீடர் ஆப் தி காங்கிரஸ் வேறு, லீடர் ஆப் தி கம்யூனிஸ்டு பார்ட்டி வேறு, லீடர் ஆப் தி சுதந்திரா பார்ட்டி வேறு. லீடர் ஆப் தி அப்பொஸிஷன் என்பது ஜனநாயக முறையின் மரபுப்படி வந்தது. எல்லா எதிர் கட்சிகளுக்கும் அவர் தலைவர், அவர் சொல்கிறபடி எல்லா கட்சிகளும் கேட்கவேண்டும், அவர் இடுகிற கட்டளையை எல்லா கட்சிகளும் ஏற்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஜனநாயக முறையில் மரபின் வழியாக வந்த ஒரு இலக்கணத்தைத் தான் நான் எடுத்துச் சொன்னேன்.

## (6) 1970-71-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

### (அ) நிதி கோரிக்கை எண். 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண். 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 35,30,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**திரு. ரா. கனகசபை :** தலைவர்களே, இப்போது இருக்கும் விதி முறைகளை மாற்றி அமைக்கவேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 35,30,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, ஐந்து பஸ்களுக்கு மேல் உள்ள பஸ் வழித்தடங்களை அரசாங்க உடைமையாக்க வேண்டியதன் அவசியத்தை குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 35,30,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** தலைவர் அவர்களே, பத்து பஸ்களுக்கு மேல் உள்ள நிறுவனங்களுக்கு உச்சவரம்பு கட்டி வேறு

நிறுவனங்களுக்கு பஸ் ரூட்கள் கொடுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி கூற—

"நிதிக் கோரிக்கை எண். 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 35,30,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, தனியார்களுக்குப் புதிய பஸ் ரூட்டுகள் வழங்குவதன் மூலம் பஸ் தேசியமயக் கொள்கைக்கு ஏற்பட்டுள்ள அபாயம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 35,30,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, மாற்றுவண்டி (ஸ்பேர்) பஸ் இல்லாமல் பஸ் ரூட் கொடுக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள நிலைமைகளைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 35,30,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் ரோடுகள் பஸ் போக்கு வரத்துக்கு உகந்ததாக இருப்பினும், அரசு அங்கு வழித்தடங்களுக்கு அனுமதி அளிக்கத் தயங்குவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 35,30,300-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE : To discuss the inordinate delay and total absence of co-ordination in the Office of the Deputy Commissioner of Police. Traffic and Licensing, Egmore, Madras in accepting the motor vehicles tax and disposing the customers, I move the following cut motion :—

"That the allotment of Rs. 35,30,300 under Demand No. 2—Motor Vehicles Acts—Administration—be reduced by Rs. 100."

### (ஆ) நிதிக் கோரிக்கை எண். 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள்

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண். 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,51,32,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."



THIRU K. VINAYAKAM : To discuss the policy and the desirability of providing alternative bus route permits to those operators who have been displaced due to nationalisation of some of their routes, I move the following cut motion :—

"That the allotment of Rs. 19,51,32,700 under Demand No. 30 Road Transport Schemes be reduced by Rs. 100."

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, அரசு, ஐம்பது மைல்களுக்கு மேல் ஓடும் தனியார் பெருந்து வழித்தடங்களை அரசுடைமை ஆக்குவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 19,51,32,700-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, பஸ் போக்கு வரத்துத் திட்ட அடிப்படையில் நாட்டுடைமையாக்கக்கூடிய பெருந்து வழித்தடங்களின் நீள அளவை 30 மைல்களாகக் கோரி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 19,51,32,700-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு போக்கு வரத்துத் துறை பெருந்துகளில் பிரயாணம் செய்யும் பொதுமக்களுக்கு ஏற்படும் இடைஞ்சல்களையும் கஷ்டங்களையும் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 19,51,32,700-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. என். வரதராசன் :** தலைவர் அவர்களே, அரசு போக்கு வரத்துத் தொழிலாளர்கள் கோரிக்கைகளை ஏற்று அவர்கள் வேலை நிறுத்த முடிவை சமரசப்படுத்தவேண்டும் என்பதை வற்புறுத்த—

"நிதிக் கோரிக்கை எண். 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 19,51,32,700-இல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) நிதிக் கோரிக்கை எண். 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண். 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,00,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

DR. H. V. HANDE : To discuss policy I move the following cut motion :

"That the allotment of Rs. 3,00,36,000 under Demand No. 43 Capital Outlay on Road Transport Schemes—be reduced by Rs. 100."

THIRU K. RAMAMOORTHY : Sir, to discuss policy, I move the following cut motion :—

"That the allotment of Rs. 3,00,36,000 under Demand No. 43—Capital Outlay on Road Transport Schemes—be reduced by Rs. 100."

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, அரசு விரைவு வண்டி நிற்கும் இடங்களான கோவில்பட்டி, சாத்தூர் ஆகிய இடங்களில் பயணிகள் தங்குமிடம் அமைப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,00,36,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, பஸ்களை சரியாக கவனிக்காததால் கண்ட கண்ட இடங்களில், வண்டிகள் நின்றுவிடுவதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 43—சாலைப் போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,00,36,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிதிக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

■ 117-121-ம் பக்கங்களில் ஒன்றாவது இணைப்பாக கோரிக்கை 2-ன் மீது அமைச்சரின் தொடக்க உரை அச்சிடப்பட்டுள்ளது. 121-127-ம் பக்கங்களில் போக்குவரத்துத் துறையின் நிர்வாகம் பற்றிய குறிப்புரை மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன் மூன்று மானியக் கோரிக்கைகளின் * கீழ் சுமார் 23 கோடி ரூபாய் கோரி இந்த மாமன்றத்தின் அனுமதியைப் பெறுவதற்காக இந்த மானியக் கோரிக்கைகள் இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கின்றன. முன்னதாக சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். அந்தக் கருத்துக்களை நான் சொல்வதன் மூலம் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

1969-70-ம் ஆண்டில் தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின் செயல்கள் பற்றிய விரிவானதொரு ஆய்வுரை * மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியே வழங்கப்பட்டுள்ளது.

அரசுப் போக்குவரத்து துறை 1,680 ஷெட்யூல்களில் பேருந்துப் பணியை நடத்தி வருகிறது. சென்னை மாநகரில் இயங்கும் போக்குவரத்துப்பணி, புற நகரங்கள், வெளியூர்களில் ஓடும் பேருந்துகள், நீள் தொலைவு விரைவுப் பேருந்துப் பணி ஆகியவை உட்பட City suburban mofussil and long distance express buses மேற்சொன்ன 1680 ஷெட்யூல்களில் 1981 பேருந்துகள் ஓடுகின்றன. இத்துறை 17,700 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளதுடன் தனியார் பேருந்துப் போக்குவரத்து உரிமையாளர் போன்று மாநில அரசுக்கு வரிகளையும், கட்டணங்களையும் செலுத்துகிறது. அரசுப் பேருந்துப் போக்குவரத்து 1969-70-இல் வரிகள் மூலமாகவும், கட்டணங்கள் வாயிலாகவும் மாநில அரசுக்குச் செலுத்திய மொத்த தொகை ரூ. 2.62 கோடியாகும்.

அரசுப் பேருந்துப் போக்குவரத்துப் பணியின் பெரும்பகுதி சென்னையிலேயே நடைபெறுகிறது. சென்னையில் இப்போக்குவரத்துப் பணியை நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 10 லட்சம் மக்கள் பயன்படுத்துகின்றனர். இந்த நாட்டின் பிற மாநகரங்களில் போக்குவரத்துப் பணித்தேவையில் பெரும்பகுதி ரயில்வேயின் மூலம் நிறைவு செய்யப்படுகிறது. ஆனால், சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் அரசுப் பேருந்துப் போக்குவரத்துப் பணியைச் சேர்ந்த சென்னை மாநகரக் கிளைப்போக்குவரத்துப் பணி பெரும் பகுதிப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறதென்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். பொதுப் போக்குவரத்துப் பணிகளைப் பயன்படுத்துபவர்களில் 78 சதவீதத்தினர் பேருந்துகளையே பயன் படுத்துகின்றனர் என்றும், எஞ்சிய 20 சதவீதத்தினரே ரயில்களைப் பயன்படுத்துகின்றனரென்றும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் (ஹைவேஸ்

* 128–157-ம் பக்கங்களில் நான்காவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

ரிசர்ச் ஸ்டேஷன்) அண்மையில் மேற்கொண்ட ஆய்விலிருந்து தெரியவருகிறது. அதனால் இந்த நிறுவனத்திற்கு ஏற்படும் பொறுப்பின் சுமை இயல்பாகவே அதிகமாகிறது. ஒருவர் தனது இல்லத்திலிருந்து பேருந்து வழித்தடம் ஒன்றை அடைவதற்காகக் கடக்க வேண்டிய தொலைவு 2 பர்லாங்கு தொலைவிற்குள் இருக்க வேண்டுமென்று அமெரிக்கா போன்ற முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகள் கருத்துரை வழங்கியுள்ளபடி பேருந்து வழித்தட அமைப்பு அவ்வளவு நெருக்கமாக அமைந்துள்ளது என்பதும், பல இடங்களில் மேற்குறிப்பிட்ட 2 பர்லாங்கு தொலைவிற்கும் குறைவாக உள்ளதென்றும் தெரிய வருகிறது. பயணிகளுக்கு உள்ள பயன் வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு அலுவலகங்கள், நிறுவனங்கள், கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றின் வேலை நேரங்களை வெவ்வேறாக முடிவு செய்து அரசு இப்பொழுது ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணை செயல்படுத்தப்படுகிற நேரத்தில், நெரிசல் குறைந்து பயணிகள் வசதியாகப் பயணம் செய்யமுடியும் என்று நம்புகிறேன்.

நெரிசல் நேரச் சிக்கலுக்குத் தீர்வு காண இத்துறை சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. போக்குவரத்துப் பணி பல திசைகளில் பரவியுள்ளதாலும், பெருமளவுப் பயணிகள் குறிப்பிட்ட கால அளவுக்குள் பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டியுள்ளதாலும், அதிக அளவு பயணிகளை ஏற்றிச் செல்லத் தக்க பேருந்துகளை விடுவது ஒன்றுதான் இச்சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்கான ஒரே ஒரு வழியாகும். ட்ரெய்லர் பஸ்ஸஸ், தொடர் வண்டிப் பேருந்துகள் 71, 21- 15, 18 ஆகிய வழித்தடங்களில் விடப்பட்டுள்ளன. இதனால் முக்கிய சாலைகளில் நெரிசல் நேரத்தில் பேருந்துகளில் நெரிசல் ஓரளவுக்குக் குறைந்துள்ளது. சென்னை மாநகரில் இரண்டு அடுக்குப் பேருந்துகளை விடுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது. அத்தகைய பேருந்து ஒன்று கட்டப்பட்டு வருகிறது. இச்சோதனை நடவடிக்கைக்கு வெற்றி கிட்டுமாயின் இரண்டு அடுக்குப் பேருந்துகள் பல சென்னை மாநகரில் விடப்படும். நெரிசல் நேரப் போக்குவரத்துச் சிக்கலுக்குத் தீர்வுகாண இது பெருமளவில் உதவும்.

சென்னை-திருச்சி, சென்னை-மதுரை வழித்தடங்களில் இதுவரை ஓடிக் கொண்டிருந்த ஓரடுக்குப் பேருந்துக்கு பதிலாக, இரண்டு அடுக்குப் பேருந்துகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. சென்னை-திருச்சி வழித்தடத்தில் முன்னர் ஓரடுக்குப் பேருந்து ஒருமுறை தான் பயணம் செய்ய முடிந்தது. இப்பொழுது புதிய வகைப் பேருந்து நாள் ஒன்றுக்கு இவ்வழித் தடத்தில் இருமுறை பயணம் செய்கிறது. சீர் வசதிகள் செறிந்த 71 இருக்கைகள் அமைந்த இவ்வகைப் பேருந்துகள் ஒரு நாளில் 400 மைல் கடக்கத்தக்க திறனுள்ளவையாகும். பேருந்துக் கட்டணம் மூன்றாவது வகுப்பு





ரயில் கட்டணத்தை விடக் குறைவாக இருப்பினும், இப்போக்குவரத்துப் பணியிலிருந்து இத்துறைக்கு ஆதாயம் கிடைக்கிறது, என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். நாலு பேருந்துகள் இரவில் இயக்கப்படுகின்றன. பயண நேரமும் குறைக்கப்பட்டுள்ளது. இப்பேருந்துப் பணியை மக்கள் பெரிதும் விரும்பி வரவேற்கின்றனர். தேய்மான சதவிதம் 100 சதவிதமாக இருப்பினும் 10 இரண்டடுக்குப் பேருந்துகளினால் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 லட்சம் ஆதாயம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

1966–67-ம் ஆண்டில் இத்துறைக்கு ரூ. 61 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அடுத்து வந்த ஆண்டுகளில் இந்த நஷ்டம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு இருப்பதும், 1969–70-ம் ஆண்டில் நஷ்டம் ரூ. 20.45 இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. நஷ்டம் குறைக்கப்பட்டிருக்கிறது என்று இந்த அம்சத்தை உறுப்பினர்கள் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன். நடப்பாண்டில் நஷ்டத்தைப் பரிசீலனை செய்யும் போது, நாட்படி விதங்கம் 15—9—1969 முதற்கொண்டு உயர்த்தப்பட்டதனால் ஏற்பட்ட செலவு அதிகரிப்பின் காரணமாக சென்ற ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் ரூ. 13 லட்சம் செலவு ஏற்பட்டது. டயர்களின் விலையேற்றத்தினால் ரூ. 4 லட்சம் செலவு அதிகரித்தது. லூப்ரிகண்ட்ஸ், ஸ்பேர் பார்ட்ஸ் ஆகியவற்றின் விலையேற்றம் வேறு. இந்த அதிகரிப்புகள் ஏற்படாவிடில் சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை நாம் எதிர் பார்த்ததைப் போல் இந்த ஆண்டில் இத்துறைக்குச் சற்று ஆதாயம் கிடைத்திருக்கும்.

தொழிலாளர் உறவுகள் : தொழிலாளருடன் இணக்கமான உறவுகளைப் பேணி வருவதில் இத்துறை தன்னால் இயன்ற முயற்சிகளையெல்லாம் செய்து வருகிறது. பிற அரசு ஊழியர்களுக்கு ஒவ்வொரு முறையும் படிகள் அதிகரிக்கப்படும்போது இவர்களுக்கும் அதற்கு நிகராகப் படிகள் உயர்த்தப்படுகின்றன. தவிர, இத்துறையில் தொழிலாளர்களுக்குச் சிறப்பு அனுகூலங்களும் அனுமதிக்கப்படுகின்றன. சென்னை மாநகர வழித்தடங்கள் அனைத்திலும் செல்வதற்கான அனுமதிச் சீட்டுகள், வருகைப் பூரிப்பு ஊதியம் Attendance Bonus ஊக்கமளிப்பு பூரிப்பு ஊதியம் Incentive Bonus பொழுது போக்கு வசதிகள், குடும்பப் பொருள்கள் வாங்குவதற்கு ஆகக் கடன் வசதிகள், இலவச நிகராடைகள் முதலியன மேற்குறிப்பிட்ட சிறப்பு அனுகூலங்களில் அடங்கும்.

இத்துறை நஷ்டத்தில் செயல்பட்டு வந்தபோதிலும் உயர் அதிகாரக் குழுவின் பரிவுரைகளை இத்துறை தாராள மனப்பான்மையுடன் ஏற்றுக் கொண்டு தொழிலாளர்களுக்கு அதிக நன்மைகளை வழங்கியுள்ளது. நாட் படிகளைப் பொறுத்தவரையில் மட்டுமே, 48 சதவீத அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த வகையில் மட்டும்

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1970 மார்ச் 21

இத்துறைக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 20 லட்சம் செலவு ஏற்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட ரூ. 10 சிறப்பு இழப்பீட்டுப்படி இந்த துறையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இவ்வகையில் இத்துறைக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 20 லட்சம் செலவு ஏற்படும்.

இத்துறையைச் சேர்ந்த செண்ட்ரல் ஒர்க்ஷாப், தொழிற்சாலைப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் தேசியக் காப்புப் பரிசையும், National Safety Award மாநில காப்புப் பரிசையும் State Safety Award பெற்றுள்ளது. செயலிலுள்ள மூன்று காப்புத் திட்டங்களில் இரு திட்டங்களின் கீழ் நம் துறைக்குப் பரிசு வழங்கப்பட்டுள்ளது. அந்த இரு திட்டங்களும், 1. மிகக் குறைவான விபத்துக்கள் நடந்தமை, 2 விபத்துக்கள் நிகழாத கால அளவு அதிகமாக இருந்தமை. சான்றிதழ்களையும், சுழல் கேடயத்தையும் தவிர, மத்திய அரசு ரொக்கமாக ரூ. 5,000 மும், மாநில அரசு ரொக்கமாகவும் ரூ. 2,000-மும் பரிசுகள் வழங்கி உள்ளன.

குருடர்கள் உட்பட முடவர் பலரைக் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பணியில் இருத்திவரும் தனிச் சிறப்பு இத்துறையையே சாரும். இதற்காக இத் துறைக்கு certificate of recognition அளிக்கப் பட்டுள்ளது. இத்துறைத் தொழிலாளர்கள், விளையாட்டுப் போட்டிகளிலும் ஆழ்ந்த அக்கறை காட்டி வருகின்றனர். ஹாக்கி, வாலிபால், கால்பந்து போன்ற ஆட்டங்களில் திறமை மிக்க விளையாட்டுக் குழுக்கள் இத்துறையிலுள்ளன. மேலும், கேரம் விளையாட்டில் அனைத்திந்திய நிலையில் புகழ்பெற்ற இரண்டு விளையாட்டுக்காரர்களும் இத்துறையிலுள்ளனர்.

சென்னைமாநகரப் பணிமனைகளும், வெளியூர்ப் பணிமனைகளும்: சென்னை மாநகரில், மாதவரத்தில் புதிய பணிமனை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இது விரைவில் செயல்படத் தொடங்கும்; தலைமைப் பணிமனைகளில் இரவு நேரங்களில் நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும், பேருந்துகளைச் சிறந்த முறையில் பேணிவர வகைசெய்யவும், மந்தைவெளி, காந்திநகர், தியாகராய நகர், ஆகிய இடங்களில் துணைப்பணிமனைகள் தொடங்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில், அசோக் நகர், பெரம்பூர், அண்ணா நகர், ஆகிய இடங்களில் தொடங்கப்படலாம். ஆதாயமற்ற வகையில் சில வழித்தடங்கள் செயல்படுவதனால், ஏற்படும் விரயத்தை, இயன்ற அளவு குறைக்கும் நோக்குடன், சில பணிகளின் ஆதாயத் தன்மைபற்றி இந்த ஆண்டில் ஆய்வு செய்யப்பட்டது. அந்த ஆய்வின் அடிப்படையில் வழித் தடங்களில் சில சீரமைக்கப்பட்டன; சில மாற்றியமைக்கப்பட்டன.

தொழில் நுட்பப் பணியாளர் அமைப்பை எடுத்துக் கொண்டால், வண்டிகளைப் பேணுதல், செப்பனிடுதல் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில், கணிசமான அளவிற்கு மேம்பாடடைந்துள்ளது.



1970 மார்ச் 21] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

இத்துறையில் உள்ள வண்டிகளில் 86 சதவீதத்துக்கும் மேற்பட்ட வண்டிகள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இத்துறை போன்ற பெரிய நிறுவனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், அவற்றிற்கு நிகராக இத்துறைப் பேருந்துகளின் டயர்-மைல் அளவு, எரிபொருள் பயன், மின்கலங்கள் இயங்கும் காலஅளவு ஆகியவை அமைந்துள்ளன. சில நேர்வுகளில், அவை சராசரி அளவைவிட மிக அதிகமாகவே உள்ளன. இவ்வாறு, கவனமாகப் பேணிவந்ததன் பலனாக, கிலோமீட்டர் ஒன்றுக்காகும் செலவு 98 காசு ஆகக் குறைக்கப்பட்டு உள்ளது. ஆனால், பல நேர்வுகளில் இச்செலவு சராசரியாக ஒரு ரூபாயும் அதற்கு மேற்பட்டும் உள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பிற மாநிலங்களுக்காக வண்டிக் கூடுகள் தயாரிக்கும் பணியையும் ( body building ) இத்துறை மேற்கொண்டு வருகிறது. வண்டிக் கூடுகளை நாம் மற்றவர்களைவிடக் குறைந்த விலையில் தயாரிக்க இயல்வதால் நிறைந்த ஒப்பந்தப் புள்ளிவிவர அடிப்படையில், இதற்கான ஆணைகள் நமக்கு அனுப்பப்படுகின்றன.

இத்துறைக்கான பயணச் சீட்டுக்களை அரசு அச்சகத்திடமிருந்து பெறுவதில் உள்ள இடர்பாடு இந்த ஆண்டு நம் நாட்டத்தை ஈர்த்த மற்றொரு சிக்கலாகும். இத்துறைக்குத் தேவைப்படும் பயணச் சீட்டுகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிவருகிறது. இத்தேவை அளவை நிறைவுசெய்யும் அளவில் அரசு அச்சகத்தின் உற்பத்தித் திறன் அமையவில்லை. எனவே, பயணச் சீட்டுகளைப் பொறுத்தவரையில், தேவையளவும், சீட்டுகள் அச்சிடப்படும் அளவும் சரிக்கட்டிக் கொண்டு போயின. பம்பாய் மின் வழங்கு போக்குவரத்து நிறுவனத்திடமிருந்து பயணச் சீட்டுகளைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒரு திங்கள் கால அளவுக்குப் பயன்படத் தக்க பயணச் சீட்டுகள் அந்த நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டன. பயணச் சீட்டுகளைத் தொடர்ந்து வழங்கத் தங்களால் இயலாது என் அவர்கள் அறிவித்தமையால், திங்கள் தோறும் 300 லட்சம் பயணச் சீட்டுகள் அச்சடிப்பதற்கான், டெல்லி போக்குவரத்து நிறுவனத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டது. தனியார் அச்சகங்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு, நிலைமையைச் சமாளிக்க புகழ்பெற்ற அச்சகங்களிடமிருந்து ஓரளவு பயணச் சீட்டுகள் அச்சடித்துப் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. இச்சிக்கலுக்கு நிலையான தீர்வுகாண்பது பற்றியும் இத்துறை ஆலோசித்து வருகிறது. இத்துறை தனக்கென்று அச்சகம் ஒன்றைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அதோடு அரசு அச்சகத்தை பெரிது செய்துகொள்ளலாம் என்றும் ஆய்வில் இருக்கிறது.

வழக்கமாகத் தயாரிக்கப்படும் வரவு-செலவுத் திட்டத்தைத் தவிர, செயல் அடிப்படை வரவு-செலவுத் திட்டம் ( Performance Budget ) ஒன்றைத் தயாரிக்கும் துறைகளில் ஒன்றாக, இத்துறை

தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்துறை செயல்படும் முறையை மாண்புமிகு உறுப்பினர்கள் ஆழ்ந்து பரிசீலனை செய்யவும், முடிவு செய்யப்பட்ட குறிக்கோள் அளவுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், அதன் சாதனை எத்தகையது என்று ஆய்ந்து பார்க்கவும் இத்தகைய திட்டம் உதவும்.

இந்த நிறுவனம் ஆற்றியுள்ள பணியின் பலன்களைச் சீர்தூக்கிப் பார்க்கையில், ஒரு முக்கியமான கூறு கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பொது மக்களுக்குப் பணியாற்றுவதே இத்துறையின் முக்கிய நோக்கமாகும் என்பதே அக்கூறு ஆகும், a public utilty servicr. 100-க்கு மேற்பட்ட வழித்தடங்கள் ஆதாயமற்ற வகையில் அமைந்துள்ளன. மக்களுக்குப் போக்குவரத்து வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்ற தலையாய நோக்கத்துடனேயே இப்பேருந்துப் பணிகள் நடத்தப்படுகின்றன என்பதை மறந்து விடலாகாது. இத்துறையில் எவ்வளவு குறைகள் இருந்தாலும், இது இம்மாநில மக்களுக்குப் பயன்தரும் வகையில் மற்றோர் ஆண்டு பணியாற்றியுள்ளது என்பதை நடுநிலையில் நின்று சீர்தூக்கிப் பார்க்கும் எவரும் ஒப்புக் கொள்ளத் தயங்க மாட்டார் என்று நான் நம்புகிறேன்.

கனம் உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். போக்குவரத்துத் துறை எப்பொழுதுமே, கடுமையான விமரிசனத்திற்கு ஆளாகியிருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்வது கோபத்தைக் குறைத்து பயனுள்ள கருத்துக்களை அதிகமாக சொல்லவேண்டும் என்று.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரை அதிகமான ஒத்துழைப்பு தொழிலாளர் பக்கத்திலேயிருந்து வரவேண்டியிருக்கிறது. எனவே தொழிலாளர் தலைவர்களும் தங்கள் மேலான கருத்துக்களை சொல்லி போக்குவரத்துத் துறையின் மேம்பாட்டுக்காக ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய முன்னுரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். நமக்கு இப்பொழுது இருக்கின்ற நேரம் மூன்று மணிக்கும் 10 நிமிடம் குறைவாகத் தான் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் பேசுவதற்கு 1½ மணி நேரமாவது வேண்டியிருக்கும். அந்த அளவிலே மற்றவர்கள் பேசுவதற்கு 1½ மணி நேரந்தான் இருக்கிறது. 14 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். எனவே 14 உறுப்பினர்களுக்கும் பங்கிட்டால், இடையிடையே வரும் குறுக்கீடுகளுக்கும் 'ரிசர்வி' லே வைத்துக்கொண்டால் 5 நிமிடங்களுக்கு மேல் உறுப்பினர்களுக்கு கொடுக்கமுடியாது. ஒன்று உறுப்பினர்கள் 5 நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ளவேண்டும்.



இல்லை என்றால் 12 மணிக்கு எந்த உறுப்பினர் பேச்சை நிறுத்துகின்றாரோ, அந்த அளவோடு மற்றவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போகும். ஆகவே உறுப்பினர்கள் 5 நிமிடத்திற்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM: Thiru N. Kasiraman is winding up the debate on behalf of the Opposition and not the Leader of the Opposition.

THIRU T. MARTIN: Mr. Speaker, Sir, we have given the names of three members to speak on behalf of our Party. You kindly give me ten minutes more and take away ten minutes from the time allotted for Mr. N. Kasiraman.

**திரு. மு. மார்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வண்டி சட்டம், போக்குவரத்து திட்டங்கள், சாலைப் போக்குவரத்து திட்டங்களுக்கான மானியக் கோரிக்கைகளின் மீது எங்களுடைய கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஒட்டி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையில் வைக்க விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையை வைத்த நேரத்தில் மொத்தத்தில் 20.45 லட்சங்கள் நஷ்டம் என்று காட்டப்படுகிறது. இந்த நஷ்டத்தைப் பார்க்கிறபோது தனித் தனியாக, 1968-69-ல் இருந்ததைவிட 1969-70-ல் ஏன் இந்த நஷ்டங்கள் எந்த இனங்களில் ஏற்படுகின்றன என்று பார்க்கிறபோது சென்னையைப் பொருத்த மட்டில் மெட்ராஸ் பிராஞ்சில் 1969-70-ல் 29.37 லட்சம் நஷ்டம் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு அடுத்தபடியாக கன்னியாகுமரி பிராஞ்சில் 1.51 லட்சம் நஷ்டமாக எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அதே கன்னியாகுமரி பிராஞ்சில் கடந்த ஆண்டு, 1968-69-ல் 4.44 லட்சம் லாபம் வந்திருக்கிறது. ஆனால் அந்த விதமாக லாபம் வந்த ஒரு இடத்தில் 1.51 லட்சம் நஷ்டம் வரக் காரணம் என்ன? நஷ்டம் ஏன் எதிர்பார்க்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவு படுத்த வேண்டும். அதே நேரத்தில் ஏதோ ஊழியர்களுக்கு சம்பளம் அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. எனவே இந்த நஷ்டம் என்று அவர்கள் குறிப்பிடுவார்களேயானால், அதேபோல் ஊழியர்களுக்கு அதிகமான சம்பளம் சென்னையிலும் கொடுக்கப்படுகிறது. சென்னையிலே அந்தவிதமாகக் கொடுக்கப்படும் 1968-69-ல் 44.37 லட்சம் நஷ்டம் இருந்தது. இப்போது 29.37 லட்சமாக நஷ்டம் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, குரோம்பேட் பணிக்களரியில் கடந்த ஆண்டு 4.11 லட்சம் லாபமாக இருந்தது. இப்போது 39,000 விரயம் எதிர்பார்க்கப்படுகிறது. ராணித்தோட்டம் களரியிலும் இந்த ஆண்டு 1.30 லட்சம் விரயம் காட்டப்படுகிறது. இதைப் பார்க்கிறபோது

தான் உண்மையில் எனக்கு ஒரு ஆச்சரியம் ஏற்படுகிறது. கடந்த பட்ஜட் கூட்டத்தொடரில் இந்த போக்குவரத்து துறையை எடுத்துக்கொண்ட அமைச்சர் அவர்கள் இரண்டு கோடி ரூபாய் லாபம் காட்டுவேன் என்று கூறினார்கள். பாவம், இப்போது இருக்கின்ற அமைச்சர்—சாதிக் பாஷா அவர்கள்—இப்பொழுதுதான் பொறுப்பேற்றியிருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு முன்னாலே அந்தத் துறையை நிர்வகித்த அமைச்சர் அவர்கள் இரண்டு கோடி தருவேன் என்று சொன்னார்கள். அந்த இரண்டு கோடி தருவேன் என்று சொன்ன அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடக்கிறபோது இருப்பார்கள் என்று நினைத்தேன். பாவம், அவர்கள் இல்லை. ஆனால் அவர்கள் அதற்கான ஒரு காரணத்தை இப்பொழுது இருக்கின்ற அமைச்சர் அவர்களிடம் சொல்லி இருப்பார்கள். இரண்டு கோடி லாபம் எங்கே போயிற்று? அவர்கள் ஒரு திட்டம் கொடுப்பேன் என்று சொன்னார்களே? அந்தத் திட்டத்தையும் முதல் மந்திரியிடந்தான் கொடுப்பேன் என்று சொல்லி, அந்தத் திட்டத்தைக் கொடுத்தார்களே? அது என்ன ஆயிற்று? ஆனால் மக்கள் மன்றத்திலே என்ன பேசுகிறார்களென்றால், இவர் ஒரு திட்டத்தைக் கொடுத்தாராம். என்ன திட்டம் கொடுத்தார் என்றால், 51 % தனியார் துறை ஷேர்களும், 49 % கவர்ன்மெண்ட் ஷேர்களும் வைத்து இதை ஒரு கார்ப்பரேஷனாக மாற்றவேண்டும் என்ற திட்டத்தைக் கொடுத்ததாகவும், அந்தத் திட்டத்தை முதலமைச்சர் ஏற்றுக்கொள்ளாததாகவும், அதன் காரணமாக அந்தத் துறை அவரிடமிருந்து பறிக்கப்பட்டதாகவும் மக்கள் மத்தியில் பேசப்படுகிறது. எனவே இதற்கு விரிவான விளக்கம் தேவை. ஒரு தகுதியான அமைச்சரை, இரண்டு கோடி லாபம் காட்டுவேன் என்று சொன்னவரை நீக்கிவிட்டு இங்கே இந்த அரசு நஷ்டத்தைக் காட்டுமேயானால், மக்கள் நிச்சயமாகக் குறை பட்டுக்கொள்வார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், அந்த அமைச்சர் இரண்டு கோடி லாபம் காட்டுவேன் என்று சொன்னபோது எல்லோரும் நம்பினோம். காரணம், சிங்கப்பூரிலேயிருந்து வந்து கையினாலேயே வாய் அறைத்து பேப்பரை வைத்து ஒரு பெரிய பத்திரிகையை லாபகரமாக நடத்தினார். எனவேதான் லாபம் கொண்டுவருவார் என்று எல்லோருக்கும் நம்பிக்கை ஏற்பட்டது. நான் பழைய டிரான்ஸ்போர்ட் அமைச்சரை இந்த மாதிரி இவர் இரண்டு கோடி லாபம் காட்டுவேன் என்கிறாரே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நஷ்டத்தைக் காட்டிவிட்டீர்களே என்று கேட்டபோது, அவரிடம் ஏதாவது விஞ்ஞானம் இருக்கலாம், அந்த விஞ்ஞான முறைப்படி லாபம் கொண்டுவந்தாலும் கொண்டுவரலாம் என்றார்கள். ஆனால் விஞ்ஞானத்தையும் காணோம், லாபத்தையும் காணோம். மக்கள்தான் மிகவும் வருத்தப்படுகிறார்கள்.





அடுத்தபடியாக, பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே சில வழித்தடங்களை நிறுத்திவிட்டார்கள். 5-ஏ பாரிமுனை-அபிராமபுரம், 5-சி மயிலாப்பூர்—சைதாப்பேட்டை, 5-ஜி அடையாறு—பாரிமுனை, மற்றும் 12-டி, 12-ஜி இந்த வழித்தடங்களையெல்லாம் திடீரென்று நிறுத்தி விட்டார்கள். சென்னையிலே இந்த பஸ்களையெல்லாம் நிறுத்தியதற்குக் காரணம் மக்கள் பலவிதமாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்த பஸ்களை நிறுத்தியது மயிலாப்பூர் பகுதியில் உள்ள மக்களை பெரிதும் துன்பத்திற்கு ஆளாக்கியிருக்கிறது. இந்த பஸ்களை நிறுத்திய காரணத்தால் பள்ளிக்கூடம் செல்வதற்கு பிள்ளைகள் எல்லோரும் கஷ்டப்படுகிறார்கள். மயிலாப்பூர் தொகுதி மக்களை பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்துக்காகத்தான் டிரான்ஸ்போர்ட் அமைச்சர் செய்கிறார்கள் என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். என்னிடமும் இதைச் சொன்னார்கள். நான் சொன்னேன், அரங்கண்ணல் இருக்கிறார்கள். கழக ஆட்சி அரும்பு ஆட்சி என்பார்கள். அரும்பு உதிர்ந்தாலும் எருவாகும் என்பார்கள். அவர்களிடம் சொல்லுங்கள் என்றேன். அவர்கள் அமைச்சரிடம் சொன்னார்களோ, இல்லையோ, நிச்சயம் சொல்லியிருப்பார்கள். அவர்களும் இந்தக் கோரிக்கையை ஆதரிப்பார்கள். ஆளுங்கட்சியிலேயிருந்து இதை ஆதரிக்கவேண்டும். இந்த பஸ்களை உடனடியாக திரும்பவும் கொண்டு வரவேண்டும்.

12-டி, ஜி வழித்தடங்களை நிறுத்தியது சேன்தோம் பகுதியில் உள்ள எல்லா பள்ளிக்கூட பிள்ளைகளையும் பாதித்திருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கென்று தனியாக விடப்பட்டிருந்த பஸ்களை நிறுத்தியது நிறைய பாதித்திருக்கிறது. இந்த பஸ்களை திரும்ப அனுமதிக்கவேண்டும். ஏதோ கல்லூரிகளுக்கு கொடுத்து விட்டோம் சில பஸ்களை என்று தட்டிக்கழிக்கக் கூடாது, கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நியூஸ்பேப்பர் எடுத்துச்சென்ற வகையில் ஒரு டெப்போவில் இருந்து மட்டும் 18,000 ரூபாய் அரசுத் துறைக்கு வரவேண்டிய பணம் வராமல் இருக்கிறது. ஏன் அதை வசூலிக்காமல் இருக்கிறார்கள்?

அடுத்தபடியாக அவுட் ஏஜன்சி வகையில் 15,000 வராமல் இருக்கிறதே, ஏன் அதை முறைப்படி வசூலித்து இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக பாட்டரி வாங்கியதில் இந்த டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மென்டுக்கு 32,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, பேன்கள் வாங்கியதிலே 73,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

[திரு. டி. மார்டின்] [1970 மார்ச் 21

அடுத்தபடியாக, சென்னையிலே உள்ள டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மென்டில் உள்ள ஃபேர் பிரைஸ் ஷாப்பில் 1967-68, 1968-69-ல் ஏற்பட்டிருக்கிற நஷ்டம் 73,000, அதிகாரிகள் என்ன செய்கிறார்கள், ஏன் இந்த விரயம் ஏற்படுகிறது, இவ்வளவு பெரிய திறமையான அமைச்சர் அதை நிர்வகிக்கிறபோது, இப்படிப்பட்ட நஷ்டங்கள் எல்லாம் ஏற்படலாமா என்று மக்கள் கேட்கிறார்கள்.

மேலும் சென்னையிலே ஓடுகின்ற பஸ்கள் மிகவும் பராமரிப்பு இல்லாத முறையில் இருக்கின்றன. அநேக வண்டிகளுக்கு உட்காருவதற்கு இருக்கை இல்லாமல், குஷன் இல்லாமல், மக்கள் இன்னல்பட்டு பிரயாணம் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. அடிக்கடி இந்த பஸ்கள் நிறுத்தக்கூடிய இடத்தையும் மாற்றிவிடுகிறார்கள். குறிப்பாக, 3, 3-ஏ பஸ்கள் ஐகோர்ட்டுக்கு முன்பாக நிறுத்தப்பட்டு வந்தன. வயதான வழக்கறிஞர்கள் உயர்நீதி மன்றத்துக்கு வருபவர்களுக்கு வசதியாக இருந்தது. ஆனால் அந்த பஸ்களை இப்பொழுது அப்பால் வெகுதூரம் தள்ளி நிறுத்திவிடுகிறார்கள். அவர்கள் வருவதற்கும், மழை நேரங்களிலும் மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது.

(The time bill was rung.)

THIRU T. MARTIN : We share the time allotted to our party.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 12 மணிக்கு முடிக்கவேண்டும். அதை நீங்கள் உங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொள்ளவில்லை.

THIRU T. MARTIN : I want to know how much time you are going to allot to me from out of the time allotted to Mr. Kasiraman. We make a joint request to the Speaker. After all the Speaker is here to adjust. I will not consume all the time given to my party. You please give me five or ten minutes and we will adjust.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுங்கள்.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பேருந்துகளையெல்லாம் நாட்டுடைமையாக்க வேண்டுமென்று சொல்வது பெயருக்கே தவிர, வேறு இல்லை. திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயிலினுக்குச் செல்லும் பஸ்களில் அநேக பஸ்கள் வழியில் பிரேக் டவுன் ஏற்பட்டு நிற்பதை எல்லோரும் பார்த்து வருகிறார்கள்.

இன்னும் ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றி இந்த ஆய்வுரையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. கடந்த ஆண்டில் ஏற்பட்ட போக்குவரத்து விபத்துக்கள் எத்தனை? போக்குவரத்து விபத்துக்களில் இறந்தவர்கள் எத்தனை பேர்? அப்படி இறந்தவர்களுக்குக் கொடுத்த நஷ்டஈடு எவ்வளவு? கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு விபத்துக்கள் அதிகமாகியிருக்கின்றன என்று



1970 மார்ச் 21] [திரு. டி. மார்டின்]

சொல்லப்படுகிறதே, அதற்குக் காரணம் என்ன? இவைகள் எல்லாம் ஆய்வுரையில் காணப்படவில்லை. அரசாங்கப் பேருந்துகள் எல்லாம் சரியாகப் பராமரிக்கப்படவில்லை. பிரேக் போட்டால் பிரேக் பிடிக்க மாட்டேன் என்கிறது என்று டிரைவர்கள் கூறுகிறார்களே, அவற்றை ஏன் பராமரிக்கவில்லை? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவற்றிற்கெல்லாம் பதில் கூறவேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, அரசாங்கப் பேருந்துகளில் பிரயாணம் செய்கிறவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு பிரயாணம் செய்கிறார்கள். மழைக் காலங்களில் பிரயாணம் செய்யும்போது, பஸ்ஸின் உட்பாகத்தில் எல்லாம் மழைநீர் 'ஷவர்பாத்' மாதிரி பிரயாணிகளின்மீது பெய்யும் அளவுக்கு பஸ்கள் இருக்கின்றன. இந்தக் குறைபாடுகளையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டியது அரசின் கடமையாகும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

நாம் நிலத்திற்கு உச்சவரம்பு கொண்டுவந்துவிட்டோம். நிலத்திற்கு உச்சவரம்பு கொண்டுவந்தது பாராட்டக்கூடிய செயல்தான். அதேபோல பத்து பஸ்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்று உச்சவரம்பு ஒன்றை கொண்டுவந்தால், அதை எங்கள் கட்சி ஆதரிக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த ஆண்டில் ஏதாவது புதிய திட்டம் கொண்டுவருவார்கள் என்று எதிர்பார்த்தோம். எதுவும் இல்லை. அடுத்தமுறையாவது உச்சவரம்பு திட்டத்தைக் கொண்டுவருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் காட்டுவழியாக பஸ்கள் போகின்றன. அப்படிப் போகும்போது அருகிலுள்ள கிராமங்களை இணைத்துச் சென்றால், அந்தப் பகுதி மக்களுக்கு சௌகரியமாக இருக்கும். முதலூரிலிருந்து போகின்ற பஸ் இடையிலுள்ள சுப்பராயபுரம், பேய்க்குளம் போன்ற இடங்களைத் தொடாமல் போகின்றது. சாலைப்புதூர் என்ற இடத்தில் குஷ்டரோக ஆஸ்பத்திரி இருக்கிறது. பொது மக்களின் சௌகரியத்திற்காகவே பஸ் விடப்படுகிறது என்று சொன்னாலும் அது சரியாக நடைமுறைக்கு வரவில்லையென்று மக்கள் மத்தியிலே பேசிக் கொள்கிறார்கள். மக்கள் எல்லாம், இந்தத் துறை நல்ல லாபம் தரக்கூடிய துறையாக இருக்க வேண்டியதில் எப்படி நஷ்டம் வருகிறது என்று கேட்கிறார்கள். முன்பு அமைச்சர் அவர்கள் பப்ளிக் யுடிலிடி சர்வீஸுக்காக நாங்கள் பஸ் விடுகிறோம் என்று சொன்னார்கள். அதே பப்ளிக் யுடிலிடி சர்வீஸுக்காக நிறுத்திய வழித்தடங்களில் எல்லாம் நீங்கள் திரும்பவும் பஸ்களை விடுவீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். பப்ளிக் யுடிலிடி என்பதை முதன்மையாகக் கொண்டு, நஷ்டத்தைப்பற்றி கவலைப்படாமல் நிறுத்திய பஸ்களையெல்லாம் உடனடியாக விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நஷ்டத்தில் டெப்ரிசியேஷன் 16-2/3 சதவிகிதம் என்று கொடுத்திருக்கிறார்கள். நஷ்டம் வந்து 20.45 சதவிகிதம். தனியார் பேருந்துகளில் 25 சதவிகிதம் டெப்ரிசியேஷன் அலவன்ஸ் கொடுக்கிறார்கள். நாம் அப்படிக் கொடுத்தால், நஷ்டத்திற்குமேல் நஷ்டம் வரும். அதைமறைப்பதற்காகத்தான் குறைந்த நஷ்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நிறுத்திய பஸ்களை மீண்டும் உடனடியாக விட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. எம். எஸ். மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் வண்டிச் சட்டங்கள், நிர்வாகத்தின் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நான் பேசுவதற்கு முன்னாலே பேரவைத் தலைவர் அவர்களை வேண்டிக் கொள்கிறேன். எனக்கு பத்து நிமிடம் கூடுதலாக பேச அவகாசம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒதுக்கக் கூடிய நேரத்தில் ஒரு பத்து நிமிஷத்தைக் குறைத்துக் கொள்ளலாம். அல்லது அமைச்சர் அவர்களுடைய பதிலை மத்தியானம் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். (மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் நீங்கள் தான் முடிவுசெய்ய வேண்டும்) அரசாங்கத்தினுடைய நல்ல திட்டங்களையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. நண்பர் திரு. டி. மார்டின் அவர்கள் பேசுகிற நேரத்தில் அரசாங்க பஸ் நிர்வாகம் நஷ்டத்தில் வேலை செய்கிறது என்று சொன்னார்கள். லாபத்தில் நடக்க வேண்டுமானால், எப்படி எப்படி வேலை செய்ய வேண்டுமென்பதை எடுத்துச் சொல்ல கொஞ்சம் கூடுதலான நேரம் வேண்டும். நான் சொல்வதை எதிர்க் கட்சிக் கொறடா திரு. விநாயகம் அவர்கள் ஆதரிக்கிறார்கள்.

முதலிலே தனியார் துறை என்று சொல்கின்ற நேரத்தில், அதற்கு 5 பஸ்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்று ஒரு உச்ச வரம்பு கொண்டுவர வேண்டும். அதற்கு உட்பட்டு தான் பர்மிட் கொடுக்க வேண்டும். புதிதாக ரூட்டுகளை ஏற்படுத்தும்போது ஐந்து பஸ்களுக்கு உட்பட்டவர்களுக்குத்தான் பர்மிட் கொடுக்க வேண்டும். மேலும் அங்கு பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு பிராவிடென்ட் பண்ட் கட்டாத நிர்வாகிகள் இன்னும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுடைய பர்மிட்டை ரத்து செய்யவேண்டும். அப்படி பர்மிட்டை ரத்து செய்தால் தங்கள் தொழிலாளர்களுக்குக் கட்டவேண்டிய பிராவிடென்ட் பண்ட் கட்ட முற்படுவார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, சில தனியார் துறை முதலாளிகள் தங்களுடைய பர்மிட்டை பலருக்கு விற்பனை செய்துவிடுகிறார்கள். பஸ்கள்





எல்லாம் அவர்களுடைய பெயரிலே ஓடிக்கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்டவர்களையும் அரசாங்கம் கண்டுபிடித்து பர்மிட்டுகளை ரத்துசெய்ய வேண்டும்.

அடுத்து, திருச்சி, கோவை போன்ற பகுதிகளில் டாக்ஸிகளுக்கு மீட்டர் இருக்கிறது. சென்னையில் டாக்ஸிகளுக்கு மீட்டர் இருக்கிறது. இங்கு இருப்பதால் பொதுமக்களுக்குச் சௌகரியம். ஆனால் திருச்சி போன்ற பகுதிகளில் மீட்டர் இருப்பதால், டாக்ஸிக்காரர்களுக்கு நஷ்டம்தான் ஏற்படுகிறது. சாதாரணமாக திருச்சி ஜங்ஷனில் ஏறி, உறையூருக்குப் போய் ஜனங்களை இறக்கிவிட்டு வரும்போது, டாக்ஸி காலியாகவே வரக்கூடிய நிலைமை இருக்கிறது. சென்னையில் அப்படி அல்ல நிலைமை. அங்கு பொதுமக்கள் டாக்ஸி வண்டியில் ஏற முடியாத அளவில் இருக்கிறார்கள், வண்டி காலியா ஓடினால் டாக்ஸிகாரனுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, இன்னும் ஐந்து ஆண்டுகள் கழித்து, திருச்சி நல்ல முறையில் வளர்ச்சியடைந்த பிறகு அந்தப் பகுதிகளில் மீட்டர் முறை கொண்டுவரலாம் என்ற என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எக்ஸ்பிரஸ் பஸ்களைப்பற்றி திரு. மார்டின் அவர்கள் அரசாங்கப் பேருந்துகள் நஷ்டத்தில் வேலை செய்கிறது என்று சொன்னார்கள். பொது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் நமக்கு இருந்தாலும், நஷ்டம் வராமல் முதலையாவது சரிக்கட்டிக் கொண்டு போகிற அளவுக்கு நிர்வாகத்தை நடத்த வேண்டும். அதற்குத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நல்ல முகராசியுடையவராகப் பார்த்து, நல்ல கைராசியுடையவராகப் பார்த்து இந்தத் துறையை கொடுத்திருக்கிறார்கள். போக்குவரத்துக்கு தேவையான சாலைப்பராமரிப்பு ஹைவேஸ் டிபார்ட்மென்டும் அவரிடம் இருக்கிறது. ரோடு நன்றாக இருந்தால் தான் போக்குவரத்துச் சௌகரியமாக இருக்கும். இப்போது இரண்டும் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மார்டின்:** தலைவர் அவர்களே, நல்ல முகராசி உள்ளவரை, நல்ல கைராசியுடையவரை இந்தத் துறைக்குத் தேர்ந்தெடுத்து முதலமைச்சர் அவர்கள் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஏற்கெனவே இந்தத் துறைக்கு இருந்த முன்னாள் அமைச்சரைப்பற்றிக் கூறுகிறார்களா?' அல்லது இப்போது இருக்கின்ற அமைச்சரவைப்பற்றி கூறுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, முகராசியைப்பற்றிப் பேச வேண்டாம் என்று உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[1970 மார்ச் 21

**திரு. எம். எஸ். மணி :** தலைவர் அவர்களே, நண்பர் திரு. மார்டின் அவர்கள் ஏற்கெனவே இருந்த அமைச்சர் அவர்களைப்பற்றிக் குறை கூறிக்கொண்டிருந்தார்கள். நண்பர் அவர்கள் கேட்கிற ரூட்டு களுக்கெல்லாம் எப்படி பஸ் கொடுக்க முடியும்? அவர் சாதாரண மாகவா கேட்கிறார்? பேய்க்குளம், ஆமைக்குளம் என்று அல்லவா கேட்கிறார். கேட்கிற இடங்களுக்கு முன்னாள் அமைச்சர் கொடுக்க வில்லை யென்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை).

அடுத்தபடியாக, நம்முடைய எக்ஸ்பிரஸ் பஸ்களை எடுத்துக் கொண்டால், சென்னையிலிருந்து சேலம் போக வேண்டுமென்றால், இடையிலுள்ள தூரம் 200 மைல். நாம் 552-ம் எண் பஸ்ஸில் காலை 9.25-க்குப் புறப்பட்டால், இரவு 8 மணிக்குத்தான் போய்ச் சேரு கிறது. இப்படிப் போனால் இந்த எக்ஸ்பிரஸ் பஸ்களில் யாரும் ஏற மாட்டார்கள். ஒரு பஸ் குடியாத்தம், வாணியம்பாடி, திருப் பத்தூர் என்ற முறையில் போய்க்கொண்டிருந்தால், அதற்கு எக்ஸ்பிரஸ் பஸ் என்ற பெயர் வேண்டாம். ஒரு பஸ் ஒரு இடத்திற்கு நேரடியாகப் போகிறதென்றால், அதன் தூரம் 200 மைல் என்ற அளவில்தான் இருக்க வேண்டும். 200 மைலுக்கு மேல் சுற்றிக் கொண்டு செல்லக்கூடாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும், பஸ்கள் சரியாக இயங்கவில்லையென்று நண்பர் மார்டின் அவர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணம் டிரைவர்களை அடிக்கடி மாற்றுவதுதான். ஒரு பஸ்ஸுக்கு ஒரே டிரைவரைத்தான் போட வேண்டும். ஒரு வண்டிக்கு ஒருவர் என்று போட்டுவிட்டால், அந்த வண்டி பி.சி.க்கு போகிற வரையில் அவர்தான் அந்த பஸ்ஸை எடுக்க வேண்டும் என்ற முறை இருக்க வேண்டும். அவருக்குத் தான் அந்த ரூட்டில், எந்த இடத்தில் வளைவு இருக்கிறது, எந்த இடத்தில் திருப்பம் இருக்கிறது, எந்த இடத்தில் ரோடு சரிவாக இருக்கிறது என்ற விஷயங்கள் எல்லாம் தெரிந்திருக்கும். இதன் காரணமாக விபத்துக்கள் குறையும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். மேலும் பஸ்ஸில் இருக்கிற பாகங்கள் எது எது கெட் டிருக்கிறது, எதை எதை புதுப்பிக்க வேண்டும் என்ற குறைபாடுகள் எல்லாம் தெரியும். நாளுக்கொரு டிரைவரை மாற்றிக்கொண்டு இருந்தால். வண்டியிலுள்ள குறைகள் எவருக்கும் தெரியாமல், வண்டி விரைவில் கெட்டுப்போகும். ஒரு வண்டிக்கு ஒரு டிரைவர் என்று குறிப்பிட்டு விட்டால், அவருக்கு அந்த வண்டியின்மீது பொறுப்பு ஏற்பட்டுவிடும்.

அடுத்தபடியாக, ஒர்க்ஷாப் தொழிலாளர்களுக்கு இன்றைய தினம் ஆட்டோ-மொபைல் என்ஜினீரிங் பயிற்சிக்காக மாலைநேர வகுப்புகளை ஆரம்பித்துக் கற்றுக்கொடுத்தால், மிகவும் நல்லாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1970 மார்ச் 21] [திரு. எம். எஸ். மணி]

அடுத்தபடியாக, நமது பஸ்கள் 'கண்டம்' ஆனவுடன், தேய்ந்த வுடன் விற்பனை செய்யப்படுகின்றன. அந்தப் பஸ்களை தனிப்பட்ட முதலாளிகள் வாங்கி, லாரியாக மாற்றி ஓட்டுகிறார்கள். அதனால் நல்ல வருமானம் அவர்களுக்குக் கிடைக்கிறது. அதேமாதிரி நாமும் உபயோகமில்லாத பஸ்களை லாரியாக மாற்றி தமிழ்நாடு பூராவும் போக்குவரத்து விட்டால், நல்ல கூடுதலான வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது நம்மிடத்தில் 2 ஆயிரம் பஸ்கள் இருந்தாலும் ஒரே யிடத்திலே நிர்வாகம் இருக்கிறது. டைரெக்டர் சென்னையில் இருக்கிறார். எனவே, இதை நான்கு பகுதியாகப் பிரிக்கவேண்டும். கோயம்புத்தூர் ஒரு ரீஜன், திருச்சி ஒரு ரீஜன், மதுரை ஒரு ரீஜன், சென்னை ஒரு ரீஜன்—ஆக நான்காகப் பிரிக்கப்பட்டு நான்கின் அட்மினிஸ்ட்ரேஷனும் தனித்தனியாக இருக்கவேண்டும். அப் போதுதான் எங்கே லாபம், எங்கே நஷ்டம் என்பதை எல்லாம் தனித்தனியாக வைத்துக் கண்டுபிடிக்க முடியும்.

இரவு வருகிற டிரைவர்கள் பஸ்ஸில் உள்ள குறைகளை எழுதி வைத்தால் விடிவதற்குள் அந்தக் குறைபாடு அகற்றப்பட்டு, பஸ் ரிப்பேர் செய்து வைக்கப்படவேண்டும். எனக்குத் தெரியும், அப்படியே போட்டு வை, அப்போதுதான் வண்டி ஓடாமல் இருக் கும் என்று சொல்கிற தலைவர்கள் நாட்டில் இருக்கிறார்கள். ரிப்பேர் ஒழுங்கான முறையில் அவ்வப்போது செய்யப்பட்டால்தான் பொது மக்களுக்கு சௌகரியம் இருக்கும்.

டிக்கெட்டுகள் சரியான முறையில் கொடுக்கப்படவில்லை என்று கண்டெக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். டிரைவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கிற வழக்குகள் இருக்கின்றன. இந்த மாதிரி ஒரு வழக்கு என்றால் 1 மாதத்திற்குள் தீர்ப்பு அளிக்க வேண்டும். வழக்கு வருடக் கணக்கில் போகிறது. நாம் அவர்களுக்கு பேசிக் பே பாதி, முழு டி.ஏ. கொடுக்கிறோம். இது எல்லாம் ஏராள நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே ஒரு வழக்கு தொடர்ந்தால் ஒரு மாதத்திற்குள் முடிவாகவேண்டும். ஒழுங்கான முறையில் டிக்கெட் கொடுக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க டிக்கெட் எக்சாமினர்களைப் போடவேண்டும். ரயிலில் டிக்கெட் வாங்கவில்லை என்றால் பிடித்து இரட்டிப்பு சார்ஜ், பைன் போட வழியிருக்கிறது. பஸ்களில் அத்தகைய சூழ்நிலை இல்லை.

இன்னும் டைமிங் இருக்கிறதே, அதில் கவனம் இருக்க வேண்டும். 6 மணிக்கு அரசாங்க பேருந்து ஒன்று கிளம்புகிறது என்றால் 5-55-க்கு தனியார் பேருந்து புறப்படுகிறது. இருக்கிற பாசன்ஜர்களை எல்லாம் அது ஏற்றிப்போய்விடுகிறது. பின்னால் போகிற அரசாங்க பேருந்து சும்மா போகிறது. நஷ்டம் ஏற்படாது என்ன செய்யும்? ஆர்.டி.ஓ., ஆபீசில் டைமிங் பிக்ஸ் பண்ணுகிற

போதே நம்முடைய அதிகாரிகளும் உடன் இருந்து—முதலில் கிளம்புவது அரசாங்கப் பேருந்தாக இருக்கும்படியாக டைம்மிங்ஸ் பிக்ஸ் பண்ணவேண்டும்.

மற்ற மாநிலங்களுக்குப்போகிற நம் வண்டிகளை எடுத்துக் கொண்டால், குறிப்பாக ஆந்திராவுக்கு என்றால் நம் பேருந்துகள் அந்த மாநில எல்லையிலேயே நிறுத்தப்படுகின்றன. தனியார் பஸ்கள் உள்ளே போகின்ற காரணத்தினால், பிரயாணிகள் அந்த பஸ்களையே விரும்புகிறார்கள். இன்னும் திரும்பி வந்து இங்கே கன்வேயன்ஸ் வாங்கும்படியான துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது. இவற்றையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பஸ்களுக்கு சர்விஸ் கார்டு இருக்கவேண்டும், அது எப்போது வாங்கியது, பாடி எப்போது பில்ட். பண்ணியது, என்ன என்ன ரிப்பேர்கள் செய்யப்பட்டிருக்கின்றன—என்கிற சரித்திரம் பூரா அடங்கிய சர்விஸ் கார்டு ஒவ்வொரு பஸ்ஸுக்கும் கொடுக்கப்படவேண்டும்.

அதைத்தவிர, நாமே பயிற்சி கொடுத்து டிரைவர்களை எடுப்பது என்பது சரியல்ல. நல்ல சர்விஸ் ஆனவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். டி.வி.எஸ். என்றால் 40, 45 வயதானவர்களை ரூட்டில் விடுகிறார்கள். எந்தவிதமான ஆபத்தும் ஏற்படவில்லை. ஆகவே மற்ற தனியார் துறையில் சர்விஸானவர்களை, ஸ்டேட் பஸ்களிலும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, தொழிலாளர்களுடைய நிலையை எடுத்துக்கொண்டால், —அவர்களுக்கு வீட்டு வசதி செய்துகொடுக்கப்படவேண்டும். கூட்டுறவு முறையில் திருச்சி, கோவை, மதுரை போன்ற இடங்களில் வீடுகள் கட்டித்தரப்படவேண்டும்.

நைட் ஹால்ட் செய்கிறவர்களுக்குக் கொஞ்சம் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டால்தான் நிம்மதியாக உறங்கி வருவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

பதவி உயர்வு கொடுக்கிறபோது சர்விஸானவர்களுக்குத்தான் கொடுக்கவேண்டும். அப்போதுதான் பொறுப்பு ஏற்படும். திறமையாக வேலை செய்வார்கள்.

வேலைக்கு வருகிற நேரத்தில் ட்யூடி பாஸ் கொடுக்கிறார்கள். எந்த வண்டி வந்தாலும் ஏறிக்கொள்ளலாம் என்று இருக்கவேண்டும்.

ப்ரேக் டவுன் ஆகிவிட்டால் சம்பளம், அலவன்சு இரண்டும் தனியார் துறையில் கொடுப்பதில்லை. நாம் அலவன்சு கொடுக்கிறோம். அவர்கள் பொறுப்பு இல்லாமல் இருக்கிறார்கள். இதையும் பரிசீலித்தால் நல்லமுறையில் வேலைசெய்வார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.



இந்த அரசாங்கம் பொதுமக்களுக்கும் பல நன்மைகளைச் செய்திருக்கிறது. விபத்து க்ஷேம நிதி, துயர் தணிப்புக் கருணை நிதி என்பதாக எல்லாம் ஏற்படுத்தியிருக்கிறது. இறப்பு ஏற்பட்டால் உதவி செய்வதற்கு இது பயன்படுகிறது. குருடர்கள் அங்கஹீனமானவர்கள் இலவசமாகப் பயணம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறது. முன்கூட்டி டிக்கெட் வாங்கிவிட்டு ஜர்னியைக் கான்சல் செய்தால் உடனேயே பணம் கிடைக்கிறது. முன்பெல்லாம் ஓராண்டுக்குப் பிறகுதான் கிடைக்கும். இதைத்தவிர பஸ்களில் திருக்குறள் இருக்கிறது.

இன்னும் இரவு 10 மணிக்கு பஸ்கள் ஷெட்டுக்கு வந்து சேருகின்றன என்றால், அங்கே தங்க இடம் இருக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக சைக்கிள் ரிக்ஷாக்களில் 2 பேர்களை ஏற்றிச்செல்ல அனுமதிக்கவேண்டும் என்று கோரினோம். அப்படிச் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் இன்னும் ஆர்டர் வரவில்லை. அதற்கான உத்தரவை அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரிக்ஷா வாங்க ஸ்டேட் பாங்கு இப்போது ரிக்ஷா தொழிலாளர்களுக்குக் கடன் கொடுக்க முன்வருகிறது. ஆனால் போலீஸ் அதிகாரிகள் பர்மிட் கொடுக்க மறுக்கிறார்கள். இதுபற்றி ரிக்ஷா தொழிற்சங்கம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறது. திருச்சி போன்ற நகரத்தில் இன்னும் அதிக ரிக்ஷாக்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.

இப்படிப்பட்ட நல்ல காரியங்களை நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் செய்துகொடுத்தால், லாபகரமாக இல்லாவிட்டாலும் பொதுமக்களுக்குச் சேவை செய்கிற அளவுக்கு அமையும் என்று சொல்லி இந்த மானியக்கோரிக்கையை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. கே. போஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது நான் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறவிரும்புகிறேன்.

நம்முடைய மாநில போக்குவரத்துத் துறையின்கீழ் 1948-இல் சுமார் 300 பேருந்து வண்டிகள் இருந்தன. இப்பொழுது 1969-70-இல், 2,064 வண்டிகள் ஆகும்.

நம் மாநில போக்குவரத்துப் பேருந்துகளுக்காக 1959-ஆம் ஆண்டு இடப்பட்ட மூலதனம் 1,802,.85 லட்சமாகும். இடப்பட்டுள்ள மூலதனம்1,802.85 லட்சமாகும். இப்போதுள்ள நம் இப்போதுள்ள நம் மாநிலத்தில் சராசரி 1,733 வண்டிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இந்த அளவுக்கு லாபம் வருகிறதா என்றால் கிடையாது. லாபம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, பொதுமக்களுக்கு நல்ல வசதியாவது கிடைக்கிறதா என்றால் அதுவும் இல்லை.

[திரு. கே. போஜன்] [1970 மார்ச் 21

மூலதனம் குறைவாக இருந்தும்கூட 1959-60-ல் இருந்து 62, 63-64 வரை லாபகரமாக நடந்து வந்திருக்கிறது. 1964 முதல் 1970-வது ஆண்டுவரை மிகுந்த நஷ்டத்தை அரசாங்கத்திற்கு உண்டாக்கி யிருக்கிறது. ஜனங்களுக்கும் அதிகமான கஷ்டத்தை உண்டாக்கி வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்குக் காரணம் என்ன? நிர்வாகத் திறமைக் குறைதான் அடிக்கடி பெரிய விபத்துகள் ஏற்படுகின்றன. இவற்றை எல்லாம் தடுக்க திரு. மணி குறிப்பிட்டது போல், இதை நான்கு ஸோனுகப் (பகுதி) பிரித்து அங்கங்கே நிர்வாகம் தனித்தனியாக தனி அதிகாரி களின்கீழ் செயல்பட வழிசெய்யவேண்டும். அப்போதுதான் நல்ல முறையில் நடக்கும் என்று கூறுகிறேன். இப்போது அரசாங்கப் பேருந்துகளில் பயணம் செய்வதற்கே பொதுமக்கள் பயப்படுகி ருர்கள். ஒன்று, பாதி வழியில் இவைகள் நின்றுவிடுகின்றன. இல்லையென்றால், பெரிய விபத்துக்களுக்கு ஆளாகிறது. இதற்கு ஒரு காரணம், பணிமனைக்கு அனுப்பிஞல் சரியான முறையில் ரிப்பேர் செய்து அனுப்புவதில்லை என்கிருர்கள். ரிப்பேர் செய்கிற ஃபோர்மென், டிரைவர்களிடம் நேரடியாக வண்டியை ஓட்டி சரிபார்த்து ஒப்படைப்பதில்லை. மேலும் சாதாரண டூல்ஸ்கள் கூட வண்டிகளில் இருப்பதில்லை. ஊட்டியில் இருந்து கோவைக்கு வருகிறபோது பார்த்தால் ஒரு வண்டி நின்று கொண்டிருந்தது. இறங்கி என்ன விஷயம் என்ருல் டயர் வெடித்துவிட்டது என்ருர் கள். வெடித்த அந்த டயரை கழற்றிவிட்டு அந்த ரோடில் ஒரு டயரிலேயே வரலாம் என்ருலும், அதைக் கழற்ற ஜாக்கி போன்ற டூல்ஸ் கிடையாது. ஸ்டெப்னி டயர் கிடையாது. அதோடு மட்டு மல்லாமல் பஸ் நிலையங்களில் பொதுஜனங்களுக்கு வசதியில்லாமல் இருக்கிறது. பல இடங்களில் தங்குவதற்கு நல்ல வசதியில்லை. திருச்சியில் உள்ள பேருந்து நிலையத்திற்கு நான் அங்கே இரண்டு முறைகள் செல்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது, பிரயாணிகள் அங்கே உட்காருவதற்கு முடியாத அளவுக்கு கக்கூஸ் நாற்றம் அடித்துக்கொண்டிருக்கிறது. காரணம் சரிவரச் சுத்தம் செய்யப் படவில்லை. கேட்டால் கிணற்றுத் தண்ணீர் வரவில்லை என்று சொன் ஞர்கள். அங்கே கிணற்றில் சிறிய மோட்டார் பழுதுபட்டு இருக் கிறது. அதைச் சரிசெய்யவில்லை, அதன்காரணமாக தண்ணீர் வரவில்லை, மேலும் சரிவரச் சுத்தப்படுத்துவதில்லை, இதன் காரண மாகவும் அப்படி நாற்றம் ஏற்படுகிறது. இதைப் போன்ற பல நிலையங்களிலும் வசதிகள் கிடையாது. இதைச் சர்க்கார் உடனடி யாகக் கவனிக்கவேண்டும்.

அடுத்ததாக, பேருந்துகளுக்கு சரியான பேட்டரி கொடுப்ப தில்லை. நான் என் கண்ணுலேயே கண்டேன். பிரயாணிகளைக் கொண்டே முண்டித் தள்ளி ஸ்டார்ட் பண்ணக்கூடிய நிலைமையைப் பார்த்தேன். பேருந்து புறப்படும் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லும்பொழுது, இடையே உள்ள நிலையங்களி லிருந்து பிரயாணம் செய்யக்கூடிய பிரயாணிகள் செல்வதற்கு



1970 மார்ச் 21] [திரு. கே. போஜன்]

டிக்கட் ரிசர்வ் செய்யப்படுகிறது. முதலிலே இருந்து செல்வதற்கு (பிரயாரிட்டிக்காக) அது கொடுக்கவேண்டியதுதான் வேண்டா மென்று சொல்லவில்லை. அதற்காக 25 பைசா கட்டணம் வசூலிக் கிருர்கள். அந்த பஸ்ஸிலே இடையே ஏறுகிறவர்களுக்கு இடம் இல்லாவிட்டால் பொது ஜனங்களுக்கு அந்தப் பணம் நஷ்டம் ஆகிறது. இப்படியே ஒவ்வொரு தடவையும் 25 பைசா என்று இழந்து கொண்டிருந்தால் மக்களுடைய கதி என்ன என்பதைப் பார்க்கவேண்டும். அமைச்சர் அவர்கள் இதைக் கருத்திலே கொள்ளவேண்டும். தனியார் துறையிலே இந்தத் தொழிலை நடத்துகிறவர்கள் நல்ல லாபத்தை சம்பாதிக்கிருர்கள். அநேகர் பெரிய பணக்காரர்கள் ஆகியிருக்கிருர்கள். அரசாங்கத்திலே சகல சௌகரியங்களும் எல்லா வசதிகளும் இருந்தும் இந்தத் துறையிலே நஷ்டம் வருகிறது என்ருல், அதற்கு நிர்வாகத் திறமை குறைவுதான் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் அதைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்குப் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியத்தை ஆதரித்து எனது கருத்துக் களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பேருந்து வண்டிகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டு இப்பொழுது 1970-71-க்கு அறிக்கை தயாரித்திருக்கிறது. இந்த அறிக்கையிலே பார்த்தால் எந்த நிலைமையிலேயும் லாபம் என்பதைக் காணும். ஆனல் கன்னியா குமரியில் இருக்கக்கூடிய கிளை நிலையத்திலே லாபத்தைப் பார்க்கி ரேம். ஆனல் சென்னையிலே இருக்கக்கூடிய டிரான்ஸ்போர்டிலே பார்த்தால் நஷ்டத்திலேதான் ஓடுகிறது. நாற்பது லட்ச ரூபாய் நஷ்டத்தைக் காண்பித்திருக்கிருர்கள். ஏன் நஷ்டம் வருகிறது என்பதை ஆராய்வதற்காக அரசாங்கம் ஒரு குழுவைப் போட்டிருக் கிறது. அந்தக்குழு என்ன ரிப்போர்ட்டைக் கொடுத்திருக்கிருர்கள் என்பதை இந்த அறிக்கையிலே போடவில்லை. நஷ்டத்தைத் தவிர்க்கவேண்டும். ஒவ்வொரு ஆண்டும், முன்பிருந்து இப்பொழுது வரையில் நஷ்டத்தைத்தான் பார்க்கிரேம். நஷ்டத்தைத் தவிர்ப் பதற்கு நண்பர் மணி அவர்கள் பேசும்பொழுது இந்த அமைச்சர் அவர்கள் வசிகரம் உள்ளவர்கள் என்று, சொன்ஞர்கள். இதிலேயும் அவர்கள் வசீகரத்தைக் காட்டவேண்டும். நஷ்டத்தைப் போக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கன்னியாகுமரியில் லாபத் தினைக் காண்பித்தார்கள். ஒர்க்ஷாப்பைப் பொறுத்தவரையில் இங்கே லாபத்தைக் காண்பித்து இருக்கிருர்கள். ஒர்க்ஷாப்பிலே லாபத்தைக் காண்பித்துவிட்டு அதிகமாக ஓடக்கூடிய வழித் தடங் களில் ஏன் நஷ்டம் வருகிறது என்பதை அரசாங்கம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். 1967-68-லே 26 லட்ச ரூபாய் நஷ்டம், 1968-69 இல் 40 லட்ச ரூபாய் நஷ்டம் என்று இப்படி ஆண்டுக்காண்டு

[திரு. எஸ். ஜே. ராமசாமி] [1970 மார்ச் 21

நஷ்டம் அதிகமாகிக் கொண்டுதான் போகிறது. ஆனால் கன்னியாகுமரி கிளையைப் பொறுத்த வரையிலே 1967-68-லே 1,77,862 ரூபாயும், 1968-69-லே 4,44,3.85 ரூபாயும் லாபம் காண்பித்திருக்கிறார்கள்.

1968-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதி வரையில் இருந்த மொத்த பஸ்களின் எண்ணிக்கை 1,491. 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி வரை உள்ள மொத்த பஸ்களின் எண்ணிக்கை 1,651 இப்படி பஸ்களின் எண்ணிக்கை அதிகமாகக் காண்பிக்கப்படுகிறது. ஆனால் நஷ்டம்தான் ஏற்படுகிறது. பொதுவாக பஸ்களின் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக லாபம் அதிகமாகும். ஆனால் நஷ்டம்தான் ஏற்பட்டிருக்கிறது. ஒரு பஸ் முதலாளி முதலில் 5 பஸ்கள் வைத்துக்கொண்டிருந்தால், அடுத்த ஆண்டிலே இன்னும் 2 பஸ்கள் வைத்துக்கொள்ளக்கூடிய நிலைமைக்கு வந்துவிடுகிறான். ஆனால் நம்முடைய அரசாங்கப் போக்குவரத்தைப் பொறுத்தவரையிலே லாபத்தைக்காணவில்லை, பஸ்களின் எண்ணிக்கை அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தாலும்கூட நஷ்டத்தைத்தான் காண்பித்திருக்கிறார்கள். திருவாங்கூர்-கொச்சி அரசாங்கத்திலிருந்து 1—11—1956 அன்று எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த பஸ்களின் எண்ணிக்கை 295. (மணியடிக்கப்பட்டது.)

இதிலே விபத்தைப்பற்றிக் கணக்குகள் சரியாகக் காண்பிக்கப்படவில்லை. கன்னியாகுமரி கிளையைப் பொறுத்தவரையிலும் 700 ஆக்சிடன்ட்ஸ் என்றும் இறந்தவர்கள் தொகை 9 என்றும் காண்பித்து இருக்கிறார்கள். ஆனால் சென்னையிலே விபத்துபற்றி புள்ளி விவரத்தைக் காணவில்லை. இப்படி ஒரே அரசாங்கத்தின்கீழ் வேலை செய்கிற இரண்டு இலாகாக்களிலே ஒரு இலாகாவிலே ஒரு கணக்காகவும் இன்னொரு இலாகாவிலே ஒரு கணக்காகவும் இருப்பது சரியா என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும்.

தனியார் துறை பஸ்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. அதிலே பணியாற்றிய கண்டக்டர்களை, டிரைவர்களை எடுத்துக்கொள்ளவேண்டும். எங்கள் பகுதியிலே ஏ. பி. டி. பஸ்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு ஒரு ஆண்டு ஆகிறது. வேலை கொடுக்காமல் அந்த கண்டக்டர்கள், டிரைவர்கள் சும்மா இருக்கிறார்கள். 10, 15 கண்டக்டர்கள், டிரைவர்கள் சும்மா இருக்கிறார்கள். அவர்களை அரசாங்கத்திலே எடுத்துக்கொள்ளவேண்டும்

அடுத்ததாக, டைமிங்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பஸ்கள் பின்னாலே பின்னாலே உடனடியாக போகிற நிலைமை இருக்கிறது. 10 அல்லது 15 நிமிடங்களுக்கு உள்ளாக போகின்றன. வெளியூர் வழித்தடங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் டி.பி. கொடுத்து கேன்சல் செய்ததற்குப் பிறகு அந்தத் தனியார் துறை பஸ்கள்



1970 மார்ச் 21] [திரு. எஸ். ஜே. ராமசாமி]

எந்த நேரத்திற்கு விடப்பட்டனவோ, அந்த டைமுக்குத்தான் நம்முடைய பஸ்களை மாறி மாறி விடவேண்டும். டைம் சரியாகப் போடவேண்டும்.

கண்டக்டர்கள், டிரைவர்கள், போடும்பொழுது தவறாகப் போடுகிறார்கள். அங்கேயுள்ள கிளார்க்குகள்தான் அதைத் தவறாகப் போடுகிறார்கள். இதையெல்லாம் மாற்றி நல்ல முறையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, குறளடிகளைத் தாங்கிச் செல்லுகின்ற பேருந்துகளைப் பற்றியும் அந்த இலாக்கா பற்றியும் சொல்லும்பொழுது குறுகத் தரித்த குறளைப்போன்று ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் பஸ் போக்குவரத்தை நாட்டுடைமையாக்குவதென்றும், மேலும் மேலும் அதை விஸ்தரிப்பது என்றும் கூறியிருக்கிறது என்பதை நாம் அறிவோம். நாட்டுடைமையாக்கும் கொள்கை இன்று எந்த அளவிற்கு அமலாக்கப்பட்டு இருக்கிறது என்றால் 75 மைல் தூரத்தைத்தான் நாட்டுடைமையாக்கி இருக்கிறார்களே தவிர, இன்னும் இந்தத் தொழிலை ஏகபோகமாக நடத்திக் கொண்டிருக்கின்ற டி.வி.எஸ்., ஏ.பி.டி., எஸ்.ஆர்.வி.எஸ். போன்ற தனியார் நிறுவனங்கள் தங்களுடைய ஏகபோகத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்ற நிலைமையைத்தான் காண்கிறோம். புள்ளி விவரங்களைப் பார்ப்போமானால், 1967-ம் ஆண்டிலே 1,638 என்ற அளவிலே இருந்த அரசுப் பேருந்துகள் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் 2,014 ஆக உயர்ந்திருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் தனியார் துறையிலே விடப்பட்டிருக்கிற போக்குவரத்து 5,681-லிருந்து 5,778 ஆக வளர்ந்திருக்கிறது. அது மட்டுமல்ல. ஒரு பக்கத்திலே நாட்டுடைமையாக்க வேண்டுமென்று கூறிவிட்டு அதே நேரத்தில் தற்காலிகப் பெர்மிட்டுகளும் அதுகூட பழைய பஸ் முதலாளிகளுக்கே கொடுக்கக்கூடிய நிலைமையும் இருந்து கொண்டிருக்கிறது. டைமிங்ஸ் கூட அதாவது வண்டி புறப்படும் நேரங்கள் கூட அவர்கள் குறிப்பிட்ட மாதிரி தனியார் துறை பஸ்களுக்கு வசதி செய்து கொடுக்கிற மாதிரி அவர்களுக்கு அட்ஜஸ்ட் செய்யக்கூடிய நிலைமையிலேதான் அரசுப் போக்குவரத்து பேருந்துகளும் நேரம் நிர்ணயிக்கும் நிலைமை இருக்கிறது.

இதைத்தவிர 1968-ம் ஆண்டிலே 347 ஆம்னி பஸ்கள்தான் இருந்தன. இப்பொழுது 1969-ம் ஆண்டிலே 389 ஆம்னி பஸ்கள் இருக்கின்றன. லக்சுரி கோச்சஸ் 1968-ம் ஆண்டிலே 29 தான் இருந்தன, இப்பொழுது 1969-ம் ஆண்டிலே 34 ஓடிக்கொண்டு இருக்கின்றன. நாட்டுடைமையாக்கவேண்டும். ஏராளமான ரூட்களை எடுக்கவேண்டுமென்ற நிலைமையிலே இருந்தும்கூட இப்படிப்

[திரு. சி. கோவிந்தராஜன்] [1970 மார்ச் 21

பட்ட பெர்மிட்கள் கொடுப்பதன் மூலமாக தனியார் துறையிலும் நீண்ட தூர பஸ்கள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும், இல்லாவிட்டால் நாட்டுடைமையாக்கும் திட்டம் ஏட்டளவிலேதான் இருக்கும். லாங் ரூட் பஸ்களை எடுப்பதின் மூலம் ஷார்ட் ரூட் கொடுப்பது பழைய ஆட்களுக்கே கொடுக்கப்படுகிறது. இதனால் சுமால் பிளிட் ஓனர்ஸ் பாதிக்கப் படக்கூடிய நிலைமை இருக்கிறது.

எனக்கு முன் பேசிய பல உறுப்பினர்கள் நிர்வாகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தனியார் துறையில் பஸ் வைத்திருக்கக் கூடியவர்கள், 10 பஸ் வைத்திருக்கக்கூடியவர்கள் கூட லட்சக் கணக்கான ரூபாய் ஆதாயம் அடையும்போது ஆயிரக் கணக்கான பஸ்களை வைத்து நடத்தும் பொதுத் துறையில் எப்படி நஷ்டம் வருகிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கேரளாவில்—கேரளாவை உதாரணத்திற்குக் காட்டுகிறேன் என்று எடுத்துக் கொள்ளவேண்டாம் ; திரு. எம். எஸ். மணி அவர்கள்கூட கேரளாவை ஒருசில விஷயங்களுக்கு உதாரணமாகக் காட்டினார்கள். 6½ கோடி ரூபாய் மூலதனத்தில் நடத்தப்படுகின்ற பஸ் போக்குவரத்தில் 60 லட்சம் ரூபாய் லாபம் 1966-67-ல் கிடைத்திருக்கிறது. அவர்கள் தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுக்கிறார்கள்; அரசாங்கத்திற்கு வருமான வரியாக 36 லட்சத்திற்கு மேல் கொடுக்கிறார்கள். இரண்டரை லட்சம் மக்களுக்கு கன்செஷன் பாஸ் வழங்குகிறார்கள். இவ்வளவு கொடுத்தும் அங்கே லாபம் வந்திருக்கிறது. இங்கே அதைப்போல் இரண்டு மடங்கு மூலதனம், அதாவது 12 கோடி ரூபாய் மூலதனம் போட்டுவிட்டு 61 லட்சம் ரூபாய் நஷ்டம், 40 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று வருகிறது. நஷ்டம் குறைகிறது என்று திருப்தியடையலாமே தவிர, லாபத்தைக் கண்டு பிடிக்கும் சூழ்நிலை இல்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

இதற்கு அடிப்படையான காரணம் எங்கே இருக்கிறது? நிர்வாகத்தில் இருக்கக்கூடிய கோளாறுதான் இதற்குக் காரணம். உதாரணத்திற்குப் பல விஷயங்களைக் கூற முடியும். கடந்த பட்ஜெட் கூட்டத்தில் பேசும்போதுகூட பல ஆலோசனைகளைக் கூறினோம். 2,064 பஸ்களில் எவ்வளவு பஸ்கள் ஓடுகின்றன என்று பார்க்க வேண்டும். கால்வாசியில் இருந்து பாதி வரை பஸ்கள் நின்று கொண்டிருக்கின்றன. 'நாட் ரன்' என்று போடப்பட்டிருக்கின்றன. ஆட்கள் இல்லை, ஸ்பேர் பார்ட்ஸ் இல்லை, ஹாரன் இல்லை, பல்ப் இல்லை என்ற காரணம் கூறி ஓடாமல் நின்று கொண்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் பழுது பார்க்க உடனுக்குடன் நடவடிக்கை எடுத்தால் நல்ல முறையில் காரியங்களைச் செய்தால் 2,064 பஸ்களும் திறமையாக ஓடக்கூடிய அளவுக்கு நிலைமைகள் ஏற்படும். இதுதான் அங்குள்ள ஒரு கோளாறு.



1970 மார்ச் 21] [திரு. சி. கோவிந்தராஜன்]

இன்று தனியார் பஸ்களே தேவலை என்று பொதுமக்கள் சொல்லும் அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன இங்கிருந்து நாகப்பட்டினத்திற்கோ, தஞ்சைக்கோ டிக்கட் வாங்கினால் குறிப்பிட்ட நேரத்திற்குள் செல்ல முடியாத நிலை இருக்கிறது. வழியில் பல இடங்களில் பிரேக் டவுன் ஏற்படுகிறது. அவை உடனடியாகக் கவனிக்கப்படுவதில்லை. வண்டிகள் கண்டிஷனில் வைக்கப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லை. பஸ்ஸுக்குள்ளே போகும்போது தூசுகள் வருகின்றன. நாற்றம் கூட வருகிறது. பெட்ரோல் நாற்றத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. இரண்டு கிளீனர்கள் ஒரு இரவில் 40 பஸ்களை க்ளீன் செய்ய வேண்டும். அவர்கள் மேலோட்டமாக க்ளீன் செய்வதால் பஸ்ஸுக்குள்ளே உட்கார்ந்திருக்கும்போதே தூசுகளை வாரி அடிப்பதைப் பார்க்க முடியும்.

வள்ளுவர் அடக்கத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார். நம்முடைய பஸ்களில் நாம் அடங்கி ஒடுங்கித்தான் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் வள்ளுவரின் மொழிகள் எழுதப்பட்டிருக்கின்றன போலும்! கை, கால்களைக்கூட நீட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

நிர்வாகக் கோளாறுகளைப் பற்றிக் கடந்த ஆண்டு நான் பேசும்போது கூறினேன். ஒவ்வொரு பஸ்ஸுக்கும் போடக்கூடிய எண்ணெய்க்குத் தனித்தனியாகக் கணக்கு வைக்க வேண்டும், கொடுக்கக்கூடிய ஸ்பேர் பார்ட்சுக்குத் தனிக் கணக்கு வைக்க வேண்டுமென்று சொன்னேன். இப்பொழுது இது கிடையாது. அரசுப் போக்குவரத்தின் ஸ்பேர் பார்ட்சை வெளியில் இருக்கக் கூடியவர்கள் வாங்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ரீட்ரீடிங் செய்வது தனியாரிடம் கொடுக்கப்படுகிறது. அடிக்கடி இலாகா டைரக்டர், ஜாயின்ட் டைரக்டர் மாற்றப்படுவதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. குறைந்த பட்சம் ஒரு டைரக்டர் ஓராண்டுக் காலமாவது இருந்தால்தான் பிராப்ளத்தைப் புரிந்து கொள்ளும் நிலைமை ஏற்படும். மூன்று மாதத்திற்கு ஒரு முறை அவர்களை மாற்றும் காரணம் என்ன என்று புரியவில்லை.

முன்னால் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த அமைச்சர் ஓராண்டுக் காலத்தில் இரண்டு கோடி ரூபாய் ஆதாயத்தைக் காட்டுவதாகச் சொன்னார். இந்த இலாகாவை அவரிடத்தில் இருந்து முதலமைச்சர் பறிக்கவில்லை என்றும், அவரே விட்டு விட்டுச் சென்றதாகவும் கூறினார்கள். இந்த பட்ஜட் கூட்டத்தில் இரண்டு கோடி ரூபாய் ஆதாயத்தை எங்கே என்று கேட்பார்களோ என்று பயந்துதான் அவர் விட்டு விட்டு ஓடிவிட்டார் என்று கருதுகிறேன்.

தொழிலாளர் நிலை பற்றிச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இப்போது இந்தத் துறையின் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிலாளர்கள் இந்தத்

[திரு. சி. கோவிந்தராஜன்] [1970 மார்ச் 21

துறைக்கு ஒத்துழைக்க வேண்டுமென்றும், தொழிலாளர் தலைவர்கள் தங்களுடைய மேலான ஆலோசனைகளைக் கூறவேண்டுமென்றும் கூறியுள்ளார். அதற்காக நன்றி. கடந்த காலத்தில் தொழிலாளர் விரோதக் கொள்கை படைத்த ஒருவர் இதற்கு அமைச்சராக இருந்தார். அவர் நீங்க வேண்டும், இந்த இலாகாவை விட்டுப் போக வேண்டுமென்று நாங்கள் கோரினோம். அவர் நீங்கிவிட்டார். அதற்காக முதலிலே நன்றி.

இப்போது தொழிலாளர்கள் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். தொழிலாளர் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. இரண்டாவது கிரேடு கண்டக்டருக்கு இங்கு 70 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது; கேரளாவில் 110 ரூபாய் கொடுக்கப்படுகிறது; ஆந்திராவில் 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இவர்களுக்குத் தண்டனைகள் அதிகமாகக் கொடுக்கப்படுகின்றன. பொத்தான் போடவில்லை, காலணிகள் போடவில்லை என்பதற்கெல்லாம் கடுமையான தண்டனைகள் கொடுக்கப்படுகின்றன. மூன்று, நான்கு மாத காலம் சஸ்பென்ஷனில் வைக்கிறார்கள். மத்திய ஊழியர்கள் 1968-ல் வேலை நிறுத்தத்தின் காரணமாக வேலை இழந்த தொழிலாளர்களை வேலைக்கு மறுபடியும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று திராவிட முன்னேற்ற கழக பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்திய அரசிடம் திருப்பித் திருப்பிக் கூறினார்கள். ஆனால் இங்கே 1964-ல் வேலை நிறுத்தம் செய்தபோது நீக்கப்பட்ட தொழிலாளர்கள் இன்றைக்கும் திருப்பி எடுத்துக் கொள்ளப்படாத நிலை இருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது).

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி: தலைவர் அவர்களே, தலைநகர போக்குவரத்து வசதிகளைப் பற்றி என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே சென்னை நகரப் போக்குவரத்து மிக மிக அவசியமானது; பொதுமக்களுடைய சவுகரியம் மேம்படத்தக்க அளவுக்கு அது அமைக்கப்பட வேண்டும். இன்றையதினம் டாக்சிகளும், ஆட்டோ ரிக்ஷாக்களும், சைக்கிள் ரிக்ஷாக்களும், மனிதர் இழுக்கும் ரிக்ஷாக்களும் பொதுமக்களுக்கு ஓரளவு உபயோககரமாக இருக்கின்றன. இதிலே டாக்சி, ஆட்டோ வண்டிகளை எல்லாம் நாம் எந்த அளவுக்கு நல்லபடியாக ஒழுங்குபடுத்துகிறோமோ அந்த அளவுக்குப் பொதுமக்களுக்கு அதிக வசதி ஏற்படும். சென்னை நகரைப் பொறுத்தவரை சுமார் 3,500 டாக்சிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இரண்டு மாதத்திற்கு முன்பு வரை 198 ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓடிக் கொண்டிருந்தன; இப்போது புதிதாக 200 பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. விரைவில் 400 வரை பர்மிட்டுகள் கொடுப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, இந்த வாகன வசதிகள் போதுமானவையா என்று கேட்டால் போதாது என்றுதான் சொல்ல வேண்டும். கோவை போன்ற நகரங்களிலே, பெங்களூர் போன்ற வெளி ராஜ்ய நகரங்களிலே பார்த்தால் வாகனங்கள் பன்மடங்கு அதிகமாக இருப்பதைப் பார்க்கலாம்.



1970 மார்ச் 21] [திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி]

அதே மாதிரி தலைநகராகிய சென்னையில் அதிகமான வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலந்தான் பொதுமக்களுக்கு நல்ல சவுகரியத்தைச் செய்து கொடுக்க முடியும்.

டாக்சி, ஆட்டோ தொழிலில் பத்தாண்டுகளுக்கு முன்பு அவ்வளவு ஒழுங்கான நிலைமை இல்லாமல் இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அந்தத் தொழிலாளர் இயக்கங்களில் பங்கு பெற்ற பிறகு தொழிற் சங்கங்கள் மிக நல்ல முறையில் இயங்கி வருவதோடு தொழிலாளர்களுக்கே வண்டி வாகனங்கள் உடைமையாக்கத்தக்க அளவுக்குச் சில திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த யூனியன்களில் தலைவர்களாக வந்த பிறகு அனாவசியமான வேலை நிறுத்தங்கள், அடிக்கடி பொதுமக்களுக்குத் தொல்லை கொடுப்பது போன்ற சங்கடங்கள் எல்லாம் ஓரளவு குறைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தத் தொழிலுக்குள்ளே புகுந்து குழப்பம் செய்யத்தக்க அளவுக்கு காங்கிரஸ்காரர்கள் சிலபேர் புதிய தொழிற்சங்கத்தை ஆரம்பிக்க முயற்சிப்பதாகத் தெரிகிறது. அருமை நண்பர் மார்ட்டின் அவர்களும், வினயகம் அவர்களும் அதிலே ஈடுபட்டு முயற்சிக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த மாதிரி தொழிற்சங்க வேலைகளில் ஈடுபடுவது நல்லதல்ல என்று நான் நினைக்கிறேன். அவர்களுடைய தலைவர் அவர்களுடைய கட்சிக்கு ஆட்களைச் சேர்ப்பதற்காக தொழிற்சங்கத்தைப் பயன்படுத்தி ஆள் சேர்க்க நினைக்கிறாரோ என்று தெரியவில்லை. இருந்தாலும் அவர்கள் வக்கீலாக இருப்பதால் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். அவர்கள் எல்லாம் தொழிலாளர்களுக்காக ஆஜராகத் தயாராயிருந்தால் நான் அவர்களைப் பயன்படுத்திக் கொள்வேன் என்பதை தங்கள் மூலம் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தத் தொழிற்சங்கத்தில் ஒரு சின்ன மாறுதல் செய்ய வேண்டும். இன்றைய நிலைமைகளில் தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பும் இல்லை. இன்று வண்டி ஓட்டுகிறவர்களுக்கு நாளைக்கு அந்த வண்டி கிடைக்குமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் இந்தத் தொழில் துறையில் அடிப்படைச் சம்பளம், வேலை நிர்ணயம் போன்றவை கிடையாது. அதற்காக இந்த அரசு சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். சென்னை நகரில் டாக்ஸியை இன்னார்தான் ஓட்டவேண்டும் என்று வரையறை செய்யவேண்டும். அப்படி வரையறை செய்வதில் கஷ்டமொன்றுமில்லை. இப்போது டூரிஸ்ட் டாக்ஸிகளை இன்னார் இன்னார்தான் ஓட்டவேண்டும், மற்றவர்கள் யாரும் ஓட்டக்கூடாது என்று வரையறை செய்யப்பட்டு தனி பாட்ஜ் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுமாதிரி டாக்ஸிகளையும் இன்னார் இன்னார்தான் ஓட்டவேண்டும் என அறுதியிட்டு ஒரு முறையை வகுத்துக்கொடுக்கவேண்டும். இல்லாமல் யார் வேண்டு

[திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி] [1970 மார்ச் 21

மானாலும் டாக்ஸி ஓட்டலாம் என்ற முறை இருக்குமானால் இதில் புகக் கூடாதவர்கள் கூட புகுந்து இதிலுள்ள ஒழுங்கு முறைகளைக் கெடுத்துவிடுவார்கள். பத்து நாட்களுக்கு முன்பு நான் ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு மவுண்ட் ரோடு போஸ்டாபீசுக்குப் போ என்று சொன்னபோது அந்த ட்ரைவருக்கு அந்த இடம் தெரியவில்லை. அவர் இந்த ஊருக்குப் புதிது, அன்றுதான் வண்டியை எடுத்திருக்கிறார். அந்தமாதிரி ஆள்கள் கையில் டாக்ஸியைக் கொடுப்பது தவறு. அதோடு அப்படிக் கொடுப்பதன் மூலம் ஏற்கனவே இந்தத் தொழிலில் இருக்கிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே டாக்ஸியை இன்னார் இன்னார்தான் ஓட்டவேண்டும் என்று வரையறுக்கும் விதத்தில் ஒரு சட்டத்தை அல்லது ஒரு முறையை ஏற்படுத்தவேண்டும்.

அடுத்து, அவர்களுக்கு டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களைப் போல் இவ்வளவு சம்பளம், இவ்வளவு அலவன்ஸ் இவ்வளவு நேரம் தான் வேலை பார்க்கவேண்டும் என்ற முறையை ஏற்படுத்த அரசு முன்வரவேண்டும். அதைக் கொண்டு வந்துவிட்டால் தனியார் அந்த டாக்ஸி தொழிலை நடத்தாமல் அந்த வண்டி ஓட்டுகிறவனுக்கே அது சொந்தமாகும் நிலை ஏற்படும். பம்பாயில் வண்டி ஓட்டத் தெரிந்தவர்களுக்குத்தான் பெர்மிட் கொடுப்பது என்ற முறை இருந்துவருகிறது. அது மாதிரி தமிழகத்திலும் கொண்டு வருவார்களேயானால் வண்டி ஓட்டுகிறவனுக்கு தான் சொந்தம் என்ற நிலைமை ஏற்படும். அப்படி ஒரு நிலை ஏற்பட்டு விட்டால் வேலை நிறுத்தம், மற்றபடி ஒழுங்கீனங்கள் நடப்பது போன்ற காரியங்களில் யாரும் ஈடுபடமாட்டார்கள். ஆகவே இந்த இரண்டு காரியங்களையும் உடனடியாகச் செய்யவேண்டும். அதை இந்த அரசு செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

காரணம், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் ஈடுபட்டதன் பலனாக நமது அமைச்சர் என்.வி.என். அவர்கள் முன்பு அந்த யூனியன் தலைவராக இருந்தார்கள். அவர்கள் ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்து அந்தச் சங்கத்தின் சார்பாக 26 டாக்ஸிகள் ட்ரைவர்களுக்கு சொந்தமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது நான் யூனியன் தலைவராக இருக்கிறேன். இந்த யூனியன் சார்பாக ஆட்டோ ரிக்ஷா தொழிலாளர்களுக்காக ஒரு சொஸைட்டி அமைக்கப்பட்டு அதன் சார்பாக 75 ஆட்டோ ரிக்ஷாக்கள் கொடுக்க நமது அரசு முன் வந்திருக்கிறது.

அடுத்து, போலீஸ் தரப்பிலிருந்து தொழிலாளிகளுக்கு பல தொல்லைகள் கொடுப்பதாகக் கருதுகிறார்கள். அந்த எண்ணத்தை சிறிது மாற்றியமைக்கவேண்டும். இல்லாவிட்டால் இடையில் காங்கிரஸ் தொழிற்சங்கம் அல்லது வேறு யாராவது புகுந்து தொழிலாளர்களின் மனதைக் கெடுத்து அவர்களை தவறான பாதையில் அழைத்துச் செல்ல இடம் ஏற்படும்.



1970 மார்ச் 21] [திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி]

இன்று டிரைவர்கள் "நோ பார்க்கிங்" ப்ளேஸ்களில் வண்டிகளை நிறுத்தினார்கள் என்று வழக்குகள் வருகின்றன. அதோடு ஓவர் ஸ்பீடில் போனார்கள் என்றும் வழக்குகள் வருகின்றன. இவை தவிர்க்கப்படவேண்டும். நோ பார்க்கிங் இடத்தில் வண்டியை நிறுத்தியிருந்ததால் வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று போலீஸார் சொல்கிறார்கள். சென்னை நகரில் மொத்தம் 120 டிவிஷன்ஸ் இருக்கின்றன. ஆனால் வண்டிகளை நிறுத்த மொத்தம் 56 ஸ்டான்டுகள்தான் இருக்கின்றன. ஆகவே மீதியிடங்களில் வண்டிகளை நிறுத்துகிறார்களே என்று வழக்கு போடுவது நியாயமானதும் அல்ல, அது சரியானதும் அல்ல. சென்னை நகரைப் பொறுத்த வரையில் ஒரு டிவிஷனுக்கு ஐந்து பார்க்கிங் ப்ளேஸஸ் என்ற வகையில் 120 டிவிஷன்களுக்கு ஒரு 600 பார்க்கிங் ப்ளேஸஸ் வைத்து அதன் பிறகும் நோ பார்க்கிங் ப்ளேஸில் வண்டியை நிறுத்தினால் அவர்களை சார்ஜ் செய்யவேண்டுமே தவிர அதுவரையில் இப்படி நோ பார்க்கிங் ப்ளேஸில் வண்டியை நிறுத்துவதற்காக வழக்குகள் தொடருவதை தயவுசெய்து நிறுத்தி விட வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஓவர் ஸ்பீடில் சென்றார்கள் என்று டிரைவர்கள் மீது வழக்குகள் தொடரப்படுகின்றன. வெளிநாடுகளில் குறைந்த வேகத்தில் போனால்தான் சார்ஜ் செய்கிறார்கள். வேகமாகப் போவதால் விபத்துக்கள் ஏற்படலாம் என்ற காரணத்திற்காகத்தான் இந்த முறை கையாளப்பட்டாலும் கூட அப்படி வேகமாகப் போவதற்குக் காரணம் டிரைவர் மட்டுமல்ல. சட்டசபை உறுப்பினர்கள் சட்டசபைக்கு வரும்போது வண்டியை வேகமாக ஓட்டு என்று சொல்கிறார்கள். அதேபோல் வண்டியில் செல்கிறவர்கள் அவசரப்பட்டு வண்டியை வேகமாகச் செலுத்தச் சொல்கிறார்கள். ஆகவே டிரைவர் மீது ஓவர் ஸ்பீடிங் என்பதற்காக வழக்குகள் போடுவதையும் நிறுத்தவேண்டும். இந்த இரண்டு காரியங்களையும் செய்துவிட்டால் டிரைவர்களின் பிரச்னை பெரும்பாலும் தீர்ந்துவிடுகிறது. ஆகவே அவற்றைச் செய்யவேண்டும்.

அதோடு பெட்ரோல் விலை இந்திய ராஜ்யத்திலேயே நம் ராஜ்யத்தில் இருப்பதைப்போல் உயர்ந்த விலை வேறு எங்கும் கிடையாது. காரணம், மத்திய அரசின் வரி பத்து பைசா என்பதோடு ராஜ்ய வரி இரண்டு பைசாவும்சேர்ந்து இன்று பெட்ரோல் லிட்டருக்கு 1-16 என்றவிலையில் விற்கிறது. முன்பு லிட்டருக்கு 84 பைசா என்றிருந்தபோது என்ன டாக்ஸி கட்டணம் வசூலிக்கப்பட்டதோ, அதுதான் இன்றும் வசூலிக்கப்படுகிறது. ஒரு டாக்ஸிக்கு ஆரம்பக் கட்டணம் 75 பைசா என்று இருக்கிறது. ஆட்டோ ரிக்ஷாவிற்கு ஆரம்பக் கட்டணம் 35 பைசா என்றிருக்கிறது. ரெயிலில் இருந்து ஒருவர் இறங்கினால் இறங்கியவுடனே டிரைவர் எங்கே போக வேண்டும் ஸார் என்று கேட்கிறார். காரணம், அவர் அசோக் ஹோட்டலுக்கோ அல்லது எவரெஸ்ட்டுக்கோ போய் இறங்கினால்

[திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி] [1970 மார்ச் 21

70 பைசா தான் வரும். ஆகவே கூடுதல் வாராதா என்ற எண்ணத்தில்தான் கேட்கிறார் டிரைவர். ஆகவே டாக்ஸிக்கான ஆரம்பக் கட்டணத்தையும், ஆட்டோவிற்கான ஆரம்பக் கட்டணத்தையும் உயர்த்தி மீதியிருப்பவை அப்படியே இருக்கட்டும் என்ற முறையில் செய்யவேண்டும். அப்போது டாக்ஸிக்காரர்கள் நான் வரமாட்டேன் என்று சொல்கிறார்களே என்ற குறை பொது மக்களுக்கு இருக்காது. ஆகவே டாக்ஸிக்கான ஆரம்பக் கட்டணத்தை 70 பைசாவிலிருந்து ரூ. 1 என்றும், ஆட்டோ ரிக்ஷாவிற்கான ஆரம்பக் கட்டணத்தை 35 பைசாவிலிருந்து 50 பைசா என்றும் உயர்த்த வேண்டும். அதையும் இந்த அரசாங்கம் செய்யவேண்டும்.

சென்னை நகரைப் பொறுத்தவரையில் மொத்தம் 26,000 வாகனங்கள் இருப்பதாக சம்பந்தில் சர்வே எடுத்திருக்கிறார்கள். போக்குவரத்துத் துறையில் நல்லமுறையில் நிர்வாகம் நடைபெற்றுவருகிறது. ரோட் ஸேப்டி வீக் என்றெல்லாம் போட்டு மக்களுக்கு நல்லமுறையில் பாடங்களைப் புகட்டி வருகிறார்கள். இருந்தாலும் இப்போது இருக்கும் ஸ்டாப் போதாது. அதை இன்னும் சிறிது அதிகப்படுத்தவேண்டும். மேல் நாடுகளை எடுத்துக் கொண்டால் ஒரு விபத்து என்றால் உடனே பறக்கும் படை மோட்டார் பைக்கில் வேகமாக அந்த இடத்திற்குச் செல்வார்கள். அதில் வயர்லஸ் போன்ற வசதிகள் எல்லாம் இருக்கும். நம் நாட்டிலும் அம்மாதிரி சாதனங்கள் இருக்கும்படியான விதத்தில் அத்தகைய சாதனங்களை இங்கும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

சைக்கிள் ரிக்ஷாவைப் பற்றி மட்டும் ஒரு வார்த்தை கூறிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். சைக்கிள் ரிக்ஷா பற்றி மணி அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்னை நகரில் அவை அதிகமாக இருக்கின்றன. சைக்கிள் ரிக்ஷாவை ஓட்டுவதில் கஷ்டம் இருக்குமானால்—ரூ. 600 அல்லது ரூ. 700 இருக்கும் என்று கருதுகிறேன்—ஒரு மோட்டாரை அதோடு ஃபிக்ஸ் செய்துவிட்டால் அது தானாகவே ஓடுகிறது. இப்போது பாங்குகள் தேசியமயமாக்கப்பட்டதற்குப் பிறகு அவர்களுக்கும் கடன்கள் வழங்க வாய்ப்பிருக்கிறது. ஆகவே இந்த சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டாரைப் பொருத்துவதற்கு பாங்குகளோ அல்லது அரசாங்கம் மூலமாகவோ கடன் கொடுத்து அதைச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யலாம். அப்படிச் செய்தால் மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும்.

டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷா இவற்றிற்கான ஆரம்பக் கட்டணத்தை உயர்த்தவேண்டும். நோ பார்க்கிங் ப்ளேஸில் நிறுத்துவதற்காகவும், ஓவர் ஸ்பீடில் செல்கிறார்கள் என்பதற்காகவும் தொடரப்படுகிற வழக்குகள் நிறுத்தப்படவேண்டும். அப்போதுதான் தொழிலாளர்கள் கட்டுப்பாடாக இருப்பார்கள், ஸ்ட்ரைக் என்பது நடக்காது, இடையில் புகுந்து ஏதாவது செய்யலாமா என்று நினைக்கும் எதிரிகளின் நினைப்பு நடக்காமல் போகும்.



1970 மார்ச் 21] [திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி]

திரு. மார்டின் அவர்களும், திரு. விநாயகம் அவர்களும் தங்கள் வாதத்திறமையை தொழிலாளர்களுக்காகத் தருவார்களேயானால் தினசரி பத்து டிரைவர்களை நான் அவர்களிடம் அனுப்பத் தயாராயிருக்கிறேன். இந்த டாக்ஸி, ஆட்டோ சம்பந்தமான வழக்குகளை மூன்று, நான்கு கோர்ட்டுகளில் விசாரிக்காமல் அதற்கு தனியாக ஒரு கோர்ட் என்று வைத்து விசாரிக்கப்படுமானால் ஆஜராகும் வக்கீல்களுக்கும் வசதியாக இருக்கும், தொழிற்சங்க ரீதியில் போய் வாதாடுவதற்கும் வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன். வணக்கம்.

**திரு. இ. தீர்த்தகிரி கவுண்டர் :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் மீது என் கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று நம்முடைய மாநிலத்திலே போக்குவரத்துத் துறை, சர்க்கார் துறை என்றும், தனியார் துறை என்றும் இரண்டு துறைகளாக இயங்கி வருவதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். உறுப்பினர்கள் இதுவரையிலும், சர்க்கார் துறையிலே நிர்வாகம் இயங்கக்கூடிய முறைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். சர்க்காரின் விவரப்படி 1963–64-லேயிருந்து, நடப்பு ஆண்டுவரையிலும் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளிவிவரங்களைப் பார்த்தால் நஷ்டக் கணக்குதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு சர்க்காரிலே சொல்லக்கூடிய காரணங்கள், பஞ்சப்படி உயர்வு இன்னும் மற்ற வாகன வசதிகள், மனைக்கட்டுகள் பணிமனை போன்ற செலவுகள் அதிகரித்திருப்பதால் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிடுகிறார்கள். அதே சமயத்தில், தனியார் துறையின் நிலைமை என்ன என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த பட்ஜெட்டிலே தனியார் துறைக்கு அதிகப்படியான வரிவிதிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. தனியார் துறைக்கு இலாபம் வருவதாகக் கருதித்தான் அரசாங்கம் அவர்களுக்கு வரி அதிகமாக விதித்திருக்கிறார்கள் என்று கருதிக்கொண்டிருக்கிறார்கள். தனியார் துறைக்கு 1965-லே தான் 10 ரூபாய் ஒரு காலாண்டுக்கு வரியை உயர்த்தினார்கள். சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே அரசாங்க போக்குவரத்துத் துறைக்கும், தனியார் துறைக்கும் மோட்டார் வாகன சட்டத்தின்கீழ் பலதரப்பட்ட வரிகளைக் கட்டினார்கள். இப்பொழுது காலாண்டு வரியை உயர்த்திருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல, மோட்டார் வாகன உறுப்புகளுக்கு, மோட்டார் வாகனங்களுக்கு உபயோகிக்கும் இயந்திர சாதனக் கருவிகளுக்கும் மற்றும் அதற்கு உபயோகிக்கக்கூடிய எண்ணெய் போன்ற பொருள்களுக்கும் வரியை அதிகமாக சர்க்கார் உயர்த்தியிருக்கிறார்கள். இந்த வரிவிதிப்பு உயர்வினால் யார் பாதிக்கப்படுவார்கள் என்பதை அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். சர்க்கார் துறையையும், தனியார் துறையையும் எடுத்துக்கொண்டால், இன்றையதினம் நம்முடைய

[திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்] [1970 மார்ச் 21

மாநிலத்திலே சர்க்கார் துறை நடத்தும் பஸ்களைக்காட்டிலும், தனியார்துறை நடத்தும் பஸ்கள் நல்லமுறையிலே இயங்கி வருவதை எல்லோரும், எல்லா அங்கத்தினர்களும், எல்லாத் தரப்பு அங்கத்தினர்களும் ஒப்புக்கொள்வார்கள். நண்பர் திரு. மணி அவர்கள் குறிப்பிட்டார்கள், சர்க்கார் துறை போக்குவரத்து, தனியார் துறை போக்குவரத்துக்கு முன்னோடியாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். என்னுடைய அனுபவத்திலும் சொல்லுகிறேன், மற்ற அங்கத்தினர்களும் அனுபவத்தில் கண்டிருக்கலாம், சர்க்கார் பஸ் முன்னே சென்றாலும்கூட, தனியார்துறை பஸ் பின்னே சென்றால் அதிலேதான் பெரும்பாலான பயணிகள் இருப்பதைப் பார்க்க முடியும். அதற்கு என்ன காரணம் என்றால், சர்க்கார்துறை பஸ்களிலே பிரயாணம் செய்வது என்றால் வண்டிகள் சரியாக இல்லை. புகைபோனால் பெரும் நி விபத்து மண்டலம் போல் போய்க்கொண்டிருக்கிறது, வாகனங்கள் சுத்தமாக இருக்காது, சீட்டுகள் நன்றாகயிருக்காது, வண்டிகள் ஒழுங்காக இருக்காது, ஒரு மைல் தூரத்திற்குச் சத்தம் கேட்கும். இப்படியாக அந்த வண்டிகளின் நிலைமை நன்றாகயில்லை.

திரு. ஆசைத்தம்பி அவர்கள் ஓவர் ஸ்பீட் பற்றிக் கேட்டார்கள். அந்த வண்டிகளிலே உட்கார்ந்தால் எவ்வளவு வேகமாக ஓட்டுகிறார்கள் என்பது பொதுமக்களுக்குத் தெரியும். சர்க்கார் துறை பஸ்களில் சாதாரண பஸ்கூட வேகமாகச் செல்லுகிறது என்று பொதுமக்கள் மத்தியில் எண்ணம் வளர்ந்திருக்கிறது என்பதைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி, நஷ்டத்தை ஈடுகட்ட வேண்டும். வருவாயைப் பெருக்க வேண்டும் என்பதைப்பற்றி ஆராய வேண்டும். பஸ்களை அதிகமாக விடுவது, பஸ்களை தேசிய மயமாக்க வேண்டுமென்றால் லாபகரமாக உள்ள ரூட்டுகளை ஆக்குவது போன்ற காரியங்களைச் செய்யவேண்டும். 75 மைல்களுக்கு மேலுள்ள ரூட்டுகளைத் தேசியமயமாக்குவது என்று சர்க்கார் ஒரு கொள்கையை வைத்திருப்பது சரியல்ல, சரியாக இருக்க முடியாது என்பதைச் சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஏனென்றால் பல ரூட்டுகளிலே லாபமாக இல்லை. இந்தப் புள்ளி விவரங்களும். சர்க்காருக்கு வருமானமில்லாமல் பல ரூட்டுகளை சென்னை நகரிலே நிறுத்தியிருப்பதாக அறிக்கையில் இருக்கிறது. ஆகவே, லாபகரமாக இயங்கவேண்டுமென்றால், அந்த ரூட்டில் எவ்வளவு வருமானம் வரும், போக்குவரத்து வசதியிருக்கிறதா? எத்தனை பஸ்கள் ஓடுகின்றன என்று சர்வே செய்து போக்குவரத்தைச் செய்துகொடுப்பதுதான் நல்ல காரியமாக இருக்கும்.

இன்றையத்தினம் போக்குவரத்தில் ஒரு மைலுக்கு 1¼ ரூபாய்க்குக் குறைந்த வருமானம் வந்தால், அது சர்க்கார் துறையாகயிருந்தாலும் சரி, தனியார் துறையாக இருந்தாலும் சரி அது



1970 மார்ச் 21] [திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்]

லாபகரமாக இருக்க முடியாது, நஷ்டமாகத்தான் இருக்கும். அதைச் சர்க்கார் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அந்தத் துறையில் லாபம் காண்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனென்றால் சர்க்கார் துறைகளில் எடுத்துக்கொண்டால் பல துறைகளிலே நஷ்டமாக இயங்குகிறது. சர்க்கார் துறையாக இருந்தாலும் சரி, தனியார் துறையாக இருந்தாலும் சரி லாபமில்லாமல், லாபமில்லாவிட்டாலும் நஷ்டம் வாராமல் பாதுகாக்கப்படவேண்டும். அந்த நஷ்டத்தை ஈடு செய்ய சர்க்கார் பலதரப்பட்ட வரிகளை விதிக்கிறார்கள். விவசாயத் துறையிலே வரி விதிக்கிறார்கள், விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறார்கள். இதையெல்லாம் கவனத்திற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் இப்பொழுது இங்கு இல்லையென்றாலும்கூட, மற்ற அமைச்சர்கள் இருக்கிறார்கள். வரியைக் குறைப்போம், வசதியை பெருக்குவோம் என்று சொன்னார்கள் அந்த நிலையை கருத்திற்கொண்டு இன்றைக்கு யார் வரியைத் தாங்கக்கூடியவர்கள் என்று பார்த்து விதிக்க வேண்டும்.

தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று அங்கத்தினர்கள் பேசுகிறார்கள். நிர்வாகத்திற்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். தொழிலாளர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தர வேண்டும். ஆனால் இந்தத் தொழிலை நசுங்காமல், நல்லமுறையில் வளர்வதற்கு அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விற்பனை வரியில் இன்றைய தினம் சர்க்கார் விதித்திருப்பது 5 இலட்சம் ரூபாய்க்குமேல் வியாபாரம் செய்யக் கூடியவர்களுக்கு சர்க்கார் விதித்திருக்கிறார்கள். இன்றைக்கு தொழில்துறையிலே இயங்கக்கூடியவர்களுக்கு, பஸ்களுக்கு வேண்டிய உறுப்புக்களை வாங்க வேண்டுமென்றால், சர்க்காரை வாங்கக்கூடியவர்களிடம் வசூலிக்கிறார்கள். ஆகவே, பஸ்களை நடத்தும் தனியாருக்கு பலதரப்பட்ட வரிகளும் இன்றையத்தினம் சுமையாக ஏறிக்கொண்டிருக்கின்றன. அவர்கள் வாங்கும் உபகரணங்களுக்கு வரி ஏற்றப்பட்டிருக்கிறது. மற்ற வாகனங்களுக்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்றும் அன்றாடம் உபயோகிக்கும் பொருள்களுக்கும் வரி உயர்வு ஏற்பட்டிருக்கிறது. மற்றபடி டயர்கள் போன்றவைகளுக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு சுமையும் இன்றையத்தினம் விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இந்தத் தேசத்திலே நம்முடைய மாநிலத்திலேதான் போக்குவரத்துத்துறைக்கு அதிகமாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மற்ற மாநிலங்களில் இந்த அளவுக்கு வரி இல்லை.

[திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர்] [1970 மார்ச் 21

தனியார் துறையில், நம்முடைய மாநிலத்திலேயுள்ள போக்குவரத்து வசதி, மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பஸ்கள் நல்லமுறையில் இருக்கின்றன. பஸ்ஸில் உட்கார்ந்தால் அங்கத்தினர்களுக்கிருக்கும் குஷன் சோபா போல் சீட் இருக்கிறது. அங்கத்தினர்கள் ஆழ்ந்து தூங்கும் முறையிலே சுகமாகப் பிரயாணம் செய்கிறார்கள். அந்த அளவுக்குத் தமிழ்நாட்டிலே போக்குவரத்துத்துறையில், தனியார் துறையினர் சிறப்பாக நடத்துகிறார்கள். பொது மக்களுக்கு நல்லமுறையில் அந்தத் துறை இயங்கி வருகிறது. அதற்காக சர்க்கார் அந்தத் துறைக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இன்றையத்தினம் விதிக்கப்பட்டிருக்கும் வரியானது, பொன் முட்டையிடும் வாத்தைக் கொல்லுவதுபோல் இருக்கிறது. ஏனென்றால், தொழில் நடத்தக்கூடியவர்களுக்குப் பாதுகாப்பும், அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டிய சர்க்கார், அவர்களை நசுக்க முயற்சிப்பது முறையாகாது. எனவே, அதற்கு நல்ல பாதுகாப்பு கொடுக்க வேண்டியது கடமை என்று என்னுடைய அனுபவத்தைச் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

சர்க்கார் துறையில், மொஃபசலில் நடத்துகின்ற ரூட்டுகளில் ஒரு கிலோ மீட்டருக்கு 2½ பைசா என்று வசூலிக்கிறார்கள். தனியார் 3 காசுகள் வாங்கலாம் என்று அனுமதி கொடுத்திருந்தாலும் அவர்கள் சர்க்கார் பஸ்களில் வசூலிப்பதைப்போலவே, தனியார் துறையினரும் 2½ பைசாதான் வசூல் செய்து வருகிறார்கள். ஆகவே, அப்படி வசூல் செய்வதினாலே அவர்களுக்கு மொத்த வசூல் இன்றையத்தினம் குறைகிறது. இந்த முறைகளையெல்லாம் கவனமாகப் பரிசீலித்து, அந்தத் துறைக்கு ஆக்கம் கொடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்னும் சர்க்கார் துறையிலே பல ஆண்டுகளாக நிர்வாகத்திலிருக்கும் குறைபாடுகளைப் பற்றிச் சொன்னார்கள். தொழிலாளர்களுக்குக் கொடுத்திருக்கும் வசதிகளையெல்லாம் குறிப்பிட்டார்கள். இன்றையத்தினம் சர்க்கார், தொழில்துறைக்கும், தொழிலாளர்களுக்கும் ஆக்கம் கொடுக்க வேண்டுமென்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டுமென்பதில் எந்த அரசியல் கட்சிக்கும் வேறு அபிப்பிராயம் இருக்க முடியாது. ஆனால் தொழில் நடத்தக்கூடியவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்து, அவர்களுக்கும் ஊக்கம் கொடுத்து, நல்ல முன்னேற்றம் காண வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக் கொள்ளுகின்றேன்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: மாற்றுத் தலைவரவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கையின்மீது எங்களுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத்தீர்மானங்களையொட்டிச் சில கருத்துக்களை கூற முனைகிறேன்.



1970 மார்ச் 21] [திரு. ஜே. ஜேம்ஸ்]

இந்த அரசு பஸ் போக்குவரத்தை நாட்டுடைமை ஆக்குவதைத் தனது கொள்கையாகக் கொண்டிருக்கிறது. 1968-ஆம் ஆண்டு, இன்றைய முதல்வர் அவர்கள் இந்த இலாக்காவை வைத்துக்கொண்டிருந்த பொழுது அன்று மானியக்கோரிக்கை விவாதம் நடந்த பொழுது கூறினார்கள், இப்பொழுது 75 மைல்கள் வரையிலும் உள்ள வழித்தடங்களை நாட்டுடைமையாக்குகிறோம், அடுத்து, படிப்படியாக, 60 மைல், 50 மைல் என்ற முறையில் இந்த நாட்டிலிருக்கும் வழித்தடங்கள் அத்தனையும் நாட்டுடைமையாக்கப்படும் என்ற உறுதிமொழியை இந்த அவையில் கொடுத்ததை நான் ஞாபகப்படுத்துகிறேன். ஆனால், கழிந்த 2, 3 ஆண்டுகளாக 1968-க்கு பின்பு இதுவரையிலும் எந்த வழித்தடங்களும் நாட்டுடைமையாக்கப்பட்டதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. கடந்த ஒரு ஆண்டில் ஒரே ஒரு வழித்தடம் தான் இந்த அரசின் நிர்வாகத்தில் வந்திருக்கிறது. இந்த அறிக்கையை சமர்ப்பித்தபொழுது, இந்த மானியக் கோரிக்கையை இந்த அவையின் முன் வைத்தபொழுது நிச்சயம் இந்த அரசு அந்தக் கொள்கையை விஸ்தரித்து, இன்னும் அடுத்தபடியாக, 60, 50 மைல்களுக்குள்ளே இருக்கும் அத்தனை வழித்தடங்களையும் நாட்டுடைமையாக்க திட்டத்தை வைத்து, கோரிக்கையை சமர்ப்பித்திருக்கும் என்று எண்ணியிருந்தேன். இன்று இருக்கிற பஸ்கள் பிரேக் டவுன் ஆவது போல், இந்த அரசின் கொள்கையும் பிரேக் டவுனாகின்ற நிலைமைதான் இங்கு இருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 1967-ல் ஒரு கிலோ மீட்டருக்கு இரண்டு காசாக இருந்த கட்டணம் இந்த அரசால் 2½ காசாக உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகு இப்பொழுதுகூட கட்டணத்தை உயர்த்தியதாகக் கேள்விப்படுகிறோம். ஆனால், கழிந்த ஆண்டிலும் இப்படி கட்டணத்தை உயர்த்தியபோது இந்த மன்றம் நடந்துகொண்டிருந்தது. இந்த அறிக்கையிலோ அல்லது இந்த மன்றத்திலோ கட்டண உயர்வைப் பற்றி கூறவில்லை. அதேபோன்று இப்பொழுதும் அரசு பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறது. ஆனால் இந்த அறிக்கையிலோ அல்லது அமைச்சர் அவர்களோ இந்த அவையில் அதுபற்றிக் கூற முன்வரவில்லை. அதன் ரகசியம் என்னவென்று தெரியவில்லை. பாராளுமன்றத்தில் ரயில்வே கட்டணம் கூட்டப்பட்டபொழுது பாராளுமன்றத்தில் வைக்கப்பட்ட அறிக்கையில் அந்த அமைச்சர் அதுபற்றி குறிப்பிட்டார்கள். அங்கத்தினர்களுடைய கருத்துக்களை அதன் பேரில் கேட்டார்கள், அங்கத்தினர்களின் விருப்பப்படி கூட்டிய கட்டணத்தை குறைக்கவும் அமைச்சர் அவர்கள் முன்வந்தார்கள். ஆனால், இங்கே இருக்கிற நிலை என்னவென்று சொன்னால் இந்த அவை நடந்துகொண்டிருக்கும்பொழுது கட்டணத்தைக் கூட்டுகின்ற அந்தத் தகவல் கூட இங்கே அறிவிக்கப்படவில்லை என்று சொன்னால், இந்த அவையை இந்த அரசு அவமதிப்பதாகத்தான் நான் கருதுகிறேன். மேலும் கட்டணம் கூட்டுவதை மக்கள்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1970 மார்ச் 21

தாங்கிக் கொள்ளமாட்டார்கள். கட்டணம் உயருவதால் ஏழை தொழிலாளிகள், மாணவர்கள், விவசாய மக்கள் பெரிதும் பாதிக்கப் படுவார்கள்.

அடுத்தபடியாக, அமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிற அறிக்கையில் இந்த இலாகாவின் நிதிநிலை என்று ஒரு பாராவில் கூறியிருக்கிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த இலாகா நஷ்டத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இதற்கு முன்னதாக இருந்த அமைச்சர் அவர்கள் கூறினார்கள் கடந்த ஆண்டில், அடுத்த ஆண்டில் நிச்சயம் ரூ. 2 கோடி லாபத்தைக் காட்ட இயலும் என்று கூறினார்கள். அவர்கள் அப்படி எதையோக் குறிப்பிட்டுவிட்டு சென்று விட்டார்கள். ஆகவே, நான் அதைப்பற்றி அதிகமாகக் கூற விரும்பவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளாக, அதற்கு முன்பு பல ஆண்டுகளாக இந்த இலாகா நஷ்டத்தில் தான் நடந்துகொண் டிருக்கிறது. ஏன் நஷ்டத்தில் நடக்கிறது என்பதை இந்த அரசு நினைத்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. அண்டை மாநிலத்தில், கேரளாவில், நமது மாநிலத்தில் உள்ள இந்த இலாகா ஊழியர் களுக்குக் கொடுக்கின்ற சம்பளத்தைப் பார்க்கிலும் அதிகமாகக் கொடுக்கிறார்கள். அதோடு அரசாங்கத்திற்கு வருமான வரி கொடுக்கிறார்கள், தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கிறார்கள் இருந்தாலும் கூட அங்கு லாபத்தைக் காட்ட முடிகிறது. ஆனால், இங்கே நமது அரசாங்கம் மிகவும் நஷ்டத்தைக் காட்டுகிறது என்று சொன்னால், நிச்சயம் அந்த ரகசியத்தைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டும். எப்படி நஷ்டம் என்று சொன்னால், ஒரு வேளை பப்ளிக் யுடிலிடி சர்வீஸ் என்ற ரீதியில் நடத்துகிறோம், அதனால் தான் நஷ்டம் என்று சொன்னாலும், நஷ்டத்தை தவிர்க்கக் கூடிய வழிவகைகள் இருக்கின்றன.

நமது பஸ்களை உபயோகிக்கின்ற பொது மக்கள் நம்பிக்கையை இழந்து விட்டவர்களாகத் தான் காணப்படுகிறார்கள். எங்கு பார்த்தாலும் பிரேக் டவுன், எங்கு பார்த்தாலும் விபத்துக்கள் என்ற நிலையில் யார் தான் பஸ்களில் பிரயாணம் செய்பவர்கள், எந்த டெப்போவை எடுத்துக்கொண்டாலும், ஸ்பேர் பார்ட்ஸ் இல்லை என்ற ஒரே குரல் தான் நிச்சயம் கேட்டுக்கொண்டிருக்கிறது. மேலும் இந்த பஸ்களை பழுது பார்க்கும் நிலை நாளுக்கு நாள் சீர் கெட்டுப் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே தான் விபத்துக்கள் கூடிக்கொண்டிருக்கின்றன. எனக்கு முன்பு பேசிய திரு. மார்டின் அவர்கள் விபத்துக்கள் பற்றிய எண்ணிக்கை பற்றி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்று கூறினார்கள். நாகர்கோவில் மீனாட்சி புரம் டிவிஷனில் இந்த ஆண்டில் விபத்துக்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை 13, பெரிய விபத்துக்களில் மாட்டிக்கொண்டவர் களின் எண்ணிக்கை 8 பேர், நடுத்தர விபத்துக்களில் மாட்டிக் கொண்டவர்களின் எண்ணிக்கை 25, சிறு விபத்துக்களில் மாட்டிக் கொண்டவர்களின் எண்ணிக்கை 460. ஆக, இந்த ஆண்டில் 506



1970 மார்ச் 21] [திரு. ஜே. ஜேம்ஸ்]

விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் விபத்துக்கள் அதிகமாக ஏற்பட்டால், நிச்சயம் மக்கள் நம்பிக்கை இழக்கக் கூடிய நிலைதான் ஏற்படும்.

அடுத்தபடியாக, இந்த ஆண்டில் மீனாட்சிபுரம் டெப்போவில் ஒரு மாதத்திற்கு 300 பிரேக் டவுன்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. சராசரியாக. மார்ச் மாதம் 6-ம் தேதி மாத்திரம் 17 பிரேக் டவுன் கள் நடந்திருக்கின்றன. எக்ஸ்பிரஸ் பஸ்களில் அக்டோபர்-மார்ச்சு வரையிலும் 61 பிரேக் டவுன்கள் ஏற்பட்டிருக்கின்றன. அது மாதிரியாக விபத்துக்கள், பிரேக் டவுன்கள் ஏற்பட்டுக் கொண்டே போனால், நிச்சயம் மக்கள் இந்த பஸ்களை நம்பி வாழ முடியாது. வேறு வழிகளின் மூலமாகத் தான் தங்களுடைய பிரயாணங்களை வைத்துக்கொள்ள வேண்டிய நெருக்கடி ஏற்படும்.

அடுத்தபடியாக, நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் இந்த அரசு தொழிலாளர்கள் அரசு என்று கூறினார்கள். இந்த இலாகாவில் தொழில் ஆற்றுகின்ற தொழிலாளிகளுடைய நிலை என்னவென் பதை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்களுடைய பிரச்னை யைத் தீர்ப்பதற்கு ஒரு உயர்மட்டக் குழுவை 1968-ல் அரசு நியமித்தது. அந்தக் குழு கூட தன்னுடைய அறிக்கையை சமர்ப் பித்துவிட்டது. ஆனால், இன்று இருக்கிற நிலை என்னவென்றால், அந்த அறிக்கையில் கண்டமாதிரி தொழிலாளர்களுக்கு சம்பளத் தையும் மற்ற சலுகைகளையும் அளிக்க மறுத்து, இந்த அறிக்கை மறு பரிசிலனைக்கு சம்பளக் கமிஷனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் எப்படி தொழிலாளர்கள் ஊக்கத்தோடு உழைப்பார் கள்? அவர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தலையாய கடமையை இந்த அரசு நிச்சயம் நழுவவிட்டுக்கொண்டிருக்கிறது. நாகர்கோவிலில் பல ஆண்டு களுக்கு முன்பாக 8½ ஏக்கர் நிலம் வீடுகள் கட்டுவதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அந்த நிலத்தை பஸ்களை ஒதுக்கிவிடு வதற்கு உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இதுவரையில் ஒரு வீடுகூட கட்டிக் கொடுக்கப்படவில்லை. அதுபோலவே மற்றும் பல இடங்களிலும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருந்தும், வீட்டு வசதி செய்துகொடுக்கப் படவில்லை.

கடைசியாக எனது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு மார்த்தாண்டம் கல்லூரி மாணவர் களுக்கும், அங்கு இருக்கிற பஸ் தொழிலாளர்களுக்கும் இடையே சிறிய சச்சரவுகள் ஏற்பட்டன. அதன் விளைவாக பல்வேறு மாண வர்கள் வழக்குகளில் உட்பட்டு, தாங்கள் படிக்க முடியாதபடி, அந்த வழக்குகளுக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் இருக் கிறார்கள். இந்த அரசு இதுவரையில் எத்தனையோ வழக்குகளை

பின்வலித்துக்கொண்டிருக்கிறது. அதைப் போல இந்த வழக்குகளையும் பின்வலித்துக் கொள்ளவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

*திரு. எம். சி. பாலன்: தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நமது பெருமதிப்பிற்குரிய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கையை மனமார ஆதரித்து என்னுடைய கருத்துக்களை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்னால் இந்த நாட்டிலிருக்கிற பஸ்களை எல்லாம் நாங்கள் தேசீய மயமாக்குவோம் என்று சொல்லிவந்தோம். நாங்கள் ஆளும் கட்சியான பிறகு தி.மு.க. எந்த கருத்துக்களைச் சொல்லி வந்ததோ, அந்தக் கருத்துக்களை அப்படியே நடைமுறைக்குக் கொண்டு வருகிற வகையில், 1967-ல் இங்கே மானியக் கோரிக்கையை கொண்டுவந்த நேரத்தில் இந்நாள் முதல் அமைச்சர் அவர்கள் 75 மைல்களுக்கு மேலே இருக்கிற பெரிய வழித்தடங்களையும், அதைப் போல கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லையைத் தொடுகின்ற அல்லது எல்லைக்கு வெளியே செல்லுகின்ற வழித்தடங்களையும், அதைப்போல சென்னை நகரத்தின் எல்லையைத் தொடுகிற, சென்னைக்கு வெளியிலே செல்லுகிற அத்தனை வழித்தடங்களையும் நாட்டுடைமையாக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் தெரிவித்து, அந்த அடிப்படையில் 400 க்கு மேற்பட்ட பெரிய வழித்தடங்களை இன்றைய தி.மு.க. அரசு மிகத் தீவிரமாக செயல்படுத்தி, மிகச் சிறப்பாக இன்றையதினம் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கிற மாட்சிமையை நாம் பார்க்கிறோம்.

அந்த அடிப்படையில் உள்ளபடியே கன்னியாகுமரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட 70% க்கு மேல் வழித்தடங்கள் இன்றையத்தினம் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக நான் இந்த அமைச்சரவையை மனமாரப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் அங்கே வேலை செய்துவந்த டிரைவர்கள், கண்டக்டர்கள், அதேபோல டெக்னிகல் செக்ஷனிலே வேலை செய்யும் அத்தனை பேர்களுக்கும் அவர்கள் என்ன வேலை செய்து வந்தார்களோ, அதற்கு மாற்று வேலை தரப்பட்டிருக்கிறது. அதற்காகவும் நான் இந்த அரசை மனமாரப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் அங்கே செக்கிங் இன்ஸ்பெக்டராக வேலை செய்பவர்கள் ஒரு வேளை 4 அல்லது 5 வது பாரம் வரை படித்தவர்களாக இருப்பார்கள். அங்கே எஸ்.எஸ்.எல்.சி. படிக்காமல் எழுத்தர் வேலை செய்தார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு மாற்று வேலை தரப்படாத காரணத்தாலே அவர்கள் மிகவும் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் மாற்று வேலை தேடித்தரவேண்டும் என்று நான் இந்த அமைச்சரவையை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





அதேநேரத்தில் அமைச்சரவர்கள் இங்கே வைத்திருக்கிற குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். போக்குவரத்துத் துறையில் பணி செய்வதற்கு தகுதியுடையவர்கள் என்று கண்டறியப்பட்டால் அரசு போக்குவரத்து துறைப் பணியில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதே போல டெக்னிகல் வேலைக்காரர்களை மட்டும்தான் வேலைக்கு எடுக்கவேண்டும் என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இதைமாற்றி அங்கே வேலை செய்த அத்தனை பேர்களையும் தமிழக அரசு போக்குவரத்துத் துறையிலே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் அமைச்சரவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், இங்கே எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் கேரளாவிலே இருக்கிற டிரைவர்களுக்கும் இங்கே இருக்கிற டிரைவர்களுக்கும், அங்கே இருக்கிற கண்டக்டர்களுக்கும் இங்கே இருக்கிற கண்டக்டர்களுக்கும் சம்பளத்திலே மிக அதிகமான வேறுபாடுகள் இருக்கின்றன என்று இந்த மாமன்றத்திலே தெரிவித்தார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். கேரளாவிலே பஸ்ஸுக்கு ஒரு கிலோமீட்டருக்கு 5 பைசா விதம் பெறுவதையும், அங்கே சிட்டி சர்வீஸ் அதிகமாக இல்லாமல் நெடுந்தடங்கள் அதிகமாக இருப்பதையும் இந்த மாமன்றத்திலே இருக்கிற நண்பர்கள் அறிவார்கள். கடந்த 10, 15 ஆண்டு காலமாக கேரளாவிலே இருக்கிற சம்பள விகிதத்திற்கும் தமிழகத்திலே இருக்கிற சம்பள விகிதத்திற்கும் இருக்கிற வேறுபாடுகளை இந்த மன்றத்திலே பல்வேறு சந்தர்ப்பங்களிலே சொல்லிய போது காங்கிரஸ் மந்திரிசபை கேளாக்காதினராக இருந்தனர். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை பொறுப்பேற்றபிறகு தொழிலாளர் நன்மையைக் கருதி, மேல்மட்ட குழு ஒன்றைப் போட்டு, என்ன என்ன நன்மைகள், சலுகைகள் தரலாம் என்று ஆராயச் சொல்லி, அந்தக் குழுவும் ஆராய்ந்து, அது தந்த அறிக்கையின் அடிப்படையில் சலுகைகள் செய்ய முற்பட்டுள்ளது. இன்றையதினம் 1967-ல் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றவுடனேயே, தொழிலாளர்களின் நன்மைக்காக, அகவிலைப் படி, வீட்டுவசதிப் படி போன்ற பல்வேறு வசதிகளைத் தந்தது. அந்த முறையிலே 24 லட்ச ரூபாய் இந்த அரசுக்கு செலவாகியது.

அதேபோல மேல்மட்ட குழுவின் ஆலோசனையின்படி தினப்படி, இரவுப்படி, தந்ததன் மூலம் 20 லட்ச ரூபாய்க்குமேல் அதிகம் செலவாகி இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சம்பள விகிதத்தைப் பொறுத்தவரையில் அதை சம்பளக் குழுவுக்கு அனுப்பி, அவர்களுடைய ஆலோசனையைப் பெறுவதற்காக முயற்சி இருக்கிறதே தவிர, மேல்மட்ட குழுவின் அறிக்கையை தூக்கி எறிந்துவிட்டார்கள் என்று தொழிலாளர் சங்கத் தலைவர்கள் பேசிவந்ததை இந்த மாமன்றம் அறியும். அந்தக்

குழுவின் ஆலோசனையைப் பரிசீலனை செய்வதற்காக சம்பளக் குழுவிற்கு கொடுத்திருக்கிறது என்பதை அருமை நண்பர்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசியவர்கள் எல்லாம் நட்டம், நட்டம் என்று பேசினார்கள். இந்த நேரத்தில் 1965-66, 1966-67-லே இந்த மாமன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் கூறி இருக்கிற பதிலை நினைவுக்குக் கொண்டு வருகிறேன். இங்கே சிட்டி பஸ்களை வெறும் லாப நோக்கத்திற்காக, வியாபாரத்திற்காக இயக்க வில்லை. மக்களுடைய வசதிக்காகத்தான் அவை விடப்படுகின்றன. 1960-61, 1961-62, 1962-63 ஆண்டுகளில் உள்ளபடியே சிறு லாபங்கள் ஏற்பட்டன. அதற்குப்பிறகு தொழிலாளர்களுக்கு நாம் அதிக சம்பளம் தந்ததன் மூலமாகவும்,, பல வசதிகளை உருவாக்கியதன் மூலமாகவும், இந்தப் பட்டணத்திலே அதிக பஸ்களை விட்டதனாலேயும் அதிக நஷ்டங்கள் ஏற்பட்டன என்று இந்த மாமன்றத்திலே அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் தெரிவித்தார்கள். 1963–64-ல் 28.9 லட்சம் ரூபாயும், 1964–65-ல் 18.24 லட்சம் ரூபாயும், 1965–66-ல் 14.39 லட்சம் ரூபாயும், 1966–67-ல் அதாவது காங்கிரஸ்காரர்கள் இந்த நாட்டில் ஆட்சியை எங்களிடத்திலே ஒப்படைத்துவிட்டு சென்றபோது, 61 லட்ச ரூபாயை நஷ்டமாக வைத்துவிட்டு சென்றார்கள். அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழிலாளர்களுக்கு 24 லட்ச ரூபாயை அவர்களுடைய சலுகையாக தந்ததற்குப் பிறகும் 1967–68-ல் 23.25 லட்ச ரூபாய் நஷ்டமாகும். அதற்குப் பிறகு 1968–69-ல் 29 லட்ச ரூபாய் நட்டம். இந்த ஆண்டு 20 லட்ச ரூபாய் நட்டம் வரும் என்று தெரியப்படுத்துகிறது.

இதே நேரத்தில் இந்த மாமன்றத்தில் நட்டம் வருகிறது, நட்டம் வருகிறது என்று கூறிய அருமை உறுப்பினர்களுக்கு நான் ஒன்றையும் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இன்றைய தினம் சென்னை பட்டணத்திலே மட்டும் 29.37 லட்ச ரூபாய் நட்டம் ஏற்பட்டிருப்பதைக் குறிப்பிடுகிறேன். உங்களுக்குத் தெரியும் ஆயிரத்திற்கு மேற்பட்ட பஸ்கள் இந்த சிட்டியிலே ஓடுகின்றன. ஆனால் மிகக் குறைவாக 600 பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்ற பாம்பேயில் 29 லட்ச ரூபாய் நட்டம். அதேபோல டெல்லியிலே 600-க்கு குறைவான பஸ்கள் இருக்கின்றன, ஆனால் நட்டம் 49 லட்ச ரூபாய். பெங்களூரில் கிட்டத்தட்ட 300 பஸ்கள் ஓடுகின்றன. அங்கே 20 லட்ச ரூபாய் நட்டம். 400 பஸ்கள்தான் அமதாபாத்தில். அங்கே நட்டம் 44.37 லட்சம் ரூபாய். இதையெல்லாம் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். கல்கத்தாவில் நாள் ஒன்றுக்கு 50,000 ரூபாய் நட்டத்திலே அந்தத் துறை ஓடிக் கொண்டிருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே சிட்டி



பஸ்கள் எல்லாம் லாபத்தைக் கருதி ஓட்டப்படுவதில்லை. இங்கே இருக்கிற மக்களின் வசதிக்காக விடப்படுகிறது. ஆகவே, இந்த நட்டத்தை வைத்துக் கொண்டு பெரிய நட்டங்கள் ஏற்பட்டு விட்டன என்று அருமை நண்பர்கள் தெரிவிக்கவேண்டாம்.

நான் இந்த நேரத்தில் என்னுடைய நாகர்கோயில் கிளையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நாகர்கோயிலில் கிட்டத்திட்ட 500 பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அங்கே ஒரு அசிஸ்டென்ட் இன்சினீயர் ராங்கிலே உள்ள ஒருவர் அந்தத் துறையை பராமரித்து வருகிறார். இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு பெரிய பணிமனைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கிற டி.டி.எஸ். ஐப்பார்த்து எதையாவது சொன்னால் நீங்கள் எப்படி டெல்லியைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களோ, அதே போல் நான் சென்னையைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். எனக்கு ஒரு ப்யூனை வேலையில் வைக்கவோ, ஒருவரை சஸ்பெண்ட் செய்யவோ முடியவில்லை. 450 மைல்களுக்கு அப்பாலே எட்டாத தொலைவிலே சென்னையிலே தலைமை நிலையம் இருக்கிறது என்று தெரிவிக்கிறார். நான் கமிட்டி கூடுகிற பொழுதெல்லாம் ஒரு கூட்டு டைரெக்டர் போட வேண்டும் என்று கேட்டு அதை டி.டி.எஸ். அவர்கள் தலைமையில் உள்ள ஆலோசனைக் குழுவே கேட்டும் முடியவில்லை. தான் ஒரு டெக்னிகல் ஸ்டாப்—ஒரு ஜாயிண்ட்டு டைரெக்டரைப் போட வேண்டும் என்று அவரே தீர்மானம் கொண்டு வந்து அது நிறைவேற்றப்பட்டு அரசாங்கத்தின் கவனத்திலே இருந்து கொண்டு இருக்கிறது. இதே மன்றத்தில் நான் மூன்று தடவை பேசியும் எதுவும் நடக்கவில்லை.

இன்னும் ஒன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக செக்கிங் இன்ஸ்பெக்டர்களாக நியமிப்பதற்கு அனுபவமிக்க கண்டக்டர்களைத்தான் நியமிக்க வேண்டும். அதேபோல ஒரு டிரைவர் ஒரு பஸ்ஸை எடுத்துக்கொண்டு போய் பிறகு விட்டு விட்டு சென்று விடுகிறார். நாளை எந்த பஸ் தரப்படுகிறது, எந்த ரூட் தரப்படுகிறது என்று அவருக்குத் தெரிவதில்லை. ஆகவே ஒரு பஸ்ஸுக்கு இரண்டு டிரைவர்கள் என்று வைத்து காலையிலே இருந்து மாலை வரையில் ஒருவரும் அதற்கு மேல் மற்றொருவரும் ஓட்டுகிற நிலைமை இருக்கும்படி செய்தால் அதிலே என்ன தவறு இருக்கிறது என்று அவரே பார்த்து அங்கே இருக்கிற பெரிய எஞ்சினியர்களையெல்லாம் கலந்து ஆலோசித்து அதிக நட்டம் ஏற்படாத முறையிலே நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அப்படியானால்தான் டிரைவர்களுக்குப் பொறுப்பு உணர்ச்சி ஏற்படும்.

அடுத்தபடியாக, டிக்கெட்டு கொடுக்கப்படுகிற விஷயத்தில் நாகர்கோவிலிலே இருந்து கோயம்புத்தூருக்கு ரூ. 14.40 டிக்கெட்டு அதற்கு 10 ரூபாய்க்கு ஒரு டிக்கெட்டும் 3 ரூபாய்க்கு ஒரு டிக்கெட்

டும் ஒரு ரூபாய்க்கு ஒரு டிக்கெட்டும் 40 பைசாவிற்கு ஒரு டிக்கெட்டும் ரிஸர்வேஷனுக்கு 25 பைசாவிற்கு ஒன்றும் ஆக 5 டிக்கெட்டுகள் தரப்படுகின்றன. இதனால் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுகிறது என்பது மட்டும் அல்ல, 'வெரிஃபிகேஷன்' தகராறு வருகிறது. எனவே ஒரு பிரயாணிக்கு ஒரு டிக்கெட் என்ற முறை வேண்டும். ஐந்து ரூபாய் டிக்கெட்டும் இரண்டு ரூபாய் டிக்கெட்டும் ஒரே அளவில் ஒரே நிறத்தில் இருக்கிறது. அவை மாற்றப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்காக எட்டரை ஏக்கர் நிலம் வாங்கி கடந்த மூன்று ஆண்டு காலமாக இருந்து கொண்டு இருக்கிறது. அங்கே வீடு கட்டுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு இடத்திலே எட்டு மணியிலிருந்து பத்து மணி வரையில் மூன்று அல்லது நான்கு பஸ்கள்தான் ஓடுகின்றன. அந்த இடத்தில் 600 மாணவர்களுக்கு பாஸ் கொடுத்து இருக்கிறோம். 600 மாணவர்களும் காத்து நிற்கிறார்கள். அந்த பஸ் அங்கே வருகிற போது ஏற்கெனவே பஸ் நிறைந்து வருகிறது. மாணவர்கள் உள்ளே ஏறுவோம் என்கிறார்கள். டிரைவர்களும் கண்டக்டர்களும் ஏற்ற மறுக்கிறார்கள். தகராறு ஏற்படுகிறது. ஆகவே, குமரி மாவட்டத்தில் பல பகுதிகளில் நெரிசல் நேரங்களில் அதிக பஸ் சர்விஸ் நிச்சயமாக விட்டாக வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாட்டு அரசு போக்குவரத்து மான்யத்தின் பேரிலே பேச வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைக் கூறிக் கொள்கிறேன். அரசாங்கம் 75 மைல்களுக்கு மேற்பட்ட ரூட்டுகளை யெல்லாம் எடுத்துக்கொண்டதற்குப் பிறகு இப்படி ஒரு நட்டம், இழப்பு வருகிறது என்று சென்ற ஆண்டும் சொல்லப்பட்டது. இந்த ஆண்டும் சொல்லப்படுகிறது. இந்த இழப்பு வருவதற்கான காரணங்கள் என்ன என்பதை அரசாங்கம் மிகவும் ஆராய்ந்து பார்க்கக் கடமைப்பட்டு இருக்கிறது. பஸ் தொழிலை தனி முதலாளிகள் நடத்துவதன்மூலம் லாபகரமாக இருக்கும்போது, அரசாங்கம் நடத்தும்போது மட்டும் நஷ்டம் வருவதற்கான காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதை லாபகரமாக காட்டாமல் விட்டுவிடுவது அரசாங்கக் கொள்கைக்கும் புறம்பான நடவடிக்கையாக இருக்கிறது என்று மக்கள் கருதும்படியான நிலையைத் தோற்றுவிக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். நஷ்டம் வருவதற்கான காரணம் என்ன என்பதைப்பற்றி, குறிப்பாக ஒன்றைமட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசாங்க பஸ் சென்னையிலிருந்து காலை 6 மணிக்குப் புறப்படுகிறதென்றால், கோவைக்கு



இரவு 11 மணிக்குத்தான் போய்ச் சேருகிறது. எவ்வளவு மணி நேரம் இடைவெளி இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அதேநேரத்தில் ரயிலில் காலை 10½ மணிக்குப் புறப்பட்டால் இரவு 9 மணிக்குக் கோவைக்குப் போய்ச் சேர முடிகிறது. பொது மக்கள் பஸ்ஸில் பிரயாணம் செய்ய விரும்புவார்களா, அல்லது ரயிலில் பிரயாணம் செய்ய விரும்புவார்களா என்பதை அரசு ஆலோசித்துப் பார்க்க வேண்டும். மற்றும் ஆம்னி பஸ் என்று சொல்லக் கூடியதில் சென்னையிலிருந்து கோவைக்குப் போய்ச்சேர 10 அல்லது 12 மணி நேரத்தில் போய்ச் சேர முடிகிறது. ஆனால் அரசாங்க பஸ்ஸில் போனால் 15 மணி நேரம் ஆகிறது. மக்கள் எதிலே போவார்கள்? அரசாங்க பஸ்ஸில் போவதை விரும்புவார்களா என்பதைப் பார்க்க வேண்டும். அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிற பஸ்களில் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தோற்றுவிக்கக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பெரும்பாலான இடங்களில் இதனாலேதான் நஷ்டம் வருகிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும், அரசாங்க பஸ்ஸிலே போகிறவர்கள் ரொம்ப பயப்படுகிறார்கள். அந்த அளவிற்கு பஸ்ஸின் நிலைமை சீர்கெட்டிருக்கிறது. ரோடில் பஸ் வரும்போது ஏதோ ரயில் என்ஜின் வருவதைப்போல சத்தம் வருகிறது. ஏன் அப்படி வருகிறது என்பதை நிர்வாகத்தில் உள்ளவர்கள் கவனிக்க வேண்டும். ஏதோ பஸ்களை தேசியமயமாக்கிவிட்டோம் என்ற போக்கில் நிர்வாகத்தில் உள்ளவர்கள் இருந்துவிடக்கூடாது. பொதுமக்கள் மற்ற பஸ்களில் போவதைக் காட்டிலும் அரசாங்க பஸ்களில் போனால் ஒருநாள், ஒன்றரை நாட்கள் ஆகும் என்ற அளவில்தான் எண்ணுகிறார்கள். ஏன் பொது மக்கள் அப்படி எண்ணுவதற்கு இடம் தர வேண்டும்? அரசாங்கம் நல்ல கண்டிஷன்களைப்போட்டு பஸ்கள் நல்ல நிலைமையில் ஓடுவதற்கேற்றபடி நிர்வாகத் திறமைகளைப் பயன்படுத்த வேண்டும். நிர்வாகத்திலே, தலைமைப் பொறுப்பில் இருக்கின்றவர்களிலே இருந்து, கீழ்மட்டத்தில் இருக்கின்றவர்கள் வரைக்கும் அக்கறை மனப்பான்மையை உண்டாக்க வேண்டும். நமக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று எவரும் இருந்துவிடக் கூடாது. அதிகாரிகள் கவனமாக இருந்து எப்படி லாபகரமாக ஓட்ட முடியும் என்பதைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். பொதுஜனங்களின் போக்குவரத்து அதிகமாக இருந்தும், பஸ் பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தும் நஷ்டம் வருவதற்கான காரணத்தை என்ன என்று நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, டிரைவர்களுக்கு நல்ல உற்சாகத்தைக் காட்டக் கூடிய முறையில் அவர்களுக்கு கலெக்ஷன் பேட்டா கொடுக்கலாம். பஸ் நிற்கும் இடத்தில் ஆள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பஸ்களை எடுத்துவிடுகிறார்கள். சிறிது தூரத்தில் நான்கைந்து பேர்கள் ஓடிவந்தாலும் போய்விடுகிறார்கள். டிரைவர் சற்று நிறுத்தி அந்த

[திரு. கே. என். குமாரசாமி] [1970 மார்ச் 21

நான்கைந்து பேர்களையும் ஏற்றிக்கொண்டு வந்தால் லாபம் கிடைக்கும். இப்படி டிரைவர்களை ஊக்குவிக்கும் வகையில் டிரைவர்களுக்கு கலெக்ஷன் பேட்டா கொடுககவேண்டும். மற்றும் பஸ்ஸையும் அதை ஓட்டுகின்றவர்களையும் நிரந்தரமாக்க வேண்டும். இந்த டிரைவருக்கு இந்த பஸ் என்று ஒதுக்கித் தர வேண்டும். ஓட்டும் டிரைவருக்குத்தான் அந்த பஸ்ஸில் என்ன ரிப்பேர், என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும். மற்றவர்களுக்குத் தெரியாது. ஏதாவது மைனர் ரிப்பேர் இருந்தால் அந்த டிரைவரே உடனடியாகச் சொல்லி தீர்த்துக்கொள்ள முடியும். ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு டிரைவர் என்று டூட்டி கொடுத்தால், அந்த மைனர் ரிப்பேர், மேஜர் ரிப்பேராகி விடுகின்ற நிலைமை ஏற்படுகிறது.

அடுத்தபடியாக சாலையைப் பற்றியது. கிராமப்புறங்களில் இருக்கிற சாலைகள் எல்லாம் மண் சாலையாக இருப்பதாலே புழுதி கிளம்புகிறது. சாலையின் நிலைமையும் கெட்டு, பஸ்களும் சீக்கிரம் கெட்டுவிட வழி ஏற்படுகிறது. புழுதி ஏற்படும்போது ரோடுகளில் ஜனங்கள் நடமாட முடியவில்லை. அங்கிருக்கும் பஞ்சாயத்து யூனியன்களால் அந்தச் சாலைகளையெல்லாம் தார் ரோடாக மாற்றுவதற்கு வசதி இல்லை. ஆகவே, அரசாங்கமே, அரசாங்க பஸ் ஓடும் ரூட்டுகளில் உள்ள சாலைகளை தார் ரோடாக மாற்றித் தர வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்க பஸ்கள் ஓடும் சாலைகளை எல்லாம் தார் ரோடாக மாற்றும் முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கம் இதை நிச்சயமாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப் பட்டார்.)

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மோட்டார் வண்டிகள் மானியக் கோரிக்கை மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மோட்டார் தொழிலை தேசியமயமாக்குவது, நாட்டுடைமையாக்குவது என்பது சென்ற காங்கிரஸ் சர்க்காரால் மேற்கொள்ளப் பட்டது. தொடர்ந்து இப்போது நமது இன்றைய சர்க்காரும் 75 மைலுக்கு மேற்பட்ட வழித்தடங்களையெல்லாம் நாட்டுடைமையாக்குவோம் என்று சொல்லி செய்தும் வருகிறார்கள். இப்போது 50 மைலுக்கு கீழ்ப்பட்ட வழித்தடங்களைக்கூட ஏன் தேசியமயமாக்கக்கூடாது என்ற கேள்வி பிறந்துகொண்டிருக்கிறது. தேசியமயமாக்குவதிலே இரண்டு முக்கிய சாதனைகள் அவசியம். ஒன்று, சர்க்காருக்கு அந்தத் தொழிலிலே வருவாய் இருக்க வேண்டும், நஷ்டம் இருக்கக்கூடாது. இரண்டாவது, அது பொது மக்களுடைய சௌகரியத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும். பப்ளிக் யுடிலிடி என்ற முறையிலே இருக்க வேண்டும். அதையனுசரித்துத்தான்



1970 மார்ச் 21] [திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்]

திராவிட முன்னேற்றக் கழகம் எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும்கூட, அதை முழுக்க முழுக்க சர்க்கார் துறையிலே கொண்டு வருவதில்லை, அப்படி முழுக்க முழுக்க தனியார் துறையிலும் விட்டு விடுவதில்லை. எது எப்படி எப்படி நடந்தாலும் சர்க்காருக்கும் பொது மக்களுக்கும் லாபகரமாக இருக்கும் வகையில் நடக்க வேண்டும் என்ற முறையிலே தொழில்துறை அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் அரசின் கொள்கையை எடுத்துக் கூறினார்கள்.

நாம் புதிதாக வழித்தடங்களையெல்லாம் நாட்டுடைமையாக்கும் போது, தொழிலாளர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதாலோ, அவர்களுக்கு பஞ்சப்படி போன்றவைகள் கொடுப்பதாலோ நஷ்டம் வந்துவிட்டது என்று சொல்லிவிட முடியாது. தனியார் துறையில் இருப்பவர்களும் அவர்களுக்கு உண்டான சம்பளம், பஞ்சப்படி போன்றவற்றைக் கொடுத்துத்தான் வருகிறார்கள். ஒரு சில டிரைவர், கண்டக்டர்களுக்கு அதிக சம்பளம் கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தனியார் துறைகளில் அதிக வேலைவாங்கும் இடங்களிலும்கூட லேபர் ஆக்ட், ஃபேக்டரி ஆக்ட் இவைகளின்படி ஆளுக்கு எட்டு மணி நேர வேலை போன்றவைகளை யெல்லாம் கட்டாயப்படுத்தி அரசாங்கம் செய்ய வேண்டும்.

அடுத்து, சர்க்கார் துறையிலே இருக்கின்ற பஸ்களை எடுத்துக் கொண்டால், பஸ்களின் பராமரிப்பு சரியாக இல்லை. ரோடில் சத்தம் கேட்கிறது என்றால் அது அரசாங்க பஸ்ஸின் சத்தமாகத் தான் இருக்க முடியும். ரோடில் புகை வருகிறது என்றால் அரசாங்க பஸ்ஸின் புகையாகத்தான் இருக்க முடியும் என்ற அளவிலே பராமரிப்பு வேலைகள் மிகமிக மோசமாக இருந்து வருகின்றன. பொதுவாக பஸ்களை எமனுக்கு ஒப்பிடுகிறார்கள். அதேமாதிரி பஸ்ஸினுடைய நிலைமை வழித்தடங்களில் நடக்கின்ற மக்களுக்கு பேராபத்தைக் கொடுக்கின்ற நிலையில் இருக்கிறது. பஸ் சரிவர பிரேக் பிடிப்பதில்லை. பராமரிப்புநிலை மிகமிக மோசமாக இருக்கிறது. மறுபடியும் அவசரப்பட்டு, 'தேசியமயம்' என்று நாம் துரிதப்படுத்துவதைவிட, இவைகளை தனியார் துறையில் விட்டால் நன்கு நடக்குமா, திறமையாக நடத்த முடியுமா, அதற்குரிய கட்டுப் பாடுகளையெல்லாம் நடத்த முடியுமா, என்பதை சர்க்கார் நன்கு ஆராயவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசியமயம் ஆக்கப்பட்டதினாலே சென்னை மாநகரிலுள்ள பஸ்களுக்கு வருவாய் குறைந்திருக்கிறது. செலவு அதிகமாக ஆகியிருக்கிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வரி விதிப்பிலே அடங்கியிருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் நன்கு கவனித்துப் பார்க்க வேண்டும். இப்போது இருக்கைக்கு பத்து ரூபாய் என்ற அளவில் உயர்த்தியிருப்பதெல்லாம் நகர்ப்புற பேருந்துகளுக்கு இல்லையென்று சொல்கிறார்கள். அதற்குக் காரணம் செலவு அதிகமாகிற பஸ் தொழில் நஷ்டத்தில் நடக்கிறது என்பதுதான். இதே நஷ்டம் தான் மற்ற சிறுசிறு கம்பெனிகளுக்கும் வரும். இருந்தும்

அவர்களுக்கு இந்தப் பத்து ரூபாய் வரி உயர்வை அமுல்படுத்தினுல் அவர்கள் ரூட்டை விற்றுவிட்டு, பஸ்ஸை விற்றுவிட்டு ஓடுகிற நிலைதான் ஏற்படும். சர்க்கார் பஸ்களுக்கு இந்த விலக்கைக் கொடுத்து விட்டு மற்ற மற்ற சிறுசிறு கம்பெனிகளுக்குக் கொடுக்கவில்லை என்ருல் இது பாரபட்சமாகும். இதைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நஷ்டம் அடைந்து வருகிற சிறுசிறு 'கம்பெனிகளுக்கும் இந்த வரியில் இருந்து விலக்கு இருக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வழித்தடங்களைப் பற்றி திரு. கே. எஸ். குமாரசுவாமி சொன்ஞர்கள். ஷார்ட் ரூட், மீடியம் ரூட் என்று பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து ஒன்றியங்களில் பஸ்கள் ஓடுகின்றன. அவர்களுக்கு இருக்கிற பண வசதி மிகக் குறைவு. ஹைவேசாக இருந்தாலும் எவ்வளவு வேண்டுமாஞலும் பணம் ஒதுக்கிச் செய்யலாம். ஆனுல் இந்த பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து ஒன்றியங்கள் ரூட்டை சரியான முறையில் பண வசதி இல்லாத காரணத்தினுல் பராமரிக்க முடியவில்லை. ஆகவே இவர்களுக்கு சாலையின் நீளம் எவ்வளவு மைல் என்கிற மைல் அடிப்படையில் மானியம் கொடுத்து அவற்றை நல்ல முறையில் பராமரிக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கோரி எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. நா. கிருட்டிணன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கைகள் மீது எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கழகம் அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் பேருந்துகளை தேசவுடைமையாக்கவேண்டும் என்று எடுத்துக் கொண்ட கொள்கை உயர்நீதி மன்றத்திலும், தலைமை நீதிமன்றத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதிலிருந்தே இதன் சிறப்பு தெள்ளத் தெளிய விளங்குகிறது.

ஆயினும் இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துகிற நேரத்தில் ஏற்படுகிற சில குறைகளை நான் எடுத்துக் கூருமல் இருக்க முடியவில்லை. போக்குவரத்துத் துறை மண்டல அதிகாரிகளாக கோட்டாட்சித் தலைவரைக் கொண்டுவந்து போடுகிருர்கள். இதனுல் போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்காது போகிறது. அரசு இதைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னெரு கோரிக்கையையும் அரசின் முன்பாக வைக்க விரும்புகிறேன். 75 மைல்களுக்கு மேற்பட்ட வழித்தடங்களை அரசு தேசவுடைமையாக்குவது என்று முடிவு செய்தது. இதை 50 மைல்களுக்கு மேற்பட்ட தடங்களை எடுத்துக் கொள்வது என்று மாற்றி முடிவு செய்தாகவேண்டும். அப்போதுதான் அத்திட்டம் முழுமையான நலன் பயக்கும். கோவை, சேலம் ஆகிய மாவட்டங்களில் சென்று பார்க்கிற போது பெரும்பாலான தனியார் வழித்தடங்கள்





75 மைல்களுக்குள்ளேயே இருப்பதனுல் எதுவும் பாதிககப்படவில்லை. பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருப்பது எங்களது செங்கற்பட்டு மாவட்டம் தான். இது சென்னையைச் சுற்றியிருக்கிற காரணத்தினுல் பல வழித்தடங்கள் எடுக்கப்பட்டுவிட்டன. ஆனுல் மற்ற மாவட்டங்களில் தனியார் பேருந்துகள் அதே அளவில் ஓடுகின்றன என்ற கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆகவே, 50 மைல்களும், அதற்கு மேலுமுள்ள ரூட்டுகளை அரசு நாட்டுடைமையாக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, சீர்ப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் காலாண்டுக்கு ஓர் இருக்கைக்கு 50 ரூபாய் என்று இருந்ததை 100 ஆக உயர்த்த இருக்கிருர்கள். சென்னையில் இருந்து திருச்சிக்குச் செல்லவேண்டுமென்ருல் இப்போதே 10 ரூபாய் வாங்கிக்கொண்டிருக்கிருர்கள். அந்தக் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்பதற்கு விதிமுறை இல்லை. ஒரு காலாண்டில் ஒரு இருக்கைக்கு 900 ரூபாய் பெறக்கூடியவர்கள் 100 ரூபாய் கட்டுவதில் சிரமம் இல்லை. மேற்படி கட்டணத்தில் 2 ரூபாய் உயர்ந்தினுல்கூட மேலும் லாபம் பெறுவதற்கு வழியிருக்கிறது.

அடுத்து, கட்டண விகிதங்களைப் பொறுத்தவரையில் எங்களது ஊரான காஞ்சீபுரத்தில் இருந்து சென்னைக்கு வர உள்ள பல்வேறு பேருந்துகளில் பலவிதமாக இருக்கிறது. ரூ. 1.40 என்றும் இருக்கிறது. ரூ. 2.00 என்றும் இருக்கிறது. அந்தப் பகுதி மக்கள் எல்லா வழித்தடங்களிலும் கட்டணத்தை ஒரேமாதிரியாக ரூ. 1.40 என்று வைக்க வேண்டுமென்று கோருகிருர்கள். நானே கூட ரூ. 2.00 கட்டணம் உள்ள அரசாங்க பஸ்களில் ஏறுவதற்குத் தயங்குவேன். ஏன், பயமே கூட ஏற்படுகிறது. காரணம், மக்கள் என்னைக் கண்டவுடன் பலமாகக் கண்டிக்கிருர்கள். ஆகவே ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்களே, From the brving pan to the fire என்பது போல அல்லாமல், இதை ஒரு பிரச்சினைக்குரியதாக்கிவிடாது காஞ்சிபுரத்தில் இருந்து சென்னைக்கு பல ஆண்டுகளாக 1¼, 1½ ரூபாய்தான் இருந்தது. அதற்கு மேல் போகாது ஒரே விகிதம் நிர்ணயிக்கப்படவேண்டும். இரண்டு ரூபாய், இரண்டு ரூபாய் இருபது காசு என்ற அளவிக்குப் போய்விடக் கூடாது என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பேருந்து வண்டிகளைப் பொறுத்த வரையில் மக்களுக்குப் பல வசதிகள் செய்து தரப்படவேண்டும். பேருந்துகளின் பக்கங்களிலும், நிலையங்களிலும் பெயர்ப்பலகைகள் பொருத்தப்படவேண்டும். இப்போது சென்னையில் ஓடுகிற பஸ்களில் டிக்கெட் கொடுக்க என்று ஒரிடத்தில் நிறுத்துகிருர்கள். இயந்திரம் ஓடிக்கொண்டே இருக்கிறது. இதனுல் டீசல் எண்ணெய்தான் சேதமாகிறது. அப்படியின்றி இயந்திரத்தை நிறுத்திவைப்பதன் மூலம் எண்ணெய்ச் சிக்கனம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, . . .

(மணி அடிக்கப்பட்டது.)

[1970 மார்ச் 21

* **திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது என் கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன். 75 மைல்கள், அதற்கு மேற்பட்ட வழித்தடங்களை தேசியமாக்குவது என்பதற்குப் பதிலாக 30 மைல்கள், அதற்கு மேற்பட்ட வழித்தடங்களை நாட்டுடைமை ஆக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்போது வழித்தடங்களை அரசு எடுத்துக் கொள்ளும் போது வேலை இழக்கக்கூடிய தொழிலாளர்களை நமது அரசுப் போக்குவரத்து இலாக்காவில் வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டும். நாம் ஏற்கனவே எடுத்துக்கொண்ட கம்பெனிகளில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் தற்போது வேலை இழந்து இருக்கிறார்கள். ஆகவே நல்ல அனுபவம் பெற்ற இவர்களை அரசுப் போக்குவரத்திலேயே எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக இன்று இந்தத்துறையில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்கள் உற்சாகமாகப் பணியாற்றவேண்டுமென்றால் அவர்களுடைய அடிப்படையான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

குறிப்பாக, இன்றையதினம் இந்தத் துறை தொழிலாளர்களின் சம்பள போர்டு சிபார்சை எப்போது அமுல் நடத்தப்போகிறார்கள், முதலாளிகள் இதைப்பற்றி கவனிப்பதாகவே தெரியவில்லையே என்று தொழிலாளர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சம்பந்தப்பட்ட பஸ் உடைமையாளர்களை அழைத்துப் பேசி சம்பள போர்டு சிபார்சை அமுல்படுத்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்பகுதிகளில் ரோடுகள் இருக்கின்றன. பஸ் உடைமையாளர்கள் பஸ்விடவும் சம்மதிக்கிறார்கள். பொது மக்கள் நகரங்களுக்குப்போய்வர பஸ்விடவேண்டுமென்றும் கோரி வருகிறார்கள். ஆனால் ரூட் கொடுப்பதில்தான் அதிகமான காலதாமதம் ஆகிறது. காலாகாலத்தில் புதிய ரூட்டுகளுக்கு அனுமதி வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதியதாக பஸ் ரூட் அனுமதி கொடுக்கும்போது வொர்க் ஷாப் இருக்கிறதா, 2 பஸ்களுக்கு மேல் இருக்கிறதா என்றெல்லாம் பார்த்து மார்க் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. என்னைப் பொறுத்தவரையில் 3 பஸ்களுக்குக் குறைவாக உள்ளவர்களுக்கே புது பஸ் ரூட்டுகள் கொடுக்கப்படவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்று ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் ஆண்டுக் கணக்காக கூட்டமே நடத்தப்படவில்லை. அதையும் கவனிக்கவேண்டும். அதோடு,



1970 மார்ச் 21] [சோ. அழகர்சாமி]

இந்த ஆலோசனைக் குழுவில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்ற என் கருத்தைக் கூறி இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்

**திரு. நா. காசிராமன்:** தலைவர் அவர்களே, இந்த மோட்டார் போக்குவரத்துத் தொழில் சம்பந்தமாக அரசினரால் கொடுக்கப்பட்டுள்ள டிமான்டின்மீது என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூறவிரும்புகிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டிலே அரசாங்கம் போக்குவரத்துத்துறையிலே ஈடுபட்டு மிகவும் அதிகமான பஸ்களை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். கிட்டத்தட்ட இரண்டாயிரம் பஸ்களை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் கணக்குகளைப் பார்க்கின்றபொழுது பல லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு ஒவ்வொரு ஆண்டிற்கும் வருகின்ற கணக்கைப் பார்த்தால் நஷ்டத்திலேதான் ஓடிக் கொண்டிருக்கின்றன என்பது தெரியும். மற்ற சமயங்களிலே வரிகளைப் பொதுவாக அதிகப்படுத்தும்பொழுது பஸ்களில் தனியார் துறையிலே அதிகமாக லாபம் வருகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பஸ் சர்விஸிலே நஷ்டம் வருவதற்கான சரியான காரணத்தை சரியான சமாதானத்தை பொது மக்கள் ஏற்றுக்கொள்ளுகின்ற சமாதானத்தை இதுவரையிலும் யாரும் சொன்னதாகத் தெரியவில்லை. ஸ்டேட் டிரான்ஸ்போர்டிலே நஷ்டம் வருவதற்குக் காரணம் நிர்வாகத்திற்கு அதிகமான சுதந்திரம் கொடுக்கப்படாததுதான். இந்த மன்றத்திலே நாகர் கோவில் உறுப்பினர் சக உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது கூறியதைப் போன்று அங்கே நாகர்கோவிலே டெப்போவிலே ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமென்றால் 450 மைலுக்கு அப்பால் உள்ளவர்களைக் கலந்து செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது, அதுமட்டுமல்ல, இங்கே இருக்கிற ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டு டிபார்ட்மென்ட் டைரக்டர்கள்கூட எந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமென்றாலும் இங்கே உள்ள அரசாங்க அலுவலர்களை அல்லது அமைச்சர்களை அணுகியே தான் இப்படிப் பலவிதமான படிகளைக் கடந்துதான் காரியங்களைச் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இவ்வாறு இருந்தால் கமர்ஷியலைஸ்டு சர்வீஸ் என்று சொல்லக்கூடிய இந்த போக்குவரத்துத் தொழில் நல்லமுறையிலே நடப்பதற்கு மார்க்கம் இருக்காது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக இந்தச் சட்டசபையிலே பேசும்பொழுது தமிழ்நாடு போக்குவரத்துத் துறை பெயின்ட்களை வாங்குவதில் பல தவறுகள் இருக்கின்றன. குறைபாடுகள் இருக்கின்றன என்று பல உறுப்பினர்களால் பேசப்பட்டது. ஆனால் அரசின் சார்பிலே அப்பொழுது பேசப்பட்டது எந்தவிதமான தவறும் இல்லை. முறையான காண்ட்ராக்டுக்குத்தான் குறைவான

டெண்டருக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று 1968 ஆண்டினுடைய ஆடிட் ரிப்போர்ட் இப்பொழுது வந்திருக்கிறது. அந்த ஆடிட் ரிப்போர்ட்டைப் பார்த்தால் பெயின்ட் வகையிலே தவறுகள் நடந்ததின் காரணமாக சரியான முறையிலே டெண்டர் பரிசீலிக்கப்பட்டு அதற்கு உகந்தவாறு ஆர்டர்கள் கொடுக்கப் படாததால் பல ஆயிரக்கணக்கான ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று அந்த அறிக்கையிலே கொடுத்து இருக் கிறார்கள். இது எதைக் காட்டுகிறது? சட்டசபையில் கூறக்கூடியவர் கள் அதிகமாக விவரங்கள் அவர்களுக்குக் கிடைக்காவிட்டாலும் கிடைத்த விவரங்களைக் கூறி ஓரளவிற்கு தவறுகளை நன்றாகச் சுட்டி காட்டியிருக்கிறார்கள். ஆனால் அரசு சார்பிலே அதற்குப் பதில் சொல்லும் பொழுது தவறுதல்கள் இல்லை என்று சொல்லிவிட்டார் கள். இப்படி மேம்போக்காகப் பதில் சொல்லாமல் உள்புகுந்து விஷயங்களைக் கவனித்து காரியத்தை நடத்தினால் நஷ்டம் ஏற்படா மல் இருக்கும்.

அதைப்போலவே பேட்டரிகள் வாங்குவதிலே பல தவறுகள் நடந்திருக்கின்றன. ஒப்புக்கொண்ட ஸ்தாபனத்திலே வாங்காமல் வேறு பல ஸ்தாபனங்களிலே தவறுதலாக வாங்கியிருக்கிறார்கள். இதனால் பல ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

டாக்ஸ் கட்டுவதிலேயும் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சிடி பஸ்ஸுக்கு அந்த டாக்ஸ் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் சிடி பஸ்ஸுக்கும் சேர்த்து வரியை உயர்த்தியிருக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டு டாக்ஸ் கட்டியிருக்கிறார்கள். அதை ரீபண்ட் வாங்கியிருக்கிறார்களா என்ன என்பது தெரியவில்லை. எனவே இந்த முறையிலேயும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

பஸ்களை நடத்துகின்ற தொழிலின் வருவாயைப் பார்க்கும் பொழுது ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டுக்கு தனியார் துறைதான் போட்டியாக இருக்கிறது என்ற எண்ணம் பெரும் பாலும் இருக்கிறது. உண்மையிலே பார்க்கப்போனால் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கு இந்த நாட்டிலே மிகவும் முக்கியமாக போட்டியாக இருப்பது ஆம்னிபஸ்கள்தான். இந்த ஆம்னிபஸ்களை எக்மோர் ஸ்டேஷனிலும், சென்ட்ரல் ஸ்டேஷனிலும், நான் ஒரு நாள் அங்கே அருகிலே சென்று பார்த்தேன். நிறுத்திவைத்துக் கொண்டு, செந்தில் டிராவலர்ஸ் என்ற பஸ்ஸில் மைக் வைத்துக் கொண்டு கூப்பிடுகிறார்கள். திருச்சிக்கு இவ்வளவு ரூபாய், சேலத் திற்கு இவ்வளவு ரூபாய் என்று கூப்பிடுகிறார்கள். எக்மோர் ஸ்டேஷ னுக்குப் பக்கத்திலுள்ள சந்துக்களிலும், தெருக்களிலும் இது போன்ற கேர்போன்ற பஸ்களை நிறுத்தி வைத்து விடுவதால் போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகிறது. இந்த பஸ்களுக்குப் பிரயாணிகள் அதிகமாகப் போகிற காரணத்தால்தான் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்களுக்கு நெடுந்தூர பஸ்களுக்கு வருவாய் குறைகிறது. ஆம்னிபஸ்களுக்கு 100 ரூபாய் வரியை உயர்த்தி





யிருக்கிறார்கள். அதனால்மட்டும் நஷ்டத்தை நிவர்த்தி செய்துவிட முடியாது. தனிப்பட்ட முறையிலே ஹோட்டல்கள், டிக்கெட் கொடுப்பதிலே தவறுகள் செய்யக்கூடிய அளவிலே இடம் இருக் கிறது. அவற்றையெல்லாம் அடைத்தால்தான் ஆம்னி பஸ்கள் மூலம் ஏற்படுகின்ற தொல்லைகளையும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கு ஏற்படுகின்ற நஷ்டத்தினையும் குறைக்கமுடியும். சென்ற ஆண்டு இந்த டிமாண்டின்போது நான் இதைப்பற்றி பேசினேன். நடவடிக்கை எடுக்கிறார்களா அல்லது நடவடிக்கை எடுப்பதில் இஷ்டம் இல்லையா என்பது தெரியவில்லை.

சென்னை நகரத்திலே ஓடுகிற பஸ்களில் நெருக்கடி இருக்கிறது, நெருக்கடி இருக்கிறது என்று சொன்னால் புளி நிறைய இருக்கிற மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு அனுப்பும்பொழுது புளியை அடைத்து அடைத்து அமுக்கி பேக் செய்து அனுப்பு வதைப்போல பிரயாணிகளை அப்படி நினைத்து அடைக்கிறார்கள். இதனால் பிரயாணிகளுக்கு கஷ்டம் ஒருபுறம், மற்றொரு புறம் பஸ்ஸுக்கு ஏற்படுகிற ஆபத்து ஆகும். இதைத் தவிர மூன்றாவதாக நிறைய பிரயாணிகளை ஏற்றிச்செல்வதால் நிறைய வருவாய் வரும் என்று எண்ணுகின்ற நிலை தவறு. இப்படி நிறைய அடைத்துக் கொண்டு போவதால் காசு வாங்குவதற்குள்ளாக அவர்கள் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டால் அவர்களுக்கு காசு கொடுக்க வேண்டுமென்று உண்மையிலே எண்ணம் இருந்தாலும் கூட அவர் களுக்கு காசைவிட காரியம் முக்கியமாக இருப்பதால் காசு கொடுக் காமலே அதை வாங்குவதற்கு கண்டக்டருக்கு அவகாசம் இல்லாத காரணத்திலே பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்படு கிறது. இதைத் தவிர்ப்பதற்கு நிறைய பஸ்களைப் போடவேண்டும். நிறைய பஸ்கள் என்றால் தேரைப்போன்ற பெரிய பஸ்கள் போட வேண்டாம். சிறிய சிறிய பஸ்களைப் போடவேண்டும். அவைகூட டெர்மினஸ் டு டெர்மினஸ் என்ற முறையிலே மாம்பலத்திலிருந்து பாரிஸ் வரையிலும், மயிலாப்பூரிலிருந்து மவுண்ட் ரோடு வரை யிலும் ஏற்றுவது என்று வைத்துக்கொள்ளவேண்டும். லோக்கல் டிரெயின்ஸ், பாசஞ்சர் டிரெயின்ஸ் மாதிரி வைத்துவிடலாம். அப்படி வைத்துவிட்டால் இந்த நெருக்கடியைத் தவிர்க்கலாம், ஓரளவிற்கு நஷ்டத்தையும் குறைக்கலாம்.

இங்கே ஒரு நண்பர் பேசியபொழுது அரசாங்கத் துறையிலே பஸ் சர்வீஸிலே லாபம் வருவதற்காக நடத்தப்படவில்லை, மக்க ளுடைய சௌகரியத்திற்காகத்தான் நடத்தப்படுகிறது என்று முன்னாள் இங்கே மந்திரியாக இருந்தபொழுது திரு. வெங்கட் டராமன் அவர்கள் கூறியதை நினைவுபடுத்தினார்கள். ஆனால் நஷ்டம் வருகிறது என்ற காரணத்திற்காகத்தான் ஊட்டியிலிருந்து குண்ட லூர் பேட்டைக்கு எல்லுமலை வழியாக சென்ற ரூட்டை ஏன் ரத்து செய்தார்கள்? அந்தப் பகுதி யானைகள் நிறைந்த இடம், தொழி லாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்பொழுது பஸ் வசதி கிடையாது. என்னுடைய நண்பர் ஒருவர் பேசினார், அங்கே

டிக்கட் கொடுக்கப்படுவதில்லை, 1.20 காசு என்று இருந்தால் 20 காசு கொடுத்தால் போதும் ஒரு ரூபாய் கொடுக்கவேண்டியதில்லை என்று செய்தால்தான் அங்கு நஷ்டம் ஏற்பட்டது, உண்மையாகவே நஷ்டம் இல்லை என்று சொன்னார்கள். லாபத்தைப் பார்க்கவில்லை, மக்களின் சௌகரியத்தைத்தான் பார்க்கிறோம் என்று சொல்கிற அரசு ஏன் அந்த பஸ் போக்குவரத்தை எடுக்கவேண்டும். அதைப் போன்று மெட்ராஸ் சிடியிலும் பல பஸ்களை நிறுத்தியிருக்கிறார்கள், குறைத்தும் இருக்கிறார்கள். இதனால் நகரத்திலே உள்ளவர்களுக்கு மிகவும் கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இன்றைக்குள்ள அரசுப் போக்குவரத்தில் உள்ள பஸ்களின் நிலைமையை அவைகளே மவுண்ட் ரோடிலே சொல்லிக்கொண்டு போகின்றன. மவுண்ட் ரோடிலிருந்து டிரான்ஸ்போர்ட் பஸ் புறப்பட்டுவிட்டது என்றால் பாரிஸிலிருந்து சொல்லிவிடலாம், ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ் புறப்பட்டுவிட்டது என்று. கிரவுன் வீல் பினியன் போடுகின்ற சத்தம் ஹல்லர் மில்லில் ஏற்படுகின்ற சத்தத்தைவிட அதிகமாக இருக்கிறது. இதற்குக் காரணம் பஸ்களிலே உள்ள கோளாறுகள் சரியாக பழுது பார்க்கப்படுவதில்லை. இன்னொன்று. அந்தந்த டிரைவர்கள் ஓட்டுவதில்லை. ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு டிரைவர் ஓட்டிக்கொண்டிருக்கிறார். ஒரு வருடத்திற்கு இரண்டு டிரைவர்கள் ஒரு பஸ்ஸை கூடுமானவரையில் ஓட்டக்கூடிய முறையினை வைத்துக்கொள்ளவேண்டும். இந்தத் துறையில் அனுபவம் உள்ளவன் என்ற காரணத்தினால் சொல்லிக் கொள்கிறேன். டிரைவர்களை அப்படி குறிப்பிட்ட பஸ்ஸில் கொஞ்ச நாட்களுக்குத் தொடர்ந்து போட்டால் அவர்கள் தங்களுடைய சொந்த வண்டிபோல் தன்னுடைய சொந்தப் பணம்போட்டு வாங்கியதைப்போல் பாதுகாத்துக்கொள்வார்கள். அமைச்சர்களாகட்டும், அதிகாரிகளாகட்டும் இன்று ஒரு டிரைவர், நாளைக்கு யாரோ ஒரு டிரைவர் என்று வந்து அவர்களுடைய காரை ஓட்டுவார்களானால் அவர்களே விரும்ப மாட்டார்கள். தன்னுடைய கார் ஓட்டுகிற ஆள் பழக்கப்பட்ட ஆளாக இருக்கவேண்டுமென்றுதான் விரும்புவார்கள். ஒரு ரூட்டிலே ஒரு பஸ்ஸிலே ஓடக்கூடிய டிரைவர் ஒரே ஆளாகத்தான் இருக்கவேண்டும். அடிக்கடி மாற்றக் கூடாது. அப்படி இருந்தால்தான் பஸ்களுக்கு அதிகமான சேதாரங்கள் ஏற்படாமல் கண்காணிக்க முடியும். ஒவ்வொரு டிரைவர்களாக மாற்றிக் கொண்டிருந்தால் கஷ்டங்கள்தான் ஏற்படும்.

பஸ்களில் டீசல் ஆயிலைப் போட்டு ஓட்டுகிறார்கள். அதிலே வரும் புகையைப் பார்க்கும்போது ஏதோ யுத்தம் நடக்கும்போது பின்னால் வருபவர்களுக்குத் தெரியாமல் இருப்பதற்காகப் புகையைக் கிளப்புவது போல் இருக்கிறது. பக்கத்தில் எந்தக் காரும் வரமுடியாத அளவுக்குப் புகை வருகிறது. அந்த டீசலிலே சல்பர் இருக்கிறது. இந்த மாதரி புகை வருமானால் நகரத்தில் இருப்பவர்களுடைய தேக ஆரோக்கியம் எந்த அளவுக்குப் பாதிக்கப்படும், பஸ்களில் பிரயாணம் செய்கின்றவர்களுடைய தேக ஆரோக்கியம்



எந்த அளவுக்கு பாதிக்கப்படும் என்று பார்க்க வேண்டும். பஸ்களை ஓட்டும் போது லிட்டருக்கு இரண்டரை மைலாவது ஓட்ட வேண்டும். இந்த மாதிரி புகை வரும் நிலையில் அது எண்ணெயை அதிகமாகச் சாப்பிட்டு அதனால் வரக்கூடிய நஷ்டம் எவ்வளவு லட்சக் கணக்குக்குப் போயிருக்கும் என்பதை தனித் தனியாக டீசல் ஆயில் கொடுப்பதையும், ஓடுகின்ற மைல்களின் கணக்கையும் எடுத்துப் பார்த்தால் தெரியும். பொதுப்பணம் இதனால் விரயமாகிறது. இவ்வளவு பணம் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டில் நஷ்டம் ஆகிறது. தனிப்பட்ட ஒருவனுக்கு இப்படி நஷ்டம் ஏற்பட்டால் தொடர்ந்து எப்படி பஸ்களை ஓட்ட முடியும்? பொதுமக்களிடமிருந்து மற்ற இலாகாக்கள் மூலம் வசூலிக்கப்பட்ட வரிப் பணத்தில் இருந்து இந்த நஷ்டம் சரிக்கட்டப்பட்டு இந்த செர்விஸ்கள் ஓடுகின்றன. மக்கள் கொடுக்கின்ற வரிப்பணம் நல்ல காரியங்களுக்காகச் செலவழிக்கப்படாமல் செர்விஸ்களில் ஏற்படக்கூடிய நஷ்டத்தை ஈடுகட்ட உபயோகப்படுத்துவது சரிதானா, நியாயந்தானா என்பதை அரசை நடத்துகிறவர்கள் தங்கள் நெஞ்சைத் தொட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பிரேக்டவுனைப் பொறுத்தவரை பார்க்கும்போது நகரில் மாம்பலத்தில் இருந்து செகரடேரியட் வருவதற்குள் ஐந்தாறு பஸ்களாவது அடிபட்ட ஆமைகளைப் போல் நகர முடியாமல் வழியிலே நின்று கொண்டிருப்பதைப் பார்க்க முடியும். அப்படி நின்று கொண்டிருக்கும் பஸ்களிலே கண்டக்டர் இருக்கிறாரா, டிரைவர் இருக்கிறாரா என்று பார்த்தால் இல்லை. வேறு யாராவது ஆள் இருக்கிறாரா என்று பார்த்தால் இல்லை. அந்த பஸ்கள் அத்தனையும் நடு ரோட்டில் அனாதையாக விடப்பட்டிருக்கின்றன. அதனால் மிகவும் நெருக்கடி மிகுந்த மவுண்ட் ரோடு போன்ற சாலைகளில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. நாலு ஆளை வைத்து அதை ஓரமாகத் தள்ளிக் கூட நிறுத்துவதில்லை. கண்டக்டர், டிரைவர் டெப்போவுக்குச் சென்று விடுகின்றாரோ அல்லது வேறு எங்கு போய் விடுகிறார்களோ தெரியவில்லை. இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. 1—1—1970 முதல் நேற்று வரை 80 நாட்களுக்குள்ளாக ரோடு விபத்தால் 40 மரணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நான் உத்தேசமாகச் சொல்லவில்லை. மவுண்ட் ரோடில் ஸ்பென்சருக்கு எதிரில் உள்ள போலீஸ் கட்டடத்தில் போட்டிருப்பதைத்தான் கூறுகிறேன். சென்ற ஆண்டு 150 விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு இந்த 80 நாட்களுக்குள்ளாக 40 பேர் இறந்திருக்கிறார்கள் என்றால் இரண்டு நாளைக்கு ஒருவர் என்ற வீதம் சாலைப் போக்குவரத்தில் மரணம் அடைந்திருக்கிறார்கள். இந்த விபத்துக்களைக் குறைக்க வேண்டுமென்பதற்காக நல்ல முறையில் பணியாற்றும் போலீசாருக்கு இன்னும் நல்ல முறையில் பணியாற்றுவதற்கான ஊக்கத்தையும், ஆக்கத்தையும் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் செல்லும் வேகத்தைப் பார்த்தால் அது ஜெட் வேகத்தையும் தோற்கடித்துவிடும்போல் இருக்கிறது. போகின்ற பஸ் திருச்சிக்குப் போக வேண்டுமென்றால் அது போகின்ற வேகத்தைப் பார்க்கும்போது அது திருச்சிக்குப் போய்ச் சேராது திரும்பாத ஊருக்குக் கொண்டு போய்ச் சேர்த்துவிடும் போல் இருக்கிறது. இதனால் மக்களுக்கு ஆபத்து ஒரு பக்கம்; பஸ்கள் பழுதாகி ஸ்பேர் பார்ட்ஸ் மாற்ற வேண்டிய நிலைமை, டயர் தேய்ந்து மாற்ற வேண்டிய நிலைமை எல்லாம் ஏற்படுவது மற்றொரு பக்கம். இதனால் இலாகாவுக்கு ஏற்படக்கூடிய தொல்லை இன்னொரு பக்கம். டிரைவர்கள் பஸ்களை விரட்டியடிக்கிறார்கள். அப்படி விரட்டாமல் இருக்க பஸ்களில் ஸ்பீடை ரெஸ்ட்ரிக்ட் பண்ணும் வகையில் 'கவர்னர்' பொருத்தப்பட்டால் பஸ்களில் ஸ்பீட் கட்டுக்குள் அடங்கி இருக்கும்.

நண்பர் மணி அவர்கள்கூடச் சொன்னார்கள். பஸ்களில் பிரயாணம் செய்யும்போது யாரிடமாவது டிக்கட் இல்லையென்றால் அவர்களிடமிருந்து அதிகப்படியான காசு வாங்க வழி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அந்த வகையில் மோட்டார் வண்டிச் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும். யாரிடமாவது டிக்கட் இல்லையென்றால் பஸ் புறப்பட்ட இடத்தில் இருந்து சார்ஜ் வசூலிக்கப்படும் என்ற அளவுக்கு விதிமுறைகளை ஏற்படுத்தினால் சென்னை பஸ்களில் ஏற்படும் வசூல் குறைவை ஓரளவு சமாளிக்க முடியும். சென்னை போக்குவரத்து இலாகாவிலுள்ள டிக்கெட்டுகள் போல் போலி டிக்கெட்டுகளை ஆறு, ஏழு வருடங்களுக்கு முன்பு போட்டார்கள். அப்போது அது கண்டு பிடிக்கப்பட்டு, சர்க்கிள் இன்ஸ்பெக்டரால் நகரில் எந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டது என்பதெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதுமாதிரி ஏதாவது இப்போது இருக்கிறதா, என்பதையும் பரிசீலிக்க வேண்டும். அதுமாதிரி இல்லையென்றால் நல்லது; இருந்தால் அவைகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மோட்டார் வாகனங்களுக்குப் புதிதாக வரியை உயர்த்தியிருக்கிறார்கள். வரி இல்லாமல் அரசாங்கம் நடத்த முடியாது என்பதை நானும் ஒத்துக் கொள்ளுகிறேன். காலப் போக்குக்குத் தகுந்தாற் போல் வரி அதிகப்பட வேண்டிவரும் என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். வரியைப் போடும்போது, எந்த ஒரு தொழிலின் மீதோ, வியாபாரத்தின் மீதோ போடும்போது அந்தத் தொழில் அந்த வரியைத் தாங்குமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு வருவாய் வருமென்று கருதுகிறார்களோ அந்தளவுக்கு மட்டுந்தான் வரி போடவேண்டும் ஒரு கோடி ரூபாய் இந்த வரியினால் வரும் என்று எதிர்பார்த்தார்கள்: ஆனால் ஒருகோடி அறுபத்தி எட்டு லட்சம் ரூபாய் வந்திருக்கிறது. 68 சதவிகிதம் அதிகமாகக் கிடைத்திருக்கிறது. இது மிக அதிகமாகும். இந்தத் தொழில் பாதிக்கும் அளவுக்கு இருக்கிறது. விற்பனை வரியைக் கூட்டியிருக்கிறார்கள்; சர்சார்ஜ் வேறு போட்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் கன்ஸ்யூமர்சுக்கு இந்த விலை கூடாது என்று சொல்லுகிறார்கள். நடைமுறையில் வரும்போது பல ரூபங்களில் விலை கூடிவிடும். எல்லா உறுப்புகளின் விலையும் ஏற்றப்பட்டுவிடும். வரி அதிகம் என்று தனியார் துறையில் கூறும்போது நிறைய வருமானம் வரும்போது சர்க்காருக்கு வரி கொடுக்க ஏன் தயங்குகிறார்கள் என்று கேட்கிறார்கள். சராசரியாக எடுத்துக் கொண்டால், தனியார் துறையில் 50 பாசஞ்சர் கொண்ட பஸ்ஸை எடுத்துக் கொண்டால் கிலோ மீட்டருக்கு 3 பைசா வீதம் போட்டு 400 கிலோ மீட்டருக்கு மொத்த வருமானம் இன்றைக்கு இருக்கிற ஆக்குபன்சி ரேஷியோ 65 பர்சன்ட் என்று வைத்துப் பார்க்கும்போது 1,42,000 ரூபாய் வரும். இப்போது போடப்பட்டிருக்கும் வரி விகிதம், தொழிலாளர்களுக்கு அவார்டு மூலம் கொடுக்க வேண்டிய அதிகப்படியான சம்பளம் எல்லாவற்றையும் பார்க்கும்போது 1,41,500 ரூபாய் செலவு வருகிறது. இது தவிர எதிர்பாராத செலவுகள் வேறு. எந்த விதமான விபத்தும் இல்லாமல், சங்கடமும் இல்லாமல் பஸ்கள் ஓடினால் ஒரு வருஷத்திற்கு 70,000 முதல் போட்டதற்கு 500 ரூபாய் வந்தால் அதிகம். இந்த அளவுக்குக்கூட வருவதில்லை. எழுபதாயிரத்தை ஃபிக்ஸெட் டெப்பாசிட்டில் போட்டால் கூட நாலாயிரத்துக்கும் அதிகமாக வட்டியே கிடைக்கும். நூற்றுக் கணக்கான தொழிலாளர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டியதில்லை, வேறு பிரச்னைகள் இல்லை. நூற்றுக் கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் அந்தத் தொழில் மீது மேலும் மேலும் வரியைச் சுமத்துவது நியாயமல்ல. இந்த வரி உயர்வு மிகவும் அதிகமானது. ஸ்பேர் பஸ்களுக்கு இந்த வரி உயர்வு இருக்கக் கூடாது என்பதையும் அரசு கவனத்தில் கொள்ளுவது நல்லது. சர்விசை எபிஷியன்ட் ஆக வைத்திருப்பதற்குத் தான் ஸ்பேர் பஸ் வைத்திருக்கிறார்கள். ஸ்பேர் பஸ்ஸுக்கு அதிக வரி கட்டவேண்டுமென்று சொன்னால் எஃபிஷியன்சி பாதிக்கப்படும்.

தமிழக அரசு ஒரு பக்கம் தனக்கு வரக்கூடிய பெரும் வருவாயை இழந்து கொண்டிருக்கிறார்கள். லூப்ஹோலைப் ப்ளக் செய்து அந்த வருவாயைப் பெற வழி செய்யவேண்டும். மோட்டார் வாகனச் சட்டத்தை மாற்றிவிட்டார்கள். தமிழகத்தில் பதினைந்தாயிரத்துக்கு மேற்பட்ட லாரிகள் இருக்கின்றன. அவற்றில் பத்தாயிரத்திற்கு மேற்பட்டவை மண்ணெண்ணெயில் ஓடுகின்றன. டீசல் ஆயிலுக்கு எவ்வளவு சேல்ஸ்டாக்ஸ் கொடுக்க வேண்டுமோ அதைவிட ஒன்றரைக் கோடி ரூபாய் அளவுக்கு இதனால் குறைவாகப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். மது அருந்தக் கூடாது என்று சட்டம் போட்டால் போதாது. மது விற்கக் கூடாது என்றும் சட்டம் போட வேண்டும். அதே போல் கெரோசினை உபயோகிக்கக் கூடாது என்று சொன்னால் மட்டும் போதாது, பஸ்களுக்கும், லாரிகளுக்கும் கெரோசினை விற்கக் கூடாது என்று சட்டம் கொண்டு

வரவேண்டும். (மணி அடிக்கப்பட்டது). இன்னும் ஐந்து நிமிடத்தில் முடித்து விடுகிறேன். வரி உயர்வு பற்றிச் சொல்லும்போது டவுன் சர்வீஸ்களுக்கு வரி உயர்வு இல்லை என்று சொன்னார்கள். அது டவுன் சர்வீஸைப் பொறுத்தவரையில் அரசின் ஒரு அபிமானத்தைக் காட்டுகிறதோ என்று நினைத்தேன். ஆனால் அதைப் பார்த்தபோது செயல்முறைக்குக் கொண்டு வரும்போது டவுன் சர்வீஸ் என்றால் சிட்டி லிமிட்டுக்கு உள்பட்ட டவுன் சர்வீஸ்களைத்தான் இந்த வரி உயர்வு பாதிக்காது என்று சொல்லியிருக்கிறார்கள். சிட்டி லிமிட்டுக்கு உட்பட்ட எவ்வளவு ஓடுகின்றன? தமிழக அரசின் 700 பஸ்கள்தான் சிட்டி கார்ப்பரேஷன் எல்லைக்குள் ஓடுகின்றன. வேறு எந்த இடத்திலும் சிட்டி பஸ்கள் முனிசிப்பல் லிமிட்டுக்கு உட்பட்டு ஓடுவதாகத் தெரியவில்லை. ஆகவே இந்த தமிழக அரசின் 700 பஸ்களுக்காகத்தான் இந்தச் சலுகை காட்டப்பட்டிருக்கிறது. மேலும் இப்படி சிட்டி பஸ்களுக்கு இந்த விதிவிலக்கு அளிப்பதன் மூலம் நஷ்டம் கூடாமல் அந்த நஷ்டத்தை ஓரளவிற்கு தறைத்துக் காட்டுவதற்காகத்தான் இந்த விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வெளியே பார்க்கும்போது எல்லா டவுன் சர்வீஸ்களுக்கும் வரி உயர்வு இல்லை என்று தோன்றும்படியாக இருக்கிறது. அப்படி சிட்டி பஸ்களுக்கு விலக்கு அளிக்கப்படாவிட்டால் மேலும் 21 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படக்கூடிய நிலைதான் ஏற்படும். அந்த நஷ்டத்தை குறைத்துக் காட்டுவதற்காகத்தான் இந்த யுக்தி கையாளப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, மோட்டார் தொழிலாளர்கள்பற்றி ஒரு வார்த்தை. லேபர் அவார்ட் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு இவ்வளவு அடிப்படைச் சம்பளம், இவ்வளவு அலவன்ஸ் என்றெல்லாம் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. பலர் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தத் தொழிலாளர்களுக்கு சரியான முறையில் சம்பளம் கொடுப்பதில்லை. அப்படிக் கொடுக்காதவர்களாக இருந்தாலும்கூட அவர்களுக்கு மேலும், மேலும் பர்மிட்ஸ் வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே, தொழிலாளர் நல இலாகாவிலிருந்து லேபர் ட்ரிப்யூனல் அல்லது இலாகாமூலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற சம்பளம் கொடுத்து வருகிறார்கள் என்று சர்டிபிக்கேட் வந்தாலொழிய அந்த பஸ் அதிபர்களுக்கு மேலும் பெர்மிட் கொடுக்கக்கூடாது என்ற வகையில் உத்தரவு போடவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்வது தொழிலாளர்களுக்கு நன்மையைப் பயக்கும். தொழிலாளர்களின் பிராவிடன்ட் பண்ட் தொகையை பலர் அரசாங்கக் கஜானாவில் கட்டாமல் அல்லது அதற்குரிய ட்ரஸ்டில் கட்டாமல் அவற்றை தங்களுடைய நலனுக்காக பயன்படுத்தி வருகிறார்கள். அதை கண்காணித்து அவ்விதம் நடப்பதைத் தவிர்க்கும் விதத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.





அடுத்தபடியாக, ஓவர்லோடு ஏற்றும்போது அதற்கு கண்டக்டரையும் ஓனர்களையும் பொறுப்பாளிகளாகப் போடுகிறார்கள். ஓனர் எங்கேயோ இருக்கிறார். இந்த ஓவர்லோடைக் குறைக்க வேண்டுமென்றால் கண்டக்டரை மட்டும் அதற்குப் பொறுப்பாளியாக்கினால் ஒரு கண்டக்டராவது ஒரு ஸீட் ஓவர்லோட் ஏற்றுகிறாரா என்று பாருங்கள். யாரும் செய்யமாட்டார்கள். அப்போது பிரயாணிகளுக்கும் வசதியாக இருக்கும். அதையும் செய்ய வேண்டும். ஆர்.டி.ஓ. வை ஆர்.டீ.ஓ. ஆகப் போட்டால் 375-25-800 என்றளவிற்கு சம்பளம் தரப்படுகிறது. ஆனால் ஆர்.டீ.ஓ. வை ஆர்.டி.ஓ. ஆகப் போட்டால் 350-25-650 என்ற சம்பளம் தரப்படுகிறது. அதைக் குறைக்கவேண்டுமென்று நான்சொல்லவில்லை. நான் சொல்லவிரும்புவது என்னவென்றால் 70,000 ரூபாய் விலை உள்ள பஸ்களை 400 பஸ்களை நிர்வாகம் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். பெரிய பொறுப்பில், பெரிய பதவியில் இருப்பவர்களுக்கு நல்லமுறையில் சம்பளம் தரப்படவேண்டும். அதேபோல் அந்த இலாகாவில் பணிபுரியும் மோட்டார் வெகிக்கிள்ஸ் இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்களுக்கு நல்லமுறையில் ப்ரமோஷன்ஸ் எல்லாம் கொடுத்து இவ்விலாகா நல்லமுறையில் இயங்கும்படிச் செய்ய வேண்டும்.

அடுத்து, ஆர்.டீ.ஓ. ஆபீஸ்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய் வரியாகக் கட்டுகிறவர்கள் செல்கிறார்கள். அவர்கள் போனால் உட்காரக்கூட நாற்காலி பெஞ்ச் கிடையாது என்ற நிலைதான் இருக்கிறது. ஆப்பரேட்டர்கள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள், ஆகவே அவர்கள் உட்கார வசதி வேண்டாம்; ஆனால் வருகிற வக்கீல்களுக்கு உட்காருவதற்கு வசதி இருக்கவேண்டாமா? ஆகவே ஆர்.டீ.ஓ. ஆபீஸ்களில் வருகிறவர்கள் உட்காருவதற்கு வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆர்.டீ.ஓ. ஆபீஸ் ஊருக்கு வெகு தொலைவில் இருக்கிறது. அங்கு போயிவிட்டு வந்தால் விருதம் இருப்பதுபோல், பட்டினி கிடப்பது போல்தான் இருக்கிறது. ஆகவே ஆர்.டீ.ஓ. அலுவலகங்களில் தக்க வசதிகள் செய்து கொடுப்பதோடு அந்த அலுவலகங்கள் நகருக்கு மத்தியில் இருக்கக்கூடிய அளவிற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த சந்தர்ப்பத்தை அளித்ததற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையின் சார்பாக இந்த மன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளின் பேரில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களைத் தெரிவித்தார்கள் மொத்தத்தில் சுமார் 14 பேர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். காலையில் என் முன்னுரையில் நான் கேட்டுக்கொண்ட வேண்டுகோளுக்கு இணங்க உறுப்பினர்கள்

நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருப்பதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளகடமைப் பட்டுள்ளேன். இக் கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதத்தில் உணர்ச்சி வசப்படாமலும் கோபப்படாமலும் கருத்துக்களை நல்ல முறையில் எடுத்துச் சொன்னதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இந்த போக்குவரத்துத் துறையில் உள்ள மாற்றங்கள் பற்றிக் குறிப்பிடும்போது நண்பர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அமைச்சரவையின் பொறுப்பு கூட்டுப் பொறுப்பு என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். இலாகா மாற்றத்தால் கொள்கை மாற்றம் இல்லை என்பதை தெளிவாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த விவாதத்தை துவக்கி வைத்துப் பேசிய மார்டின் அவர்கள் அவர்களுக்கு இயல்பான சில கருத்துக்களை பேசுவதோடு அதே மாதிரி நல்லமுறையில் கருத்துக்களை எடுத்துச் சொன்னதற்காக அவர்களுக்கு என் நன்றியைக் கூறிகொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். உறுப்பினர்கள் தொடர்ந்து நல்ல பல கருத்துக்களை எடுத்துரைத்தார்கள்.

போக்குவரத்துத் துறையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று அரசுப் போக்குவரத்து. இன்னொன்று, தனியார் போக்குவரத்து. அரசுப் போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் இது ஒரு பெரிய நிறுவனமாகும் என்பதை அனைவரும் உணருவார்கள். அரசுப் போக்குவரத்துத் துறையில் 2,000 பஸ்களை அரசு நிர்வகித்து நடத்திவருகிறது. அதில் 20,000 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். போக்குவரத்து மூலம் சென்னை நகரில் மட்டும் பத்து லட்சம் பேர்கள் பலனடைகிறார்கள். சென்னை நகரைப்பொறுத்து அரசுப் போக்குவரத்து மிக மிக முக்கியமான போக்குவரத்தாக பணியாற்றி வருகிறது. குறிப்பாக ஏழைகளும் நடுத்தர வகுப்பு மக்களும் அதிகமாக அரசுப் போக்குவரத்தை நம்பித்தான் இருக்கிறார்கள். என் முன்னுரையில் கூறியிருப்பதைப் போல் 78% பேர்கள் அரசு போக்குவரத்தை நம்பியிருக்கிறார்கள்.

அரசுப் போக்குவரத்துத் துறையைப்பற்றித்தான் இங்கு அதிகமாகப் பேசப்பட்டது. தனியார் துறை போக்குவரத்தைப் பற்றி ஒரு உறுப்பினர் மட்டும் கருத்து தெரிவித்தார். அரசுப் போக்குவரத்துத் துறையில் கோடிக்கணக்கான ரூபாய் முதலீடு போட்டு அந்த நிறுவனம் நடத்தப்பட்டு வருகிறது. அரசுடைமையாக்க வேண்டும் என்பது சர்க்காரின் கொள்கையாகும். அந்த அடிப்படையில்தான் அரசு திட்டமிட்டு பஸ் வழித்தடங்களை எல்லாம் நாட்டுடைமையாக்கி வருவது உங்களுக்குத் தெரியும். ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. காசிராமன் அவர்கள் நிறுவ





னத்தில்கூட சில குறைகள் ஏற்படலாம். அதைவிட பெரிய நிறுவனமாக இருக்கிறது அரசுத் துறைப் போக்குவரத்து. ஆகவே, 2,000 பஸ்கள் உள்ள ஒரு நிறுவனத்தில் சில குறைபாடுகள் இருக்கலாம். இல்லை என்று மறுப்பதற்கு நான் தயாராகயில்லை. ஆனால் ஏற்படுகிற சிறிய குறைகளை மிகைப்படுத்திப் பேசுவதன் விளைவாக அரசுப் போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகிறவர்களிடையே உள்ள மொரேல் கெடுகிற நிலை ஏற்படுகிறது. ஆகவே சிறிய குறைகளை பெரிதாக்கி சட்டமன்றத்திலும் வெளியிலும் பேசுவது என்பது மக்கள் மனதில் அரசுப் போக்குவரத்துத் துறை மிகமிக மோசமாக நடைபெறுகிறதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும். ஆகவே, சிறிய குறைபாடுகளை பெரிதாக ஆக்காமல் இத்துறை நல்லமுறையில் பணியாற்றுவதற்குத் தகுந்த முறையில் உள்ள ஆலோசனைகளை மேலும் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மார்டின் அவர்கள் பேசும்போது அரசுப் போக்குவரத்துத் துறையில் ஏற்படுகிற நஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அரசின் நிர்வாகத் திறமைக் குறைவு காரணமாக அல்லது அலட்சியப் போக்கின் காரணமாகத்தான் இவ்வளவு லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறதோ என்று நான் கருதுகிறேன். ஆனால் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது நம் மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். சி. பாலன் அவர்கள் குறிப்பிட்டதுபோல், இந்தியாவிலுள்ள பல மாநிலங்களில் அரசுப் போக்குவரத்துத் துறைகள் நடைபெற்று வருகின்றன. அந்தப் புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது பம்பாயில் பி.ஈ.எஸ்.டி. நிறுவனத்தில் 1968-69-ல் 94 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்திய நாட்டின் தலைநகரமான டெல்லியில், டி.டி.யு. நிறுவனத்தின்மூலம் நடைபெறும் போக்குவரத்தில் 1968-69-இல் ஏற்பட்ட நஷ்டம் 49 இலட்சமாகும். பெங்களூரில் 300 பஸ்களைக் கொண்ட சிட்டி பிராஞ்சிலே 20 இலட்சம் ரூபாயும், தொழில் நகரமான அகமதாபாத்திலே 500 பஸ்களை வைத்துக்கொண்டிருக்கும் அந்தப் போக்குவரத்துத் துறையிலே 8.85 இலட்சம் ரூபாயும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறையிலே, சென்னை மாநகரத்திலே மட்டும் 44.37 இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 1969-70-இல் 29.37 இலட்சம் என்ற அளவுக்கு நிலைமைகள் சீர்பட்டிருப்பதை நீங்களெல்லோரும் பாராட்டுவீர்கள் என்றே நான் நம்புகிறேன்.

எனவே, நம்முடைய அரசு போக்குவரத்துத் துறை நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது என்பது எல்லோரும் ஒத்துக் கொள்ளவேண்டிய உண்மை என்பதும், இன்னும் முன்னேற வேண்டும், இன்னும் திறம்படச் செய்ய வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு கிடையாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால் மற்ற மாநிலங்களிலே நடைபெறும் போக்குவரத்துத் துறையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நாம்

எவ்வளவோ முன்னேறியிருக்கிறோம் என்று நாம் திருப்திபடும் அளவுக்கு காரியங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நாட்டுடமையாக்கப்படும் பேருந்துகளைப்பற்றி விளக்கமாக சபையிலே சொல்லவேண்டிய அவசியமில்லை, ஏற்கெனவே 2, 3 ஆண்டுகளாக சட்டமன்றத்திலே விவாதம் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. திரு. ஜேம்ஸ் அவர்கள் கூறினார்கள் என்று கருதுகிறேன், இந்த ஆண்டு ஒரு வழித்தடம் மட்டும்தானே நாட்டுடமையாக்கப்பட்டது என்ற வினாவை எழுப்பினார்கள். நம்முடைய அரசினுடைய கொள்கை, 75 மைல்களுக்கு மேற்பட்ட வழித்தடங்களில் 'ரூட் பர்மிட் எகஸ்பயர்' ஆகும்பொழுது மேற்கொள்ள வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டிருப்பதால் இந்த ஆண்டு அப்படி ரூட் பர்மிட் எக்ஸ்பயர் ஆனது ஒன்றுதான். எனவே, அந்த ஒன்று நாட்டுடமையாக்கப்பட்டது. 1969 மார்ச் 31-ம் நாளுக்குள் 418 வழித்தடங்களை தமிழக அரசு மேற்கொண்டிருக்கிறது. 1969-70-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு வழித்தடத்தையும் சேர்த்து, 419 வழித்தடங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் அரசுக்கு நல்ல ஆலோசனைகளைக் கூறினார்கள். அரசு போக்குவரத்துத்துறை எந்த வகையில் செயல்பட்டால் இலாபகரமாக நடத்த முடியும் என்று பல பல கருத்துக்களைக் கூறினார்கள். அந்தக் கருத்துக்களுக்கு நான் நன்றி சொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். அவரும், அவரைப்போன்று நண்பர்களும் கூறிய மேலான ஆலோசனைகளைக் கொண்டு செயல்பட நாங்கள் மேற்கொள்வோம் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அவர்கள் சொன்னார்கள், இப்பொழுது பஸ் முதலாளிகள் தங்களுடைய பர்மிட்டுகளை விலை கூறுகிறார்கள், விலைக்கு விற்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைக் கூறினார்கள். மோட்டார் வெஹிகில்ஸ் ஆக்ட் செக்ஷன் 60(1) (ட)-ன் கீழ் அப்படி பர்மிட்டுகளை வியாபாரம் செய்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்க முடியும். ரூட் பர்மிட்டுகளைக் கேன்சல் செய்ய முடியும் என்று விதிமுறை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களுக்கு, ஏதாவது ஒரு பஸ் முதலாளி அப்படிச் செய்திருப்பதாக விவரம் இருந்தால், எங்களுக்குக் கொடுத்தால் நிச்சயமாக அதிகாரி மூலமாக நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

மற்றொரு கருத்தைச் சொன்னார்கள். திருச்சியிலே இருக்கும் டாக்சிகளில் மீட்டர்கள் பொருத்துவதை 5, 6 ஆண்டுகள் தள்ளி வைக்கவேண்டுமென்று கூறினார்கள். டாக்சி டிரைவர்களும், டாக்சி ஓனர்களும் பெரிதும் வரவேற்கத் தக்க முடிவாக இருந்தாலும்,





பொதுமக்களின் நலன்களையும் பார்க்க வேண்டியிருக்கிறது. டாக்சிக்காரர்கள் கூப்பிட்ட இடத்திற்கு வருவதில்லை என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. இந்த மன்றத்திலேயும் ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார்கள், சட்டமன்ற விடுதிக்குச் செல்ல அழைத்தும் வர மறுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். ஆகவே இப்படிப்பட்ட குறைபாடுகள் ஏற்படாமல் இருக்கும் முறையிலேயும், கட்டணங்களைப் பொறுத்த முறையிலேயும், டாக்சிகளுக்கு மீட்டர் பொருத்த வேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறது, அதை அமலுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் திருச்சியில் அதனால் பல கஷ்டங்கள் ஏற்படுவதாகத் திருச்சியைச் சேர்ந்த டாக்சி சொந்தக்காரர்களும், டிரைவர்களும் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்திருப்பதால் இந்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து 6 மாத காலத்திற்கு அதை அமல்படுத்துவதை நாங்கள் நிறுத்தி வைத்திருக்கிறோம். பிரச்சினைகளை பூரணமாக மறுபடியும் பரிசீலனை செய்து, முடிவுக்கு வர முடியும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அந்த முடிவிற்குத் துணையிருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களையும், திருச்சி நகரத்து டாக்சி சொந்தக்காரர்களையும், டிரைவர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய திரு. மணி அவர்கள் திருச்சி நகரத்திற்கு இன்னும் சில சைக்கிள் ரிக்‌ஷாக்களுக்கு அனுமதி தர வேண்டுமென்று சொன்னார்கள். சைக்கிள் ரிக்‌ஷாக்களைப் பொறுத்த வரையிலும், திருச்சியிலே எத்தனை சைக்கிள் ரிக்‌ஷாக்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்ற தடை ஏதும் கிடையாது. ஆனால் சைக்கிள் ரிக்‌ஷாக்களை அதிகப்படுத்தக் கூடாது என்பது ஒரு கொள்கையாக இருக்கிறது என்றாலும், திருச்சியைப் பொறுத்தவரையில், சைக்கிள் ரிக்‌ஷக்களைப் பொறுத்த வரையில் ஸீலிங் விதிக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் முயற்சியெடுத்துக் கொண்டால், அதிகாரிகளும் இன்னும் சில சைக்கிள் ரிக்‌ஷாக்களுக்கு அனுமதி தருவார்கள். அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து, கடன்களை சைக்கிள் ரிக்‌ஷாக்களுக்குக் கொடுக்கும் முறையை உருவாக்க முடியும் என்று குறிப்பிட்டிருப்பது பாராட்டத்தக்கது. அதில் அவர்கள் வெற்றிபெறுவார்கள் என்று நம்புகிறேன்.

நாட்டுடமைக் கொள்கை பற்றிப் பேசும்பொழுது இங்கு சில அங்கத்தினர்கள் சொன்னார்கள், 10 பஸ்களுக்குமேல் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும். எஸ்.ஆர்.வி.எஸ்., ஏபிடி., டிவிஸ்., போன்ற நிறுவனங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று. இன்றைக்கு அரசு ஏற்றுக் கொண்டிருக்கும் கொள்கை 75 மைல்களுக்கு மேற்பட்ட வழித்தடங்களை அரசுடமையாக்க வேண்டுமென்பது. அது இன்று நடைமுறைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. 75 மைல்களுக்குமேல் உள்ள ரூட்டுகளில் இரண்டாண்டு

காலம் வரை பல ரூட்டுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதை ஸ்டெபிலைஸ் செய்து, கன்சாலிடேட் செய்யும்வரை, அங்கத்தினர்கள் கூறிய கருத்துக்கள் இப்பொழுது பரிசிலனையில் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன். பின்னல் அது பற்றிய நிலை எப்படி ஏற்படுகிறதோ அப்பொழுது அதுபற்றி பரிசீலிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. கோவிந்தராஜன் அவர்கள் கூறினார்கள். சிறு ஆபரேட்டர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்பது கொள்கைதான். நமது அரசும் அதற்கு ஒரு நிலையிலே காரியங்களைச் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஆமனிபஸ்ஸைப்பற்றிப் பெரிய பிரச்னையாகப் பேசினார்கள். நான்கூட, திரு. காசிராமன் அவர்கள் தனியார் பஸ்ஸுக்கு டாக்ஸ் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லும் நேரத்தில், ஆம்னிபஸ் பற்றியும் சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர்கள் பேச்சில் அது சம்பந்தமாக ஆம்னிபஸ் பற்றிப் பேச்சு வராததால் கட்டணம் விதித்திருப்பது சரி என்று கருதுகிறார்கள் என்று நான் நம்புகிறேன். ஆம்னிபஸ் பின்பற்றும் முறைகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். அவர்கள் சொல்லிய மாதிரி செந்தில் டிரான்ஸ்போர்ட், பழனியப்பா டிரான்ஸ்போர்ட் போன்றவர்கள் இப்படி ஈடுபடுவதாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அரசாங்க அதிகாரிகளும் சில டிராவல் கம்பெனி மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். சட்டமன்றக் கருத்தின் அடிப்படையிலே, ஆம்னிபஸ் சொந்தக்காரர்களும் தனியார்துறை பஸ்களோடும், அரசாங்கத்துறை பஸ்களோடும் போட்டியாக அவர்கள் செயல்பட மாட்டார்கள் என்று நம்புகிறேன். அப்படிச் செயல்பட்டால் நிச்சயமாக சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நண்பர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். ஸ்டூடண்ட்ஸ் ஸ்பெஷலை நிறுத்திவிட்டதைப்பற்றி திரு. மார்டின் அவர்களும் பேசினார்கள். அதற்கான முறையில் பழையபடி ஆரம்பிக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். ஸ்டூடண்ட்ஸ் ஸ்பெஷல் பஸ்களைப்பற்றி பரிசீலிக்கப்பட்டு ஸ்டூடண்ட்ஸ் ஸ்பெஷல் தேவையில்லை என்ற அளவுக்கு, கல்லூரிகளுக்கே அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படும் விலையில் பஸ்களைக் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு, ஹிந்து நேஷனல் காலேஜ், குன்றத்தூருக்கு 3பஸ்களும், டெக்னிகல் எஜுகேஷன் இன்ஸ்டிடியூட், கிண்டி, இன்ஜினியரிங் காலேஜ், பி.பி.டி.-க்கு 3 பஸ்களும், பிரிசிடென்சி காலேஜுக்கு 2 பஸ்களும், சைனிக் ஸ்கூல், அமராவதிக்கு 1 பஸ்ஸும் ஆக 8 பஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் கோரிக்கைகள் வந்திருக்கின்றன.





Queen Mary's College-க்கு 2 பஸ்களும்
Government Arts College-க்கு 2 பஸ்களும்
Women's Arts College, North Madras-க்கு 1 பஸ்ஸும்
S.I.V.E.T. College, Gowriwakkam-க்கு 1 பஸ்ஸும்
Vaishnava College-க்கு 2 பஸ்களும்
A. C. College of Engineering, Karaikudi-க்கு 1 பஸ்ஸும்
Parasakti College, Courtallam-க்கு 1 பஸ்ஸும்

ஆக 10 பஸ்கள் கோரி, கல்லூரிகள் மூலம் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இந்த 10 பஸ்களும் அரசாங்கம் நிர்ணயித்த விலைக்குக் கொடுக்க உடனே உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மாணவர்களின் கோரிக்கைகளையும் இந்த அரசு கவனித்து செயல்பட்டுவரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் பஸ்கள் வேகமாகச் செல்லுவதுபற்றி சொன்னார்கள், கவர்னர்கள் போடவேண்டும் என்ற குறிப்பைச் சொன்னார்கள். நமது அரசு போக்குவரத்துத் துறை மூலமாக தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எக்ஸ்பிரஸ் 70 கிலோமீட்டர் பெர் ஹவர், மொபசில் பஸ் 50 கிலோ மீட்டர் பெர் ஹவர், சிடி பஸ் 40 கிலோ மீட்டர் பெர் ஹவர் என்ற அளவுக்கு வேகம் நிர்ணயம் செய்யப்பட்டு, இன்று செயல்பட்டுவருகிறது. எனவே, இதைப்பற்றி அதிகமான அளவுக்கு பிரச்னை இல்லை என்றே நான் நினைக்கிறேன்.

பஸ்களைப் பற்றி பேசும்பொழுது அரசு பஸ்கள் சரியான முறையில் பராமரிக்கப்படவில்லை, சுத்தமாக வைக்கப்படவில்லை என்று பலவித குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டன. நம்முடைய நண்பர் கோவிந்தராஜன் அவர்கள் தொழிற்சங்கத்தில் ஈடுபாடு கொண்டவர்கள். தொழிலாளர்களின் பிரச்னைகளில் அக்கரை கொண்டவர்கள். அவர்கள் சொன்ன குறிப்பைப்பற்றி நான் நம்முடைய அதிகாரிகளிடம் விவரங்கள் கேட்டிருந்தேன். அவர்கள் சொன்னமாதிரி 40 பஸ்களுக்கு இரண்டு கிளீனர்கள் இல்லை. 10 பஸ்களுக்கு இரண்டு கிளீனர்கள் சுத்தம் செய்வதற்காக நியமிக்கப்பட்டு, வேலைகள் நடைபெறுகின்றன. இவைகளையெல்லாம் செய்தால் மட்டும் சுத்தம் ஏற்பட்டு விடாது. தொழிலாளர்களிடையே மனமாற்றம் ஏற்படவேண்டும், தொழிற் சங்கத் தலைவர்கள் மிக அதிகமாக ஒத்துழைப்பைத் தரவேண்டும், மக்களுடைய பாராட்டைப் பெறவேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்கு பயன்தரத்தக்க அளவில் செயல்படலாம், தொழிலாளர்களுடைய குறைகள் அகற்றப்பட்டு அவர்கள் நல்ல முறையில் முன்னேறுவதற்கான சூழ்நிலை ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்துத் துறை டயர் ரீட்ரிடிங்க்காக டயர்களை தனியார் ஸ்தாபனத்திற்குக் கொடுத்து வருவதாக திரு. கோவிந்தராஜன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி தனியார் ஸ்தாபனங்களுக்கு கொடுக்கப்படவில்லை. நமது அரசுத் துறையின் மூலம் தான் வேலைகள் நடைபெறுகின்றன. We have two plants for retreading, one in Madras and another in Nagercoil அரசுத் துறை மூலமாகத்தான் ரீட்ரிடிங் செய்யப்பட்டு வருகிறது.

நண்பர் திரு. போஜன் அவர்கள் 25 பைசா கொடுத்து முன்கூட்டியே டோகன் பெறுகிறோம், இடமில்லாவிட்டால் அந்தப் பணத்தையாவது திருப்பிக் கொடுத்து விடுவார்களா என்றெல்லாம் குறைப்பட்டுக் கொண்டார். நண்பர் போஜன் அவர்களுக்கு அந்தக் கஷ்டம் இருக்காது. அவர்கள் வசதியுள்ளவர்கள். இருபத்தைந்து பைசா இல்லை, 50 பைசா வேண்டுமானாலும் கொடுத்து விடுவார்கள். மற்றவர்களுக்காகத்தான் வாதாடுகிறார்கள். ஆனால், இப்படி ஒரு முறை ஏற்படுத்துவதன் மூலமாக எந்த இடத்திலே ரிசர்வேஷன் செய்ய முடியாதோ அந்த ஸ்டேஷன்களில்தான் இப்படி பிரையாரிடி கொடுப்பதற்காக டோகன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இப்படி டோகன்கள் கொடுப்பதினால் அந்த பஸ்களில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்கு வசதியை ஏற்படுத்த முடியும் என்ற அடிப்படையில் இந்த முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படி . பெறக்கூடிய 25 காசு காஸ்டு ஆஃப் ஸ்டாஃப் அண்டு ஸ்டேஷனரி, இம்மாதிரி சில்லரை செலவுகளுக்காகத்தான் உபயோகப்படுத்தப்படுகிறதே தவிர, வேறு அல்ல. எனவே, இந்தப் பிரச்சினையை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் போஜன் அவர்கள் வலியுறுத்த மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் பேசும் பொழுது வழித்தடங்களை குறுகிய பாதைகளாக, ஷார்டெண்டு ரூட்களாக செய்வதற்கான முயற்சி எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அதற்கான முயற்சிகளை நம்முடைய இலாகா எடுத்து வருகிறது. சென்னை-தஞ்சாவூரைப் பொறுத்த வரையில், முதலில் பாண்டிச்சேரி வழியாக சென்னையிலிருந்து சென்றுகொண்டிருந்த வழித்தடம் இப்பொழுது வேறு வழியாக சற்று சுருக்கமான வழியில் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்து, அதைப்போல இப்பொழுது பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இது போன்ற பிரச்னைகளையெல்லாம் நம்முடைய அரசு கவனித்து, நடவடிக்கை எடுத்துக்கொண்டுவரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு பஸ்ஸுக்கும் ஹிஸ்டரி ஷீட் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். ஹிஸ்டரி ஷீட் இப்பொழுது வைக்கப்பட்டிருக்கிறது. எப்பொழுது மேஜர் ரிப்பேர் செய்யப்



பட்டது என்பதற்கெல்லாம் ஹிஸ்டரி ஷீட் வைக்கப்பட்டு அந்த முறையில்தான் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதைப்பற்றி அவசியமான நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் சிலர் முக்கியமான ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த நிறுவனம் மிகப் பெரிய அளவில் இருப்பதால். நிர்வாக வசதி குறைவாக இருக்கிறது, ரீஜனல் பேஸிஸில் பிரிக்கப்படவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். நான் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு நமது முதல் அமைச்சர் அவர்களின் அனுமதியுடன் இது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ரீஜன் வாரியாக தமிழ் நாடு முழுவதும் சில ரீஜன்களாக பிரிக்கப்பட்டு, நிர்வாகத்திற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் கூட சில பகுதிகளாக, ரீஜன் வாரியாக பிரிக்கப்பட்டு, நிர்வாக வசதிகளுக்கு ஏற்பாடு செய்யலாம் என்பது பற்றியும் ஆலோசித்து வருகிறோம். நம்முடைய இலகாவின் [illegible] மூலமும, இயக்குநர் மூலமும் இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அந்தத் திட்டம் எந்த அளவுக்குப் பயன் தரும் என்பது பற்றி அரசு முடிவெடுத்த பிறகு, இது நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

61484

மாண்புமிகு உறுப்பினர் ஆசைத்தம்பி அவர்கள் டாக்சிக்கு அனுமதி தருவது குறிப்பிட்டவர்களுக்குத் தான் தரவேண்டும், சொந்தக்காரர்—டிரைவர் என்ற அளவுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். இப்பொழுதும் சில விதிமுறைகளின்படி டாக்ஸி பெர்மிட்கள் கொடுக்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லவேண்டுமென்றால், டாக்ஸி டிரைவருக்கு இடம் தெரியாமல் சரியான இடத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பதில்லை என்று குற்றச்சாட்டை சுமத்தினார்கள்.

அதற்கான விதிமுறைகள் இருக்கின்றன. மெட்ராஸ் மோட்டார் வெஹிகில்ஸ் ரூல்ஸ் 5ஸி-யின்படி அவர்களை பரீட்சித்துப் பார்த்து அனுமதி கொடுப்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. டாக்ஸி பெர்மிட்கள் கொடுப்பதற்கு முன்னால் அந்த விதிமுறைகளை உபயோகப்படுத்தி, சென்னையில் ஒவ்வொரு பகுதியும் எங்கே இருக்கிறது என்று கேட்டு ஒரு பரீட்சை வைத்துக் கொடுப்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. பரீட்சை வைத்தால் எவ்வளவு பேர்கள் அதில் தேர்ச்சி பெறுவார்கள் என்று நம்மால் சொல்ல முடியாது. ஆனால், சென்னையில் இருக்கிற எல்லா இடங்களையும் யாரும் தெரிந்துவைத்திருக்க முடியாது. அனுபவாயிலாகத்தான் அம்மாதிரி அறிவைப் பெறமுடியும். எனவே, இந்த விதிமுறைகள் ஏற்கனவே இருக்கிற காரணத்தினால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தை, இப்பொழுது ஒரு

குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம் பெர்மிட் கொடுக்கவேண்டும் என்ற முறையை ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக நோ-பார்கிங் ஸ்டேஷன்களைப் பற்றி சொன்னார்கள். அது கவனிக்கப்படவேண்டிய ஒரு முக்கியமான பிரச்னை. நெரிசலான பகுதிகளில் தான் விரும்பிய இடங்களி லெல்லாம் கார்களை நிறுத்துவதனால் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுகிறது என்ற காரணத்தினால், நிச்சயம் அது செயல்படுத்த வேண்டிய திட்டம் என்பதை ஒத்துக்கொள்கிறேன். உறுப்பினர் ஆசைத்தம்பி அவர்கள் கூறிய கருத்து பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். டாக்ஸி கட்டணங்களை உயர்த்தவேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அது மக்களால் எந்த அளவுக்கு வரவேற்கப்படும் என்பது என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அது கொள்கை அளவிலே பரிசிலிக்கப்படவேண்டிய ஒன்று. அந்த அளவுக்கு அதையும் பரிசீலிப்பதாகத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பம்பாயிலுள்ள ஒரு திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் ஆசைத்தம்பி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு குறிப்பிட்டவர் களுக்கு மாத்திரம் இப்படி அனுமதி கொடுப்பதன் மூலம் அவர்கள் சொந்தக்காரர்களாக மாறுகிற நல்ல வாய்ப்பு பம்பாயில் இருப்ப தாகக் குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய அரசு அதைப்பற்றியும் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஆசைத்தம்பி அவர்களுடைய எண்ணம் அரசாங்க உடைமையாக்கப்பட்ட பாங்குகள் மூலம் கடன் தொகையைப் பெற்று, அந்தக் கடன் தொகையின் மூலம் டாக்ஸி வாங்கி, டாக்ஸி டிரைவர்களை சொந்தக்காரர்களாக ஆக்க வேண்டுமென்பது. அந்த திட்டம் உள்ளபடியே பாராட்டத்தக்க திட்டமாகும். அந்த திட்டத்திற்கு நம்முடைய அரசு துணையாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர் மாண்புமிகு தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் தனியார் துறைக்குப் பாதுகாப்பாகத் தான் பல கருத்துகளைச் சொன்னார்கள். அவர்களுடைய புதிய காங்கிரஸ் கொள்கை அதுதானோ என்னவோ எனக்குத் தெரியாது. தனியார் பஸ்களைப்பற்றி, விதிக்கப்பட்டிருக்கிற கட்டண உயர்வு, அதனால் பாதிக்கப்பட்டு ஏற்படுகிற பெரிய கஷ்டம் இவைகளைப்பற்றி யெல்லாம் கொன்னார்கள்.

ஆனால் இப்போது நம்முடைய அரசு விதித்திருக்கிற உயர்வுக் கட்டணம் மூலமாக 1½ கோடி ரூபாய்க்கு வருமானம் வருகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். திரு. ஜேம்ஸ் அவர்கள், இந்தக் கட்டண உயர்வை சட்டமன்றத்தில் கொண்டு வராமல் உயர்த்தியிருப்பது சரியல்ல, அது சட்டமன்றத்தை அவமதிப்ப





தாகாதா என்றெல்லாம் கேட்டார்கள். இந்த உயர்வை விதித்த நேரத்தில் சட்டமன்றம் கூடவில்லையென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பட்ஜெட் சமர்ப்பிப்பதற்கு முன்னாலே கட்டண உயர்வுகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. சட்டமன்றத்தில் இதைத் தெரிவிக்க வேண்டிய காலகட்டம் ஏற்படாத காரணத்தால்தான் இது செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, உறுப்பினர் அவர்கள் தவறாக கருதிக் கொள்ள வேண்டாமென்று தெரிவித்துக்கொள் கிறேன்.

இப்போது ஸ்பேர் பார்ட்ஸ் கட்டண விகிதங்கள்பற்றிப் பேசப் பட்டது. இதற்காக நோட்டிபிகேஷன் வெளியிட்டிருக்கிறோம். ஆட்சேபணைகள் கேட்கப்பட்டிருக்கின்றன. பல பஸ் முதலாளிகள் உள்துறை செயலாளரிடத்தில் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார்கள். விரைவில் இதற்கு ஒரு நல்ல முடிவு எடுக்க இருக்கிறோம்.

அடுத்து திரு. டி. மார்டின் அவர்கள் சில ரூட்டுகள் கைவிடப் பட்டுவிட்டன, அவைகளை மறுபடியும் துவங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதைப்பற்றிய குறிப்புக்களை நம்முடைய இயக்குநரிடத்தில் கேட்டதற்கு ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறார். அதற்கான காரணங்களைச் சொல்லியிருக்கிறார். அவர் கொடுத்த குறிப்பை அப்படியே படித்துவிடலாம் என்றிருக்கிறேன்.

5-A has been merged with 5. Number of trips have been increa- sed in 5.

5-A used to start from Abhiramapuram. During peak hours, buses are still started from Abhiramapuram. 12-D. In view of abolition of this No., the number of buses in 12-B were increased. Course 12-D was similar to 12-B up to Mandavaili but started from Kodambakkam railway station when the over-bridge was under construction. Now we have added more buses on 12-B and 12-E. The route was shortened and the fare from Mylapore to Vadapa- lani was reduced by 10P.

12-G route bus is along route Vadapalani—Tiruvanmiyur. When we gathered data, we found that there was no through traffic of adequate amount. The earnings were very low and hence this was cancelled.

என்றாலும், தேவை இப்போது இருந்தாலும், அதற்குத் தகுந்த அளவிற்குப் பிரயாணிகள் வருவார்களானால் மறுபடியும் இந்த ரூட்டுகளில் பஸ்களை விடுவதற்குப் பரிசீலனை செய்வதற்கு எங்க ளுக்கு ஆட்சேபம் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசுடைமையாக்கப்பட்ட பஸ்களிலே நஷ்டம் அதிகம் என்று ஒரு சாராரும், இன்னொரு சாரார் நஷ்டம் இருந்தாலும் பப்ளிக் யுடிலிடி சர்வீஸ் என்ற நிலையில் இதைப் பொருட்படுத்தக்கூடாது என்றும் சொல்கிறார்கள். அரசாங்கம் இந்த இருவிதக் கருத்து களையும் கவனத்தில்கொண்டு தன் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது அரசுடைமையாக்குவதில்

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1970 மார்ச் 21

நஷ்டம் தான் ஏற்படும் என்று தெரிந்தும்கூட அந்தப் பஸ்களை விடுவது எந்த அளவிற்குச் சரி என்று புரிந்துகொள்ள முடியவில்லை. பஸ் போக்குவரத்துப் பிரயாணிகள் பெருமளவுக்கு இருப்பார்களானால், நஷ்டம் ஏற்பட்டாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே சென்னைமாநகரைப் பொறுத்தவரையிலே இந்தக் காரியங்கள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர்மட்டக் குழுவைப்பற்றி இங்கே கருத்து தெரிவித்தார்கள். உயர்மட்டக்குழுவின் அறிக்கையிலுள்ள சில முக்கியமான பகுதிகளை ஏற்கெனவே அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது, குறிப்பாக,

High Power Committee recommendations regarding Bata, night allowance; stitching charges for clerks and shroffs.

பேட்டா 1.35-லிருந்து 2 ரூபாய் ஆகியிருக்கிறது. நைட் அலவன்ஸ் ஒரு ரூபாயில் இருந்து 2 ரூபாய் ஆகியிருக்கிறது. இப்படியே ஸ்டிச்சிங் சார்ஜும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலமாக மட்டும் நம்முடைய இலாகாவுக்கு 26 லட்சம் ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு செலவு ஏற்படுகிறது. இந்த ஆண்டு மட்டும் 13 லட்சம் ரூபாய் அளவிற்கு செலவு ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, நம்முடைய நண்பர் திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள், தனியார் பஸ்களை அரசுடைமையாக்கும், நேரத்தில், அந்த நிறுவனங்களில் வேலை செய்துவந்த தொழிலாளர்களை அரசு வேலைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடாதா? ஓராண்டுக்கு மேலாகியும் இன்னும் சிலர் எடுக்கப்படாமல் இருக்கிறார்களே என்று மிகவும் அக்கறையோடு, கனிவோடு கேட்டார்கள். கனம் உறுப்பினருக்கு இருக்கின்ற அக்கறையைக்காட்டிலும் இவர்கள் விஷயத்தில் இந்த அரசுக்கு இருக்கின்ற அக்கறை குறைந்துவிடவில்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். சில நேரங்களில் தனியார் பஸ்களை அரசுடைமையாக்கும் நேரத்தில் அந்த முதலாளிகள் தவறான தகவல்களைத் தந்துவிடுகிறார்கள். அவர்கள் கொடுத்த தகவல் சரியானது என்று அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. சிலசமயங்களில் முதலாளிகள் வேண்டுமென்றே சிலரைச் சேர்த்து இவர்கள் எல்லாம் எங்கள் நிறுவனத்தில் வேலைசெய்து வந்தார்கள் என்று கணக்கைக் கொடுத்துவிடுகின்றனர். ஆகவே, அவர்கள் எல்லோரையும் அரசு வேலைக்கு எடுத்துக்கொள்ளும்போது, அந்த நிறுவனம் கொடுத்த தகவல் சரிதானா என்பதையெல்லாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் சில இடங்களில் தாமதமாகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரையில் சென்னை நகரத்தில் உள்ள பிரிவில் 97 டிரைவர்கள், 295 கண்டக்டர்கள், 119 டெக்னிகல் ஸ்டாஃபுகள் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல கன்னியாகுமரி பிராஞ்சில் 148 டிரைவர்கள், 167 கண்டக்டர்கள், 179 டெக்னிகல் ஸ்டாஃப்புகள் அரசுத் துறையிலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். யாரோ நம்



1970 மார்ச் 21] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

முடைய உறுப்பினருக்குத் தவறான தகவல் கொடுத்திருக்கிறார்கள். அப்படி உறுப்பினர் அவர்களுடைய தகவல் சரியாக இருக்குமானால் நிச்சயமாக அந்தக் குறையைப் போக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, கன்னியாகுமரியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. எம். சி. பாலன் அவர்கள் டிக்கெட் கொடுப்பதைப்பற்றிச் சொன்னார்கள். மேலும், காலதாமதம், விரயம் என்பவற்றையெல்லாம் சொன்னார்கள். அதற்காகத்தான் அரசுத் துறையின் மூலமாகவே டிக்கெட்டை அச்சடிப்பதற்கான நடவடிக்கைகளை போக்குவரத்துத்துறையின் மூலமாகச் செய்யலாமா, அல்லது அரசாங்க அச்சகத்திலே டிக்கெட்டுகளை அச்சடிக்கின்ற காரியத்தைச் செய்யலாமா என்பதை ஆலோசித்து வருகிறோம். பல டிக்கெட்டுகளைக் கொடுக்காமல் ஒரு இடத்திற்கு குறிப்பிட்ட டிக்கெட்டுகளைக் கொடுக்கலாமா என்பதைப்பற்றியும் பரிசீலித்து வருகிறோம்.

அடுத்து கன்னியாகுமரியில் இருக்கிற அரசாங்கப் போக்குவரத்துத் துறையிலே ஒரு ஜாயின்ட் டைரக்டராக நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னார்கள். அதற்கான முடிவை விரைவில் செய்ய இருக்கிறோம். இந்தக் கோரிக்கையையும் கவனத்தில் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து திரு. காசிராமன் அவர்கள் பஸ்ஸிலே டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்துவிட்டால் எந்த இடத்திலிருந்து கட்டணம் வசூலிப்பது என்று கேட்டார்கள். பஸ்ஸில் சில நேரங்களில் அதிகமான எண்ணிக்கை இருக்கின்ற காரணத்தாலே கண்டக்டர் எல்லோருக்கும் டிக்கெட் கொடுக்காமல் இருந்திருக்க முடியும். அல்லது நம்முடைய நண்பரைப்போன்றவர்கள் டிக்கெட் வாங்க மறதியாக இருந்துவிட்டிருக்கலாம். புறப்பட்ட இடத்திலிருந்து டிக்கெட் கேட்டால் நாளைக்கே இங்கே வந்து என்னய்யா, பத்து பைசாவுக்கு டிக்கெட் வாங்காவிட்டால் என்ன, பத்து பைசா கட்டணத்திற்கு முழுவதும் வசூலிக்கிறார்களே என்று சொல்லலாம். டிக்கெட் வாங்காவிட்டால் கிரிமினல் நடவடிக்கை எடுக்கலாம் என்று இருக்கிறது. ஆகவே, எப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றியெல்லாம் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து, ஸ்பேர் பஸ்களுக்கு டாக்ஸ் விதிப்பதைப்பற்றி திரு. காசிராமன் அவர்கள் சொன்னார்கள். சில பஸ் சொந்தக்காரர்கள் ஸ்பேர் பஸ்களை ஆம்னி பஸ்களாகவும், உபயோகிக்கிறார்கள். சில முதலாளிகள் அவற்றை ரெகுலர் பஸ்களாகவும் ஓட்டுகிறார்கள். சில இடங்களில் ஆம்னி பஸ்களில் டிக்கெட் உபயோகித்து ஆட்களை ஏற்றிச்செல்கிறார்கள். ஸ்பேர் பஸ்களை ரெகுலர் ரூட்களில் விடக்கூடிய நிலைமை என் மாவட்டத்தில் கூட

நடைபெற்றுவருகிறது. ஆகவே, அவற்றையெல்லாம் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதிகூற விரும்புகிறேன். மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களுக்கு, நான் விடையளிக்காத, பதில் அளிக்காத பிரச்சினையாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

இரண்டு விதத்திலே இரண்டு பிரச்சினைகளை பொதுமக்களுக்குப் பயன்படுகிற அளவிற்குச் செய்ய வேண்டியிருக்கிறது. பப்ளிக் யுடிலிடி என்கிற முறையில் இதைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதே சமயத்தில் அதில் வருகின்ற நஷ்டத்தையும் தவிர்க்க வேண்டியிருக்கிறது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதுடன், தொழிலாளர் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் இந்த அரசு மிக்க அனுதாபத்துடன் கவனிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய நண்பர் காசிராமன் அவர்கள் கூட தொழிலாளர்களுக்குப் பரிந்து பேசினார்கள். சில முதலாளிகள் பிராவிடெண்ட் பண்டு தொகையைக் கூட செலுத்துவதில்லை என்றார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அதற்கான நடவடிக்கை எடுக்கலாம். கலெக்டர் அவர்களுக்குக்கூட ரெவின்யூ ரெக்கவரி ஆக்டு மூலம் வசூலிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே, தொழிலாளர் களுக்கான காரியத்தையும் நல்ல முறையில் நடத்தப்படும்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் அட்வைஸரி போர்டிலே தொழிலாளர் சார்பாக ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்று சொன்னார்கள். அது நியாயமான கோரிக்கை என்று கருதுகிறேன். அதையும் நமது அரசு பரிசீலிக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் குமாரசாமி அவர்கள் தார் ரோடு இல்லாத இடங்களிலெல்லாம் பஸ்கள் போகின்றன என்றார். நான் பொதுப்பணித்துறை மூலமாக புள்ளிவிவரம் தயாரித்து தரச் சொல்லிப் பார்த்தேன் இந்த ரோடுகளையெல்லாம் அப்கிரேடு செய்தால் என்ன செலவாகும் என்று கேட்டபோது தலைமைப் பொறியாளர் அவர்கள் சொன்னார்கள், தமிழ் நாட்டில் பஸ் போகின்ற ரோடுகளையெல்லாம் மேம்படுத்துவதற்கு நூறு கோடி ரூபாய் வேண்டுமென்று. நூறு கோடி ரூபாய் சாத்தியமா என்று இப்போது என்னால் சொல்ல முடியவில்லை. ஆனாலும் ஒரு பேஸ்டு ப்ரொக்ராம் என்ற அளவிற்கு காரியம் செய்வதற்கான திட்டமும் உருவாக்கப்பட்டு இருக்கிறது. ஆனாலும் பஸ் போகின்ற ரோடு சரியான அளவு நிலையிலே இருக்கிறதா, பஸ் போக முடியுமா என்றெல்லாம் சர்ட்டிபிகேட்டு டி.யி. இடத்திலே வாங்கி விட்டுத்தான் அந்த ரூட்டுக்கான அனுமதி தருகிறோம். எனவே குறைபாடு இருப்பதாகத் தெரியவில்லை, இருக்கிற குறைபாடுகளையெல்லாம்



என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் விரும்பும் இடத்திற்கு எல்லாம் பஸ் போகவேண்டும் என்று அந்த ரோடு பஸ் போகிற அளவிற்கு இல்லாவிட்டாலும் பல நிர்ப்பந்தங்களைச் செய்து பெர்மிஷன் கொடுக்கும்படிச் செய்கிறார்கள். அதை செய்யாமல் இருந்தால் நிச்சயமாக இதுபோன்ற காரியங்கள் நடைமுறையிலே நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனவே இந்த அளவிற்கு என் கருத்துக்களைச் சொல்லுவதற்கு வாய்ப்பினை தந்ததற்கு நன்றிகூறி இங்கே கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணைகளை என்மீது கொண்டுள்ள நம்பிக்கையின் காரணமாகவும் நான் கொடுத்த வாதத்திலே திருப்தி அடைந்தோம் என்ற முறையிலேயும் வாபஸ் வாங்கிக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஏகமனதாக நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THIRU K. VINAYAKAM : On a point of clarification, Sir. I have moved a cut motion. I was not given an opportunity to speak. I will elicit information. It will not take more than two minutes.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படியென்றால் கட் மோஷன் மூவ் பண்ணுகிறவர்களுக்கு எல்லாம் பேச அவகாசம் கொடுத்துக் கொண்டு இருக்க முடியுமா?

THIRU K. VINAYAKAM : Be kind enough to listen to me. This is a point which has not been covered by the Minister and not touched by any member. You will appreciate it.

**மாண்புமிகு பேரவைத்தலைவர் :** விடை கூடாது என்று அல்ல. உறுப்பினர் தங்கள் மனதிலே இருக்கின்ற கருத்துக்களுக்கு அமைச்சர் விடை அளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது.

THIRU K. VINAYAKAM : My cut motion speaks to that effect.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** இது வரையிலே யாரும் பேசாததை சொல்லக்கூடாது. 'பாயிண்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன்' என்றால் அமைச்சர் பேசியதிலே விளக்கம் பெறத்தான் பேசலாம். புதிய கருத்துக்களைச் சொல்ல இது நேரம் அல்ல. அமைச்சர் விடை அளித்ததற்குப் பிறகு ஒருவர் பேசுவதற்கு உரிமை கிடையாது.

**திரு. கே. விநாயகம் :** ரூல்ஸ் அப்படி ஒன்றும் காணோமே? ரூல்லைக் காட்டுங்கள். அமைச்சர் பேசிய பிறகு ஒரு அங்கத்தினரும் விளக்கம் கேட்கக்கூடாது என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் கேட்கக் கூடாது என்று அல்ல. புதிய கருத்துக்களைப் பேசக்கூடாது.

[1970 மார்ச் 21

**திரு. கே. விநாயகம்:** தயவு செய்து கன்வென்ஷனைப் ஃபாலோ பண்ணுங்கள்.

I have always a right to ask for information always. You please refer to the rule. Show me the rule that says that elucidation on a new point is impossible.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் என்ன சொன்னேன் என்பதை விநாயகம் அவர்கள் பொறுமையோடு சிந்திக்க வேண்டும். நான் என்ன சொன்னேன்? விளக்கம் தரக்கூடாது என்று சொல்லவில்லை. புதிய கருத்துக்களைப் பற்றிப் பேசக் கூடாது. புதிய கருத்தை அமைச்சர் பேசிய பிறகு மற்ற உறுப்பினர் எழுந்து பேசுவதற்கு இடம் இல்லை. வேண்டுமானால் விளக்கம் பெறுவதற்கு ஓரிரு கேள்விகளைக் கேட்க அனுமதிக்கலாம். எதிர்க்கட்சித் தலைவர் பேசிய பிறகே மற்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு இடம் தரக்கூடாது என்ற மரபை வைத்துக்கொண்டு இருக்கிறோம். அப்படி இருக்கும்போது அமைச்சர் அவர்கள் விடை அளித்த பிறகு உறுப்பினர்கள் பேசுவது கூடாது.

**திரு. கே. விநாயகம்:** நான் ட்ரிப்யூட் கொடுக்கப் போகிறேன்.

தயவு செய்து பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

ஸார், அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபோது இது மாதிரி போக்குவரத்து தடங்களை நாம் தேசிய மயமாக்கும்போது பொதுவாக தனிப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டால் அதை எடுத்து கொண்ட பிறகு அவர்களுக்கு மாற்றுத் தடம் தருகிறேன் என்று சொன்னார்கள். அப்பொழுது பொறுப்பிலே இருந்த கருணாநிதி அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி ஒன்றும் சிந்திக்கவேயில்லை. செங்கற்பட்டு மாவட்டத்திலே இருக்கிற பஸ் ஆப்பரேட்டர்கள்தான் இதன் விளைவாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களைப் பற்றி கவலைப் படாமல் ஒன்றும் செய்யவில்லையே? இது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இனியாகிலும் அதைப் பற்றி கவனிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா? இது வரையிலே செங்கற்பட்டு மாவட்டத்தைச் சார்ந்த பஸ் முதலாளிகள் பாதிக்கப்பட்ட பல பேர் ஓட்டாண்டிகளாகப் போய்விட்டார்கள். அவர்கள் மனு போடும்போது அனுதாபத்தோடு சிந்திப்பதற்காக, யோசிப்பதற்காக வழி செய்யவில்லையே? இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் என்ன நினைக்கிறார்? அமைச்சர் அவை என்ன நினைக்கிறது? ஒரு வேளை கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் விட்டு விட்டோம் என்று சொல்லுங்கள் விட்டு விடுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விநாயகம் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் சொல்லுகிறேன் விளக்கம் பெறுவதற்கு கேள்வி கேட்கலாமே தவிர புதுக்கருத்தைப் பேசக் கூடாது. விநாயகம் அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்து இருந்தார். அவருடைய



1970 மார்ச் 21] [பேரவைத் தலைவர்]

கருத்துக்களை அவர் தாப்பிலே பேசிய உறுப்பினர்களிடம் கொடுத்து பேசச் சொல்லியிருக்கலாம். அல்லது தானே பேசியிருக்கலாம். வெட்டுத் தீர்மானம் கொடுத்த விநாயகம் அவர்கள் தன் கட்சித் தலைவர் அவர்களிடத்திலே போராடி நேரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்திருக்கவேண்டும். உங்களுடைய கட்சித் தலைவரிடத்திலே உரிமை பெறுவதற்கு பேரவைத் தலைவர் குறுக்கே நிற்கமாட்டார். இதைவிட்டு விட்டு இப்படி செய்வது முறையல்ல.

THIRU K. VINAYAKAM: That is all wrong. There is no such rule.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீண்டும் சொல்லுகிறேன், இன்ஃபர்மேஷன் கேட்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் புதிய கருத்தைக் கூறுவதற்கு இடமில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பேரவைத் தலைவர் அனுமதியோடு மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் எழுப்பிய பிரச்சனைக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு உறுப்பினர் விநாயகம் அவர்களுக்கு முழுவதும் தெரியும். அவர்கள் பஸ் தடங்களை எடுத்துக் கொள்ளும்போது மாற்றுத் தடங்கள் தருவதாக அரசாங்கம் ஒப்புதல், பிராமிஸ் செய்ததாகக் கூறுகிறார்கள். அப்படி பிராமிஸ் ஒன்றும் செய்ததாக இல்லை. இது பற்றி விவாதிக்கப்பட்டதே தவிர வேறு அல்ல. அப்படி தங்களுக்கு வாக்குறுதி அளித்து இருப்பதாக அந்த உரிமையாளர்கள் பஸ் சொந்தக்காரர்கள் ஹைகோர்ட்டு வரையில் சென்றது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். உயர் நீதி மன்றத்திலே போய் வாக்குறுதி கொடுக்கப்படவில்லை, ஆல்டர்னேடிவ் பஸ் ரூட் கொடுப்பதாக வாக்குறுதி இல்லை என்று அவர்களே சொல்லிவிட்டார்கள். எனவே இப்போது அந்தப் பிரச்சனைக்கு இடம் இல்லை. இப்போது ஆல்டர்னேடிவ் ரூட்டுகளைக் கொடுப்பதாக இல்லை. 75 மைலுக்கு மேற்பட்ட பஸ் தடங்களைத்தான் பெர்மிட் எக்ஸ்பையர் ஆனபிறகுதான் எடுக்கப்படுகிறது. எனவே அதற்கான தேவையே இல்லை.

**திரு நா. காசிராமன்:** தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆம்னி பஸ்களுக்கும் ஸ்பேர் பஸ்களுக்கும் உண்டான கண்டிஷன்கள் வெவ்வேறானவை. ஸ்பேர் பஸ்களுக்கு டிபார்ட்மெண்டிலே அதிகாரிகளால் பெர்மிட்டுகள் கொடுக்கப்பட்டால்தான் போக முடியும். அல்லது ரூட் பஸ்களுக்கு பதிலாக போக முடியும். ஆனால் ஆம்னி பஸ்கள் எங்கே வேண்டுமானாலும் போகலாம். இந்த வித்தியாசம் இருக்கிற காரணத்தினாலே ஆம்னி பஸ்களால் ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட்டுக்கு ஏற்படுகிற நஷ்டம் அதிகமாக இருக்கிறது என்பதை கருத்தில்

[திரு. நா. காசிராமன்] [1970 மார்ச் 21

கொண்டு ஸ்பேர் பஸ்களுக்கும் ஆம்னி பஸ்களுக்கும் உண்டான பெர்மிட் கண்டிஷன்களை உள்ளது உள்ளபடியே அமுல் நடத்த அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன். அதோடு [redacted]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சொன்ன ஒவ்வொரு கருத்துக்கும் அமைச்சரிடம் விடை பெற வேண்டும் என்று எதிர் பார்க்கக்கூடாது. ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன், நமது உறுப்பினர்கள் எல்லாம், "நான் சொல்லிய கருத்து ஒவ்வொன்றுக்கும் விடை அளிக்கவில்லையே, நான் அதை சொன்னேனே அதைப் பற்றிய கருத்து என்ன, அமைச்சரின் கருத்து என்ன?" என்று கேட்பதற்கு இது நேரம் இல்லை. அதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே தெளிவாகவே தீர்ப்பு அளித்து இருக்கிறேன். இதற்கு முன்பு அப்படிப்பட்ட முயற்சி செய்யும் போதெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறேன். எனவே, விவாதம் முடிவு பெற்றது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இன்றைய விவாதத்தை வைண்டப் பண்ணியது திரு. காசிராமன் அவர்கள். நான் ஒரு சிறு விளக்கம் கோருகிறேன்.

இதற்கு முன்னால் இருந்த போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இத்துறையில் 2 கோடி லாபம் சம்பாதித்துத்தருவதாக முதல் அமைச்சரிடம் இரகசியமாகக் கூறினாராமே, அந்த இரகசியத்தை இந்த அமைச்சருக்கும் சொல்லிக் கொடுத்தாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. கோவிந்தராஜன்:** இந்தத்துறையில் பணிபுரியக் கூடியவர்கள் இண்டஸ்ட்ரியல் வொர்க்கர்ஸ். அவர்களுக்குத் தொழில் துறை சட்டங்கள் பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் புதியதாக இன்னொரு கருத்தை சொல்லக்கூடாது.

**திரு. சி. கோவிந்தராஜன் :** ஹைபவர் கமிட்டி ஏற்படுத்தப் பட்டது. அது கொடுத்த தீர்ப்பில் பேட்டாவை மட்டும் அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டு, சம்பளத்தைப் பொறுத்தவரை என்.ஜி.ஓ.-க்களோடு சேர்த்து பே கமிஷன் முடிவிற்கு விட்டிருப்பது சரியல்ல. இதை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. திரு. ரா. கனகசபை, திரு. ஆ. கு. சுப்பையா, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.



1970 மார்ச் 21]

திரு. சி. கோவிந்தராஜன், திரு. க. இராமமூர்த்தி, திரு. கே. என். குமாரசுவாமி, திரு. ஏ. அ. சுப்பராஜா ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவை அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன் உள்ள கேள்வி:

"நிதிக்கோரிக்கை எண் 2—மோட்டார் வண்டிச் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 35,30,300க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 30-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த திரு. கே. விநயகம், திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. சோ. அழகர்சாமி, திரு. கே. போஜன், திரு. என். வரதராஜன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி. "நிதிக் கோரிக்கை எண் 30—சாலைப் போக்குவரத்துத் திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,51,32,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 43-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த திரு. க. இராமமூர்த்தி, திரு. சோ. அழகர்சாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டன.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி "நிதிக்கோரிக்கை எண் 43—சாலைப்போக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,00,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்றன. 23-3-70 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மீண்டும் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

'Nil'

### B. Reports, Notifications and Other papers.

@ 80. A Review on Industrial Development in Tamil Nadu 1969–70 (English).

% 81. A Review on Industrial Development in Tamil Nadu 1969–70 (Tamil).

% 82. A Review on Road Transport in Tamil Nadu 1969–70 (English).

83. Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Madras Record Office (Now Tamil Nadu Archives—14th Report.)

---

@ Despatched to Members on 18th March 1970.

% Despatched to Members on 19th March 1970.



## இணைப்பு I

[18-ம் பக்கத்தில் 488-ம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.]

### நகல் அரசு ஆணை எண் 210, நாள் 30–5–1969

ஓட்டல் பணியாளர்களின் வேலை நிலைமைகளைக் கருத்தில்கொண்டு நியாயமான ஊதிய வீதங்களை முடிவு செய்வதற்காகவும், பணியாளர்களுக்கு சீருடை வழங்குவது குறித்தும் உணவுப்படி முதலியவற்றை அதிகரிப்பது குறித்தும் தமிழ்நாடு ஓட்டல் நிறுவனச் சட்டத்தில் வகை செய்வதற்காகவும் ஓட்டல் தொழிலுக்கான ஊதிய வாரியம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு ஓட்டல் தொழிலாளர்கள் சம்மேளனம் முறையிட்டுக்கொண்டது.

2. இது குறித்து தொழிலாளர் துறை ஆணையாளருடன் கலந்தாலோசிக்கப்பட்டது. ஓட்டல் தொழிலின் வேலை நிலைமைகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு அதிகாரி ஓட்டல் தொழில் நிலைமைகளை அவர் ஆய்வு செய்கையில் இம்முறையீட்டில் அடங்கியுள்ள குறிப்புக்களைக் கருத்தில் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார் என்று அவர் தெரிவித்தார். இதற்கிடையில் வேறு பலவற்றுடன், ஓட்டல் தொழிலின் வேலை நிலைமைகளை ஆராய்வதற்காக முக்கூட்டுக் குழு ஒன்று அமைக்கவேண்டும் என்ற வேண்டுகோளுடன், 7—6—1967 தேதியிட்ட மற்றொரு முறையீடு பெறப்பட்டது. இது குறித்து தொழிலாளர் துறை ஆணையாளருடன் கலந்தாலோசிக்கப்பட்டது. ஓட்டல் தொழில் குறித்த சிறப்பு அதிகாரி தமது பணியில் பாதியை முன்னரே முடித்துவிட்டதால், புதிய முக்கூட்டுக் குழு ஒன்றை அமைப்பதற்குப் பதிலாக, சிறப்பு அதிகாரியை கூட்டுநராகவும், திருவாளர் கே. சுப்பிரமணியம் அவர்களை நிர்வாகத்தின் பிரதிநிதியாகவும், திருவாளர் பி. வி. சீனிவாசன அவர்களை பணியாளர் பிரதிநிதியாகவும் கொண்ட முறையின் மரபுப்படி உள்ள குழு ஒன்று (Informal Committee) அமைக்கப்படலாம் எனவும், அக்குழு சிறப்பு அதிகாரியின் முன்னரே சேகரிக்கப்பட்ட சான்றுகளைப் பரிசீலிககலாம் என்றும்; அவசியமாயின் கூடுதலான சான்றுகளை சேகரித்துத் தனது அறிக்கையைப் பரிந்தனுப்பலாம் என்றும் அவர் கருத்து தெரிவித்தார். தொழிலாளர் துறை ஆணையாளர் கருத்தை அரசு ஏற்றுக்கொண்டது. சிறப்பு அதிகாரி பணியை ஏற்கெனவே முடித்துவிட்டதால், முறையின் மரபுப்படி அமைந்த குழு அமைக்க இயலாதென்றும், எனினும் சிறப்பு அதிகாரி பணிந்தனுப்பிய அறிக்கையைத் தாமும் ஏற்கெனவே நியமிக்கக் கருதப்பட்ட பிரதிநிதிகளும், ஆய்வு செய்ததாகவும், தொழிலாளர் துறை ஆணையாளர் தெரிவித்தார். சிறப்பு அதிகாரியின் அறிக்கையைத் தனது பரிவுரைகளுடன் தொழிலாளர் துறை ஆணையாளர் தற்போது பணிந்தனுப்பியுள்ளார்.

3. தொழிலாளர் துறை ஆணையாளரின் குறிப்புரைகளையொட்டி, ஓட்டல் தொழிலுக்கான சிறப்பு அதிகாரியின் பரிந்துரைகளைக் கவனமாக அரசு ஆய்வு செய்து கீழ்க் காணும் ஆணைகளைப் பிறப்பிக்கின்றது.

| சிறப்பதிகாரியின் பரிவுரைகள். (1) | அரசு ஆணைகள் (2) |
|---|---|
| 1 குறைந்த அளவு ஊதியச் சட்டத்தில் கண்டுள்ள விவர அட்டவணையில் ஓட்டல் தொழிலில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பதைச் சேர்த்துக்கொள்ளலாம். | சிறப்பு அதிகாரியின் பரிவுரை மாநிலக் குறைந்த அளவு ஊதிய வீதங்களை ஆலோசனை வாரியத்தின் அடுத்தக் கூட்டத்தில் வைக்கப்படலாம் என்ற தொழிலாளர் துறை ஆணையாளரின் பரிவுரையை அரசு ஏற்றுக்கொள்கிறது. |
| 2 அதிக வரி விதிப்பைத் தவிர்க்கும் பொருட்டு பல நேர்வுகளில் ஊதியப் பதிவேடுகளில் காட்டப்படுகின்ற ஊதியத்தைவிட உண்மையிலே கொடுக்கப்படுகின்ற ஊதியம் அதிகமாக இருப்பதனால் ஊதியப் பட்டியல்களை கணக்கில் கொள்ளாமல் ஓட்டல் நிறுவனங்களின் விற்பனை வரியை மதிப்பிட்டு முடிவு செய்வதில் வேறு ஒரு நடைமுறையைப் பின்பற்றலாம். | அரசு வருவாய்த் துறையின் ஆய்வில் உள்ளது. |

| சிறப்பதிகாரியின் பரிவுரைகள். (1) | அரசு ஆணைகள். (2) |
| --- | --- |
| 3 தொழிலாளர்களது பணியில் இடைவெளிகளை தெரிவிக்கின்ற முறையற்ற தொழில் நடைமுறைக்கும் அவர்களை மாற்றங்கள் செய்வதற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு. முடிவு செய்யப்பட்ட 6 திங்கள் தொடர்ச்சியான பணியானது. எந்தவித குறுக்கீடுகள் இருந்தபோதிலும், பணியாளர் கடைசியாக எந்த நாளன்று வேலைக்கமர்த்தப்பட்டிருந்தாரோ அந்த நாள் முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் இருக்க அனுமதிக்கக்கூடிய வகையில், தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம் திருத்தப்படலாம். | இத்தகைய தகவிலாச் செயல்களைத் தவிர்ப்பதற்கென தொழிலாளர் துறை நேடுநர்கள் முறையாகவும் சரியாகவும் நேடுதல் செய்தால் போதுமானது என்று அரசு கருதுகிறது. இதை மீண்டும் ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை அரசுக்கு அனுப்புமாறு தொழிலாளர் துறை ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். |
| 4 தொழிற்சாலைகள் சட்டத்தின் 92-வது பிரிவில் வகை செய்யப்பட்டிருப்பதுபோல், இந்தச் சட்டத்தின்கீழ் அதிகமான அபராதங்கள் விதிப்பது நீதிமன்றங்களுக்கு வசதியாய் இருக்கும்பொருட்டு தண்டனைப் பகுதி (சட்டத்தில் 23-வது பிரிவு)யைத் திருத்துவதன் மூலம் வழக்கமாகவும் வேண்டுமென்றேயும் குற்றம் புரிவோர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும். | தற்போதுள்ள விதித்துறைகள் கடுமையானதல்ல என்று சொல்லமுடியாததால், தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டத்தின் 23-வது விதி பிரிவில் திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது. |
| 5 தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் ஆகிய இருதரப்பினர்களின் கருத்தை ஆலோசித்துப் பார்த்து நியாயமான அளவுக்கு அதிகமான உணவுப்படியை அரசு முடிவு செய்யலாம். | நிர்வாகத்தினர்களுடனும் தொழிலாளர் பிரதிநிதிகளுடனும் கலந்து ஆலோசித்து உணவுப்படியின் வீதத்தை மாற்றி அமைக்கலாம என்ற தொழிலாளர் துறை ஆணையாளரின் பரிவுரையை அரசு ஏற்றுக்கொள்கிறது. |
| 6 இருபது அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் உள்ள ஓட்டல் நிறுவனங்களில் பணியாளர்களுக்கு சீருடைகள் வழங்குவதற்கு வகை செய்யும் பொருட்டு, தமிழ்நாடு ஓட்டல் நிறுவனச் சட்டத்தின் விதித்துறைகளும் விதிகளும் தக்கவாறு திருத்தப்படலாம்· தமிழ்நாடு ஓட்டல் நிறுவனச் சட்டத்தின் 16-வது பிரிவில் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் திருத்தம் சீருடை வழங்குவது குறித்து பணியாளர்களுக்கு உள்ள மனக்குறையை நீக்குவதற்கு வழி செய்யும், அதாவது—<br>"16 (A) மாநில அரசு அரசிதழில் அறிவிப்பு வெளியிடுவதன் மூலம், விதிகள் இயற்றி, ஓட்டல் அதிபர் ஒருவர் பொதுத் துப்புரவுக்காக அந்த விதிகளில் குறிப்பிடக்கூடிய எண்ணிக்கையுள்ள வகை உடைகளை அந்த ஓட்டலில் பணிபுரியும் வெவ்வேறு வகுப்புக்களைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கவேண்டும் என்று விதிக்கலாம்". | சிறப்பு அதிகாரியின் பரிவுரைகளையொட்டி, தமிழ்நாடு ஓட்டல் நிறுவனச் சட்டத்தில் 16–வது பிரிவில் திருத்தம் செய்வதற்கான செயற்குறிப்பு ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் உள்ளது. |



| சிறப்பதிகாரியின் பரிவுரைகள். (1) | அரசு ஆணைகள். (2) |
| --- | --- |
| 7 சட்டத்தின் 12-வது பிரிவின் கீழ் வழங்கிய விடுப்புக்குக் கூடுதலாக ஆண்டொன்றுக்கு 7 நாட்களுக்கு பிணி விடுப்பு வழங்க வகை செய்யும்பொருட்டு இச்சட்டம் திருத்தப்படலாம். அல்லது ஓட்டல் நிறுவனத்தின் பணியாளர்களுக்கு தொழிலாளர் ஈட்டுறுதிச் 'சட்டத்தின் பயன்களை நீட்டிக்கலாம். | தொழிலாளர் மாநில ஈட்டுறுதிச் சட்டத்தை நீட்டிப்பது அதிகப் பயனைத் தராது என்றும், குறிப்பாக மாநிலத் தொழிலாளர் ஈட்டுறுதிச் சட்டம் நீட்டிக்கப்படாதிருக்கக்கூடிய தொலைவுப் பகுதிகளில் அந்த நீட்டிப்பால் பயன் இருக்காது என்றும் பிணி விடுப்பிற்காக இச் சட்டத்தில் விதித்துறை ஒன்றைச் சேர்த்துக்கொள்வது நல்லது என்றும் அரசு கருதுகிறது. |
| 8 முப்பது நபர்களுக்கு மேல் பணிபுரியும் ஓட்டல்களிலாவது பணியாளர்களுக்கு முறையான குடியிருப்புகள் அல்லது ஓய்வு அறைகளுக்கு வகை செய்யுமாறு வற்புறுத்தலாம். | தமிழ்நாடு ஓட்டல் நிறுவனச் சட்டத்தின் 15–வது விதி, தங்கும் அறைகளை ஓட்டல் அதிபர்கள் தொழில் தொடர்புள்ள காரியங்களுக்காகப் பயன்படுத்துவதைத் தடைசெய்கிறது. அந்த விதி கண்டிப்பாகச் செயல்படுத்துவது உறுதிப்படுத்தப்பட்டால், தற்போதைக்குப் போதுமானது என்று தொழிலாளர் துறை ஆணையாளர் கருத்து தெரிவித்தார். அக் கருத்தை அரசு ஏற்கிறது. |
| 9 பத்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட ஓட்டல் நிறுவனங்களுக்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம் பொருந்துமாறு செய்யப்படலாம். | பரிவுரை தனியாக அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| 10 கல்வி நிலையங்களோடு இணைக்கப்பட்ட விடுதிகளில் உள்ள பணியாளர்களைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் "பணியாளர்" குறித்த விளக்கத்தை திருத்தி அமைத்த பிறகு அவர்கள் பெற உரிமையுள்ள சிறப்பு நிலையை முன்னிட்டு, அவசியமெனக் கருதப்படுகிற விலக்குகளை அரசு வழங்கலாம். எனவே கல்வி நிறுவனங்களோடு இணைக்கப்பட்டுள்ள இந்த விடுதிகளில் உள்ள பணியாளர்கள், அவர்கள் பணியிலிருந்து போதிய காரணம் காட்டப்படாமல் நீக்கப்பட்டால், அவர்கள் மேல் முறையீட்டு அதிகாரிகளுக்குமேல் முறையிடு செய்துகொள்ளும் உரிமையையாவது பெறுவர். அந்த அளவிற்கு அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும். பணிப் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்படுவதுடன் வேலை நீக்கம் செய்யப்படல், வேலையிலிருந்து விலக்கப்படுதல், அல்லது ஆட்குறைப்பு செய்யப்படுதல் ஆகிய நேர்வுகளில் போதிய அளவு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு உறுதி அளிக்கப்படும். | சிறப்பதிகாரியின் பரிவுரையை அரசு ஏற்றுக்கொள்கிறது. |
| 11 நகராட்சி, நகரியம் அல்லது இரண்டாம் வகுப்பு ஊராட்சிகளின் 3 மைலுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு தமிழ் நாடு ஓட்டல் நிறுவனச் சட்டம் நீட்டிக்கப்படலாம். | சிறப்பு அதிகாரியின் பரிவுரைகளை அரசு ஏற்றுக்கொள்கிறது. |

## Copy of the G.O. Ms. No. 210, Labour, dated 30th May 1969

### DEPARTMENT OF LABOUR

SUBJECT :—*Madras Catering Establishment Act, 1958—Increased wages, service regulations etc.—Representation from Secretary, Tamilnad Hotel Workers' Sammellanam—Report of the Special Officer for Hotel Industry—Recommendations—Orders—Issued.*

### G.O. Ms. No. 210, Labour, dated 30th May 1969

READ the following :—

From the General Secretary, Tamilnad Hotel Workers' Federation, Madras. Repersentation, dated 28th March 1967.

From the Commissioner of Labour, letter No. C. I. 17556/67, dated 13th June 1967.

From the Commissioner of Labour, letter No. C. I. 34398/67, dated 12th October 1967.

From the Commissioner of Labour, letter No. C. I. 34398/67, dated 4th November 1967.

From the Commissioner of Labour, letter No. C. I. 29920/67, dated 9th June 1968.

**Order—No. 210, Labour, dated 30th May 1969.**

The Tamilnad Hotel Workers' Sammellanam represented that a Wage Board for Hotel Industry may be constituted to fix reasonable minimum rates of wages taking into account working conditions of the Hotel Workers and that provision may be made in the Madras Catering Establishments Act for supply of uniform to workers and for enchancement of meals allowance, etc.

2. The Commissioner of Labour who was consulted in the matter, reported that the Special Officer appointed for going into the working condition of the hotel industry, has been instructed to take consideration the points contained in the representation during his study of the Hotel Industry. Meanwhile, a further representation, dated 7th June 1967 containing, among others, the request for setting up of a Tripartite, Committee to go into the working conditions of the hotel industry was received. The Commissioner of Labour who was consulted, has suggested that as the Special Officer for hotel industry has already gone half way through his work instead of constituting a fresh Tripartite Committee, an informal committee with Thiruvalargal K. Subramanian and P. V. Sreenivasan, as representatives of the Managements and the workers respectively, with the Special Officer as the Convenor, might be constituted to go through the evidence already collected by the Special Officer, and also collect, if necessary, additional evidence and submit its report. The Government accepted the suggestion of the Commissioner of Labour. The Commissioner of Labour subsquently reported that as the Special Officer had already completed the work, the informal committee could not be formed and that, however, the report submitted by the Special Officer was got examined by him with the assistance of the representatives already proposed. The Commissioner of Labour has since submitted the report of the Special Officer along with his recommendations.



3. The Government have carefully examined the recommendations of the Special Officer for Hotel Industry in the light of the remarks of the Commissioner of Labour and pass the following orders :—

| *Recommendations of the Special Officer.* (1) | *Orders of Government.* (2) |
|---|---|
| 1 Employement in the Hotel Industry may be included in the Schedule to the Minimum Wages Act. | The Government accept the recommendation of the Commissioner of Labour that the recommendation of the Special Officer may be placed before the next meeting of the Minimum Wages State Advisory Board. |
| 2 As very often the wages actually paid is higher than the wages shown as paid in the wage registers to avoid high tax assessment, a different method of assessing sales tax in catering establishments may be adopted without taking into account the wages bills of the catering establishments. | The matter is under consideration of Government in Revenue Department. |
| 3 To put an end to the unfair labour practice of causing breaks in the service of the workers and frequent transfers, the Madras Catering Establishment Act may be so amended that the 6 month's continuous service prescribed may be permited to be within a period of 2 years from the date on which the worker was last employed in service, irrespective of the interruptions in service, | The Government consider that regular and proper inspection by the Inspectors of Labour should be adequate to meet such mal-practices. The Commissioner of labour is requested to examine this further and send a report to Government. |
| 4 A deterrent punishment should be imposed on habitual and wilful offenders by amending the penal clause (Section 23 of the Act) to make it possible for the courts to impose heavier fines under the Act as in case of Section 92 of the Factories Act. | The Governmunt consider that no amendment to section 23 of the Madras Catering Establishment Act is necessary as the present provisions cannot be said to be lenient. |
| 5 A resonably higher rate of food allowance may be fixed by Government after taking into account the views of both the employers and employees. | The Government accept the recommendation of the Commissioner of Labour that the rates of food allowance may be revised in consultation with the managements and employees' representatives. |
| 6 The provisions of the Madras Catering Establishment Act and rules may be amended suitably so that uniforms are supplied to workers in Catering Establishments with 20 or more workers. The following amendment proposed to Section 16 of the Madras Catering Establishment Act will be a step in removing the grievance of workers on this issue of uniform :—<br>"16 (A) The State Government may by notification in the Official Gazette, make rules requiring an employer of a Catering Establishment to provide for the different classes of employees in that establishment for the sake of general cleanliness, such number, and type of dress as may be specified in the rules." | The proposal to amend section 16 of the Madras Catering Establishment Act on the lines of the recommendations of the Special Officer is already under consideration of the Government. |
| 7 The Act may be amended to provide for the grant of sick leave for 7 days in a year in addition to leave granted under Section 12 of the Act or the benefits of the Employees' State Insurance Act may be extended to workers in catering establishments. | The Government consider that extension of the Employees' State Insurance Act may not be of much help especially in remote areas, to which the Employees' State Insurance Act may not be extended and that it is much better to include a provision for sick leave in the Act itself. |

| Recommendations of the Special Officer. (1) | Orders of Government. (2) |
|---|---|
| 8 The provision of proper living quarters or rest rooms may be insisted upon for the employees at least in hotels employing more than 30 workers. | The Government agree with the Commissioner of Labour that for the present it would be adequate if it is ensured that rule 15 of the Madras Catering Establishment Rules which prohibits employers using living rooms for operations connected with a Catering Establishment is strictly enforced. |
| 9 The employees' Provident Fund Act may be made applicable to catering establishments with 10 or more employees. | The recommendation is separately under the consideration of the Government. |
| 10 The Government may after amending the definition of employees as to include the workers in hostels attached to educational institutions grant such exemptions as is deemed to be necessary in view of the special status they are privileged to enjoy. Thus workers in these hostels which are attached to educational institutions will at least secure a right of appeal to the Appellate Authority if their services are terminated without reasonable cause and they will be granted protection to that extent. Security of service will be guaranteed and adequate compensation assured for the workers in case of dismissal, discharge or retrenchment. | The Government accept the recommendation of the Special Officer. |
| 11 The Madras Catering Establishment Act may be extended to areas located within 3 miles of any municipality, township or class II panchayats. | The Government accept the recommendations of the Special Officer. |

## இணைப்பு II

[30-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### போக்குவரத்து துறையின் அமைப்பு

கீழ்காணும் சட்டங்களின் விதித்துறைகளையும் அதன்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளையும் செயல்படுத்துவது இத்துறையின் முக்கியப் பணிகளாகும்:—

1. மோட்டார் வண்டிகள் சட்டம், 1939.

2 தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டம், 1931.

3. தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் (பயணிகள்—சரக்குகள் வரி விதிப்பு) சட்டம், 1952.

### அனுமதிச் சீட்டுகள் வழங்குதல்.

கீழ்காணும் வழிமுறைகளில் போக்குவரத்து வசதிகள் மேம்பாடு செய்யப்பட்டன —

(1) புதிய வழித் தடங்களுக்கும் தற்போதுள்ள வழித்தடங்களில் கூடுதலான பேருந்துகள் விடவும் அனுமதிச் சீட்டுகள் வழங்குவதன்மூலம் வண்டிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தல்.

(2) பேருந்துகளின் பயண ஓட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்தலும் தற்போது உள்ள வழித்தடங்களை நீட்டித்தலும்.



(3) தற்போதுள்ள வண்டிகளுக்குப் பதிலாக, பெரிய வண்டிகளை விடுவதன்மூலம் இருக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

பேருந்துகளின் எண்ணிக்கையிலும் பேருந்து இருக்கைகளின் எண்ணிக்கையிலும் ஆண்டுக்கு சுமார் 10 சதவீதம் உயர்வு, படிப் படியாக ஏற்படவேண்டுமென்பதே பொதுவான நோக்கமாகும். 1969-ல் 99 புதிய வழித்தடங்கள் துவக்கப்பட்டன; 217 கூடுதலான பேருந்துகள் இப்போதுள்ள வழித்தடங்களில் விடப்பட்டன; இதனால் 14,281 இருக்கைகள் கூடுதலாக்கப்பட்டன.

### நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து

அரசு வகுத்த நாட்டுடைமை ஆக்கும் கொள்கையில் ஏதும் மாறுதல் இல்லை. கீழ்க்காணும் பேருந்து வழித்தடங்களின் தரங்களுக்கும் வகைக்கு அது பொருந்தும்.

(1) எழுபத்தைந்து மைல்களும் அதற்கு மேலுமுள்ள சாதாரணப் பேருந்துப் போக்குவரத்து, கடுவிசைப் போக்கு வரத்து வழித்தடங்கள் அனைத்தும்;

(2) தொலைவு எதுவாயிருப்பினும் சென்னை மாநகரிலிருந்து தொடங்கும் அல்லது அங்கு வந்து முடிவடையும் பேருந்து வழித்தடங்கள் அனைத்தும்;

(3) கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தொடங்கும் அல்லது அங்கு முடிவடையும் வழித்தடங்கள் உட்பட கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வழித்தடங்கள் அனைத்தும்.

இக்கொள்கை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. தனியார் பேருந்து உரிமையாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமங்களின் செல்திறன் கால அளவு முடிவடையும்போது, தக்க நடைமுறைகளைப்பின்பற்றி (இரு மாநிலங்களுக்கு இடையிலான வழித்தடங்கள் உட்பட) இந்த வழித்தடங்கள் எடுத்துக் கொள்ளப் படுகின்றன.

### சரக்கு வண்டிகள்

வளர்ந்துவரும் வாணிபத்திற்கும் வர்த்தகத்திற்கும் ஏற்ப வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள், பொது லாரிகளுக்கும் தனியார் லாரிகளுக்கும் மாநிலம் முழுவதிலும் தாராளமாக அனுமதிச் சீட்டுகளை வழங்கினர். தென் மாநிலங்களில் சரக்கு வண்டிப் போக்குவரத்து தடையின்றி நடைபெற வகை செய்யும் நோக்குடன், இம் மாநிலத்திலுள்ள பொது லாரிகளுக்கு அடங்கல் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன. இந்த அனுமதிச் சீட்டுகள், கேரளம், மைசூர், ஆந்திரப் பிரதேசம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்களிலும் செல்திறன் உள்ளவையாகும். இதற்கு மற்ற மாநிலங்களின் போக்குவரத்து அதிகாரிகள் மேற்கையெழுத்திட வேண்டியதில்லை. 1931-ம் ஆண்டு தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்திலுள்ள விதித்துறை

யின்படி, சுமையேற்றிய எடை 10,500 கிலோ கிராமுக்கு மேற்பட்டுள்ள சரக்கு வண்டிகளுக்கு காலாண்டுக்கு ரூ. 800 வரி விதிக்கப்படுகிறது; இம்மாநிலத்தில் அனுமதிக்கப்படும் உயர் அளவு சுமை எடை 12 டன் ஆகும். சரக்கு வண்டிகள் சம்பந்தமாக அதிக அளவு பளுவேற்றிய சரக்குத்திறன் அனுமதிக்குமாறு தொடர்ந்து கோரப்பட்டு வந்துள்ளது. நடைமுறையில் அனுமதிச் சீட்டில் குறிப்பிட்ட அனுமதிக்கப்பட்ட பளு ஏற்றிய எடையை விட லாரிகள் பொதுவாக அதிகமாகவே எடுத்துச் செல்கின்றன. அனுமதிச் சீட்டில் குறித்த பளு ஏற்றிய எடையாகிய 12 டன்னுக்கு மேல் சுமந்து செல்லும் சரக்கு வண்டிகளிடமிருந்து கூடுதல் வரியை வசூலிக்கத் தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தில் வகை செய்யப்படவில்லை. சாலை மேற்பரப்புகள், பாலங்கள், சிறுபாலங்கள் ஆகியவற்றுக்குக் கணிசமான மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளதைக் கருதியும், அண்டை மாநிலங்களில் செயலில் உள்ள நடைமுறையை ஒட்டியும் உயர்ந்த வரி வீதங்கள் விதிக்கப்படுவதற்கு உட்பட்டு, சரக்கு வண்டிகள் ஏற்றிச் செல்லத்தக்க சரக்குகளின் பேரளவு எடையை 15 டன்னாக உயர்த்த அரசு கருதியுள்ளது.

### பேருந்துகள்

தற்போது, நாள்தோறும் 270 கிலோ மீட்டர் தொலைவும் அதற்குக் குறைந்தும் செல்லும் வெளியூர்ப் பேருந்துகளுக்குக் காலாண்டுக்கு ஓர் இருக்கைக்கு ரூ. 50 வரி விதிக்கப்படத்தக்கதாகும். இருநூற்று எழுபது கிலோ மீட்டருக்குமேல் செல்லும் பேருந்துகளுக்கு காலாண்டுக்கு ஓர் இருக்கைக்கு ரூ. 55 வரி விதிக்கப்படுகிறது. மேற்சொன்ன வகைப் பேருந்துகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 10 வீதம் உயர்ந்திச் சில மாறுதல்கள் செய்யக் கருதப்பட்டது. இதனல் அரசுக்கு கூடுதலாக சுமார் ரூ. 1.6 கோடி வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நகரப் போக்குவரத்து, வெளியூர்ப் போக்குவரத்தைப்போல் ஆதாயமுடையதாக இல்லாததால், இந்தப் போக்குவரத்தின் வரி வீதங்களை உயர்த்த அரசு கருதவில்லை.

### ஒப்பந்த வண்டிகள்

சென்னை மாநகரில் 'ஆட்டோ-ரிக்ஷாக்களின்' தேவை பெருகி வருகிறது. சென்னை மாநகரில் பொதுமக்கள் நலனிற்காக குறைந்த கட்டணத்தில் போக்குவரத்துக்கு வசதியாயுள்ள, ஆட்டோ-ரிக்ஷா, அவசியமென்று அரசு உணர்கிறது. எனவே, சென்னை மாநகரிலுள்ள ஆட்டோ-ரிக்ஷாக்களின் எண்ணிக்கை 300-லிருந்து 400-க்கு உயர்த்தப்படலாமென ஆணை பிறப்பித்துள்ளது.

### சீர் பேருந்துகள்

சீர் பேருந்துகளுக்கும் முறையான பேருந்துகளுக்கும் இடையே வேண்டாத போட்டியைத் தவிர்க்கும்பொருட்டும் சீர் பேருந்துகள் தவருக பயன்படுவதை நிறுத்தவும் சீர் பேருந்துகள்





சம்பந்தப்பட்ட மோட்டார் வண்டிகளின் வரி வீதத்தைக் காலாண்டுக்கு ஓர் இருக்கைக்கு ரூ. 50 என்று இப்போதுள்ளதை ரூ. 100 என்று அரசு உயர்த்தியுள்ளது.

### வரி விதிப்பு

மாநிலங்களுக்கிடையே நடைபெறும் போக்குவரத்திற்கும் வாணிபத்திற்கும் ஊக்கமளிக்க, போக்குவரத்து வண்டிகள்மீது ஒருமுனை வரி விதிப்பது குறித்து இம் மாநிலத்திற்கும் அண்டை மாநிலங்களான கேரளம், ஆந்திரப் பிரதேசம், மைசூர், புதுச்சேரி ஆகியவற்றுக்கும் இடையே இணக்கமான உடன்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

### சோதனைச் சாவடிகள்

மாநிலங்களுக்கு இடையில் போக்குவரத்தை மேற்கொள்ளும் வண்டிகளை முனைப்பாகச் சோதனை செய்யும் நோக்கத்தில் புழல், கந்தைக் கவுண்டன் சாவடி, ஓசூர் ஆகிய ஊர்களின் எல்லைகளில் மூன்று சோதனைச் சாவடிகளை ஏற்படுத்த அரசு ஒப்பளித்துள்ளது. இங்கு பார எடைப் பொறி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டதுடன் கூடுதல் பணியாளர்களும் அமர்த்தப்பட்டனர். இந்தச் சோதனைச் சாவடிகளில் போக்குவரத்துத் துறையின் சோதனையிடும் முகவர்களும் வணிகவரித்துறையின் சோதனையிடும் முகவர்களும் இணைந்து செயல்படுவர்.

### வலவர் பயிற்சிப் பள்ளி

இம் மாநிலத்திலுள்ள வலவர் பயிற்சிப் பள்ளிகளுக்கு ஏற்பளிக்க 1940-ம் ஆண்டு தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் விதிகளைத் திருத்தியமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### சரக்கு வண்டிகள் முகவர்

சரக்கு வண்டிகளின் முகவர்களுக்கு உரிமம் வழங்குவதற்கான 1940-ம் ஆண்டு தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் விதிகளைத் திருத்துவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆலோசனையில் உள்ளது.

### வருவாய்

1969-70-ல், 1969, ஏப்ரல் 1-ம் நாள் முதல் டிசம்பர் 31-ம் நாள் வரையிலான ஒன்பது மாதக் கால அளவுக்கு ரூ. 14.40 கோடி வருவாய் கிடைத்தது. எனவே, 1968-69-ல் கிட்டிய ரூ. 18.65 கோடி வருவாய்க்கு மாறாக, 1969 ஏப்ரல் 1-ம் தேதி முதல் 1970 மார்ச் 31-ம் தேதி வரையில் கிட்டக்கூடிய வருவாய் சுமார் ரூ. 19.2 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வரி ஏய்ப்பைக் கண்டுபிடிக்கவும், பயணிகள், சரக்குகள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் ஏற்றிச்செல்லப்படுவதையும், சீர் பேருந்துகள் போன்ற வண்டிகள் அதிகாரமற்றவகையில் ஓடுவதையும் கண்டு பிடிக்கவும் மாவட்டங்களிலும் சென்னை மாநகரிலும் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை வாய்ப்பான எல்லா இடங்களிலும் இரவிலும் பகலிலும் வண்டிகள் சோதனையிடப்பட்டு வருகின்றன.

[1970 மார்ச் 21

## பொது

அண்மை ஆண்டுகளில் போக்குவரத்துத் துறையில் உறுதியான முன்னேற்றம் ஏற்பட்டு வந்துள்ளது. போக்குவரத்து ஒழுங்கு முறைகளையும் போக்குவரத்து வசதிகளையும் மேம்படுத்துவது குறித்துச் சட்டமன்றப் பேரவையில் நடக்கும் விவாதத்தின் போது தெரிவிக்கப்படும் கருத்துரைகளை அரசு வரவேற்கும்.

## இணைப்பு

[30-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### 1969–70-ல் போக்குவரத்துத் துறையின் நிர்வாகம் பற்றிய குறிப்புரை.

நாட்டிற்கு போக்குவரத்து வசதிகள் குறித்த முக்கிய வழிகளில் ஒன்று சாலைப் போக்குவரத்து வசதியாகும்.

நகர்ப்புறங்களிலும், நாட்டுப்புறங்களிலும் வளர்ந்து வரும் தொழில்—பொருளாதார முன்னேற்றத்திற்கேற்ப சாலைப் போக்குவரத்தும் சரி நிகராக வளர்ச்சியடைந்திருக்கிறது. 1969-ம் ஆண்டில் வண்டிப் போக்குவரத்து நிலையாகப் பெருகிவந்துள்ளதைக் கீழ்க்காணும் விவர அட்டவணையிலிருந்து அறியலாம் :—

| கீழ்க்காணும் நாட்களில் உள்ளவாறு. | பயண (பெருந்து) வண்டிகள். | | சரக்கு வண்டிகள். | |
|---|---|---|---|---|
| | தனியார். | தமிழ்நாடு அரசப் போக்குவரத்துத் துறை. | வாடகை லாரிகள். | தனியார் லாரிகள். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 31—12—1967 .. .. | 5,681 | 1,638 | 10,738 | 3,095 |
| 31—12—1968 .. .. | 5,716 | 1,898 | 11,908 | 3,138 |
| 31—12—1969 .. .. | 5,778 | 2,014 | 12,445 | 3,051 |

| | ஒப்பந்த வண்டிகள். | பிற மோட்டார் வண்டிகள். | மொத்தம். |
|---|---|---|---|
| | (6) | (7) | (8) |
| 31—12—1967 .. .. | 7,087 | 1,016 | 29.255 |
| 31—12—1968 .. .. | 8,726 | 1,315 | 32,701 |
| 31—12—1969 .. .. | 9,912 | 1,789 | 34,989 |

### போக்குவரத்துத் துறை அமைப்பு

கீழ்க்காணும் சட்டங்களையும் அவற்றின்கீழ்ச் செய்யப்பட்டுள்ள விதிகளையும் செயல்படுத்துவது இத்துறையின் முக்கிய பணிகளாகும் :—

(1) மோட்டார் வண்டிகள் சட்டம், 1939.

(2) தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டம், 1931.



1970 மார்ச் 21]

(3) தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் (பயணிகள்-சரக்குகள் வரி விதிப்பு) சட்டம், 1952.

போக்குவரத்துத் துறை, போக்குவரத்துத் துறை ஆணையாளரின் நிர்வாகத்தின்கீழ்ச் செயல்பட்டு வருகிறது. போக்குவரத்து ஆணையாளர் வருவாய்த்துறை வாரியத்தின் உறுப்பினராவார். போக்குவரத்துத் துறை ஆணையாளருக்கு மூன்று போக்குவரத்துத் துறை துணை ஆணையாளர்களும் இரண்டு உதவிச் செயலாளர்களும் துணை செய்கின்றனர். துணைப்போக்குவரத்துத் துறை ஆணையாளர்களில் ஒருவர், நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளின் பணிகளைக் கவனிப்பதற்கென்றே நியமிக்கப் பட்டுள்ளார். தமிழ் நாடு போக்குவரத்துத் துறையின் பயணித் துணைவர்களுக்கும் ( conductors ) வலவர்களுக்கும் ( drivers) உரிமம் வழங்குதல், இத்துறையின் வண்டிகளைப் பதிவுசெய்தல், அவற்றுக்கு அனுமதிச் சீட்டு வழங்குதல் போன்ற பணிகளை உரிய காலத்தில் செய்வது இவரது பொறுப்பாகும். மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். இவர்களுக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் செயலாளராக உதவி புரிகின்றனர். சென்னை மாநகரில் காவல் துறைக் கமிஷனர் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாகச் செயல்படுகின்றார். இவருக்கு காவல்துறைத் துணைக் கமிஷனர் (போக்குவரத்து உரிமம் வழங்கல்) செயலாளராக உள்ளார். மாநகரில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியாக அவர் பணியாற்றுகிறார். தமிழ் நாடு 1931-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டம், தமிழ் நாடு 1952-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (பயணிகள், சரக்குகள் மீது வரி விதிப்புச்) சட்டம் ஆகியவற்றின் கீழ் வரி வசூலிப்பை மேற்பார்க்குவதில் காவல் துறைக் கமிஷனருக்கு உதவி புரியும் பொருட்டும், மோட்டார் வண்டிகள் சட்டத்தை நிர்வகிப்பதற்கும், சென்னை மாநகருக்கெனப் போக்குவரத்து உதவி கமிஷனர் பதவி ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.

### அனுமதிச் சீட்டுகள் வழங்குதல்

பேருந்துப் போக்குவரத்து வசதிகளின் மேம்பாடு கீழ்காணும் வழிமுறைகளில் எய்தப்படுகின்றன :—

(1) புதிய வழித் தடங்களுக்கும், ஏற்கெனவேயுள்ள வழித் தடங்களில் கூடுதலான பேருந்துகளுக்கும் அனுமதிச் சீட்டுகள் வழங்குதல் மூலம் வண்டிகளின் எண்ணிக்கையைப் பெருக்குதல் ;

(2) பேருந்துகளின் பயண ஓட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்தலும், தற்போது உள்ளவற்றை விரிவுபடுத்தலும் ;

(3) தற்போதுள்ள வண்டிகளுக்குப் பதிலாக பெரிய வண்டிகளை விடுவதன் மூலம் இருக்கைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

பேருந்துகளின் எண்ணிக்கையிலும் பேருந்து இருக்கைகளின் எண்ணிக்கையிலும் ஆண்டொன்றுக்கு சுமார் 10 சதவிகிதம் உயர்வு படிப்படியாக ஏற்படவேண்டுமென்பதே பொதுவான நோக்க

மாகும். 1969-ல் 99 புதிய வழித்தடங்கள் 14,281 இருக்கைகளை கூடுதலாக்கும் வகையில் தொடங்கப்பட்டன. 1968-ல் 99 புதிய வழித்தடங்கள் 14,283 இருக்கைகளைக் கூட்டும் வகையில் தொடங்கப்பட்டன. பயண பேருந்து அனுமதிச் சீட்டுகளுக்காக விண்ணப்பித்து கொள்பவர்களிலிருந்து தெரிந்தெடுப்பதற்கான கோட்பாடுகள் குறித்து வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு வழிகாட்டியாக இருக்கும் பொருட்டு வகுக்கப்பட்ட விதிகள் பொருந்துகின்றன.

### நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து

நாட்டுடைமை ஆக்கும் கொள்கையில் மாறுதல் ஏதும் இல்லை. அது கீழ்க்கண்ட வகையில் சேர்ந்த வழித் தடங்களுக்குப் பொருந்தும் :—

1. 75 மைல்களும் அதற்கு மேலுள்ள சாதாரணப் பேருந்துப் பணி—கடுவிசைப் பேருந்துப் பணிகளின் வழித்தடங்கள் ;

2 தொலைவைக் கருதாது, சென்னை மாநகரிலிருந்து தொடங்கும் அல்லது அங்கு முடிவடையும் வழித்தடங்கள் அனைத்தும் ;

3. கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து தொடங்கும் அல்லது அங்கு முடிவடையும் வழித்தடங்கள் உட்பட கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வழித்தடங்கள் அனைத்தும்.

இக்கொள்கை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவ்வழித்தடங்களில் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமங்களின் செல்திறன் கால அளவு முடிவடையும்போது (இரு மாநிலங்களுக்கிடையிலான வழித் தடங்கள் உட்பட), இந்த வழித்தடங்கள் எடுத்துக்கொள்ளப் படுகின்றன. இக் கொள்கை திறமையுடனும் உரிய காலத்திலும் செயல்படுத்துவதற்காக, மோட்டார் வண்டிகள் சட்டத்தின் சில விதித்துறைகள் திருத்தப்பட்டுள்ளன.

நாட்டுடைமை ஆக்கப்பட்ட போக்குவரத்து செயல்படுவது குறித்த விரிவான ஆய்வுரை ஒன்று பேரவையில் தனியாக வைக்கப்படும்.

### சரக்கு வண்டிகள்

வளர்ந்துவரும் வாணிபத்திற்கும் வர்த்தகத்திற்கும் ஏற்ப பொது லாரிகளுக்கும் தனியார் லாரிகளுக்கும் மாநில முழுவதிலும் அனுமதிச் சீட்டுகள் தாராளமாக வழங்கப்படுகின்றன. பொது லாரிகளைக் கொண்டுவந்து காண்பித்தவுடன் முறையான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும் வரையில் அவற்றிற்குத் தாற்காலிக அனுமதிச் சீட்டுகள் உடனடியாக வழங்கப்படுகின்றன. தென் மாநிலங்கள் முழுவதிலும் சரக்கு வண்டிப் போக்குவரத்து தடையின்றி நடைபெற வகை செய்யும் நோக்குடன் இம்மாநிலத்



திலுள்ள பொது லாரிகளுக்கு அடங்கல் அனுமதிச் சீட்டுகள் (Oomposite permits) வழங்கப்படுகின்றன. இந்த அனுமதிச் சீட்டுகள் கேரளம், மைசூர், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலும் செல்திறன் உள்ளவையாகும். இதற்கு மற்ற மாநிலங்களின் போக்குவரத்து அதிகாரிகள் மேலொப்பமிட வேண்டியதில்லை.

குஜராத் மாநிலத்தையும், யூனியன் ஆட்சிப்பகுதியாக புதுச்சேரியையும் 1970-ஏப்ரல் 1-ம் தேதி முதல் மேற்படித் திட்டத்தில் சேர்க்கக் கருதப்படுகிறது. 200 வண்டிகள் குறித்து அனுமதிச் சீட்டுகளுக்கு மேல் கையொப்பம் வழங்கப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கையை 300-ஆக உயர்த்த அரசு இப்போது முடிவு செய்துள்ளது. சாலை மேற்பரப்புகள் பாலங்கள், சிறு பாலங்கள் ஆகியவற்றிற்குக் கணிசமான மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், அண்டை மாநிலங்களில் செயலில் உள்ள நடைமுறையை ஒட்டியும், உயர்ந்த வரிவீதங்கள் விதிக்கப்படுவதற்குட்பட்டு, சரக்கு வண்டிகள் ஏற்றிச் செல்லத்தக்க சரக்குகளின் பேரளவு எடையை 15,240 கிலோகிராமாக உயர்த்த அரசு எண்ணிக்கையுள்ளது.

### ஒப்பந்த வண்டிகள்.

இம் மாநிலத்தில் வாடகை வண்டிகளுக்கும், சிற் பேருந்துகளுக்கும் (Omni buses), தனி வசதிப் பேருந்துகளுக்கும் Luxury coaches), சிறுலா வாடகைச் கார்களுக்கும் (Tourist Taxis) , மாநில முழுவதிலும் தாராளமாக அனுமதிச் சீட்டு வழங்குகின்றனர். சிறுலாப் பயணிகளுக்கு உதவியாக புதிய அம்பாஸ்டர் மோட்டார் வண்டிகளுக்கும் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வண்டிகளுக்கும் சிறுலா வாடகை வண்டிகளுக்கான அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது. 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி அன்று உள்ளபடி, 389 சிற் பேருந்துகளும், 34 தனி வசதிப் பேருந்துகளும், 460 சிறுலா வாடகைக் கார்களும் இயங்கி வந்தன. சென்ற ஆண்டில் மாநிலத்தில் 347 சிற் பேருந்துகளும் 29 தனி வசதிப் பேருந்துகளும், 294 சிறுலா வாடகைக்கார்களும் இயங்கி வந்தன. தமிழ் நாட்டிற்கும் கேரளத்திற்கும் இடையில் ஓடும் வாடகை மோட்டார் வண்டிகள் குறித்து ஒப்பந்த வண்டி அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கை 150-லிருந்து 250-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆட்டோ ரிக்ஷாக்களுக்கான தேவை அதிகரித்து வருகிறது. ஆட்டோ ரிக்ஷாக்களின் எண்ணிக்கை குறித்து விதிக்கப்பட்ட மேல் வரம்பை 300-லிருந்து 400-ஆக உயர்த்த வேண்டுமென அரசு கட்டளை இட்டுள்ளது.

(1970 மார்ச் 21)

## ஆலோசனைக் குழுக்கள்.

(1) மோட்டார் போக்குவரத்தின் கொள்கை, நிர்வாகம் குறித்த முக்கிய பொருள்கள் குறித்து அரசிற்கு ஆலோசனை கூற, அரசு போக்குவரத்துத்துறையின் பொறுப்பு வகிக்கும் அமைச்சரைத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினர்களையும், பேருந்துப் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் பிரதிநிதிகளை உறுப்பினர்களாகவும் கொண்ட அரசுப் போக்குவரத்துத்துறை ஆலோசனைக்குழு ஒன்று உள்ளது.

(2) மாவட்ட அளவில் மோட்டார் போக்குவரத்துக்குத் தொடர்பான நடவடிக்கைகளில் வளர்ச்சி மன்றங்கள் அரசிற்கு ஆலோசனை கூறுகின்றன.

(3) போக்குவரத்துக் கட்டுப்பாட்டையும். போக்குவரத்துப் பாதுகாப்பையும் ஒட்டிய எல்லா நடவடிக்கைகளையும் கவனிப்பதற்காகத் "தமிழ்நாட்டுச் சாலை மேம்பாடு–போக்குவரத்துத் திட்டக் குழு" என்னும் உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில், மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் ஒரு குழுவான "மாவட்டச்சாலை மேம்பாடு—போக்குவரத்து திட்டக்குழு" ஒன்று உள்ளது. சென்னை மாநகரில் சென்னை மாநகரச்சாலை மேம்பாடு—போக்குவரத்துத் திட்டக்குழு என்ற தனிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு சாலைப் பணிகளின் பொறுப்பேற்றுள்ள பல்வேறு முகவர்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு மாநகரச் சாலைகள் வளர்ச்சி—போக்குவரத்துத் திட்டக் குழுவின் ஒருங்கிணைப்புத் துணைக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(4) சென்னை மாநகரில், சென்னைப் பெருநகர் சாலை வளர்ச்சி—போக்குவரத்துத் திட்டக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. 1969-ல் இக்குழு இரு முறைகூடி ஆய்வு செய்தது.

## வரி விதிப்பு.

மாநிலங்களுக்கிடையே நடைபெறும் போக்குவரத்திற்கும் வாணிகத்திற்கும் ஊக்கமளிப்பதற்காக போக்குவரத்து வண்டிகள் மீது ஒரு முனைவரி விதிப்பது குறித்து இம் மாநிலத்திற்கும் அண்டை மாநிலங்களான கேரளம், ஆந்திரம், புதுச்சேரி ஆகியவற்றிற்கும் இடையே பரஸ்பர உடன்படிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. மைசூர் மாநிலத்தைப் பொறுத்தவரையில், இருமாநில வழித்தடங்களில் பேருந்து அனுமதிச் சீட்டுகளைப் பங்கீட்டுக் கொள்வதற்கேற்ப உடன்பாடு ஏற்படுகிறவரை இந்த உடன்பாடு சரக்குப் பேருந்துகளுக்கும், ஒப்பந்தப் பேருந்துகளுக்கும் மட்டுமே பொருந்தும்.



1970 மார்ச் 21]

அனுமதிச் சீட்டுகளில் மேற்கையொப்பமிடும் முறை குறித்து தற்போதுள்ள ஏற்பாடுகளை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | ஒவ்வொரு மாநிலத்திலிருந்து | | ஒப்பந்த வண்டிகள். | | |
|---|---|---|---|---|---|
| | பொது வண்டிகள். | தனியார் வண்டிகள். | சுற்றுலா வாடகை வண்டிகள். | சாதாரண வாடகை வண்டிகள். | சீர் பேருந்துகள். |
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| தமிழ் நாடு-ஆந்திரம் | 2,000 | 100 | 20 | .. | .. |
| தமிழ் நாடு-மைசூர் | 1,000 | 50 | 20 | .. | .. |
| தமிழ் நாடு-கேரளம் | 800 | 75 | 20 | 250 | .. |
| தமிழ் நாடு-புதுச்சேரி | 4·1 | வரையறை இல்லை. | வரையறை இல்லை. | வரையறை இல்லை. | வரையறை இல்லை. |

இந்திய அரசினால் அமைக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து வரி விதிப்பு விசாரணைக் குழுவின் அறிக்கையையும், ஆதாயம் பயக்க வல்ல வகையில் போக்குவரத்து வண்டிகள் குறித்த ஆய்வுக் குழுவின் அறிக்கையும் போக்குவரத்து நிதி வசதி குறித்த ஆய்வுக் குழுவின் அறிக்கையும் இன்னும் கிடைக்கவில்லை. போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்துவதற்கான வருங்காலத் திட்டங்களை வகுப்பதில் இவ்வறிக்கைகள் பெரிதும் பயனுள்ளவையாக இருக்குமென நம்பப்படுகிறது.

## வருவாய்.

சீர் பேருந்துகளைத் தவிர, மற்ற பேருந்துகளுக்கு 1969-70-ஆம் ஆண்டில் கட்டண விதங்களில் அல்லது வரியில் எந்த உயர்வும் செய்யப்படவில்லை. 1969–70-ஆம் ஆண்டில் 1—4—1969 முதல் 31—12—1969 வரையுள்ள ஒன்பது திங்கள்களில் ரூ. 14.40 கோடி வருவாய் கிடைத்தது. எனவே, 1—4—1969 முதல் 31—3—1970 வரை சுமார் ரூ. 19 கோடி கிட்டுமென எதிர்பார்க்கலாம். 1968-69-ஆம் ஆண்டில் ரூ. 18.65 கோடி மட்டுமே வருவாய் கிட்டியது என்பதை இங்கு நினைவுகூர்வது பொருத்தமாகும்.

## செயற் குறிப்புகள்.

சோதனைச் சாவடிகள்.—இரு மாநிலங்களுக்கிடையில் ஓடும் வண்டிகளைத் திறம்படச் சோதனையிடும் பொருட்டு, பார எடைப் பொறி நிலையங்களுடனும் கூடுதல் பணியாளர்களுடனும், புழல், கந்தை கவுண்டன் சாவடி, ஒசூர் ஆகிய ஊர்களின் எல்லைகளில் மூன்று சோதனைச் சாவடிகளை நிறுவுவதற்கு அரசு ஒப்பளித்துள்ளது. இந்தச் சோதனைச் சாவடிகளில் போக்குவரத்துத் துறையின் சோதனையிடும் முகவர்களும் வணிகவரித் துறையின் சோதனையிடும் முகவர்களும் இணைந்து செயல்படுவர்.

[1970 மார்ச் 21

### சீர் பேருந்துகள்.

சீர் பேருந்துகளுக்கும், வழக்கமாக ஓடிக்கொண்டிருக்கும் பயணிப் பேருந்துகளுக்கும் இடையே ஏற்படும் பொருத்தமற்ற போட்டியை நீக்கும் நோக்கத்துடனும், சீர் பேருந்துகளை தவறான முறையில் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கத்துடனும், சீர் பேருந்துகளைப் பொறுத்த வரையில், காலாண்டுக்கு ஒரு இருக்கைக்கு ரூ. 50 என்று தற்போது விதிக்கப்படும் மோட்டார் வண்டிகள் வரி விதத்தை ரூ. 100 ஆக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### வலவர் பயிற்சிப்பள்ளி.

இம்மாநிலத்தில் உள்ள வலவர் பயிற்சி பள்ளிகளுக்கு ஏற்பளிக்க 1940-ஆம் ஆண்டு தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் விதிகளைத் திருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### சரக்கு வண்டிகள் முகவர்.

சரக்கு வண்டிகளின் முகவர்களுக்கு உரிமம் வழங்குவதற்காக 1940-ஆம் ஆண்டு தமிழ் நாடு மோட்டார் வண்டிகள் விதிகளைத் திருத்துவதற்கான செயற்குறிப்பு பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

### முடிவுரை.

போக்குவரத்து ஒழுங்கு முறைகளையும் போக்குவரத்து வசதிகளையும் மேம்படுத்துவது குறித்துச் சட்டமன்றப் பேரவையில் நடக்கும் விவாதத்தின்போது தெரிவிக்கப்படும் கருத்துக்களை அரசு வரவேற்கும். மொத்தத்தில் அண்மை ஆண்டுகளில் சாலைப் போக்குவரத்து சீராக மேம்பாடு அடைந்துள்ளது. வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து முன்னேற்றம் காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இணைப்புIV.

[39-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### தமிழ் நாடு அரசுப் போக்குவரத்து, 1969–70.
### ஆய்வுரை பொது.

1. தமிழ்நாடு அரசு போக்குவரத்து மக்கள் பணியில் 22 ஆண்டுகளைக் கழித்த பின்னர் 1969-ஆம் ஆண்டில் தனது பணியின் 23-வது ஆண்டில் அடியெடுத்துவைத்தது. உலகப் போருக்குப்பின் நாட்டினைச் சீர்படுத்துவதை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட மத்திய குழு பொதுப் போக்குவரத்து ஏற்பாடு அரசுக்குச் சொந்தமாகவும், அரசால் நிர்வாகிக்கப்படுவதாகவும் இருக்கவேண்டுமென 1944 டிசம்பர் திங்களிலேயே பரிவுரை செய்தது. இப் பரிவுரையினையொட்டி தமிழ்நாட்டில் உள்ள பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்க வேண்டும் என்று 1946 டிசம்பரில் அரசு முடிவு செய்தது. 1947 மார்ச் திங்களிலேயே, சென்னை



1970 மார்ச் 21]

மாநகரில் அப்போதிருந்த 239 தனியார்ப் பேருந்துகட்குக் கூடுதலாக, 30 பேருந்துகளை விடுவதற்கு அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கியது. நாட்டுடைமையாக்கும் திட்டம் 1947-ம் ஆண்டு அக்டோபரில் இறுதியாக செயலுக்குக் கொணரப்பட்டு, ஒவ்வொரு திங்களிலும் கூடுதலான பேருந்துகள் விடப்பட்டன. தனியார் பேருந்து உரிமையாளர்கள் தங்களது பேருந்துப் போக்குவரத்துக்களை நிறுத்திக்கொண்டு வந்தனர். படிப்படியாக, 1948 ஜூலைத் திங்களில் சென்னை மாநகரில் உள்ள நகரப் பேருந்து போக்குவரத்து முழுவதும் நாட்டுடைமையாக்கப்பட்டது. மாநிலங்கள் மாற்றியமைக்கப்பட்டதின் விளைவாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் முன்பே நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துப் பணிகள் 1956-ஆம் ஆண்டு இத்துறையின் தனிக்கிளையாக சேர்க்கப்பட்டன.

2. முதல் நெடுந்தொலை கடுவிசைப் போக்குவரத்து சீர் வசதியுடன் 1959 ஆகஸ்டில் தொடங்கப்பட்டதும், 120 மைலுக்கு மேற்பட்ட எல்லா வழித்தடங்களிலும் போக்குவரத்துத் துறையின் விரைவுப் பேருந்துகளே விடப்படவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் அது தொடங்கப்பட்டது. அவ்வப்போது நெடுந்தொலை வழித்தடங்கள் பல தொடங்கப்பட்டன. தற்போது, இம் மாநிலத்தின் மாவட்ட தலைமையிடங்கள் அனைத்தும் போக்குவரத்துத் துறையின் விரைவு பேருந்துப் போக்குவரத்துப் பணியினால் இணைக்கப்பட்டுள்ளன.

3. பயணிகள் பேருந்துப் போக்குவரத்தை படிப்படியாக நாட்டுடைமையாக்கும் நோக்கத்துடன் தனியார்ப் பேருந்து உரிமையாளர்களின் உரிமங்களின் செல்திறன் கால அளவு முடிவடைகையில், அவர்களது கீழ்க்கண்ட வகை வழித்தடங்களை நாட்டுடைமையாக்கி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் பேருந்துகளை அவற்றில் ஓட்டுவதென 1967 ஜூன் திங்களில் அரசாங்கம் முடிவு செய்தது :—

(அ) 75 மைல்களும் அதற்கு மேற்பட்ட தொலைவும் உள்ள வழித்தடங்கள் அனைத்தும் சாதாரண, கடுவிசைப் போக்குவரத்துக்கள் ;

(ஆ) சென்னை மாநகரிலிருந்து வெளிச் செல்கிற, சென்னை மாநகருக்குள்வந்து முடிவடைகிற வழித்தடங்கள் அனைத்தும் (அவற்றின் நீளம் என்னவாக இருப்பினும்) ;

(இ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வழித்தடங்கள் அனைத்தும்—அந்த மாவட்டத்திலிருந்து வெளிச் செல்கிற, அதற்குள் வந்து முடிவடைகிற வழித்தடங்கள் உட்பட.

மேற்குறிப்பிட்ட வழித்தடங்களில் பேருந்துப் போக்குவரத்துப் பணியை மேம்படுத்தும் பணிகள் அனைத்தையும் போக்குவரத்துத் துறையே மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கம் முடிவு செய்தது.

தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அனுமதிச் சீட்டுக்களின் செல்திறன் கால அளவு முடிகையில் இந்த வழித்தடங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பது கொள்

கையாக இருக்கவேண்டும் என முடிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட கொள்கையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட முதல் வழித்தடம் சென்னை—ஆரணி வழித்தடமாகும். 1967 ஆகஸ்ட் 1-ம் நாள் முதல் அதில் அரசுப் போக்குவரத்துத்துறைப் பேருந்துகள் ஓடுகின்றன. இக்கொள்கையை யொட்டி 1969 மார்ச் 31-ம் நாளுக்குள் 418 பேருந்துப் பணிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1969–70-ஆம் ஆண்டில் ஒரே ஒரு வழித்தடம் மட்டும்தான் நாட்டுடைமையாக்கப்பட்டது.

4. தொழில்துறை 68-C பிரிவின்கீழ் வரைவுத் திட்டங்களை வெளியிட்டு வருகிறது. மறுப்புகளைக் கேட்டபின்னர், 68-D பிரிவின்கீழ் இந்த வரைவுத் திட்டங்கள் உள்துறையால் இறுதி வடிவம் கொடுக்கப்படுகின்றன. 68-C பிரிவின்கீழ் திட்டங்களை தொடக்கநிலையில் வெளியிடும் அதிகாரங்களை அரசுப் போக்குவரத்து இயக்குநருக்கு அளித்து அரசு 1969 மே திங்களில் ஆணைகள் பிறப்பித்தது. இத் துறையின்கீழ் வரைவுத் திட்டங்களை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை அரசுப் போக்குவரத்து இயக்குநர் எடுத்துவருகிறார். இதற்கிடையில், இறுதியான அறிவிப்பு வெளியிடப்படுவதை எதிர்பார்த்தும் தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு 18-வது சட்டத்தினையொட்டியும், தனிப்பட்ட பேருந்து போக்குவரத்து உரிமையாளர்களிடமிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ள வழித்தடங்களில் ஒரு சமயத்தில் நான்கு திங்கள் கால அளவுக்குப் பேருந்துகளை இயக்க தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத்துறைக்கு வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றம் தாற்காலிக அனுமதிச் சீட்டுக்களை வழங்கிவருகின்றது.

5. தனியார் பேருந்து உரிமையாளர்களில் சிலர் அலுவல் விதிகளைச் சேர்ந்த 23-A (1) பிரிவின்கீழ் பணித்திட்டங்களை வெளியிடுவதற்கு தொழில்-தொழிலாளர்-வீட்டுவசதித்துறையில் அரசு செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் செல்திறனையும் அலுவல் விதியைச் சேர்ந்த 23-A (2) பிரிவின்கீழ் அவ்வேலைத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்குவதற்கு உள்துறை அரசுச் செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின், செல்திறனையும் மறுத்து சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்தனர். தமிழ்நாடு நிறுவன அவசரச் சட்டமும் (அவசரச் சட்டம் 1/1968) மோட்டார் வண்டிகள் (திருத்த) சட்டமும் (சட்டம் எண் 18/1968) செல்திறன் அற்றவையென்றும் வழக்குத் தொடரப்பட்டது. அலுவல் விதிகளைச் சேர்ந்த 23- A விதி செல்திறனுள்ளது என்றும், மோட்டார் வண்டிகள் சட்டத்தின் 68 C, 68-D பிரிவுகளின்கீழ் முறையே தொழில்—தொழிலாளர்—வீட்டுவசதித்துறை, உள்துறை அரசுச் செயலாளர்களுக்குச் சட்டப்படிக்கான அதிகாரங்களைப் பிரித்துக் கொடுக்கப்பட்டது சரியென்றும் சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. எனவே இதுவரையில் அறிக்கையிடப்பட்டுள்ள வரைவுத் திட்டங்களனைத்தும் செல்திறனுள்ளவையென்று முடிவு செய்யப்பட்டது.





மேலும் தமிழ்நாடு 1968-ம் ஆண்டு 1-வது அவசரச் சட்டமும், தமிழ்நாடு 1968-ம் ஆண்டு 18-வது திருத்தச் சட்டமும் செல்திறனுள்ளவையாகும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

6. இவ்வரைவுத் திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்படும் வரையில் புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்களை உடனே மறுத்துவிடாமல் வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் அந்த விண்ணப்பங்களை வைத்துவரவேண்டி வருமென்றும், வரைவுத் திட்டங்கள் முடிவு செய்யப்படும்வரை இயன்ற வரையில் தாற்காலிக அனுமதிகளை வழங்கவேண்டுமென்றும் கருதப்பட்டது. 335/68 எண்ணுள்ள ரிட் மனுக்கள் குறித்த வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து, பாதிக்கப்பட்ட பேருந்து உரிமையாளர்கள் தலைமை நீதிமன்றத்தில் 52 மேல் முறையீடுகளைத் தாக்கல் செய்தனர். தலைமை நீதிமன்றம் இந்த மேல் முறையீடுகளை 19—1—1970 அன்றும், 20—1—1970 அன்றும் விசாரணை செய்து சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பு சரியே என்றும் 5—2—1970 அன்று தீர்ப்பு வழங்கியது.

7. தனியார் துறை பேருந்துப் பணியாளர் அரசு அந்தந்த வழித்தடங்களை மேற்கொண்டதன் பலனாக வேலையிழந்த போதிலும் அவர்கள் அரசுப் போக்குவரத்துத் துறையில் பணி செய்வதற்குத் தகுதியுடையவர் என்று கண்டறியப்பட்டால் அரசு போக்குவரத்துத்துறைப் பணியில் எடுத்துக்கொள்ளபடுகின்றனர். இவர்கள் பணிகுறித்த தகவல்களை வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் சரிபார்த்து அரசுப் பேருந்துப் போக்குவரத்துப் பணித்துறைக்கு அனுப்புகின்றனர். அவர்கள் அளிக்கும் தகவல்களின் அடிப்படையிலேயே தனியார் பேருந்து பணியாளர் இத்துறையில் எடுத்துக்கொள்ளப்படுகின்றனர்.

### பணிமனைகள்.

8. இதுவரை சென்னை வட்டாரத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் பேருந்துப் பணிகளை இயக்கி வருவதிலும் ஒருசில நீள்தொலை விரைவுப் பேருந்துகளை இயக்கி வருவதிலேயே கவனம் செலுத்தி வந்த இத்துறை பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் காரணமாக இம்மாநிலம் முழுவதிலும் பல்வேறு வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க வேண்டியிருந்ததால் பெரியதொரு நிறுவனமாக மாறிவிட்டது. இதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகத் திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தலைமைப் பணிமனைகள் நிறுவப்பட்டன. இவை ஒவ்வொன்றும் முறையே திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் பேருந்துப் பணிகளைக் கவனித்து வருகின்றன. இந்த மாவட்டங்களிலுள்ள துணைப் பணிமனைகள் இந்த நான்கு இடங்களிலுள்ள தலைமைப் பணிமனைகளின்கீழ் இயங்கி வருகின்றன. 1969–70-ஆம் ஆண்டில் சேலத்தில் முழு அளவில் இயங்கும் பணிமனை ஒன்று பணிமனைக்

கண்காணிப்பாளர் பொறுப்பின்கீழ் தொடங்கப்பட்டது. கோயம்புத்தூர் பணிமனையின் அதிகாரத்தின்கீழ் இயங்கும் தருமபுரி, சேலம் ஆகிய மாவட்டங்களையும், வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பத்தூர் பகுதியையும், கொண்ட வட்டாரத்தை இரு கூறாக்கி மேற்குறிப்பிட்ட சேலம் பணிமனை தொடங்கப்பட்டது. வேலூரிலும், கடலூரிலும் துணைப் பணிமனைகளை அமைக்கும் பணி இந்த ஆண்டு முடிவுற்றது.

9. கீழ் காணும் இடங்களில் பணிமனைகளை அமைப்பதற்காகச் சென்ற ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணி இந்த ஆண்டில் முடிவுற்றது :—

1. பாளையங்கோட்டை.
2. உதகமண்டலம்.
3. பாபநாசம்.
4. திண்டுக்கல்.
5. கடலூர்.
6. தஞ்சாவூர்.
7. வந்தவாசி.
8. ஓசூர்.

காஞ்சீபுரத்தில் பணிமனை ஒன்றைக் கட்டுவதற்காக நகராட்சியைச் சேர்ந்த நிலம் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பழனியில், பணிமனை ஒன்றைத் தொடங்குவதற்காக நிலத்தைக் கையகப்படுத்தும் செயற் குறிப்புகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. திருவண்ணாமலையில் பணிமனை கட்டுவதற்கான வேலையும் சீக்கிரமே ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

துணைப் பணிமனைகளைக் கட்டுவதற்காக உளுந்தூர்ப்பேட்டை, மேட்டூர், தருமபுரி, ஈரோடு, குன்றத்தூர், பூவிருந்தவல்லி, திருவள்ளூர், திருத்தணி, செங்குன்றம், என்னூர் ஆகிய இடங்களில் தகுந்த நிலங்களைப் பெறுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

10. சென்னை மாநகரில் ஓடும் பேருந்துகளின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளதால் அவைகளைப் பராமரிப்பதற்கான வசதிகளை அதிகப்படுத்துவதற்காக வடசென்னையில் (மாதவரம்) பணிமனை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இப்பணிமனை விரைவில் திறக்கப்படும். அன்றாடம், வாரத்திற்கொருமுறை பேருந்துகளைப் பேணிவரக்கூடிய துணைப் பணிமனைகள் இவ்வொன்டு பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பயணிகள் இன்றி வெற்றுவண்டிகளை ஓட்டிச் செல்லும் தூரத்தைக் குறைக்கவும், அவற்றைப் பேணுவதில் அதிக நாட்டம் செலுத்துவதற்காகவும் இவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. மந்தைவெளி, காந்திநகர் (அடையாறு பணிமனையுடன் சேர்க்கப்பட்டது), தியாகராயநகர் ஆகிய இடங்களில் துணை பணிமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அண்ணா நகரில் துணைப் பணிமனை ஒன்று முடிவடையும் தறுவாயிலுள்ளது.

11. உயர் அதிகாரக் குழு.—துறைக்கு ஏற்படும் இழப்பை நீக்குவதற்கும் அரசு செய்துள்ள முதலீட்டைக் கருத்தில் கொண்டு





துறை செயல்படும் முறையை மேம்படுத்துவதற்குமான வழிவகைகளைக் குறித்து கருத்துரை வழங்குவதற்கும், துறையின் தொழிலாளர்களுக்குத் தற்பொழுது வழங்கப்படும் சம்பளம், முன்னேற்ற வாய்ப்புகள், வசதிகள் ஆகியவற்றைபற்றி மறு ஆய்வு செய்வதற்கும், அவற்றைச் சீரமைப்பதற்கான வழிவகைகளைத் தெரிவிப்பதற்காகவும் நியமிக்கப்பட்ட உயர் அதிகாரக் குழு தனது அறிக்கையை அனுப்பியுள்ளது.

நாட்படி, இரவு நேரப்படி, நிகராடைப்படி முதலியவற்றை அதிகரிப்பது போன்ற வசதிகளை குறித்த பரிவுரைகள் 15—9—1969 முதல் நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்தச் சலுகைகளுக்காக ஏற்படும் ஆண்டுத் தொடர் செலவு சுமார் ரூ. 20 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. சம்பளத்தைத்திருத்தியமைப்பது குறித்த பரிவுரையைப் பொறுத்த வரையில், அவை ஆய்வு செய்யப்படுவதற்காக சம்பள ஆணைக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. குழுவின் ஏனைய பரிவுரைகள், அரசு நிலையிலும், துறையளவிலும் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

12. துறையைச் சேர்ந்தவையும் பயன்படுத்தத் தகுதியற்றவை என ஒதுக்கப்பட்டவையுமான பேருந்துகளுக்கு தக்க மதிப்பிட்டு, சரியான விலையைக் கணக்கிட்டு, அவற்றை ஏலத்தில் விடுவதற்காக சட்டமன்றத்தின் மூன்று உறுப்பினர்களும், துறையின் அதிகாரிகளும் அடங்கிய குழு ஒன்று அரசினால் ஏற்படுத்தப்பட்டது. அக்குழு குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை கூடுகிறது. உதவாதவை என்று ஒதுக்கப்பட்ட பேருந்துகளை இக்குழு பார்வையிடுகிறது. மேலும் அந்த வண்டிகள் ஏலம் விடப்படும்போது இக்குழு நேரில் அந்த ஏலத்தைக் கண்காணிக்கின்றது.

13. பேருந்துகளில் விளம்பரம் வெளியிடுவது 1969-70-ம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் தற்போது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 லட்சத்திற்கு மேலாக வருவாய் கிடைக்கிறது. விளம்பரத்தின்மூலம் கிடைக்கும் வருவாயை அதிகரிப்பதற்காக பேருந்துகளின் பக்கவாட்டிலும் விளம்பரங்களைக் காட்டி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் வருவாயில் சுமார் ரூ. 2 லட்சம் அதிகரிப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிதி நிலை.

14. இத் துறையின் நிதிநிலை விவரங்கள் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு | மூலதன முதலீடு. | | | |
|---|---|---|---|---|
| | ஆரம்ப இருப்பு. | இந்த ஆண்டில் சேர்க்கைகள். | இறுதி இருப்பு. | மொத்த வருவாய். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் லட்சத்தில்) | | |
| 1968–69 .. | 14,20·51 | 2,46·65 | 16,67·16 | 16,48·32 |
| 1969–70 (எதிர் பார்க்கப்படுவது) | 16,67·16 | 1,35·69 | 18,02·85 | 18,28·10 |

| | மொத்தச் செலவு. (6) | நிகர வருவாய். (7) | பயணிகள் வசதி நிதி, வளர்ச்சி நிதி, தேய்மான நிதி, தொழிலாளர் நல நிதி, வசதி நிதி ஆகியவற்றுக்கு ஒதுக்கீட்டுத் தொகை வழங்கல்கள். (8) | நிகர ஆதாயம். (9) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| 1968–69 .. .. | 14,83·81 | 1,59·51 | 1,88·89 | (—) 29·38 |
| 1969–70 (எதிர்பார்க்கப்படுவது). .. | 16,44·38 | 1,83·72 | 2,04·17 | (—) 20·45 |

15. 1968–69-ல் ரூபாய் 29·38 லட்சம் இழப்பு ஏற்பட்டது குறித்த பிரிவுவாரி விவரங்கள் வருமாறு:—

| | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | அரசுப் பேருந்துப் போக்குவரத்து, சென்னைக் கிளை .. | (—) 44·37 |
| (2) | தமிழ் நாடு அரசுப் போக்குவரத்து மத்தியப் பணிக்களரி, குரோம்பேட்டை. | (+) 4·11 |
| (3) | அரசுப் பேருந்துப் போக்குவரத்து கன்னியாகுமரிக் கிளை | (+) 4 44 |
| (4) | நெடுந்தொலைப் போக்குவரத்துப் பணிகள் .. | (+) 3·61 |
| (5) | இராணித் தோட்டம் பணிக்களரி .. .. .. | (+) 2·83 |
| | | (—) 29·38 |

துறையின் சென்னைக் கிளையில் முந்திய ஆண்டில் ரூ. 33.40 லட்சம் விரயம் ஏற்பட்டிருக்க, இந்த ஆண்டில் ஏற்பட்ட விரயம் ரூ. 44.37 லட்சமாகும். செலவு அதிகரித்துள்ளதே அதற்குக் காரணம். 1—6—1968, 1—12—1968 முதல் அகவிலைப்படி வீதங்கள் உயர்த்தப்பட்டதும், முறையே 1—11—1967 தேதியன்றும், 1—10—1970 அன்றும் ஒப்பளிக்கப்பட்ட அகவிலைப்படி, நகர ஈட்டுப் படியினுல் ஏற்பட்ட முழு விளைவும் இந்த விரய அதிகரிப்புக்கு முக்கிய காரணம் ஆகும். இது மட்டுமே முந்திய ஆண்டைக் காட்டிலும் விரயம் ரூ. 24.13 லட்சம் கூடுதலாகியுள்ளதற்கு காரணமாகின்றது. அதிகரித்த வருவாய் காரணமாக கூடுதல் செலவு ஓரளவு சரிக்கட்டப்படுகின்றது. இந்த ஆண்டில் திங்கள் ஒன்றுக்கு ஒரு பேருந்து மூலம் கிடைத்த வருவாய் ரூ. 6,751 ஆகும்; (முந்திய ஆண்டில் வருவாய் ரூ. 6.602 ஆக இருந்தது).

16. கன்னியாகுமரி கிளையைப் பொறுத்தவரையில், முந்திய ஆண்டில் ரூ. 1.78 லட்சம் விரயம் ஏற்பட்டிருக்க, இந்த ஆண்டில் ரூ 4.44 லட்சம் ஆதாயம் கிட்டியது. அகவிலைப்படி, நகர ஈட்டுப்படி முதலியவற்றிற்கான ஒப்பளிப்பு போன்ற (பேருந்துகளின் எண்ணிக்கை உயர்வுக்குத் தொடர்பற்ற) செலவு அதிகரித்திருந்த



போதிலும் ஆதாயம் கிட்டியுள்ளது. 1967-68-ல் ஒரு பேருந்து ஒரு திங்களுக்கு ஈட்டிய வருவாய் ரூ. 6,277 ஆக இருக்க, 1968-69-ல் வருவாய் ரூ. 6,958-ஆக இருந்தது.

17. 1969-70-ல் எதிர்பார்க்கப்படும் ரூ. 20.45 லட்சம் விரயம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | சென்னைக் கிளை .. .. .. .. .. | (—) 29·37 |
| (2) | அரசுப் போக்குவரத்து மத்தியப் பணிக்களரி, குரோம்பேட்டை. | (—) 0·39 |
| (3) | கன்னியாகுமரி கிளை .. .. .. .. .. | (—) 1·51 |
| (4) | நீள் தொலைப் போக்குவரத்துப் பணிகள் .. .. | (+) 9·29 |
| (5) | இராணிம்தோட்டம் பணிக்களரி .. .. | (+) 1·53 |

18. மாநகர்ப் போக்குவரத்துப் பணிகளில், முந்திய ஆண்டுடன் ஒப்பிட்டுக் காண்கையில் இந்த ஆண்டில் விரயம் குறைந்துள்ளது. மாநகரில் இயங்கும் போக்குவரத்துப் பணிகள் சீரமைக்கப் பட்டதும், உரிய ஆதாயம் தராத வழித்தடங்களைக் குறைத்ததும் இதற்குக் காரணங்கள். அதன் விளைவாக போக்குவரத்துப் பணிகள் முன்னிலும் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டு, மொத்த வருவாயில் அதிகரிப்பு ஏற்பட்டது. பல்வகை வருவாய்கள் என்ற தலைப்பின்கீழ் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த அதிகரிப்புகள் மூலம் சென்னைக் கிளையைப் பொறுத்தவரை மட்டுமே விரயம் ஓரளவுக்குக் குறைந்ததேயன்றி விரயம் முழுவதும் குறைந்துவிடவில்லை. 1968-69-ம் ஆண்டில் அகவிலைப்படி வழங்கியதாலும், உயர் அதிகாரக் குழுவின் பரிவுரையின்மேல் பணியாளர்களுக்கு அதிகரித்த நாட்படி, படிகள் போன்ற கூடுதலான சலுகைகள் வழங்கியதாலும் ஏற்பட்ட செலவும் பொறுப்பே இதற்குக் காரணமாகும். இந்த ஆண்டில், ஒவ்வொரு சாதாரண பணியாளருக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 1.35 என்பதிலிருந்து ரூ. 2.00 ஆக நாட்படி வீதம் கணிசமான அளவிற்கு உயர்ந்தது. இதன் விளைவாக, ஒரு வலவர்/பயணித் துணை திங்கள் ஒன்றுக்கு ரூ. 16 கூடுதல் வருமானம் பெற்றார்.

19. கடுவிசைப் பேருந்துப் போக்குவரத்துப் பணிகளைப் பொறுத்தவரையில், கட்டணங்கள் குறைக்கப்பட்டபோதிலும், 1968–69-ம் ஆண்டைக் காட்டிலும் அதிக ஆதாயம் கிட்டியது. நீள்தொலைப் பேருந்துப் போக்குவரத்துப் பணிகள் கணக்கில் மாவட்டப் பேருந்துப் போக்குவரத்துப் பணிகளைச் சேர்ந்ததும், சென்னை-திருச்சிராப்பள்ளி, சென்னை-மதுரை மாடிப் பேருந்துகள் ஓட்டுவதன்மூலம் கிடைத்த அதிகரித்த வருவாயும் இதற்குக் காரணமாகும். இரவு நேர மாடிப் பேருந்துப் போக்குவரத்துக்கான கட்டணங்கள் மூன்றும் வகுப்பு இரயில் கட்டணங்களைக் காட்டிலும் குறைவாக உள்ளன என்பதை ஈண்டுக் குறிப்பிடுவது பொறுத்தமாகும்.

20. கன்னியாகுமரி கிளையில் ரூ. 1.51 லட்சம் விரயம் ஏற்பட்ட தற்குக் காரணம், 1968-69-ல் கூடுதல் நாட்படி வழங்கியதும், அக விலைப்படி உயர்வால் ஏற்பட்ட விளைவும் ஆகும்.

தமிழ் நாடு பேருந்துப் போக்குவரத்துத் துறையின் சேம நிதிகள்.

21. தேய்மான சேம நிதி.—பேருந்துகள் ஓடுவதன் விளைவாக அவற்றில் ஏற்படும் பழுதுகளைச் சரிபார்க்கவும் பயனற்றுப்போன இயந்திரப் பாகங்களுக்குப் பதிலாக புதியவற்றை வாங்கவும் ஆகும் செலவைச் சரிக்கட்ட தேய்மான சேம நிதி ஒன்று உள்ளது. 1969-70-ல் மேற்படி நிதியில் சேர்க்கப்பட்ட தொகை, மேற்படி நிதி யிலிருந்து எடுக்கப்பட்ட தொகை ஆகியவற்றைக் குறித்த புள்ளி விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1969 ஏப்ரல் 1-ம் தேதியன்று மேற்படி நிதியில் இருப்பில் இருந்த தொகை. | 7,05·55 |
| 1969–70-ல் சேர்த்த தொகைகள் .. .. .. | 2,04·17 |
| மொத்தம் .. | 9,09·72 |
| 1969–70-ல் இந்நிதியிலிருந்து எடுக்கப்பட்ட தொகை .. | 1,46·10 |
| 1970 மார்ச் 31-ம் தேதியன்று இந்த நிதியில் இருப்பு (எதிர்பார்ப்பது). | 7,63·62 |

துறைக்குச் சொந்தமான பேருந்துகளின் காரணமாகத் தேய் மானச் சேமநிதிக்கு மிகுதியான தொகைகள் சேர்க்கப்பட்டன. அது அரசால் பொதுக்கணக்கில் வைத்துவரப்படுகின்றது. அரசு ஈட்டுப் பத்திரங்களில் ஏற்கெனவே ரூ 38.51 லட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

22. பயணிகள் வசதி நிதி.— தொடக்கத்தில் ரூபாய் 3 லட்சம் தொகையுடன் இந்த நிதி 1960-61-ல் ஏற்படுத்தப்பட்டது. பேருந் துப்போக்குவரத்து நிறுவனம் வளர்ச்சியடைந்துகொண்டே போகையில் பயணிகளின் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவே இந்த நிதி வகை செய்யப்பட்டது. 1965-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் வரையில் இந்த நிறுவனத்தில் தனித் தனிப் பிரிவுகளிலிருந்து கிடைக்கும் நிகர ஆதாயத்திலிருந்து 5 சத வீதம் மேற்படி நிதிக்கு வழங்கப்பட வேண்டுமென்று இருந்தது. 1965-66 முதல் துறை முழுவதற்கும் அதாவது, பிரிவுகள் அனைத்தும் அடங்கிய துறை முழுவதற்கும் கிட்டுகிற நிகர ஆதாயத்தில் 5 சத வீதம் மேற்படி நிதிக்கு வழங்கப்பட வேண்டுமென்று முடிவு செய் யப்பட்டது.



1970 ஏப்ரல் 1-ல் உள்ளவாறு நிதி இருப்பு கீழே காட்டியுள்ள விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1969 ஏப்ரல் 1-ம் நாளன்று இருந்த இருப்பு .. .. | 3·06 |
| 1969–70 ல் சேர்த்த தொகை (நிதி இருப்புகள் மீது வட்டி) | 0·21 |
| மொத்தம் .. | 3·27 |
| 1969–70-ல் இதிலிருந்து வாங்கிய தொகை .. .. | .. |
| 1970 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு (எதிர்பார்ப்பது) .. | 3·27 |

1964 அக்டோபர் திங்கள் 1-ம் தேதிக்கு முன்பு மேற்படி நிதிகளை நிர்வகிப்பதில் இயக்குநருக்கு உதவி செய்வதற்கென சென்னை, கன்னியாகுமரி கிளைகளுக்கு தனிச்சிறப்பு ஆலோசனைக் குழுக்கள் இருந்தன. சென்னை, கன்னியாகுமரி கிளைகளுக்கான பயணிகள் வசதி நிதிக்கான சிறப்பு ஆலோசனைக் குழுக்கள் கலைக்கப் பட்டதால் 1964 அக்டோபர் திங்கள் 1-ம் நாள் முதல் சென்னை, கன்னியாகுமரி கிளைகளின் போக்குவரத்து ஆலோசனைக் குழுக்கள் கலைக்கப்பட்ட குழுக்களின் அலுவல்களையும் கவனித்து வந்துள்ளன.

23. வளர்ச்சி நிதி.—போக்குவரத்துத் துறையின் பெருகிவரும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபாய் 22.5 லட்சம் தொடக்கத் தொகையுடன் இந்த நிதி 1960-61-ல் நிறுவப்பட்டது. 1965 மார்ச் 31-ம் நாள் வரையில் இத்துறையின் தனித்தனிப் பிரிவுகளின் நிகர ஆதாயத்தில் 33-1/3 சதவீதம் மேற்படி நிதிக்குச் செலுத்தப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டிருந்தது. 1965-66 முதல் துறை முழுவதன் நிகர ஆதாயத்தில், அதாவது பிரிவுகள் அனைத்தும் அடங்கிய துறை முழுவதன் நிகர ஆதாயத்தில் 33-1/3 சதவீதம் மேற்படி நிதிக்கு வழங்கப்படுமென்று வகைசெய்யப்பட்டுள்ளது.

1970, ஏப்ரல் 1-ம் நாளன்று இந்த நிதியின் தோராய இருப்பு குறித்த புள்ளி விவரம் வருமாறு :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1969-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளன்று இருப்பு .. | 27·78 |
| 1969–70-ல் சேர்ந்த தொகை (நிதி இருப்புகள் மீது வட்டி) | 1·94 |
| மொத்தம் .. | 29·72 |
| 1969–70-ல் இதிலிருந்து எடுத்த தொகை .. .. | .. |
| 1970 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு (எதிர்பார்ப்பது) .. | 29·72 |

**24. வீட்டு வசதி நிதி.**— தமிழ்நாடு அரசாங்க போக்குவரத்துத் துறை தொழிலாளர் வீட்டுவசதி நிதி எனப்படும் நிதியை அரசு 1962-63-ல் நிறுவியது. இத்துறையின் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதியையும், ஏனைய வசதியையும் செய்து கொடுப்பதற்கான செலவுக்கு வகை செய்வதே இந்த நிதியின் நோக்கமாகும். ஒவ்வோர் ஆண்டும் தனிப்பட்ட முறையில் தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையின் நிகர வருவாயிலிருந்து இந்த நிதிக்கு தொகை வழங்கப்படுகிறது. இவ்வாறு செய்கையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை ஏற்றுக்கொண்ட பொறுப்புகளும், வீட்டுவசதிக்கான அதன் வேலைத்திட்டமும் கருத்தில் கொள்ளப் படுகின்றன. 1970 ஏப்ரல் 1-ம் நாளன்று இந்த நிதியில் இருக்கக் கூடிய இருப்பைக் கீழ்க்கண்ட புள்ளிவிவரம் காட்டுகிறது :—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1969 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு .. .. .. | 10·64 |
| 1969–70-ல் சேர்ந்த தொகை (நிதி இருப்புகள் மீது வட்டி) | 0·74 |
| மொத்தம் .. | 11·38 |
| 1969–70-ல் இதிலிருந்து எடுத்த தொகை .. .. | .. |
| 1970 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு) எதிர்பார்ப்பது) .. | 11·38 |

தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை தொழிலாளர்க்கான வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக, தண்டையார்பேட்டையிலும், குரோம்பேட்டைக்கு அணமையில் உள்ள நெமிலிச்சேரி கிராமத்திலும், நாகர்கோயிலில் நீண்டகரை கிராமத்திலும் நிலம் கையகப் படுத்தப்பட்டது. கோவை, தஞ்சை போன்ற முக்கியமான வெளியூர்களிலும் நிலம் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**25. விபத்து சேம நிதி.**—முதன் முதலாக இந்நிதி 1951 நவம்பரில் ஏற்படுத்தப்பட்டது. பேருந்துகளில் செல்கையில் எதிர்பாராமல் ஏற்படும் விபத்துக்கள் வாயிலாக அவ் விபத்துக்களால் பாதிக்கப்பட்ட மற்றவர்கள் செய்து கொள்ளும் உரிமை கோரிக்கைகளுக்குச் சம்பந்தப்படுகிற செலவைச் சரிக்கட்டப் போதுமான நிதியைப் பேணி வருவதே இந்நிதியின் நோக்கமாகும். ஒவ்வோர் ஆண்டின் வருவாயிலிருந்து ஆண்டு தோறும் மொத்தமாக ரூ. 2,000 என்ற சீரான விதத்தில் அல்லது மேற்படி நிதியில் ரூ. 2 லட்சம் எஞ்சியிருப்பதற்கு அவசியமான வகையில் இவற்றில் எது குறைவோ அத்தொகை மேற்படி நிதிக்குச் செலுத்தப்பட்டது. பேருந்துகளை ஈட்டுறுதி செய்வது தொடர்பான விதிகளை 1965-ல் இந்திய அரசு திருத்தியது. இவ்விதிகளின்படி, ஆண்டொன்றுக்கு வண்டி ஒன்றுக்கு ரூ. 100 அளிக்கப்படவேண்டும். இதன்படி நடப்பாண்டில் இந்நிதி



அமைக்கப்பட்டுள்ளது. பழைய நிதியில் எஞ்சியிருந்த இருப்பு புதிதாக அமைக்கப்பட்ட நிதியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. 1970 ஏப்ரல் 1-ம் நாளன்று மேற்படி நிதியில் இருக்கக்கூடிய இருப்புத் தொகையைக் கீழ்க்காணும் விவர அறிக்கையில் காணலாம் :—

| | |
|---|---|
| 1969 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு .. .. | 0·74 |
| 1969–70-ல் சேர்ந்த தொகை (வருவாயிலிருந்து கொடுக்கப்பட்ட தொகையும், நிதி இருப்புக்களில் கிடைத்த வட்டியும்.) .. .. .. .. | 1·99 |
| மொத்தம் .. | 2·73 |
| 1969–70-ல் இதிலிருந்து எடுக்கும் தொகை .. | 2·50 |
| 1970 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு (எதிர்பார்ப்பது) | 0·23 |

**26. துயர் தணிப்புக் கருணை நிதி.**—இந்நிதியை ஏற்படுத்த அரசு 1960 ஜூன் திங்களில் அனுமதி வழங்கியது. ஊழியர் எவரேனும் அல்லது அவரைச் சார்ந்திருப்போர் எவரேனும் இறக்க நேரிடின் அவரது ஈமச் சடங்குக்காகவும், பெரும் விபத்துக்குள்ளான ஊழியரது உடனடியான செலவுக்கும், போக்குவரத்து துறைப் பேருந்துகளால் ஏற்படும் விபத்துக்களில் சிக்கிய ஏழைகளுக்கு, ஆதாவற்றவர்களுக்கு அல்லது அவர்களுடைய குடும்பத்தினருக்குத் தொகை கொடுக்கவும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. தொடக்கத்தில் இந் நிதிக்கு ரூ. 1,000 செலுத்தப்பட்டது. அரசு தொடக்கத்தில் அனுமதித்த ரூ. 1,000 அளவிற்கு இந்நிதியின் இருப்புத் தொகை இருக்குமாறு செய்ய ஆண்டுதோறும் தொகை சேர்க்கப்படுகிறது.

1970 ஏப்ரல் 1-ம் நாளன்று இருக்கக்கூடிய இருப்புத் தொகையைக் கீழ்க்காணும் விவர அறிக்கையில் காணலாம் :—

| | |
|---|---|
| 1969 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு .. .. | 0·01 |
| 1969–70-ல் சேர்மானங்கள் .. .. .. | 0·04 |
| மொத்தம் .. | 0·05 |
| 1969–70-ல் இதிலிருந்து எடுக்கும் தொகை .. | 0·04 |
| 1970 ஏப்ரல் 1-ம் நாளன்று இருப்பு (எதிர்பார்ப்பது). | 0·01 |

### பேருந்து செயல்படுவதால் ஏற்படும் பலன்கள்.

27. ஒரு போக்குவரத்து நிறுவனத்தின் திறன், போக்குவரத்துப் பணிக்கென வழங்கப்படும் பேருந்துகளின் சதவீதத்தையும் சாலைகளில் ஓட்டப்படும் பேருந்துகளின் சதவீதத்தையும் பொறுத்த

[1970 மார்ச் 21

தாகும். துறை முழுவதற்குமாக, செயல்படும் திறன், சாலையில் ஓட்டப்படும் பேருந்துகள் இவைபற்றிக் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

| ஆண்டு. (1) | சராசரி பேருந்துகளின் எண்ணிக்கை. (2) | செயல்பட சராசரியாக வழங்கிய பேருந்துகளின் எண்ணிக்கை. (3) | செயல்படும் திறன். (4) | சாலையில் ஓட்டப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை. (5) | மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கைக்கு சாலையில் ஓட்டப்பட்டுள்ளவற்றின் சதவீதம். (6) |
|---|---|---|---|---|---|
| | | | சத வீதம். | | சத வீதம். |
| 1968–69 .. .. | 1,860 | 1,094 | 91 | 1,599 | 86 |
| 1969–70 (எதிர் பார்ப்பது). | 2,012 | 1,830 | 91 | 1,733 | 86 |

இவ்வாண்டில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை, அவை பயணம் செய்த மைல்கள், வசூல் முதலியவற்றை குறித்த விவரங்கள் கீழே உள்ள புள்ளிவிவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | 1968–69. | 1969–70. |
|---|---|---|---|
| 1. | ஆண்டுத் தொடக்கத்தில் பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை. | 1,731 | 1,946 |
| 2. | பெருக்கியவை .. .. .. .. | 215 | 118 |
| 3. | மாற்றியமைக்கப்பட்டவை .. .. | 101 | 225 |
| 4. | ஆண்டு முடிவில் பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை. | 1,946 | 2,064 (எதிர்பார்க்கப் படுவது). |
| 5. | பயணம் செய்த மைல்கள் .. .. | 987·25 லட்சம். | 1,068·20 லட்சம் (எதிர்பார்க்கப் படுவது). |
| 6. | சராசரி நாள் வசூல் .. .. .. | ரூ. 3·94 லட்சம். | ரூ. 4·24 லட்சம். (எதிர்பார்க்கப் படுவது). |



1970 மார்ச் 21]

1968-69-ம் ஆண்டில் அடைந்த முன்னேற்றமும் (1969 டிசம்பர் 31 வரை) 1969–70-ம் ஆண்டு முன்னேற்றமும் கீழே உள்ள புள்ளி விவர அறிக்கையில் காணலாம் :—

சென்னைக்கிளை (மாநகர், புறநகர்ப்பகுதி, மாவட்ட விரைவுப் பேருந்துகள்).

| | | 1969 மார்ச் 31 வரை. | 1969 டிசம்பர் 31 வரை. |
|---|---|---|---|
| 1 | மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை .. | 1,651 | 1,666 |
| 2 | அட்டவணையிடப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை. | 1,432 | 1,416 |
| 3 | மொத்த வழித்தடங்கள் எண்ணிக்கை .. | 490 | 494 |
| 4 | வழித்தட மைல்கள், மொத்தம் .. .. | 31,020 | 32,220 |
| 5 | அட்டவணையிடப்பட்ட தடவைகள் அல்லது ஒற்றைப் பயணத் தடவையின் (Singles) எண்ணிக்கை. | 17,899 | 18,090 |
| 6 | அட்டவணையிடப்பட்ட நாள்தோறும் ஓடிய மைல்கள். | 241,184 | 241,866 |
| 7 | நாள்தோறும் ஏற்றிச் செல்லப்படும் சராசரி பயணிகள். | 970,000 | 1,040,000 |

**கன்னியாகுமரி கிளை**

| | | 31—12—68 வரை. | 31—12—69 வரை. |
|---|---|---|---|
| 1 | மொத்தப் பேருந்துகளின் எண்ணிக்கை .. | 286 | 302 |
| 2 | அட்டவணையிடப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை. | 249 | 271 |
| 3 | மொத்த வழித்தடங்கள் .. .. | 131 | 141 |
| 4 | வழித்தடத்தில் மொத்தம் ஓடிய மைல்கள். | 3,429 | 4,402 |
| 5 | அட்டவணையிடப்பட்ட தடவைகளின் அல்லது ஒற்றைப் பயணத் தடவையின் எண்ணிக்கை. | 2,607 | 2,709 |
| 6 | அட்டவணையிடப்பட்ட நாள்தோறும் ஓடிய மைல்கள். | 45,170 | 46,881 |
| 7 | நாள்தோறும் ஏற்றிச் செல்லப்படும் சராசரி பயணிகள். | 197,791 | 207,100 |

28. சென்னை மாநகரப் பேருந்துப்பணிகளில் புகுத்தப்பட்ட கீழ்க்காணும் புதிய வழித்தடங்களாவன :—

1 5-J. தரமணி—தி. நகர் .. .. .. 1 பேருந்து.
2 5-K. தரமணி—மயிலாப்பூர் .. .. 1 பேருந்து.
3 45-A. விவேகாநந்தர் இல்லம்—சைதாப்பேட்டை. 2 பேருந்துகள்

[1970 மார்ச் 21

29. கீழே சொல்லியுள்ள வழித்தடங்களில் பேருந்துகள் எண்ணிக்கை பெருக்கப்பட்டது :—

| | | | |
|---|---|---|---|
| 1 | வழித்தடம் எண். | பாரிமுனை-நந்தம்பாக்கம் | 3 பேருந்துகள். அதிகரிக்கப்பட்டன |
| 2 | வழித்தடம் எண் 23. | பாரிமுனை-அடையாறு | 1 பேருந்து அதிகரிக்கப்பட்டது. |
| 3 | வழித்தடம் எண் 19-C. | பிராட்வே-ருட்டுக்காடு | 1 பேருந்து அதிகரிக்கப்பட்டது. |
| 4 | வழித்தடம் எண் 56-D. | மவுண்டு ரோடு-மணலி | 2 பேருந்துகள் அதிகரிக்கப்பட்டன. |
| 5 | வழித்தடம் எண் 39. | அம்பத்தூர் தொழில் பேட்டை-ஹாமில்டன் பாலம். | * 2 பேருந்துகள் அதிகரிக்கப்பட்டன. |

* (எழும்பூருக்கும் அம்பத்தூர் தொழில் பேட்டைக்குமிடையே இரண்டு பேருந்துகள் விடப்பட்டன).

| | | |
|---|---|---|
| வழித்தடம் எண் 19. | மவுண்ட்சாலை-திருவான்மியூர். | 2 பேருந்துகள் அதிகரிக்கப்பட்டன. |

30. கீழ்க்காணும் வழித்தடங்கள் நீட்டிக்கப்பட்டன :—

| | | | |
|---|---|---|---|
| 1 | வழித்தடம் எண் 11-B. | பாரிமுனை-தி. நகர் | அசோக நகர் வரை நீட்டிக்கப்பட்டது. |
| 2 | வழித்தடம் எண் 11-D. | பாரிமுனை-ரங்கராஜபுரம். | டி |
| 3 | வழித்தடம் எண் 12F. | விவேகநந்தர் இல்லம்-ரங்கராஜபுரம். | டி |
| 4 | வழித்தடம் எண் 17-C. | டபிள்யூ. எஸ். இன்சுலேட்டர்ஸ்-கோடம்பாக்கம் ரயில் நிலையம். | மவுண்டு ரோடுக்கு நீடிக்கப்பட்டது. |

கீழ்க்காணும் வழித்தடங்கள் ஆதாயமற்றவை என்பதால் ரத்து செய்யப்பட்டன. முதலில் உள்ள 5, 5-B 12-B வழித்தடங்களில் பயணிப் பொதுமக்களுக்கு வசதிகளும் கொடுக்கப்பட்டன :—

| | | |
|---|---|---|
| 1 | வழித்தடம் எண் 5-A | பாரீமுனை—அபிராமபுரம். |
| 2 | வழித்தடம் 5-C | மயிலாப்பூர்—சைதாப்பேட்டை. |
| 3 | வழித்தடம் எண் 5-G | அடையாறு—பாரீமுனை. |
| 4 | வழித்தடம் எண் 12-D | கோடம்பாக்கம் ரயில்வே நிலையம்—மந்தைவெளி. |
| 5 | வழித்தடம் எண் 12-G | வடபழனி—திருவான்மியூர். |

31. பேருந்துகளை நேரடியாக ஏலம் போடாமல் அவற்றை அறுதியிட்ட மதிப்பில் மாநகரக் கல்லூரிகளுக்கு வழங்கிவரத் தொடங்கியது. இத்திட்டத்தின்கீழ், மாநிலக் கல்லூரிகளுக்கு இதுவரை இரண்டு பேருந்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. கிண்டி தொழில்



1970 மார்ச் 21]

நுட்ப நிறுவனங்களுக்கு 3 பேருந்துகளும் குன்றத்தூரில் உள்ள இந்து தேசியக் கல்லூரிக்கு 2 பேருந்துகளும் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் போக்குவரத்து வசதிக்காக இந்தப் பேருந்துகள் கல்லூரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், மாணவர்கள் தனிப் பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ளன.

32. 1969 டிசம்பர் முதல், 1970 பிப்ரவரி வரையுள்ள காலத்தில் சந்தைகள், திருவிழாக்கள், கலை நிகழ்ச்சிகள், மாநாடுகள் முதலிய வற்றோடு மூன்று பொருட்காட்சிகள் தொடர்பாக ஏற்பட்ட கூடுதல் போக்குவரத்தைச் சரிசெய்யத் தனிப் பேருந்துகள் விடப்பட்டன. நெரிசல் மிகுந்த போக்குவரத்து அதிகமுள்ள பேருந்து நிறுத்துமிடங்களில் போக்குவரத்து பயணச் சீட்டுகள் வழங்க நிலைய பயணித் துணைவர்கள் நியமிக்கப்பட்டு முறைப்படுத்தப்படுகிறது.

33. நெருக்கடி நேரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக தற்போது 71-ம் எண் வழித்தடத்தில் ஓடிக்கொண்டிருக்கும் தொடர் பேருந்துடன்கூட (Trailer buses) 1969–70-ம் ஆண்டில் 18, 21-., 15-ம் எண் வழித்தடங்களில் மேலும் மூன்று தொடர் பேருந்துகள் விடப்பட்டன. மேலும், ஒரே சீரான அகலமுள்ள முக்கிய சாலைகளில் தொடர் பேருந்துகள் விடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மாநகர வழித்தடங்களில் சோதனை நடைமுறையாக ஓட்டப்படுவதற்காக மாடிப்பேருந்து ஒன்று கட்டுவதற்கும் இத்துறை ஆணையிட்டுள்ளது.

34. இத்துறையினால் ஓட்டப்படுகின்ற நகரப் பேருந்துகளில் விடுமுறைநாட் சலுகைப் பயணச் சீட்டுகள் வழங்கப்பட வேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து முறையீடுகள் வந்தன. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு 1967-ம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 15-ம் நாள் முதல் "விருப்பம்போல் பயணம் செய்வதற்கான" பயணத்தைச் சீட்டுகளை பயணிகளுக்கு வழங்குவதற்கான திட்டமொன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இப் பயணச் சீட்டுகள் அனைத்தும் நகர வழித்தடங்கள் அனைத்துக்கும் செல்லுபடியாகும். இப்பயணச் சீட்டுகள் விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன அவை எந்த நாளன்று விற்பனை செய்யப்படுகின்றனவோ, அந்த நாளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். இப் பயணச் சீட்டு ஒவ்வொன்றுக்குமுரிய மதிப்பு ரூ. 150 என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

235. கீழ்க்காணும் மாவட்ட வழித்தடங்கள் நீடிக்கப்பட்டன :—

| | | |
|---|---|---|
| 1 வழித்தட எண் 108 | .. | சென்னை—சதுரங்கப்பட்டணம்—கல்பாக்கம் நகரியம் வரை நீடிக்கப்பட்டுள்ளது. |
| வழித்தட எண் 224 | அ | பாண்டிச்சேரி—காலிங்கரல்—நாகப்பட்டினம் வரை நியமிக்கப்பட்டுள்ளது. |

மாவட்ட வழித்தடங்களைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டில் போக்குவரத்து ஓரளவுக்கு அதிகரிக்கப்பட்டது மதுரை-திருநெல்வேலி பிரிவில் ஒற்றைப் பயணத் தடவைகளின் எண்ணிக்கை

4-லிருந்து 6-ஆக அதிகரிக்கப்பட்டது. அதுபோலவே, மதுரை-பழனி, மதுரை-சேலம் பிரிவுகளில் ஒற்றைப் பயணத் தடவைகளின் எண்ணிக்கை 4-லிருந்து 6-ஆக அதிகரிக்கப்பட்டது.

36. தற்போது 154 சீர்வசதிப் பேருந்துகளும், 10 மாடிப் பேருந்துகள் உட்பட 59 நீள்தொலை வழித் தடங்களும் இயக்கப்படுகின்றன. நீளதொலைப் பேருந்துப் பணிகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தை அதிகரிப்பதற்காக ஒவ்வொரு வகையான சீர்வசதிப் பேருந்துகளின் இருக்கை எண்ணிக்கை 35-லிருந்து 39-ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. நீள்தொலைப் பணிக்காகத் தற்போது கட்டப்படும் பேருந்துகளில் இருக்கைகளின் எண்ணிக்கை 48 வரை உயர்த்தப்பட்டுள்ளது. லேலண்டு காமெட் அடிச்சட்டத்தில் சாதாரண காமெட் 370 என்ஜினைப் பயன்படுத்தி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்தினால் கட்டப்பட்ட மாடிப்பேருந்து 1969–70-ம் ஆண்டில், சென்னை-திருச்சி டிரங்க் வழித்தடத்தில் விடப்பட்டது. பேருந்து செயல்படுவதைக் கண்காணித்த பிறகு இந்த வழித்தடத்தில் மேலும் சில பேருந்துகளும் திண்டுக்கல் வழியான சென்னை-மதுரை வழித்தடத்திலும் இத்தகைய பேருந்துகள் விடப்பட்டன. தற்போது 12 ஒற்றைப் பயணத் தடவைகளில் திருச்சி செல்லும் 6 பேருந்துகளும், 12 ஒற்றைப் பயணத் தடவைகளில் மதுரை செல்லும் 4 பேருந்துகளுமாக 10 பேருந்துகள் விடப்படுகின்றன. இப்பேருந்துகளின் கீழ்ப்பகுதியில் 48 இருக்கைகளும், முதல் மாடியில் 24 இருக்கைகளும் உள்ளன. முதல் மாடியின் உயரம் பயணிகள் காரில் உள்ள உயரத்துக்கு சரியானதாகும். விரைவுப் பேருந்துப் பணிகளின் ஆதாயம் அதிகரித்துள்ளதற்கு, துறையின் முக்கியமான டிரங்க் சாலையில் மாடிப் பேருந்துகள் விடப்பட்டது பெருமளவுக்கு காரணமாகும்.

37. இந்த ஆண்டில், சென்னையிலிருந்து தஞ்சாவூர் செல்லும் விரைவுப் பேருந்து வழித்தடம் சென்னை-செங்கற்பட்டு-திண்டிவனம்-விக்கிரவாண்டி, பண்ருட்டி, சேத்தியாத்தோப்பு, கீழ் அணைக்கட்டு, கும்பகோணம், பாபநாசம், தஞ்சாவூர் என்ற குறுக்கு வழியாகச் செல்லும்படியாக மாற்றியமைக்கப்பட்டது. இதனால் வண்டியின் ஓட்ட நேரத்தில் 92 நிமிடமும், கட்டணத்தில் ரூ. 1.70 காசும் குறைக்கப்பட்டது. இடவசதி விகிதம் மனநிறைவளிக்கும் வகையில் காணப்படுகிறது. பாண்டிச்சேரி வழியாக தஞ்சாவூருக்குச் செல்லும் ஏனைய வழித்தடங்களையும் இந்த குறுக்கு வழியில் மாற்றியமைக்கவேண்டிய அவசியத்தை அரசு ஆய்வுசெய்து வருகிறது.

38. கன்னியாகுமரி கிளை—கூடுதல் பணிகள்.

| | | |
|---|---|---|
| 1 | மாணவர் தனிப்பேருந்து-நாகர்கோவில்-தேவர்க்குளம்பி. | 1 பேருந்து |
| 2 | நாகர்கோவில்—திங்கட் சந்தை .. .. .. | 1 பேருந்து |
| 3 | களியக்காவிளை—திருவட்டாறு .. .. .. | 1 பேருந்து |
| 4 | நாகர்கோவில்—குமராபுரம் .. .. .. | 1 பேருந்து |
| 5 | நாகர்கோவில்—தங்கப்பட்டினம் .. .. | 1 பேருந்து |



பணிக்களரிகள்.

39. குரோம்பேட்டையிலும் நாகர்கோயிலிலும் உள்ள பணிக்களரிகளின் வேலை முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| ஆண்டு. | தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறைக்கென துறையினரின் பணிக்களரிகளில் கட்டப்பட்ட பேருந்துக் கூடுகளின் எண்ணிக்கை. | தனியார் நிறுவனங்களில் கட்டப்பட்ட பேருந்துக் கூடுகளின் எண்ணிக்கை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1968–69 | 348 | .. | 348 |
| 1969–70 (எதிர்பார்க்கப் படுவது). | 244 | .. | 244 |

பணிக்களரிகளின் எஞ்சிய திறன், பிற துறைகட்கு வேண்டியவற்றைச் செய்யப் பயன்பட்டது.

டயர் புதுப்பிக்கும் பிரிவுகள்.

40. சென்னையில் உள்ள டயர் புதுப்பிக்கும் பிரிவு மூன்று முறை மாற்றுகளில் செயல்படுகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளில் புதுப்பிக்கப்பட்ட டயர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | புதுப்பிக்கப்பட்ட டயர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1968–69 .. .. .. .. .. .. | 15,720 |
| 1969–70 (ஜனவரி 1970) .. .. .. .. | 16.615 |

நாகர்கோயிலிலுள்ள தொழிற்சாலை, புதுப்பிக்கப்பட்ட டயர்களுக்கான தேவையைச் சரிக்கட்டுவதற்காக மூன்று முறைமாற்றுகளில் செயல்படுகிறது. டயர்கள் புதுப்பிக்கப்படுவதால் புதிய டயர்களுக்காகும் செலவு குறைகின்றது.

டயர் புதுப்பிக்கும் பிரிவுகளில் டயர்கள் புதுப்பிக்கப்படுவதுடன், ட்யூப்களும் டயர்களும் ஒட்டிச் செப்பனிடப்படுகின்றன.

பணியாளர்.

41. இத்துறையில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | சென்னைப் பிரிவு. | கன்னியா குமரிப் பிரிவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (அ) தொழில் நுட்பப் பணியாளர்— | | | |
| (i) மேற்பார்வைப் பணியாளர் | 309 | 49 | 358 |
| (ii) மேற்பார்வைப் பணியாளர் நீங்கலான பிற பணியாளர் | 5,423 | 987 | 6,410 |
| மொத்தம் .. | 5,732 | 1,036 | 6,768 |

| | சென்னைப் பிரிவு. | கன்னியா குமாரிப் பிரிவு. | மொத்தம் |
|---|---|---|---|
| (இ) போக்குவரத்துப் பணியாளர்— | | | |
| (i) மேற்பார்வைப் பணியாளர் | 543 | 84 | 627 |
| (ii) மேற்பார்வைப் பணியாளர் நீங்கலான பிற பணியாளர். | 7,410 | 1,540 | 8,950 |
| மொத்தம் .. | 7,953 | 1,624 | 9,577 |

## பணியாளர் நலன்.

**42.** கடந்த ஆண்டுகளைப் போல், தொழிலாளர் கல்வித் திட்டத்தின் பயன்கள் இத்துறையினரால் முற்றிலும் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. தொழிலாளர் ஆசிரியர்கள் மூவருக்கும் பயிற்சி பெற்ற பிரிவு நிலை வகுப்புப் பயிற்சியாளர்கள் 345 பேருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. பிரிவு நிலை வகுப்புகளில் பயிலும் பணியாளர்களுக்கு, அவ்வகுப்புகளின் கால அளவு 45 நிமிடங்களுக்கு மேற்படுகையில் கூடுதல் ஊதியமும் அளிக்கப் படுகின்றது. இந்த ஊதியம் 1967-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 11-ம் நாள் முதல் கொடுக்கப்படுகிறது.

## பயிற்சி.

**43.** (அ) **1961-ம்** ஆண்டு பயிற்சியாளர்கள் சட்டத்தின்கீழ், வேலை பயிலுவோருக்குப் பயிற்சியளிக்கும் திட்டம், இந்த ஆண்டும் தொடர்ந்து செயல்படுகிறது. இச்சட்டத்தின்கீழ் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை இந்த ஆண்டு ஆய்வு செய்யப்பட்டு கீழே குறிப்பிட்டவாறு முடிவு செய்யப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் பயிற்சி பெறும் காலம் 2 ஆண்டுகளாகும்.

### பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை.

| தொழில். | சென்னைக் கிளை. | அரசுப் போக்கு வரத்து மத்திய பணிக் களரி. | கன்னியா குமரி பிரிவு. | மொத் தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கம்மியர் (மோட்டார் வண்டி). | 101 | 16 | 19 | 136 |
| உலோகம் பற்றவைப்பவர் | 4 | 3 | 2 | 9 |
| கடைசல் இயந்திரப் பணியாளர் | .. | 3 | 1 | 4 |
| பெஞ்சு பிட்டர் | .. | .. | 1 | 1 |
| | 105 | 22 | 23 | 150 |



வேலை பழகுவோருக்குக் கீழ்க்கண்ட விதத்தில் பயிற்சி உதவித் தொகை வழங்கப்படுகிறது :—

| | சென்னையில் | மாநிலப் போக்கு வரத்து மத்திய பணிக்களரியில். | கன்னியா குமரிக் கிளையில் |
|---|---|---|---|
| | (திங்களொன்றுக்கு ரூபாய்.) | | |
| 1 பயிற்சியின் முதல் ஆண்டின் போது. | 70 | 60 | 60 |
| 2 பயிற்சியின் 2-வது ஆண்டின் போது: | 80 | 70 | 70 |

பயிற்சியாளர்கள் பயிற்சியை வெற்றிகரமாக முடித்ததும், இயன்ற அளவு இத்துறையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். பயிற்சி முடித்தோரை அவர்கள் திறமை பெற்றுள்ள தொழிற் பிரிவில், குறிப்பாக யந்திரத் (மோட்டார் வாகனங்கள்) தொழிற் பிரிவில் வேலைக்குத் தெரிந்தெடுக்க, இந்தப் பணித்திட்டம் இத் துறைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

(இ) இந்திய அரசின் பயிற்சித் திட்டத்தின்கீழ், பொறியியலில் பட்டம் பெற்றோருக்கும் பட்டயத்தகுதி பெற்றோருக்கும் பயிற்சியளிக்கும் பணித்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

(உ) துறையைச் சேர்ந்த பணிக்களரியில், உதவித்தொகை பெறும் வேலை பழகுவோரைப் போன்று, பட்டயத் தகுதி பெற்றோருக்கும், பட்டம் பெற்றோருக்கும் கூடப் பயிற்சியளிக்கப்படுகிறது. ஒரே நேரத்தில், இத்துறை, நகரப் பணிமனைகளில் 40 பேருக்கும், மாநிலப் போக்குவரத்து மத்தியப் பணிமனையில் 21 பேருக்கும் கன்னியாகுமரிக் கிளையில் 30 பேருக்கும் பயிற்சியளித்து வருகிறது.

(எ) இத்துறையைச் சேர்ந்த பணியாளர்களின் ஆண்மக்களுக்கும் சார்ந்து வாழ்வோர்க்கும் ( (Sons and dependants of employees) பயிற்சியளிக்கும் பணித் திட்டமும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஓராண்டு காலப் பயிற்சியின்போது, முதல் ஆறு மாத காலத்திற்கு ரூ. 1 விதமும், அடுத்த ஆறு மாத காலத்திற்கு ரூ. 1.50 விதமும் பயிற்சியாளர்களுக்கு நாள்படி வழங்கப்படுகிறது; பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின்னர் அவர்கள் இத் துறையில் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

## தொழிலாளர்களுக்குப் பணி நலன்கள்.

**44.** கடந்த ஆண்டு ஆய்வுரையில் விளக்கப்பட்டுள்ள நலன்களுக்கு மேலாக இந்த ஆண்டில் கீழ்க்கண்ட நலன்களும் தொழிலாளர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

1968 ஏப்ரல் 6-லிருந்து இரவுப்பணிப்படி அளிக்கும் சலுகை, காவல் காப்புப் பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. உயர் நிலைக்குழுவின் பரிந்துரைகளின் பேரில் படிவீதங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. படி வீதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | பதவி இனம். | ஓரிரவிற்கு இரவுப்பணிப் படி. ரூ. |
|---|---|---|
| 1. | பாதுகாப்பு அதிகாரி .. .. | 1.60 |
| 2. | காவல் காப்பு மேற்பார்வையாளர் .. | 1·10 |
| 3. | காவலாளி .. .. .. | 1·40 |

45. ஒவ்வொரு நகரப் பணிமனைக்கும் அரசாங்கப் போக்குவரத்து மத்தியப் பணிக்களரியிலுள்ள பணிக்களரிக்கும், கன்னியாகுமரிப் பிரிவிற்கும் மருந்தகங்கள் உள்ளன. இந்த மருந்தகங்களில் இருப்பு இல்லாததும், மருத்துவத்திற்குப் பணியாளர்கள் விலைக்கு வாங்கியதுமான விலை உயர்ந்த மருந்துகளின் செலவை அரசு திருப்பித் தருகிறது. இவற்றுக்கு மேலாக இத் துறையுடன் குடும்பநலத்திட்டப் பிரிவு ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது.

46. அபாராத நிதியிலிருந்து, காயமடைந்த தொழிலாளர்களுக்கு நிதியுதவி அளிக்க ரூ. 50-ம் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிதியுதவி அளிக்க ரூ. 440-ம் செலவிடப்பட்டது.

47. முந்திய ஆண்டில் அளிக்கப்பட்ட பொழுதுபோக்கு வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டில் இதற்கென அரசு ரூ. 8,000 அளித்துள்ளது. 1968-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 23-ஆம் நாளிலிருந்து ஒரு நூல் நிலையம் செயல்பட்டு வருகிறது. கோயம்புத்தூர், சேலம் மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய மண்டலத் தலைமையிடங்களில் பொழுதுபோக்கு மன்றங்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

48. 1964-ஆம் ஆண்டு மே திங்கள் 1-ஆம் நாள் முதல் நியாய விலைக்கடை செயல்பட்டுவருகிறது. பங்கீட்டுப் பொருள்களனைத்தும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. தொழிலாளர்களுக்குக் கடன் வசதியும் செய்யப்பட்டுள்ளது. தற்போது நியாயவிலைக் கடையில் 2,607 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். அரிசி வழங்குவதை, மாத ஊதியம் ரூ. 200-க்குக் குறைவாகப் பெறுவோருக்கு மட்டுமே என்று வரையறுக்குமாறு, அரசு அண்மையில் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவின்படி மலிவு விலை அரிசி வழங்கும் திட்டம் 1,404 பணியாளர்களுக்கு நன்மை பயக்கிறது.

பொதுமக்கள் தொடர்புப் பணிகள்.

49. (i) 1968-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ஆம் நாள் வரையில் நீள் தொலைப் போக்குவரத்திற்கு இருக்கை ஒதுக்கும் செய்யப்பட்ட பயணச் சீட்டுகள் தொடர்பாகத் திருப்பிச் செலுத்



தப்படும் தொகை தலைமையிட அலுவலகத்தில் மட்டும் திருப்பிச் செலுத்தப்பட்டது. இதனால் பயணம் செய்யும் பொதுமக்களுக்குப் பெருமளவு இடர்பாடும், பணம் பெறுவதில் காலதாமதமும் ஏற்பட்டது. 1968-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ஆம நாள் முதல் இத்தொகையை அப்பயணச் சீட்டுகள் வாங்கப்பட்ட இடத்தில் அங்கு வசூலான தொகையிலிருந்து அளிக்கப்பட உத்திரவிடப்பட்டது. இதனால் பயணிகள் தங்கள் தொகையைத் திருப்பிப் பெற்றுக்கொள்ள வசதி ஏற்பட்டது. இதனால இத்துறைக்கும பொதுமக்களுக்கும் உள்ள தொடர்பு பெருமளவில மேம்பட்டது.

(ii) பொதுமக்களிடமிருந்து வரும் அதிக அளவு புகார்களும், குறைகளும் உடனடியாகக் கவனிக்கப்படுகின்றன. நேரங்களை மாற்றுதல், வழித்தடங்களை நீட்டித்தல், வழித்தடங்களை மாற்றுதல் ஆகிய பணிகள் பயணம் செய்வோரின் வசதிக்கேற்பத் தகுந்தவாறு செய்யப்படுகின்றன.

(iii) இழந்த பொருள் பிரிவிற்குப் பயணிகளின் 1,859 பொருள்கள் வந்து சேர்ந்தன. அவற்றில் 885 பொருள்கள் அவற்றை இழந்தவரிடமே சேர்ப்பிக்கப்பட்டன. எஞ்சிய பொருள்கள் உரியவரிடம் சேர்ப்பிக்க காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

(iv) செய்தித்தாள் மூலமும், அனைத்திந்திய வானொலி மூலமும் முக்கிய அறிவிப்புகளை மக்களுக்கு அறிவிக்க 45 செய்திக் குறிப்புகள் இத்துறையால் வெளியிடப்பட்டுள்ளன.

(v) ஏற்பு பெற்ற அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற பேருந்தில் பயணம் செய்ய குருடர்களுக்கும், உடல் ஊனம் உடையவர்களுக்கும் இத்துறை, பேருந்து சீட்டுகள் அளித்து வருகிறது.

மோட்டார் வண்டிகள் பேணுதல் நிறுவனம்.

50. 1955-ம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள், 15-ஆம் நாள் முதல் செயல்படும் மோட்டார் வண்டிகள் பேணுதல் நிறுவனம், அதன் நடவடிக்கைகளை விரிவுபடுத்திக் கொண்டது. தற்போது இந்த நிறுவனத்தினால், அரசின் பல்வேறு துறைகளுக்குச் சொந்தமான 2,000 வண்டிகளுக்குமேல் பேணப்பட்டு வருகின்றன.

51. மூன்று நிலைகளில் மோட்டார் வண்டிகள் பேணுதல் நிறுவனத்தின் முழு அமைப்பையும் சீரமைப்பது ஏற்கெனவே அரசினால் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கூடுதல் பணியாளர்களை நியமித்தல், கருவிகளையும் சாதனங்களையும் வழங்குதல் மத்தியக் கொள்முதல் சேமிப்புப் பிரிவை ஏற்படுத்தல் ஆகியவைகளுக்கு ஒப்பளிப்பு வழங்குவது குறித்த முதல் நிலை முடிக்கப்பட்டுள்ளது. சென்னை, மத்தியப் பணிக்களரிக்காகவும், சேலம் வட்டாரப் பணிக்களரிக்காகவும் புதிய கட்டிடங்களைக் கட்டுதல், மதுரையிலும், தஞ்சாவூரிலும் உள்ள பணிக்களரிகளுக்குச் சேர்க்கைகளுடன் தற்போதுள்ள கட்டிடங்களை விரிவு படுத்துதல் ஆகியவை இரண்டாம் நிலையில் அடங்கும். சேலத்தில் பணிக்களரி

அமைப்பதற்கான புதியக் கட்டடம் ஒன்று ஏற்கெனவே கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அதில் பணிக்களரி அமைக்கப்பட்டுவிட்டது. சென்னை மத்திய பணிக்களரிக்காக புதியக் கட்டடம் ஒன்று வேளச்சேரியில் தற்போது கட்டப்பட்டு வருகிறது.

52. சமீபத்தில், வேளச்சேரியில் பணிக்களரி கட்டும் பணியை முடிப்பதற்கு சுமார் ரூ. 2.44 லட்சம் கூடுதல் நிதியை அரசு ஒப்பளித்துள்ளது. இன்னும் சில திங்களுக்குள் மேற்படிபணி முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சாவூர் வட்டார பணிக்களரியின் தற்போதுள்ள கட்டிடங்களுக்கு சில சீர்திருத்தங்களும் சேர்க்கைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. மதுரை வட்டார பணிக்களரிக்கும் கொட்டகை கட்டும் பணியையும் மற்ற சீர்திருத்தப் பணியையும் 1970–71-ஆம் ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

53. கோயம்புத்தூரிலும், கன்னியாகுமரியிலும் புதிய பணிக்களரி திறப்பது குறித்த முதல் நிலையை 1971–72-ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிட்டிருக்கிறது.

54. 1968 டிசம்பர் திங்களில் கார் செப்பனிடும் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது. அமைச்சர்களின் கார்களையும், தலைமைச் செயலகம், அரசு விருந்தினர் மாளிகை முதலியவற்றின் வண்டிகளையும் செப்பனிடுவதற்காகவே இது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

### விவர அறிக்கை I

**சாலையில் செல்லும் பேருந்துத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கையும் வண்டிகளின் சராசரி எண்ணிக்கைகளும்.**

| ஆண்டு. | இந்த ஆண்டு முடிவில் பேருந்துத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை. | இந்த ஆண்டில் சாலையில் செல்லும் வண்டிகளின் சராசரி எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1959–60 .. .. .. | 561 | 386 |
| 1960–61 .. .. .. | 695 | 537 |
| 1961–62 .. .. .. | 770 | 569 |
| 1962–63 .. .. .. | 814 | 629 |
| 1963–64 .. .. .. | 950 | 690 |
| 1964–65 .. .. .. | 1,706 | 789 |
| 1965–66 .. .. .. | 1,256 | 937 |
| 1966–67 .. .. .. | 1,373 | 1,069 |
| 1967–68 .. .. .. | 1,731 | 1,259 |
| 1968–69 .. .. .. | 1,946 | 1,599 |
| 1969–70 (எதிர்பார்க்கப்படுகிறது). | 2,064 | 1,733 |



### விவர அறிக்கை II

**மாற்றியமைக்கப்பட்ட அதிகரிக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை.**

| ஆண்டு. | மாற்றியமைக்கப் பட்ட பேருந்துத் தொகுதிகளின் எண்ணிக்கை. | அதிகரிக்கப்பட்ட பேருந்துத் தொகுதிகளின் எண்ணிக்கை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1959–60 .. | 114 | 110 | 124 |
| 1960–61 .. | 35 | 134 | 169 |
| 1961–62 .. | 11 | 75 | 86 |
| 1962–63 .. | 130 | 44 | 174 |
| 1963–64 .. | 43 | 136 | 179 |
| 1964–65 .. | 137 | 126 | 263 |
| 1965–66 .. | 113 | 180 | 293 |
| 1966 67 .. | 105 | 117 | 222 |
| 1967–68 .. | 151 | 358 | 509 |
| 1968–69 .. | 101 | 215 | 316 |
| 1969–70 .. (எதிர்பார்க்கப் பட்டது.) | 225 | 118 | 343 |

## விவர அறிக்கை III.

**1959-60-லிருந்து 1969-70 வரையிலான ஆண்டுகளில் வரவு-செலவு, நிகர வருவாய், லாபம் இவற்றின் விவரங்கள்.**

| ஆண்டு. (1) | மொத்த. வருவாய். (2) | செலவு. (3) | நிகர வருவாய் (4) | நிதி. (5) | நிகர லாபம். (6) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1959–60 .. .. .. .. .. | 2,66·53 | 2,01·70 | 64·83 | 37.73 | 27·10 |
| 1960–61 .. .. .. .. .. | 3,16·27 | 2,39·67 | 76·60 | 61·37 | 15·23 |
| 1961–62 .. .. .. .. .. | 3,91·65 | 2,97·21 | 94·44 | 75·81 | 18·63 |
| 1962–63 .. .. .. .. .. | 4,68·96 | 3,78·72 | 90·24 | 77·82 | 12.42 |
| 1963–64 .. .. .. .. .. | 5,50·83 | 4,87·10 | 63·73 | 91·82 | (—)28·09 |
| 1964–65 .. .. .. .. .. | 6,75·82 | 5,89·43 | 86·39 | 1,04·63 | (—)18·24 |
| 1965–66 .. .. .. .. .. | 8,39·27 | 7,40·67 | 98·60 | 1,12·99 | (—)14·39 |
| 1966–67 .. .. .. .. .. | 9,68·15 | 8,96·55 | 71·60 | 1,32·60 | (—)61·00 |
| 1967–68 .. .. .. .. .. | 12.23·81 | 10,87·99 | 1,35·32 | 1,59·07 | (—)23·25 |
| 1968–69 .. .. .. .. .. | 16,48·32 | 14,88·81 | 1,59·51 | 1,88·89 | (—)29·38 |
| 1969–70 (எதிர்பார்க்கப்படுகிறது). .. | 18,28·10 | 16,44·33 | 1,83·72 | 2,04·17 | (—)20·45 |



## விவர அறிக்கை IV

**தமிழ் நாடு மாநிலப் போக்குவரத்து—நேர்முக. மறைமுகக் கட்டணங்களைக் காட்டும் விவர அறிக்கை.**

| செலவு விவரங்கள். (1) | 1968–69 (கணக்குகள்). (2) | 1969–70 (எதிர்பார்க்கப்படுகிறது). (3) |
|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்.) | |
| **I. A. நேர்முகக் கட்டணங்கள்—** | | |
| 1 போக்குவரத்து, தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு ஊதியம். | 3,26·09 | 3,79·85 |
| 2 எ பொருள் .. .. .. .. | 3,14·67 | 3,42·85 |
| 3 டயர்களும், ட்யூப்களும் [காற்றுக் குழாய்களும்]. | 1,12·89 | 97·43 |
| 4 சில்லரை பாகங்களும், அனுகு சாதனங்களும். 5 பழுதுபார்த்தலும், பணி செய்தலும் | 1,91·75 | 2,17 70 |
| 6 மோட்டார் வண்டிகளுக்கான வரிகளும், மேற் கட்டணங்களும். | 2,43·46 | 2,61·90 |
| 7 அலுவலர், நிர்வாகம் இவற்றிற்கான சம்பளம். | 30·51 | 36·91 |
| 8 வாடகை, கட்டணம், வரி, துணிவகை, மற்றும் ஏனைய சில்லரை செலவுகள். | 44·36 | 49·71 |
| 9 மாநில போக்குவரத்துத் துறையின் மத்தியப் பணிக்களரிக்கு நேர்முகக் கட்டணங்கள். | 70·55 | 87·76 |
| 10 ராணித் தோட்டம் பணிக்களரிக்கு நேர்முகக் கட்டணங்கள். | 41·96 | 37·69 |
| மொத்தம்—நேர்முகக் கட்டணங்கள் .. | 13,76·24 | 15,11·80 |

**B. ஒரு மைலுக்கு நேர்முகக் கட்டணங்கள்—**

| | ரூ. காசு. | ரூ. காசு. |
|---|---|---|
| 1 சென்னைப் பிரிவு (மாநகர், புறநகர், மாவட்டம், கடுவிசை உள்பட). | 1 29 | 1 27 |
| 2 கன்னியாகுமரிப் பிரிவு .. .. | 1 25 | 1 44 |

| செலவு விவரங்கள். | 1968-69 (கணக்குகள்) | 1969-70 (எதிர்பார்க் கப்படுகிறது). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூ. லட்சத்தில்) | |
| II. A. மறைமுகக் கட்டணங்கள்— | | |
| 1 விடுப்பும், ஓய்வூதியமும் . .. | 25·37 | 32·30 |
| 2 தணிக்கைக் கட்டணம் .. .. .. | 1·28 | 1·30 |
| 3 முதலீட்டில் வட்டி .. .. .. | 73·78 | 8 ·50 |
| 4 மாநிலப் போக்குவரத்துத் துறையின் மத்தியப் பணிக்களரிக்கு மறைமுகக் கட்டணங்கள். | 8·33 | 7·60 |
| 5 ராணித் தோட்டம் பணிக்களரிக்கு மறைமுகக் கட்டணங்கள். | 3·81 | 3·88 |
| மொத்தம்—மறைமுகக் கட்டணங்கள் .. | 1,12·57 | 1,32·58 |
| B. ஒரு மைலுக்கு மறைமுகக் கட்டணங்கள்— | | |
| | ரூ. காசு. | ரூ. காசு. |
| 1 சென்னைப் பிரிவு (மாநகர், புறநகர், மாவட்டம், கடுவிசை உள்பட). | 0 11 | 0 12 |
| 2 கன்னியாகுமரிப் பிரிவு .. .. | 0 07 | 0 09 |

## பகுதி II

| செலவு விவரங்கள். | 1968-69 (கணக்குகள்). | 1969-70 (எதிர்பார்க் கப்படுகிறது). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூ. லட்சத்தில் ) | |
| 1 போக்குவரத்து பணிகளுக்கான நேர்முகக் கட்டணங்கள். | 12,63·73 | 13,86·35 |
| 2 மாநிலப் போக்குவரத்து, மத்தியப் போக்குவரத்து, மத்தியப் பணிக்களரி, ராணித் தோட்டம் பணிக்களரிகளுக்கு நேர்முகக் கட்டணங்கள. | 1,12·51 | 1,25·45 |
| 3 மொத்தம்—நிறுவனங்களுக்கான நேர்முகக் கட்டணங்கள். | 13,76·20 | 15,11·80 |
| 4 போக்குவரத்துப் பணிக்கு மறைமுகக் கட்டணங்கள். | 1,00·43 | 1,21·10 |
| 5 மாநிலப் போக்குவரத்து, மத்தியப் பணிக்களரி, ராணித் தோட்டம் பணிக்களரிகளுக்கு மறைமுகக் கட்டணங்கள். | 12·14 | 11·48 |
| 6 மொத்தம்—நிறுவனங்களின் மேல் மறைமுகக் கட்டணங்கள். | 1,12·57 | 1,32·58 |
| 7 மொத்தம்—தமிழ்நாடு போக்குவரத்துத் துறைக்கு நேர்முக, மறைமுகக் கட்டணங்கள். | 14,88·81 | 16,44·38 |



## பகுதி III

| | பங்குத் தொகை. | | |
|---|---|---|---|
| | 1968-69. | 1969-70 (எதிர்பார்க் கப்படுகிறது). | 1 ஏப்ர 1970 (அ றுள்ளபடி |
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூ. லட்சத்தில்) | |
| 1 தேய்மான சேமநிதி .. | 1,88·89 | 2,04·17 | 7,63·62 |
| 2 மேம்பாட்டு நிதி .. | .. | .. | 29·72 |
| 3 பயணிகள் வசதிக்கான நிதி | .. | .. | 3·27 |
| 4 வீட்டு வசதி நிதி .. .. | .. | .. | 11·38 |
| | 1,88·89 | 2,04·17 | 8,07·99 |

## விவர அறிக்கை V.

| | மூலதன முதலீடு | |
|---|---|---|
| அன்றுள்ளபடி. | மொத்தம். | ஒவ்வோராண்டு கூடுதல். |
| (1) | (2) | (3) |
| | (ரூ. லட்சத்தில்.) | |
| 1-4-1959 .. .. | 3,01·84 | 25·66 |
| 1-4-1960 .. .. | 3,68·08 | 66·24 |
| 1-4-1961 .. .. | 4,33·66 | 65·58 |
| 1-4-1962 .. .. | 4,96·05 | 62·39 |
| 1-4-1963 .. .. | 5,11·06 | 15·01 |
| 1-4-1964 .. .. | 6,88·54 | 1,77·48 |
| 1-4-1965 .. .. | 8,48·86 | 1,60·32 |
| 1-4-1966 .. .. | 10,02·02 | 1,53·16 |
| 1-4-1967 .. .. | 12,03·17 | 2,01·15 |
| 1-4-1963 .. .. | 14,20·51 | 2,17·34 |
| 1-4-1969 .. .. | 16,67·16 | 2,46·65 |
| 1-4-1970 (தற்காலிகமானது). | 18 02·85 | 1,35·69 |

[1970 மார்ச் 21

## விவர அறிக்கை VI.

குரோம்பேட்டையில் உள்ள மாநிலப் போக்குவரத்துத் துறையின் மத்தியப் பணிக்களரியில் கட்டப்படும் பேருந்துக் கூடுகளின் எண்ணிக்கை.

| கால அளவு. (1) | | கட்டப்பட்ட பேருந்துக் கூடுகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|---|
| 1958-59 | .. | 6. |
| 1959-60 | .. | 83. |
| 1960-61 | .. | 97. |
| 1961-62 | .. | 127 (20 நனி சீர் வசதிப் பேருந்துகள். 3 லாரிகள் உட்பட). |
| 1962-63 | .. | 122 (28 நனி சீர் வசதிப் பேருந்துகள் உட்பட). |
| 1963-64 | .. | 182 (37 நனி சீர் வசதிப் பேருந்துகள், 7 லாரிகள் உட்பட). |
| 1964-65 | .. | 292 (42 நனி சீர் வசதிப் பேருந்துகள், லாரிகளாக மாற்றப்பட்ட 60 பேருந்துகள், 15 பணிகள் உட்பட). |
| 1965-66 | .. | 324 (23 நனி சீர் வசதிப் பேருந்துகள், ஏனைய துறைகளுக்காக 61 பணிகள்). |
| 1966-67 | .. | 342 (15 நனி சீர் வசதிப் பேருந்துகள், மத்தியப் பிரதேசத்திற்காகக் கட்டப்பட்ட 7 பேருந்துகள் ஏனைய துறைகளுக்காக 151 பணிகள்). |
| 1967-68 | .. | 432 (5 கடுவிசைப் பேருந்துகள், 133 கடுவிசைப் பேருந்துகள் போன்ற பேருந்துகள், மத்தியப் பிரதேசத்திற்காக கட்டப்பட்ட 2 லாரிகள், ஏனைய துறைகளுக்காக நான்கு பணிகள், உலகத் தொழிற் சந்தைக்காக கட்டப்பட்ட 3 சிறப்பு வகைப் பேருந்துகள் உட்பட). |
| 1968-69 | .. | 328 (209 மாநகர-வெளியூர்ப் பேருந்துகள், 71 கடுவிசைப் பேருந்துகள் போன்ற பேருந்துகள், 3 லாரிகள், அரசின் ஏனைய துறைகளுக்காகக் கட்டப்பட்ட 45 பேருந்துக்கூடுகள் உட்பட). |
| 1969-70 (எதிர்பார்க்கப் பட்டது). | .. | 288 (206 மாநகர-வெளியூர்ப் பேருந்துகள், 13 மாடிப் பேருந்துகள், கடுவிசைப் பேருந்துகள் போன்ற பேருந்துகள் 7, தொடர்ப் பேருந்து 1, அரசின் ஏனைய துறைகளுக்காகக் கட்டப்பட்ட 61 பேருந்து கூடுகள் உட்பட). |



1970 மார்ச் 21]

## விவர அறிக்கை VII.

ராணித் தோட்டப் பணிக்களரியில் கட்டப்பட்ட பேருந்துக கூடுகளின் எண்ணிக்கை :—

| கால அளவு. (1) | | கட்டப்பட்டுள்ள பேருந்துக் கூடுகளின் எண்ணிக்கை. (2) |
|---|---|---|
| 1964-65 | .. | 44 (4 நனி சீர் வசதிப் பேருந்துகள் உட்பட). |
| 1965-66 | .. | 60 (21 நனி சீர் வசதிப் பேருந்துகள் உட்பட ; ஆனால், ஏனைய துறைகளுக்கு ஆற்றிய 23 பணிகள் நீங்கலாக). |
| 1966-67 | .. | 72 (7 நனி சீர் வசதிப் பேருந்துகள், ஏனைய துறைகளுக்கு ஆற்றிய 32 பணிகள் உட்பட). |
| 1967-68 | .. | 111 (12 நனி சீர் வசதிப் பேருந்துகள், அரசின் ஏனைய துறைகளுக்காகக் கட்டிய 12 பேருந்துக் கூடுகள் உட்பட). |
| 1968-69 | .. | 83 (15 நனி சீர் வசதிப் பேருந்துகள், ஏனைய துறைகளுக்காக ஆற்றிய 15 பணிகள் உட்பட). |
| 1969-70 (எதிர்பார்க்கப் பட்டது). | .. | 67 (6 கடுவிசைப் பேருந்துகள், 8 சாதாரண பேருந்துகள், ஏனைய துறைகளுக்காக ஆற்றிய 50 பணிகள் உட்பட). |

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

## திங்கட்கிழமை, 1970 மார்ச் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்–விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### லீபுரத்தை மீன்பிடித் துறைமுகமாக்கல்

* 489 வினா—**திரு. நா. சௌந்தரபாண்டியன்** : மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், லீபுரம் துறைமுகத்தை ஓர் சிறிய மீன்பிடித் துறைமுகமாகச் செப்பனிட அரசினிடம் ஏதேனும் செயற்குறிப்பு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : இல்லை.

**திரு. டி. மார்டின்** : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த லீபுரம துறைமுகத்திற்குப் பக்கத்தில் சிறு சிறு துறைமுகங்கள் அமைப்பதற்கு வாய்ப்பாகவுள்ள அநேக இடங்கள் இருக்கின்றன. பெரியதாழை, உவரி ஆகிய இடங்களில் அதிகமான மீன் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருபபதாலும், அங்கே படகுகளை நிறுத்துவதற்கு மிகவும் கஷ்டப்படுவதாலும், அங்கு படகுகளை நிறுத்துவதற்கான வசதியையாவது செய்து கொடுக்க அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : தலைவர் அவர்களே, படகுகளை நிறுத்துவதற்கு வசதி செய்து தரத்தான், லீபுரம், முட்டம் ஆகிய இடங்கள் தற்காலிகமாகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கின்றன. அங்கு படகுகள் தங்க வசதி செய்ய உத்தேசிக் கப்பட்டிருக்கிறது. ஆனால், துறைமுகத்தைக் கொளச்சல் பகுதி யில் நிறுவுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துகொண்டு வருகிறது. நான்காவது ஐந்தாவது திட்டத்தின் கீழ் இப்படிப்பட்ட திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன.

**திரு. மு. ச. சிவசாமி** : தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் தற்சமயம் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிற மீன்பிடித் துறைமுகம், சிறிய மீனவர்களுடைய படகுகள் நிற்கும் இடமாக இருந்தது. இப்பொழுது அவர்களுடைய படகுகள் நிற்பதற்கு இடமில்லாம லிருக்கிறது. எனவே, அவர்களுடைய தொழில் பாதிக்கப்படாம லிருக்கும் முறையில், அவர்களுடைய படகுகளை நிறுத்துவதற்கு இட வசதி செய்து கொடுக்க அரசாங்கம் உடனடியாக முன்வருமா?

[1970 மார்ச் 23

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தூத்துக்குடியில் மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கான திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இப்பொழுது வேலைகளெல்லாம் துவக்கப்பட்டு நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. எந்தெந்த வகையில் எப்படியெல்லாம் நடைபெறுகின்றன என்ற விளக்கத்திற்குத் தனிக் கேள்வி போட்டால், விளக்கமாகப் பதில் தரப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, கொளச்சல் துறைமுகம் வேலை எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறினார்கள். அது எப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்? அதற்கான எஸ்டிமேட் தொகை என்ன என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** கொளச்சலில் துறைமுகம், வீபுரம், முட்டம் ஆகிய இரண்டு இடங்களில் 'ஜெட்டி' என்று சொல்லப்படுகிற படகுகள் தங்கும் இடங்களை அமைப்பது குறித்து 1964-ம் ஆண்டில் ஹைட்ரோக்ராஃபிக் சர்வே செய்யப்பட்டது. 2.90 இலட்ச ரூபாய் செலவிட்டு அந்த ஹைட்ரோக்ராஃபிக் சர்வே செய்யப்பட்டிருக்கிறது. அதை அமைப்பதற்கு எவ்வளவு தொகை வேண்டும், எந்த எந்த அளவுள்ள பெரிய கப்பல்கள், மீன்பிடி படகுகள் தேவைப்படுகின்றன, இன்னும் எந்தெந்த அளவுக்கு எவ்வளவு மீன் அங்கே கிடைக்கும் என்பதைப் பற்றியெல்லாம் இப்பொழுது அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. இந்தப் பரிசீலனை முடிந்த பிறகு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்குமானால் நிச்சயமாக இதனை ஏற்றுக்கொள்ள முடியும்.

## நீர் ஊற்றுக்கள்

***490 வினா—திரு. வை. சுவாமிநாதன்:** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தானாக பீரிடும் நீர் ஊற்றுக்கள் (ஆர்டீஷியன் கிணறுகள்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) தமிழகத்தில் வேறு எந்தெந்த இடங்களில் இந்நீர் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

(உ) இந்நீர் பாசனத்திற்குப் பயன்படும் வகையில் வழிவகை செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

(இ) (1) தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம், விருத்தாசலம், கடலூர் தாலுக்காக்களிலும்;

(2) திருச்சி மாவட்டத்தில் உடையார்பாளையம் தாலுக்காவிலும்;



1970 மார்ச் 23]

(3) இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடி, ராஜபாளையம் பகுதிகளிலும் நீர் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

(உ) பொதுவாகச் சொன்னால் விவசாயத் துறையினரால் புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் கிணறுகளைப் பயன்படுத்த மேலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே தோண்டப்பட்டு, நீரூற்றுக் குறைவினால் தடைப்பட்டிருக்கும் கிணறுகளைச் சுத்தம் செய்து உபயோகப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**திரு. வை. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நீரூற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவா? அவை நாற்றங்கால் விடுவதற்கு ஏற்றவாறு இருக்கின்றனவா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சிரமேல்குடி கிராமத்திலுள்ள திரு. ஆர். பாலகிருஷ்ண செட்டியார் என்பவருடைய நிலத்தில் செயற்கை ஊற்று நீர்க்கிணறு ஒன்றை அரசாங்கம் தோண்டியிருக்கிறது. திரு. பஞ்சநாத செட்டியார் என்பவருடைய நிலத்தில் பட்டுக்கோட்டை வட்டம் சிரமேல்குடி கிராமத்தில் ஒன்றும் ஒரத்தநாடு வட்டம், சேதுராயன்குடிகாடு கிராமத்தில் ஒன்றும் தோண்டப்பட்டிருக்கின்றன. பேராவூரணி வளர்ச்சி வட்டாரம் நாடியம் கிராமத்தில் திரு. இராமையா என்பவருடைய நிலத்தில் ஒரு கிணறும் தோண்டப்பட்டிருக்கிறது. அவையெல்லாம் ஓரளவு உப்புக் கரிக்கின்ற நீராக இருப்பதால், நாற்றங்காலுக்குப் பயன்படுத்த முடியாது என்றும், ஆனால், தென்னந்தோப்புக்குப் பாய்ச்சலாமா என்பதைக் குறித்து ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கி றார்கள் என்றும், அது சாதகமாக இருந்தால், தென்னந்தோப்புக்கு பாய்ச்சப்படும். சில இடங்களில் பயிர்களுக்கும் பாசனம் செய்ய வசதிகள் இருக்கும் என்றும்தான் கூறப்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவிரிப் படுகையில் இம்மாதிரி நீரூற்றுக்கள் ஒரு சில இருக்கின்றன. அதனை ஒரு தனித் திட்டமாகக் கொண்டுவந்து, தஞ்சை மாவட்டத்தில் நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு ஆவன செய்ய முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அதற்கா அரசாங்கம் இப்பொழுது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

**திரு. அ. மாரிமுத்து:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் திருப்பனந்தாள் வட்டத்திலுள்ள அணைக்கரை படுகையில் இ படிப்பட்ட ஊற்றுக் கிணறுகள் நிறுவப்பட்டு அவை யாருடைய பராமரிப்பில் இருந்து வருகின்றன என்பது தெரியாமலேயே அந்தத் தண்ணீர் வீண் விரயம் ஆகிக்கொண்டிருக்கிறது. அவை நல்ல முறையில் விவசாயத்திற்குப் பயன்படுத்தும் வகையில் செய் இந்த அரசு ஏதாவது உத்தேசித்திருக்கிறதா?

[1970 மார்ச் 23

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் யார் யாருக்குச் சொந்தமான நிலத்தில் இப்படிப்பட்ட கிணறுகள் தோண்டப்பட்டுத் தண்ணீர் விரயம் ஆக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதுபற்றிய குறிப்புக்கள் தரப்பட்டால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் வெட்டப்படுவதற்கு முன்பு பீரிட்டு வரும் நீரூற்றுக்கள் இருந்தன. நிலக்கரிச் சுரங்கங்கள் வெட்டியதற்குப் பிறகு அந்தப் பீரிட்டு வரும் நீரூற்றுகளிலிருந்து தண்ணீர் வரவில்லை . . .

## 2. நடைமுறைக் கேள்விகள்.

### (அ) மூல வினாவில் கேட்கப்பட்ட பொருளை விட்டு வேறு பொருள் குறித்து துணை வினா கேட்டது குறித்து.

**திரு. டி. மார்டின் :** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில், குறிப்பிட்ட ஒரு ஜில்லா பற்றிய விவரங்கள் கோரப்பட்டிருந்தால், அந்த ஜில்லாவைப் பற்றித்தான் துணைக் கேள்வி போடவேண்டும் என்றுதான் பல முறை இந்த அவையில் தாங்கள் கூறியிருக்கிறீர்கள். மூலக் கேள்வி தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் தென்னாற்காடு மாவட்டத்தைப் பற்றிச் சொல்லுகிறார்கள் . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைக் கொஞ்சம் நுணுக்கமாகப் படிக்க வேண்டும்.

"தஞ்சை மாவட்டத்தில் நாளைப் பீரிடும் நீர் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டது உண்மையா ?

தமிழகத்தில் வேறு எந்தெந்த இடங்களில் இந் நீர் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன ?"

என்று மூலக் கேள்வி அமைந்திருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் விடை அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அவையின் நிகழ்ச்சியைக் கொஞ்சம் உன்னிப்பாகக் கவனித்து வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

## 1. வினாக்கள் விடைகள்—தொடர்ச்சி

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் மூன்று தாலுக்காக்களை அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், மற்ற நான்கு தாலுக்காக்கள் நல்நிலையாக இருப்பதால், அங்கு நீரூற்றுக்கள் 'போர்' செய்ய முடியவில்லை. அதற்கு எதாவது பிரத்தியேக கருவியைத் தந்து, கற்களை உடைத்து நீரூற்றுக்களைக் கண்டுபிடிக்க எதாவது வழிவகை செய்யப்படுமா ?.



1970 மார்ச் 23]

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தென் ஆற்காடு மாவட்டத்தில் 1958-லிருந்து 1963-ம் ஆண்டு வரை. கிட்டத்தட்ட 140 ஊற்றுக் கிணறுகள் தோண்டப்பட்டு வந்தன. பிறகு, கொஞ்சங் கொஞ்சமாக அவற்றில் தண்ணீர் வறண்டு விட்ட காரணத்தால், சமீபத்தில் "வறட்சி நிவாரணத் திட்டத்"தின் கீழ், தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 140 ஊற்றுக் கிணறுகளைச் சீர்படுத்துவதற்காக ரூ. 4,54,850 செலவு செய்ய அனுமதி அளித்திருக்கிறார். எனவே, அக் கிணறுகளைச் சீர்படுத்திய பிறகு, மின்சார மோட்டார் அல்லது என்ஜின் பொறிகளை அமைத்து, அந்தந்தப் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு அக் கிணறுகள் ஒப்படைக்கப்படும். இக் கிணறுகளைச் சீர்படுத்தும் வேலை முடிவடையும் தருவாயில் உள்ளது.

**திரு. வை. சுவாமிநாதன் :** இந்த நீரூற்றுக் கிணறு தோண்டுவதற்கு எவ்வளவு செலவாகிறது ? திரு. பாலகிருஷ்ண செட்டியார் அவர்களுடைய நிலத்தில் தோண்டிய கிணற்றிலிருந்து எவ்வளவு 'காலன்' தண்ணீர் கிடைக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** செலவினைப்பற்றிய குறிப்பு இல்லை. அதுவும், ஒவ்வொரு நீரூற்றில் ஒவ்வொரு விதமாக இருக்கும். திருச்சி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம், தாத்தனூர் அஞ்சல், பட்டுக்கோட்டை கிராமத்தில் உள்ள திரு. அ. முத்துச்சாமி படையாச்சி என்பவருக்கு ஓர் ஊற்று நீர்க் கிணறு ஒன்றை வெட்டிக் கொடுத்து. அதில் நில மட்டத்திற்கு மேல் சுமார் மூன்று அடியில் மணிக்கு ஐயாயிரம் 'காலன்' தண்ணீர் வருகிறது என்று கூறப்படுகிறது. ஆனால், தஞ்சை மாவட்டத்தில் சிரமேல்குடி என்ற இடத்தில் வெட்டப்பட்டிருக்கிற கிணற்றிலிருந்து மணிக்கு 35 காலன் தண்ணீர்தான் கிடைக்கிறது என்று கூறப்படுகிறது. இப்படி ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு விதமாக, தண்ணீர் விசைக்கு ஏற்ற அளவு நீர் வெளியில் வருகிறது. அந்த அளவு தண்ணீர் கிடைக்கிறது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தென்னார்காடு மாவட்டத்தில் பண்ருட்டிப் பகுதியில் உள்ள காடாம்புலியூர் 'எரியா'வில் இத்தகைய ஆழமான குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டு ஏராளமான நீர் வசதி கிடைக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ? அங்கே விவசாயத்தைப் பெருக்குவதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் ஐந்து அல்லது பத்து கிணறுகள் வீதம் 26 கிராமங்களில் தோண்டுவதென்று ஒரு திட்டம் தயாரித்து, அதை விவசாய மறு நிதிக் கழகத்திற்கு அனுப்பி அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது நிதி பெற்று. அந்தப் பகுதியை வளப்படுத்துகின்ற அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ? வான் மழையையே நம்பி வாழும் அந்த மக்கள் இதனால் ஒரு பசுமைப் புரட்சிப் பணியில் ஈடுபட வாய்ப்பாக இருக்கும். ஆகையால், அதைத் தீவிரமாகச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** முதன் முதலில் இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தென்னார்க்காடு மாவட்டத்தில்தான் 1958-லிருந்து 1963-ம் ஆண்டு வரை, 140 துளைக் கிணறுகள் போடப்பட்டிருந்தன. கடலூர்—விருத்தாசலம் சாலையில் ஆலப்பாக்கத்திலிருந்து ஊமங்கலம் வரையிலும், சிதம்பரம்—விருத்தாசலம் சாலையில், சேத்தியாத் தோப்பிலிருந்து கம்மாபுரம் வரையிலும், சேத்தியாத்தோப்புக் கீழ் அணை சாலையில் சேத்தியாத் தோப்பிலிருந்து தென்னார்க்காட்டின் எல்லை வரையிலும், வட திசையில் நெய்வேலி சுரங்கங்கள் வரையிலும் 140 துளைக் கிணறுகள் போடப்பட்டிருந்தன. அவை இப்பொழுது மறைந்துவிட்டதன் காரணத்தால், நான் முதலில் குறிப்பிட்டபடி, ரூ. 4'52'850 செலவழித்து, அவற்றைச் சீர்படுத்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது. எனவே, இந்தக் கிணறுகள் அதிகப்படியாகத் தேவை என்பதை உணருகிறோம். இவைகளில் ஒழுங்காகத் தண்ணீர் கிடைக்கவில்லை என்பது தென்னார்க்காடு மாவட்டத்தில் கண்ட அனுபவம் ஆகும். நல்ல நீரூற்றுக்கள் இருக்கும் இடங்களாகப் பார்த்து—தட்டுப்பாடு இல்லாத இடங்களாகப் பார்த்து—தஞ்சை மாவட்டத்தில் கிணறுகள் எடுப்பதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுக்கொண்டு வருகிறது

### Agricultural products in Wallajah Panchayat Union Council.

* 191 Q.—THIRU T MARTIN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) Whether a shortage to the value of about Rs. 7.500 was found out in the stock of agricultural products belonging to the Wallajah Panchayat Union Council in North Arcot in the year 1969; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) ரூ 8,144.64 பெறுமானமுள்ள இருப்பு குறைவது கண்டுபிடிக்கப்பட்டது.

(ஆ) இதற்குப் பொறுப்பானவர்களிடமிருந்து ரூ. 4,406.30 வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை வசூலிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தொடர்பானவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை தனியாக எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியத்தில் இதுபோன்று பணம் குறைவு ஏற்பட்டிருக்கிற நிலைமையும் விவசாயப் பொருள்கள் காணாமல் போவது அல்லது குறைவுபடுவதற்கான காரணங்களை அறிய சி.ஐ.டி. புலனாய்வுத் துறையினர் மூலம் கண்டுபிடித்து குற்றம் செய்தவர்களைத் தண்டிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





**திரு. ஏ. சி. நரசிம்மன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், இங்கே கேள்வியிலே இருப்பது வாலாஜா பஞ்சாயத்து யூனியன் பற்றி. கனம் உறுப்பினர் அவர்கள் வாலாஜாபாத் பஞ்சாயத்தைப் பற்றிக் கேட்கிறார்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இலாக்காக்களின் மூலமாகத் திட்டங்களை நிறைவேற்றுகிறோம். அதிலே புகார்கள் கையாடல்கள் போன்றவற்றைப்பற்றி வருமானால் போலீஸ் மூலம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். எல்லா இடங்களுக்கும் போலீசை அனுப்பிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இலாகாவின் மூலம் விசாரணை செய்யலாம். இதிலே குறைபாடுகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு குறிப்பிட்ட தொகை வசூல் செய்யப்பட்டிருக்கிறது. எஞ்சிய தொகையையும் வசூல் செய்வதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. எல்லா இடங்களுக்கும் போலீசை வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இது தான் தொன்று தொட்டு இருந்து வருகின்ற முறையாகும்.

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒழுங்கீனங்களுக்காக அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த அதிகாரிகளுக்கு மீண்டும் வேலை கொடுத்திருக்கிறார்களா ? அந்த அதிகாரி இந்த டிபார்ட்மெண்ட் அதிகாரியா ? ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்ததற்குப் பின்னால் அந்த அதிகாரி பணி புரிகிறாரா, எந்த டிபார்ட்மெண்டில் பணி புரிகிறார் என்று அமைச்சர் அவர்கள் பதில் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** முறைகேடுகளுக்கு முக்கியப் பொறுப்புள்ளவர் வளர்ச்சி அதிகாரி, எக்ஸ்டன்ஷன் ஆபீஸர் என்று கூறப்படுகிறது. ஆனாலும் வட்டார வளர்ச்சி அதிகாரிமீது வேளாண்மை இலாகா நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒழுங்கீனங்கள் இருக்குமானால், அரசாங்கம் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** கனம் மார்டின் அவர்கள் வாலாஜாபாத் என்று குறிப்பிட்டுக் கேட்டார்கள். அது வாலாஜாபாத்தா அல்லது வாலாஜா பேட்டையா ? வட ஆற்காடு மாவட்டத்திலே வாலாஜாபேட்டை இருக்கிறது, வாலாஜாபாத் செங்கற்பட்டு மாவட்டத்திலே இருக்கிறது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வாலாஜா என்றுதான் கேள்வியில் இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கேள்வியில் அப்படித்தான் இருக்கிறது.

[1970 மார்ச் 23

## மதுரையில் டிராக்டர் பணிக்களரி

*492 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் விவசாய டிராக்டர் வொர்க்ஷாப் எப்போது கட்ட ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) அதற்கான கருவிகள் எவ்வளவு ரூபாய்க்கு எப்போது வாங்கப்பட்டன ?

(உ) அந்த வொர்க்ஷாப் விவசாய இலாகாவிடம் எப்போது ஒப்படைக்கப்பட்டது?

**மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து:**

(அ) மதுரையில் டிராக்டர் பணிக்களரி கட்டும் பணி 2-8-1967-ம் நாளன்று பொதுப்பணித்துறையினரால் தொடங்கப் பட்டது.

(இ) 1,98,236 ரூபாய் மொத்தச் செலவில் 1968 மார்ச் திங்களில் தேவையான இயந்திரங்கள் வாங்கப்பட்டன.

(உ) 1969 ஜூன் திங்களில்தான் பொதுப்பணித் துறையினர் வேளாண்மைத் துறையினரிடம் பணிக்களரிக் கட்டிடத்தை ஒப்படைத்தனர்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணியை ஆரம்பித்து ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. டிராக்டர்கள் பழுது பார்ப்பதிலே சிரமங்கள் ஏற்படுகின்றன. காலதாமதம் ஆவதற்கான காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? இதற்குத் தேவையான கருவிகள் எல்லாம் வாங்கப்பட்டுவிட்டனவா ? வாங்கப்பட்டு விட்டது என்றால் எவ்வளவு வாங்கப்பட்டு இருக் கிறது. இன்னும் வாங்கப்படவில்லையென்றால், எப்பொழுது வாங்கப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இவையெல்லாம் சென்டேஜ் கட்டணம் நீங்கலாக 2.40 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு 1966–67-லே இதற்கு ஏற்பு அளிக்கப் பட்டது. 1967-68 மேலும் இயந்திரங்கள் வாங்குவதற்காக 2 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு வாங்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் முடிவடைந்து பொதுப்பணியிடமிருந்து விவசாய உதவிப் பொறியாளரிடம் விடப்பட்டிருக்கிறது. 13-4-1970 முதல் இந்தப் பணிக்களரிக் கட்டும் பணி செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மதுரையிலே இருக்கின்ற ஓர்க்ஷாப் மாதிரி தமிழகத்திலே எத்தனை இருக்கிறது. இல்லை யென்றால், இனிமேலாவது ஒவ்வொரு மாவட்டத்திற்கும்



1970 மார்ச் 23]

டிராக்டர்கள் அதிகம் தேவைப்படுகின்றன என்ற காரணத்தினால் ஆங்காங்கு சிறிய சிறிய ஓர்க்ஷாப்புகளை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** இப்பொழுது சென்னையிலே ஒன்று இருக்கிறது. இதைத்தவிர கோயம்புத்தூர், திருவாரூர் ஆகிய இரண்டு இடங்களிலும் பணிக்களரிகள் இருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்மூலம் மேலும் நான்கு நிறுவவேண்டுமென்று திட்ட மிடப்பட்டிருக்கிறது. அதிலே வேலூர், திருச்சி ஆகிய இடங் களில் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் 1969-ம் ஆண்டு ஜூலையில் மேலும் இரண்டு இடங்களில் ஏற்படுத்த வேண்டுமென்று பரிசீலித்து எந்த எந்த இடங்களில் ஏற்படுத்த லாம் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 4 பணிக் களரிகள் நம்மு டைய மாநிலத்திலே ஏற்பட இருக்கின்றன.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இந்த ஓர்க்ஷாப் மூலம் ஆண்டொன்றுக்கு எத்தனை டிராக்டர்கள் செய்யப்படும்? இதைத் தவிர, மற்ற விவசாயக் கருவிகளும் இதிலே செய்யப்படுகின்றனவா ? விவசாயிகளுக்கு என்ன முறையிலே அவற்றை விநியோகிப்பதற்கு அரசு பரிசீலித்துவருகிறது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** ஓர்க் ஷாப்பிலே ரிப்பேர் செய்யக்கூடிய பணிகள்தான் நடக்கின்றனவே தவிர புதிய டிராக்டர்கள் கட்டுவதில்லை. புதிய டிராக்டர்கள் செய்யக்கூடியது சென்னையில் இருக்கிறது. டிராக்டர்கள் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கப்பட்டு வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து 4 அல்லது 5 தமிழகத்திலே ஆரம்பிக்கப்பட இருக்கிறோம் என்று சொன்னார்கள். டிராக்டர்களின் தேவை அதிகமாக இருப்பதாலே அதிகமாக டிராக்டர்களை வாங்கிப்பயன்படுத்துகின்ற சூழ்நிலை ஏற்பட்டு வருவதாலே, அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து சிறப்புத் திட்டம் ஒன்று போட்டு, மாவட்டத்திற்கு ஒன்று அல்லது தாலுகாவிற்கு ஒன்று என்ற முறையிலே இவற்றை ஆரம்பிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** அதை உணர்ந்துதான் அரசாங்கம் நான்கு பணிக்களரிகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. நிதிநிலைமைகளைப் பொறுத்து அதிகமாக ஓர்க்ஷாப்புகள் ஏற்படுத்துவது என்பது கவனிக்கப்படுகிறது.

*Mills taken over by Tamil Nadu Textile Corporation*

* 493 Q. THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) Whether the Tamil Nadu Textile Corporation proposes to modernise the sick mills taken over by it; and

(b) if so, how soon?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:**

பஞ்சாலைக்கழகம் எடுத்துக் கொண்ட பஞ்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அத்தகைய பஞ்சாலைகள் மூடப்பட்ட பொழுது கொடுக்கப்பட்ட அடிப்படைக் கூலிகளே, கொடுக்கப்படுகின்றன. அதிகமான வேலைப்பளுவுக்கு ஏற்ப அதிகக் கூலி கொடுக்கப்படுகின்றது.

ஓம் பராசக்தி ஆலை, கம்போடிய ஆலை' ஸ்ரீ ரங்கவிலாஸ் பருத்தி விதை பிரித்தல், நூற்பு, நெசவு ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு திங்களொன்றுக்கு அக விலைப்படி ரூ. 100 ஆகவும், கிருஷ்ணவேணி ஆலையைப் பொறுத்தமட்டில் அகலவிலைப் படி ரூ. 155 ஆகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

* 494 வினா—**திரு. என். சங்கரய்யா:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் எடுத்துக்கொண்ட ஆலைகளில் கொடுக்கப்படுகிற சம்பளம், பஞ்சப்படி ஆகியவை, இயங்கிக் கொண்டிருக்கும் இதர பஞ்சாலைகளில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும், சம்பளம், பஞ்சப்படி ஆகியவற்றை ஒத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:**

(அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஓம் பராசக்தி ஆலை, கம்போடியா ஆலை, கிருஷ்ணவேணி பஞ்சாலை, ஸ்ரீ ரங்கவிலாஸ் பருத்தி விதை எடுத்தல், நூற்பு-நெசவாலை ஆகிய நான்கு ஆலைகள் குறித்தும், பருத்தி நெசவாலை நிறுவனங்கள் (நிறுவனங்களின் நிர்வாகம், கலைப்பு அல்லது சீரமைப்பு) சட்டத்தின் கீழ், அந்த ஆலைகளில் தற்கால வசதிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுத்து முடிக்கப்பட்ட பிறகு, படிப்படியான ஒரு திட்டத்தின் கீழ், அந்த ஆலைகளில் தற்கால வசதிகளை ஏற்படுத்தவும், அவற்றைச் சீரமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM: Sir, whereas most of the sick mills were adopting obsolete methods of production and had been incurring heavy losses, what are the details of modernisation of these sick mills by the Corporation and does the Government expect that the Corporation would make progress and earn profits?



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்போது அந்த ஆலைகள் தொடங்கப்பட்டு வருகின்ற சீரான முறையைப் பார்க்கையில் நல்ல முறையில் நடத்தலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. சீரமைப்புத் திட்டத்திற்கான புதிய இயந்திரங்களை வாங்கி உற்பத்தித் திறனை அதிகப்படுத்த நான்கு ஆலைகளுக்கு 87 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இந்தத் திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பி அவர்களுடைய பங்குத் தொகையைப் பெற்று இதைச் சீர்திருத்தலாம் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் எடுத்துக்கொண்ட ஆலைகளில் தொழிலாளர்களில் சம்பள விகிதங்கள் தனியார் நடத்தக் கூடிய ஆலைகளில் உள்ளதை விடக் குறைவாக இருப்பதாகவும், பஞ்சப்படியும் குறைவாக இருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். அதைச் சரிக்கட்டுவதற்கான ஏற்பாடுகள் அரசுத் தரப்பில் இருந்து செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சம்பளத்தைப் பொறுத்த வரை அந்த ஆலைப் பணியாளர்களுக்கு ஒரே விதமாகக் கொடுத்தாலும் பஞ்சப்படியைப் பொறுத்தவரை 110 ரூபாய், 115 ரூபாய் என்று தீர்மானித்து அதைப் பற்றிய அறிவிப்பை கொடுத்து தொழிலாளர்களுடைய சம்மதத்தையும் கேட்டோம். ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் லாபம் வருமானால் குறைக்கப்பட்ட பஞ்சப்படியை டெஃபர்டு பேமென்ட் அடிப்படையில் எடுத்துக் கொண்டு அவர்களுக்குக் கொடுக்கப்படும் என்றும், லாபம் இல்லாவிட்டால் அரசாங்கத்தில் இருந்து கேட்கக் கூடாது என்றும் சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சு. துரைசாமி:** அமைச்சர் அவர்கள் நான்கு பஞ்சாலைகளைச் சீரமைக்க 87 லட்சம் ரூபாயை மத்திய சர்க்காரிடமிருந்து கேட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும். முடிவதற்கு எவ்வளவு காலம் ஆகும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** திட்டத்தை ஒரேயடியாக, உடனடியாக எடுத்துக்கொள்ள முடியாது. 'பேஸ்டு புரோகிராம்' என்ற முறையில் திட்டமிட்டு எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது எப்படி என்பதைப் பற்றி மத்திய அரசாங்கச் சட்டம் விரிவாகக் கூறுகிறது. அந்தச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு மத்திய அரசு நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனுக்கு எழுதி அவர்களுடைய பங்குத் தொகையைப் பெற்ற பிறகுதான் முடிவு கூறமுடியும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** லாபம் வந்தாலும் லாபம் வரவில்லை என்றாலும் மற்ற மில்களிலே 160 ரூபாய்க்கு மேல் அகவிலைப்படி கொடுக்கும்போது இங்கு மட்டும் லாப நஷ்டக் கணக்கைப் போட்டு 60 ரூபாய் குறைவாகக் கொடுக்கக் கூடிய காரணத்தால் தனியார் மில்களிலும் நஷ்டத்தில் ஓடுகிறது என்ற கணக்கைக் காட்டி மூடிவிட்டு அதற்குப் பிறகு மறுபடியும் எடுத்து நடத்தும்

போது சர்க்கார் கொடுக்கின்ற பஞ்சப்படிக்கு ஒத்துக் கொண்டால் தான் நடத்த முடியும் என்று சொல்லும் நிலைமை ஏற்படும் அல்லவா? ஆகவே, மற்ற தனியார் மில்களில் கொடுப்பது போல் இங்கும் பஞ்சப்படி கொடுக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இலாபம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்த அளவுக்குப் பஞ்சப்படி கொடுக்க வேண்டுமென்ற வாதத்தை இந்த அரசாங்கம் ஏற்கத் தயாராக இல்லை. நஷ்டம் வந்தாலும் கொடுக்க வேண்டுமென்றால் இந்த மன்றத்தின் அனுமதி பெற்று அரசாங்க கஜானாவில் இருக்கக்கூடிய மக்கள் வரிப் பணத்தில் இருந்துதான் கொடுக்க வேண்டும். அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. நல்ல முறையில் ஆலைகளை நடத்தினால் இலாபம் வரும். இலாபம் வந்தால் பஞ்சப்படியில் ஏற்பட்டுள்ள வித்தியாசத்தைக் கடைசியில் கொடுக்கலாம். அதைத்தான் அரசாங்கம் பின்பற்றக் கருதியிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மத்திய அரசிடமிருந்து பங்குத் தொகையைப் பெற இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** முன்னாலேயே சொன்னேன். மத்திய அரசாங்கச் சட்டத்திலே நான்காவது பிரிவில் அதைப் பற்றி விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பிரிவின்படி நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனுக்கு ப்ரொபோசல் அனுப்ப வேண்டும். இன்னின்ன முறையில் சீரமைக்கப் போகிறோம், இவ்வளவு செலவாகும் என்று சொன்னதன் பேரில் அவர்களுடைய அதிகாரிகள் பரிசீலித்து அனுமதி தருவார்கள். அதற்குப் பிறகு இதிலே ஆகக் கூடிய செலவில் 51 சதவிகிதத்தை அவர்களுடைய பங்குத் தொகையாகத் தருவார்கள். அதன் பிறகு திட்டம் நிறைவேற்றப்படும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** நஷ்டத்தால் மூடப்பட்ட ஆலைகளுக்காக சர்க்காரிடம் இருந்தும் இதர வருவாய்க் கழகங்களிடம் இருந்தும் இதுவரை கடன் தொகையாக வாங்கியது எவ்வளவு? இலாபம் வரும்போது மில்களை நடத்தியும் நஷ்டம் வருகின்ற போது விட்டு விட்டு ஓடுகின்ற தனியார் துறைமீது நடவடிக்கை எடுக்க வழிவகை இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாம் இந்த ஆலைகளை எடுத்தவுடன் நம்முடைய பங்குத் தொகை, மத்திய அரசாங்கப் பங்குத் தொகை என்று பணம் போடுகிறோம். அந்தப் பணத்தில் இருந்து தான் இந்த ஆலைகள் நடத்தப்படுகின்றன. இனிமேல் தனியார் துறைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இந்த ஆலைகளை எப்படி முடிவாக அமைக்கப் போகிறோம் என்பதைப் பொறுத்தும், அதற்கு சொந்தக்காரர் பங்கை எப்படித் திருப்பிக் கொடுக்கப் போகிறது என்பதைப் பற்றியெல்லாம் மத்திய அரசாங்கச் சட்டத்தில் விரிவாக இருக்கிறது.



**திரு. கே. என். குமாரசாமி :** தனி நபர் மில்களில், சிக் மில்களில் கூட சம்பளம், பஞ்சப்படியைக் குறைக்காமல் உழைப்பில் மாறுதல் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் அவர்கள் ஒத்துழைப்புக் கொடுப்பதாகக் கூறியவுடன் அந்த விகிதத்தைக் குறைக்காமல் இருக்கும்போது அரசாங்க கார்ப்பரேஷன் லாப நஷ்டத்தைக் கணக்கிட்டுத்தான் கொடுக்க முடியும் என்று சொல்லுவதால் அங்கு ஒரு பெரிய மாற்றமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும் அரசாங்க கார்ப்பரேஷன் பூரணமாக எல்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை கொடுக்கவில்லை. கம்போடியா மில்லில் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள். கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய சூழ்நிலையை எல்லாம் விளக்கிக்கொண்டு வந்தால் அதற்குக் கேள்வி நேரத்திலே நேரம் கிடையாது.

**திரு. கே. என். குமாரசாமி :** கம்போடியா மில்லில் 1,200 பேருக்கு மேல் வேலை செய்து கொண்டிருந்தார்கள். தற்போது 500 பேருக்கு மட்டுந்தான் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது, பாக்கி இருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கப் போகிறார்களா? இல்லையா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மூடப்பட்ட ஆலைகளை எல்லாம் அரசாங்கம் எடுத்து நடத்த முன்வந்தால் தனியார் துறைக்குக் கொடுத்ததைவிட அரசாங்கத்திற்கு மிகுந்த அளவு ஒத்துழைப்புத் தருவோம்; தொழிலாளர்களுக்கு ஒருசில நஷ்டங்கள் ஏற்பட்டாலும் பொருட்படுத்தமாட்டோம் என்ற அருமையான ஆலோசனைகளை எல்லாம் தொழிலாளர் தலைவர்கள் கூறியது இன்றைக்கும் எனக்கு நினைவு இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்களும் அதிலே சேர்ந்திருக்கிறார்கள். அந்த மில்களை ஏற்று நடத்திய பிறகு நஷ்டம் வந்தாலும் பஞ்சப்படி போன்றவற்றை மற்ற மில்கள் போல் கொடுக்க வேண்டாமா என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள் என்றால் ஒருவேளை அது அவர்களுடைய கட்சியின் கொள்கையாக இருக்கலாம். அரசாங்கத்தின் கொள்கையைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அரசாங்க வரிப்பணம் விரயமாகக் கூடாது. அரசாங்கத்திற்கு இலாபம் வரவில்லை என்றாலும் நஷ்டம் இல்லாமல் பெறுகின்ற இலாபத்தைத் தொழிலாளர்களுக்கே திருப்பிக் கொடுப்போம் என்ற உறுதியைத் திட்டவட்டமாக எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கிறோம். தொழிலாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை கூட முடிவு செய்தோம். மூடப்பட்ட ஆலைகளில் உடனடியாக எல்லாத் தொழிலாளர்களையும் எடுத்துக் கொள்ளும் அளவுக்கு இருக்காது. பின்னர் ஆலையின் வேலைத் திட்டம் நடைபெறுவதையொட்டித்தான் எடுத்துக் கொள்ள முடியும் என்ற திட்டமும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, will the Hon. Minister be pleased to tell this House whether all the workers who were employed in the sick mills have now been taken over by the Corporation, or whether some of them have been left unemployed, and what is the number of the employees taken over?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : எற்கனவே அந்த எண்ணிக்கையைப பற்றி இந்தச் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. கனம் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு இப்போதுதான், ஒரு வினாடிக்கு முன்னால்தான் பதில் சொன்னேன். நாம் எடுக்கவேண்டிய தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் உடனடியாக எடுக்க முடியாது. சீரமைப்புத் திட்டம் அமலாக்கப்பட்ட பிறகுதான் எல்லோருக்கும் வேலை கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படும். இடைக்காலத்தில் தொழிலாளர்களிடத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டு எந்த அளவுக்குக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குக் கொடுக்கிறோம். எவ்வளவு பேருக்குக் கொடுத்தோம் என்பதைப் பற்றி எற்கனவே முதலமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் அறிவித்திருக்கிறார்கள்.

*Colour sarees*

*495 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Central Government have recently imposed a ban on the production of colour sarees by powerlooms; and

(b) if so, whether this Government has taken any follow up action to implement the ban order strictly in this State and the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) கட்டுப்பாட்டினைக் கொண்டு வருவது பற்றி மத்திய அரசு 1966-ம் ஆண்டு முடிவு எடுத்தது. சமீபத்தில் இது உறுதியாக்கப்பட்டது.

(இ) கட்டுப்பாட்டினை தீவிரமாக அமுலாக்கும் விஷயத்தில் முழு கவனம் செலுத்தும்படி மாவட்ட துணி, நூல் கட்டுப்பாடு அதிகாரிகளுக்கு உத்திரவு அளிக்கப்பட்டது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know the reasons why the Central Government have imposed a ban on the production of colour sarees by the handlooms?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : கைத்தறிக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தினால் விசைத்தறிகளில் குறிப்பிட்ட ரகங்கள்தான் உற்பத்தி செய்யவேண்டுமென்ற எண்ணத்தினால் இந்த விதி பிறப்பிக்கப்பட்டது.

**திரு. வி. எஸ். எஸ். மணி** : விசைத்தறிகள் அதிகமாக இருப்பது வட நாட்டில், வடநாட்டுக்காரர்களுக்கு கலர் தேவையில்லை. நம் நாட்டில் தயார் செய்யும் கைத்தறி வேஷ்டிகளுக்கு கலர் பார்டர் போட்டுக் கொடுக்கிறார்கள். ஆனால் விசைத்தறியில் தயார் செய்யும் வேஷ்டிகளுக்கு கலர் பார்டர் போடக்கூடாது என்று உத்தரவு அளிக்கப்படுமா ?





**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இப்போதுள்ள ஆணையிலேயே வேஷ்டிகளில் கலர் பார்டர் 4¼ இஞ்ச் அகலத்திற்கு மேல் போடக் கூடாது என்று ஆணையில் கூறப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Sir, is it a fact that the Central Government have passed an order that these sarees must be completely releated to the handloom sactor and whether this Government are in touch with the Central Government? Also whether it is a fact that the Central Government have complained that our State Government have not complied with the order that they have passed. What is the exact position now? Will the Hon. Minister be pleased to give details about it?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : சேலைகளைப் பொறுத்தவரையில் கலர் சேலைகளில் கரை இரண்டரை இஞ்சுக்கு மேல் பவர்லூமில் போடக் கூடாது என்று ஆணையில் குறிக்கப்பட்டிருக்கிறது. அது அமுலாக்கப்படுகிறதா என்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் அதிகப் பிரச்னை கிடையாது. விசைத்தறிகள் ஏராளமாக உள்ள சில மாநிலங்களில் இந்த ஆணை சரியாக அமுலாக்கப்படாததால் நாமும் பாதிக்கப்படுகிறோம், நம் கைத்தறியும் பாதிக்கப்படுகிறது. நம் நாட்டிலுள்ள மிகக் குறைவான விசைத்தறிகளும் பாதிக்கப்படுகிறது. மத்திய அரசு எல்லா மாநிலங்களிலும் இந்த ஆணையை அமல் நடத்துவதற்கு சிரத்தை காட்டவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறோம். நம் மீது அவர்கள் பாரத்தைத் தூக்கிப் போட்டு உங்கள் அதிகாரிகளை வைத்து அமுலாக்குங்கள் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலும் அமுலாக்குவதில் தயக்கம் காட்டுவதால் இந்தப் பிரச்னை வளர்ந்து கொண்டே இருக்கிறது.

*Industrial Investment Corporation*

* 496 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Tamil Nadu Industrial Investment Corporation proposes to finance working capital; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) & (இ) வரம்புக்குட்பட்டு ஒரு சில நிறுவனங்களுக்குத் தகுதி அடிப்படையில் மட்டுமே நடைமுறை மூலதனம் கொடுக்கப்படுகிறது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்** : இந்தக் கைத்தறி ஸ்தாபனங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அவர்களுக்கு வேண்டிய அதிகப்படியான சலுகைகளைச் செய்ய இந்த அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கேள்வி, "தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தொழில் நடைமுறை மூலதனத்துக்கு நிதி உதவி அளிக்கத் திட்டமிட்டுள்ளதா ?" என்பதாகும். கேள்வி 496.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இந்தத் தொழில் ஸ்தாபனங்களுக்கு நடைமுறை மூலதனத்திற்காக அரசினரோ அல்லது தொழில் உதவிக் கார்ப்பரேஷனே அதிகப் பண உதவி செய்வதில்லை. காரணம், மெஷின்ஸ் வாங்குவதற்கும் கட்டடம் கட்டுவதற்கும் மட்டும் தான் நாங்கள் கொடுக்கிறோம் என்று கூறுகிறார்கள். இதை நடைமுறையில் தெரிந்து கொள்ளாத நிலையில் இருப்பவர்கள் கையில் உள்ள மூலதனத்தைப் போட்டு கட்டடங்கள் கட்டி, மெஷின்ஸ் வாங்கிய பிறகு நடைமுறை மூலதனத்துக்குப் பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறவர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே, இப்போது உள்ள நடைமுறையை மாற்றி கட்டடங்கள் கட்டுவதற்கும் அல்லது நடைமுறை மூலதனத்துக்கும் நிதி உதவி கேட்டால் கொடுக்கலாம் என்ற முறையை நடைமுறைக்குக் கொண்டு வருமா? அப்படிச் செய்தால்தான் தொழிற்சாலைகளைப் பயன் உள்ளதாகச் செய்யமுடியும் என்பதை அரசு உணருமா? ஆகவே நடைமுறை மூலதனத்துக்கும் பணம் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கட்டடம் கட்டி இயந்திரங்கள் வாங்கிவிட்டு மீதிப் பணம் கேட்கிற நிகழ்ச்சிகள் இல்லை. இதற்கும் கொடுத்துவிட்டு மூலதனத்துக்கும் தரவேண்டும் என்று தான் கேட்கிறார்கள். அவர்களுக்குத் தேவைப்படுகிற தொகையில் கட்டடம், இயந்திரங்கள் இவற்றிற்கு கிட்டத்தட்ட 50%ல் இருந்து 75% வரையில் நாம் கொடுக்கிறோம். மூலதனமும் கொடுக்க வேண்டுமென்கிற கொள்கையை அரசாங்க ஆணையில் ஒப்புக் கொண்டு இந்த எம்.ஐ.சி.-க்கு அறிவித்திருக்கிறோம். எந்தெந்த அளவிற்கு நடைமுறை மூலதனத்துக்கும் பணம் கொடுக்க முடியுமோ அதற்கும் நாம் உதவி செய்யவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. கே. போஜன்:** அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து தொழில் முதலீட்டுக் கழகம் ஒரு வரம்பிற்கு உட்பட்டு ஒருசில தொழில் நிறுவனங்களுக்குத்தான் நிதி உதவி அளிக்கிறது என்று கூறினார்கள். அந்த வரம்பிற்கு உட்பட்ட தொழில் நிறுவனங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தேவைப்படும் பணத்தின் அளவை வைத்து, அவர்களின் தேவையின் தன்மையை வைத்துக் கொடுக்கிறோம். இயந்திரங்கள், கட்டடம் போன்றவற்றிற்கு தேவையான பணத்தை அவர்களும் ஓரளவிற்குப் போட்டு நாமும் ஓரளவிற்கு நடைமுறை மூலதனத்துக்கு கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருந்தால் கொடுக்கிறோம். எல்லாமே நாம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்கள் பணம் எதுவும் இல்லாமலேயே நாமே முழுவதற்கும் பணம் கொடுத்து விடுவது நல்லதா என்ற தயக்கத்தில்தான் இந்தக் கொள்கையை, அதாவது கொஞ்சம் வரம்பிற்குட்பட்டு நடக்க வேண்டும் என்று கருதுகிறோம்.





**திரு. சு. துரைசாமி:** ஒருசில தொழில்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதில் பனியன் உற்பத்தி இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒரு சில தொழில்கள் என்று என் பதிலில் இல்லை. ஒருசில நிறுவனங்களுக்கு என்றுதான் கூறியிருக்கிறேன். தேவைப்பட்டவர்கள் மனுக்களைப் பார்த்து அந்தந்த நிறுவனங்களின் தேவைகளை கணக்கிலெடுத்துக்கொண்டு ஒரு வரம்பு வைத்து கொடுப்பதுதான் திட்டம்.

### வாலாஜா வட்டத்தில் சர்க்கரை ஆலை

*497 வினா—**திரு. எம். அப்துல் கபூர் சாகிப்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில், இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட இருக்கும் சர்க்கரை ஆலையை வாலாஜா வட்டத்தில் அமைப்பது குறித்து அரசு கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

(இ) ஆம் எனில், வாலாஜா வட்டத்தில் எந்த இடத்தில் எப்போது ஆரம்பம் செய்யப்படும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) & (இ) ஆம்.

வாலாஜா வட்டத்தில் சர்க்கரை ஆலை நிறுவுவதாக உத்தேசமில்லை. புதிய சர்க்கரை ஆலைகள் இரண்டினையும் குடியாத்தம் வட்டத்தைச் சார்ந்த பிரம்மாபுரத்திலும், திருப்பத்தூர் வட்டத்தைச் சார்ந்த ஆம்பலூரிலும் அமைப்பதாக அரசு தீர்மானித்திருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** அங்கு சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கான வேண்டுகோள் வந்தது, ஆனால் ஆரம்பிக்கிற உத்தேசம் இல்லை என்று சொன்னார்கள். வாலாஜா, செய்யாறு, ஆரணி இம் மூன்று தாலுகாக்களில் ஒரு சர்க்கரை ஆலை கூடக் கிடையாது. ஆகவே, அரசுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலையை அனுமதிப்பதற்கு இங்கு இப்போது திட்டம் இல்லை என்று சொன்னாலும் தனியார் துறையில் ஆரம்பிப்பதற்கு வேண்டுகோள் போட்டிருந்தார்கள், அதையாவது அரசாங்கம் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எல்லா மாவட்டங்களைக் காட்டிலும் வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் அதிகமான சலுகைகள் காட்டி வருகிறோம். ஏற்கனவே கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்று இருக்கிறது. மேலும் நாம் தொடங்க இருக்கிற இரண்டு ஆலைகளை அதே வட ஆர்க்காடு மாவட்டத்தில்தான் தொடங்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். இன்னொரு ஆலை போளூர் வட்டத்தில் தனியார் துறையில் ஆரம்பிக்க வேண்டுமென்று முயற்சி எடுத்திருக்கிறார்கள். அதற்கும் சிபாரிசு செய்திருக்கிறோம். இவ்வளவெல்லாம் கொடுத்தும் வட ஆர்க்காடு உறுப்பினர்களுக்கு திருப்தி ஏற்படவில்லையே என்பதுதான் வருத்தமாக இருக்கிறது.

## தொழிற் பயிற்சிப்பள்ளி ஆசிரியர்கள்

* 498 வினா—திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் போதகர்கள் மூன்று ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்தும் இது வரை வேலை நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதை அரசு மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போதிருந்து இந்த ஏற்பாடு அமலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): இப் பதவி குறித்து வரையறுக்கப்பட்டுள்ள தொழில் நுட்பக் கல்வித் தகுதி பெற்று மூன்றாண்டு கால தற்காலிக ஆசிரியர்களாகப் பணி புரிந்தவர்களின் பணி, அவர்களின் மூன்றாண்டு கால தற்காலிக ஆசிரியர் பணியை மூன்றாண்டு கால நடைமுறை அனுபவமாகக் கொண்டு, முறைப்படுத்தப்பட்டுள்ளது. மூன்றாண்டுகளுக்கு மேல் பணி புரிந்துள்ள 55 தற்காலிக மேற்பார்வை ஆசிரியர்களின் பணி முறைப் படுத்தப்படாமலிருந்ததற்குக் காரணம் அவர்களுக்கு மூன்றாண்டு கால அனுபவம் இல்லை என்பதல்ல. வரையறுக்கப்பட்ட தொழில் நுட்பத் தகுதிகள் அவர்களுக்கு இல்லாமலிருந்ததேயாகும். தகுதி பற்றிய விதி அவர்களுக்குச் சாதகமாக இப்போது தளர்த்தப்பட்டதன் மூலம் அவர்களது பணி முறைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்பார்வையாளர் ஆசிரியர்களின் பணியை முறைப்படுத்துவது குறித்து இப்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளை மாற்றம் செய்ய செயற்குறிப்பு எதுவுமில்லை.

## *Smoke Emenating From Disel Buses*

* 499 *Q.*—Dr. H. V. HANDE :
Thiru K. VINAYAKAM : } Will the Hon. Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware that voluminous smoke puffed by the diesel buses poses a health hazard to road-users by polluting the atmosphere; and

(*b*) if so, the steps taken by the Government to prevent the smoke?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்.

(இ) மோட்டார் வண்டிப் பொறியிலிருந்து வெளி வரும் வாயு சாலையின் மேற்பரப்பின் மீது படும்படி வெளியேற்றப்படாத வகையில் மோட்டார் வண்டிகளை அமைக்க வேண்டும் அல்லது அவற்றின் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும் என்று 1940-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டி விதிகள் வரையறுத்துள்ளது. தவிர்க்கக் கூடிய புகை, கண்ணுக்குத் தெரியும் நீராவி, எண்ணெய் அல்லது ஊறு விளைவிக்கும் பொருள் எதுவும் வெளியேற்றப்படாதவாறு ஒவ்வொரு மோட்டார் வண்டியும் அமைக்கப்பட்டு, பயன்படுத்தப் படவேண்டும். வெளிநாடுகள் சிலவற்றில் வாயுப் போக்குக் குழாய்



கள் செங்குத்தாகப் பொருத்தப்படுகின்றன என்றும், வெளிப்படும் வாயு அதன் விளைவாக விரைவாக மேல் நோக்கிச் செல்வதால் சுற்றுப்புறக் காற்றின் தூய்மை கெடுவது பெருமளவுக்குக் குறைக் கப்படுகிறது என்றும் தெரிய வந்துள்ளது. இம் மாநிலத்திலுள்ள மோட்டார் வண்டிகள் அனைத்திலும் இம் முறையைப் பின் பற்றலாமா என்று அரசு பரிசீலனை செய்து வருகிறது.

Thiru K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the voluminous smoke puffed out of the diesel engines in the State Transport buses is the main cause for prevalence of jaundice in Madras City and will the Government take steps to see that the smoke is puffed out at the top of the buses like the locomotive engines?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மஞ்சள் காமாலை நோய்க்கும் இந்த புகைபோக்கிகளுக்கும் சம்பந்தமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. கனம் உறுப்பினரைப் பார்த்தால் அப்படி தெரியவில்லை.

Dr. H. V. HANDE : Mr. Speaker, Sir, may I know from the Minister the number of buses that the Government has planned to remodel so as to make smoke go up instead of making it go down and thus reduce the concentration of smoke and also whether it is not a fact that the main reason for thick fumes coming out is mainly due to the condition of the engines not being good or efficient and whether the Government will take up first the buses whose engines are not good for remodelling so as to make the smoke go up?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய ஆலோசனை கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக் கப்படும்.

## அரசுப் பேருந்துகள்

* 500 வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரிலிருந்து வடமலைக்குறிச்சிக்கு போடப் பட்டுள்ள சாலையில் அரசு பஸ் போக்குவரத்து உண்டா ?

(இ) பஸ் போக்குவரத்து உள்ள சாலையில் கல் பரப்புதல் (மெட்டல் செய்யவேண்டுமென்ற விதி) உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இல்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவரவர்களே, இந்த வடமலைக்குறிச்சிக்கு இப்பொழுது போடப்பட்டிருக்கும் ரோட்டில் பஸ் போக்குவரத்து இருப்பதன் காரணமாக மிகவும் பழுதாகி

யிருக்கிறது. எனவே, இப்பொழுது இல்லையென்றாலும், அதை உடனடியாகச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்த பஸ் போகின்ற சாலை பழுதடைந்திருப்பதாகக் குறிப்பு இல்லை. ஆனால் அந்தச் சாலையை, 'ஃபிட்நெஸ் சர்ட்டிபிகேட்' பெற்ற பிறகுதான் பஸ் விட அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

*** 501 வினா—திரு. ந. தருமலிங்கம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டம், வேதாரணியத்திலிருந்து திருத்துறைப்பூண்டி—முத்துப்பேட்டை—பட்டுக்கோட்டை வழியாக அரசாங்கத்தின் விரைவுப் பேருந்து திருச்சிராப்பள்ளிக்கு விடுகின்ற செயற் குறிப்பு ஏதுவும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இல்லை.

**திரு. ந. தருமலிங்கம்:** பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் தென்கிழக்குக் கோடியிலுள்ள மிகப் பெரிய ஊர் வேதாரணியம். அந்த ஊரிலிருந்து திருச்சிக்கு நாள்தோறும் சுமார் 50, 60 பேர்கள் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, பட்டுக்கோட்டை, முத்துப்பேட்டை வழியாக அரசாங்கப் பேருந்து விடுவதுபற்றி அரசாங்கம் மீண்டும் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இதுபற்றி ஆலோசிக்கப்பட்டது. இப்பொழுது சேலத்திற்கும் தஞ்சைக்கும் இடையிலுள்ள அரசாங்க பஸ்ஸைக் கொண்டே மேற்படி போக்குவரத்து சமாளிக்கப்படும் என்று கருதப்படுகிறது. தற்போது வேதாரணியத்திலிருந்து திருச்சிராப்பள்ளிக்கு அரசாங்க பஸ் விட செயற் குறிப்பு இல்லை.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** தலைவரவர்களே, சென்னையிலிருந்து வேதாரணியத்திற்குச் செல்பவர்களுக்கு, வேதாரணியம் முக்கியமான ஸ்தலமாக இருப்பதால் அதிகப் போக்குவரத்து இருப்பதால், சென்னையிலிருந்து வேதாரணியத்திற்கு துரிதப் பஸ் விட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** சென்னையிலிருந்து வேதாரணியத்திற்கு அதிக ஜனப் போக்குவரத்து இல்லை என்று நம்முடைய விசாரிப்பில் தெரிய வருகிறது.



## திருப்பூர் ஜம்மனை பாலம்

*** 502 வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருப்பூர் நகரில் உள்ள ஜம்மனை பாலம் வெடிப்பு விட்டு விட்டது என்பது உண்மையா?

(இ) இப்பாலத்தை புதுப்பிக்கும் நோக்கம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) ஆம் எனில், எப்போது வேலை துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்.

**(இ) & (உ):** வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் திருப்பூர் நகராட்சியின் எல்லைகளுக்குள் அமைந்துள்ள திருப்பூர்-சோமனூர் சாலையில் மைல் 0/0-வில் இருந்து 1 மைல் 4 பர்லாங்கு தொலைவில் ஜம்மனை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ளது. பாலத்தை அகலப் படுத்துவதற்கும், மேல் தளத்தைப் புதுப்பிக்கவும் ரூபாய் 3 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலேயே இந்தப் பணியை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பாலம், திருப்பூர் நகராட்சியின் எல்லைக்குள் இருப்பதால் செலவில் 25 சதவீதத்தையும் சென்டேஜ் கட்டணத்தையும் நகராட்சி கொடுக்க வேண்டும். இத் தொகையை ஏற்றுக்கொள்ளும் நகராட்சி மன்றத்தின் முடிவு கிடைக்கப்பெற்றுள்ளது. நடப்பு ஆண்டிலேயே இந்த வேலையை மேற்கொள்வதற்கான அரசின் ஒப்பளிப்புடன் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அரசாங்கம் வந்தபிறகு, திருப்பூரில் 6 இலட்சம் ரூபாயில் ஏற்கெனவே ஒரு பாலத்தைப் புதுப்பித்து அண்மையில் திறப்பு விழா நடத்தியிருக்கிறார்கள். மேற்கொண்டும் 3 இலட்சம் ரூபாய் தந்தமைக்காக இந்த அரசாங்கத்திற்கு பாராட்டு தெரிவித்து, இந்த வேலை எப்போது முடியும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்கவில்லை என்பது என்னுடைய கருத்து.

## கூவம் சீரமைப்புத் திட்டம்

*** 503 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூவம் நதி சீரமைப்புத் திட்டத்திற்கு டிசம்பர் 1969 முடிய செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** 1969-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய ரூபாய் 17.65 லட்சம் கூவம் சீரமைப்பு திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது.

504 வினா—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை கூவம் ஆற்றின் சீரமைப்புத் திட்டத்தின் வேலைகள் எப்போது முடியும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கூவம் ஆற்றுச் சீரமைப்புத் திட்டம் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கிறேன்.

* 505 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the Government to have a boat club at the Cooum near Napier bridge?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம். நேப்பியர் பாலத்தின் கிழக்கே கூவம் ஆற்றின் வலது கரையில் படகு ஓட்டுவோர் கழகத்திற்காகக் கட்டிடம் ஒன்றும், சிற்றுண்டிச்சாலை ஒன்றும், 3.2 லட்சம் ரூபாய் செலவில் கட்டும் செயற்குறிப்பு உள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, சிந்து நதியின் மிசையினிலே, சேர நன்னாட்டிளம் பெண்களுடனே, சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து, தோணிகளோட்டி விளையாடிடுவோம் என்று பாரதியார் சொன்னதைப்போல், கூவம் நதியில் படகு விடும் திட்டமுள்ளதா? அப்படியிருந்தால் அதனை 72-ம் ஆண்டிற்குள் செயல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கனவு உலகத்தில் சஞ்சரிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, கூவம் நதி சீரமைப்புத் திட்டத்தை நல்ல முறையில் காண்பிக்க வேண்டுமென்பதற்காக நாளைய தினம் 24-ம் தேதி 4 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தப் பார்வைக்கு வந்தால் இந்தத் திட்டத்தைப் பற்றி விவரமாகத் தெரிந்து கொள்ளலாம். தேனீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**திரு. கே. விநாயகம் :** கூவம் நதி சீரமைப்பு செய்கிற வேலையிலே அமைச்சர்கள் அதைப் போய்ப் பார்ப்பதற்காக தனியே ஒரு ரோடு கூவம் ஆற்றிலே போடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதிலே கார்களைச் செலுத்த, அந்த இடம் பிரிட்ஜ் வரை போடுவதற்கு எவ்வளவு செலவானது அந்த ரோடு போடுவதற்கு மாத்திரம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அமைச்சர்களுக்குத் தனியாக ரோடு போட்டதாகத் தகவல் இல்லை. நாளைய தினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினரவர்கள் வந்தால் எல்லாம் தெரிந்து கொள்ளலாம்.



**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு எவ்வளவு? அந்தச் செலவுக்கு ஏற்ப அதற்கு எவ்வளவு வருமானத்தை அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** வருமானம் எவ்வளவு என்ற குறிப்பு என்னிடத்தில் இல்லை.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், இந்தக் கூவம் சீரமைப்புத் திட்ட வேலையை பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மென்ட் தன்னுடைய பணியாளர்களை வைத்தே வேலை செய்கிறதா அல்லது பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் 'த்ரூ கண்ட்ராக்டர்ஸ்' இந்த வேலையைச் செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பொதுப்பணித் துறை மேற்பார்வையில் வேலை நடைபெற்று வருகிறது.

Dr. H.V. HANDE : sir will the Hon Minister be pleased to tell us the main features of this Cooum Improvement Scheme, the aspects in which the Cooum is going to be improved and whether, after improvement, there is going to be increased navigation? What is the programme the Government has got and has it received any complaint from washermen or laundrymen about the dhobykhana being displaced?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நாளைக்கு நேரிலே வந்தால் எல்லா விவரங்களும் சொல்லுகிறேன்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் நதிச் சீரமைப்பு வேலையில் கடற்கரைச் சாலையோரமாகக் கண்ணுக் கெழில் காட்சி தரும் பூங்காக்கள் அமைக்கப்படுகின்றனவே, அதைப்போல் கண்ணுக்கினிய காட்சி தரும் பூங்காக்களை கூவம் நதியின் மற்ற பகுதிகளிலும் அமைப்பதற்கு திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** கண்ணுக்கினிய காட்சிகளை அதிகமாக அமைத்தால் அதனால் ஏற்படுகிற ஆபத்தும் அதிகமாகிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, கூவம் சீரமைப்புத் திட்டத்தில் வேலைகள், டெண்டர்கள் மூலம் கொடுக்கப்படாமல், நாமினேஷன் மூலம் கொடுக்கப்படுவது உண்மையா? அப்படிக் கொடுப்பதன் விளைவாகப் பல ஊழல்கள் நடப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் குற்றம் சொல்லக்கூடாது. ஊழல் நடந்திருக்கிறது என்றால் அதை நிரூபிப்பதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** ஏற்றுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரம் இப்பொழுது இருக்கிறதா? கேள்வி நேரத்தில் குற்றங்குறை சாட்டுதல் கூடாது.

**திரு. க. இராமமூர்த்தி:** கேள்வியே, டெண்டர் மூலம் இல்லாமல் நாமினேஷன் மூலம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைக்கேளுங்கள்.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, இந்தக் கூலம் சிரமைப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அதற்கான வேலைகள் காண்டிராக்டர்களுக்கு டெண்டர்கள் மூலம் விடாமல், தனிப்பட்டவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலே நாமினேஷன் மூலம் விடப்படுவது உண்மையா? அதன் விளைவாக பல்வேறு விரும்பத்தகாத நிலைமைகள் ஏற்பட்டிருப்பது உண்மையா? இதைப்பற்றி அரசாங்கம் விசாரணை செய்ய முன் வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு, மூன்று கேள்விகள் போட்டால், முதல் கேள்விக்கு உண்மை என்று விடை சொன்னால் தான் அடுத்த கேள்வியைக் கேட்டால் அதற்கு விடை சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** பொதுப்பணித் துறை குறிப்பிட்ட விதிமுறைகளின்படி வேலை செய்து வருகிறது. விதிமுறைகளுக்கு உட்பட்டு, டெண்டர்கள் கோரவும், நாமினேஷன் கேட்கவும் அதிகாரமிருக்கிறது. அந்த அதிகாரத்திற்கு உட்பட்டு செயல்பட்டு வருகிறது. எந்தவிதமான குறைபாடுகளும் ஏற்பட்டதாகக் கருத்துக்கள் கிடையாது. வீணாகப் புகார்களைச் சொல்லி வேலைக்குத் தயக்கம் ஏற்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

## பரங்கிப்பேட்டைத் துறைமுகம்

*506 வினா—திரு. எஸ். சிவசுப்ரமணியன்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரங்கிப்பேட்டையை ஒரு துறைமுகமாக்குவதற்கு இம்மாநில அரசு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஏற்கனவே பரங்கிப் பேட்டையில் ஓர் துறைமுகம் அமைக்கப்பட்டுள்ளது. இத்துறைமுகத்தில் பல ஆண்டுகளாக யாதொரு வணிகப் போக்குவரத்தும் இல்லாததால், இதை மூடுவதற்கு தமிழக அரசின் ஒப்புதலை மத்திய அரசின் சுங்க இலாகா கோரியது. தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், தமிழக அரசின் துறைமுக அதிகாரியிடமும் கருத்துக்களை கேட்டு அறிந்த பின்னர். இந்த அரசு ஒப்புதலை அளித்துள்ளது.





**திரு. எஸ். சிவசுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, பரங்கிப் பேட்டைக்கு போர்டோநோவோ என்ற பெயர் இருக்கிறது. ஆங்கிலேயர் காலத்தில் அது துறைமுகமாக இருந்து, பல கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பல கட்டிடங்கள் இருக்கின்றன. சிங்கப்பூர், பினாங்கு, கோலாலம்பூர் ஆகிய இடங்களிலிருந்து வரும் ஜனங்கள் நாகப்பட்டினத்தில் இறங்கவேண்டியிருக்கிறது. அப்படி அங்கு இறங்க முடியவில்லை என்றால், திரும்பவும் சென்னைக்கு வந்து போகவேண்டியிருக்கிறது. ஆகவே, பரங்கிப்பேட்டை துறைமுகத்தை அமைத்தால், நிச்சயம் எல்லா மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும், பல விரயங்கள் ஆகா. ஆகவே, திரும்பவும் நம்முடைய அரசு பரிசீலனை செய்து, மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** போதிய வணிகப் போக்குவரத்து இல்லாத காரணத்தினால், இந்தத் துறைமுகத்தை மூடுவதற்கான அந்த யோசனை, ஆராயப்பட்டது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, மீண்டும் போதிய போக்குவரத்து உண்டாவதற்கு சாத்தியக்கூறுகள் தென்படுமானால், அது அந்த நேரத்தில் ஆராயப்படும்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister the number of ports recommended by the State Government to the Central Government. Is there any order of priority fixed for the same?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, at the moment we are engaged in improving the facilities at the Cuddalore Port. As the hon. Member is aware, the Tuticorin Port is also being developed as a major port. Apart from these, there are minor improvements being made to the various other ports.

## செங்கிரைக் காட்டில் கிடைக்கும் காவிக்கல்

*507 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள செங்கிரைக் காட்டுப் பகுதியில் விளையும் காவிக் கல்லைக் குத்தகைக்கு விடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன்:**

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. மு. ச. சிவசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் வட்டத்திலுள்ள செங்கிரைக் காட்டுப் பகுதியில் கிடைக்கும் ரெட்டாக்கர் வெளிநாடு ஏற்றுமதிக்கு அதிக கிராக்கி இருக்கிற

காரணத்தினால், வெளி நாட்டு நாணயத்தை சேமிக்கலாம் என்ற முறையிலாவது, அனுமதி கொடுப்பதற்கு சர்க்கார் மீண்டும் புனராலோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்.** இந்தக் கேள்வியில் கேட்கப்பட்டிருப்பது செங்கீரைக் காட்டுப் பகுதியில் உள்ள செங்காலிக் கற்களை குத்தகைக்கு விடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா என்பது தான். ஏற்கனவே புதுக்கோட்டை சமஸ்தானத்தின் மூலம் கருப்பையா அம்பலம் என்பவருக்கு நீண்டகால குத்தகைக்கு (பெர்பெச்சுவல் லீஸ்) விடப்பட்டது. திருச்சி மாவட்ட கலெக்டர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து, அவரை வெளியேற்ற முடியுமா என்பதுபற்றி வழக்கறிஞர், நிபுணர்கள் ஆலோசனை பெற்று வருகிறார். மேற்கொண்டும் நிபுணர் ஆலோசனை பெறவேண்டிய காரணத்தினால், இப்பொழுது அந்த ஒப்பந்தம் அப்படியே இருக்கிறது. அவருக்கு அதிக லாபம் வருகிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு ரூ. 34 கொடுக்கிறார். அவருக்கு ஒரு ஆண்டுக்கு ரூ. 10,000 இலாபம் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. அதை எடுத்துக்கொள்வது பற்றி இப்பொழுது சட்ட இலாகா ஆலோசனை நடத்திக்கொண்டிருக்கிறது. ஆலோசனை முடிந்ததற்குப் பின்னால் ஒரு முடிவு எடுக்கப்படும்.

## மாயூரம் கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்கள்

*508 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாயூரம், மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலையில் 1969-ம் ஆண்டு வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்கள் அவ்வாறு நீக்கப்பட்டதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்:**

(அ) மாயூரம், மணல்மேட்டில் உள்ள தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலையில் 1969-ம் ஆண்டில் 10 தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்.

(இ) (1) 1966-ஆம் ஆண்டில் இவ்வாலையில் ஏற்பட்ட கதவடைப்பை அடுத்து, மூன்று தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கப்பட்டது.

(2) சிக்கன நடவடிக்கை காரணமாக, ஒருவர் ஆட்குறிப்பு செய்யப்பட்டார்.

(3) கொடுத்த வேலையைச் செய்ய மறுத்ததற்காக, ஒருவருக்கு வேலை மறுக்கப்பட்டது.



(4) குறிப்பிட்ட அளவு வேலையைச் செய்யாத காரணத்திற்காக ஒருவருக்கு வேலை மறுக்கப்பட்டது.

(5) பதவிக்கால அளவு முடிவடைந்ததன் மேல், இரண்டு தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கப்பட்டது.

(6) எஞ்சியுள்ள இரண்டு தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில், அரசிடம் தகவல் எதுவும் இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மணல்மேடு பஞ்சாலைத் தொழிலாளர்கள் நீக்கப்பட்டது, அவர்கள் தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக வேண்டுமென்றே அந்த ஆலை நிர்வாகம் அவர்களைப் பழிவாங்கிறார்களா. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன காரணத்திற்காக என்று வேண்டுமானால் கேளுங்கள். காரணத்தைக் கூட அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள்.

**திரு. என். கிட்டப்பா :** அப்படி அந்தத் தொழிலாளர்கள் நீக்கப்பட்டதற்கு அரசியல் காரணம் ஏதேனும் உண்டா? மீண்டும் பரிசீலித்து, பழி வாங்கப்பட்ட தொழிலாளர்கள் 10 பேர்களுக்கும் வேலை வாய்ப்பை உருவாக்கி தருவதற்கு இன்றைய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னால் 1966-ல் நடைபெற்ற சிக்கலை ஒட்டி, இந்த வேலை இழப்பு நடவடிக்கைகள் நடந்தன. இப்பொழுது இந்த 10 தொழிலாளர்களில் நான்கு பேர்களை மீண்டும் வேலையில் அமர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கை இந்த அரசாங்கம் மேற்கொண்டு, தொழிலாளர் நலத் துறையின் மூலமாக அவர்கள் வேலைக்குச் செல்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மீதி நான்கு பேர்களைப் பற்றிய பிரச்சினை நடுவர் தீர்ப்பிற்கு விடப்பட்டிருக்கிறது. மீதி இரண்டு பேர்களைப் பற்றிய பிரச்சினையை இப்பொழுது நாங்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். கீழே இருக்கிற லேபர் ஆபிசர்களிடமிருந்து அறிக்கை வரவில்லை.

**திரு. கொடைவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி:** இந்த நூற்பு ஆலையில் வேலையிலிருந்து நீக்கப்பட்ட சிப்பந்திகளுக்கு மாற்று வேலை அளித்து, அதற்கு அவர்கள் மறுத்த காரணத்தினால், நீக்கப்பட்டார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படி அவர்கள் மாற்று வேலையை ஒத்துக்கொள்வதாயிருந்தால், சர்க்கார் மறுபடியும் இவர்களை வேலையில் அமர்த்துவது பற்றி பரிசீலனை செய்வதற்கு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, முதலில் நீக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்ததால், முதலில் 9 பேர்களைப்பற்றிய பிரச்னை நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டு, அவர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது.

*1969-ம் ஆண்டை பொறுத்தவரையில், 10 பேர்கள் மீது வழக்குகள் இருந்தன. நான்கு பேர்களை நிர்வாகம் எடுத்துக்கொள்வதாக இப்பொழுது கூறி, எடுத்துக்கொண்டிருக்கிறது. மீதி இருக்கிற 6 பேகளைப் பற்றி தான் இப்பொழுது பிரச்சினை. இதில் நான்கு பேர்களைப் பற்றிய பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு அனுப்பியிருக்கிறோம். இன்னும் இரண்டு பேர்களைப் பற்றி இன்னும் அறிக்கை வரவில்லை. அறிக்கை வந்தபிறகு அவர்களைப் பற்றிய பிரச்சினையையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.*

*திரு. வி. கே. கோதண்டராமன்:* வேலையிலிருந்து நீக்கப் பட்டவர்களில் 10 தொழிலாளர்களில் நான்கு பேர்களை எடுத்துக் கொண்டதற்குப் பிறகு, மற்ற 6 பேர்களையும் எடுத்துக்கொள் வதற்குப் பதிலாக, மூன்று விதமாக தரம் பிரித்து இருக்கிறீர்களே, இதில் ஏதாவது அரசியல் காரணம் உண்டா என்பதை விளக்க முடியுமா?

*மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்.* தலைவர் அவர்களே, அதனால்தான் முதலிலேயே நான் கூட தரம் பிரித்து, அவர்களைப் பற்றிய பிரச்சினை என்ன நிலையில் இருக்கிறது என்று பதில் சொன்னேன். ஒவ்வொருவர் பேரிலும் தனித்தனியாக வழக்குகள் இருக்கின்றன. நிர்வாகம் அவர்கள் பேரில் கிரிமினல் வழக்கு பெண்டிங்காக இருக்கிறது, நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆகவே தான், இதை முழு அளவில் டிடைல்டாக விசாரிக்க வேண்டும் என்ற காரணத்தினால், நடுவர் தீர்ப்புக்கு நாம் அனுப்பியிருக்கிறோம்.

*திரு. ஆர். நாகசுந்தரம்.* இந்த மாயூரம் மணல்மேட்டிலுள்ள கூட்டுறவு நூற்பு ஆலையில் யாரேனும் சட்டமன்ற உறுப்பினர் 'நிர்வாகஸ்தராக நியமிக்கப் பட்டிருக்கிறாரா?

*மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :* இது தொழில் அமைச்சரைக் கேட்கவேண்டிய கேள்வி.

**வெளிக்குறியிடாத வினாக்கள்.**

*Cases registered under Suppression of Immoral Traffic Act.*

1 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

The number of cases registered under the Suppression of Immoral Traffic Act in the year 1964 to 1969 up to 31st October in the City of Madras, year-war?



The number of cases registered under the Suppression of Immoral Traffic in Women and Girls Act during the period 1964 to 1969 (up to 31st October) in the City of Madras, is as follows :—

| Year | *Number of cases registered.* |
|---|---|
| 1964 ... ... ... ... ... | 299 |
| 1965 ... ... ... ... ... | 278 |
| 1966 ... ... ... ... ... | 259 |
| 1967 ... ... ... ... ... | 291 |
| 1968 ... ... ... ... ... | 509 |
| 1969 (up to 31st October 1969) ... ... | 340 |

சென்னை மாநகரில் 1964–69 (1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி வரையில்) ஆண்டுகளில் விபசாரத் தடைச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு. | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1964 .. .. .. | 299 |
| 1965 .. .. .. | 278 |
| 1966 .. .. .. | 259 |
| 1967 .. .. .. | 291 |
| 1968 .. .. .. | 509 |
| 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி வரை). | 340 |

*Drainage Schemes for Madras City*

2 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) Whether this Government has received any request from the Corporation of Madras for loan for implementing drainage scheme for 1969-70;

(b) if so, the total amount of loan so far this Government has given to the Corporation of Madras; and

(c) the details thereof?

(*a*) Yes.

(*b*) and (*c*)—Loans amounting to Rs. 26 lakhs have sanctioned during 1969–70 for the following Drainage Schemes of the Corporation of Madras :—

| | (RS. IN LAKHS.) |
|---|---|
| (1) Comprehensive Drainage for Zone I ... ... | 5.00 |
| (2) Sembium Drainage ... ... ... ... | 0.50 |
| (3) Comprehensive Drainage for Zone II .. | 5.00 |
| (4) Kodambakkam Drainage ... ... ... | 2.00 |
| (5) Saidapet Drainage ... ... ... ... | 1.00 |
| (6) Comprehensive Drainage for Zone V ... | 12.00 |
| (7) Improvements to existing intercepting sewers. | 0.50 |
| | 26.00 |

(அ) ஆம்.

(இ) & (உ) : சென்னை மாநகராட்சிக்கு கீழ்க்கண்ட பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கு 1969-70-ல் ரூ. 26 லட்சம் கடன்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1. விரிவான முதல் மண்டல பாதாள சாக்கடைக்கு | 5.00 |
| 2. செம்பியம் பாதாள சாக்கடைக்கு | 0.50 |
| 3. விரிவான இரண்டாவது மண்டல பாதாள சாக்கடைக்கு. | 5.00 |
| 4 கோடம்பாக்கம் பாதாள சாக்கடைக்கு | 2.00 |
| 5. சைதாப்பேட்டை பாதாள சாக்கடைக்கு | 1.00 |
| 6. விரிவான ஐந்தாவது மண்டல பாதாள சாக்கடைக்கு | 12.00 |
| 7. இப்பொழுது இருக்கும் குறுக்கு பாதாள சாக்கடைகளை அபிவிருத்தி செய்வதற்காக. | 050 |
| மொத்தம் | 26.00 |

*Damages caused by rains*

3 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR :
THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

The estimated loss of lives and properties in Tamil Nadu Districtwise consequent on the rains in October 1969?



| *Name of district.* | *Loss of human life.* | *Loss of animal life.* | *Value of loss of property.* RS. |
|---|---|---|---|
| 1 Madras .. .. | 7 | .. | 26,46,600 |
| 2 Chingleput .. .. | 4 | .. | 1,24,240 |
| 3 North Arcot .. | 3 | .. | 33,005 |
| 4 South Arcot .. .. | .. | .. | 10,51,300 |
| 5 Coimbatore .. .. | 4 | 25 Rams, 25 Goats, 2 Cows | 3,200 |
| 6 Salem .. .. .. | .. | .. | 600 |

In other Districts—*Nil*.

| மாவட்டத்தின் பெயர். | ஆட் சேதம். | கால்நடை சேதம். | சேதமடைந்த பொருள்களின் மதிப்பு. ரூ. |
|---|---|---|---|
| 1 சென்னை .. .. | 7 | .. | 26,46,600 |
| 2 செங்கற்பட்டு .. .. | 4 | .. | 1,24,240 |
| 3 வட ஆற்காடு .. .. | 3 | .. | 33,005 |
| 4 தென் ஆற்காடு.. .. | .. | .. | 10,51,300 |
| 5 கோவை .. .. | 4 | 25 செம்மறி ஆடுகள். 25 வெள்ளாடுகள் 2 பசுக்கள் | 3,200 |
| 6 சேலம் .. .. .. | .. | .. | 600 |

இதர மாவட்டங்கள்—சேதம்—இல்லை.

*Sale of fish in Government Factory at Tuticorin.*

4 *Q*.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether canned sardine fish in oil is being sold by Government Fish Canning Factory, Tuticorin; and

(*b*) if so, the rates of the sales?

(*a*) and (*b*) Canned Sardine Fish in oil produced at the Government Fish Canning Factory at Tuticorin till 16th June 1969 is being sold by the Assistant Director of Fisheries (Technology), Tuticorin at the following rates :—

| | |
|---|---|
| Whole sale selling price (Ex-factory) | Rs. 1.35 per can of 8 oz. |
| Retail selling price ... ... | Rs. 1.60 per can of 8 oz. |

The factory has been leased out to a private entrepreneur from 16th June 1969.

(அ) (இ) தூத்துக்குடியில் மீனை டப்பியில் அடைக்கும் அரசுத் தொழிற்சாலையில் 1969-ம் ஆண்டு ஜுன் மாதம் 16-ம் தேதி வரை எண்ணெயில் ஊறவைக்கப்பட்டு டப்பியில் அடைக்கப் பெற்ற சூடை ( Saxadine ) மீன் கீழ்க்கண்ட விலை விதங்களில் தூத்துக்குடி, மீனளத் துறை தொழில் நுட்ப உதவி இயக்குநரால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது:—

| | |
|---|---|
| மொத்த விற்பனை விலை (தொழிற்சாலை விலை) .. .. | 8 அவுன்ஸ். கொள்திறனுள்ள டப்பி ஒன்றுக்கு ரூ. 1·35. |
| சில்லரை விற்பனை விலை .. .. .. .. .. | 8 அவுன்ஸ். கொள்திறனுள்ள டப்பி ஒன்றுக்கு ரூ. 1·60. |

இந்தத் தொழிற்சாலை 1969-ம் ஆண்டு ஜுன் மாதம் 16-ம் தேதி முதல் தனியார் தொழில் முனைவர் ஒருவருக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

*Tool and Die Designing Training Centre, Dindigul*

5 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) The number of persons given training during 1969 in the Tool and Die Designing Training Centre at Dindigul; and

(b) the details of training given.

(a) 52.

(b) The candidates are given training both theoretical and practical in the design and manufacture of tools and dies required for various engineering units particularly in the manufacture of locks.

(அ) 52.

(இ) பல்வேறு பொறியியல் பிரிவுகளுக்குத் தேவைப்படுகிற, குறிப்பாக பூட்டுகள் தயாரிக்கும் தொழிலுக்குத் தேவைப்படுகிற கருவிகள், வார்ப்புகள் வடிவமைப்பு, தயாரிப்பு ஆகியவற்றில் பாட முறை, நடைமுறை ஆகிய இரு முறைகளிலும் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

*Construction of Quarters for Police Personnel in Nilgiris district*

6 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) Whether the construction of Police quarters has been undertaken in the Nilgiris district?

(b) If so, the details of the contractors to whom the work has been entrusted?



(a) Yes.

(b) The Government have sanctioned the construction of quarters for the Police Subordinate Staff at Church Hill Gardens, Ootacamund, at Coonoor and at Nellacottah in Gudalur taluk. In respect of the construction of quarters at Ootacamund, tenders were called for by the Sub-Divisional Officer, Public Works Department (Buildings). Ootacamund, but there was no response. The work is therefore being split up and fresh tenders are being called for by the Sub-Divisional Officer. As regards construction of quarters at Coonoor, tenders are being called for by the Sub-Divisional Officer, Public Works Department, Coonoor. In respect of construction of quarters at Nellacottah, the work has already been entrusted to Thiru P. K. Ramakrishnan, Public Works Department Constractor, Gudalur.

(அ) ஆம்.

(இ) உதகமண்டலத்திலுள்ள சர்ச் ஹில் தோட்டத்திலும் குன்னூரிலும் கூடலூர் வட்டத்திலுள்ள நெல்ல கோட்டாவிலும் காவல் துறை சார்நிலைப் பணியாளர்களுக்கென குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. உதகமண்டலத்தில் குடியிருப்புகள் கட்டுவதைப் பொறுத்த வரையில் உதகமண்டலத்திலுள்ள பொதுப் பணித் துறை (கட்டடம்) துணைக் கோட்ட அதிகாரி ஒப்பந்தப் புள்ளிகள் அனுப்பும்படி கேட்டுக் கொண்டார். ஆனால் ஒப்பந்தப் புள்ளிகள் எவையும் வரவில்லை. எனவே குடியிருப்புகள் கட்டும்பணி தற்போது பிரிக்கப்பட்டு துணைக்கோட்ட அதிகாரியால் ஒப்பந்தப் புள்ளிகள் புதிதாகக் கேட்கப்படுகின்றன. குன்னூரில் குடியிருப்புகள் கட்டுவதைப் பொறுத்தமட்டில் குன்னூரிலுள்ள பொதுப் பணித்துறை துணைக் கோட்ட அதிகாரி மேற்குறித்த பணிக்கான ஒப்பந்தப் புள்ளிகளைக் கேட்டுள்ளார். நெல்ல கோட்டாவில் குடியிருப்புகளைக் கட்டுவது குறித்த பணி கூடலூரிலுள்ள பொதுப்பணித் துறை ஒப்பந்தகாரராகிய திரு. பி. கே. ராமகிருஷ்ணன் என்பவரிடம் ஏற்கெனவே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**திறந்தவெளி சிறைச்சாலைகள்.**

7. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திறந்தவெளி சிறைச்சாலைகள் தமிழ்நாட்டில் எங்கெங்கு அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நீலகிரி கிராமத்திலும் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்கநல்லூரிலும் சேலம் மத்திய சிறைச்சாலையுடன் இணைந்துள்ள ஒரு தோட்டத்திலும் திறந்தவெளி சிறை சாலைகள் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன. தகுந்த நிலங்கள் கிடைத்தால் பிற மாவட்டங்களில் திறந்த வெளி சிறைச்சாலைகள் துவக்கப்படும்.

Open Air Jails functioning at present at Neelagiri Village in Thanjavur District, at Singanallur in Coimbatore District and in a garden attached to the Central Jail, Salem. All Jails will be started in other districts if suitable lands become available.

8. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சையில் அமைக்கப்பட்டுள்ள திறந்த வெளி சிறைச்சாலையில் எத்தனை கைதிகள் வைக்கப்பட்டுள்ளனர் ?

22 கைதிகள்.

நிலமற்றவர்களுக்கு வாங்கப்பட்ட நிலங்கள்.

9. வினா.—திரு. சு. துரைசாமி. மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1967-ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து 1969-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதி முடிய எவ்வளவு பேர் நிலமற்றவர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டுள்ளது ?

1967–68.

| மாவட்டத்தின் பெயர். | கொடுக்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை. | நிலங்களின் அளவு. |
|---|---|---|
| 1 செங்கல்பட்டு .. .. .. | விவரம் இல்லை. | 1,971·31 |
| 2 தென்னாற்காடு .. .. .. | 1,670 | 3,166·69 |
| 3 வட ஆற்காடு .. .. .. | 609 | 6,727·29 |
| 4 தஞ்சாவூர் .. .. .. | 241 | 400·45 |
| 5 திருச்சிராப்பள்ளி .. .. | 705 | 2,207·42 |
| 6 மதுரை .. .. .. .. | 412 | 1,046·50 |
| 7 இராமநாதபுரம் .. .. .. | 638 | 2,065·30 |
| 8 திருநெல்வேலி .. .. .. | 151 | 626·01 |
| 9 சேலம் .. .. .. .. | 621 | 1,947·32 |
| 10 தருமபுரி .. .. .. | 1,609 | 1,119·92 |
| 11 கோயம்புத்தூர் .. .. .. | 374 | 855·43 |
| 12 நீலகிரி .. .. .. .. | .. | 15·78 |
| மொத்தம் .. | 7,030 | 22,849·42 |



1968–69

| மாவட்டத்தின் பெயர். | கொடுக்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை. | நிலங்களின் அளவு. |
|---|---|---|
| 1 செங்கல்பட்டு .. .. .. | விவரம் இல்லை. | 1,384·17 |
| 2 தென்னாற்காடு .. .. .. | 4,738 | 8,477·24 |
| 3 வட ஆற்காடு .. .. .. | 7,426 | 12,405·31 |
| 4 தஞ்சாவூர் .. .. .. | 261 | 347·91 |
| 5 திருச்சிராப்பள்ளி .. .. | 1,248 | 3,932·02 |
| 6 மதுரை .. .. .. .. | 597 | 1,665·26 |
| 7 இராமநாதபுரம் .. .. .. | 4,112 | 11,178·76 |
| 8 திருநெல்வேலி .. .. .. | 565 | 1,240·59 |
| 9 சேலம் .. .. .. .. | 2,728 | 6,713·86 |
| 10 தருமபுரி .. .. .. | 2,734 | 3,802·28 |
| 11 கோயம்புத்தூர் .. .. .. | 231 | 704·35 |
| 12 நீலகிரி .. .. .. .. | விவரம் இல்லை. | .. |
| மொத்தம் .. | 24,640 | 51,851·75 |

1969–70

| மாவட்டத்தின் பெயர். | கொடுக்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை. | நிலங்களின் அளவு. |
|---|---|---|
| 1 செங்கல்பட்டு .. .. .. | 5,611 | 9,834·90 |
| 2 தென்னாற்காடு .. .. .. | 5,369 | 11,451·30 |
| 5 வடஆற்காடு .. .. .. | 5,257 | 12,321·00 |
| 4 தஞ்சாவூர் .. .. .. | 7,813 | 10,004·02 |
| 5 திருச்சிராப்பள்ளி .. .. | 4,964 | 14,392·50 |
| 6 மதுரை .. .. .. | 4,836 | 10,981·87 |
| 7 இராமநாதபுரம் .. .. .. | 6,308 | 18,141·07 |
| 8 திருநெல்வேலி .. .. .. | 1,077 | 3,614·15 |
| 9 சேலம் .. .. .. | 3,436 | 9,601·59 |
| 10 தருமபுரி .. .. .. | 3,916 | 8,647·11 |
| 11 கோயம்புத்தூர் .. .. .. | 2,568 | 8,021·31 |
| 12 நீலகிரி .. .. .. | விவரம் இல்லை. | |
| மொத்தம் .. | 51,155 | 1,17,017·82 |
| 1967–68 .. .. .. .. | 7,030 | 22,849·42 |
| 1968–69 .. .. .. .. | 24,640 | 51,851·75 |
| 1969–70 .. .. .. .. | 51,155 | 1,17,017·82 |
| மொத்தம் .. | 82,825 | 1,91,715·99 |

[1970 மார்ச் 23

**10 வினு.—திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் வேதாரண்யம் ரெவின்யூ பிர்க்காவில் தற்பொழுது சர்க்காருக்கு சொந்தமான தரிசு நிலங்கள் எத்தனை ஏக்கர்?

(ஆ) இந்நிலங்களை நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கு அடமானம் செய்ய சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

| கிராமத்தின் பெயர். | நில அளவு. |
|---|---|
| 1 வொய்மேடு .. .. .. .. .. | 2,537·37 |
| 2 செம்ராயநல்லூர் .. .. .. .. | 304·65 |
| 3 கடினவாயல் .. .. .. .. .. | |
| 4 வேதாரண்யம் .. .. .. .. | |
| 5 தோப்புத்துறை .. .. .. .. | |
| மொத்தம் .. | 2,842·02 |

வேதாரண்யம் பிர்க்காவில் கீழே குறிப்பிட்ட மற்ற கிராமங்களில் அரசாணை நிலை என். 81 (வருவாய்த் துறை) தேதி 12—1—1967-ப்படி நில ஒப்படை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

1. புட்பவனம்.
2. தனி கோட்டகம்.
3. தென்னடார்.
4. வடமலை.
5. வண்டுவான்சேரி.

(இ) நில ஒப்படைக்குத் தடை விதிக்கப்படாத வொய்மேடு, மற்ற கிராமங்களில் உள்ள 2,842.02 ஏக்கர் நிலங்களை ஒப்படை செய்வதற்கு தஞ்சாவூர் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

| *Name of village.* | *Extent.* |
|---|---|
| | A. C. |
| 1. Voimedu ... ... ... ... | 2,537.37 |
| 2. Sembarayanallur ... ... | 304.65 |
| 3. Kadinavayal ... ... ... ... | |
| 4. Vedaranyam ... ... ... ... | |
| 5. Thopputhurai ... ... ... ... | |
| Total ... | 2,842.02 |



1970 மார்ச் 23]

Regarding the following other villages in Vedaranyam Firka there is a ban on assignment imposed in G.O. Ms. No. 81, Revenue, dated 12th January 1967.

(i) Pushpavanam.
(ii) Thanikottagam.
(iii) Tennadar.
(iv) Vadamalai.
(v) Vanduvancheri.

Action is being taken by District Revenue Officer, Thanjavur, for assignment of the available extent of 2,842.02 acres in the Voimedu and other villages where there is no ban on assignment.

*Bed strength in General Hospital at Madras.*

11 Q.—THIRU K. SAHADEVA GANDER: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

The number of beds available at the Madras General Hospital for (i) Female and (ii) Male in the Special Wards at present?

| *Special Wards.* | *Number of beds.* | *Male.* | *Femele.* |
|---|---|---|---|
| A Cass Ward .. .. | 7 | (Common to both). | |
| B Class Ward .. .. | 57 | 35 | 24 |
| C Class Ward .. .. | 100 | 60 | 40 |

*Production of tea.*

12 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state the quantity of tea production in this State during 1968–69–70?

Actual production during 1968 was 54.4 m.kg.

| | *Production during.* | |
|---|---|---|
| | 1969. | 1970. |
| | M. KG. | M. KG. |
| Provisional (Tamilnadu) ... ... | 53.0 | 55.5 |
| Estimated (South India) ... ... | 96.0 | 100.0 |

1968-ல் உற்பத்தி 54·4 மி. கி.கி.

| | 1969. | 1970 |
|---|---|---|
| | மி.கி.கி. | மி.கி.கி. |
| தற்காலிகமான உற்பத்தி (தமிழ்நாடு) | 53·0 | 55·5 |

*Production of Coffee.*

*Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

the quantity of coffee production in this State during 1968–1969–70 ?

Figures of production of coffee in Tamil Nadu are furnished below :—

| *Season.* | *Arabica.* | *Robusta.* (IN TONNES). | *Total.* |
|---|---|---|---|
| 1968–69 .. .. | 6,395 | 1,535 | 7,930 |
| 1969–70 (Preliminary) .. | 6,080 | 1,255 | 7,335 |

*தமிழ்நாட்டின் காப்பிக்கொட்டை உற்பத்தி குறித்த புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—*

| பருவம். | அராபிகா. | ரோபஸ்டா. (டன்னில்.) | மொத்தம். |
|---|---|---|---|
| 1968–69 .. .. | 6,395 | 1,535 | 7,930 |
| 1969–70 (தொடக்கம்) | 6,080 | 1,255 | 7,335 |

**கதர் துணி விற்பனை.**

*15 வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாட்டில் 1968-69-ல் விற்பனையான கதர் துணிகளின் மதிப்பு என்ன?*

*ரூபாய். 2,21,44,831.*

*திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருச்சி மாவட்டத்தில் 1969 அக்டோபர் முதல் நவம்பர் மாதம் 8-ம் தேதி முடிய விற்பனையான கதர்த்துணிகளின் மதிப்பு எவ்வளவு ரூபாய்?*

*ரூ. 19,19,028.52,*

*Government Press, Madras.*

16 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHITHAR : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) the total quantity of bread and bun purchased per day for the workers in the Government Press, Madras; and

(*b*) the rates at which they are purchased?



(*a*) Instead of ' bun ', ' porai ' is being supplied from 1968–69 to the technical employees of the Government Press and its branches in the Madras City. About 6,200 pieces of 'porai' are purchased every day for supply at the rate of two per head.

(*b*) Porais are purchased at the rate of seven and half paise per set of two ' porais ' weighing about 40 grams.

*(அ) சென்னை மாநகரத்திலுள்ள மத்திய அச்சகம் மற்றும் அதன் கிளை அச்சகங்களில் பணிபுரியும் தொழில் நுட்ப பணியாளர்களுக்குப் ' பன் 'னிற்குப் பதிலாக 1963-69-ஆம் ஆண்டிலிருந்து 'பொரை'த் துண்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆளுக்கு இரண்டு வீதம் வழங்குவதற்காக ஒவ்வொரு நாளும் சுமார் 6,200 'பொரை'த் துண்டுகள் வாங்கப் படுகின்றன.*

*(இ) சுமார் 40 கிராம் எடையுள்ள இரண்டு பொரைகள் 7½ காசுகளுக்கு வாங்கப்படுகின்றன.*

17 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHITHAR : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) The total quantity of newsprint purchased by the Government Press during 1968–69–70; and

(*b*) the cost thereof?

(*a*) Newsprint paper was not purchased by the Government Press during the years 1968 to 1970.

(*b*) Does not arise.

*(அ) அரசு அச்சகத்திற்காகச் செய்தித் தாள் காகிதம் 1968-ஆம் ஆண்டு முதல் 1970-ஆம் ஆண்டு வரை வாங்கப்படவில்லை.*

*(இ) கேள்விக்கு இடமில்லை.*

18 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) the number of binders appointed in the Government Printing Press during the period 1st January to 30th November 1969.

(*b*) the total number of applicants interviewed;

(*c*) whether all the candidates interviewed were through Employment Exchange; and

(*d*) if not, the reasons therefor?

(*a*) Men Binders—1.

Women Binders—62

(*b*) 738.

(*c*) and (*d*) Candidates interviewed through Employment Exchange—328. The other 410 candidates have been interviewed from the applications received directly by the Government Press, with reference to the orders of the Government.

(அ) புத்தகம் கட்டுபவர்கள்—ஆண் 1.

புத்தகம் கட்டுபவர்கள்—பெண் 62.

(இ) 738.

வேலை வாய்ப்பகத்தின் மூலம் நேர்காணல் தேர்விற்கு வந்தவர்கள்—328.

(உ), (எ) மற்ற 410 பேர்களுக்கு அரசு ஆணைப்படி வேலை வாய்ப்பகத்தின் மூலம் அல்லாமல் நேரிடையாக விண்ணப்பித்துக் கொண்டவர்களிடமிருந்து நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது.

*Secruity deposit from Municipal Employees.*

19 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government propose to direct that a few dozens of categories of employees of Municipal Councils should provide security deposits; and

(*b*) if so, what are those categories?

(*a*) Yes.

(*b*) List of officers and servants of Municipal Councils from when security deposits should be obtained—

A. Superior Service—

Revenue Inspector.

Cashier.

Bus stand Attender and Library and Reading Room Attenders. and Attenders working in Stores.

Record Keeper.

Lorry Drivers (Engineering Section and General ).

Lorry Drivers (Public Health).

Lower or Upper Division Clerks (High Schools).

Shroff and Assistant Shroff.

Manager.

Accountants and Revenue Officers.

Assistant Revenue Officers.

Assessors.

Licence Inspectors.

Head Clerks.

Upper Division Clerks.

Lower Division Clreks.

Medical Officers.

Pharmacists.

Nursing Orderlies.

Inspector of Bill Collectors



Tracers.

Meter Readers.

Workshop Foreman.

Auto-fitters and Pipe-lines fitters.

Sewage-Farm Superintendent.

Park Supervisor.

Auto-Mechanic.

Typist.

Lighting Superintendent.

Overseers; Draftsman, Supervisors, etc.

Water Works Superintendents or Overseer-in-charge of Head works.

Electrical Superintendent or Electrician in-charge of Electric Stores.

Sanitary Inspector-in-charge of stores and cattle depot.

Drivers of Road Rollers.

Public Work Supervisor-in-charge of Stores.

Head Masters of High Schools and Supervisors of Elementary Schools.

Market Superintendents.

Electrical Superintendent in-charge of Water Works.

Persons in-charge of Department Collections, Lower Division Clerks working in Electricity Section.

Town-Planning and Building Draughtsman.

Women Medical Officers (Maternity and Child Welfare).

Watchman of Maternity and Child Welfare.

Assistant Store-keeper (Electricity Department).

Public Health Vaccinator.

B. Inferior Service—

Office Duffadar (doing remittance work).

Rest House and Bus stand collection peons and peons in High Schools (doing remittance work) and any peon-in-charge of department collections.

Bath Room and Rest House of Travellers Bungalow Watchman.

(அ) ஆம்.

(இ) நகராட்சி மன்றங்களின் எந்த அதிகாரிகள், ஊழியர்களிடமிருந்து பிணைக் கையடைத் தொகைகள் (Security Deposits, பெறவேண்டுமோ அந்த அதிகாரிகள், ஊழியர்களின் பட்டியல்.—

1. மேல்நிலைப் பணி—

வருவாய் நேடுநர்.

காசாளர்.

பேருந்து நிலையச் சிற்றெழுத்தர், நூலகம், வாசகசாலைகளில் பணிபுரியும் சிற்றெழுத்தர்கள், பண்டகசாலைகளில் பணியாற்றும் சிற்றெழுத்தர்கள்.

ஆவணக் காப்பாளர்.

லாரி வலவர்கள் (பொறியியல் பிரிவு, பொதுப் பிரிவு).

லாரி வலவர்கள் (பொதுச் சுகாதாரம்)

கீழ் அல்லது மேல் நிலை எழுத்தர்கள் (உயர்நிலைப் பள்ளிகள்).

நாணயப் பொறுப்பாளர், நாணய உதவிப் பொறுப்பாளர்.

மேலாளர்.

கணக்கர், வருவாய் அலுவலர்கள்.

வருவாய் உதவி அலுவலர்கள்.

வரி விதிப்பவர்கள்.

உரிமை நேடுநர்கள்.

தலைமை எழுத்தர்கள்

மேல்நிலை எழுத்தர்கள்.

கீழ்நிலை எழுத்தர்கள்.

மருத்துவ அலுவலர்கள்.

மருந்து கலப்பவர்கள்.

செவிலிப் பணியாட்கள்.

வரி வசூலிப்பவர்களின் நேடுநர்.

வரைபடம் நகல் எடுப்பவர்கள்.

மீட்டர் கணக்கு எடுப்பவர்கள்.

பணிக்களரி முதல்வர்.

தாளியங்கு பொருத்து வேலை செய்பவர்கள், குழாய்க் கம்பி பொருத்து வேலை செய்பவர்கள்.

சாக்கடைக் கழிவுப் பண்ணைக் கண்காணிப்பாளர்.

பூங்கா மேற்பார்வையாளர்.

தானியங்கு இயந்திரக் கம்மியர்.

தட்டெழுத்தர்.

விளக்கு கண்காணிப்பாளர்.

பார்வையாளர்கள், வரைபட வரைவாளர்கள், மேற்பார்வையாளர்கள் முதலியோர்.

நீர் வேலைக் கண்காணிப்பாளர் அல்லது தலைப்பணிகளின் பொறுப்பு வகிக்கும் பார்வையாளர்.



மின்சக்திக் கண்காணிப்பாளர் அல்லது மின்சாரப் பண்டகசாலைகளின் பொறுப்பு வகிக்கும் மின்சாரப் பணியாளர்.

பண்டகசாலைகள், கால்நடை நிலையம் ஆகியவற்றின் பொறுப்பு வகிக்கும் துப்பரவு நேடுநர்.

சாலை உருளை வலவர்கள்.

பண்டகசாலைகளின் பொறுப்பு வகிக்கும் பொதுப்பணி மேற் பார்வையாளர்.

உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தொடக்கப் பள்ளி மேற்பார்வையாளர்கள்.

அங்காடிக் கண்காணிப்பாளர்கள்.

நீர்ப் பணிப் பொறுப்பு வகிக்கும் மின்சக்திக் கண்காணிப்பாளர்.

வசூல் பொறுப்பு வகிப்பவர்கள், மின்சாரப் பிரிவில் பணிபுரியும் கீழ்நிலை எழுத்தர்கள்.

நகர அமைப்பு, கட்டிட வரைபட வரைவாளர்.

பெண் மருத்துவ அலுவலர் (தாய்-சேய் நலம்).

தாய்-சேய் நல விடுதிக் காவலர்.

உதவிப் பண்டகக் காப்பாளர் (மின்சாரத் துறை)

பொதுச் சுகாதாரப் பிரிவு அம்மை குத்துபவர்.

(2) கீழ்நிலை ஊழியம்—

அலுவலக தபேதார் (வசூல் பணம் கட்டும் வேலை செய்பவர்).

ஓய்வு மாளிகை, பேருந்து நிலைய வசூல் பணியைக் கவனிக்கும் ஏவலர், உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரியும் ஏவலர் (வசூல் பணம் கட்டும் பணி புரிபவர்), வசூல் பணியைக் கவனிக்கும் பிற ஏவலர்.

சீருலா மாளிகையின் குளியலறை, ஓய்வு இல்லம் காவற்காரர்.

*Amount received from Central Government towards Drought Relief.*

20 Q.—THIRU K. VINAYAKAM, THIRU N. S. V. CHITHAN, THIRU S. ALAGIRISWAMY, THIRU S. DORAISAMY AND THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Finance be pleased to state—

The total amount received from the Central Government towards Drought Relief Work in our State up-to-date.

A.—Rs. 14.25 crores.

ரூ. 14.25 கோடிகள்.

*Renovation of Sri Ranganathaswami temple at Srirangam*

21 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

The amount of grant sanctioned by the Government of Tamil Nadu for the renovation of Sri Ranganathaswami Temple in Srirangam, Tiruchirappalli district.

The Government have sanctioned a sum of Rs. 100,00 (Rupees one lakh only) in the year 1968–69 for the renovation of Sri Ranganathaswami temple, Srirangam.

*ஸ்ரீரங்கம், ஸ்ரீரங்கநாதஸ்வாமி கோயிலைப் பழுது பார்க்கவும், புதுப்பிப்பதற்காகவும் 1968-69-ல் அரசு ரூ. 1 லட்சம் உதவித் தொகை வழங்கியுள்ளது.*

*State Industries Development Committee*

22 Q.—THIRU K. VINAYAKAM, THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) Whether the State Government has reconstituted the State Industries Development Committee;

(b) If so, who are the official and non-official members of the Committee; and

(c) What are their functions?

(a) Yes.

(b) The following are the official and non-official members of the Committee :—

(Minister for Industres—Chairman.)

OFFICIAL MEMBERS.

| | | |
|---|---|---|
| 1. | Secretary, Finance Department, Government of Tamil Nadu. | Member. |
| 2. | Secretary, Industries Department, Government of Tamil Nadu. | Member. |
| 3. | The Director of Industries and Commerce, Madras-5. | Member-Secretary |
| 4. | The Chairman, Tamil Nadu Electricty Board, Madras. | Member. |
| 5. | The Chief Engineer (General), Public Works Department, Madras-5. | Member |
| 6. | The Director of Handlooms and Textiles, Madras-5. | Member. |
| 7. | The Chairman, Tamil Nadu Industrial Development Corporation. | Member. |
| 8. | The Chairman, Madras Industrial Investment Corporation. | Member. |



NON-OFFICIAL MEMBERS.

| | | |
|---|---|---|
| 1. | Thiru R. Venkataswami Naidu, B.S.C., (Tech.) (Manchester, Peelamedu, Coimtore-4. | Member |
| 2. | Thiru M. V. Arunachalam, T.I. Cycle, Tiam House, 11/12, North Beach Road, Madras-1. | Member |
| 3. | Thiru M. A. Chidambaram, P.B. No. 113, 99, Armenian Street, Madras-1. | Member. |
| 4. | Thiru D. C. Kothari, Kothari Buildings, Nugambakkam High Road, Madras-34. | Member. |
| 5. | Thiru Karumuthu Thiagaraja Chettiar, Madurai. | Member. |
| 6. | Thiru Chitra Narayanasamy, Chitra and Company, P.B. No. 1557, 322/323, Linghi Chetty Street, Madras-1. | Member. |
| 7. | Thiru K. Eswaran, Easun Engineering Company Limited, 5-7, II Line Beach, Madras-1. | Member. |
| 8. | Thiru C. Baskara Rao, I.C.S. (Retd.), 9, Pycrofts Garden Road, Madras-6. | Member. |
| 9. | Thiru M. Ct. Muthia Chettiar, P.B. No. 2713, Madras-2. | Member. |
| 10. | Thiru N. Mahalingam, " Sakthi Nilayam ", Pollachi. | Member. |
| 11. | Thiru G. K. Sundaram, M.P., Partner, Managing Agents, The Lakshmi Mills Company Limited, The Coimbatore Cotton Mills Limited, Coimbatore. | Member. |
| 12. | Thiru H. V. R. Iyengar, Chairman, E.I.D. Parry Groups, Dare House, P.B. No. 12, Madras-1. | Member. |
| 13. | Thiru A. Sivasailam, Simpson and Company Madras-2. | Member. |
| 14. | Raja Sir Muthiah Chettiar, Chettinadu House, Madras-28. | Member. |
| 15. | Thiru P. A. C. Ramasubramania Rajah, B.SC., Madras Cements, Ramamandiram, Rajapalayam. | Member. |
| 16. | Thiru K. S. Narayanan, India Cements Ltd., 175/1, Mount Road, Madras-2. | Member. |
| 17. | Thiru Sundarajal Nahta, ' Rajshre ', 43/1, St. Mary's Road, Madras-18. | Member. |
| 18. | Thiru T. S. Santhanam, T. V. Sundaram Iyengar and Sons, 37, Mount Road, Madras-6. | Member. |

[1970 மார்ச் 23

(c) The members of the Committee will perform the following functions :—

(i) The Committee will generally advise Government on the development of Industries in the State and on any specific matter that may be referred to it.

(ii) It will appoint about six to eight sub-committees each to deal with a group of industries co-opting if necessary, other persons with expert knowledge or possessing the requisite experience as members.

(iii) The sub-committee will study intensively the economic resources available and prepare detailed project reports, furnishing detailed woring and technical 'know-how', cost of production and all other relevant meterials in respect of each industry.

(iv) The project reports prepared by the various sub-committees will be scrutinised by the State Committee, and finalised in consultation with the "expert cells" in the development wing of the Ministry of Industrial Development, Internal Trade and Company Affairs (Department of Industrial Development), Government of India.

(v) The State Committee will also recommend whether an industry should be developed in the public sector or left to private enterprise and what special facilities or incentives if any, would be necessary for its development.

(அ) ஆம்.

(இ) குழுவில் உள்ள அரசு சார்பான, அரசு சார்பற்ற உறுப்பினர்கள் பட்டியல் பின் வருமாறு:—

தொழிலமைச்சர்—தலைவர்.

### அரசு சார்பான உறுப்பினர்கள்.

1. தமிழ்நாடு அரசுச் செயலாளர், நிதித்துறை. உறுப்பினர்.
2. தமிழ்நாடு அரசுச் செயலாளர், தொழில் துறை. உறுப்பினர்.
3. தொழில்-வணிகத்துறை இயக்குநர், சென்னை-5. உறுப்பினர்-செயலாளர்.
4. தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர், சென்னை. உறுப்பினர்.
5. தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப் பணித்துறை, சென்னை. உறுப்பினர்.
6. கைத்தறி-துணியாலைகள் இயக்குநர், சென்னை-5. உறுப்பினர்.
7. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத் தலைவர். உறுப்பினர்.
8. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத் தலைவர். உறுப்பினர்.



1970 மார்ச் 23]

### அரசு சார்பற்ற உறுப்பினர்கள்.

1. திரு. ஆர். வெங்கடசாமி நாயுடு, பி.எஸ்.சி- (டெக்) (மான்செஸ்டர்), பீளமேடு, கோயம்புத்தூர். உறுப்பினர்
2. திரு. எம். வி. அருணாசலம், டி. ஐ சைக்கிள், டயம் ஹவுஸ், 11/12, வடக்கு கடற்கரை சாலை, சென்னை-1. உறுப்பினர்,
3. திரு. எம். ஏ. சிதம்பரம், அ.பெ. எண் 113 99, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1. உறுப்பினர்.
4. திரு. டி. சி. கோத்தாரி, கோத்தாரி பில்டிங்ஸ், நுங்கம்பாக்கம் ஹைரோடு, சென்னை-34. உறுப்பினர்.
5. திரு. கருமுத்து தியாகராஜ செட்டியார், மதுரை. உறுப்பினர்.
6. திரு. சித்ரா நாராயணசாமி, சித்ரா அண்டு கம்பெனி அ.பெ. எண். 4557 322-323, லிங்கிச்செட்டித் தெரு, சென்னை-1. உறுப்பினர்.
7. திரு. கே. ஈஸ்வரன், ஈசன் எஞ்சினியரிங் கம்பெனி, லிமிடெட், 5-7, கடற்கரை சாலை, சென்னை-1. உறுப்பினர்.
8. திரு. சி. பாஸ்கரரான், ஐ.சி.எஸ் (ஓய்வு பெற்றவர்), 9, பைகிராப்ட்ஸ் கார்டன் ரோடு, சென்னை-6. உறுப்பினர்
9. திரு. எம். சி. டி. முத்தையா செட்டியார், அ.பெ. எண் 2713, சென்னை-2. உறுப்பினர்.
10. திரு. என். மகாலிங்கம், சக்தி நிலையம், பொள்ளாச்சி. உறுப்பினர்.
11. திரு. ஜி. கே. சுந்தரம், எம். பி., பங்குதாரர், மானேஜிங் ஏஜெண்ட், லக்ஷ்மி மில்ஸ் கம்பெனி லிமிடெட், கோயம்புத்தூர், காட்டன் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர். உறுப்பினர்.
12. திரு. ஹெச். வி. ஆர். ஐயங்கார், தலைவர் இ.ஐ.டி. பாரி குரூப்ஸ், டேர் ஹவுஸ், அ.பெ. எண் 12, சென்னை-1. உறுப்பினர்.
13. திரு. ஏ. சிவசைலம், சிம்சன் அண்டு கம்பெனி, சென்னை-2. உறுப்பினர்.
14. ராஜா சர் முத்தையா செட்டியார், செட்டி நாடு ஹவுஸ், சென்னை-28. உறுப்பினர்.
15. திரு. பி. ஏ. சி. ராமசுப்பிரமணிய ராஜா, பி.எஸ்.சி., சென்னை சிமெண்ட்ஸ், இராம மந்திரம், இராஜபாளையம். உறுப்பினர்.

16. திரு. கே. எஸ். நாராயணன், இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், 175/1, மவுண்ட் ரோடு, சென்னை-2. உறுப்பினர்.

17. திரு. சுந்தர்லால் நகதா, "ராஜ்ஸ்ரீ", 43-1, செண்ட் மேரீஸ் ரோடு, சென்னை-18. உறுப்பினர்

18. திரு. டி. எஸ். சந்தானம், டி.வி.எஸ்., 37, மவுண்ட் ரோடு, சென்னை-6. உறுப்பினர்.

(உ) குழுவின் உறுப்பினர்களின் அலுவல்கள் வருமாறு :—

இக்குழு மாநிலத்தில் தொழில் வளர்ச்சி குறித்து அரசுக்குப் பொதுவாக அறிவுரையளிப்பதுடன், தமக்கு அனுப்பப்படும் பிற பொருள்கள் குறித்தும் அரசுக்கு அறிவுரை வழங்கும்.

ஒவ்வொரு தொழில் தொகுப்பையும் கவனிக்க ஆறு அல்லது எட்டு துணைக் குழுக்களை நியமிக்கும். தேவையாயின் ஆழ்ந்த அறிவுள்ள பிறரை அல்லது தேவையான அளவு அனுபவம் உள்ளவரை உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளும்.

துணைக் குழுக்கள், பொருளாதார வாயில்களை ஆழ்ந்து ஆய்ந்த விரிவான அறிக்கைகளைத் தயாரிக்கும் தொழில் நுட்ப விவரங்களும், ஒவ்வொரு தொழிலுக்கான உற்பத்தி செலவு, தொடர்பான பிற தகவல்கள் ஆகியவை இந்த அறிக்கையில் அடங்கும்.

பல்வேறு துணைக் குழுக்களின் தயாரிக்கப்படும் அறிக்கைகளை மாநிலக் குழுக்களின் ஆய்வு செய்து, இந்திய அரசைச் சேர்ந்த தொழில் வளர்ச்சி, உள்நாட்டு வாணிகம், நிறுவனங்கள் குறித்த அலுவல்கள் தொழில் வளர்ச்சித் துறை, அமைச்சகத்தின் வளர்ச்சி பிரிவில் உள்ள "வல்லுநர் குழுக்களுடன்" கலந்து ஆலோசித்து முடிவு செய்யும்.

குறிப்பிட்ட ஒரு தொழில் பொதுத் துறையில் அமைக்கப்பட வேண்டுமா அல்லது தனியார் துறைக்கு விட்டுவிடப்பட வேண்டுமா என்பது பற்றியும் அதன் வளர்ச்சிக்கு என்னென்ன சிறப்பு வசதிகள் அல்லது ஊக்கங்கள் தேவைப்படும் என்பது பற்றியும் மாநிலக் குழு பரிந்துரைக்கும்.

*Purchases for Kilpauk Medical College.*

23 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) Whether the medical requirements of the Kilpauk Medical College, Madras City are being purchased from the Central Government Medical Stores, Madras; and

(b) If not, the reasons thereof?

(a) Yes.

(b) Does not arise.

(அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



**தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொழிலுக்கென கடனுதவி.**

24. வினா.—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை ஜில்லாவில் 1968-ம் வருஷம் முதல் 20—7—1969 வரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சைக்கிள் கடை, பலசரக்குக் கடை, காப்பிக்கடை வைத்து அவர்கள் தொழில் அபிவிருத்தி செய்துகொள்ளுவதற்கு வட்டியில்லா கடனுக்காக அரசுக்கு வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) அதில் எத்தனை பேருக்கு கடன் கொடுக்கப்பட்டுள்ளது?

(அ) சைக்கிள் கடை, பலசரக்குகடை ஆகிய இரண்டிற்கும் ஒவ்வொன்றிற்கும் மூன்று மனுக்கள் வந்துள்ளன. காப்பி கடைக்கு ஒரு மனுவும் வரவில்லை.

(இ) சைக்கிள் கடை வைப்பதற்கு ஒரு நபருக்கும், பல சரக்குக் கடை வைப்பதற்கு இரண்டு நபர்களுக்கும் கடன் வழங்கப்பட்டது.

*Security arrangement for Public Meeting held on 3rd December 1969.*

25 Q.—THIRU S. RAMACHANDRAN: Will the Hon. the Chief Ministeh be pleased to state—

(a) What security arrangements were made by the Police at the Public Meeting held on 3rd December 1969 in which the President of All India Congress Committee participated?

(b) Whether any persons were arrested during the disturbance in the meeting?

(a) The following Police force was posted for duty:

| | |
|---|---|
| Police Inspector ... ... ... ... | 1 |
| Sub-Inspectors ... ... ... ... | 3 |
| Assistant Sub-Inspectors ... ... ... | 3 |
| Head Constables ... ... ... ... | 5 |
| Police Constables ... ... ... ... | 40 |
| Armed Police ... ... ... ... ... | 2 sections. |

(b) Seven persons were arrested.

(அ) கீழ்க்கண்ட அளவு போலீஸ் பாதுகாப்பு மேற்கொள்ளப் பட்டது :—

| | |
|---|---|
| நேடுநர் | 1 |
| உதவி நேடுநர்கள் | 3 |
| இளம் உதவி நேடுநர்கள் | 3 |
| தலைமைக் காவலர்கள் | 5 |

| | |
|---|---|
| காவலர்கள் | 40 |
| ஆயுதப்படைப் போலீஸ் | 2 பிரிவுகள். |

(இ) 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

### நிலவள வங்கிகள்.

26. வினா—திரு. சு. துரைசாமி, திரு. என். வி. சித்தன், எம் சுரேந்திரன்: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநில கூட்டுறவு நிலவள வங்கியின் கிளைகள் மாவட்டந்தோறும் திறக்கப்பட்டதின் நோக்கம் என்ன?

(இ) இதனால் விவசாயிகளுக்கு கிடைத்துள்ள தன்மைகள் என்ன?

வட்டாரத் தலைமையிடங்களில் அமைந்துள்ள நிலவள வங்கி களுக்குச் செல்வதனால் உழவர்களுக்கு ஏற்படும் பல்வேறு இடர்ப் பாடுகளை அரசு கருதிப் பார்த்து அத்தகைய இடர்ப்பாடுகளைக் குறைக்கும் நோக்கத்துடன், நிலவள வங்கியின் பயன்கள் உழவர் களுக்கு எந்த அளவிற்கு மிக அண்மையில் கிட்டச் செய்ய இயலுமோ அவ்வாறு கிடைக்கக் கிட்டுவதற்கு வகைசெய்வதென அரசு முடிவு செய்துள்ளது

(*a*) and (*b*) The Government have considered the various difficulties undergone by the agriculturists who had to go to taluk headquarters where land development banks are situated and with a view to minimise their difficulties, the Government have decided to bring the facilities of land development banks as near to the agriculturists as possible.

27 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடை யளிப்பாரா:—

1967, 1968, 1969-ம் ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள நிலவள வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

1967, 1968, 1969-ம் ஆண்டுகளில் நிலவள வங்கிகளால் குடியானவர்களுக்கு அளிக்கப்பட்ட கடன்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | (ரூ. கோடியில்.) |
|---|---|
| 1—4—1966-லிருந்து 31—3—1967 வரை | 4.27 |
| 1—4—1967-லிருந்து 31—3—1968 வரை | 7.08 |
| 1—4—1968-லிருந்து 31—3—1969 வரை | 14.67 |



The particulars of loans disbursed to agriculturists by land development banks during 1967, 1968 and 1969 are furnished below:—

| | (RS. IN CRORES.) |
|---|---|
| From 1st April 1966 to 31st March 1967 | 4.27 |
| From 1st April 1967 to 31st March 1968 | 7.08 |
| From 1st April 1968 to 31st March 1969 | 14.67 |

### சிறந்த முறைப்பணியாற்றிய ஊராட்சி ஒன்றியங்கள்.

28. வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1968-69-ல் தமிழ் நாட்டில் சிறந்த முறையில் வேலை செய்த ஊராட்சி ஒன்றியங்கள் எத்தனை?

(இ) சென்ற ஆண்டு திருச்சி மாவட்டத்தில் சிறந்த பஞ்சா யத்து யூனியனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியம் யாது?

(அ) சிறந்த முறையில் பணியாற்றியமைக்கான மாவட்ட சுழற்கேடயத்தைப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டவை 13.

(இ) திருமானூர்.

### பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டவர்கள்.

29. வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) 1965 ஜனவரி முதல் 1968 டிசம்பர் வரை திருச்சி மாவட்டத்திற்கு வந்த பர்மா அகதிகள் எத்தனை பேர்?

(இ) இவர்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(உ) இவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை எவ் வளவு?

(அ) 2,413 குடும்பங்கள், 10,305 நபர்கள்.

(இ) (1) தனியார் துறை 33 நபர்கள்.

(2) அரசாங்கத் துறை 83 நபர்கள்.

(3) ரீஜினல் இன்ஜினியரிங் காலேஜ் 17 நபர்கள்.

(4) மதன் நூற்பு ஆலை, ஹஸ்தினாபூர் 17 நபர்கள்.

(5) தொழில் பயிற்சிக்கு மாநு மத்ய பிரதேசம் 69 நபர்கள்.

(உ) தொழில் கடன் வழங்கப்பட்டவை :—

| வருடம். | குடும்பங்கள். | தொகை. |
|---|---|---|
| 1964-65 .. .. .. .. | 1,109 | 9,00,006 |
| 1965-69 .. .. .. .. | 2,751 | 21,00,000 |
| 1966-67 .. .. .. .. | 653 | 13,00,000 |
| 1967-68 .. .. .. .. | 254 | 3,16,821 |
| 1968-69 .. .. .. .. | 571 | 6,47,270 |
| 1969-70 (31—12—69 வரை) .. .. .. .. | 352 | 3,69,425 |

(2) வீட்டுக் கடன் வழங்கப்பட்டவை—

| வருடங்கள் | குடும்பங்கள் | தொகை |
|---|---|---|
| 1967-68 .. .. .. .. | 61 | 1,12,850 |
| 1968-69 .. .. .. .. | 65 | 1,20,250 |

*Metered Parking Places.*

3 *Q.*—THIRU K. VINAYAKAM, THIRU N. S. V. CHITHAN and THIRU N. KITTAPPA : Will the Honourable the Minister for Local Administration be plased to state—

(*a*) Whether the Government has accorded sanction to a proposal to introduce metered parking lots in the City of Madras for Motor Cars ;

(*b*) If so, in what streets to begin with; and

(*c*) By whom this system will be worked ?

(*a*) Yes, as a pilot Scheme.

(*b*) Linghi Chetty Street and Thambu Chetty Street.

(*c*) By Corporation of Madras. One place with parking attendent and another with parking meters.

(அ) ஆம், ஒரு முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப் பட்டுள்ளது.

(இ) லிங்கி செட்டித் தெருவிலும், தம்பு செட்டித் தெருவிலும்.

(உ) சென்னை மாநகராட்சியினால் நடத்தப்படும் ஒரு தெருவில் பணியாள் மூலமாகவும், மற்றொரு தெருவில் மீட்டர்கள் மூல மாகவும் கட்டணம் வசூலிக்கப்படும்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

வினா—திரு. எஸ். ஜே. ராமசாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் இன்னும் ஆரம்ப சுகாதார நிலையங் கள் ஆரம்பிக்கப்படாமல் உள்ள இடங்கள் எத்தனை ?

(இ) தற்போது உள்ள நிலையங்களுள், எத்தனை நிலையங் களுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன ? வாடகை கட்டிடங்களில் செயல்பட்டு வருபவை எத்தனை ?



(உ) இன்னும் ஆரம்பிக்கப்படாமல் உள்ள இடங்கள் எத்தனை ஆண்டுகளுக்குள் பூர்த்தி செய்யப்படும்.

(அ) 40 ஊராட்சி ஒன்றியங்கள்.

(இ) 121 நிலையங்கள் சொந்தக் கட்டிடங்களில் செயல்படு கின்றன. மீதி உள்ளவைகள் வாடகை அல்லது வாடகை இல்லாத கட்டிடங்களிலும் செயல்படுகின்றன.

(உ) நான்காம் ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும்.

(*a*) 40 Panchayat Unions.

(*b*) 121 Primary Health Centres are functioning in their own buildings; the rest are functioning either in rented or rent-free buildings.

(*c*) They are expected to be completed by the end of the Fourth Plan period

கொலைக் குற்றங்கள்.

32. வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1969-ல் தமிழ் நாட்டில் நடந்த கொலைகள் எத்தனை ?

(இ) இதில் தற்கொலைகள் எத்தனை ?

Number of murders excluding suicides—763.

Number of suicides—1,038.

(அ) & (இ) : தற்கொலைகள் நீங்கலாக கொலைகளின் எண்ணிக்கை 763.

தற்கொலைகளின் எண்ணிக்கை 1,038.

காவலர்களுக்குக் கொடுக்கப்படும் பயணப்படிகள்.

33. வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமி முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) போலீஸ்காரர்களுக்கு கொடுக்கப்பட்டு வரும் T.A. மாவட்டந்தோறும் மாறுபடுகிறதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டத்தில் என்ன மாறுதல்?

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

(*a*) No.

(*b*) Does not arise.

*Indian Police Officers in Tamil Nadu.*

34. *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

The number of I.P.S. Officers working in the City of Madras at present.

Sixteen I.P. & I.P.S. Officers are working under the State Government in the City of Madras at present.

*சென்னை மாநகரில் மாநில அரசின்கீழ் தற்போது 16 ஐ.பி., ஐ.பி.எஸ். அதிகாரிகள் பணியாற்றுகின்றனர்.*

*Indian Administrative Service Officers in Tamil Nadu.*

35 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

The number of officers of the I.A.S. Cadre working in this State at present ?

Out of the 161 officers borne on the I.A.S. Cadre of our State 39 are serving under the Government of India and the remaining 122 officers (including the six officers undergoing training in districts) are serving under the State Government as on the 1st January 1970.

*1970 ஜனவரி முதல் தேதி அன்றுள்ளபடி நமது மாநிலத்தைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணித்தர அதிகாரிகள் 161 பேரில், 39 அதிகாரிகள் இந்திய அரசின் கீழ்ப் பணியாற்றுகின்றனர். எஞ்சிய 122 அதிகாரிகள் (மாவட்டங்களில் பயிற்சி பெறும் 6 அதிகாரிகள் உள்பட) மாநில அரசின் கீழ்ப் பணியாற்றுகின்றனர்.*

**குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள்.**

*36. வினா—திரு. எ. கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—*

*1968—69-ல் தமிழ்நாட்டில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் அறுவை சிகிச்சை செய்துகொண்டோர் எத்தனைபேர் மாவட்டவாரியாக ?*



*1968-69-ல் தமிழ்நாட்டில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் அறுவை சிகிச்சை செய்துகொண்டோர் மாவட்டவாரியாக கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது :—*

| மாவட்டம். | ஆண். | பெண். |
|---|---|---|
| செங்கற்பட்டு | 16,352 | 212 |
| கோயம்புத்தூர் | 6,462 | 1,652 |
| தர்மபுரி | 5,332 | 116 |
| கன்னியாகுமரி | 3,320 | 827 |
| மதுரை | 18,526 | 1,589 |
| நீலகிரி | 1,639 | 266 |
| வட ஆர்க்காடு | 8,462 | 1,969 |
| ராமநாதபுரம் | 3,082 | 114 |
| சேலம் | 8,261 | 616 |
| தென் ஆர்க்காடு | 7,708 | 186 |
| தஞ்சாவூர் | 5,195 | 567 |
| திருநெல்வேலி | 3,036 | 386 |
| திருச்சிராப்பள்ளி | 8,346 | 284 |
| சென்னை நகரம் | 6,930 | 2,189 |
| மொத்தம் | 1,02,561 | 10,973 |

The member of persons who have undergone Vasectomy and Tuhactomy operations during 1968–69 are given below district—

| *District.* | *Men.* | *Women.* |
|---|---|---|
| Chingleput | 16,352 | 212 |
| Coimbatore | 6,462 | 1,652 |
| Dharmapuri | 5,332 | 116 |
| Kanyakumari | 3,320 | 827 |
| Madurai | 18,526 | 1,589 |
| The Nilgiris | 1,639 | 266 |
| North Arcot | 8,462 | 1,969 |
| Ramanathapuram | 3,082 | 114 |
| Salem | 8,261 | 616 |
| South Arcot | 7,708 | 186 |
| Thanjavur | 5,105 | 567 |
| Tirunelveli | 3,036 | 386 |
| Tiruchirappalli | 8,346 | 284 |
| Madras City | 6,930 | 2,189 |
| Total | 1,02,561 | 10,973 |

### அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி விடுதலை செய்யப்பட்ட கைதிகள்.

37. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரறிஞர் அண்ணா அவர்களின் மணி விழாவினையொட்டி தண்டனை குறைக்கப்பட்ட கைதிகளின் தொகை என்ன ?

(இ) அவர்களில் விடுவிக்கப்பட்ட கைதிகள் எத்தனை பேர் ?

(அ) & (இ) இம்மாநிலச் சிறைக் கூடங்களில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த பதினைந்து ஆண்டுக்கால சிறை வாசம் முடிவுற்றுள்ள 21 கைதிகள், மறைந்த முதலமைச்சர் டாக்டர் சி. என். அண்ணாதுரை அவர்களின் 61-வது பிறந்த நாள் விழாவன்று, அதாவது 1969-ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாளன்று, தண்டனைக் கால அளவு முடிவடையுமுன்னரே விடுவிக்கப்பட்டனர். பிற கைதிகளுக்குத் தண்டனைக் குறைப்பு எதும் சிறப்பாக வழங்கப்படவில்லை.

Clauses (*a*) and (*b*) : Twenty-one prisoners undergoing life imprisonment who had completed fifteen years of their actual imprisonment in the jails of this State were released prematurely on 15th September 1969.

There was no special remission of sentence to other prisoners.

### மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள உயர்நிலைப் பள்ளிகள்.

38. வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

மூன்று.

Three

### சேலம் உருக்காலைத் திட்டம்.

வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு தொழிலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கஞ்சமலை உருக்காலைத் திட்டம் யாரால் எப்போது துவங்கப்பட இருக்கிறது, தனியார் துறையிலா ? பொது துறையிலா ?

(இ) அதில் தொழில் செய்ய எந்தெந்த ரகமான (தகுதியுள்ள) ஆட்கள் தேவை?





(அ) சேலம் உருக்காலைத் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதுபற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. இந்தத் திட்டம் அநேகமாக மத்திய அரசு விதிக்கும் கோட்பாடுகளின் அடிப்படையில் நிறைவேற்றப்படும்.

(இ) சேலம் உருக்காலைக்கான விரிவான அறிக்கையில் 0.5 மில்லியன் டன் உற்பத்தி செய்யும் ஒரு ஆலைக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள ரகமான ஆட்கள் தேவைப்படும் என்று தஸ்தூர் அண்டு கம்பெனியார் கூறியிருக்கிறார்கள் :—

| ரக ஆட்கள் | மொத்தத் தேவை |
|---|---|
| 1. முதுநிலை பொறியாளர்கள் | 88 |
| 2. இளநிலை பொறியாளர்கள் | 305 |
| 3. இயக்குபவர்களும், பயிற்சி பெற்ற தொழிலாளர்களும் | 3,013 |
| 4. சுமாராக பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் | 1,082 |
| 5. அலுவலக சிப்பந்திகளும் மற்றவர்களும் | 535 |
| மொத்தம் | 5,041 |

(*a*) The inclusion of the Steel Plant at Salem in the Fourth Five-Year Plan is under consideration of the Government of India The implementation of the Project will depend largely on the principles to be laid down by the Government of India.

(*b*) Messrs. M. N. Dastur and Company (Private), Limited, Calcutta, the Consulting Engineers have indicated in their detailed Project Report for the Salem Steel Plant that the following categories of personnel would be required for a plant with a capacity of 0.5 million tons per annum.

| *Category.* | *Number of men required.* |
|---|---|
| Senior Engineers ... ... ... ... | 88 |
| Junior Engineers ... ... ... ... | 305 |
| Operatives and artisans ... ... ... ... | 3,013 |
| Semi-skilled workmen ... ... ... ... | 1,082 |
| Administrative and other service personnel ... | 553 |
| Total ... | 5.041 |

## மதுரை மாவட்டத்திற்குப் புதிய தீயணைப்பு நிலையங்கள்.

40. வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

மதுரை மாவட்டத்தில் மேலும் எந்தெந்த இடங்களில் தீயணைக்கும் நிலையம் ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது?

மதுரை மாவட்டத்தில் கீழ்க்கண்ட இடங்களில் தீயணைக்கும் நிலையம் ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளது :—

1. உத்தமபாளையம்.
2. நத்தம்.
3. கொடைக்கானல்.
4. கம்பம்.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிப்பார்க்கப் பட்டது என்பதை குறிக்கும்.]

### (3) அறிவிப்புகள்.

(அ) ஓர் அவையுரிமைக் கேள்வியையும் ஓர் ஒற்றிவைப்புத் தீர் மானத்தையும் மறுநாள் எடுத்துக்கொள்வது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சித்தன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். திரு. மார்டின் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக் கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அவை முன்னவரும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் இன்று இங்கு இல்லாத காரணத்தினால், இவற்றை நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

### (2) நடைமுறைக் கேள்விகள்.

(அ) கோவையில் நடந்த மின்சாரக் கட்டண உயர்வு கிளர்ச்சி சம்பந்தமாக முதலமைச்சர் அளித்த விளக்கம் குறித்து.

**திரு. பி. வேலுசாமி:** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், கோவையில் சென்ற 18-ம் தேதி நடந்த மின்சாரக் கட்டண கிளர்ச்சி சம்பந்தமாக இங்கே ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் வந்தது. அந்த ஒற்றிவைப்புத் தீர்மானம் பற்றிய விவாதத்தில் முதல் அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள். . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை. பாயிண்டு ஆப் ஆர்டர் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. பி. வேலுசாமி:** அதற்குப் பின்னால் ஒரு அறிக்கை வந்தது. அந்த அறிக்கையில் மாறான செய்தி வெளிவந்திருக் கிறது. சரியான செய்தியை நான் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயிண்டு ஆப் ஆர்டர் அல்ல. முதல் அமைச்சர் அவர்கள் வந்திருக்கும்பொழுது விளக்கம் கேளுங்கள். அப்பொழுது அதற்குப் பதில் சொல்ல முடியும். இது பாயிண்டு ஆப் ஆர்டரின் கீழ் வராது.

**திரு. பி. வேலுசாமி:** அந்த செய்தியோடு சம்பந்தப்பட்டவன் நான். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயிண்டு ஆப் ஆர்டர் இல்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் இப்பொழுது இங்கில்லை. நீங்கள் விளக்கம் கேட்கிறீர்கள். விளக்கம் பெறுவதற்கு முதல் அமைச்சர் இருக்கும்பொழுது கேட்டுக்கொள்ளுங்கள்.

### (3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) சட்டப் பேரவை மண்டபத்தில் கட்சிவாரியாக ஒதுக்கப்பட்ட இருக்கைகள் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு சட்டப் பேரவை மண்டபத்தில், கீழே குறிப்பிடும் இருக்கைகள் கட்சிவாரியாக ஒதுக்கியிருக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் (ஆர்கனைசேஷன்) கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கை எண்கள் : 185, 186, 187; 191; 192; 193; 199; 200; 201; 207; 208; 215; 216; 223; 224; 225; 231; 232; 239; 240; 242; 243; 244; 245-லிருந்து 260 வரை.

சுதந்திராக் கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கையின் எண்கள் : 188, 189, 195, 196, 203; 204; 210; 211; 21; 218, 219, 226, 227.

கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப் ருக்கும் இருக்கையின் எண்கள் : 190, 190-அ; 197; 198; 205; 206; 214, 222, 230, 238.

[பேரவைத் தலைவர்] [1970 மார்ச் 23

காங்கிரஸ் (ரூலிங்) கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டி பட்டிருக்கும் இருக்கையின் எண்கள் : 131, 137, 138, 145 153, 161, 169, 177.

பார்வர்ட் ப்ளாக் கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கையின் எண்கள் : 132, 139, 146, 154, 162, 170, 178.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கையின் எண்கள் : 133, 140, 147, 148.

கம்யூனிஸ்ட் கட்சி (வலது) உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ருக்கும் இருக்கையின் எண்கள் : 134, 141, 149.

முஸ்லீம் லீக் கட்சியின் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கையின் எண்கள் 135, 142.

சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர்க்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கையின் எண் : 136.

தமிழரசுக் கட்சியின் உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கையின் எண் : 136-அ.

குடியரசு கட்சி உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கையின் எண் : 144.

சுயேட்சை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கையின் எண்கள் : 150, 151, 159.

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு அவைத் தலைவரின் இடது பக்கம் ஒதுக்கப்பட்டிருக்கும் இருக்கையின் எண்கள்: 152, 155; 156; 157; 158; 160; 163, 164, 166, 167 171 172 173, 174, 175, 176, 179; 180; 181 மேலும் வலது பக்கத்தில் இருக்கைகளின் எண்கள் அப்படியே கொடுக்கப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர்கள் நாளைக் காலையில், அவரவர்கள் தனித் தனியாக தங்கள் தங்கள் இருக்கையில் அமருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆலடி அருணா** : பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். பாராளுமன்றத்தில், ஆளும் கட்சி காங்கிரஸ், எதிர்க்கட்சி காங்கிரஸ் என்று இருக்கிறது. ஆனால் இங்கே இரண்டு காங்கிரசும் எதிர்க்கட்சியாகவே இருக்கின்றன. ஆகவே, அவற்றை எதிர்க்கட்சி 1, எதிர்க்கட்சி 2 என்று குறிப்பிடுவதா என்பதற்கு சபாநாயகரின் கட்டளையைத் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது.



1970 மார்ச் 23]

THIRU K. VINAYAKAM : Sir may I pay a great tribute and thanks to the Speaker, because I raised this subject yesterday? On behalf of our party, I think the Speaker for having cleared the atmosphere and restored normal order in the House.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்**: பேரவைத்தலைவர் செய்ய வேண்டிய கடமையைச் செய்திருக்கிறார்கள். அதற்கு உறுப்பினர்கள் நன்றி தெரிவிக்க வேண்டிய நிலை இல்லை.

**திரு. கே. விநாயகம்** : அது எங்கள் கடமை.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்** : சரி அடுத்து, மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை திரு. ஆசைத்தம்பி அவைக்கு அளிப்பார்கள்.

**(4) கோவை நிகழ்ச்சிகள் பற்றி நடந்த விவாதத்தில் முதல் அமைச்சர் தங்களைப்பற்றி குறிப்பிட்டது குறித்து திரு. க. ர. நல்லசிவன் எழுப்பிய பிரச்சினை.**

**திரு. க. ர. நல்லசிவன்**: நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். திரு. வேலுசாமி கோவை ஜில்லாவில் நடைபெற்ற நிகழ்ச்சி பற்றிச் சொன்னார்கள். முதல் அமைச்சர் இங்கே பேசும்போது எங்களுக்கு மாசு கற்பிக்கும் முறையில் பேசியிருக்கிறார்கள். ஆகவே. . .

**மாண்புமிகு பேரவைத்தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுசாமி அவர்கள் ஒரு 'பாயிண்ட் ஆப் ஆர்டர்' எழுப்பிய போது, ஏதாவது விளக்கம் பெறவேண்டும் என்றால், மாண்புமிகு முதல் அமைச்சர் அவையில் வந்திருக்கும்போது, விளக்கம் கோரலாம் என்று சொன்னேன். அது பாயிண்ட் ஆப் ஆர்டர் கீழேயோ, அல்லது ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற வகையில், விதி 42-ன் கீழேயோ வராது என்று தீர்ப்பு அளித்திருக்கிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் வந்த பிறகு அவரிடத்தில் விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இப்பொழுது திரு. ஆசைத்தம்பி மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அவைமுன் வைப்பார்கள்.

**திரு. க. ர. நல்லசிவன்**: முதல் அமைச்சர் எங்களை நிலச்சுவாந்தார்கள் கையாள்களாக உபயோகித்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் தரப்பில் உறுப்பினர் சொல்வதை ஆட்சேபிக்கிறேன். முதல் அமைச்சர் 'மாசு கற்பித்தார்' என்று சொல்வது தவறு. அதை அவர்கள் வாபஸ் பெற வேண்டும். 'முதலாளிகள் கையாட்கள்' என்று சொன்னதாகச் சொன்னார்கள். அதையும்

அவர்கள் திரும்பப் பெறவேண்டும். அந்த மாதிரி வார்த்தைகளை மாண்புமிகு முதல் அமைச்சர் உபயோகப்படுத்தவில்லை.

(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** திரு. நல்லசிவம் அவர்கள் அவையில் பேசும்போது உணர்ச்சிவயப்படாமல், இருக்கும் காரண காரியங்களை நிதானமாக எடுத்து வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(திரு. நல்லசிவன் தன் இடத்தில் எழுந்து நின்றுகொண்டிருந்தார்)

**மாண்புமிகு பேரவைத்தலைவர்.** நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு வேலுசாமி அவர்கள் ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து, நம்முடைய மாண்புமிகு நல்லசிவன் எதைச் சொல்லவிரும்புகிறார்களோ, அதையே எழுப்பினார்கள். நான் ஒரு விளக்கம் அளித்தேன். இப்பொழுது மாண்புமிகு முதல் அமைச்சர் அவையில் இல்லை. அவர்கள் வந்தபிறகு வேண்டிய விளக்கத்தைக் கேளுங்கள் என்று சொன்னேன். இரண்டாவது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவம் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தார்கள். ஒத்திவைப்புத் தீர்மானம் எந்த முறைப்படி, எந்த விதிப்படி, எந்த விதியின் கீழ் இருக்க வேண்டுமோ, அந்த வகையில் அது அடங்கவில்லை என்ற காரணத்தால், அதற்கு நான் என் அறையிலேயே அனுமதி மறுத்திருக்கிறேன். அதுதான் இருக்கும் நிலை. தங்களுடைய மனதைப் புண்படுத்தவேண்டும் என்ற நிலை இல்லை. விளக்கம் பெறுவதைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், எந்தவிதமான முறையிலும் இப்பொழுது அதை எழுப்புவதற்கு சட்டமன்ற விதி முறைகளில் இடம் இல்லை. ஆகவே, இப்பொழுது அதைப் பற்றி எழுப்பாதிருப்பது நல்லது.

**திரு. க. ர. நல்லசிவன்:** நானும் விதியைப்படித்திருக்கிறேன். எல்லோரும் படித்திருக்கிறார்கள். இதோ பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத்தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு என்னுடைய அறையில் அனுமதி மறுக்கப்பட்டது என்றால், அதைப்பற்றி அவையில் எழுப்பக்கூடாது. திரு. நல்லசிவம் தொடர்ந்து குறைந்தது மூன்று முறை மேலும் இருக்குமோ, என்னவோ சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது உறுப்பினர் 'இதோ' என்று சொல்லுகிறார்கள். இது மன்றத்திலே சொல்லக் கூடியதா? மிகத் தெளிவாக முதல் அமைச்சர் சொன்னார்கள், 'இதில் முற்போக்குக் கட்சிகளும் சேர்ந்திருக்கிறது' என்று. எந்தவிதமான கேவலமான முறையிலும் கூறப்படவில்லை. கனம் அங்கத்தினர் 'மாசு கற்பித்தார்', 'நிலச்சுவான்தார்களுடைய கைக்கூலிகள்' என்று சொன்னார் என்ற குற்றச் சாட்டைச் சொன்னார்கள். இந்த இரண்டு வாக்கியங்





களையும் முதல் அமைச்சர் உபயோகிக்காதது மட்டுமல்ல, சில முற்போக்கு கட்சிகள் என்று கூறியதையும் மறைத்துக் கூறும் வகையில் உறுப்பினர் இப்பொழுது பேசுகிறார்கள். இந்த இரண்டு வார்த்தைகளையும் சட்ட சபை நடவடிக்கையிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. க. ர. நல்லசிவன்:** இது பெருவாரியான, விவசாயிகளுடைய இயக்கம். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நல்லசிவம், நீங்கள் உட்காருங்கள். எந்த நேரத்தை, எதற்கு உபயோகப்படுத்த வேண்டும் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எந்தக் கருத்தை எந்த நேரத்தில் எப்படி சொல்லவேண்டும் என்பதற்கு சட்டமன்ற விதிமுறைகள் வழி வகுத்துக் கொடுத்திருக்கின்றன. அவைகளுக்கு ஒப்ப கருத்துக்களை வழங்கலாம். நம்முடைய திரு. நல்லசிவம் அவர்கள் உணர்ச்சி வயப்படுவது வழக்கம். அப்படி வயப்படுவது கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன். (திரு. நல்லசிவம் எழுந்து நின்றிருந்தார்) நிதானமாக இருங்கள். கருத்துக்களைக் கூற வாய்ப்புகள் இருக்கின்றன. எந்த விதியின் கீழும், இப்பொழுது திரு. நல்லசிவம் எழுந்து, மாண்புமிகு முதல் அமைச்சர் இன்ன சொன்னார்—பிறகு தொழிலமைச்சர் கோரிக்கைக்கு வருகிறேன்—அதன் விளைவு இன்ன என்று சொல்வதற்கு எந்த விதியின் கீழும் இடம் இல்லை. எந்த விதியின் கீழ் திரு. நல்லசிவம் எழுந்திருக்க முடியும்? எந்த விதியும் இடந்தரவில்லை. ஆகவே அவர்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. விதிகளை ஒட்டி, அறையில் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதை அவையிலே கொண்டு வரக் கூடாது என்று தெளிவாக விதிகள் சொல்லுகின்றன. நீண்ட நெடுங்காலமாக திரு. நல்லசிவம் இந்த மன்றத்திலே இருக்கிறவர்கள். அவர்களுக்கு நான் சுட்டிக் காட்டத் தேவையில்லை. அவர்கள் இப்பொழுது எழுப்புவது எந்த விதியின் கீழும் வராது.

இரண்டாவதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய கூற்றுக்களை, திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் இப்படி இப்படி திரித்துக் கூறுகிறார்களே என்று மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூற்றிலே இந்த இடத்திலே இப்படி இப்படிக் கூறியிருக்கிறார்கள் என்று திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் சுட்டிக் காட்டினால் நன்றாக இருந்திருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லாத நேரத்தில், முதலமைச்சர் இப்படி இப்படிக் கூறினார் என்று சொல்வது சரியாகாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறாத ஒன்றைக் கூறியதாகச் சொல்வது உரிமை மீறிய நிகழ்ச்சியாகும். "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பேச்சை நான் படிக்கவில்லை, அவர் பேசும்போது இந்த

அவையிலே நான் இல்லை. ஆகவே, அவருடைய பேச்சின் ஒரு நகலைக் கொடுங்கள்" என்று திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் என்னிடம் கேட்டிருந்தால் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். அப்படிச் செய்யாமல், இப்படி இப்படி முதலமைச்சர் அவர்கள் தவறாகக் கூறியிருக்கிறார் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்? முதலமைச்சர் அவர்கள் பேசும்போது உறுப்பினர் அவர்கள் இந்த அவையிலே இல்லை. முதலமைச்சருடைய பேச்சின் நகல் வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டால், அவையின் நிகழ்ச்சிகள் முடிவதற்குள்ளாகவே கொடுப்பதற்கு வசதி செய்து தருகிறேன். அந்த உரையைப் பார்த்துவிட்டு உறுப்பினர் அவர்கள் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த உரையைப் படித்து விட்டு, ஏதாவது விளக்கம் பெற விரும்பினால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் இருக்கும்போது அதற்கான விளக்கங்களைப் பெறலாம். உறுப்பினர்களுக்கு இந்த அவையில் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் பேசாத கருத்துக்களைப் பேசியதாகக் கூறுவது உரிமை மீறிய பிரச்சினை யாகும். ஆகவே, அந்தச் சொற்களை உறுப்பினர் அவர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. க. ர. நல்லசிவன்:** தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய திரு. சித்தன் அவர்களும், மற்ற நண்பர்களும் கொடுத்த ஒற்றி வைப்புத் தீர்மானத்தை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் அவையில் இல்லாத காரணத்தினால் நாளையதினம் எடுத்துக்கொள்ள லாம் என்று சொன்னீர்கள்.

இரண்டாவதாக, என்னுடைய ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுக்கப்போவது கிடையாது என்று சொன்னீர்கள்.

மூன்றாவதாக, ஒற்றிவைப்புத் தீர்மானம் இந்த விதிமுறையின் கீழ் இன்ன விதியின் கீழ்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இங்கே கூறியது என்னவென்றால், திரு. சித்தன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சினை எழுப்பினார்கள். திரு. டி. மார்டிக் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்வதுபற்றி ஒரு முடிவு எடுத்திருக்கிறேன். இன்று அவைகளை எடுத்துக் கொள்ளாததற்குக் காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லையென்பதுதான். உங்களுடைய ஒற்றிவைப்புத் தீர்மானத்தை என்னுடைய அறையிலேயே நிராகரித்து அதற்கு தீர்ப்பு அளித்திருக்கிறேன். அதைப்பற்றி இந்த அவையிலே கூறவில்லையென்றால், ஏற்கெனவே என்னுடைய அறையிலேயே அதற்கு தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பதுதான் காரணம். ஒற்றி வைப்புத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்றால் 'இன்னின்ன விதிகளின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஒருவேளை பேரவைத் தலைவர் அவர்கள்



தவறுதலாகத் தீர்ப்பு அளித்திருந்தாலும்கூட அவருடைய தீர்ப்புக்கு பேரவையில் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். தவறு தலாக தீர்ப்பு அளித்திருந்தாலும்கூட என்று நான் சொல்லும் போது தவறாக தீர்ப்பு அளித்தேன் என்று பொருள் அல்ல. விதிகளின்கீழ் அடங்காதவற்றை அறையிலே நிராகரித்துத் தீர்ப்பு அளிப்பதற்கு பேரவைத் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டி ருக்கிறது. அந்த அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு தீர்ப்பு அளிப்பது பேரவைத் தலைவரின் கடமை. விதி இப்படி இப்படி இருக்கிறது, பேரவைத் தலைவர் இப்படி தீர்ப்பு கொடுத்திருக்கிறாரே என்று காரணகாரியம் பார்க்கக்கூடாது. எப்பொழுதும் பேரவைத் தலைவரின் தீர்ப்புக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டும். அதுதான் மாபு. திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் இதை உணர வேண்டும். இது பேரவைத் தலைவரின் தீர்ப்பையொட்டிய நிகழ்ச்சி. இப் பொழுது அதன்மீது எந்தவிதமான விவதாமும் எழுப்ப வேண்டாம்.

இரண்டாவதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப் போது அவையிலே இல்லை. முதலமைச்சர் அவர்கள் கூறாத இரண்டு கூற்றுக்களை உறுப்பினர் அவர்கள், அவர் கூறியதாகக் கூறியிருக்கிறார்கள். நீங்கள் இந்த அவையில் இல்லாத காரணத் தினாலேயே அப்படிக் கூறினீர்கள். முதலமைச்சருடைய பேச்சைப் படிக்கவில்லையென்றால், படித்துப் பார்த்த பிறகுதான் குற்றம் சொல்லியிருக்க வேண்டும். கூறாதவற்றைச் கூறியதாகச் சொல்வது உரிமை மீறிய நிகழ்ச்சியாகும். அந்த அளவிற்குப் போக வேண்டாமென்று உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள் கிறேன். நீங்கள் அந்தப் பேச்சை படிக்கவில்லையென்று சொல்லி விடவேண்டும். அப்படி உங்களுக்கு அவருடைய பேச்சு ஒரு நகல் வேண்டுமென்று கேட்டால் தருகிறேன். அதைப் பார்த்து விட்டு, பிறகு முதலமைச்சர் அவர்கள் இருக்கும்போது வேண்டு மானால் விளக்கம் கேட்டுக்கொள்ளலாம்.

**திரு. க. ர. நல்லசிவன் :** அந்தப் பொருள்பற்றி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தப் பொருள்பற்றி விவாதிக்கப்போகிறீர்கள் என்பதுபற்றி பேரவைத் தலைவருக்கு பொறுப்பு இல்லை. பேரவையில் இன்னின்ன நிகழ்ச்சி, இன்னின்ன தினத்தன்று நடக்க வேண்டும் என்று அலுவல் ஆய்வுக்குழு விவாதித்து, அஜண்டா தயாரித்து அனுப்புகிறது. அந்த அஜண்டாவின்படி பேரவை நிகழ்ச்சிகளை பேரவைத் தலைவர் நடத்திச் செல்கிறார். இடையில் ஏதாவது செய்யவேண்டுமானால், அதற்கு பேரவைத் தலைவருக்கு அனுமதி இல்லை. நீங்கள் பேசுவது முக்கியமானதாக இருக்கலாம். உடனே தீர்ப்பு அளிக்கப்பட வேண்டியதாக இருக்கலாம். அதையும் விதிமுறைகளையொட்டித் தான் எடுத்துக்கொள்ளமுடியும். இவையெல்லாம் திரு. நல்லசிவன் அவர்களுக்கும் தெரியும். திரு. நல்லசிவன் அவர்கள்,

'நான் முதலமைச்சருடைய பேச்சைப் படிக்கவில்லை, ஆகவே இப்படிக் கூறிவிட்டேன் என்று சொல்லி விடுவது நல்லது. நீங்கள் குற்றம் சாட்டுவதற்கும், அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கும் இருவருக்கும் உரிமை இருக்கிறது. பேசாத ஒன்றைப் பேசியதாகச் சொல்வது உரிமை மீறிய நிகழ்ச்சியாகும். அதற்கு மட்டும் உறுப்பினர் அவர்கள் சமாதானம் சொல்ல வேண்டும்.

**திரு. க. ர. நல்லசிவன்.** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அங்கு 10 ஆயிரம் விவசாயிகள் சேர்ந்து கோரிக்கைகளை எழுப்பினார்கள். அதன்மீது தவறான கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறுபடியும் பழைய இடத்திற்கே போகிறீர்களே.

**திரு. க. ர. நல்லசிவன் :** இந்த விஷயத்தை இந்தச் சபையில் கிளப்பி பரிகாரம் காணவில்லையென்றால், நான் இங்கிருப்பது நியாயம் இல்லை. நமக்கு நியாயம் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய நல்லசிவன் அவர்கள் திருப்பித் திருப்பி அதையே சொல்கிறார்கள்.

**திரு. க. ர. நல்லசிவன் :** இதற்கு சரியான பரிகாரம் கிடைக்கவில்லையென்றால், நான் இங்கே உட்கார்ந்துகொண்டு விவாதம் செய்ய விரும்பவில்லை. நான் இங்கே இருப்பது நியாயமில்லை. முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்லப் போகிறார் என்பது 28-ம் தேதியன்று தெரியப்போகிறது. நான் இங்கிருக்க விரும்பவில்லை. வெளியேற விரும்புகிறேன். (திரு. க. ர. நல்லசிவன் அவர்கள் பேரவையைவிட்டு வெளியேறினார்).

**திரு. நா. வீராசாமி :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இந்த வார்த்தைகளை எடுத்துவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன். அவருடைய பேச்சிலே, 'தரக்குறைவு', 'கைக்கூலிகள்' என்று சொன்னதை உபயோகிக்காமல் எடுத்துவிட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது நாம் எல்லோரும் இருந்தோம். அப்படிப்பட்டவை இருக்கிறதா என்று பார்த்து தலைவர் அவர்கள் தீர்ப்பு கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் பத்திரிகைகளில் எல்லாம் இதற்கு ஒரு விளம்பரம் கிடைக்கும். ஆகவே, தலைவர் அவர்கள் அதைப் பார்த்து தீர்ப்புச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிப்பார்கள்.



## (5) அறிக்கைகள் அளித்தல்.

(அ) கைத்தறி இயக்குநர் அலுவலகம் பற்றிய பரிந்துரைகளின்மேல் அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

(ஆ) வனத் துறை குறித்த மதிப்பீட்டுக்குழுவின் அறிக்கை.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன் :—

1. கைத்தறி இயக்குநர் அலுவலகம் பற்றிய அறிக்கையில் அடங்கியுள்ள மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய (15-வது) அறிக்கை.

2. வனத்துறை குறித்த (16-வது) அறிக்கை.

## (3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) மசோதாவை இப் பேரவைக்கு அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

## (6) அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு, மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (இரண்டாம் திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனைவரி விதிப்பு (இரண்டாம் திருத்த) மசோதாவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. P. U. SHANMUGAM : I introduce the Bill.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

### (7) 1970–71-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 22—கதர்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 22—கதர்* என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

DR. H. V. HANDE : Sir, to discuss policy, I move the cut motion standing in my name, namely, that the allotment of Rs. 18,11,000 under Demand No. 22 Khadi—be reduced by Rs. 100."

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss policy, I move the cut motion standing in my name, namely;

"That the allotment of Rs. 18,11,000 under Demand No. 22—Khadi be reduced by Rs. 100"

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கைத்தொழிலினால் வாழும் ஏழை மக்கள் மேம்பாடு அடைய, அத்தனை பேருக்கும் அம்பர் சர்க்கா இலவசமாக அளிப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 22—கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, கதரை ஒழித்து கைத்தறியைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 22—கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 18,11,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

### (ஆ) நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[308–314-ம் பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.]



"நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன *என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,04,88,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

**திரு. இல. பலராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கிய தொகையை அதிகரிக்க வேண்டியதன் நோக்கம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பில் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,04,88,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. கே. போஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய நலத் திட்டங்களை நல்ல முறையில் அமல்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்தல் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,04,88,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திருமதி கே. பி. ஞானகியம்மாள் :** பேரவைத் தலைவர் அவர்களே புதிய திட்டப் பகுதிகளில் உடனடியாகத் திட்டங்களை அமலாக்காத காரணத்தால் ஏற்படும் பல இன்னல்களை குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,04,88,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளில் ஒவ்வொரு சிறிய கிராமத்திற்கும் வானொலிப் பெட்டி அமைப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 6,04,88,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

### (இ) நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள் உதவி மானியங்கள்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

*314-ம் பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பாக இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் ** என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,99,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்தல சாலைகளுக்காக நகராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் உண்டான மானிய சதவீதத்தை உயர்த்தாதது குறித்து விவாதிக்க—

நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,99,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இந்தத் தலைப்பில் செய்யப்படுகிற நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையாக உள்ள நிலைபற்றி விவாதிக்க—

நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,99,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கிராமச் சாலைகள் அமைக்கவும், கிராம சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்றவும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று விவாதிக்க—

நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,99,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, கடந்த வருடம் பெய்த பெருமழையின் காரணமாக பஞ்சாயத்து யூனியன் ரோடுகள், கிராம பஞ்சாயத்து ரோடுகள் பழுதடைந்து இருப்பதைச் சீர் செய்யப் போதுமான நிதி ஒதுக்க வேண்டும் என்பதுபற்றி விவாதிக்க—

நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,99,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

DR. H. V. HANDE : Sir to discuss the need to give alternate accommodation to slum dwellers in WallTax Road. in the compound of moffussil bus stand, in Jothi Ammal Nagar. Anbazhagan

** 344-ம் பக்கங்களில் கொள்கை விளக்கக் குறிப்பு மூன்றுவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





Nagar, opposite to Madras United Club etc., in Corportaion Divisions 37, 38, 39 and 40 I move th cut motion standing in my name, namely,

" that the allotment of Rs. 2,99,15,000 under Demand No. 29—Public Works—Grants-in-aid—be reduced by Rs. 100 ".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு வருகின்றன.

*** மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி, மாநகராட்சி மானியங்களின் கீழ் பல்வேறு வகையான கருத்துக்களையும், எதிர்காலத்தில் சிறந்த முறையில் பணியாற்றத்தக்க குறிப்புக்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துரைத்தால் பின்னல் அவற்றுக்கு பதில் அளிக்கிற வகையில் நான் பேசுகிறேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை எடுத்துத் தருமாறு கேட்டு இந்த அளவில் முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கட்சியின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சமுதாய நலத் திட்டம் என்பது 3 கோடி கிராம மக்களுடைய பெரும் பிரச்சினையாகும். இந்த நாடு விவசாய நாடு. இந்த நாட்டில் நூற்றுக்கு 75 பேர் கிராமங்களில் வாழ்கிறார்கள். இந்த நாட்டின் அச்சாணியாக—முதுகெலும்பாக இருப்பது கிராமங்கள்தான். 'வரப்புயர கோன் உயரும்' என்று ஔவை சொன்னார்கள். நாடும், நகரங்களும் செழிக்க வேண்டுமென்றால் கிராமங்கள் சீரும், செழிப்பும் பெற்று விளங்கவேண்டும். மகாத்மா காந்தியடிகளுடைய லட்சியம் கிராம ராஜ்யம் ஏற்படவேண்டும் என்பது. கிராமங்களுக்கு அதிக அதிகாரங்களும், நகரங்களுக்குக் கிடைக்கிற வாய்ப்பும், வசதியும் கிராமங்களுக்கும் கிடைக்கவேண்டும் என்பதற்காக சமுதாய நலத் திட்டம் உருவாக்கப்பட்டது. காங்கிரஸ் ஆட்சியில் 1966-67-ல் ஆறு கோடியே நாற்பத்து நான்கு லட்சத்துச் சொச்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் இவ்வாண்டு ஆறு கோடியே நான்கு லட்சம் சொச்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 40 லட்சம் ரூபாய்க்குக் குறைவாக இந்தச் சமுதாய நலத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது கிராமங்கள் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

இன்று முக்கியமாக கிராமப் பிரச்சனை தீர வேண்டுமென்றால் கிராமங்களுக்கு அதிக அதிகாரம் தரப்பட வேண்டும். மத்தியில் குடியாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பதுபோலவே கிராமங்களுக்கும் சுயாட்சி தரவேண்டும். கிராமங்களுக்கு அதிக அதிகாரங்களும், பணவாய்ப்பும் கொடுத்தால்தான் அவற்றின் குறைகள்

[திரு. வை. சுவாமிநாதன்] [1970 மார்ச் 23

நீங்க முடியும். முக்கியமாக 1958-ம் வருஷ பஞ்சாயத்துச் சட்டத்தைப் பார்த்தால் பல ஓட்டைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் போக்கவேண்டும். நமது ஸ்தல ஸ்தாபன அமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு எங்களது நெடுநாளைய கோரிக்கைகள் சிலவற்றிற்கு இசைந்து சில காரியங்களைச் செய்ததற்கு எங்களது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். நீள அடிப்படையில் மானியம் ஒதுக்குவது, கல்வி மானியத்திற்கு அதிக நிதி ஒதுக்குவது, பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலில் சில சீர்திருத்தங்கள் செய்வது போன்று நிறைய கவனம் செலுத்தப்பட்டாலும் இன்னும் செய்யவேண்டிய பலவற்றையும் செய்ய வேண்டும் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துத் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவது போலவே பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், நகராட்சி மன்றத் தலைவர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வகை செய்யவேண்டும்.

பஞ்சாயத்து ஒன்றியங்களின் நிர்வாகங்கள் ஒரு தனி இலாக்காவின் மூலம் நடக்க வகை செய்தால்தான் நன்றாக இருக்கும். இன்று ரெவின்யூ இலாக்காவிற்கு உட்பட்டு வேலை செய்வதன் காரணமாக பல சிக்கல்கள் நிர்வாகத்தில் ஏற்படுகின்றன. அதனால் அந்த நிர்வாகம் மாநில, மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் தனித்து இயங்கச் செய்ய வேண்டும். அப்படி இயங்கினால்தான் மக்களுக்கு நல்ல முறையில் பணியாற்ற முடியும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பல அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும்

குறிப்பாக பஞ்சாயத்து யூனியன்களில் மருந்தகங்கள் இருக்கின்றன. அங்கே டாக்டர்களைப் போடும்போது பார்ட்-டைம் சாலரி என்று 150-க்குப் போடுகிறார்கள். அவர்கள் சரியாக வருவது கிடையாது. மேலும் 5000-க்கு மேல் மருந்துச் செலவு போகக் கூடாது என்கிறார்கள். இது மூன்று நான்கு மாதங்கள் கூட வருவதில்லை. மருந்தில்லாத குறை, டாக்டர் இல்லாத குறைகள்தான் இருக்கின்றன. ஆகவே பஞ்சாயத்து யூனியன் மருத்துவமனைகளை எல்லாம் அரசாங்கமே மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஸ்தல ஸ்தாபன தொகுதிக்கு ஒரு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கிறபோது அந்த வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர் தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. அது சரியல்ல. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள ஒருவர்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சட்டம் செய்தாக வேண்டும். அப்போதுதான் லோகல் விஷயம் தெரிந்தவர் வருவதற்கு இடமேற்படும்.

அடுத்து லைசென்சு பீஸ் யாரால் வசூலிக்கப்பட வேண்டும் என்கிற நியதி இல்லை. இன்றைக்கு கிராம கர்ணம், முன்சிப்—வீட்டுவரி, தொழில் வரி போன்றவைகள் வசூல் செய்வதுபோலவே இந்த



1970 மார்ச் 23] [திரு. வை. சுவாமிநாதன்]

லைசென்சு பீசையும் வசூலிக்க ஏற்பாடு செய்யலாம். ஹெல்த் ஆபீசர்கள் அக்கறை எடுத்துக்கொள்வது கிடையாது. கட்டினவர்கள் கட்டுகிறார்கள். பெரும்பாலானவர்கள் கட்டுவதில்லை. ஆகவே கிராம கர்ணம், முன்சீபே வசூலித்துக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து பஞ்சாயத்துக்களுக்கு கட்டட வசதி இல்லை. அதன் காரணமாக பஞ்சாயத்துத் தலைவர்கள் வீட்டிலேயே ஆபீஸ் இருக்கிறது. இது எங்களுடைய நெடுநாளைய குறையாகும். பஞ்சாயத்துக் கட்டிடம் கட்ட, மானியமாகவோ நீண்ட நாள் கடனாகவோ நிதி ஒதுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

புறம்போக்கு நிலங்களை எடுத்துக் கொண்டால் பஞ்சாயத்துக்களுக்கு இன்னும் ஒப்படைக்கப்படவில்லை. இன்னும் அனுபவித்துக் கொண்டிருக்கிறவர்களிடம்தான் இருக்கிறது. காலி செய்து பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

பல கிராமங்கள் இன்னும் சர்வே செய்யப்படாமல் இருக் பி.ப. 10-30
கின்றன, அதன் காரணமாக பஞ்சாயத்தில் புதுக் கட்டடங்கள் கட்டுவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதைப் போக்க வேண்டும்.

இனாம் கிராமங்கள் இன்னும் மீட்கப்படாமல் இருப்பதன் காரணமாக கிராமங்களுக்கு வாய்ப்பு வசதிகள் செய்யப்படுவதில் தடைகள் ஏற்படுகின்றன. இதையும் கவனிக்க வேண்டும்.

பஞ்சாயத்துக்களுக்குச் சேர்ந்த குளம், ஏரிகளை ரெவின்யூ இலாகாவினர் பஞ்சாயத்தின் அனுமதியில்லாமலே பட்டா செய்து கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எங்களுடைய ரிசல்யூஷன் இல்லாமலே அவர்கள் பட்டா செய்துவிடுகிறார்கள். இந்த நிலைமையையும் மாற்ற வேண்டும். டி.இ. அவர்களுக்கு ஹைவேஸ் ரோடுகளை எல்லாம் எப்படி புறம்போக்கு ஆக்கிரமிக்கப்பட்டிருந்தால் அவற்றைக் காலி செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதேமாதிரி பஞ்சாயத்து இடங்களை ஆக்கிரமித்திருப்பவர்களைக் காலிசெய்வதற்கும் கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு நிதி போதாமல் பற்றாக்குறை இருக்கிறது. இதைப் போக்குவதற்கு ஏற்றவகையில் பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஒன்று ஏற்படுத்த வேண்டும். பஞ்சாயத்துக்களின் குறைகளைக் கவனிப்பதற்கு ஒரு ஆலோசனைக் குழு ஏற்படுத்தி அந்தக் குழு மூன்று மாதங்களுக்கொருமுறை கூடி அவற்றை எப்படிப் போக்குவது என்பதைப்பற்றி ஆலோசித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கச் செய்ய வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களுக்கு ஜீப்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. பஞ்சாயத்துக்களின் வேலைகளைச் செய்வதற்காக அவை பயன்படுத்தப்படவில்லை. ரெவின்யூ இலாகா வேலைக்குத்தான் பயன்படுகிறதே தவிர, பஞ்சாயத்து யூனியன் வேலைக்குப்

பயன் படுவதில்லை. அவை ரிப்பேர் ஆகிவிட்டால் தஞ்சாவூருக்குப் போக வேண்டிய நிலைமைதான் இருக்கிறது, இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. இதைக் கவனிக்கவேண்டும்.

பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ரகசியப் பதிவேடுகளை சேர்மன் எழுதுகின்ற முறையில்லாமல் இருப்பதனை காரணமாக நிர்வாகத்தின் குறைகளை முழுவதும் சேர்மனால் தடுக்க முடியவில்லை. விஸ்தரிப்பு அதிகாரிகள் ரகசியப் பதிவேடுகளை பஞ்சாயத்து யூனியன் சேர்மன் மூலம் அனுப்பச் செய்தால் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கு முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்பக் கல்வி ஸ்தல ஸ்தாபன அமைச்சரிடம்தான் இருக்க வேண்டும். ஆரம்பக் கல்வியை நடத்துகின்ற பொறுப்பு பஞ்சாயத்துக்களிடம்தான் இருக்கிறது. ஸ்தல ஸ்தாபன அமைச்சரிடம் தான் ஆரம்பக் கல்வியும் இருக்கவேண்டும், அப்பொழுதான் நல்லமுறையில் செயல்படமுடியும். இப்பொழுது இரட்டையாட்சி முறைதான் இருக்கிறது. ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தலையிட்டு அங்கீகாரம் கொடுத்தால்கூட கல்வியிலாகாவில் கொடுக்க மறுக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றவேண்டும்.

ஸ்டேட் எலக்ட்ரிசிடி போர்டு லோன், சுமால் சேவிங்ஸ் லோன் இவையெல்லாம் யூனியன்மூலமாகத்தான் வசூலிக்கப்படுகிறது. அதுபோன்று பஞ்சாயத்து டெவலப்மெண்ட் லோன் என்று போட்டு அதையும் அவர்கள் வசூலிக்ககூடிய திட்டத்தை அமலாக்க வேண்டும். அதைக்கொண்டு பஞ்சாயத்து அபிவிருத்தி வேலைகளைச் செய்வதற்கு முடியும்.

பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களை எடுத்துக்கொண்டால் அரசாங்க ஊழியர்கள் சம்பளம், இன்க்ரிமெண்ட் இவற்றிற்கும் அவர்களுடைய சம்பளம், இன்கிரிமெண்ட் இவற்றிற்கும் வித்தியாசங்கள் இருக்கின்றன. அரசாங்க ஊழியர்களுக்குக்கிடைப்பது ஸ்தல ஸ்தாபன ஊழியர்களுக்குக்கிடைப்பதில்லை. அரசாங்க ஊழியர்களுக்கு 4 ரூபாய் இன்க்ரிமெண்ட் என்றால் இவர்களுக்கு மூன்று ரூபாய் தான் கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட வித்தியாசங்களைப் போக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களுக்கு வீட்டுவாடகைப்படி கொடுப்பதில்லை. என்னுடைய தொகுதியாகிய திருவரும்பூர் பகுதியிலே வீடுகள் கிடைப்பதில்லை. நகரத்தில் இருப்பதை விட அதிக வாடகை கேட்கப்படுகிறது. ஆதலால் நகரசபை ஊழியர்களுக்குக் கொடுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸை பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது) இன்னும் 10 நிமிடங்கள் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: 10 நிமிடங்கள்ஆகிவிட்டன.

**திரு. வை. சுவாமிநாதன்**: இன்னும் 10 நிமிடங்கள் வேண்டும், அவர்குறைத்துக்கொள்வார்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : யார் குறைத்துக்கொள்வார்? குறைத்துக்கொள்ளமாட்டார்கள்.

**திரு. வை. சுவாமிநாதன்**: இன்னும் 10 நிமிடங்கள் வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. வை. சுவாமிநாதன்** : அவர்களுக்கும் அந்த அடிப்படையிலே கொடுக்கவேண்டும்.

திருச்சி நகரத்தை எடுத்துக் கொண்டால் நகரசபைத் தேர்தல் நடைபெறவில்லை. கோர்ட்டில் இருக்கிறது என்பதாகக் கூறலாம். உடனடியாகத் தேர்தல் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அங்கே பாதாள சாக்கடைத் திட்டத்தையும் மத்திய பஸ் ஸ்டாண்டு நிலையத்தையும் உடனடியாக ஏற்படுத்த வேண்டும். பாலக்கரையிலே ஒரு மேம்பாலம் ஏற்படுத்த வேண்டும். அது இல்லாததால் மக்களுக்கு டிராபிக் இடைஞ்சலாக இருக்கிறது. அரியமங்கலத்தில் கம்போஸ்டு உரம் கொட்டுவதை மாற்றி வேறு இடத்தில் அதை மாற்றம் செய்யவேண்டும்.

திருவெறும்பூர் பாய்லர் தொழிற்சாலையில் தொழில் வரி, வீட்டு வரி, இவற்றை விதிப்பதற்கு உரிமை வேண்டுமென்று கோரியும் அரசாங்கம் அதற்கு ஸ்டே கொடுத்திருக்கிறது. அதையும் நீக்க வேண்டும். இதனால் பஞ்சாயத்துக்களுக்கு ஏராளமான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது.

சென்னை கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில் சென்னை கடற்கரை, தமிழ் நாட்டிலே உள்ள அந்த கடற்கரை உலக அரங்கில் இரண்டாவது கடற்கரை என்ற ஸ்தானத்தை வகித்தது. இன்றைக்கு ஏழாவது ஸ்தானத்திற்குப் போகக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இரண்டாவது ஸ்தானத்தை மீண்டும் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

மாம்பலத்தில் சோழர்கள் கால விளக்குகள் எரிந்துகொண்டிருக்கின்றன. அங்கே குடிநீர் வசதியும் இல்லை. உடனடியாக குடிநீர் வசதி, விளக்குகள் போடுதல் இவற்றைச் செய்து தரவேண்டும். மேல் மாம்பலத்தையும் கீழ் மாம்பலத்தையும் இணைப்பதற்கு ஒரு மேம்பாலம் கட்டவேண்டும். மயிலாப்பூர் பகுதியிலே ஒரு சிலம் ஏரியா இருக்கிறது. அங்கே பொது கக்கூஸ் இல்லாததன் காரணமாக நடு ரோட்டிலே காலைக்கடன் கழிக்கக்கூடிய துர்ப்பாக்கியமான நிலைமை இருப்பதால் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது.

அதையும் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி :** மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் 20 பேர்கள் பேசவேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு உறுப்பினரும் ஐந்து நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** கதர்-சமுதாய வளர்ச்சி மானியத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைப் பேசுகிற நேரத்திலே நெய்தல் என்ற கருவூலப் பொருள் என்னுடைய கவனத்திற்கு வருகிறது. நெய்தல் என்றால் வயலும் வயலைச் சார்ந்த இடமும் என்று இலக்கியத்திலே வருகிறது. சாதாரணமாக நெய்தல் என்றால் துணி நெய்தல், சமுதாய நலத் திட்டம், உணவு உற்பத்தி, கல்வி இவை ஒரு நிறுவனமாகவும், கதர் உற்பத்தி ஒரு நிறுவனமாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. முதலிலே கதரைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். இந்த ஆண்டு கதர் இரண்டரை கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி அவர்கள் கதரைப்பற்றிச் சொன்னதிலேயே அவர்களுடைய சிந்தனை, சொல், செயல், திறம் இவை உள்ளத் துடிப்பாக உள்ளவர் அவர் என்பது தெரியும். அவர் இந்தத் தொழிலைப்பற்றிச் சொல்லும்பொழுது செஞ்சிக் கோட்டையில் ஏறியவர்கள் எல்லாம் தேசிங்குராஜன் அல்ல, அதைப்போல் கதர் கட்டியவர் எல்லாம் காங்கிரஸ்காரர் அல்ல என்று சொன்ன ஒரே ஒரு சொல்தான் இப்படி அமோகமாக விற்பனைக்குக் காரணம் என்று சொன்னால் மிகையாகாது. கதரானது ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக்கூடியது. கதர் ஏதோ காங்கிரசுக்குத் தான் சொந்தம் மற்றவர்களுக்கு இல்லை என்ற நிலைமை இல்லை. இந்த மாமன்றத்திலே காட்சியளிக்கக்கூடிய வள்ளுவப் பெருந்தகையாரின் தொழில் நெசவுத் தொழில். அந்தக் காலத்திலே கதரைத்தான் அவர் உடுத்தியிருந்தார். காரணம் விசைத்தறி அப்பொழுது கிடையாது. கையாலே நூற்று கையாலே நெய்யப்பட்ட துணியைத்தான் கட்டியிருக்கக்கூடும். அவர் இயற்றிய குறள் எத்தனை ஆண்டுகள், எத்தனை யுகங்களுக்கு இருக்குமோ அதைப் போன்று கதரும் கைத்தறியும் இருக்கும். எந்த விசைத்தறி வந்தாலும் அதை அசைக்க முடியாது. கைத்தறி நெசவு குன்றிவிடும். அது அழிந்துவிடும் என்று சிலர் நினைக்கிறார்கள், நிச்சயமாக அப்படியாகாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கதர் இலாகாவிலே உத்தியோக உயர்வுகளைப்பற்றி நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சீனியாரிடி லிஸ்ட் பிரகாரம் வரிசையாக உயர்வு கொடுப்பதுதான் நிர்வாக நெறி. ஆனால் அந்த முறையிலே நடைபெறவில்லை என்பது எனக்குத் தெரிய வருகிறது. எனக்குத் தெரிந்த வரையில் 14 ஆண்டுக்காலம்





ஆக பி.ஏ. படித்த ஒருவர் கதர் இயக்கத்திலே தொண்டு புரிந்த ஒருவர் இன்னும் கதர் இன்ஸ்பெக்டராகவேதான் பணியாற்றி வருகிறார்; அவருக்குக் கீழே வேலை பார்த்தவர்கள் எல்லாம் ஜில்லா கதர் அதிகாரிகளாக உயர்த்தப்பட்டு இருக்கிறார்கள். இதற்குக் காரணம் நிர்வாக நெறி கடைப்பிடிக்காததுதான். நிர்வாக நெறியைக் கடைப்பிடிக்காவிட்டால் வேலை சரிவர செய்ய முடியாத நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராம வளர்ச்சியைக் குறித்து ஒரு சில வார்த்தைகள் (மணியடிக்கப்பட்டது) இரண்டு வார்த்தைகள்தான் பேசினேன். அதற்குள்ளா ? நம்முடைய அமைச்சர் அவர்கள் பல சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில் கிராம வளர்ச்சியின் நுணுக்கங்களை நன்கு தெரிந்தவர்களே இரண்டே இரண்டு பேர்கள்தான். ஒன்று முன்னாள் மத்திய அமைச்சராக இருந்த எஸ். கே. டே அவர்கள், இன்னொருவர் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி அவர்கள்தான். இதிலே உள்ள நுணுக்கங்களைத் தெரிந்து நல்ல சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக, சமூகக் கல்வி, சமூகக் கல்வி கொடுப்பதற்கு என்ன வழி என்பதைக் கண்டு பிடித்து, அதற்கு சாதனம் என்னவென்றால், வானொலி மூலம் சமூகக் கல்வியைப் பரப்பலாம் என்று தெரிந்து, அதற்கான வழி வகைகளைச் செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டு மாத்திரம் 7,000 வானொலிப் பெட்டிகள் கொடுத்திருக்கிறார்கள். இரண்டாவது, கிராம சேவக்குகள், அதாவது ஊர்நல ஊழியர்கள் இரண்டு பேருக்கு இந்த வானொலிப் பெட்டியை பராமரிப்பதற்கான பயிற்சி கொடுத்து அவர்களை அதில் ஈடுபடச் செய்திருக்கிறார்கள். அடுத்தபடியாக படக்காட்சி வண்டிகள். இதுவரைக்கும் படக்காட்சி வண்டிகள் இருந்தன. இருந்தாலும் ஏதோ கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி என்று சொல்வார்களே அதுபோல, அது நல்ல முறையில் செயல்படவில்லை. ஏனென்றால், போக்குவரத்து வாகன வசதி சரியாக இல்லை. இப்போது மூன்று சக்கர ஊர்திகள், 52 ஊர்திகள் தயார் செய்து அவற்றை செயல்படுத்தி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இவ்வாண்டு 7,000 ஆரம்பப் பள்ளிகள், 2,000 உயர் ஆரம்பப் பள்ளிகளுக்கு புத்தகங்கள் வழங்குவதற்கு ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, யூனெஸ்கோவிடமிருந்து சுமார் ரூ. 8 கோடி வரையில் பெற்று அந்தத் தொகையை செலவழிக்க தயாராயிருக்கிறார்கள். இந்த அளவில் நல்ல சீர்திருத்தங்கள் செய்யக்கூடிய நமது அமைச்சரவர்கள் இன்னும் பல நல்ல காரியங்களை செய்ய இருக்கிறார்கள். இந்த துறையானது பொன் முட்டையிடும் வாத்தைப் போன்றது. அதைக் கொலை செய்ய முயற்சிக்கிற முறையில், தயாரிக்கப்பட்டது. கோட்டத்தில் பேர் பாதி கிணறு என்று செலவினங்கள் அதிகம். இந்தத் துறை கூடாதென்ற முறையில் நல். முருகேச முதலியார் அவர்கள் ரிப்போர்ட் தயாரிக்கப்பட்டது.

ஆனால் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கண்டு பிடித்து அப்படிப்பட்ட தப்பான கருத்தினை எல்லாம் விட்டு, நல்ல சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். அதற்காக அவரை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

* DR. H. V. HANDE: Hon Speaker Sir, at the very outset I wish to state that I have moved the cut motion under Demand—Public Works—Grans-in-Aid viz, "to discuss the need to give alternate accommodation to slum dwellers in Wall Tax Road, in the compound of Moffusil Bus Stand, in Jothi Ammal Nagar, Anbazhagam Nagar, opposite to M.U.C. etc. in Corporation Divisions 37, 38, 39 and 40", for the simple reason that there are nearly 1,000 huts in the whole area. At least 660 of them are valid huts which have been in the Voters' List for the past three elections and we have assured them during our election compaign that we will do something to solve their problem. I am glad that the Government have addressed themselves to the task of rehabilitating the slum dwellers and that is a laudable move. But in this connection I wish to offer a constructive suggestion. Let us organise the rehabilitation of slum dwellers on a massive scale and on a national scale, with the help of not only political parties but also private agencies. There are a number of private agencies like the Rotary Club: Lions Club and the Junior Chamber which would come forward to do something for them and help them. So, let us mobilise their resources and also try to get as much grant from the Centre for this purpose. Of course, the State Government also should give grant on a liberal scale. Now, in the whole City we have a population of nearly 20 lakhs and according to the statistics furnished by the Madras School of Social Work at Egmore, out of those 20 lakhs nearly 8 lakhs of people are slum dwellers and my estimation is that about 1.25 lakhs of houses or flats have to be constructed for those 8 lakhs of people and each flat would cost Rs. 2,000. According to this calculation, about Rs. 25 crores would be required to properly rehabilitate the slum dwellers in the City of Madras. As I am speaking only about the people in the Madras City, let not my Friends mistake me. If it is possible to mobilise those resources we will be able to solve their problem within two or three years. Let us to be election conscious and by the time we finish the term of our office in 1972 and go back to the people for re-election, the people will say that the D.M.K. Government during the five years in office, have tackled a major problem and that would be a wonderful thing that they would have done for them and that would be the greatest tribute that the Government would get from the slum dwellers. Now, the position is that we are trying to rehabilitate them in a wrong manner. In their anxiety to lay roads or improve roads the Government issue orders that the huts should be removed. Recently in the Wall Tax Road I saw a harrowing sight. My distinguished Friend, Thiru Ma. Po. Si. also referred to it the other day. It was



a heart-breaking sight and the slum dwellers were completely removed from that place. Unfortunately no atternative accommodation has been given to them with the result that they have been put to misery. So, I request the Hon. Minister to seek the help of various agencies. For instance, we can draft students during their summer vacation. There is absolutely no politics involved in regard to this matter. There are a large number of students who would do good work within these two months. In quick time they will survey the slum areas and then we can prepare a Master Plan to rehabilitate them. If necessary, the Government can constitute a small committee consisting of not only M.L.A.'s but also representatives of private agencies like the Rotary Club, Lions, Club and Junior Chamber and seek their advice with regard to solving this problem. Even if the Government solve it to the extent of 50 per cent, it would be a great credit to them. So, I would request the Hon. Minister to seriously consider this matter and provide accommodation for the slum dwellers and this act would find a proper place in the History of Tamil Nadu.

Then I come to another point, namely, the Corporation of Madras. I am not going into the details of the working of the Corporation because it is a Corporation affair. We are granting, some amount to the Corporation of Madras for doing certain works. Some time ago during the Question Hour I had requested the Hon. Minister for Local Administration to exercise control over the funds we had given them. My submission is that the funds are not properly and fully utilised. That is why I also request the Hon. Minister to see that proper auditing is done.

Now, let me refer to one area opposite to the Everest Hotel. It is a thickly populated area covering Sydenhams Road, Poonamallee High Road, Kattur Sadayappan street and Vepery High Road. There are nearly 5,000 people living there. It is not a problem coming under my jurisdiction but it is a humanitarian problem and it has to be solved by the Corporation or some body else. Suddenly there is some obstruction or other in the sewage and I am called upon to look into the matter and I have gone there several times. Especially during rains it is a horrible sight to see filthy matter coming out of the sewage covers and entering into the kitchen of almost every house. I wish that some of us had visited that place. I hope the Hon. Minister for Local Administration will look into the whole matter though it is a small problem. On enquiry I am told that the Corporation authorities wanted to instal a sewage pump in Sydenhams Road, but it has not been installed so far. If it is installed, it will be able to collect all the sewage water more efficiently and effectively. So, I request the Hon. Minister for Local Administration to make an enquiry into this matter and find out why the pump has not been installed. It is a chronic problem and I request him to look into the matter immediately.

[Dr. H. V. Hande]

Lastly, with regard to the division of City into Health Zones, I think there are 20 Health Officers to look after 20 zones. 120 Divisions have been divided into 20 zones. Whatever it is, we find that the cleaning or maintenance of the roads, the sanitation of the roads is very very poor and whoever comes to the City remarks that the City was much better a few years ago and that it is deteriorating fast. This is a very serious problem. Madras City is not just the capital of Tamil Nadu. It is practically the capital of South India, a most important city south of the Vindhyas. If we do not keep the City clean, it will be an eye sore for the entire world, because people from the entire world visit the City. Therefore I request the Minister for Local Administration to view this problem not as a problem concerning some 120 divisions, but as a problem concerning the whole of South India. I request the Minister to see that within two years the City is made the 'City Beautiful'.

**திரு. பி. என். பிரமசிவம்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நடந்து வரும் பசுமைப் புரட்சியில் ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய நியாமான பங்கை வளர்ச்சிப் பணியில் செலுத்தி அலுவலர்கள் சிறப்பாகப் பணியாற்றும் அளவுக்குப் போதிய அதிகாரங்களை அளித்து மேலும் அதிகப் பொறுப்புகளை ஒப்படைக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. கால் நடைத் துறையிலே ஒவ்வொரு சிறு வட்டாரத்திற்கும் அலுவலர் களைப் போட்டு எல்லாப் பொறுப்புகளையும் அவர்களிடம் ஒப்படைந்து அவர்களைப் பொறுப்பாக்க வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அதே போல் விவசாயத் துறையிலே ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகப் பங்கு கொடுக்க வேண்டுமென்பதல்லாமல், விவசாயத் துறையப் பரவலாகப் பிரித்து நாலைந்து மண்டலங்களாகப் பிரித்து இணை இயக்குநர்களைப் பொறுப்பாக்கி இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் கொண்ட வட்டாரத்தை ஒரு தனி மாவட்ட அதிகாரியின் கீழ் கொடுத்து எல்லாத் திட்டங்களையும்—சிறப்புத் திட்டங்கள் உட்பட ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்டு செய்ய வேண்டுமென்ற பொறுப்பைக் கொடுத்து நல்ல முறையில் செயல்பட்டால்தான் உண்மையாக நாம் பசுமைப் புரட்சியைக் காணமுடியும்.

இந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு என்று தனி இலாகா எற்படுத்தி நல்ல முறையில் இயங்கி வருவதற்கு என்னுடைய சில ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை அது வருவாய்த் துறையினரின் பிடிப்பில் இல்லாமல் தனி இலாகாவாகச் செயல்படுத்தப்பட்ட வேண்டும். வட்டார வளர்ச்சி அதிகாரிகள் அரசிதழ் பதிவு பெற்றவர்களாக ஆக்கப்பட்டு அதிக அதிகாரங்களை உடையவர்களாக எற்படுத்த வேண்டும். கோட்ட அளவில் கோட்டாட்சித் தலைவர் பொறுப்பிலுள்ள பணிகள் தனி வளர்ச்சி அலுவலரை நியமித்து ஒப்புவிக்கப்பட வேண்டும். மாவட்ட



1970 மார்ச் 23] [திரு. பி. என். பிரமசிவம்]

அளவில் மாவட்ட வளர்ச்சி அதிகாரியை நியமித்து மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் எல்லா வளர்ச்சிப் பணிகளையும் கொடுத்து அவர்களைப் பொறுப்பாக்க வேண்டும்.

மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு அதிகாரப் பற்றற்ற ஒருவர் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அந்த முறையில் இருந்தால்தான் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களும், மற்றும் உள்ள சட்டசபை அங்கத்தினர்களும் அதிலே பங்குகொண்டு செயல்பட விரும்புவார்கள் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சாலை மானியத்தைப் பொறுத்தவரை ஊராட்சி ஒன்றியங்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கும் வகையில் மைலுக்கு ரூ. 600, 800, 1,500 என்று அதிகப்படுத்திக் கொடுத்திருப்பதையும், அதற்காக இந்த ஆண்டு 6 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதையும் வரவேற்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆரம்பப் பள்ளிகள் அத்தனையும் ஊராட்சிகளால் நடத்தப்பட வேண்டுமென்ற முறை இருக்கவேண்டும். தற்போது தனியார் பள்ளிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. முற்காலத்தில் தர்ம சிந்தனையுள்ளவர்கள் கல்வி வளர்ச்சிக்காக பள்ளிகளை நடத்திவந்தார்கள். இப்போது ஊராட்சி மன்றங்களே ஆரம்பப் பள்ளிகளை வேண்டுமென்று திட்டமிட்டிருக்கின்ற நிலையில், நாட்டு மக்களும் விரும்புகின்ற நிலையில் தனியார் பள்ளிகளுக்கு அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். தனியரா் பள்ளி நிறுவனங்களை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைத்து விட வேண்டும்.

குடும்ப நலத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டுக்கு மேல் இப்போது வேண்டாம், மூன்றுக்கு மேல் எப்போதும் வேண்டாம் என்று சொன்னால் கூட நான்காவது என்று வரும் போது ஆண்டவன் கொடுத்து விட்டான், என்ன செய்வது என்று எத்தனையோ பேர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளில் மூன்றாவது பிரசவத்திற்குத் தாய்மார்கள் வந்தால் அறுவை சிகிச்சை செய்து நல்ல முறையில் நடத்திக் கொடுத்தால்தான் குடும்ப நலத் திட்டம் செம்மையாகச் செயல்பட முடியும் என்று சொல்லிக் கொண்டு இதற்கு அதிகமாக மானியம் ஒதுக்கியிருப்பதற்காக நன்றியைத் தெரிவித்து, வரவேற்று முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, கதர் மானியக் கோரிக்கைக்கு ஒதுக்கியிருக்கும் நிதி 18 லட்சத்து சில்லரை ஆகும். அதிலே பணிபுரிகின்ற ஊழியர்களைப் பாதுகாக்கும் முறையில் குறைந்தபட்ச சம்பளத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அதிக உற்பத்தியைப் பெருக்கும் வகையில் அம்பர் சர்க்காவை இலவசமாகக் கொடுக்க வேண்டும்.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கூறியிருக்கும் ஐட்டங்கள் 25, 30 என்ற அளவில் இருக்கின்றன. பொதுப்பணி உதவி மானியக் கோரிக்கை ஐட்டங்கள் 10 இருக்கின்றன. அதைப் படிக்கவே இரண்டு மூன்று நிமிடங்கள் தேவை. ஆகவே, எனக்குக் கொஞ்சம் அதிக நேரம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிக நேரம் கொடுப்பதற்கில்லை. ஒரு உறுப்பினருக்கு ஐந்து நிமிடத்திற்கு மேல் கொடுப்பதற்கில்லை. 20 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு 100 நிமிடங்கள் ஆகிவிடும். பிறகு எதிர்க்கட்சித் தலைவர் பேச வேண்டும்; அமைச்சர் விடையளிக்க வேண்டும். ஆகவே, ஐந்து நிமிடத்திற்குள் முடித்துவிட வேண்டும்.

* **திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, பல்வேறு விவரங்களைச் சுருக்கமாக எவ்வளவு தூரம் சொல்ல முடியுமோ சொல்லுகிறேன். சாலைகளைப் பராமரிப்பதற்காக பஞ்சாயத்து யூனியன்களுக்கு 53 லட்சம ரூபாய் ஒதுக்கியிருக்கிறது, நகர மன்றங்களுக்கு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. தமிழக முழுதும் ஓடுகின்ற பஸ்கள், லாரிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் போன்ற வாகனங்களுக்கான வரிகளை எல்லாம் அரசு வசூல் செய்கிறது. பஸ் ஓடுகின்ற ரோடுகளை எல்லாம் அரசே எடுத்து நிர்வகிக்க வேண்டும். அல்லது பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் சாலைகளை நிர்வகிக்க நபருக்கு ஒருரூபாய் வீதம் ஒதுக்க வேண்டும். நகரங்களுக்கு ஒதுக்கீடு செய்வதில் ஏற்படும் செலவில் 75 சதவிகிதத்தை சாலைகளைப் பராமரிக்க ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

உணவை விடப் பிரதானமானது குடிநீர்த் திட்டம். இதை நல்ல முறையில் செயல்படுத்த அதிகமான ஒதுக்கீடுகள் செய்ய வேண்டும். 1972-ம் ஆண்டுக்குள்ளாக எல்லாக் கிராமங்களுக்கும மின்சாரம் கொடுப்பது என்ற குறிக்கோளுக்குப் பதிலாக கிராமப் பகுதி மக்கள் அத்தனை பேருக்கும் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவோம் என்ற குறிக்கோளை ஏற்று அமல்படுத்த முன்வரவேண்டும். சமுதாய வளர்ச்சி 8-ம் பக்கத்தில், வறட்சி நிலை உச்ச கட்டத்தில் இருந்த நேரத்தில் எல்லா ஊராட்சிகளிலும் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற 11 கோடி ரூபாயில் திட்டம் தீட்டப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. அரசு இதிலே ஒரு ஆச்சரியமான கொள்கையை வைத்திருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்காகும் செலவுத் தொகையை பஞ்சாயத்துகளுக்கு திருப்பிக் கொடுக்கும் திறன் இருக்கிறதா என்று பரிசீலனை செய்வதாகக் கூறப்பட்டிருப்பது சரியான கொள்கை அல்ல, தவறான கொள்கை. மனிதனுக்குக் குடிநீர் உயிரானது. ஆகவே, "திருப்பி கொடுக்கும் சக்தி இருக்கிறதா" என்று அந்த திட்டத்தை அவசியம் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 19 கோடி ரூபாயை அரசு செலவு செய்திருக்கிறது. வரவேற்கிறோம். எட்டு லட்சம் பேருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே செலவு செய்கிறபோது





மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற கொள்கைதான் இருக்க வேண்டுமே தவிர, பணம் திரும்பி வருமா என்று பார்க்கக் கூடிய கொள்கை இருக்கக் கூடாது. அமைச்சர்கள் சிலர் பேசும்போது இந்த மாதிரி பணத்தை தொழில்களுக்கு, பஞ்சாலைத் தொழில்களுக்கு, மற்றும் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் வகையில் செலவு செய்யும்போது அந்தப் பணத்தைத் திரும்பப் பெற வழி இருக்கிறதா என்று பார்த்துக் கொடுக்கிறோம் என்று பேசுவது வருந்தத்தக்க விஷயம். அவர்கள் எல்லாம் மனித உயிர்கள், இந்த மனித உயிர்களுக்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டிய அரசு அந்த முறையில் கீழ் பவானி, பாம்பிக் குளம்—ஆழியார் போன்ற அணைக்கட்டிலிருந்து குடிநீர் திட்டத்தைத் தீட்டி பணத்தை ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதேமாதிரி சமுதாய வளர்ச்சி அறிக்கையில் 25-வது பக்கத்தில் பழங்குடி மக்களின் நல்வாழ்விற்காக செயல்படுத்தப்படும்
திட்டங்கள் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. கொல்லிமலை, மு.ப. 11-00
ஏர்க்காடு போன்றயிடங்களில் செயல்படுத்தப்படும் திட்டங்களை அரசாங்கமே பரிபூர்ணமாக நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். அதேபோல் தாளவாடிப் பிரச்னையையும் அணுகவேண்டும். அடுத்து சாக்கடைத் திட்டம் அதை நிறைவேற்ற அதிகப் பணம் ஒதுக்கப்பட வேண்டும்.

அதேபோல் சேரி ஒழிப்புத் திட்டத்திற்கும் அதிகப் பணம் ஒதுக்கப்படவேண்டும். சேரி ஒழிப்புத் திட்டத்தில் சென்னை நகரில் மட்டும் அரசு அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதையும் வரவேற்கிறேன். அதேபோல் கோவை போன்ற இடங்களில் கிட்டத்தட்ட நாற்பதினாயிரம் மக்களுக்கு மேல் ஹரிஜனங்கள் 42 சேரிகளில் வாழ்ந்து வருகிறார்கள். அந்தச் சேரிகளையும் உடனடியாக செப்பனிடுவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். சித்தாபுதூர், காமராஜபுரம், டாக்டர் சுப்பராயன் ரோடுபகுதி, அரிபுரம் தாமோதிர நகர் பகுதி, மசால் சாலைப் பகுதி, கல்லுக்குழி வாராங்குளஓரம், சங்கனூர் பள்ளத்து ஓரம், கோட்டைமேடு என்ற இடங்களில் உள்ள குடிசைகளை அகற்றி அதற்குப் பதிலாக நல்ல வீடுகளை அந்த மக்களுக்குக் கட்டித் தரவேண்டுமென்றும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முனிசிபல் நகரசுத்தித் தொழிலாளர்கள் மலத்தை தலையில் தூக்கிச் சுமப்பவர்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம், பஞ்சப்படி மிகக்குறைவு. வீட்டு அலவன்ஸ் மூன்று ரூபாய்தான். அவர்கள் எச்சில் நாய்களோடு சண்டையிடுகிற நிலையில் இருந்து பாதுகாக்கப்படவேண்டும். அதற்கு வேண்டிய வழிவகைகளை அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது)

**திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவர் அவர்களே, இந்த அவை முன் வைக்கப்பட்டுள்ள கதர், உள்ளாட்சித்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கதர் துறையை திராவிட முன்னேற்றக் கழக அரசு மேற்கொண்ட போது நான் எதிர்பார்த்ததை விட இந்த மூன்று ஆண்டுகளில் விற்பனை அதிகமாக அதிகரித்து வந்திருப்பதைப் பார்க்கிறேன். கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுக் காலத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமாக கதர் விற்பனை அதிகரித்திருக்கும் அளவிற்கு கதர் துறை நிர்வாகம் அமைந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவதோடு அந்தத் துறை அமைச்சர் அவர்களையும் அரசினரையும் பாராட்டு கிறேன். காந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிட்டத்தட்ட 60 லட்சம் ரூபாய்க்கு அதிகமாக கதர் விற்கப்பட்டிருக்கிறது இந்த விழா மாதத்தில் மட்டும். அதையொட்டி விற்பனையை அதிகரிக்க ஊழியம் புரிந்த ஊழியர்களுக்கு தலைக்கு ரூ. 25 வீதம் மூவாயிரம் பேர்களுக்கு இலவச உதவி புரிந்திருக்கிற திட்டத்தையும் நான் பாராட்டுகிறேன். மேலும் இந்தக் கைத்தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கதர் துறை இன்னும் சப்ஸிடியில்தான் இயங்கிக் கொண்டிருக் கிறது. அப்படி சப்ஸிடி இல்லாமல் இந்தக் கதர் துறை இயங்கு வதற்கு அரசு இன்னும் தீவிர முயற்சிகளில் ஈடுபடவேண்டும். டெக்ஸ்டூல் ராட்டைகளை அதிகப்படுத்துவதன் மூலம் சப்ஸிடி இன்றி இத்துறை இயங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். எந்தக் கிராமக் கைத்தொழிலுக்கு மத்திய அரசின் நிதி உதவி பெற முடியாமல் போகிறதோ அதற்குத் தமிழக அரசு உதவி செய்து கிராமக் கைத்தொழில்களை வளர்க்க வேண்டும்.

அடுத்து, தியாகராய நகரில் துரைசாமி ரோடில் கண்ணம்மாப் பேட்டையில் ஒரு சுரங்கப் பாதை அமைக்கத் திட்டமிட்டு அதற்கு நிதி ஒதுக்கியிருப்பதற்காக அந்தத் தொகுதி உறுப்பினர் என்ற முறையில் அதை மகிழ்ச்சியோடு வரவேற்றுப்பாராட்டுகிறேன். அதை தாமதமின்றி நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தணிகை தாலுகா புதிதாக தமிழ்நாட்டோடு சேர்ந்த ஒரு பகுதியாகும். ப்ரோதுடூர்பேட் சாலை பற்றி எடுத்துச் சொன்னபோது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அது உடனடியாகக் கவனிக்கப்படும் என்று உறுதி கூறினார்கள். அதற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தணிகை தாலுகா தமிழ் நாட்டோடு இணைந்த பிறகு இன்னும் பல கிராமங்களில் ஒரு கிராமத்தோடு ஒரு கிராமத்தைப் பிணைக்கும் பாதைகள் செப்பனிடப் படவில்லை. அதன் காரணமாக பேருந்து கள் போக முடியாத நிலையில் பல கிராமங்களில் உள்ள மக்கள் போக்குவரத்து வசதி இன்றி அல்லலுற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உள்ளாட்சித் துறை விசேஷ கவனம் செலுத்தி அந்தப் பகுதிகள் பலதுறைகளில் இப்போது முன்னேற்றம் கண்டிருக் கிறது என்றாலும் அப்பகுதிகள் இன்னும் அதிகப்படியான முன்னேற்றத்தை காணும் வகையில் குறிப்பாக சாலைவசதிகள் செய்து தருவதில் அதிகாரிகள் விசேஷ கவனம் செலுத்துமாறு குறிப்புகள் அனுப்பும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.





குடிசைகள் அகற்றும் விஷயம் பற்றிய குறிப்புகளைக் கண்டேன். தேவைப்படுகிற இடங்கள், வீடு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தேவைப்படுகிற இடங்களைத் தவிர மற்ற இடங்கள் அகற்றப்பட மாட்டாது என்று குறிப்பில் காணப்படுகிறது. எனக்குக் கிடைத்திருக்கும் தகவல் புதிய விஷயங்களைத் தருகிறது. பலயிடங்களில், குறிப்பாக சாரங்கபாணி தெருவில் உள்ள குடிசை கள் அகற்றப்பட்டு அவர்களுக்கு குடியிருப்பதற்கு வேறு இடங்கள் தரப்படாமல் அங்குள்ள மக்கள் வெளியேற்றப்படுகிற நிலைபற்றி பலமுறை சென்று பார்த்து அரசாங்கத்தினிடம் குறிப்புகள் கொடுத்திருக்கிறேன். எங்கெங்கு குடிசைகள் அகற்றப்படுகின் றனவோ அங்கெல்லாம் தாற்காலிகமாகவாவது குடியிருப்பதற்கு இடம் கொடுத்து விட்டுதான் குடிசைகள் அகற்றப்படும் முறை இருக்க வேண்டும். குடிசைப் பிரதேசங்களை கட்டடப் பிரதேசங் களாக மாற்றும்போது அங்குள்ள வீடு இல்லாமல் தவிக்கும் நிலை இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். கிராம சுயாட்சி பற்றி நீண்ட நெடுங்காலமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. ஊராட்சி ஒன்றியங்கள் கிராமராஜ் என்ற அடிப்படையில்தான் ஏற்படுத்தப் பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி கேட்கிற கொள்கையுடையதாகையால் மத்தியில் இருந்து அதிகப்படியான அதிகாரங்களை மாநிலங்கள் பெற வேண்டுமென்று சொல்வதைப் போல், மாநில அரசின் அதிகாரங்களை அதிகப்படியான அளவில் கிராமங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் கொடுப்பதற்கு தமிழக அரசு முன்வரவேண்டும். இப்போது சாமான்ய விஷயங்களுக்குக் கூட சென்னை தலைமை அலுவலகத்தை நோக்கி கிராமங்களிலிருந்து நூற்றுக்கணக்கானவர்கள் வந்து கொண்டிருப்பதைக் காண்கிறோம். அப்படியல்லாமல் கிராம மன்றங்களுக்கு அவர்கள் தங்கள் வேலை களை, தங்கள் கிராமங்களுக்கு வேண்டிய வேலைகளை தாங்களே கவனித்துக்கொள்கிற வகையில் அவற்றிற்கு சுயாட்சி தரவேண்டும். அது விஷயமாக ஒரு திட்டத்தைத் தீட்டி வேலை செய்யவேண்டும். இறுதியாக, ஒன்று சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். சென்னை மாநகராட்சி தங்கள் கல்விக்கூடங்களை, குறிப்பாக ஆரம்பக் கல்வியை அதிகமாக விஸ்தரித்து நன்கு நடத்தி வருவதைப் பாராட்டுகிறேன். ஒரு குறைபாடு என்னவெனில், மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் ஒரு பிள்ளை படித்துவிட்டு உயர் நிலைப்பள்ளியில் படிக்க வேறு ஒரு தனியார் துறை பள்ளிக்குச் செல்லும்போது அங்கு ஒரு இடைக்காலத் தேர்வு நடத்தப்படுகிறது. ஐந்தாவது வகுப்பு படித்துவிட்டு வந்த பிள்ளை தனியார் துறை பள்ளியில் ஆறுவது வகுப்பில் சேரவேண்டுமென்றால் ஒரு தேர்வு

நடத்தி திரும்பவும் ஐந்தாம் வகுப்பிற்கே தள்ளப்படுகிறான், ஏகாதேசி அன்று பரமபதம் விளையாடும்போது பாம்பின் வாயில் அகப்படாமல் கீழே இறங்கவேண்டும். அதேபோல் ஒரே ஆட்சியின் கீழ் ஒரே துறையின் கீழ் ஒரே இன்ஸ்பெக்டர் இன்ஸ்பெக்ஷன் செய்யும் நிலையில் இருவேறு ஆட்சிகள் போல் தனியார் துறைப் பள்ளி, மாநகராட்சிப் பள்ளி என்றிராமல் அவை ஒன்றாக இருக்கும் முறையில் மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. டி. ஏ. ராஜவேலு**: தலைவர் அவர்களே, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது பஞ்சாயத்து ஆட்சிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் பழையபடி தாலுகா போர்ட், ஜில்லா போர்ட்கள் ஆகியவை மீண்டும் தோற்றுவிக்கப்படும் என்ற வதந்திகள் கிளப்பப் பட்டன. ஆனால் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் பஞ்சாயத்து ஆட்சிக்கு முன்பு இருந்ததை விட அதிக முக்கியத்துவம் அளித்து அது சீரும் சிறப்புமாக நடந்துவருவதைக் காண்கிறோம். தமிழ் நாட்டில் நடைபெற்று வரும் பசுமைப் புரட்சியில் தங்கள் நியாயமான பங்கினைச் செலுத்தவும், அதேபோல் நேரடியான நடவடிக்கைகளில் ஈடுபடவும், பஞ்சாயத்து யூனியன் அலுவலர்களுக்கு நேரடிப் பொறுப்பை கொடுக்கும் விதத்திலும், பஞ்சாயத்து யூனியன் நிர்வாக அமைப்பை மாற்றுவது மிகமிக அவசியம். ஊராட்சி ஒன்றிய ஆணையரின் கீழ் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மேலாளர், ஜீப் டிரைவர்கள் போன்றவர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களிடம் சில குறைகளைக் காணும்போது அவர்கள் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுப்பதற்கு அதிகாரம் இல்லாத நிலையில் ஒன்றிய அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆகவே நிர்வாக அமைப்பை நன்கு பாதுகாப்பதுடன், குறைகள் காணும்போது நடவடிக்கைகள் எடுக்கும் விதத்தில் ஒன்றிய அதிகாரிகளுக்கு அதிகாரங்கள் அளிக்கப்படவேண்டும்.

குடி நீர் வழங்கும் திட்டத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுத்தும்கூட அதைப் பூர்ணமாகச் செயல்படுத்த முடியவில்லை. குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியத்தை நிறுவ இருப்பதற்காக அரசை நான் பாராட்டுகிறேன். ஊராட்சி ஒன்றியங்களுக்கு சாலை மானியமாக கொடுத்து வந்த அந்த முறையை இப்போது மாற்றியமைத்திருக்கிறார்கள்.

சாலைகளின் நீளத்தின் அடிப்படையில் மானியம் அளிக்கும் விதத்தில் அந்த முறையை மாற்றியமைத்திருப்பது திருப்தி அளிக்கிறது. ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகத்தான் மத்திய, மாநில அரசுகளின் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில் ஊராட்சி





ஒன்றியங்களுக்கு, சுயேச்சையான வருமானம் நியாயமான முறையிலே, குறைந்தபட்ச அளவிற்காவது கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அதே நேரத்தில், ஏழை மக்களைப் பாதிக்கும் கடுமையான வரிகள் எதுவும் இருக்கக் கூடாது என்பதையும் மனத்தில் வைத்து நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து சகாயத்தொகை பெற்று சில திட்ட வேலைகள் செய்யப்படுகின்றன. அவைகளைப் பஞ்சாயத்துக்கள் செய்யக்கூடாது என்று உத்தரவை அரசாங்கம் விதித்திருக்கிறது. ஆனால் பஞ்சாயத்துக்கள் ஊராட்சி ஒன்றியத்தின் சகாயத்தொகையைப் பெற்று செய்வதால் பஞ்சாயத்து வேலைகள் தரம்பட இருக்கும். ஆகையால் கண்டிராக்டர்களிடம் வேலைகள் ஒப்படைத்தால், அவர்கள் பல வேலைகளைச் செய்து கொண்டு, இந்த வேலைகளைப் பாதியோடு விட்டுவிடுகிறார்கள். ஆகவே, ஊராட்சி ஒன்றிய வேலைகளைச் சகாயத் தொகை பெற்றுச் செய்யும்பொழுது பஞ்சாயத்தே செய்யவேண்டுமென்று அமைச்சரவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியங்களின் கூட்டங்களில் கலந்துகொள்ள உரிமையிருக்கிறது. அதைப்போல், நகராட்சிக் கூட்டங்களிலும் கலந்துகொண்டு பணியாற்ற இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சரவர்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தக் கோரிக்கையை ஆதரித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. க. கோமதிசங்கர திட்சிதர்**: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த 22, 23 மானியங்களின்மீது எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பில் கொண்டுவந்த வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

முதலில் கதர், புனிதமான கதர், நாம் அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் மகாத்மா காந்தியடிகள் நமக்கு ஆடை அணிவித்தார்கள். அதுவரையில் அந்நிய ஆடைகளைத்தான் நாம் கட்டிக் கொண்டிருந்தோம், அவர்களுக்கு அடிமைகளாகயிருந்தோம். இந்தக் கதரை மகாத்மா காந்தியடிகள் நமக்கு அப்பொழுது அளித்தார்கள். அதற்குக் காரணம் என்ன ? கிராமப் பகுதிகளிலே உள்ள இலட்சக்கணக்கான மக்கள் பசியினால் வாடுகிறார்கள், அவர்களுக்கு ஒருவிதமான தொழிலும் இல்லை. எனவே, நூல் நூற்று கதர் நெய்வதன் மூலமாக அவர்களுக்குச் சிறிதளவாவது பொருளாதார வாய்ப்பு அளிக்க வேண்டுமென்பதற்காக மகாத்மா காந்தியடிகள். கதரை நமக்கு அளித்தார்கள். அது மட்டுமல்ல, சுதந்திரத்திற்கே at the point of the bayonet என்ற அளவில், நூற்கும் அந்த நூலில் நமக்குச் சுதந்திரம் இருக்கிறது என்று கருதித்தான் அளித்தார்கள். காந்திஜி அவர்கள் நமக்கு அளித்த நிர்மாணத் திட்டங்களில் மிகவும் முக்கியமான நிர்மாணத் திட்டம் இந்தக் கதர்.

[திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்] [1970 மார்ச் 23

மதுவிலக்கை இந்த அரசாங்கம கைக்கொண்டு வருகிறதே அதைப்பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனாலும் இது காணாது. அதிகமாக, கிராமப்புறத்தில் பொருளாதாரம் நிலவ வேண்டுமென்றால் பெரிய தொழில்கள் இல்லாவிட்டாலும், குடிசைத் தொழில்களாவது அபிவிருத்தி அடைய வேண்டுமென்று நல்ல நோக்கத்தோடு இந்தக் கதர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். இந்தக் கதர் இயக்கத்தில் நல்ல அனுபவம் வாய்ந்த உத்தியோகஸ்தர்கள் மூலமாக நடைபெற்று வருவதால் காந்திஜியின் அந்த ஸ்பிரிட், அந்தத் தத்துவத்தை உணர்ந்தவர்களால் இந்த நிர்வாகம் செய்யப்படுவதை நாம் காண்கிறோம். இன்னும் அதிலுள்ள குறைகளைக் களைந்து அபிவிருத்தி செய்யவேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நூல் நூற்பதன் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவுக்குத் குறையும். நூல் நூற்பதன் மூலமாகத் தினசரி நிச்சயமாக இரண்டரை ரூபாய், இரண்டே முக்கால் ரூபாய் கிடைக்கும் என்பதை அனுபவப் பூர்வமாக உணருகிறேன். அம்பர் சர்க்காவைச் சுற்றி வந்தால் கிடைக்கும் என்பது கவனத்திலிருக்கிறது. அம்பர் சர்க்கா பயிற்சியைக் கிராமந்தோறும் அதிகப்படுத்தி, நூல் நூற்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அதிகமான அளவில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். புனிதமான கதரில் மில் நூல் சேர்க்கப்படாமல், புனிதத் தன்மையைக்கொண்டு நல்ல முறையிலே கதர் உற்பத்தி செய்ய, அதை ஏராளமான மக்கள் வாங்கி உபயோகிக்கக்கூடிய அளவிலே அரசாங்கம் அதிகப்படியான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சென்ற வருஷத்திலே இந்தக் கதர் மந்திரி ஸ்ரீ முத்துசாமி அவர்களும், அந்த இலாக்காவைச் சேர்ந்தவர்களும் ஏராளமான கதரை விற்பனை செய்ய முயற்சிகளை எடுத்துக் கொண்டதைப் பாராட்டுகிறேன். இதைவிட அதிகமாக நாமோ, அதிகாரிகளோ, மந்திரிகளோ பொதுமக்களுக்கு எடுத்துக்காட்டாக எப்பொழுதும் கதரை உடுத்திக்கொண்டு, கதரை அணிந்துகொண்டு மற்றவர்களும் அதை வாங்கக்கூடிய முறையிலே நாம் முயற்சி எடுத்துக்கொண்டால் 1970–71-லே 5 கோடி ரூபாய்க்குக் கதர் விற்பனை செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கைத்தறி நெசவாளர்களின் நிலை மிகவும் மோசமாகிவிட்டது. கதரை உற்பத்தி செய்யும் நிலையாவது, கதர்ச் சட்டத்தின்மூலமாக ஒரு சிறிதளவாவது முன்னேறிக்கொண்டு வருகிறது. ஆகையால் அவர்களுக்கு எல்லாவிதமான சௌகரியங்களும் செய்துகொடுத்து, கதர் உற்பத்தி செய்யும் அந்த நெசவாளர்களுக்கு ஊக்கமளிக்கும்படியான முறையிலே நன்மைகள் செய்யவேண்டும். வீடுகள் கட்டிக் கொடுப்பது, நல்லமுறையிலே கூலி கொடுத்தல் போன்றவற்றைச் செய்யவேண்டும். மற்ற கைத்தறி நெசவாளர்கள் வாங்கும் கூலி கொஞ்சம் அதிகம்தான். அதை நல்ல முறையிலே



1970 மார்ச் 23] [திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்]

அவர்களுக்கு அளித்து அதிகமான கைத்தறி நெசவாளர்கள் கதர் நெய்வதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கதர் மிகப் புனிதமானது. இந்தத் தேசத்தின் மக்களுடைய பொருளாதாரத்தை ஒரு வன்முறையுமில்லாமல், சொந்தமான முறையிலே நாம் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றால் அதற்கு இந்தக் கதரும், இன்னும் கிராமக் கைத்தொழில்களும்தான் மிகவும் முக்கியம் என்பதை உணர்ந்து இதற்கு ஏராளமான தொகையை, அதிகப்படியான தொகையை மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1958-ம் வருஷ பஞ்சாயத்து ஆக்டின் மூலமாகக் கிராமங்கள் இப்பொழுது மறுமலர்ச்சி அடைந்து வருகின்றன. கிராம இராஜ்யம் ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு அந்தச் சட்டத்தின்மூலம் கிடைக்கிறது. பஞ்சாயத்து ஒன்றியங்களின் வேலைகளைக் கவனிக்கும் அதிகாரிகள், எக்ஸ்டென்ஷன் ஆபிசர்ஸ், வளர்ச்சி அதிகாரிகள், மற்றும் கமிஷனர்கள், அதிலே ஈடுபட்டவர்களெல்லாம் 'கிராமங்களுக்கு நாம் சேவை செய்கிறோம், அது புனிதமான சேவை என்ற உணர்ச்சியை ஊட்டி, மேலதிகாரிகள் அவர்களுக்கு அதிகப்படியான பயிற்சியைக் கொடுத்து, பஞ்சாயத்துக் காரியங்களும், பஞ்சாயத்து ஒன்றியக் காரியங்களும் நல்லமுறையிலே, அந்த மக்களுக்குப் பயன்படும் வகையிலே, மக்கள் நன்மை பெற வேண்டுமென்ற முறையிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். (மணியடிக்கப்பட்டது).

ஒரேயொரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்ளுகின்றேன். விவசாயத் தன்மையில் ஏராளமாகச் செலவழிக்கப்படுகின்றன. மறுமலர்ச்சிப் பாதையில் நாம் இருக்கிறோம். அதிக ஊக்கத்தை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று நாம் செலவழிக்கும் பணத்தைக் கண்காணிப்போடு, நல்ல முறையிலே செலவழித்தால், வீணாகாமல் விவசாயிகளுக்குப் போய்ச் சேரும் என்று கூறி முடித்துக் கொள்ளுகின்றேன்.

திரு. எஸ். பி. பச்சையப்பன்: மாற்றுத் தலைவரவர்களே, உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் இங்கே சமர்ப்பித்த மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன்.

நம்முடைய உள்ளாட்சித் துறையின்மூலமாகத்தான் கிராமப் பகுதியும், நகரப் பகுதியும் மிகச் சீர்திருத்தி வருகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அந்த முறையிலே இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பையேற்ற பிறகு பல பாட்சிகரமான திட்டங்களைத் தீட்டி, கிராமப் பகுதிகளெல்லாம் மிகச் சிறந்த முறையிலே, நல்ல முறையிலே வளர்ச்சியடைந்து வருகிறது. அந்த முறையிலே, பசுமைப் புரட்சி என்ற முறையிலே,

[திரு. எஸ். பி. பச்சையப்பன்] [1970 மார்ச் 23

ஐ.ஆர். 8 என்ற நெல்லை மிகத் தீவிரமாகச் சாகுபடி செய்யும்படியான முறையில், அதிகமான நெல்லைத் தமிழகத்தில் உற்பத்தி செய்திருக்கிறோம்.

அது மாத்திரமல்ல, பல கால்நடைகள், மருத்துவ மனைகளுக்குச் செல்ல வேண்டுமென்றால் பல மைல் தூரத்திற்கு அப்பால் இருக்கக்கூடிய மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டியிருந்தது. அந்த நிலையை நீக்கி, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆங்காங்கே 6 சிற்றூர்கள், 10 சிற்றூர்கள் என்ற முறையிலே துணை நிலையங்களாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 5, 6 என்கின்ற அளவில் துணை நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அது மாத்திரமல்ல, ஊராட்சி ஒன்றியத்திலே பெரிய ஒரு மருத்துவ மனையாக கால்நடை மருத்துவ மனையை நிறுவியிருக்கிறது.

இணைப்புச் சாலைகளைப் பார்த்தால், ஊராட்சி ஒன்றியங்களெல்லாம் தங்களுக்குக் கொடுக்கும் பணம் போதவில்லை என்ற முறையில் நீண்டநாட்களாகச் சொல்லப்பட்டு வந்தது. ஒரு நபருக்கு 40 பைசா வீதம் கொடுக்கும்பொழுது ஆங்காங்கிருக்கும் கேங் கூலிகளுக்குக் கொடுத்து, அதிகாரிகளுக்குக் கொடுத்துவிட்டு மீதியிருக்கும் தொகையில் ஊராட்சி ஒன்றியத்தை நிர்வகிக்க முடியவில்லை என்ற புகார் இருந்தது. அதனை இன்று உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் நீக்கிவிட்டு, தலைக்கு 15 காசு வீதமும், மைல்கள் 600, 800 1,500 என்ற முறையிலே அதிகப்படியான பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு கிராமத்திற்கும் தண்ணீர் வசதியைச் செய்து கொடுக்கிற முறையிலே ஆண்டுதோறும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 4,5 மேல்நிலைத் தொட்டிகளை கட்டி, ஆங்காங்கு உள்ள கிராமங்களை வளர்ச்சி அடையச் செய்திருக்கிறார்கள். கல்வித் துறையிலே பார்க்கிறபொழுது ஆண்டுக்கு ஆண்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 2, 3 பள்ளிகள் திறக்க வேண்டும் என்ற முறையிலே ஆங்காங்கு பள்ளிகள் திறக்கப்பட்டு, வந்துகொண்டிருக்கின்றன. ஆசிரியர்கள் ஆங்காங்கு தங்கி, அங்கிருக்கிற மாணவர்கள் நல்ல முறையிலே பயிலவும், மாணவர்கள் நல்ல முறையில் வீடுகளிலே படிக்கிறார்கள் என்று கண்காணிக்கின்ற முறையிலே, அங்கு தங்குவதற்கு ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் முறையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டுகூட ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக ரூ. 5 லட்சம் ஒதுக்கி, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறார்கள்.

இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்கிறபொழுது ஒரு சில நல்ல காரியங்களையும் இன்னும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிகின்ற சிலரை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து எடுத்து வேறு பிற பகுதியில் சேர்க்கவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிகின்ற சமூகநல ஊழியர்கள் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். கேள்வி கேட்கிற நேரத்தில் உள்ளாட்சித்துறை



1970 மார்ச் 23] [திரு. எஸ். பி. பச்சையப்பன்]

அமைச்சர் அவர்கள் அவர்களை எடுக்க முடியாது என்று சொன்னார்கள். அவர்கள் என்ன வேலை செய்கிறார்களோ தெரியவில்லை. அவர்கள் என்ன வேலை செய்கிறார்கள் என்று கேட்டால் ஆங்காங்கிருக்கிற காங்கிரஸ் வெளியிடுகிற பத்திரிகைகளை கையில் வைத்துக்கொண்டு பிரசாரம் செய்கிற வேலையைத்தவிர, வேறு வேலைகள் அவர்கள் செய்யவில்லை. ஆகவே, அவர்களுக்கு வேறு ஒரு வேலையைக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் ஊராட்சி ஒன்றியத்தில் பணி புரிகிற சில ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் முக்கிய சேவிகா, கிராம சேவிகா, தையல் ஆசிரியர் என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நான்கு பதவிகளுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 15,000 செலவாகிறது. அவர்கள் நீக்கப்படவேண்டும். செல்வராயன்மலையை ஊராட்சி ஒன்றியமாக மிகச் சீக்கிரம் ஆக்கிவிட வேண்டும். 1964-65-ல் ஊராட்சி வட்டார வளர்ச்சிப் பகுதியாக இருந்தது. அதனை மீண்டும் உருவாக்கி மலைப் பகுதியில் வாழும் மக்களுக்கு நல்லதோர் முறையில் வாழ வழி தேடித்தர வேண்டும் என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கோ. பூவராகன் :** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கட்சியின் சார்பில் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஒட்டி சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

அமைச்சர் அவர்கள் 1967-68-ல் கிராம வளர்ச்சி, கிராம முன்னேற்றத்திற்குக் காட்டியிருக்கிற அக்கறை 1970-71-ல் மிகக் குறைந்துகொண்டு வந்திருக்கிறது என்பது அவர்கள் ஒதுக்கிய பணத்திலிருந்து நன்றாகப் புலனாகிறது. 1967-68-ல் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்காக ரூ. 6.38 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1968-69-ல் ரூ. 6 கோடியும், 1969-70-ல் ரூ. 5 கோடி 91 லட்சமும் ஒதுக்கப்பட்டது. ஆனால் 1970-71-ல் பார்க்கிறபொழுது ரூ. 6 கோடியாக நின்று விட்டது. 1967-ல் கொஞ்சம் அதிகமாகக் கிராமப்புற வளர்ச்சிக்கு பணம் ஒதுக்கவேண்டும் என்று முயற்சி எடுத்து, அது தொடர்ந்து 1968-69, 1970-71 வருடங்களில் வரவில்லை கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு இது சான்றாக இருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில்தான் இன்றைய தினம் அரசாங்கம் எழுப்புகிற எல்லாக் கடன்களுக்கும் அவ்வப்பொழுது உதவி அளித்து, திட்டங்களுக்கான உதவியும் கிராமப்புறங்களிலிருந்துதான் வந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அப்படியிருக்கும் பொழுது நாம் இந்த ராஜ்யத்தில் செலவழிக்கிற மொத்த பணத்தில் ரூ. 300 கோடியில் எவ்வளவு கோடி ரூபாய் கிராம வளர்ச்சிக்

காக, முன்னேற்றத்திற்காக நாம் செலவிடுகிறோம் என்பதைப் பார்த்தால், அது மிகக் குறைவாக இருப்பதைக் காணலாம். ஆண்டுதோறும் கொஞ்சம் அதிகமாகப் பணம் செலவிட்டு சென்னை நகரத்தைப் புதுமையாக்கிக்கொண்டு வருகிறோம். நான் அதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். அதே சமயத்தில் கிராமங்களில் ஏற்கெனவே இருந்த நிலையாவது காப்பாற்றப்படவேண்டும் என்ற ஒரு கருத்தினை மனதில் கொண்டு, கிராம வளர்ச்சிக்கு வழி வகை காணவேண்டும். இருக்கிற நிலைமையாவது சீர்கெடாமல் பார்த்துக் கொள்வதற்கான முயற்சிகளை எடுத்தாக வேண்டும்.

கிராமப்புறங்களில் குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாம் ஒதுக்குகின்ற பணம் சரியானபடி செலவழிக்கப்படவில்லை. சென்ற ஆண்டு ரூ. 80 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் ஒரு லட்சத்திற்கு மேல் செலவு செய்யப்படவில்லை, இந்த ஆண்டு அதிகப் பணம் ஒதுக்கி, ஒதுக்கிய பணம் சரியான முறையில் செலவழிக்கப்படுவதற்குத் தனிக் கவனம் செலுத்தவேண்டும். இந்தப் பிரச்னையை முழுவதும் தீர்ப்பதற்கு ஒரு முடிவு கட்டி, அதற்கான ஒரு திட்டத்தைத் தீட்டவேண்டும். கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், நாங்கள் அவ்வப்பொழுது கொஞ்சம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்ற நிலைமையில் இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. இந்த நிலைமையை மாற்றுவதற்கு ஒரு ஐந்தாண்டுத் திட்டம்போலத் திட்டம்போட்டு, இத்தனை கோடி ரூபாய் செலவில் எல்லா கிராமங்களுக்கும் குடி-தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படும் என்று தீர்மானித்து, இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கிராம நல வளர்ச்சிக்காக, குறிப்பாக பிரதம சுகாதார நிலையங்கள் ஆங்காங்கு ஏற்படுத்துவதுதான் அரசாங்கத்தின் நோக்கம். சென்ற ஆண்டு பிரதம சுகாதார நிலையங்களுக்கு கட்டடம் கட்டுவதற்காக ரூ. 10 லட்சம் பணம் ஒதுக்கப்பட்டது. அப்படி ஒதுக்கிய பணத்தில் ரூ. 11,000 தான் செலவு செய்யப்பட்டது. மீதிப் பணம் செலவழிக்கப்படவில்லை. என்ன காரணம் என்று புலப்படவில்லை. ஐடில் மேன் பவர் யுடிலைசேஷன் ஸ்கீமின் கீழ் சென்ற ஆண்டு ரூ. 40 லட்சம் ஒதுக்கியிருந்தும் அதில்கூட ரூ. 5 லட்சம் குறைவாகத்தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் சில இனங்களில் பார்த்தாலும், ஒதுக்கப்பட்ட பணம் அதிகமாகச் செலவு செய்யப்படாமல் இருக்கிறது.

ஆரம்பப் பள்ளிகளுக்கு மானியம் கொடுக்கிறோம், இணைப்புச் சாலைகளுக்கு மானியம் கொடுக்கிறோம். அந்தப் பணத்தில்கூட சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட பணம் சரியாக செலவழிக்கப்பட முடியாத நிலையைக் காண்கிறோம். கிராமப்புற வளர்ச்சிக்கு நாம் இன்னும் அதிகமாக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களுடைய வேலையில் ஈடுபடவேண்டும் என்று இந்தத் துறையிலே உள்ளவர்கள் இன்னும் சற்று ஊக்கத்தோடு அவர்களுடைய வேலையில் ஈடுபடவேண்டும் என்று இந்த





சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்பொழுது தான் கிராம முன்னேற்றத்திற்கு நாம் எடுக்கின்ற முயற்சி நல்ல முறையில் அமையும் என்பதை என்னைப் பொறுத்த அளவில் சொல்லிக்கொள்கிறேன். இதே போன்றுதான் வேளாண்மைத் திட்டங்களுக்காக மானியங்கள் கொடுக்கிறோம். அந்த மானியங்கள்கூட எந்த அளவுக்குக் கொடுக்கிறோமோ, அந்த அளவுக்குச் செலவு செய்யப்படுவதைக் காணோம். ரூ. 39 லட்சம் கொடுத்ததில் ரூ. 36 லட்சம்தான் செலவு செய்திருக்கிறார்கள். இன்னும் சில இனங்களில், ரூ. 35 லட்சம் கொடுத்ததில், ரூ. 33 லட்சம் தான் செலவு செய்திருப்பதை நாம் காண்கிறோம். ஆசிரியர் குடியிருப்பு போன்ற இனங்களுக்காக ஒதுக்கப்படுகிற பணம் போதாது. ஆசிரியர் குடியிருப்புக்காக நாம் ரூ. 5 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம் 374 பஞ்சாயத்து யூனியன்களுக்கு ரூ. 5 லட்சம் எவ்வளவு தூரம் போதும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்னை தீரவேண்டுமென்றால், ஓரளவுக்கேனும் இன்னும் அதிகமாகப் பணம் ஒதுக்கி, ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பல இடங்களில் ஆரம்பப் பள்ளிகளுக்கு கட்டப்பட்ட கட்டடங்கள் என்ன காரணத்திற்காகவோ தெரியவில்லை அடிமட்டத்திலேயே அப்படியே நின்று விட்டன. ஏனென்று கேட்டால், காண்டிராக்டர்களுக்கு ஊக்கம் இல்லை, இன்றைய நிலைமைக்கு ஏற்றவாறு கட்டுபடியாகவில்லை என்று அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள் என்று சொல்கிறார்கள். இந்த நிலையில் அவற்றை அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். கிராமப்புறங்களிலே நடக்கும் வேலைகள், சீராக, உடனடியாக, விரைவிலே நடைபெறுவதற்கும் சிக்கனமாக நடைபெறுவதற்கும் வழிவகைகளை நாம் காண வேண்டும்.

விருத்தாசலம் நகரப் பஞ்சாயத்து நகரமன்றமாக ஆக்கப்பட்டிருக்கிறது. பண்ருட்டி உறுப்பினர் ஒரு பஞ்சாயத்திலிருந்த கிராமத்தை விட்டுவிட்டார்கள் என்று சொன்னார்கள். ஒரு காரணத்தை வைத்து விட்டுவிட்டதாகச் சாட்டிய குற்றச்சாட்டிற்கு பதில் அளிக்கையில் அமைச்சர் அவர்கள் அவ்வாறு இல்லை என்று சொன்னார்கள். அந்த இடத்தைச் சேர்த்து நகரமன்றமாக நோடிபை பண்ணினார்கள், கடைசியாக முடிவு எடுக்கிறபொழுது ஒரு பகுதியை விட்டுவிட்டு நகரமன்றமாக்குவது பொருத்தமாக இருக்காது. யாரோ ஒரு விண்ணப்பம் கொடுத்தார் என்பதற்காக அதை நீக்கிவிடக்கூடாது. அப்படி நீக்குவதற்குச் சரியான காரணம் இருக்கவேண்டும். இதுபற்றி அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்யவேண்டும். அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்தை எடுக்கிறபொழுது வருவாய் வருகிற

பகுதியை நகர மன்றத்தோடு இணைத்துக் கொண்டு, வருவாய் இல்லாத பகுதியைத் தள்ளிவிடுவது முறையாகாது. ஆகவே இந்தக் கிராமத்தையும் நகரமன்றத்தோடு இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. பு. செ. முத்துச்செல்வன்: தலைவர் அவர்களே, இப்பொழுது நடைபெற்றுவருகிற உள்ளாட்சித் துறை கதர் மானியக் கோரிக்கை விவாதத்தில் எனது கருத்துக்களை வழங்க வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உள்ளாட்சித் துறை என்பது ஒரு குட்டி அரசு போன்ற அமைப்பாகும். ஏனென்றால் உள்ளாட்சித் துறையிலே வராத இலாகாவே கிடையாது. உள்ளாட்சி துறையில் கல்வி இலாகாவருகிறது. குடிநீர் வழங்குகிற பொதுப்பணித் துறையைச் சேர்ந்த இலாகா வருகிறது. அதேபோல் சாலைகளைப் பராமரிக்கின்ற பெருவழித் துறையைச் சேர்ந்த இலாகா வருகிறது. அதேபோலத்தான் கால்நடைத் துறை, விவசாயத் துறை இப்படிப்பல் துறைகள், மருத்துவம், சுகாதாரம் போன்ற துறைகளெல்லாம் இதிலே வருகின்றன. இப்படிப் பல இலாகாக்களை இணைத்து ஒரு சிறிய அரசாங்கமாக நடக்கிறது என்று சொல்லத் தக்க அளவில் ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், சிற்றூராட்சிகள் இவையெல்லாம் இன்றையதினம் இணைந்து 374 ஊராட்சி ஒன்றியங்களும் ஒரு குட்டி அரசாங்கமாக அமைத்திருக்கின்ற இந்த நல்ல மானியத்தின்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். நம்முடைய மாநிலத்தில் 12,339 ஊராட்சிகளும், 537 பேரூராட்சிகளும், 14 நகரியங்களும், முனிசிபாலிடிகளும் இருக்கின்றன. இவற்றை யெல்லாம் உள்ளடக்கி 374 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. இத்தகைய பெரிய அமைப்பின் நிர்வாகம் பல இலாகாக்கள் மூலமாகச் செலவழிக்கிறோம்.

இதுவரையில் நாம் செய்திருக்கின்ற நிர்வாக அமைப்புகள் போதாது என்று சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறோம். இன்றைக்கு இருக்கும் நிர்வாக அமைப்பைப் பார்க்கும் போது, முன்பு இருந்தது போலவே இருக்கிறது. எவ்வளவு பெரிய ஊராட்சி ஒன்றியமாக இருந்தாலும், திட்டகாலங்களில், பிளான் பீரியடில் மட்டும்தான் நல்ல முறையில் இயங்க முடிகிறது. நல்ல பல பணிகளைச் செய்ய முடிகிறது. இப்பொழுது நடைமுறையில் திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலை இருக்கிறது. இந்தக் காலங்களில் ஊராட்சி ஒன்றியங்கள் செயலற்று இருக்கின்றன. இவற்றை மாற்றும் வகையில் செயல் படவேண்டும். என்னைப் பொறுத்த வரையில், இந்த 374 ஊராட்சி ஒன்றியங்களையும், இரண்டை ஒன்றாக இணைத்து, அதிலே நிர்வாகத்தை மாற்றி, அமைப்பைச் செய்தால் நிர்வாகச் செலவு குறையும். அப்படிக் குறைக்கும் செலவைக் கொண்டு, பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் காரியங்களைச் செய்ய முடியும். அதேபோல ஊராட்சிகளைப் பொறுத்தவரையிலும்கூட 3, 4 ஊராட்சிகளை



ஒன்றாக இணைத்து, ஒவ்வொன்றுக்கும் ஒரு தலைவரைப் போட்டு, தனியான ஒரு அமைப்பு இருந்தால் நலமாக இருக்கும். அப்படிப் பட்ட ஊராட்சிகளுக்குத் தக்கபடி ஈ.ஓ.க்கள் நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் வாயிலாகக் கணக்கு வைத்துக்கொள்ள, பணங்களைப் பராமரிக்க, மற்றப் பணிகளைச் செய்ய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அந்தத் தலைவர் கூட்டம் நடத்தும் வகையில் இருந்தால் அவை தன்னிச்சையாக இயங்க வசதியாக இருக்கும். ஊராட்சிகளுக்குச் சொந்தக் கட்டடம் இல்லாத துர்பாக்கிய நிலை இருக்கிறது. ஏறத்தாழ 1,200-க்கு மேற்பட்ட ஊராட்சிகளில் 300, 400 சிற்றூராட்சிகளுக்குத்தான் சொந்தக் கட்டடம் இருக்கிறது. இந்தக் குறையைப் போக்க தக்க முயற்சிகள் எடுக்க வேண்டும்.

பொதுத் தேர்தலைப் பொருத்தவரையில், ஊராட்சித் தலைவருக்கு நேரிடைத் தேர்தல் இருக்கிறது, அதைப் பாராட்ட வேண்டும். ஆனாலும், அரைக் கிணறு தாண்டியது போலத்தான் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத் தலைவரும் நேரிடையாகத் தேர்ந்தெடுக்க என்ன தயக்கம் என்பதை மக்களிடம் பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறோம்.

(மணியடித்து அடுத்த அங்கத்தினர் அழைக்கப்பட்டார்)

* திரு. கே. போஜன்: தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி, முதலிய மானியக் கோரிக்கைகளின் மீது எனக்கு பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து, என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய நாட்டில், குறிப்பாக கிராம மக்களுக்கு வேண்டிய கல்வி வசதி, குடி-நீர் வசதி, சாலைகள் வசதி, மருத்துவ வசதி, கைத்தொழில் வசதி, வேளாண்மைப் பெருக்கம் போன்ற எல்லாத் துறைகளிலும் முன்னேற அரசு திட்டங்களைப் போட்டு ஆண்டுக்காண்டு ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் இவற்றின் மூலம் செய்யப்பட்டு மக்களுக்கு நன்மை களைச் செய்து வருகிறார்கள். இன்றைக்கு நம் மாநிலத்தில் இருக்கும் 374 ஊராட்சி ஒன்றியங்களில் பல பரப்பளவில் பெரிய வைகளாக இருக்கின்றன. இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் நிர்வாகம் நல்லமுறையில் செயல்படுவதில் சிரமங்கள் இருக் கின்றன. பரப்பளவில் அதிகம் பெரிதாக இருக்கும் ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்தால், நிர்வாகம் நன்றாக நடைபெறும். சமுதாய நலத் திட்டங்களும் நல்ல முறையில் செயல் படும். குறிப்பாக உதகை ஊராட்சி ஒன்றியம் பரப்பளவில் பெரிதாக இருக்கிறது. அந்த ஒன்றியத்தில் 17 ஊராட்சிகள் இருக்கின்றன. அதேபோல் இந்த 17 ஊராட்சிகளும் ஜனத்தொகையில் குறைவாக இருந்தாலும், பரப்பளவில் பெரிதாக இருக்கின்றன. ஆகவே, நல்ல முறையில் நிர்வாகம் நடைபெற வசதியில்லை. சமுதாய நலத் திட்டங்களையும் அமல்படுத்த முடிய வில்லை. இப்படிப்பட்ட ஒன்றியங்களை இரண்டாகப் பிரித்து நிர்வாகம் செய்தால், அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல பல நன்மைகள் கிடைக்கும். ஏற்கனவே இந்த ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க

[திரு. கே. போஜன்] [1970 மார்ச் 23

கோரிக்கை இருந்து, அந்தக் கோரிக்கை கவனிக்கப்படாமல், இருந்துவிட்டது. அதை இப்பொழுது அரசாங்கம் கவனித்து, உதகை ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து செயல்படவேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, ஏனைய மற்ற ஒன்றியங்களும் பரப்பளவில் பெரிதாக இருந்தால் அவற்றையும் இரண்டாகப் பிரித்து நிர்வாகத்தைச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த ஊராட்சி ஒன்றியங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் போதாத நிலையில் இருக்கின்றன. மேற்கொண்டு அதிகமாக நிறுவ தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குறைந்தது நான்கு ஊராட்சிகளுக்காவது ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும். வேண்டிய அளவு வைத்தியர்களை நியமிக்க வேண்டும். இதை அரசு உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளில் மருந்துகள் கிடைப்பதில்லை. வைத்திய வசதியும் குறைவாக இருக்கிறது. இதைக் கவனிக்க வேண்டும். தாய்-சேய் நல நிலையங்களில் மருந்துகள் கிடைப்பதே இல்லை. அந்தக் குறை எப்பொழுதும் இருக்கிறது. அதைச் சற்றுக் கவனிக்க வேண்டும்.

நமது ஊராட்சி ஒன்றியங்களில் 22,000 ஆரம்பப் பள்ளிகள் உயர் ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் பெரும்பாலானவற்றிற்கு கட்டிடம் சொந்தத்தில் கிடையாது. அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியங்களில், அவற்றின் கூட்டங்களில் கலந்துகொண்டு அவர்களுக்கு நிர்வாகத் துறையில் யோசனைகள் கூற இப்பொழுது வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று, நகர மன்றங்களிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் அளித்து, நகர மன்றங்களில் உள்ள குறைகளைப் போக்கவும், பொது மக்களுக்கு சேவை செய்யவும், அவர்களுடைய பிரச்னைகளை சர்க்காரோடு பேசித் தீர்க்கவும் வசதியாக சட்ட உறுப்பினர்களும் நகர மன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ளத்தக்க வகையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும், அதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்துவது நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய மாநிலத்திலே வறட்சி நிலைமை ஏற்பட்ட போது வறட்சி நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, பல கிராமங்களுக்கும் குடி நீர் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல இடங்களில் குடிநீர் வசதி செய்துகொடுக்க வேண்டியிருக்கிறது. சர்க்கார் இவைகளைக் கவனித்து எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. நமது மாநிலத்திலே கதர்–கிராமக் கைத்தொழில்கள் வாரியம் கிராமப்புறங்களிலே இருக்கின்ற தொழில் வளர்ச்சியைப் பெருக்கு



1970 மார்ச் 23] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

வதுடன், தொழில் இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கின்ற பெரும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இதனால் கிட்டத்தட்ட 3 லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்த வாரியத்தை நல்ல முறையில் நிர்வகிக்க அரசாங்கம் சில உதவிகளை இதற்குச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கதர் கமிஷனிலிருந்து கிடைக்கும் வருவாய் இந்த வாரியத்திற்குப் போதாத நிலை இருந்து வருகிறது. தேவைப்படும நிதியை மாநில அரசு கொடுத்து உதவவேண்டும். கிராமப்புறங்களிலே பெரும் மாறுதல் ஏற்பட்டுக்கொண்டு வருகிற நிலையிலே, மின்சாரத்தை கிராம மக்கள் உபயோகப்படுத்தும் நிலையிலே, கிராமத் தொழில்களையெல்லாம் மின்சார உபயோகத்தைக்கொண்டு எப்படி எப்படி நடத்தலாம் என்பதுபற்றி ஒரு விரிவான ஆராய்ச்சிப் பிரிவை ஏற்படுத்தி நல்ல திட்டங்களைப் போட வேண்டும்.

இப்பொழுது நம் நாட்டில் பனைமரச் செல்வம் அதிகமாக இருக்கிறது. பனைத் தொழில்களில் சுமார் 2½ லட்சம் பேர் வேலை வாய்ப்பைப் பெற்று வருகிறார்கள். அவர்களால் உற்பத்தி செய்யக்கூடிய பனைப் பொருள்கள், பனைவெல்லம் போன்றவற்றை நல்ல முறையில் விற்பனை செய்வதற்கு வழி செய்துகொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஏதாவது மானியம் கொடுத்து உதவி செய்தால் நல்ல பலன் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில் ஈச்ச மரங்கள் அதிகமாக இருக்கின்றன. இதிலிருந்து பதனீர் இறக்கி, வெல்லம் காய்ச்சுவதற்கு லைசென்ஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், இன்னும் நல்ல முறையில் லைசென்ஸ் வழங்கப்படவில்லை. அரசு உடனே இதைக் கவனித்து லைசென்ஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து செங்கல்சூளை போன்ற தொழில்களையும் செய்யலாம். இப்போது கட்டிடங்கள் கட்டுவதற்கு செங்கற்கள் நிறைய தேவைப்படுகின்றன. ஆகவே, செங்கற்கள் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு அரசாங்கம் நல்ல முறையில் கடன் உதவி செய்து கொடுத்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்த மாதிரியும் இருக்கும். நமக்குத் தேவைப்படுகின்ற செங்கற்களும் கிடைக்க வழி ஏற்படும்.

அடுத்தபடியாக, கிராமப்புறங்களில் உள்ள ரோடுகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன இப்பொழுது கிராமங்களில் மின்சார லைட்டுகள் வந்துவிட்டன. இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும், மின்சார லைட்டுக்கான கட்டணத்தைக் கட்டுவதற்குத்தான் நிதி வசதி இருக்கிறது. ரோடுகளை மராமத்து செய்வதற்கு அவற்றிடம் போதிய நிதி இல்லை. கிராமப்புறங்களில் வீட்டு வரி போன்றவை நல்ல முறையில் வசூலிக்கப்படவில்லை. பஞ்சாயத்துக்களுக்கு வருமானம் குறைந்து விடுகிறது. ஆகவே, அரசாங்கம் பஞ்சாயத்துக்களுக்கு அதிக வருவாய்

கிடைக்க வசதி செய்து கொடுக்கவேண்டும். சர்க்கார் இதில் அதிக கவனம் செலுத்தி, இந்த வசூல்களை துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லிங்க் ரோட்ஸ், அதாவது இணைக்கும் சாலைகள். இதற்கு சென்ற ஆண்டில் 110 லட்சம் கொடுத்தார்கள். இந்த ஆண்டு 1970–71-லும் அதே 110 லட்சம்தான் கொடுத்திருக்கிறார்கள். இதை அதிகப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் சாலைகள் நன்கு பராமரிக்கப்படும்.

அடுத்தது, வில்லேஜ் ஒர்க்ஸ் கிரான்ட். பஞ்சாயத்து யூனியன் களுக்கு ஏதோ 20 ஆயிரம், 30 ஆயிரம் என்ற அளவில்தான் கொடுத்து வருகிறார்கள். வில்லேஜ் ஒர்க்ஸ் கிராண்டாக இன்னும் அதிகமாக ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களிலே பம்ப் செட் வைத்துக் கொள்ளலாம் என்று அனுமதி கொடுத்திருக்கிறோம். பம்ப் செட் சரியான முறையில் இயங்கவில்லையென்றால், அதைச் சீர் செய்ய வசதி கிடையாது. நான் போய்க் கேட்டால்கூட பம்ப் செட் கொடுத்து விடுகிறார்கள். பம்ப் செட்டைப்பற்றிய மெக்கானிசம் தெரியாதவர்களாக இருக்கிறோம். ஆகவே, ஏதாவது சரியான முறையில் இயங்கவில்லையென்றால் ரிப்பேர் செய்ய முடியவில்லை. ஆகவே, மெக்கானிசம் தெரிந்த ஒரு டிரைவரைக் கொடுக்க வேண்டும். அதேமாதிரிதான் ஸ்ப்ரே, டிராக்டர் போன்ற கருவிகள் கெட்டுவிடுகின்றன. நாம் எவ்வளவோ செலவு செய்கிறோம். ஆனால் பயன் உள்ள இடமாகப் பார்த்துச் செலவு செய்தால்தான் நல்லது. அரசாங்கம் இதில் அக்கறை காட்டவேண்டும்.

அடுத்தபடியாக, ப்ரைமரி ஹெல்த் சென்டர் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கு டாக்டர்கள் குடியிருக்க வீடு இல்லை. டாக்டர்கள் நகர்ப்புறங்களில் குடியிருந்துகொண்டு, ஏதோ ஒரு மணி நேரம் வந்து பார்த்துவிட்டுப் போய் விடுகிறார்கள். இதனால் அங்குள்ள மக்களுக்கு ப்ரைமரி ஹெல்த் சென்டரின் பயன் முழுவதும் கிடைக்க வழியில்லாமல் போகிறது. ஆகவே ப்ரைமரி ஹெல்த் சென்டர் உள்ள இடங்களில் டாக்டர்கள் குடியிருப்புக்கும் வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குடியிருப்பு வசதியை ஒரே நாளில் ஏற்படுத்திவிட முடியாது என்றாலும், படிப்படியாகச் செய்து கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களிலே உள்ள ரோடுகளைப் பராமரிப்பதற்கு என்ஜினியர்கள் கிடையாது. ரோடு போட்டாகி விட்டதென்றால், அந்த ரோடை அளப்பதற்கும் எஸ்டிமேட் போடுவதற்கும் கூட என்ஜினியர்கள் போதுமான அளவில் இல்லை. ஆகவே, என்ஜினியர்களின் எண்ணிக்கையை அதிகரித்து ரோடு வசதிகளை நல்ல முறையில் செய்துகொடுக்க வேண்டும்.





அடுத்து, பஞ்சாயத்துத்தலைவரை நேரடித் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்க முடிவு செய்திருப்பதுபோல பஞ்சாயத்து யூனியன் தலைவரையும் நேரடித் தேர்தல் மூலமாகவே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சர்க்கார் இதை மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஃபிஷ் நர்ஸரி என்று வைத்திருக்கிறார்கள். இது சரியான முறையில் பாதுகாக்கப்படவில்லை. இவற்றையெல்லாம் நன்கு கவனித்துக்கொள்ள, தக்க வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. அ. மாரிமுத்து: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது என் கட்சியின் சார்பிலே கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். ஆளும் கட்சித் தரப்பிலே முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் "செஞ்சியிலே பிறந்தவர்கள் எல்லாம் ராஜா தேசிங்கு அல்ல; கதராடையைக் கட்டியவர்கள் எல்லாம் காங்கிரஸ்காரர்கள் அல்ல" என்பதை இந்த அவையிலே நல்ல முறையிலே எடுத்துக் கூறினார்கள். அதையே நான், 'கதராடையைக் கட்டியவர்கள் எல்லாம் காங்கிரஸ்காரர்கள் அல்ல' என்பதை இந்த அவையிலே கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து ஆட்சிமுறை பற்றி எல்லோருமே பேசினார்கள். கிராமவளர்ச்சியை நல்ல முறையிலே செய்வதற்கு நல்ல பல கருத்துக்களைக் கூறிக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக ஒரு பஞ்சாயத்திலுள்ள சிறுபாசனங்கள் எல்லாம் இன்றைய வரையில் பொதுப்பணித் துறையின் பராமரிப்பிலேதான் இருந்து வருவதாக மக்கள் கருதுகிறார்கள். பொதுப்பணித் துறையின் மேற்பார்வையில் ஆற்றுப்பாசனம் தவிர மற்ற சிறுபாசனங்கள் எல்லாம் வருவதில்லை. தஞ்சை மாவட்டத்திலே தண்ணீர் பற்றாக் குறை ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக் களிலே ஏதேதோ செய்கிறார்கள். சிறுபாசனங்கள் எல்லாம் ரெவின்யூ இலாகாவினால் பராமரிக்கப்பட்டு வந்திருப்பது யாவரும் அறிந்ததே. இன்றையதினம் சிறுபாசனங்களுக்கு நல்ல அமைப்பு இல்லை. பாசனத்திற்கு செல்லக்கூடிய நீர் சில இடங்களில் சேதமடைகிறது, சில இடங்களில் தேங்கி நிற்கின்றது. இதை நாம் ஆராய்ந்து, நல்ல பாசனவசதியை ஏற்படுத்த வேண்டும். பஞ்சாயத்து யூனியன் சார்பிலே வட்டாரத்திற்குரிய வளர்ச்சிக்கு நிலவரி விதித்திருக்கிறார்கள். அந்த நிலத்ினுடைய சொந்தக் காரர்கள் நல்ல முறையிலே கிராமப்பஞ்சாயத்தின் நிர்வாகத்திற்கு உயர்த்திய வரியையும் தருகிறார்கள். தண்ணீர்ப்பற்றாக்குறை ஏற்படுகிற நேரத்தில், கண்மாய்கள் எல்லாம் சரியாக இல்லாத நிலையிலே இருப்பதை வட்டாரவளர்ச்சி அதிகாரிகள் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இது மிகப் பெரிய குறையாக

இருந்துவருகிறது. "நீங்கள் எங்களுக்கு வரி விதிக்கிறீர்கள். நாங்களும் ஒத்துக்கொண்டு கொடுக்கிறோம். இந்தச் சிறிய காரியத்தைக் கூடச் செய்து கொடுக்காமல் இருக்கிறீர்களே" என்று கேட்கிறபோது என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தவிக்கிறோம்.

கதர் உற்பத்தியை நல்லமுறையில் பெருக்கவேண்டும் என்று அக்கறை கொண்டிருக்கிறோம். கதர் உற்பத்தி இருக்கவேண்டுமென்றால் வீடுதோறும் கைராட்டைகள் மறைந்திருக்கக்கூடிய மாயத்தை தமிழக அரசு கவனத்தில் கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து கிராமத் தொழில் என்று பேசப்படுகிறது. என்னுடைய தொகுதி ஆடுதுறை. அதற்கு அருகில் தியாகராஜபுரம் இருக்கிறது. அங்கே மத்திய வாழை ஆராய்ச்சிப் பண்ணை அமைந்திருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள ஏழை விவசாயிகளும் வாழைச் சரகைக் கொண்டு தொன்னை தைக்கும் சிறு தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். 85 சதவிகிதம் ஏழை தொழிலாளர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு சர்க்கார் மானியம் கிடைக்காத காரணத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலை முன்னேற்றம் செய்ய முடியவில்லை. அரசுக்கும் பல விண்ணப்பங்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் போதுமான மானிய உதவி அளிக்கப்படவேண்டுமென்று இந்த நல்ல நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து ஒன்றியங்களை எடுத்துக் கொண்டால் கட்டடம் இல்லாது ஆலமரத்தடியிலும், கோவில் குளங்களிலும், தலைவர் வீட்டிலும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. தலைவர் வீட்டில் கூட்டம் என்கிறபோது தேர்தலில் அவருக்கு எதிராக நின்றவர்கள்—விரோத மன உணர்ச்சியோடு ஐந்தாண்டுகள் அங்கே போகாத நிலையே ஏற்படுகிறது. தமிழக அரசு இதை எல்லாம் கவனித்து ஸ்பெஷல் கிராண்டாவது கொடுத்து பஞ்சாயத்து. பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு அலுவலகம் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருசில இடங்களில் ஐந்தாறு கிராமங்கள் சேர்ந்து பஞ்சாயத்தாக அமைந்திருப்பது எல்லோரும் அறிந்த விஷயம். அதைப் பிரித்து அமைக்கவேண்டுமென்று பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து யூனியன்களும் தீர்மானம் போட்டு அனுப்பியும் கூட சில இடங்களில் அப்படிப் பிரித்து அமைப்பதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஆனால் சிலவற்றுக்கு அனுமதி இன்னமும் வழங்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றை எல்லாம் பிரித்து அமைக்க உடனடியாக உத்தரவு போடவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்து, நடைபாதைகளைப் பற்றிச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்து சார்பிலும், பஞ்சாயத்து யூனியன் சார்பிலும் நில அடிப்படையில் வரி விதிக்கின்றோம். பஞ்சாயத்துக்குரிய ரோடுகளைப் பராமரிக்க பஞ்சாயத்து யூனியனுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லாமல் இருப்பது சரியல்ல. பஞ்சாயத்து ரோடு, பஞ்சாயத்து யூனியன் ரோடு என்று இல்லாமல் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ரோடுகளை கவுன்சில் பராமரித்து நல்லமுறையில் செயல்பட அரசு உத்தரவு போடவேண்டும் . . . . (மணி அடிக்கப்பட்டது)

திரு. எம். மேத்தா: சட்டமன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சமுதாய வளர்ச்சி, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய பகுதி 1½ தாலுக்காவைக் கொண்டதாக இருக்கிறது. என்னுடைய தொகுதியில் இரண்டு நகராட்சிகள் இருக்கின்றன. ஆகவே, எனக்கு கொஞ்சம் அதிக நேரம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்த மானியங்களை வரவேற்று அரசாங்கத்தைப் பாராட்ட விரும்புகிறேன். ரோடுகளின் பராமரிப்புக்கு முன்பு ஜனத்தொகை அடிப்படையில் 40 பைசா வீதம் கொடுக்கப்பட்டது. அதைமாற்றி மணல்பாங்கான பகுதிக்கு ஒரு மைலுக்கு 800 ரூபாய் என்றும், சமவெளிப் பகுதிக்கு 600 ரூபாய் என்றும், மலைப்பாங்கான பகுதிக்கு 1,500 என்றும் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். புது ரோடுகளுக்கு இப்படிக் கொடுக்கப்படுவதைப் போலவே பழைய ரோடுகளின் பராமரிப்புக்கும் மணல்வெளி, சமவெளி, மலைப்பாங்கான இடம் ஆகியவற்றுக்குத் தனித்தனியாக ஒதுக்கவேண்டும். மலைப்பாங்கான பிரதேசத்திற்கு அதிகம் ஒதுக்கப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கொடைக்கானல் பகுதிக்கு சென்ற ஆண்டு 19 ஆயிரம் கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டு 21 ஆயிரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதுபோல மலைப்பகுதிக்கு அதிகமாக ரோடுகளைப் பராமரிக்கவும் ஒதுக்கவேண்டும்.

குறிப்பாக, நான் வெற்றிபெற்ற பின்னால் ஒரு முறை இரண்டு முறைக்குமேல் போக முடியாத ஊர்கள் இருக்கின்றன. கிழக்கு செட்டிவெட்டி, பாச்சலூரை எடுத்துக்கொண்டால் 7½ மைல்கள் நடந்தே போகவேண்டும். போக 7½, வர 7½ மைல்கள் என்றால் 15 மைல்கள் நடக்கவேண்டும். சாதாரண ஜனங்களே இவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளாகிப் போகவேண்டியிருக்கிறது என்றால் அங்கே உற்பத்திசெய்யப்படுகிற உயர்பொருளான பழங்களை எப்படிக் கொண்டுவர முடியும்? அதிகமாகப் பணம் ஒதுக்கிக் கொடுத்தால்தான் இந்த கிராம லிங்க்—இணைப்பு ரோடுகளை சரியானமுறையில் போட்டு பராமரிக்க முடியும்.

கடந்த ஆண்டு வறட்சி நிவாரண வேலைகளை எடுத்துக் கொண்டால் கொடைக்கானல் பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு பைசா கூடக் கொடுக்கப்படவில்லை. அந்தப் பகுதியில் உள்ள குடிதண்ணீர் கஷ்டம் சொல்ல முடியாது. உண்மையில் சகதியை வடிகட்டிக் கொடுக்கிறோம் என்பதை வெட்கத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. கூர்க்கால், கிழானவயல், குன்றூர் ஆகிய இடங்களில் தண்ணீர் இன்றி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். பண்ணைக்காடு, சேசிப்பட்டி ஆகிய இடங்களிலும் தண்ணீர் பிரச்சினைதான் இருக்கிறது. ஆகவே ஸ்பெஷல் கிராண்டாவது கொடுத்து அந்தப் பகுதி குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மலைப்பகுதியில் ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் ஏற்படுத்தவும் கிராண்டு கொடுக்க வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களில் 8 பேர்கள் நகரசபைத் தலைவராக இருக்கிறார்கள். ஆறு பேர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் காங்கிரஸ் கட்சி. ஒருவர் சுயேச்சை. ஆக 8 பேர்கள் இருக்கிறோம். நகரசபைத் தலைவரை என்னமோ 'சிடி பாதர்'—நகரத் தந்தை என்றழைக்கிறார்கள். ஒரு பியூனை மாற்றுவதற்கு கூட நகரசபைத் தலைவருக்கு அதிகாரமில்லை. அந்த நகரமன்றத்தில் இருக்கக் கூடிய ஒரு சாதாரண சர்வேயர் ஒழுங்கீனமாக நடந்துகொள்கிறார். அந்த சர்வேயரை மாற்ற 10 மாத காலமாக என்னால் முடியவில்லை. அவருக்குக் கீழ் வேலை செய்யக் கூடியவர், உண்மையிலேயே ஒழுக்கங்கெட்ட முறையிலே நடந்துகொள்வார்களானால், உண்மையிலேயே அந்த ஊர் நன்றாக இருக்க வேண்டுமானால். அந்த தலைவருடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதே போல கொடைக்கானல் நகரீயக் குழுவிலே ஒரு நிலை ஏற்பட்டு விட்டது. அங்கு இருக்கக் கூடிய நகரீயக் குழுவில் சேர்மனாக இருக்கக் கூடியவர் கலெக்டர். அதிலே சட்டமன்ற உறுப்பினர்கள், அந்த மாவட்டத்தில் இருக்கக் கூடிய பெரும் அதிகாரிகள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அங்கே சினிமா தியேட்டருக்கு இது வரையில் ரூ. 5,000-க்கு மேல் போக வில்லை. அந்த தியேட்டருக்கு இரண்டு முறை கவுன்சிலில் வைத்து ரூ. 7,000-க்கு குறைந்து கொடுக்கக் கூடாதென்று தீர்மானம் போட்டு அனுப்பி அது திரும்பி வந்து விட்டால் அந்த சேர்மனை மதிப்பார்களா? கலெக்டர் சேர்மனாக இருந்து எத்தனையோ முறை நகரீய மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியும், அதை திருப்பித் திருப்பி அனுப்புகிறார்கள் என்றால், அந்த மன்றத்தையே கலைத்து விட்டு உள்ளபடியே அதிகாரிகளை வைத்துக்கொள்ளலாம். எனவே இந்த மலைப்பகுதிகளுக்கு எப்படி ரோடுகளுக்கு ஒதுக்கு கிறார்களோ அதேபோல பெரியகுளம் பஞ்சாயத்து யூனியனில் காடு இருக்கின்றது. அதற்கும் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.



**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, விவாதத்தில் இருக்கின்ற உள்ளாட்சித் துறை மானியம், கதர், கிராம கைத்தொழில் சம்பந்தமான மானியங்கள் குறித்து நான் என்னுடைய ஆலோசனைகளை கூறுவதற்கு முன்வருகிறேன்.

கிராம கைத்தொழில் சம்பந்தமாக நம்முடைய மாநிலத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் அலுவலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். கதர் விற்பனையைப் பார்க்கிறபோது வருஷத்திற்கு வருஷம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இதன் காரணம், அரசாங்கம் முறையாக கதர் விற்பனைக்கு வேண்டிய சகலவிதமான ஏற்பாடு களையும் செய்துகொடுப்பதன் மூலமாக இம்மாதிரியான விற்பனைத் தொகை அதிகரித்துக்கொண்டு வருகிறது என்பதிலே நாமெல்லாம் மிகவும் சந்தோஷப்படுகிறோம். அதே சமயத்தில் மற்றொரு குறைபாடும் இருந்து கொண்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியனிலே வேலை செய்கிற வாத்தியார்கள், இதர சிப்பந்திகள் கதரை விற்றுத்தான் ஆகவேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இம்மாதிரியான குறைபாடுகள் இல்லாத அளவிற்கு அரசாங்கம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிராமங்களில் சர்க்கார் டெக்ஸ்டூல் ஆரம்பிப்பதன் மூலம் அதிகமான வேலை வாய்ப்புகளை அளிக்க முடியும் என்ற யோசனையை நான் சொல்லிக் கொள்கி றேன். சென்ற ஆண்டு கதர் வாரியத்தில் வேலை செய்தவர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்து தங்கள் குறைகளை அரசாங்கத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காக 70 பேர்களை நடவடிக்கை எடுத்து 40 பேர்களை வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் 30 பேர்கள் சஸ்பெண்டு செய்யப் பட்டு வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வேலைகொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கம் கூட தங்கள் சிப்பந்திகள் மீது நடவடிக்கை எடுத்து அவர்களை வேலை நீக்கம் செய்து வைத்திருந்தார்கள். இந்த ஆண்டு அவர்களுக் கெல்லாம் வேலை வாய்ப்பு அளித்திருக்கிறார்கள். அதுபோல நம்முடைய அரசும் இந்த 30 பேர்களுக்கும் வேலை வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து நிர்வாகம் சம்பந்தமாக சில யோசனைகளைச் சொல்லுகிறேன். பஞ்சாயத்து வேலைகள் இந்த ஒரு ஆண்டு காலமாக எந்த வேலையும் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். புதிதாக ஒருவேலையும் செய்யக் கூடாதென்று அரசாங்கத்தில் உத்தரவிட்டிருப்பதாக, மாநிலம் பூராவாக எப்படி இருந்தாலும், தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற கலெக்டர் ஒரு வேலையும் செய்வதற்கு அனுமதிக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதே தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆண்டுதோறும் பட்ஜட்டில் எவ்வளவு தொகை ஒதுக்கப் படுகிறதோ அந்த தொகை முழுவதையும் அந்த ஆண்டு

செலவழிக்கலாம். எந்த ஊராட்சி ஒன்றியங்களும் நிதி கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்களே தவிர நிதி செலவழிக்காமல் நிறுத்தப்படுகிறது என்றில்லை. சாதாரணமாக சில இடங்களில் சில சூழ்நிலைகள் காரணமாக தடைப்பட்டாலும் அந்த தொகையை வேறு இனங்களுக்கு மாற்றிக்கொள்வதற்கு வாய்ப்புத் தரப்படுகிறது. ஆகவே நிதி கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறதே தவிர, நிதியை செலவழிக்கக் கூடாதென்று எந்தவிதமான தடையையும் யாருக்கும் பிறப்பிக்கப்படவில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவரவர்களே, எங்களுடைய மாவட்டத்திலே இருக்கக் கூடிய எங்கள் பஞ்சாயத்து யூனியனை எடுத்துக் கொண்டீர்களானால், லட்சக் கணக்கான ரூபாய் பொது நிதியிலே இருந்தாலும், அந்தப் பொது நிதியிலிருந்து செலவு செய்ய வேண்டாமென்று கலெக்டர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். பல முறை டி.ஆர்.ஓ. அவர்கள் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம். அவர்களும் நான் கலெக்டரிடம் சொல்லிப் பார்க்கிறேன் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் கலெக்டர் அவர்கள், என்ன காரணத்தாலோ தெரியவில்லை, அந்த நிதியை எடுத்து செலவு செய்ய வேண்டாமென்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்கள். அப்படிப்பட்ட குறைகளை நீக்க வேண்டுமென்று நான் சொல்லுகிறேன். பணம் இருக்கிறது. பணத்தை எடுத்து அவர்கள் வேலை செய்ய வேண்டும். அதற்கு தடையாக இருக்கக் கூடாது. அரசின் பேரில் ஒரு தவறான எண்ணம் கூட ஏற்பட்டிருக்கிறது.

ஏதோ தேர்தல் வரப்போகிறது. தேர்தல் காலத்தில் அரசிற்கு சாதகமாக இல்லாதுபோனால் இம்மாதிரி ஒரு சூழ்நிலை ஏற்படும் என்ற நிலை ஏற்படுவதற்காக செய்திருக்கிறார்கள் என்ற பெரிய குற்றச்சாட்டை அரசின் மீது சொல்லக் கூடிய நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அம்மாதிரி இருந்தாலும், அதை ரத்து செய்து அவர்கள் தாராளமாக பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்தக் குடித் தண்ணீர் வசதிக்கு ஒதுக்கக் கூடிய தொகை மிகப் போதுமானதல்ல. அதற்கும் அதிகமான தொகை ஒதுக்க வேண்டும்.

பள்ளிக்கூடம் கட்டுவதற்குக் கூட அது வரையறுக்கப்பட்டு குறைவான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக அதிகமான பள்ளிக்கூடங்கள் நல்ல கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தாலும் ஆங்காங்கே இருக்கக் கூடிய குறைகளை நிவர்த்தி செய்து நல்ல கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



டிராக்டர்களைப் பொறுத்தவரையில் இப்போது இருக்கின்ற டிராக்டர்கள் போதுமானதல்ல. இப்போது தனியார்கள் டிராக்டர்கள் வாங்கி வைத்துக்கொண்டு விவசாயிகளிடம் அதிகமான தொகையை வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு யூனியனுக்கும் ஒன்றிரண்டு டிராக்டர்கள்தான் இருந்து கொண்டிருக்கிறது. டிராக்டர்கள் அதிகமாக யூனியன்களில் வாங்கி வைத்து, உழுவதற்கு விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டுமானால், ரொம்ப குறைவான கட்டணங்களில் கொடுத்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்த முடியும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதேபோல கால்நடைப் பராமரிப்புக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை ஆரம்பித்திருக்கக் கூடிய அந்த புதிய முறைகளெல்லாம் வந்தாலும் கூட அது போதுமானதல்ல. இன்னும் அதிகமாக கால்நடை மருத்துவ மனைகளை ஆரம்பித்து கால்நடைகளுக்கு வரக்கூடிய பிணியைப் போக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஆரம்பக் கல்வி சம்பந்தமாக சில வரையறுப்புகள் இருக்கிறது. அன்றைக்கே நாம் பேசுகிறபோது, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள், இப்போது இருக்கிற கணக்குப்படி 300 வீடுகளுக்கு ஒரு பள்ளி வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அதை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் அந்த 300 என்பது சாத்தியப்படாது. அதை குறைக்க வேண்டுமென்று நான் சொல்லுகிறேன். ஒரு 200 குடும்பங்கள் இருந்தாலும் கிட்டத்தட்ட 150, 200 குழந்தைகள் அங்கு இருக்க முடியும். ஆகவே 200 ஜனத் தொகை உள்ள தெருவிற்கு ஒரு ஆரம்பப் பள்ளி ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. ச. சிவசாமி:** தலைவரவர்களே, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்கு பின்னால் இந்த நாட்டில் வெள்ளையர்கள் காலத்தில் லார்டு ரிப்பன் அவர்கள்தான் உள்ளாட்சித் துறையை அமலுக்குக் கொண்டுவந்தார்கள். அன்றைய தினத்திலிருந்து 106 ஆண்டு காலமாக நகராட்சித் துறையில் வேலை செய்கின்ற அலுவலர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்க வேண்டும், அவர்களையும் மாநில சர்வீஸ் ஆக்க வேண்டுமென்று வெள்ளையர் காலத்திலிருந்து காங்கிரஸ்காரர்கள் ஆண்ட காலம் வரையில் நகராட்சி அலுவலர்ளர்கள் பலர் கோரிக்கைகள் கொடுத்தும், அதை நிறைவேற்றாத நிலை இருந்து வந்தது அந்த நிலையை மாற்றி, 106 சாதிக்க முடியாத ஒரு பெரும் சாதனை, நகர மன்ற, நகராட்சி ஊழியர்களுக்கு இந்த அரசாங்கம் ஓய்வு ஊதியம் கொடுக்க முன் வந்ததுடன், அவர்களை ப்ரொவின்ஷியலைசேஷன் ஆக்கிய நிலை நாட்டில் 100 நகராட்சி மன்றங்களில் வரவேற்கப்படுகிறது

என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அது இந்த 1970-71-ஆம் ஆண்டில் சட்டமாக ஆகின்ற நிலை இருக்கிறது. இன்றைய தினம் நகராட்சி மன்றங்களைக் கண்காணிக்கின்ற அலுவலகம் டைரக்டர் ஆப் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் என்று இருக்கிறது. அந்த டிபார்ட்மெண்ட் பொம்மை மாதிரி எந்தவிதமான அதிகாரமுமற்ற டிபார்ட்மெண்டாகத்தான் இருக்கிறது. சாதாரணமாக ஐயாயிரம் ரூபாய் அல்லது ஆறுயிரம் ரூபாய் வருமானம் வரக்கூடிய சிற்றூர் பஞ்சாயத்துக்களை, ஊராட்சி ஒன்றியங்களை நிர்வகிக்கின்ற டைரக்டர் ஆப் ரூரல் டெவலப்மெண்ட் டிபார்ட்மெண்டிலே இயக்குநர் இருக்கிறார் என்றால் அவருக்கு மாற்றுவதற்கு, தண்டனை கொடுப்பதற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் மதுரை, கோயம்புத்தூர் போன்ற ஐந்து கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் வரக்கூடிய நகராட்சிகளை தூத்துக்குடி, தஞ்சை போன்ற 60 லட்சம் ரூபாய் வருமானம் வருகின்ற நகராட்சிகளை நிர்வகிக்கின்ற டைரக்டர் ஆப் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் அவர்களுக்கு சாதாரண பியூனைக்கூட மாற்றுவதற்கு அதிகாரம் இல்லாத காரணத்தால், நகராட்சிகளை நேரில் வந்து பார்த்து பரிசீலனைசெய்யும்பொழுது அவர்களுடைய ஆணைக்குக் கட்டுப் படாத, பயப்படாத நிலைமைதான் இருந்து வருகிறது.

ஓய்வூதியம் கொடுப்பது, சர்விஸை புரவின்ஷியலைஸ் பண்ணுவது இவற்றிற்காகச் சட்டம் கொண்டுவரப்படுகின்ற நேரத்திலே இதையும் அரசினர் கவனத்தில்கொண்டு டைரக்டர் ஆப் முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் அவர்களுக்கும், மாற்று வதற்கு தண்டனை கொடுப்பதற்கு அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். அது இல்லாமல் நகராட்சி மன்றங்களுக்கும் உள்ளாட்சித் துறைக்கும் இடையிலே போஸ்ட் மாஸ்டர் அலுவலகம் மாதிரி அந்த டிபார்ட்மெண்ட் இருக்கக் கூடாது. அப்படிச் செய்யாமல்விட்டால் அது இருப்பதைவிட இல்லாமல் இருப்பதே, அதை எடுத்துவிடுவதே மேல் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே நீர்வழங்கல் திட்டத் திற்காக தொகை லைப் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் விளக்கியிருக் கிறார்கள். நான் தலைவராக இருக்கின்ற தூத்துக்குடி நகராட்சி மன்றத்திற்கு நாங்கள் 210 லட்ச ரூபாய்க்கு மனுச் செய்திருக்கிறோம். அதை 1970-71-ஆம் ஆண்டிற்குள் தமிழக அரசு வாங்கிக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக நகராட்சிகளில் அண்டர்கிரவுண்ட் டிரெய்னேஜ், குடிநீர் வழங்கல் போன்ற திட்டங்களுக்காக அந்த அந்த நகராட்சி மன்றங்களில் இருக்கின்ற சூப்பர்வைசர்கள், எஞ்சினியர்கள்தான் முழுவடிவம் கொடுத்துத் திட்டம் வகுக்கிறார்கள். ஒப்புக்குத்தான் பி.டபிள்யூ. டிபார்ட்மெண்ட்டிலே ஒப்பம் அளிக்கிறார்கள். இரண்டு கோடி மூன்று கோடி என்ற



அளவிற்குத் திட்டங்களைப் போடும் பொழுது சென்டேஜ் என்ற பெயரால் 3 லட்சம் ஆறு லட்சம் என்று நாங்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. நகராட்சி மன்றங்களிலே நிறைவேற்றப் படுகின்ற குடிநீர்த் திட்டமானாலும் சரி, அண்டர்கிரவ்ண்ட் டிரெய்னேஜ் திட்டமானாலும் சரி இந்த சென்ட்டேஜ் முறையை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ந்து வருகின்ற நகரங்களிலே இருக்கின்ற சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள அரசாங்கப் புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுக்கிறோம். குடியேறிவிடுகிறார்கள். நகராட்சி மன்றத்திற்குத் தீர்வையும் கொடுக்கிறார்கள். நாங்கள் தீர்வை கொடுக்கிறோம் ரோடு போடுங்கள், நாங்கள் தீர்வை கட்டுகிறோம் லைட் வசதி செய்து கொடுங்கள், நாங்கள் தீர்வை கொடுக்கிறோம் குடிநீர் வழங்கு திட்டம் தீட்டுங்கள் என்று கேட்கிறார்கள். நகராட்சி மன்றச் செலவில் ரோடு போடவோ, தண்ணீர் கொடுக்கவோ, மின்இணைப்புக் கொடுக்கவோ முன்வந்தால் சட்டம் குறுக்கிடுகிறது. ரோடு போட வேண்டுமென்றால் 5 சென்ட்டுக்கு 140 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லப் படுகிறது. அங்கே குடியிருப்பவர்களே ரோடு போட்டுக் கொள்ள முடியும் என்ற நிலைமையும் இருக்கிற காரணத்தினாலே, ரோடு வசதிகள் செய்ய முடியவில்லை. அவர்கள் தீர்வை கொடுக்கிறார்கள். ரோடு போடவேண்டும், குடிநீர் வழங்க வேண்டும், மின்வசதி கொடுக்க வேண்டும் என்ற நிலைமை வரும்பொழுது நகராட்சி மன்றமே முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ள முன்வரும்பொழுது அந்த பழைய பத்தாம்பசலிச் சட்டத்தை நீக்குவதிலே அரசாங்கத்திற்கு எந்தவிதமான பொருளாதாரப் பொறுப்பும் இல்லையாதலால், உடனடியாக அரசாங்கம் இதனைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தூத்துக்குடியிலே (மணி யடிக்கப்பட்டது).

**திரு. இல. பலராமன்** : தலைவர் அவர்களே, இந்த மானியங்களின் மீது என்னுடைய கட்சியின் சார்பிலே கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இயங்கக்கூடிய ஸ்தாபனம் ஒரு புனிதமான நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டது. எல்லாப் பகுதியிலும் இருக்கின்ற பிரிவினர்களைச் சேர்த்து ஒரு கூட்டு நிறுவனமாக அத்தனை பேர்களும் ஒன்றுகூடி அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற பெருநோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டது. கிராமங்களுக்குக் கொடுக்கக்கூடிய மானியங்கள் தொகைகள் குறைவாக இருப்பதால் வேலையில்லை என்று கூறி பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து நீக்கிவிடக்கூடிய நிலைமை மிகவும் பரிதாபகர மாக இருக்கிறது.

இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏதோ விஞ்ஞான சோஷலிஸம் என்று ஒன்றைக் கூறினார்கள். விஞ்ஞான சோஷலிஸம் என்று கூறிக் கொண்டு தமிழ்நாட்டிலே பெருவாரியான மக்கள் கிராமப் புறத்திலே இருக்கிற மக்கள்தான் அவர்களுக்கு அதிகமாக கொடுக்கக்கூடிய நிலைமை இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு ஆங்கிலேயன் காலத்திலிருந்து போதுமான வசதிகள் தருவதில்லை, பிற்பட்ட நிலைமையில்தான் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை வசதிக்கும், தொழில் வசதிக்கும் மொத்த ஒதுக்கீட்டில் பெருவாரியாக ஒதுக்கியிருக்கிறார்களா என்று பார்த்தால் மிக மிகக் குறைவாகத்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே விஞ்ஞான சோஷலிஸம் எங்கே என்பது தெரியவில்லை. எந்தத் துறையாக இருந்தாலும் கிராமங்களில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இருக்கிற மறுமலர்ச்சியைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்கள் நல்ல முறையிலே இயங்குகிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை.

ஜுன் மாதத்திலே தேர்தல் வரும் என்று கூறினார்கள். ஆனால் கட்சியின் சார்பாக தேர்தல் என்று சொல்கிறார்கள். கிராமங்களிலே கட்சியின் சார்பாக என்று சொன்னால் நிர்வாகம் எப்படி இருக்கும் என்பதை அதிகாரிகள் உணர்வார்கள், சிறு சண்டைக்கு கூட காரியங்கள் தடைபட்டுப் போகின்ற நிலைமை ஏற்பட்டு நிர்வாகம் நின்று போய்விடும். எனவே கட்சியின் பெயரால் தேர்தல் என்ற நிலைமை இல்லாமல், நியாயமாக இருப்பவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். கட்சியின் பெயரால் தேர்தல் நடத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

பஞ்சாயத்து அலுவலகங்களுக்குக் கட்டடம் இன்றுவரையில் இல்லாத நிலைமைதான் இருக்கிறது. பல கோரிக்கைகள், பல மாநாடுகள், போட்டு நிறைவேற்றினாலும் கூட நிலைமை மாற வில்லை, அப்படியேதான் இருக்கிறது. அரசாங்கம் இதிலே ஆவன செய்ய வேண்டும்.

பள்ளிகளைப் பொறுத்தவரையில் பழைய ஆஸ்ரமப் பள்ளிகள் நிலைமையில்தான் இருக்கின்றன. கட்டிட வசதிகள் கிடையாது. அதற்காக ஏதோ ஒரு குழு ஊராட்சி கல்வி நிதி மதிப்பு ஆய்வுக் குழு ஒன்று அரசாங்கத் தரப்பிலே போடப்பட்டதே அந்தக் குழு என்ன சிபாரிசுகளைச் செய்தது, அரசாங்கம் அவற்றை ஏற்றுக் கொண்டதா என்ன என்பதெல்லாம் தெரியவில்லை. அந்தக் குழுவின் சிபாரிசுகளையும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜனத்தொகை அடிப்படையிலே கல்வி நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாணவர்களுக்கு ஒரு தலைக்கு ஏழரை ரூபாய் என்ற அளவிற்கு ஒதுக்கினால் நலமாக இருக்கும்



என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கட்டடங்களுக்கு என்று பெருவாரியாக தொகை ஒதுக்கீடு செய்ய வேண்டும். பள்ளிகளில் கட்டடங்கள் இல்லாததால் பிள்ளைகள் கீழே உட்காரக்கூடிய நிலைமை இருக்கிறது. பஞ்சாயத்து மூலமாக அவர்களுக்கு வேண்டிய உபகரணங்கள் வாங்குவதற்கு முடியவில்லை. எனவே அந்த உபகரணங்களை வாங்குவதற்கு என்று அரசாங்கம் மேச்சிங் கிராண்ட் கொடுக்க வேண்டும்.

சமூகக் கல்வி நிதியிலே ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை போதாது என்பதைக் கூறிக்கொண்டு பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிற ஏரிகள் இவற்றிற்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற பராமரிப்புத் தொகை மிக மிகக் குறைவு. பாசனக் கால்வாய்கள் குடிமராமத்து செய்யமுடியாத நிலைமை இருப்பதால், அரசாங்கமே அந்தப் பணியை அரசாங்கப் பணியாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மாதர் நலக் குழு என்ற ஒன்று இருக்கிறது. அதனால் தற்போது பெரும் இழப்புத்தான் அரசுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. கிராமப் பெண்கள் எப்படி வாழ்க்கையில் முன்னேற வேண்டும், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டும், என்பதற்கான முறையில் சமூக நல ஊழியர்கள் நல்ல முறையில் பாடுபட்டு அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதோடு கூட அவர்களுக்கு வேலை வாய்ப்பையும் உண்டாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

* **திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைப் பேச விரும்புகிறேன்.

நகரசபைகளைப் பொறுத்தமட்டில் எப்படி நாங்கள் மாகாண சர்க்காரிடம் கடன்பட்டு மிகுந்த அவதிக்குள்ளாகிக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுவாக, தண்ணீர்த் திட்டத்திற்காக 51 லட்ச ரூபாய் வாங்கியிருக்கிறோம். அதற்கு அரசாங்கம் என்ன வட்டி வாங்குகிறது? 1967–68-ல் ஆறே முக்கால் பர்சன்ட்; 1969–70-ல் ஏழு பர்சன்ட். நாங்கள் வாங்கிய கடனை எல்லாம் பி.எச். டிப்பார்ட்மெண்டில் டெபாசிட் செய்ய வேண்டுமென்று ஆர்டர் போட்டிருக்கிறார்கள். பி.எச். டிப்பார்ட்மெண்டில் டெபாசிட் செய்தால் வட்டி கிடையாது. கடன் தொகை சாங்ஷன் செய்வதும் வருஷக் கடைசியில் சாங்ஷன் செய்யப்படுகிறது. வருஷக் கடைசி வரையில் பி.எச். டிப்பார்ட்மெண்டில் இருந்து எடுக்கப்பட்டு செய்யக்கூடிய வேலைகள் எந்த விதத்தில் இருக்கிறது என்றால், அவர்களுடைய பணத்தைப் போட்டுச் செய்வதால் காலதாமதத்தை முன்னிட்டு 9 சதவிகித வட்டியைப் போட்டு வாங்குகிறார்கள். சென்டேஜ் சார்ஜஸ் என்று எக்கச்சக்கமான பணம்—மூன்று சதவிகிதம் இருக்கும் என்று கருதுகிறேன்—வாங்குகிறார்கள். இதைக் கொஞ்சம் விவரமாகச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. எ. அ. சுப்பராஜா] [1970 மார்ச் 23

'Rate of interest charged by the Government for the loans sanctioned to the Municipal Council is as follows.—'

1967-68-ல் 6¾ பர்சன்ட், 1968-69-ல் 7 பர்சன்ட், 1969-70-ல் 7 பர்சன்ட்

Rate of interest on deposits made by the Municipal Councils sanctioned by the Government'

4½ சதவீதம் எங்களுக்கு கொடுத்திருக்கிறார்கள்.

'Loans are being sanctioned by the Government for the execution of water supply scheme only at the close of every year. As soon as the loan amount is drawn, it is deposited to the Executive Engineer (Public Health),'

அதற்கு இன்டரஸ்ட் உண்டா இல்லையா என்றால், முனிசிபாலிடிக்கு இன்டரஸ்ட் இல்லை. பப்ளிக் ஹெல்த், எஞ்சினியரிங் டிப்பார்ட்மென்ட் எவ்வளவு க்ளெய்ம் பண்ணுகிறார்கள்?

'The Public Health Engineering Department is claiming interest at 9 per cent for the expenditure made in excess of the amount deposited by the Council every year. The interest claimed by the Public Health Engineering Department for the last 3 years. . .' எங்களுடைய நகரசபையைப் பொறுத்தமட்டில் மொத்தமாக ரூ. 20,035.81. அதே நேரத்தில்—

'Besides the above, a total amount of interest of Rs. 32,800–85 has been claimed by the Public Health Department, for the excess expenditure made for the year 1959–60 to 1964–65 for which Government have been addressed.'

'If the loan is sanctioned by the Government sufficiently in advance or if the entire loan amount is placed at the disposal of the Public Health Department the claiming of interest by the Public Health Engineering Department for the excess expenditure can be avoided.'

அதே மாதிரியாக—

'The total amount of simple interest paid for the loans obtained for water supply scheme ராஜபாளையம் முனிசிபாலிடியை பொறுத்தமட்டில் 1966—67, 1967—68, 1968—69 க்கு மொத்தமாக ரூ. 6,21,061.55.

'No interest is being paid by the Public Health Engineering Department for the amount deposited by the Municipal Council for the water supply scheme' சென்டேஜ் சார்ஜை சேர்த்துப் பார்த்தால் நாங்கள் பெரிய சிக்கலில் அகப்பட்டுக்கொண்டு முழித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே நேரத்தில் மத்திய சர்க்கார் வேறு இடங்களிலிருந்து பணத்தைப் பெற்று மாநில சர்க்காருக்குக் கொடுக்கும்போது வட்டி வாங்குவதைப் பற்றிய முறையின்மீது அவர்களிடம் சண்டை போடுகிறார்கள். நம்முடைய மாகாண சர்க்காருக்கு அதே போன்று லோகல் பாடீஸ் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது நன்றாகத் தெரியும்.



1970 மார்ச் 23] [திரு. எ. அ. சுப்பராஜா]

இதற்காக என்ன சொல்லுகிறேன் என்றால்—

Flow of resources from the Local Bodies to the States goes entirely towards the repayment of the debts to the State. So, I press for the appointment of a Debt Commission to look into the entire question with a view to rationalise the pattern of lending and repayment. இதிலே முக்கியமாக அமைச்சர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

'Sanitary and Other Urban Works—Constitution of a separate Department of Public Health Engineering and Municipal Works—Orders passed. .'

ஜி.ஓ. நம்பர் 1500-ல் ஆர்டர் பாஸ் ஆகியிருக்கிறது. 1962-ம் ஆண்டே போடப்பட்டும் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. எல்லா நகரசபைகளிலும் இதே நிலைமைதான். இதைப்பற்றி உறுப்பினர்கள் மேத்தா அவர்களும், சிவசாமி அவர்களும் விவரமாகச் சொன்னார்கள். ப்ரொவின்ஷியலிசேஷன் வந்த பிறகு எல்லா அதிகாரங்களையும் நீங்கள் வைத்துக் கொண்டிருக்கக் கூடிய நிலையில், யார் மீதாவது தவறு இருந்தால், மாற்றலாம். ஆனால், தப்புச் செய்யாதவர்களையும், சாதாரணமாக மாற்றும் நிலைமை வந்திருக்கிறது. நகரசபைத் தலைவர்களையே எடுத்துவிட்டு அதிகாரிகளைப் போட்டே நடத்திக் கொள்ளலாமே. எதற்காக தமிழ் நாடு சட்டத்தைக் கொண்டு வரும்போது செலக்ட் கமிட்டிக்கு விட்டு பரிசீலிக்க வேண்டும்? எப்படி மத்திய சர்க்காரிடத்தில் மாகாண சர்க்கார் குறைபட்டு கமிஷன் போட வேண்டுமென்று கூறியிருக்கிறார்களோ அதைவிட மேலாக இதைக் கவனிக்க வேண்டும். மேலும், கடன் வாங்கப்பட்ட எங்கள் தொகையை உடன் P. H. Dept.-ல் போடச் சொல்லி உத்தரவு இட்டு அது மீண்டும் Consolidated Fund வந்து விடுகிறது. ஆதலால், வட்டி வசூலில் 'வியாபாரம்' மாதிரி சர்க்கார் இருக்கிறது. இதற்கு உடனடியாக நிவாரணம் காண வேண்டும், பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

## (3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஈ) முதலமைச்சர் கூறாத ஒரு கூற்றை அவர் கூறியதாகத் திரு. க. ர. நல்லசிவன் கூறியது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுவதற்கு முன்பு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் மாதவன் அவர்கள் எழுப்பிய ஒரு பிரச்சினைக்கு இங்கே விடை கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய அறையில் மறுக்கப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப்பற்றி அவையிலே விளக்கம் பெற எழுந்த மதிப்பிற்குரிய உறுப்பினர் நல்லசிவம் அவர்கள் தன்னுடைய கருத்துக்களுக்கிடையே இரண்டொரு தொடர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒன்று 'முதலமைச்சர் இங்கே பேசும்போது எங்களுக்கு மாசு

கற்பிக்கும் முறையில் பேசியிருக்கிறார்கள் என்பது ஒரு தொடர்
இரண்டாவது, முதலமைச்சர் அவர்கள் 'எங்களை நிலச்சுவான்
தார்கள் கையாட்களாக உபயோகித்தார்கள்' என்று சொல்லியிருக்
கிறார்கள் என்பது இரண்டாவது தொடர். இந்த இரண்டு விதமான
சொற்றொடர்களை இந்த அவையில் மாண்புமிகு நல்லசிவம் அவர்கள்
சொன்னார்கள். அப்போது மாண்புமிகு தொழில் அமைச்சர்
அவர்கள் குறிக்கிட்டு 'முதலமைச்சர் அவர்கள் சொல்லாத ஒன்றை
இங்கே சொல்லியிருக்கிறார்கள்; இதற்குத் தங்களுடைய தீர்ப்பை
வழங்க வேண்டும்' என்று கேட்டார்கள். நான் அப்போதேகூடச்
சொன்னேன். 'முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் அந்த
அறிக்கையை அளிக்கும் நேரத்தில் உறுப்பினர் அவர்கள் இல்லை;
அவர்கள் என்ன பேசினார்கள் என்பதைக் கேட்க வாய்ப்பு இல்லை;
எனவே அவர்கள் பேசியதன் நகலைக் கேட்டால் கொடுக்கிறேன்,
அதைப் பார்த்துவிட்டு மேலே உங்கள் கருத்தைக் கூறலாம்' என்று
நான் கூறினேன். அவர் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல்
மீண்டும் அந்த நிலையிலேயே இருந்து விட்டார்கள். அன்று முதல
மைச்சர் அவர்கள் அவையில் கொடுத்த அறிக்கையை நானும்
பார்த்தேன். அதிலே மாண்புமிகு உறுப்பினர் நல்லசிவம் அவர்கள்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது சாட்டியிருக்கும் குற்றச்
சாட்டுக்கு எங்காவது இடம் இருக்கிறதா என்று பார்த்தேன்.
அதற்கு இடம் இல்லை என்பது மட்டுமல்ல; மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுக்குப் பெருமை தரக்கூடிய வகையிலேதான் அவர்கள்
அறிக்கையை அளித்திருக்கிறார்கள் என்பது மிகத் தெளிவாகத்
தெரிகிறது. அவரைப் பற்றிக் குறிப்பிடக்கூடிய பகுதியை மட்டும்
படித்துக் காட்டுகிறேன்.

"இதிலே கைது செய்யப்பட்டிருப்பவர்கள் யார் யார்
என்று பார்த்தால் குறிப்பிட்ட சில எம்.எல்.ஏ.-க்களைத் தவிர,
சில முற்போக்குக் கட்சிக்காரர்களைத் தவிர பெரும்பாலான
மற்றவர்கள் இந்த மின் கட்டணத்தால் பாதிக்கப்பட்டவர்களா
என்று பார்க்கும்போது மன்றாடியார், சமத்தூர் ஜமீன்தார்,
வேட்டைக்காரன்புதூர் ஜமீன்தார், பாளை ஜமீன்தார் ஆகிய
இவர்கள்தான்—பாவம், இந்த ஏழைகள் இந்த மின் கட்டண
உயர்வால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்
காக உள்ளபடியே நான் வருந்துகிறேன்".

என்றுதான் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆக,
இந்தத் தொடரில் இருந்து குறிப்பிட்ட சில எம்.எல்.ஏ.-க்கள், முற்
போக்குக் கட்சிக்காரர்களைத் தனியாகப் பிரித்துவிட்டு பெரும்
பாலான மற்றவர்கள் மின் கட்டணத்தால் பாதிக்கப்பட்டவர்களா
என்று சொல்லும் வரிசையில் சில ஜமீன்தார்களைக் குறிப்பிட்டு,
அவர்கள் இந்த மின் கட்டணத்திற்காக இப்படிப்பட்ட ஒரு
போராட்டத்தைத் துவக்கியிருப்பதற்காக வருந்துகிறேன் என்று
தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்



ஆகவே, இதில் அவர்கள் இழித்துக் கூறவில்லை. மாறாக அவர்
களுக்கு ஒரு பெருமையான ஒரு இடத்தைத்தான் அளித்திருக்கி
றார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

அடுத்து, 'கம்யூனிஸ்ட் கட்சி அங்கே இணையவில்லை. பி.எஸ்.பி.-
யும் மற்ற சில முற்போக்குக் கட்சிகளும் அங்கே இணைந்திருக்
கின்றன என்றாலும் இதிலே மற்றவர்கள் கலந்து கொண்டிருப்ப
தற்கு முக்கிய காரணம் உச்சவரம்புச் சட்டம் . . .' என்று இந்த
உச்சவரம்புச் சட்டம் காரணமாக கலந்து கொண்டிருக்கிறார்கள்
என்ற குற்றசாட்டை மற்றவர்கள்மீது சாட்டியிருக்கிறார்களே தவிர
முதல் அமைச்சர் அவர்கள் பி.எஸ்.பி.-யையும் மற்ற முற்போக்குக்
கட்சிகளையும் அங்கே இணைக்கவில்லை என்பது அவர்களது அறிக்கை
யிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. ஆகவே இவ்வளவு தெளிவாக
அவர்களை உயர்வான நிலையில் வைத்துக் கூறியிருந்தும் அதைப்
பார்க்காத காரணத்தாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ
மாண்புமிகு உறுப்பினர் நல்லசிவம் அவர்கள் இங்கு முதல்
அமைச்சர் அவர்கள் மாசு கற்பிக்கும் முறையில் பேசியிருக்கி
றார்கள் என்று சொல்லியிருப்பதும், முதல் அமைச்சர் அவர்கள்
எங்களை நிலச்சுவான்தார்கள் கையாள்களாக உபயோகித்திருக்கி
எங்களை நிலச்சுவான்தார்கள் கையாள்களாக உபயோகித்திருக்
கிறார்கள் என்று சொல்லியிருப்பதும் இருக்கிற நிலையைக் கூறாது
றத்திலேயே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூறியதை
இந்த மன்றத்திலேயே திரித்துக் கூறியிருக்கிற ஒரு நிலை ஏற்பட்டி
ருக்கிறது. இது மிக மிக உறுதியாக, உரிமை மீறிய நிகழ்ச்சி
யாகும் என்பது மிகத் திட்டவட்டமாகத் தெரிகிறது. மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் இப்போது இல்லை என்ற
காரணத்தினால் அவர்கள் இதற்கு ஏதாவது விடை அளிக்கக்கூடிய
அளவிற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்ற காரணத்திற்காக
அவர்களுக்கு ஒரு வாய்ப்பளிப்பதற்காக இதன்மீது எந்தவிதமான
முடிவும் இப்போது நான் எடுக்கவில்லை என்பதை மட்டும் தெரிவித்
துக்கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஸார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நோ பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.
உங்களைப்பற்றி ஒன்றும் இல்லை. பி.எஸ்.பி.-யும் மற்ற சில முற்
போக்குக் கட்சிகளும் அங்கே இணைந்திருக்கின்றன என்று உங்களை
சிறப்பாக வைத்துத்தான் மற்றவர்கள் கலந்து கொண்டிருப்ப
தற்குக் காரணம் உச்சவரம்புச் சட்டம் என்று சொல்லியிருக்கிறார்
தவிர உங்களை அவர்களோடு இணைக்கவில்லை. உங்களுக்கு அந்தக்
காரணம் கற்பிக்கப்படவில்லை.

**திரு. பி. வேலுசாமி:** இது பத்திரிகைகளில் வந்த செய்தி . . . .
தினமணி . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்தப் பத்திரிகையையாவது எடுத்துக்கொண்டு எந்த உறுப்பினராவது எதையாவது காட்டுவது என்பது முறை அல்ல. பத்திரிகைகளைக் காட்டும்போது தவருன நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருந்தால், உரிமை மீறிய நிகழ்ச்சி வந்திருக்கிறது என்ருல் அதை என் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அப்போது உங்களுக்கு வாய்ப்பளிக்க முடியும். நேரம் இல்லாத நேரத்தில் முறையில்லாத முறையில் எழுந்து பேசுவது முறையாகாது.

திரு. கே. என். குமாரசாமி : கோவை ஜில்லா விவசாய சங்கத்திலிருந்து முதல் அமைச்சர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் மின்சார போர்டுக்கும் மகஜர் கொடுக்கப்பட்டது. மின்சாரக் கட்டண குறைப்பு, கடன் ஒத்திவைப்பு ஆகிய இரண்டிற்காகவும் தான் போராட்டம் நடந்தது. அதில் பட்டகாரர் கலந்து கொண்டாலும் இந்த அடிப்படையில்தான் கலந்துகொள்ள வேண்டும். யாராக இருந்தாலும் இந்த அடிப்படையில் கலந்தவர்களே தவிர நில உச்சவரம்புச் சட்டத்தை எதிர்ப்பதற்குக் கலந்தவர்கள் அல்ல என்பதைச் சொல்வதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளக்கத்தை அப்படியே ஏற்றுக் கொள்கிறேன். மன்ருடியார் அவர்களுக்காக வக்காலத்து வாங்கியதற்காக மன்ருடியார் அவர்கள் சார்பில் நன்றி கூறிக் கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : மன்ருடியார் அவர்களுக்காக வக்கால்த்து வாங்குவதாக என்று சொன்னுல் என்ன அர்த்தம் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்லசிவம் அவர்கள் ஒன்றைச் சொன்ஞர்கள். இருக்கிற நிலைமை, முதல் அமைச்சர் அவர்கள் சொல்லாததைச் சொல்லியிருக்கிருர்கள் என்பதுதானே தவிர கோவையில் என்ன நடந்தது, எந்தக் காரணத்திற்காகப் போராட்டம் நடந்தது என்பதல்ல அவை முன்னுல் இருக்கிற விவாதம். இப்போது சொல்வதெல்லாம் இந்த அவையில் சற்று நேரத்திற்கு முன்பு மதிப்பிற்குரிய உறுப்பினர் நல்லசிவம் அவர்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் மீது சாட்டிய குற்றச்சாட்டு ஆதாரமற்றது. அவர்கள் இந்த அவையில் கூறியதைத் திரித்துக் கூறியிருக்கிருர் என்பதற்காக ஒரு நிகழ்ச்சியை மட்டும் கூறியிருக்கிறேனே தவிர போராட்டம் பற்றிய காரண காரியங்களை விவாதிப்பதற்கல்ல. அதைப்பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையின் கவனத்திற்கு, முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானுல் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்கு இது நேரம் அல்ல. அடுத்து, திரு. கருத்திருமன் அவர்கள் . . .



திரு. கே. என். குமாரசாமி: வக்காலத்து என்று சொன்ஞர்கள். அதை எப்படிச் சொல்ல முடியும்? இப்படிச் சொல்லுவது சரிதானு ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்போது பேசுவார்கள்.

## 7. 1970–71-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. பி. ஜி. கருத்திருமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சி சார்பாகக் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கதர் தொழில் வளர்ச்சிக்காக ரூ. 18,11,000-ம் கிராமத் தொழில் வாரியத்திற்காக ரூ. 11,00,000-ம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கதர்த் தொழில் என்பது கிராம மக்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாகும் என்றும் அவர்களுக்கு அது வரப்பிரசாதமான தொழில் என்றும் சொன்னுல் அது மிகையாகாது. காங்கிரஸ் சார்பில் தேசப் பிதா மகாத்மா காந்தி அடிகளால் கிராம மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் என்றும் கிராமங்களில் உள்ள ஏழை எளிய விவசாய மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னுல் ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும் இந்தக் கதர் திட்டம். அது இப்போது நல்ல முறையில் வளர்ந்து அபிவிருத்தி கண்டிருப்பது பற்றி என் மகிழ்ச்சியைத் தெரிவிக்காமல் இருக்க முடியாது. இதே மன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை ஏற்ற சமயத்தில் மதிப்பிற்குரிய மறைந்த முதல் அமைச்சர் அவர்கள், திரு. அண்ணுதுரை அவர்கள் Khadi is an economic impossibility என்று சொல்லியிருக்கிருர்கள். பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டமான, பொருளாதார அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலை என்று சொல்லியிருந்தாலும் கூட அதற்குப் பின்னுல் உள்ள நிலைமையைப் பார்க்கும் போது இது மக்களுக்கு எவ்வளவோ நன்மை பயக்கிறது என்பதைப் பார்த்து சர்க்கார் புனர்பரிசீலனை செய்து கதர்த் திட்டத்தில் மீண்டும் அக்கறைக் காட்டியிருப்பதற்காக என் நன்றியைத் தெரிவிக்காமல் இருக்க முடியாது. முன்பு இருந்ததை விட இப்போது அதிகமாக விற்பனையாகி இருக்கிறது என்றெல்லாம் சொல்கிருர்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்ருல், எங்கள் கதருக்கு எவ்வளவு காந்த சக்தி இருக்கிறது, மனம் மாறியிருப்பவர்களைக் கூட மாற்றக் கூடிய பெரும் சக்தியை இது பெற்றிருக்கிறது என்பதற்கு வேறு உதாரணம் வேண்டுமா ? அப்படிப்பட்ட மனமாற்றத்தைச் செய்திருக்கிறது கதர். அது இன்னும் அதிக மனமாற்றத்தை அவர்களிடையே கொண்டு வந்து விடும் என்பதில் சந்தேகம் கிடையாது.

சில சமயங்களில் அறிவு வளர வளர சில காரியங்களைச் சரிக்கட்டிக் கொள்ளும் சூழ்நிலை ஏற்படும். அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட கதர் உடுத்திக் கொண்டிருக்கிறார்கள். கதரின் மேல் உள்ள நம்பிக்கை அதிகமாகி வருவதைக் குறித்துப் பாராட்டுகிறேன்.

அப்படியிருந்தாலும் இந்தச் சர்க்கார் கதருக்கும், கிராமக் கைத் தொழில்களுக்கும் ஒதுக்கியிருக்கும் பணம் போதாது. 11 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இதில் ஆடிட் செய்வதற்கு ஏழு எட்டு லட்ச ரூபாய் செலவாகிறது. ஆகவே இந்த கிராமக் கைத்தொழில்களுக்கு அல்லது கதர் வளர்ச்சிக்குக் கிடைப்பது ஒரு சில லட்சமே தவிர வேறு அதிகமாக இல்லை. சென்ட்ரல் காதி போர்டிலிருந்து வரும் பணத்தை வைத்துக் கொண்டு இந்தச் சர்க்கார் அதிகமாக விற்பனை செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். குறைந்தது ஒரு கோடி அல்லது இரண்டு கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கிவைப்பார்களானால் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஒரு கோடி ரூபாய் இதற்காக ஒதுக்குவார்களேயானால் சுமார் 30,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஆனால் ஒரு கோடி ரூபாய் ஒரு டெக்ஸ்டைல் மில்லுக்கு ஒதுக்குவார்களானால் 300 பேர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு கிடைக்கும். ஒரு ரூபாய்க்குக் கதர் விற்பனை செய்தால் 63 பைசா ஸ்பின்னர்ஸ்க்கும், வீவெர்ஸ்க்கும் போய் சேரும். அதே நிலையில், மில்லிலே கொடுத்தால் அவர்களுடைய தொழிலுக்குப் பாதகமாக இருக்கும். 4 அணாகூட இருக்க முடியாது. ஆகையால் எந்தத் தொழிலில் சர்க்கார் அக்கறை கொண்டிருந்தாலும், கிராமத்திலிருக்கும் வேலையில்லாப் பிரச்சினை தீர, இன்னும் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்க வேண்டும். அப்பொழுதுதான் கிராமங்களில் வேலை வாய்ப்பிற்கு அதிக சந்தர்ப்பம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கிராமக் கைத்தொழிலானாலும் சரி, குடிசைத் தொழில்களாகயிருந்தாலும் சரி, அவைகளுக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் கொடுக்க வேண்டும். சில பொருள்களுக்கு ஒதுக்கிவிட வேண்டும். எப்படி கைத்தறிக்கு கரை போட்ட சேலை என்று ஒதுக்கி வைத்திருக்கிறதோ, அதைப்போல், கிராமத் தொழில்கள் மூலம் செய்யும் பொழுது சில பொருள்களை, வேறு இயந்திரங்கள் மூலம் செய்யக் கூடாது என்று தடை விதிக்க வேண்டும். அப்பொழுதுதான் கிராம, குடிசைத் தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்கள் எல்லாம் மக்கள் வாங்கி உபயோகப்படுத்தக்கூடிய நிலை இருக்கக் கூடும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கிராமங்களில் எண்ணெய் ஆட்டுதல், இன்னும் பாக்கியிருக்கும் சிறு சிறு கைத் தொழில்கள் இருக்கின்றன. அவைகளைக் கிராமக் கைத்தொழிலுக்கே ஒதுக்கிவிட வேண்டும். அதில் வேறு போட்டி என்று வந்தால், இயந்திரங்கள் மூலம் போட்டி வந்தால் தாங்க முடியாது. அதற்கு சப்சிடி கொடுக்க வேண்டியிருக்கும். மானியம் அதிகமாகக் கொடுக்க வேண்டியதாயிருக்கும். ரூரல் எகானமியும், அர்பன்





எகானமியும் கலந்து இருக்க வேண்டும். இரண்டையும் போட வேண்டும். கிராமத்தைச் சேர்த்துச் செய்தால் மிகக் கஷ்டமான சூழ்நிலை இருக்கும். இது வளர முடியாது. அர்பன் எகானமி வளர முடியாது. தனித் தனியாகப் பிரித்து, கிராமத்தில் உற்பத்தியாகும் பண்டங்கள் என்று தனியாகப் பிரித்துச் செய்தால், மிகவும் நல்ல முறையில் வளர்ந்தோங்கச் சந்தர்ப்பம் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஆடிட் ஆண்ட் அக்கவுண்ட்ஸ் என்று கணக்குப் பார்ப்பதற்கே முக்கால்வாசிப் பணத்தைச் செலவழிப்பது சரியல்ல என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கம்யூனிட்டி டெவலப்மெண்ட் ப்ராஜெக்ட்ஸ், பப்ளிக் ஒர்க்ஸ் பற்றி அடுத்த மானியம் இருக்கிறது. சுதந்திரம் பெற்ற பிறகு கிராமத்திலே எல்லாவிதமான சௌகரியங்களும் ஏற்படச் செய்ய வேண்டுமென்பதற்காக கம்யூனிட்டி டெவலப்மெண்ட் ப்ராஜக்ட் அப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது. ரூரல் டெவலப்மெண்ட் என்றும் பஞ்சாயத்து யூனியன்கள் என்றும் ஏன் ஏற்பட்டது? பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும், கிராமத்திலே அதிக சுகாதார வசதி பெருக வேண்டும், விவசாய உற்பத்தி பெருக வேண்டும் என்று இப்படிப்பட்ட நோக்கத்தோடு இவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவைகள் ஆரம்பிக்கப்பட்டதே தவிர, அது அடைந்த எல்லை என்ன? நிலை என்ன என்று பார்த்தால், அந்த நிலையை அடைந்துவிட்டதாகக் கூற முடியாது. ஆனால் சொல்லிவிடுவார்கள். இது ஒரு பழக்கமாகப் போய் விட்டது. நான் முதலிலேயிருந்தேதான் சொல்லுகிறேன், நாம் போட்ட திட்டங்கள், நாம் எதிர்பார்த்த லட்சியம் பலயிடங்களில் முடிக்கப்படவில்லை.

பஞ்சாயத்து யூனியன்களுக்கு அமைச்சர்கள் போனால் திறப்பு விழா செய்யவும், மூடுவிழா செய்யவும்தான் பயன்படுகின்றன. அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் வரவேண்டியது, பிளாக்கிற்கு அஸ்திவாரம் போட வேண்டியது, திறப்பு விழா செய்யவேண்டியது இதுதான் தொடர்ந்து நடக்கிறது. டெல்லியிலிருந்து திரு. எஸ். கே. டே என்பவர் என் பகுதியில் வந்து பார்த்தார். அப்பொழுது பிராக்டிகலாக என்ன நடந்திருக்கிறது என்று கேட்டார். பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக் கொண்டால், நிறைய எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள், அவர்கள் இவர்கள் என்றுதான் அதிகமாக இருக்கிறார்கள். மக்களுக்கு அவர்களைப் பார்த்தவுடனே ஒரு அதிர்ச்சி, அலர்ஜி மாதிரி இருக்கிறதே தவிர, மக்களோடு பழகி சேவை செய்யும்படியான நிலையில் அவர்கள் இருக்கிறார்களா என்றால் இல்லை. அதிக வேலை வாய்ப்புக்காக அதிகாரிகளாக இருக்கிறார்களே தவிர, மக்களின் நல்லெண்ணத்திற்காக இருக்கும் நிலை கிடையாது.

ஜீப்பு கொடுத்து விடுகிறார்கள். அந்த ஜீப்புகளின் வேலை என்ன? அதற்கு ஆகும் செலவு என்ன? பாராளுமன்றத்தில், மறைந்த

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்னார்கள், பஞ்சாயத்து யூனியன்களில் உருப்படியாக வேலை நடக்க வேண்டுமென்றால், ஜீப்புகளைப் பிடுங்க வேண்டும், அப்பொழுதுதான் வேலை நடக்கும் என்று சொன்னார்கள். முன்பு 10, 20 வருஷங்களுக்கு முன்னால் ஒரு தாசில்தார் இருந்தார், அவர்கள் செய்து கொண்டிருந்த வேலையை இப்பொழுது நான்கு பஞ்சாயத்து யூனியன்கள்கூட செய்ய முடியாமலிருக்கிறது. வீண் விரயம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அனாவசியமாக சினிமாவிற்குப் போக, மற்றும் தவறாகப் பயன்படுத்த ஜீப்புகள் பயன்படுகின்றனவே தவிர, நல்ல முறையிலே பயன்படுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல முடியும். உடனே பழைய கால சரித்திரத்தைச் சொல்லுகிறேன் என்று சொல்லுவார்கள். அதையும் சேர்த்துத்தான் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது வேலை என்னவென்றால் அமைச்சர்கள் போனால் பழைய கல்லை எடுத்துவிட்டு புதிதாகக் கல்வைக்க வேண்டுமென்று கட்டுவது சுண்ணாம்பு அடிப்பது ஆகிய வேலைகளுக்குத்தான் இருக்கின்றன. கட்டட வேலைகள் முடிந்து விட்டன. அதிகாரிகள் ஏற்படுவதைத் தவிர, பஞ்சாயத்து யூனியன்களில் வேறு எந்தவிதமான வேலையும் கிடையாது.

எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள்தான், விஸ்தரிப்பு அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். பஞ்சாயத்துக்கு ஒரு விஸ்தரிப்பு அதிகாரி, விவசாயத்திற்கு விஸ்தரிப்பு அதிகாரி என்று அதிகாரிகளின் விஸ்தரிப்புதான் ஆகியிருக்கிறது. எப்படிச் சட்டம் கொண்டு வந்தால், அமெண்ட்மெண்ட் ஜாஸ்தியாக போவதைப்போல், அதிகாரிகள் விஸ்தரிப்புதான் அதிகமாக இருக்கிறது. அதிகாரிகள் விஸ்தரிப்பே தவிர, மக்களுக்கு விஸ்தரிப்பு கிடையாது. உதாரணமாக விவசாய விஸ்தரிப்பு அதிகாரி என்று வைத்துக்கொள்வோம். விமானத்திலேயிருந்து மருந்து தெளிக்க வேண்டுமென்றால், எங்கள் பக்கத்திலே இரண்டு முறை விஸ்தரிப்பு அதிகாரிகள் வந்து, ஏரியல் ஸ்ப்ரே பண்ணினார்கள். அந்தத் தேதி அவர்களிடத்தில் இருக்குமல்லவா? இப்பொழுதும் அதேபோல் செப்டம்பர் அக்டோபர் மாதத்தில் வந்து செய்ய வேண்டியதுதானே. ஆனால் நவம்பர் மாதம் வந்து கேட்டார்கள். விஸ்தரிப்பு அதிகாரிக்கு என்ன வேலை? கேட்டால் எங்கள் ஊரில் வேண்டாமென்று சொல்லுகிறேன். உடனே, பார்த்தீர்களா, எதிர்க்கட்சித் தலைவர் வேண்டாமென்று சொல்லிவிட்டார் என்று சொல்வதா? அதற்கென்று காலம் இருக்கிறதா இல்லையா? எப்பொழுது பயிர் இருக்கும், எப்பொழுது மருந்து தெளித்தால் உபயோகமாக இருக்கும் என்று பார்க்க வேண்டுமல்லவா? நல்ல பூ வந்திருக்கும் நேரத்தில் ஸ்ப்ரே செய்கிறேன் என்றால் இருக்கின்ற பூவும் கெட்டுவிடும்.

டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்சர் ஆபீசர் சில நாக நெல்லைச் சொல்லி போடுங்கள் வரும் என்று சொல்கிறார்கள். அப்படி வரவில்லை என்று பல தடவைகள் புகார் சொல்லிவிட்டார்கள். அமைச்சர்களைக் கேட்டால், எங்கள் அமைச்சர்கள் என்ன பதில் சொல்லிக்





கொண்டிருந்தாரோ அதையேதான் சொல்லுவார். ஆனால் கண்டிக்கும் இடத்திலே கண்டித்து, வேலை செய்யும்படியான இடத்திலே வேலை செய்கிறார்களா என்று கண்காணித்து, யார் தவறு செய்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

375 பிளாக்குகள் இருக்கின்றன. இவைகளிலெல்லாம் வேலை ஒன்றும் நடைபெறுவது இல்லை என்னும்படியான காரியத்தைச் சொல்ல முடியும். இதைச் சொன்னவுடனே அமைச்சரவர்கள் புதிதாக பைனான்ஷியல் ஸ்டேட்மெண்ட் போட்டு, இதிலே போட்டோம், சமுதாய நலத் திட்டத்திற்காக 60 கோடி 70 கோடி என்று சொல்லி, எல்லா டிமாண்ட்களையும் எடுத்துக் கொண்டு, கல்வியை எடுத்துப் பாருங்கள், சுகாதாரத்தை எடுத்துப் பாருங்கள், ஹைவேஸை எடுத்துப் பாருங்கள் என்று சொல்வார்கள். அப்படியென்றால், இத்தனை இலாக்காக்களையும் மூடிவிட்டு இதை ஒன்றை மட்டும் செய்யுங்களேன். ரெவின்யூ டிபார்ட்மெண்ட், ஹைவேஸ் டிபார்ட்மெண்ட், பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்ட் எதற்கு? இந்த மூன்றையும் சேர்த்து 65, 70 கோடி ரூபாய் என்று விஸ்தரித்துச் செய்வதுதானே? அந்த டிபார்ட்மெண்டுகளையெல்லாம் மூடிவிட்டு, பஞ்சாயத்து யூனியனை எடுத்து நடத்தினால் எவ்வளவு மிச்சமாகும்? 5 கோடி 6 கோடி ரூபாய் மிச்சமாகுமல்லவா? இதற்கு 12 கோடி ரூபாய் என்று செலவு செய்யலாமே. எனவே, இப்பொழுதிருக்கும் சூழ்நிலை நாம் எந்த இலட்சியத்தை எதிர்பார்த்தோமோ, எந்த உற்பத்திப் பெருக்கத்தை எதிர்பார்த்தோமோ, அது நிச்சயமாக இல்லை என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்கள் சரியாக அமைக்கப்படவில்லை. சில இடங்களிலே 25 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. சில இடங்களிலே 60 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன, சில இடங்களில் 14, 15 தான் இருக்கின்றன. ஆரம்பித்து எத்தனை வருஷங்கள் ஆகிவிட்டன? இதையெல்லாம் பார்க்க வேண்டாமா? வருமானத்தை வைத்து அமைக்கப்பட வேண்டும், அல்லது இருக்கின்ற விஸ்தீரணத்தை வைத்து அமைக்க வேண்டும். அப்படியிருந்தால் நன்றாகயிருக்கும். ஆனால் அரசியலுக்காகத்தான் இருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லாவில் டவுன் பஞ்சாயத்து முன்பு கேரளாவில் சேர்த்திருக்கிறார்கள். இப்பொழுது என்ன காரணமோ தெரியவில்லை, டவுன்ஷிப் பஞ்சாயத்து திடீரென்று சிறு சிறு பஞ்சாயத்துக்களாகப் பிரிக்கப்பட்டது. எப்பொழுது? நாகர்கோயில் உபதேர்தல் சமயத்தில் ஆர். டி. ஓ.-வை வைத்து, அதிகாரிகளை வைத்துக் கொண்டு, தனித்தனியாகப் பிரித்து விட்டார்கள். பிறகு டி.டி.சி. கூட்டத்திற்கு வந்தபொழுது ஆட்சேபணை சொன்னார்கள். இன்னொரு கூட்டத்தில் ஒரே எம்.எல்.ஏ. போனார். சரி என்று அவர் சொன்னாரோ என்னவோ தெரியாது. மறுபடியும் டி.டி.சி. கூட்டத்தில் எதிர்த்து, வெளிநடப்பு செய்தார்கள். ஒன்று டி.டி.சி.-க்கு மதிப்பு கொடுக்க வேண்டும், இல்லையென்றால் பஞ்சாயத்து தலைவருக்கு மதிப்பு கொடுக்க வேண்டும். பிறகு என்ன காரணம் என்று

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 மார்ச் 23

அடிப்படைக் கொள்கையை வகுத்துக்கொள்ள வேண்டும். இதெல்லாம் ஒன்றுமில்லாமல் சில அரசியல் காரணங்களுக்காக மக்களின் நன்மைகளை மறந்துவிடுவது தவிர்க்கப்பட வேண்டும். ஒரு ஊரிலே டவுன் பஞ்சாயத்து என்றால் சிறு சிறு கிராமங்களாக இருக்கின்றன. அவைகளை அதிகமாகப் பிரித்தால் வயபிள் ஆக இருக்க முடியாது. சிறுசிறு பஞ்சாயத்துக்கள் இயங்க முடியாது. பெரிய பஞ்சாயத்தாக இருக்க வேண்டும். சில இடங்களில் பெரிய அளவிலே பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. பெரிய அளவிலே பஞ்சாயத்து இருக்குமானால், திறமையாக வயபிள் யூனிட்டாக இருக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதேமாதிரி எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன. டி.டி.சி. கூடுகிறது. டி.டி.சி. ஒரு ஆலோசனைக் குழு என்று சொல்கிறார்கள். அங்கு சரியான ஆலோசனைகள் கொடுக்கப்படுகிறதா? அதற்கு கலெக்டர் தலைவர். ஒன்று பூரணமாக அதிகாரத்தைக் கொடுத்து நான்-அபிஷியலைச் சேர்மனாகப் போட்டால் கூட பாதகமில்லை. டி.டி.சி. கூட்டம் கூடுகிறது. பல பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அங்கே வருகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சேர்ந்து ஒரு முடிவு எடுத்தால், அது எப்படி இருக்க வேண்டும் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அண்மையில் கூட டி.டி.சி. கூட்டத்தில் சத்தியமங்கலம் பெரும் பஞ்சாயத்து முனிசிபாலிடியாக ஆக்கப்பட்டது. அப்பொழுது இரண்டு, மூன்று பஞ்சாயத்துக்களை மாற்றி அமைக்கவேண்டுமென்ற ஒரு நிலை வந்தது. பக்கத்தில் இருக்கும்படியான பஞ்சாயத்துக்களை சேர்த்தால், எந்தவிதமான அரசியல் நோக்கமும் இல்லாமல் செய்தால், மிகவும் நலமாக இருக்கும்.

ஆனால், என்ன ஆயிற்று? முதலில் கலெக்டர் அவர்கள் ஒரு ரிபோர்ட் அனுப்பினார். ஆனால், அதற்குள் யாரோ சில பேர்கள் தலையிட்டு, இல்லை வேறு விதமாக இருக்க வேண்டும், இந்தப் பஞ்சாயத்தை அதோடு சேர்க்கவேண்டும், அதை இந்தப் பஞ்சாயத்தோடு சேர்க்கவேண்டும் என்று சொல்லி, அந்த முறையில் மீண்டும் அது சர்க்காருக்கு வந்திருக்கிறது. இது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. முதலில் ஒரு ரிபோர்ட்டு அனுப்பிவிட்டு, யாரோ சொன்னார்கள் என்பதற்காக மீண்டும் இன்னொரு ரிபோர்ட் அனுப்புவதா? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதைப்பற்றி விசாரணை செய்ய வேண்டும் பூரணமாக. யாரோ ஒருவர் எழுதினார் என்பதற்காக, மறுபடியும் இதேமாதிரி பிரிக்கவேண்டும் என்று டி.டி.சி. கூட்டத்திற்கு அந்த ரிப்போர்டு வந்தது. மூன்று பஞ்சாயத்து யூனியன்களைச் சேர்ந்தது இந்தப் பிரச்சினை. டி.டி.சி.-யில் 20 பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இருக்கிறார்கள். எந்த யூனியன்களில் இருக்கும்படியான பஞ்சாயத்தோ, அந்த யூனியன் தலைவர்களைத் தவிர, மற்ற பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு இந்தப் பிரச்சினையில் என்ன அக்கறை இருக்கிறது? அங்குதான் வருகிறது சுயநலம். பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால்,



1970 மார்ச் 23] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

தங்கள் நிலைக்கு ஏற்ப பிரிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் என்ற நிலைமையில் நான் கருத்துக்களைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த நிலையில் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் எல்லோரையும் வைத்துக்கொண்டு, கை தூக்குங்கள் என்றால் எப்படி? மூன்று பஞ்சாயத்து யூனியன் சம்பந்தப்பட்ட ஒரு காரியத்திற்கு ஏனைய பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ஆதரிப்பதில் என்ன பொருள்? இதிலெல்லாம் மெஜாரிடி, மைனாரிடி பார்ப்பதா? மெஜாரிடி, மைனாரிடி. பார்ப்பதற்கு கை தூக்குங்கள் என்று கலெக்டர் சொல்கிறார். கலெக்டர், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி, சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும், இதற்கு மெஜாரிடி, மைனாரிடி பார்ப்பதற்கு கை தூக்கச் சொல்வதா? அந்தந்த யூனியனைச் சார்ந்த பிரச்சினை வந்தால், சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அந்தப் பகுதியைச் சார்ந்தவர்களின் கருத்தைக் கேட்கவேண்டும்? பவானி ஆற்றுக்கு வடக்கே இருக்கும் படியான பஞ்சாயத்தை ஏன் சேர்க்க வேண்டும் அந்த ஊர் எம் எல். ஏ. சிரிக்கிறார். பவானியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. 15 மைல்கள் வந்தாக வேண்டும்..

நான் அமைச்சருக்கும் இதுபற்றி எழுதியிருக்கிறேன். முதல் அமைச்சருக்குக் கூட நான் இது பற்றி எழுதியிருக்கிறேன். ஏனோ தெரியவில்லை அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் மரியாதையாகவும், கண்ணியமாகவும் நடந்துகொள்ளவேண்டுமென்று சொல்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவர் என்பதற்காகவாவது, நான் தனியாகக் கொடுத்த ஒரு காகிதத்தை எடுத்துப் பார்த்து, பரிசீலித்து, தீர்மானிக்கக்கூடாதா? அதில் என்ன கெட்டுப் போய் விடும்? நான் பஞ்சாயத்து யூனியன் தலைவராக வரப்போவதில்லை. பஞ்சாயத்து யூனியன் தலைவர் வேலை எனக்கு வேண்டாம். அந்தப் பகுதியில் இருக்கும்படியான கிராமங்கள், அந்த யூனியனுக்குப் பக்கத்தில் இருக்கும்படியான கிராமங்கள் அந்த யூனியனோடு சேர்க்கப்பட வேண்டும். யாரோ கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டால், அதை மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? நான் இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இப்படி பிரிந்து அமைக்கக்கூடிய சமயத்தில், சேர்ந்ததாக இருக்கவேண்டும், போக்குவரத்து வசதி இருக்கவேண்டும் அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு, அதிலே அரசியல் புகக்கூடாது. நியாயமான முறையில் போக்குவரத்து வசதி இருந்து, சேர்ந்த பகுதியாக இருந்தால், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

ஒரு பஞ்சாயத்து பைபர்கேஷனைப்பற்றி முதலில் கலெக்டர் ஒரு ரிப்போர்ட்டு அனுப்புகிறார். பிறகு வேறுவிதமாக ஒரு ரிபோர்ட்டு அனுப்புகிறார். அது எப்படி நியாயம்? அப்படிச் செய்தால் கலெக்டர் அனுப்புகிற சிபார்சுகளெல்லாம் எப்படி நியாயமாக

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970, மார்ச் 23

இருக்க முடியும் ? ஒரு கலெக்டர் முதலில் ஒரு ரிப்போர்ட்டு அனுப்புகிறார். இப்படி இப்படி அந்த யூனியன் இருக்கவேண்டுமென்று ரிப்போர்ட்டு அனுப்புகிறார். அது டி.டி.சி. கூட்டத்தில் வருகிறது. மறுபடியும் அதே கலெக்டர் வேறுவிதமான பிரபோஸல்ஸ் அனுப்புகிறார். முதலில் இருந்த நிலைமையை மாற்றி அனுப்புகிறார். முதலில் அவர் அனுப்பிய ரிப்போர்ட்டை எந்த அடிப்படையில் அனுப்பினார் ? அரசியல் தலையீட்டினால் மாற்றினாரா ? என்ன காரணம் ? ஒரு கலெக்டர், ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒரு ரிப்போர்ட்டு அனுப்பினால், அது நியாயமாக இருந்தாலும், அதை எற்றுக் கொள்வது என்பது கிடையாது. காரணம் அரசியல் குறுக்கீடு. சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் இன்னதுதான் செய்யவேண்டும். இதைத்தான் நீங்கள் போடவேண்டும் என்றெல்லாம் அதிகாரிகளிடம் சொல்லி, சர்க்கார் உத்தரவை மாற்றிக்கொள்கிறார்கள். என் இந்த நிலை? பஞ்சாயத்து யூனியனை மாற்றி அமைக்கும்பொழுது ஒவ்வொரு எம்.எல்.ஏ.-யும் ஒவ்வொரு விதமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பலவிதமாகச் சொன்னார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால் முடிந்தவரையில் அந்த சட்டமன்றத் தொகுதியை அனுசரித்த மாதிரி பஞ்சாயத்து யூனியன் அமைக்கப்படவேண்டும்.

டிலிமிடேஷன் கமிஷனில் நானும் அங்கத்தினராக இருந்திருக்கிறேன். முடிந்தவரையில் விடுபடக்கூடாது என்ற முறையில் மாற்றி அமைக்க வேண்டும். அப்படியில்லையென்றால் சட்டமன்ற உறுப்பினர் தன் தொகுதியில் எப்படி சரியாக பணியாற்ற முடியும்? இதுமாதிரி சிறு, சிறு விஷயத்தில் கூட சர்க்கார் ஒரு சாதாரண உத்தரவு போடுவதில்கூட, 3, 4 தரம் போய், மறுபடியும் டி.டி.சி.-க்கு வருகிறது. டி.டி.சி. கூட்டத்தில் ஏகப்பட்ட ஆட்சேபணை என்று நினைக்கிறேன். இதற்கெல்லாம் கை தூக்கச் சொல்லி, முடிவு காண்பது என்பது சரியல்ல. இதிலே அரசியல் புகவிடக் கூடாது. சர்க்கார் நியாயமான முறையில் தீவிரமாக சிந்தித்து இதுதான் நியாயம். இதுதான் நடக்கமுடியும். இப்படித்தான் இருக்க வேண்டும் என்று உத்தரவு போடவேண்டும். சம்பந்தப்பட்ட யூனியன் தலைவர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் ஆலோசனை கேட்டு, இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

ரோடு வசதி செய்யப்படுகிறது. குடி தண்ணீர் வசதி செய்யப்படுகிறது. டிரிங்கிங் வாட்டர் சப்ளை செய்வதற்காக, வரட்சி நிவாரணத்தின் கீழ் 16, 18 கோடி ரூபாய் பணம் ஒதுக்கி பல இடங்களில் குடி நீர் வசதி செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டபொழுது, சில இடங்களில் என்ன ஆயிற்று என்றால், மழை பெய்துவிட்ட காரணத்தினால், ஏற்கனவே போடப்பட்ட திட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது.



1970 மார்ச் 23] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

என்னுடைய பகுதியை எடுத்துக்கொண்டால், சில கிராமங்கள் இருக்கின்றன. பெரியகுடிவேலு பஞ்சாயத்து வறண்ட பிரதேசம். 10, 13 கிராமங்கள் சேர்ந்திருக்கின்றன. அதற்கு குடிநீர் வசதி செய்வதற்காக வரட்சி நிலை அடிப்படையில் ரூ. 2 அல்லது 2½ லட்சம் ஒதுக்கப்பட்டது. என்ஜினியர்கள் சென்றுவிட்டு வந்தார்கள். இப்பொழுது நான் பார்த்துக் கேட்ட அளவிலே, மழை பெய்துவிட்டது, அதனால் அது நிறுத்தப்பட்டு விடக்கூடிய நிலை இருக்கிறது என்று தெரிகிறது. உடனே டாகுமெண்டரி எவிடன்ஸ் கொடுத்தாக வேண்டும், எப்பொழுது சொன்னார்கள், என்ன சொன்னார்கள், யார் சொன்னார், சர்க்கார் மீது குற்றம் சாட்டக் கூடாது என்றெல்லாம் கேட்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன். இருக்கிற நிலையைத்தான் சொல்கிறேன். அங்கு இருக்கக்கூடிய சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்கிறோம், வேண்டாம் என்று சொல்வது போல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். எந்தத் திட்டத்தை எடுக்கவேண்டுமென்று சொன்னார்களோ, எங்கே குடிநீர் வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று சொன்னார்களோ, அதையெல்லாம் எடுத்து நடத்தி, வரட்சி நிவாரண வேலையை பூரணமாகச் செய்து கொடுக்க வேண்டும்.

பஞ்சாயத்து டெவலப்மெண்டு, கம்யூனிடி டெவலப்மெண்டு பிராஜக்ட்ஸ் மூலமாக விவசாய உற்பத்தி பெருகவேண்டும், கிராமங்களில் இருக்கும்படியான வைத்திய வசதி பெருக வேண்டும், அங்கு இருக்கும்படியான விஸ்தரிப்பு அதிகாரிகளிடையே மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்ற மனப்பான்மை இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். சர்க்கார் ஒதுக்கிய பணம் போதாது, இன்னும் மிகத் தீவிரமாக வேலை செய்து கிராமப்புறத்து மக்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு பாடுபட வேண்டும் என்று கூறி, என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரிக்கிறேன்.

## (8) தன்னிலை விளக்கம்.

### கோவை மாவட்ட விவசாயிகள் மின் கட்டண உயர்வு எதிர்ப்பு போராட்டம் குறித்து திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்களின் விளக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஒரு பெர்ஸனல் எக்ஸ்பிளனேஷன் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது ஒன்றும் இல்லை. தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . .

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதற்கு விளக்கம்? எதைப்பற்றி விளக்கம் ?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, கோவை ஜில்லா விவசாயிகள் போராட்டம் சம்பந்தமாக ஒரு எக்ஸ்ப்ளனேஷன் கொடுக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, கோவை ஜில்லா விவசாயிகள் போராட்டம் மின்சாரக் கட்டண உயர்வைக் குறைக்கவேண்டும் என்பதற்காகத்தான் நடத்தப்பட்டதே தவிர, வேறு எந்தக் காரணத்திற்காகவும் அல்ல என்பதை பலமுறை எனது கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் இங்கே விளக்கியிருக்கிறார்கள். ஆனால், முதல் அமைச்சர் அவர்கள் இதிலே பேசுகிறபொழுது, பட்டகார் போன்றவர்கள் இதில் வேறு எண்ணத்தில் கலந்துகொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் எந்த எண்ணத்தில் வந்தார்கள் என்பதை நான் விரிவுபடுத்திச் சொல்லவில்லை. எங்கள் கட்சி முற்போக்கான கட்சி, அதில் கலந்து கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். பட்டகாருக்கு வக்காலத்து வாங்குவதற்காக அல்ல, விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்ற ஓரே காரணத்தை வைத்துத்தான் எங்கள் கட்சி அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டதே தவிர, வேறு ஒரு காரணத்திற்காகவும் அல்ல என்பதை தலைவர் அவர்கள் மூலமாக இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்னால் பேசிய அங்கத்தினருக்கு, 'பட்டகாருக்கு வக்காலத்து வாங்கியதற்கு மகிழ்ச்சி அடைகிறேன்' என்று மாண்புமிகு முதல் அமைச்சர் சொன்னார்கள். உண்மையிலேயே எங்கள் கட்சி அங்கத்தினர்கள் யாரும் அவர்களுக்கு வக்காலத்து வாங்க வில்லை. அதுபற்றி எந்தவிதமான தப்பு அபிப்பிராயமும் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்று, இந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று நாங்கள் முயற்சி செய்யும்போது எங்களை எக்ஸ்ப்ளாயிட் செய்தார்கள் என்றால், எங்களை பிற்போக்கு சக்திகளோடு இணைக்க முடியாது என்பதை மாண்புமிகு முதல் அமைச்சருக்குத் தெரிவிக்கிறேன்.

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை எழுந்தபோது, திரு. குமாரசாமி சொன்ன வார்த்தைகள் பொதுவாக பட்டகார் கலந்து கொண்டார்கள் என்றும், உச்ச வரம்புச் சட்டத்தை எதிர்த்து அல்ல என்றும் சொன்ன அந்த நேரத்தில் நான் குறுக்கிட்டேன். அவர்கள் அந்த நேரத்தில், அந்தக் காரணத்திற்காகக் கலந்து கொள்ளவில்லை, மின் கட்டணத்தை எதிர்த்துத்தான் என்று பட்டகாரையும் சேர்த்து திரு. குமாரசாமி சொன்னபோது, அதைத்தான் நான் வக்காலத்து வாங்கியதாகக் குறிப்பிட்டேன். தலைவர் என்ற முறையில் குமாரசாமி அப்படிப் பேசியிருக்கக் கூடாது என்று நேரிடையாகக் கண்டிக்காவிட்டாலும் நண்பர் திரு. மாரிமுத்து உள்ளபடி விளக்கம் கொடுத்து பி.எஸ்.பி. கட்சியை ஆபத்திலிருந்து விடுவித்துக் கொண்டதற்கு அவர்களைப் பாராட்டுகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: பட்டகார் உள் நோக்கத்தை நாங்களும் திட்டவட்டமாக உணர்ந்தவர்கள்தான் ஆனால், நில உச்ச வரம்பை அவர் எதிர்த்தால் அவரை நாங்கள் எதிர்ப்போம்



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லி விட்டீர்கள். உங்கள் தலைவர் சொல்லிவிட்டார்கள். ஒவ்வொரு உறுப்பினராகச் சொல்லிக்கொண்டிருந்தால் நேரமாகிறது. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** விவசாயிகளுக்காகப் பேசிவிட்டால் மட்டும், விவசாயிகளுடைய பிரதிநிதிகள் என்று அர்த்தம் இல்லை. வீரமாகப் பேசிவிட்டு, வெளியேறிவிட்டார்கள். நல்லசிவம் எவ்வளவு செய்திருக்கிறார்கள், நல்லசிவம் செய்யும் காரியம் என்ன என்று, காளிங்கராயன் வாய்க்காலில் பாதிக்கப்பட்ட விவசாயிகள், ஆற்றிலிருக்கும் தண்ணீரைத் தன் சொந்த நிலத்திற்கு எடுத்துப் போகிறார் என்று நோட்டீஸ் போட்டிருக்கிறார்கள். இது நல்லசிவத்திற்கும் விவசாயிகளுக்கும் என்ன தொடர்பு இருக்கிறது என்று காட்டுகிறது. அது எங்களுக்கும் நன்றாகத் தெரியும்.

## 7. 1970–71-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

* **மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், கிராம வளர்ச்சித்துறை, நகராட்சி மன்றங்கள், கதர் கிராம கைத்தொழில் வாரியம் இவற்றிற்கு ஆன மானியக் கோரிக்கைகள் மீது, பல்வேறு உறுப்பினர்களும் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இவற்றிற்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி வைத்தாற்போல், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பினார்கள். பொதுவாக இன்று பேசிய உறுப்பினர்கள், அத்தனைபேர்களும், கிராம வளர்ச்சி, கிராமத் தொழில்கள் வாரியம் இவை நல்ல முறையில் செயல்படுகின்றன, மேலும் இவற்றிற்கு அதிகமான நிதிகளை ஒதுக்கி, தீவிரமான காரியங்களைச் செய்யவேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களையெல்லாம், மிகவும் பயனுள்ள வகையில் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் எடுத்துச் சொன்னார்கள்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பல பிரச்சினைகளைப் பற்றியும் சொன்னார்கள். ஏதாவது சொன்னால் உடனே நீங்கள் இதைத்தானே சொல்வீர்கள் என்று திரும்பச் சொல்லக் கூடாது என்கிற முன்னெச்சரிக்கையை போட்டுக் கொண்டார்கள். முதலில் கதர்கிராமக் கைத்தொழில்கள் வாரியத்தைப் பற்றி, அதன் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அண்ணா இருந்த காலத்தில் பொருளாதார ரீதியில் ஒத்துவரக்கூடிய ஒன்றல்ல இது என்றதை மறு பரிசிலனை செய்து ஒத்துவரக்கூடியது என்று நாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாக ஒரு வாதத்தை சொன்னார்கள். சென்ற ஆண்டு நடைபெற்ற மானியத்தின் மேல் பேசியபோதும் இதே கருத்தைத்தான் சொன்னார்கள். அதற்கு விளக்கத்தையும் நாம் அந்த நேரத்தில் சொல்லியிருக்கிறோம். அதில் ஈடுபட்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய வாழ்க்கைக்கு மாற்றம் தேடும் வரையில், நாங்கள் இவற்றை இழுத்து

மூடுவது இயலாத காரியம். ஆகவே, இதை வைத்துக் கொண்டு வருகிறோம் என்பதையும், நாட்டிலே இது பொருளாதார வளர்ச்சியைப் பெறத்தக்க ஒன்றாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் ஏற்கெனவே தெளிவாக இந்த மாமன்றத்தில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறோம் என்றாலும், இதிலே ஈடுபட்டிருக்கிறவர்களுடைய நிலையை உயர்த்தவும், அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் கொடுக்கவும் பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது என்கிற காரணத்தால் இதனை செய்திருக்கிறோம். கதர் அதிகமாக விற்பனை ஆகியிருக்கிறது. ஆகவே, நீங்களெல்லாம் இப்பொழுது கதருக்கு ஆதரவு கொடுத்து, மெல்ல மெல்ல எங்கள் பக்கம் வந்து கொண்டிருக்கிறீர்கள் என்றார்கள். அது கதர் உங்கள் கையைவிட்டு நழுவிப் போகிறது என்று பொருளே தவிர, நாங்கள் வரவேற்கிறோம் என்று பொருளில்லை. இன்னும், உங்களையே காப்பாற்றும் பொறுப்பைக் கூட திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொண்டு இருக்கிறது என்பதையும் நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதை நான் ஆட்சேபிக்கிறேன். எங்களை இவர்கள் என்ன காப்பாற்றுகிறார்கள்? புள்ளி விரத்தோடு சொல்லவேண்டும்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இந்தப் பிரச்சினையில் அதிகமாக விளக்கத்தைக் கேட்டு மேலும் தங்கள் நிலைமைகளை பல சங்கடங்களுக்கு உட்படுத்திக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சங்கடமே இல்லை. சந்தோஷந்தான். உங்களை வைத்துத்தான் நாங்கள் பிழைக்க வேண்டும் என்பது ஒன்றும் கிடையாது.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** காந்திய தத்துவத்திற்கு காங்கிரஸ் பணிக்கு நாடு நன்றி சொல்லிக்கொண்டு, தெரிவித்துக் கொண்டு இருக்கிறது. ஆனால் உங்களைப் போல் காந்திய தத்துவத்தை கைவிட்டவர்களை வரலாறு தீவிரமாக காட்ட வேண்டியவர்களை அப்படிப்பட்ட ஆபத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டு வருகிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** காந்திய தத்துவத்தைப் பற்றி இயக்கத்தைப் பற்றி என்ன என்னவோ சொன்னார்கள், எழுதினார்கள். சபாநாயகர் அவர்களே, அதையும் விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** காந்தியத்தைக் குறை கூறி, தவறாக நாங்கள் எப்பொழுதும் சொன்னதில்லை.

அடுத்தபடியாக, இந்தக் கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் தொகை குறைவாக இருக்கிறது, அப்படி ஒதுக்கப்பட்ட தொகையும் ஆடிட்டுக்கு செலவாகிப்



போகிறது என்று குறிப்பிட்டார்கள். ஆடிட் செலவுக்கெல்லாம் கதர் கிராமத் தொழில்கள் வாரிய வருமான நிதியிலிருந்து செலவழிக்கப்படுகிறது. ஊழியர்கள் ஊதியம் மட்டும் இந்த அரசாங்கம் கொடுத்துக் கொண்டு வருகிறது என்பதையும் தெரிவிக்கிறேன். அதிகமாகத் தொகை ஒதுக்கினால், கிராமப் புறங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படும் என்கிற நல்ல கருத்தைக் குறிப்பிட்டார்கள்.

அதிகாரிகள் யாரும் எந்த வேலையையும் செய்வதில்லை, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஜீப்புகள் பயன்படுவதில்லை, சினிமாவுக்கும் மற்றதற்கும் போகப் பயன்படுகிறது என்று எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் ஒன்றைச் சொல்கிறபோது கடந்த காலத்தையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு சொல்ல வேண்டும். இந்தப் பெரிய திட்டம் காந்தியார் முதலில் சொன்னது. மறைந்த பண்டித நேரு சமுதாய வளர்ச்சிக்கு அமுல் நடத்தவேண்டும் என்று இதில் அக்கறை காட்டினார்கள். அந்த அடிப்படையில் ஏற்பட்டு செயல்படுகிறது. இன்றைக்கு இருக்கக் கூடிய ஆத்திரத்தில், யார் மேலோ இருக்கும் கோபத்தை நம் மேலே காட்டி, இது முறையாகச் செயல்படவில்லை, அமைப்பையே மாற்றவேண்டும் என்று குறிப்பிட்டதையும், தெளிவாகச் சொல்லவில்லை. ஒரு பெரிய கட்சியின் கொள்கை ரீதியான பிரச்சினைகளையோ, அல்லது எதிர்காலத்தில் திட்டங்கள் எப்படி இருக்கவேண்டும் என்றோ எதிர்க் கட்சித் தலைவர் விளக்கமாகப் பேசினார்கள் என்றால் பொருத்தமாக இருக்கும். அதையெல்லாம் விட்டுவிட்டு ஜீப் கார் பற்றியும், தன் பகுதியில் ஊராட்சி மன்றம் எங்கு சேர்க்கப்படவேண்டும் என்பது பற்றியும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும் என்று தெரிவித்தார்கள். தன் கட்சியின் நிலையான கொள்கை வளர்ச்சித் திட்டத்தில் என்ன என்பதை, அதற்கான விளக்கத்தை ஒரு இடத்தில் கூட கோடிட்டுக் காட்டவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். அவர்கள் சொன்னார்கள், வளர்ச்சி அதிகாரிகள் இருக்கிறார்கள், விவசாய வளர்ச்சி அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள், காலம் தவறிச் செய்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

தெளிப்பான், மற்றவைகள், வேளாண்மைத் துறையாலும் செய்யப்படுகிறது. ஆனாலும், வளர்ச்சி அதிகாரிகள் அதிலேயும் கவனத்தைச் செலுத்துகிறார்கள். இந்த ஆண்டில் 45 லட்சம் டன் உற்பத்தியாக்கப்பட்டிருக்கிறது. தமிழக வரலாற்றிலேயே, எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு விளைச்சல் அதிகமாக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உணர வேண்டும். இந்த நிலைக்கு பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களும், வேளாண்மைத் துறையைச் சேர்ந்தவர்களும், விவசாய மக்களும் காட்டிய ஆர்வத்தின் காரணமாக ஏற்பட்ட விளைவுதான். இது அரசாங்கத்தின் வேலை என்று மெத்தனமாக இருந்திருந்தால், இந்தக் காரியங்கள் நடைபெற்று இருக்கமுடியாது.

[திரு. மா. முத்துசாமி] [1970 மார்ச் 23

அதிகாரிகள் எல்லாம் வீணாகவே இருக்கிறார்கள் என்று உறுப்பினர்கள் சொன்னார்கள். எல்லா அதிகாரிகளுக்கும் நன்றாக வேலை கொடுக்கப்பட்டு, நன்றாகவே வேலை செய்து வருகிறார்கள்.

அடுத்தபடியாக, ஜீப்பைப்பற்றிச் சொன்னார்கள். இவர்களுக்கு முன்னாலே இவரது கட்சியைச் சேர்ந்த இரண்டொரு உறுப்பினர்கள், 'ஜீப்பை முழுக்க முழுக்க எங்களிடம் கொடுக்க வேண்டும். ஜீப்புகளை வருவாய்த் துறை அதிகாரிகள் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள்' என்று குறைபட்டுக்கொண்டார்கள். அவர் ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருக்கிறார், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர். இப்படி ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள், ஒரு பக்கம் ஜீப்புகளை எடுத்துவிட வேண்டுமென்றும், இன்னொரு பக்கம் ஜீப்புகளை முழுக்க முழுக்க எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் கூறுவதால், இந்த இரண்டு பேர்களுடைய கொள்கைகளில் எந்தக் கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும், எது அவர்களுடைய, அவர்கள் கட்சியினுடைய திட்டவட்டமான கொள்கை என்று எனக்குப் புரியவில்லை.

அடுத்தபடியாக, கட்டடங்கள் எல்லாம் கட்டி முடிக்கப்பட்ட பிறகு அமைச்சர்கள் திறப்புவிழாவுக்கு செல்கிறார்கள் என்று கூறினார்கள். சென்ற ஆண்டிலேயும் இதையேதான் கேட்டார்கள் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். கட்டடம் கட்டி முடிக்கப்பட்டால்தான் அங்கே திறப்புவிழாவுக்குச் செல்ல வேண்டும். கட்டடம் என்றால் பொதுக் காரியத்திற்கான கட்டடமாக இருக்கலாம், அல்லது ஊராட்சி ஒன்றியக் கட்டடம், அல்லது வேளாண்மைக் கிடங்கு, அல்லது ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடமாக இருக்கலாம். இவைகளின் திறப்புவிழாவுக்கெல்லாம் அமைச்சர்கள் செல்கிறார்களே என்று குறைபட்டுக்கொண்டார்கள். கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு திறப்புவிழா செய்வது சமுதாய வளர்ச்சியின் பிரிவே ஆகும். அப்படிப்பட்ட வளர்ச்சிப் பணியில் பங்குகொள்வதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். அவர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் பல நேரங்களில் அழைப்புகள் அனுப்பப்படுகின்றன. அப்படி அழைத்தால்கூட பல நேரங்களில் அவர்கள் வருவதே இல்லை. ஏதோ பாவமான ஜீவன்களைப் பார்ப்பதுபோல அவர்கள் ஒதுங்கி ஒதுங்கிப் போகிறார்கள். தொகுதியிலே நடக்கக்கூடிய, மக்களுடைய பிரச்சினைகளைப்பொறுத்த கூட்டத்திலும் கலந்துகொள்ளாமல் ஒதுங்கிவிடுகிறார்கள்.

மேலும் அவர் பேசும்போது, இந்தத் துறையே வேண்டாமென்று சொல்வதுபோல பேசினார்கள். வேளாண்மைத் துறை, வருவாய்த் துறை, கூட்டுறவுத் துறை என்றெல்லாம் பல துறைகள் இருக்கின்றனவே, வளர்ச்சித் துறை என்று எதற்கு என்றெல்லாம் பேசினார்கள். இதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்து, மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1970 மார்ச் 23] [திரு. மா. முத்துசாமி]

சமுதாயத்திலுள்ள அதிகாரங்களைப் பரவலாக்கி, கிராமப்புறம் முன்னேற வேண்டுமென்பதற்காக இந்த அமைப்புகளை ஏற்படுத்தி, பல்வேறு துறைகளை ஒன்றாக இணைத்து காரியங்களை ஆற்ற வேண்டுமென்ற நோக்கத்திலேதான் இந்தத் துறை ஏற்பட்டது. இது திராவிட முன்னேற்றக் கழக அரசால் ஏற்படுத்தப்பட்டதல்ல. நீண்டகாலத்திற்கு முன்பாகவே ஏற்படுத்தப்பட்டு, வளர்ந்து வருகிற நிலையில் இத்துறை இருக்கிறது. என்ன காரணத்தால் இந்தக் கருத்தை எடுத்துச் சொல்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை.

அடுத்து, மாவட்ட வளர்ச்சி மன்றம், பஞ்சாயத்து போர்டு இவைகள்பற்றிச் சொன்னார்கள். நாகர்கோயில், கன்னியாகுமரியில் உள்ள பிரச்சினைகள்பற்றிச் சொன்னார்கள். நகர ஊராட்சி மன்றங்களாக இருந்தவை கிராம ஊராட்சி மன்றங்களாக மாற்றியமைக்கத் திட்டமிட்டார்கள். நாகர்கோயில் தேர்தல் வந்ததாலே இந்த நிலைமை ஏற்பட்டது என்று குறிப்பிட்டார்கள். இது அபத்தமான கூற்று ஆகும். தேர்தலுக்கும், ஊராட்சி மன்றம் பிரிக்கப்படுவதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. தமிழ்நாடு பூராவிலும் ஒரே சீரான அமைப்புமுறை இருக்க வேண்டும். திருவாங்கூர்–கொச்சி மாநிலத்திலிருந்து கன்னியாகுமரியும் செங்கோட்டை தாலுகாவும் தமிழகத்திற்குக் கிடைத்தவையாகும். அந்த பகுதிகளின் நிர்வாக முறையும், நம்முடைய நிர்வாக முறையும் வேறுபட்டதாக இருந்தது. கடந்த காலத்திலேயே இந்த நிர்வாக முறை சீர்திருத்தப்பட்டிருக்க வேண்டும். இது கடந்த கால சர்க்காரின் பொறுப்பு. ஆனால் அவர்கள் அந்தக் காரியத்தைச் செய்யவில்லை. ஆகவே, தமிழ்நாடு முழுவதற்கும் ஒரே நிர்வாக அமைப்பு இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. நகர ஊராட்சிகளைக் குறைத்து, கிராம ஊராட்சிகளை அதிகப்படுத்தியதாகச் சொன்னார்கள். அது தவறான வாதமாகும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவிலே ஊராட்சி ஒன்றியங்களை பஞ்சாயத்துக்களாக பிரித்ததை மக்கள் பிரதிநிதிகள் ஆட்சேபித்திருக்கிறார்கள். மாவட்ட வளர்ச்சி மன்ற அஜெண்டாவில் இல்லாமல் ஒரு நிகழ்ச்சியிலே குறிப்பிட்டு உருவாக்கியிருக்கிறார்கள். அதைப்பற்றி பிரதிநிதிகள் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆட்சேபணை இருக்கிறது. ஜனத்தொகையின் அடிப்படையிலும். வருவாயின் அடிப்படையிலும் இது பிரிக்கப்படவில்லையென்ற ஆட்சேபணை இருக்கிறது. இதைப் புனராலோசனை செய்ய அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நான் பேசி முடிப்பதற்குள்ளாகவே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அவசரப்படுகிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களிடத்தில் விளக்கம் கேட்க விரும்புகிறேன். நான் சொல்வதை கொள்கை அளவில்

ஏற்றுக்கொள்கிறீர்களா, இல்லையா ? பேரூராட்சிகளை சிற்றூராட்சிகளாகப் பிரித்து, அரசாங்க அமைப்பு நிர்வாகம் சீராக்கப்பட வேண்டும் என்ற கருத்தை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா, இல்லையா ? எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இப்போது இருக்கின்ற அமைப்பு முறையை நாங்கள் ஆதரிக்கிறோம். சிறு சிறு பஞ்சாயத்துக்களாக பிரிக்கவேண்டும் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி .** ஏற்கெனவே இந்தப் பிரச்சினைகள் எடுக்கப்பட்டு, அங்கே இருக்கிற மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டு, முதலிலே ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR : Sir, that is wrong information conveyed to the Haisey இது அஜெண்டாவிலே போடவில்லை. கலெக்டர் அவர்கள் வேண்டுமென்றே எழுதிச் சேர்த்தார் என்று மெம்பர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தார்கள்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இதே கருத்தை எழுப்பிய இன்னொரு உறுப்பினர், " நான் அந்தக் கூட்டத்தின் இடையிலே எழுந்துபோய்விட்டேன் " என்கிறார். நீங்கள் இப்போது இப்படிச் சொல்கிறீர்கள் ? . . . .

THIRU J. JAMES : Sir, on a point of order.

THE HON. THIRU M. MUTHUSWAMI : Sir, I am not yielding.

மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தப் பிரச்சினையை எழுப்பியிருப்பார்கள். நகராட்சி ஒன்றியங்கள் பிரிப்பது நிர்வாக வசதிக்காக. ஊராட்சி மன்றங்களும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. சௌகரியத்தை அரசாங்கம் பார்க்க வேண்டும். சில மாவட்ட பிரதிநிதிகள் . . . . . .

(2) நடை முறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(இ) ஓர் உறுப்பினர் நடைமுறைக்கேள்வி எழுப்பி அமைச்சர் இடமளிக்காதது குறித்து.

THIRU K. VINAYAKAM : Sir, I rise on a point of order. The hon. member rose on a point of order. Whether the point of order is in order or out of order has to be decided by you. How can the Hon. Minister say that ' I am not yielding '. He is not a boss and is is for the Hon. Speaker to say that he is not yielding. So, the Hon. Minister cannot take the law in his own hands and say ' I a mnot yielding '. No please give a ruling on this point. Let not any Hon. Minister make this kind of mistake in future.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்புகிற நேரத்தில் அமைச்சர்கள் ' நாட் ஈல்டிங் ' என்று சொல்வதற்கு விதி இருக்கிறது. பொதுவாக பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் அதற்கு இடம் கொடுக்கப்படத்தான் வேண்டும். திரு. ஜேம்ஸ் அவர்கள் எழுப்பியது பாயின்ட் ஆஃப் ஆர்டரா, என்பது எனக்கேகூட சந்தேகம்தான். எதிர்க் கட்சி உறுப்பினர் ஏதோ விளக்கம் கேட்பதுபோல் எழுந்தாரே என்று நானும் உணர்ந்தேனே தவிர, பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுப்பி, அமைச்சர் அவர்கள் இடம் கொடுக்கவில்லை என்று நானும் நினைக்கவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே இந்த மூன்றாண்டுக் காலத்தில் எத்தனை பாயின்ட் ஆஃப் ஆர்டர்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன ? அவைகளில் எத்தனை பாயின்ட் ஆஃப் ஆர்டர்கள்? எத்தனை பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை என்கிற ஒரு கணக்கினை இந்த மன்றத்திற்குத் தாங்கள் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த விஷயத்திலே, இதற்கு முன்னாலே இருந்த தலைவர்கள் எல்லாம் இதிலுள்ள சங்கடத்தை உணர்ந்து கூறியிருக்கிறார்கள். எழுந்து பேசுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் பொருட்டாக பாயின்ட் ஆஃப் ஆர்டரை உபயோகிக்கிறார்கள். பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொன்னால், பேசுபவர் உட்கார வேண்டும், தான் சொல்ல விரும்புவதைச் சொல்லலாம் என்ற அளவில் மெம்பர்கள் இதைப் பயன்படுத்துகிறார்கள். பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லாதவைகளுக்குக்கூட பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி எழுந்து நிற்கிறார்கள். (திரு. கே. விநாயகம்—குறுக்கீடு) உறுப்பினர் எழுந்து பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிவிட்டபிறகு, தன் கருத்தைச் சொல்கிறார். முடிவில் பேரவைத் தலைவர் ' இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை ' என்று சொல்கிறார். இந்த முறை தொடர்ந்து நடைபெறுகிறது. இதற்குள் இன்னொரு உறுப்பினர் குறுக்கிட்டு, ' பாயின்ட் ஆஃப் ஆர்டர் ' இல்லாததற்கெல்லாம் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுந்திருக்கிறார்களே என்று பேசுகிறார். ஒருவர் எழுந்து தன்னுடைய கருத்தைச் சொன்னபிறகுதான் அது பாயின்ட் ஆஃப் ஆர்டரின் கீழ் வருகிறதா, இல்லையா என்பதை அறிந்து தீர்ப்பு கொடுக்க முடியும். பேசுவதற்கு முன்னாலேயே பாயின்ட் ஆஃப் ஆர்டரா, இல்லையா என்று தீர்ப்பளிக்க முடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருக்கின்றன என்பதை உணர்ந்திருக்கிறீர்கள். பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லாத ஒன்றை, பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி எழுப்புகின்ற உறுப்பினர் மீது என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைப்பற்றி நாமுடைய விதிமுறைகளின்படி எந்தவிதமான சூழ்நிலை உருவாகும் என்பதை இந்த அவையிலே கூறியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1970 மார்ச் 23

**திரு. மா. முத்துசாமி :** ஆகவே, மாநிலத்தின் மற்ற பகுதிகளில் இருப்பதுபோலவே இங்கும் ஏற்படுத்துவதற்காகத்தான் அப்படிச் செய்யப்பட்டன . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மற்றும் இன்னொரு விளக்கம். எதிர்க் கட்சி கொறடா அவர்கள் அகில இந்திய விப்ஸ் மகாநாட்டிற்குச் சென்றிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதில் இப்படி 'பாயின்ட்ஸ் ஆஃப் ஆர்டர்' என்பதைத் தவறான முறையில் உபயோகப்படுத்தக் கூடாது என்று ஒரு தீர்மானமே நிறைவேற்றியிருக்கிறார்கள், அதை அவருடைய நினைவுக்குக் கொண்டுவருகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, I am sorry, I must make myself slear.

இங்கு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு விதி முறைகள் இருக்கின்றன. பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பப் பட்டால் அதற்குத் தீர்ப்புக் கொடுப்பது விப் அல்ல, அமைச்சர் களும் அல்ல. சபாநாயகருக்குத்தான் உரிமை இருக்கிறது. அது தவறானது, சரியானது என்று சொல்வதற்கு வேறு யாருக்கும் உரிமை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்வதற்கு 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' என்று எழும் முறையைத் தவறாக உபயோகப்படுத்திக்கொள்வது கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பதைத்தான் நான் நினைவூட்டு கிறேன்.

THIRU RAMA ARANGANNAL rose.

THIRU K. VINAYAKAM : Sir, let me finish my point of order. I am in possession of the House, and I must make myself clear. இப்போது இருக்கிற சட்டப்படிதான் நாம் நடக்க முடியும். யார் வேண்டுமானாலும் இப்போதுள்ள விதிப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பலாம். சரி, தவறு என்று தீர்ப்புக்கொடுக்கத்தான் சபாநாயகருக்கு உரிமையிருக்கிறது.

திரு. இராம அரங்கண்ணல் மீண்டும் எழுந்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விநாயகம் அவர்களுக்கு பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப உரிமையிருக்கிறது. அதில் குறுக்கிடவில்லை. எழுப்புவது பாயின்ட் ஆப் ஆர்டர் தானா, இல்லையா என்று தீர்ப்பளிக்கவும் பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. அதை அவர் உணர்ந்திருக்கிறார்.

ஆனாலும் ஒன்று சொல்கிறேன். கொறடாக்கள் மகாநாட்டில் இப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டரை தவறான காரியங்களுக்குப் பயன் படுத்திக்கொள்ளக் கூடாது என்று ஒரு முடிவு எடுத்திருக் கிறார்களே, அதை நினைவூட்டுகிறேன்.



1970 மார்ச் 23]

இப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டரை தவறான முறையில் உறுப்பினர்கள் பயன்படுத்திக்கொள்வார்களேயானால் என்ன செய்யவேண்டும் என்பதை ஆராயவேண்டிய நிலை உருவாகும் என்றுதான் கூறினேன்.

**திரு. கே. விநாயகம் :** ஸ்பீக்கர்கள் மகாநாட்டில் தான் முடிவு எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய விதிமுறைகளை நாமே மாற்றிக்கொள்ளலாம். இப்போது அமைச்சர் தொடர்ந்து பேசுவார்.

### (7) 1970–71-ம் ஆண்டிற்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மற்ற மாவட்டங்களில் இருக்கக் கூடிய நிலைமைக்கு ஏற்ப இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் செய்யப்பட்டதே தவிர எந்தவிதமான அரசியல் நோக்கமும் அதில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இன்னொன்றைச் சொன்னார்கள். சத்தியமங்கலம் மேஜர் பஞ்சாயத்து முனிசி பாலிட்டியாக ஆக்கப்பட்டது பற்றிய பிரச்சினையைச் சொன்னார்கள். ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். இப்படி முனிசிபாலிட்டியாக ஆகிறபோது இதில் எந்த எந்த பஞ்சாயத்து களைச் சேர்க்கலாம், எவற்றை நீக்கிவிடுவது நல்லது என்கிற ப்ரபோசலை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கேட்கிறோம். அவர் ஒரு திட்டத்தைத் தீட்டி அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கிறார். அப்படியே ஏற்றுக்கொள்வதானாலும், அல்லது சில மாற்றம் செய்வதானாலும் அரசாங்கம் அதைச் செய்து மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் ஆலோசனைக்கு அனுப்பிவைக்கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றம் இதுபற்றி ஆலோசனை சொல்கிற தகுதியைப் பெற்றிருக்கிறது. அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொள்ளாததும் அரசாங்கத்தின் பொறுப்பாகும். வளர்ச்சி மன்றத்திற்கு நாம் நம் ஒப்புதலை அனுப்புகிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இப்படி இப்படி மாற்றப் பட வேண்டும் என்று சொன்னார்கள். அங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். அவர்கள் சொன்ன கருத்துக்களை வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மறுபடியும் ஒரு திட்டத்தை இங்கே அனுப்பிவைத்தார்கள். இப்படி திட்டம் வந்திருக்கிற நோக்கில் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு விண்ணப்பத்தைக் கொண்டு வந்து முதல் அமைச்சரிடம் கொடுத்தார்கள். அதை அவர் நேரே ஆட்சித் தலைவரிடத்தில் கொடுத்திருக்கலாம். அல்லது டி.டி.ஸி. கூட்டத்திலேயே சொல்லி

யிருக்கலாம். ஆயினும் இங்கே கொண்டுவந்து கொடுத்தார்கள். அதற்கு மதிப்பு அளிக்கவில்லை என்று சொன்னார்கள். அது சரியல்ல. முதல் அமைச்சர் அவர்கள் உடனே என்னை அழைத்துப் பேசினார்கள். எதிர்க் கட்சித் தலைவரும் தம் கருத்தைச் சொன்னார்கள். இவருடைய கருத்தைக் கேட்ட பிறகு இவற்றை எல்லாம் பரிசீலனை செய்வதற்காக மறுபடியும் அந்த திட்டத்தை வளர்ச்சி மன்றத்திற்கு அனுப்பிவைக்க நேரிட்டது. அங்கே இருக்கிற டி.டி.ஸி., பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து ஆகியவற்றின் அபிப்பிராயத்தைப்பெற்று அனுப்பியிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நாங்கள் டி.டி.ஸி.-க்கு மதிப்புத்தரவேண்டும், பஞ்சாயத்து ஒன்றியங்களின் தீர்மானங்களுக்கு மதிப்புத் தரவேண்டும், அரசியல்வாதிகளின் பேச்சைக் கேட்கக் கூடாது என்றார்கள். பஞ்சாயத்து ஒன்றியங்களின் தீர்மானம், பஞ்சாயத்துத் தீர்மானம் ஆகியவற்றின் அடிப்படையில் தான் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே, அரசியல்வாதிகள் சொல்வதைக் கேட்கக் கூடாது, எது நியாயம் என்று படுகிறதோ அதைச் செய்யவேண்டும் என்று சொன்னதால் இதில் நியாயம் என்று பட்டதைச் செய்யவே நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். எதிர்க் கட்சித் தலைவர் தனியாக ஒரு விண்ணப்பத்தைக் கொண்டு வந்து கொடுத்திராவிட்டால் அதைத் திருப்பி அனுப்பியிருக்கவே தேவை இருந்திருக்காது. அவரே டி.டி.ஸி.-யில் சொல்லியிருக்கலாம். ஆட்சித் தலைவரிடத்தில் சொல்லியிருக்கலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : நான் விண்ணப்பம் கொடுத்ததால் தான் 3 தரம் திருப்பி அனுப்ப நேரிட்டது என்பதுபோலச் சொல்கிறார்கள். நான் டி.டி.ஸி.-யிலும் சொல்லியிருக்கிறேன். நான் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தும் கூட மாவட்ட ஆட்சித் தலைவர் என்னைக் கூப்பிட்டு இதுபற்றி ஒன்றுமே சொல்லவில்லை, கேட்கவில்லை.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி** : டி.டி.ஸி. என்பதன் பொருள் எதிர்க் கட்சித் தலைவருக்கு விளங்கும் என்று நினைக்கிறேன். ஊராட்சித் தலைவர், நகராட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் எல்லோரும் சேர்ந்தது தான் டி.டி.ஸி. ஒவ்வொருவரையும் தனியாக அழைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் வாய்ப்பும், வசதியும் இருந்தால் கேட்டிருக்கலாம். டி.டி.ஸி.-யில் இதைப்பற்றி விவாதித்து இப்போது அனுப்பியிருக்கிற காரணத்தினால் அரசியல்வாதிகள் சொல்வதைக் கேட்காது—எது நியாயம் என்று தோன்றுகிறதோ அதைச் செய்தால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே வருத்தப்பட மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அந்த அடிப்படையில் எதிர்க் கட்சித் தலைவர் எங்களுக்கு உதவி செய்வார்கள் என்றும் நம்புகிறேன்.



அடுத்து திரு. பூவராகன் அவர்கள் இத்துறைக்கு 6 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறதே, இது போதுமா என்றார்கள். Under "37. Community Development Projects" provision is made only for Blocks of Community Development Pattern (Stage I and State II). For Post Stage II Blocks provision has been shown under different departmental budgets. As the number of Stage I and Stage II Blocks will go down provision will be reduced under "37. Community Development Projects".

ஆண்டிற்காண்டு நெ. 1, நெ. 2, போஸ்ட் ஸ்டேஜ் என்பவைகளெல்லாம் மாறி மாறி வருவதனால், ஆண்டுக்காண்டு ஸ்டேஜ் 1, ஸ்டேஜ் 2 என்பதெல்லாம் மாறி மாறி வேறு தலைப்புகளின் கீழ் அவை போகும். என்றாலும் இவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகைகளை நான் படித்ததன் மூலமாக அவர்களுக்கு அந்த கருத்து புரியும் என்று கருதுகிறேன். 1966–67-க்கு ரூ. 47.48 கோடி அதற்கு ஒதுக்கப்பட்டது. 1967–68-ல் ரூ. 52.70 கோடி, 1968–69-ல் ரூ. 52.62 கோடி, 1969—70-ல் ரூ. 59-15 கோடி, 1970–71-ல் ரூ. 65.26 கோடி. ஆக இந்த அளவிற்கு வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதையும், ரூ. 65.26 கோடி மொத்த தொகையில் 23 சதவிகிதம் என்பதையும் நான் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். ஆக எந்த வகையிலும் நிதிகள் குறைக்கப்படவில்லை என்பதையும், ஆண்டுக்கு ஆண்டு அவைகள் அதிகமாக ஒதுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பர்கள் பல்வேறு கருத்துக்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஆரம்பப் பள்ளி கட்டடங்கள் தேவையான அளவிற்கு இல்லாமல் இருக்கிறது என்ற குறைகளை எடுத்துச் சொன்னார்கள். இது பற்றி அரசாங்கம் ஒரு நல்ல முடிவு எடுத்திருக்கிறது. இது வரையில் வழக்கமாக கொடுத்துக் கொண்டு வந்த பணம், ஆரம்பப்பள்ளி கட்டடத்திற்கு ஏற்கனவே ரூ. 4,000-ம், உயர்தொடக்கப்பள்ளி கட்டடமானால் ரூ. 7,000-ம் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் அவைகளை மாற்றி இப்போது ரூ. 8,000-ம், ரூ. 13,000-ம் என்கிற அளவிற்கு மாற்றப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படி கொடுக்கப்படுவதன் மூலம், தொகையை அதிகப்படுத்தினாலும் கட்டடங்கள் அதிகப்பட முடியவில்லை என்ற நிலை இருப்பதனால், அவைகளைப் போக்குவதற்கு அந்தத் துறையிலே நாம் ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கிற ஆரம்பப் பள்ளிகளை கணக்கெடுத்ததில், ஏறத்தாழ 21,508 ஆரம்பப்பள்ளிகள் இருந்து வருகின்றன. அவற்றில் பாதிக்குமேற்பட்ட ஆரம்பப்பள்ளிகளுக்கு சொந்த கட்டடங்கள் இருக்கின்றன. இன்னும் சொந்தக் கட்டடம் இல்லாமல் இருக்கிற ஆரம்பப்பள்ளிகள் ஏறத்தாழ 9,000. அதோடு சேர்த்து இன்னும் பள்ளிகள் புதிதாக அமைக்கப்படலாம் என்று கருதி, ஆக 10,000 பள்ளிக்கூடங்களுக்கு புதிதாக கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டிய நிலை இருக்கிறது. இவற்றை கருத்தில் கொண்டு ஒரு

[திரு. மா முத்துசாமி] [1970 மார்ச் 23

ஐந்தாண்டுத் திட்டத்தை கருத்தில் கொண்டு ஆண்டு ஒன்றிற்கு 2,000 பள்ளிகள் வீதம் எடுத்து செய்யப்படுவதற்கான நிலையை மேற்கொள்ளுகிறதற்கு அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை சொல்லிக்கொள்கிறேன். இப்படி 10,000 பள்ளிக்கூடங்களுக்கு ஏற்படுகிற செலவு ஏறத்தாழ ரூ. 9 கோடிக்கு மேற்பட்ட தொகையாகும். ஐந்தாண்டு காலத்தில் இந்த அளவைப்பார்க்கிறபோது, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1½ கோடிக்கு மேலாக புதிதாக ஆரம்பப்பள்ளிக்கூடங்கள் நிர்மாணிப்பதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநகராட்சி மன்றத்தைப் பொறுத்த வரையில் நாம் கடந்த ஆண்டில் கொடுத்திருக்கிற தொகையானது குறைவல்ல என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ரூ. 190 லட்சம் கடனாக கொடுத்திருக்கிறோம். ரூ. 101 லட்சம் மானியமாக கொடுத்திருக்கிறோம். ஆக ரூ. 291 லட்சம் பல்வேறு தலைப்புகளுக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. இது அல்லாமல், வீராணம் திட்டம், கூவம் திட்டம் அமைக்கப்பட்டு செயலாற்றப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். கிராமப்புறங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்ற வாதம் பொருத்தமுடையதல்ல. ஆண்டு ஆண்டிற்கு நாம் கொடுத்துக்கொண்டு வருகிற தொகையைப் பார்க்கிறபோது, அவை கூடிக்கொண்டு வருகிறதே தவிர நிச்சயமாக குறைந்து கொண்டு வருகிறதில்லை. ஆகவே எல்லா வகையிலும் கிராமங்களுக்கு தேவையான நிதியை நாம் அதிகமாக ஒதுக்கிக்கொண்டு வருகிறோம். இந்த ஆண்டிலே கட்டடங்கள் கட்டுவதற்காக ஏற்கனவே உள்ள விதியின்படி ரூ. 52 லட்சம் தனி மானியமாக கொடுப்பதற்கு நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவைகள் நல்ல முறையிலே தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளிலும் ஏற்படுவதற்கான திட்டங்கள் அமுல் படுத்தப்பட்டு வருகிறது.

குடி தண்ணீர் வழங்குவது பற்றி சொன்னார்கள். குடி தண்ணீருக்காக தனி வாரியம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது என்பது உங்களுக்கு தெரியும். அதிலே பல உறுப்பினர்கள் சொன்னார்கள், கடனைத் திருப்பிக்கொடுப்பதற்கு சக்தியற்ற நிலையிலே இருக்கிறது, அவைகளை எல்லாம் போக்க வேண்டுமென்று சொன்னார்கள். எங்கெங்கே அந்தத் தட்டுப்பாடு இருக்கிறதோ அவற்றைப் போக்க மானியம் தரப்படுகிறது. அப்படிப்பட்ட பகுதிகளை அரசாங்கம் பரிசீலனை செய்து தேவையான அளவு மானியங்கள் கொடுப்பதற்கு நாம் இது வரையிலும் தயங்கவில்லை.

பல்வேறு நகராட்சி மன்ற திட்டங்களெல்லாம் மூன்று பிரிவுகளாக பிரித்து அந்த திட்டம் நிறைவேற்றப்படுகிறது. ஆயுள் காப்பீட்டுக் கழக உதவியோடும், அரசாங்கக் கடனோடும் நகராட்சி மன்றங்கள் அந்த திட்டங்களை மேற்கொண்டிருக்கின்றன. சுமார்



1970 மார்ச் 23] [திரு. மா முத்துசாமி]

170 ஊராட்சி மன்றங்கள் அவர்களுடைய திட்டங்களுக்கு பிரபோசல்களை கொடுத்திருக்கிறார்கள். அவை இப்போது பரிசீலனை செய்யப்பட்டு பொது இயல் துறையால் நிறைவேற்றப் படும்படியான அளவு, அவற்றை நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்வதற்கான திட்டங்களை நாம் நிச்சயமாக மேற்கொள்வோம். ஊராட்சி ஒன்றியங்கள் ஆரம்பப்பள்ளிகளுக்கு செலவழிக்கிற தொகை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. அந்த மாதிரி இந்த ஆண்டு அரசாங்கம் கொடுக்கிற மானியம் மொத்த செலவு ரூ. 27.42 கோடியாகும். சென்ற ஆண்டு ரூ. 23.50 கோடியாகும். ஏறத்தாழ 85 சதவிகிதம். இப்படி ஆண்டிற்கு ஆண்டு ஊராட்சி ஒன்றியங்கள் அவர்களுடைய சொந்த நிதியிலிருந்து அதிகமாக செலவழிக்கப்பட்டு வருகிறது. 1966–67-ல் ரூ. 344 லட்சம். 1967–68-ல் ரூ. 347 லட்சம். 1968–69-ல் ரூ. 358 லட்சம். 1969–70-ல் ரூ. 373 லட்சம். 1970–71-ல் ரூ. 392 லட்சம். இப்படி அவர்களுக்கு ஒதுக்கி இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, ஊராட்சி ஒன்றியங்கள் கல்வி வளர்ச்சிப் பணியில்தான் அதிகமாக செலவுசெய்து கொண்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு பள்ளிக்கூடங்களில் இருக்கிற முக்கியமான சங்கடங்களைப் பற்றி பல உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு அடுத்த மாதம் முடிவிற்குள்ளாக தன்னுடைய அறிக்கையை கொடுப்பதாக தெரிவித்திருக்கிறது. அதன் கருத்துக்கள் எல்லாம் வந்த பிறகு அவைகளைப் பற்றி நாம் பரிசிலித்து முடிவெடுக்கத் தயாராக இருக்கிறோம்.

நான் இன்னொன்று இப்போது மிகவும் முக்கியமாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சிலர் பேசுகிறபோது கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய அரிசன தெருக்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள் அதிக கவனம் செலுத்துவதில்லை, அவர்கள் பொது நிதியிலிருந்து அரசாங்கத்தினுடைய ஏற்பாட்டின்படி 20 சதவிகிதம் அந்த பகுதிகளுக்கு செலவழிக்க வேண்டும், ஆனால் செலவழிக்கப் படுவதில்லை என்ற குறை பரவலாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் புள்ளி விவரங்கள் அதற்கு முற்றிலும் வேறுபாடாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மூன்று ஆண்டுகளுக்கான கணக்கை நாம் பார்க்கிறபோது, மொத்தத்தில் ரூ. 1,15,54'200 1967-68-ல் செலவழித்திருக்கிறோம். அதிலே அரிசனத் தொகுதிக்கு செலவழிக்கப்பட்டிருக்கிறது ரூ. 43,98,437 ஆகும். குடி தண்ணீருக்கு ரூ. 91,16,829 மொத்தத்தில் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ரூ. 39,97,895 அரிசன காலனிகளுக்கு தண்ணீர் வழங்குவதற்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பப்பள்ளி கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ. 51,86,000 செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ரூ. 6,88,162 அரிசனத் தெருக்களுக்கு செலவழிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல 1968-69-ல் ரூ. 92,94,000 பாதைக்காக செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ரூ. 39,89,544 அரிசனத் தெருக்களுக்காக செலவழிக்கபபட்டிருக்கிறது. வாட்டர் சப்ளைக்காக, தண்ணீர் வழங்குவதற்காக ரூ. 1,49,669, 1968-69-ல் செலவழிக்கப்பட்டது. அதிலே ரூ. 44,774 அரிசனத் தெருக்களுக்காக செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1969-70-ல் ரூ. 9,57, 562 மொத்தம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ரூ. 3,97,098 அரிசனக் காலனிகளுக்கு செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் இந்த கணக்குப்படி ஆண்டிற்கு கிடைக்க வேண்டிய தொகை அரிசன நல துறையிலிருந்து ரூ. 5 லட்சம் கிடைக்க வேண்டியதில் ரூ. 2,66,000 தான் கிடைத்திருககிறது என்றாலும், அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் அந்தந்த பொறுப்புகளை ஏற்று செலவழித்திருக்கிறது. ஆகவே ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய பொது நிதியிலிருந்தும், பல்வேறு துறையிலே இருககிற நிதியிலிருநதும் அரிசன தெருக்களுக்குத் தேவையான பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. ஓவர்ஹெட் டாங்க் திட்டம்—3,286 மேநிலை திட்டங்கள் இருக்கின்றன. அவைகளிலே 478 அரிசன காலனிகளிலே இருக்கின்றன. அதுவுமல்லாமல் 942 இடங்களிலே ஊர் இந்துக்கள் வாழுகிற பகுதியிலிருந்து அரிசன காலனிகளுக்கு இணைப்புக் குழாய்கள் பொருத்தப்பட்டு தண்ணீர் வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆக இப்படி அரிசன பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன என்ற வாதத்திற்கு இடமில்லாமல் காரியங்கள் ஆற்றப்படுகின்றன என்பதையும் நான் தெளிவாக எடுத்து தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நகராட்சிகளைப் பற்றிச் சொல்கிறபோது அவற்றிலே இருக்கிற கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள். திரு. சுப்பராஜூ அவர்கள் நீர் வழங்குவதைப் பொறுத்தவரையில் உள்ள வட்டி செலுத்துவதில் உள்ள சிரமங்களையும், டெபாசிட் செலுத்துவதில் உள்ள கஷ்டங்களையும் பற்றி சொன்னார்கள். இவற்றைப் பற்றிப் பின்னால் பொதுநலத் துறை மானியத்தினைப்பற்றி விவாதிக்கின்றபொழுது விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர்நிலைப்பள்ளிகளை நகராட்சிகள் நடத்தமுடியாது என்ற கருத்தினையும் பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். உயர்நிலைப்பள்ளிகளுக்காக 50 சதவிகிதம் மானியமாக இருந்ததை 66-2/3 ஆக உயர்த்திக்கொடுத்தோம். நகராட்சிகள் ஆரம்பக் கல்வி நிலையங்களையே நடத்துவதில் சிரமம் இருக்கின்றன. எனவே உயர்நிலைப்பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். இந்த ஆண்டு அதற்கு ஒரு ஃபேஸ்டு புரோக்ராம் போட்டு படிப்படியாக அவற்றை ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. பரிசீலனைசெய்து விரைவிலே நல்ல முடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இங்கே பல உறுப்பினர்கள் பேசியபொழுது ஊராட்சி வளர்ச்சித் துறையைத் தனியாகப் பிரிக்கவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். வருவாய்த் துறையோடு இருந்தால் காரியங்கள் நல்லமுறையில் நடவாது என்றும், இதற்கென ஒரு துறை இல்லாததுபோலவும் இனிமேல்தான் உருவாக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். அதற்காக கிராம வளர்ச்சி இயக்குநர் அவர்களை வைத்திருக்கிறோம். பல்வேறு அதிகாரிகளை மாவட்ட அளவிலே வட்டார அளவிலே தொடர்புடைய அதிகாரிகள் வலுவான அளவிலே இல்லாத காரணத்தினாலே இந்தத் துறை செயல்படுவதிலே தடை இருக்கிறது. தனித் துறையாக அமைக்க வேண்டுமென்று பல்வேறு ஊராட்சித் தலைவர்கள், இங்கே சட்ட மன்ற உப்பினர்களாக இருக்கிறவர்கள் பல ஆண்டுக்காலமாக வற்புறுத்திச் சொல்லி வந்திருக்கிறார்கள். இந்த அரசு கொளகையளவிலே மனப்பூர்வமாக அதை ஏற்றுக்கொண்டுள்ளது. மாவட்ட அளவிலேயும் வட்ட அளவிலேயும் எப்படிப்பட்ட அதிகாரிகளை நியமிப்பது என்பதைப் பற்றியெல்லாம் ஒரு செயற்குறிப்பு இப்பொழுது அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அந்தத் துறை சீரமைக்கப் படவேண்டும் என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச் செய்யும் பொழுது இந்தத் துறையில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் பதவி உயர்வுகள் கட்டுக்கோப்பாக அவர்கள் பணியாற்றுதல் இவற்றைக் கவனிப்பதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரூராட்சிகளிலே பணியாற்றுகின்ற ஊழியர்களின் ஊதியத்திற்கும் ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் இவற்றில் பணியாற்றுகின்ற ஊழியர்களின் ஊதியத்திற்கும் இடையே வேறுபாடுகள் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அந்த வேறுபாடுகளைப் போக்கவேண்டுமென்று அவர்கள் நம்மிடத்திலே தெரிவித்தார்கள். ஊதியக் கமிஷன் இப்பொழுது நடைமுறையிலே இருக்கிற நிலைமை இருப்பதாலே மற்ற நிலைமைகளை ஆராயாமல் சம்பள வேறுபாடுகளைமட்டும் போக்குகின்ற வகையில் பேரூராட்சிகளிலே பணியாற்றுகின்ற ஊதியம் ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சிகளிலும் பணியாற்றுகின்றவர்களின் ஊதியத்திற்கு ஈடாக இருக்குமாறு செய்து 1—4—1970 முதல் கொடுக்க இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஹெட் கிளார்க், மேல்நிலை எழுத்தர் : இப்பொழுது 90 ரூபாயாக இருக்கின்ற அடிப்படைச் சம்பளத்தை இனி 125 ரூபாய் அடிப்படைச் சம்பளமாக உயர்த்துகிறோம். அதேபோல் கிளார்க்; கீழ்நிலை எழுத்தர் இப்பொழுது உள்ள அடிப்படைச் சம்பளமான 70 ரூபாய் என்பதை 90 ரூபாய் அடிப்படைச் சம்பளம் ஆக மாற்றுகிறோம். வருவாய்த் துறை ஆய்வாளர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 80 ரூபாய் என்று இருப்பதை 90 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறோம். டைப்பிஸ்ட், தட்டெழுத்தருக்கு இப்பொழுது அடிப்படைச் சம்பளம் 70 ரூபாய்

தான் அதை 90 ரூபாய் என்று நிர்ணயித்து இருக்கிறோம். பில் கலெக்டர்ஸ், வரித் தண்டலர்கள் இவர்களுக்கு ரூ. 55—1—70 என்று இருக்கின்ற சம்பள விகிதத்தை ரூ. 70—2—90 என்று கொடுக்கிறோம். சானிடேரி இன்ஸ்பெக்டர்ஸ் ரூ.90—3—105–4—125 என்று இருப்பதை 100—5–200 ஆக மாற்றி நிர்ணயிக்கிறோம். சானிடேரி மேஸ்திரிஸ் ரூ. 40—1—50 என்று இருப்பதை இப்பொழுது ரூ. 60—1—70 என்று உயர்த்தியிருக்கிறோம். இதன் மூலமாக 536 பேரூராட்சிப் பணியாளர்கள் பயன் அடைவர் என்பதை அரசாங்கம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறது. நம்முடைய சென்னை மாநகராட்சியிலே

(திரு. எம். பூபதி எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரமாகிவிட்டது, அமைச்சர் அவர்கள் பேசியபிறகு கேளுங்கள்.

**திரு. எம். பூபதி :** சானிடேரி ஓர்க்கர்ஸ் இருக்கிறார்கள், அவர்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒவ்வொன்றைப்பற்றியும் கேட்டுக்கொண்டு இருக்கமுடியாது.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மன்னிக்கவும். பேரூராட்சிகளிலே பணிபுரிகின்றவர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் இவற்றில் பணியாற்றுகின்றவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பள விகிதத்திற்குச் சமமாக இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடுகளை போக்கிச் சீரமைக்கப்பட்டிருப்பதைப் பற்றித்தான் நான் சொன்னேன். இதன்காரணமாக 536 பேரூராட்சிகளில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான பேர்கள் பயனடைவார்கள். நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு எல்லா இடங்களிலும் ஒரே சீராகத்தான் தரப்படுகிறது என்று கருதுகிறேன். அது தனியாகப் பரிசீலிக்கவேண்டிய ஒன்று.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் கழகம், நகராட்சித் தலைவர்கள் கழகம், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் சங்கம் இவர்கள் தங்களுக்கு கட்டடம் கட்ட தலைநகரில் இடம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். தங்களுடைய நிதியிலிருந்து கட்டடம் கட்டிக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். இப்பொழுது பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் ஒரு பகுதியில் ஒன்றியத் தலைவர் கழகம் இருக்கிறது. சென்னை நகரிலே மூன்று அமைப்புகளுக்கும் இடம் ஒதுக்கப்படும். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டு என்னை அறிவிக்குமாறு கூறியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சியின் நிதிக் கட்டுப்பாடுபற்றி பல உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் குறைகளை எடுத்துச் சொல்லி குறைகளைப் போக்குவதற்குத் திட்டம் போடவேண்டுமென்றும் பல்வேறு ஆர்கனைசேஷன்ஸ்'





அமைப்புகளை அணுகிப் பேசி, இதற்காக ஒரு குழு அமைத்து நன்கொடைகள் பெற்று அந்த நன்கொடைகளைப் பயன்படுத்த வேண்டுமென்று நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். எந்த எந்த சங்கங்கள் இருக்கின்றனவோ அவற்றைக் கலந்துபேசி, சீரணியை எந்த அளவிற்குப் பயன்படுத்தமுடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

மாநகராட்சியின் சீரமைப்பு குறித்து உயர்மட்டக்குழு தன்னுடைய வேலையை முடித்துவிட்டது, இன்னும் சில நாட்களில் அறிக்கை தரவிருக்கிறது. அதன்மூலம் மாநகராட்சியின் நிதி நிலையைச் சரிக்கட்டுவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம் என்பதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

சென்னை மாநகராட்சி மிட்டே மீல்ஸ் பொறுத்தவரையில் தன்னுடைய சொந்தச் செலவிலே அதை வழங்கிவருகிறது. அரசாங்கம் கல்வித் துறையிலிருந்து நிதி ஆறு பைசா என்ற அளவிற்கு மற்ற நகராட்சிகளுக்குக் கொடுத்துவருகிறது. அந்த மாதிரி சென்னை மாநகராட்சிக்கும் தரவேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். இதையும் அந்தக் குழுவின் அறிக்கை வந்தபிறகு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு உறுப்பினர்களும் கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தை பற்றிச் சில பிரச்சினைகளைச் சொன்னார்கள். வாரியத்திலே பணியாற்றுவோரின் எண்ணிக்கை 3,000-க்கு மேல் இருக்கிறது. பல்வகையான பணியாளர்களின் பணியை வரன்முறைப்படுத்த செப்டம்பர் 1966-இல் விதிமுறைகள் செய்யப்பட்டு ஜூலை 1969-இல் பணி வரன்முறைக்கான பாதுகாப்பு விதி (சேவிங்ஸ் கிளாஸ்) பிறப்பிக்கப்பட்டது. அதனால் 220 பேர் தவிர மற்ற பணியாளர்கள் அனைவருடைய பணியும் வரன்முறைப்படுத்தப்பட்டது. இந்த 220 பேர்களின் பணி வரன்முறையும் விரைவில் செய்து முடிக்கப்படும்.

அரசு ஊழியர்களுக்கு இருப்பதுபோன்று இவர்களுக்கும் வருங்கால வைப்பு நிதி ஏற்பாடும், ஓய்வூதிய வசதியும் செய்யப்பட்டது. புதிதாக இந்த ஆண்டில் அவர்கள் வீடுகட்டிக் கொள்வதற்காக கடன் அளிக்க ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தவிர திருமணக் கடன் மற்ற அரசு ஊழியர்களைப்போல் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறளகம் கட்டுவதற்காக அரசிடமிருந்து பெற்ற கடன் 29 இலட்சத்தை இந்த ஆண்டிலே திருப்பிக் தந்திருக்கிறோம்.

கதர் பொருள்களுக்கு விற்பனை வரியில் இருந்து விலக்களிக்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு விலக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு காந்தி பொருட்காட்சி ஒன்றைக் கோவையில் ஒரு லட்சம் ரூபாய் செலவில்

[திரு. மா. முத்துசாமி] [1970 மார்ச் 23

நிரந்தரமாக அமைக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அரிசி கொள்முதலில் விதிவிலக்குக் கொடுக்க வேண்டுமென்று தஞ்சை மாவட்டத்திற்கும் கேட்டிருக்கிறார்கள். அது பரிசிலனையில் இருக்கிறது. விரைவாக உத்தரவுகள் போடப்படும்.

சென்ற ஆண்டு நோட்டு புத்தகங்கள் தலைவர் படங்களை வைத்து அச்சிட்டு வழங்கியதன் மூலம் 60,000 ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் விற்கப்பட்டன. இந்த ஆண்டு மூன்று லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஆறு லட்சம் நோட்டுகள் தயாரிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. ஒரு லட்சம் ரூபாய்க்கு சிலேட்டுகள் தயாரித்துக் கொடுக்கப்படும்.

இதுவரை இல்லாத முறையில் தொழிற்பேட்டைகளை நடைமுறை ஆண்டில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளோம். வீடு கட்டும் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. அதற்கு மத்திய அரசு பத்து கோடி ரூபாய் நிதி உதவி வேண்டுமென்று உள்ளாட்சித் துறையின் மூலம் கேட்கப்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு இந்தத் துறையின் அதிகாரிகளும் மற்றவர்களும் முயற்சி எடுத்துப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வறட்சி நிலைமை ஏற்பட்ட நேரத்தில் ஏறத்தாழ 10 கோடி ரூபாய் தமிழகத்தில் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதிலே 80 சதவிகிதம் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகச் செலவழிக்கப் பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கலந்து கொண்டு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தியிருக்கிறார்கள். பயனுள்ள திட்டத்தை மிகக் குறுகிய காலத்தில் சிறப்பான முறையில் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களும், நகராட்சி அலுவலர்களும் செய்து முடித்ததற்காகப் பாராட்டுகிறேன்.

சென்ற ஆண்டு நகராட்சித் தேர்தல்கள் நல்ல முறையில், கசப்புணர்ச்சிக்கு இடம் இல்லாமல் நடைபெற்று முடிந்தது தமிழகத்தின் தலைசிறந்த தன்மைக்கு எடுத்துக்காட்டாகும். இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் ஊராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தத் திட்டமிட்டிருக்கிறோம். மதிப்பிற்குரிய பூவராகன் அவர்கள் 'ஏன் தேர்தலை தள்ளி வைத்தீர்கள்? ஜனநாயகத்திலே தேர்தலை ஒத்திப் போடுவது சரியல்ல; இவ்வாறு தள்ளி வைப்பதற்கு என்ன காரணம்,' என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். 1965-ல் தேர்தல் நடந்தது. 1969 பிப்ரவரி மாதத்தில் அடுத்த தேர்தல் நடந்திருக்க வேண்டும். ஆனால் ஆறு மாத காலத்திற்கு ஒத்தி வைத்தோம். அதற்கு முன்னாலே எப்போது தேர்தல் நடந்தது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். 1956-ம் ஆண்டு நடந்த தேர்தலுக்குப் பிறகு 1965-ல் தான் நடைபெற்றிருக்கிறது என்று கருதுகிறேன். இடையில் எத்தனை ஆண்டு காலம் ஓடியிருக்கிறது? எத்தனை முறை தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது? இப்போது தள்ளப் பட்டிருப்பதற்குக் காரணம் நம்மால் ஏற்பட்ட குறை அல்ல. மத்திய அரசு ஓர் உத்தரவைப் பிறப்பித்தது. சட்டமன்ற



1970 மார்ச் 23] [திரு. மா. முத்துசாமி]

உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்காளர் பட்டியலை வைத்து தேர்தலை நடத்துகிறோம். ஊராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக அந்த வாக்காளர் பட்டியலைப் புதுப்பித்துத் தரவேண்டுமென்று கேட்ட நேரத்தில் அவர்கள் 'சட்டமன்றத் தேர்தல் நடத்தும்போதுதான் புதுப்பிப்போம்; இப்போது அதைப் புதுப்பிப்பது எங்கள் கடமை அல்ல' என்று கூறி விட்டார்கள். அதனால் ஊராட்சி மன்றத் தேர்தலை நடத்த தனி வாக்காளர் பட்டியலைத் தயாரிக்கும் பொறுப்பு வந்தது. கன்னியாகுமரி மாவட்டத்தைச் சீர்திருத்தி அமைக்கும் பொறுப்பும் வந்தது. மூன்றாவதாக, திராவிட முன்னேற்றக் கழகம் நீண்ட நெடுங்காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கும்—அதாவது ஊராட்சி மன்றத் தலைவர்களையும் இந்த முறை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதற்காக சட்டத்தைப் பிறப்பிக்கும் நிலைமை ஏற்பட்டு, ஏற்கனவே அதற்கு இந்த மன்றத்தில் ஒப்புதல் வாங்கப்பட்டிருக்கிறது. இந்தக் காரணங்களுக்காகத்தான் தள்ளி வைத்தோம். இதற்கிடையில் மத்திய அரசு பாராளுமன்றத்திற்கான இடைத் தேர்தல் வரும் என்று கருதிய காரணத்தால் இங்கே நடைபெறுகின்ற வேலைகளை நிறுத்தச் சொன்னதன் பேரில் இரண்டொரு மாதங்கள் ஒன்றும் செய்ய முடியாமல் போய் விட்டது. தவிர்க்கப்பட முடியாத காரணத்தால் நாலைந்து மாதங்கள் தள்ளி வைத்திருக்கிறோமே தவிர, வேறு காரணம் அல்ல. திட்டமிட்டபடி ஜூலை மாதத்தில் தேர்தல் நடந்து விடும்.

ஊராட்சி தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்காக வகை செய்யப்படும் சட்டம் வருமா என்று திரு. விநாயகம் அவர்கள் கேட்டார்கள். நான் உறுதியாகச் சொல்லுகிறேன். இந்தத் தொடர் கூட்டத்திலேயே அந்த மசோதா இந்த மன்றத்திலே அறிமுகப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். 13,000 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. ஒரு ஊராட்சி மன்றத்திற்குப் பத்து பிரிவுகள் என்றாலும் 1,30,000 என்ற அளவுக்கு வருகிறது. அத்தனை இடங்களில் தேர்தலை நடத்தும் பொறுப்பு இருக்கிறது.

இதிலே கட்சிகள் வரக்கூடாது என்று சொன்னார்கள். கட்சி அடிப்படையில் போட்டி போட வேண்டுமென்று சொல்லவில்லை. கட்சிகளுக்கு அப்பாற்பட்டு ஊராட்சி மன்றங்கள் இயங்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் திட்டம். ஆங்காங்கு இருப்பவர்கள் தங்களுடைய கட்சிக்காரர்களைக் கொண்டு வர வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடலாமே தவிர, கட்சி அடிப்படையில் நடைபெறும் காரியம் அல்ல. அதற்கு அவ்வளவு பேரும் ஒத்துழைக்க வேண்டும்.

ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், மாநகராட்சி மன்றம் ஆகியவைகளும், அவற்றிலே பணிபுரிகின்ற ஊழியர்கள், கிராமக் கைத்தொழில் வாரிய ஊழியர்கள் அனைவரும்

[திரு. மா முத்துசாமி] [1970 மார்ச் 23

மிகச் சிறப்பான முறையில் காரியங்களை வெற்றிகரமாக நடத்திக் கொடுப்பதற்காக அவர்களுக்கெல்லாம் எனது இதயங்கனிந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காந்தி நூற்றாண்டு விழாவையொட்டி பல புதிய காரியங்களை மேற்கொண்டு சிறப்பான முறையில் காரியமாற்றி இருக்கிறார்கள். இனி வரும் நாட்களிலும் பள்ளிக்கூடம் அமைத்தல், பாதைகள் அமைத்தல், குடி-தண்ணீர்த் திட்டத்தை ஏற்படுத்துதல், கிராமப் புறங்களுக்கு மின்சாரத்தை வழங்குதல் ஆகிய காரியங்களில் ஈடுபடுவார்கள். பொதுவாகச் சொன்ன கருத்துக்களைத் தவிர அங்கத்தினர்கள் கூறிய பல கருத்துக்களையும் மனதில் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து, இதற்கு வெட்டுப் பிரேரணை கொடுத்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிகவும் பெருந்தன்மையோடு அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, ஒதுக்கப்பட்ட தொகையை வழங்கியருள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்ளுகிறேன். (வணக்கம்)

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது கன்னியாகுமரி மாவட்டத்திலே வளர்ச்சி மன்றக் கூட்டம் நடக்கும்போது இடையிலே எழுந்து போய் விட்டார் என்று என்னைக் குறித்துத்தான் சொன்னார். முன்பு ஒருமுறை இந்தச் சட்டமன்றத்தில் விவாதம் வந்தபோது இதைக் குறித்து நான் கூறினேன். கூட்டம் அஜெண்டா இல்லாமல் கூட்டப்பட்டது. பஞ்சாயத்தைச் சீரமைப்புச் செய்வதற்கான முறையில் அஜெண்டா எதுவும் கிடையாது. அன்றைய நிகழ்ச்சி அத்தனையும் முடிவடைந்துவிட்டது என்று சொல்லிய பிறகு கூட்டம் முடிவதற்கு ஒருசில நிமிஷங்களுக்கு முன்னால்தான் வெளியே போனேன். அதையொட்டி அந்தக் கூட்டத்தில் நடந்த ஒழுங்கீனங்கள் அத்தனையையும் குறிப்பிட்டு எங்கள் மாவட்டத்தில் உள்ள ஏழு சட்டமன்ற உறுப்பினர்களில் ஆறு பேர் கையெழுத்துப் போட்டு அமைச்சர் அவர்களுக்கு ஒரு மனுக் கொடுத்தோம். அது என்ன ஆயிற்று என்று இதுவரை அரசாங்கம் அறிவிக்கவில்லை. அமைச்சர் அவர்கள் அதைப் பற்றிக் கூறுவார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பஞ்சாயத்து சீரமைப்புத் திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். அவற்றை ஏற்றுக் கொண்டு உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறார்கள். ஒன்றை நான் விளக்க விரும்புகிறேன். ஜில்லா முழுவதும் தேர்தல் நடத்தியாக வேண்டியிருந்தது. திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தோம் என்று சொன்னால் உரிய காலத்தில் தேர்தலை நடத்த முடியாமல் போய்விடும். தேர்தல் முடிந்துவிட்டாலும், மறுபரிசீலனை செய்யவும் தேவையான திருத்தங்களைச் செய்யவும் அரசாங்கத்திற்கு வாய்ப்பு இருக்கிறது. உறுப்பினர்களுடைய கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. அவை புறக்கணிக்கப்பட்டதாகப் பொருள் இல்லை. பாதியிலே



1970 மார்ச் 23] [திரு. மா. முத்துசாமி]

போய்விட்டதாக முன்பு அவர்களே இந்த மன்றத்தில் சொன்னார்கள். அவர்கள் சொன்னதைத்தான் நான் திருப்பிச் சொன்னேனே தவிர, புதிதாக நான் ஒன்றும் சொல்லவில்லை. இந்தத் திட்டங்கள் ஓரளவுக்கு முடிவுற்ற நிலையில் இருப்பதால் மீண்டும் எடுத்துக் கொள்ளப்படுமானால், உரிய காலத்தில் தேர்தலை நடத்த முடியாமல் போய்விடும். முடிவுக்கு வந்துவிட்ட நிலையில், பின்னாலே மாற்ற வேண்டிய நிலை இருந்தால் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுது நிதிக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

நிதிக் கோரிக்கை 22-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்பட்டது.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

### (2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

**(ஈ) முதலமைச்சர் ஒரு துண்டு நோட்டீஸைப்பற்றி குறிப்பிடுவதற்கு பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றாரா என்பது குறித்து**

THIRU T. MARTIN : I rise to raise a point of order under Rule 83. I will state it now.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விதி 83 பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப உரிமை கொடுக்கிறது. எந்த விதி மீறப்பட்டிருக்கிறது என்று கூறுங்கள்.

THIRU T. MARTIN : Even before raising the point of order. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கனவே மணி இரண்டு ஆகிவிட்டது. எந்த விதி மீறப்பட்டிருக்கிறது என்று கூறுங்கள்.

THIRU T. MARTIN : Please allow me to mention the point of order.

மாண்புமிகு உறுப்பினர் நல்லசிவம் அவர்கள், எஸ்.எஸ்.பி.யைச் சேர்ந்த அவர்கள் வெளிநடப்பு செய்திருந்தார்கள். அந்த நேரத்தில் எஸ்.எஸ்.பி. தலைவராகவும், உறுப்பினராகவும் இருக்கக் கூடிய நல்லசிவம் அவர்களைப்பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கு சொல்கிற நேரத்தில் ஒரு துண்டு நோட்டீஸை, அவர் ஏதோ தண்ணீரை தன் சொந்த நிலத்திற்கு பாய்ச்சினார் என்று அந்தக் கிராமத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் அடித்த நோட்டீஸ் என்ற ஒரு நோட்டீஸை இங்கு ரெஃபர் செய்து அதன் கண்டென்ட்ஸை சொன்னார்கள். நான் வேண்டுவதெல்லாம், முதல் அமைச்சர் அவர்கள் இங்கு அந்தத் துண்டு நோட்டீஸை, பற்றிச் சொல்வதற்கு முன்பு தங்களிடம் அனுமதி பெற்று அதைச் சொன்னார்களா அல்லது அதை . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையில் அறிக்கை வைக்கும் முறையில் சொல்லவில்லை. ஆகவே தலைவரின் அனுமதியைப் பெற வேண்டிய தேவை இல்லை. இப்படியெல்லாம் கூறப்படுகிறது என்று சொன்னார்களே தவிர அது அவையில் வைக்கப்பட்ட நோட்டீஸ் அல்ல. அவையில் வைக்கப்படவேண்டும் என்ற முறையில் இருந்தால்தான் தலைவரின் அனுமதியைப் பெறவேண்டும்.

### (7) 1970–71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 22—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 18,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 23-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

திரு. இல. பலராமன், திரு. கே. போஜன், திருமதி கே. பி. ஜானகியம்மாள், திரு. ஏ. அ. சுப்பராஜா ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,04,88,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 29-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. க. இராமமூர்த்தி, திரு. சோ. அழகர்சாமி, திரு. பி. எஸ். தனுஷ்கோடி, ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,99,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். (வணக்கம்)

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### 9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

*A. Statutory Rules and Orders.*

**'Nil'**

*B. Reports, Notifications and Other papers.*

@ 84. A Review on Road Transport in Tamil Nadu 1969–70 (Tamil).

@ 85. A Review on Nationalised Transport in Tamil Nadu 1969–70 (English and Tamil).

@ 86. Speech by Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Public Works on the Demand on Motor Vehicles Acts—Administration 1970–71 (English).

% 87. Speech by Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Public Works on the Demand on Motor Vehicles Acts—Administration 1970–71 (Tamil).

†88. Policy Note on Demand No: 29—Public Works—Grants-in-Aid—1970–71 (English and Tamil).

89. Report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on the Directorate of Handlooms (Fifteenth Report).

90. Report of the Committee on Estimates on Forests (Sixteenth Report).

91. List of Unstarred questions and answers from Nos. 1 to 40.

% Placed on the Table of the House on 21—3—1970.

@ Despatched to Members on 20—3—1970.

† Despatched to Members on 21—2—1970.

## இணைப்பு I.

[228 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### கிராமத் தொழில்கள்.

### 2. கதர்த் தொழில்கள்.

கிராமங்களில் வேலை வாய்ப்பற்றோருக்கும், போதிய வேலையற்றோருக்கும் கதர், கிராமத் தொழில்கள் பெருமளவில் வேலை வாய்ப்பளிக்க வகைசெய்வதால், கதர், கிராமத் தொழில்களின் வளர்ச்சியில் இவ்வரசு மிக்க ஈடுபாடு உடையாது. கதர்த் திட்டத்தின் கீழ், நாட்டு இராட்டைகளில் 7,255 நூற்பவர்களுக்கும், அம்பர் இராட்டைகளில் 12,890 நூற்பவர்களுக்கும், டெக்ஸ்டுல் இராட்டைகளில் 1,304 நூற்பவர்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கிறது. 1968–69-ம் ஆண்டில் இவ்வகை நூற்பவர்கள் ஈட்டிய மொத்த ஊதியம் சுமார் ரூ. 52.34 லட்சமாகும். இவர்கள் 1969-70-ல் ரூ. 58.75 லட்சமும், 1970-71-ல் ரூ. 61.00 லட்சமும் ஊதியம் ஈட்டக்கூடும் என்று மதிப்பிடப்படுகிறது. அன்றியும், சுமார் 3,377 நெசவாளர்கள் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் 1968–69-ல் ஈட்டிய ஊதியம் ரூ. 40.46 லட்சம், 1969–70-ல் ரூ. 51.00 லட்சம் ஈட்டினர். 1970–71-ல் ரூ. 61.00 லட்சம் அவர்கள் ஊதியம் ஈட்டக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைப்போலவே, கிராமத் தொழில்களின்கீழ் 2.9 லட்சம் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. 1968–69-ல் ரூ. 304.50 லட்சம் ஊதியமாக வழங்கப்பட்டது. இத் தொழிலில் 1969–70-ல் 3.15 லட்சம் பேருக்கும் 1970–71-ல் 3.33 லட்சம் பேருக்கும் வேலை வாய்ப்புக் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்திற்குப் பொறுப்பு வகிக்கும் தமிழ்நாடு கதர், கிராமத் தொழில் வாரியம் 3,155 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. 1968-69-ல் பணியாளர் குறித்தச் செலவு, “கதர்” என்பதன்கீழ் 43.12 லட்சமும், கிராமத் தொழில்களின்கீழ் 26.75 லட்சமும் ஆயிற்று. இத்தகைய திட்டங்கள் கதர், கிராமத் தொழில் ஆணைக் குழுவின் உதவியைக்கொண்டே பெரும்பாலும் நிறைவேற்றப்படுகின்றன. 1969–70-ல் இவ்வரசு கதருக்காக ரூ. 16.62 லட்சமும் கிராமத் தொழில்களுக்காக ரூ. 11.22 லட்சமும் மானியமாக மட்டுமே இவ்வரசு வழங்குகிறது. 1970–71-ல் கொடுக்கப்படும் இந்த மானியத் தொகை கதருக்காக ரூ. 9.89 லட்சமும் கிராமத் தொழில்களுக்காக ரூ. 11.00 லட்சமும் ஆகும்.

இம் மாநிலத்திலும் கிராமப்புறப் பகுதிகளிலும் வேலைவாய்ப்பின்மை பெருகி வருவதைத் தொடர்ந்து கதர், கிராமத்தொழில் வளர்ச்சி தனி முக்கியத்துவம் பெறுகிறது. இத்தகைய திட்டங்களின்மூலம் மேலும் வேலை வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமாயின், விற்பனையில், அதிலும் முக்கியமாகக் கதர் விற்பனையில் முயற்சிகளை முனைப்பாக்க வேண்டும். அரசு ஊக்கமுடன் அளிக்கும் உதவியைப்







பெற்று வாரியம் கடந்த மூன்று ஆண்டுகளாக திட்டத்தின் இந்தக் கூறில் அரசு நாட்டமுடன் பணியாற்றி வந்துள்ள கீழ்க்காணும் புள்ளி விவரங்களே இதற்குப் போதிய சான்றாகும்.

### கதர் விற்பனை.

| 1968-69. | 1969–70 (15–1–1970 வரை.) | 1970–71. (மதிப்பீடுகள்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 2,21·45 | 2,84·00 | 3,00·00 |

மேற்சொன்ன புள்ளி விவரங்களில் இருந்து விற்பனை சிறிது சிறிதாகப் பெருகி வந்துள்ளதைக் காணலாம். காந்தி நூற்றாண்டான 1969-70-ல் விற்பனை 3 கோடி அளவை எட்டக்கூடும் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது. மேலும், காந்தி நூற்றாண்டில் காந்தி அடிகள் பிறந்த நாள் முதற்கொண்டு 30 நாட்கள் கொண்ட கால அளவில் ஒவ்வொரு ஆண்டிலும் இவ்வாணைக் குழு விற்பனையில் சிறப்புத் தள்ளுபடி அளித்து வருகிறது. பெருமளவு விற்பனை இவ்வாண்டில்தான் ஏற்பட்டது. கடந்த நான்கு ஆண்டுகளில் விற்பனையில் காணப்படும் முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது :—

(ரூ. லட்சத்தில்.)

| | |
|---|---|
| 1966–67 .. .. .. .. | 146·97 |
| 1967–68 .. .. .. .. | 156·08 |
| 1968–69 .. .. .. .. | 176·48 |
| 1969–70 .. .. .. .. | 241·53 |

கடந்த ஆண்டுகளைவிட இவ்வாண்டில் கதர் விற்பனை சுமார் 60 லட்சம் அளவுக்கு வியத்தகு உயர்வு ஏற்பட்டுள்ளது.

கதர், கிராமத்தொழில்கள்மூலம் ஆக்கப்படும் பொருள்களின் விற்பனையை மேலும் விரிவுபடுத்துவதற்கு, சென்னை குறளகத்திலும், திருச்சியிலும் பெரிய விற்பனை நிலையங்களை வாரியம் திறந்தது. கோயம்புத்தூரில் மற்றொரு விற்பனை நிலையம் தயாராகி வருகிறது. பெரிய விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கு மதுரை, சேலம் ஆகிய இடங்களும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன.

கதர்த் துறை பெருவாரியான நூற்பாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்த போதிலும், உண்மையில் நூற்பாளர் ஈட்டுகின்ற ஊதியம் குறைவு என்பது இத் துறையில் ஈண்டு அடுத்துக் கவனிக்கவேண்டிய முக்கியக் கூறு எனலாம். கடந்த மூன்றாண்டுகளில், சீர் பெற்ற ராட்டைகளை இத்துறையில் செயலுக்குக் கொண்டுவர முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. இதனால் நூற்பாளர்கள் உயர்ந்த ஊதியம் பெறக்கூடும். பரம்பரை நூற்பாளர் ஈட்டுகின்ற சராசரி நூற்பு ஊதியம் ரூ. 50 ஆகும். அம்பர் ராட்டை நூற்பவர் ஈட்டும் ஊதியம் ரூ. 71. இதற்கு மாறாக ஆறு கதிர்கள் கொண்ட “டெக்ஸ்டுல்” ராட்டையில் நூற்பவரின் சராசரி நூற்பு ஊதியம் ரூ. 211. 12 கதிர் ராட்டையில் ரூ. 343 ஊதியம் உண்டு. 1970–71-ஆம் ஆண்டில் ஆறு கதிர் வகையான

1,250 ராட்டைகளையும், 12 கதிர் வகையைச் சேர்ந்த 1,000 ராட்டைகளையும் செயலுக்குக் கொண்டுவர வாரியம் திட்டமிட்டு வருகிறது. இவற்றின் வாயிலாக 3,500 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும். இத்தகைய ராட்டைகளைச் செயலுக்குக் கொண்டு வருவதால், சிக்கன ஊதியத்தில் வேலை வாய்ப்பு, வசதிகள் கணிசமாகப் பெருகும். இத்துடன் கதர் விற்பனை மேலும் அதிகரிப்பதற்குத் தடையாக உள்ள கதர் விலையைக் குறைப்பதற்கும் இது உதவியாக இருக்கும்.

கதர் விற்பனை ஒருபுறமிருக்க, கதரின் பயனைப் பலரும் அறியவும் பிற ஏற்பாடுகளை இவ்வாரியம் செய்து வருகிறது. தங்கள் கதர்த் துணிகளில் பெரும்பாலானவற்றிற்கு சித்திர வேலைப்பாடுகள் மிகுந்த அச்சுப் போடுவதற்கு பம்பாயைப் பெரிதும் இத் துறை நம்பியிருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக ஈரோட்டில் துணி அச்சுத் தொழில் உத்தியை புதுமையாக்குவதற்குரிய ஏற்பாடுகளை வாரியம் மேற்கொண்டுள்ளது. இப்போது கதர்த் துணிகள் அனைத்தும் ஈரோடு, திருப்பூரிலேயே அச்சிடப் பெறுகின்றன. இதன் பயனாக உள்ளூர் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகள் ஏற்படுகின்றன. இப்போது சித்திர வேலைப்பாடு மிக்க அச்சிடப் பெற்ற கதர்த்துணிகளை எல்லோரும் விரும்பி வாங்குகின்றனர்.

ஆண்டுதோறும், சித்திர வேலைப்பாடு மிக்க அச்சிட்ட கதர்த் துணிகளின் விற்பனை அதிகரித்து வருகிறது. இதைப்போலவே, வெவ்வேறு மக்கள் விரும்பும் வெவ்வேறு ரகங்களில் ஆயத்த உடைகள் தயாரிக்கப்படுகின்றன. கதர்ப்பட்டு பிரசித்தமாகி வருகிறது. எனவே, ஆண்டுதோறும் ரூ. 50 லட்சத்திலிருந்து ரூ. 60 லட்சம் மதிப்புக்கு கதர்ப்பட்டு உற்பத்தியை அதிகரிக்கவும் திட்டமுள்ளது.

1968–69 முதல் 1970–71 வரையிலான காலத்தில் பட்டு உற்பத்தியும் விற்பனையும் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

**உற்பத்தி**

(ரூ. லட்சத்தில்)

| | |
|---|---|
| 1968–69 .. .. .. | 167·59 |
| 1969–70 .. .. .. | 220·00 (மதிப்பிடப்பட்டது) |
| 1970–71 .. .. .. | 252·00 (மதிப்பிடப்பட்டது) |

**விற்பனை**

(ரூ. லட்சத்தில்)

| | |
|---|---|
| 1968–69 .. .. .. | 221·45 |
| 1969–70 .. .. .. | 300·00 (மதிப்பிடப்பட்டது) |
| 1970–71 .. .. .. | 300·00 (மதிப்பிடப்பட்டது) |



கதர் மன்றத்தின் நிதி நிலை விவரம் சுருக்கமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | 1968–69 கணக்குகள். | 1969–70 திட்ட மதிப்பீடு. | 1969–70 திருத்த மதிப்பீடு. | 1970–71 திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்) | | | |
| வருவாய்க் கணக்கு செலவு | 321·61 | 420·10 | 444·20 | 500·39 |
| வருவாய்—துறை வாரியான வருவாய். | 194·48 | 322·61 | 339·36 | 404·91 |
| கதர் கிராமத் தொழில்கள் ஆணைக் குழுவிடமிருந்து கிடைக்கும் மானியம். | 70·80 | 63·51 | 60·98 | 57·52 |

பம்பாயிலுள்ள கதர்-கிராமத் தொழில்கள் ஆணைக் குழுவிடமிருந்து எதிர்பார்க்கும் கடன் உதவியும் மானிய உதவியும் பின் வருமாறு :—

| | 1968–69 கணக்குகள். | 1969–70 | 1970–71 |
|---|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்). | | |
| **மானியம்** | | | |
| தள்ளுபடித் தொகைகளும் உதவித் தொகைகளும். | 58·12 | 57·88 | 55·75 |
| பிற மானியங்கள் .. .. | 12.68 | 3·10 | 1·77 |
| **கடன்—** | | | |
| நடைமுதல் நிதி முன்பணம். | 1·00 | 0·12 | 0·10 |
| பிற கடன்கள் .. .. | 2·35 | 24·43 | 33·47 |

1969–70 இறுதியில், கதர், கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து கடனாகப் பெற்ற தொகை ரூ. 244.52 லட்சம்.

வாணிபத் துறை சாராத வேலைகளில் மட்டுமே, ரெவின்யூக் கணக்கில் ஏற்படும் பற்றுக் குறையை ஈடு செய்ய அரசு மானியம் வழங்குகிறது. நிகரச் செலவு அடிப்படையில் மாநில அரசால் கிடைக்கக்கூடிய மானியம் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1968–69 கணக்குகள். | 1969–70 திட்ட மதிப்பீடு. | 1969–70 திருத்த மதிப்பீடு. | 1970–71 திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| | (ரூ. லட்சத்தில்.) | | | |
| வருவாய்க் கணக்குகள் .. | 321·61 | 420·10 | 444·20 | 500·39 |
| மாநில அரசு அளிக்கும் மானியம். | 12·00 | 12·00 | 16·62 | 9·89 |

நிகரச் செலவு அடிப்படையில் மாநில அரசு மூலம் கிடைக்கக் கூடிய மானியம், வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையில் ஒரு சிறு பகுதியே என்பதைக் காணலாம்.

1969-70 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், நிகரச் செலவு மானியமாக வாரியம் ரூ. 23.73 லட்சம் கடன் பெற்றுள்ளது. இது 1968–69, 1970–71-ம் ஆண்டுகளில் பெற்ற தொகைகளோடு ஒப்பிடுகையில் மிகவும் அதிகமேயாகும். வாரியம் தனிப்பட அமைக்கப்பட்ட பின்னரும் கதர் பணித் திட்டங்களின்கீழ் கணக்குகளைத் தொடர்ந்து தணிக்கை செய்த மாநில வாணிகத் திட்டங்களின் தலைமைத் தணிக்கையாளருக்கு 1965-66 உட்பட தணிக்கைக் கட்டணங்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை என்பதுதான் இதற்குக் காரணம். 1969 ஜனவரியில் மாநில வாணிகத் திட்டத்தின் தலைமைத் தணிக்கையாளர் செய்த தணிக்கைக்கான செலவை 1966–67 முதல் வாரியமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாக மாநில அரசு விளக்கியது. எனவே, நிலுவைக் கட்டணம் உட்பட தணிக்கைக் கட்டணங்களைச் செலுத்த 1969–70 திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து இத் தொகை 1969-70 திருத்த மதிப்பீட்டில் குறைக்கப்பட்டுவிட்டது.

1968–69 ஆண்டு முதல்—பொதுக் கணக்கில் வாரியத்தில் உள்ள மா[illegible] கையடைத் தொகை இருப்புகளின்மீது 4½ சதவீத வட்டி செலுத்த அரசு ஒப்புக்கொண்டது. 1969-70, 1970-71 ஆண்டுகளுக்காக அரசு வழங்கிய மானியம் குறைந்ததற்கு இதுவே காரணம்.

## கிராமத் தொழில்கள்.

செக்கு ஆலைச் சங்கங்களில் அதிகமாகத் தேங்கிவிட்ட பிண்ணாக்குகளிலிருந்து எண்ணெய் எடுப்பது பற்றிய சிக்கலைத் தீர்க்கவும், அவற்றிலிருந்து வண்டல் எண்ணெயை இறக்குவதற்கும நாமக்கல்லில் எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஒன்றை கிராமத் தொழில்கள் என்பதன்கீழ் ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. சலவைத் தொழில் சவுக்காரம் (Soap) உற்பத்தி செய்வதோடு, முழு வசதியுடைய வாசனை சோப்பு தயாரிப்புத் தொழில் பிரிவு ஒன்று தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் குடியானவர்கள் தங்கள் விசையேற்றங்களையும், வேளாண்மைக் கருவிகளையும், பழுது பார்த்து செப்பனிட்டுக் கொள்வதற்காக, பழுது பார்த்தல் வசதிகளைச் செய்து கொடுக்கும்பொருட்டு, கருமார்-தச்சுத் தொழிலின்கீழ் பதின்மூன்று நடுத்தர பணிக்களரிச் சங்கங்கள் பதிவாகியுள்ளன. 1970–71-ல் மேலும் 10 சங்கங்கள் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது, சுமார் 32.83 லட்சம் மதிப்புடைய பனைநார் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. பெருவாரியான வேலை வாய்ப்பு வசதிகளைச் செய்துகொடுக்கும் பொருட்டு சில வெளி நாடுகளில் பனைநார்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்ற பனை நார் கற்றைகளை (rusues போல நமது மாநிலத்திலேயே அத்தகைய பனைநார் கற்றைகளைத்



தயாரிப்பதற்குரிய சாத்தியக் கூறுகளைக் கண்டறிய ஆய்வொன்று மேற்கொள்ளுமாறு பம்பாயிலுள்ள கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவை இவ்வாரியம் கேட்டுக்கொண்டது.

1968–69, 1969–70, 1970–71 ஆண்டுகளில் கிராமத் தொழில்களின் உற்பத்தி, விற்பனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

### உற்பத்தி

(ரூ. லட்சத்தில்)

| | |
|---|---|
| 1968–69 .. .. | 927·23 |
| 1969–70 .. .. | 955·72 (மதிப்பிடப்பட்டது). |
| 1970–71 .. .. | 1,086·47 (மதிப்பிடப்பட்டது). |

### விற்பனை

(ரூ. லட்சத்தில்)

| | |
|---|---|
| 1968–69 .. .. | 1,023·23 |
| 1969–70 .. .. | 1,093·54 (மதிப்பிடப்பட்டது) |
| 1970–71 .. .. | 1,279·70 (மதிப்பிடப்பட்டது) |

கிராமத் தொழில்கள் வரவு-செலவுத் திட்டத்தின் நிதிநிலை விவரம் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூ. லட்சத்தில்.)

| | 1968–69 கணக்குகள். | 1969–70 திட்ட மதிப்பீடு. | 1969–70 திருத்த மதிப்பீடு. | 1970–71 திட்ட மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| வருவாய்க் கணக்கு—செலவு | 55·47 | 75·05 | 108·44 | 115·77 |
| வரவுகள்— | | | | |
| துறைகள் மூலம் வரவுகள் | 24·12 | 64·06 | 58·51 | 69·36 |
| கதர்–கிராமத் தொழில்கள் ஆணைக்குழுவிடமிருந்து பெற்ற மானியம். | 9·29 | 12·73 | 21·95 | 13·83 |
| கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கிய கடன்களும் முன் பணமும்— | | | | |
| செலவு .. .. | 46·92 | 105·06 | 113·49 | 60·42 |
| வசூலானத் தொகை | 57·82 | 70·62 | 126·60 | 110·14 |
| கதர்–கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து பெற்ற கடன் தொகை. | 52·62 | 136·84 | 172·74 | 76·58 |
| கதர்–கிராமத் தொழில் ஆணைக் குழுவிற்குக் கடனைத் திருப்பிக்கொடுத்தல். | 88·70 | 104·64 | 162·30 | 94·51 |

[1970 மார்ச் 23

1969-70-ம் ஆண்டு இறுதியில் கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவிற்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் நிலுவை ரூ. 248.65 லட்சமாகும்.

### கிராமக் கலைகள், கைப்பணிகள், தொழில்கள்.

ஊராட்சி ஒன்றியங்களில் கிராமக் கலைகள், கைப்பணிகள், தொழில்கள் திட்டத்தை, தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம், தொழில் நுட்ப ரீதியில் மேற்பார்வை செய்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் இதுவரையும் 8 அல்லது 9 தொழில்கள் நிறைவேற்றப்பட்டு வந்தன. கிராமப் பகுதிகளில் கூடுதலான வேலை வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு கிராமக் கைவினைஞர்களுக்கும், தொழில் முனைவர்களுக்கும் பணிக்களரிகள் அமைத்துக் கொடுக்க வாரியம் ஆலோசனை கூறியது. கிராமக் கலைகள் கைப்பணித் துறையில் மேற்கொண்ட புதிய முயற்சிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

கிராமத் தொழில் பேட்டை, வள்ளியூர் ;

கதர் தொழில் பேட்டை—திருப்பூர் வட்டாரத்தில் திருப்பூர், பெருமாநல்லூர், கண்மலையம்பட்டி ;

மதுரை வட்டாரத்தில்- -இடையன்வலசு.

ஸ்ரீபெரும்புதூர் திட்டப் பகுதியில் இரண்டு தொழிற் பேட்டைகள், பூவிருந்தவல்லிக்கருகில், செம்பரம்பாக்கம் கிராமத்தில் ஒன்று, ஈக்காடு, திருவள்ளூர் இவற்றிற்கிடையே மற்றொன்று.

அவ்விவ் தொழில்களுக்குரிய தொழிற் பேட்டைகள்—ஓமலூர் திட்டப் பகுதியில் இரு தொழில் பேட்டைகள் ; ஜலகண்டபுரத்தில் விசைத்தறிகளுக்காக ஒன்று ; தாராமங்கலத்தில் கைத்தறிகளுக்காக மற்றொன்று.

1970-71-ம் ஆண்டில், 22, 23-ம் எண் கோரிக்கைகளின்கீழ் திட்டச்செலவு குறித்து வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய தொகை ரூ. 16.00 லட்சமாகும்.

## இணைப்பு II

[229 .-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

### குறிப்பு

[கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள்—தேசிய வளர்ச்சிப் பணித் திட்டங்கள் உள்ளூர் மேம்பாட்டுப் பணிகள்.

### 1. முன்னுரை.

சமுதாய வளர்ச்சித் திட்டம் முதல் நிலை, இரண்டாம் நிலை என இரு நிலைகளில் செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. ஒவ்வொரு முதல் நிலை வட்டாரமும், ஐந்தாண்டுக் காலங்களுக்கு ரூ. 12 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறத் தகுதி பெற்றது. முதல் நிலையில்



1970 மார்ச் 23)

ஐந்தாண்டுகள் முடிவு பெற்ற வட்டாரம் ஒவ்வொன்றும் இரண்டாம் நிலை வட்டாரமாக மாறுகிறது. அதற்கு ஐந்தாண்டுக் காலத்திற்கு நிதி ஒதுக்கீடு ரூ. 5 இலட்சமாகும். இரண்டாம் நிலையை முடிக்க ஒவ்வொரு வட்டாரமும், இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரமாகக் கருதப்படுகிறது. சமுதாய வளர்ச்சி அமைப்பு முறையில் மைய அரசின் உதவியினை அவ் வட்டாரங்கள் பெறமுடியா. 1970–71-ம் ஆண்டில் 159 இரண்டாம் நிலை வட்டாரங்களும், 215 இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களும் இருக்கும்.

வளர்ச்சித் துறையில் வேகத்தைக் குறைக்காமல் தொடர்ந்து சீரான முறையில் இயங்கும்படி செய்வதற்காக வட்டாரங்கள் முதலிரு நிலைகளுக்குள் அமைந்ததாயினும் அல்லது இரண்டாவது நிலையைக் கடந்ததாயினும் அவை சமமான வசதியினையும், உதவியினையும் பெறும் வகையில் அரசு ஏற்பாடு செய்துள்ளது.

12,339 கிராம ஊராட்சிகள் 537 பேரூராட்சிகள் இவற்றையெல்லாம் உள்ளடக்கிய 374 ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகள் சற்றேறத்தாழ 65.26 கோடி ரூபாய் செலவிடுவதிலிருந்து, ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நிதி நிர்வாகம் எவ்வளவு பெரிய அளவில் செயல்படுகிறது என்பதை நன்கு அறியலாம். இப் போவையில் கோரியுள்ள ரூ. 604.89 இலட்சம் என்பது, ஊராட்சிகளாலும், ஊராட்சி ஒன்றியங்களினாலும் செலவு செய்யப்படும் தொகையில் ஒரு பகுதியைத்தான் குறிக்கிறது. ஊராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படும் ஊர் வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றிய புள்ளி விவரங்கள், இக் குறிப்புரையுடன் அவை முன் வைக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கை இணைப்பில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. வளர்ச்சித் திட்டத்தின் சிறப்பியல்புகள் பற்றிய விளக்கமும், இதுவரையிலும், குறிப்பாக 1969–70-ம் ஆண்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிய ஆய்வுரையும் கிராம மக்களின் வளர்ந்து வரும் உள்ளக்கிடக்கைகளை நிறைவு செய்யும் வகையில் 1970–71-ல் அரசினால் கொண்டு வரப்படவிருக்கும் சிறப்புத் திட்டங்கள்பற்றிய வெள்ளோட்டமும், இக் குறிப்புரையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### 2. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகம்.

#### (அ) அமைப்பு.

தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள 'கல்ராயன் குன்றுகள் வட்டாரம்' ஒன்று நீங்கலாக, மாநிலம் முழுவதிலும் உள்ள கிராமப் பகுதிகளில் 1958-ம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம் (தமிழ் நாடு சட்டம் XXXV 1958-ம் ஆண்டு) தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. ஜாகீர் பகுதிகளை இன்னும் அரசு எடுத்துக் கொள்ளவில்லையாதலால், 1958-59-ம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தைக் கல்ராயன் குன்றுகள் பகுதிக்கு விரிவுபடுத்தவில்லை, ஜாகீர் பகுதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டவுடன், ஓர் ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்பட்டு, இப்பகுதிக்கும் இச்சட்ட

மானது விரிவுபடுத்தப்படும். தமிழ் நாடு முழுவதும் 12,839 ஊராட்சிகள், 527 பேரூராட்சிகள், 14 நகரியங்கள் உள்ளன. மாநிலத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன.

### (ஆ) தேர்தல்கள்.

மாநிலத்தில் உள்ள ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் 1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2-ம் தேதியுடன் முடிவடைந்து விட்டது. தேர்தலை உடனடியாக நடத்தவியலாது போய் விட்டமையால், ஆறு மாதக் காலத்திற்கு ஊராட்சிகளின் உறுப்பினர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்கும் அதிகாரத்தை ஆய்வாளருக்கு வழங்குவதற்குச் சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறப்பட்டது. அதன்படி, ஊராட்சி உறுப்பினர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். ஊராட்சித் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற முடிவை அரசு முன்பே அறிவித்துள்ளது. இந்த முடிவினைச் செயற்படுத்த, 1958-ம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தைத் தக்கவாறு திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

13,000 ஊராட்சிகளில் ஏறத்தாழ 130,000 ' வார்டு 'களில் மேற்கொள்ள வேண்டிய, இத் தேர்தல் மிகப் பெரிய ஒரு பணியாகும். ஒவ்வொரு 'வார்டு'ம் ஒரு தனித் தொகுதி போன்றது. தற்போதைய நிலையில் இப் பணியினைச் செய்வதற்கான ஆயத்தங்கள் விரைவுபடுத்தப்பட்டு, 1970 ஜூலைத் திங்களில் தேர்தல்கள் எவ்வித முட்டுப்பாடுமின்றி முடியத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## 3. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம்.

### (அ) நிர்வாக முறையில் சீரமைப்புகள்.

தமிழ் நாட்டில் நடைபெற்று வரும் பசுமைப் புரட்சியில் தங்களுடைய நியாயமான பங்கினை வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் செலுத்தும் வகையில், அவர்களுக்குப் போதிய அதிகாரங்களை அளித்தும், மேலும் தகுதியான நேரடிச் செயலில் ஈடுபடுகிற பொறுப்புகளை ஒப்படைத்தும், இவ்வகையில் வட்டாரங்களில் உள்ள நிர்வாக அமைப்பு முறையைச் சீர்படுத்துவது என்ற கருத்தினை அரசு மிகத் தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

கால்நடை வளர்ச்சித் துறையின் அமைப்பினை அண்மையில் அரசு திருத்தி அமைத்துள்ளது. வட்டார நிர்வாகத்தினைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு வட்டாரத்திலும் துணை நிலையங்கள் கூடுதல் ஆவதற்கு ஒப்ப கால்நடை வளர்ச்சி அதிகாரிகளின் எண்ணிக்கையைக் கணிசமான அளவில் அதிகப்படுத்துதல் மிக முக்கியமான மாறுதல் ஆகும். ஒவ்வொரு துணை நிலையமும் 6-லிருந்து 10 கிராமங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மாற்றத்தினால், ஒவ்வொரு வட்டாரத்திலும், எத்தனை துணை நிலையங்கள் உள்ளனவோ, அத்தனை கால்நடை வளர்ச்சி அதிகாரிகள் இருப்பார்கள். இதனால் கால்நடை வளர்ச்சி அதிகாரி பணியாற்றுவதற்கு வசதியான முறையில் இடப்பரப்பு குறைந்து அமைவதால், அவர் எல்லா வகையான நிர்வாகப் பணிகளையும் வளர்ச்சிப் பணிகளையும் ஒருசேரச் செய்ய இயலும்.



### (ஆ) பயிற்சித் திட்டம்.

ஊர்நலப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் இரண்டு மாத கால் மறு பயிற்சி தவிர, வளர்ச்சி அலுவலர்களின் திறமையை மேம்படுத்தும் நோக்கத்துடன், ஓராண்டுக் காலத்திற்கான தீவிர வேளாண்மைப் பயிற்சி என்ற ஒரு புதிய பயிற்சித் திட்டத்தையும் அரசு தொடங்கியுள்ளது. பவானி சாகரில் உள்ள மாநில சமுதாய வளர்ச்சி நிலையத்தில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன :—

1. வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கு இரண்டு மாத காலங்களுக்குத் தொழிற் பாடப் பயிற்சி.

2. மற்ற அதிகாரிகளுக்கு 15 நாட்களுக்குச் சமுதாய வளர்ச்சி பற்றிய மறு பயிற்சி.

3. ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் தலைவர்கள், துணைத் தலைவர்களுக்குப் பயிற்சி.

4. ஊராட்சிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்களுக்குப் பயிற்சி.

### (இ) கருத்துரைக் குழுக்கள்.

நிர்வாகம்-பணிகள், உற்பத்தித் திட்டங்கள், நலப்பணித் திட்டங்கள் பற்றிய மாநில அளவிலான ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுக்கள் 1969 செப்டம்பர் திங்கள் 9, 10 தேதிகளில் கூடி, ஊராட்சி நிர்வாகத்தில் வளர்ச்சி சம்பந்தமான பல்வேறு துறைகளிலும் செய்யப்பட்டுள்ள பணிகள், முன்னேற்றங்கள் பற்றி ஆய்வுரை செய்தன. ஊராட்சி நிர்வாகம் குறித்த பிரச்சினைகளை அக் குழுக்கள் அரசின் நேரடிக் கவனத்திற்குக் கொண்டு வந்ததுடன், பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதில் கொள்ள வேண்டிய மாற்றங்கள், முன்னேற்றங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளன. அடிப்படைத் திட்டங்களில் அடைந்துள்ள முன்னேற்றங்கள் பற்றி மதிப்பீடு செய்யவும், இக் குழுக்களின் பரிந்துரைகளின் பேரில் தேவையான ஆணைகள் பிறப்பிப்பதற்கும், இக் குழுவில் ஆழ்ந்து, ஆராய்ந்து சொல்லிய கருத்துக்கள் அரசுக்குப் பெருந்துணையாக அமைந்திருந்தன.

[1970 மார்ச் 23

### (ஈ) பொருளாதார, உடலுழைப்புச் சாதனைகள்.

இந்தத் தலைப்பின்கீழ் கோரியுள்ள தொகையின் அளவு, ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்ட பல்வேறு வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படும் வேகத்தினைப் பிரதிபலிக்கிறது. இக் கோரிக்கையின் கீழ், 1968-69ல் செலவுத் தொகை ரூ. 609.31 இலட்சமாகும் 1970-71க்காகான திருத்திய மதிப்பீடு ரூ. 576.32 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டது. 1970-71க்காகக் கோரப்படும் தொகை 604.89 இலட்சமாகும். எல்லா ஊராட்சி ஒன்றியங்களும் உள்ளூர் செஸ் மேல் வரியை விதித்துள்ளன. இந்த வகையில் 1969–70-ல் கிடைத்த வருவாய் ரூ. 341.00 இலட்சமாகும். ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் உள்ளூர் செஸ் மேல் வரி விதிப்பதற்கு இணையாக அரசு அவற்றிற்கு இணை மானியம் ஒன்றை அளிக்கிறது. 1968–69-ல் அரசு உள்ளூர் செஸ் மேல் வரி இணை மானியமாக ரூ. 311.48 இலட்சம் வழங்கியுள்ளது. 1969–70-க்குத் திருத்திய மதிப்பீடு ரூ. 344.00 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1970–71-க்கு நிதி நிலை மதிப்பீடு ரூ. 401.00 இலட்சமாகும். 362 ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் கேளிக்கை வரி மீது மேல் வரியும், காட்சி வரி மீது மேல் வரியும் விதித்துள்ளன. இந்த வகையில் 1968-69-ல் வருவாய் ரூ. 80.00 இலட்சமாகும்.



1970 மார்ச் 23]

வளர்ச்சிப் பணிகளுக்காக ஊராட்சி ஒன்றியங்களின்மூலம் அரசு செலவழித்துள்ள தொகை பற்றிய விவரங்களைக் கீழ்க்கண்ட புள்ளி விபர அறிக்கை கோடிட்டுக் காட்டுகிறது.

| வேலைத் திட்டத்தின் பெயர். (1) | 1966–67 செலவுக் கணக்கு. (2) | 1967–68 செலவுக் கணக்கு. (3) | 1968–69 செலவுக் கணக்கு. (4) | 1969–70 திருத்திய மதிப்பீடு. (5) | 1970–71 நிதி நிலை மதிப்பீடு. (6) |
|---|---|---|---|---|---|
| விவசாயம் | 80·50 | 81·14 | 83·75 | 70·00 | 85·00 |
| கால்நடை வளர்ச்சி | 23·65 | 26·48 | 21·90 | 22·72 | 23·25 |
| மீனளம் | 2·13 | 3·73 | 3·66 | 3·57 | 4·25 |
| இணைப்புச் சாலைகள் | 108·41 | 110·40 | 67·63 | 80·00 | 110·00 |
| குடிநீர் வழங்கல் | 101·10 | 118·49 | 146·01 | 138·57 | 145·70 |
| பள்ளிக் கட்டிடங்கள் | 42·55 | 42·16 | 33·64 | 46·17 | 52·60 |
| சமூகக் கல்வி | 8·47 | 9·53 | 12·13 | 19·00 | 15·00 |
| மகளிர், குழந்தைகள் நலம் | 18·61 | 16·94 | 6·67 | 16·88 | 17·86 |
| கிராமக் கலை, கைத்தொழில் திட்டம் | 30·93 | 28·48 | 11·40 | 16·00 | 16·00 |

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது என்பதை மேலே காட்டியுள்ள புள்ளி விவரங்கள் தெளிவுபடுத்துகின்றன; 1970–71-ஆம் ஆண்டிற்கு, பெரும்பாலும் ஒவ்வொரு தலைப்பின் கீழும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சில வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக 31—3—1969 நிலவரப்படி சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் வருமாறு :

| | 1966 | 1967. | 1968. | 1969. |
|---|---|---|---|---|
| இணைப்புச் சாலைகள் (கிலோமீட்டர்களில்) .. .. | 17,056 | 17,136 | 20,224 | 20,736 |
| மேல்நிலை நீர்த் தொட்டிகள் (எண்ணிக்கை) .. .. | 1,936 | 2,240 | 2,506 | 3,817 |
| குடிநீர்க் கிணறுகள் (எண்ணிக்கை) .. .. | 43,200 | 47,900 | 52,100 | 54,768 |
| ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகத்தில் உள்ள தொடக்கப் பள்ளிகள் (எண்ணிக்கை). | 17,659 | 18185 | 18,220 | 12,272 |
| ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகத்திலுள்ள உயர் தொடக்கப் பள்ளிகள் (எண்ணிக்கை). .. | 3,414 | 3,275 | 3,252 | 3,246 |
| சொந்தக் கட்டிடங்களிலுள்ள பள்ளிகள் .. .. | 9,814 | 10,555 | 11,619 | 12,310 |



## 4. பணிகள் குறித்த வேலைத் திட்டங்கள்

### (அ) கிராம மக்களுக்குக் குடிநீர் வழங்கல்

கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளுள் குடிநீரை வழங்கல் என்பது ஒன்றாகும். கிராமப் பணிகள் மானியத்தின் கீழ் இதற்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிகளிலிருந்து இத் திட்டமானது பெருவாரியான அளவில் செயற்படுத்தப்படுகிறது. குடிநீர் வழங்கும் பணிகளுக்காகும் செலவில் 75 சதவிகிதம் அரசு ஏற்கிறது. மீதி 25 சதவிகிதம் பொது மக்களிடமிருந்தோ அல்லது உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்தோ நன்கொடைத் தொகைகளாகப் பெறப்படுகிறது. குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக அரிசன மக்களிடமிருந்தோ, மற்ற பிற்பட்ட வகுப்பினர்களிடமிருந்தோ நன்கொடை எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. இத் திட்டத்தின் கீழ், சாதாரணக் கிணறு வேலைகள், மேல் நிலை நீர்த் தொட்டிகள் கட்டுதல், வரையறுக்கப்பட்ட அளவுக்குக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கல், குழாய்க் கிணறுகள், துளைக் கிணறுகள், ஊருணிகளை ஆழப்படுத்துதல், தானே இயங்கும் அழுத்த நீர்த் தொட்டிகள் போன்றவை செயற்படுத்தப்படுகின்றன. 31—3—1969-ல் உள்ள நிலவரப்படி குடிநீர் வழங்குவது சம்பந்தமாகச் செய்யப்பட்டுள்ள வசதிகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | |
|---|---|---|
| (1) | மேல் நிலை நீர்த் தொட்டிகள் .. .. | 2·817 |
| (2) | கிணறுகள் .. .. .. .. | 54,768 |
| (3) | கை இயக்கக் குழாய்கள் .. .. .. | 21,617 |
| (4) | மற்ற குடிநீர் வழங்கும் வகைகள் .. .. | 3,060 |

குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக, 1970–71-க்கான நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 145.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு நிறுவன நிதி வசதிகள்.

குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு முக்கிய முதலிடம் அளித்திருந்தும்கூட, இதுவரை அப் பிரச்சினையின் ஒரு பகுதியைத்தான் நம்மால் தீர்க்க முடிந்துள்ளது. இப்பிரச்சினையை விசாலமான எதிர்காலக் கண்ணோட்டத்துடனும், மிகப் பெரிய அளவிலும் சமாளிப்பதற்கான புதிய முயற்சிகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடிநீர் வழங்கும் பணியினைச் செயற்படுத்த, நிறுவனங்களிடமிருந்து பெரிய அளவில் நிதிகள் பெற்றுப் பணிகள் நடைபெறத் தொடங்கிவிட்டன.

ஐந்து பணித் திட்டங்களுக்காக வேண்டி, முதல் வரிசையில், ஏழு பேரூராட்சிகளில், குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ரூ. 105.22 இலட்சம் கடனை வழங்க, ஆயுள் காப்பீட்டுக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டது. தனிப்பட்ட ஒவ்வொரு திட்டத்திற்கும் ஆகும் செலவு மதிப்பீட்டில் மூன்றில் இரண்டு பங்குத் தொகையை ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடனைக் கொடுக்க அனுமதி வழங்கியுள்ளது. மிச்சத் தொகையானது, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனத்தின் உள்ளூர் நிதி ஆதாரங்களிலிருந்தோ அல்லது மானியம் அல்லது

கடன் என்ற வகையில் மாநில அரசு அளிக்கும் உதவியிலிருந்தோ சரிக்கட்டப்படும் என்று மாநில அரசு, ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு உறுதி அளித்துள்ளது. இந்தத் திட்டம் நிறைவுபெறும் பொழுது, கடனைத் திருப்பிக் கொடுப்பது ஆரம்பமாகும். மேலும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் உதவியைப் பெற வேண்டி, பேரூராட்சிகளுக்கான 17 செயற் திட்டங்கள் 336.745 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

வறட்சி நிலை மிக உச்ச கட்டத்தை அடைந்த நிலையில், இந்த மாநிலத்தில் பற்றுக்குறையினால் பாதிக்கப்பட்ட எல்லா ஊராட்சிகளுக்கும் குடிநீர் வழங்குவதற்கான விரைவுத் திட்டம் ஒன்றினை முதலமைச்சர் கோரினார். அதையொட்டி, ரூ. 11 கோடிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து செயற்குறிப்புகள் பெறப்பட்டன. இந்த விரைவுத் திட்டத்தில், பேரூராட்சிகள் சம்பந்தமாக பல்வேறு மாவட்டங்களிடமிருந்து சுமார் 170 நேர்வுகள் பெறப்பட்டு, அவை இப்போது தலைமைப் பொறியாளருடன் (பொது சுகாதாரப் பொறியியல்) கலந்தாலோசிக்கப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வளவு பெரிய தொகையை எப்படிப் பெறுவது என்பது பற்றியும், இந்த உள்ளாட்சி நிறுவனங்கள் அந்தத் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கு அவைகளுக்குத் திருப்பித் தரும் திறன் பற்றியும், அண்மையில் நிறுவப்பட்ட" குடிநீர் வழங்கல் வடிகால் வாரியமானது தன்னுடைய கவனத்தைச் செலுத்திப் பரிசீலனை செய்து வருகிறது.

### குடிநீர் வழங்கல்—வடிகால் வாரியம்.

மாவட்டங்களுக்குக் குடிநீர் வழங்கும் பணியினைக் கவனிப்பதற்காக வேண்டி, குடிநீர் வழங்கல்–வடிகால் வாரியம் ஒன்றினை நிறுவ அரசு முடிவு செய்துள்ளது என்பதனை முதலமைச்சர் அவர்கள் 1969 செப்டம்பரில் நடைபெற்ற ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுவின் ஆறுவது கூட்டத்தில் அறிவித்தார். அம்முடிவினையொட்டி, இணைத் தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு "தமிழ் நாடு குடிநீர் வழங்கல்–வடிகால் வாரிய"த்தினை அரசு அமைத்தது. எல்லாக் குடிநீர் வழங்கும் திட்டம்பற்றிய அதிகாரம் இவ்வாரியத்தினிடம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் இப்பொழுது செயல்படத் தொடங்கியுள்ளது.

### (ஆ) சாலைகள் பராமரிப்பு.

1958-ம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 131-வது பிரிவின் கீழ், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆளொன்றுக்கு 40 காசு என்ற அடிப்படையில் 'சாலைகள் மானியம்2' வழங்கப்பட்டு வந்தது. அண்மைக் காலமாக, இந்தச் சாலைகள் மானியமானது ஆளுக்கு 40 காசு என்ற விகிதத்தில் நிர்ணயிக்கப்படுவதை மாற்றி, ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகளின் எண்ணிக்கைக் கணக்கில் கொள்ளப்பட்டு, மைல்கள் அடிப்படையில் திருத்தி



அமைக்கப்பட வேண்டும் என்று பல ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து முறையீடுகள் பெறப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினையை அரசு பரிசீலனை செய்தது. அந்தப் பரிசீலனையின் அடிப்படையில், இச் சாலைகள் மானியமானது, ஆளொன்றுக்கு 18 காசு என்ற விகிதத்தில் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் வழங்கப்படல் வேண்டும் என்றும், அத்துடன் சேர்த்து ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் சாலையானது, சாதாரணமானதா, அல்லது கடற்கரைப் பகுதிகளில், மணற்பாங்கான பகுதிகளில் உள்ளதா அல்லது மலைப் பாதைகளா என்று வகைப்படுத்தப்பட்டு, அந்த அடிப்படையில் மைல் ஒன்றுக்கு முறையே ரூ. 600, ரூ. 800, ரூ. 1,500 என்ற வகையில் அம் மானியம் வழங்கப்படல் வேண்டும் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்தத் திருத்தியமைக்கப்பட்ட விகிதாச்சார அளவானது, 1969–70-லிருந்து நடைமுறைக்கு வரும். 1970–71-ம் ஆண்டுக்கான நிதி நிலை மதிப்பீட்டில் இதற்காக ரூ. 121.64 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பழைய விகிதாச்சார முறைப்படி, ஊராட்சி ஒன்றியங்கள் 115 இலட்சம் ரூபாய்கள்தான் பெற்றுவந்தன.

ஊராட்சி சாலைகளைப் பராமரிப்பதற்காக வேண்டி, ஊராட்சிகளுக்கு எந்தவித உதவியும் அளிக்கப்படுவதில்லை என்று தொடர்ந்து முறையீடுகள் செய்யப்பட்டதற்கிணங்க, பேரூராட்சிப் பகுதிகளில் முதியற்ற மேற்பரப்புடைய சாலைகளை அமைக்கப் பேரூராட்சிகளுக்கு உதவுவதற்காக, அரை மானியத் திட்டம் ஒன்றினை அரசு செயற்படுத்தி வருகிறது. இதற்காக 1970–71-ம் ஆண்டின் நிதி நிலை மதிப்பீட்டில் ரூபாய் ஆறு இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) சிறிய நீர்ப்பாசனம்.

இம் மாநிலத்தில் சுமார் 36,000 சிறிய நீர்ப்பாசன வாயில்கள் உள்ளன. இவற்றுள் சுமார் 24,000 சிறிய நீர்ப்பாசன வாயில்கள் பராமரிப்புக்காக ஊராட்சி ஒன்றியங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசன வாயில் ஒவ்வொன்றையும் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது கவனிக்க வேண்டுமென்ற அடிப்படையில் பராமரிப்புத் திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்ளுமாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. சிறிய நீர்ப்பாசனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒவ்வோராண்டும், அவ்வாண்டுத் தேவையினை ஒட்டி, ஒரு தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. 1070-72—ம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீட்டில் இதற்கென ரூ. 52.95 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஈ) கிராமக்கலை, கைத்தொழில் திட்டம்.

ஊராட்சி ஒன்றியங்களில் கிராமக்கலை, கைத்தொழில் திட்டத்தினைத் தயாரித்துச் செயற்படுத்தும் பொறுப்பு தமிழ் நாடு கதர்–கிராமத் தொழில்கள் வாரியத்தினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் எட்டு அல்லது ஒன்பது தொழிற் பிரிவுகள்தான் ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளன. ஊர்ப்புறங்களில் மேலும் கூடுதலான வேலை வசதிகளைத் தோற்றுவிக்கின்ற நிலைக்கு அடித்தளம் அமைக்கின்ற வகையில் கிராமக் கை வினைஞர்களுக்கும் சிறுவாணிகம் செய்ய முனைபவர்களுக்கும் பணிமனைகள் வசதிகள் செய்துதர, வாரியம் யோசனை கூறியுள்ளது. கிராமக்கலை, கைத்தொழில் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சிலவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) வெள்ளியூரில் உள்ள கிராமத் தொழில் பேட்டை.

(2) திருப்பூர் பகுதியில், திருப்பூர், பெருமனல்லூர், கன்னலைப்பட்டி ஆகிய இடங்களிலும் மதுரைப் பகுதியில் இடையன் வலசுவிலும் உள்ள கதர்த் தொழிற் பேட்டைகள்.

(3) ஸ்ரீபெரும்புதூர் கைத்தொழில் திட்டப் பகுதியில் இரண்டு தொழிற்பேட்டைகள். இதில் ஒன்று பூவிருந்தவல்லிக்கு அருகில் செம்பரம்பாக்கம் கிராமத்திலும், மற்றொன்று ஈக்காடுக்கும் திருவள்ளூருக்கும் இடையிலும் உள்ளன.

(4) ஓமலூர் கைத்தொழில் திட்டப் பகுதியில் இரண்டு செயற்படும் தொழிற் பேட்டைகள் ; இவற்றில் ஒன்று சலகண்டபுரத்தில் விசைத்தறிக்கானது மற்றொன்று தாரமங்கலத்தில் கைத்தறிக்கானது.

வேகமாகச் செயல்படுத்தப்படுகின்ற முறையில் இப் பிரச்னை எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதால், இத்துறையில் சிறு தொழில்கள், கிராமக் கைத்தொழில்கள் வளர்ச்சியில் கிராமப்புறங்களில் நல்லதொரு வளர்ச்சிக்கு வித்தூன்றப்பட்டு, புதியதொரு அத்தியாயம் உருவாகுமென எதிர்பார்க்கலாம்.

## 5. உற்பத்தித் திட்டங்கள்.

### (அ). வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும்.

மாநிலம் முழுமைக்குமாக ஒரே சீரான திட்டத்தின் அடிப்படையில் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீனளத் திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் செயற்படுத்தியுள்ளன. இதற்கென எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ரூ. 2 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு இணையாக, ஊராட்சி ஒன்றியங்கள் ரூபாய் 50,000 நன்கொடைத் தொகை வழங்கியுள்ளன. அந்தந்தப் பகுதிகளின் சிறப்பானத் தேவைகள், வளங்களைக் கருத்திற் கொண்டு திட்டங்களை உருவாக்க வேண்டுமென்ற ஒரு நிலையை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்கால அனுபவங்கள் விளக்குகின்றன. எனவே, ஊராட்சிகளின் கருத்தாக்களையும், தேவைகளையும் கவனத்திலிருத்தி தனிப்பட்ட முறையில் தாங்களே திட்டங்களைத் தீட்டிக்கொள்ள வேண்டுமென்று ஊராட்சி ஒன்றியங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. ஒன்றியங்களால் உருவாக்கப்பட்ட உற்பத்தித் திட்டங்களெல்லாம், விரிவாகப்





பரிசீலனை செய்யப்பெற்று, திட்டங்கள் தொடுக்கப்பட்டன. வேளாண்மை வளர்ச்சி, கால்நடை வளர்ச்சி ஆகியவற்றிற்கான வளர்ச்சி வேலைத் திட்டங்கள் " இன்றியமையாத் திட்டங்கள் ", " விருப்பத் திட்டங்கள் " என வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்கள், தங்களுடைய பகுதிகளின் குறிப்பிட்ட தேவைகளுக்கேற்பத் திட்டங்களை மேற்கொள்வதற்கும், நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் ஒன்றியங்களும் இந்நிதி ஒதுக்கத்தைக் கொண்டு 1967-68-ஆம் ஆண்டிலிருந்து திட்ட வேலைகளை மேற்கொண்டு செயலாற்றுகின்றன. நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில், கீழ் காணும் திட்ட வேலைகள் ஊராட்சி ஒன்றியங்களால் செயற்படுத்தப்படும் :—

#### வேளாண்மை.

1. வேளாண்மைக் கிடங்குகளைக் கட்டுதல்.
2. ஊராட்சித் தோட்டங்களை நிறுவுதலும் பேணிக் காத்தலும்.
3. வேளாண்மை வளர்ச்சிச் செயல் விளக்கப் பகுதிகள்.
4. ஊராட்சிகளுக்குக் கருவிகள் வழங்குதல்.
5. தனிப்பட்டோருக்குக் கருவிகள் வழங்குதல்.
6. இயந்திரக் கலப்பைகள் வாங்குதல், குளங்கள் கட்டுதல், துணைக் கருவிகளுடன் எண்ணெயால் இயங்கும் நீர் இறவை இயந்திரங்கள் வாங்குவது உட்பட, அந்தந்தப் பகுதிக்குரிய திட்ட வேலைகள்.

#### கால்நடை வளர்ச்சி.

1. கால்நடை மருந்தகங்கள் கட்டுதல். ?
2. பணியாளர் குடியிருப்புகளைக் கட்டுதல்.
3. பேரூராட்சிகளின் தீவன வளர்ச்சித் திட்டங்கள்.
4. வளர்ச்சிப் பணிகளுக்குரிய கருவிகள், பொருட்காட்சிகள், போட்டிகள் முதலியன.

31–12–1969-உடன் முடிவுறும் காலத்தில், உற்பத்தித் திட்டத்தைப் பற்றிய புள்ளி விவரங்கள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. கட்டப்பட்டுள்ள வேளாண்மைக் கிடங்குகள் | .. | 409 |
| 2. வாங்கப்பட்டுள்ள இயந்திரக் கலப்பைகள் | .. | 535 |
| 3. வாங்கப்பட்டுள்ள விசைக் கலப்பைகள் | .. | 602 |
| 4. வாங்கப்பட்டுள்ள தெளிப்பான்கள், தூவும் கருவிகள் | .. | 5,369 |
| 5. தோண்டப்பட்டுள்ள சமுதாயப் பாசனக் கிணறுகள் | .. | 749 |
| 6. மீன்வளத்தைப் பெருக்குவதற்காக பயன்படுத்தப்படும் ஏரிகள். | .. | 1,355 |

[1970 மார்ச் 23

### மீனவளம்.

மீன் பிடிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதென உறுதிப்படுத்தப்பட்டுள்ள வட்டாரங்களில் மட்டுமே இவ் வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படும். இவ்வகை வட்டாரங்களில், கீழ்காணும் திட்ட வேலைகள் 1969–70-ம் ஆண்டுத் தொடக்கம் நிறைவேற்றப்படுகின்றன.

1. மீன் வளர்ப்புப் பண்ணைகளைப் பாதுகாத்தலும், செயற்படுத்தலும்.

2. மீன் முட்டைகளை வழங்குதல், பங்கிடுதல்.

3. ஏரிகளைப் புதுப்பித்தல்.

## 6. சமூக நலப் பணிகள்.

### (அ) தொடக்கக் கல்வி.

1958-ம் ஆண்டு, தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள 65-வது பிரிவின், உட்பிரிவு (e)-ன்படி, ஊராட்சி ஒன்றியங்களில் தொடக்கப் பள்ளிகளைத் துவக்குதல், நிர்வகித்தல் அல்லது அவற்றை வளர்ச்சி பெறச் செய்தல் ஆகியவற்றிற்கென, ஒன்றியங்களின் நிதிகளில், ஒரு நியாயமான தொகையை ஒதுக்குவதும், ஒன்றியப் பகுதிகளிலுள்ள தனியார்த் தொடக்கப் பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்குவதும், ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாகியது. இவ்வாறு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொடக்கக் கல்வியை நிர்வகிக்கும் முழுப் பொறுப்பும், சட்டத்தின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகள் உட்பட 27,000 பள்ளிகளுக்கும் மேலாக தமிழ் நாட்டில் ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகத்திலும், தனியார் நிர்வாகத்திலும் உள்ளன. இவற்றில் 40,40,700 மாணவர்கள் பயில்கின்றனர். 1,16,500-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலைத் திட்டத்தில், தொடக்கக் கல்விக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை சற்றேறக்குறைய 27.42 கோடியாகும். இத் தொகையில் ரூ. 23.50 கோடி (சுமாராக 86 சதவீதம்) சட்டப்படி, சட்டப்படியில்லாத மானியங்களாக அரசினால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டன. தொடக்கக் கல்விக்கென செலவிடப்படும் எஞ்சிய தொகையான ரூ. 3.92 கோடியை (14 சதவீதம்) ஊராட்சி ஒன்றியங்களே ஈடு செய்து கொள்ளவேண்டும். இதற்கென ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளூர் நிதிவாயில்களிலிருந்து ஈட்டிய தொகை 1966–67-ல் ரூ. 314 இலட்சத்திலிருந்து 1967–68-ல் ரூ. 347 இலட்சமாகவும், 1968–69-ல் ரூ. 358 இலட்சமாகவும், 1969–70-ல் 373 இலட்சமாகவும் தொடர்ந்து உயர்ந்துகொண்டே வந்துள்ளது. 1970–71-ம் ஆண்டிற்குரிய நிதிநிலை மதிப்பீட்டில் இத்தொகை ஏறக்குறைய ரூ. 392 இலட்சமாக இருக்கும்.



1970 மார்ச் 23]

### விஞ்ஞானக் கூடக் கருவிகள், கல்வி கற்பிப்பதற்குரிய துணைக் கருவிகள், நூலகங்களுக்குரிய நூல்கள் முதலியன.

கல்வியைப் பொறுத்தவரையில் கல்வியறிவு மட்டுமே போதுமானதன்று என்பதை அரசு உணர்ந்து, அதையொட்டி கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்குப் பற்பல திட்டப் பணிகள் அரசு மேற்கொண்டுள்ளது. கல்வி கற்பிப்பதற்குத் துணை புரியும் வகையிலான கருவிகள், விஞ்ஞானக் கூடக் கருவிகள் போன்றவற்றைத் தொடக்கப் பள்ளிகளுக்கு வழங்குதல் இப்பணிகளில் அடங்குவன.

ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் ரூ. 300 என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,515 தொடக்கப் பள்ளிகளுக்கும், ஒவ்வோர் உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும் ரூ. 1,000 என்ற முறையில், தேர்ந்தெடுக்கப்பட்ட 282 உயர் தொடக்கப் பள்ளிகளுக்கும், கருவிகள் வாங்குவதற்கென 1969–70-ம் ஆண்டுக்கு ரூ. 7,36,500-க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 1968–69-ல் இதற்கென அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. 2,91,200 ஆகும்.

மேலும் 1069-70ல் ஒவ்வொரு தொடக்கப்பள்ளி, உயர் தொடக்கப்பள்ளிக்கும் முறையே ரூ. 30, ரூ. 60 என்ற கணக்கில், நூலகங்களை நிறுவுவதற்கென 8,336 தொடக்கப் பள்ளிகள், 1,730 உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு மொத்தமாக ரூ. 3,68,880 மானியம் அளிக்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இது ஓர் இணை மானியமேயாகும். உள்ளாட்சி நிறுவனங்களும், தனியார் பள்ளி நிர்வாகிகளும் இதேபோன்ற தொகையை அளிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு செய்வதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு தொடக்கப் பள்ளியிலும் ரூ. 60 மதிப்புள்ள நூல்களும், தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒவ்வோர் உயர் தொடக்கப் பள்ளியிலும் ரூ. 120 மதிப்புள்ள நூல்களும் இருக்கும்.

இவை தவிர, 6–11 வயது, 11–14 வயது வரையிலான மாணவர்களைக் கூடுதலாகச் சேர்ப்பதற்கு வசதியளிக்கும் வகையில், ஊராட்சி ஒன்றியப் பணிகள், உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளுக்குக் கருவிகள் வழங்குவதற்கும், கொட்டகைகள் அமைப்பதற்கும், மற்றும் இதர துணை வசதிகளைச் செய்வதற்கும் 1969-70-ல் ரூ.14.91 லட்சத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. பங்கீடு முறையில் ஒன்றியங்களுக்குக் கிடைக்கக்கூடிய மானியங்கள் அனுப்ப இம் மானியங்கள், ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

**பள்ளிக் கட்டடங்கள்.**—தொடக்கக் கல்வியை மேம்படச் செய்வதன் வாயிலாகவே எல்லா நிலைகளிலும் கல்வியின் தரத்தை உயர்த்த முடியும் என்பதை அரசு உணர்ந்துள்ளது. அதற்கேற்ப பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவது படிப்படியான முறையில் மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வோராண்டும், பல புதிய பள்ளிக் கட்டடங்கள் தோன்றிய வண்ணமுள்ளன. பள்ளிகளுக்கான கட்டடங்களைக் கட்டுவதற்காக, 1968–69-ம் ஆண்டில் ரூ. 33.59 இலட்சம் தரப்

பட்டது. ஊர்ப்பணிகள் திட்டத்தில் 1969-70-ல் ரூ. 48 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1970–71-ம் நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 52.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சேகரிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களின்படி, இதுவரை 12,310 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், தமக்கென உள்ள சொந்தக் கட்டடங்களிலேயே இயங்குகின்றன. படிப்படியாக நிறைவேற்றப்படும் விரைவுத் திட்டத்தின் பயனால் வரும் ஆண்டுகளிலே பெரும்பாலான பள்ளிகள் தமக்குச் சொந்தமான, தரமான கட்டிடங்களிலேயே இயங்குமென்று அரசு உறுதியாக நம்புகிறது.

**ஆசிரியைகளுக்குக் குடியிருப்புகள்.**—ஊர்ப்புறங்களில் பணியாற்றும் ஆசிரியைகளுக்குப் போதுமான, தகுந்த குடியிருப்பு வசதிகளைச் செய்து தருவதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. தமிழ் நாட்டில் இதுவரை ஆசிரியைகளுக்காக 1,214 குடியிருப்பு விடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இதற்கென இவ்வாண்டும் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஊராட்சிக் கல்வி நிதி விசாரணைக் குழு.**—உள்ளூரிலேயே நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கு ஊராட்சி ஒன்றியங்கள் பெரு முயற்சிகள் மேற் கொண்டபோதிலும், சில ஒன்றியங்களால் தொடக்கக் கல்வித் தேவைகளை முழுவதுமாகப் பூர்த்தி செய்ய இயலவில்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. எனவே, தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தில் தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரை ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் தற்போதைய நிதி நிலை, அதிகாரங்களைப் பற்றி முழுவதுமாக ஆராய வேண்டுமென அரசு முடிவு செய்தது. அதற்கேற்ப, ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் அரசுச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு ஊராட்சிக் கல்வி நிதி விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. ஊர் வளர்ச்சி இணை இயக்குநர் (கல்வி) அக்குழுவின் உறுப்பினர்-செயலாளராவார். 10 உறுப்பினர்களைக் கொண்ட இக் குழு, கல்வித் தொடர்புள்ள ஊராட்சிக் கல்வியின் எல்லா அம்சங்களையும் விரிவாக ஆராய்வதுடன், பல்வேறு அலுவலர்கள் அலுவலர் அல்லாதோர் ஆகியோரின் கூற்றுக்களையும் பதிவு செய்கிறது. 1970-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இறுதியில் இக் குழு, அதனுடைய அறிக்கையைப் படைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அறிக்கையின் மீது முடிவுகளெடுப்பதற்கு முன்னர், அதை நன்றாய்வு செய்தற்குரிய நடவடிக்கைகளை அரசு உடனே மேற்கொள்ளும். 1958-ம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் நிறைவேற்றப்பட்டதற்குப் பின்னர், இதுபோன்ற ஓர் ஆய்வை மேற்கொள்வது இதுவே முதன்முறையாகும்.

**மதிய உணவுத் திட்டம்.**—பள்ளிகளில் மதிய உணவு வழங்குவதில், இந்நாட்டிலுள்ள மற்றைய மாநிலங்களைக் காட்டிலும் தமிழ் நாடு தான் முன்னணியில் விளங்குகிறது. ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் நிறுவியதனால், அவற்றின் துணை கொண்டு நாட்டை உருவாக்கும் நற்பணியான இம் மதிய உணவுத்



திட்டத்தை அரசால் சீராகச் செயற்படுத்த முடிகிறது. குழந்தையொன்றுக்கு 4 காசுகள் வீதம் இணைப்பங்குத் தொகை திரட்டுவதன் அடிப்படையில், குழந்தையொன்றுக்கு 6 காசுகள் வீதம் அரசு வழங்கும். இத் திட்டத்தின் கீழ் உணவு அளிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை பெருமளவு பெருகியுள்ளது. தொடக்கப் பள்ளிகள் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும், தற்போது இத் திட்டம் பரவியுள்ளது. ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மதிய உணவுக் குழு உள்ளது. ஊராட்சித் தலைவர் அக் குழுவின் தலைவராகவும், பள்ளித் தலைமையாசிரியர் குழுவின் செயலாளராகவும் உள்ளனர்.

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சேக்காடு என்னும் ஊரில் ‘ கேர் ’ நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் 1967–68-ல் ஒரு முன்னோடித் திட்டமாகத் தொடங்கப்பெற்ற “மையச்சமையற் கூடத் திட்டம் ” மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. மேலும் 30 ஒன்றியங்களில், 30 மையச் சமையற்கூடங்களை நிறுவுவதற்கு, ‘ கேர் ’ நிறுவனம் முன்வந்துள்ளது.

## (ஆ) சுகாதாரப் பணிகள்.

**ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.**—ஆரம்பச் சுகாதார நிலையம் மேல்நிலையாக நிறுவப்பட்ட ஒரு பல நோக்கப் பிரிவாகும். சமுதாயத்திற்கு தடுப்பு சிகிச்சை அளிப்பதிலும், நோய்ச் சிகிச்சை அளிப்பதிலும், அக்கறை கொண்டு, மக்களின் உடல் நலனை நாளடைவில் ஊட்டம் பெறச் செய்வதே இந்நிலையங்களின் பணியாகும். வட்டாரம் ஒன்றுக்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்பதே அரசின் கொள்கையாகும். இதில் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் பேணுதல் நிலையை அடைந்துவிட்ட வட்டாரங்களுக்கு முதன்மையிடம் அளிக்கப்படுகிறது. ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கெனவே, அரசுக்குச் சொந்தமாகக் ககட்டப்பெற்ற கட்டடங்களிலேயே இவை தொடக்கக் காலங்களில் நிறுவப்பட்டன. ஆனால் தேசிய நெருக்கடி நிலை காரணமாக, ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும், அலுவலர்கள் குடியிருப்புகளுக்கும் கட்டடங்கள் அமைப்பதற்குத் தடை விதிக்கப்பட்டன். எனவே, அடுத்து ஆரம்பிக்கப்பட்ட நிலையங்களை வாடகையில்லாத அல்லது வாடகைக் கட்டடங்களில் நிறுவப்பட வேண்டியதாயிற்று. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகால முடிவில் 188 நிலையங்கள் இம் மாநிலத்தில் செயற்பட்டன. 1966-69 ஆண்டுகளில் கூடுதலாக 129 நிலையங்கள் தொடங்கப்பட்டன. 1969-70-ல் மேலும் 28 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டன. நிதியாண்டின் முடிவிற்குள், இன்னும் 4 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றைக் கணக்கில் கொண்டு பார்க்கும்போது, 1970–71-ல் இம்மாநிலத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் துவங்கவேண்டிய நிலையில் 32 வட்டாரங்கள் மட்டுமே எஞ்சி நிற்கும்.

"யூனிசெஃப்" நிறுவனத்துடன் கொண்டுள்ள ஓர் ஒப்பந்தத்தின் விளைவாக, ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அனைத்தும் "யூனிசெஃப்" நிறுவனத்தின் உதவியைப் பெறத் தகுதியுடையனவாகும். எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும், சில வரம்புகளுக்குட்பட்டு ஊர்திகளைத் தர "யூனிசெஸ்ப்" இசைந்துள்ளது. இதுவரை 193 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், முழு உதவியையும், 21 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஒரு பகுதி உதவியையும் பெற்றுள்ளன. 102 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு ஊர்திகள், "மைக்கிராஸ்கோப்", குளிர் சாதனப் பெட்டி போன்றவற்றை அளிப்பதற்குரிய கோரிக்கைகள், "யூனிசெஃப்" பின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டுள்ளன. ஆரம்பச் சுகாதார நிலையங்கள் உதவியைப் பெறுதற்குத் தேவையான எல்லா வசதிகளையும் அளிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

*தாய்சேய் நல நிலையங்கள்*—தாய்சேய் நலப் பணிகளை ஊராட்சிகளில் ஏற்படுத்துவது ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். ஊராட்சி ஒன்றியக் குழு இத் திட்டத்திற்காக செலவழிக்கும் தொகையை ஈடுகட்டுவதற்காக, தாய்சேய் நல நிலையங்களைப் பேணி வருதற்காகும் மொத்தச் செலவில் 2/3 பங்கை அரசு உதவி மானியமாகத் தருகிறது. ஓர் இலட்சம் பேர்களுக்கு மேற்பட்ட மக்கட் தொகையுடைய ஊராட்சி ஒன்றியங்களில் 10-க்கும் மேற்பட்ட தாய் சேய் நல நிலையங்களைப் படிப்படியாகத் தொடங்குதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்படி 1970–71-ம் ஆண்டின் முடிவிற்கு முன்னராகவே 170 நிலையங்கள் தொடங்கப்படும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 1-1-1969 அன்று செயற்பட்ட தாய்சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,636 ஆகும்.

**ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்.**—மருந்தகங்களை நிறுவுவதும், நிர்வகிப்பதும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்புகளாகும். மருந்தகங்களை நிர்வகிப்பதற்கான செலவுகளுக்கு ஊராட்சி ஒன்றியக் குழு நிதி ஒதுக்கீடு செய்கிறது. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை நிர்வகிப்பதற்கு, ஒவ்வொரு மருந்தகத்திற்கும் ஆண்டொன்றிற்கு ரூபாய், 5,000-ஐ அரசாங்கம் அளித்தது. 1967-ம் ஆண்டுத் தொடக்கம் ஆண்டொன்றுக்கு ரூ. 5,400 ஆக இத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

*மாநில அரசின் நிதி வசதி, அரசு மருத்துவ நிலையம் வேண்டுமென குறிப்பிட்ட பகுதியில் வாழும் மக்களின் வேண்டுகோள், மற்றும் அப் பகுதியிலுள்ள மக்கட் தொகை, அருகிலுள்ள அரசு மருத்துவ மனை வசதி போன்றவற்றைக் கருத்திற்கொண்டு, உள்ளாட்சி மருத்துவ நிலையங்களை அரசு ஏற்றுக்கொள்ளும் திட்டம் படிப்படியாக செயற்படுத்தப்படுகிறது. இதுவரை 57 மருத்துவ நிலையங்களை அரசு ஏற்று கொண்டுள்ளது. நிதிப் பற்றுக்குறை காரணமாக 1967–68-ம் ஆண்டில் இவ்வேலைத்திட்டம் அரசால்*





தள்ளிவைக்கப்பட்டது. ஆனால் 1968–69-ம் ஆண்டில் மேற்கண்ட பணி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. தொடராச் செலவினங்கள் முழுவதற்கும், மக்களிடமிருந்து நன்கொடைகள் கிடைக்கப் பெற்றால், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு ஏற்றுக்கொள்ளுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**குடும்ப நலத் திட்டம்.**—குடும்ப நலத் திட்ட வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுதற்கு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. மொத்தமுள்ள 374 வட்டாரங்களில் 125 வட்டாரங்கள், திருத்தப்பட்ட குடும்ப நல வேலைத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திருத்தப்பட்ட குடும்ப நல வேலைத் திட்டத்தை விரிவாக்கி, அண்மையில் மேலும் 100 வட்டாரங்களுக்கு. 800 துணை நிலையங்களுடன் கிராமக் குடும்ப நலத் திட்ட வேலைகளைத் தொடங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத் திட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ள வட்டாரங்களின் மொத்த எண்ணிக்கை 225 ஆகும். திருத்தப்பட்ட குடும்ப நலத் திட்ட வேலைகளை மாநிலத்திலுள்ள 149 வட்டாரங்களுக்கும், 1,192 துணை நிலையங்களுக்கும், 1970–71-ம் ஆண்டில் விரிவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் ஆண்டுதோறும் குடும்ப நலத் திட்டப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. 1969–70-ம் ஆண்டில் 73 முகாம்கள் (சோதனை முயற்சி) நடத்தப்பட்டன.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் செய்யப்படும் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை ஒவ்வொன்றிற்கும் ரூ. 30 வீதம் அரசிடமிருந்து பெற மருந்தகத்திற்குத் தகுதியுண்டு. தவிர தந்தைக்கும், தாய்க்கும் செய்யப்படும் அறுவை சிகிச்சைகளுக்கு முறையே ரூ. 10, ரூ. 25 வீதம் உதவித் தொகையாக ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் பெறலாம். ஒன்றியங்களால் ஊக்குவிக்கப்பட்டு, அதன் காரணமாக அனுமதிக்கப்பட்ட அறுவை சிகிச்சையாளரிடம் அனுப்பப்பட்டுள்ள ஒவ்வொரு அறுவை சிகிச்சைக்கும் ரூ. 10-ஐ ஈட்டுமானியமாக ஒன்றியக் குழுக்கள் பெறலாம். அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளச் செல்பவரின் போக்குவரத்து செலவிற்கும், ஒன்றியப் பகுதிகளில் குடும்ப நலத் திட்டத்தை விளம்பரப்படுத்துவதில் ஒன்றியத்திற்கு ஏற்பட்ட செலவிற்காகவுமே இத் தொகை அளிக்கப்படுகிறது. 1974-ம் ஆண்டில், பிறப்புத் தொகையை ஆயிரம் பேர்களுக்கு 40 என்பதிலிருந்து 25-க்குக் குறைப்பதே குறிக்கோளாகும். பல்வேறு மாநிலங்களின் மக்கட் தொகை, பிறப்பு விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு முறைக்கெனவும் திட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன, தமிழ் நாட்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட திட்ட இலக்கு

களும், 1969-ம் ஆண்டு டிசம்பர் இறுதி வரையிலான சாதனைகளும் வருமாறு :—

| (1) | திட்ட இலக்கு. (2) | 1969 டிசம்பர் இறுதி வரையிலான சாதனைகள். (3) | 1968–69-ஆம் ஆண்டு சாதனைகளின் சதவீதம். (4) |
|---|---|---|---|
| அறுவைச் சிகிச்சை .. | 1,79,600 | 78,446 (48 சதவீதம்) | 49·3 சதவீதம். |
| கருத்தடை வளையங்கள் | 58,500 | 26,851 (46 சதவீதம்) | 15·7 சதவீதம் |

ஒவ்வொரு மாவட்டத்திலும், ஆண்டொன்றில் அதிகமான வர்களை அறுவை சிகிச்சைக்கென அனுப்பும் 3 ஊராட்சிகளுக்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை அரசு அண்மையில் உருவாக்கி யுள்ளது.

## (இ) சமூகக் கல்வி.

1969–70-ம் ஆண்டு முதல் சமூகக் கல்வி வேலைத் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :—

1. சமூகக் கல்வி நிலையங்கள்
2. வானொலிப் பெட்டிகள்
3. செய்தி நிலையங்கள்
4. பள்ளி வேலைகள்
5. விளைச்சல் போட்டி, பொருட்காட்சி, விழாக் கூட்டங்கள்.
6. தேசிய நாட்களைக் கொண்டாடுதல்.
7. பல்வகை.

தற்போது 12,900 சமூகக் கல்வி நிலையங்கள் உள்ளன. நடைமுறைத் தகவல்களின்மீது, விருப்பப்படி விவாதிக்கும் ஒரு நிலையமாக, முதியோர்களுக்கென இவை அமைக்கப்பட்டுள்ளன. ஊரிலேயுள்ள பள்ளி ஆசிரியர்கள் அல்லது இதர கல்வியறிவு பெற்றவர்கள் இதன் அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் செய்தித்தாள்கள், பத்திரிகைகள் படித்து விவாதங்களைத் துவக்கி உதவுகின்றனர்.

ஊராட்சிகளில் வானொலிப் பெட்டிகளை நிறுவும் செயல் திறமிக்க திட்டமொன்று தொடர்ந்து செயற்படுத்தப்பட்டதனால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், இம்மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும் வானொலிப் பெட்டிகள் நிறுவப்பட்டு விட்டன. 1969-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் தேதி அன்று, 17,840 வானொலிப் பெட்டிகள் இருந்தன. ஊராட்சிகள் அனைத்திலும் வானொலிப் பெட்டிகள் அமைக்கப்பட்டு விட்டதனால், இத்திட்ட வேலைகள் தற்போது ஊர்கள், சிற்றூர்களுக்குக்கூட விரிவாக்கப்படுகின்றன. இதற்கென ஊராட்சி ஒன்றிய வாரியாக ஒதுக்கப்பட்டத் தொகை



யைத் தவிர்த்து, ஊர்கள், சிற்றூர்கள் அனைத்திலும் வானொலிப் பெட்டிகளை நிறுவுதற்கு அரசாங்கம் ரூபாய் 5,17,000 ஒதுக்கி யுள்ளது. ஒவ்வொரு பெட்டிக்கும் ரூபாய் 100 வீதம் உதவித் தொகை வழங்குதற்கென, இத்தொகை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு ஒதுக்கீடுகளையும் பயன்படுத்தி, நடப்பாண்டிலேயே ரூபாய் 7,000 மதிப்புள்ள வானொலிப் பெட்டிகள் கூடுதலாக அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

சமூகக் கல்வி வேலைத் திட்டத்தில் ஒரு புதிய சிறப்பியல்பு என்னவெனில், கிராம வளர்ச்சிக்கென மாவட்ட அளவில் இங்குமங்கும் நடத்தப்படுகிற கண்காட்சிகளாகும். தவிர சமுதாய வளர்ச்சி, மற்றும் அதைச் சார்ந்தனவற்றைப்பற்றிய சிறிய திரைப் படங்களை உருவாக்கி, ஊர்ப்புறங்களில் திரையிட்டுக் காட்டுதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாநிலச் செய்திச் சுருள்களின் படிகள் தயாரிக்கப்பட்டுத் திரையிடப்படும். ஊர் வளர்ச்சிப் பணிகள் பற்றிய சிற்றேடுகளும், மக்களுக்கு வழங்குவதற்காக வெளியிடப்படும். ஊர்ப்புறங்களில் விளம்பரங்கள் செய்வதற்கென சீரணித் தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்.

ஐந்தாண்டுத் திட்டங்களில் மக்களின் கவனத்தை ஊக்குவிப்பதற்கும் ஆக்கப்பணிகள், திட்டங்கள் ஆகியவற்றுக்கு மக்களின் ஆதரவைப் பெறுதற்கும் கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இந்த மன்றங்கள் நிகழ்ச்சிகளைக் கேட்டு, விவாதிக்கும் குழுக்களாக இயங்குகின்றன. இதுவரை 5,000 கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை ஊக்குவிப்பதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள சிறந்த கிராம வானொலி மன்றங்களுக்கு 'டிரான்சிஸ்டர்' வானொலிப் பெட்டிகள், கேடயங்கள் ஆகியவை ஆண்டுதோறும் பரிசுகளாக அளிக்கப்படுகின்றன. மாநில அளவிலான சிறந்த கிராம வானொலி மன்றத்திற்குச் சுழற் கேடயங்கள் அளிக்கப்படுகின்றன. தவிர, கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பாகும் செய்திகளை உள்ளடக்கிய சிற்றேடு ஒன்று உருட்டச்சிடப்பட்டுத் திங்கள் தோறும், வானொலி மன்ற உறுப்பினர்களின் நன்மைக்கென, செய்தி நிலையங்களுக்கு அனுப்பப்படுகிறது.

## (ஈ) ஊர்ப் புறங்களில் செய்திகளைப் பரப்புதல்

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் பல்வேறு கூறுகளுக்கு நிறைந்த விளம்பரம் அளிப்பதற்கெனவும், ஊராட்சி நிர்வாகத்தின் வளர்ச்சியை மக்களிடையே பரப்புதற்கெனவும் 'சீரணி' என்ற திங்கள் இதழ், அரசால் வெளியிடப்படுகிறது. 1969-ம் ஆண்டில், இவ்விதழின் விற்பனை படிப்படியாகப் பெருமளவில் உயர்ந்துள்ளது. தற்போது இவ்விதழின் விற்பனை திங்கள் ஒன்றிற்கு 30,000 படிகளாகும்.

'சீரணி'யை வெளியிடுவது தவிர்த்து, மற்றும் பற்பல முறைகளிலும் மக்களிடையே தகவல்களைப் பரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பத்திரிகை, வானொலி, திரைப்படம், பொருட்காட்சி முதலியவை சான்றுகளாம்.

கிராம மக்களுக்காகத் திட்டங்கள், வேளாண்மை, திட்ட வேலைகள் போன்றவை அடங்கியுள்ள திரைப்படங்களை வட்டாரப் பகுதிகளில் திரையிட்டுக் காட்டும் பொறுப்பை 54 திரைப்படப் பிரிவுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. மேலும் சமுதாய வளர்ச்சி, வேளாண்மை சமூக நலம் போன்றவற்றைக் கொண்ட அண்மைக்கால சிறிய திரைப்படங்களை இப்பிரிவுகளுக்கு அளித்து, ஊர்ப்புறங்களில் திரைப்படத்தின் வாயிலாகத் தீவிரமாகச் செய்திகளைப் பரப்புதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (உ) மகளிர், குழந்தைகள் நலம்.

அரசு கூறியுள்ள முறைகளைப் பின்பற்றி, மூன்றாவது திட்டம் மற்றும் அதைத் தொடர்ந்த நான்கு ஓராண்டுத் திட்டங்களிலும் ஊராட்சி ஒன்றியங்கள் மகளிர், குழந்தைகள் நலத் திட்டங்களைக் கீழ்க்கண்டவாறு செயற்படுத்தியுள்ளன. நான்காவது திட்டக் காலத்தில் கீழ்க்காணும் திட்ட வேலைகள் ஊராட்சி ஒன்றியங்களால் நிறைவேற்றப்படும் :—

1. மகளிர் மன்றங்களில் செயல் விளக்கம்.
2. மகளிர் மன்ற அமைப்பாளர்களுக்கு மதிப்பூதியத் தொகை.
3. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம மகளிர்க்குப் பயிற்சி முகாம்களும், கருத்தரங்குகளும்.
4. புழக்கடைக் காய்கறித் தோட்டம், கோழி வளர்ப்பு போன்றவற்றிற்குத் தேவையான பொதுவான கருவிகளை வழங்குதல்.
5. சமூகக் கல்விப் பொருட்களையும், மனையக விளையாட்டு கருவிகளையும் வழங்குதல்.
6. வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்போர் கழகங்களை நிறுவுதல்.

### 7. சிறப்புத் திட்ட வேலைகள்

### (அ) வறட்சித் தணிப்பு

1968, 1969-ஆம் ஆண்டுகளில் தென்மேற்கு, வடகிழக்குப் பருவ மழை தவறியதன் காரணமாக விளைந்த துன்பங்களை உடனே கவனத்திற்கொண்டு, சமுதாயத்திற்கு நிலையான நன்மைகளை ஈட்டித் தரும் பணிகளுக்கு அரசு முதன்மை இடம் அளித்து செயலாற்றியது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஒத்துழைப்பையும் இவ்வறட்சித் தணிப்புத் திட்ட வேலைகளில் பெற்று, செயலாற்றுவதற்கென, தொடர்புள்ள பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களே இப்பணிகளுக்குப் பொறுப்பாக்கப்



பட்டன. வறட்சித் தணிப்புப் பணிகளை நிறைவேற்றுவதற்கு அந்தந்தப் பகுதிகளிலுள்ள உள்ளாட்சித் தலைவர்களும், ஊராட்சி ஒன்றிய அலுவலர்களும் முக்கியப் பொறுப்புள்ளவர்களாக ஆக்கப்பட்டனர். வறட்சித் தணிப்புப் பணிகள் உச்ச நிலையை அடைந்து செயலாற்றியகாலை, என்றுமில்லாத எண்ணிக்கையிலான 40,604 ஆக்க வேலைகள் நடைபெற்றன. இவற்றின் வாயிலாக வேலை வாய்ப்பைப் பெற்ற மக்களின் தொகை 8.1 இலட்சமாகும். துயர் துடைப்புப் பணிகளுக்கெனச் செலவிடப்பட்ட மொத்த தொகை சுமார் ரூ. 19 கோடியாகும். குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல், புதிய குடிநீர்க் கிணறுகளைத் தோண்டுதல், சிறிய நீர்ப்பாசனப் பணிகள், பெரிய பாசன வேலைகள், சாலைகள் அமைப்பு, மண்வளப் பாதுகாப்பு வேலைத் திட்டங்கள், குடிமராமத்து வேலைகள், பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்காக விரைவுத் திட்ட வேலைகள் போன்ற பல வேலைகள் வறட்சித் தணிப்பு பணிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளாகும்.

### (ஆ) கிராம ஆள்வலத் திட்டம்

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கும், வேளாண்மை வேலைகள் இல்லாக் காலங்களில் போதிய அளவு வேலை இல்லாதோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும், கிராமப் பகுதிகளில் கிராம ஆள்வலத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுளது. இத்திட்டம் தொடர்பான பணிகள் அனைத்தும் உள்ளூரிலேயேயுள்ள தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. இச் சங்கங்கள் செயற்படாத இடங்களில், இவ் வேலைகள் ஊராட்சிகளிடம் தரப்படுகின்றன. சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை விருத்தி செய்தல், சிறிய சாலைகள் அமைத்தல், ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்களைப் பண்படுத்துதல், சிறிய கழிவு நீர்ப்பாசனங்களை அமைத்தல், விறகுகளுக்காக பயன்படும் மரங்களை வளர்த்தல், சமுதாயக் கிணறுகளை அமைத்தல் போன்றவை கிராம ஆள்வலத் திட்ட வேலைகளில் அடங்குவனவாகும். இம் மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களில் 72 வட்டாரங்களில் இத்திட்டம் செயற்படுகிறது..

சுமார் ரூ. 4 லட்சம் வரை முதலீடு செய்து சுமார் 4 முதல் 5 ஆண்டுகளாக இத் திட்டத்தை மேற்கொண்டு நிறைவேற்றிய வட்டாரங்களை, இத் திட்டத்திலிருந்து நீக்கிவிட்டு, அவ்விடங்களில் உண்மையிலேயே பின்தங்கிய வட்டாரங்களில் இத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்பதும், அந்நிலையில்தான் இத் திட்டத்தின் நன்மைகள் பெரும்பாலான இடங்களுக்குக் கிடைக்குமென்பதும் தற்போதைய கொள்கையாகும். இதற்கேற்ப 1969-70-ஆம் ஆண்டில் 42 பழைய வட்டாரங்கள் நீக்கப்பட்டு, அவ்விடங்களில் 42 வட்டாரங்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்

பட்டுள்ளன. மேலும் 1970—71-ஆம் ஆண்டில் மேலும் 30 பழைய வட்டாரங்களை நீக்கிவிட்டு, அவற்றிற்கு மாறாக 30 புதிய வட்டாரங்களைத் தேர்ந்தெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் நிதி, திட்டச் சாதனைகள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | செய்யப்பட்ட செலவு. | ஏற்படுத்தப் பட்ட வேலை வாய்ப்பு வேலைநாட்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூ. லட்சத்தில்) | (ரூ. லட்சத்தில்) |
| 1966–67 .. .. | 52·43 | 17·26 |
| 1967–68 .. .. | 40·70 | 15·72 |
| 1968–69 .. .. | 50·89 | 18·49 |

1970–71-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில், இத் திட்ட வேலைகளுக்கென ரூ. 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (இ) சத்துணவுத் திட்டம்

நல்ல உடல் நலத்துடன் வாழ, சத்துணவுப் பொருட்களை உற்பத்தி செய்து, அவற்றை உட்கொள்ளவேண்டியதன் அவசியத்தை கிராம மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கெனவே “ யூனிசெஃப் ” நிறுவனம், மாநில அரசு ஆகியோரின் ஒத்துழைப்புடன் சத்துணவுத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 1962-63-இல் தொடங்கி தமிழ்நாட்டில் நிறைவேற்-ப்படுகிறது. இம் மாநிலத்திலுள்ள 7 கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள 7 வட்டாரங்களே திட்டத்தை நிறைவேற்ற முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவ்வட்டாரங்களில் இத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதைக் கண்ணுற்ற பின்னர், சுய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய அடிப்படையில், இத் திட்டம் 1—4—1968 முதல் அவ்வட்டாரங்களிடமே ஒப்படைக்கப் பட்டன.

கீழ்க்கண்ட 7 வட்டாரங்களில் அவற்றிற்கு எதிராகக் குறிப்பிட்டுள்ள ஆண்டுகள் தொடக்கம், இத்திட்டம் விரிவாக்கப்பட்டு தற்போது நிறைவேற்றப்படுகிறது :—

| | | |
|---|---|---|
| 1. | பூவிருந்தவல்லி-செங்கை மாவட்டம் .. | 1966 |
| 2. | ஆத்தூர்-மதுரை மாவட்டம் .. | |
| 1. | சாத்தூர்-இராமநாதபுரம் மாவட்டம் .. | 1967-68 |
| 2. | அகஸ்தீஸ்வரம்-கன்னியாகுமரி மாவட்டம் | |
| 3. | பெரியநாய்க்கன்பாளையம்-கோவை மாவட்டம் | |
| 1. | எருமைப்பட்டி-சேலம் மாவட்டம் .. | 1969–70 |
| 2. | திருவரங்குளம்-திருச்சி மாவட்டம் . | |



“ யூனிசெஃப் ”, இந்திய அரசு, மாநில அரசுகளின் உதவியுடன் இத்திட்டம் ஐந்தாண்டுகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்கு ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப்படும்.

ஒரு வட்டாரத்திற்கு ஐந்தாண்டுகளுக்கு ஏற்படும் மொத்தச் செலவு ரூ. 6.9 இலட்சம்.

1970–71-ஆம் ஆண்டில் இத் திட்டத்தை மேலும் 6 வட்டாரங்களுக்கு விரிவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கென 1970–71-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 6.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஈ) கிராமத் தொழில்கள் திட்டம்.

1962–63-ல் மூன்று கிராமத் தொழில் திட்டங்களை தமிழ் நாட்டில் நிறுவ இந்திய அரசு அனுமதி வழங்கியது. இவை முறையே ஸ்ரீபெரும்புதூர், ஓமலூர், நாங்குநேரி ஆகிய இடங்களில் நிறுவப் பட்டுள்ளன. ஸ்ரீபெரும்புதூர் திருவள்ளூர் தாலுக்காக்கள் ஓமலூர் மேட்டூர் தாலுக்காக்கள் நாங்குநேரி தாலுக்கா ஆகிய பிரதேசப் பகுதிகளை இவை உண்டாக்கி இருக்கும் கிராமபுறங்களில் சிறு தொழில்கள் வளர்ச்சிக்காக தகுந்த ஏற்பாடுகளை ஆய்ந்து உருவாக்கும் நோக்குடன், இந்த மூன்று கிராமத் தொழில் திட்டங்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டன. ஆரம்பக் காலத்தில், இத்தொழில் திட்டங்களின்கீழ், படிப்படியாக நிறைவேற்றுகிற வேலைத் திட்டங்கள் செய்யப்பட்டு வந்தன. உள்ளூர் மக்கள் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கு அவர்களைத் தகுதியுடையவர்களாக்கவும், பல்வேறு தொழில்களில் அவர்கள் தங்கள் சுயபலத்திலேயே நின்று தொழில் செய்யும்படியான நிலையை உருவாக்குவதற்கும் பயன்படும் வகையிலும் பயிற்சி நிலையங்களை நடத்துதல், உள்ளூர் விவசாயிகளுக்கும் கைவினைஞர்களுக்கும் தொழில் செய்வதற்கான வசதிகளை அளிப்பதற்காகவேண்டி, பொது வசதி பணி நிலையங்களைத் துவக்கி நடத்துதல், உள்ளூர் மக்களின் தேவையை ஒட்டி பொருள்களைத் தயாரிப்பதற்காக அரசுத்துறையினால் கண்காணிக்கப்படும் உற்பத்திப் பிரிவுகளை அமைத்தல், ஆகிய இவை போன்ற வேலைத் திட்டங்களை ஆரம்ப காலத்தில் இத்தொழில் நிலையங்கள் செய்து வந்தன. எதற்காக இவை ஆரம்பிக்கப்பட்டனவோ—அதாவது மேலே குறிப்பிட்ட நோக்கங்கள்—நிறைவேறிவிட்டன. தனியார் பிரிவுகளையும் இந்தப் பகுதிகளுக்கு ஈர்த்து இழுத்து, கிடைக்கின்ற கொஞ்ச ஆதாரங்களையும் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்த வேண்டி, எல்லாப் பயிற்சி நிலையங்களும் இப்பொழுது மூடப்பட்டு விட்டன. பொது வசதி பணி நிலையங்களையும் தனிப்பட்ட நபர்களிடம், அவர்கள் தவணை முறையில் வாங்குகின்ற முறையில், அவர்களிடம் இவற்றை ஒப்படைக்க, இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசுத் துறை உற்பத்திப் பிரிவுகளைப்

பொறுத்தவரையில், அவற்றில் சிலவற்றை தமிழ் நாடு சிறுதொழில் நிறுவனத்திடம் மாற்றுவது என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்னை 'தமிழ் நாடு சிறு தொழில் நிறுவனத்தின் பரிசீலனையில் உள்ளது. எஞ்சியிருக்கின்ற உற்பத்திப் பிரிவுகளை தனியார் வசம் ஒப்படைப்பது சம்பந்தமான சாத்தியக்கூறுகள் விரைவில் பரிசீலனை செய்யப்படும்.

திட்டப் பகுதியில் உள்ள ஒவ்வொரு சிறு அளவிலான பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 5,000-க்கு மேற்படாத ஒரு தொகையை, தாராளமான நிபந்தனைகளின் அடிப்படையில், நிதி உதவி மான்யமாக 'ஸ்டேட் வங்கி' மூலமாக திட்ட அதிகாரிகளின் நெருங்கிய ஒத்துழைப்புடன், இந்திய அரசின் மூலமாக அளிப்பதற்கான ஒரு திட்டம் அண்மையில் உருவாக்கப் பட்டுள்ளது. 15—2—1970 வரையில், ரூ. 2,27000-க்கான நிதி உதவி அளிக்கின்ற திட்டம், இந்த மூன்று தொழில் திட்டப் பகுதியில் 72 பிரிவுகளுக்கு முன்பே விரிவாக்கப்பட்டுள்ளது. இது தவிர, தொழில்களுக்கு அரசு அளிக்கும் நிதி உதவியிலிருந்து ரூ. 5.5 இலட்சம் ரூபாய்களுக்கு கடன் வசதி அளிக்க நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. திட்டப் பகுதிகளில் தகுந்த இடங்களில் சிறு அளவில் கிராமத் தொழில் பேட்டைகளை, இத்துறையில் தனியார் களுக்கு ஒரு தூண்டுதல் ஏற்படுத்துவதற்காக வேண்டி, தவணை முறையில் வாங்க, மலிவு விலையில் பணிமனைகள் போன்ற வசதிகளுக்காக ஏற்படுத்துவதென இப்பொழுது முடிவு செய்யப் பட்டுள்ளது. இந்தத் திட்டங்களுக்கென மேலும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று இந்திய அரசு அணுகப் பட்டுள்ளது. எல்லா வளர்ச்சிப் பணிகளும் முழுமையாகச் செயல் படுத்தப்படும்பொழுது, இந்த அதிகப்படியான நிதி உதவி தேவையாக இருக்கும். எனவே, இந்தத் திட்டப் பகுதிகளுக்காக திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சி வேலைகள் செயல்படுத்தப் படும்பொழுது( அதிகமான தனியார் பிரிவுகள், திட்டப்பகுதி களுக்குள் ஈர்க்கப்பட்டு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பகுதிகளை தொழில் மயமாக்கவேண்டும் என்ற நோக்கம் நிறைவு பெறுவதற்கு, இப்படிப்பட்ட ஓர் ஏற்பாடு மிகுந்த பயனுள்ளதாக அமையும்.

## (உ) குழந்தை நலன் ஒருங்கிணைப்புத் திட்டம்.

அரசும், தானே முன்வந்து பணியாற்றும் நிறுவனங்களும் நல்கும் ஒத்துழைப்புடன், குழந்தை நலப்பணியில் மும்முர மாகவும், குறைந்த செலவில் நிறைந்த பயன் காண முடியும் என்பதே இத்திட்டத்தின் கருத்தாகும். இந்த மாநிலத்தில் பூவிருந்தவல்லி வட்டாரத்தில் இந்தத் திட்டம் துவக்கப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், 50 குழந்தைகள் காப்பகங் களும் 20 சிசு ஓய்வு நிலையங்களும் உள்ளன. குழந்தைகள் காப்பகம் ஒவ்வொன்றும் குழந்தைகள் வளர்ச்சியில் பயிற்சி பெற்றுள்ள பாலசேவகி ஒருவராலும், ஆயா ஒருவராலும்



நிர்வகிக்கப்படுகின்றன. குழந்தைகள் காப்பகம் ஒன்றில் சராசரி 40 குழந்தைகள் இருக்கும். சிசு ஓய்வு நிலையமொன்றில் சராசரி 10 குழந்தைகள் இருக்கும். மதிய உணவு வழங்குவதும், பால் வழங்குவதும் இவ்வேலைத் திட்டத்தின் முக்கிய பகுதியாகும். திட்ட நிதியிலிருந்து குழந்தை ஒன்றுக்கு 10 காசு வீதம் கொடுக்கப்படுகிறது. உள்ளூர் மக்கள் தலைக்கு இரண்டு காசு முதல் ஐந்து காசுவரை கொடுக்கின்றனர். 1968 நவம்பர் வரையில், இந்தத் திட்டச் செலவானது, இந்திய அரசினாலும் மாநில அரசினாலும் 75 : 25 விகிதங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தது. 1968 நவம்பர் முதல் இதற்காகும் முழுச் செலவும் மாநில அரசினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

## (ஊ) பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள்.

சேலம் மாவட்டத்திலே கொல்லிமலையில் ஒன்றும், ஏர்க்காட்டில் ஒன்றுமாக இரண்டு பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்களை அரசு துவங்கியது. இந்த வட்டாரங்களில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் பழங்குடி மக்களின் நல்வாழ்வுக்காகவே நடத்தப்படுபவையாகும். "போக்குவரத்து", "குடிநீர் வழங்கல்" ஆகிய இரு அம்சங்களை ஒட்டி, இந்தப் பிரதேசத்தின் தேவைகள் விரிவான முறையில் மதிப்பிடப்பட்டுள்ளன. பழங்குடி மக்களின் நல் வாழ்வுக்காக செய்யப்படும் பணிகள் சம்பந்தமாக, நன்கொடை வசூலித்தல் வற்புறுத்தப்படாமல் விட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றப் பகுதிகளில் செய்வது போலல்லாமல், இந்த இரு வட்டாரப் பகுதிகளிலும் அனுமதி அளிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்று கின்ற பணி அரசினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயம், விலங்கின வளர்ச்சி, கிராமக்கலை, கைத்தொழில், கல்வி ஆகிய இப் பிரிவுகளின் கீழ் செய்யப்படும் பணிகள், உள்ளூர் நிலைமை களுக்கேற்ற வகையில், திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. சில அம்சங்களில் நிதி உதவி அதிகப்படுத்தப்பட்டுள்ளது. 1970–71-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் 1,220 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

## (எ) ஓராண்டுத் திட்டம்.

உள்ளாட்சி நிறுவனங்களின் நிதிவாயில்களைப் பெருக்கு வதற்கும் ஆதாயமளிக்கும் நிறுவனங்களைத் தொடங்குவதற்கும் ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் தங்களிடம் மிகுதியாக வுள்ள நிதியைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளன. டிராக்டர்கள், மருந்து தெளிக்கும் கருவிகள், தூவு கருவிகள், உழுபடைக் கருவிகள் முதலியவற்றை வாங்கி, அவற்றை உழவர் களுக்கு வாடகைக்கு வழங்குவது மூலமும், சமுதாயக் கிணறுகள் வெட்டுவது போன்ற பணிகளை நிறைவேற்றுவதன் மூலமும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான வேளாண்மைத் திட்டங்களை ஓராண்டுக் காலத்திற்குள் முடிப்பதற்கென, மிகுதியாகவுள்ள அந்த

நிதிகளைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டம் 1967-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை அரசு தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருவதோடு, 1970 செப்டம்பருக்குள் இம்மாநிலத்தில் நிறைவேற்றி முடிப்பதற்கென கீழ்க்கண்ட இலக்குகளை நிர்ணயித்துள்ளது :—

| | | | |
|---|---|---|---|
| 1 சமுதாயக் கிணறுகள் | .. | .. | 500 |
| 2 விசைத் தெளிப்பான்கள் வழங்குதல் | .. | .. | 1,000 |
| 3 பள்ளிக் காய்கறித் தோட்டங்கள் | .. | .. | 1,060 |
| 4 பள்ளிகட்கு வேண்டிய வசதிகள் செய்தல் | | .. | 120 |
| 5 பள்ளிக் கட்டடங்கள் | .. | .. | 374 |
| 6 பாறை உடைக்கும், துளைபோடும் கருவிகள், டிராக்டர்கள் போன்றவைகளை வாங்கியளித்தல் | | | 60 |

இதுவரை ஊக்கமூட்டும் வகையில் பயன்கள் விளைந்திருப்பதைக் கருத்திற்கொண்டு இத்திட்டத்தினை ஆண்டுதோறும் தொடர்ந்து மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. சமுதாயக் கிணறுகள் தோண்ட இணைமானியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காகும் செலவு அரசு நிதி, ஊராட்சி ஒன்றிய மன்ற மிகுதி நிதி ஆகியவற்றிலிருந்து 50 : 50 என்ற விகிதத்தில் ஏற்கப்படும்.

**8. 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் முந்நிலைப் பள்ளிக் குழந்தைகட்கு உணவளித்தலும் குழந்தைகள் காப்பகங்கள் கட்டுதலும்.**

குழந்தைகள் காப்பகங்கள்

முந்நிலைப் பள்ளிகள் அல்லது குழந்தைகள் காப்பகங்கள் 2 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளை உரிய முறையில் வளர்ச்சியடையச் செய்து, அவர்களிடையே பள்ளி செல்லும் பழக்கத்தை ஏற்படுத்துகின்றன. இத்திட்டம் ஓர் ஊராட்சிக்கு ஒன்று வீதம் 21 வட்டாரங்களில் செயற்படுத்தப்பட்டது. தற்போது இம்மாநிலத்தில் 730 நிலையங்கள் இயங்கி வருகின்றன. உடல்நலப் பழக்க வழக்கங்களை ஊட்டுதல், எளிய தோட்ட வேலைப் பயிற்சிகள், கை கால்கள் ஒத்திசைந்து, உரிய பாங்குடன் வேலை செய்யப் பழகுதல், எழுத்துக்களை அறிந்துகொள்ளுதல், சமுதாய ஆசாரமுறை, ஒழுக்கம் ஆகியவற்றின் எளிய விதிகளை அறிந்து கொள்ளுதல் போன்றவை இத்திட்டத்தில் இடம் பெறுகின்றன. "யூனிசெஃப்" உதவியுடன் இக்குழந்தைகட்குப் பால் வழங்கப்பட்டது ; சில பள்ளிகளில் மதிய உணவும் அளிக்கப்பட்டது.

"கேர்" நிறுவனத்தாரின் உதவியுடன் பள்ளிக் குழந்தைகள், பேறுகாலத்தை எதிர்நோக்கியுள்ளவர்கள், பிள்ளைப்பேறடைந்த தாய்மார்கள் ஆகியோரடங்கிய 1.20 இலட்சம் பேர்களுக்குச் சத்துணவு தரத் தமிழ்நாடு அரசு திட்டம் தீட்டியுள்ளது. மாநிலத்தில் 1,000 குழந்தைகள் காப்பகங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். ஒவ்வொரு குழந்தைகள் காப்பகமும் ஓராண்டில் 300 நாட்களுக்கு 80 குழந்தைகள் 40 தாய்மார்களுக்குச் சத்துணவு தரப்படுகிறது. ஐந்தாண்டுகளுக்கு இதற்கான உணவுப் பண்டங்கள் கிடைக்க "கேர்" நிறுவனத்தினர் ஏற்பாடுகள் செய்வர்.





குழந்தைகள் காப்பகங்களுக்கென அனுமதிக்கப்பட்ட வடிவில் ஒவ்வொன்றும் ரூ. 7,000 மதிப்பில் நிலையான கட்டடங்கள் கட்டுவதும் இத்திட்டக் கருத்தில் அடங்கியுள்ளது. ஒவ்வொரு கட்டடத்திற்கும் ரூ. 6,500 "கேர்" நிறுவனம் வழங்கும். மீதி மக்கள் நன்கொடை மூலம் வழங்கப்படுவதாகும். இவற்றோடு ஒவ்வொன்றும் ரூ. 900 மதிப்புள்ள 375 சிறிய, நிலையான சமையலறைகளை மகளிர் மன்றங்களையொட்டிக் கட்டித் தரக் "கேர்" நிறுவனம் இசைந்துள்ளது.

**9. சீரணி**

மக்களிடையே புதியதொரு சமுதாய விழிப்புணர்ச்சியை உருவாக்கி, அதன் மூலம் தொண்டுணர்ச்சியைத் தூண்டவேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் ஏற்படுத்தப்பட்டதே சீரணி இயக்கம். "நம் மக்களில் சில ஆயிரவராவது தமக்கும் தம் குடும்பத்தார்க்கும் உழைத்தது போக எஞ்சிய நேரத்தில் ஒரு மணி நேர உழைப்பை நாட்டின் பொதுநலம் கருதிப் பணிகளாற்ற ஒதுக்குவார்களாயின் நம் சமுதாயத்தின் தொடர்ந்த முன்னேற்றம் ஐயமற்றதாகிறது" என மறைந்த முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். சீரணிப் படை உறுப்பினர்கள் ஊதியம் எதுவுமின்றி, அரசு தரும் கருவிகளையும் துணைப்பொருட்களையும் கொண்டு தங்கள் ஓழிந்த வேலைகளில் ஏரிகளைச் செப்பனிடல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், சாலைகளைச் சீர்ப்படுத்துதல், தரிசு நிலங்களை விளை நிலங்களாக்குதல், முதியோர் கல்வி, தீண்டாமையொத்த சமுதாயக் கேடுகளைக் களையப் பரப்புரையாற்றுதல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றனர். தொடங்கிய காலத்திலிருந்து இரண்டாண்டுகட்குள்ளாக சீரணியினர் ஆற்றியுள்ள சாதனைகளை நடுநிலையோடு நோக்கும்போது எந்த நம்பிக்கையோடு எதிர்பார்ப்புடனும் துவக்கப்பட்டதோ அது பொய்த்துவிடவில்லை என்று உறுதியாக நம்பலாம்.

இன்றுவரை மாநிலத்தில் சீரணியில் சேர்க்கப்பட்டுள்ள தொண்டர்களின் எண்ணிக்கை 40,000. 1968-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ஆம் நாள் முதல் 1969-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ஆம் நாள் முடிய உள்ள காலத்தில் இவ்வணியினர் எடுத்து முடித்துள்ள பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | | | |
|---|---|---|---|
| 1 கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் | | .. | 481 |
| 2 இணைப்புச் சாலைகள் | .. | .. | 237 |
| 3 ஏரிகள், கால்வாய்கள் தூர் எடுத்தல் | .. | .. | 537 |

| | | | |
|---|---|---|---|
| 4 வெள்ளை பூசப்பட்ட பள்ளிகள் | .. | .. | 6,534 |
| 5 காய்கறித் தோட்டங்கள் | .. | .. | 2,185 |
| 6 மற்ற பணிகள் | .. | .. | 8,121 |

ரூ. 11 இலட்சம் அரசு உதவியுடன் ரூ. 33 இலட்சம் மதிப்புள்ள வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் பணியில் படிப்படியே முன்னேறி உச்சநிலையைத் தான் அடையமுடியும் எனத் தன்னடக்கத்தோடும், அமைவோடும் பேரவை நம்புகிறது.

## 10. வருங்கால வாய்ப்பு நிலைகள்

இந்த மாநிலத்தில் கிராமப் பொருளாதாரத்தைச் சீரமைக்கும் பணியில் நல்லதொரு மாற்றத்தை தோற்றுவிக்க முடியும் என்ற வலுவான நம்பிக்கையைக் கடந்த ஆண்டில் இத்துறையில் செய்யப்பட்டுள்ள சாதனைகள் நமக்கு ஊட்டியுள்ளன. நகர்ப்புற அமைப்புத் துறையின் ஒத்துழைப்புடன், பிரதேச வாரியான திட்டத்தினை உருவாக்கி நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பிரதேச வாரியான திட்டங்கள் வளர்ச்சியடையக் கூடிய பகுதிகளைக் கோடிட்டு நமக்குக் காட்டுவதுடன், பிரதேசமானது ஏற்றத்தாழ்வு இல்லாத முறையில், சீரான முறையில் வளர்ச்சியடைய நல்லதொரு பாதையினை அமைத்துக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ச்சியடையக் கூடிய பகுதிகளைச் சுட்டிக்காட்ட, இந்திய அரசானது, ஓர் ஆய்வுக் கூடத்தை நிறுவ ஒப்புதல் அளித்துள்ளது. இது மைய அரசினால் செயற்படுத்தப்படும் ஒரு வேலைத் திட்டமாக இருக்கும். அதே சமயத்தில், கிராமப்புறங்களில் பெரிய அளவில் சந்தைகளை அமைப்பதும் தேவையாகிறது. இந்த வகையில் கூட்டுறவு நிறுவனங்கள் முக்கியமான பங்கினை ஆற்றும் என எதிர்பார்க்கப் படுகிறது. இத்துறையில் வளர்ந்து வரும் தேவையினைச் சமாளிப்பதற்காக வேண்டி, கிராம வீட்டு வசதி நிறுவனத்தின் பணிகளையும் விரிவுபடுத்துதலும் விரும்பத்தக்கது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள "தமிழ் நாடு குடி-நீர் வழங்கல்" வடிகால் வாரியமானது, குடி-நீர் வழங்குவதற்குரிய வேலைத் திட்டங்கள் மற்றும் வடிகால் வேலைத் திட்டங்களைப் பெருமளவில் மேற்கொண்டு, ஊர்ப்புறங்களின் தேவைகளை நிறைவேற்றுமென எதிர்பார்க்கப்படுகிறது. கிராமப்புறங்களுக்கு மின்வசதி அளித்தலும், அதே அளவு முக்கியமான ஒன்றாகும். இத்துறையில் தமிழகம் நாட்டிலேயே முதன்மையில் உள்ளது. 1971–72-க்குள் தமிழகத்தில் எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி அளித்துவிட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையில், தொடர்ந்து பள்ளியில் படிக்காமல் படிப்பை நடுவில் விட்டுவிட்டுப் போய் விடுகின்ற நிலையானது, மிகப் பயங்கரமான அளவில் இன்று





உள்ளது. இந்த நிலையை அகற்ற திட்டவட்டமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். வயது வந்தோரிடையே படிப்பின்மையை ஒழித்துக்கட்டுவது பற்றி, 'ஐக்கிய நாடுகளின் கல்வி-கலாச்சார நிறுவனம்' வகுத்துள்ள செயல் திட்டம், அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு வசதிகள் போதுமான அளவு இல்லாமையைப் போக்குவதற்குக் கிராமப் பணிகள் பற்றிய சிறப்புத் திட்டம் ஒன்றினை 1970–71-இல் உருவாக்கி நடத்துவதென அரசு முடிவு செய்துள்ளது. இணைப்புச் சாலைகள் அமைத்தல், மகப்பேறு நிலையங்கள், பள்ளிக் கட்டடங்கள், குடி-நீர் வழங்கலை விரிவுபடுத்துதல் போன்ற பணிகளின் மூலமாக இச்சிறப்புத் திட்டம் செயற்படும். இதற்காக வேண்டி, 1970–71-ஆம் ஆண்டின் நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் நடைபெறும் பகுதிகளில் நிலவும் நிலையினை அனுசரித்து, 35 முதல் 50 சதவிகிதம் என்ற அளவில், இத்தொகையானது, பல்வேறு வகையான பணிகளுக்கு, நன்கொடைத் தொகையாகப் பயன்படுத்தப்படும். இந்த 100 இலட்சம் ரூபாயில், அரிசன மக்கள் வசிக்கும் இடங்களுக்காகச் செய்யப்படும் பணிகளுக்காக 25 இலட்சம் ரூபாய் தனியே ஒதுக்கப்படும். அவ் வேலைகளுக்கான செலவு முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்ளும். மாநிலத்தில் அரிசன மக்கள் வசிக்கும் பகுதிகளில் எல்லாம் இணைப்புச் சாலைகள் வசதியினையும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியினையும் அடுத்து வருகிற ஐந்தாண்டுகளுக்குள் அளிக்கின்ற வகையில் இந்தத் திட்டத்தை விரைவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையினை பல்வேறு பணிகள் வாரியாக எப்படி ஒதுக்கீடு செய்வது என்பது பற்றிய விவரங்கள் தொகுக்கப்பட்டு வருகின்றன. அது பற்றிய தேவையான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

1958-ம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தைச் செயற்படுத்துவதில் காணப்படும் குறைபாடுகளைப் போக்குவதற்காக வேண்டி, சட்டத்தையே மிகவும் விரிவான முறையில் பரிசீலனை செய்யும் வேலை நடைபெற்று வருகிறது. இறுதி வடிவம் பெற்ற சட்டவரைவு தயார் செய்யப்பட்டு, சட்டமாக்குவதற்காக வேண்டி, சட்டப் பேரவையின் முன் வைக்கப்படும்.

மிகப் பெரிய அளவில் தீட்டப்படும் இவ்வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தவேண்டுமெனில், "ஊராட்சி வளர்ச்சி நிர்வாக இயந்திர"த்தைப் பலப்படுத்துவதும், "ஊராட்சி வளர்ச்சித் துறை" என்று தனியாக ஒரு துறை ஏற்படுத்துவதும் அவசியமாகிறது.

இப்பொழுதுள்ள வட்டாரங்களைப் பாகுபாடு செய்துள்ள முறையைத் திருத்தியமைக்கின்ற வேலையையும் அரசு மேற்கொண்டுள்ளது. இப்பிரச்னையைப் பூர்வாங்கமாக ஆராய்ந்ததிலிருந்து அப்பாகுபாட்டில் பெரிய மாறுதல் எதுவும் செய்வதற்கு

இடமிருக்காது எனத் தோன்றுகிறது. வட்டாரங்களின் மொத்த வருவாய்களையும், வசதிகளையும் அனுசரித்து, இப்பாகுபாட்டில் ஆங்காங்கு ஒரு சில மாறுதல்கள் செய்வதற்கு இடமிருக்கும்.

தொடக்க கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியம் அளிப்பதில் இப்பொழுதுள்ள நடைமுறைகள் "ஊராட்சிக் கல்வி நிதி விசாரணைக் குழு" அளிக்கின்ற பரிந்துரைகளின் அடிப்படையில் மாற்றம் செய்யப்படும்.

இறுதியாக இன்று தமிழகத்தில் கிராமப்புறங்களில் இசைவான நல்லதொரு சூழ்நிலை உருவாகியுள்ளது. கிராம மக்களிடையே நாள்தோறும் வளர்ந்து வரும் உள்ளக் கிடக்கைகளையும், தேவைகளையும், வளர்ந்துவரும் பணிகளையும் சாதனைகளையும் முன்னிறுத்தி, நிறைவு செய்ய முடியும் என்ற நம்பிக்கை இன்று தோன்றியுள்ளது.

## இணைப்பு III .

230ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறை

### கோரிக்கை எண் 29—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள்—

### கொள்கை விளக்க குறிப்பு

இது, 1970–71-ம் ஆண்டுக்காக ரூ. 2,99,15,000-க்கான அடங்கல் மானியக் கோரிக்கையாகும். நகர்ப்புற நீர்வழங்கல் கழிவு நீர் அகற்றும் திட்டம், தாழ் குடிசைப் பகுதிகளை அகற்றுதல், குடிசைப் பகுதிகளை மேம்படுத்தல் திட்டங்கள், கிராமப் பகுதியிலும் நகர்ப்புறங்களிலும் அதிகரித்த வாழ்க்கை வசதிக்கும் சிறப்பான வாழ்வு நிலைமைகளுக்கும் உள்ளாட்சி மன்றங்களில் சாலைப் போக்குவரத்தைப் பேணி, மேம்படுத்துவதற்கான திட்டங்கள் ஆகியவை சம்பந்தமாக நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், சென்னை மாநகராட்சி, மாநில வீட்டு வசதி வாரியம் ஆகியவற்றுக்கு உதவி மானியங்கள் வழங்க இக் கோரிக்கை வகை செய்கிறது.

### ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சாலை வசதி

ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்படுவதற்கு முன்னர், கிராமச் சாலைகள் மேம்பாட்டிற்காக ஒவ்வோர் ஆண்டும் பாதி மானிய அடிப்படையில் ஊராட்சிகளுக்கு நிதி வழங்க ஒப்பளிக்கப் பட்டது. 1958-ம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம் செயலுக்கு வந்ததன் விளைவாக, ஊராட்சிகளுக்கு சட்டப் படிக்கான மானியமும் சட்டத்தின் கீழ்வராத மானியமும் அளிக்கப்படுவதால், 1961–62 முதற்கொண்டு இந்த மானியங்கள் நிறுத்தப்பட்டன. ஊராட்சி ஒன்றியச் சாலைகள் அல்லாத கிராமச்





சாலைகளை ஊராட்சிகளே பேணி வருகின்றன ; இதற்கு உள்ளூர்ச் சாலை மானியம் பொருந்தாது. எனவே, செலவில் பாதியை மானியமாக வழங்கும் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவது கிராமச் சாலைகளைச் சீரான நிலையில் பேணுவதற்கு ஊராட்சிகளுக்கு ஊக்கம் அளிக்குமாகையால், இத் திட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர அரசு முடிவு செய்துள்ளது. அதற்கிணங்க, முதற்படியாக, பேரூராட்சிகளில் உள்ள சாலைகளுக்குத் தூசு படியாத மேற்பரப்பை அமைப்பதற்காக பேரூராட்சிகளுக்குப் பாதிச் செலவு மானியம் வழங்க, 1968-69, 1969-70-ம் ஆண்டுகளில் ஒவ்வோராண்டும் ரூ. 5 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. 1970–71-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்திலும் ரூ. 6 லட்சம் ஒதுக்கபபட்டுள்ளது.

1958-ம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 131-வது பிரிவின்கீழ், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் உள்ளூர்ச் சாலை மானியம் எனப்படும் சட்டப்படியான மானியம் வழங்கப் படுகிறது. 1969–70-ம் ஆண்டில், உள்ளூர்ச் சாலை மானியத்தின் கீழ் ரூ. 115 லட்சம் ஒதுக்கப்பட்டது. மக்கள் தொகையில் ஒருவருக்கு 40 காசு விதம் இது கணக்கிடப்பட்டது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கும் அளிக்கப்படும் உள்ளூர்ச் சாலை மானியம், அந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சாலைகளின் நீளத்தையொட்டி கணக்கிடப்பட்டு அளிக்கப்பட வேண்டுமென்று பல ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடமிருந்து அண்மை ஆண்டுகளில் முறையீடுகள் வந்துள்ளன. இனி நபர் ஒருவருக்கு 40 காசு விதம் கணக்கிடப் பட்டு வந்த உள்ளூர்ச் சாலை மானியம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவெடுத்தது. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகையில் நபர் ஒருவருக்கு 0.18 காசு விதமும் ஊராட்சி ஒன்றியம் பேணிவரும் சாலைகள் கடற்கரைச் சாலைகளா, சமவெளிப் பகுதிச் சாலைகளா, மலைச் சாலைகளா அல்லது சாதாரணப் பாதைகளா என்பனவற்றின் அடிப்படையில் முறையே மைலுக்கு ரூ. 800, ரூ. 1,500 அல்லது ரூ. 600 விதமும் அரசு நிச்சயித்தது. 1970–71-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மேற்சொன்ன நோக்கத்திற்கென ரூ. 121.64 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் புயலின் காரணமாகச் சேதமடைந்த ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும், ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள (அ) ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் பணியாளர் குடியிருப்புகள், (ஆ) பள்ளிகள், மகப்பேறு நிலையங்கள் ஆகிய கட்டிடங்களையும் சீரமைப்பதற்கு ஏற்படும் செலவிற்கு 1966, டிசம்பர் திங்களில் அரசு ரூ. 22.60 லட்சம் சிறப்பு மானியம் வழங்கியது. ராமநாதபுரம் மாவட்டத்தில் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியச் சாலைகளைச் செப்பனிடுவதற்கு 1967-68-ல் ரூ. 2.25 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இப்பணி, நெடுஞ்சாலை, கிராமப் பணிகள் துறையிடம்

ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1970-71-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மேற்சொன்ன செலவிற்கு ரூ. 100 அடையாள நிதி ஒதுக்கம் செய்ய, தலைமைப் பொறியாளர் கருத்துரை வழங்கியுள்ளார்.

## ஊராட்சி ஒன்றியங்களில் இணைப்புச் சாலைகள்

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 11-ம் நிலை வளர்ச்சி வட்டாரமாகச் செயல்கள் முடித்துள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு இணைப்புச் சாலைகளுக்காக ரூ. 63.07 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கம் "37. சமுதாய வளர்ச்சித் திட்டம் முதலியன" என்பதன் கீழ் 11-ம் நிலை வளர்ச்சி வட்டாரங்களுக்கு ஒதுக்கிய தொகைக்கு நிகரானதாகும்.

## நகராட்சி சாலைகளும் பாலங்களும்

நகராட்சிகள் அவற்றின் மேற்பார்வையில் உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக. அரசு, மானியங்கள் வழங்கி வருகிறது. மக்கள் நெரிசல் அதிகமாயுள்ள பகுதிகளில் பொது மக்களின் உடல் நலத்தைக் கருதி நகராட்சி நகரங்களில் சாலைகளில் தூசு படியாத மேற்பரப்பை அமைப்பதற்கு ஒவ்வோர் ஆண்டும் நிதி வழங்குவதென்பது அரசின் கொள்கையாகும். ஒவ்வொரு நகராட்சிக்கும் சாலைகளில் தூசு படியாத மேற்பரப்பை அமைப்பதற்கான திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஓர் ஆண்டில் இத்திட்டத்திலிருந்து இரண்டு வேலைகளை நகராட்சி மன்றங்கள் மேற்கொள்ளலாம். நகராட்சிகளில் சாலைகள் மேற்பரப்பைத் தூசு படியாமல் அமைக்கும் வேலைக்கென அரசு அவ்வேலையின் செலவில் பாதியை மானியமாக வழங்குகிறது. செலவின் மறு பாதியைச் சம்பந்தப்பட்ட நகராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து சரிக்கட்ட வேண்டும்; அல்லது இதற்கென அரசிடமிருந்து கடன் பெற்று அச் செலவைச் சரிக்கட்ட வேண்டும். 1970–71-ல் சாலைகளின் மேற்பரப்பைத் தூசு படியாமல் அமைப்பதற்கு நகராட்சி மன்றங்களுக்கு மானியங்கள் வழங்குவதற்கென இந்தக் கோரிக்கையில் ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கோரிக்கை 47-ன் கீழ் சாலை வேலைகளுக்காகவும், பால வேலைகளுக்காகவும் நகராட்சிகளுக்குக் கடன்கள் வழங்குவதற்காக, 1970–71-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 13,50,000 ஒதுக்கப்பட்டுள்ளது. சிறப்பான நேர்வுகளில், நகராட்சிப் பகுதிகளுக்குள் பாலங்கள் கட்ட நகராட்சி மன்றங்களுக்கு உதவி வழங்கப்படுகின்றது. இந்தக் கொள்கையையொட்டி, 1970–71-ம் ஆண்டுக்கு இக் கோரிக்கையில் ரூ. 5,20,000 ஒதுக்கப்பட்டுள்ளது. சாலையில் பேணப்படுவதற்காக, குன்னூர், உதகமண்டலம் நகராட்சிகளுக்கும், கோடைக்கானல் நகரியத்திற்கும் தொடர் மானியங்கள் வழங்குவதற்காகவும் முன்னாள் திருச்சிராப்பள்ளி மாவட்ட வாரியத்தால் சுங்க இழப்பீட்டுக்காக ஸ்ரீரங்கம் நகராட்சிக்கு மானியம்



வழங்கவும் ரூ. 25,300 ஒதுக்கப்பட்டுள்ளது. பெருமழை, வெள்ளம் காரணமாகச் சீரழிந்த சாலைகளைச் செப்பனிடுவதற்குத் தேவையாகப் போதிய மானியங்களும் வழங்கப்படுகின்றன.

1970-71-ல் சாலையில் பேணப்படுவதற்காக அதிகரித்த தனி மானியம் ரூ. 10 லட்சம் ஒதுக்கியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். 1969–70-ல் ரூ. 7.50 லட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டது.

## சென்னை மாநகராட்சி

சென்னை மாநகராட்சியின் பொறுப்பிலுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் அதற்கு அரசு கணிசமான நிதி வழங்கி வந்துள்ளது. 1969–70-ல் (திட்டத்தில் சேர்ந்த, திட்டத்தில் சேராத) மானியமாக ரூ. 19,61,000 வழங்கப்பட்டுள்ளது. 1970–71-ம் ஆண்டு மாநில வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 15.50 லட்சம் மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரிலுள்ள எல்லாப் பெருஞ்சாலைகளையும் இப்போது நெடுஞ்சாலைகள் துறை பேணி வருகிறது. பெருஞ்சாலைகள் நீங்கலாக, மாநகரில் பேருந்துகள் ஓடும் சாலைகளை மேம்படுத்துவதற்காக அரசு உதவியளித்து வந்துள்ளது. 1970–71-ல் சென்னை மாநகராட்சிப் பொறுப்பு அதிகாரி, பேருந்துகள் ஓடும் சில முக்கியச் சாலைகளை அகலப்படுத்தி, மேம்படுத்துவதற்கான செயற்குறிப்பை அனுப்பினார். எனவே, இதற்கென சென்னை மாநகராட்சிக்கு மானியமும், கடனும் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தியாகராயநகரில் துரைசாமி சாலையில் ஒன்றும், கண்ணம்மாப்பேட்டையில் மற்றொன்றுமாக இரண்டு சுரங்கப் பாதைகளை அமைப்பதற்காக நிதி உதவியளிக்க, 1970–71-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கூவம் ஆற்றின் குறுக்கே நுங்கம்பாக்கத்திலுள்ள மன்றோ பாலத்தை அகலப்படுத்தவும், டாக்டர் நடேசன் சாலையிலுள்ள ஆமில்டன் பாலத்தைப் புதுப்பித்துக் கட்டவும் நிதி உதவியளிக்க நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

சாலைகளைத் தக்கவாறு பேணி, திறம்படப் புதிய திட்டங்களை நிறைவேற்ற சென்னை மாநகராட்சிக்கு இயலும் வகையில், சார்த்துக் கொட்டும் லாரிகள், சாலைப் பரப்புப் பொறிகள் ( **Parer finisber** ) சாலை உருளைக் கருவிகள், கலவை கலக்கும் இயந்திரம், உடைக்கும் பொறிகள் ( **granilator** ) முதலியவற்றை வாங்குவதற்கு நிதி உதவியளிக்க 47-வது கோரிக்கையின் கீழ் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. B பணிமனையில் லாரி நிலையத்தைக் கட்டவும், நகரிலுள்ள தனித் தெருக்களின் விளக்குகளைச் சிறந்த வகையில் அமைக்கவும் 11 கி. வாட்டில் பல முனை மின் வழங்கலை மேற்கொண்டு தெரு விளக்கு அமைப்பு முறையை மாற்றியமைக்கச் சென்னை மாநகராட்சிக்குக் கடன் வழங்கவும் மேலும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## சென்டேஜ் கட்டணங்கள்.

தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதிக் கழகத்தின் கட்டிடங்களைப் பொதுப்பணித்துறை கட்டுவதற்காக அக் கழகம் 'சென்டேஜ்' கட்டணத்தைச் செலுத்த உதவி மானியத்திற்காக ரூபாய் 1,16,800 ஒதுக்கப்பட்டுள்ளது.

## நீர்வழங்கல், கழிவுநீர் அகற்றும் திட்டங்கள்.

நீர் வழங்கல், கழிவுநீர் அகற்றும் திட்டங்களுக்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியங்கள் வழங்குவதற்கு இக் கோரிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டங்கள் பொது சுகாதார பொறியியல் நகராட்சிப் பணிகள் துறையால் நிறைவேற்றப்படுகின்றன. நகர, நீர் வழங்கல், கழிவுநீர் அகற்றும் திட்டங்களுக்காக மானியம் வழங்கும் பொருட்டு 1970–71-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 3,75,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் பொதுவாக அவற்றின் நீர்வழங்கு திட்டத்திற்கும், கழிவுநீர் அகற்றும் திட்டத்திற்கும் கடன்கள் வழங்கப்படுகின்றன. சிறப்பு நேர்வுகளில், இத் திட்டங்களை நிறைவேற்றும் செலவின் ஒரு பகுதியைச் சரிக்கட்ட அவைகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. அவைகள் செயற்படுத்தும் நீர்வழங்குத் திட்டங்கள் தன்னிறைவுள்ளவையாக இருக்கவேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. இத் திட்டத்திலிருந்து கிடைக்கும் வருவாய் கொண்டு, இவற்றைப் பேணி வருவதற்கான ஆண்டுச் செலவுகளும் இத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பெறப்பட்ட கடன்களுக்கான ஆண்டுத் தொகையும் சரிக்கட்டப்பட வேண்டும். மேலும், இத் திட்டங்களில் வருங்காலத்தில் செய்யப்படும் மேம்பாட்டுப் பணிகளுக்கான செலவுக்காகவும் அவை ஒரு சேமநிதியை ஏற்படுத்த வேண்டும்.

நீர் வழங்கு திட்டங்கள் 65 நகராட்சிகளிலும், 13 நகரியங்களிலும், 10,000-க்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள 26 ஊராட்சிகளிலும் உள்ளன. 9 நகராட்சிகளுக்கும், 7 ஊராட்சிகளுக்கும் நீர் வழங்குவதற்கான புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 13 நகராட்சிகளிலும் 5 நகரியங்களிலும் 3 ஊராட்சிகளிலும் ஓரளவு கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் உட்படக் கழிவுநீர் அகற்றும் திட்டங்கள் உள்ளன. 4 நகராட்சிகளில் கழிவுநீர் அகற்றும் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1970–71-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு வரும் நீர் வழங்கு, கழிவுநீர் அகற்றும் திட்டங்களுக்கு உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன்கள், மானியங்கள் வழங்குவதற்குப் போதுமான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இம் மாநிலத்திலுள்ள பல்வேறு உள்ளாட்சி மன்றங்களின் நீர் வழங்கல், கழிவுநீர் அகற்றும் திட்டங்களை நிறைவேற்றுவதற்குக் கடன் வழங்குவதன் மூலம் நிதி உதவியளிக்க இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தை அரசு அணுகியுள்ளது. அவசியமான நிதி உதவியளிக்க ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் இசைந்துள்ளது. இதற்கேற்ப, 27 உள்ளாட்சி மன்றங்கள் (20 நகராட்சிகளும், 7 பேரூராட்சிகளும்) இதுவரையில் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தியுள்ளன; நீர் வழங்கல், கழிவு நீர்க்கால் அமைத்தல் திட்டங்களை நிறைவேற்றக் கடன் மனுக்களை அளித்துள்ளன. இத் திட்டங்களுக்கு ரூ. 13.92 கோடி செலவாகுமென மதிப்பிடப்படுகிறது; இது 4 ஆண்டுகள் வரையில் நிறைவேற்றப்படும். இத் திட்டங்களுக்கு 1969-70-ம் ஆண்டுக்குச் செலவாகுமென எதிர்பார்க்கப்படும் தொகை ரூ. 238.50 லட்சம் ஆகும். இத் திட்டங்கள் சம்பந்தமாக 1969-70-ல் ரூ. 192.33 லட்சம் அளவுக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடன் வழங்கியுள்ளது. இது எதிர்பார்க்கப்பட்ட செலவினத்தில் மூன்றில் இரண்டு பங்காகும். 1969-70-ம் ஆண்டுக்குத் தேவைப்படும் எஞ்சிய தொகை, மாநில நிதியிலிருந்து சரிக்கட்டப்பட்டு வருகிறது. மேற்சொன்ன திட்டங்களைப் பொறுத்தவரையில், 1970-71 முதல் 1972-73 வரையில் செலவாகும் தொகையில் 2/3 பங்கு வரையில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் தொடர்ந்து கடன் உதவியளிக்கும். ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் அளிக்கும் இந்த நிதி உதவியை மேலும் அதிகப்படியான உள்ளாட்சி மன்றங்கள் பயன்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



## குடிசை மேம்பாடு/குடிசை அகற்றும் திட்டம்.

குடிசை மேம்பாடு/அகற்றும் திட்டம் 1956–57-ல் சென்னை மாநகரில் செயல்படுத்தப்பட்டு பின்னர் மூன்றாவது திட்டக் காலத்தில் வெளியூர்ப் பகுதிகளுக்கும் நீட்டிக்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ், இம் மாநிலத்தில் குடிசைகள் மேம்படுத்தப்பட்டனவேயன்றி "அகற்றப்படவில்லை". கன்னியப்ப நகரிலுள்ள குடிசை வாழ்வோர் மட்டும் அறவே அகற்றப்பட்டனர். அவர்கள் வசித்து வந்த நிலத்தைப் பாதுகாப்புத் துறை கோரியதால் இவ்வாறு அகற்றப்பட வேண்டியதாயிற்று. இவர்கள் கோடம்பாக்கம்புதூர் (பகுதி 1) பகுதியில் குடியேற்றப்பட்டனர். இந்தக் குடிசைப் பகுதியினரும் நடைபாதையிலே வசிப்போரும், பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களும், பிற திட்டங்களும் செயல்படுத்தப்பட்டதனால் பாதிக்கப்பட்ட பிற குடிசை வாழ்வோரும் தவிர, வேறு குடிசைப் பகுதியினர் எவரும் முற்றிலும் வெளியேற்றப்படவில்லை.

இத் திட்டத்தின் கீழ் வளர்ச்சிப் பணிகள் இரண்டு வகைகளில் நிறைவேற்றப்படுகின்றன. 800 சதுர அடி முதல் 1,000 சதுர அடி வரையில் உள்ள திறந்த வெளி மேம்படுத்திய மனைகளில் 300 சதுர அடி அடித்தளம் அமைக்கப்பட்டு அத்துடன் ரூ. 252 பெறுமான குடிசை அமைப்புப் பொருள்களும் தன்னுதவி அடிப்படையில் குடிசை போட்டுக் கொள்வதற்காக ரூ. 32.50 ரொக்க மானியமும் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மனையிலும் ஒரு குளியல் அறை—நீரடிக் கழிப்பிடம் ஒன்றை வாரியம் அமைத்துப் பேணி வருகிறது. மனையில் தெரு விளக்கு, சாலைகள், நீர் வழங்கு வசதி, கழிவுநீர் அகற்றும் வசதி, மரம் நடுதல் முதலிய எல்லா வசதிகளும் முறை

யாகச் செய்து கொடுக்கப்படுகின்றன. குடிசைகளை மேம்படுத்தும் மற்றொரு முறை, இடத்திற்கேற்றபடி உறைவிடங்களையும், ஒரு மாடி அல்லது பல மாடிக் கட்டிடங்களையும் கட்டுவதன் மூலம் மேம்பாடு செய்வதாகும். கட்டப்பட்ட ஒவ்வோர் உறைவிடத்திலும் 120 சதுர அடி பரப்பளவுக்குத் தாழ்வாரமும், 84 சதுர அடி கொண்ட சமையல் அறையும், 16 சதுர அடி கொண்ட ஒரு குளியல் அறையும், 12 சதுர அடியுள்ள கழிப்பிடமும் அமையும்.

இந்திய அரசால் முடிவு செய்யப்பட்ட உச்ச விலை 1967 ஏப்ரல் 1-ம் நாள் முதல் மாற்றியமைக்கப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட படி மனைக்கட்டு ஒன்றின் விலை ரூ. 1,850 ஆகும். இரண்டு அறைகள் கொண்ட சிறிய ஒற்றை மாடிக் குடியிருப்பாக இருந்தால் அதன் உச்ச விலை ரூ. 4,850 ஆகவும், இரண்டு அறைகள் கொண்ட சிறிய இரட்டை மாடிக் குடியிருப்பாக இருந்தால், அதன் உச்ச விலை ரூ. 5,100 ஆகவும், இரண்டு அறைகள் கொண்ட சிறிய பல மாடிக் குடியிருப்பாக இருந்தால், அதன் உச்ச விலை ரூ. 6,750 ஆகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ரூ 1,850, ரூ. 4,850, ரூ 5,100 உச்ச விலைகள் கொண்ட இந்த மேம்பாட்டு மனைகட்டும் குடியிருப்புகளுக்கும் மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள நகரங்களில் ரூ. 1,100-ம் ஒரு லட்சம் முதல் மூன்று லட்சம் வரையில் மக்கள் தொகையுள்ள நகரங்களில் ரூ. 450 அதிகப் படியாக அனுமதிக்கப்படும். நிலவளம் உறுதியில்லாத பகுதிகளில் மேலும் ஆழமும் உறுதியான கடைக்கால் தேவைப்படும். கல் கட்டிடத்தாலான வீடுகள் கட்டுவது குறித்து மொத்த உச்ச செலவில் ஒவ்வொரு வீட்டுக்காகவும் ரூ. 550 கூடுதலாக அனுமதிக்கப்படும்.

அண்மையில் திருத்தியமைக்கப்பட்ட நிதி உதவியின்படி, இத் திட்டத்தின் செலவில் 37½ சதவீதத்தை இந்திய அரசின் சுகாதார-குடும்ப நலத் திட்ட, வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சி அமைக்க உதவித் தொகையாக வழங்குகிறது. மற்றொரு 12½ சதவீதத் தொகையை மாநில அரசு வழங்குகிறது. எஞ்சியுள்ள 50 சதவீதத் தொகையை இந்திய அரசின் சுகாதார—குடும்ப நலத் திட்ட, வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சி அமைச்சு கடனாக வழங்குகிறது. அக் கடன் தொகை முப்பது ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தத் தக்க தாகும். குப்பைக்காரர்கள், தோட்டிகள் குறித்த குடிசைப் பகுதி மேம்பாட்டு திட்டங்களைப் பொறுத்தவரையில், சமூக நலன் (உள் துறை அமைச்சு) துறையின் நிதிகளிலிருந்து மேற்கொண்டும் 12½ சதவீத மத்திய உதவித் தொகை கிடைக்கும். அத்தகைய நேர்வில், சுகாதார குடும்ப நலத் திட்ட, வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சி அமைச்சு வழங்குகிற கடனின் அளவு, அத்துறையிலிருந்து கிடைக்கின்ற உதவித் தொகையின் அளவிற்குக் குறைக்கப்படும். இத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கத்திலிருந்து 10 சதவீதம் கடைகள், பொதுக் கூடங்கள், பள்ளிகள் முதலியவற்றை ஏற்படுத்துவதற் கெனப் பயன்படுத்தப்படும். இந்தத் தொகை இந்திய அரசினிட மிருந்து பெற்ற கடனாகக் கருதப்படும். உச்ச விலைக்கு மேற்பட்ட



தொகை கூடுதல் உதவித் தொகையாக மாநில அரசாங்கத்தால் சரிக்கட்டப்படும். 1969-70 முதல், மாநிலத் திட்ட வேலைகள் சம்பந்தமாக மொத்தத் தொகைக் கடன்களையும், மொத்தத் தொகை மானியங்களையும் வழங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது.

மேம்படுத்திய திறந்த வெளி வீட்டு மனை ஒவ்வொன்றுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 11 வாடகை விதித்து வாங்க இந்திய அரசு அனுமதித்து இருந்தாலும், மாநில அரசு முடிவு செய்துள்ளபடி சென்னையில் மாதம் ஒன்றுக்கு ரூ. 3 மட்டுமே வாடகையாக வாங்கப் படுகிறது. குடியிருப்புகளின் வகைகளுக்குத் தக்கவாறு, குடி யிருப்புகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 25 முதல் 30 வரை வாடகை நிச்சயிக்கப்பட்டுள்ளது. குடிசைகளில் வாழ்வோர் இந்த வாடகை யைக் கொடுக்க இயலாத நிலையில் இருப்பதைக் கருதி, மாநில அரசு மேல் உதவித் தொகையாகக் கொடுக்கக் கருதி, வாடகையை மாதம் ஒன்றுக்கு ரூ. 10 எனக் குறைக்க முன்வந்துள்ளது.

நான்காம் திட்டக் காலத்திற்கான திட்ட ஒதுக்கீடு ரூ. 800 லட்சம் ஆகும். 1968–69-ம் ஆண்டில் பல்வேறு திட்டங்களை நிறை வேற்றுவதற்கு ரூ. 1,05.35 லட்சம் செலவிடப்பட்டது. 1970-71-ல் இத் திட்டத்திற்கு அரசு அளிக்குமென எதிர்பார்க்கப்படும் தொகை ரூ. 1 கோடி ஆகும். 1961-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1969-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் நாள் வரையில் ரூபாய் 725.81 லட்சம், பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக மாநில வீட்டு வசதி வாரியத்தால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## சென்னை மாநகர்.

சென்னை மாநகரிலுள்ள 49 தாழ்குடியிருப்பு பகுதிகளில், இது வரையில் சுமார் 100 தாழ்குடியிருப்பு பகுதிகளை மட்டுமே மேம்பாடு செய்ய/அகற்றிவிட சென்னை மாநகர் வட்டங்கள் நடவடிக்கை மேற் கொண்டுள்ளன. தற்போது, சுமார் 59 அனுமதிக்கப்பட்ட திட் டங்கள் உள்ளன ; இதில் சுமார் 75 தாழ்குடியிருப்புப் பகுதிகளுக் கான திட்டமும், நடைபாதைவாசிகளுக்கான திட்டமும் அடங்கும். இத் திட்டங்களை நிறைவேற்றுவதுடன் 90-ம் எண் முறை வைப்பு வரையில் சுமார் 30 இனங்களைச் சேர்ந்த பகுதிகளுக்காகத் திட் டங்கள் வகுத்தல், நிலம் கையகப்படுத்தல், உரிமை மாற்றுதல், மற்றவர்களிடம் ஒப்படைத்தல் ஆகிய நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டு வருகின்றன. மேற்சொன்னவற்றுடன், முறை வைப்பு எண் 91 முதல் 200 என் வரையில் தாழ்குடியிருப்புகளை ஆராய்ந்து பணி மேற்கொள்ள மாநில வீட்டு வசதி வாரியம் நடவடிக்கை மேற் கொண்டது. முறை வைப்பு எண் 91 முதல் 150 வரையிலுள்ள 60 தாழ்குடியிருப்புகளுக்கான ஆய்வுப் பணி இதுவரையில் முடிக்கப் பட்டுள்ளது. இப்போதுள்ள அனுமதிக்கப்பட்ட 59 திட்டங்கள் 11,762 திறந்த வெளி மேம்படுத்திய மனைகளை வழங்கவும், 12,883 குடியிருப்புகளை ஏற்படுத்தவும் நோக்கம் கொண்டதாகும். இது

நாள் வரையில் 6,778 திறந்த வெளி மேம்படுத்திய மனைகள் வழங்கப் பட்டுள்ளன ; 7,077 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன ; 1,000 குடியிருப்புகள் பல நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன.

1969-ல், தீயினால் பாதிக்கப்பட்டவர்களைக் குடியமர்த்த 1970 தீயினால் பாதிக்கப்படாத குடியிருப்புகளைக் கட்டுவதற்காக மாநகர தீத்துயர் துணிப்பு நிதியிலிருந்து மாநில வீட்டு வசதி வாரியத் திற்கு அரசு ரூ. 16,25 லட்சம் வழங்கியுள்ளது. 1970 குடியிருப்பு களில் 982 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன ; எஞ்சியவை, கட்டப்பட்டு வருகின்றன, அல்லது கட்டப்படவிருக்கின்றன.

### மதுரை வீட்டுவசதிப் பிரிவு.

மதுரையில் மூன்று திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 96 சீர்செய்த காலி மனைகள் வழங்குவது, 132 குடியிருப்புகள் அமைத்துக் கொடுப்பது ஆகியவை மேற்படித் திட்டங்களின் நோக் கமாகும். இத் திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 11,41 லட்சம் ஆகும். இதுவரையில் 64 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட் டுள்ளன.

### கோயம்புத்தூர் வீட்டுவசதிப் பிரிவு, கோயம்புத்தூர்.

கோயம்புத்தூரில் 7 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரூ. 1,45,87 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 2,819 குடியிருப்புகள் கட்டு வதற்கு இத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதுவரையில் 1,606 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 227 குடியிருப்பு கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### சேலம்.

சேலத்தில் 8 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ; ரூ. 39,74 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 620 மேம்படுத்திய காலி மனைகள் வழங்கவும், 216 குடியிருப்புகள் கட்டவும் இத் திட்டங்கள் செயல் படுத்தப்படுகின்றன. இதுவரையில் 528 மேம்பட்ட காலி மனைகள் வழங்கப்பட்டு, 216 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் வீட்டுவசதிப் பிரிவு, சேலத்தில் இப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பை மேற்கொண்டுள்ளது.

### திருச்சிராப்பள்ளி வீட்டுவசதிப் பிரிவு.

திருச்சிராப்பள்ளியில் 4 திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 801 குடியிருப்புகளை ரூ. 41,49 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டு வது இத் திட்டத்தின் நோக்கமாகும். இதுவரையில் 446 குடி யிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க் கிழமை, 1970 மார்ச் 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

*Fire accidents.*

* 509 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there were any fire accidents in the following places on the dates indicated against each :—

1. Pulianthope on 12—6—1968;

2. Industrial Estate of Oldhams Battery Company on the 12—6—1968; and

3. Vyasarpadi on 13—6—1968;

(b) if so, the extent of damage caused by the fire to the property and the life; and

(c) the relief measures undertaken by the Corporation and the Government?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) புளியந்தோப்பில் 12—6—1968-இல் ஏற்பட்ட தீ விபத்தில், 924 குடிசைகள் தீக்கிரையானதாகவும், அதனால் 1650 குடும்பங்கள் வீடுகள் இழந்ததாகவும், சுமார் ரூ. 8,34,000 மதிப்புள்ள சொத்துக்குச் சேதம் ஏற்பட்டதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது. எவரும் உயிரிழக்கவில்லை.

கிண்டி, ஓல்டாம்ஸ் மின்கல நிறுவனத்திற்கு சொத்து, பொருட் சேதம் ரூ. 2,00,000 என்று மதிப்படப்பட்டுள்ளது. யாரும் காய மடையவோ, உயிரிழக்கவோ இல்லை.

வியாசார்பாடியில் ஏற்பட்ட தீ விபத்தில் 156 குடிசைகள் நாச மடைந்து அதனால் 253 குடும்பங்கள் வீடுகள் இழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏழு பேர்கள் காயமடைந்தனர். சொத்து சேதம் ரூ. 1,30,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

[1970 மார்ச் 24

(உ) புளியந்தோப்பு தீ விபத்தினால், பாதிக்கப்பட்ட 1650 பேர்களுக்கு குடும்பத்திற்கு தலா ரூ. 20 வீதம் உடை மான்யம் ரூ. 33,000 வழங்கப்பட்டது என்றும், தீப்பிடிக்காத குடியிருப்புகள் 530 கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்துள்ளார்.

கிண்டி ஓல்டாம்ஸ் மின்கல உற்பத்தி நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்கு, துயர் தனிப்பு உதவி பெற தகுதியில்லையாதலால், எவ்வித உதவியும் அளிக்கப்படவில்லை.

வியாசர்பாடி தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 246 பேர்களுக்கு தலா ரூ. 20 வீதம் உடை மானியமாக ரூ. 4,920 வழங்கப்பட்டது. தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

தீ விபத்துக்கள் ஏற்படும்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக உணவும், தற்காலிக இருப்பிடமும் உடனடியாக வழங்குவதற்கு கார்ப்பரேஷன் உதவுகிறது.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த மாற்று வீடுகள் கட்டிக் கொடுக்கும் முறையில், வீடுகளுக்காக என்று எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது? இதுவரையில் எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தத் தீ விபத்து நிவாரண நிதியில் மொத்தமாக நாற்பது இலட்ச ரூபாய் வரவு வந்தது. அதில் இப்பொழுது 17 ஆயிரம் ரூபாய் மாத்திரம் மிச்சம் இருக்கிறது. 39 இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய், தீப் பிடிக்காத வீடுகள் கட்டுவதற்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. கட்டப்பட்டிருக்கின்ற வீடுகளின் எண்ணிக்கை—ஹவுஸிங் போர்டு சார்பிலும், பி. டபிள்யூ. டி. சார்பிலும்—4495 ஆகும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்த மூன்று தீ விபத்துக்களுக்குக் காரணம் என்ன என்பதை அறியலாமா ? ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தீப் பிடித்தது தான் காரணம்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, தலைநகரில் இம் மாதிரி அடிக்கடி தீ விபத்துக்கள் நிகழ்வதை அறவே தடுத்து நிறுத்தும் பொருட்டு, நகரில் தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் வசிக்கும் குடிசைப் பகுதிகளில் குறைந்த விலையில் தீப் பிடிக்காத வீடுகள் கட்டுவதற்கு மத்திய அரசிடமிருந்து மானியம் ஏதேனும் கோரப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மத்திய அரசினிடத்தில், வீட்டு வசதி வாரியத்தின் சார்பாகக் கோரப்பட்டுள்ள பண உதவியைத் தவிர, இதற்காகத் தனியாக உதவி எதுவும் கோரப்படவில்லை. பொதுவாகச் சென்னை நகரில் அப்படிப்பட்ட தீ விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதைத் தடுக்கும் உத்தேசத்தோடு காவல் துறையினுடைய கண்காணிப்பு அதிகமாக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையினர் போலீஸ் "வான்"களில் அடிக்கடி குடிசைப் பகுதிகளுக்குச் சென்று பிரசாரம் செய்து வருகிறார்கள். எச்சரிக்கையாக இருக்குமாறு கேட்டுக்கொண்டு வருகிறார்கள். இப்பொழுது கட்டப்பட்டு வருகின்ற இந்தத் தீப் பிடிக்காத வீடுகளின் எண்ணிக்கை இன்னும் விரைவிலே அதிகமாகக் கூடும்.



1970 மார்ச் 24]

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, முதலமைச்சரவர்கள் சொல்லுகிறபோது, சுமார் 12 இலட்ச ரூபாய் இந்தத் தீ விபத்துக்களின் காரணமாக நஷ்டம் ஏற்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால், கொடுத்திருக்கும் நிவாரணமோ மிகக் குறைவு. தீ விபத்து, மனிதனுடைய வாழ்வையே நாசப்படுத்துவதால், இதற்கென்று ஸ்பெஷல் நிதி ஏற்படுத்தி, மத்திய சர்க்காரிடம் ஒரு பகுதி, மாநில சர்க்காரிடம் ஒரு பகுதி, பொதுமக்கள் நன்கொடை மூலம் ஒரு பகுதி என்று வசூலித்து, இப்படி ஓரளவுக்கு நிவாரண நிதியை உயர்த்தி, நிவாரணத்தையும் உயர்த்த அரசு முன்முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உடை மானியமாக பத்து ரூபாயும், வீடுகளுக்காக முப்பது ரூபாயும் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த அரசு உடை மானியமாக இருபது ரூபாய், வீடுகளுக்காக 60 ரூபாய் என்ற அளவில் அந்த உதவியை உயர்த்தியிருக்கிறது. வேறுபல உதவிகளைச் செய்வதற்கும், மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச்சொன்ன யோசனையைப் பரிசீலிக்கவும் இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, சென்னை நகரில் மட்டும் தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கும் நிலைமையை அரசு உருவாக்கியிருக்கிறது. அதே மாதிரி, கிராமங்களிலும் மற்ற பகுதிகளிலும் அப்படிப்பட்ட தீப் பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஏதாவது முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கிராமங்களில் தீ விபத்து ஏற்பட்டாலும், எப்படிச் சென்னையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக உதவிகள் செய்யப்படுகின்றனவோ அதைப்போலவே அங்கும் உதவிகள் செய்யப்படுகின்றன. ஆனால், சென்னையில் இருக்கின்ற அளவுக்கு அவ்வளவு அதிகமான குடிசைகள் கிராமங்களில் இல்லை.

*Constitution of Police Commission.*

*510 *Q.*—DR. H. V. HANDE :
THIRU V. SWAMINATHAN :
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR :
THIRU K. VINAYAKAM :
THIRU S. DURAISWAMY :
} Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether the Government have appointed a Commission to study the working and conditions of service of the Police Force in the State; and

(*b*) the terms of reference of the Commission?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. விநாயகம்:** இந்தக் குழுவினுடைய சிபார்சுகளை அமல்படுத்துவதற்கு அரசுக்கு என்ன பொருட்செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இன்னும் திருமணமே ஆகவில்லை!

**திரு. சு. துரைசாமி:** அந்தக் குழுவின் பரிசீலனை முடிந்து அறிக்கை அளிக்க எவ்வளவு காலம் ஆகும் என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** விரைவில் அவர்களிடமிருந்து அந்த அறிக்கையை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இந்தக் காவல் துறை சம்பந்தப்பட்ட வரையில், இதைப் பரிசீலனை செய்வதற்காக வேண்டி ஏற்படுத்தியிருக்கக்கூடிய மிக முக்கியமானது; அதற்காக எவ்வளவு செலவானாலும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால், அதே நேரத்தில் இந்த முக்கியமான குழுவில் அரசியல் கட்சியைச் சார்ந்த தலைவர்களையும் சேர்த்துப் பிரச்சினைகளைப் பரிசீலனை செய்வதன் மூலமாகச் சரியான முடிவுக்கு வர முடியும் என்பதை முதலமைச்சரவர்கள் உணருகிறார்களா? அப்படியானால், அந்த அடிப்படையில் ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதை இந்த அரசு உணர்ந்துதான், பிரச்சினைக்குரியவரல்லாத ஒரு அரசியல் தலைவரை இதிலே உறுப்பினராக ஆக்கியிருக்கிறோம்.

THIRU T. MARTIN: Mr. Speaker, may I request the Hon. Chief Minister to state whether any interim report has been submitted by this Commission, or whether they have informed the Government that they would submit an interim report to the Government or whether any time-limit has been fixed by the Government for the submission of the report to the Government?

**மாண்ண்புமிகு திரு. மு.க கருணாநிதி:** மூன்றும் இல்லை.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, போலீசாருடைய வேலைமுறைகளைப்பற்றி நம்முடைய நாட்டின் ஜனாதிபதி அவர்களும், உள்நாட்டு அமைச்சர் திரு. சவான் அவர்களும், போலீசாருடைய நிலைமைகளில் மாறுதல் தேவை என்று பலவாறாக வற்புறுத்தி வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் நம்முடைய காவல் துறையினருடைய நிலைமை குறித்து ஆராய குழு அமைத்திருப்பது

* பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





மிகவும் வரவேற்கத்தகுந்ததே. அந்தக் குழுவின் அறிக்கையின் மீது அரசு முடிவு எடுப்பதற்கு முன், அதனை இந்த மன்றத்தில் வைத்து விவாதிக்க முதலமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ளுவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மன்றத்திலே விவாதிப்பது கூட, பிறகு இருக்கலாம். ஆனால் அதிலே வேதனையான சம்பவம் ஒன்று என்னவென்றால், இந்தக் குழுவின் வினாத்தாள்கள், தமிழகத்தில் உள்ள எல்லா சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும், சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. இப்படி 1,700 பேர்களுக்கு வினாத்தாள்கள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் திருப்பியனுப்புவதற்குக் கடைசி நாள் 31—3—1970 ஆகும். இன்னும் ஏழெட்டு நாட்கள்தான் இருக்கின்றன. வந்திருக்கிற பதில்கள் நான்கு பேர்களிடமிருந்துதான்.

**திரு. கே. விநாயகம்:** உலகத்திலேயே போலீஸ் துறையிலே நல்ல பணி செய்பவர்கள் என்று பிரசித்திபெற்றது லண்டன் போலீஸ் தான் என்று சொல்லப்படுகிறது. இந்தக் குழுவை இங்கிலாந்து நாட்டுக்கு அனுப்பி, அங்கு எப்படி நடக்கிறது என்பதை ஆராய்ந்து பார்த்து, அது நம்முடைய நாட்டுக்குப் பொருந்துமா என்பதை விசாரித்து, பிறகு அறிக்கையை நமக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று இப்போதாயினும் அவர்களுக்குத் தாக்கீது அனுப்புவார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** உலகத்திலேயே தமிழ்நாட்டுக் காவல் துறை தான் சிறந்த காவல் துறை என்று சொல்லப்படுகிறது. (திரு. கே. விநாயகம்: இந்தியாவில்) இந்தியாவில் என்று சொல்கிறார். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள், நம்முடைய தமிழ்நாட்டிலிருக்கிற காவல் துறை மீது நல்ல அபிப்பிராயம் வைத்திருப்பார் என்று கருதுகிறேன். அந்தக் குழுவின் அறிக்கை விரைவில் வரவேண்டும் என்று எல்லோரும் கருதுகிறபோது, என்ன காரணத்தினாலோ—மறைமுகமாக—தாமதமாக வேண்டும் என்று யோசனை சொல்லுகிறார்.

### திருப்பூர் நகரில் கூடுதல் காவல் நிலையங்கள்

* 511 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் காவலர் நிலைய எண்ணிக்கையை அதிகரிப்பது சம்பந்தமாக திருப்பூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து 21—3—1968-ல் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) அண்மையில் 17—3—1970-இல், இக்கோரிக்கையைத் தற்பொழுது ஏற்றுக்கொள்ளுவதற்கில்லை என அரசு அறிவித்துள்ளது.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்தில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அதையடுத்த பொள்ளாச்சி, ஈரோடு ஆகிய இடங்களில் மூன்று மூன்று காவலர் நிலையங்கள் இருக்கின்றன. கோவை மாவட்டத் தலைமைப் போலீஸ் அதிகாரியையும், பிராந்தியப் போலீஸ் அதிகாரியையும் இதுபற்றிக் கேட்ட நேரத்தில், 'நாங்கள் சிபார்சு செய்து அனுப்பியிருக்கிறோம். இன்னும் முடியவில்லை' என்று தெரிவிக்கிறார்கள். ஆகவே, முதலமைச்சரவர்கள் இதை மனத்திலே கொண்டு புதிய காவல் நிலையமொன்றைத் திருப்பூரில் அமைக்க விரைவில் உத்தரவிடுமாறு மிகப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** விரைவில் நம்முடைய நிதி நிலையில் வசதியான காலம் வரும். அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சூழ்நிலை நிச்சயமாக உருவாகும்.

*Kilpauk Medical College*

*512 Q.—DR. H. V. HANDE: } Will the Hon. the Minister
THIRU N. S. V. CHITHAN: }

for Education and Health be pleased to state the reasons for running the Kilpauk Medical College as a women's institution exclusively?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** சென்னையிலுள்ள கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, மகளிர்க்கென தனிக் கல்லூரியாக இயங்குவதற்கான தனிச் சிறப்பான காரணங்கள் ஒன்றும் இல்லை. இது அரசாங்கம் வகுத்த ஒரு கொள்கையாகும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றநேரத்தில் அரசாங்கம் வகுத்த கொள்கை என்று சொன்னார்கள். ஏனைய கல்லூரிகளில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து படிக்கும் இந்தக் காலத்தில் பெண்களுக்கு என்று தனியாக இயங்குவதற்கான கொள்கையை வகுத்த காரணம் என்ன? வேறு இடங்களிலும் இதைப்போன்று மகளிர்க்கென மேலும் கல்லூரிகளை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, 1965-ஆம் ஆண்டு வரையிலும் கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரியில் ஆடவர், பெண்டிர் இருபாலரும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். நியூ டெல்லியிலே, லேடி ஹார்டிஞ்ஜ் மருத்துவக் கல்லூரி இருக்கிறது. அதில் பெண்கள் மட்டும் சேர்ந்து பயிலுகிறார்கள். அதை





ஒத்த கல்லூரியை இங்கு வைத்தால் என்ன என்ற கொள்கையின் அடிப்படையிலே, 1965-ஆம் ஆண்டிலேயிருந்து பெண்கள் மட்டும் படிப்பதற்கு ஏற்றவகையில் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டது. நான்காண்டுக் காலமாகப் பெண்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தார்கள். அதில் ஆண்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மகளிர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். ஆண்களோடும் சேர்த்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாதது என்பதை உணர்ந்தது, ஏனென்றால், பரிசோதிக்கச் செல்லுகின்ற நேரத்தில் ஆண் நோயாளிகளைப் பரிசோதிக்க ஆண்கள் இருந்து, உடலைப் பரிசோதிக்கும் நேரத்தில் பக்கத்திலே பெண்கள் இருந்து பார்க்க வசதியாக இருக்கும். பெண்களே ஆண் நோயாளிகளைப் பரிசோதிப்பதென்றால் அதனால் பல சங்கடங்கள், இடர்பாடுகள் இருப்பதால், கற்றுக்கொள்ளும் நிலையில், ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து பரிசோதனை செய்ய வேண்டிய நிலையிருந்தால் அந்தக் கஷ்டங்கள் இல்லாமல் இருக்குமென்று கருதப்பட்டது. எனவே, ஆடவரும் சேர்ந்து படிக்கலாம் என்று 6—9—69-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து இருபாலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

*Master Plan for Madras City*

* 513 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(*a*) whether the Director of Town-Planning has drawn up a Master Plan for the development of Madras Metropolitan area;

(*b*) if so, the salient features of the plan; and

(*c*) the area covered by the plan?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** பேரவையின் முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. விநாயகம்:** சார், அந்த மாஸ்டர் பிளான் தயார் செய்யும்பொழுது, தெற்கேயிருந்து வருகிற பிரயாணிகள் வடக்கே போக வேண்டுமென்றால், சென்னையைத் தொடாமலேயே, மவுண்ட் ரோடு, கிண்டியிலிருந்து வேறு பாதை வழியாக நெல்லூர் ரோட்டுப் பாதையிலே சேர்க்க முன்பு யோசனை இருந்தது. ரிங் ரோடு, பைப்பாஸ் ரோடு அல்லது ரவுண்ட் ரோடு, அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்து இப்பொழுது போட முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதற்கான திட்டமும் மாஸ்டர் பிளானில் போடப்பட்டிருக்கிறது. சுற்றுச்சாலைகளும், புறச்சாலைகளும் இடைக்கால வளர்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மெரினா பீச் ரோட்டைக்கூட, கடற்கரையோரமாகக் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்

---

[a] இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

பட்டிருக்கிறது. கூடுமானவரையில் போக்குவரத்து உள்ளே வந்து இடைஞ்சல் ஏற்படாத அளவுக்கு, நகரைச் சுற்றிச் செல்ல சுற்றுச் சாலைகள் ஏற்பட முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, கொடுக்கப்பட்டிருக்கும் இந்தக் குறிப்புகளில் கல்வி, தொழில், மருத்துவமனை இப்படிப்பட்ட பகுதிகளையெல்லாம் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். 1991-ஆம் வருஷத்திலே சென்னை நகரச் சுற்றுப் புறத்தில் 48 இலட்சம் பேருக்கும் மேல் இருப்பார்கள் என்று புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. ஆனால் பம்பாயில் இருப்பதைப்போல், பம்பாயில் சுற்றியிருக்கும் பகுதிகளில் இரயில்கள் போவதைப் போல், சென்னையிலும் சென்னையைச் சுற்றிப் பிரயாணம் செய்யக் கூடியதற்கான சிறப்பு அம்சம் இல்லை. இதை அரசாங்கம் வற்புறுத்தி அந்த வசதியைச் செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காகத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இரயில் விடுவதன் இன்றியமையாமையைப்பற்றி இந்தத் திட்டத்தில் என்ன வகுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விவரங்கள் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்களின் கருத்து மனத்தில் கொள்ளப்பட்டு, தேவைப்பட்டால் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**திரு. கே. விநாயகம் :** மேஜைமீது வைத்திருக்கும் அறிக்கையிலிருந்து மவுண்ட் ரோட்டிலே வருகிற போக்குவரத்தை, நெரிசலைக் குறைக்க ஒரு 'ப்ளை ஓவர் பிரிட்ஜ் அட் ஜெமினி' என்று ஒரு திட்டம் இருந்தது. அதன் வேலை எடுத்துக்கொள்ளப்படும் என்று முன்பு பதில் சொன்னார்கள். இதில் இந்தத் திட்டம் வரவில்லையே. ஒருவேளை இது சென்னை மாநகராட்சியின் ஆட்சியின் கீழ் போடப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஜெமினிக்குப் பக்கத்திலே நெரிசலைத் தவிர்ப்பதற்காக மேம்பாலம் போட திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதிலே அது வரவில்லையென்றாலும், சென்னை நகரத்தின் வளர்ச்சித்திட்டத்தின் அடிப்படையிலே ஹைவேஸ், பெருவழித்துறையினர் மேற்கொண்டிருக்கிறார்கள்.

### செவிலியர் பயிற்சி

* 514 வினா. திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது மருத்தவ மனையை ஒட்டிய சென்னை மருத்துவக் கல்லூரியில் செவிலியர் பயிற்சிப் படிப்பு ஒன்றைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள செவிலியர் கல்லூரியில், ஒவ்வோர் ஆண்டும் செவிலியர் பணியிலிருந்து பத்து பணியாளர்களைச் சேர்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் பி.எஸ்ஸி. (செவிலியர் பணி) பட்டப் படிப்பு 1967 ஜூலையில் துவக்கப்பட்டது. அப்படிப்பின் கால அளவு 2½ ஆண்டுகளாகும்.

**திரு என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, தற்பொழுது ஆண்டு ஒன்றுக்கு எத்தனை நர்சுகளுக்கு இம்மாதிரி பயிற்சி கொடுக்க வசதிகள் இருக்கின்றன ? தற்பொழுது நர்சுகளைத் தேர்ந்தெடுக்கும் முறையைப்பற்றிப் பொதுமக்களிடையே கண்டனத்திற்கு உள்ளாகக்கூடிய முறையாக இருக்கிறது. எனவே, அந்த விதிமுறைகளை மறுபரிசீலனை செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கேள்வி செவிலியரின் மேற்பட்டப் படிப்பைப் பொறுத்தது. மேற்பட்டப்படிப்பு, பி.எஸ்ஸி.-க்கு 10 செவிலியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். 10 பேர்களுக்குப் பயிற்சியளிக்கத்தான் வசதிகள், வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, 10 செவிலியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த பி.எஸ்ஸி. பட்டப்படிப்பு தரப்படுகிறது. இப்படிப்பின் கால அளவு 2½ ஆண்டுகள். ஜெனரல் நர்சிங் கோர்ஸ் சான்றிதழுக்கு மூன்றாண்டுக் காலம் என்ற முறையிருக்கிறது. அதில் 35 பேர்கள் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். செவிலியர் தேர்வு பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய குறிப்புக்கள் இந்தக் கேள்வியில் அடங்கி வராது. தனியாகக் கேள்விகேட்டால் இப்பொழுது இருக்கும் முறையைப் பற்றியும், கொடுக்க வேண்டிய முறையைப்பற்றியும் சொல்லலாம்.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** தலைவரவர்களே, பயிற்சி பெற்ற செவிலியர்கள் பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆஸ்பத்திரிகள் நிறுவப்பட்ட இடங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட சில இடங்களில் செவிலியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். அதைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பயிற்சி பெற்றிருக்கும் செவிலியர்களைக் காலியாக இருக்கும் இடங்களில் நியமிக்கும் பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மருத்துவ மனைகள் வளர வளர பயிற்சி பெற்ற செவிலியர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற அடிப்படையிலே அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பலயிடங்களில் புதிய மருத்துவ மனைகள் அதிகமாகும் இடங்களில் புதிய செவிலியர்கள் சேர்த்துக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படும். அப்பொழுது பயிற்சி பெற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்களை இந்தக் காலியாக இருக்கும் இடங்களில் நிறுவுவதற்கான முயற்சிகள் மாவட்ட மருத்துவ அதிகாரிகளால் அவ்வப்பொழுது எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

[1970 மார்ச் 24

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட செவிலியர் பயிற்சிப் படிப்பு வேறு எந்த மருத்துவக் கல்லூரிகளில் தொடங்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பயிற்சி கொடுப்பதைப் பற்றி வேறு எந்தக் கல்லூரியிலிருந்தாவது எப்பொழுதாவது கோரிக்கை வந்ததா? இப்படிப்பட்ட நிலையில் மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி நிறுவ ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, செவிலியர் பயிற்சிக்கு, தேவையையொட்டித்தான் இவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியிலிருந்து, பயிற்சி பெற்ற சிவிலியர்களே பல பேர் இருக்கிறார்கள் என்ற நிலையில் மேலும் பயிற்சி தருவதற்கான புதிய பள்ளிகளை வைக்கத் திட்டம் இல்லை. இப்பொழுதிருக்கும் நிலையே போதுமானதாகயிருப்பதால் புதிய பள்ளியோ அல்லது கல்லூரியோ வைக்கும் நோக்கம் இல்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், மருத்துவ மனைகளிலே இருக்கும் நர்சுகளுக்கு, படுக்கைகளின் விகிதாசாரங்கள் ரொம்ப அதிகமாக இருக்கிறது. இதைக்குறைத்து, நர்சுகளை அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை மருத்துவமனையைப்பற்றி ஆராய்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று அறியப்படுகிறதே. அந்தக் கருத்தை ஏற்று, பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருப்பவர்களை அதிலே ஈடுபடுத்த அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஒவ்வொரு செவிலியருக்கும் குறைந்த படுக்கை இருக்கவேண்டுமென்ற அடிப்படையிலே பணியைப்பொறுத்தவரையிலும் நல்ல முறையில் அமையக்கூடும். ஆனால் நிதி வசதிகள் மற்றவைகளைப் பார்த்து, அவர்களின் எண்ணிக்கையைப் பெருக்க முடியாமல் இருந்து வருகிறது.

*மறைந்த திரு. அண்ணாதுரையவர்களின் நூல்கள்*

**515 வினா.—திரு. என் கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்களை நூல் வடிவில் வெளியிடுவது அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்கள் அனைத்தையும் தொகுத்து, அச்சடித்து வழங்குவது என்றால் தனிப்பட்டவர்களுக்கு நிதி வசதி



1970 மார்ச் 24]

இருக்காது. ஆகவே, அண்ணா அவர்களுடைய எழுத்தோவியங்களை அரசாங்கமே தொகுத்து, அச்சடித்து மலிவு விலையில் மக்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? அதற்கு வாய்ப்பு இல்லையென்றால் தனிப்பட்டவர்கள் அச்சடித்து வெளியிடுவதற்கு முன்வந்தால், அரசு அவர்களுக்கு மானியம் வழங்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்கள் பல நூல் வடிவில் வெளிவந்திருக்கின்றன. அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவரே, அவருடைய மகனே ஒரு பதிப்பகம் அமைத்து அறிஞர் அண்ணா அவர்களின் நூல்களை பல்வேறு வகையில் தொகுத்து வெளியிடவேண்டும் என்று முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வேறு யாரும் அவைகளை வெளியிடக்கூடாது என்று பத்திரிகைகளில் கூட அறிக்கை வெளிவந்திருக்கிறது. தொடர்ந்து அண்ணா அவர்களுடைய எழுத்தோவியங்களின் தொகுப்பு நூல்களை வெளியிடுவதற்கான முயற்சியை அந்த பதிப்பகம் மேற்கொண்டிருக்கிறது. ஒன்றிரண்டு தொகுப்பு நூல்கள் வெளிவந்திருக்கின்றன. தொடர்ந்து அம்மாதிரி நூல்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கின்ற காரணத்தினாலும், வேறு யாரும் வெளியிடக்கூடாது என்று அவர்கள் அறிக்கை விட்டிருக்கின்ற காரணத்தினாலும், இப்பொழுது அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் நோக்கம் இல்லை.

**ஹாஜி ம. மு. பீர்முஹம்மது :** அறிஞர் அண்ணா அவர்களுடைய குடும்பத்தாரை அணுகி அரசே அனுமதி பெற்று, அதற்குரிய ஒரு தொகையை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, தமிழ் நாடு மக்கள் எல்லோருக்கும் அவர்களுடைய எழுத்தோவியங்கள் அனைத்தும் கிடைக்கக்கூடிய நிலையில் அவைகள் தேசியமயமாக்கப்படுகிற நிலையை அரசு ஏற்படுத்துமா ? காந்தியடிகளின் தொகுப்பு நூல்கள் வெளிவந்ததைப்போல், நல்ல ஆராய்ச்சியாளர்களையும், அறிஞர்களையும் வைத்து, ஆய்ந்து, தொகுத்து, முறைப்படி வெளியிட்டு, மற்ற மொழியினர்களும் அறிஞர் அண்ணா அவர்கள் யார், அவர்களுடைய ஆற்றல் என்ன என்று தெரிந்துகொள்ளும் வகையில் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைச் சுருக்கமாகப் போடுங்கள்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** நம் அரசே அறிஞர் அண்ணா அவர்கள் தொகுப்பு நூல் வெளியிடுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அண்ணா அவர்களின் எழுத்தோவியங்கள் பல அவர்களுடைய குடும்பச் சொத்தாகக் கருதப்படுகின்றன. அவர்களே விரும்பி அரசாங்கம் இதை ஏற்று நடத்தவேண்டும் என்ற கோரிக்கை அனுப்பினால், அரசாங்கம் அப்பொழுது அதை கவனிக்கலாம். அவர்களே வெளியிடுகிற எண்ணத்தில் தான் இப்பொழுது இருந்து வருகிறார்கள்.

**திரு. கே. விநாயகம் :** பேரறிஞர் அண்ணா அவர்கள் பலவிதமான புத்தகங்களை எழுதியிருக்கிறார். அரசியல் வேற்றுமைகள் எப்படியிருந்தாலும், அவர் ஒரு நல்ல எழுத்தாளர் என்பதில் சந்தேகம் இல்லை. அன்றைய சர்க்கார் அவர்களுடைய ஒரு சில புத்தகங்களை பிராஸ்கிரைப் செய்திருக்கிறார்கள். இதுவரையில் அந்தத் தடை நீக்கப்பட்டதாக எனக்குத் தெரிந்த தகவல் இல்லை. அந்தப் புத்தகங்களை வெளியிடுவதற்கான தடையை நீக்குவதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதைப் பற்றி விவரக் குறிப்பு இல்லை. அதைப்பற்றி அரசாங்கம் யோசித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் ஈடுபடும்.

*City Compensatory Allowance to employees of aided Colleges*

* 516 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Eduucation and Health be pleased to state—

(a) whether it is a fact that City Compensatory Allowances sanctioned by the Education Department of the Tamil Nadu Government in its G.O. Ms. 372, dated 16th March 1968 has not so far been paid to the employees in the Aided Colleges;

(b) whether it is due to the non-receipt of any intimation from the Director of Collegiate Education; and

(c) if so, the reason as to why this order has not been communicated by the Director of Collegiate Education to the aided colleges?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஒரு கல்லூரியைத் தவிர ஏனைய அரசு மானியம் பெறும் எல்லாக் கல்லூரிகளும் தங்கள் ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கியுள்ளன.

(இ) இல்லை.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : May I know whether the amount of the City Compensatory Allowance is fully reimbursed to aided colleges and, if not, whether the Ministry is aware that the managements, whose income limits have been fixed, are reluctant to implement this order with regard to the teaching and non-teaching staff? In the circumstances will not the present attitude of the Government hamper private education. Are the Government aware of the fact that there are several colleges which have not yet implemented this particular order and, if so, are the Government going to exercise any control over these colleges?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இங்கே இருக்கிற விவரக் குறிப்பின்படி எத்திராஜ் மகளிர் கல்லூரி ஒன்றைத் தவிர மற்ற கல்லூரிகளில் அது நடைமுறைப்படுத்தப்





பட்டிருக்கிறது. எத்திராஜ் மகளிர் கல்லூரி நிர்வாகம் அதை நடைமுறைப் படுத்துவதைப் பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதன் அறிக்கையும் விரைவிலே சமர்ப்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கல்லூரி கல்வி இயக்குநர் அது வந்தவுடன் அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஸ்டெல்லா மேரீஸ் காலேஜில் 1–8–1969 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது. மெட்ராஸ் கிரிஸ்டியன் காலேஜில் (தாம்பரம்) 1–4–1968 முதலும், ஏ. எம். ஜெய்ன் காலேஜில், 1–3–1969 முதலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது, டி.ஜி. வைஷ்ணவா காலேஜில், 1–7–1969-ல் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படி ஏதாவது ஒரு கல்லூரியில் நடைமுறைப் படுத்தப்படாமல் இருக்கிறது என்ற குறிப்பு தரப்படுமானால், அது பற்றி நடவடிக்கை எடுக்க இந்த அரசு முனையும்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** எஸ்.ஐ.இ.டி. காலேஜில் சிடி காம்பென்ஸேடரி அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற விவரக் குறிப்பில் அந்தக் கல்லூரியில் அந்த அலவன்ஸ் கொடுக்கப்பட்டு வருகிறது என்று தான் தெரிகிறது. அப்படிக் கொடுக்கப்படாமல் இருக்குமானால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதை நிறைவேற்ற அரசாங்கம் முயலும்.

DR. H. V. HANDE : Are not the Government aware of the fact that the University Grants Commission has prescribed a scale of pay and that several colleges have not yet implemented that scale? Eighty per cent of the amount is given by the University Grants Commission. In view of the fact that we get eighty per cent of the amount, will the Government come forward and see categorically that all the colleges implement the University Grants Commission scale of pay?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது நகர ஈட்டுப் படியைப் பொறுத்த கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போட்ட துணைக் கேள்வி யு.ஜி.ஸி. ஸ்கேல்ஸ் ஆப் பே எல்லாக் கல்லூரிகளிலும் நிறைவேற்றப்படவேண்டும் என்பது தான். அது நிறைவேற்றப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இந்த அரசு அதைப்பற்றி வற்புறுத்தி வருகிறது. எங்கேயாவது நிறைவேற்றப்படாமல் இருக்குமானால், அதை நிறைவேற்ற வேண்டும் என்று வற்புறுத்த இந்த அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

*Financial aid to libraries in schools*

* 517 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Government has proposals under its consideration to finance the libraries in Elementary Schools and Higher Elementary Schools in the State?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழ் நாட்டில் உள்ள தொடக்கப்பள்ளிகளில் ஏறத்தாழ 12, 500 பள்ளிகளில் நூல் நிலையங்கள் அமைக்கும் செலவுக்காக, 1969-70-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 4,54,800 ஒதுக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி மன்றங்கள் நடத்தும் பள்ளிகள் மற்றும் மானிய உதவி பெறும் தனியார் பள்ளிகள் ஆகியவற்றில் கீழ்த் தொடக்கப்பள்ளி (Lower Elementary School) ஒவ்வொன்றுக்கும் ரூ. 30-ம் உயர் தொடக்கப்பள்ளி ஒவ்வொன்றுக்கும் ரூ. 60-ம் மாநில அரசு மானியம் வழங்குகிறது. அங்ஙனம் உதவி பெறும் பள்ளிகளை நடத்தும் உள்ளாட்சி மன்றங்கள் அல்லது மானியம் பெறும் பள்ளி நிர்வாகத்தினர், இணைமானியத் தொகையாக சந்தர்ப்பத்திற்கேற்ப ரூ. 30 அல்லது ரூ. 60-ஐத் தத்தம் நிதியிலிருந்து கொடுக்கவேண்டும். அரசினர் கீழ்தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப்பள்ளிகள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் நூல் நிலையம் அமைப்பதற்கான செலவு முறையே ரூ. 60-ம், ரூ. 120-ம் முழுமையாக அரசு நிதியிலிருந்தே செலவிடப்படுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் பொது அறிவையும், ஆற்றலையும் வளர்க்கின்ற பாணியிலே நூலகங்களின் பணி இன்றியமையாதது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதிலிருந்து, 12,500 பள்ளிகளுக்கு இதுமாதிரியான உதவித் தொகை வழங்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். எல்லாப் பள்ளிகளுக்கும் இதுமாதிரி நூலகங்கள் தொடங்குவதற்கு உதவித் தொகை வழங்கப்படுமா? ஒரு பள்ளிக்கு ரூ. 30, 60 என்று கணக்குச் சொன்னார்கள். இன்னும் அதிகமாகக் கொடுப்பதற்கு அரசாங்கத்தினிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 22,75,000 இதற்காக திட்டமிடப்பட்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4,55,000 என்ற முறையில், சென்ற ஆண்டு ரூ. 4,55,000, இந்த ஆண்டு ரூ. 4,55,000 செலவிடப்பட்டு, கூடுமானவரையில் எல்லாப் பள்ளிகளுக்கும், துவக்கப் பள்ளிகளுக்கும் வரவேண்டும் என்ற முறையில் தான். சென்ற ஆண்டு 12,500 பள்ளிகளுக்கு இந்த நிதி உதவி அளிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு அடுத்த பள்ளிகளில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படும். அதற்குப் பிறகு, இந்தப் பள்ளிகளிலெல்லாம் நூல்நிலையங்கள் வைக்கப்பட்ட பிறகு, மிச்சப்படும் தொகையை மறுபடியும் புத்தகங்கள் வாங்குவதற்குப் பயன்படுத்தலாம். இப்பொழுது ஒவ்வொரு துவக்கப் பள்ளிக்கும் இன்னும் அதிகமாகக் கொடுப்பதற்கு, அதைக் கூட்டிக் கொடுக்கிற அத்தகைய நிலைக்கு இப்பொழுது நிதி வசதி இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, with regard to library books in elementary schools, in many schools we do not find even a dictionary or elementary grammar book and the



teachers are put to a lot of difficulties. On this score will the Government be pleased to constitute a committee to prepare a list of books for elementary schools and see that those books are supplied immediately?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, துவக்கப் பள்ளிகளில் இப்படிப்பட்ட நூல்நிலையங்கள் வைப்பதன் நோக்கம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி புத்தகங்களை வைக்கவேண்டும் என்பது தான். எந்த அடிப்படையில் இந்த நூல்நிலையங்களுக்கு நூல்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. என்ற விவரக் குறிப்பு இங்கே இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போன்று இன்றியமையாத, மிகவும் தேவைப்படுகிற அத்தகைய நூல்களைத் துவக்கப்பள்ளிகள் இந்த நிதியின்கீழ் வாங்கி வைப்பதற்குத் தக்க முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

**திரு. இல. பலராமன் :** மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்காக எந்தப் புத்தகங்களை வைக்கவேண்டும் என்று அரசு ஏதாகிலும் ஆணை பிறப்பித்திருக்கிறதா? அதோடுமட்டுமல்லாமல் பெருவாரியாகத் தொகையை செலவழிக்கும்பொழுது, அரசாங்கமே நல்ல புத்தகங்களை எழுதி, அச்சிட்டு வெளியிட ஏதேனும் நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நூலகங்களிலே வைக்கப்படவேண்டிய புத்தகங்களை அரசே அச்சடித்துத் தருவது என்பது இயலாது. பாடப்புத்தகங்களை அச்சிடுகின்ற பெருமுயற்சியில் இப்பொழுது அரசு ஈடுபட்டிருக்கிறது. துவக்கப்பள்ளி மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய நூல்கள் எவை என்பதைப் பள்ளிக் கல்வி இயக்குநர்—அவர்களேதான் நூல்நிலைய அதாரிடியாக இருக்கிறார்—அவர்கள் தேர்ந்தெடுத்து, அப்படிப் பயன்படக்கூடிய நூல்களை வைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டு வருகிறது. அந்த முறையில் மாணவர்களுக்குப் பயன்படுகிற நூல்கள்தான் அங்கே வைக்கப்படுகின்றன.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, இது போன்று நூல்நிலையங்களுக்கு நிதி வழங்குவதைத் தனியார் வைத்து இருக்கும் உயர்துவக்கப் பள்ளி அல்லது உயர்நிலைப் பள்ளி இவைகளுக்கும் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா, அதைப்பற்றிப் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தனியார் பள்ளிகளுக்கும் தரப்பட்டு வருகிறது. நான் முதலில் சொன்னபடி துவக்கப் பள்ளிக்கு ரூ. 30, உயர்துவக்கப் பள்ளிக்கு ரூ. 60 என்று அரசு தருகிறது. ஈட்டு மானியமாக துவக்கப் பள்ளிக்கு ரூ. 30 தரவேண்டும். உயர் துவக்கப்பள்ளி ரூ. 60 ஈட்டு மானியமாகத் தரவேண்டும். ஆகவே, அந்தப் பள்ளிகளிலும் நூல்நிலையங்கள் ஏற்படுத்துவதற்கான அளவுக்கு நிதி உதவி செய்யப்பட்டு வருகிறது.

[1970 மார்ச் 24

**திருநெல்வேலி மாவட்டத்தில் மைய சேகரிப்பு குழாய்க்கிணறுகள்.**

**518 வினா.—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் சாத்தான்குளம், உடன்குடி, கோவில்பட்டி, ராதாபுரம் ஆகிய இடங்களில் மைய சேகரிப்பு குழாய்க் கிணறுகள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் 'இல்லை' என்று சொன்னார்கள். ஏற்கனவே இதுபற்றி ஏதாவது முயற்சி செய்யப்பட்டு கைவிடப்பட்டதா அல்லது எதுவுமே முயற்சி செய்யப்படாமலேயே 'இல்லை' என்ற பதில் தந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவில்பட்டி, ராதாபுரம், ஊத்தங்குடி, சாத்தாங்குளம் அத்தனையையும் சேர்த்து திட்டம் உண்டா என்று கேட்டிருந்தார்கள். அதற்கு 'இல்லை' என்று பதில் தரப்பட்டது. கோவில்பட்டி நகராட்சிக்குக் குடிநீர் கொடுக்க ஒரு திட்டம் 1,08,45,000 ரூபாயில் வகுக்கப்பட்டு, தாம்பரபரணியிலிருந்து கலெக்டர் வெல் என்ற முறையில் தண்ணீர் கொடுக்க ஒரு திட்டம் இருக்கிறது. அது வருகிற வழிகளில் உள்ள ஊர்களில் சில கடன் பெற்று இதை ஏற்றுக்கொள்ள முடியாததால், அப்படிப்பட்ட ஊராட்சிகள் ஒதுக்கப்பட்டு, திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வேறு எங்கும் இந்தக் கலெக்டர் கிணறு திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை. மதுரையில் 17 லட்ச ரூபாய் அளவில் குடிநீர் தருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சென்னையில் தாம்பரபாக்கம் என்ற இடத்தில் ஆராய்ச்சி நடைபெறுகிறது. அது பலன் தரும் என்றால், சென்னை நகர குடிநீர் வசதியைப் பெருக்குவதற்கு அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர் வழங்கும் திட்டம் கோவில்பட்டி நகரத்திற்கு 108 லட்ச ரூபாயில் திட்டம் இருக்கிறது என்று அமைச்சர் கூறினார்கள். இது வரக்கூடிய வழிகளில் பல கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்கவேண்டும் என்று சேர்க்கப்பட்டிருந்தன. ஆனால், சில கிராமங்கள் கடன் பெற்று அடையும் சக்தி இல்லாததால், அப்படிப்பட்ட கிராமங்களுக்கு மானியம் கொடுத்தால்தான் அவர்களும் வசதிபெற முடியும். ஆகவே, மானியம் கொடுத்து, விரைவில் குடிநீர் கொடுக்க முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



1970 மார்ச் 24]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டதுபோல், வருகின்ற வழியில் சிற்றூர்களையும் சேர்த்துத்தான் இந்தத் திட்டம் இருக்கிறது. கடன் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றுதான் இந்தத் திட்டம் இருந்து வருகிறது. மானியம் வேண்டும் என்றால், பெரும் செலவு ஏற்படுகிறது. கடன் அடிப்படையில்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லும் கருத்து பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. அதோடு மேற்கொண்டு செலவு ஏற்படும். அதைப் பற்றி திட்டவட்டமாக பிற்பாடு தான் முடிவு ஏற்பட வேண்டும். இப்போழுது இருக்கும் முடிவு கடன் அடிப்படையில் தான்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம், ஊத்தங்குடி போன்ற பகுதிகளில் மழை பற்றாக்குறை காரணமாக குடிநீர் கிடைக்காத பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. சமுதாயப் பொதுக் கிணறு போல், குழாய்க் கிணறுகள் அமைத்து உடனடியாகக் குடிநீர் கொடுக்க அரசு சிறப்புப் பணி ஒன்றை மேற்கொள்ளுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கூடுமானவரையில் எல்லாப் பகுதிகளுக்கும் குடிநீர் தரவேண்டும் என்றுதான் திட்டத்தை மேற்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து, அதோடு ஆயுள் இன்ஷுரன்ஸ் கார்ப்பொரேஷன் இடமிருந்து கடன் வாங்கும் முயற்சியையும் மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று குடிநீர்த் திட்டங்கள் எந்த வகையில் செய்யப்பட வேண்டும் என்று ஆராயப்பட்டு வருகிறது. அதுபற்றியும் விவரம் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் கொடுக்கலாம்.

**திரு. டி. மார்டின் :** ஸ்பீக்கர் சார், வாட்டர் போர்டு என்று ஒரு போர்டு அறிவிக்கப்பட்டிருக்கிறதே, அதன் மூலமாகவாவது சாத்தாங்குளம் பகுதியில் நடுவக்குறிச்சி, சொக்கன் குடியிருப்பு, தட்டார் மடம், குமடி கோட்டை போன்ற இடங்களுக்குக் குடிநீர் அங்கெல்லாம் உப்புத் தண்ணீராக இருப்பதால் மாண்புமிகு முதல் அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டும், கோரிக்கைகள் பொது மக்களால் கொடுக்கப்பட்டிருப்பதால், அந்த மனுக்களைப் பரிசீலித்து, அப்பகுதியில் நல்ல குடிதண்ணீரைச் சீக்கிரம் கொடுக்கக்கூடிய நிலையை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழகம் முழுவதும் உள்ள எல்லா இடங்களுக்கும் குடிநீர் வசதியை உருவகப்படுத்தக் கூடிய அடிப்படையில் தான் வாட்டர் போர்டு அமைகின்றது, வாட்டர் போர்டு ஆராய்ந்து தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும் அந்த வகையில் சாத்தாங்குளம் பகுதிக்குக் குடிநீர் தேவை என்னென்ன, எந்த அளவில், எப்படிப்பட்ட முறைகளில் கொடுக்க

வேண்டும் என்று வாட்டர் போர்டு தீர்மானிக்கும். மாண்புமிகு உறுப்பினர் கூறும் பிரச்சினையும் கலந்து ஆலோசித்து தக்க முடிவு எடுக்கும்.

*Urban land tax.*

* 519 *Q*.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Native Residents Association of Madras City presented a petition to the Hon. Minister in the second week of June 1969 regarding the nationalisation of the levy of urban land tax on the basis of old quit rent system; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) மாண்புமிகு அமைச்சருக்கு அனுப்பியதாகக் கூறப்படும் மனு கிடைக்கப் பெற வில்லை. ஆயினும், தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், வருவாய்த் துறைச் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பிய மனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

(இ) 'நகர்ப்புற நிலவரியை, விடுவரி விகிதத்தின் பெருக்கங் களில் விதிக்க வேண்டும்' என்ற அச்சங்கத்தின் யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாதெனக் கருத்தறிவிக்கப்பட்டது.

THIRU K. VINAYAKAM: Sir, whereas the rate of tax levied on the urban land in the City of Madras is .4 per cent of the land value and whereas the quit rent so far paid is tantalisingly very low when compared to the tax now being levied, will the Government think of the possibility of reducing the percentage of the urban land tax?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இவைகளெல்லாம் யோசிக்கப் பட்டுத்தான் 0.4 சென்டம் என்று முடிவு பண்ணப் பட்டது. 0.5 சதவீதம் என்று மசோதா கட்டத்தில் இருந்து, இதையெல்லாம் செலக்ட் கமிட்டி கவனித்து, பிறகு முடிவு செய்யப் பட்டது. 0.4 சென்டம் என்று ரொம்பக் குறைவானது. 0.5 சென்டம் என்பதே, அரைப் பைசா ஒரு ரூபாயில் என்றுதான் வரும். இந்த 0.4 சென்டம் என்பது அதைவிடக் குறைவானது என்றுதான் அர்த்தம்.

DR. H V. HANDE: Sir, in view of the fact that in several places especially in busy areas like George Town and Park Town, small areas like half a ground are also taxed heavily, will the Government reconsider the whole matter and come forward to exempt, ('விதி விலக்கு') at least areas which are less than one ground or two grounds?

THE HON. THIRU K. A. MATHIALAGAN: The Government have not taken any decision. Now the Board of Revenue has been asked to examine this proposal. The Government have asked the Board of Revenue to furnish the following information:

1. The total extent of vacant site liable to urban land tax as well as the built-up areas.



2. The total amount of tax involved in both the cases, that is, both the built-up areas and the vacant site.

3. The number of assessees who own urban land of less than two grounds and more than two grounds and the total amount of tax involved in each of the categories referred to in the items I have mentioned above. So, the Board has been asked to examine the matter and the report is awaited.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் வீட்டு வசதி இல்லாமல் இருக்கிறார்கள். மனைகளும் கிடைப்பதில்லை. அப்படியிருக்கும்போது, சிலர், பங்களாக்கள் என்ற பெயரில் '40-க்கு 60' என்ற அளவில் வீட்டை மட்டும் கட்டிக்கொண்டு, இரண்டு பர்லாங்கு தூரம் வெற்று இடம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களுக்கு சூபர்-டாக்ஸ் போட அரசு முன்வருமா? இல்லை என்றால், பங்களாக்கள் என்றால் இவ்வளவு கிரௌண்ட்தான் இருக்க வேண்டும் என்று ஒரு சீலிங் வைக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இவைகளெல்லாம் ஒரு காலத்தில் வந்துதான் தீரும். மாண்புமிகு உறுப்பினர்கள் போன்ற வர்கள் விரைவாக, சமூகத்தில் சிந்திப்பவர்கள் அதிகமாக ஆக, இதெல்லாம் வந்தே தீரும்.

THIRU K. VINAYAKAM: Sir, is it not a fact that when the concerned Bill was being debated in this House, the present Finance Minister who was then sitting in the Opposition moved an amendment to reduce the rate of tax from 4 per cent to .2 per cent. Can he now recollect from his memory and say whether what I have stated is not a fact?

**மாண்புகு திரு. கே. ஏ. மதியழகன் :** அவர்கள் சொல்லுவது சரி யானது அல்ல. எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். நாங்கள் வரவேற்று, இதை முற்போக்கானது. இது நிறைவேற்றப்பட வேண்டும் என்று உற்சாகத்தோடு வரவேற்றதாகத்தான் ஞாபகம்,

*Production of Auto Cycles*

* 520 *Q*.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any licence has been issued to a Madras Firm for starting an Auto-Cycle Factory; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) 1969-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில், ஆண்டொன்றுக்கு 50,000 வீதம் 'தானே இயங்கும் துவிச்சக்கர வண்டிகள்' தயார் செய்யும் திறன் உள்ள ஒரு தொழிற்சாலையை ஒரிசா மாநிலத்தில் நிறுவுவதற்கு, தொழில் உரிமம் ஒன்றினை, சென்னையைச் சேர்ந்த திரு இலக்குமி ஆட்டோ சைகிள் லிமிடெட்டுக்கு இந்திய அரசு வழங்கி யுள்ளார்கள். வேறு விபரங்கள் ஒன்றும் இவ்வரசிடம் இல்லை.

[1970 மார்ச் 24

## சிமெண்ட் உற்பத்தி.

*** 521 வினா திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிமெண்ட் தயாரிக்கும் சிறு இயந்திரத் தொழிற்சாலைகளை நிறுவ அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமெனில், எங்கெங்கு ஏற்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, கல்லக்குடிக்கு அருகில் சிறிய சிமெண்ட் ஆலையையும் மற்ற இடங்களில் சிறிய சிமெண்ட் ஆலைகளையும் அமைக்கும் உத்தேசம் உண்டா ? தனிப்பட்டவர்கள் அமைக்க வந்தால் அவர்களுக்கு அரசாங்கம் கடன் உதவியும், தொழில் நுணுக்க உதவியும் அளிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, சிறிய சிமெண்ட் தொழிற்சாலைகளை ஒன்பது இடங்களில் அமைக்க முடியும் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அவை அரசாங்கத்தின் சார்பில் அல்ல. தனியார் துறையில் அமைக்க விடப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அரசாங்கம் உதவி செய்யும்.

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையிலே, 'சிமெண்ட் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவோம்' என்று வாக்குறுதி கொடுத்ததே, அந்த வாக்குறுதியை நிறைவேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? ஒன்பது இடங்களிலே தொழிற்சாலைகள் என்றார்கள், எங்கெங்கு என்பதை அறிய முடியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, 9 இடங்களிலே தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படப் போகின்றன என்று நான் சொன்னதை ஒப்புக்கொண்ட காரணத்தால், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படுகிறது என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் புரிந்துகொண்டிருப்பார் என்று கருதுகிறேன். கீழ்க்கண்ட இடங்களில் (1) மயத்தாறு, (2) அம்பாசமுத்திரம், (3) சுண்ணாம்பூர், மேலூருக்கு அருகில், (4) அரியலூர், ரெட்டிப்பாளையம் பகுதி, (5) கவிந்தபாடி, அமினாபாத் பகுதி, (6) சாமல்பட்டி, ஜோலார்பேட்டைக்கு அருகில், (7) வளயார், (8) சேதாரம்பட்டு அண்ட் வானூர், பாண்டிச்சேரிக்கு அருகில், (9) சிந்தாமணிப்பட்டி, குளித்தலைக்கு அருகில் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, 9 தொழிற்சாலைகளிலும் சேர்ந்து எவ்வளவு உற்பத்தியாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா ? தற்போது உற்பத்தியாவதையும் இதையும் சேர்த்தால் இந்த ராஜ்யத்தின் தேவை அதிகமாக இருக்குமா ? குறையுமா ? அல்லது சரியாகுமா ?



1970 மார்ச் 24]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இப்போது இருக்கும் பிரச்சினை என்னவென்றால், தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் சிமெண்டை விற்பனை செய்வதில் கஷ்டம் இருக்கிறது. ஆகவேதான், மீண்டும் இந்த உற்பத்தியைப் பெருக்குவது கூடாது என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 9 ஆலைகளுக்கு ஏற்பாடு செய்தாலும்கூட, தொடங்குவதிலே தயக்கம் காட்டுகிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள வள்ளியூர் பகுதியில் ஒரு சிமெண்ட் ஆலை நிறுவ லைசென்ஸ் வழங்கப்பட்டிருந்ததே, அது என்ன ஆனது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, ஒரு லட்சம் டன்னுக்கு லெட்டர் ஆஃப் இன்டென்ட் கிராண்ட்டட் என்ற வகையில் டாக்டர் பி. நடராஜன் என்பவருக்கு வள்ளியூரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. முன்னாலே சிமெண்ட் தொழிற்சாலையில் பாதகம் ஏற்பட்ட காரணத்தாலே கொஞ்சம் தயக்கம் காட்டுவதுபோல் தெரிகிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த 9 இடங்களிலே சேதாரம்பட்டு, பாண்டிசேரிக்கு அருகில் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாண்டிச்சேரி ஸ்டேட் வேறு, நம்முடைய ஸ்டேட் வேறு. அந்தத் தொழிற்சாலை நம்முடைய ஸ்டேட்டைச் சேர்ந்ததா, இல்லையா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, நான், 'சேதாரம்பட்டு அண்ட் வானூர்' என்றுதான் சொன்னேன். வானூர் கனம் உறுப்பினருடைய தொகுதி. அது பாண்டிச்சேரிக்குப் பக்கத்தில் இருப்பதால் அப்படிக் குறிப்பிட்டுச் சொன்னது.

## *Expansion of border highways.*

* 522 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the State Government has approached the World Bank for the expansion of the border highways?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மைசூர் எல்லை கிருஷ்ணகிரி-சேலம் வழியாகச் செல்லும் 7-ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையையும், சேலம்-கோயம்புத்தூர்-கேரள எல்லை வழியாகச் செல்லும் 47-ம் எண் தேசிய நெடுஞ்சாலையையும் மேம்படுத்துவதற்காக உலக வங்கியின் உதவியை நாடும் செயற்குறிப்பை இந்திய அரசு ஆராய்ந்து வருகிறது. அது ஆய்வு நிலையில் உள்ளது.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister the estimated cost of the roads and from where, the roads have been proposed to be repaired?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Detailed preliminary proposals for strengthening and widening to two lanes standard of National Highways No. 7 and No. 47 at a cost of Rs. 570 lakhs and Rs. 590 lakhs respectively have been sent to the Government of India.

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, வேலூருக்கு அருகில் சென்னையிலிருந்து பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையை விஸ்தரிக்க வேண்டுமென்று தமிழ்நாடு அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறதா? தற்போது அந்தச் சாலையில் போக்குவரத்து நெரிசலாக இருக்கிறதென்று சொல்லப்படுகிறதே, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, சென்னை–பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையைப்பற்றி செயற்குறிப்பு இல்லை.

*Bridge across Cauvery in Tiruchirappalli*

*523 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to ease the traffic problem on the Tiruchirappalli bridge on the Cauvery?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** திருச்சிராப்பள்ளி நகரத்தில் காவிரியாற்றுப் பாலத்தின் மீது வண்டிப் போக்குவரத்துச் சிக்கலை எளிதாக்கக் கீழ்க்காணும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன:—

(அ) வண்டிப் போக்குவரத்தை முறைப்படுத்த காவிரிப் பாலத்தின் இரு முனையிலும் காவலர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர்.

(இ) பாலத்தின் மீது வண்டிகள் ஒருவழி மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

(உ) காவிரிப்பாலத்தின் இருமருங்கிலும், போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தும் பொருட்டு ஸ்ரீரங்கத்திலுள்ள வெள்ள ஒளிப் தானியங்கும் போக்குவரத்து அடையாளக்குறிகளை நிறுவ முன்வந்தது. அதனை ஏற்றுக் கொள்ளுமாறு அரசு சென்னை (நெடுஞ்சாலைகள்-கிராமப்பணிகள்) தலைமைப் பொறியாளருக்கு அனுமதி வழங்கியுள்ளது.

**திரு. நா. காசிராமன்:** தலைவர் அவர்களே காவேரி பாலமானது தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையிலிருந்து தெற்குக் கோடி வரையில் செல்லுகின்ற ரஸ்தாவில் உள்ளது. இந்தப் பாலத்தை அகலப்படுத்தினால் அல்லது அதன் பக்கத்தில் மற்றொரு பாலத்தைக் கட்டினால் இப்பொழுதுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க முடியும். இதன் காரணமாக வியாபாரம் அதிகமாக நடைபெறும், விவசாயிகளுக்கு அதிக பயனைத் தரும் என்பதை மனதில் கொண்டு, பாலத்தை அகலப்படுத்தும் முயற்சியில் அல்லது வேறொரு பாலத்தைக் கட்டும் முயற்சியில் இறங்க இந்த அரசாங்கம் முன்வருமா?



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, அதுபற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** தலைவர் அவர்களே, லாரி, பஸ் போன்ற பாரம் உள்ள வண்டிகள் பழைய பாலத்தின்மீது போகக் கூடாது என்றும் புதிய பாலத்தின் மேல் செல்வதற்கு உத்தரவிட்டு தற்போதுள்ள நெருக்கடியை குறைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும்.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, இந்தப் பாலங்களுக்கு எவ்வளவு வயது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது? கட்டி முடிந்தவுடனேயே வாயக்கற்றதாகப் போய்விடுவதாகச் சொல்கிறார்களே, அதே அடிப்படையில்தான் காவேரிப் பாலத்தைப் பற்றியும் சொல்கிறார்களா? அதைப்பற்றிப் பரிசீலிக்க அரசாங்கம் முன்வருமா? அதன்மீது அரசாங்கம் என்ன முடிவுக்கு வந்திருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்பது இந்தக் கேள்வியிலே வராதே.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

*Rates for tourist taxis.*

* 524 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(a) whether the rates for the tourist taxis have been revised by the Government; and

(b) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக்பாட்சா:** (அ) ஆம்.

(இ) சிறுலா வாடகை மோட்டார் வண்டிகளை இயக்குவதற்கும் பேணுவதற்கும் ஏற்படும் அதிகச் செலவு காரணமாக, அவற்றின் கட்டண வீதங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென்று சிறுலா வாடகை மோட்டார் வண்டி உரிமையாளர்கள் முறையிட்டு கொண்டனர். சிறுலாப் பயணிகளின் நலனை முன்னிட்டு நாடு முழுவதும் இந்த வீதங்கள் ஒரே மாதிரியாக இருப்பதை உறுதிப் படுத்தும் நோக்கத்துடன், சிறுலா வாடகை மோட்டார் வண்டிகளின் கட்டண வீதங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்று இந்திய அரசும் கருத்து தெரிவித்தது. எனவே, இந்த அரசு போக்குவரத்து ஆணையாளருடன் கலந்தாலோசித்து, கட்டண வீதங்களை மாற்றி அமைப்பதற்கான ஆணையை மாநிலப் போக்குவரத்து அதிகாரிக்குப் பிறப்பித்துள்ளது.

**ஹாஜி ம. மு. பீர்முகம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் நம்முடைய நாட்டிற்கு சுற்றுலா பயணிகள் மிக அதிகமான அளவுக்கு வருகிறார்கள். ஆகவே, இந்தச் சமயத்தில் கட்டண உயர்வு செய்வது நல்லதல்ல. ஆகவே, அந்தக் கட்டண உயர்வை நிறுத்தி, சுற்றுலா டாக்ஸிகளில் நான்குபேர் பிரயாணம் செய்யலாம் என்பதை மாற்றி, ஐவர் பிரயாணம் செய்ய அனுமதிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, வெளிநாட்டுப் பயணிகள் அதிகமாக வருகிறார்கள் என்ற காரணத்தைக்கொண்டும், மோட்டார் வண்டிகளை இயக்குவதற்கும் பேணுவதற்கும் ஆகும் செலவுகளின் அடிப்படையைக் கொண்டும், மத்திய சர்க்கார் சீருலா வாடகை மோட்டார் வண்டிகளின் கட்டண விதங்கள் நாடு முழுவதும் ஒரே சீராக இருக்க வேண்டுமென்று செய்த சிபாரிசின் பேரிலே கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

*Mail bags carried by State Transport Buses.*

* 525 Q. THIRU N. KASIRAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether postal mail bags of Posts and Telegraphs Department are being carried in the buses operated by the State Transport undertaking; and

(b) if so, the rate of subsidy that the Posts and Telegraphs Department is paying to the State Government for the carriage of mails, etc., in the buses of the Tamil Nadu Transport Department?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) அஞ்சல்களை இம்மாநிலத்திலுள்ள பேருந்துகளில் எடுத்துச் செல்வதற்கான கட்டண விதங்களை நிர்ணயிப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே அஞ்சல் பைகளை பஸ்ஸில் எடுத்துச் செல்வதற்கு ஒரு கிலோகிராமுக்கு ஒரு மைலுக்கு 4½ தம்பிடி என்று ஒரு கார்டு காலத்துக்கு விற்ற காலத்திலே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இப்பொழுதுள்ள கால தேசவர்த்தமானத்தை உத்தேசித்து, மற்ற ஜில்லாக்களிலே போனால் ஒரு மைலுக்கு 5½ ரூபாய் என்றும், ஒரு போஸ்ட் ஆபீஸைத் தொட்டால் 2½ ரூபாய் என்றும் கட்டணம் வைத்தால், தேச உடைமையாக்கப்பட்டிருக்கும் போக்குவரத்துக்கு வருமானம் அதிகம் கிடைக்குமே இதன் பேரில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, தேச உடைமையாக்கப்பட்ட பஸ் வருமானத்திற்கு ஆலோசனை கூறிய கனம் உறுப்பினருக்கு என் நன்றியைத்



தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென்ற அரசாங்க உத்தரவு ஜி. ஓ. 3030-ம் எண் 2—12—1969-ம் தேதியுள்ளதில் இந்தக் கட்டண விகிதங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. காலதேசவர்த்தமானத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனைகளைப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

**கொடவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, அஞ்சல் பைகள் தனியார் பஸ்களில் வருவதை மாற்றி, அரசாங்க பஸ்களில்தான் வரவேண்டும் என்று செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது அஞ்சலகத்தைத் தொடர்பு கொண்டு செய்ய வேண்டிய வேலையாகும்.

விருதுநகரில் அரசு போக்குவரத்து பணிமனை.

* 526 வினா.—திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் அரசாங்க பேருந்துகளை பழுது பார்க்க புதிய பணிமனை கட்டும் உத்தேசம் உண்டா ?

(இ) அதற்குரிய நிலம் வாங்க ஏற்பாடு செய்யப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) ஆம்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம் :** இப்படிப்பட்ட பணிமனைகள் வேறு எந்த எந்த இடங்களில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன ? பாளையங்கோட்டையில் ஒன்று கட்டி முடியும் தறுவாயில் இருக்கிறதே, அதன் திறப்பு விழாவுக்கு அமைச்சர் அவர்கள் வருவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** திறப்பு விழாவுக்கு அழைப்பு அனுப்பினால் வருவதுபற்றி யோசிக்கலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** விருதுநகரில் கட்டப்பட இருக்கிற பணிமனை எப்போது துவங்கும்? எப்போது முடிக்கப்படும்? எத்தனை பேருந்துகள் பழுது பார்க்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 75 ஏக்கரா நிலம் அக்வயர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து அறிக்கை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது வந்த பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.

மதுரையில் போக்குவரத்துத்துறை பணியாளர் வேலை நிறுத்தம்.

* 527 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் போக்குவரத்துத்துறைப் பணியாளர்கள் 1969 ஜூலை 17-ஆம் நாள் அளவில் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

[1970 மார்ச் 24

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) மதுரையி லுள்ள தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து துறைப் பணியாளர்கள் 1969 ஜூலைத் திங்கள் 18-ஆம் நாளன்று காலை வண்டிகளை எடுக்க மறுத்தனர். அன்று பகல் 11-15 மணியளவில் போக்குவரத்துப் பணி மீண்டும் தொடங்கியது.

(இ) விருதுநகர், காவல்துறை சப்-இன்ஸ்பெக்டரின் தூண்டு தலால் நால்வர் விருதுநகரிலுள்ள காலம் குறிப்போர் (

) ஒருவரை 17—7—1969 அன்று இரவு தாக்கிய காரணத் மதுரை வட்டாரப் பணியாளர்கள் பரபரப்படைந்தனர்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, இந்த அரசு போக்குவரத்துத்துறை பணியாளர்கள் தங்களது குறைந்தபட்ச கோரிக்கையைக் கூட அரசாங்கம் ஏற்கவில்லை என்ற காரணம் காட்டி அரசாங்கத்திற்கு ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார் களா ? ஆம் எனில் எந்தத் தேதி ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அப்படிப்பட்ட குறிப்பு இங்கே இல்லை.

**திரு. சி. கோவிந்தராஜன்:** மதுரையில் இருந்து விருது நகருக்குச் செல்ல இருந்த பஸ் ஒன்றில் ஏற்கனவே ரிசர்வ் செய்யப்பட்ட இடம் ஒன்றை போலீஸ் துறையாளர் ஒருவருக்குக் கொடுக்கச் சொல்ல, அதற்குச் சம்மதிக்காத காரணத்தினால் சப்-இஸ்பெக்டர் மருதையா என்பவர் செக்கிங் இஸ்பெக்டரை அடித்ததாகப் புகார் சொல்லப்பட்டதே, அந்த சப்-இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அந்தக் காரணம் காட்டிதான் போக்குவரத்துத்துறை பணியாளர்கள் பஸ்களை எடுக்க மறுத்தனர். அந்த சப்-இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். ஆனால் குற்றம் நிரூபிக்கப்படவில்லை.

**திரு. கே. பி. எஸ். மணி:** சாதாரண சிறு விஷயங்கள் நடந் தாலும் கூட உடனடியாக அரசாங்கத்திற்கும், பொதுமக்களுக்கும், இடைஞ்சல் ஏற்படக்கூடிய வகையில் வேலைநிறுத்தல் ஒரு வியாதி யாகப் பரவிக்கொண்டிருக்கிறதே, அதைத் தடுக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** வியாதிக்கு நல்ல மருந்து கொடுத்தால் தீர்ந்துவிடும்.

தெற்கு மாங்குடியிலுள்ள ஒன்றியப்பள்ளி கட்டடம்

*528 வினு—திரு. எஸ். சிவசுப்ரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, குமராட்சி ஊராட்சி ஒன்றியத் தைச் சேர்ந்த தெற்கு மாங்குடி பஞ்சாயத்தில், யூனியன் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு எந்த தேதியில், யூனியனில் தீர்மானம் போடப்பட்டது?



1970 மார்ச் 24]

(இ) எஸ்டிமேட் தொகை எவ்வளவு?

(உ) பள்ளிக் கட்டடம் எப்போது கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) 27—7—1966.

(இ) ரூபாய் 9,000.

(உ) விரைவில் கட்டி முடிக்கப்படும்.

**திரு. எஸ். சிவசுப்ரமணியன்:** தலைவர் அவர்களே, இந்தத் தேதி நிர்ணயம் செய்யப்பட்டும் கூட இவ்வளவு கால தாமதத்திற்கு என்ன காரணம்? இந்த யூனியன் கட்டிடம் அரிசனத் தெருவைத் தொட்டுக்கொண்டிருக்கிறது என்று ஆட்சேபித்தார்களா ? அல்லது, அந்தப் பள்ளிக்கூட கட்டிடம் அரிசனத் தெருவைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று ஆட்சேபித்தார்களா ? அந்த ஆட்சேபனைகளின் காரணமாகத்தான் இந்த வேலை நடைபெற வில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** மாண்புமிகு உறுப்பினர் ஏனுல் காலதாமதம் ஏற்பட்டது என்று கேட்டுவிட்டு அவர்களே விளக்கமும் சொன்னார்கள். அரிசனத் தெருவை தொட்டுக் கொண்டிருக்கிறது என்பதாக ஆட்சேபணை எழுப்பப்பட்டதாகத் தெரியவில்லை. இப்போது பள்ளிக்கூடம் நடந்துகொண்டிருக்கிற இடத்திலேயே கட்டப்பட வேண்டும் என்பதாக தொகுதி உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் மூலமாக குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பம் கொடுத்தார்கள். அதுபற்றி ஒன்றியத்தின் மூலமாக மாங்குடி பஞ்சாயத்து கருத்து கேட்கப்பட்டது. இதுவரை பதில் வரவில்லை. வந்தவுடன் ஊராட்சி ஒன்றியத்தையும் கலந்துகொண்டு முடிவு எடுக்கலாம். அந்த வகையில மாண்புமிகு உறுப்பினரும் ஒத்துழைக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) நடைமுறைக் கேள்வி.

### அதிக வினுக்களுக்கு விடையளிக்காமல் இருப்பது குறித்து

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார் ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் 1,600-க்கும் அதிகமாகக் கேள்விகள் கொடுத்திருக் கிறேன். அதுபற்றி அறையில் கேட்கச் சொன்னார்கள். கேட்டு விட்டேன். அவையில் கேட்கச் சொன்னார்கள் கேட்டுவிட்டேன். 225 கேள்விகளுக்கே பதில் சொல்லப்பட்டிருக்கின்றன. வருடம் 3 ஆகியும் பாக்கிக் கேள்விகள் என்ன ஆயிற்று ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்,** இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. திரு. கோதண்டராமன் அவர்கள் ஏற்கனவே இந்த முறை வீட்டை ஒரு முறை இந்த அவையிலேயே எடுத்துச் சொல்லி,

நான் அதற்கான விளக்கத்தை இந்த அவையிலேயே கொடுத்திருக்கிறேன். அறையில் கூட இல்லை. அவையிலும் கேட்டேன், அறையிலும் கேட்டேன், ஒன்றும் நடக்கவில்லை என்று சொல்வது உண்மையான குற்றச்சாட்டாகாது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால் நான் கேள்வி கொடுத்து எத்தனையோ வருடங்கள் ஆகியும் அவற்றுக்குப் பதில் இன்னமும் கூறப்படவில்லை என்றால் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோதண்டராமன் அவர்கள் உட்காரவேண்டும். இது பாயிண்ட் ஆப் ஆர்டரில் வராது. அதைப்பற்றிக் கேட்க இது இடமும் இல்லை. "உங்களுடைய இலாக்காவில் இருந்து வினாக்களுக்கு விடை வரவேண்டியிருக்கிறது. விடைகளை அருள்கூர்ந்து சிக்கிரம் அனுப்புங்கள்" என்று நான் அமைச்சர்களுக்கு எல்லாம் கடிதம் எழுதியிருக்கிறேன் என்று இந்த அவையிலேயே சொல்லியிருக்கிறேன். கோதண்டராமன் ஒருவருக்குத்தான் கேள்வி போட உரிமை இருக்கிறது என்றல்ல. எல்லா உறுப்பினர்களுக்கும் கேள்வி போட உரிமை இருக்கிறது. கடந்த காலத்தில் அதிகமாகக் கேள்வி போட்டவர் திரு. கோதண்டராமன் என்கிற நிலை இப்போது இல்லையே என்கிற வருத்தம் அவருக்கு இருக்கலாம். அதற்காக அதை பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புவது சரியல்ல. அது பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகாது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன். நானே கேள்வி போட வேண்டும் என்கிற நிலை இல்லை. நான் கொடுத்திருக்கிற கேள்விகளுக்கே பதில் 3 ஆண்டுகள் ஆகியும் வரவில்லை என்று சொன்னால் வேண்டுமென்றே நான் கொடுத்திருக்கிற . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு கோதண்டராமன் அவர்கள் உட்காரவேண்டும். நான் ஏற்கனவே தெளிவாக காரண காரியங்களை இந்த அவையில் சொல்லியிருக்கிறேன். இலாக்காக்களில் இருந்து பதில்கள் வந்து நான் இந்தப் பேரவைக்குக் கொண்டுவரவில்லை என்றால் என்மீது குற்றம் சாட்டலாம். விடை வந்து நான் வைக்காமல் இல்லை. இன்னும் எனக்குள்ள சங்கடமான நிலை என்னவென்றால் தேடித் தேடிப் பார்த்து ஒரு நாளைக்கு 20 கேள்விகள் வைக்கவேண்டுமே என்று விடைகளைச் சேர்த்து எடுக்க வேண்டியிருக்கிறது. திரு. கோதண்டராமன் அவர்கள் பேசியதை இங்கே வீற்றிருக்கிற அமைச்சர்கள் எல்லோரும் கேட்டுக் கொண்டிருப்பதால் அவரவர்களுடைய இலாக்காக்களில் இருந்து விடைகளை சீக்கிரமே அனுப்பிவைக்க இது துணைபுரியும் என்பதால் நான் திரு. கோதண்டராமனுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, திரு. சித்தன் அவர்கள் ஒரு உரிமைப்பிரச்னை கொண்டுவருவார்கள்.





## (3) அவையுரிமைக் கேள்வி.

## 'மாலைமுரசு' நாளிதழில் வந்துள்ள பேரவை நடவடிக்கைகளின் சில பகுதிகள் குறித்து.

* THIRU N. S. V. CHITHAN : Mr. Speaker, Sir, I have given notice of the following privilege motion against the Tamil daily, '*Malai Murasu*' :—

It may be recalled that on 12th March 1970, the Hon. Speaker stated on the floor of this House that it is within his competence to direct the press to publish the proceedings of the House without distortion and imputing motives. The Hon. Speaker came to this conclusion as the Hon. Speaker referred to the publication of the proceedings of the House in which the hon. Member Thiru Chithan's allegations against the Hon. the Chief Minister, Thiru M. Karunanidhi and the statement under rule 82 by the Hon. the Chief Minister was reported in the press. Thus the Hon. Speaker has given the guidelines that in publishing the proceedings relating to allegations and rebuttals there should not be any distortion or imputation of motives.

I refer to a news item in '*Malai Murasu*', dated 18th March 1970 of the proceedings of the House, in reporting the proceedings of the House relating to the allegations of the Hon. the Leader of the Opposition, Thiru P. G. Karuthiruman against the Hon. Thiru S. B. Adityan, Minister of Co-operation the demand of the Hon. Speaker of the Hon. the Leader of Opposition to substantiate his allegations against the Hon. Thiru S. B. Adityan, the statement of the Hon. the Leader of the Opposition under rule 81 on 17th March 1970 and the subsequent ruling of the Hon. Speaker holding that the allegations by the Hon. the Leader of the Opposition against Thiru S. B. Adityan, as "not proved". The report appearing in the 'Malai Murasu', dated 18th March 1970 gives prominence to the ruling of the Hon. Speaker alone holding the allegations as 'not proved' and the 'warning' given to the Hon. the Leader of the Opposition. The other portions were neither reported or reported insufficiently. Thus the report appearing in the 'Malai Murasu' gives an impression that the performance of the Hon. the Leader of the Opposition in this particular case is not satisfactory. If the reports have appeared covering all the aspects of the subject matter a fair view would have been taken by the readers of the proceedings of the House and newspapers.

Coming so soon after the ruling given by the Hon. Speaker about publishing the proceedings of this House, the publication of such distorted and biased manner, confirms that it is *mala fide* and done with a view to pull down the image of the Hon. the Leader of the Opposition.

Thus a *prima facie* case has been made out in this case and the matter may kindly be referred to a Committee of Privileges. Till the Committee of Privileges sends its report to this House for consideration, the press pass issued to the 'Malai Murasu' may kindly be kept suspended.

[1970 மார்ச் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
சித்தன் அவர்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
இந்த அவையிலே எழுப்பிய ஒரு குற்றச்சாட்டைப்பற்றி நான்
அளித்த தீர்ப்பைப் பற்றிக் குறிப்பிட்டு, இதிலே மாலேமுரசு
என்ற செய்தித்தாள் ஒரு பகுதியை மட்டிலும் வெளியிட்டு
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய 'தன்னிலே
விளக்கத்தை வெளியிடாத நிலைமையிலே உரிமைப் பிரச்சனை
எழுந்திருக்கிறது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நான்
பத்திரிகைகளையெல்லாம் பொதுவாகக் கேட்டுக்கொண்டது
இப்படிப்பட்ட நிலைமையிலே இரண்டு தரப்பு நிகழ்ச்சிகளுக்கும்
முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகளை வெளியிடவேண்டுமென்று
கேட்டுக்கொண்டேன். அதோடு பத்திரிகைகளுக்கு உள்ள
உரிமையைப்பற்றியும் இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறேன்.
எப்படி வெளியிடலாம், எப்படி வெளியிடக்கூடாது என்பதற்கு
அவர்களுக்கு உரிமை இருக்கிறது. பேசுகின்ற சொற்பொழிவை
முழுமையாகப் போடவேண்டுமென்று எதிர்பார்ப்பது முறை
யல்ல. சிலருடைய சொற்பொழிவுகளைச் சுருக்கிப் போடுகிறார்கள்;
சிலவற்றில் இன்னார் இன்னாரும் விவாதத்தில் கலந்துக்
கொண்டார்கள் என்றும் போடுகிறார்கள். இதுவெல்லாம் உரிமைப்
பிரச்சனையின் கீழ் வராது. ஆக, வேண்டுமென்றே பேசுகின்ற
பேச்சைக் கூட்டியும் குறைத்தும் அதிலே நோக்கங் கற்பிக்கின்ற
முறையிலே திருத்தி வெளியிடுகின்ற நிலைமை வருமானால் அது
உரிமைப் பிரச்சனையின்கீழ் வரும்.

மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்களுடைய குற்றச்
சாட்டு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய தன்னிலே விளக்கத்
தினை முழுமையாகப் பத்திரிகையில் போடவில்லை, பேரவைத்
தலைவருடைய தீர்ப்பைத்தான் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லி
யிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அளித்த தீர்ப்பைப் போடுகிற
நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதைப் பார்க்கவேண்டும். எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள் தன்னிலை விளக்கம் கொடுத்தார்கள்.
அதைப்பற்றி பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பிலே எந்த
அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்து இருக்கிறார்கள் என்பதைப்
பார்க்கவேண்டும். அதைப்பற்றி பேரவைத் தலைவர் தீர்ப்பிலே
குறிப்பிட்டிருப்பது. "... அதற்குப் பதில் கொடுக்கும் முறையில்
13—3—1970-ம் தேதியன்று எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கடிதத்தைக்
கொடுத்தார். அதைத்தான் இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் படித்தது. அது அறிக்கை அல்ல. இது 81-ம் விதியின்
கீழ் தன்னிலை விளக்கம். அறிக்கை அல்ல. நாம் கேட்டது டாக்கு
மெண்ட் ஆதாரம். கொடுத்திருப்பது தன்னிலை விளக்கம்" இந்த
அளவிற்கு தன்னிலே விளக்கத்தைத்தான் கொடுத்திருக்கிறார்கள்
என்பதை என்னுடைய தீர்ப்பிலே கொடுத்திருக்கிறேன். அந்தப்
பகுதி எந்த அளவிற்குப் பத்திரிகையிலே வெளியாகியிருக்கிறது
என்பதை திரு. சித்தன் அவர்கள் ஆதாரமாக குறிப்பிட்டார்கள்.
அந்தப் பத்திரிகையிலே, "ஆனல் கருத்திருமன் ஒரு தன்னிலே



1970 மார்ச் 24] [பேரவைத் தலைவர்]

அறிக்கை கொடுத்தார். நான் கேட்டது ஆதாரம், கொடுத்திருப்பது
தன்னிலே விளக்கம்" என்று நான் கொடுத்திருக்கின்ற தீர்ப்பின்
பகுதியை அப்படியே கொடுத்து இருக்கிறார்கள். எதிர்க்கட்சித்
தலைவர் தன்னிலே விளக்கமே அளிக்கவில்லை என்று இருந்தால் அது
முறையல்ல. அவர் கூறிய கருத்துக்கள் எல்லாம் அவர் எழுப்பிய
குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக இருக்கமுடியாது என்ற முறையிலே
பேரவைத் தலைவர் அதையெல்லாம் சுட்டிக்காட்டாமல் கொடுத்
திருப்பது டாக்குமெண்ட் அல்ல என்ற நிலைமையில் தீர்ப்புக்
கொடுத்திருக்கின்ற முறையிலே அவர்களும் அதைச் சுட்டிக்காட்டி
யிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அறிக்கையை முழுமை
யாக வெளியிடவில்லை என்ற காரணத்தினலே அவருடைய நிலைமை
எந்தவிதத்திலும் குறைக்கப்படவில்லை, எந்தவிதத்திலேயும்
இழுக்கு ஏற்படவில்லை என்ற கருத்தைக் கூறி இப்படிப்பட்ட
நிலைமையில் இதிலே உரிமைப் பிரச்சனை எழவில்லை என்று
தெரிவித்துக்கொள்கிறேன். ஆனாலும் பத்திரிக்கைகளுக்கு மீண்டும்
நான் கேட்டுக்கொள்வது இப்படிப்பட்ட நிலைமையில் கருத்து
மோதல் வருகின்ற நிலைமையில் இரு தரப்புக்களுக்கும்
முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிடவேண்டும்.
வேண்டுமென்று நோக்கம் கற்பிக்கின்ற முறையிலே கூட்டியும்
குறைத்தும் திருத்தியும் கூறுகின்ற முறையிலே இருக்கக்கூடாது
என்பதைக் கூறிக்கொண்டு இதிலே உரிமைப் பிரச்சனை இல்லை
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வேலுசாமி அவர்கள் ஒரு உரிமைப் பிரச்சனையை எழுப்பி
இருக்கிறார்கள். அதை நான் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

## 4. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

### முதலமைச்சர்கள் மாநாட்டில் வைக்கப்பட்ட திருத்தப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தமிழ் நாடு ஏற்பதற்கு மறுத்துவிட்டது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மார்டின் அவர்களும்
திரு. இராமமூர்த்தி அவர்களும் ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம்
கொடுத்திருக்கிறார்கள். இருவரும் ஒரே கட்சியில் இருந்து
கொடுத்து இருப்பதாலேயும் இரண்டும் ஒரே பொருள்பற்றிக்
கொடுக்கப்பட்டு—இரு வேறு பொருள்பற்றியல்ல—இருப்பதாலும்
எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கலந்துகொண்டு யாராவது
ஒருவர் கொண்டுவரலாம்.

*** திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்
பேரவை விதி 42-ன்கீழ், கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்
துவம் வாய்ந்த விஷயத்தைச் சட்டப் பேரவையின் நடவடிக்கை
களை ஒற்றிவைத்து விவாதிக்குமாறு கோருகிறேன்.

"1970 மார்ச்சுத் திங்கள் 21, 22 ஆகிய நாட்களில் திருத்தப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் டெல்லியில் நடந்த முதல் அமைச்சர்கள் மாநாட்டில் முதல் அமைச்சர்களின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டதும், அதில் தமிழ்நாடு மேற்படி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஏற்பதற்கு மறுத்து விட்டது."

பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மாநிலங்களின் முதலமைச்சர்களின் சம்மதத்தைப் பெறுவதற்காக டெல்லியில் நடந்த முதலமைச்சர்கள் மாநாட்டிலே வைக்கப்பட்டு, அதில் தமிழகத்தின் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அவர்களுடன் நிதியமைச்சராக இருக்கக்கூடிய மதியழகன் அவர்களும் கலந்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால் அந்த நிகழ்ச்சியில் மற்ற மாநிலங்கள் எல்லாம், மராட்டியம் உட்பட எதிர்ப்புத் தெரிவித்தாலும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒப்புதல் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் மராட்டியம் மாத்திரம் கடுமையான எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது என்றாலும், ஒப்புதல் கொடுத்துள்ளது. தமிழகத்தின் சார்பில் முதலமைச்சர் அவர்களும் நிதியமைச்சர் அவர்களும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு மூன்று கோரிக்கைகள் வைத்திருக்கிறோம், அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டால்தான் நாலரைக் கோடித் தமிழ் மக்களின் சார்பாக ஒப்புதல் அளிக்க முடியும் என்று கூறியிருக்கிறார்கள்.

குறிப்பாக, சேலம் உருக்காலைத் திட்டத்தையும், மாநிலங்களுக்குச் சிறப்பு நிதியாக ஒதுக்கப்பட்டுள்ள 175 கோடி ரூபாயில் தமிழகத்திற்கு உரிய பங்கு வேண்டுமென்றும், மற்றும் பஞ்சப் பகுதிகளில் வேலை வாய்ப்பு ஏற்படுத்தக்கூடிய வகையில் ஒதுக்கப்பட்டுள்ள 100 கோடி ரூபாயில் தமிழகம் வஞ்சிக்கப்படுகிறது, அதிலும் உரிய பங்கு வேண்டும் என்றும், ஆக இந்த மூன்று கோரிக்கைகளையும் அங்கே உள்ளவர்கள் ஒப்புக் கொண்ட பிறகு தான் நான்காவது ஐந்தாண்டு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்க முடியும் என்று தமிழக அரசு சார்பில் கூறப்பட்டதாக அறிகிறேன். சேலம் உருக்காலைத் திட்டத்தைப் பற்றி இதற்கு முன்பு இந்த அவையிலே கூறப்பட்ட நேரத்திலே பச்சைக் கொடி காட்டப்பட்டுவிட்டது, என்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சப்ஜெக்ட் மேட்டருக்குப் போங்கள்.

THIRU T. MARTIN : This is a matter affecting the entire State. I am on the subject matter. I am not transgressing the boundary. I am within the boundary. I will finish quickly. Because of interruption I will have to give explanation. It takes time. Have I ever crossed the boundary?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதன் முடிவிற்கே போய் விடுகின்றீர்களே.





T. MARTIN : I am now on the point. பச்சைக் கொடி காட்டப்பட்டது என்று சொன்னதைப் பற்றி பத்திரிகை நிருபர்கள் முதலமைச்சர் அவர்களிடம் கேட்ட நேரத்தில், 'பச்சைக் கொடி காட்டப்பட்டது ; ஆனால் எஞ்சின் ஓடவில்லை ; எஞ்சினிலே கோளாறு அல்லது ஓட்டுபவர்களிடம் கோளாறு ?' என்று தெரிவித்ததாகவும் பத்திரிகையில் வந்திருக்கிறது. இதைப் பற்றி நாலரைக் கோடித் தமிழ் மக்களும் இந்த மன்றத்தின் மூலமாக அறிய விரும்புவது எல்லாம் சேலம் உருக்காலைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டார்களா இல்லையா என்பது ஒன்று. இரண்டாவது, சிறப்பு நிதி 175 கோடி ரூபாயில் நம்முடைய அரசின் சார்பாகக் கேட்ட தொகை எவ்வளவு? அவர்கள் கொடுக்க முன்வந்த தொகை எவ்வளவு? அதற்கு அடுத்தபடியாக, பஞ்ச நிவாரண வேலைகளுக்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதில் நம்முடைய மாநிலத்தின் சார்பாகக் கேட்ட தொகை எவ்வளவு ? ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எப்படி இந்த அவையின் நிகழ்ச்சியை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று மட்டும் கூற வேண்டுமே தவிர, இவர்கள் கேட்டார்களா, அவர்கள் கொடுத்தார்களா, கொடுத்தது எவ்வளவு என்பதெல்லாம் அடிப்படையிலே தேவையில்லாதது. நான் இதைப் பற்றிச் சுட்டிக் காட்டினால் 'அதிலேதான் இருக்கிறேன்' என்று சொல்கிறீர்கள். நீங்கள் எல்லாம் வக்கீலுக்கு படித்தவர்கள், அதிலேதான் இருப்பீர்கள் என்று பார்த்தால் எங்கேயோ போய்விடுகின்றீர்கள்.

**திரு. டி. மார்டின் :** இது ஒரு முக்கியமான பிரச்சனை, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. நாலரைக் கோடி தமிழ் மக்களும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே என்ன பலன் கிட்டப்போகிறது என்பதை உற்று நோக்கிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் விரிவாக அங்கு நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூற வேண்டுமானால், மக்கள் மத்தியில் எழுந்துள்ள சந்தேகத்தைப் போக்க வேண்டுமானால் இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிப்பது நல்லது என்று கூறி இந்த அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டுகிறேன்.

***மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்டின் அவர்கள் அவசர முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை இங்கு அளித்து அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

டில்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நானும், நிதியமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு அளித்துள்ள கருத்துக்கள் விரிவாகப் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. தமிழ் நாட்டினுடைய தேவைகளை ஒவ்வொரு தேசிய வளர்ச்சிக்

குழுக் கூட்டத்திலும் நாங்கள் வலியுறுத்தத் தவறுவது இல்லை என்பதையும், வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதையும், தேசிய வளர்ச்சிக் குழு கூட்டங்கள் கூடுகிற நேரங்களில் மாத்திரம் அல்லாமல் வேறு நேரங்களிலும் பொறுப்பு வாய்ந்த மத்திய அமைச்சர்களை நேரிலே சந்தித்து வலியுறுத்திக் கேட்டும், கடிதங்கள் மூலமாக வலியுறுத்திக் கேட்டும் தமிழ் நாட்டின் தேவைகளை உணர்த்திக் கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையில்தான் இப்போது 21, 22 ஆகிய நாட்களில் நடை பெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் பிரதமர் அவர்கள் பேசி முடித்த பிறகு விவாதத்தைத் தொடங்கி வைத்தவன் என்ற முறையில் தமிழ்நாட்டினுடைய தேவைகளை நான் குறிப்பிட்டுக் காட்டினேன். தமிழ்நாட்டின் தேவைகள் எவையெவை, என்னென்ன குறிப்பிட்டுக் காட்டப்பட்டன என்பவைகள் எல்லாம் விளக்கமாக இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் அறியத்தக்க வண்ணம் ஏடுகளிலே வந்திருக்கின்றன. பல ஆண்டு காலமாக நாம் இந்த அவையிலும், மத்திய அமைச்சர்களிடத்திலும் எடுத்துச் சொல்லி வருகிற அந்தக் கோரிக்கைகளைத்தான் மீண்டும் மீண்டும் எழுப்பி வருகிறோம்.

அங்கே நான் என்னுடைய உரையை இறுதியாக முடிக்கிற நேரத்திலே, "சேலம் இரும்பாலையைப் பற்றி இதுவரையில் நீங்கள் பலமுறை வரும், வரும் என்கிற அறிவிப்பைத் தந்தாலும் இந்த வளர்ச்சிக்குழு கூடியிருக்கின்ற இந்தக் கட்டத்திலே கூட அது பற்றி இறுதியான அறிவிப்பைத் தரவில்லை; ஆகவே அந்த அறிவிப்புத் தேவை" என்பதைச் சுட்டிக்காட்டினேன். 175 கோடி ரூபாய் கூடுதல் தொகையாக மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மார்டின் அவர்கள் கேட்டார்கள்—'அதிலே எவ்வளவு தொகை நமக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்?' என்று. 'நீங்கள் எவ்வளவு கேட்டீர்கள்?' என்றும் கேட்டார்கள். 175 கோடி ரூபாய் கூடுதல் தொகையை ஒன்பது மாநிலங்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலம் அதிலே அறவே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஏதாவது ஒதுக்கினால் தானே, இவ்வளவு ஒதுக்கினார்கள், இவ்வளவு அதிகத் தொகை தேவை என்று சொல்ல முடியும். ஆகவே, அடிப்படைக் குறைகளை ஆராய்ந்து இந்த மாநிலத்திற்கு இவ்வளவு ஒதுக்க வேண்டுமென்று கேட்பதை விட, 175 கோடி ரூபாயில் எதுவும் இல்லையென்று புறக்கணிக்கப்பட்டிருக்கும் நிலையைச் சுட்டிக்காட்டி ஏதாவது ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களேயானால், அதற்குப் பிறகு இவ்வளவு தொகையை ஒதுக்க வேண்டுமென்ற வாதத்தில் இறங்குவது பொருத்தமுடையதாக இருக்கும்.

வறட்சிப் பணிகள் என்ற பெயரால் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த இந்த ஆண்டு 25 கோடி ரூபாயும், வருகிற நான்கு ஆண்டுகளுக்கு 100 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.



அதிலே எவ்வளவு ஒதுக்கப்பட்டது, நீங்கள் கேட்டது எவ்வளவு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதிலும் அவர்கள் நம்முடைய தமிழ் மாநிலத்திற்கு, தமிழ் நாட்டிற்கு எதுவும் ஒதுக்கவில்லை. ஆகவேதான் கடைசி நிபந்தனைகளாக வைத்தோம்—சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கான அறிவிப்புத் தேவை; 175 கோடி ரூபாயில் தமிழகம் வஞ்சிக்கப்படுகிறது, நிவாரணம் தேவை; 100 கோடி ரூபாயிலும், வேலை வாய்ப்புக்காக ஒதுக்கப்பட்ட பணத்திலும் தமிழகம் ஏமாற்றப்பட்டிருக்கிறது; அதற்கும் பதில் தேவை. இந்தப் பதில்கள் அளிக்கப்படாத வரையில் நான்கு கோடி தமிழ் மக்களின் சார்பில் இந்தத் திட்டத்திற்கான ஒப்புதலை, சம்மதத்தைத் தரத் தயாராக இல்லை என்று எடுத்து சொன்னேன். மறுநாள் பேசிய நம்முடைய நிதியமைச்சர் அவர்களும் பிரதமர் அவர்கள் உரையில் இதைக் கோடிட்டுக் காட்டுவார்கள் என்று காத்திருந்து, கோடிட்டுக்காட்டாத காரணத்தால் இறுதியாக, முதல்நாள் முதலமைச்சர் எடுத்துச் சொன்ன நிபந்தனைகள் என்னவாயிற்று. அதற்கு என்ன பதில் என்று கேட்டார்கள். அதற்கும் அங்கே பதில் அளிக்கப்படவில்லை. இந்த வகையிலே தமிழகம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குச் சம்மதம் தரவில்லை என்ற காரணத்தால் அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள எதையும் பெற்றுக் கொள்ளப் போவதில்லையென்று அர்த்தமல்ல. நம்முடைய உணர்ச்சிகளைக் காட்டியிருக்கிறோம். நம்முடைய உணர்ச்சியை இந்த வகையில் தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் காட்டியிருக்கிறோமே அல்லாமல் திட்டத்தையே ஏற்றுக் கொள்ளப் போவதில்லை, திட்டமே தேவையில்லை என்ற நிலைக்குச் செல்லவில்லை. வருவதை விடுவதாக இல்லை. அதே நேரத்தில் தமிழர்களின் உணர்ச்சியை எடுத்துக் காட்டும் வகையில் நீண்ட நெடும் காலமாக சேலம் உருக்காலைத் திட்டம் வரும் வரும் என்று அறிவிக்கப்பட்டும் இன்னும் வாராமல் இருக்க என்ன காரணம், அதைப் பற்றி அறிவித்தாக வேண்டுமென்ற அடிப்படையில்தான் நான், நிதியமைச்சர் இருவரும் பேசுகின்ற நேரத்தில் இந்த விஷயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறோமே தவிர வேறு அல்ல.

தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் கொடுக்கப்பட்ட அறிவிப்பில் கூட சேலத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அதிலே—

Advance action for additional steel Capacity in the Fifth Plan. என்று போட்டு அதற்காக 110 கோடி ரூபாய் ரிவைஸ்டு அவுட்லே என்ற அளவில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அடிஷனல் அவுட்லே என்ற அளவில் 90 கோடி ரூபாய் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் என்.எம்.டி.சி. என்பதற்காக கூடர்முக்—இதைக் குதிர்முக், குதிரை மூக்கு என்றெல்லாம் சொல்கிறார்கள்—என்று பெயர் குறிப்பிட்டு 15 கோடி ரூபாயில் பிராஜக்ட் ஏற்படுத்துவது பற்றிக் குறிப்பிடப்

பட்டிருக்கிறது. ஆகவேதான் சேலம் என் குறிப்பிடப்படவில்லை என்பதை அழுத்தந்திருத்தமாகக் கேட்டிருக்கிறோம். அவை தமிழர்களின் உணர்ச்சியைப் பிரதிபலிக்க எடுத்துச் சொல்லப் பட்ட வார்த்தைகள் ஆகும். இந்த உணர்ச்சிக்கு மத்திய அரசு மதிப்பு அளிக்கும் என்று நம்புகிறேன். மதிப்பளித்து ஆவன செய்ய வேண்டும்; செய்வதற்கு முன்வருவார்கள் என்று நம்பு கிறேன். அந்த நம்பிக்கை வீண் போகாது என்று கருதுகிறேன். அந்த நம்பிக்கை நாசமாகுமானால் இந்தச் சட்டமன்றத்தில் இருக்கும் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து அதற்குப் பிறகு என்ன செய்வது என்பதை யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த விஷயத்தை இந்த அளவுக்கு நிறுத்திக் கொள்ளுவது நல்லது என்ற அளவில் திரு. மார்டின் அவர்கள் கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் தேவையில்லை என்ற கருத்தைக் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்பு தீர்மானங்களுக்குத் தேவை இல்லை என்று கருதுகிற காரணத்தால் நான் அனுமதி தர மறுக்கிறேன்.

## (5) 1970-71-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 9-ஏ. 1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" நிதிக் கோரிக்கை எண் 9-ஏ-1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்துசமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 40,83,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும். "

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, கோயில், மடம், தருமஸ்தாபன நிலங்களில் மொத்தக் குத்தகை சாகுபடி செய்யும் இடைத்தரகர்களை நீக்கி நேரடியாக நிலத்தில் உழும் விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வீதம் நிலம் கொடுக்கவேண்டுமென்பது பற்றி விவாதிக்க—" நிதிக் கோரிக்கை எண் 9-ஏ—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 40,83,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழி கிறேன்.



**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, நம் மாநிலத்திலுள்ள கோவில்களுக்கு தருமகர்த்தாக்கள் நியமனம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 9-ஏ—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 40,83,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU N. KASIRAMAN : To discuss the principle and policy to be followed while appointing trustees for the temples in Tamil Nadu, I move the following cut motion :—

"That the allotment of Rs. 40,83,900 under Demand 9A—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959, be reduced by Rs. 100.".

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகிகள், பரம்பரை அறக்காவலர்கள் கண் காணிக்கும் கோவில் நிதிகள் தவறாக கையாளப்படுவதை சரிவர கவனம் செலுத்தாததைக் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 9-ஏ—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 40,83,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வருகின்றன. எவ்வளவு நேரம் வைத்துக்கொள்ளலாம்?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப் டு 12.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, இது பற்றிய கொள்கை போன்றவற்றை எல்லாம் அறிக்கை * மூலம் வைத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதன் மேல் தங்கள் அலோசனைகளைச் சொல்லிய பிறகு நான் கடைசியில் அவற்றிற்கு பதில் அளிக்கலாம் என்று கருதுகிறேன்.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, இம்மன்றத்தின் முன்பாக வைக்கப்பட்டுள்ள இந்து அறநிலைய பாதுகாப்பு இலாகா சம்பந்தமான மானியக் கோரிக்கை மீது என் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்து அறநிலைய இலாகாவினர் தமிழ்நாட்டிலுள்ள பல கோவில் களின் நிர்வாகத்தை மேற்கொண்டு அவற்றை மேற்பார்வை பார்த்து வருகிறார்கள். கோவில்களில் நிர்வாகம் நல்லமுறையில் நன்றாக நடைபெறவேண்டுமென்பதற்காகத்தான் வெகு காலம் தொட்டு தர்மகர்த்தாக்களை ஏற்படுத்தும் பழக்கம் இருந்து கொண்டு வருகிறது. இப்படிப்பட்ட தர்மகர்த்தாக்களை அரசு

---

* மூன்றாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

நியமிக்கிற வகையைப் பார்த்தால் சரியானவர்கள் தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்படவில்லை என்ற எண்ணம் ஏற்படும் வகையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு சிலயிடங்களில் அம்மாதிரி நடந்த சம்பவங்களும் வருகிறது. கோவில்களின் நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்கள் கோவில் நிலங்களில் தென்னந்தோப்புகள் போன்ற இனங்கள் போட்டிருப்பதை களைந்து எறிந்துவிட்டு தங்களுக்கு சாதகமான முறையில் தங்களுக்குச் சொந்தமான முறையில் அந்த நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்கள் பலர் இன்று கோவில் தர்மகர்த்தாக்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்வதானது கோவில் நிர்வாகத்தில் நல்ல எண்ணம் உள்ளவர்களை, அதில் நம்பிக்கை உள்ளவர்களை நிர்வாகஸ்தர்களாக நியமிப்பதாகுமா என்பதை இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு மறு பரிசீலனை செய்து பார்க்கவேண்டியதொரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

கோவில் தர்மகர்த்தாவாக ஒருவர் எப்போது நியமிக்கப்பட்டு விட்டாரோ அவர்களுக்கு கோவில் வழிபாட்டு முறைகளில் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பது ஒரு விஷயம். அவர்கள் கோவில் தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்டு விட்டால் அந்தக் கோவில் சொத்துக்களை தம் சொத்துக்களை எப்படி பராமரிப்பார்களோ—அவர்கள் அதை தன் சொத்து என்று நினைத்துக் கொள்ளக்கூடாது—அப்படி அந்த உணர்ச்சியுடன் அந்தச் சொத்துக்களை பராமரிக்கும் பொறுப்புணர்ச்சி, தகுதி உடையவர்களையே பார்த்து தர்மகர்த்தாக்களாக நியமிக்க வேண்டும். பலயிடங்களில் நியமிக்கப்பட்டுள்ள தர்மகர்த்தாக்களின் நடவடிக்கைகளைப் பார்த்தால் கோவில்களின் சொத்துக்களை எந்தளவிற்கு தங்கள் சொத்துக்களாக மாற்றிக்கொள்ள முடியுமோ அந்த அளவிற்கு உள்ளவர்கள் பலயிடங்களில் இருப்பதைப் பார்த்து வருகிறோம். அதைக் கண்டு அந்தந்தப் பிராந்தியங்களில் உள்ள மக்கள் மனக்கொதிப்பு அடைந்திருக்கிறார்கள் என்பதை இந்த அரசுக்கு எடுத்துச் சொல்வதற்காகத்தான் இதைக் கூறுகிறேன்.

கோவில் சொத்துக்கள், கோவில் கணக்கு வழக்குகள் நல்ல முறையில் பராமரிக்கப்படவேண்டும். அந்தக் கணக்கு வழக்குகள் எல்லாம் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட வேண்டும். இப்போது அதற்குள்ள முறை லோக்கல் பண்ட் ஆடிட்டை சேர்ந்தவர்கள்தான் கோவில்களின் கணக்கு வழக்குகளை எல்லாம் ஆடிட் செய்து வருகிறார்கள். நான் கேள்விப்படுவது என்னவென்றால் இந்த முறையை மாற்றி, அதாவது லோக்கல் பண்ட் ஆடிட் முறையை மாற்றி டிப்பார்ட்மென்டிலேயே அந்த ஆடிட் முறையைக் கொண்டுவரவேண்டுமென்று எண்ணம் அரசுக்கு இருப்பதாகவும் அதற்குத் தகுந்தமுறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் எனக்கு தகவல் கிடைத்துள்ளது.



அது நல்லமுறை அல்ல. டிபார்ட்மென்டிலிருந்தே ஆடிட் செய்வது என்றால் எவ்வளவுதான் பிசகு நேர்ந்தாலும் தங்கள் கீழ் உள்ள அதிகாரிகள் பிசகு செய்தால் மேல் உள்ள அதிகாரிகள் அது சரியல்ல, இனிமேல் அப்படிச் செய்யாதே என்ற நோக்கில்தான் நடவடிக்கைகள் எடுப்பார்களே தவிர அந்தத் தவறின் காரணமாக கோவிலுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடு செய்வதற்கான முறையில் நடவடிக்கைகள் எடுக்கும் துணிச்சல், தைரியம் ஏற்பட வழிவகை இருக்காது. ஆகவே லோக்கல் பண்ட் ஆடிட் தணிக்கைசெய்யும் முறையையே கையாள்வது நல்லது. இந்த முறையை விட்டு விடுவது நல்லதல்ல என்பதை நான் அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கோவில் நிலங்கள் பராமரிக்கப்படுவது பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டிலுள்ள பல கோவில்களின் நிலங்கள் பலவகைகளில் கைமாறிப் போயிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் என் பகுதியாகிய கும்பகோணத்தில் ராமசாமி கோவில் என்ற ஒரு கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்கு சொந்தமாக ஒரு கிராமமே இருந்தது. கிட்டத்தட்ட 25 வேலி, 300 ஏக்கர் நிலங்கள் இருந்தன. ஆனால் இப்போதுள்ள நிலையைப் பார்த்தால் வெகு சொல்பமாகத்தான் இருக்கிறது. அக்கோவிலின் தேவைக்கு ஏற்ற அளவிற்குக்கூட உணவு தானிய உற்பத்தி செய்ய முடியாத அளவிற்கு இருக்கிறது. காரணம், வெகு காலத்திற்கு முன்பிருந்தே அந்தக் கோவில் நிலங்கள் பல பேர்களின் கைகளுக்கு மாறியிருக்கிறது. அப்படி பல கோவில்களின் நிலங்கள் கைமாறிப் போயிருக்கின்றன. அந்த நிலங்களை எல்லாம் அரசு முயற்சி எடுத்து கோவில்களுக்குச் சேரும்படிச் செய்து அந்தச் சொத்துக்கள் நல்லமுறையில் பராமரிக்கப்படும் விதத்தில் வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்யும்போது ஒவ்வொரு கோவிலுக்கும் அதிகப்படியான நிலங்கள் வந்து சேரும் ஒரு நிலை ஏற்படும். அந்த நிலங்களை எல்லாம் கன்ஸாலிடேட் செய்து அந்த அந்தக் கோவில்களுக்கு வரும்போது, பிறகு ஒரு கோவில் எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று இந்த சபையில் நிர்ணயித்து முடிவு எடுக்கிறோமோ அந்த அளவிற்குள்ள நிலத்தை அந்தக் கோவில் தர்மகர்த்தா அல்லது நிர்வாக அதிகாரியிடம் கொடுத்து அந்த நிலங்களை ஒரு பண்ணை போல் வைத்து கோவிலுக்கு வேண்டிய உணவு தானிய உற்பத்தியைச் செய்து கொண்டு மீதியுள்ள நிலங்களை அங்குள்ள நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுத்து இப்போது ரெஜிஸ்ட்ரார் ஆபீசில் நிலத்திற்கு என்ன மார்க்கெட் வால்யூ என்று வைத்திருக்கிறார்களோ அத்தொகையை நஷ்டயீடாக கோவிலுக்கு கொடுத்துவிட்டால் கோவிலுக்கு பணமும் வரும். அத்துடன் எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் இன்று அந்நிலங்களை அனுபவித்து கொண்டு இருப்பதற்கும் ஒரு முடிவு கட்டும் நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவில் நிலங்கள், கோவிலைச் சுற்றியுள்ள புறம்போக்கு நிலங்கள் இவற்றையெல்லாம் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. நிலம் இல்லாதவர்களுக்கு நிலங்களை பட்டா செய்து கொடுப்பதை நான் வரவேற்கிறேன். அது நல்லதொரு முயற்சி. அப்படி போதிய நிலம் கொடுத்தால் அதில் பாடுபட அவர்களுக்கு ஒரு உற்சாகமும் ஏற்படும். ஆனால் அப்படிச் செய்வதில் கவனத்தோடு செய்யவேண்டும். கண்ட முறையில் நிலங்களை பட்டா செய்து கொடுக்கக்கூடாது. அப்படிச் செய்தால் அது கோவில் நிர்வாகத்தைப் பாதிக்கும், கோவில் வழிபாடு முறைகளைப் பாதிக்கும். மயிலத்தில் சுப்பிரமணிய சுவாமி கோவிலைச் சுற்றி புறம்போக்கு நிலங்கள் இருக்கிறது. அந்த நிலங்கள் பார்ப்பதற்கு காலியாக இருப்பதாகத் தோன்றும். ஆனால் கார்த்திகை உற்சவம் நடக்கும்போது, பங்குனி உத்தரம் உற்சவம் நடக்கும்போது ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு கூடுகிறார்கள். அவர்கள் வந்து தங்குவதற்கும், அவர்களின் உபயோகத்திற்காகவும், கடைகள் வைத்து நடத்துவதற்கும், சிறு சிறு கடைகள்வைப்பது, சந்தைகள் வைத்து நடத்துவது போன்றவற்றிற்கும் அந்தப் புறம்போக்கு நிலங்கள் பயன்பட்டு வருகின்றன. இப்போது அந்த நிலங்களை நிலம் அற்றவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்ற ஒரு முயற்சி இருப்பதாக தெரிகிறது. அப்படிச் செய்தால் உற்சவ காலங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் எங்கே தங்குவார்கள், எங்கே ஒதுங்க முடியும்? அவர்களுடைய உபயோகத்திற்காகவும், தங்களுடைய பொருளாதாரத்தை முன்னேற்றம் செய்து கொள்ள சிறு கடைகளை வைத்து நடத்தும் வியாபாரிகள் வியாபாரம் செய்யவும், சந்தைக் கடைகள் போட்டுக் கொள்ளவும் எங்கே இடம் கிடைக்கும்? ஊருக்கு ஒதுக்குப்புறத்தில், கோயிலுக்கும்
மு.ப. 10-30 உபயோகமில்லாமல் இருக்கும் நிலங்களைப் பட்டா செய்து கொடுத்தால் நல்லமுறையில் ஏழை மக்களுக்கு உதவி செய்தவர்களாவோம். உபயோகப்படும் நிலங்களை அனாவசியமாகக் கிடக்காமல் செய்தவர்களாவோம் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சமீபத்திலே கோயில்களுக்கெல்லாம் ஒரு உத்தரவு வந்தது, பம்பு செட்டுகள் வாங்க வேண்டுமென்று. அநேகமாக முக்கால்வாசிக் கோயில்களில் பண்ணையோ, நிலச் சாகுபடியோ வைத்துக்கொள்ளவில்லை. அப்படியிருக்கும்பொழுது பம்ப செட்டு வாங்க வேண்டுமென்று உத்தரவு போடவேண்டிய அவசியம் என்ன? பம்பு செட்டுகள் எங்கு உபயோகப்பட்டிருக்கின்றன? அவைகளெல்லாம் பல கோயில்களில் உபயோகப்படாமல் ஐடிலாக இருக்கின்றன. இவைகளையெல்லாம் கவனித்து நல்லமுறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாம் மதச் சார்பற்ற சர்க்கார் என்று சொல்லிக் கொள்ளுகின்றோம். இந்துக் கோயில்களிலே தடையில்லாமல் எல்லா மதத்தினரும் நுழைய வேண்டுமென்று அதற்குத் தகுந்த உத்தரவை



அரசினர் பிறப்பித்திருக்கிறார்கள். ஆண்டவன் சந்நிதானத்தில் யாவரும் சமம் என்ற கொள்கையை வரவேற்கிறேன். ஆனால் அதைச் செய்யும்பொழுது, குனியக் குனியக் கொட்டுவதைப் போல், இந்து சமயச் சட்டத்தைத் திருத்துவதில் நாட்டம் கொள்கிறது. ஆண்டவன் சந்நிதானத்தில் ஆண் பாலரும், பெண் பாலரும் எந்த மதமாகயிருந்தாலும் தங்கு தடையில்லாமல் அவர்கள் செல்ல துணிவோடு இந்த அரசாங்கம் முன்வந்தால் நாட்டு மக்கள் எல்லோராலும் போற்றப்படுவார்கள் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பயிற்சி பெற்றவர்கள்தான் கோயில்களிலே அர்ச்சனையிலே ஈடுபட உத்தரவு கொடுக்க வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டிருப்பது நல்ல வகை. இதிலே எதிர்ப்பதற்கு எந்தவிதமான குற்றமும் காண முடியாது. கோயில்களில் வழிபட கட்டுத்திட்டங்கள் இருக்க வேண்டும். கண்டவர்கள் போகக்கூடாது. ஏனென்றால், விலைமதிப்பற்ற பொருள்களும், ஆபரணங்களும் அங்கேயிருக்கின்றன. அங்கே பயிற்சி பெற்றவர்கள் சென்று வழிபாட்டு முறையை நடத்துவது நல்ல காரியமாகும். அப்படிச் செய்தால் வழிபாட்டு முறையில் தவறுகள் வராமல் நல்ல முறையில் காரியம் நடக்கும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கோயில்களில் நிர்வாக அதிகாரிகளாக இருப்பவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். கொடுக்க வேண்டிய சம்பள பாக்கியிலோ, மற்ற இனங்களிலோ எந்த விதமான குறைபாடும் இருக்கக் கூடாது. அச்சுதமங்கலம் என்ற ஊரிலே, ஒரு கோயிலில், வேணு கோபால் என்பவர் இருந்தார். அவருக்கு 2 வருஷ காலமாக சம்பளப் பாக்கியிருக்கிறது. அவர் காலமாகியும் விட்டார். சம்பளப் பாக்கி இன்னும் கொடுக்கப்படவில்லை. இப்படியிருந்தால், அதிகாரிகள் திறமையாக, நன்றாக நடக்கவில்லை என்று புகார் சொல்வதில் என்ன பொருள் இருக்கும். நல்லமுறையில் நடக்க வேண்டுமென்றால் , கொடுக்கப்பட வேண்டிய சம்பளத்தை ஒழுங்காகக் கொடுத்தால் கோயில் நிர்வாகம் நல்லமுறையிலே இருக்கும் என்று கூறிக்கொண்டு, இந்தக் கருத்துக்களைக் கூற அனுமதியளித்தமைக்காக தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இனி பேசுகின்ற உறுப்பினர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

* **திருமதி வி. ப. பழனியம்மாள் :** பேரவைத் தலைவரவர்களே, நாம் சமயச் சார்பற்ற கட்சியினராக இருந்தாலும் நமது நோக்கம் மக்களுடைய எண்ணங்களுக்குத் தடை போடாமல் அவர்களுடைய வழிபாட்டு முறைகளுக்கு உத்தரவாதமளிப்பது என்பதை இந்த மானியக் கோரிக்கைத் தெள்ளென எடுத்துக் காட்டுகிறது. 1967-தேர்தலுக்கு முன்பு திராவிட முன்னேற்றக்

கழகம் ஆட்சிக்கு வந்தால் கோயில்கள் புறக்கணிக்கப்படும், சமய வழிபாடு தடைபடுத்தப்படும் என்று தவருன கருத்து மக்களிடத்தில் எழுப்பப்பட்டிருக்கிறது. ஆனுல் இந்த மானியக் கோரிக்கையைப் பார்ப்பவர்கள் தங்களது ஆருடம் எவ்வாறு தவருனது என்பதைத் தெரிந்து கொள்வார்கள்.

அறநிலையத்துறையில் நமது அரசின் சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். பழங்காலத்தில் கட்டப்பட்டு பாழடைந்த ஆலயங்களைப் புதுப்பிக்கும் பணி இந்த அரசின் பார்வையில் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதை இந்த மானியக் கோரிக்கை காட்டுகிறது. தமிழக அரசால் புதுப்பிக்கப்பட இருக்கின்ற திருவரங்கம் அரங்கநாதர் கோவிலும், காஞ்சி வரதராஜ சுவாமி கோவிலும், தில்லை நடராசர் கோவிலும், திருவில்லிப் புத்தூர் கோவிலும், பழனி கோவிலும் தமிழக அரசு, கோவில்கள் பற்றிக் கொண்டிருக்கின்ற தனிக் கவனத்தைக் காட்டுகின்றன. இதனுல் நாத்திகர்கள் என்று தூற்றப்பட்ட நமது இயக்கம் ஆத்திகர்களும் மதித்துப் போற்றும் அளவுக்குச் சிறப்படைந்துள்ளது.

இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் 10,239 அறநிலையங்கள் இயங்குகின்றன. இவற்றின் மொத்த வருவாய் 4,87,00,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வருவாய் பல துறைகளில் செலவிடப்படுவதை அறிகிறோம். இதற்குப் பதிலாக தமிழக அரசு வேருெரு வகையிலும் ஈடுபடலாம். திருப்பதி கோவிலில் வருகிற வருவாயைக் கொண்டு அங்கு ஒரு பல்கலைக் கழகமே நடத்துகிருர்கள். நம் மாநிலத்தில் அவ்வளவு வருவாய் உள்ள ஆலயங்கள் இல்லையெனினும், ஆலயப் பொது நிதி ஒன்றைத் துவங்கி, அத்தனை ஆலயங்களின் வருவாயை ஒன்ருகத் திரட்டி ஒரு பெரிய பல்கலைக் கழகத்தைத் தமிழகத்தில் துவங்கலாம்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினுயிரம் நாட்டல், பின்னருள் தருமங்கள் யாவும் பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னயாவினும் புண்ணியங்கோடி, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்ற பாரதியின் கருத்தை இலக்காக வைத்து, புதிய பல்கலைக் கழகத்திற்கு கால்கோள் இட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கோவிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழி நிலவுகிறது. இதனுல் தமிழகத்தின் சின்னஞ்சிறு கிராமங்களில் கூட எண்ணிறந்த கோவில்கள் இருக்கின்றன. இவைகளில் பாதிக்குமேல் பாழடைந்து கிடக்கின்றன. நமது அரசு பாழடைந்த கோயில்களைப் புதுப்பிக்கவேண்டும். அவ்வாறு புதுப்பிக்கப்பட முடியாதவைகளை அகற்றவேண்டும். இத்தனை கோயில்கள் தோன்றியதற்குள்ள காரணங்களையும், தோன்றியதனுல் ஏற்பட்ட விளைவுகளையும், இவைகளுக்கு இடையே உள்ள தொடர்





பினையும் பற்றிய ஒரு விரிவான ஆராய்ச்சி செய்து, வரலாற்று நூல் ஒன்றை உலகத்திற்குத் தர, தமிழக அரசு முயற்சிக்க வேண்டுகிறேன்.

தமிழகத்திற்கே உரிய இசைக்கலை நாதஸ்வரம். இன்றைய சென்னை, திருச்சி வானொலி நிலையங்கள் இந்த இசைக்கருவி இல்லா விட்டால் என்றோ அழிந்து போயிருக்கும். இந்தத் தனிப்பெரும் கலை இதுவரை ஒரு இனத்தினரால், எப்படியோ பல இன்னல் களுக்கு இடையில் காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது. இலக்கியங் களில் சிறப்பிக்கப்படுகின்ற யாழ் அழிந்து போய்விட்டதே என்று வருந்துகின்ற நமக்கு நாதஸ்வரம் காப்பாற்றப்பட்டுள்ளது என்பதே ஆறுதல் தருகிறது. இக் கலையைத் தமிழகத்தின் பொதுக் கலையாக ஆக்க வேண்டும். இப்பொழுது ஆலயங்கள் சிறுசிறு அளவில் நாதஸ்வரப் பள்ளிகளை நடத்துகின்றன. இதற்குப் பதி லாக, எல்லா ஆலயங்களின் முயற்சிகளையும் ஒன்ருகத் திரட்டி, பெரிய அளவில் நாதஸ்வரப் பயிற்சியை அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, நமது தமிழகக் கோவில்களில் காணும் கலைகளில் சிறப் புற்றிருப்பது சிற்பக்கலை, ஓவியக்கலை. இந்தச் சிற்பங்களைப் பாது காப்பதுடன், சிற்பக் கலைப் பள்ளிகளை அதிகரித்து அந்தக் கலையைப் பாதுகாக்க வேண்டும். இந்தக் கலைகளை நமது அரசு நல்ல முறையில் கவனிக்காவிட்டால் பழைய கலைகள் விரைவில் அழிந்து விடும். எவ்வாறு சோழன் காலத்தில் ஓவியக் கலை சிறப்புற்றிருந் ததோ, எவ்வாறு பல்லவர் காலத்துச் சிற்பக் கலைகள் வரலாறு களில் அழியாத இடம் பெற்றனவோ அதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கும் காலத்தில் இந்தச் சிற்பக் கலைகளும், ஓவியக் கலைகளும் பாதுகாக்கப்பட தனிக் கவனம் செலுத்த வேண்டும். வரலாற்றுப் புகழ் பெற்ற ஒரு இடம் கிடைக்கும் அளவுக்கு நாம் இவைகளைப் பாதுகாக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

திருவரங்கம் கோவில் நிர்வாகத்தையும், சமயபுரம் கோவில் நிர்வாகத்தையும் தனித்தனியாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. இதனையும் உடனடியாக நமது அரசு நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நமது அரசு தமிழை ஆட்சிமொழியாகச் செய்துள்ளது. பேரூர் போன்ற ஒருசில கோவில்களில்தான் இன்று அழகு தமிழில் அர்ச்சனை செய்கிருர்கள். எல்லா ஆலயங்களிலும் நமது கன்னித் தமிழில் அர்ச்சனை செய்து வழிபட அரசு ஏற்பாடு செய்து தர வேண்டும்.

ஆலய நிலங்கள் விவசாயத்திற்கு விடப்படுகின்ற முறையைப் பற்றியும், கிடைக்கும் வருவாய் வரவு வைக்கப்படுவதைப்பற்றியும் உண்மையான குறைபாடுகள் நீண்ட நாட்களாக மக்களிடம்

நிலைத்திருக்கின்றன. எனவே, இந்த நடைமுறைகளைச் சீரமைத்து, செம்மைப்படுத்த வேண்டும். இதற்காக ஆலய ஆய்வுக் குழு ஒன்றை அரசு அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கின்றேன்.

கோவில்களுக்கு டிரஸ்டிகளைப் போடும்பொழுது கோயில் முன்னேற்றத்தில் அக்கறையுடையவர்களாகவும், பக்தர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் எண்ணம் கொண்டவர்களாகவும் பார்த்துப் போட வேண்டும். தவிர, இந்த நிர்வாகத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையில், பாதி பெண்களை டிரஸ்டிகளாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்று உலகெங்கும் இந்துமதத்தின் பெருமை பரவிக் கொண்டு வருகிறது. வெளிநாட்டவர்கள் நமது கலைகள், கோபுரங்கள், சிற்பங்கள், சிலைகள் ஆகியவற்றின்மீது மோகம் கொண்டிருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் வரவேற்கும் முறையில் நமது அரசு இன்று நமது கோவில்களிலெல்லாம், எல்லோரும் செல்லலாம் என்ற நல்ல உத்தரவை இட்டுள்ளது. இதனால் வெளிநாடுகளில் நமது பெருமை உயரும், அன்னியச் செலாவணியும் அதிக அளவில் கிடைக்கும் என்று கூறி முடித்துக்கொள்ளுகின்றேன்.

* **திரு. ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு** பேரவைத் தலைவரவர்களே, இன்று இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள அறத்துறை மானியம் இந்த ஆண்டில்தான் புதிதாக தனி மான்யமாக வந்துள்ளது. கடந்த ஆண்டில் இப்படிக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டபோது, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உறுதி கொடுத்தார், அடுத்த ஆண்டில் வைக்கப்படுமென்று. அந்த உறுதி மொழியின்படி, தனி மானியமாகக் கொண்டு வந்து அந்த துறை பற்றிய விவாதத்தில் நான் பேசுகின்ற வாய்ப்புத் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கடந்த ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு உறுதி மொழி கொடுத்துள்ளார். அந்த உறுதிமொழி பற்றி இந்த அவைமுன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் ஒன்றும் காணோம். திருப்பதி தேவஸ்தான போர்டிலே ஒரு அங்கத்தினரை நியமிக்க தமிழ் நாட்டுக்கு உரிமை வேண்டும், அதை ஆந்திர அரசுக்கு எழுத முன் வரவேண்டுமென்று நான் கேட்டேன். அப்போது பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படி எழுதுகின்ற அளவுக்கு தான் பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகவும், ஆனால், முடிவு எதுவாகும் என்று தான் சொல்ல முடியாதென்றும் சொன்னார்கள். ஒரு சான்றை அவர்களுக்கு நினைவூட்டுகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் கேரளத்திலிருந்து பிரிந்து தமிழ் நாட்டோடு சேர்ந்தபோது, அந்த மாவட்ட தேவஸ்வம் போர்டில் கேரளத்திலிருந்து ஒரு உறுப்பினர் நியமிக்க உரிமை இருக்க வேண்டுமென்று கேட்டார்கள். அன்றைய சென்னை மாநில அரசு அந்த உரிமையை ஒப்புக் கொண்டது. அந்த மாவட்ட தேவஸ்வம் போர்டில் ஒரு கேரளத்தவர், அவரும் ஒரு மலையாளத்தவராகவே



நியமிக்கப்பட்டு வருகிறார் என்பதை நினைவூட்டுகின்றேன். தமிழ் நாட்டார் மட்டும் ஏன் ஏமாந்தவர்களாகவே இருக்க வேண்டும்? கடந்த ஆண்டில் எனக்குக் கொடுத்த உறுதிமொழி என்ன ஆயிற்று? அறத்துறை அமைச்சரோ முதலமைச்சரோ இதற்குப் பதில் தெரிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இன்னும் ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆந்திரர்கள் எல்லைப் பிரச்னையைத் திரும்பவும் கிளப்பி, தமிழ்நாட்டோடு எல்லைப் பிரச்னை இருப்பதாக ஏகமனதாக ஒரு தீர்மானமே ஆந்திர சட்ட சபையில் நிறைவேற்றி இருக்கிறார்கள். அதற்கு எதிர் நடவடிக்கையாக நாம் இதைக் கிளப்ப வேண்டும்.

கோயில்கள், மடங்கள் ஆகியவைகளுக்குச் சொத்துக்கள் எவ்வளவு இருக்கின்றன என்பதை இந்த அறிக்கையில் குறிப்பிடவில்லை. மொத்த வரவு ரூ. 4 கோடி என்ற அளவோடு நிறுத்தப்பட்டுள்ளது. நிலங்கள் எவ்வளவு என்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. கோயில்கள், மடங்கள் நிர்வாகத்தின் கடந்த ஆண்டு வரவு-செலவு எவ்வளவு என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோயில்கள், மடங்கள் நிர்வாகத்திலுள்ள விலை பட்டிருக்கவேண்டும். குறிப்பாக ரூ. 10,000-க்கு மேற்பட்டவரவு உள்ள கோயில்கள், மடங்கள் ஆகியவற்றின் வரவு-செலவு, சொத்து விவரங்களை அடுத்த ஆண்டிலிருந்து தருவதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்ய வேண்டும். இதிலே அக்கறையுள்ளவர்களும், ஆத்திகத்தில் நம்பிக்கையுடையவர்களும் எதிர்பார்க்கக்கூடிய விவரங்கள் அவை என்று கூறிக் கொள்கிறேன்.

வேலூர் கோட்டையில் வழிபாடு நடத்துவதற்கு உரிமை வேண்டுமென்று அந்த நகர மக்கள் ஏகோபித்து உருவாக்கி வந்த கோரிக்கையை மத்திய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது. அதிலே இந்த மாநில அரசு எந்த அளவிற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர், திருவரங்கம் கோயில்கள் திருப்பணிகள் பற்றி எல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது; அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். எனக்கு முன் பேசிய திருமதி பழனியம்மாள் அவர்கள் சொன்னபடி மதச் சார்பற்ற அரசியல் நடத்தினாலும், தி.மு.க. அரசு பழைய கோயில்களைப் புதுப்பிக்கிறது. கடந்த மூன்றாண்டு கால அனுபவம் தி.மு.க. அரசு வந்தால் கோயில்கள் என்னாகுமோ என்று அஞ்சிய அரசியல் வைதீகர்களுக்கு நல்ல ஆறுதல் அளிக்கும் என்று நான் நம்புகிறேன். புதிய கோயில் கட்டாவிட்டாலும், இருக்கிற கோயில்களைப் புதுப்பிக்க இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகளை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் இடிந்து வீழ்ந்து கொண்டிருக்கிற கங்கைகொண்ட சோழபுரம் கோயிலைக் கட்டுவதற்கு வழியில்லை. ராஜ ராஜேசுவரம் கோயிலை நிர்வகிப்பதற்கு வருவாய் இல்லை. இப்படிப்பட்ட அவல நிலையிலே அந்தக் கோயில்கள் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. அழிந்து போன ஒன்றுதான் நினைவுச் சின்னமாக இருக்க முடியும். அழியாத ஆண்டவனுடைய கோயிலையே நினைவுச் சின்னமாக

மத்திய அரசு எடுத்திருப்பது ஆண்டவனையே அவமதிப்பது ஆகும். இதை உறுதியாக மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி, கங்கை கொண்ட சோழபுரம்-ராஜராஜேசுவரம் கோயில்களை மீட்க வேண்டும். அறத்துறை நிதியிலிருந்து செலவழித்து இவற்றைக் காக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயில்களைப் பற்றி எல்லாம்—அங்கு நடைபெறும் விழாக்களைப் பற்றி எல்லாம் திரைப்படம் எடுத்திருக்கிறது தமிழகஅரசு. அவை இன்னும் வெளியாகவில்லை. சர்வ சமய விழாவாக நடக்கிறது வடலூர் தைப்பூச விழா. சர்வ சமயத்திற்கும் பொதுவாக இருக்கிற அந்த தைப்பூச விழாவை திரைப்படம் எடுக்கவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று தெரியாது. அறத்துறை அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்திலே கருத்துச் செலுத்தி அந்தப் படத்திலே வடலூர் தைப்பூச விழாவையும் சேர்த்து, அதைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று அவரை நான் கேட்டுக் கொள்கிறேன். கோயில் நிர்வாகத்தைப் பற்றிப் பேச எனக்கு இதிலே சிறிது நேரம் தரவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு காசிராமன் அவர்கள் சொன்னார்கள்—அவர் நல்ல சைவர், பிராம்மண வகுப்பைச் சேர்ந்தவர், அவரே சொன்னார்—ஆலயங்களுக்குரிய நிலங்களை எடுத்து நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று. தனியார் நிலங்களுக்கும் அறத்துறை நிலங்களுக்கும் வேற்றுமை காண வேண்டுமென்று நான் முன்பே பட்ஜெட் பொது விவாதத்தின்போது வலியுறுத்தி இருக்கிறேன். அறக் கட்டளைகள் தொடர்பாக, சரியாக நடைபெறும் அளவிற்கு உச்ச வரம்பிலே ஆலயங்கள், மடங்களுக்குத் தொடர்புள்ள நிலங்களைக் கொண்டு வரவேண்டும். அதனைத் தனியாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதை நினைவூட்டுகிறேன். முன் ஒரு சமயம் —அப்போது அறநிலைய அமைச்சராக இருந்த—நாவலர் அவர்கள், கங்கை கொண்ட சோழபுரத்திலோ, தஞ்சையிலோ, "கோயில் சொத்துக்களைப் பலர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அவற்றைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க நான் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன்" என்று சொன்னார்கள். அது மிக மிக உண்மை. அதைப் பற்றி வேண்டுமானால் இன்னும் ஆயிரம் ஆயிரம் சான்றுகள் கொடுக்க நான் சேகரித்து வைத்திருக்கிறேன். அதிலே இன்றையதினம் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்து வெளியார்கள் ஆக்கிரமித்திருக்கக்கூடிய அந்த நிலங்களை மீட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

முன்பெல்லாம் கோயில்கள், மடங்கள், சத்திரங்களிலிருந்து ஒரு செங்கல் தனி நபர் வீட்டில் சேர்ந்து விட்டால் அந்த வீடு உருப்படாது என்று சொல்லுவார்கள். கோயில் பணத்தைச் சாப்பிடுகிறவன் உருப்பட மாட்டான் என்றும் சொல்வார்கள். இப்போது அந்த பணமெல்லாம் பாங்கு செக்காக இருப்பதனாலோ என்னவோ துணிந்து மோசடி செய்கிறார்கள். கடவுள் கருணையுடையவராதலால், தன் சொத்தைக் கவர்வோரை மன்னித்து விடுவார் என்ற துணிவுபோலும். மடங்கள், அறநிலையங்கள் ஆகியவற்றின் நிர்வாகம்பற்றி விசாரிப்பதற்கு தனியாக ஒரு குழு நியமிக்க வேண்டும். சர். சி. பி. ராமசுவாமி ஐயர் குழு என்று ஒன்று முன்னர் மத்திய அரசால் நியமிக்கப்பட்டது. அதுபோல இந்த மாநிலத்திற்கு மட்டும் ஒரு தனிக் குழு அமைத்து, அறநிறுவனங்கள் பற்றிய ஊழல்களை ஆராய்ந்து, அறத்துறையை உண்மையான அறத்துறையாக மாற்றுவதற்கு அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



திருவாசக உரையை ஒவ்வொரு மடமும் வெளியிடுகின்றன. திருக்குறள் உரையை ஒவ்வொரு மடமும் வெளியிடுகின்றன. ஒரே நூலை ஒவ்வொரு மடமும் வெளியிடுவதனால் என்ன பிரயோசனம் என்று எனக்கு விளங்கவில்லை. அறத்துறையின் கீழ் இந்த இலக்கியப் பணிகளை எல்லாம் ஒருங்கிணைத்து, ஒவ்வொரு மடமும் பணத்தை விணடிப்பதை நிறுத்துவதற்கு அரசு முன்வர வேண்டும்.

சைவ சித்தாந்தம், தமிழ்நாட்டிலே—ஏன் இந்தியாவிலேயே தனி சாத்திரம். தமிழ்நாட்டிற்கே உரிய தனி சாத்திரம். ஆகவே அறத்துறையால் நடத்தப்படுகிற கல்லூரிகளில்—குற்றாலத்திலே மாண்புமிகு திரு. சுப்பையா முதலியார் தலைமையில் ரொம்ப நன்றாக நடத்தப்படுகிற பராசக்தி கல்லூரி போன்ற கல்லூரிகளில்—சைவ சித்தாந்தத்தைக் கட்டாய பாடமாக்கினால், அத் துறையிலே மிகச் சிறந்த நூல்கள் தமிழிலே வெளிவர வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். அது கருத்து வேற்றுமைக்குரிய விஷயம். பிற சமயத்தவர் இந்து கோயில்களுக்குள் போவதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. சர்வசமய சமரசத்திற்கு நான் மாறுபட்டவனல்ல. ஆனால், அரசு உத்தரவு போடுகிறது; தமிழகத்திலுள்ள இந்து கோயில்களிலே யாரும் எந்த மதத்தவரும் போக உரிமை உண்டு என்று. இந்துக்களிலே உருவ வழிபாட்டில் நம்பிக்கையுள்ளவர்களுக்காகத்தான் கோயில். உருவ வழிபாட்டில் நம்பிக்கையற்றவர்களுக்கு அல்ல. அவர்களுக்குக் கோயில் வழிபாடும் இல்லை. ஆலயங்களுக்குள்ளே செல்ல எல்லா இந்துக்களுக்கும் உரிமை இருந்தாலும், அவர்களிலும் உருவ வழிபாட்டில் நம்பிக்கை இருப்பவர்களுக்குத்தான் அந்த உரிமை என்று நான் எண்ணுகிறேன். பிற சமயத்தவர்—இஸ்லாமியர் ஆனாலும், கிறிஸ்தவர்களானாலும்—உருவ வழிபாட்டை மதிக்காதவர்கள் ஏன் கோயிலுக்குள் செல்ல வேண்டும்? இதனை அரசு கவனித்து தனது ஆணையைத் திரும்பப் பெறும் என்று நான் எண்ணுகிறேன்.

'சமய சார்பற்ற அரசு' என்பது சர்வ சமயத்திற்கும் புறம்பான அரசு என்று பொருள் அல்ல. எல்லா சமயங்களுக்கும் பொதுவானது என்றே பொருள்.

அரசாங்க அலுவலகங்களிலிருந்து கடவுளர் படங்களை அகற்றிவிடுவதுதான் சமய சார்பற்ற அரசு என்று சிலர் நினைக்கிறார்கள். கடவுளர் படங்களை அரசாங்க அலுவலகங்களிலிருந்து எடுத்துவிட்டாலே அரசு சமயசார்பற்றதாகி விடாது. அலுவலகங்களிலிருந்து படங்களை அகற்றுவது உருவ வழிபாட்டு மதங்களைத்தான் பாதிக்குமே ஒழிய உருவ வழிபாடற்ற மதங்களைப் பாதிக்கிறதில்லை. கோட்டையிலே சர்ச்சு இருக்கிறது. மசூதி இருக்கிறது. இவைகளை எல்லாம் வைத்துக்கொண்டு, அரசாங்க அலுவலகங்களிலிருந்து கடவுளர் படங்களை மாத்திரம் எடுத்துவிடவேண்டுமென்ற எண்ணம் நம்முடைய அரசுக்கு வந்தது ஏனோ?

பெரியாரவர்கள் சாதி ஒழிப்பு இயக்கத்தை உருவாக்கி நடத்துகிறார்கள். அதை நான் மனமார வரவேற்கிறேன். எந்த ஜாதியினரும் அர்ச்சகராக தொழில் செய்வதற்கு உரிமை இருக்கவேண்டும். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் கர்ப்பக்கிரகம் வரை யாரும் செல்ல உரிமை கோருவதை நான் ஒப்புக்கொள்வதற்கில்லை. நம்ம உறவினர்களைக்கூட நம்முடைய வீட்டில் சமையல் கட்டுவரை அனுமதிப்பதில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பெரியார் அவர்கள் கூட, தன் வீட்டுக் கூடத்தில் குந்த வைத்துத்தான் பேசிவிட்டு அனுப்புகிறாரே தவிர, அதற்கப்புறம் உள்ளே அழைத்துப் போவதில்லை. பெரியார் அவர்களிடம் எனக்கு மதிப்பும், மாண்பும் குறைவு இல்லாமல் இருக்கிறது என்பதையும் இங்கு நினைப்பூட்ட விரும்புகிறேன். ஆனால் அவர்களுடைய கிளர்ச்சிபற்றி அவரே குறிப்பிட்ட ஒன்றை அரசாங்கம் கவனிக்க வேண்டும். அவர் என்ன சொல்கிறார்? விக்கிரகத்தைத் தொட்டுத் தொழ உரிமை கேட்கிறார். 'சூத்திரன் தொட்டால் சாமி இல்லாமலே போய்விடும், கோவில் தொலைந்து விடும்' என்று சொல்கிறார். கோவில் தொலைவதற்குத்தான் இந்தக் கிளர்ச்சியே தவிர, நிலைப்பதற்கு அல்ல. இந்த ஒரு நிலையை அரசு குறிப்பாக நினைவில் வைத்து, ஆராய்ந்து பார்த்திருக்க வேண்டும். அப்படியில்லாமல், அதற்கு ஆதரவு கொடுத்து, அதை அமல் நடத்துவதற்கு முன்வருவது எந்த முறையில் சரியானது என்று தமிழக அரசை நான் கேட்க விரும்புகிறேன்.

வேறு மதத்தினர் கேட்டுக்கொள்ளாத ஒரு நிலையும் இருக்கிறது. இந்துக்களில் கூட ஒரு சாராருக்குத்தான் உருவ வழிபாட்டில் நம்பிக்கை உண்டு. பிரம்ம சமாஜிகள், ஆரிய சமாஜிகள் ஆகியவர்களுக்கு உருவ வழிபாட்டில்—விக்கிரக வழிபாட்டில் நம்பிக்கை கிடையாது. உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லாதவர்களை—இந்துக் கோவிலுக்கு வரவேண்டும் என்று விரும்பாதவர்களை—கோவிலில் அனுமதிக்க வேண்டிய அவசியமில்லை.

ஆராய்ச்சியாளர்கள் சில பேர்களை அனுமதிக்க வேண்டிய நிலை வரலாம். இப்போதே அனுமதிக்கப்படுகிறார்கள். எங்கேனும் தடை இருந்தால் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்





தன்னுடைய செல்வாக்கை உபயோகித்து, ஆலயங்களில் நிர்வாகஸ்தர்களையும் அர்ச்சகர்களையும் அணுகி அவர்களுக்கு அறிவுரை வழங்கி, அப்படிப்பட்ட ஆராய்ச்சியாளர்களை அனுமதிக்க வழிவகை செய்யலாம். அதற்காக ஆணை போட்டு அனுமதிக்கத் தேவையில்லை. ஆராய்ச்சியாளர்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு கோவில்களுக்குள்ளே போய் ஆராய்ச்சி செய்துவிட்டு, அந்த ஆராய்ச்சியாளர்களில் சிலர் நம்முடைய மதத்தையும், மத வழிபாடு கோட்பாடுகளையும்பற்றிக் கேவலப்படுத்தி புத்தகங்கள் எழுதுவதைப் பார்த்தால், மிஸ் மேயோவின் வாரிசுகள் இன்னும் இருக்கிறார்கள் என்று எண்ணவேண்டியிருக்கிறது. இவர்களுக்குக் கோயில் கதவுகளைத் திறந்துவிடவேண்டிய அவசியமில்லை. முதல் அமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் குழுவுக்கும், அறத்துறை அமைச்சர் அவர்களுக்கும், நாவலர் அவர்களுக்கும் சேர்த்து வேண்டுகோள் விடுக்கிறேன். "சர்வ மதத்தினரும் கோவில்களுக்குள் செல்லலாம் என்று ஆணை பிறப்பித்து தவறான கிளர்ச்சிகளுக்கும், குழப்பங்களுக்கும் இடமளிக்கவேண்டாம்" என்று பாரதியார்,

"தேவி கோயிலிற் சென்று
தீமை பிறர் புரிய
ஆவி பெரிதென் றெண்ணிக் கிளியே
அஞ்சிக் கிடந் தாரடி."

என்று பாடியிருக்கிறார். இன்று இல்லாமல் இருக்கலாம், நாளை இல்லாமல் இருக்கலாம். பின்னால் தவறுகள் விளையலாம், மதக் குழப்பங்களுக்கு இடம் உண்டாகலாம். அன்றொரு நாள் இங்கு ஜோதி ராமலிங்கசுவாமிகள் எம்மதமும் சம்மதம் என்று சொன்னதை முதல்வர் இங்கு எடுத்துச் சொன்னார். ராமலிங்க சுவாமிகள் கூட, இருக்கும் கோவில்களில் எல்லோரையும் விடவேண்டும் என்று சொல்லவில்லை. புதிதாக வடலூரில் சத்திய ஞான சபை என்ற கோவிலை அமைத்து, அதில்தான் எல்லா சமயத்தினரையும் அனுமதித்தார். ஆனால், அந்தக் கோவிலுக்குக்கூட இன்று இந்துக்கள்தான் சென்றுகொண்டிருக்கிறார்கள். வேறு மதத்தார் செல்வதில்லை. கருத்து வேற்றுமை என்பதைக் கூட மறந்து பொறுப்பு உணர்ச்சியோடு, எதைச் செய்தாலும் அதன் பின்விளைவு என்ன என்பதை நன்கு யோசித்து, நடுநிலைமையில் நின்று சொல்கிறேன் என்று நம்பி, பொறுப்பு உணர்ச்சியோடு இந்த உத்தரவை மாற்றவேண்டும் என்று வேண்டுகோளிட்டு, முடிக்கிறேன். வணக்கம்.

■ **திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்:** தலைவர் அவர்களே, நமது அற நிலைய இலாகாவிலே கோவில்களில் நிர்வாகஸ்தர்களாக நியமிக்கப்படுபவர்கள் அந்த நிர்வாகத்திற்கு தகுதி உள்ளவர்களா, ஆண்டவன் மீது நம்பிக்கை உள்ளவர்களா என்று பார்த்து, அப்

[திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்] [1970 மார்ச் 24

படிப்பட்டவர்களை தேர்ந்தெடுத்து நிர்வாகஸ்தர்களாக நியமிப்பது தான் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்"

என்று வள்ளுவர் கூறியது போல தகுதியுள்ளவர்களையே நியமிக்க வேண்டும். கோவிலில் ஆண்டவன் இருக்கிறார் என்பதில் நம்பிக்கை இல்லாதவர்களையும், அல்லது விபூதி, நாமம் போன்ற குறிகளை தீட்டிக் கொள்ளவேண்டாம் என்ற முடிவில் இருப்பவர்களையும் கோவில்களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளச் சொல்வது மிகவும் வருத்தப்பட வேண்டிய காரியம். ஆகவே, ஆண்டவன் பேரில் நம்பிக்கையுள்ளவரையே வைக்க வேண்டும், நிர்வாகத்திற்கு தகுதியுள்ளவரையே வைக்கவேண்டும். அப்படியில்லாவிட்டால், வள்ளுவர் வகுத்த வழிக்கு மாறாக நிர்வாகஸ்தர்களை நியமித்தால், நிர்வாகம் சீர்கெட்டுப் போய்விடும், நாடும் கெட்டு விடும். எனது தொகுதியில் அவினாசியில், அப்படி தகுதியற்றவர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெளிவாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் உள்ளே போய் தொட்டுக் கும்பிடுவதற்கு எல்லோருக்கும் வாய்ப்பு வேண்டும் என்று சொல்கிறார்; அங்கே என்ன வெங்காயமா இருக்கிறது? எதற்காகச் சொல்கிறார் என்று அவர் சொன்னால் தவறில்லை. அதைப்பற்றி நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. ஏனென்றால், எனக்கு முன்னால் பேசிய திரு. ம.பொ. சி. அவர்கள் அதைப்பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு விட்டார்கள். கோவில் பூனை தேவனுக்கு அஞ்சாது என்று சொல்வார்கள். கோவில் சொத்துக்களை தாராளமாக செலவழிக்க அரசாங்கம் வழி வகுக்கிறது. தகுதி உள்ளவர்களையே கோவில்களில் நிர்வாகஸ்தர்களாக அமர்த்த வேண்டும். தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களை அமர்த்துவது மிகத் தவறு. வாய்ப்பு, வசதி உள்ளவர்களையும் ஆண்டவன் பேரில் நம்பிக்கை உள்ளவர்களையும்தான் கோவில் நிர்வாகஸ்தர்களாக எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ரூ. 1,000-க்குக் குறைந்த வருமானம் வருகிற கோவில்களை அறநிலைய இலாகாவிலிருந்து நீக்கிவிடுவது நல்லது. அவர்களுக்கு பற்றுக்குறை இருக்கும்பொழுது இந்த இலாகாவிற்கும் பணம் கொடுத்துவிட்டு, நிர்வாகம் நடத்துவது என்றால், அதனால் பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன என்பதை நான் அறிவேன். அந்தப் பொறுப்பிலிருந்து அனுபவத்தில் சொல்கிறேன். இதைப்பற்றி அதிகமாகக் கூற நேரம் இல்லாததினால், அதைக் குறைத்துக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொன்னால், எங்கள் பகுதியிலே ரூ. 20,000 வருவாய் வரக்கூடிய ஒரு கோவில், கிருஷ்ணசாமி கோவில் இருக்கிறது பன்னிமடையில். அதற்குச் சொந்தமான பூமிகளை சென்ற ஆண்டு ரூ. 20,000-க்கு ஏலம் விட்டார்கள். ஏலம் எடுத்தவர்களிடமிருந்து



1970 மார்ச் 24] [திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்]

சுமார் ரூ. 10,000, 15,000 அட்வான்ஸ் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் அதைத் திரும்பிக் கொடுக்கவில்லை. பூமியையும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. பழைய குத்தகைகாரரிடமே பூமி இருக்கிறது. சுமார் ரூ. 1,000 தான் வருமானம் வந்துகொண்டிருக்கிறது. ஏலம் எடுத்தவர்கள் ஓராண்டு வரைக்கும் பணம் திருப்பி வாங்க முடியாமல், கடைசியில் கோர்ட்டுக்குச் சென்று, பணத்தைத் திரும்பப் பெற்றார்கள். இந்த முறையில்தான் கோவில் நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது.

குறிப்பாக ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை மட்டும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதிலே தயவுசெய்து கட்சி பாகுபாடு கூடாது. ஆண்டவனிடம் நம்பிக்கை உள்ளவர்களையே நியமிக்க வேண்டும். நேர்மையான அதிகாரிகளையே கோவில்களுக்கு நிர்வாகஸ்தர்களாக நியமிக்க வேண்டும். எனது தொகுதியில் திருமுருகன் பூண்டி கோயிலிலுள்ள நிர்வாக அதிகாரி முன்பிருந்த நிர்வாக ஊழல்களையெல்லாம் களைந்து, நல்ல முறையில் கோவில் நிர்வாகத்தை நடத்திக்கொண்டு வந்தார். பக்கத்திலுள்ள திருப்பூர் கோவிலுக்கும் அவர் டெம்பரரியாக நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார். அந்தக் கோவில் நிர்வாகத்தை மிக நேர்மையாக நல்ல முறையில் நடத்தினார் என்ற ஒரே காரணத்திற்காக, அந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் விரும்பாத காரணத்தினால், திடீரென்று அவருக்கு மாற்றுதல் உத்தரவு போடப்பட்டது. ரயில்வே ஸ்டேஷனில் திடீரென்று வந்த இடத்தில் மாறுதல் உத்தரவு போடப்பட்டது. அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் கிடையாது. எந்த இடத்திற்குப் போகவேண்டுமென்றுகூட சொல்லப்படவில்லை. இந்த இடத்தை விட்டு வெளியே போகவேண்டுமென்பது தான் உத்தரவு. அந்தக் கோவிலைச் சேர்ந்த தர்மகர்த்தாக்கள் குழுவினர், நிர்வாகஸ்தர்கள், சட்டமன்ற உறுப்பினராகிய நான் உட்பட எல்லோரும் அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதினோம். தயவு செய்து நாங்கள் சொல்வதைக் கேட்டு விசாரித்து, பிறகு ஆர்டர் போடுங்கள், அதுவரையில் நிறுத்திவையுங்கள் என்று சொன்னோம். வழக்கம் போல் எழுதிய கடிதத்திற்கு பதில் கூட கிடையாது. எப்படியிருந்தாலும் கொஞ்சம் நேர்மையைக் கடைப்பிடிக்கவேண்டும் என்று மிக மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது அவினாசிக் கோவிலுக்கு ஒழுங்கும் தகுதியும் உடைய தர்மகர்த்தாக்கள்—நியமிக்கப்பட வேண்டும். அது ஒரு பெரிய கோவில். திருவாரூருக்கு அடுத்தப்படியாக பெரிய தேர் ஓடும் கோவில்களில் அதுவும் ஒன்று. தேர் தெருக்களில் ஊர்ந்து வந்து நிலைக்கு திரும்பி வருவது அரிதாகிவிடும் என்று நான் மிகத் தெளிவாகச் சொல்கிறேன். ஒன்றிரண்டு மாதங்களில் தேர் திருவிழா வர இருக்கிறது. தயவு செய்து நேர்மையாக நடந்துகொள்பவர்களை நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கவேண்டும் என்று மன்றாடி கேட்டுகொள்கிறேன். எந்தத் தொழிலுக்கு யார் தகுதி உடையவரோ அவரைப் பார்த்து நியமிக்கவேண்டும்.

[திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்] [1970 மார்ச் 24

எல்லாவற்றிற்கும் கட்சியைச் சேர்ந்தவரைத் தான் நியமிக்க வேண்டும் என்ற எண்ணம் கூடாது. நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உங்களை மன்றாடிக் கேட்டுக்கொண்டு, நிர்வாகத்தை புனிதமாக்குமாறு உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

* ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலைய மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிற நேரத்தில், இந்து அற நிலையத்தையும், இஸ்லாமிய அறநிலையத்தையும் இணைத்துப் பேசுகின்ற ஒரு பெருமை தமிழ் நாடு சட்டமன்றத்தில் தான் இருக்கிறது என்பதை நினைவுபடுத்தி, இந்த ஒருமித்த நிலை இந்தியத் திரு நாடு எங்கும் உருவாகவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து, என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

1963-ம் ஆண்டு இந்த சட்ட மன்றத்தில் இனும் ஒழிப்புச் சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றியதன் மூலம், அந்த சட்டத்தை அடிப்படையாக வைத்து, கோவில்கள், சர்ச்சுகள், பள்ளிவாசல்கள், தர்க்காக்கள், ஆகியவற்றிற்குச் சொந்தமான இனும் நிலங்களை சர்க்கார் மேற்கொண்டு, அதில் பயிரிட்டு வந்த விவசாயிகளுக்கு பட்டா மாற்றுகின்ற பணியில் பழைய அரசாங்கம் ஈடுபட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

அதற்கப்புறம், 1966-ம் ஆண்டு இனும் ஒழிப்புச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து, கோவில் இனும்களுக்கு மட்டிலும் சொந்தமாக இருக்கும் நிலங்களைப் பட்டா மாற்றிக் கொடுப்பதிலிருந்து நிறுத்திவிட்டு, சர்ச்சுகள், பள்ளிவாசல், தர்க்காக்கள் ஆகியவற்றின் இனும் நிலங்களையும் பட்டா செய்வதைத் தடை செய்யவில்லை; முன் ஆண்ட தேசிய திருவாளர்கள், சமய சார்பற்ற மனப்பான்மையை இப்படிப் பிரதிபலிக்கிறார்கள், என்பதை நினைவுபடுத்துகிறேன். கோவில் இனும் நிலங்களுக்கு விதிவிலக்கு அளித்ததுபோல், தர்க்காக்களுக்கும், சர்ச்சுகளுக்கும், பள்ளிவாசல்களுக்கும், இனும் நிலங்களுக்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்மந்தமான வழக்குகள் ஹைகோர்ட்டிலும், சுப்ரீம் கோர்ட்டிலும் இருக்கின்ற காரணத்தால், தரும காரியங்கள் நடைபெறுவதற்கு இடையூறாக இருக்கிறது. ஆகவே, அந்தத் துறையில் அரசு முஸ்லீம், கிறிஸ்துவ சர்ச்—பள்ளி இனும்களுக்கும் விதிவிலக்குத் தரும் வகையில் சட்டத்தைத் திருத்த முயற்சி எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழையூத்து பக்கத்திலுள்ள ஷாதிகான் சத்திரம், திருநெல்வேலி நகராட்சி மன்ற எல்லையில் உள்ள முஸ்லீம் சத்திரம், பள்ளிவாசல், இரண்டும் வாக்ப் போர்டுக்கு உரித்தானது. இந்த இரண்டு சத்திரங்களையும் வாக்ப் போர்டிடம் கொடுக்கவேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்திருந்தும், அங்கே இருக்கின்ற, பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஆணையாளர்



1970 மார்ச் 24] [திரு. ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது]

அரசு உத்தரவை ஏற்றுக் கொள்ளாமல், எதிரிடை செய்கிறார்கள். உத்தரவை ஏற்றுக்கொள்ள தக்க நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையம் பற்றி பேசுவதற்கு தங்களின் விசேட அனுமதி கோருகிறேன். நம்முடைய தமிழ் நாட்டில், சமய ஒற்றுமையையும், அமைதியையும் வளர்க்கும் சூழ்நிலை இருந்து வருகிறது. அந்த நன்னிலை என்றென்றும் நீடித்து நிலவிவர இறைவன் அருள் புரிய வேண்டும் என்றும், அதற்கு அரசு துணை புரியவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த நாட்டில் இஸ்லாமிய பெருமக்களோ, கிருஸ்துவர்களோ, இந்து ஆலயங்களுக்குள் நுழைய அனுமதி தரவேண்டும் என்று எந்த நேரத்திலும், எப்பொழுதும் நம்முடைய அரசிடம் கோரிக்கை கொடுத்தார்களா என்றால் நான் அறிந்த வரையில் இல்லை. ஏனென்றால் உருவமற்ற—அருவ வழிபாட்டில் வந்தவர்களான முஸ்லீம்கள் உருவ வழிபாட்டில் நம்பிக்கை கொண்ட மக்கள் உள்ளத்தைப் புண்படுத்தாது அவர்களுடைய சமயப் பண்பாட்டை மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். எங்கள் வேதம் கூட அவர்களுடைய மார்க்கம் அவர்களுக்கு ! உங்கள் மார்க்கம், உங்களுக்கு ! அவரவர்கள் அவரவர்களுடைய மார்க்க அடிப்படையில் வாழ்வதற்கு உங்களால் ஆன துணை புரியவேண்டும் என்று எங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கின்றது. அந்த அடிப்படையில் இந்த நாட்டிலுள்ள இந்துக்கள் மனம் புண்படும் அளவிற்கு அவர்களுடைய கருத்துக்கு முரண்பட வகையில் கோவில்களுக்குள்ளே நுழையவேண்டும் என்று நாங்கள் ஆசைப்படவில்லை; அப்படி நாங்கள் ஆசைப்படாத நேரத்தில், வெளிநாட்டிலிருந்து வருகின்ற பயணிகளை அடிப்படையாகக் கொண்டு, எல்லா சமயத்தவரும் கோவிலுக்குள் நுழையும் சட்டத்திற்கு இந்த நாட்டிலுள்ள முஸ்லீம், கிறிஸ்துவப் பெருமக்கள் பெயரை பயன்படுத்த வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த அரசின் அறநிலைய அமைச்சர் தன்னுடைய அறிக்கையில், "நாம் நடைமுறையில் பின்பற்றிவரும் வழிபாட்டு முறைகளைத் தாங்களும் பின் பற்றாமல் எந்த முகமதியரோ, கிறிஸ்தவரோ நமது கோயில்களில் நுழைய அனுமதிக்கப்படுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. அதே சமயத்தில் நமது கோயில்களில் இறை வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் நல்ல இந்துக்களின் உள்ளம் புண்படும் வகையில் எந்த முகமதியரும், கிறிஸ்தவரும் நடந்து கொள்வதில் நாட்டம் செலுத்துவார் என்று நான் கருதவில்லை." என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பவ்வியத்தோடுதான் கூறியிருக்கிறார்கள் என்றாலும், இதை உருவ வழிபாடற்ற நாங்கள் உருவ வழிப்பாட்டில் நம்பிக்கை கொண்ட சமுதாயத்தினர் உணர்ச்சியைப் புண்படுத்தும் வகையில் நடந்துகொள்ள மாட்டோம் என்று சொல்லி இந்த வார்த்தைகள் எங்களைப் புண்படுத்தும் அளவில் இருக்கிறது என்பதை பணிவோடு, பவ்வியத்

தோடு, இந்த அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அப்படிக் கவனத்திற்குக் கொண்டு வரும் நேரத்தில் இந்துக் கோவில்களில் இந்துசமயம் அல்லாதவர்களுக்கு அனுமதி கொடுக்க சட்டத் திருத்தம் நாட்டின் நல் வாழ்வுக்கு உகந்தது அல்ல என்கிற அடிப்படையில், நமது அரசு பெரிய மனது செய்து நிறுத்தி கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே இருக்கின்ற சமய அமைதியையும் எங்களுக்கு இந்துப் பெருங்குடி மக்கள் தந்துவருகின்ற ஆதரவுகளையும் நாங்கள் என்றென்றும் நன்றியோடு நினைத்துக் கொள்ளத்தக்க ஒன்றாகும். அதோடு, மைனாரிடி, சமய மத உணர்ச்சிகளையும், பண்பாடுகளையும் இந்த அரசு புரிந்து பல்வேறு நன்மைகளை அவ்வப்போது செய்வதை நன்றியோடு தெரிவித்துக்கொண்டு, நிறைவுபடுத்துகிறேன் என் உரையை. நன்றி.

■திரு. எஸ். சிவசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைமீது ஒரு சில வார்த்தைகள் கூற முன் வந்திருக்கின்றேன். இந்த அறிக்கையில் பெரியார் ஈ. வே. ரா. கோவில்களில் அரிசனங்களை அழைத்துச் சென்று சிலைகளை தொட்டு வணங்க வழி காணவேண்டும் என்று கிளர்ச்சி நடத்தப் போவதாக அறிவித்திருந்தார் என்று சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன், என்று அமைச்சர் கூறியிருக்கிறார்கள். நான் அரிசனன் என்ற அளவில், நானும் அரிசனன் என்ற முறையில் எனக்கும் கோவில் உள்ளே போக ஆர்வம் இருக்கிறது என்பதால் இதை ஆதரிக்கிறேன். டவுன்களில் தான் கோவில்களைத் திறந்து விட்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் பல கிராமக் கோவில்களில் அனுமதிக்கவில்லை. கிராமங்களில் எல்லாம் கோவில்கள் இருக்கின்றன. சட்டம் இருக்கிறது. ஆனால், டவுனில் மட்டும் திறந்துவிட்டு, கிராமங்களில் திறக்கவில்லை. ஆகவே, பெரியார் கொள்கையை நான் மனப்பூர்வமாக ஏற்று நானும் அந்தக் கிளர்ச்சியில் ஈடுபடுவேன் என்று இந்த நேரத்தில் அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அரிசனன் தொட்டுக் கும்பிடுவது இருக்கட்டும், நுழையவேயில்லையே. தொட்டுப் பார்ப்பது இருக்கட்டும். ஆகவே, இந்தக் கிளர்ச்சியை நான் பரிபூரணமாக வரவேற்கிறேன்.

கோவில்களுடைய கேசுகள் நிறைய இருக்கின்றன. கேசுகளை யெல்லாம் அந்த அந்த கமிஷனர்கள், டெபுடி கமிஷனர்கள், அந்த ஜில்லாவிலேயே, அந்தந்த தாலுகாவிலேயே நடத்தத்தக்க வழி செய்ய வேண்டும். அப்போதுதான் ஏழை எளியவர்களுக்கு சௌகரியமாக இருக்கும். கனம் சின்னையாபிள்ளை அவர்கள் அந்த அந்த இடத்தில் நடத்தி வந்ததால் அது ஏழை எளியவர்களுக்கு சாதகமாக இருந்தது. ரூபாய் 20,000-க்கு மேற்பட்ட அற நிலையங்கள் டெபுடி கமிஷனர் அதிகாரத்தில் இருக்கின்றன. அவற்றை அந்த அந்த ஜில்லா அசிஸ்டெண்ட் கமிஷனர் நிர்வாகத்தின் கீழ் இருக்க வேண்டு என்று சொல்லவிரும்புகிறேன்.





டெபுடி கமிஷனரைப் பார்க்க வேண்டும் என்றால், அவ்வளவு சுலபமாக பார்க்க முடியாது. சென்னைக்கு வந்துதான் பார்க்க வேண்டும். பணக் கஷ்டம். ஏழைகளால் முடியாது. ஆகையினால் தான் அந்த அதிகாரத்தை அசிஸ்டெண்ட் கமிஷனருக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாங்குனேரி மடம் கேசு மதுரை டெபுடி கமிஷனர் இடம் 5 வருஷமாக நடக்கிறது. இன்னும் முடிவு பெறவில்லை. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிர்வாக அதிகாரிகளை சர்வீஸ் கமிஷன் தேர்ந்தெடுக்கிறது. கோவில் விஷயமாக, பக்தி இல்லாதவர்களை நேரிடையாக தேர்ந்து எடுப்பதால், நிர்வாகம் சரியாக இல்லை. கோவில் நிர்வாகத்திற்கு அதிகாரிகளுக்கு தனி பயிற்சி அளிக்க வேண்டும். அதன் பிறகு அவர்களை நியமிக்க வேண்டும். சில கோவில்களில் திருவிழாக்கள் நடக்கும்போது, கமிஷனர், டெபுடி கமிஷனர் சுற்றறிக்கையை அலட்சியம் செய்துவிட்டு, தர்மகர்த்தாக்கள் எக்சிக்யூடிவ் ஆபிசர்கள் தங்களுக்கு வேண்டியவர்களை வைத்து கேளிக்கைகளையும், கச்சேரிகளையும் நடத்தி, அதிகப்பணத்தை விரயம் செய்கிறார்கள். கமிஷனர் உத்தரவு நிலைநாட்டப்படவேண்டும்.

விருத்தாசலம், கொளசியப்பர் கோவிலை மணவாளநல்லூர் கிராம மக்கள் செயல்பட்டு, அதை முன்னுக்கு கொண்டு வந்தார்கள். அந்தக் கோவிலைக் கட்டினார்கள். அந்த ஊரிலிருந்து ஒருவரும் தர்மகர்த்தாவாக நியமிக்கப்படவில்லை. அந்தக் கோவிலுக்கு ஏராளமாக வருவாய் வருகிறது. அதை முன்னுக்குக் கொண்டு வந்த அந்த மக்களுக்கு தர்மகர்த்தாவாக நியமனம் இல்லை. என்ன காரணம் என்று புரியவில்லை. இதை அற நிலைய அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்கள் யாரையும் போடாத காரணம் என்ன என்று தெரியவில்லை. ஒருவேளை அரசியல் காரணமோ என்று சந்தேகப்படுகிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இவர் காங்கிரஸ், இவர் தி.மு.க., இவர் கம்யூனிஸ்ட் என்று பார்க்காமல் எல்லோரையும் போட்டிருக்கிறார்கள். அதுபோன்று கட்சியைப் பார்க்காமல் எல்லோரையும் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்து சமய அறக்கட்டளை இலாகாவில் இருப்பவர்கள் பதவி உயர்வு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். பதவி உயர்வு சரியான முறையில் இல்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் கவனித்து, பதவி உயர்வு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோயில் நிலங்கள், மடத்து நிலங்கள் இவைகளுக்கு நாம் உச்சவரம்பு கொண்டுவரவேண்டும். எல்லாவற்றிற்கும் உச்ச வரம்பு கட்டியாகிவிட்டது. கோயில் நிலங்களை மடத்து நிலங்களை உச்சவரம்பு கொண்டுவந்து பிரித்து, அவைகளை பாட்டாளி வர்க்கத்திற்கு விவசாயத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயிலுக்குச் சம்பந்தப்பட்ட கட்டிடங்கள் பல வருஷங்களாக குறைந்த வாடகைக்கு பணக்காரர்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். ஏழை எளியவர்கள் வசிப்பதற்கு இடம் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, முன் செய்துகொண்டிருந்த எல்லா உடன்படிக்கைகளையும் ரத்து செய்துவிட்டு, ஏழை எளிய மக்களுக்கு வசிப்பதற்கு இடம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

சிதம்பரம் தாலுகாவில் ஏழை அரிசன விவசாயிகள் கோயில் நிலங்களில் பயிரிடுகிறார்கள். திடீரென்று மழை பெய்தால் பயிர்கள் எல்லாம் நாசமாகிவிடும். பயிர்வைத்த விவசாயிகள் சாகுபடிக் குத்தகை கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். நியாயமாக இதை தள்ளுபடி செய்தாகவேண்டும். ஆனால் அவர்கள் கோர்ட்டுகளில் கேஸ் போட்டுவிடுகிறார்கள். இதனால் ஏழை விவசாய மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கனம் அமைச்சர் அவர்களும் கமிஷனர் அவர்களும் இந்தக் குத்தகையை ரத்துசெய்து தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

■ **திரு. ந. தருமலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு இந்து சமய அறநிலைய நிர்வாகம் பற்றிய இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் 40,83,900 ரூபாய்க்கு தொகையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இந்த அறிக்கையில் உள்ள ஒரு குறிப்பை நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 10,239 அறநிலையங்கள் பணியாற்றி வருகின்றன என்றும், அதனுடைய வருவாய் 4,87,00,000 ரூபாய் என்றும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் இந்து சமய அறநிலையத் துறை என்பது ஒரு தனி ராஜாங்கமாக நடைபெற்று வருகிறது. ஒரு திருக்கோயிலுக்கு 10 ஆயிரம் ஏக்கர் நிலம் என்றும், 5 ஆயிரம் ஏக்கர் நிலம் என்றும் இருந்து, அந்தக் கோயிலுக்கு அறங்காவலர் என்று இருந்துவிட்டால் அவர் ஒரு தனி ராஜாங்கமே நடத்தி விடுவார். அந்த ஊரில் அவர் வைத்ததுதான் சட்டம், அவரை எதிர்த்துப் பேசுவோர் யாரும் இல்லை. இந்த வழக்கம் நீண்ட காலமாக இருந்து வந்தது. இந்த அறநிலையங்களில் ஒருவகையான ஆட்சி நடைபெற்றதை நம் கண்முன்னே இருக்கின்ற புள்ளி விவரக் கணக்கே காட்டுகின்றது. இன்றைய நிலையில் இந்தக் கோயிலுக்கு இவ்வளவு வருவாய், அந்தக் கோயிலுக்கு இவ்வளவு வருவாய் என்ற புள்ளிவிவரம் காட்டப்பட்டிருக்கிறது. பட்டியலில் அடங்காத கோயில்களும் மடங்களும் இருப்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் நன்கறிந்து, அவைகளையும் இந்தப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் கோயில்களின் எண்ணிக்கையும் அதிகமாகும். வருவாயும் அதிகமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





இன்னொரு குறிப்பையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்துக்கள் அல்லாதவர்களையும் மற்றவர்களையும், பிற சமயத்தார்களையும் கோயிலுக்குள் விடுவதைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் ஹாஜீ ம. மு. பீர்முகம்மது அவர்கள் பேசும்போது, 'நீங்கள் அழைத்தாலும் நாங்கள், உங்கள் கோயிலுக்குள் வரமாட்டோம்' என்ற கருத்தை அறிவித்தார்கள். அரசாங்கத்தினுடைய கருத்தை இந்தக் குறிப்பில் அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். ஒரு மதத்தினரின் விழாவிற்கு வேறு மதத்தினர் செல்வது தவறானது அல்ல. நாகூர் ஆண்டவர் கோயிலுக்கு எத்தனையோ இந்துக்கள் போவதில்லையா? அது போல தஞ்சாவூர் பெரிய கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில், மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில் இவைகளுக்கு உள்ளே வர வேண்டுமென்று எவ்வளவோ பேர் விரும்புகிறார்கள். இதையெல்லாம் கவனித்துத்தான் இந்தக் குறிப்பை போட்டிருக்கிறார்கள்.

இந்து சமயத்திலே உள்ளவர்களிலேகூட பல்வேறு வகுப்புகள் இருக்கின்றனர். குறிப்பிட்ட வகுப்பாரைச் சேர்ந்தவர்கள் மட்டும் தான் கோயிலுக்குள் இருந்து சுவாமியின் அருகில் இருக்கவும் தொடவும் உரிமை உண்டு என்று இருக்கிறது. இந்தமாதிரியுள்ள ஜாதிமத பேதத்தை ஒழிக்கும் வகையில்தான் பெரியார் அவர்கள் கர்ப்பக்கிரகத்திற்குள் செல்வேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதைப்பற்றிச் சொல்லும்போது, சிலம்புச் செல்வர் அவர்கள் 'இது ஜாதி ஒழிப்பு அல்ல, கோயில் ஒழிப்புதான் இதன் நோக்கம்' என்று குறிப்பிட்டுப் பேசினார்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவர் அவர்களே, அவர் என்னைப் பற்றித் தவறாக விளம்பரப்படுத்துவது குறித்து விளக்கம் சொல்ல விரும்புகிறேன். கிளர்ச்சி நடத்துவது அவருடைய விருப்பம். நான் அதைக் குறை சொல்லவில்லை. சிலையைத் தொட்டுத்தொழ உரிமை கேட்டு பெரியார் கிளர்ச்சி செய்கிறார். 'சாதி ஒழிப்பு அவருடைய நோக்கம்' என்று அமைச்சர் அறிக்கையில் போடப்பட்டிருக்கிறது. அந்த வார்த்தையை நீக்கியிருக்க வேண்டும் என்றுதான் நான் கூறினேன். அவர் அவருடைய கொள்கையை அவர் மனச்சாட்சிப்படி நடத்துவது அவருக்கே உரிய விஷயம்.

**திரு. ந. தருமலிங்கம்:** நானும் அதைப்பற்றித்தான் குறிப்பிட வந்தேன். கோயிலை ஒழிக்கும் நோக்கம் இல்லை. இந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தாலே நன்கு தெரியும். யுனெஸ்கோ உதவிகளைப்பெற்று திருப்பணிகள் செய்வதுபற்றி குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஸ்ரீ வில்லிபுத்தூர், பழனி போன்ற கோயில்களில் திருப்பணி முயற்சி வேலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய சிலம்புச் செல்வர் அவர்கள் குறிப்பிட்டதுபோல வரலாற்று சிறப்புமிக்க தஞ்சாவூர் பெரிய கோயில்பற்றி குறிப்பு இல்லை. தஞ்சாவூர் கோயில் என்றால் பெரிய கோயில் என்றுதான் பொருள். அது வணக்கத்திற்கு உரியதாக அமைந்ததா, இல்லையா

என்பதல்ல பிரச்சினை. தமிழ்நாட்டு மக்களுடைய கலாசாரத்தையும் மேன்மையையும் புலப்படுத்துவதாகவே அமைந்தவை. மேலும், அகழி, மதிற்சுவர், கலைச் சின்னங்கள் இவை யாவும் தமிழர்களின் கலாசாரத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்தவை. அவை இன்றைய தினம் பாதுகாக்கப்படாமல் இருக்கின்றன. சென்ற ஆண்டில், ஒரு குழு ஏற்பட்டு, ராஜராஜ சோழன் சிலை வைப்பதைப்பற்றியெல்லாம் முடிவு செய்தார்கள். அந்த ஏற்பாடு என்ன காரணத்தாலோ தடைப்பட்டிருக்கிறது.

இந்து சமய அறநிலையத்தைப் பொறுத்தவரையில் அறங்காவலர் முறையில் சற்று கடுமையான தகுதியை மேற்கொள்ளவேண்டும். ஊருக்கு நாட்டாண்மைக்காரராகப் பார்த்து அறங்காவலர் என்று போட்டுவிடக் கூடாது. அவர்கள் கோயில்களின் சொத்தை ஒழுங்காகக் கவனிப்பதில்லை. பொதுவாக அறங்காவலர் என்றால் மாநிலத்தின் முதலமைச்சருக்கு எவ்வளவு செல்வாக்கோ, அவ்வளவு செல்வாக்கு பெறுகிறார்கள். ஊர் சொத்துக்கு ஆசைப் பட்டவர்களையெல்லாம் அறங்காவலராக நியமிக்கக் கூடாது. நாளடைவில் அந்தச் சொத்துகள் எல்லாம் நமக்குத்தான் சொந்தம் என்று எண்ண ஆரம்பித்துவிடுகிறார்கள். அப்படிப் பட்டவர்களையெல்லாம் அறங்காவலராக நியமிக்கக்கூடாது. உண்மை பேசுபவர்களை, நாணயமாக நடப்பவர்களைத்தான் நியமிக்க வேண்டும். யார், யார் பொதுமக்களுடன் தொடர்புள்ளவர்களோ அவர்களாகப் பார்த்து நியமிக்க வேண்டும். இன்னும் பழைய பெருச்சாளிகளை உள்ளே விட்டுவைத்து இந்து சமய அறநிலையத்திற்கும், பக்தி மார்க்கத்திற்கும் களங்கம் கற்பிக்க வேண்டாமென்று குறிப்பிட விரும்புகிறேன்

கடைசியாக ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். அந்தணர்கள் யார் என்பதற்கு திருவள்ளுவர் சொன்னார். "அந்தணர் என்போர் அறவோர்" என்பதாக. அப்படி யார் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே ஸி. பி. ராமசுவாமி அவர்கள் சொன்ன மாதிரியாக பயிற்சிப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி அதில் நல்ல பயிற்சி பெற்றவர்களையே ஆலயங்களில் அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டும். அதற்கான சட்ட திட்டங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை நான் ஆதரிக்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** துணைச் சபாநாயகர் அவர்களே, சபை முன் வைத்திருக்கிற அறநிலைய மானியத்தின் மீது ஒரு சில வார்த்தைகளைக் கூறவிரும்புகிறேன்.

இன்றைக்கு இருக்கிற கோவில்கள், அந்தக் கோவில்களில் இருக்கிற விக்கிரகங்கள், அந்த விக்கிரக வழிபாடுகள் எல்லாம் பழமையான காலத்தில் இருந்தே தோன்றி வந்திருக்கிற அம்சங்களாகும். கோவில் நிர்மாணம், விக்கிரகப் பிரதிஷ்டை, வழிபாடு இவற்றுக்கு எல்லாம் நான்கு வேதங்களும், 6 சாத்திரங்களும், பதினெண் புராணங்களும் ஆதாரமாக அமைக்கப்





பட்டிருக்கின்றன. அவற்றில் இருந்துதான் என்ன என்ன முறையில் ஆலயம் அமைக்கப்படவேண்டும், விக்கிரகங்கள் வைக்கப் படவேண்டும், அந்த விக்கிரகங்களுக்கு வழிபாடு நடத்தப்படவேண்டும் என்பதெல்லாம் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. பழமையான அவைகளுக்கு இன்றைய சூழ்நிலைகளுக்கேற்ப விளக்கங்களையும், வியாக்யானங்களையும் மதாச்சாரியார்கள் அளித்து வருகிறார்கள். அப்படி விளக்கம் அளிக்கப்படவேண்டும் என்பதற்குக் காரணமே அவைகள் தோன்றிய காலத்தில் இருந்த நிலைமைகளுக்கும், இன்றுள்ள நிலைமைகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள மாறுபாடுகள் தான். விஞ்ஞானம் வளர்ந்ததற்குப் பின்னால், கல்வி வளர்ந்ததற்குப் பின்னால்—கடவுளினால் தான் நடக்கும் என்ற காரியங்களைக் கூட மனிதனாலும் நடத்த முடியும் என்ற நிலை வளர்ந்துவிட்டதுதான். இந்த நிலை ஏற்பட்டதன் காரணமாக பழமையில் இருந்த நம்பிக்கை ஓரளவு தளர்ந்து விட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. மனித தேவைகளைக் கணக்கிடுவதற்கான சூழ்நிலைகளும் மாறுபட்டுவிட்டது. இப்படி எல்லாம் எல்லாத் துறைகளிலும் மாற்றம் ஏற்படும்போது பழமையான கோவில் வழிபாட்டு முறைகள் மட்டும் அப்படியே இருக்கவேண்டுமென்று யாராவது விரும்பினால், அது சரியான கண்ணோட்டமாகாது. பழமையில் உள்ள பற்று காரணமாக அப்படி வாதிட்டாலும் அது உண்மையான நிலையைப் புரிந்து கொண்டு செய்கிற வாதமாகாது. அப்படி காலத்திற்குப் பொருந்தாத வாதத்தை பேசிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை.

பழமையான கோபுரம் நல்லதுதான். அழகான சிற்பங்கள் நல்லதுதான். ஆனால் காலத்துக்கு ஏற்ற சூழ்நிலையை உணர்ந்து வழிபாட்டு முறைகள் அமையவேண்டும். இன்றைக்கு கோவில்களுக்குச் செல்கிறவர்களுடைய எண்ணிக்கை அதிகப்பட்டிருக்கிறது. பக்தி மேலிட்டுச் செல்கிறார்களா, வேடிக்கை விளையாட்டாகச் செல்கிறார்களா என்றால், யாரும் பக்தி மேலிட்டுச் செல்லவில்லை. நம்பிக்கையும் அதிகம் ஏற்பட்டுச் செல்லவில்லை என்பது தெட்டத் தெளிவாக விளங்குகிறது.

இன்றையதினம் அந்த ஆலயங்கள் ஒழுங்கான முறையில் நடைபெறவேண்டுமென்றால், நாம் நிர்வாகத்தை ஒழுங்கு செய்ய வேண்டும். எல்லோரையும் செல்லவிடுவது என்பது நியாயம் அல்ல. 15 ஏக்கரா உச்சவரம்பு என்றால், இந்தத் திட்டத்தில் நம்பிக்கை உள்ளவர்களை அதிகாரிகளாகப் போட்டால் தான் சட்டத்தை சரியான முறையில் நிறைவேற்றுவார்களே தவிர, மற்றவர்களைப்போட்டால் எப்படி இது நல்லமுறையில் நடக்கும்? அதுபோல கோவில்கள் மீது, கடவுள் மீது, விக்கிரக வழிபாட்டின் மீது நம்பிக்கை உள்ளவர்களையே போடவேண்டும். அதுவும் நிர்வாகம் செம்மையாக நடக்க, வருமானம் சரியான முறையில் செலவு செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க அரசு பொறுப் பேற்றுக்கொள்ளவேண்டுமே தவிர வழிபாடு முறைகளில் யாரை வேண்டுமானாலும் போடுவது, என்பது நியாயமாகாது. இவற்றில்

நம்பிக்கை இல்லாதவர்களை எல்லாம் போடுவது தவறான கருத்தைத்தான் உண்டாக்கும்.

இன்றைக்கு யார் வேண்டுமானாலும் அர்ச்சனை செய்வது என்கிற நிலை இல்லை. ஏதோ கோவிலுக்குப் போனால், தேங்காய் பழம் வாங்கிக் கொடுத்தோம், அவர் மந்திரம் சொல்லித்தான் அர்ச்சனை செய்தாரா, இல்லையா என்று பார்ப்பதில்லை என்கிற நிலை எல்லாம் போய்விட்டது. ஆகவே அர்ச்சகர்கள் என்று சொன்னால், முறையாகப் பயிற்சி பெற்றவர்களையே நியமிக்கவேண்டும். விக்கிரகம் என்றால் என்ன, மந்திரம் எவ்வளவு தடவை சொல்லவேண்டும், எப்படிச் சொல்ல வேண்டும் என்கிற ஆராய்ச்சிகள் எல்லாம் செய்கிற நிலையில் பயிற்சி பெற்றவர்களையே நியமிக்கவேண்டும்.

இன்றைக்கு அறங்காவலர்களாக இருக்க பலபேர் போட்டி போட்டுக்கொண்டு முன்வருகிறார்கள். அமைச்சர் அவர்களைப் பார்த்து, என்னைப்போடுங்கள், என்னைப்போடுங்கள் என்று கோருகிறார்கள். அப்படி முன்வருவதற்குக் காரணம் என்ன? தேர் திருவிழாக் காலங்களில் பெரிய மனிதர்களாக மாலைபோட்டுக் கொண்டு போவதற்கோ, உற்சவ காலங்களில் அதிகமாகச் செல விடுகிற பணத்தை சொந்தத்திற்குப் பயன் படுத்திக்கொள்கிற காரணமோ, யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. அறங் காவலர்களைப் பார்த்துப் போடவேண்டும். கோவில்கள் நன்றாக இருக்கவேண்டும், விக்கிரகங்கள் நன்றாக இருக்கவேண்டும். உருவ வழிபாட்டுமுறை சீராக அமையவேண்டும் என்றால்—நிர்வாகத்தைச் செம்மையான முறையில் அமைத்து சோஷலிச ஜனநாயக அமைப்புக்கு ஒப்பான சோஷலிச முறையில் செயல்பட வழி வகுக்கவேண்டுமென்று சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. பி. எஸ். தனுஷ்கோடி: இந்து சமய அறநிலைய சட்ட நிர்வாக மானியத்தின்கீழ் என் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில விஷயங்களை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த அற நிலையங்களில் பரம்பரை டிரஸ்டி முறை இருந்துகொண்டு வருகிறது. பரம்பரை கர்ணம் முறையை ஒழித்துவிட்டோம். பரம்பரை கிராம உத்தியோகஸ்தர்கள் முறையை ஒழித்து விட்டோம். அதைப் போலவே பரம்பரை கோவில் டிரஸ்டிகள் முறையையும் ஒழித்துவிடவேண்டும். அதற்கான சட்டத் திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல டிரஸ்டிகளை, அறங்காவலர்களை நியமிக்கவேண்டும்.

அது மட்டுமல்ல கோவில்களில் உள்ள அர்ச்சகர்களுக்கு பரம் பரையாக பூசை செய்துகொண்டு வரக்கூடியவர்களுக்கு சம்பளம் குறைந்ததாக இருக்கிறது. அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டும். எற்கனவே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த மானியத்தையும் திரும்பக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதோடு மட்டுமல்ல. இசை (வேளாளர்) வாத்தியக்காரர்களுக்கு—பரம்பரை பரம்பரையாக கோவில்களில் சேவை செய்து கொண்டு வருகிறார்கள்—5 பேர்களுக்கு மாதத்திற்கு 40 ரூபாய் சம்பளம் என்பது குறைவானதாகும். அவர்களுடைய சம்பளத்தையும் உயர்த்தி, அவர்களுக்கு ஏற்கனவே விடப்பட்டிருந்த மானியத்தையும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் கோவிலுக்கு சேவை செய்கிறவர்கள் என்பதற்காகவே அவர்கள் தவறாக நடத்தப்படுகிறார்கள். அதையும் தடுக்க வேண்டும். குறிப்பாக வைதீஸ்வரன் கோவிலை எடுத்துக் கொண்டால் அங்கு தவறுகள் நடைபெறுகின்றன. இந்த ஊழலை அகற்ற அறநிலையம் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆயிரக்கணக்கான வேலி நிலங்கள் வைத்திருக்கிற கோயில்கள் இருக்கின்றன. அங்கே பல ஊழல்கள் நடக்கின்றன. அந்த ஊழல்களைக் களைந்தெறிவதற்கு வருஷா வருஷம் கணக்குகளைச் சரிபார்க்க வேண்டும். திருவாரூர் தியாகராஜ சுவாமிக்குச் சொந்தமான நிலத்தில், பண்ணைச் சாகுபடி முறையிலும் 1376, 1377-ம் பசலிக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு கலம் என்று வாரம் வைக்கப் பட்டிருக்கிறது. ஒரு வருஷத்தில் 40 ஆயிரம் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இந்த முறைகளையெல்லாம் மாற்றவேண்டும். கணக்குகளை அவ்வப்போது சரிபார்க்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோன்று சிக்கல், வேதாரண்யம் போன்ற கோயில்களில் ஊழல்கள் நடக்கின்றன. அந்தக் கணக்குகளையும் சரிபார்க்கவேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். பண்ணைச் சாகுபடி முறையிலே பல ஊழல்கள் நடக்கின்றன. நான் முன்பு கூறியதைப்போல் ஒரு ஏக்கருக்கு ஒரு கலம் வீதம் வாரம் வைக்கப்பட்டிருக்கிறது. தனியாகக் குத்தகை சாகுபடிக்கு எடுத்துக் கொண்டவர்கள் ஒரு ஏக்கருக்கு 15 கலம் 20 கலம் என்று நெல் அளக்கிற நேரத்திலே இதிலே மட்டும் ஒரு கலம்தான் வாரம் வைத்திருக்கிறார்கள். எனவே, இதிலே தவறு ஏற்பட்டிருக்கிறது. அதைக் கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோயில் நிலங்கள் கூட்டுறவு முறையில் சாகுபடிக்குக் கொடுக்கப்படுகிறது. தமிழகத்திலே பல இடங்களில், கூட்டுறவுமூலம் விடப்பட்டிருக்கின்ற கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில் பாக்கியிருப்பதற்காக ரெவின்யு கோர்ட்டிலே கேஸ் நடந்துகொண்டிருக்கிறது. அந்த நிலங்களினுடைய தரத்தை நிர்ணயம் செய்து அது சரியான நிலமா, தரம்பை நிலமா அதற்கும் குத்தகை சேர்க்கப்பட்டிருக்கிறதா நியாயமான குத்தகை பாக்கியா என்று பார்த்து ரத்து செய்வதற்கு அமைச்சர் அவர்களும், ஆணையர் அவர்களும், நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

[திரு. பி. எஸ். தனுஷ்கோடி] [1970 மார்ச் 24

குடிமராமத்து வேலைகள் செய்கின்ற நிலையிலே பஞ்சாயத்துக்கள் செய்வதற்கு அமைச்சர் அவர்களும் ஆணையர் அவர்களும் பதில்லை, இதனால் பல இடங்களில் பாசன வசதிகள் இல்லாமல் போகிறது. குடிமராமத்து பஞ்சாயத்து மூலம் நடக்கும்பொழுது அறக்காவலர்களும் நிர்வாக அதிகாரிகளும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

திறமையான அதிகாரிகள் பல இடங்களிலே இருக்கிறார்கள். திருவாய்மூர் கோவில் நிர்வாக அதிகாரி திறமையானவர். குத்தகை பாக்கியை வசூல் செய்தார். மொத்த குத்தகையை ஒழித்து நிலமற்றவர்களுக்கு 3 ஏக்கர் 4 ஏக்கர் என்று குத்தகைக்குக் கொடுத்து 2,000 கலம் வாங்கிவிட்டார். அப்படிப்பட்ட திறமையான அதிகாரியை மாற்றிவிட்டார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகளை மாற்றக்கூடாது. அதேபோன்று செம்பியன் மாதேவியில் ஒரு திறமையான அதிகாரி இருந்தார். அங்கே அவர் போய் கொஞ்ச நாட்கள்தான் ஆகின்றன. கோயில் வருமானத்தைப் பெருக்குவதற்காக முயற்சி செய்தார். கோயில் பரம்பரை டிரஸ்டிகள் அதிலே தலையிட்டு ஊழல்கள் நடப்பதற்கு அவர் இடம் கொடுக்காமல் இருந்ததால், வெளியேற்றப்பட்டார். எனவே அதிகாரிகளை, திறமையானவர்களை மாற்றக்கூடாது. அதோடு ஓய்வு பெற்ற நிர்வாக அதிகாரிகளை திறமையானவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு வயதை நீட்டித்துக்கொடுத்து சலுகைகள் கொடுத்து இருக்கச் செய்ய வேண்டும். குத்தகை பாக்கிகளை ரத்து செய்யவேண்டும். கோயில் நிலங்களுக்கும் வரம்பு கட்டியாகவேண்டும். நிலமற்றவர்களுக்கு நேரடியாகக் கொடுத்தால் கோயில்களின் நிதி அதிகமாகும். பண்ணைச் சாகுபடி முறையில் ஊழல்கள் நடக்கவிடக்கூடாது. அந்த முறையை மாற்றியாக வேண்டும். ட்ரஸ்டு ரத்து செய்வதற்கு சர்க்கார் முயற்சி செய்ய வேண்டும். சட்டத்திலே உள்ள சிக்கலை போக்கி திருத்தம் செய்து மாற்றவேண்டும். குடிமராமத்துச் சம்பந்தமாக உத்திரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது).

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே,

"ஒன்றே யென்னி னொன்றேயாம் பலவென்றுரைக்கிற்
பலவேயாம் அன்றே யென்னி னன்றேயா மாமென் றுரைக்கி
னாமேயாம் இன்றே யென்னி னின்றேயா
முளதென் றுரைக்கி னுளதேயாம் நன்றே நம்பி குடி
வாழ்க்கை நமக்கிங் கென்னோ பிழைப்பம்மா".

என்று கூறியிருக்கிறார்கள், கம்பர் பெருமான். ஆகவே, ஆண்டவன் ஒருவராக இருக்கலாம், பலவாக இருக்கலாம், இல்லாதவராகவும் இருக்கலாம். இருக்கும் பொருளாக இருக்கலாம். ஆக அவர்களுடைய பிழைப்பே அப்படியிருக்கும்பொழுது என்னுடைய பிழைப்பு எப்படியோ என்று கம்பர் பெருமான் சொல்வதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.



1970 மார்ச் 24] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

அறநிலையத்தைப் பாதுகாக்கும்படியான நிலை ஏன் உருவாயிற்று என்றால் தர்மகர்த்தாக்கள் அதர்மகர்த்தாக்களாகி விட்ட நிலையிலே சர்க்கார் தலையிட்டு அதற்காக ஒரு சட்டம் பழைய காலத்திலே வரக்கூடிய நிலைமை ஏற்பட்டது. கோயில் எனப்படுவது நம்முடைய நாட்டிலே மட்டுமல்ல, உலகத்திலே எல்லா இடங்களிலும் இருக்கின்றன. ஆஸ்திகம், நாஸ்திகம் என்பது பல பல ஆண்டுகளுக்கு முன்னதாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருக்கின்றன. சில பேர்கள் பகுத்தறிவுவாதிகள் என்று சொல்லிக்கொண்டு நாஸ்தீகத்தை நாங்கள்தான் கொண்டு வந்தோம் என்று பெருமைப்படுவார்களானால் அப்படிப்பட்ட பெருமை யாரும் பட்டுக் கொள்ளவேண்டாம். இது பெரிய பிரச்னை, தீராத பிரச்னை. தீர்க்க முடியாத பிரச்னையாக இருந்து வருகிறது. எவ்வளவு தூரம் நாஸ்திகம் அதிகமாகி வருகிறதோ அவ்வளவு அதிகமாக ஆஸ்திகமும் வலுப்பெற்றுவிடும் என்பதைப் பார்த்து வருகிறோம். பிள்ளையாரை உடைக்க வேண்டும், விநாயகர் வேண்டாமென்று சொன்னதால், பெரியார் அவர்கள் ஆரம்பித்ததால்தான் விநாயகர்களுக்கு கிராக்கி ஏற்பட்டு பூஜைகள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன....

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாத்திகம் என்ற சொல்லைத் தாங்கள் ஆதரிக்கிறீர்களா இல்லையா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நாத்திகம் என்ற சொல்லை ஆதரிக்கிறேனோ இல்லையோ, முதலமைச்சர் அவர்கள் எதற்காகச் சொல்கிறார் என்பது எனக்கும் தெரியும். அவர் அதிலிருந்து நாத்திகத்திலிருந்து வந்தவர்....

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்தப் பத்திரிகை தொடங்கப்பட்ட நேரத்திலே நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அந்தப் பத்திரிகை ஆசிரியரைக் கூப்பிட்டு இந்தத் தலைப்பில் பத்திரிகை வெளியிடவேண்டாம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கைதான், நாத்திகம் அல்ல என்று சொன்னார்கள். அதற்கு மறுத்துவிட்டதால் அந்த ஆசிரியர் விலக்கப்பட்டார். இப்பொழுது அது உங்கள் கட்சிப் பத்திரிகையாக இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மீண்டும் சொல்கிறேன், அது என்னுடைய கட்சிப் பத்திரிகை அல்ல. இப்பொழுது ஆண்டவனை நீங்கள் எப்படிக் கும்பிடுகிறீர்களோ அப்படி அவரும் கும்பிட்டுக் கொண்டிருக்கலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** காமராஜர், தாங்கள் எல்லாம் பேசக்கூடிய கூட்டங்களில் உங்கள் பெயரோடு நாத்திகம் ராமசாமி என்ற பெயரும் போடப்படுகிறதே அதனை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எத்தனையோ பேர்கள் கட்சிக்குப் பேசுகிறார்கள், உங்களுக்கும் அப்படி இருக்கிறது. பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறுகின்றது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இதிலே பூ எது ? நார் எது ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்களே தெரிந்துகொள்ளுங்கள், அவ்வளவு பகுத்தறிவு உங்களுக்கு இல்லையென்று சொல்ல முடியுமா ? பூவோடு சேர்ந்த நார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் கருத்துக்கள் என்ன ? மடங்களை ஒழிக்கவேண்டும், மடாதிபதிகளைப்பற்றி என்னவெல்லாம் நாடகம் போட்டு மேடையிலே காட்டினீர்கள். இப்பொழுது மடாதிபதி மேல் சபையிலே கவுன்சிலிலே உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறார். காலப் போக்கிலே என்ன நடக்கிறது ? நீங்கள் சவுக்கடி சந்திரகாந்தா என்று அடேயப்பா, என்ன நாடகம் எல்லாம் போட்டீர்கள். முன்னாள் முதலமைச்சர் அவரே மடாதிபதியாக நடித்திருக்கிறார். இன்றைக்கு அந்த மடாதிபதியை வைத்து விபூதி பிரசாதம் வாங்கிக் கொண்டிருக்கிறீர்கள் . . .

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** நாங்கள், மடாதிபதிகள் ஒழிக்கப்பட வேண்டுமென்றோ அல்லது மடங்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்றோ சொல்லவில்லை. மடாதிபதிகள் சமூதாயத்திற்குச் செய்கின்ற தீங்கு விளைவிக்கின்ற பழக்க வழக்கங்கள் ஒழிக்கப்படவேண்டும். மடங்களில் ஊழல்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்று சொன்னோம். நாங்கள் சொன்னதன் காரணமாக அவர்கள் திருந்தி வந்திருக்கிறார்கள். எனவே நாங்கள் ஆதரிக்கிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இது பழக்கமாகிவிட்டது. ஒன்று சொல்லுவது, பிறகு சுத்தமாகிவிட்டது என்று சொல்லுவது வழக்கமாகிவிட்டது. இப்போது ரொம்ப பரிசுத்தமாகி பக்திப் புண்ணியவான்களாக வந்திருக்கிறார்கள். எதற்கெடுத்தாலும் முன்பு இப்படிச் சொன்னோம், இப்போது திருத்திக் கொண்டோம் என்று சொல்லுகிறார்கள். உங்கள் இதோபதேசங்களை எல்லாம் கேட்டு அவர்கள் எல்லாம் மாறிவிட்டார்கள். எப்படி இருந்தாலும் காலப் போக்கால் ஏற்பட்ட மாறுதல்களுக்கு நன்றி. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில். . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** காலப் போக்கைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலவை போன்ற இடங்களில் மடாதிபதி காலடி எடுத்து வைப்பதா என்ற கருத்தைக் கொண்டிருந்தவர்களையும் காலப் போக்கில் மாற்றியிருக்கிறோமே. அதுவும் பாராட்டக் கூடியதுதானே.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மாற்றுவது என்று எடுத்துக் கொண்டால் உங்கள் கொள்கையையே மாற்றிக் கொள்ளுகிறீர்கள் ; உங்கள் பெயரை மாற்றிக் கொள்கிறீர்கள் ; தினம் தினம் கொள்கையை மாற்றிக் கொள்ளுகிறீர்கள். முன்னாலே இருந்த பெயர் வேண்டாமென்று மாற்றிக் கொள்ளுகிறீர்கள்.





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எந்தப் பெயரை எப்படி மாற்றி இருக்கிறார்கள்? அதைப் பற்றி அவர்களுடைய கருத்து என்ன ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதைப் பற்றித் தனி விவாதமே வைத்துக் கொள்ளலாம். பெயர் மாற்ற மசோதாவே கொண்டு வந்தால் கூட விவாதிக்கலாம். பெயர் மாற்ற விழா என்று வைத்து எப்படி இருக்க வேண்டுமென்பதற்காகப் பொறுக்குக் கமிட்டி போட்டு விவாதித்து மாநிலம் பூராவும் சுற்றுப் பயணம் செய்து முடிவு எடுக்கலாம் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பெயர் மாற்றுவது தவறு என்கிறீர்கள். இந்தியா என்ற பெயரை பாரத் என்று மாற்றிக் கொண்டிருக்கிறீர்களே, அதை மறந்துவிடக் கூடாது. காசி என்பதை வாரணாசி என்று மாற்றியிருக்கிறீர்கள். இப்போது உங்கள் கட்சிப் பெயரையும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படும். அதையும் மறந்துவிடக் கூடாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மாற்றத்தைச் செய்கிறீர்கள் என்று சொன்னேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது, அதைப் பார்த்து நாங்களும் செய்கிறோம் என்று நீங்கள் சொல்லுவதானால் பெருமையாக ஏற்றுக் கொள்ளுகிறேன். மாற்றுவதில் எவ்வளவோ விதம் இருக்கிறது.

அறநிலைய வரவு செலவுத் திட்டத்தில் நான்கு கோடி ரூபாய்க்கு மேல் வரவு செலவைக் காண்பித்திருக்கின்ற நீங்கள் ஆபரணங்கள், சொத்துக்களைப் பற்றிக் குறிப்பிடாமல் இருப்பது சந்தேகத்தைத் தருவதாக இருக்கிறது. போன முறை குறிப்பிட்டதாக ஞாபகம். ஒவ்வொரு கோயிலுக்கும் எவ்வளவு சொத்து இருக்கிறது, ஆபரணங்கள் எவ்வளவு இருக்கின்றன என்ற விவரங்களை நிச்சயமாகக் கொடுக்கவேண்டும்.

அர்ச்சகர்களுக்குப் பயிற்சி கொடுக்கும்போது சாதி மத வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அந்தக் கொள்கையைப் பரிபூரணமாக வரவேற்கிறேன். இப்போது விஷயம் தெரியாமல், அவர்கள் சொல்லுவது நமக்குப் புரியாமல் உள்ள நிலை இருக்கிறது. ஈசான சிவாசாரியார் என்று பழைய காலத்தில் இருந்தார். அவரைப் போல் சமஸ்கிருதமோ, வடமொழியோ தெரிந்தவர் ஒருவரும் இருக்க முடியாது. அவர் செய்யும்படியான வேள்விகள், யாகங்கள் போற்றப்பட்டு வந்தன. குறிப்பிட்ட சமுதாயந்தான் உயர்ந்தவர்கள் என்ற நிலை இருத்தல் கூடாது.

“ நீதி, உயர்ந்த மதி, கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர் ”

என்று பாரதியார் கூறினார். எல்லோரும் சமமாக இருக்க வேண்டும். ஆண்டவன் சந்நிதானத்தில் சுத்தமாக எவன் இருக்கிறானோ அவன்தான் உயர்ந்தவன் என்று எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதைப் பாராட்டுகிறேன். இதிலே யாரோ சிலருடைய உரிமை பாதிக்கப்படுகிறது என்ற நிலைமை எதுவும் இல்லை. யார் உண்மையிலேயே சிறந்தவர்களோ அவர்களுடைய உரிமை பாதிக்கப்படக் கூடாது. இதை நான் எங்கள் கட்சியின் சார்பாக பரிபூரணமாக ஆதரிக்கிறேன். ஆலயப் பிரவேசத்தின் மூலமாக மகாத்மா காந்தி கண்ட கனவு இதனால் மேலும் நிறைவேறும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

சர்வ மதத்தினரும் கோயிலுக்குள் புகுந்து கொள்ளலாம் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதிலே என்னுடைய கருத்தைச் சொல்ல இஷ்டப்படவில்லை. இது அவரவர்களுடைய மனப்பான்மையைப் பொருத்திருக்கிறது. நான் அதை அனுமதிக்கலாம்; ரொம்ப ஆத்திகவாதிகளாக இருப்பவர்கள் மறுக்கலாம். இதைச் சட்டமாகச் செய்யும்போது எல்லோரையும் கலந்து கொண்டு செய்யவேண்டும். ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்டது மாதிரி உருவ வழிபாட்டில் நம்பிக்கை கொண்டவர்களின் கருத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்பது முக்கியமான ஒன்று. அவர்கள் சொன்ன கருத்தை நான் ஆதரிக்காமல் இருக்க முடியாது. கிருத்துவக் கோயிலுக்கு எல்லோரும் போகலாம். பள்ளிவாசலுக்கு எல்லோரும் போகலாம் என்றார்கள். அங்கும் எல்லாக் கிறித்துவக் கோயில்களிலும், எல்லாப் பள்ளிவாசல்களிலும் அனுமதிப்பதில்லை. அங்கும் சில இடங்களில் அனுமதிக்கப்படுவதில்லை. இந்துக்கள் கோயிலுக்குள் எல்லா மதத்தினரும் வரலாம் என்று மாற்றுவதை சற்று யோசனை செய்து செய்ய வேண்டும். சர்வ மதமும் சம்மதம் என்ற நிலை வரவேற்கக் கூடிய ஒன்று. இன்று உலகத்திலேயே இதிலே எவ்வளவோ சண்டைகள் நடக்கின்றன. மேல்நாட்டிலேயே பிராடஸ்டன்ட் சர்ச், மெதாடிஸ்ட் சர்ச், ப்யூரிடன்ஸ் சர்ச், கதோலிக் சர்ச் என்ற பிரிவுகளுக்குள்ளேயே போட்டி போடக்கூடிய நிலைமைகள் விஞ்ஞானம் வளர்ந்த நாடுகளிலேயே இருக்கிறது என்பது சர்க்கார் உணராதது அல்ல. பொதுமக்கள் கருத்தை அறிந்து மாற்றத்தைச் செய்ய வேண்டும், அவர்கள் மனத்தைப் புண்படுத்தும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தைச் செய்திருக்கிறார்கள். இதிலே வரும்படியான பணம் கல்விக்கோ அல்லது வேறு லட்சியங்களுக்கோ செலவிடக் கூடிய வகையில் சர்க்காரின் அனுமதியின் பேரில் மாற்றப்பட வேண்டுமென்று கூறுவது நல்லதுதான். செலவாகாது இருக்கும் பணத்தை தவறான காரியங்களுக்குப் பயன்படுத்தாமல் நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்லுவதை வரவேற்கிறேன். எந்த ஊரில் உள்ள கோயில்



வருமானத்தை எடுத்து இந்தக் காரியங்களுக்காகச் செலவு செய்யத் திட்டமிடுகிறோமோ அந்த ஊரிலேயே செய்யக்கூடிய அபிவிருத்திகளுக்கு அந்தப் பணத்தை எடுத்துச் செலவு செய்வது என்பது பொருத்தமாக இருக்கும். போன சட்டமன்றக் கூட்டத்திலேயே பேசினேன். அமைச்சர்களும் கேட்டார்கள். புதுக்கோட்டை கல்லூரிக்குச் செலவு செய்ய வேண்டாமென்று சொல்லவில்லை. கோவையில் உள்ள பன்னாரி கோயில் டிரஸ்ட் மீட்டிங்கைப் போட்டுக்கூட முடிவு எடுக்காமல் டெபுடி கமிஷனர் போய் 1½ லட்சம் ரூபாய்க்குச் 'செக்'கை வாங்கிச் சென்றிருக்கிறார். அதற்குப் பிறகு டிரஸ்டு போர்டு மீட்டிங் போட்டு கொடுக்கப்பட்ட தொகையை ஏற்றுக் கொள்ளுவது என்று முடிவு செய்கிறார்கள். இது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதைத் தான் காட்டுகிறதே தவிர வேறு அல்ல. எதை வேண்டுமானாலும் செய்துவிட்டு சட்டப்படி இருக்கிறது என்று சொல்வதில் பயன் இல்லை. அந்தக் கோயிலிலிருந்து பெறக்கூடிய பணத்தைக் கொண்டு அந்தப் பகுதியிலேயே கல்லூரியை ஆரம்பிக்கவோ அல்லது மற்ற நல்ல காரியங்களுக்கோ செலவு செய்ய வேண்டுமே தவிர, இது மாதிரி செய்வது சரியல்ல. அளவுக்கு மேல் அதிகமாக இருந்தால் எடுத்துச் செலவு செய்வதைப்பற்றி தவறில்லை. கல்வி ஸ்தாபனங்கள் நிச்சயமாக வளர வேண்டும்; ஆடம்பரச் செலவுகள் குறைக்கப்பட வேண்டும்.

குத்தகைதாரர்களுக்குப் பாக்கியை 'ரைட் ஆஃப்' பண்ண வேண்டுமென்று கூறினார்கள். சாமி கோயில் பணம் என்றால் யார் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாமா? அதற்காக ஏழை விவசாயிகளை நஷ்டப்படுத்த வேண்டுமென்று சொல்லவில்லை. இதிலே தர்மகர்த்தாக்கள் நியாயமாக, நடைபெற வழி செய்ய வேண்டும். அப்போதுதான் சர்க்கார் போட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியும். குடியானவர்களிடமிருந்து பணத்தை வசூல் செய்யவில்லை என்றால், நெல்லை வசூல் செய்யவில்லை என்றால் கல்வி ஸ்தாபனங்களுக்கு எப்படிச் செலவு செய்ய முடியும்? நல்ல காரியங்களை எப்படிச் செய்ய முடியும்?

கோயிலில் இருக்கும்படியான பணத்தைக் கொண்டு பொதுக் கல்யாண மண்டபங்களைக் கட்டவேண்டுமென்று சர்க்கார் தனிச் சட்டம் போட்டால் கூட நல்லது. கல்யாணங்கள் இன்று பல இடங்களில் நடைபெறுகிறது.

இப்போது ஆடம்பரச் செலவினால் எவ்வளவோ குடும்பங்கள் அழிந்து போகின்றன. ஆகவே எந்தெந்தக் கோவில்களில் பணம் இருக்கிறதோ அங்கெல்லாம் கல்யாண மண்டபங்கள் கட்ட வேண்டும். பத்து பன்னிரண்டு கல்யாணங்கள் நடைபெறும் விதத்தில் ஹரிஜனங்கள், மற்ற சாதாரண ஏழை மக்கள் எல்லோரும் கல்யாணம் நடத்தக் கூடிய விதத்தில் கல்யாண மண்டபங்கள் அமைக்கப்படவேண்டியது மிக மிக அவசியம். சர்க்காரே ஒரு சட்டம் போட்டுச் செய்தால் கூட பிரயோஜனமாகயிருக்கும். அது மக்களுக்கு, சமூக சேவை செய்வது போலவும் இருக்கும்.

சில கோவில்களில் அதற்குப் பணம் போதாது என்றால் பொது மக்கள் அதற்காக காண்ட்ரிப்யூஷன் கொடுக்க முன்வந்தால் அதற்கு உடனடியாக அனுமதி தந்தால் மக்களுக்கு வசதியாக இருக்கும்.

ஆக, ஆலயப்பிரவேசம், ஏழை ஹரிஜனங்கள் அதிகமாக கோவில்களுக்கு போகும் நிலையில், எல்லோரும் ஓர் குலம், எல்லோருக்கும் ஓர் நிலை என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்வதற்கேற்ப நடந்து கொள்ளவேண்டும். கட்சி வித்தியாசம் இல்லாமல், ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் இல்லாமல், அந்த மதம் இந்த மதம் என்றில்லாமல் எல்லோருக்கும் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல யோசனைகளை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அவற்றின் மீது எனது சில வார்த்தைகளைக் கூறி என் உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் அறங்காவலர்கள் நியமனம் பற்றிச் சொல்லும்போது அறங்காவலர்கள் அறத்திற்குக் காவலர்களாக இருக்கவேண்டுமே தவிர அவர்கள் அறத்திற்கு இடையூறு செய்பவர்களாக இருக்கக்கூடாது என்று எல்லாம் சொன்னார்கள். அவர்கள் அதைப் பற்றிச் சொல்லும்போது ஒன்றை மறந்து விட்டார்கள். அறங்காவலர்கள் யார் யார் அதிகாரங்களை துர்விநியோகம் செய்கிறார்கள், யார் யார் தவறாக நடக்கிறார்கள் என்று அவர்கள் நினைக்கிறார்களோ அந்த அறங்காவலர்கள் அத்தனை பேர்களும் அவர்களுடைய கட்சி ஆட்சி செய்தபோது போடப்பட்ட அறங்காவலர்களே தவிர இந்த அரசு வந்ததற்குப் பிறகு போடப்பட்ட அறங்காவலர்கள் அல்ல என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சில அறங்காவலர்கள் தவறான முறையில் நடப்பதாக பல நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். எங்களுக்கும் கூட அப்படிப்பட்ட தகவல்கள் எல்லாம் வந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. பல இடங்களில் கோவில் நிலங்களை எல்லாம் விற்றுவிட்டதாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அதற்காக இந்த அரசு தனியாக அதிகாரிகளைப் போட்டு ஒவ்வொரு கோவிலுக்கும் எவ்வளவு நிலங்கள், எவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றன என்பதையெல்லாம் பார்த்து அந்த நிலங்களை எடுத்து அந்தக் கோவில்களுக்கு ஒப்படைக்கும் விதத்தில் தனியாக அதிகாரிகளைப் போடலாமா என்பதை அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கோவில்களில் டிபார்ட்மென்டல் ஆடிட் கூடாது என்றும் இப்போதுள்ள முறையே இருக்கவேண்டுமென்றும், அதாவது, லோக்கல் பண்ட் ஆடிட் செய்யும் முறை இருக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள், அது சம்பந்தமாக





இப்போது இருக்கிற முறையே நல்ல முறை என்று தெரிந்தால் அது சம்பந்தமாக பரிசீலனை செய்யப்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கோவில்களுக்கு இருக்கிற நிலங்களுக்கு ஸீலிங் வைத்து அதை பின்பற்றவேண்டும் என்றெல்லாம் கேட்டுக்கொண்டார்கள். இப்போது கூட ஒவ்வொரு கோவிலுக்கும் இருபது ஸ்டான்டேர்ட் ஏக்கர் அதன் சொந்த விவசாயத்திற்காக வைத்துக்கொள்ளலாம் என்றும் மிச்சப்படுகிற நிலங்களை ஐந்து ஏக்கருக்கு குறையாத அளவில் விவசாயிகளுக்கு குத்தகைக்கு விடலாம் என்றும் அப்படி ஐந்து ஏக்கர் விடும்போது தன்னிடத்தில் ஏற்கனவே இருக்கிற குத்தகை நிலம் அல்லது சொந்த நிலம் எல்லாம் சேர்ந்து ஐந்து ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றும் அதிலும் மிச்சப்படுகிற நிலத்தை புதிதாக வருகிறவர்களுக்கு விவசாயத்திற்கு கொடுக்கலாம் என்றும் அதிலும் மிச்சப்பட்டால் கோவாப்பரேட்டிவ் ஃபார்மிங்க்கு கொடுக்கலாம் என்றும் இப்போதே சட்டம் இருப்பதால் அது தேவை இல்லை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கோவில் நிலங்களை யாருக்கும் அடைமானம் செய்யக்கூடாது என்று பக்கத்திலுள்ள மைலம் கோவிலைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். கோவில் நிலங்களை யாருக்கும் அடைமானம் செய்வது கிடையாது. அது கோவில் நிலம் அல்ல புறம்போக்கு நிலம் என்று சொல்லி அது ரெவின்யூ புறம்போக்காக இருப்பதால் அதை ஜாரி செய்து தரவேண்டும் என்று மக்களிடமிருந்து கோரிக்கை வரும்போது அங்குள்ள சம்பந்தப்பட்ட கலெக்டர் அவர்கள் எப்படிச் செய்யலாம் என்பதைப் பரிசீலனை செய்து அப்படி செய்திருக்கலாமே தவிர கோவிலுக்கு சொந்தமான நிலங்களை ஜாரி செய்வது கிடையாது.

பம்ப் செட்ஸ் தேவையா, கிணறுகள் வெட்டுவது தேவையா என்று கேட்டார்கள். கோவிலுக்குள்ள வருமானம் போதாது, கோவிலுக்கு செய்யவேண்டிய காரியத்தையே செய்ய முடியாத நிலை இருக்கும்போது பம்ப் செட்ஸ் தேவையா என்று கேட்கிறார்கள். எந்தெந்தக் கோவில்களுக்கு வாய்ப்பு வசதி இருக்கிறதோ அங்குதான் கிணறுகள் வெட்டி பம்ப் செட்ஸ் வைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. வருமானம் இல்லாத கோவில்களுக்குப்பற்றி சிந்திக்கத் தேவையில்லை. பம்ப் செட்ஸ் வைப்பதற்குக் காரணம் போதுமான அளவிற்கு நெல் வருமானம் வந்தால் நாட்டுக்கு நல்லது என்பதற்காகத்தான். இருபோக விளைச்சலை உண்டாக்கலாம் என்ற எண்ணத்தினால்தான் செய்கிறார்கள். அந்த நல்ல காரியம் செய்வதில் நாமும் அக்கறை காட்டவேண்டும்.

அடுத்தபடியாக, கர்ப்பக்கிரஹப் போராட்டத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். இந்துக்கள் அல்லாதவர்கள் கோவிலுக்குள் நுழையலாமா என்பதுபற்றிச் சொல்லும்போது அப்படி நுழையலாம் என்றும் அதை வரவேற்கிறேன் என்றும் சொன்னார்கள். அதற்காக

அவர்களைப் பாராட்டுகிறேன். கர்ப்பக்கிரஹப் போராட்டம் பற்றி பெரியார் ராமசாமி அவர்கள் சொல்லியிருப்பதாக எல்லாம் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்கனவே இந்தச் சட்டமன்றத்தில் பதில் சொல்லியிருக்கிறார்கள். இந்துக்கள் அல்லாதோர் நுழைவது சம்பந்தமாக சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும் மற்ற உறுப்பினர்களும் சொன்னார்கள். இந்துக்கள் அல்லாதாரை நாம் வலிய வந்துதான் தீர வேண்டும் என்று யாரும் வற்புறுத்தியது கிடையாது. ஆர்க்கியலாஜிக்கல் ப்யூட்டியை, சிற்பங்கள், சித்திரங்கள் போன்றவைகளை கண்டு தெரிந்து கொள்வதற்காக வருகிறவர்களை சட்டத்தை வைத்துக்கொண்டு தடை செய்யக்கூடாது என்பதற்காகத்தான் அதைச் செய்திருக்கிறோம். ஏற்கனவே வெளி நாடுகளிலிருந்து வந்த பல நிபுணர்கள் கோவில்களுக்குள் சென்று அங்குள்ள கலைச் சிறப்பையும், கட்டடக் கலையைப் பற்றியும் தெரிந்து கொள்ள கோவிலுக்குள் போக முடியாத ஒரு நிலை இருந்ததால் இப்படிப்பட்ட இடையூறுகள் தேவை இல்லை என்று கருதப்பட்டு இச் சட்டம் திருத்தப்பட்டது. ஸ்ரீரங்கம் கோவிலுக்கு யுனெஸ்கோ—வினால் 12,000 டாலர் நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதியைக் கூட ஸ்ரீரங்கம் கோவிலுக்குள்ளே சென்று வெளிநாட்டுக்காரர்கள் பார்வையிட்டு அதற்கு வேண்டிய எஸ்டிமேட்ஸ் தயார் செய்து கொடுத்த காரணத்தினால்தான் இந்த 12,000 டாலர் நமக்குக் கிடைக்கிறது. மீனாட்சி அம்மன் கோவிலில் ஆயிரம்கால் மண்டபம் ஒன்று இருக்கிறது. அங்கு எல்லா மதத்தினரையும் நாம் அனுமதிக்கிறோம். ஆயிரம்கால் மண்டபத்தில் கடவுள் வழிபாடு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்தளவிற்கு நாம் அனுமதி கொடுக்கும்போது இந்த அளவிற்கு எங்கும் நாம் அனுமதிக்கலாம் என்ற முறையில்தான் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

ஒன்று அச்சப்பட்டார்கள். உள்ளே நுழைகிறபோது இந்து முறைப்படி கோவிலுக்குள் வருவார்களா என்று அச்சப்பட்டார்கள். நிச்சயமாக ஆங்காங்குள்ள கோவில்களில் உள்ள வழக்கப்படி, ஆங்காங்குள்ள அதிகாரிகள் என்னென்ன கண்டிஷன்ஸ் வைத்திருக்கிறார்களோ அதற்கு உட்பட்டுத்தான் செல்லவேண்டுமென்று ஏற்கனவே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். பூட்ஸ் போட்டுக்கொண்டு வருவார்களே என்று கேட்கவேண்டாம். அந்தந்தக் கோவில்களின் பழக்கவழக்கங்களுக்கு உட்பட்டுத்தான் வருவார்கள் என்ற நம்பிக்கையோடுதான் இதைத் திருத்தியிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. காசிராமன் அவர்கள் சொன்னார்கள், ஒரு ஈ.ஓ. க்கு இரண்டு ஆண்டு காலமாக சம்பளப் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்றும், அந்த ஈ.ஓ. இறந்துவிட்டதாகவும் குறிப்பிட்டார்கள். அந்த ஈ.ஓ.-க்கு பணம் பிறகு பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. கொஞ்ச நாள்





தடங்கல் ஏற்பட்டதற்குக் காரணம், கோவிலில் இருந்து பணம் ரீ இம்பேர்ஸ் செய்யப்படவில்லை என்பதும் ஆடிட் செய்யப்படவில்லை என்பதுதான். அதனால் சிறிது கால தாமதமாகியிருக்கிறதே தவிர வேறு ஒன்று இல்லை.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பழனியம்மாள் அவர்கள் கோயில் நிதியிலிருந்து பல்கலைக் கழகம் வேண்டும், நாதஸ்வரக் கல்லூரி வேண்டும் சிற்ப சாத்திரம் போன்றவைகளுக்கு ஊக்கம் தரவேண்டுமென்று சொன்னார்கள். பல்கலைக் கழகம் என்பது பெரிய விவகாரம். திருப்பதி கோயிலுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 கோடிக்கு மேல் வருமானம் வருகிறது. நம்முடைய தமிழ்நாடு முழுவதும் சேர்த்தாலும் ரூபாய் 4 கோடிக்கு மேல் வரவில்லை. ஆகவே, பல்கலைக் கழகம் கட்ட வேண்டும் என்பது கொஞ்சம் சிரமமான காரியம். நமக்கு கூட வெளி நாட்டு கடவுளைக் கும்பிடுவது தான் தமிழ்நாட்டுப் பண்பாக இருக்கிறது. பக்கத்திலே இருக்கிற கோயில்களுக்கு யாரும் போவது கிடையாது. திருத்தணி இருக்கிறது, அங்கே யாரும் போவதில்லை. திருப்பதிக்கு போகிறார்கள். ஆங்கிலத்திலேகூட சொல்லுவார்கள். The nearer and nearer to the temple, the further and further to God என்று. ஆகவே அப்படி வெளிநாட்டில் கடவுளைக் கும்பிட்டால்தான் அவர்களுக்கு பலன் கிடைக்கும் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கே இருக்கிற சினிமா நடிகைகள் கூட அங்கே இருக்கிற கடவுளைக் கும்பிட்டால்தான் பலன் கிடைக்கும் என்று கருதுகிறார்கள். அவர்கள் இங்கே இருக்கிற மைலாப்பூர் கோயிலுக்கோ, வடபழனி கோயிலுக்கோ போக வேண்டுமென்று எண்ணம் வந்தால் நம் கல்லூரி மட்டுமல்ல, பல்கலைக்கழகமே கட்ட முடியும்.

இன்னும் சொல்லுகிறேன், நம் கோயில் நிதிகளிலிருந்து 5 கல்லூரிகள், 6 உயர்நிலைப் பள்ளிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. அதல்லாமல் நாதஸ்வரக் கல்லூரி ஒன்று பழனியிலே நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இப்போது அண்மையிலே வலிவலத்தில் ஒரு நாதஸ்வரக் கல்லூரியை நான் திறந்து வைத்துவிட்டு வந்திருக்கிறேன். தஞ்சாவூரில் சத்திரம் சார்பாக ஒரு நாதஸ்வரக் கல்லூரி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே நாதஸ்வரக் கல்லூரி போதுமான அளவு இருக்கிறது என்ற காரணத்தால் புதிதாக தேவையில்லை என்று கருதுகிறேன். சிற்பம், சாத்திரம் இவைகளுக்கெல்லாம் கோயில்களிலே பலவிதமான உதவிகள் செய்யப்பட்டு வருகிறது.

தமிழில் அர்ச்சனைசெய்ய அரசாங்கத்திலிருந்து கட்டளை இல்லாமல் இருந்தாலும் அந்தந்த அதிகாரிகள் அதை கவனித்து எந்தெந்த மக்கள் தமிழில் அர்ச்சனை வேண்டுமென்று சொல்லுகிறார்களோ அங்கு நடைபெற்றுக்கொண்டு வருகிறது. ஆகவே அதைப்பற்றி அதிகமாக சொல்லவேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

அவர்கள் இன்னொரு வேண்டுகோளையும் விடுத்தார்கள். அறங்காவலர்களாக நியமிப்பதில் பெண்கள் இடம் பெற வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது அதிகமான அளவிலே பெண்கள் தான் அறங்காவலர்களாக இருக்கிறார்கள் என்றும் அவர்களுடைய கோரிக்கை இன்னும் நல்ல முறையிலே பரிசீலனை செய்யப்படுமென்றும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நமது ம.பொ.சி. அவர்கள் திருப்பதியில் நமக்கு ஒரு பிரதிநிதி வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேவஸ்வம் போர்டை சுட்டிக் காட்டினார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் தேவஸ்வம் போர்டிலே எப்படி இருக்கிறதென்றால், திருவிதாங்கூர்-கொச்சி மகாராஜா தேவஸ்வம் போர்டுக்கு ஏராளமாக சொத்துக்கள் கொடுத்திருக்கிறார் என்ற காரணத்தினாலே, அது கோர்ட்டிற்குபோய், அவர்களுக்கு பிரதிநிதித்வம் கொடுக்க வேண்டுமென்று கூறப்பட்டு, அவர்களுக்கு 2 பிரதிநிதிகள், தமிழ் நாட்டு அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிற ஒரு பிரதிநிதி இருக்கவேண்டுமென்று ஸ்கீம் இருக்கிற காரணத்தால் அங்கே அதைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, ம.பொ.சி. அவர்கள் சொன்னதை பரிசீலிக்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு கோயில்களுக்கு சொத்துக்கள் என்ன, அதிலே வரவு-செலவுகள் என்ன என்றெல்லாம் தெரியவில்லை என்று ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்டார்கள். மற்ற அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். கோயில்களின் ஆபரணங்களை மதிப்பிட வேண்டுமென்றால் அது முடியாத காரியம். அதோடு தொடர்ந்து ஆண்டிற்காண்டு மதிப்பு ஏறுகிறது. இந்த ஆண்டு சவரன் விலை ரூ. 100 என்றால் அடுத்த ஆண்டு ரூ. 130 ஆகிறது. ஆக எந்த அளவிற்கு மதிப்பு போடுவது என்று தெரியவில்லை. பல ஆபரணங்கள் மதிப்பே போட முடியாத நிலை இருக்கிறது. ஆனால் எவ்வளவு எடை இருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். இருந்தாலும் கூட அதற்கு அந்தந்தக் கோயில்களில் ரிஜிஸ்டர்கள் வைக்கப்பட்டு எவ்வளவு ஏக்கரா நிலங்கள் இருக்கிறது. நஞ்சை எவ்வளவு, புஞ்சை எவ்வளவு அதற்கு எவ்வளவு கிஸ்தி என்றெல்லாம் இருக்கிறது. அதைப்போல ஆபரணங்களுக்கும் ரிஜிஸ்டர் எல்லாம் வைக்கப்பட்டு, நன்றாக வேண்டிய அதிகாரிகளைப் போட்டு அதை நாம் ஆடிட் செய்து கொண்டிருக்கிற நிலை இருக்கிறது. அல்லது அப்ரைசர் என்கிற அதிகாரிகளைப் போட்டு அவைகளைப்பார்த்து எடை போடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்துகொண்டிருக்கிறோம், என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிறகு கங்கைகொண்ட சோழபுரத்தைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். கங்கைகொண்ட சோழபுரமும் தஞ்சைப் பெரிய கோயிலும் ஆர்கியலாஜிகல் டிபார்ட்மெண்டில் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தர்மலிங்கம் அவர்கள் கூட சொன்னார்கள், பெரிய கோயிலை விட்டு விட்டு ஸ்ரீரங்கத்தை





யூனெஸ்கோவில் எடுத்துக்கொண்டார்கள் என்று சொன்னார்கள். அதேபோல ம.பொ.சி. அவர்களும் கங்கைகொண்ட சோழபுரத்தைப் பற்றி கவனிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆர்கியலாஜிகல் டிபார்ட்மெண்டு அதிகாரிகள் வருகிற போது, டூயல் கண்ட்ரோல் என்று சொல்லுகிறார்களே, அதைப் போல டபிள் கவர்ன்மெண்டு, நம் அரசாங்கத்திற்கும் தொடர்பு இருக்கிறது, மத்திய அரசாங்கத்திற்கும் தொடர்பு இருக்கிறது. நமக்குள்ள தொடர்பு என்னவென்றால் ஒரு நாள்பெரிய கோயிலுக்குப் போய் சாமியை வணங்கி விட்டு வரலாம். சர்க்கரைப் பொங்கல் கொடுத்தால் சாப்பிட்டு விட்டு வரலாம். ஆனால் கையை சுவற்றில் துடைக்கக் கூடாது. துடைக்க வேண்டுமானால் அவர்களுடைய பர்மிஷன் வாங்க வேண்டும். அதனால்தான் ராஜராஜ சோழனுடைய சிலையைக் கூட அங்கே வைக்க முடியவில்லை. அதே போல கங்கைகொண்ட சோழபுரத்திற்கு ரிப்பேருக்கு இவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டும் கூட அதைச் செய்ய முடியவில்லை. அந்தத் தொகையை அங்கு மின் விளக்கு போடுவதற்கு மாற்றிக்கொள்ளலாம் என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான் யூனெஸ்கோ மூலமாக பெரிய கோயில்களாக மேற்கொள்ளப்பட்டு இப்போது ஸ்ரீரங்கம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக ராமேசுவரத்திலுள்ள பெரிய கோயிலை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு காஞ்சீபுரத்தில் ஒரு பெரிய கோயில். சிதம்பரம், இப்படிப்பட்ட கோயில்களை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு ஒன்றிரண்டு கோயில்களாக எடுத்துக்கொண்டு வருகிற காரணத்தால், கங்கைகொண்ட சோழபுரத்தையும் தஞ்சைப் பெரிய கோயிலையும் எடுத்துக்கொள்ள முடியவில்லை.

அதற்குப் பிறகு இந்த கோயில் திருவிழாக்களை படம் எடுத்திருக்கிறார்கள், அவை வெளிவரவில்லை என்று சொன்னார்கள். ஆனால் அது எடுக்கப்பட்டது 1965-ம் ஆண்டு என்று நினைக்கிறேன். அதை எடுத்து. அதை எப்படி பயன் படுத்துவது என்ற நிலை சரியாக உருவாகாததனால், மத்திய அரசாங்கத்தை அணுகி அதை பயன் படுத்த வேண்டுமென்று கேட்கிறபோது, அதை 14 மொழிகளில் ' டப் ' செய்தால்தான் அதை நாங்கள் பயன்படுத்துவோம் என்று சொல்லி விட்டார்கள். அதனால் அது சரியான முறையிலே செய்ய முடியவில்லை.

கோயில்களுக்கு விளக்குப் போடுவதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இது சம்பந்தமாக இப்போது ஒன்றும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சைவ சித்தாந்த நூல்களை கல்லூரிகளில் பாடமாக வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது நல்ல யோசனை. அது பரிசீலனை செய்யப்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிறகு கடவுள் படங்களைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். அதைப் பற்றி அதிகமான அளவிலே சொல்லத் தேவை இல்லை என்று கருதுகிறேன்.

எல்லா சமயத்தார்களும் அர்ச்சகர்களாக வரவேண்டுமென்று தெரிவித்தார்கள். அதற்கு எல்லா ஜாதிக்காரர்களும் அர்ச்சகர்களாக வருவதற்கு தகுதி இருந்தால் வரலாம். அதைப்பற்றி அதிகமான விவாதம் தேவை இல்லை. என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நமது மாண்புமிகு கிருஷ்ணசாமிக் கவுண்டர் அவர்கள் பேசிய போது தகுதியுள்ளவர்கள் தான் அறங்காவலர்களாக போடப்பட வேண்டும், அதிலே கட்சிவெறி கூடாதென்றெல்லாம் சொன்னார்கள். அறங்காவலர்களாக நியமிப்பது என்றால் அதற்கு சில சட்ட திட்டங்கள் இருக்கின்றன. இன்னார் இன்னார்தான் அறங்காவலர்களாக வரலாம் என்றிருக்கிறது. மனுப் போடும்போது அறங்காவலர்களாக வருவதற்கு இன்னின்ன தகுதிகள் வேண்டுமோ அந்த தகுதி அவர்களுக்கு இருக்கிறது என்று நிரூபித்தால் அவர்களை நியமிப்பதிலே ஆட்சேபணை இருக்க முடியாது. ஆனால் கட்சி வெறியோடு போடுவதாகத் தெரியவில்லை. நாங்கள் வந்த பிறகுதான் அத்தனை கட்சிக்காரர்களையும் அறங்காவலர்களாக போட்டிருக்கிறோம். அதற்கு முன்னாலே காங்கிரஸ்காரர்கள் ஆண்டபோது ஒரு திராவிட முன்னேற்றக் கழகத்தாரை கூட தமிழ்நாடு முழுவதும் தேடிப்பார்த்தாலும் போட்டிருக்க மாட்டார்கள். ஆகவே இப்போது கட்சி வெறி கிடையாது. எல்லா கட்சிக்காரர்களும் அறங்காவலர்களாக போடப்பட்டிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் அதிகமாக இருக்கிறார்கள். சுதந்திராக் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஒரு குறைபாட்டிற்கு ஆதாரமில்லை.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தமிழரசுக் கழகத்தில் ஒருவருமில்லை.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தமிழரசுக் கழகத்தில் நீங்கள் ஒருவர் தான் இருக்கிறீர்கள்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** இங்கே நான் ஒருவன் தான். வெளியிலே ஏராளமான ஆட்களைத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** ஆகவே அந்த குறைபாடு இருக்க முடியாது. திருமுருகன்பூண்டியில் ஒரு எக்சிகூடிவ் ஆபிசரை ஏன் மாற்ற வேண்டுமென்று கேட்டார்கள். அவருக்கு அங்கு நடைபெற்ற விவகாரங்கள் தெரியுமோ என்னவோ. அங்கு சில சிக்கல்கள் எல்லாம் ஏற்பட்டு, அந்த சிக்கல்களுக்கு அந்த எக்சிகூடிவ் ஆபிசர் தான் காரணம். அவர் பெயரில் புகார் வந்த காரணத்தினாலும் நிர்வாக வசதிக்காகவும் மாற்றப்பட்டிருக்கிறாரே தவிர வேறு ஒன்றுமில்லை என்று நான் சொல்லிக் கொள்ள



ஆசைப்படுகிறேன். அவருக்கு மனத் திருப்தி ஏற்படவில்லை என்று நான் கருதுகிறேன். அங்கே அந்த எக்சிகூடிவ் ஆபிசருக்கும் குருக்களுக்கும் தகராறு. அதனால் அந்த கோயில் நிர்வாகமே ஸ்தம்பித்துப் போய், குருக்களை கோயிலை விட்டு மாற்ற முடியாது, எக்சிகூடிவ் ஆபிசரைத்தான் மாற்ற முடியும். அதனால் அப்படிப்பட்ட தகராறுகளெல்லாம் தேவையில்லை என்பதற்காக மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பீர் முஹம்மது அவர்கள் இந்துவிற்கு என்று தனி அறங்காவல்துறை தேவையா, வக் போர்டு என்றிருக்கிறது. அதற்குத் தனியாகத் தேவையா என்று கேட்டு, இரண்டையும் இணைத்து, இந்து அறநிலையத்திற்குக் கொடுக்கின்ற சலுகைகளை அத்தனையையும் வக் போர்டிற்கும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது பரிசீலனை செய்ய வேண்டிய விஷயம்.

கோயில்களுக்கு இனாம் நிலங்களுக்கு விதி விலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல அந்த மசூதிகளுக்கும் அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இனாம் நிலங்கள் என்றால், அது கீழ் வாரமா, அல்லது மேல் வாரமா, குடி வாரமா, இரண்டு வாரமும் சேருமா என்று பார்த்து, செட்டில்மெண்ட் போட வேண்டிய விவகாரம், கோர்ட்டில் அப்பீல் செய்ய வேண்டும். இல்லையென்றால் சிவில் கோர்ட்டிற்குப் போகலாம்.

*ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :* பேரவைத் தலைவரவர்களே, இந்து அறநிலையமும், இஸ்லாமிய அறநிலையமும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டுமென்று நான் கோரிக்கை விடவில்லை. தனித்தனியாக இயங்கிக் கொண்டிருப்பதே சிறப்பானதொன்றாக இருக்கும் என்று மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்து கோயில்களின் இனாம் நிலங்களின்மீது விதி விலக்கு அளிக்க சட்டத் திருத்தத்தைச் சட்டமன்றத்தின் முன் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதைப்போன்று இஸ்லாமிய அறநிலையங்களுக்கும், கிறித்தவ நிலையங்களுக்கும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அரசிடத்தில் கோரிக்கையைச் சமர்ப்பித்தேன். ஏனென்றால், ஹைகோர்ட்டிலும், சுப்ரீம் கோர்ட்டிலும் வழக்குகள் இருந்துகொண்டிருக்கின்றன. தர்ம காரியம் நடைபெற சிரமமாக இருக்கிறது என்ற காரணத்திற்காக. இதை நான் தன்னிலை விளக்கமாகத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். அவர்கள், தனித்தனியாக இருக்க வேண்டும், ஆனால் அறநிலையத்துறைக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகள் அத்தனை

யையும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது சம்பந்தமாக வக் போர்ட் சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள் பரிசீலனை செய்வார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உருவ வழிபாட்டில் நம்பிக்கையில்லாதவர்களைக் கோயில்களில் அனுமதிப்பது சரியா என்று கேட்டார்கள். கடவுளை வணங்குவதற்காக அழைக்கவில்லை. நாங்கள் உள்ளே வந்து சிலவற்றைப் பார்க்க வேண்டுமென்று சொன்னால் அதற்காகப் போகலாம் என்று சொல்லியிருக்கிறோமே தவிர, வேறொன்றுமில்லை. இன்றைக்குக் கூட, இந்து மதக்காரர்கள், இந்துமதத்தில் நம்பிக்கையில்லாத மற்ற மத சாமிகளைக் கும்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாகூர் கோயிலுக்குப் போகிறார்கள், வேளாங்கண்ணிக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அந்தந்த ஊரிலேயே உள்ள கோயிலைக் கும்பிடுவதைவிட, 100 மைல் 200 மைல் சென்று கும்பிட்டால்தான் மதிப்பு என்று நினைக்கிறார்கள். சில பணக்காரர்கள் நினைக்கிறார்கள், பக்கத்தில் உள்ள கோயிலுக்குச் சென்று கும்பிட்டால், ஏழை எளியவர்கள், பஞ்சை பராரிகள் கும்பிடுகின்ற கோயிலில் நாமும் கும்பிடுவதா என்று நினைத்து, ரொம்ப தூரம் சென்று கும்பிடுகிறார்கள். ஆகையால்தான் திருப்பதிக்கு அதிகப் பணம் வசூலாகிக் கொண்டிருக்கிறது. நாகூருக்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் நாகூருக்குப்போவதை நீங்கள் அனுமதிக்கும் பொழுது, நீங்கள் வந்தால் ஏற்றுக்கொள்ளலாம் என்பதைத் தவிர, நீங்கள் வந்து வணங்க வேண்டுமென்ற நோக்கத்தில் அல்ல. இந்துக்களின் நோக்கமும் அப்படி இருக்கவில்லை. எனவே, அதற்காகச் சட்டம் மாற்றப்படவில்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசுப்பிரமணியன் அவர்கள், அந்தந்த மாவட்டத்தின் சார்பிலேயிருக்கின்ற கோயில்கள் அத்தனையையும் டி.சி. கண்ட்ரோலில் விடக்கூடாது, ஏழை எளியவர்கள் அதிகதூரம் சென்று வாதாட முடியாது, எல்லாவற்றையும் ஏ.சி. கண்ட்ரோலிலேயே விட வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுதிருக்கும் முறையில், லீகல் மேட்டர்ஸ்களை ஜட்ஜ் என்ற முறையிலே டி.சி. விசாரிக்கிறார் எனவே, ஏ.சி.-க்கு மாற்றுவது என்பது முடியாத காரியம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கொளஞ்சியப்பர் கோவிலைப்பற்றிச் சொன்னார்கள். எனக்கும் நிதரிசனமாகத் தெரியும். கொளஞ்சியப்பர் கோவிலுக்கு அறங்காவலர் நியமனம் செய்வது சம்பந்தமாக கமிஷனருக்கு மனுக்கள் வருகின்றன. அவைகளைப் பரிசீலனை செய்யும்பொழுது, கொளஞ்சியப்பர் கோவிலுக்கு அறங்காவலராகப் போடப்படுகின்றவர்கள், சரியான தகுதி பெற்றிருக்கிறார்களா என்றுதான் பார்க்க முடியுமே தவிர; கொளஞ்சியப்பர் கோவிலுக்கும், மனுப்போட்டிருப்பவர் இருக்கும் ஊருக்கும் எத்தனைமைல் தூரம் என்றோ, அவர்கள் கோயிலுக்கு அடிமைப்பட்டவரா, அடிமைப்படாதவரா என்றோ





பார்ப்பது கஷ்டமான காரியம். இருந்தாலும்கூட, அது அவ்வளவு சரியல்ல என்றுகூடச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். ஆனால் போட்டபிறகு நீக்குவது என்பது முடியாத காரியம். மேலும் அப்படி அறங்காவலர் போடுகின்ற நேரம் வரும்பொழுது அது கவனிக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, போடக்கூடாது என்ற எண்ணத்தில் இல்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கட்சி வித்தியாசம் பார்ப்பதாகச் சொன்னார்கள். கட்சி வித்தியாசம் பார்த்திருந்தால், அந்தக்கிராமத்திலேயே எங்கள் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

கோயில் நிலங்களுக்கு உச்சவரம்பு பற்றிச் சொன்னார்கள். அது வேறு விவகாரம். திரு. தர்மலிங்கம் அவர்கள் கேட்டவைகளுக்கு பதில் சொல்லிவிட்டேன் என்று கருதுகிறேன்.

திரு. சுரேந்திரன் அவர்கள் சொன்னார்கள், நம்பிக்கையுள்ளவர்களைப் போட வேண்டுமென்று. அறங்காவலர் போடுவது என்றால் Those who profess Hindu Religion may be appsinted as trustees என்றிருக்கிறது. இந்துமதத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் வரலாம் என்றிருக்கிறது. மனுப்போடுகிறவர்கள், அவர்களே கையெழுத்துப் போடுகிறார்கள், கடவுள் நம்பிக்கை உண்டு, அறங்காவலராகப் போட வேண்டுமென்று சொல்லுகிறார்கள், போடுகிறோம். வேறு டிரஸ்ட் உண்டா, இல்லையா என்பதைப்பற்றிக் கவலையில்லை. ஆகவே, நம்பிக்கையுள்ளவர்களைத்தான் போட்டுக்கொண்டு இருக்கிறோமே தவிர, வேறொன்றுமில்லை.

அர்ச்சகத் தொழிலில் எல்லா ஜாதியாரும் வரலாம் என்பதை வரவேற்றிருக்கிறார்கள்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தனுஷ்கோடி அவர்கள் பரம்பரை தர்மகர்த்தா மாற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதெல்லாம் யோசிக்க வேண்டிய விவகாரம்.

மேளக்காரர்கள், குருக்கள் இப்படிப்பட்டவர்களுடைய சம்பளங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது நல்ல யோசனை என்று சொல்லிக்கொள்ளுகின்றேன். யோசித்துக் கொண்டிருக்கிறோம். அதிலே என்ன சிக்கல் என்றால், பழனி கோயிலுக்கு ஆண்டு ஒன்றுக்கு 40 இலட்சம் ரூபாய் வருமானம் வருகிறது என்றால், திரு. தனுஷ்கோடி அவர்களின் தொகுதியில் 40 ரூபாய்கூட வருமானம் இல்லாத கோயில் இருக்கிறது. அங்கே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள், இங்கே கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அங்கே கொடுக்கும் தொகையை இங்கே கொடுக்க முடியாது. பலயிடங்களில் குருக்கள், சுவாமிக்கு விளக்குப் போடக்கூட வசூல் செய்து போட

[திரு. கே. வி. சுப்பையா] [1970 மார்ச் 24

வேண்டிய நிலையில் இருப்பதால் இப்படிப்பட்ட சிக்கல்கள் இருக்கிறதே தவிர, கொடுக்கக்கூடாது என்ற கெட்டெண்ணம் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** தலைவரவர்களே, நல்ல வருமானம் வரக்கூடிய கோயில். அங்கு இசை வேளாளர்களுக்கு பாம்பரை காலமாக, அவர்களுக்குக் கொடுத்திருக்கும் மானியம் இருந்தது. அந்த மானியத்தை மாற்றிவிட்டார்கள். அந்த மானியத்தைக் கொடுத்தால்கூட உதவிகரமாக இருக்கும். அதைக்கொடுக்க அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** தலைவரவர்களே, மானியத்திலே இரண்டுவிதம் உண்டு. சர்வீஸ் மானியம் என்று ஒன்று. சர்வீஸ் மானியம் கொடுக்கப்பட்டிருந்தால், சர்வீஸ் செய்ததற்கு மானியம் நிச்சயமாகக் கொடுக்கப்படும். சர்வீஸ் மானியம் இல்லாதவற்றைக் கோயிலுக்கு எடுத்துக்கொள்ளுவார்கள் அவர்களே சிலயிடங்களில் கிரயம் செய்து விடுகிறார்கள். ஆகவே, அந்த மாதிரி ஏதாவது இருந்தால் நிச்சயமாகப் பரிசிலனை செய்யப்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். மடாதிபதிகளையெல்லாம் ஒழிக்க வேண்டுமென்று சொன்னீர்களே, ஒழிக்கவில்லையே என்று சொன்னார்கள்.

*** திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவரவர்களே, ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன், அமைச்சரவர்களிடத்தில். முதலாவதாக, அறத்துறை மானிய விவாதத்திற்கு மிக விரிவாகவும், சுவையாகவும் விடையளித்திருக்கிறார்கள்; அதற்காகப் பாராட்டுகிறேன். முக்கியமாக இங்கே. கோயில்களின் சொத்துக்களையும், நிலங்களின் அளவுகளையும், மதிப்பையும் அறிக்கையில் தர வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் வற்புறுத்தினார்கள், எப்படி மதிப்பீடு செய்வது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அணிகலன்களுக்கு வேண்டுமானால் மதிப்பு மாறிக்கொண்டே போகலாம். ஆனால், கட்டடங்கள், நிலங்கள், வருவாய்; வரவு-செலவு இதெல்லாம் ஒன்றும் மதிப்பிட முடியாதது அல்ல. ஆண்டுதோறும் நடக்கும் வரவு-செலவு, போன ஆண்டிலே வந்தது, போன ஆண்டை விட இந்த ஆண்டிலே வளர்ச்சியா அல்லது தளர்ச்சியா என்ற விவரங்களை, ஒவ்வொரு துறைக்கும் கொடுக்கப்படுவதைப் போன்று கொடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால், நாம் இந்த விவாதத்தைச் சுவையாக நடத்திக்கொண்டிருக்க முடியாது. ஆண்டின் வரவு-செலவுத் திட்டம், சொத்துக்களின் குத்து மதிப்பு, நிலத்தைப் பற்றிய விவரம் ஆகியவை அறிக்கையில் அடுத்த ஆண்டாவது இருக்க வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்தி, விளக்கம் பெற விரும்புகிறேன்.



1970 மார்ச் 24]

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** தலைவரவர்களே, நமது சிலம்புச்செல்வர் திரு. ம. பொ. சி. அவர்கள் சொன்ன யோசனை நல்ல யோசனை, அதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒவ்வொரு கோயிலுக்கும் தனித்தனியாகச் சொத்து இருக்கிறது, வரவு-செலவு இருக்கிறது. தனித்தனியாக பட்ஜெட் போடுகிறார்கள். எல்லாவற்றையும் சேர்த்துப் போடுவது கஷ்டமாக இருக்கிறது. இருந்தாலும் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும். மொத்த வருமானம், மொத்த சொத்து கொடுக்க முடியுமே தவிர, தனித்தனியாகக் கொடுக்க முடியாது, அதனால் சிக்கல் ஏற்படும்.

அடுத்தபடியாக மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சில நல்ல யோசனைகளையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். மடாதிபதிகளை ஒழிக்க வேண்டும் என்று சொன்ன கட்சி இன்னும் மடாதிபதிகளை ஒழிக்காமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள் என்று கருதுகிறேன். அந்தக் காலத்தில் மடாதிபதிகளைப் பார்ப்பதே முடியாத காரியமாக இருந்தது. ராஜாக்களை பார்த்துவிடலாம், மந்திரிகளைப் பார்த்து விடலாம். மடாதிபதிகளை பார்க்க முடியாது. மந்திரிகளைக் கூட மடாதிபதிகள் பார்க்க மாட்டார்கள். அப்படிப் பார்ப்பது பாப காரியம் என்று நினைத்தார்கள். இன்றைக்கு மடாதிபதிகள் நம்மையெல்லாம் பார்க்கலாம் என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள். அதுவே முன்னேற்றம் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுது மடாதிபதிகள் நம்முடைய கொள்கைக்கு ஒத்து வருகிறார்கள். ஒரு மடாதிபதி இன்னொரு மடாதிபதியை பார்க்கமாட்டார் அந்தக் காலத்தில்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** மடாதிபதியை எந்த இடத்தில் எப்படி சந்திக்கலாம் என்பது உங்களுடைய நாடகத்தில் வருகிறது.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** அது நாடகத்தில் இருக்குமே தவிர, நடைமுறைக்கு வரமுடியாது. மடாதிபதி பிறரை பார்ப்பதே தவறு என்று இருந்த காலத்தைவிட்டு, நம்முடைய நிலைக்கு இன்று இறங்கி வந்திருக்கிறார்கள். அதற்காக அவர்களைப் பாராட்டவேண்டும். அவர்கள் நம்முடைய கொள்கைக்கு ஒத்து வருகிற காரணத்தினால் மடாதிபதிகளை, ஆட்களை, ஒழித்துவிடவில்லை, ஆனால் அவர்களுடைய கொள்கைகள் அனைத்தையும் ஒழித்துவிட்டதாகத் தான் பொருள் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எல்லா ஜாதியினரும் அர்ச்சகராக வருவதற்கு ஆட்சேபனை இல்லை என்று சொன்னார்கள். அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். பயிற்சி அளிக்கவேண்டும் என்று சொன்னார்கள்.

அதையும் ஒத்துக்கொள்கிறேன். அதற்காக பள்ளி திறப்பது பற்றி இந்த அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கோவில்களில் அனுமதிக்கும்பொழுது, அங்குள்ள வழிபாட்டு முறைகளை மீறாமல் அனுமதிக்கவேண்டும் என்று சொன்னார்கள். அந்த வழிபாட்டு முறைகள் மீறப்படமாட்டாது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கல்லூரிகளுக்கு நிதி வசூல் செய்வது சம்பந்தமாகச் சொன்னார்கள். கோவில்களில் வருகிற வருமானத்தை வைத்துக்கொண்டு கல்லூரிகள் கட்டுவதா என்று சொன்னார்கள். இதில் நான் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு பழனி தேவஸ்தானத்தை எடுத்துக்கொண்டால், அது ஒரு முனிசிபாலிடி. அங்கு தான் எல்லாவற்றையும் செய்யவேண்டும், அதற்கு தான் அந்தக் கோவில் பணத்தை பயன்படுத்தவேண்டும் என்று சொன்னால், அந்த முனிசிபாலிடியில் இடமே இல்லை. தங்கத்திலே கூட அங்கே ரோடு போடலாம். அந்தக் கோவிலுக்கு வருகிற பணம், நாஷனல் டெம்பிள் என்ற முறையிலே தமிழ்நாடு முழுவதிலுமுள்ள மக்கள் அங்கே போய் தரிசித்து காணிக்கை செலுத்துகிறார்கள். மாண்புமிக காங்கிரஸ் கட்சி கொறடா விநாயகம் அவர்களின் தொகுதியில் திருத்தணிக் கோவிலுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13 லட்சம் வருமானம் வருகிறது. திருப்பதிக்கு வந்து போகிறவர்கள், சென்னையிலிருந்து வருகிறவர்களெல்லாம் அங்கே போய் வழிபாடு செய்கிறார்கள். அந்தந்த ஊரிலுள்ள கோவில் வருமானத்தை அந்தந்த ஊரிலேயே பயன்படுத்தவேண்டும் என்று சொன்னால், கிராமங்கள் முன்னேற முடியாது. மிச்சமுள்ள பணத்தை எடுத்துத் தான் கல்லூரிகள் கட்டுவது போன்ற காரியங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறோம். கடவுளுக்குச் செய்ய வேண்டிய 6 கால பூஜையும் செய்துவிட்டு, முன்பு என்னென்ன செய்தார்களோ அதையெல்லாம் அப்படியே செய்துவிட்டு, சர்க்கரைப் பொங்கல் என்றால் அதையும் செய்துவிட்டு, ஒரு கரண்டி நெய் கூட குறையாமல் எல்லாவற்றையும் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டு, மிச்சம் ஏதாவது இருந்தால், அதை மக்களுக்குப் பயன்படுகிற வகையில் செலவழிக்கலாம் என்பது தான் கருத்து. எங்கு கல்லூரிகள் தேவைப்படுகிறதோ, எங்கு பணம் அதிகமாக இருக்கிறதோ அங்கே மக்களுக்கு பயன்படக்கூடிய காரியத்திற்காக மீதமுள்ள பணத்தை செலவழிக்கிறோம்.

மாண்புமிகு கொறடா அவர்கள் திருத்தணிக் கல்லூரிக்கு திருத்தணிக் கோவிலிலிருந்து பணம் வேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர்களுடைய கோரிக்கை அனுதாபத்தோடு கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலைமை இருக்கிற





காரணத்தினால், எங்கே பணம் மிச்சம் இருக்கிறதோ, அந்தக் கோவிலுக்கு செய்யவேண்டியதையெல்லாம் செய்தது போக, அந்த ஊருக்கு செலவழித்தது போக, மிச்சம் இருந்தால், மக்களுக்கு பயன்தாத்தக்க வகையில் செலவழிக்கப்படுகிறது. மக்களிடமிருந்து தான் கோவிலுக்குப் பணம் வருகிறது. கோவிலுக்கும் பணம் வேண்டும், மக்களுக்கும் பணம் வேண்டும். கடவுளை நம்பிக்கொண்டு தான் மக்கள் இருக்கிறார்கள். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்று கூறப்படுகிறது. கடவுளை நம்பியிருக்கிறவர்களை கைவிடாமல் இருக்கவேண்டும். கோவில் பணமும் மக்களுக்குப் போகவேண்டும். மக்கள் சுபிட்சமாக இருந்தால் தான், கடவுளுக்குப் பணம் போகும். கடவுளுக்கும் வருமானம் வரவேண்டும். நாமும் நன்றாக இருக்கவேண்டும். கடவுளும் நன்றாக இருக்கவேண்டும். நாம் அவருக்கு உதவி, அவர் நமக்கு உதவி என்ற எண்ணத்தில் தான் கடவுளுக்குச் செலவழித்தது போகமிச்சமிருப்பதை மக்களுக்குப் பயன்படுத்திக்கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமண மண்டபங்கள் தேவை என்று சொன்னார்கள். இந்த மார்ச்சு மாதத்தில் மட்டும் பல இடங்களில் நான் 10 திருமண மண்டபங்களுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் ஒரு மாதத்தில் அவ்வளவு திருமண மண்டபங்களுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன். திருச்சி,கோவை,சேலம், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் 1970-ம் ஆண்டு முடிவதற்குள் 13 திருமண மண்டபங்கள் ஏற்படப்போகின்றன. மதுரைப் பகுதியிலே பல திருமண மண்டபங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். இதெல்லாம் நல்ல ஏற்பாடு, ஏழைகளுக்கு பயன்படுகிற ஏற்பாடு. ஒரு திருமணத்திற்கு கொட்டகை போடுவதென்றால் கூட ரூ. 500 ஆகிவிடும். திருமண மண்டபங்களைக் கட்டினால் ரூ. 25, 50 வாடகை கொடுத்தால் போதும். அப்படிப்பட்ட நல்ல காரியங்களையெல்லாம் ஏழை மக்களுக்குப் பயன்படவேண்டும் என்கின்ற எண்ணத்தில் செய்துகொண்டிருக்கிறோம். இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருவாரூரில் ரூ. 1,30,000 செலவில் கட்டப்பட்ட திருமண மண்டபத்தை திறந்து வைத்தார்கள். அன்று கூட நான் சீர்காழியில் தர்மபுரம் ஆதினத்தின் சார்பில் ரூ. 1.50,000 செலவில் கட்டப்பட இருக்கிற திருமண மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டினேன். நிறைய திருமண மண்டபங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். திருமணங்கள் அதிகமாக நடக்கட்டும். ஆனால், குழந்தைகளை அதிகமாகப் பெற்றுக் கொள்ளக்கூடாது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். (சிரிப்பு) திருமண மண்டபங்களை அதிகமாக கட்டிவிட்டார்களே, கவலை இல்லை என்று சொல்லி, குழந்தைகளை அதிகமாக பெற்றுவிடக் கூடாது. நான் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் கூறிய கருத்துக்களுக்குக் கூடுமான வரையில் பதில் அளித்திருக்கிறேன் என்று நம்புகிறேன். என்னுடைய பதில் அவர்களுக்கு மன நிறைவை அளிக்கும் என்று நான்

கருதுவதால, அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தாமல் திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்** : என்னுடைய பேச்சைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கு விளக்கம் கொடுப்பதற்கு உரிமை வேண்டும். தயவு செய்து எனக்கு அனுமதி தர வேண்டும். அவர்கள் சொன்னதையெல்லாம் ஆமாம் என்று நான் கேட்டுக்கொண்டிருந்துவிட்டால், மக்கள் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்? ஆகவே ஒரு சிறிய விளக்கம் தருவதற்கு அனுமதி கோருகிறேன்.

திருமுருகன்பூண்டி கோவில் நிர்வாக அதிகாரியைப் போதுமான ஆதாரம் இல்லாமல் திடீரென்று மாற்றினார்கள் என்று சொன்னேன். அப்படியில்லை, அவர் பேரில் தவறு இருக்கிறது, அதனால்தான் மாற்றினோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அண்மையில் அவர்களுக்கு முன்னாலிருந்த நிர்வாக அதிகாரியின் பேரில் ஏராளமான குற்றங்குறைகள் இருந்தன. அப்படியிருந்தும் அவர் நீண்ட நாள் அங்கே நீடிக்கப்பட்டிருந்தார். இவர் மீது குற்றம் எதுவும் இல்லை. அவர் பக்கத்திலுள்ள திருப்பூர் கோவிலில் நிர்வாக அதிகாரியாக இருந்து. நேர்மையாக நடந்து கொண்டிருக்கிறார் என்று அந்தக் கோவில் சம்பந்தப்பட்ட மக்களும் சொல்லியிருக்கிறார்கள். முன்பிருந்தவர் ரூபாய் 100 வருவாய் வந்தால், ரூ. 50 மட்டும் கணக்கில் எழுதிவிட்டு மீதி ரூ. 50-ஐ சாப்பிட்டுக்கொண்டிருந்தார். முழுப் பணத்தையும் வரவு வைக்கவில்லை. முன்னமே இருந்த நிர்வாக அதிகாரி செய்த தவறைத் திருத்தி, நேர்மையான முறையில் 100-க்கு 100 வரவு வைத்தார் இந்த நிர்வாக அதிகாரி. அங்கு இருக்கும் வட்டச் செயலாளர் ஒருவர் கொடுக்க முடியாது என்று சொன்னார். மற்றவர்களுக்கு கொடுத்ததுபோல் அவருக்கும் நோட்டீஸ் கொடுத்து பணத்தை வசூல் செய்வதற்கு முயற்சி எடுத்துக் கொண்டார். நோட்டீஸ் கொடுத்தார் என்ற 'தவறுக்காக' மாற்றப்பட்டிருக்கிறார். வேறு குற்றம் ஒன்றும் இல்லை. அந்தக் கோவில் தர்மக்கர்த்தாக்கள், அந்தத் தொகுதியிலுள்ளவர்கள், அவரைத் தான் நீடிக்கவேண்டும். அவர் நேர்மையாக நடந்துகொள்கிறார் என்று சொல்லி, நானும் அமைச்சர் அவர்களுக்கு எழுதியிருந்தேன். தயவு செய்து விசாரணை செய்து, அவர் பேரில் குற்றம் இருந்தால், பிறகு அவரை மாற்றுவது பற்றி முடிவு செய்யுங்கள் என்று கூட சொன்னேன். ஆனால், நேர்மையாக நடந்த ஒரே தவறுக்காக அவர் மாற்றப்பட்டார் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சு. துரைசாமி** : தன்நிலை விளக்கம் கூம் விரும்புகிறேன். கனம் உறுப்பினர் அவர்கள் பேசுகிறபொழுது என்னைப் பற்றி குறிப்பிட்ட காரணத்தினால் தன்நிலை விளக்கம் ஒன்றை தெரிவித்துக்கொள்கிறேன். திருமுருகன்பூண்டிக் கோவில் இருக்கிற எக்ஸிகியூடிவ் ஆபீசர் ஏற்கனவே பல கோவில்களில் முறை கேடாக



நடந்துக்கொண்டதாக அறநிலையத் துறையினருக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : உங்களைப் பற்றி ஏதாவது சொல்லியிருந்தால் அதற்கு விளக்கம் கொடுக்கலாம். மற்றவர்களைப் பற்றிச் சொன்னால், அவர்களை டிஃபெண்டு பண்ணுவதற்கு இலாகா இருக்கிறது. அமைச்சர் இருக்கிறார். பி. ப.

12-30 **திரு. சு. துரைசாமி** : நான் சொல்லித் தான் மாற்றியதாக அங்கத்தினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் இந்த மன்றத்திலே

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா** : தலைவர் அவர்களே, ஒரு ஈ.ஓ. க்கு இவ்வளவு பெரிய விவகாரம் வந்திருப்பது வேண்டியதில்லை. சாதாரணமான அதிகாரியைப் பற்றிப் பேசத் தேவையில்லை என்ற காரணத்திற்காகத்தான், ஈ.ஓ. பற்றி அதிகமாகப் பேசாமல், நிர்வாக வசதிக்காக மாற்றப்பட்டார் என்று தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிப் பேசுவது அந்த ஈ.ஓ. அவர்களுக்கே கெடுதல் ஏற்படும் என்று நினைக்காமல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கே இது சாதகம் இல்லை, நிர்வாக வசதிக்காக என்று சொல்லிவிட்ட பிறகு அதில் தலையிட யாருக்கும் உரிமை இருக்கிறதா என்பது சந்தேகம் தான். அதிகாரிகளை மாற்றுவது. போடுவது இதிலெல்லாம் தலையிடுவது நல்லதல்ல. ஆகவே, இந்த விவகாரத்தை இந்த அளவோடு நிறுத்திக் கொண்டால் நல்லது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைமுன்னுள்ள கேள்வி:— "நிதிக் கோரிக்கை எண். 9-எ 1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 40,83,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழகப்பட்டது.

**(ஆ) நிதிக் கோரிக்கை எண் 21—சின்கோனா.**

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்** : தலைவர் அவர்களே, ஆளுநர் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 21—சின்கோனா* என்ற தலைப்பின் கீழ் ரூ. 55,59,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

---

* சின்கோனாத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு நான்காவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss policy, I move the motion standing in name, namely—

"That the allotment of Rs. 55,59,600 under Demand No. 21—Cinchona—be reduced by Rs. 100 ".

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss policy I move the cut motion standing in my name, namely—

"That the allotment of Rs. 55,59,600 under Demand No. 21—Cinchona—be reduced by Rs. 100. "

*திரு. ஏ. அ. சுப்பராஜா :* தலைவர் அவர்களே, சின்கோனு உற்பத்தி செய்தும் கூட, தனியாரிடம் இருந்து சின்கோனு மரப் பட்டை வாங்க வேண்டிய நிலையைப் போக்க, இன்னும் பல மலைப் பிரதேசங்களில் வளர்ப்பு திட்டத்தை விஸ்தரிப்பது குறித்து விவாதிக்க, " நிதிக் கோரிக்கை எண். 21—சின்கோனு—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 55, 59,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

*திரு. வி. கே. கோதண்டராமன் :* தலைவர் அவர்களே, அந்நிய நாட்டுச் செலவாணி பெற்றுத்தரும் இந்த இலாகாவிற்கு மேலும் அதிகப்படியான பணம் ஒதுக்கும் அவசியத்தைப் பற்றி விவாதிக்க, " நிதிக் கோரிக்கை எண். 21—சின்கோனு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கபடுகின்ற ரூ. 55,59,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**(இ) நிதிக் கோரிக்கை எண் 35—காட்டுவளத் துறை.**

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

" நிதிக் கோரிக்கை எண். 35—காட்டுவளத் துறை—என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,98,21, 100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும் "

THIRU R. PONNAPPA NADAR : Sir, to discuss policy, I move the cut motion standing in my name, namely—

" That the allotment of Rs. 1,98,21,100 under Demand No. 35—Forest Department—be reduced by Rs. 100. "

DR. H. V. HANDE : Sir, discuss policy, I move the cut motion standing in my name, namely :—

" That the allotment of Rs. 1,98,21,100 under Demand No 35—Forest Department—be reduced by Rs. 100. "

*திரு. ஏ. அ. சுப்பராஜா :* தலைவர் அவர்களே, ஏழை மக்கள் காட்டில் சிறு சுள்ளிகள் பொறுக்கி அதை விற்றுப் பழைப்பவர் களுக்கு, அரசாங்கம் வசூலிக்கும் கட்டணத்தை எடுத்து விடாதது

* காடுகள் துறை பற்றிய கொள்கை விளக்க குறிப்பு ஐந்தாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



குறித்து விவாதிக்க, " நிதிக் கோரிக்கை எண் 35—காட்டுவள துறை—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,98,21,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

*(ஈ) நிதிக் கோரிக்கை எண் 44—காட்டுவள மூலதனச் செலவு*

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் : " நிதிக் கோரிக்கை எண். 44—காட்டுவள மூலதனச் செலவு—என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,43,59, 700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

DR. H. V. HANDE : Sir, to discuss policy, I move the cut motion standing in my name namely—

" That the allotment of Rs. 1,43,59,700 under Demand No. 44—Capital Outlay on Forest—be reduced by Rs. 100. "

*திரு. இல. பலராமன் :* தலைவர் அவர்களே, பொதுப்பணி ஏரிகள் உள்ளாட்சி மன்ற ஏரிக்கரைகளில் பலன் தரும் மரங்களைப் பயிர் செய்ய ஏற்பாடு செய்வது குறித்து விவாதிக்க,

" நிதிக் கோரிக்கை எண். 44—காட்டுவள மூலதனச் செலவு—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,43,59,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் "

என்கிற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

*திரு. வி. கே. கோதண்டராமன் :* தலைவர் அவர்களே, அரசுக்கு வருமானத்தை அளிக்கும் சந்தன மர உற்பத்தியை அதிகப் படுத்தவும் நோய் பரவாமல் தடுத்து அதற்கான தீவிர ஏற்பாடுகள் செய்வதையும் பற்றி விவாதிக்க :—

" நிதிக் கோரிக்கை எண். 44—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,43,59,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி :* தலைவர் அவர்களே, கோவில்பட்டி தாலுக்கா வைப்பாற்றின் இருகரை ஓரப்பகுதிகளிலும் வேம்பார்—குரங்குடி சேரிப்பகுதிகளிலும் புதிய காடுகள் உருவாக்குவது பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 44—காட்டு வளமூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,43,59,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுந் தீர்மானத்தை முன் மொழிகிறேன் ".

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோக்ரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மாண்புமிகு உறுப்பினரும் ஐந்து நிமிஷத்திற்கு மேல் எடுத்துக் கொள்ளாமல் பேச வேண்டும்.

[1970 மார்ச் 24

* THIRU K. S. KOTHANDARAMIAH : Hon. Speaker, Sir, I wish to say a few words on Demand No. 35 relating to the Forest Department. Art is great and life is very short. Similarly the subject of forest is very vast and interesting, but the time at my disposal is very short. Though I will not be able to do any justice to the subject, yet I wish to say a few words on the Forest Demand.

As is stated in the note given to us, the forest area in our State is very very less. It is not even one-third of the Land area; it is only seventeen per cent of the land area. There is one difficulty. To a large extent, our State is not in the south-west monsoon area and does not have the benefits of that monsoon rain. Our forests are situated in dry lands or dry tracts. Therefore the need for improving the forests is very great. In spite of this handicap, our Forest Department with the help of the Government has been able to do a lot of improvement. It has been able to earn a revenue of Rs. 337 lakhs in 1968–69, which is only a little less than double the sum of the present Demand, namely Rs. 1,98,21,100.

Forests are important. The prosperity or the poverty of a country depends mostly upon the poverty or prosperity of its forests. The economy of a country, the agriculture of a country, the food position of a country, the beauty of a country—everything depend upon the forests. Therefore a great responsibility for the development of forests devolves not only on the Government and the Department but also on every man in the country.

In the forests in our country we have got more deciduous trees, and the number of coniferous or evergreen trees are very very small. We have to make a study of forests in foreign countries and try to introduce these trees in the forests of our country. Minor produce—tamarind, soapnut, grazing lands, fruit trees, wild animals-so many things come under the term ' Forests ' and the Forest Department has to attend to these things. The amount that is given under this Demand is very, very meagre, compared to the plans and programmes prepared by the Department, and I wish that more funds will be allotted.

The forests in the Dharmapuri district, especially those in Hosur taluk, have unfortunately been completely forgotton. It is not mentioned. Somehow the officers or the Hon. Ministers forget the Dharmapuri district, because even now they seem to think that this is a part of Salem district. In Hosur taluk, the forest occupies one-third of the entire extent. There are about seven lakhs acres of land and the forest area is about two and a half lakhs of acres. With regard to the forests in Dharmapuri district, one of the District Collectors, who wrote the District Gazetteer during the last century, has said :

I doubt whether the same hand that created the Hosur taluk which is cool and beautiful also created Tiruchengode taluk where it is a very hot and the heat is scorching.



1970 மார்ச் 24] [Thiru K. S. Kothandaramiah]

This clearly shows that where the forests are, the country becomes beautiful and the climate becmoes cool. Therefore he was able to say so.

With regard to the forests in Denkanikottah area in Hosur taluk, they are good forests. Sometime back the lac industry was thriving there. About 30 or 35 years ago the Government encouraged the lac industry and even villagers there used to cultivate lac trees. The Government were getting a lot of income from that industry. But unfortunately gradually that was given up. Even now I have read in the Brochure circulated to this House that the Government have been able to secure some profit from lac in the State. But if the lac industry is improved, I think the Government will not only get a large profit but the people there also will get some work and income.

Next, with regard to sandalwood, Hosur taluk is the best place for the cultivation of sandalwood. I think sandalwood trees are there since one and a half centuries ago. We can improve the sandalwood trees and also arrange for the extraction of sandalwood oil. In this connection, I wish to point out that the people in the Kuppam taluk in the Chittoor district of Andhra Pradesh come to the Hosur taluk and purchase sandalwood. They take the wood to their area, that is, Kuppam and then extract oil from sandalwood and get large profits. If the Government also can formulate a scheme and provide financial help, a sandalwood factory at Hosur can be established.

(At this stage Mr. Speaker sounded the gong)

* திரு. க. மு. கதிரவன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1969–70-ல் காட்டுவள நிர்வாகம் குறித்த முக்கிய கூறுகளும், 1970-71-ம் ஆண்டிற்கான வேலைத்திட்டங்களும் குறித்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் பேசுவதற்கு அனுமதி கோருகிறேன். இந்தக் காட்டுவளத்தைப்பற்றி தேசியக் கொள்கை ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். இந்திய நாட்டைப் பொறுத்த வரையில் மொத்த நிலப்பரப்பில் 33 சதவிகிதம்தான் காடுகளாக அமைந்திருக்கின்றன. அதிலும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இங்கேயுள்ள நிலப்பரப்பைக் கவனித்தால் ஏறத்தாழ 17 சதவிகிதம்தான் காடுகளாகக் காட்சியளிக்கின்றன. அதிலும் தமிழகத்திலே இருக்கின்ற காடுகள் பெரும்பாலும் வறண்ட காடுகளாவே காட்சியளிக்கின்றன. இந்தக் காரணத்தினுலேதான் மழை குறைந்து, உற்பத்தி குறைகிறது என்பது நமக்குக் கண்கூடாகத் தெரிகிறது.

நம் வீட்டுத் தேவைகளுக்காகவும், விறகுத் தேவைக்காகவும் பல மரங்கள் அதிகமாகத் தேவைப்படுவதால் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு முறையில் மூலப்பொருள்களாகக் கொண்ட மரங்கள் தேவைப்படுவதால் மரங்கள் வெட்டப்பட்டு, காடுகள் அழிக்கப்படுகின்றன. காடுகளைப் பேணி வளர்க்கும் முறையும், பாதுகாக்கும் முறையும் வெகுவாகக் குறைந்து வருகிற

காட்சியை நாம் பார்க்கிறோம். நம் கண்களின் முன்னாலேயே இயற்கைக் காடுகள் அழிக்கப்பட்டு வருவதை நாம் பார்த்து வருகிறோம். என்னுடைய தென்காசி தொகுதியிலே செங்கோட்டை பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலையைப் பார்த்தால், நாளுக்கு நாள் மலைக்காடுகள் அழிந்துகொண்டுவருவதைக் கண்கூடாகக் கண்டுகொண்டு வருகிறோம். இந்தக் காடுகள் அழிக்கப்படுவதனால் மழைவளம் குறைகிறது. மழைவளம் குறைவதால் மலையிலிருந்து ஓடிவரும் ஓடைகள் தண்ணீரின்றி வறண்டு காட்சியளிக்கின்றன. தமிழக சர்க்காரும் வனத் துறையும் சேர்ந்து காடுகளைப் புதிது புதிதாக உற்பத்தி செய்ய வேண்டுமென்ற அளவில் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மானியக் கோரிக்கைகளில் ஆங்காங்கே தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இந்த நாட்டிலேயுள்ள மண்வளத்தைப் பொறுத்தவரையில் ஒரு அங்குல உயரத்திற்கு மண் வளத்தை உயர்த்த வேண்டுமென்றால் அதற்கு பல்லாண்டுக் காலமாகும். ஆனால் ஒரு மணிநேரத்தில் பெய்த மழையினால் அந்த மண்வளம் ஒரு அங்குலம் அரிக்கப்பட்டு, மட்டம் கீழே கொண்டுவரப்படுகிறது. இப்படி மண்வளம் அழிந்துபோவதைத் தடுக்க வேண்டுமானால் அதற்குக் காடுகள் அதிகமாக வேண்டும். காடுகளினால்தான் இந்த மண்வளத்தை, மண் அரிப்பை தடுத்து நிறுத்த நாம் காடுகளைப் பாதுகாத்தல் வேண்டும். காடுகள் வளர்த்தல், வளம் குன்றாமல் காத்தல். பாதுகாப்பளித்தல், காடுகளை விவேகமுடன் பயன்படுத்தல் போன்றவற்றை முடிவுரையிலே தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

இந்த நவீன காலத்திலே நாம் மரங்களுக்குப் பதிலாக இரும்பையும், எஃகையும், சில இடங்களில் பிளாஸ்டிக்கையும் உபயோகப்படுத்துகிறோம். விறகுக்குப் பதிலாக நிலக்கரியையும், பெட்ரோலையும் பயன்படுத்துகிறோம். இன்றையதினம் விறகுப் பிரச்சினையும், மரத்தினுடைய பிரச்சினையும் அதிகமாகிக் கொண்டே போகிறது. நாம் காடுகளைத் தொடர்ந்து வளர்க்க வேண்டுமென்று நினைத்தாலும் கூட, உடனடியாக அவைகளைத் வளர்த்துவிடக்கூடிய சூழ்நிலை இல்லை. சாதாரணமாக நெற்பயிரை வளர்க்கவேண்டுமென்றாலும் 75 நாட்கள், 150 நாட்கள் என்று ஆகும்போது, ஒரு காட்டை வளர்க்க வேண்டுமென்றால் ஒருதலைமுறையாகிலும் நாம் பாடுபட வேண்டும். அப்படிச் செய்தால் தான் இயற்கை வனத்தை நாம் பெற்றாக முடியும். இந்த மானியக் கோரிக்கையில் வனத்துறையை விரிவாக்குகின்ற திட்டத்தை இரண்டு கூறுகளாகப் பிரித்திருக்கிறார்கள். ஒன்று விரைந்து வளரும் மரங்கள். இன்னொன்று நீண்டகாலம் வளரும் மரங்கள். நாம் விரைந்து பலன் தரும் மரங்கள், நீண்டகாலம் பலன் தரும் மரங்கள் என்ற வகையில் பிரித்து வனத்தை வளர்ப்பதிலே கவனம் செலுத்தவேண்டும். தமிழக சர்க்கார் இந்தப் பணியில் முனைந்திருப்பது மேலும் மேலும் பாராட்டுதற்குரியது.





*(மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்.)*

* **திரு. பி. வேலுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டுத் தீர்மானத்தின்பேரில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக தமிழகத்திலே இருக்கின்ற நிலப்பரப்பிலே 17 சதவிகிதந்தான் வன பூமியாக இருக்கிறது. அந்த 17 சதவிகித பூமியிலும்கூட பல்வேறு பொருள்கள் உற்பத்தியாகின்றன. வனமானது மழை பெய்விக்கும் சந்தர்ப்பங்களையும் உண்டாக்குகிறது. சாதாரணமாக இப்பொழுது குமரி கல்டிவேஷன் என்ற முறையில் வனத்தை அடுத்துள்ள பகுதிகளில் ஆங்காங்குள்ள மரங்களை வெட்டி, நிலத்தைச் சமப்படுத்தி, சிறு விவசாயம் ஆரம்பிக்கப்படுகிறது. நாற்பது, ஐம்பது வருஷங்களாக வளர்ந்துவந்த மரங்களையெல்லாம் வெட்டி விவசாயம் ஆரம்பிக்கிறார்கள். அந்த இடங்களில் சில தானியங்களையும், மரவள்ளிக்கிழங்கு போன்றவற்றையும் பயிர் செய்கிறார்கள். நாட்கள் செல்லச் செல்ல அந்தப் பகுதிகளை வனப் பகுதியிலிருந்து பிரித்து சாதாரண பகுதியாக மாற்றிவிடுகிறார்கள். இப்படியாக நாளுக்குநாள் வனப்பகுதி குறைந்துகொண்டே வருகிறது. இந்தக் காரணத்தினால் மழையும் தமிழகத்திலே குறைவாகப் பெய்யும் நிலைமை இருப்பதை நாம் அனைவரும் அறிந்து வருகிறோம்.

பல இடங்களிலே மூங்கில் காடுகள் எல்லாம் வெட்டப்படுகின்றன. சில இடங்களில் யூகலிப்டஸ் மரங்களை வைத்துப் பயிரிடுகிறார்கள். பயிரிடப்படுகிற மூங்கில்களையெல்லாம் பல்வேறு தொழிற்சாலைகளுக்காக வெட்டுகிறார்கள். உதாரணமாக பள்ளிப்பாளையம் திருவாளர்கள் சேஷசாயி பேப்பர் மில்ஸுக்கு 55,383 டன் உலர்ந்த மூங்கில் விற்கப்பட்டிருக்கிறது. வறண்ட மூங்கில்களை வெட்டுகின்ற இடங்களிலே, இருக்கின்ற பச்சை மூங்கில்களையெல்லாம் வெட்டி விடுகிறார்கள். இவ்விதமாக வனங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாகவே தமிழகத்தில் மழை அளவு குறைந்து வருகிறது. நாங்கள் மதிப்பீட்டுக் குழுவின் சுற்றுப் பயணத்திலே சென்றபோது, சில பகுதிகளில் யூகலிப்ட்ஸ் மரங்களை வைத்திருப்பதைப் பார்த்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம், ‘இந்த யூகலிப்ட்ஸ் மரங்களை வைத்துப் பயிரிடுவதால் மழை குறைகிறது என்று பரவலான அபிப்பிராயம் இருக்கிறதே, ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலும் இப்படிப்பட்ட எண்ணம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறதே' என்று கேட்டோம். இந்த மரங்களை அதிகமாகப் பயிரிடுவதால்தான் மழையின் அளவு குறைந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அந்த மரங்களைப் பயிரிடாமல் வேறு மரங்களைப் பயிரிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மழை அதிகமான அளவிலே பெய்வதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகளை அரசு அக்கறையுடன் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிங்கோனாவைப் பொறுத்தவரையிலும் பயிரிடுகிற இடத்தை நேராகப் பார்த்தோம். சரியாகவும், நல்லமுறையிலும் நடப்பதைக் கண்டோம். அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற இடங்கள் பற்றாக்குறை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தார்கள். சிங்கோனா, அது சம்பந்தப்பட்ட மருந்துப்பொருள்கள் நமக்கு வெளிநாட்டில் இருந்து அந்நியச் செலாவணியைத் தேடித் தரக்கூடியவை. இங்கேயே அதிகம் உற்பத்தி செய்தோம் என்றால் நமது அரசுக்கு அதிக வருவாய் வரும். இப்போது வெளிநாடுகளில் இருந்து வருவதையும் குறைத்துக்கொண்டு நாம் அனுப்பலாம். ஆகவே அதிகமான இடம் ஒதுக்கி பயிரிட ஏற்பாடு செய்ய வேண்டும்.

முதுமலையில் வனவிலங்கு சரணாலயம் இருக்கிறது. அங்கே வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் எல்லாம் வருகிறார்கள். ஆனால் தங்குவதற்கு போதுமான விடுதிகள் இல்லை. அதிகமான விடுதிகளை அமைத்துக்கொடுத்தால் அது வனத்துறைக்கு ஒரு வருவாயை ஏற்படுத்திக்கொடுக்கும், போக்குவரத்து வசதிகளையும் செய்தால் அதிகம் பேர்கள் போகவும் வழியேற்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

வனங்களில் அதிகம் திருட்டுப் போகின்றன. அதைத் தடுப்பதற்கு காவல் படை ஒன்றை அமைக்கவும் குறிப்பு இருக்கிறது. அதை துரிதமாக அமைக்கவேண்டும், கொஞ்சம் அதிக எண்ணிக்கையிலும் போட்டு சரியான முறையில் பாதுகாக்க ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு வனத்துறை மானியத்தின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

காட்டுப்பகுதியை ஒட்டி விவசாயத்திற்கு லாயக்கான சமவெளியாக இருக்கின்ற வேளாண்மை செய்வதற்குத் தகுதியான நிலத்தை விவசாயத்தொழிலாளர்களுக்கு, நிலம் இல்லாதவர்களுக்கு வாழ்வு அளிப்பதற்காக அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

குறிப்பாக, மதுரை மாவட்டம் வருஷ நாடு பகுதியில் பலகாலமாக விவசாயம் செய்து வருகிற நிலமில்லாத ஏழைகளுக்கு அந்த நிலத்தை குத்தகைக்கு விடுவதாகத் தெரிகிறது. அவற்றைப் பட்டாவே செய்துகொடுத்தால் அவர்கள் நிலத்தை மேலும் அபிவிருத்தி செய்து நல்ல முறையில் விவசாயம் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

காடுகள் வளர்ப்பது என்ற தலைப்பில் கிராமக் காடுகளை வளர்க்க ஒரு திட்டம் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கு லாயக்கு இல்லாத, விறகுக் காடுகளை வளர்க்க, புல் காடுகளை வளர்க்கக் கூடிய 50 ஏக்கர், 40 ஏக்கர் என்று





ஏற்பாடு செய்தால் மிகவும் உபயோகமாக இருக்கும். கால்நடைகளை வளர்ப்பதற்கும், விறகு பஞ்சத்தைப் போக்கவும் பெரிதும் பயன்படும்.

அதற்கடுத்தபடியாக, 55,383 டன் மூங்கில் சேஷசாயி காகிதம், அட்டை தயாரிப்பு நிறுவனத்திற்கு விற்கப்பட்டிருக்கிறது. இப்படி விற்கிறபோது குறைந்த விலையில் கொடுப்பதாக அறிகிறேன். இதுபோன்ற காட்டு மூங்கில்கள் ஏல அடிப்படையில் அதிக லாபம் வரக்கூடிய முறையில் விற்கப்படவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

காடுகளில் இருந்து சாதாரண ஜனங்கள் தலைச்சுமையாக பட்ட விறகுகள் பொறுக்கி வருவது பழங்காலம் முதற்கொண்டே இருக்கிறது. தலைச்சுமை எடுத்து வருகிறவர்களை காட்டு இலாக்கா இப்போது கடுமையாகத் தடுத்து வருகிறார்கள். எப்போதும் போல அனுமதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

வேடந்தாங்கலில் பறவைகள் சரணாலயம் இருக்கிறது. இதைப் போலவே வேதாரண்யம், கோடிக்கரை காட்டிலும் ஒரு பறவைச் சரணாலயம் ஏற்படுத்த வேண்டும். அந்தப் பகுதியிலும் வெளிநாடுகளில் இருந்து பல பறவைகள் வருவதாகத்தெரிகிறது. ஆகவே அந்தப் பகுதியிலும் ஒரு வனவிலங்கு—பறவை சரணாலயம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, வனத்துறை மானியத்தின்மீது என்னுடைய கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

வனத்துறை நமக்கு அதிகமான வருமானம் தரக்கூடிய ஒரு துறையாக இருக்கிறது. காண்டிராக்டாக மரத்தைக் குறைந்த விலைக்கு கொடுக்காமல் ஏலத்தில் அதிக விலைக்குக் கொடுக்க வேண்டும், என்ன விலைக்கு கொடுக்கப்படுகிறது என்றும் தெரிவிக்க வேண்டும்.

பெரிய கம்பெனிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு இந்த மூலப்பொருள்களை அவர்களுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக அந்த மூலப்பொருள்களைக்கொண்டு சிறுசிறு தொழில்களை அரசுத்துறையிலேயே நடத்தவேண்டும். அது அதிகமான பேர்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்கக்கூடியதாக அமையும்.

மதுரை மாவட்டத்திலுள்ள கண்டப்பநாயகனூர் ஜமீன் காடுகளை குத்தகைக்கு விடுவதாகத் தெரிகிறது. குத்தகைவிடத் தேவையில்லை. நாமே வனங்களை வளர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். வேளாண்மை செய்வதற்கு லாயக்கான இடங்களாக இருந்தால் நிலம் இல்லாத ஏழை எளிய விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்கவேண்டும்

[திரு. பி. எஸ். தனுஷ்கோடி] [1970 மார்ச் 24

அகதிகளுக்குப் புனர் வாழ்வளிக்க கூடலூரில் டீ எஸ்டேட் அமைக்க இருப்பது பாராட்ட வேண்டிய ஒன்றாகும். அந்தப் பகுதியில் பரம்பரை பரம்பரையாக உழைத்துக்கொண்டிருக்கக் கூடிய ஏழை எளிய விவசாயிகளுக்குப் பாதுகாப்பும் அதேநேரத்தில் பட்டாவும் அளிக்கவேண்டும்.

சந்தன மரங்கள் திருட்டுப்போவதுபற்றி முன்பே சட்டமன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது. பெரும் வருவாய் தரக்கூடிய இது போன்ற மரங்கள் திருட்டுப்போகாதிருக்கத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கர்ப்பூர தைலங்கள் தயாரித்துக் கொடுப்பதற்கு பலபேர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அரசே அந்தத் தொழிலை நடத்த முடியும். தைலங்கள் வாசனைத் தைலங்கள் இவற்றை எல்லாம் அரசே தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டும். இது அதிகமான செலாவணியைத் தேடித்தரக்கூடியது.

சாகுபடிக்கு லாயக்கான காட்டு நிலங்களை ஏழைகளுக்குப் பட்டா செய்து தர வேண்டும். பஞ்சாயத்துக்களை ஒட்டியுள்ள இருபது ஏக்கரா, பத்து ஏக்கரா போன்ற நிலங்களை சாகுபடிக்கு லாயக்கற்றதை அந்த அந்த பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்தால் அவர்கள் விறகு மரங்கள், புல் காடுகள் உற்பத்தி செய்ய முடியும். மேய்ச்சல் தரையாகவும் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். வனங்களுக்கும் அது பாதுகாப்பாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பி. ப.
1-00 சிங்கோனாத்துறை வருமானம் தரக்கூடியதாக இருக்கிறது. ஆகவே இதை இன்னும் அரசு தீவிரப்படுத்தவேண்டுமென்று சொல்லி எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே இரண்டொரு கருத்துக்கள் கூற விரும்புகிறேன். வனத்துறையானது சீரிய முறையிலே நடக்கவேண்டுமானால் அதற்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும். ஒரு நாட்டிலே மூன்றில் ஒரு பகுதி வனப் பகுதியாக இருக்கவேண்டும், அப்பொழுதுதான் அந்த நாட்டிலே வளம் மிகுதியாக இருக்கும் என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கண்ணோட்டத்திலே பார்க்கிறபோது நம்முடைய வனத்துறை எவ்வளவு சிறப்பாக இருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எங்கள் ஜில்லாவிலே இரண்டு மழையும் பெய்கிற காரணத்தினாலே அடர்த்தியான காடு இருக்கிறது. இந்தத் துறை நல்ல முறையிலே செயலாற்றுகிறதா என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக, அங்கே ஒரு மலைப்பகுதி இருக்கிறது, பள்ளகுளம் என்று. அதிலே ஒரு தனியாருக்கு உரிமை இருக்கிறது என்று சொல்லி 90 ஏக்கருக்கு வழக்குப் போட்டார்கள்,



1970 மார்ச் 24] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

அப்படி 90 ஏக்கருக்கு வழக்கு போட்டவருக்கு 900 ஏக்கர் கொடுக்கப்பட்டிருக்கிறது. சப் கோர்டிலே இந்த கேஸ் நடந்தது. சப்கோர்டிலிருந்து அப்பீல் மூலம் வழக்கு ஹைகோர்ட்டுக்குப் போனது. ஹைகோர்ட்டிலே ஃபைன்டிங்ஸ் சமர்ப்பிக்க வேண்டுமென்று கோரப்பட்டது. ஃபைன்டிங்ஸ் அனுப்பப்பட்டு இறுதியிலே ஹைகோர்டு தள்ளுபடி செய்துவிட்டது என்று கேள்விப்படுகிறோம். அதிலே 90 ஏக்கருக்கு உரிமை கொண்டாடியவருக்கு 90 ஏக்கர் கொடுத்தால் போதும் என்று ரிக்கார்டுகள் எல்லாம் கொடுத்தார்கள். ஆனால் கோர்டிலே தீர்ப்பாகிவிட்டது, நிலைமை இப்போது என்ன என்பதை இலாகா பரிசீலனை செய்யவேண்டும். 90 ஏக்கரில் 50 லட்சம் மரங்கள் இருக்கின்றன. குறிப்பாக அரசாங்கத்திற்குரிய இந்த மரங்களுக்கு எல்லாம் அவர்கள் பாத்தியம் கொண்டாட முடியாது. சட்டப்படி குடிவிலை விகிதாச்சாரம் கேட்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஹைகோர்ட் தீர்ப்புக் கொடுத்தவுடனே அவர்கள் அதற்கு வேலி போட்டிருக்கிறார்கள். ஆனால் வேலி போடக்கூடாது இரும்பு வேலி போடக்கூடாது என்று இலாகாவிலிருந்து முயற்சி செய்யப்பட்டது. ஆனால் தனிப்பட்டவர்களுடைய நிர்ப்பந்தத்தின் காரணமாக 90 ஏக்கர் கேட்டவருக்கு 900 ஏக்கர் கிடைக்கிற நிலைமை இருக்கிறது. இதை எதிர்த்து அரசாங்கம் சுப்ரீம் கோர்டிலே அப்பீல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 90 ஏக்கர் கேட்டவருக்கு 900 ஏக்கர் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். 90 ஏக்கர் வேண்டுமென்று மனுப்போட்டால் 900 ஏக்கர் எப்படிக் கொடுத்து இருப்பார்கள் என்பது தெரியவில்லை. அந்த வழக்கிலே மாவட்ட நீதிபதி என்ன சொல்லியிருக்கிறார்கள் ?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மாவட்ட நீதிபதி 90 ஏக்கர் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பவுண்டரிஸ் அடிப்படையிலே 900 ஏக்கர் என்று சொல்கிறார்கள் . . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எல்லை கொடுத்திருக்கலாம் பவுண்டரிஸ் கொடுத்திருக்கலாம். இது நீண்டகாலமாக நடந்து வருகிறது, அதற்காக நாம் போராடினோம். அரசாங்கம் கொடுத்ததாக அவர்களுடைய பேச்சிலே தொனிக்கும். அரசாங்கத் தரப்பிலே தரப்பட்டால் அவர்கள் வாதாடலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அரசாங்கத் தரப்பிலே அப்பீல் கொடுக்கவேண்டும், உடனடியாக அப்பீல் கொடுக்க வேண்டும். 50 லட்ச ரூபாய் அளவிற்கு அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் நான் இதைக் கூறுகிறேன். வனத் துறையிலே சரியான சர்வே ரிக்கார்ட்ஸ் கிடையாது. இதனால் அரசாங்கத்திற்கு இழப்பு நேரிடக்கூடிய

துரதிருஷ்டம் இருக்கிறது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சர்வே ரிக்கார்ட்ஸ் சரியான முறையிலே பராமரிக்கப்படாததன் காரணமாக. . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது எந்த ஆண்டு நடந்தது?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சமீபத்திலே நடந்த தீர்ப்பு.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாவட்ட நீதிபதி கன்னியாகுமரியிலே நடைபெற்ற வழக்கிலே கொடுத்திருக்கிறார்கள், அது இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு நடந்ததா அல்லது அவர்களுடைய ஆட்சியிலே நடந்ததா ?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகுதான். அந்த வழக்கிலே ஃபைன்டிங்ஸ் எல்லாம் அனுப்பியிருக்கிறார்கள். உயர்நீதி மன்றத்திலே அரசாங்கம் கொடுத்த அப்பீலைத் தள்ளுபடி செய்து இருக்கிறார்கள். ஆகவே சுப்ரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 90 ஏக்கர் கேட்டவருக்கு 900 ஏக்கர் என்று சொன்னால் எவ்வளவு சிக்கல் இருக்கும் என்பதைப் பரிசீலிக்க வேண்டும். தீர்ப்புச் சரியா தப்பா என்று சொல்லவில்லை, அதை உணர்ந்துதான் சொல்கிறேன். சாதாரணமாக வனப்பகுதிகளிலே அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. கன்ட்ராக்டர்களுக்கு கான்ட்ராக்ட் விடப்படுகிறது. முழுப் பணமும் செலுத்தியதற்குப் பின்னாலேதான் மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஒப்பந்தக்காரர்களுக்கு ஏற்படுகின்ற நஷ்டத்தைத் தவிர்ப்பதற்கு முயற்சிசெய்ய வேண்டும். கோதையாறு பகுதியிலே ஒப்பந்தக்காரருக்கு விடப்பட்டு ஒப்பந்தக்காரர் தடிகளையெல்லாம் வெட்டிக் குவித்து வைத்திருந்தார். வாய்தாவை நீட்டிக்கொடுக்கவேண்டுமென்று அவர் மனுகொடுத்து இலாகாவிலிருந்து அனுமதியையும் அவர் பெற்றிருக்கிறார். இடைக்காலத்திலே தீ விபத்து ஏற்பட்டு தடிகள் அத்தனையும் சேதம் அடைந்து அந்த ஒப்பந்தக்காரருக்குப் பெரு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஏற்படுகின்ற காரணத்தினால் ஃபையர் இன்ஷூரன்ஸ் கட்டாயமாகச் செய்து ஒப்பந்தப் பத்திரத்தோடு அதற்கான தொகையும் வசூல் செய்யப்பட வேண்டுமென்று செய்தால்தான் இப்படிப்பட்ட சேதங்களைத் தவிர்க்க முடியும், நஷ்டங்களை ஈடுசெய்வதற்கு அரசாங்கத்திற்கும் வழிவகை இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அனந்தபுரத்திலே தோவாளை தாலுகாவிலே 140 ஏக்கர் காட்டு நிலம் மூன்று நபர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சமீபத்திலே ஜில்லா கலெக்டர் 14 பிப்ரவரி 1970 தேதியன்று உத்திரவு பிறப்பித்து இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே மூன்று சர்வே நம்பர்கள் 2706, 2707, 2708. மொத்தப் பரப்பளவு 140 ஏக்கர், அனந்தபுரம் தோவாளை தாலுகா, ஐயம்பெருமாள், பரமசிவம், ரங்கநாதன்



ஆகிய நபர்கள். 3 லட்சத்திற்கு மேலான தடிகள் அரசாங்கத்திற்குச் சொந்தமானவை. வனத் துறையிலேயிருந்து கொடுக்கக் கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்தார்கள். அந்த மூன்று நபர்களும் கலெக்டரோடு பல அரசியல் காரணத்தாலே சேர்ந்து நிலத்தைக் கைப்பற்றுவதற்கு வழிவகை செய்தார்கள். கலெக்டர் 15-ம் தேதி ஸ்தலம் மாறிப் போனார். போவதற்கு ஒரு நாளைக்கு முன்னதாக உத்திரவு பிறப்பித்திருக்கிறார். இம்மாதிரிக் காடுகளைத் தனியாருக்குக் கொடுத்தால் பெரும் இழப்பு அரசுக்கு ஏற்படும். அரசாங்கம் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முத்துக்குளிவயல் என்ற பகுதி கோதையாறு அணைக்கட்டுப் பகுதியில் இருக்கிறது. அங்கே வன விலங்கு பாதுகாப்புப் பகுதி ஏற்படுத்தவேண்டும் என்று பல விண்ணப்பங்கள் கொடுத்துக் கொண்டே இருந்தோம். அந்தக் கோதையாறு திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிக்குப் போவதற்கு ரோடு போட்டு முடித்திருக்கிறது. அந்தப் பகுதியை வன விலங்கு பாதுகாப்பு சென்டராக மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே அரசாங்கத் தரப்பிலே ரப்பர் தோட்டம் நடத்தப்பட்டு வருகிறது. 1970 ஆடிட் ரிபோர்டிலே 27-வது பக்கத்திலே பல குறைகளையெல்லாம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். 4180 ஏக்கர் நிலத்திலே ரப்பர் போடவேண்டுமென்று திட்டமிடப்பட்டு 3892 ஏக்கரிலே 75.77 லட்சத்திலே திட்டத்தைத் தீட்டியிருந்தார்கள். இதற்குச் செலவு ஒரு ஏக்கருக்கு 1,600 முதல் 2,100 வரை இருக்கவேண்டுமென்று ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அந்த இலாகாவிலிருந்து 2,400 ரூபாய் ஒரு ஏக்கருக்குச் செலவழித்து இருக்கிறார்கள். என்ன காரணத்தால் இப்படி ஏற்பட்டது என்பதைப் பரிசீலிக்கவேண்டும். அவர்கள் பல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தணிக்கை அறிக்கையிலே சொல்லப்பட்டவற்றையும் அவர்கள் சொல்கிற காரணங்களையும் பரிசீலிக்கவேண்டும். அவர்கள் களை எடுத்ததினாலும் குமரிக் கல்டிவேஷன் செய்ததாலும் அந்த அளவிற்கு ஆகியிருக்கிறது என்று சொல்கிறார்கள், அது சரியல்ல, புனராலோசனை செய்யவேண்டும்.

லேட்டக்ஸ் தயாரிப்பதற்கு ஒரு பேக்டரி நிறுவவேண்டுமென்றும் அதற்காக வெளிநாட்டிலிருந்து இயந்திரங்களை வாங்கவேண்டுமென்றும் 1966-லே அக்டோபரிலே உத்திரவு பிறப்பிக்கப்பட்டது 4.28 லட்சத்திற்கு அதற்கு மெஷினரிஸ் 1968-ம் ஆண்டிலேயே வாங்கியிருக்கிறார்கள். அதன் காரண்டி 1969 மார்ச் திங்களில் முடிவடைகிறது. இதுகாறும் அது 'எரக்ட்' செய்யப்படவில்லை என்பதையும் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதற்காக எலக்ட்ரிசிடி போர்டுக்கு ஆண்டு ஒன்றுக்கு 10,510 ரூபாய் அரசாங்கத்தில் இருந்து செலவு செய்ய வேண்டிய நிலைமையும் இருக்கிறது. இதுகாறும் செய்து முடிக்கப்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1970 மார்ச் 24

படவில்லை. அதையும் உடனடியாகச் செய்ய வேண்டும். அதற்கு எந்த அதிகாரி காரணமாக இருக்கிறார் என்பதையும் பார்க்க வேண்டும்.

"Two uninsured cases of machines shipped from London were received (April 1968) in a damaged condition. The extent of damages has not yet been assessed and consequently no claim could be preferred against the steamer agents."

என்ற ஒரு குறிப்பு அதிலே இருக்கிறது. இந்த மாதிரிக் குறிப்பின்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? ஏன் இன்ஷூரன்ஸ் கூடச் செய்யப்படவில்லை? எந்த அதிகாரி இதற்கு உடந்தையாக இருந்தார்? இதைப்பற்றியெல்லாம் பரிசீலிக்க வேண்டும்.

சிமெண்ட்டைப் பொறுத்த அளவிலும் இதிலே கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய டிபார்ட்மெண்டில் சிமெண்ட் ஸ்டாக் செய்யப்பட்டிருந்தும் ஒப்பந்தக்காரர் தன்னுடைய சிமெண்டையே உபயோகிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. காரணம் என்ன? சப் ஸ்டாண்டர்டு ஒர்க் என்று ஆய்வுரையில் இருக்கிறது. இந்த மாதிரி முறைகேடுகள் நடப்பதைக் கண்காணிக்க வேண்டும்; வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதிலே இன்னொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். 1,500 கன அடி மரங்களைக் காணவில்லை. 26,000 ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இது நடந்தது கீரிப்பாறை டிவிஷனில். அரசாங்க ரப்பர் பிளாண்டேஷன் ஒழுங்காக நடக்கிறதா என்பதையும் கண்காணிக்க வேண்டும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

அரசாங்க ரப்பர் தோட்டத்தைப் பொறுத்தவரை பல குறைகள் தொழிலாளர் மத்தியில் இருந்து கொண்டிருக்கின்றன. தனியார் துறையில் ஒரு நபருக்கு 4 ரூபாய் 15 காசு சம்பளமாகக் கொடுத்து வருகிறார்கள். ஆனால் நமது காருண்ய அரசாங்கம் ரூ. 3.37 பைசாதான் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக அங்குள்ள தொழிலாளர்கள் கூட வேலை நிறுத்தம் செய்தார்கள். 60 நாட்கள் வேலை நிறுத்தம் செய்த பிறகு லேபர் கமிஷன் பரிசீலனை செய்தார்கள். கன்சிலியேஷனுக்காக முத்தரப்பு மாநாடுகளைக் கூட்டி என்ன என்னவோ செய்தார்கள். இப்போது பிரேக்டவுன் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்திடம் கொடுத்திருப்பதாக அறிகிறேன். இந்த மாதிரி முத்தரப்பு மாநாடுகளைக் கூட்டினால் மட்டும் போதாது. தனியார் துறை கொடுக்கும் சம்பளத்தை, இன்று இருக்கும் வாழ்க்கைப் புள்ளி அடிப்படையில் இருக்கும் சம்பளத்தைக் கொடுக்க அரசாங்கம் ஏன் தயங்குகிறது? இது 'நீட் பேஸ்டு வேஜ்' என்று கிளர்ச்சி செய்யும் காலமாக இருக்கிறது. தொழிலாளர்களுடைய நலத்தை அதிகமாகப் பேணுகிறோம் என்று பறைசாற்றிக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கம் ஏன் இந்த



1970 மார்ச் 24] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

மாதிரி நல்ல காரியங்களில் உடனடியாகக் கவனம் செலுத்தி, அக்கறை செலுத்தி தொழிலாளர்கள் துயரைத் துடைக்க முன் வரக்கூடாது?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதிலே காங்கிரஸ் கட்சியின் கொள்கை எது என்று சொன்னால் தெளிவாக இருக்கும். வேஜ் போர்டு சிபாரிசை இம்ப்ளிமெண்ட் பண்ணினோம். மேற்கொண்டு கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதைப் பற்றிப் பரிசீலித்தோம். அரசாங்கத்தின் சார்பில் நடத்தப்படக்கூடிய தொழில்களில் அல்லது இதுபோன்ற தோட்டங்களில் நஷ்டம் வந்தாலும், இலாபம் இல்லாவிட்டாலும் அரசாங்க கஜானாவில் இருந்து கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்களா அல்லது அங்கே இருக்கிற பணத்தை வைத்துக் கொண்டு இவர்களுக்குக் கொடுத்தால் போதும் என்பதை ஏற்றுக் கொள்ளுகின்றார்களா?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** எங்கள் கட்சியின் கொள்கையைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் வேண்டுமென்று கூறினார்கள். நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். தனியார் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு ரூ. 4.15 காசு என்று அரசாங்கமே நிர்ணயித்திருக்கிறது. அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற அதே கூலியை, அதே வேலை செய்கிற தொழிலாளிக்கு அரசாங்கத் துறையில் ஏன் கொடுக்கக்கூடாது என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதிலே, சட்டமன்ற உறுப்பினர்கள் வந்து பேசினார்கள். தனியார் துறையில் இலாபத்தில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நாம் இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறோம். தனியார் துறையில் அதிகக் கூலி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் அதே போன்று இங்கும் நஷ்டம் ஏற்பட்டாலும் கொடுக்க வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்களா?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அரசாங்க துறையிலே லாபத்திலே நடக்கிறதா அல்லது நஷ்டத்திலே நடக்கிறதா என்பதைக் கூற நான் இல்லை. ஒன்றை மட்டும் நான் கூற விரும்புகிறேன். இந்தமாதிரிக் காரியங்களிலே டபுள் ஸ்டாண்டர்டு இருக்கக் கூடாது என்பதை மட்டுந்தான் கூறக் கடமைப்பட்டவனாக இருக் இருக்கிறேன். அரசாங்கத் தரப்பில் நஷ்டம் ஏற்படுகிறது, அதிலே வரக்கூடிய வருவாயை வைத்துத்தான் சம்பளத்தைக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அரசாங்க மட்டத்திலே பல அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய ஹெட் ஆபீஸ் நாகர்கோயிலிலே இருக்கிறது. தோட்டங்கள் கீரிப்பாறையில் இருக்கின்றன. அந்தப் பகுதியிலேயே ஆபீஸ் இருந்தால் ஜீப்புக் காசுச் செலவாவது எல்லாம் குறையும். அதோடு அதிகாரிகளும் அதிகமாக இருக்கிறார்கள். ஊதாரித்தனமாகச் செலவாவதை எல்லாம் பரிசீலித்துக் குறைக்க வேண்டும். தனியார் துறையில்

இலாபமாக நடக்கிறது, அரசாங்கத் துறையில் இலாபமாக இல்லை என்றால் அது இந்த அரசாங்கத்தின் இயலாமையைத் தான் காட்டுகிறது என்று குறை கூறினால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த மாதிரிப் பிரச்சினைகளை எல்லாம் பார்க்கும்போது வனத் துறையில் நாம் மேலும் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டும். கோதையாறு பிராஜக்டுக்காக அந்தப் பகுதியிலுள்ள வனத்தை வெட்டி அழித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் மழை குறைந்ததற்குக் காரணமே வனத்தை அழித்ததுதான். நீர் ஊற்றுக்கள் எல்லாம் நின்று விட்டதாகக் கூறுகிறார்கள். இந்த பிராஜக்ட் முடியும் தருவாயில் இருக்கிறது. அந்தப் பகுதியில் மீண்டும் தேக்கு போன்ற மரங்களை வைத்து காடுகளை உருவாக்க திட்டமிட வேண்டும். தனியாருக்கு, தங்கள் கட்சிக்காரர்களுக்கு, தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஃபாரஸ்ட் நிலத்தைக் கொடுப்பது சரியல்ல.

ஐம்பதாயிரம் ஏக்கர் நிலத்தில் ரப்பர் பயிரிட வசதியான நிலங்கள் அங்கு இருக்கின்றன. சிந்தடிக் ரப்பர் லாபகரமாக இல்லை என்று சொல்லுவார்கள். ஐம்பதாயிரம் ஏக்கரில் இந்த ரப்பரைப் பயிரிட வேண்டுமா என்றெல்லாம் சொல்லக்கூடும். அந்தப் பகுதி மக்களின் இன்றியமையாத பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் வகையில் ரப்பர் தொழிற்சாலையை உருவாக்குவதற்கு 50,000 ஏக்கர் நிலத்தில் ரப்பர் பயிரிட்டால் சிறப்பாக இருக்கும். அந்தப் பகுதி மக்கள் சார்பில் இந்தமாதிரி ஆக்கபூர்வமான திட்டத்தில் அரசாங்கம் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இப்போது சுமார் 4,000 ஏக்கரில்தான் ரப்பர் பயிரிடப்படுகிறது. இந்த மாதிரியான காரியங்களை எல்லாம் நல்ல முறையில் பரிசீலிக்க வேண்டும். சின்கோனா இப்போது லாபத்தில் செயலாற்றிக் கொண்டிருக்கிறது, முன்பு நஷ்டத்தில் இருந்தது. இது ஒரு நல்ல காரியம் என்று கூறி இந்த அளவில் என்னுடைய சொற்பொழிவை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்:** தலைவர் அவர்களே, சின்கோனா, காட்டுவளம் மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் தங்கள் மேலான கருத்துக்களையும், யோசனைகளையும் சொல்லியிருக்கிறார்கள். பேசியவர்களில் பெரும்பாலோர் நம்முடைய மாநிலத்தில் காட்டுவளப் பகுதி குறைவாக இருக்கிறது என்றும் அதைப் பெருக்கினால்தான் நல்ல முறையில் மழை பெய்யும் என்றும் கூறினார்கள். அதே சமயத்தில் காட்டு இலாகாவுக்குச் சொந்தமான நிலங்களைத் தனிப்பட்டவர்களுக்கு ஏழைகளுக்கு ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென்ற கருத்தையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். காட்டு வளத்தைப் பெருக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இந்த நிலையில் காட்டு நிலப் பகுதியைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று பரிந்து பேசியிருப்பதைப் பார்க்கும்போது அது பொருத்தமான கருத்





தாக இருக்காது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதைப் பற்றி டில்லியில் நடந்த அகில இந்திய மாநாட்டில் பேசும் போது கூட, நாடு செழிப்பாக இருக்க வேண்டுமென்றால், காட்டுப் பகுதி, மலைப் பகுதி பாதுகாக்கப்பட வேண்டுமென்ற கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதை எல்லோரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு இருக்கும் காட்டுப் பகுதிகளை வன இலாகா பாதுகாக்க வேண்டுமென்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அவ்வாறு பாதுகாக்கப்படுவதன் மூலம் என்ன நன்மைகள் என்பதைப் பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மழை பெய்ய வேண்டுமென்றால் செழுமையான காடுகள் இருந்தால்தான் பெய்யும் என்கிறார்கள். காட்டு வளத்தைப் பாதுகாத்தால்தான் நீர்நிலைகளுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்பதையும் ஒத்துக் கொள்ளுகிறோம்.

இரண்டாவதாக, அரிப்பு ஏற்படுவதை ஓரளவிற்கு தடுத்தால் தான் நீர் நிலையங்களில் தண்ணீர் வரும். அதனால் தூர்ந்து போகும் ஒரு சூழ்நிலை வராது என்பதை ஒப்புக்கொள்கிறோம். காட்டு இலாகாவிற்குச் சொந்தான மலைகளை பாதுகக்க வேண்டும் என்பதில் நல்ல அக்கறை எடுத்துக் கொண்டு இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வருவாயைப் பெரும் இலாகா என்று இந்த இலாகாவை குறிப்பிடுகிறார்கள். ஒப்புக்கொள்கிறேன். அப்படி வருமானத்தையே நினைத்துக்கொண்டு போனால் காட்டையே அழிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் தொழில் வளர்ச்சிக்காக, இல்லாத பொருள்கள் சிலவற்றை உற்பத்தி செய்ய, அன்னியச் செலாவணியை மிச்சப்படுத்தும் வகையில் சில தொழிற்சாலைகளை அமைக்க அப்படிப்பட்ட தொழிற்சாலைகளுக்கு சற்று சலுகை கொடுக்க அரசு முடிவு எடுத்திருக்கிறது. அதை நான் எடுத்துவிட்டதாக கருத வேண்டாம். பத்து ஆண்டுகளுக்கு முன்னாலேயே சேஷசாயி, டான் இந்தியா இவற்றுடன் நடந்த ஒப்பந்தமாகும். அப்படி வரும்போது அவர்களுக்கு ரா மெட்டீரியல்ஸ்க்கு உத்தரவாதம் கொடுக்கவேண்டியிருக்கிறது. முப்பது லட்சத்துக்கு மேல் முடக்குகிறார்கள். பல்ப் இன்டஸ்ட்ரி இருக்கிறது. ஆராய்ச்சி செய்து ஆண்டுக்கு இவ்வளவு ரா மெட்டீரியல்ஸ் கொடுக்கமுடியும் என்று ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். இது இப்போது புதிததாக வந்த ஒப்பந்தமல்ல. குறைவான விலையில் இப்படிப்பட்ட கம்பனிகளுக்கு சலுகைகள் காட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். 11—4—1962-ல் இருந்து 11—4—1968 வரை சேஷசாயி பிரதர்ஸோடு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும். நாங்கள் வந்ததற்குப் பின்னால் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மார்க்கட் ரென்ட் என்று சொல்கிற அளவில் விலைகளை மாற்றிக்கொள்ளும் முறையை அமைத்திருக்கிறோம். சேஷசாயி பிரதர்ஸ்க்கு டன் 6.90 என்றளவிற்குக் கொடுக்கிறோம், கன்செஷன் ரேட்டில். இதைச் சற்று அதிகப்படுத்த

வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். பேச்சுவார்த்தை நடக்கிறது. பேச்சுவார்த்தைகள் மூலம் ஒப்பந்தத்திற்கு வருகிறோம். அந்தத் தொகையைக் கொடுக்க ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். ப்ளூகம், வாட்டில் மூலம் பல்ப் இன்டஸ்டிரி நடத்துகிறார்கள். அது ரயான் செய்யப் பயன்படுகிறது. அதற்கும் சில சலுகைகள் காட்டப்படுகின்றன. இன்றைய நிலவரத்தில் விலையை உயர்த்தித் தரவேண்டுமென்று நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன. இந்த இரண்டு ஆண்டுகளில் விலையைச் சற்று உயர்த்தியிருக்கிறோம்.

வர்ஷ நாடு பகுதியைப் பற்றிக்குறிப்பிட்டார்கள். அங்கு பட்டா போட்டுத் தரவேண்டுமென்று கேட்டார்கள். அங்கு 90,000 ஏக்கர் இருக்கிறது. அதில் 18,342 ஏக்கர் இப்போது ஆக்கிரமிப்பில் இருக்கிறது. தனுஷ்கோடி அவர்கள் சொன்னார்கள். ஏழைகளாக இருந்தால் பரவாயில்லை. 20, 30, 40 ஏக்கர்கள் என்று வைத்திருக்கிறார்கள். சிலர் ஏழைகளாகவும் இருக்கிறார்கள், நிரந்தரமாக பத்து பதினைந்து ஆண்டுகள் குடியிருந்து விவசாயம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எந்த அளவில் நடவடிக்கைகள் எடுப்பது என்பதைப் பற்றி இந்த அரசு ஆலோசனை செய்து நிலம் இல்லாதவர்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுத்துவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம். பட்டா போட்டு அசைன்மென்ட் செய்து தரவேண்டுமென்று கேட்கிறார்கள். பத்து ஆண்டுகளுக்கு லாங் லீஸுக்கு கொடுக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதற்காக கலெக்டர் தலைமையில் ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. அதில் சட்டமன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். வெளியேற்ற வேண்டியவர்களை வெளியேற்றி சாதாரண விவசாயிகளுக்கு 1 ஏக்கர், 2 ஏக்கர்கள், 5 ஏக்கர்கள் என்று குத்தகைக்கு விடும் சூழ்நிலை இருக்கிறது. பணக்காரர்களுக்கு கொடுத்துவிடுவோம் என்று நினைக்கத் தேவை இல்லை.

சேலம் பகுதியில் பக்கநாடு, வனவாசி பற்றி சுரேந்திரன் அவர்கள் பேசினார்கள். பக்கநாட்டில் 1,036 ஏக்கரும், வனவாசியில் 5,556 ஏக்கரும் லாங் லீஸுக்கு விட தனியாக கமிட்டி போடப்பட்டிருக்கிறது. பவானிசாகரிலும் சப்மர்ஜிபிள் ஏரியாவில் 650 பேர்களுக்கு ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என்ற முறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. காட்டு இலாகா நிலங்களை குத்தகைக்கு விடுவதன்மூலம் விவசாயப் பொருள் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது.

பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் முந்திரி சாகுபடி செய்கிறோம். அதன் மூலம் ஏக்கருக்கு ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது. கிட்டத்தட்ட 10,000 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

யூக்கலிப்ட்டஸ் மரங்களை பாவலாக வளர்த்துக் கொண்டு வருகிறோம். நீலகிரி மாவட்டத்தில் இதன் மூலம் நீலகிரி தைலம்





செய்கிறார்கள். ஜெரேனியம் ஆயில் தயார் செய்கிறார்கள். அதன் மூலம் நாம் பல லட்சக்கணக்கான ரூபாய் வருவாய் பெற்று வருகிறோம்.

அடுத்து, சிங்கோனா பற்றியும் சொல்லப்பட்டது. அதன் மூலமாக, சிங்கோனா ப்ளான்டேஷன் மூலம் கிட்டத்தட்ட ரூ. 56,70,000 வருமானம் பெற்றிருக்கிறோம். க்வினைன் சல்பேட், க்வினைன் க்ளோரைட் மாத்திரைகளை செய்கிறோம். இதை பலயிடங்களில் விஸ்தரிக்கவேண்டுமென்று நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கியிருக்கிறோம். கிட்டத்தட்ட 5,000 ஏக்கர்களில் விஸ்தரிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதை விஸ்தரிக்கும் ஒரு சூழ்நிலை இருக்கிறது.

ரப்பர் ப்ளான்டேஷன் பற்றிப் பேசும்போது திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள், இரண்டுவிதமாக பாரபட்சமாக நடந்து கொள்கிறது இந்த காருண்ய சர்க்கார் என்று. இந்த ரப்பர் ப்ளான்டேஷன் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1961-ல் ஆரம்பிக்கப்பட்டதொரு திட்டமாகும். அந்த நேரத்தில் அங்கு கொடுக்கப்பட்ட சம்பளங்கள் பற்றி அவர்களுக்கு தெரிந்திருக்கும் என நினைக்கிறேன். நானும் சட்டத் துறை அமைச்சர் அவர்களும் பேச்சுவார்த்தைகள் நடத்தி அப்போதிருந்ததை விட இப்போது கணிசமான அளவிற்கு சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறது. சென்ற மூன்றாண்டு கணக்குகளைப் பார்த்தால் தெரியும். தனியார் தோட்டங்களில் அதிகமாகக் கொடுக்கிறார்களே, அந்தளவிற்குக் கொடுக்கக்கூடாதா என்று சொல்கிறார்கள். கிட்டத்தட்ட நாம் 1½ கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறோம். இன்னும் அதிகப்படியான ஏக்கர்களில் ரப்பர் பயிரிடப்படவேண்டுமென்று சொன்னார்கள். ஒரு ஆயிரம் ஏக்கரில் பயிரிடுவதன்மூலம் கிட்டத்தட்ட ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கும் விதத்தில் இலங்கையிலிருந்து வருகிறவர்களை இத்தொழிலில் அமர்த்துகிற திட்டம் ஒன்று இருக்கத்தான் செய்கிறது. ரப்பர் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பிரச்சினை மட்டுமல்ல, பல்வேறு பிரச்சினைகளை இந்த அரசு வந்தபிறகு நல்ல முறையில் தீர்த்திருக்கிறது. இப்போது லீவ் வேஜஸ் என்று லீவ் எடுத்தால் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று எடுக்கப்பட்ட முடிவு சமீபத்தில் செய்த முடிவுதான். மழைக் காலத்தில் குடை கொடுக்கவேண்டும் என்று செய்தது சமீபத்தில் செய்த முடிவுதான். இரண்டு கம்பளி கொடுக்க வேண்டுமென்று செய்திருப்பதும் சமீபத்தில் செய்த முடிவுதான்.

ரப்பர் ப்ளான்டேஷன், டீ ப்ளான்டேஷன் இவற்றை தேசீயமயமாக்கவேண்டுமென்று சில உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் கூட சுற்றுமுற்றும்பார்த்தேன், எந்த மாநிலத்திலாவது பி.ப
இப்படிச் செய்யப்பட்டிருக்கிறதா என்று. கேரளத்தில் கூட 1-30
அப்படிக் கிடையாது. வெஸ்ட் பெங்காலிலும் கிடையாது.

இப்போது சில ஐயப்பாடுகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட காபி, டீ ப்ளான்டேஷன்ஸ், கார்டமம் ப்ளான்டேஷன் போன்ற

வற்றிற்கு மத்திய அரசின் மூலம் தனியாக ஒரு போர்ட் அமைக்கப்பட்டு அவர்கள் ஆலோசனையின்பேரில் சில சலுகைகள் அளிப்பது, கடன் வசதிகள் அளிப்பது போன்றவைகளைச் செய்து உற்பத்தியைப் பெருக்கி அன்னியச் செலாவணியைப் பெருக்கும் விதத்தில் அவை உள்ளன. இந்த ஆண்டு கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அளவிற்கு நாம் இந்த இலாகாவின் மூலம் வருவாய் பெற்றிருக்கிறோம். இந்த சிங்கோனாவிற்கு வெளிநாடுகளில் நல்ல மார்கட் இருப்பதால் அதை விஸ்தரிக்கும் ஒரு சூழ்நிலை இருக்கிறது.

இந்த சரணாலயங்களைப் பற்றி சில உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது 5 சரணாலயங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு லட்ச ரூபாய் பராமரிப்புச் செலவு செய்தாலும் இன்றைக்கு இருக்கிற முதுமலை சரணாலயம் மூலமாக நல்ல வருவாய் கிடைக்கிறது. அங்கே ரெஸ்ட் ஹவுஸ் ஒன்று கட்டப்பட்டு திறக்காமல் இருக்கிறது. அப்படிப்பட்ட வசதிகள் செய்யப்பட வேண்டுமென்பதை நாங்கள் ஓரளவிற்கு ஒப்புக்கொள்கிறோம்.

இந்த மிருகங்களைப் பாதுகாக்க வேண்டுமென்று சொல்லுவதும் காடுகளைப் பாதுகாக்க வேண்டுமென்று சொல்லுவதும் ஒன்றுதான். அந்த அளவிலே இன்றைக்கு இருக்கிற அரசு காடுகளை நல்ல பக்குவமாக கண்ணோட்டம் செலுத்தி காடுகள் மேலும் மேலும் ஏற்படுவதற்கு ஆவன செய்து வருகிறது.

இன்றைக்குக் கூப்புகள் வெட்டி பல கோடி ரூபாய்கள் சம்பாதிக்கிறோம். இப்போது கூட சந்தன மரம் வெட்டி ஆண்டு ஒன்றிற்கு ரூ. 1 கோடி பெறுகிறோம். ஒரு இடத்தில் முதிர்ந்த மரங்கள் 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை, அல்லது 20 ஆண்டுகளுக்கு ஒரு முறை வெட்ட வேண்டுமென்று சில கணக்குகள் இருக்கின்றன. அந்தந்த பகுதிகளில் இருக்கிற வளர்ச்சியடைந்த மரங்கள், வயது முதிர்ந்த மரங்கள் இந்த ஆண்டு எவ்வளவு வெட்ட வேண்டுமென்று கணக்கு பார்த்து வெட்டி ஏலத்திற்கு விடுவார்கள். எந்த அளவிற்கு வெட்டுகிறோமோ அந்த அளவிற்கு புதிய மரங்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்று நாம் பார்க்கிறோம். காட்டு வளம் அழிக்கப் படாமல் இருந்தால்தான் அது நல்ல பலனைக் கொடுக்கும் என்பதை கணக்கில்கொண்டு காரியமாற்றி வருகிறோம். ஆகவே வெட்டுப் பிரேரணையை வாபஸ் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நிதிக் கோரிக்கை எண் 21-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த திருவாளர்கள் டாக்டர் எச். வி. ஹாண்டே, என். எஸ். வி. சித்தன், வி. கே. கோதண்டராமன் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. எ. அ. சுப்பராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி; "நிதிக்கோரிக்கை எண் 21-சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 55,59,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 35-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. எ. அ. சுப்பராஜா ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாக கருதப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி; "நிதிக் கோரிக்கை எண். 35-காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,98,21,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண். 44-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த திரு. இல. பலராமன், திரு. சோ. அழகர்சாமி ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி; "நிதிக் கோரிக்கை எண் 44-காட்டு வள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,43,59,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

## (6) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

@ 165. Notification issued with G.O. Ms. No. 3104, Public (Elections), dated the 19th December, 1969 in regard to an amendment to the Rules for the use and maintenance of Government cars allotted to Ministers, Speaker, Legislative Assembly and Chairman, Legislative Council published at page 107 of Part V of the *Fort St. George Gazette,* dated the 12th March, 1959. [Laid on the Table of the House under section 14(3) of the Tamil Nadu Payment of Salaries Act, 1951 (Tamil Nadu Act, XX of 1951).]

@166. Notification issued with R. Dis. No. 45331/69, dated the 13th August 1969 in regard to exclusion of Nadupatti Revenue village in Tiruvannamalai taluk of North Arcot district from Kannampandal Panchayat and constitution of separate Panchayat. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958).]

@ 167. Notification issued with R. Dis. No. 32286/69, dated 13th August, 1969 in regard to exclusion of certain areas from the Nadupatti Panchayat and included within the limits of Kalamanur Panchayat. [Laid on the Table of the House under section 179(4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 168. Notification issued with R.Dis. No. 144060/69-P2 dated the 18th September, 1969 in regard to exclusion of certain areas from Desaivilakku Panchayat in Omalur taluk of Salem district and constitution of a separate Panchayat by name Duttampatti Panchayat. [Laid on the Table of the House under section 179(4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

@ 169. Notification issued with R.Dis. No. 29158/69, dated the 6th September, 1969 in regard to exclusion of certain areas from the limits of the Adavathur Panchayat of Tiruchirappalli district and constitution of a separate Panchayat by name Allithurai Panchayat. [Laid on the Table of the House under section 179(4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act, XXXV of 1958).]

---

@ Laid on the tabl of the House on 23rd March 1970.



### *B. Reports, Notifications and other papers.*

@ 92. Notification issued with Roc.No. 183807/69-P2, dated the 14th November, 1969 in regard to an erratum to the notification published at pages 314 and 315 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 1st October, 1969.

+ 93. Policy Note on Tamil Nadu Khadi and Village Industries Board (English and Tamil).

+ 94. Policy Note on Demand No. 23—Community Development and Panchayat Development 1970–71. (English and Tamil.)

+ 95. Financial Supplement to Demand under Community Development 1970–71. (English and Tamil.)

---

@ Laid on the table of the house on 23-3-1970.

\+ Despatrhed to members on 21-3-1970.

[1970 மார்ச் 24

## இணைப்பு 1.

[360ம் பக்கத்தில் 510-ம் என்னுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

### விவர அறிக்கை.

திரு. ஆர். ஏ. கோபால்சுவாமி, ஐ.சி.எஸ். (ஓய்வு பெற்றவர்) அவர்களைத் தலைவராகவும், திருவாளர்கள் எஸ். கோவிந்தசாமிநாதன், அரசுத்தலைமை வழக்கறிஞர், சென்னை, ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., எம். சந்திரசேகரம் பிள்ளை, ஐ.ஏ.எஸ். (ஓய்வு பெற்றவர்) ஆகியவர்களை உறுப்பினர்களாகவும், திரு. என். கிருஷ்ணசாமி, ஐ.பி.எஸ்., காவல் துறையின் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல், ரெயில்வே-படைக்கலந்தாங்கிய காவலர்படை, சென்னை அவர்களை உறுப்பினர்-செயலாளராகவும் கொண்ட காவல்துறை ஆணைக்குழு ஒன்றை 20—12—1969 நாளிட்ட பொது (ஜெனரல்-துறையின் அரசு ஆணை எண். 3113-ல் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

பின்வருவன குறித்து மாநிலக் காவல்துறை ஆணைக்குழு ஆய்வு செய்து பரிவுரைகள் அனுப்பும் :—

(1) காவல் படையினரின் சம்பளம், படிகள்-ஒரு இசைவான முடிவு எடுப்பதற்காக காவல்துறை ஆணைக்குழுவும் சம்பள ஆணைக்குழுவும் சேர்ந்து இது குறித்து பரிசீலனை செய்யும்.

(2) பணியின் பொது நிலைமைகள், வீட்டு வசதி, காவலர் நலன்.

(3) காவல் படையின் அதிகாரங்கள், கடமைகள், (அ) சட்டம், ஒழுங்கு இவற்றை நிலை நிறுத்துதல், (இ) குற்றத்தை தடுத்தல், புலனாய்வு செய்தல், (உ) போக்குவரத்தை கட்டுப்படுத்துதலும் முறைப்படுத்துதலும், (எ) வேவுத் தகவல் சேகரித்தல், (ஒ) காவலர்களின் பிற கடமைகள் பழையனவும், புதியனவும் ஆகியவற்றிற்குத் தொடர்பானவற்றில் காவல் படையின் செயல் திறனை மேம்படுத்துதல்.

(4) காவல் படையின் அமைப்பையும், நடைமுறைகளையும் தற்காலத்துக்கேற்றவாறு மாற்றி அமைத்தல்; புலனாய்வு செய்வதற்கு வேண்டிய வசதிகள்; புள்ளி விவரங்களும் ஆவணங்களும்; ஆராய்ச்சியும், திட்டம் தீட்டுதலும்.

(5) சிறப்பாகப் போக்குவரத்தையும், செய்தித் தொடர்பையும் ஒட்டி மனிதத்திறன், மேற்பார்வை, சாதனங்கள் ஆகியவற்றைக் குறித்த அளவுகளை முடிவு செய்தல்.

(6) தகுதிகளும், படைக்குப் புதிய ஆள் சேர்த்தலும், பயிற்சியும், வேலை வாய்ப்பும், அதிகாரங்களையும் மேலாதிக்கத்தையும் பிரித்துக் கொடுத்தல, செயல் நிறைவேற்றுதலையும், பதவி உயர்வையும் மதிப்பிடுதல்.



1970 மார்ச் 24]

(7) பொது மக்களுடன் தொடர்பு, அரசியல் அமைப்புகள், தொழிலாளர், உழவர்குலம், மாணவர்கள், அச்சகம் போன்ற சமுதாயத்தின் சிறப்புப் பிரிவுகளுடன் தொடர்பு, காவலருக்கு எதிரான புகார்களும் குறைகளும்.

(8) காவலர், நீதி மன்றங்கள், மாஜிஸ்டிரேட்டுகள் ஆகியோருக்கிடையேயும் பொது நிர்வாகத்துறை, பிற அரசு துறைகளுக்கிடையேயும் ஒருங்கிணைந்த தொடர்பை ஏற்படுத்துதல்.

(9) மாநிலங்களின் காவலர் அமைப்புகளுக்கும் இந்திய அரசின் காவலர் அமைப்புகளுக்குமிடையே ஒருங்கிணைந்த தொடர்பு ஏற்படுத்தல்.

(10) ஆணைக்குழு முக்கியமெனக் கருதும் காவலர் பணியின் பிற கூறுகள்.

In G.O. Ms. No. 3113, Public (General-A) Department dated 20th December 1969, the Government of Tamil Nadu constituted a Police Commission consisting of Thiru R. A. Gopalaswami, I.C.S. (Retd.) as Chairman, Thiruvalargal S. Govind Swaminadhan, Advocate-General, Madras, M. P. Sivagnanam, M.L.A., M. Chandrasekaram Pillai, I.A.S. (Retd.) as Members and Thiru N. Krishnaswamy, I.P.S., Deputy Inspector-General of Police, Railways and Armed Police, Madras, as Member-Secretary.

The State Police Commission will go into and make recommendations on—

(i) Pay and allowances of Police Force.

This will be discussed at joint sittings of the Police Commission and the Pay Commission with a view to arriving at an agreed decision.

(ii) General conditions of service, housing and welfare.

(iii) Powers and duties of the Police Force, and improvement of its efficiency in relation to:

(a) Maintenance of Law and Order;

(b) Prevention and detection of crime;

(c) Control and regulation of traffic;

(d) Collections of intelligence; and

(e) Other Police duties, old and new.

(iv) Modernisation of organisation and methods; investigational facilities, statistics and records, research and planning;

(v) Yardsticks of Manpower and supervision as well as equipment with a special reference to transport and communications;

(vi) Qualifications and recruitment, training and placement, delegation of powers and control as well as assessment of performance and promotions;

[1970 மார்ச் 24

(vii) Public relations and relationship with special sections of the community like political organisations, labour, peasantry, students, press, etc., complaints and grievances against the Police;

(viii) Co-ordination between the Police, the courts and magistracy, general administration department and other Government departments;

(ix) Co-ordination between the Police organisations of the States and the Government of India; and

(x) Any other aspect of Police work which the Commission considers important.

### இணைப்பு 2.

363ம் பக்கத்தில் 513-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

நகர்ப் பகுதி ஒன்றுக்காகத் தயாரிக்கப்படும் இடைக்கால வளர்ச்சித் திட்டம், வருங்கால மக்கள் தொகைக்குத் தேவைப்படக்கூடிய நிலங்கள் பற்றி கவனமாக ஆய்ந்து தயாரிக்கப்பட்ட மதிப்பீடாக இருக்கவேண்டும். நகர்ப்பகுதி வளர்ச்சி எந்த முறையில் அமையவேண்டும் என்பதை அத்திட்டம் தெளிவாகக் காட்டவேண்டும். நகர்ப்பகுதி மக்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலை அப்பொழுதுதான் அமைய முடியும். நிலங்கள் வாங்குவதற்கான செலவு, அதிலிருந்து கிடைக்கும் வருவாய் ஆகிய வற்றிடையே ஏற்றத்தாழ்வற்ற சமநிலை அமைந்திருப்பதற்காக நிலம் மிகவும் சிக்கனமான முறையில் கையாளப்படுவதற்கும் இத்திட்டம் வகைசெய்யவேண்டும். உள்ளூர் மக்களின் விருப்பங்களுக்கேற்பவும், நோக்கங்களையொட்டியும், இத்திட்டம் அமைவதுடன், நகரமக்களின் சுகாதாரம், பாதுகாப்பு, வசதி ஆகியவை குறித்துப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளையொட்டியும் அமைந்திருக்க வேண்டும்.

2. சென்னை மாநகரப் பகுதிக்கான வளர்ச்சித் திட்டத்தின் வரைவு இரு முக்கியப் பகுதிகளைக் கொண்டதாகும்—

(1) சென்னை நகர்ப்புற பகுதி.

(2) சென்னை மாநகரப் பகுதி.

சென்னை மாநகரின் தற்போதைய மாநகராட்சி எல்லைகளுக்குள் உள்ள எல்லா நிலங்களும் கீழே கண்டுள்ள கிராமங்களும் சென்னை நகர்ப்புறப் பகுதியில் அடங்கும் :—

1. கொடுங்கையூர்.
2. எருக்கஞ்சேரி.
3. குளத்தூர்.
4. குன்னூர்.
5. வில்லிவாக்கம்.
6. திருமங்கலம்.
7. கோயம்பேடு.
8. செஞ்சேரி.
9. விருகம்பாக்கம்.
10. சாலிகிராமம்.
11. கோடம்பாக்கம்.
12. நேசபாக்கம்.
13. வேளச்சேரி.
14. தாராமணி.
15. கனகம்.
16. திருவான்மியூர்.



1970 மார்ச் 24]

இதன் பரப்பளவு தற்போதைய மாநகராட்சிப் பகுதியான 49.52 சதுரமைல் உட்பட 65.34 சதுர மைல்களாகும்.

390.89 சதுரமைல் பரப்பளவுள்ள இம்மாநகர பகுதியில் திட்டகாலத்தின் முடிவில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையை கொண்டு நகர்ப்புறப் பகுதிகள் அடங்கியுள்ளன.

1. மீஞ்சூர்.
2. திருவொற்றியூர்.
3. செங்குன்றம் (புழலேரி).
4. அம்பத்தூர்.
5. தண்டரை.
6. திருமழிசை.
7. பூவிருந்தவல்லி.
8. தாம்பரம்.
9. ஆலந்தூர்.
10. பெருங்குடி.

மற்ற சிறிய நகர்ப்புற பகுதிகளும், கிராமப் பகுதிகளும் அதில் அடங்கியுள்ளன.

1991-ம் ஆண்டிற்குள் சென்னை மாநகரப் பகுதியின் மக்கள் தொகை 48.23 லட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மக்கள் தொகை கீழே குறிப்பிட்டுள்ளவாறு பரவியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது:—

சென்னை நகர்ப்புற பகுதி—25.00 லட்சம்

மற்ற நகர்ப் பகுதிகள்—20.23 லட்சம்

| | | | | |
|---|---|---|---|---|
| திருவொற்றியூர் | .. | .. | 4 | லட்சம் |
| அம்பத்தூர் | .. | .. | 3 | ,, |
| தாம்பரம் | .. | .. | 3 | ,, |
| பூவிருந்தவல்லி | .. | .. | 2 | ,, |
| ஆலந்தூர் | .. | .. | 2 | ,, |
| மீஞ்சூர் | .. | .. | 1 | ,, |
| செங்குன்றம் (புழலேரி) | | .. | 1 | ,, |
| திருநின்றவூர் | .. | .. | 1 | ,, |
| திருமழிசை | | .. | 1 | ,, |
| கத்திவாக்கம் | | .. | 1 | ,, |
| ஏனைய நகர்ப் பகுதிகள் | | .. | 1·23 | ,, |
| கிராமப் பகுதி | | .. | 3 | ,, |
| மொத்தம் | | .. | 48·23 | லட்சம் |

செயற் குறிப்பு : (அ) நகர்ப்புற பகுதிகள்

குடியிருப்புப் பகுதி—

1991-ம் ஆண்டில் மக்கள் குடியிருக்கிற பகுதிகளை மதிப்பீடு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை நெருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | | (ஏக்கருக்கு மக்கள் வீதம்) |
|---|---|---|
| மிக உயர்வு | — | 201—250 |
| நடுத்தர உயர்வு | — | 126—200 |
| நடுத்தரம் | — | 51—125 |
| குறைந்தது | — | 50 வரை |

**வாணிபப் பகுதி—**

சென்னை நகர்ப்புறப் பகுதியின் மொத்தப் பரப்பில் 2½ சதவீதப் பரப்பை உடையதாக வாணிபப் பகுதி இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

**தொழிற் பகுதி—**

1991-ல் உள்ள வேலைசெய்யும் மொத்த மக்களில் 30 சதவீதத்தினர் தொழிற்சாலைகளில் பணியாற்றுகிற தொழிலாளர்களாக இருப்பர் என்று கருதப்பட்டுள்ளது. இப்பகுதியைக் கணக்கிடுகையில் ஏக்கருக்கு 50 தொழிலாளர்கள் என்ற அடிப்படை விதம் மேற்கொள்ளப்பட்டது. நகர்ப்புற பகுதியில் 3,000 ஏக்கர் ஒதுக்கப்படவேண்டியிருக்கும் என்று தெரியவந்துள்ளது.

**கல்வி—**

கல்வி நிறுவனங்களை அமைத்துக் கொடுப்பதைப் பொறுத்த வரையில் 1.25 லட்சம் மக்களுக்கு 1 கல்லூரி என்ற அடிப்படை பின்பற்றப்படுகிறது. நகர்ப்புறப்பகுதிக்குத் தேவையான 20 கல்லூரிகளில், 14 ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. ஆறு கல்லூரிகளே இனிமேல் நிறுவவேண்டும்.

**மருத்துவமனை—**

1.25 லட்சம் மக்களுக்கு ஒரு மருத்துவமனை என்ற அடிப்படை பின்பற்றப்பட்டுள்ளது. தற்போதுள்ள 8 மருத்துவ மனைகளைக் கருத்திற்கொண்டு நகர்ப்புறப்பகுதிக்கு 12 புதிய மருத்துவ மனைகளை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மருத்துவ மனையும் 15 ஏக்கர் பரப்பளவை உடையதாகவும், 500 படுக்கைகளைக் கொண்டதாகவும் இருக்கும்.

**திறந்தவெளிகள்—**

1,115 ஏக்கர் பரப்பளவில் ஒரு மத்தியபூங்கா அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஆயிரம்பேருக்கு ஒரு ஏக்கர் என்ற அடிப்படையில் பூங்காக்களும், விளையாட்டுத்திடல்களும், அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. மொத்தப் பரப்பளவு 2,718 ஏக்காராகும்.

இத்துடன் ஒவ்வொன்றும் 25 ஏக்கர் பரப்புள்ள மாவட்டத் திடல்களை, தகுந்த 11 இடங்களில் அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**பயன்களும் பணிகளும்—**

நீர் வழங்கும் பணிகள், இப்போதுள்ள கீழ்ப்பாக்கம் விசையேற்றப் பணிகள் நடக்கும் நிலையத்தை அடுத்தாற்போல் 71 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது.



**காற்றோட்டம்—**

பெருவழி—150
துணைப் பெருவழி—120
பெரியசாலை—90

கீழ்க்கண்ட வகைகளுக்காக வழிக்கோடிகளும் (Terminals) வண்டி நிற்பிடங்களும் தகுந்த இடங்களில் அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது:—

| | ஏக்கா. |
|---|---|
| பேருந்து வழித்தடம் முடியுமிடங்கள் .. .. | 25 |
| பேருந்து பணிமனை .. .. | 15 |
| பாரவண்டி (டிரக்) வழித்தடம் முடியுமிடங்கள் .. | 40 |

## (இ) மாநகரப் பகுதி.

மாநகரப் பகுதி 10 நகர்ப்புறங்களைக் கொண்டதாயிருக்கும். ஒவ்வொரு நகர்ப்பகுதியிலும் 1991-க்குள் இறுதியாக ஒரு லட்சமும் அதற்கு மேற்பட்டும் மக்கள் தொகை இருக்கும். இந்த 10 நகர்ப்புறங்களிலும் மொத்தம் 19 லட்சம் மக்கள் இருப்பர்.

மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதும், சரக்குகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டுச் செல்வதும் எளிதாகவும், வசதியாகவும் இருக்கும்பொருட்டு தக்கதொரு சுற்றுவகைச்சாலைமுறை உருவாக்கப்பட்டுள்ளது. சுரங்கப் பாதைகள், மேம்பாலங்கள், நடந்து செல்வோர் சாலையை கடக்கும் இடங்கள், ரயில் மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் முதலியன உட்பட்ட புதிய சுற்றுச்சாலைகளும் ( Bye-pass roads ) புறச்சாலை (Ring roads) (வெளிப்புறமாக உள்ளவை, உட்புறமாக உள்ளவை). இடைக்கால வளர்ச்சித்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. முக்கிய போக்குவரத்துக்கு வசதிக்காக தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு, புறநகர் இருப்புப்பாதைப் போக்குவரத்து ஒன்றுக்கான (சுற்றிச்செய்வது) தற்காலிக செயற்குறிப்பு ஒன்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னை மாநகர்ப் பகுதிக்கென தற்போது நிறைவேற்றப்பட்டுவரும் முடிவான போக்குவரத்து ஆய்வுகள் முடிந்தபிறகு மேற்குறிப்பிட்ட போக்குவரத்து முறையின் சரியான விவரங்களும் சரியான நேர்பாடுகளும் இறுதியாக முடிவு செய்யப்படும்.

பல்வேறு நிலமேம்பாடுகளுக்கென பகுதிகளை மதிப்பிடுவதற்கும் கீழ்க்கண்ட அடிப்படை பின்பற்றப்படுகிறது—

| | |
|---|---|
| குடியிருப்புப் பகுதி (மொத்தப் பரப்பு 32,580 ஏக்கர்) | .. ஏக்கருக்கு 60 பேர் |
| வாணிபப் பகுதி (மொத்தப் பரப்பு 1,010 ஏக்கர்) | .. ஏக்கருக்கு 50 பேர் |
| தொழிற்பகுதி | .. தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப் படுவதாகக் கொள்ளப்படும் மொத்தத் தொழிலாளர்களில் 40 சதவீதத் |

| | |
|---|---|
| | னர் என்ற விதத்தில் ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 320 ஏக்கர். ஏக்கருக்கு 25 பேர் என்ற விதத்தில் மக்கள் தொகை நெருக்கம்(மொத்தப் பரப்பு 11,726 ஏக்கர்). |
| பொதுப் பகுதியும் ஊரளவுக்கு பொதுவான பகுதியும். .. | ஒரு லட்ச மக்கள் தொகைக்கு 3,590 100 ஏக்கர் (மொத்த பரப்பு ஏக்கர்). |
| திறந்தவெளி .. | ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு 100 ஏக்கர் (மொத்த பரப்பு 7,485 ஏக்கர்). |
| போக்குவரத்து சாலைகளும். | ஆயிரம் பேருக்கு ஒரு ஏக்கர் (மொத்தப் பரப்பு 4,905 ஏக்கர்). |

## MADRAS CITY METROPOLITAN AREA INTERIM DEVELOPMENT PLAN.

1. Interim Development Plan prepared for any urban area should reflect a carefully studied estimate of land requirements for the future population and should show how the developments in the Metropolitan Area should proceed, to ensure the best possible physical environment for the urban living. The plan should also provide for the most economic use of land to obtain a proper balance in the cost-revenue relationship. It should also recognise the local aspirations and objectives and provide for the generally accepted principles of health, safety, convenience and economy for urban living.

2. Outline Development Plan for the Madras City Metropolitan Area envisages two district entities :—

(1) Madras Urban Area.
(2) Madras Metropolitan Area.

Madras Urban Area includes all lands within the present Corporation limits of Madras City plus the following villages in its periphery :—

(1) Kodungaiyur.
(2) Erukancheri.
(3) Kulathur.
(4) Kunnur.
(5) Villivakkam.
(6) Tirumangalam.
(7) Koyambedu.
(8) Sencheri.
(9) Virugambakkam.
(10) Sali Gramam.
(11) Kodambakkam.
(12) Nesapakkam.
(13) Velacheri.
(14) Taramani.
(15) Kanagam.
(16) Tiruvanmiyur.

This has an extent of 65.34 sq. miles including 49.52 sq. miles of the present Corporation Area.

The Metropolitan Area constituting 390.89 square miles comprises the following urban centres which will have over one lakh population at the end of the plan period :—

(1) Minjur.
(2) Tiruvottiyur.
(3) Red Hills.
(4) Ambattur.
(5) Tandarai.
(6) Thirumazhisai.
(7) Poonamallee.
(8) Tambaram.
(9) Alandur.
(10) Perungudi.

and other smaller urban centres and rural areas.



The population that is anticipated in the Madras Metropolitan Area by 1991 is 48.23 lakhs. This population is proposed to be accommodated as indicated below :—

| | | | |
|---|---|---|---|
| Madras Urban Area | .. | .. | 25·00 lakhs. |
| Other Urban centres | .. | | 20·23 ,, |
| Tiruvottiyur | .. | 4 lakhs. | |
| Ambatthr | .. | 3 ,, | |
| Tambaram | .. | 3 ,, | |
| Poonamallee | .. | 2 ,, | |
| Alandur | .. | 2 ,, | |
| Minjur | .. | 1 ,, | |
| Red Hills | .. | 1 ,, | |
| Tirunindravur | .. | 1 ,, | |
| Tirumazhisai | .. | 1 ,, | |
| Kathivakkam | .. | 1 ,, | |
| Other Urban Centres | .. | 1·23 ,, | |
| Rural Area | .. | .. | 3·00 lakhs. |
| | | Total .. | 48·23 lakhs. |

### *Proposals : A. Urban Area.*

*Residential Areas.*—The various densities adopted or assessing the residential areas for the year 1991 are as follows :—

(Persons per Acre) :

| | |
|---|---|
| High ... ... ... ... | 201-250 |
| Medium High ... ... ... | 126-200 |
| Medium ... ... ... ... | 51-125 |
| Low ... ... ... ... | upto 50 |

*Commercial Area.*—The Commercial Area is calcuated to occupy 2½ per cent of the total area of the Madras Urban Area.

*Industrial Area.*—It has been assumed that 30 per cent of the total working force in 1991 will constitute industrial workers. The standard adopted for calculating the area is 50 workers per acre. It is found that 3,000 acres will have to be provided within the Urban area.

*Education.*—The provision for educational institutions follows standard of one college for each 1.25 lakhs population. Of the 20 colleges required for the urban area, 14 existing and the rest six are to be provided.

*Hospital.*—A standard of one hospital for every 1.25 lakhs population has been adopted. Taking into consideration the eight existing hospitals, 12 new hospitals have been proposed in the urban area. Each hospital will have an extent of 15 acres with 500 beds.

*Open spaces.*—A central park of nearly 1,115 acres have been proposed.

Parks and play fields have been provided at a standard of one acre per 1,000 persons. Total area 2,718 acres. In addition, district play fields each of 25 acres in area have been provided at 11 suitable locations.

*Utilities and Services.*—Water supply works, 71 acres have been set apart contiguous with the existing Kilpauk Water Works.

Circulation

| | |
|---|---|
| Arterial Road | 150 feet. |
| Sub-Arterial Road | 120 feet. |
| Major Road | 90 feet. |

Terminal and parking areas have been provided at suitable places for the following categories (area of each) :—

| | |
|---|---|
| Bus terminal ... ... ... | 25 acres. |
| Bus depot ... ... ... ... | 15 acres. |
| Truck Terminal ... ... ... | 40 acres. |

B. *Metropolitan Area.*

Metropolitan Area will comprise of 10 urban centres, each will have an ultimate population of one lakh or over by 1991 and these 10 centres will accommodate 19 lakhs.

To facilitate easy and convenient movement of people and goods a suitable circulation pattern of road system has also been worked out. New ring roads and Bye-pass roads (outer and inner) have (inclusive of sub-ways, overbridges, pedestrian crossing, railway overbridges and sub-ways, etc.) also been taken in the Interim Development Plan. Also to cater to the main transport, a tentative proposal of a suburban Railway (circular) is also indicated. The exact details and correct alignment of these mass transport system will be finally confirmed after the detailed Transport Traffic studies now in progress for the Madras Metropolitan Area is completed.

The standards adopted for assessing the areas for various land developments are as follows :—

| | |
|---|---|
| Residential .. | 60 persons per acre. (Total area 32,580 acre.) |
| Commercial .. | 50 persons per acre. (Total area 1,010 acres). |
| Industrial .. | 320 acres per lakh population at 40 per cent of the total workers taken to be employed in industries Density at 25 person per acres. (Total area—11,726 acres). |
| Public and semi-public .. | 100 acres per lakh population. (Total area—3,590 acres). |
| Open Space .. | 100 acres per lakh population. (Total area 7,485 acres). |
| Transport and Communications. | 1 acre per 1,000. (Total area 4,905 acres). |



## இணைப்பு III

[393-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் 9A.

### தமிழ் நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம்

மன்றப் பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் அவர்களின் பரிந்துரைப்படி "9-எ தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்" என்ற கோரிக்கையின்கீழ் ரூ. 40,83,900-க்கு மேற்படாத மானியம் வழங்கப்பட வேண்டுமென நான் இம்மன்றப்பேரவையை வேண்டுகிறேன்.

இம்மானியக் கோரிக்கை சென்ற ஆண்டுவரை 9-ஆம் எண் கோரிக்கையின் ஒரு பகுதியாக இருந்து வந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஆனால், இந்து சமய அறக்கட்டளைகள் போன்றதொரு முக்கியமான துறையைச் சார்ந்த கோரிக்கைப்பற்றி விவாதிக்க தங்களுக்குப் போதுமான வாய்ப்பு இருக்க வேண்டுமென இம்மன்றப் பேரவை உறுப்பினர்களில் பலர் கருத்துரை வழங்கினர். இந்த ஆண்டு முதல் இத்துறைக்கென தனிப்பட்டதொரு கோரிக்கை வழங்கப்படுமென முதலமைச்சர் அப்பொழுது ஒப்புக்கொண்டார்.

#### (i) பொது

இத் துறையின்கீழ் 10,239 அறநிலையங்கள் பணியாற்றி வருகின்றன. அவற்றின் வருவாய் ரூ. 4,87,00,000 என்று மதிப்பிடப் படுகிறது. இந்த அறநிலையங்களில் 105 மடங்களும், 9,347 கோயில்களும், 787 குறிப்பிட்ட அறக்கட்டளைகளும் அடங்கியுள்ளன. இவற்றின் நிர்வாகம் பகுதிக் குழுமுறை எடுக்கப்பட்டபோது, 1968-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தினாலும் முறைப் படுத்தப்பட்டது. இத் துறையை நடத்தி வருவதற்கான வருவாய் மேற்படி சட்டத்தின் 92-வது பிரிவின்கீழ் கொடுக்கத்தக்க நன்கொடைகளிலிருந்தும் தணிக்கைக் கட்டணங்களிலிருந்தும் கிடைக்கின்றது. இப்பிரிவின்படி ரூ. 200-க்குக் குறையாத வருவாய் உள்ள ஒவ்வொரு அறநிலையமும் குறிப்பிட்ட தொகை ஒன்றை இத்துறைக்குச் செலுத்த வேண்டும். 434 கோயில்கள் ரூ. 10,000-க்கு மேற்பட்ட வருவாயுள்ளவையாகும். 2,777 கோயில்களுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 10,000 வரை வருவாய் கிடைக்கின்றது. ஆண்டொன்றுக்கு ரூ. 1,000-க்கும் குறைவாக வருவாய் உள்ள கோயில்கள் 5,772 உள்ளன. ஆண்டுதோறும் கிடைக்கும் கோயில் துறை வருவாய் ரூ. 43 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

[1970 மார்ச் 24

## கோயில் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதில் அரசுக்குள்ள அதிகாரம்

கோயில்களின் நிர்வாகத்தை முறைப்படுத்துவதற்கான முதல் நடவடிக்கை 1817-ஆம் ஆண்டில் சட்டம் ஒன்றை இயற்றுவதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது. பிரிவி கவுன்சிலின் நீதிக்குழுவின் முடிவை ஒட்டி 1817-ம் ஆண்டு 7-ஆவது விதிமுறை செயல்படுத்தப் படுவதற்கு முன்பு இவ்வகை அறக்கட்டளைகளுக்கு நேரடியாகச் சென்று மேற்பார்வையிட்டு அவற்றின் நிர்வாகத்தில் காணப்பட்ட ஊழல்களைக் களைந்தெறியும் உரிமையை பிரிட்டிஷ் அரசு இந்நாட்டின் ஆட்சியைத் தன்னகத்தே கொண்டிருந்த காரணத்தால் தானே ஏற்றுக்கொண்டது. இந்த அதிகாரத்தை அந்நிய ஆட்சிக்கு முன் இந்து மன்னர்களும், முகமதிய மன்னர்களும் பயன்படுத்தி வந்தனர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இவ்வாறாக தற்போதைய சட்டம் உட்பட பல்வேறு சட்டங்களினால் அரசுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்கள் கோயில்களின் நிர்வாகத்தைத் தங்கள் அதிகாரத்திற்கு உட்படுத்தியதேயன்றிக் கோயில்களில் வழிபாட்டு முறையைக் கட்டுப்படுத்துவதாக அமையவில்லை. எனவே, சமயச்சார்புள்ள அரசாக இருப்பினும், அல்லது சமய நெறி முறையைப் பகுத்தறிவுக் கண்ணோடு அணுகும் அரசாக இருப்பினும் கோயில்களின் நிதி தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கும், கோயில்களில் நடைமுறையிலுள்ள வழிபாட்டு முறைகளில் தலையிடாமல் வழிபாடு ஒழுங்காக நடந்து வர வகை செய்வதற்கும் அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது ஆட்சியிலுள்ள அமைச்சரவை கோயில்கள் நிர்வாகம் பற்றி மேற்கொண்டுள்ள கொள்கை குறித்து இம்மாநில அரசுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் எழுப்பப்படக்கூடுமாதலால் இந்த விளக்கம் ஈண்டு தேவையாகிறது.

### (ii) இந்துக்களல்லாதாரைக் கோயில்களுக்குள் அனுமதித்தல்

1947-ஆம் ஆண்டில் தமிழ் நாடு ஆலய நுழைவு அனுமதிச் சட்டத்தின்கீழ்ச் செய்யப்பட்ட விதிகளைச் சேர்ந்த 3-வது விதியின் (a) பகுதியை நீக்கியது, இம்மாநில அரசு மேற்கொண்ட முக்கியமான முடிவாகும். இந்துக்கள் அல்லாதார் கோயில்களில் நுழைவதைத் தடை செய்து 1947-இல் அரசு பிறப்பித்த ஆணைக்கான காரணங்கள் ஆவணங்களில் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை. தொல் பொருள் ஆய்வுத்துறையின் முன்னாள் தலைவராகிய திரு. மார்ட்டிமர் வீலர் தஞ்சாவூர்க் கோயிலிலுள்ள வண்ண ஓவியங்களைப் பார்வையிட விழைந்தபோது அவர் அவ்வோவியங்களைப் பார்க்க இயலவில்லை. ஏனெனில், இந்துக்கள் அல்லாதார் கோயிலினுள் நுழைவதை இந்த விதி தடை செய்தது. அதே நேரத்தில் மதுரையிலுள்ள ஆயிரங்கால் மண்டபம், அனைவரும் பார்வையிடும் வகையில் திறந்துவைக்கப்பட்டது. சட்டப்படிப் பார்த்தால், இது செயலிலுள்ள விதிகளுக்கு முரணாகும். எனவே, (3 a) விதியை நீக்கி எச்சமயத்தைச் சார்ந்தவரும் கோயிலினுள்



1970 மார்ச் 24]

நுழைவதை அனுமதிக்க வகை செய்வது விரும்பத்தக்கது என அரசு கருதியது. இத்தகைய விதி 1947-ஆம் ஆண்டிலேயே அவசியமாக இருந்திருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். அரிசனங்கள் கோயிலினுள் நுழைவதை சாதி இந்துக்கள் சகித்துக் கொள்ளும் நிலை அப்போது உருவாகி இருந்தது. கடந்த 22 ஆண்டுகளில் இந்துக்கள் பெருமளவில் மாறிவிட்டனர். இந்துக்களுக்கு ஏனைய சமயத்தினர் கனிவுள்ளத்துடன் காட்டும் சலுகைகளை இந்துக்கள் பிற சமயத்தினருக்கும் காட்ட வேண்டும் என்று அரசு கருதியது. இவ்விதியை நீக்கி விட்டதனாலேயே முகமதியர்களையும், கிறித்தவர்களையும் இந்துக் கோயில்களுக்குள் அழைத்துச் செல்லும் இயக்கம் ஒன்றை மேற்கொள்ள தமிழ் நாடு அரசு திட்டமிட்டுள்ளது என்று பொருள் கொண்டுவிடக்கூடாது. சாதியில் இழிந்தவர் கோயிலுள் நுழைந்தால் கோயிலின் தூய்மை கெட்டுவிடும் என்று எண்ணிய காலமும் உண்டு. நாம் நடைமுறையில் பின்பற்றிவரும் வழிபாட்டு முறைகளைத் தாங்களும் பின்பற்றாமல் எந்த முகமதியரோ, கிறித்தவரோ நமது கோயில்களில் நுழைய அனுமதிக்கப்படுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. அதே சமயத்தில் நமது கோயில்களில் இறைவழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் நல்ல இந்துக்களின் உள்ளம் புண்படும் வகையில் எந்த முகமதியரும், கிறித்தவரும் நடந்துகொள்வதில் நாட்டம் செலுத்துவர் என்று நான் கருதவில்லை.

### (iii) அர்ச்சகர் பயிற்சி நிலையம்

பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள் கோயில்களின் கருவறைக்குள் அரிசனங்களை அழைத்துச் சென்று அங்குள்ள சிலைகளை அவர்கள் தொட்டு வணங்கி வழிபாடு செய்ய இயலும்வகையில் கிளர்ச்சி ஒன்றை நடத்தப் போவதாக அறிவித்திருந்ததை நான் இப்பேரவையினரின் நாட்டத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். சமுதாயத்தில் நிலவிவரும் சாதி வேறுபாட்டை ஒழிப்பதே அவரது நோக்கமாகும். சாதி வேறுபாட்டை நமது கோயில்களிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென முதலமைச்சர் உறுதி அளித்ததன்மேல் அவர் தமது இயக்கத்தைக் கைவிட இசைந்துள்ளார். கோயில் அர்ச்சகர்களாகப் பயிற்சி பெறுவதில் ஆர்வம் காட்டுபவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான நிறுவனங்களை நிறுவவும், கோயில் அர்ச்சகராக நியமிக்கப்படுவதற்குக் குறைந்த அளவுத் தகுதியாக அறிவிக்கப்படக்கூடிய சான்றிதழ் ஒன்றை அளிக்க வகை செய்யவும் அரசு ஆலோசனை செய்து வருகிறது. இப்பாடமுறையில் சேர்வதற்குச் சாதி ஒரு அடிப்படையாகக் கொள்ளப்பட மாட்டாது. இதனால் அர்ச்சகராவதற்குச் சாதி ஒரு தகுதியாக இருப்பது நடைமுறையிலிருந்து நீக்கப்படும். இறைவனின் முன் அனைவரும் சமம் என்ற தனது பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பும் நோக்கத்துடன், இந்த அரசின் செயற்குறிப்பிலுள்ள கருத்து அப்படி ஒன்றும் கடுமையான கருத்தல்ல.

புகழ்பெற்ற டாக்டர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் தலைமையில் இயங்கிய இந்து சமய அறக்கட்டளைகள் ஆணைக்குழுவின் அறிக்கையை மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். அந்த ஆணைக்குழுவின் பரிவுரைகளைக் கீழே கொடுத்துள்ளேன்.

(1) ஒவ்வொரு மாநிலமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முக்கியமான இந்து அறநிலையங்களில் அர்ச்சகர்களுக்கும், பூசாரிகளுக்கும், பண்டாக்களுக்கும் பயிற்சி அளிக்கக்கூடிய பள்ளிகள் அல்லது நிறுவனங்களை நிறுவ வேண்டும். இப்பயிற்சி நிறுவனங்களில் அவர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பாடத்திட்டப்படி ஆகமங்கள், அர்ச்சனைகள், வழிபாட்டு நியமங்கள், சடங்குகள் முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். தொடக்கப் பயிற்சிக்கும், முன்னேற்றப் பயிற்சிக்கும் இப்பயிற்சி முறையில் வகை செய்யப்பட வேண்டும். தொடக்கப் பயிற்சியில் கீழ்க்கண்டுள்ளவை பற்றி கற்பிக்கப்படலாம் :—

(a) சமஸ்கிருதத்தில் நடைமுறை அறிவு.

(b) அர்ச்சகர்கள் எந்த சம்பிரதாயத்தைச் சார்ந்தவர்களோ அந்த சம்பிரதாயத்தின் ஆகமங்கள், சடங்குகள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றில் அறிவு; மேலும், அவர்கள் எந்தக் கோயிலுடன் இணைக்கப்பட்டுள்ளாரோ அக்கோயிலின் தலபுராணம் பற்றிய அறிவு.

(c) மந்திரங்கள், அர்ச்சனைகள் ஆகியவற்றின் பொருளையும், உட்கருத்தையும் விளக்க இயலும் வண்ணம் வட்டார மொழி அல்லது மொழிகளில் பயிற்சி.

இந்து சாத்திரங்களையும், தத்துவத்தையும் பொதுவாகப் பயில்வதற்கும் குறிப்பாக அந்த அர்ச்சகர் எந்த சம்பிரதாயத்தைச் சார்ந்தவரோ அச்சம்பிரதாயத்தின் நெறிமுறைக் கோட்பாடுகளைக் குறிப்பாகப் பயில்வதற்கும் முன்னேற்றப் பயிற்சியில் வகைசெய்யப்பட வேண்டும். ஏற்கெனவே அர்ச்சகராகப் பணியாற்றி வருபவருக்கு நினைவூட்டுப் பயிற்சியையும், சமயச் சார்பற்ற கல்வி நிறுவனங்களில் பயில்பவர்களும் இத்தகைய பயிற்சி பெற முன்வருபவர்களுமான இந்து மாணவர்களுக்குப் பகுதிநேர வகுப்பு நடத்தவும் இப்பயிற்சி முறையில் வகை செய்யப்பட வேண்டும். இத்தகைய பயிற்சியில் சேர முன் வரும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்க வகை செய்யும் ஏற்பாடு ஒன்றிருக்க வேண்டும். தலைமுறை தலைமுறையாக அர்ச்சகர்களாகவும் பூசாரிகளாகவும் பணிபுரிந்துவரும் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களை இப்பயிற்சி முறையில் சேர்த்துக் கொள்வதிலும் உதவித்தொகை வழங்குவதிலும் முதலிடம் அளிக்க வேண்டும். அந்தந்த மாநிலத்தின் சம்பிரதாயங்களை நிறைவு செய்யும் வகையில் இப்பயிற்சி அமைய வேண்டும். முக்கிய சம்பிரதாயங்களைச் சேர்ந்த சமய நிறுவனங்களின் உபரி நிதிகளை ஒரு மைய அடிப்படையில் ஒருங்கு சேர்த்து அதிலிருந்து அல்லது வெவ்வேறு





இடங்களில் அல்லது பகுதிகளில் குறிப்பிட்ட ஒரு சம்பிரதாயத்தை உடைய, கோவில்களின் தொகுதியைச் சேர்ந்த நிதிகளை ஒழுங்கு சேர்த்து அதிலிருந்து மேற்படி பயிற்சி நிலையத்துக்கு நிதி உதவி அளிக்கப்படலாம். இந்த இரண்டு முறைகளில் எது பொருத்தமோ அந்த முறை பின்பற்றப்படலாம்.

(2) கோயில்களில் அர்ச்சனை செய்வதற்கு அல்லது பூசை புரிவதற்கு அர்ச்சகர்களுக்குக் குறைந்த அளவு தகுதி வரையறுக்க வகை செய்யப்பட வேண்டும்.

இப் பரிவுரையின் அடிப்படையில்தான் இத்தகைய முக்கியமானதொரு ஆணைக்குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்தும் நிறுவனம் ஒன்றை நிறுவுவது குறித்த செயற்குறிப்பு இந்த அரசு ஆய்வு செய்து வருகிறது. இப்பொருள் குறித்து இந்து சமய அறக்கட்டளைகள் ஆலோசனைக்குழு, சென்ற முறை திருத்தணியில் கூடியபோது தலைமுறை தலைமுறையாக செயல்பட்டுவரும் பூசாரி முறை மாறிவரும் சமுதாய, பொருளாதார நிலைகளுக்கு ஏற்ப கணிசமான அளவு மாறிவிட்டதனால் மேற்சொன்ன தன்மையுள்ள நிறுவனம் ஒன்றை அமைப்பது அவசியம் என உறுப்பினர்கள் கருத்துரை வழங்கினர்.

### (iv) கோயில் நிலங்களை நிர்வகித்தல்

கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களின் நிர்வாகம் பற்றியது மற்றொரு சிக்கலாகும். பெரும்பான்மையான கோயில்களின் வருவாய் குறைவானதே என்றும், கோயில் நிலங்களைத் திறம்பட நிர்வகிப்பதன்மூலம் இந்த வருவாயை அதிகரிக்க முடியும் என்றும் இந்தியக் கணக்கெடுப்பு நிறுவனம் தமிழ் நாட்டில் உள்ள கோயில்களை ஆய்வு செய்து தயாரித்த அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் பண்ணைத் தொழிலாளர்களின் ஊதியங்கள் குறித்துத் திரு. கணபதியா பிள்ளை அவர்களின் தலைமையில் செயல்பட்ட ஆணைக்குழு அம்மாவட்டத்தில் உள்ள கோயில் நிலங்கள் குத்தகைக்கு விடப்படும் முறை பற்றிக் குறைகூறிக் கருத்து தெரிவித்துள்ளது. தேவஸ்தானங்கள், மடங்கள், அறநிலையங்கள் ஆகியவை அளிக்கும் குத்தகைகளில் ஏறத்தாழ 1/8 பங்கு போலிக் குத்தகைகள் என்றும், வரையறுக்கப்பட்ட உச்சவரம்பாகிய 5 ஸ்டாண்டர்டு ஏக்கராவுக்கு மேல் பல குத்தகைக்காரர்கள் குத்தகை எடுத்துள்ளனர் என்றும் இந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, தமிழ் நாடு நில உச்சவரம்புச் சட்டத்தின் செயல் முறையையும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பொதுப் பொறுப்புக் கழகங்கள் நிலங்களைப் பயன்படுத்தும் முறை பற்றியும் ஆய்ந்து, தவறான முறைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்துப் பரிவுரை செய்யவும் சிறப்பு அதிகாரி ஒருவரை (துணை மாவட்ட ஆட்சித் தலைவர்) அரசு நியமித்தது. அதே சமயத்தில், நிலங்கள் நியாயமான அங்காடி மதிப்பில் குத்தகைக்காரர்களுக்குக் கொடுக்கப்பட்ட பிறகு அல்லது அந்த நிலங்களை வாங்க முன்வருபவர்களுக்கு நியாயமான

அங்காடி விலையில் அந்த நிலங்களை விற்றபிறகு அத்தொகை அரசு ஈட்டுப்பத்திரங்களில் மட்டுமே முதலீடு செய்யப்பட வேண்டும் என்று அரசு கருதுகிறது. வழிபாடுகளை நடத்துவதற்கும் பிற அலுவல்களை நிறை வேற்றுவதற்கும் கோயில்களுக்கு மேலும் வருவாய் கிடைக்க வகை செய்வதும் இதன் நோக்கமாகும். இவை சிக்கல் நிறைந்தவை என்பதை ஒப்புக் கொள்ளுகிறோம். இவைபற்றி மேலும் ஆய்வு செய்து ஆலோசிக்க வேண்டும்.

கோயில்களின் நடைமுறைகளில் தலையிடுவதற்காக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. கோயில் நிலங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதும் நிலங்களிலிருந்து அதிக ஆதாயம் கிடைக்க வழி செய்வதும் கோயில் அறங்காவலர்களில் சிலர் செய்துவரும் ஊழல்களைத் தடுப்பதுமே இதன் நோக்கமாகும்.

### கோயில்களைப் பாதுகாத்தலும் புதுப்பித்தலும்

வருவாயற்ற கோயில்களுக்கு மொத்த மானியங்கள் வழங்குவதன் மூலம் நிதி உதவி அளிக்கப்படுகின்றது. இத்தகைய

மொத்த மானியங்கள் வழங்க ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் ரூ. 4 லட்சம் ஒதுக்கப்பட்டு வருகிறது. அறநிலையங்கள் தங்கள் உபரி நிதியிலிருந்து மனமுவந்து அளிக்கும் நன்கொடைகளினின்றும் அல்லது பொதுமக்கள் உளங்கனிந்து அளிக்கும் நன்கொடைகளிலிருந்தும் இந்து சமய அறக்கட்டளைகள் பொது நல நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. வருவாயற்ற கோயில்களின் திருப்பணிக்காகவும், அவற்றைச் சார்ந்த கட்டிடங்கள், வண்ண ஓவியங்கள் ஆகியவற்றைப் புதுப்பிப்பதற்காகவும், அறநிலையங்கள் அனைத்தின் அல்லது அவற்றில் ஒரு வகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு பொதுவான நெறிமுறைக் கோட்பாடுகளைப் பரப்புவதற்கும் இந்தப் பொது நல நிதி பயன்படுத்தப்படும். இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாக) நிதியின் உபரியாக உள்ள நிதியைப் பொது நல நிதிக்குத் திருப்பி விடுவது அரசுக்கு இயலும்பொருட்டு இச்சட்டம் 1967-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது.

### "யுனெஸ்கோ" உதவி

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்மையான கோயில்கள் சிலவற்றைப் பாதுகாப்பதிலும், புதுப்பிப்பதிலும், "யுனெஸ்கோ" நிறுவனம் அக்கறை காட்டி வந்துள்ளது. அவர்கள் நாட்டத்தை ஈர்த்த முதல் கோயில் ஸ்ரீரங்கத்திலுள்ள திரு அரங்கநாதர் கோயில் ஆகும். உலகப் புகழ் பெற்ற திரு. பாட்ரிக் ஏஃபாக்னர் என்னும் ஆங்கிலேய வல்லுநர் இக்கோயிலின் கட்டிட அமைப்பைப் பற்றியும் குறிப்பாக எத்தகைய திருப்பணி அங்கு தேவைப்படுகிறது என்பது பற்றி தொடக்க ஆய்வு செய்தார். அவர் 1966-ஆம் ஆண்டில் இக்கோயிலைச் சென்று பார்வையிட்டார். அவரது அறிக்கையின் அடிப்படையில் "யுனெஸ்கோ" நிறுவனம்



இக்கோயிலின் பாதுகாப்புக்காக 12 ஆயிரம் டாலர்கள் (சுமார் ரூ. 1 லட்சம்) கொடுத்துள்ளது. இந்தியாவில் தயாரிக்கப்படாதப் பொருள்களின் வடிவிலும், கட்டிடங்களை அவற்றின் பண்டைக் காலப் பண்பாடு கெடாதவகையில் பாதுகாப்பதற்குப் பயன்படும் வண்ணங்களின் வடிவிலும் இந்த உதவி அளிக்கப்படுகிறது. திருவரங்கநாதர் கோயில் பற்றி "யுனெஸ்கோ" நிறுவனம் ஆங்கிலத்திலும், பிரஞ்சு மொழியிலும் வெளியீடுகளை வெளியிட்டுள்ளது. இந்த வெளியீடுகளைத் தயாரித்தவர் திருமதி ஆபோயர் என்பவராவர். இதற்காக "யுனெஸ்கோ" நிறுவனம் 3,000 டாலர் (சுமார் ரூ. 22,500) அளித்துள்ளது. இந்த நூலைத் தமிழில் மொழிபெயர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. "யுனெஸ்கோ" நிறுவனத்தின் வல்லுநர்கள் வழங்கியுள்ள தொழில் நுட்ப ஆலோசனை தரம் உயர்ந்ததாகும். கோயில்களை அவற்றின் உண்மை வடிவில் பாதுகாத்து வருவதற்கு இந்த வல்லுநர்கள் அளித்துள்ள ஆலோசனை மிகவும் பயனுடையதாகும். "யுனெஸ்கோ" அளிக்கும் உதவிக்கு வரையறை கிடையாது என்று உறுப்பினர்கள் கருத வேண்டாம். ஒவ்வொரு கோயிலுக்காகவும் அந்நிறுவனம் ஒதுக்கும் தொகை ரூ. 1 லட்சத்திற்கு மேற்படாது. திருப்பணிக்காக மேலும் ரூ. 30 லட்சம் முதல் ரூ. 50 லட்சம் வரை செலவாகலாம். இச் செலவை அந்தந்தத் திருப்பணிக் குழுக்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். இராமேஸ்வரத்திலுள்ள திரு இராமனுதர் கோயில் "யுனெஸ்கோ" நிறுவனத்தின் உதவி பெறுவதற்கான இரண்டாவது கோயிலாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. "யுனெஸ்கோ" நிறுவன வல்லுநர்கள் கோயில்களைச் சென்று பார்வையிட்டு திருப்பணி எம்முறையில் நடத்தப்பட வேண்டும் என்பது பற்றி ஆலோசனை நல்குவர். 1970-71-ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்திலுள்ள திரு. வரதராஜசுவாமி கோயில், சிதம்பரத்திலுள்ள திரு. நடராசர் கோயில் ஆகியவற்றின் திருப்பணி பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படும். "யுனெஸ்கோ" நிறுவனத்திடமிருந்து இத்தகைய நிதி உதவி பெறுவதன்மூலம் அதிக அளவு கோயில்களை வருங்காலச் சந்ததியினருக்குப் பயனளிக்கும் வகையில் பாதுகாத்து வைக்க வேண்டும் என்பது அரசின் நோக்கமாகும்.

### ஸ்ரீவில்லிப்புத்தூர் கோயில் கோபுரத் திருப்பணி.

ஸ்ரீவில்லிப்புத்தூரிலுள்ள ஸ்ரீவடபத்திரசயனர் கோயிலின் கோபுரத்தை ரூ. 4 லட்சம் செலவில் செப்பனிட்டுப் புதுப்பிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கியது அரசு மேற்கொண்டுள்ள மற்றொரு முக்கிய முடிவாகும். இந்து சமய அறக்கட்டளைகள் ஆணையரின் பொது நல நிதியிலிருந்து இதற்கென ரூ. 1 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாக நிதியிலிருந்து இதற்காக ரூ. 2 லட்சம் ஒதுக்கப்படும். திருப்பணிக்குழு பொது மக்களிடமிருந்து நன்கொடையாக ரூ. 80,000 வசூலிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சிய ரூ. 20,000 கோயில் நிதியிலிருந்து செலவு செய்யப்படும்.

### பழனி கோயில் திருப்பணித் திட்டம்.

திரு. என். மகாலிங்கம் அவர்கள் தயாரித்துள்ள பெருந்திட்ட அடிப்படையில் ரூ. 35 லட்சம் செலவில் பழனி கோயிலின் திருப் பணியை மேற்கொள்வது குறித்து அரசு ஆலோசனை செய்து வரு கிறது. இந்து சமய அறக்கட்டளைகள் ஆலோசனைக் குழு திருத் தணியில் கூடியபோது இப்பணியை மேற்கொள்வதற்காகக் குழு ஒன்று அமைக்கப்படலாம் என்றும், இப்பணிக்காகப் படிப்படி யாகச் செயல்படும் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் ரூ. 5 லட்சம் செலவிடப்படலாம் என்றும் இக்குழு கருத்துரை வழங்கியுள்ளது. இக்குழு பொதுமக்களிடமிருந்தும் நன்கொடை வசூலிக்கும்.

இம் மானியக் கோரிக்கையை ஏற்று நிறைவேற்றுமாறு இப் பேரவையை வேண்டுகிறேன்.

## இணைப்பு IV.

[439-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ் நாடு சின்கோனாத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

### அ. பிரிவு.

### 1. முகவுரை.

தமிழ் நாடு சின்கோனாத்துறை தமிழக அரசின் மிகப் பழைய வணிக நிறுவனங்களில் ஒன்றாகும். நீலகிரி மாவட்டத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த ஆனைமலைப் பகுதிகளிலும் இந்தத்துறை சின்கோனா, பிற மூலிகைச் செடிகள், மணமுள்ள எண்ணெய்கள் (தைலங்கள்) நல்கும் செடி வகைகள் பலவற்றைப் பயிரிட்டு வருகிறது. இத் துறைக்குச் சொந்தமான, ஆனைமலைப் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலையொன்று கொய்னா பொருள் கள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. யூகலிப்டசு (நீலகிரித் தைலம்), ஜெரேனியம் போன்ற தைலங்களைச் தூய்மையாக்கித் தரப்படுத்தும் வேலையில் நடுவட்டத்திலுள்ள மற்றுமொரு தொழிற் சாலை ஈடுபட்டுள்ளது.

### 2. இத்துறையின் அலுவல்கள்.

சின்கோனாப் பயிரைச் சாகுபடி செய்தலும், சின்கோனா மரப் பட்டையைப் பக்குவப்படுத்தி பல்வேறு கொய்னாப் பொருட்களை உற்பத்தி செய்தலும் அவ்வுற்பத்திப் பொருட்களை வெளி, உள் நாட்டுச் சந்தைகளில் விற்பனை செய்தலும் இத்துறையின் தலையாய பணிகளாகும். இது தவிர, இத்துறையின் வருவாயைப் பெருக்கும் நோக்கத்திலும், இந் நாட்டில் மருந்து மற்றும் மணங்கமழ் தைலங் களுக்கான வளர்ந்து வரும் தேவையைக் கருத்தில் கொண்டும், அவ்வெண்ணெய்களை நல்கும் பல்வேறு வகையான செடிகளைப் பயி ரிடுகிறது. இவற்றிலிருந்து கிடைக்கின்ற உற்பத்திப் பொருட்களை யும் சின்கோனாத்துறை நேரடியாக விற்பனை செய்து வருகிறது.





மலேரியா மற்றும் காய்ச்சல்களைக் குணப்படுத்தப் பயன்படும் கொய்னா மருந்து, சின்கோனா மரத்தின் பட்டையிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. இம்மரம் தென் அமெரிக்காவைச் சேர்ந்தது. முதன் முதல் 1859–60-ல் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டது. தென்னிந்தியாவில் சின்கோனா மரங்கள் 3,000 அடி உயரத்தில்தான் வளர்கின்றன. தேயிலை, காப்பி, ரப்பர் போன்ற பயிர்களைப் போல, சின்கோனா பெரும் ஆதாயத்தைத் தராத காரணத்தால் தனிப்பட்ட முதலாளிகளின் ஆர்வத்தை இது ஈர்க்கவில்லை. எனவே இந்திய நாட்டின் கொயினாத் தேவைகளை ஈடு செய்யவேண்டி, தமிழ் நாடு அரசாங்கமே இதனைப் பயிரிட வேண்டியதாயிற்று. இந்தியாவில் கொய்னா உற்பத்தி செய்யும் மற்றொரு மாநிலம் மேற்கு வங்காளம் ஒன்றே.

### 3. பல்வகைப் பயிர்களின் பரப்பளவு.

1969-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ம் நாளிலுள்ளபடி இத் துறையின் தோட்டங்களில் சின்கோனா மூலிகைச் செடிகள், வாசனைத் தைல மரங்கள் ஆகியவை பயிர் செய்யப்படும் பரப்பளவு கீழே தரப்பட்டுள்ளது :—

| தொடர் எண். (1) | பயிர்களின் பெயர். (2) | | பரப்பளவு நீலகிரி (3) | ஆனைமலை (4) (எக்கர்) | மொத்தம். (5 |
|---|---|---|---|---|---|
| 1 | சின்கோனா | —எக்டேர் | 442·23 | 1869·28 | 2,311·51 |
| | | —எக்கர் | 1,093 | 4,620 | 5,713 |
| 2 | மருந்து மற்றும் வாசனைத் தைலச் செடிகள். | —எக்டேர் | 281·880 | 120·505 | 402·385 |
| | | —எக்கர் | 695 | 300 | 995 |

### 4. தொழிற்சாலைகள்.

### அ. ஆனைமலையிலுள்ள அரசினர் கொய்னாத் தொழிற்சாலை

சின்கோனா மரப்பட்டையிலிருந்து கொய்னா உற்பத்திப் பொருள் கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலைப் பகுதியில் அமைந்துள்ளது. அத்தொழிற்சாலையின் சாதாரண உற்பத்தித் திறன் அளவு :

| | | |
|---|---|---|
| கொய்னா சல்பேட்டுகள் | .. | 16,000 கிலோ. |
| கொய்னா பெப்ரிபியூஜ் | .. | 12,000 கிலோ ஆகும். |

குறிப்புகள்.—(1) கொயினா ஹைட்ரோகுளோரைடு மருந்து கொய்னா சல்பேட்டிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. கொய்னா சல்பேட்டுத்தான் கொய்னா ஹைட்ரோகுளோரைடு உற்பத்தி செய் வதற்கு மூலப் பொருளாகும்.

(2) வெளிநாட்டுச் சந்தையின் தேவைக்கிணங்க 1968–69-ம் ஆண்டில் கொய்னா ஹைட்ரோகுளோரைடு உற்பத்தி அதிகரிக்கப் பட்டது.

[1970 மார்ச் 24

கடந்த மூன்றாண்டுகளில் இவ்வாலையின் உற்பத்திக் கணக்கு வருமாறு :—

| | 1967-68. | 1968-69. | 1969-70. (மதிப்பிடப்பட்டது.) |
|---|---|---|---|
| | கிலோ. | கிலோ. | கிலோ. |
| கொய்னா சல்பேட்டு .. .. | 18,937 | 14,454 | 16,000 |
| சின்கோனா பெப்ரிபியூஜ் .. .. | 22,211 | 15,627 | 13,000 |
| கொயினா ஹைட்ரோ குளோரைடு .. | 2,521 | 11,756 | 7,500 |
| கொயினா சல்பேட்டு மாத்திரைகள். | .. | 2,53,500 | (எண்கள்) |
| சின்கோனா பெப்ரி பியூஜ் மாத்திரைகள். | .. | 2,00,000 | (எண்கள்) |

ஆ. நீலகிரி மாவட்டம் நடுவட்டத்திலுள்ள மருந்து மற்றும் வாசனை தைலத் தொழிற்சாலை.

சின்கோனாத்துறையின் தோட்டங்களில் பயிராகும் மருந்து மற்றும் வாசனைத் தைலச் செடிகளிலிருந்து எடுக்கப்படும் தைலங்களைத் தூய்மைப்படுத்தி தரப்படுத்தும் அலுவல்களை இத் தொழிற்சாலை மேற்கொண்டுள்ளது. இத் தொழிற்சாலை அத் தைலங்களின் உற்பத்தியையும் தரத்தையும் பெருக்கும் ஆராய்ச்சிப் பணியினையும் செய்து வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் இவ்வாலையில் தூய்மைப்படுத்தப்பட்டு, தரப்படுத்தப்பட்டு விற்பனைக்குச் சென்ற (தைலங்களின்) எண்ணெய்களின் மதிப்பு வருமாறு :—

| | | | |
|---|---|---|---|
| 1967–68 | .. .. | ரூ. 4,89,000 | |
| 1968–69 | .. .. | ரூ. 4,60,400 | |
| 1969–70 | .. .. | ரூ. 4,83,600 | (மதிப்பிடப்பட்டது). |

5. சின்கோனாத் துறை செய்த விற்பனையும், ஈட்டிய வருவாயும்.

அ. கொய்னாப் பொருட்களின் விற்பனை.

1964-ம் ஆண்டிலிருந்தே வெளிநாடுகளில் கொய்னாப் பொருட்களுக்கு மிகுந்த தேவை இருந்து வருகிறது. 1967–68-ம் ஆண்டில் ஓரளவு அவற்றின் விலையில் சரிவு ஏற்பட்டதென்றாலும் கூட, தற்போது விலையும் தேவையும் ஏறுமுகத்திலேயே இருந்து வருகின்றன. அனைத்து உலகிலும் கொய்னாப் பொருட்களுக்கேற்பட்டுள்ள பற்றாக்குறை நிலைமையைக் கருத்தில் கொண்டு பார்க்குமிடத்து கொய்னாப் பொருட்களின் விலை இன்னமும் ஏற வாய்ப்பு உண்டென்றே கருத இடமிருக்கிறது. இத் துறை உற்பத்தி செய்யும் கொய்னாப் பொருட்கள் தரத்திலும் கலப்பற்ற தன்மையாலும் உலக அங்காடியில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்திருக்கின்றன.



1970 மார்ச் 24]

ஏற்றுமதி வாயிலாகவும், உள் நாட்டு விற்பனை மூலமாகவும் கடந்த மூன்றாண்டுகளில் கொய்னாப் பொருட்கள் ஈட்டிய வருவாய் வருமாறு :—

| ஆண்டு. | ஏற்றுமதி. | உள்நாட்டு விற்பனை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1967–68 .. | 26,55,500 | 7,61,043 | 34,16,543 |
| 1968–69 .. | 37,94,212 | 6,36,888 | 44,31,800 |
| 1969–70 .. (மதிப்பிடப்பட்டது) | 46,61,000 | 10,09,000 | 56,70,000 |

(2) மருந்து மற்றும் வாசனைத் தைலங்களின் விற்பனை.

கடந்த மூன்றாண்டுகளில் மருந்து எண்ணெய்கள் மற்றும் வாசனைத் தைலங்களின் விற்பனை வாயிலாகக் கிடைத்த வருவாய் பின் வருமாறு :—

| ஆண்டு. | விற்பனை மதிப்பு. |
|---|---|
| (1) | (2) |
| | ரூ. |
| 1967–68 .. .. .. | 4.89,000 |
| 1968–69 .. .. .. | 4,80,600 |
| 1969–70 (மதிப்பிடப்பட்டது) | 5,15.000 |

6. மருந்து மற்றும் வாசனைத்தைலச் செடிகளைக் குறித்து ஆராய்ச்சி.

மருந்துச் செடிகள் மற்றும், வாசனைத் தைலச் செடிகளைப் பயிரிடுதலும் அவற்றைப் பதனப்படுத்துதலும், தவிர இச் செடிகளைப் பயிரிடும் முறையை மேம்படுத்தவும், அவற்றிலிருந்து மருந்து வகைகளையும் தைல வகைகளையும் உற்பத்தி செய்யும் முறைகளைச் செம்மைப்படுத்துவதற்குமான ஆராய்ச்சிகளையும் இத்துறை மேற்கொண்டுள்ளது. யூகலிப்டஸ் சிட்ரியோடோரா பற்றிய ஆராய்ச்சி திட்டம் ஒன்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுவினரின் I.C.R.B. நிதி உதவியுடன் விரைவில் செயல்படவிருக்கிறது.

7. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இத் துறையின் செயல் திட்டங்கள்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இத்துறையினரால் செயலாற்றப்படவிருக்கும் கீழ்க்காணும் திட்டங்கள் 1970–71-ம் ஆண்டிலிருந்து செயலுக்கு வரும்.

(1) வாசனைத் தைலச் செடிகளின் சாகுபடியை வணிக அளவில் பெருக்கும் திட்டம்.

(2) மருந்து மற்றும் வாசனைத் தைலச் செடிகளை முன்னோடித் திட்ட அளவில் தைல உற்பத்தி செய்வதற்கான திட்டம்.

(3) மும்முரமான ஆராய்ச்சியையும், வளர்ச்சி முறைகளையும் மருந்து மற்றும் வாசனைத் தைலச் செடிகளில் மேற்கொள்ளும் திட்டம்.

(4) அதிக அளவில் கொய்னாவையும், குயினிடினையும் தரவல்ல மேம்பாடான கொய்னாச் செடிகளைப் பரப்பும் திட்டம்.

(5) இத்துறையின் அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பலன் தரும்வகையில் கட்டடங்கள், சாலைகள் போன்ற பல வசதிகளைச் செய்யும் திட்டம்.

(6) இத்துறையின் இரண்டு தொழிற்சாலைகளுக்கும் தேவையான இயந்திரங்களை வாங்கும் திட்டம்.

மேலும் கீழ்க்கண்ட மூன்று திட்ட வேலைகள் தொடர் ஆண்டில் நிறைவேற்றுவதற்காக ஒப்பளிப்பு வழங்கப்படக் கருதப்பட்டுள்ளது.

(1) ஆனைமலையிலுள்ள அரசு கொயினா மருந்துப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு இயந்திர வடிகட்டிகள் அமைக்கும் திட்டம்.

(2) ஆனைமலை கொயினா தொழிற்சாலையின் ஆராய்ச்சிக் கூடத்தில் போதிய நவீன கருவிகள் ஏற்படுத்தும் திட்டம்.

(3) இத்துறையிலுள்ள இரண்டு தொழிற்சாலைகளுக்கு, குளிர் சாதனம் பொருத்துதல் முதலிய (குளிர்சாதன) கருவிகள் ஏற்படுத்தும் திட்டம்.

## 8. இத்துறையின் நிதியமைப்பு.

1969-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ம் நாளிலுள்ளபடி இத்துறையின் மொத்த உடைமைகளின் மதிப்பு ரூ. 2,43,46,252 ஆகும். இவ்வுடைமைகளைப் பற்றிய பொதுவான விவரம் தனித் தனித்தலைப்புகளில் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இயங்கா உடைமைகள்— | |
| | ரூ. |
| அ. சின்கோனாத் தோட்டங்கள் .. .. | 62,90,720 |
| ஆ. விறகு, மருந்து மற்றும் வாசனை செடிகளின் தோட்டங்கள். | 11,70,434 |
| இ. கட்டிடங்கள், சாலைகள், பாலங்கள், தொழிற்சாலைகள், இயந்திரங்கள், மோட்டார் வண்டிகள் போன்ற உடைமைகள். | 54,42,354 |
| ஏனைய (மிதவை) உடைமைகள்— | |
| சரக்குகள், முற்றுப் பெற்ற, பெறாத உற்பத்திப் பொருட்கள் போன்ற ஏனைய உடைமைகள். | 1,14,42,744 |
| ஆக மொத்தம் .. | 2,43,46,252 |



## 9. சின்கோனாத் துறை ஈட்டிய ஆதாயம்.

1968–69-ம் ஆண்டு முடிவில் இத்துறை ரூ. 7,46,413 ஆதாயம் ஈட்டியது. இத்துறையின் கணக்குகள் 1969–70-ம் ஆண்டு முடிவில் 12.31 லட்ச ரூபாய் ஆதாயத்தை ஈட்டித் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 10. ஏற்றுமதியைப் பெருக்க இத்துறையின் முயற்சிகள்.

1964-ம் ஆண்டில் அயல் நாடுகளுக்கு கொயினா ஏற்றுமதியாகும் அளவு போதுமான அளவு உயர்ந்தபொழுது, இத்துறை தன்னகத்தேயுள்ள எல்லா வசதிகளையும் முனைப்பாகப் பயன்படுத்தித் தேவையை நிறைவேற்ற முற்பட்டது. அதற்காக சின்கோனாப்பட்டை பெருமளவில் வெட்டி எடுப்பதற்காக ஒப்பந்த முறைகளையும் பணியாளர்களுக்குத் தூண்டுகோல் அளிக்கும் முறைகளையும் செயல்படுத்தியது. மேலும், உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், கொய்னாப் பொருட்களின் தரத்தை உயர்த்தவும், பட்டையைப் பயன்படுத்துவதற்கான கால அளவைக் குறைப்பதற்காகவும் தொழிற்சாலையில் கூடுதலான கருவிகளும், யந்திரங்களும் நிறுவப்பட்டன. அயல் நாடுகளில் கொய்னா சல்பேட்டைவிட, கொய்னா ஹைடிரோகுளோரைடையே பெரிதும் விரும்பிக் கேட்பதாகத் தெரிந்தது. சிறப்பான முயற்சிகள் எடுத்ததன் வாயிலாக தொழிற்சாலையில் கீழே குறிக்கப்பட்டுள்ள அளவுகளில் கொய்னா ஹைட்ரோகுளோரைடு தயாரிக்கப்பட்டது.

| | | | கிலோகிராம். |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 2,521 |
| 1968–69 | .. | .. | 11,756 |
| 1969–70 (மதிப்பிடப்பட்டது) | .. | .. | 7,500 |

## ஆ. பிரிவு.

### இத் துறையின் பொதுவான முன்னேற்றத் திட்டங்கள்.

(1) மேலும் சில காலத்திற்கு இத் துறையினரால் உற்பத்தி செய்யப்படும் கொய்னாப் பொருட்களுக்குத் தொடர்ச்சியான தேவை இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது நிலவி வரும் ஆதாய விலைகள் தொடர்ந்து நீடிக்கும் என்று கருதப்படுகிறது. கொய்னா உற்பத்தியை நாட்டில் அதிகரிக்கும் வழிகளை ஆராயவேண்டி, இந்திய அரசினால் தொழில் நுட்பச் சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டது. உள்நாட்டு, வெளிநாட்டுச் சந்தைகளில் கொய்னாப் பொருட்களுக்குப் பெருகிவரும் தேவையைக் கருத்தில் கொண்டு தமிழ் நாடு அரசு தனது சின்கோனாத் தோட்டங்களை மேம்பாடு செய்யவேண்டுமென்றும், சின்கோனா பயிரிடும் பரப்பைப் பெருக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.

[1970 மார்ச் 24

மலேரியா நுண்ணுயிர்கள், மலேரியா நோய் நீக்கும் பற்பல செயற்கை மருந்துகளை எதிர்த்து நிற்பதால் இம்மருந்துகள் பயனற்றுப் போகின்றன. எனவே, நாட்டில், மலேரியா நோய் பரவலாகவும், கடுமையாகவும் ஏற்படுமானால், அதைக் கட்டுப்படுத்த கொய்னாப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்துவரவேண்டுமென 1967-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 28-ம் நாளில் டில்லியில் நடைபெற்ற கொய்னா மாநாட்டில் இந்திய அரசு வலியுறுத்தியது.

(2) சின்கோனா பயிரிடும் பரப்பை 6,500 ஏக்கராவுக்கு (2,630 ஹெக்டேர்) விரிவுபடுத்த வேண்டுமென்று மாநில அரசு ஆணையிட்டுள்ளது. 31—3—1969-ல் உள்ளபடி சின்கோனா பயிரிடப்படும் பரப்பளவு 5,713 ஏக்கர் (2,311.5 ஹெக்டேர்) ஆகும். இதை 6,500 ஏக்கர் அளவுக்கு விரைவிலே உயர்த்தும் நோக்கத்துடன் திட்டமிடப்பட்டு புதிதாகப் பயிரிடும் திட்டம் ஏற்கெனவே முன்னேறி வருகிறது.

(3) மருந்து எண்ணெய்கள் மற்றும் தைலங்களின் உற்பத்தி வாயிலாக இத்துறைக்கு நிறைந்த ஆதாயம் கிடைக்கிறது. எனவே இப்பயிர்கள் பயிராகும் பரப்பளவு விரிவுபடுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(4) மருந்து மற்றும் மணங்கமழ் எண்ணெய்கள் நல்கும் பயிர்களைப் பற்றிய மும்முர ஆராய்ச்சித் திட்டம் தொடர்ந்து செயலாற்றப்படும். ஏற்கனவே "அ" பிரிவு 7-வது பாராவில் கூறப்பட்டபடி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆறு திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. 1970--71-ல் அனுமதி பெறவிருக்கும் திட்டங்களுடன் இத் திட்டங்களும் பல கட்டங்களில் விரைவிலேயே நிறைவேற்றப்படும்.

## இ. பிரிவு.

### 1970–71-ம் ஆண்டிற்கான குறியளவுகள்.

சின்கோனா பயிராகும் பரப்பளவு 2,630 ஹெக்டேருக்குக் (6,500 ஏக்கர்) கொண்டுவரப்பட்டு அதைப் பேண வேண்டுமென்றும் மருந்து மற்றும் வாசனைத் தைலச் செடிகளின் பரப்பும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

ஆதாய விலையையும், அயல் நாடுகளின் தேவையையும் கருதி, கொய்னா உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இக்கொள்கையைக் கருத்தில் பதித்தே 1970–71-ம் ஆண்டிற்கான இத் துறையின் செயல் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அத்திட்டத்தின் சுருக்கம் வருமாறு :—

(1) சின்கோனாத் தோட்டக் காடுகளில் சிதைந்த செடிகளை அப்புறப்படுத்தி 240 ஹெக்டேர் (600 ஏக்கர்) பரப்பில் புதிய செடிகளை நடுதல்.



1970 மார்ச் 24]

(2) கொய்னாச் செடிகளின் வளர்ச்சியைத் தூண்டவல்ல மும்முரமான செயல் முறைகளை 100 ஹெக்டேர் (250 எக்கர்) பரப்பில் கையாளுதல்.

(3) உயர் ரக சின்கோனா செடிகளை க்வினைன், க்வினடைன், மருந்தை அதிகமாகத் தரக்கூடிய (நாய்களுக்கு எளிதில் இரையாகாத) பரப்பில் அத்தகைய 1,25,000 செடிகள் வளர்க்கப்படும்.

(4) மண் வளத்தைப் பெருக்கி, கொய்னா மற்றும் வாசனைத் தைல மருந்துச் செடிகளைப் பயிரிடும் வகையில் நிலத்தின் தரத்தை உயர்த்தும் பொருட்டு தழை உர வகைச் செடிகளைத் தரிசு நிலத்தில் பயிரிடும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்துதல்.

(5) எண்பது ஹெக்டேர் (200எக்கர்) பரப்பில் புதிய வாசனை மற்றும் மருந்துச் செடிகளைப் பயிரிடலும், 32 ஹெக்டேர் (80எக்கர்) பரப்பில் சிதைந்த செடிகளை மாற்றி புதுச் செடிகளை நடலுமான திட்டத்தை மேற்கொள்ளுதல்.

(6) சுமார் 16,000 கிலோ கொய்னா சல்பேட்டும், சுமார் 13,000 கிலோ சின்கோனா பெப்ரிபியூஜ் மருந்தும் இந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்படும். ஏறத்தாழ 7,500 கிலோ கொய்னா ஹைட்ரோக்குளோரைடு மருந்தை கொய்னா சல்பேட்டிலிருந்து தயாரிக்கப்படும்.

(7) கீழ்க்கண்ட அளவில் மருந்து, மற்றும் வாசனைத் தைலங்கள் உற்பத்தி செய்யப்படும் :—

| | கிலோ. |
|---|---|
| (அ) ஜெரேனியம் எண்ணெய் .. .. | 1,000 |
| (ஆ) யூகலிப்டஸ் சிட்ரியோடோரா .. .. | 1,200 |
| (இ) ஜாவா சிட்ரோனல்லா எண்ணெய் .. | 2,400 |
| (ஈ) நீலகிரித் தைலம் (யூகலிப்டஸ் மருந்து) .. | 5,000 |
| (உ) இதர எண்ணெய்கள் .. .. | 100 |

### ஆராய்ச்சித் திட்டங்கள் 1970–71.

(1) வாசனைத் தைலம் மற்றும் மருந்துச் செடிகளின் வளர்ச்சி பற்றிய மும்முர ஆராய்சித் திட்டம் தொடர்ந்து செயலாற்றப்படும்.

(2) நீலகிரித் தைலத்திலிருந்து 'சினியோல்' என்னும் கற்பூரத் தைலத்தைப் பிரித்தெடுக்கும் முன்னோடி முயற்சிகள் ஊக்கமளிப்பதாக இருப்பதால் தேவைகளுக்கேற்ப வணிக அளவில் அதன் உற்பத்தி பெருக்கப்படும்.

(3) சின்கோனாவிலுள்ள அரசினர் கொய்னாத் தொழிற்சாலையில் சின்கோனா மருந்திலிருந்து (சின்கோனா பெப்ரிபியூஜ்) கொய்னாவையும், குவின்டைனையும் பிரித்தெடுக்கும் முன்னோடி உற்பத்தித் திட்டம் தொடரப்படும். வணிக அளவிலான உற்பத்தியும் தொடங்கப்பெறும்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வேலைத் திட்டங்கள், 1970–71.

மேலே ‘அ’ பிரிவின் ஏழாவது பத்தியில் கூறப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் பல கட்டங்களில் இந்த ஆண்டில் நிறைவேற்றப்படும்.

நிதி நிலை.

1970–71-ம் ஆண்டில் இத்துறைக்குத் தோராயமாக ரூ. 74 லட்சம் வருவாய் கிடைக்குமென்றும், ஆண்டு முடிவில் ரூ. 17.76 லட்சம் நிகர ஆதாயம் கிடைக்குமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## இணைப்பு. 5

### காடுகள் துறை கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பு.

**1969—70-ல் காட்டுவள நிர்வாகம் குறித்த முக்கியக் கூறுகளும் 1970-71-ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டங்களும்.**

காடுகள் பற்றிய தேசியக் கொள்கைக்கிணங்க நிலப் பரப்பின் மூன்றில் ஒரு பகுதியில் காடுகள் அமையவேண்டும். ஆனால், தமிழ் நாட்டின் நிலப் பரப்பில் பதினேழு சதவிகித நிலப் பரப்பில் மட்டுமே காடுகள் உள்ளன. இது உரிய அளவுத் தேவைக்கும் மிக மிகக் குறைந்ததாகும். இக்காடுகளில் பெரும்பாலானவை வறண்ட பகுதிகளில் உள்ளன. அவை உற்பத்தி குறைந்த காடுகளாகும். வளர்ச்சிப் பணிகள் பெருமளவில் நிறைவேற்றப்பட்டு வருவதாலும், வீட்டுத் தேவைகளுக்கு விறகு அதிகமாய்த் தேவைப்படுவதாலும் பல்வேறு மரத்தை மூலப் பொருளாகக் கொண்ட தொழில்களுக்கு மரங்கள் அதிக அளவில் தேவைப்படுவதாலும், காடுகள் வளர்ப்பிற்கன்றி ஏனைய பிற காரியங்களுக்கு காடுகளை மாற்றுவதற்கான தேவையினாலும், வனவிலங்குகள் கண்மூடித்தனமாக அழிக்கப்படுவதாலும், காடுகளைப் பேணி வளர்க்கும் வேகத்தைவிட காட்டு வளங்களைப் பயன்படுத்தும் வேகம் மிகுதியான ஒரு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. நீலகிரி, மதுரையில் ஒரு பகுதி, கோவை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்கள் காடுகள் பரவுவதற்குரிய இயற்கை அமைப்புக் கூறுகளைக் கொண்டதாயில்லை. காடுபடு பொருள்களுக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தேவையை நிறைவு செய்வதற்காக, ஐந்தாண்டுத் திட்டங்கள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து பொதுத் தேவைக்கான மரத்தடிகள், தொழில்களுக்குத் தேவைப்படும் மரங்கள், முந்திரி, அரக்கு, சந்தனம், ரப்பர் போன்ற வணிக முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கவும், மண் வளப் பாதுகாப்புப் பணிகளை முக்கியமான நீர்த் தேக்கங்களின் நீர் கோள் பகுதிகளில் மேற்கொள்ளவும், பல்வேறு நடவடிக்கைகள்





செயல்படுத்தப்பட்டு வருகின்றன. காடுகளின் நிலப் பரப்பு குறைவாயிருப்பதைக் கருத்தில் கொண்டு, காடு வளர்ப்புப் பணிகளை முழுமுரமாக நிறைவேற்ற வேண்டியுள்ளது. காடுபடு பொருள்களைப் பெருக்க, காடு வளர் மரஞ்செடிகளில் மேன்மையானவற்றை வளர்த்தல், இரசாயன இடு பொருள்களைப் பயன்படுத்தல், இயந்திர சாதனங்களைக் கொண்டு மேலும் முழுமுரமாக காடு வளர்க்கும் வேலைகளில் ஈடுபடுதல் ஆகியவை இத்துறை பின்பற்றும் ஒரு சில முறைகளாகும். காடுகள் வளர்ச்சியில் இத்தகைய இடையூறுகள் இருந்தபோதிலும், நமது மாநிலத்திற்குக் கணிசமான வருவாய் கிடைக்கிறது. 1968–69-ல் ரூ. 337 லட்சம் வருவாய் கிடைத்தது. முந்திரி போன்ற வாணிகப் பயிர்களை விளைவிப்பதோடு, மரத்தை மூலப் பொருளாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மர பொருள்களை இவ்வரசு வழங்கியதால் இவ்வருவாய் கிடைக்க ஏதுவாயிற்று. மேலும், காடுகளுக்கு அருகில் வசிக்கும் கிராம மக்களுக்கான, சிறு மரத்தடிகள், எரி பொருள், தழை உரம், தழைகள், காடுபடு சிறு பொருள், மேய்ச்சல் வசதி ஆகியவை குறித்த தேவைகளையும் நிறைவு செய்ய இந்த நடவடிக்கைகள் பயன்பட்டன.

உ. தமிழ் நாட்டில் ஒதுக்கக் காடுகளின் மொத்தப் பரப்பளவு 17,264 சதுர கிலோ மீட்டர்; ஒதுக்க நிலங்களின் மொத்தப் பரப்பளவு 3,732 சதுர கிலோ மீட்டராகும். காடுகள் துறை, வனப் பயன்பாட்டு அதிகாரி மூலம் ரயில்வேக்களுக்கும், மீனளத்துறை, அரசு நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் வெட்டு மரங்களை வழங்குவதுடன் வசதியான அளவில் துண்டிக்கப்பட்ட வெட்டு மரங்களைப் பொது மக்களின் உபயோகத்திற்காகவும், பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்கின்றது. 1968-69-ல் 42,283 கன மீட்டர் வெட்டு மரங்கள் நமது காடுகளிலிருந்து மொத்தம் வெட்டி எடுக்கப்பட்டன. ரயில்வே நிர்வாகத்திற்கு 9.54 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 29,973 தண்டவாளக் கட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதைத் தவிர, 3.32 லட்சம் கன மீட்டர் அளவு விறகு காடுகளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. கடுக்காய், தேன், அரக்கு, வாட்டில்பட்டை போன்ற காடுபடு சிறு பொருள்களும் ரூ. 30.76 லட்சம் மதிப்பிற்கு காடுகளிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களில் காடுகள் துறை 28,036 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரிக் காடுகளை வளர்த்துள்ளது. முன்பு வளர்க்கப்பட்ட முந்திரி மரத் தோட்டங்கள் பலன் கொடுக்கத் தொடங்கிவிட்டன. 1968-69-ம் ஆண்டு இத்தோட்டங்களிலிருந்து ரூ. 15.28 லட்சம் வருவாய் கிட்டியது. அரக்கும், அரக்குப் பொருள்களும் விற்பனை செய்யப்பட்டன. அரக்கு விற்பனை மூலம் ரூ. 78 ஆயிரம் கிடைத்தது. துறைவாயிலாக 2,404 கிலோ கிராம் தேன் சேகரிக்கப்பட்டு, தூய்மைப்படுத்திய பின் ரூ. 0.32 லட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பழைய ரப்பர் தோட்டங்கள் ரப்பர் மரப்பால் கொடுக்கத் தொடங்கியுள்ளன, ரப்பர் மரப்பால் சேறைப்

படுத்தும் வேலை தொடங்கியது. 57,633 கிலோ கிராம் ரப்பர் விற்பனை மூலமும், 15,216 கிலோ கிராம் ரப்பர் மரப்பால் விற்பனை மூலமும் ரூ. 2.62 லட்சம் வருவாய் கிடைத்தது. 807 கிலோ கிராம் தந்தம் ரூ. 0.81 லட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. தோல் பதனிடு தொழிற்சாலை, காகிதத் தயாரிப்புத் தொழிற்சாலை, சந்தனத் தைலத் தொழிற்சாலை ஆகியவற்றிற்கான மூலப் பொருள்கள் தமிழ்நாடு காடுகளிலிருந்து தொடர்ந்து வழங்கப் பட்டன.

டான் இந்தியா வாட்டில் எக்ஸ்ட்ராக்ட் நிறுவனம், வாட்டில் மரப்பட்டைகளை வெட்டியெடுப்பதற்காக நீலகிரி, மேல் பழனியில் 1,789 ஹெக்டேர் பரப்பளவுள்ள வாட்டில் மரக்காடுகளும், தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்திற்கு 240 ஹெக்டேர் பரப்பளவுள்ள கற்பூர மரக் காடுகளும் தரப்பட்டன. இத்துறைக்கு முதன்மையான வருவாய் ஈட்டித் தருவதில் சந்தன மரம் தொடர்ந்து இடம் பெற்று வருகிறது. இறுதியாக இழைத்துச் சுத்தப்படுத்தப்பட்ட 1,165 டன் சந்தன மரம் ரூ. 120.23 லட்சத்திற்கும், சந்தன வெள்ளைச் சிராய் ரூ. 0.43 லட்சத்திற்கும் விற்பனை செய்யப்பட்டது. காட்டில் உலர்ந்த 55,383 டன் மூங்கில், பள்ளிப்பாளையம் திருவாளர்கள் சேஷசாயி காகிதம் அட்டைத் தயாரிப்பு நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டது.

3. காட்டுப் பகுதிகளில் மேய்ச்சல் உரிமை ஓராண்டுக்குச் செல்திறன் உள்ள அனுமதிச் சீட்டுகள் வாயிலாகத் தொடர்ந்து வழங்கப் பட்டு வருகிறது. 13.78 லட்சம் கால்நடைகள் மேய்வதற்கு, மேய்ச்சல் உரிமம் வழங்கப்பட்டு அவை மூலம் ரூ. 5.53 லட்சம் வருவாய் கிடைத்தது.

4. காடு வளர்ப்பு வல்லுநர் பொறுப்பில், ஆராய்ச்சிப் பணியில் இத்துறை அதன் வேலைகளைத் தொடர்ந்து செய்தது. ஆராய்ச்சியைப் பொறுத்த வரையில், வாட்டில், கற்பூரத் தைல மரம், முந்திரி, சவுக்கு, சந்தன மரங்கள் குறித்துப் பல்வேறு ஆராய்ச்சி, சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆராய்ச்சிப் பணியோடுகூட, விதைகள், நாற்றுகள், அடித்தறி இவற்றில் பல்வேறு வகைகளைப் பெருவாரியாக மாநிலத்திலும், மாநிலத்திற்கு வெளியேயுள்ள துறைகளுக்கும், நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன. விதை உற்பத்தித் தோட்டங்கள், தேக்கு, கற்பூரத் தைல மரம், வாட்டில் போன்ற விதைத் தோட்டங்கள், அமைக்கப் பட்டன. புதிய விதை உற்பத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாக வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட கற்பூரத் தைல மரம், ஊசி இலை மரம் போன்றவை பயிரிட்டுச் சோதிக்கப்பட்டன. திட்ட வேலைகளின் கீழ் ஒப்பளிப்பு பெற்ற காடு மரவியல் பிரிவும், விதைச் சேமிப்புத்தரப் பிரிவு நிலையமும் திறக்கப்பட்டன.

5. தமிழ் நாட்டிலுள்ள வனவிலங்குகளைப் பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும், காடுகள் துறையின் ஒரு பிரிவான மாநில வன விலங்குப் பாதுகாப்பு நிறுவனம் பொறுப்புடையது. கிண்டியி



லுள்ள சிறுவர் பூங்காவின் பொறுப்பு ஏற்பதுடன், வனவிலங்கு, நீர்ப்பறவை உய்விடங்கள் எல்லாவற்றிற்கும் மாநில வனவிலங்குத் துறை அதிகாரி பொறுப்பு உடையவராவார். சீருலாப் பயணிகளுக்காகச் சாலைகள், ஓய்வு இல்லங்கள், சிற்றுண்டிச்சாலைகள் போன்ற பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பணியை இந்த நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டுள்ளது. முதுமலை வன விலங்கு உய்விடத்தைச் சென்று பார்த்த 5,559 பேர்களில் 435 பேர்கள் வெளிநாடுகளைச் சேர்ந்தவராவார். வேடந்தாங்கல் நீர்ப் பறவை உய்விடமும், கிண்டி சிறுவர் பூங்காவும் தொடர்ந்து நாட்டம் பெற்று வருகின்றன. 1968-ன் வறட்சி மிகவும் கொடூர மானது. ஆனால், 1969-ல் வடகிழக்குப் பருவ மழைக்குப் பின்னர், ஏரி நிரம்பி பறவைகள் வரத் தொடங்கியதால், வேடந்தாங்கலுக்குப் பார்வையாளர்கள் சென்று வரத் தொடங்கினர்.

6. மரம் வெட்டும் தொழிலை நவீன முறைகளில் மேற்கொள்வதிலும், மரங்களைத் துண்டுகளாக வெட்டும் கருவிகளைப் பயன்படுத்துவதிலும், காடுகள் துறைத் தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்கும் திட்டமொன்றை காடுகள் துறை செயலுக்குக் கொண்டு வந்தது. நவீன முறைகளில் மரம் வெட்டுவதில், தென் கோவை, மத்திய கோவை, நீலகிரி, வட கோவை கோட்டங்களில் இதுவரை சுமார் 248 பணியாளர்கள் பயிற்சி பெற்றனர்.

7. காடுகளையும் காட்டுச் செல்வத்தையும், தீ விபத்துக்களிலிருந்தும், பிற அபாயங்களிலிருந்தும் பாதுகாப்பதற்காகத் தீ விபத்துப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தீவிபத்து அறிவதற்கான மாடங்களை நிறுவுவதன் மூலமும், தீ விபத்துக்கள் ஏற்படுகின்றனவா என்பதை கண்காணிப்பதற்காகப் பணியாளர்களை நியமிப்பதன் மூலமும் இத்தகைய பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. காடுகள் சட்டத்தின் கீழ் தடை விதிக்கப்பட்டுள்ள பல்வேறு குற்றங்களைச் செய்வோரைக் கண்டறிந்து அவர்களைத் தண்டிப்பதற்காகக் காடுகளை மும்முரமாக சுற்றிப் பார்க்கும் தனி ரோந்துப் படைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

8. ரப்பர் மரத் தோட்டங்கள் பயிரிடுவதற்கு உகந்த சூழ்நிலையும் சுற்றுப்புறங்களும் உடைய ஒரே மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம்தான். இரண்டாவது திட்டக்கால இறுதியில், இம் மாவட்டத்தில், அரசு ரப்பர் மரத் தோட்டங்கள் பயிரிடத் தொடங்கப்பட்டன. 1969–70 இறுதி வரையில் 2,099 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் மரங்கள் பயிரிடப்பட்டன. 1967 ஜனவரியில் ரப்பர் மரப்பால் இறக்கும் வேலை தொடங்கியது. இவ்வாறு சேகரிக்கப் பட்ட ரப்பர் மரப் பாலிலிருந்து ரப்பர் விரிப்புகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. உற்பத்தி உச்சமாயிருந்த காலத்தில் உயர்ந்த சம்பளம் கோரி தொழிலாளர் செய்த வேலை நிறுத்தம் காரணமாக ரப்பர் உற்பத்தி பாதிக்கப்பட்டது. தொழிற்சாலைக்

கட்டிடம் கட்டுதலும், இயந்திரங்கள் நிறுவும் வேலையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டிட வேலைகள் முடியும் தருவாயிலிருக்கையில், இயந்திரம் நிறுவும் வேலை நடைபெற்று வருகிறது.

9. இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகள் மறு வாழ்வுக்கான ஓர் ஏற்பாடாக, இத்துறை பின்வரும் இரு பணித் திட்டங்களை மேற்கொண்டது. அவையாவன :—

1. நீலகிரி மாவட்டத்தில் துறை தேயிலைத் தோட்டங்கள்.

2. கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் மரத் தோட்டங்கள்.

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 1,500 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலைத் தோட்டம் பயிரிடப்படும். (2,500 குடும்பங்கள்) 5,000 அகதிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க இது உதவியாக இருக்கும்.

சேரம்பாடி கோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. 25 ஏக்கர் பரப்பளவில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. தேயிலைத் தோட்டங்களில் மஸ்தூர்களாக 10 அகதிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 2 அகதிகள் வனப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் இரு கோட்டங்கள் (சேரங்கோடு, கூனூர்) அமைக்கப்பட்டுள்ளன. முன்னேற்பாடு வேலைகள் முதலியவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. அகதிகளுக்காக 100 வீடுகள் கட்டப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில், நான்காண்டுக் காலத்தில் 800 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் மரத் தோட்டம் பயிரிடப்படும். இது (333 குடும்பங்கள்) 666 அகதியரைக் குடியேற்ற உதவும். அகதித் தொழிலாளர் முதலியோருக்கு முன்னேற்பாடு வேலைகள், குடியிருப்புகள் கட்டுதல் முதலிய வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

10. அகதிகளைக் குடியேற்றுவதற்காக திருச்சி மாவட்டத்தில் 1,200 ஹெக்டேர் பரப்புக்குமேல் நிலத்தை அரசு ஏற்கெனவே ஒப்படைத்தது. இலங்கை அகதிகளைக் குடியேற்றி, தென்னை வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர், திருவாடானை வட்டங்களிலும் உள்ள காட்டுப் பகுதிகளையும் அரசு ஒப்படைத்தது.

11. இந்தியக் காடுகள் சட்டத்தின்படி காடுகளில் ஒதுக்கப்பட்ட காடுகள் பகுதி 13 சதவீதம் மட்டுமே ஆகும். ஆயினும், காட்டு வளமில்லாத பிற காரியங்களுக்காக காடுகளை வளர்ப்பதற்கான தேவை அதிகரித்து வருகிறது. வேளாண்மைக் காரியங்களுக்காக, காட்டு நிலங்கள் நிலையாக கொடுக்கப்படுவது பொதுவாக ஒப்புக் கொள்ளக்கூடியதன்று. இருப்பினும், உணவுப் பயிர்களைப் பயிரிடு வதற்காக, கோவை மாவட்டம் பவானிசாகரிலும், சேலம் மாவட்டம் பக்கநாடு—வனவாசி ஆகிய இடங்களிலும் சில காட்டு நிலங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு நிலமற்ற ஏழை மக்களுக்கு, குத்தகைக்கு விடப்படுகின்றன. இதைப் போலவே, நெடுங்கால மாகப் பயிரிடப்பட்டு வந்த நிலங்களைக் குத்தகைக்கு விடுவதன்





பொருட்டு மதுரை மாவட்டத்தில் கண்டமநாய்க்கனூரில் முன்னாள் ஜமீன் காடுகளில், 2,400 அடி உயரத்திலுள்ள நில வளைவுக் கோடுகளுக்குக் கீழே நில ஆக்கிரமிப்புகள் பற்றிய பட்டியலைத் தயாரிக்க ஏற்பாடுகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

12. 1968–69-ல் காட்டு வளத்துறைக்கும் ரூ. 74.22 லட்சம் உபரியாகக் கிடைத்துள்ளது.

## காடுகள் மேம்பாட்டுத் திட்டங்கள்.

13. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் காடுகள் வளர்ப்பு குறித்த செலவு ரூ. 30.43 லட்சவுமாக இருந்தது. முன்னாள் ஊராட்சிக் காடுகள் மீட்புக்காகவும், முன்னாள் ஜமீன் காடுகளை ஏற்று நிர்வகித்து வரவும், முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நாட்டம் செலுத்தப்பட்டது. மென்மரங்கள், வாட்டில், கற்பூரத் தைல மரங்கள் கொண்ட தோட்டங்களும் வளர்க்கப்பட்டன.

14. ரூ. 147 லட்சம் மூலதனச் செலவில் காடுகள் **வளர்ச்சியில்** மேலும் மும்முரமாக ஈடுபடுவதே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாயிருந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில், 8,140 ஹெக்டேருக்கு மேல் வாட்டில் வளர்க்கப்பட்டதும், 3,860 ஹெக்டேருக்கு மேல் தேக்கு மரம் பயிரிடப்பட்டதும், 3,230 ஹெக்டேருக்கு மேல் மென்மரம் பயிரிடப்பட்டதும், 1,550 ஹெக்டேருக்கு மேல் ஆற்றோரக் கால்வாய் ஏரிக்கரைக் காடுகள் பயிரிடப்பட்டதும், 18,970 ஹெக்டேருக்குமேல் முந்திரி பயிரிடப்பட்டதும், குறிப்பிடத்தக்க சாதனைகள் எனலாம். நீலகிரி மாவட்டத்தில் முதுமலை வனவிலங்கு உய்விடம் பெருமளவில் மேம்படுத்தப்பட்டுவிட்டது. அறுபது ஹெக்டேருக்கு மேல் ரப்பர் மரங்கள் பயிரிடும் வேலை மேற்கொள்ளப்பட்டது.

15. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், விறகு வெட்டு மரங்கள் மிகத் தேவைப்படும் இடங்களுக்கருகில் உள்ள பகுதிகளில் இவற்றின் தேவைகளை ஈடு செய்யும் வகையில் வேலைத் திட்டம் விரைவுபடுத்தப்பட்டது. பண்ணைக் காடுகள் வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்ற உறுதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. காடுபடு பொருள்களைக் கொண்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளுக்காகப் போதிய அளவில் விறகு வழங்குவது பெரும் சிக்கலாயிருந்தது. 1,775 ஹெக்டேருக்கு மேல் விரைவில் வளரும் மர வகைகளும், 19,340 ஹெக்டேருக்கு மேல் பண்ணைக் காடுகளும், தேக்கு, நீக்குச்சிமரம், சவுக்கு, வாட்டில், கற்பூரத் தைல மரம் போன்றவை 16,095 ஹெக்டேரிலும், 2,060 ஹெக்டேருக்கு மேல் ஆறு, கால்வாய், ஏரிக்கரைகளில் மரங்களும், 1,190 ஹெக்டேருக்கு மேல் ரப்பர் மரங்களும், 5,380 ஹெக்டேருக்கு மேல் முந்திரி மரங்களும் பயிரிடப்பட்டன. இவை மூன்றாம் திட்டக் காலத்தில் சிறந்த சில சாதனைகளாகும். வனப் பணியாளர்களுக்கும், வனக் காப்பாளர்களுக்கும், பயிற்சிப் பள்ளி ஒன்றும்,

வாட்டில் மீது மும்முர ஆராய்ச்சிக்கான ஒரு பிரிவு குந்தா ஆற்றுப் பள்ளத்தாக்கு வேலைத் திட்ட நீர்கோள் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள தனி அமைப்புகளும் தொடங்கி வைக்கப்பட்டன.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சிப் பணித் திட்டங்களுக்கான மொத்தச் செலவு ரூ. 372 லட்சம் ஆகும்.

**16. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு பிந்திய காலப் பகுதி. 1966-69.**

இக்காலத்தில் செலவு ரூ. 287 லட்சம். சாதனைகளின் சிறப்புக் கூறுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| இனங்கள் (1) | பயிரிடப்பட்ட பரப்பளவு (ஹெக்டேர்.) (2) |
|---|---|
| பண்ணைக்காடு .. .. .. .. | 6,300 |
| தேக்கு .. .. .. .. | 1,380 |
| வாட்டில் .. .. .. .. | 2,120 |
| கற்பூர மரம் .. .. .. | 750 |
| ஆறு, கால்வாய், ஏரிக்கரை மரங்கள் .. | 1,270 |
| ரப்பர் .. .. .. .. | 600 |
| விரைந்து வளரும் மரங்கள் .. .. | 6,200 |
| முந்திரி .. .. .. .. | 3,010 |
| விறகு மரங்கள் .. .. .. | 3,830 |

**17. நான்காம் திட்டப் பணிகள்—**

இத் திட்டத்தின் தலையாய குறிக்கோள்கள் வருமாறு :—

(அ) உயர் அளவுப் பலன் பெற காடுகளின் உற்பத்தி அளவைப் பெருக்குதல்.

(ஆ) காகிதம், கூழ், ரயான், பிற காடுபடு பொருள்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களின் தேவையைச் சரிக்கட்டுதல்.

(இ) காடுகளிலிருந்து கிடைக்கும் வாணிக முறையில் விலையுயர்ந்த மரங்களின் உற்பத்தியை அதிகரித்தல்.

(ஈ) வெட்டு மரத் துண்டுகள், விறகு மரம், பிற மரங்கள் சம்பந்தமாக ன்இயன்ற அளவிற்குஉள்ளூர்ப் பொதுமக்களின் தேவையை ஈடு செய்தல்.

(உ) வன விலங்குகளைப் பாதுகாத்து வளர்ச்சிக்கு வழி காணல்.

(ஊ) இம்மாநிலத்திலுள்ள காட்டு வளம் பற்றிய சிறப்பான கூறுகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

காட்டுவளத் திட்டங்களுக்காகும் மொத்த முதலீட்டுச் செலவு ரூ. 472.50 லட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது. பணித் திட்ட வாரியான நான்காம் திட்ட இலக்குகள், திட்ட குறிக்கோள் அளவுகள், 1969–70, 1970–71-ஆம் ஆண்டுத் திட்ட இலக்குகள், செலவு ஆகியவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—



**காடுகள்.**

**மாநிலப் பணித் திட்டம்.**

**(1) பண்ணைக் காடுகளும், விறகு மரங்களும்.**

**(அ) பண்ணைக்காடு—கிராமக் காடுகள்—**

கிராமங்களைச் சுற்றிலும் ஒருங்கே அமைந்த தகுந்த நிலப் பரப்புகளில், 20 ஹெக்டேர் பரப்பிற்கு மேற்பட்ட அரசு தரிசு நிலங்களிலும் புறம்போக்குகளிலும், கிராம விறகு மரக் காடுகளை வளர்ப்பது இத்திட்டத்தின் சிறப்பான நோக்கமாகும். மக்களுக்கு ஏற்படும் அன்றாடத் தேவையான விறகு, வெட்டு மரம், தழை உரம், தீவனம் ஆகியவற்றை இக்கிராமக் காடுகள் நிறைவு செய்யும்.

நான்காம் திட்டக் காலத்தில் 18,000 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 40 லட்சம் மொத்தச் செலவில், இக்காடுகள் வளர்க்கப்படும். 1969–70-ல் 2,165 ஹெக்டேர் பரப்பளவில், கிராமக் காடுகள் வளர்க்கப்பட்டது. இப்பணித் திட்டத்திற்கான செலவு ரூ. 4.4 லட்சம் ஆகும். 1970–71-ல் 1,680 ஹெக்டேர் பரப்பளவில் காடுகள வளர்க்கப்படும். இதற்காக ரூ. 5 லட்சம் வகை செய்யப

**(ஆ) விறகு மரங்கள்.**

விறகு மரங்கள் குறித்த கடும் பற்றுக் குறையைச் சரிக்கட் மக்கள் பெருக்கம் மிக்க பகுதிகளில் அண்டைப் பரப்புகளில் விறகு மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காம் திட்டக் காலத்தில் 6,000 ஹெக்டேர் பரப்பளவில் விறகு மரங்கள் வளர்க்கப்படும். 1969–70-ல் 650 ஹெக்டேர் பரப்பளவில் கற்பூரத் தைல மரங்களும் கலப்பின வகைகளும் சிறப்பு வகைகளும் பயிரிடப்பட்டன. இந்தப் பணித் திட்டம் குறித்துச் செலவிடவிருக்கும் தொகை ரூ. 2.55 லட்சம், 1970–71-ம் ஆண்டுத் திட்டம் மேலும் 460 ஹெக்டேரில் இம்மரங்களை வளர்ப்பதாகும். இதற்காக ரூ. 3.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(2) பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மரங்கள்.**

( i ) தேக்கு.—தற்போதுள்ள வளங்களை பெருக்குவதற்கு தேக்கு மரங்களையும், கடின மரங்களையும் வளர்ப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். நான்காம் திட்டத்தில், ரூ. 15 லட்சம் செலவில் 2,000 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்கள் வளர்க்கப்படும். 1969–70-ல் 432 ஹெக்டேர் பரப்பளவில் இம்மரங்கள் வளர்க்கப்படும். இந்தப் பணித் திட்டத்திற்காக ரூ. 0.75 லட்சம் செலவு செய்யப்படும். 1970–71-ல் 350 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு மரம் வளர்க்கப்படும். இதற்காக ரூ. 0.97 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

( ii) மென் மரம்.—தீப்பெட்டித் தயாரிப்புத் தொழிலுக்குத் தற்போது வழங்கப்படும் மென்மரங்களைப் பெருக்கும் பொருட்டு, தீக்குச்சி வெட்டு மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது திட்டக் காலத்தில் 1,500 ஹெக்டேரில் ரூ. 5.00 லட்சம் செலவில் மென் மரங்கள் வளர்க்கப்படும். 1969–70-ல் 254 ஹெக்டேர் பரப்பளவில் மென் மரங்கள் பயிரிடப்பட்டன. இப்பணித் திட்டத்திற்காக மேற்கொள்ளும் செலவு ரூ. 0.49 லட்சம். 1970–71-ல் 190 ஹெக்டேரில் மென் மரங்கள் வளர்க்கப்படும். இதற்காக ரூ. 0.75 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

( iii) சவுக்கு.—கிராமப் பகுதிகளிலும், நகர்ப்புறப் பகுதிகளிலும், விறகு வழங்கும் வசதிகளைப் பெருக்குவதற்காக, படுகை நிலங்களிலும் கடற்கரை ஓரங்களிலும், சவுக்கு மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2,000 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 10 லட்சம் செலவில் சவுக்கு பயிரிடப்படும். 1969–70-ல் 200 ஹெக்டேர் பரப்பளவில் சவுக்கு பயிரிடப்பட்டன. இப்பணித் திட்டம் குறித்த செலவு ரூ. 1.35 லட்சம் இருக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது. 1970–71-ல் 340 ஹெக்டேர் பரப்பளவில் சவுக்கு பயிரிடப்படும். இதற்காக ரூ. 1.98 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(iv) வாட்டில்.—தோல் பதப்படுத்துவதற்கும், ரயான் கூழ், காகிதக் கூழ் தயாரிப்புத் தொழிலுக்கும் தேவையான மூலப் பொருட்களைப் பெறும் பொருட்டு வாட்டில் மரங்களைப் பயிரிடுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் திட்டக் காலத்தில் 4,000 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 20 லட்சம் செலவில், வாட்டில் மரங்கள் பயிரிடப்படும். 1969–70-ல் 894 ஹெக்டேர் பரப்பளவில் வாட்டில் மரங்கள் பயிரிடப்பட்டன. இப்பணித் திட்டம் குறித்த செலவு ரூ. 5.05 லட்சம் ஆகும். 1970–71-ல் 800 ஹெக்டேரில் வாட்டில் மரங்கள் வளர்க்கப்படும். இதற்காக ரூ. 5.35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(v) விரைந்து வளரும் மரங்களைப் பயிரிடுதல்.—காகிதக் கூழ், காகிதத் தொழில்களுக்கு மூலப் பொருட்கள் வழங்குவதைப் பெருக்கும் பொருட்டு மூங்கில், கற்பூர மரம் போன்ற விரைந்து வளரும் மரங்களைப் பயிரிடுவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் திட்டக் காலத்தில் ரூ. 75 லட்சம் செலவில் 12,000 ஹெக்டேரில் இம்மரம் பயிரிடப்படும். 1969–70-ல் 2,565 ஹெக்டேர் பரப்பில் மூங்கில், கற்பூரத் தைல மரங்கள் பயிரிடப்பட்டன. இப்பணித் திட்டம் குறித்து மேற்கொண்ட செலவு ரூ. 14.66 லட்சமாகும். 1970–71-ல் 2,400 ஹெக்டேர் பரப்பில் இவ்வகையின மரங்கள் பயிரிடப்படும். இதற்காக ரூ. 15 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.





( vi) சந்தன மரம்.—இம்மாநிலத்தின் சந்தன மர வளத்தைப் பெருக்குமுகத்தான், சந்தன மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் திட்டக் காலத்தில் ரூ. 10 லட்சம் செலவில் இம்மரங்கள் பயிரிடப்படும். 1969–70-ல் 133 ஹெக்டேர் பரப்பில் சந்தன மரங்கள் பயிரிடப்பட்டன. இப்பணித் திட்டம் குறித்து மேற்கொண்ட செலவு ரூ. 1.06 லட்சமாகும். சத்தியமங்கலத்தில் சந்தன மரத்தைத் தூய்மைப்படுத்தவும், சேமித்து வைக்கவும் கூடம் ஒன்று கட்டும் வேலை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1970–71-ல் 160 ஹெக்டேர் பரப்பில் சந்தன மரங்கள் வளர்க்கப்படும். இதற்காக ரூ. 1.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

( vii) ஆறு, கால்வாய், ஏரிக்கரைக் காடுகள்.—வெட்டு மர உற்பத்தியைப் பெருக்குவதோடு மட்டுமல்லாமல், மண் அரிப்பைத் தடுப்பதன் பொருட்டும், ஆற்றங்கரைகளிலும், கால்வாய்க் கரைகளிலும், தேக்கு, மற்றும் கடின மர வகைகளைப் பயிரிடுவதுதான் இத்திட்டத்தின் குறிக்கோள்.

நான்காம் திட்டக் காலத்தில் 4,000 ஹெக்டேர் பரப்பளவில் ரூ. 20 லட்சம் செலவில் தேக்கு மரம் பயிரிடப்படும். 1969–70-ல் 574 ஹெக்டேர் பரப்பளவில் இம்மரங்கள் பயிரிடப்பட்டன. இந்த வேலைத் திட்டம் குறித்த செலவு ரூ. 1.39 லட்சம் இருக்கக் கூடும். 1970–71-ல் 450 ஹெக்டேர் பரப்பளவில் தேக்கு மரம் வளர்க்கப் படும். இந்தத் திட்டத்திற்காக ரூ. 2 லட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

( viii) ரப்பர்.—ரப்பர், போர் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாகையால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் திட்டக் காலத்தில் 800 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் மரம் பயிரிடப்படும். இந்தப் பணித் திட்டத்தை நிறைவேற்று வதற்காக ரூ. 100 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969–70-ல் 193 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் மரம் பயிரிடப்பட்டது. இதற்காக ரூ. 12.60 லட்சம் செலவு மேற்கொள்ளப்படவிருக்கிறது. 1970–71-ல் 200 ஹெக்டேர் பரப்பில் ரப்பர் மரம் வளர்க்கப்படும். இதற்காக ரூ. 14.13 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (3) வனவிலங்கு உய்விடங்கள்.

தற்போதுள்ள உய்விடங்களில் ஓய்வில்லங்கள், சிற்றுண்டி விடுதிகள், சாலைகள், பார்வையாளர் மாடங்கள் ஆகியவற்றைக் கட்டிக்கொடுப்பதன் மூலம் வசதிகளைச் சீர்படுத்தி மேம்படுத்துவது தான் இத்திட்டத்தின் குறிக்கோள்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 25.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969–70-ம் ஆண்டில், வனவிலங்கு உய்விடங்கள், பறவைகள் உய்விடங்கள் கிண்டியில் உள்ள சிறுவர்

பூங்கா ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ரூ. 2.00 லட்சம் செலவிடப்படும். வனவிலங்கு உய்விடங்கள் ஆண்டு முழுவதும் உள்நாட்டு, வெளிநாட்டுச் சிறுலாப் பயணிகளைக் கவர்ந்து வருகின்றன. முதுமலை வனவிலங்குகள் உய்விடத்திற்கு, சாலைகள் மேம்பாடு செய்தல், மர வீடுகள் கட்டுதல், ஏனைய பார்வையாளர் வசதிகள் ஆகியவற்றிற்காக 1970–71-ஆம் ஆண்டில் ரூ. 3.00 லட்சம் செலவிடப்படும்.

### (4) வெட்டு மர வேலை.

காடுகளிலிருந்து வெட்டு மரங்களை எடுத்து அடுக்கி வைக்கும் முறைகளைச் சீர்ப்படுத்துவதையும், விரைவாக விற்பனை நிலையங்களுக்கு அனுப்பப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட பல நோக்குத் திட்டம் இதுவாகும். வனத் தொழிலாளர்களுக்கு மரம் வெட்டும் தொழில் நுட்பத்தில் பயிற்சியளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்கென நான்காம் திட்டக் காலத்தில் ரூ. 10.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969–70-ல் வெட்டுக் கருவிகள், லாரிகள் வாங்குதல், பணிக்களரியை நிறுவுதல், வனத் தொழிலாளர்களுக்கு மரம் வெட்டும் தொழில் நுட்பத்தில் பயிற்சியளித்தல் முதலியவற்றுக்காக ரூ. 1.55 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1970–71-ல் ஒரு லாரி வாங்கவும், ரூ. 1.80 லட்சம் செலவில் தொழிலாளர் குடியிருப்பு ஒன்றைக் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

### (5) காட்டு வள ஆராய்ச்சி.

காட்டுவள ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவிக் காட்டு மர வகைகள் குறித்தும் பிற தொழில் நுட்பங்கள் குறித்தும் முனைப்பாக ஆராய்ச்சி மேற்கொள்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இப்பணிக்கென ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969–70-ல் காடுகள் மரபியல் பிரிவு ஒன்றும், விதை சேமிப்பு, தரம் பிரித்தல், வழங்குதல் நிலையம் ஒன்றையும் தொடங்குவதற்கான திட்டத்திற்கு ரூ. 0.91 லட்சம் ஒதுக்கப்பட்டது.

1970–71-ல் காடு வளர்ப்புப் பிரிவு, விதைகள் சேமித்தல் மற்றும் வழங்குதல் நிலையம், மும்முர வாட்டில் மர ஆராய்ச்சி நிலையம் போன்ற தொடர்பான வேலைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இதற்கு ரூ. 1.00 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### (6) காடுகளில் சாலைப் போக்குவரத்து.

காடுபடு பொருள்களை எளிதில் எடுத்து வரவும், அடிக்கடி சென்று மேற்பார்வையிடுவதற்கும், காட்டில் மரத் தோட்டங்கள், மூங்கில், சந்தன மரங்கள் உள்ள பகுதிகளில் புதிய சாலைகளை அமைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காம் திட்டக்



காலத்தில் 100 கிலோ மீட்டர் காட்டுச்சாலை போடுவதற்கான திட்டத்திற்கு ரூ. 30.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969–70-ல் 32 கிலோ மீட்டர் நீளத்திற்குப் புதிய சாலை அமைக்கப்படும். அதற்கு ரூ. 3.00 லட்சம் செலவாகலாம். 1970-71-ல் மூன்று சாலைகள் அமைக்கப்படும் ; அதற்கு ரூ. 3.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (7) கட்டிடங்கள் கட்டுதல்.

காடுகள் துறைப் பணியாளர்களுக்குத் தகுந்த உறைவிட வசதி ஏற்படுத்துவதும், ஓய்வு இல்லங்கள் கட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காம் திட்டத்தில் ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969–70-ல் 18 குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்கு ரூ. 1.74 லட்சம் செலவிடப்படும். 1970–71-ல் 22 குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்கு ரூ. 2.50 லட்சம் செலவிடப்படும்.

### (8) காடுகள் துறைப் பணியாளர், தொழிலாளர்களுக்கு வசதிகள்.

பலவகைப் பணிகளில் ஈடுபட்டுள்ள காடுகள் துறைப் பணியாளருக்கும், தொழிலாளர்களுக்கும், வசதிகள் ஏற்படுத்தித் தருவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், குடியிருப்புகள், மருத்துவமனைகள் கட்டுவது, ஏனைய வசதிகள் செய்து தருவது ஆகிய பணிகளுக்காக ரூ. 10.00 லட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. 1969–70-ல் கம்பளிகள் வாங்குவதற்கும், மஸ்தூர் குடியிருப்புகள் கட்டுவதற்கும், ரூ. 0.32 லட்சம் செலவிடப்படும். 1970–71-ல் கம்பளிகளும், கம்பளிக் கோட்டுகளும் வாங்கவும், தொழிலாளர் குடியிருப்புகள் கட்டவும், ரூ. 0.50 லட்சம் செலவிடப்படும்.

### (9) காட்டுவளச் செய்திப் பரப்பு.

வளமிக்க காடுகள் பற்றிய உணர்வைப் பொது மக்களிடையே பரப்பும் பொருட்டும், காடுகளையும், வன விலங்குகளையும் பாதுகாக்கும் இன்றியமையாமையை அவர்களிடம் வலியுறுத்தவும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 2.50 லட்சம் ஒதுக்கப்படும். 1969–70-ல் சில விளம்பரக் கருவிகள் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது ; அதற்கென ரூ. 0.41 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1970–71-ல் இத்திட்டத்தின் கீழ் ரூ. 0.41 லட்சம் செலவிடப்படும்.

### (10) காடுகள் பாதுகாப்பு.

கம்பியில்லாக் (செய்தித் தொடர்பு) கருவிகளுடன் கூடிய கண்காணிப்பு மாடங்களும், சாலைகளும், கோவையாக அமைத்து, அவற்றின் துணை கொண்டு புதிய தீயணைப்புச் சாதனங்களைப் பயன்படுத்துவதே, இத்திட்டத்தின் குறிக்கோளாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு ரூ. 10.00 லட்சம் செலவிடப்படும்.

1969–70-ல் இரண்டு கண்காணிப்பு மாடங்களும், தீயணைப்புக் கருவிகளும் அமைக்க ரூ. 0.50 லட்சம் செலவிடப்படும். 1970–71-ல் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு மாவட்ட வலம் வரும் ரோந்துக் காவல் படை ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணித் திட்டத்திற்கென ரூ. 0.50 லட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது.

### (11) செயல் திட்டம்.

செயல் திட்டங்கள் தயாரிக்கப்படுவதைச் சிறப்பாக மேற்பார்வையிடும் பொருட்டு வேலைத் திட்டத்தில் விரிவான பணிகளை மேற்கொள்ள இத்திட்டம் வகை செய்கிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 5.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969–70-ல் ரூ. 0.35 லட்சம் செலவிடப்படும். 1970–71-ல் ரூ. 0.47 லட்சம் செலவிடப்படும்.

### (12) காடுபடு சிறு பொருள்கள் மேம்பாடு.

புளிய மரம், மாசிக்காய், பிற தோல் பதனப் பொருள்கள் முதலிய காடுபடு சிறு பொருள்கள் நல்கும் மரங்களைப் பயிரிடுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 1,500 ஹெக்டேர் பரப்பில் பயிரிட ரூ. 10 லட்சம் செலவிடப்படும். 1969–70-ல் காடுபடு சிறு பொருள்களை நல்கும் மரங்களை வளர்க்க ரூ. 0.77 லட்சம் செலவிடப்படும். 336 ஹெக்டேர் பரப்பில் மரங்கள் நடப்படும். 1970–71-ல் காடுபடு சிறு பொருள்களை நல்கும் மரங்களும் 180 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்படும். இதற்கென ரூ. 0.77 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (13) மத்திய அரசு பொறுப்பேற்கும் பணித் திட்டம்.

### காட்டுவள ஆதாரங்கள் குறித்த ஆய்வு.

தொழில் தேவைகளையும் உள்ளூர் மக்களின் தேவைகளையும் நிறைவு செய்யும் நோக்கத்துடன் காட்டுவள வாயில்கள் பற்றி விரிவான ஆய்வு செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 10.00 லட்சம் செலவிட வகை செய்யப்பட்டுள்ளது. 1969–70-ல், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள காடுகளில் ஆய்வு செய்ய, காட்டுவள வாயில்கள் பற்றிய ஆய்வுப் பிரிவு ஒன்றைத் தொடங்குவதற்காக ரூ. 0.33 லட்சம் செலவிடப்படும். 1970–71-ல் ரூ. 0.50 லட்சம் செலவில் ஆய்வு வேலை தொடர்ந்து நடத்தப்படும்.

### (14) குந்தா ஆற்றுப் பள்ளத்தாக்கு நீர்கோள் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு.

குந்தா ஆற்றுப் பள்ளத்தாக்கு நீர்கோள் பகுதியிலுள்ள வேளாண்மை நிலங்களிலும், காட்டு நிலங்களிலும் மண் அரிப்பைத் தடுப்பதற்காக, மண்வளப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்



கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்காக ரூ. 60.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969–70-ல் ரூ. 6.00 லட்சம் செலவில் 1,735 ஹெக்டேர் பரப்பில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. 1970–71-ல் 2,400 ஹெக்டேர் பரப்பில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கென ரூ. 7.00 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

### (15) மத்திய அரசின் உதவிபெறும் பணித் திட்டங்கள்.

### வைகை அணைக்கட்டின் நீர்கோள் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு.

வண்டல் மண் படிவதைக் குறைக்க, வைகை ஆற்றின் நீர்கோள் பகுதியில், ரூ. 30.00 லட்சம் செலவில், மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதே இத்திட்டத்தின் குறிக்கோள். 1969–70-ல் 316 ஹெக்டேர் பரப்பில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். அதற்கு ரூ. 2.00 லட்சம் செலவாகும். 1970–71-ல் 500 ஹெக்டேர் பரப்பளவிற்கு மேல் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கென ரூ. 5.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (16) மேட்டூர் நீர்த்தேக்க நீர்கோள் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு.

வண்டல் மண் படிவதைத் தடுக்க, மேட்டூர் நீர்த்தேக்க நீர்கோள் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. 1969–70-ல் நீர்கோள் பகுதியிலுள்ள 500 ஹெக்டேர் பரப்பளவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணித் திட்டத்திற்கு ரூ. 2.00 லட்சம் செலவாகும். 1970–71-ல் 65 ஹெக்டேர் பரப்பில் மண்வளப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். இதற்கென ரூ. 5.42 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வேளாண்மை உற்பத்தி.

### (17) காட்டுப் பகுதிகளில் முந்திரி வளர்ப்பு.

முந்திரி பயிரிடப்படும் பரப்பு அதிகப்படுத்தப்படும். முந்திரியும் முந்திரிப் பொருள்களும் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் பொருள்களாகும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 6,000 ஹெக்டேர் பரப்பில் முந்திரி பயிரிடப்படும். இப்பணித் திட்டத்திற்கு ரூ. 30.00 லட்சம் செலவாகும். 1969–70-ல் 2,000 ஹெக்டேர் பரப்பில் ஏற்கெனவேயுள்ள முந்திரிப் பயிர்கள் முந்திரி முனைப்புத் திட்டத்தின் கீழ் பேணி வளர்க்கப்படுவதுடன், 985 ஹெக்டேர் பரப்பில் முந்திரி பயிரிடப்பட்டது. இதற்கு ரூ. 10.54 லட்சம் செலவாகும். 1970–71-ல் 2,000 ஹெக்டேர் பரப்பில் முந்திரிப் பயிர் முனைப்புத் திட்டத்தின் கீழே பேணப்படுவதுடன், 1,200 ஹெக்டேர் பரப்பில் முந்திரி பயிரிடப்படும். இதற்கென ரூ. 9.06 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (18) அரக்கு உற்பத்திப் பெருக்கம்.

அரக்கும், அரக்குத் துணைப் பொருள்களும் வாணிபப் பொருள்கள். எனவே, அரக்கு உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது திட்டக் காலத்தில் ரூ. 6 லட்சம் செலவில் 200 ஹெக்டேரில் அரக்குப் பற்றும் மரங்களை நடுவதோடு மட்டு மல்லாமல், அரக்கு உற்பத்தியும் அதிகப்படுத்தப்படும். 1969–70-ல் அரக்கு உற்பத்தி செய்யவும், 10 ஹெக்டேருக்கு மேற்பட்ட பரப்பில் அரக்குப் பற்றும் மரங்களை நடவும் ரூ. 0.67 லட்சம் செலவிடப்படும். 1970–71-ல் அரக்கு உற்பத்தியும், அரக்குப் பற்றும் பரப்பில் அரக்குப் பற்றும் மரங்களை நடவும் ரூ. 0.67 லட்சம் செலவில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

### (19) முந்திரிப் பயிர்களுக்கு பயிர்ப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்தல்.

1969–70-ல் 3,390 ஏக்கர் பரப்பளவில் ரூ. 1.06 லட்சம் செலவில் பயிர்ப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். இப்பணி கடலூர், திருச்சி கோட்டங்களில் மேற்கொள்ளப்படும்.

## திட்டத்தில் சேராத வேலைத் திட்டம்.

### 18. (i) இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்க நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டங்கள் அமைத்தல்.

இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்க மேற்கொண்டுள்ள பணித் திட்டங்களில் ஒன்று, நீலகிரி மாவட்டத்தில் 1,500 ஹெக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டம் அமைத்து, அப்பகுதியில் 5,000 இலங்கை அகதிகளைக் குடியமர்த்துவதாகும். துறையின் தேயிலைத் தோட்டங்களுக்கு, குன்னூரைத் தலைமையிடமாகக் கொண்ட காடுகள் பாதுகாப்புத் தலைவர் பதவி ஒன்றை ஏற்படுத்த ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1970–71-ல் இவ்வேலைத் திட்டம் 5 கோட்டங்களாக மேற்கொள்ளப்படும். சேரம்பாடிக் கோட்டத்தில் 25 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. 1970–71-ல் 75 ஏக்கர்களில் தேயிலை பயிரிடப்படும்.

### 18. (ii) ரப்பர் மரத் தோட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், நான்காண்டு காலத்தில் 666 அகதிகளைக் குடியேற்றி மறுவாழ்வு அளிப்பதற்காக 800 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் மரம் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1970–71-ல் 200 ஹெக்டேர் பரப்பில் ரப்பர் மரம் பயிரிடுவதற்கான முயற்சி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



### 19. முடிவுரை.

வேளாண்மை, கால்நடை வளர்ப்பு இவற்றிற்கு ஆதரவாகவும், அவற்றின் வளர்ச்சிக்காகவும், போதிய பாதுகாப்பு அளிக்கும் காடுகள் இன்றியமையாதவை என்பதை வலியுறுத்த வேண்டிய தேவை இல்லை. ஒரு மரத்தை நட்டு, வளர்த்து, அது பயன்தரும் வரையில் அதைப் பாதுகாத்து வருவதற்கு நாம் பல ஆண்டுகளாக முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால், அதை ஒரு நொடியில் வெட்டி எறிந்து விடலாம். (வேளாண்மைக்கு ஆதரவான) கொழித்த மேல்மண் நிலத்தில் ஓர் அங்குல உயரத்திற்குப் படிய வேண்டுமானால், அதற்குப் பல்லாயிரமாண்டு களாகிறது. ஆனால், போதிய மண்வளப் பாதுகாப்பு சரிவர மேற்கொள்ளப்படவில்லையெனில், இந்தக் கொழித்த மேல்மண் ஒரு சில மணி நேரங்களில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு விடும். காடுகள் வளர்த்தல், வளம் குன்றாமல் காத்தல், பாதுகாப் பளித்தல், காடுகளை விவேகமுடன் பயன்படுத்தல் போன்ற பணிகள் மகத்தானவை. ஆகவே, இப்பணித் திட்டங்களில் மக்கள் மனமுவந்து, ஒன்றி நின்று, ஊக்கமுடன் இடைவிடாமல் ஒத்துழைப்பு நல்கினால்தான் அரசு பொறுப்பு மிக்க இப்பணியை நிறைவேற்ற இயலும்.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

---

புதன்கிழமை, 1970 மார்ச் 25.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

(வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்)

*Survey on herbs*

* 532 *Q.*—THIRU *N. S. V. CHITHAN* : Will the Hon. Minister for Education and Health be pleased to state whether any survey of the herbs in the State is to be conducted by the Central Council of Research in Indian Medicines?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இந்திய முறை மருந்து-ஓமியோபதி மத்திய ஆராய்ச்சிக் கழகத்திலிருந்து இது தொடர்பான செயற்குறிப்புகள் வரப்பெற்று ஆய்விலுள்ளன.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிலிருக்கின்ற மூலிகைகள் நமக்குப் பயன்படுவது பற்றிச் சரியான விவரம் இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை. இந்த மூலிகை ஆராய்ச்சியை இன்னும் முனைப்பாக்கித் தீவிர நடவடிக்கையில் ஈடுபட அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்திய முறை மருந்து-ஓமியோபதி மத்திய ஆராய்ச்சிக் கழகத்தினர், மருந்துச் செடிகள்பற்றி ஆய்வு நடத்தும் பகுதியொன்றினைப் பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில் நிறுவ வேண்டும் என்ற ஒரு கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் 2—2—1970-ல் ஒரு முடங்கலை அவர்கள் வரைந்து அனுப்பியுள்ளார்கள். ஆனால், ஆராய்ச்சி செய்வதற்குத் தெரிந்தெடுக்கப்படும் மருந்தாச் செடிகளை வளர்க்க ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கித்தர வேண்டும் என்றும், ஆராய்ச்சிப்பணி புரிவதற்குப் பணிமனை ஒன்று அமையவேண்டும் என்றும், பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரியின் முதல்வரோ அல்லது அதே தகுதிபெற்ற ஒருவரோ அந்த ஆராய்ச்சிப் பகுதியினுடைய அமைப்பாளராக, ப்ராஜெக்ட் தலைவராக இருந்து பணிபுரிய வேண்டும் என்றும் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். இது மருத்துவக் கல்வி இயக்குநர் பரிசீலனையில் இருந்து

வருகிறது. விரைவில் இது பற்றி முடிவு எடுத்து, அந்த ஆராய்ச்சியைத் தொடங்குவதற்கான முயற்சி மேற்கொள்ளப் படும்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** இந்த இந்திய மருத்துவ முறையில் இருக்கும் மூலிகைகளைப் பெரிய அளவில் பயன்படுத்துவதற்கான செயற்குறிப்பு ஏதாவது இருக்கிறதா? மூலிகைகளிலிருந்து மாத்திரை செய்வதற்கோ, எஸென்ஸ் தயாரிப்பதற்கோ திட்டம் ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அங்கே மருந்து செடிகள், விதைகள், வேர்கள் ஆகியவைகளை ஆராய்ச்சிசெய்து, அவற்றை எந்த அளவுக்குப் பயன்படுத்தமுடியும் என்று கண்டறிவதற்காகத்தான் இந்த ஆராய்ச்சிப் பகுதியை நிறுவவேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சி நடத்தியதற்குப்பிறகு, மாத்திரைகளாகக் கொண்டுவருவதா, தைலமாகக் கொண்டுவருவதா என்பதைப்பற்றியெல்லாம் முடிவு செய்ய வேண்டும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** இந்திய மருத்துவக் கல்லூரியை முதலில் குற்றாலத்தில் வைப்பதாக இருந்தது. பிறகு, அதைப் பாளையங்கோட்டையில் வைப்பது என்று மாற்றப்பட்டது. மூலிகைகளை வைத்துப் பயிர்செய்வதைக் குற்றாலத்தில் வைப்பது என்று இடமெல்லாம் தெரிந்தெடுக்கப்பட்டது. அந்தத் திட்டம் கைவிடப்பட்டதா? என்ன காரணத்தினால் அதை இன்னும் அமல் படுத்தவில்லை. குற்றாலத்தில் மூலிகைகளை உற்பத்தி பண்ணுவதற்காகத் திட்டம் வகுக்கப்பட்டு, அதற்காக லாண்டு அக்விஸிஷன் பிரொஸீடிங்ஸ் எல்லாம் நடந்துகொண்டிருந்தது. அது எந்த நிலைமையில் இருக்கிறது? எதனால் அது நிறுத்தப்பட்டது? அதை அமல் செய்ய சர்க்கார் யோசித்துக்கொண்டு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்திய முறை மருந்து—ஓமியோபதி மத்திய ஆராய்ச்சிக் கழகத்தினர், இந்தச் செடி ஆராய்ச்சிபற்றிய பகுதியொன்றினைப் பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரியில் நிறுவ வேண்டும் என்ற கருத்தினைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்காக ஒரு ஏக்கர் நிலத்தைத் தரவேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய ஒரு ஏக்கர் நிலத்தைக் குற்றாலத்தில் தருவதா, பாளையங்கோட்டையில் தருவதா என்பது தான் யோசிக்கப்படவேண்டியதேதவிர; அந்த யூனிட் பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரியின்கீழ்தான் இருக்கும். செடிகள் வளருவதற்கேற்ற வகையில் குற்றாலம் இருக்கிறதா, பாளையங்கோட்டை இருக்கிறதா என்பதைப்பற்றிய ஆராய்ச்சி இப்பொழுது நடைபெற்று வருகிறது. தக்க இடத்தை அவர்கள் தெரிந்தெடுக்க வேண்டும். யூனிட் அந்தக் கல்லூரியின் கீழ் இயங்கும்.





**திரு. வி. கே. கோதண்டராமன்:** மூலிகை வளர்ப்பும், அது பற்றிய ஆராய்ச்சியும் மிகவும் அவசியமே. ஏனென்றால், பல விதமான மருந்துகளையும் அவற்றிலிருந்துதான் கண்டுபிடிக்கிறார்கள். இப்பொழுது நீலகிரி மாவட்டத்தில் சின்கோனா டிபார்ட்மென்டின்கீழ் இந்த மூலிகைப் பயிரிடுவதும், தைலம் எடுப்பதும் மிகவும் நல்ல முறையில் செயல்படுகிறது, லாபகரமான முறையில் செயல்படுகிறது அன்னியச் செலாவணியை ஈட்டித் தருகிறது என்பது கனம் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, அதிகப்படியான பணத்தை ஒதுக்கி, அந்த இலாக்காவை விரிவு படுத்தி, மூலிகைகளை அதிக அளவுக்கு உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. மூலிகைகளைத் தயாரிக்கும் அத்தகைய முயற்சி நீலகிரியின் ஒரு பகுதியில் நடைபெறுகிறது. அந்த இலாக்காவின் மூலமாகத் தைலங்கள் முதலியவை இறக்கப்பட்டு வெளியிடங்களுக்குக்கூட அனுப்பப்படுகின்றன. ஆகவே, இந்த ஆராய்ச்சி நடத்தியதற்குப் பிறகு, இன்ன இன்ன மூலிகைகளைப் பயிரிட்டால் இன்ன இன்ன பலன் ஏற்படும் என்பதைக் கண்டுபிடித்தபிறகு, அந்த மூலிகைகளை எந்த எந்த வகையில் வளர்க்கவேண்டும், எங்கே வளர்க்கவேண்டும் என்ற அடிப்படையில் ஆராய்ச்சியை நடத்த, இந்திய ஆராய்ச்சி ஒரு பகுதியை ஏற்படுத்தவேண்டும் என்று கூறியிருக்கிறது. ஆராய்ச்சியின் முடிவு வந்தபிறகு, அந்த முடிவின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று வளர்ச்சித் திட்டங்களை நாம் மேற்கொள்ளலாம்.

**திரு. இல. பலராமன்:** நாட்டு வைத்தியத்திற்குத் தேவையான மூலிகைகள் பெரும்பாலும் காட்டில்தான் வளரும் என்கிற நிலை இருந்து வருகிறது. அப்படியிருக்க அந்தச் செடிகளைத் தனிப்பட்ட இடத்தில் வளர்த்தால் அவை சரியாக வளருமா, வளராதா, என்ற நிலை ஏற்படுகிறது. மற்றப் பகுதிகளிலும் அவை வளரும் என்று அரசாங்கம் திட்டவட்டமாகக் கூறமுடியுமா? எத்தனை வகையான செடிகளை, எந்தப் பரப்பளவுக்கு வளர்க்க அரசாங்கம் யோசித்திருக்கிறது என்று கூறமுடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எந்த எந்தச் செடிகளை வளர்க்கவேண்டும் என்பதை இந்த ஆராய்ச்சிக் கழகம்தான் சொல்லவேண்டும். அதற்காகதான் அவர்கள் ஒரு ஏக்கர் நிலம்—தகுதியான இடம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் மருத்துவத் துறையில் ஈடுபட்டிருக்கும் வல்லுநர்கள் ஆராய்ந்து அந்தக் கழகத்திற்குத் தெரிவிப்பார்கள். அதன்மேல் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள்.

[1970 மார்ச் 25

**திரு. எஸ். ஆறுமுகம் :** கோயம்புத்தூரில் இருக்கும் திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் பச்சிலைகளைக் கொண்டு. பல நோய்களைத் தீர்க்கக்கூடிய பலவிதமான மருந்துகளைத் தயார் செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த ஆராய்ச்சிக் கழகத்திற்கு திரு. ஜி. டி. நாயுடு அவர்களுடைய ஆலோசனை கிடைக்கக்கூடிய நிலை இருக்கிறதா? திரு. ஜி.டி. நாயுடு அவர்கள் நடத்தக்கூடிய இந்த ஆராய்ச்சிக்கு நம்முடைய சர்க்கார் அவர்களுக்கு ஏதாவது உதவி அளிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஆராய்ச்சி செய்யப்படுகிற மருந்துகளைப்பற்றி வல்லுநர்கள்தான் அதற்கு விடை கூறவேண்டும். அந்த மருந்துகள் நோய்களை நீக்கத்தக்க அளவுக்கு வன்மை பெற்றிருக்கிறதா என்று அவர்கள் தான் கூறவேண்டும். சில மருந்துகளை "சர்வரோக நிவாரணி" என்று போட்டுக்கொள்ளுகிறார்கள். அப்படியென்றால், எல்லா நோய்களையும் அந்த மருந்து போக்கும் என்றுதான் விளம்பரப் படுத்துகிறார்கள். இவற்றையெல்லாம் வல்லுநர்கள்தான் ஆராய்ந்து முடிவு கட்டவேண்டும்.. திரு. ஜீ. டி. நாயுடு அவர்கள் நடத்தும் ஆராய்ச்சிக்கு உதவி உரிய முறையில் கேட்டால் அதைக் கொடுக்கச் சொல்ல வேண்டுமானால் நாம் சிபாரிசு செய்யலாம். அதுபற்றிய குறிப்பு இங்கே வரவில்லை.

**திரு. கே. விநாயகம்:** சார், இந்த சென்ட்ரல் கவுன்சில் ஆஃப் ரிசர்ச்சில் வல்லுநர்கள் பலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். என்றாலும், நமது நாட்டிலேயே பலர் இந்தத் துறையில் நல்ல தேர்ச்சி படைத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஏடுகள் வைத்திருக்கிறார்கள். ஓலைச் சுவடிகள் வைத்திருக்கிறார்கள். ஆயுர்வேத மருத்துவத்திலும், சித்த வைத்தியத்திலும் நல்ல அனுபவமும் தேர்ச்சியும் பெற்ற பலர் இருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் இந்தக் குழுவில் இடம் பெறவில்லை. அவர்களையும் இந்தக் குழுவில் சேர்த்துக்கொண்டு, அவர்களுடைய நிபுணத்துவத்தையும் பெற அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்திய முறை மருத்துவ-ஓமியோபதி மத்திய ஆராய்ச்சிக் கழகம் சித்த மருந்துகள் பற்றியும் ஆராய்ச்சி செய்யும். அத்தகைய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. அதற்காகத் தனி இயக்குநரும் இப்பொழுது நியமிக்கப்பட்டு, ஆராய்ச்சி நிலையமொன்றை ஏற்படுத்தவேண்டும் என்ற குறிப்பும் இருக்கிறது. அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்களைப் பயன்படுத்திக்கொண்டு அவர்களுடைய அறிவையும் எந்த அளவு நாட்டுக்குப் பயன்படுத்தலாம் என்ற முயற்சியையும் நாம் மேற்கொள்ளலாம்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** தலைவர் அவர்களே. சித்த மருத்துவம் தமிழ் நாட்டுக்கே உரியதாகும். அது புராதனமான மருத்துவமாகவும் இருந்து வருகிறது. அப்படியிருந்தும் தமிழ்



1970 மார்ச் 25]

நாட்டில் அலோபதி முறை மருத்துவப் படிப்புச் சொல்லிக் கொடுக்கிற அறிஞர்கள் சித்த மருத்துவத்தை அலட்சியப்படுத்திப் புறக்கணிக்கிறார்கள். நம் நாட்டு மருத்துவம் என்ற அளவுக்குக் கூட மரியாதை தர மறுக்கிறார்கள். ஆகவே, அலோபதி மருத்துவக் கல்வி கற்பிக்கும்போது சித்த மருத்துவத்தைப்பற்றிய சிறப்புக்களையும் போதிக்கும் ஒரு பாடம் சேர்க்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சித்த மருத்துவம் பரவலாகியிருந்து, தமிழகத்தைப் பொறுத்த வரையிலும், சிறந்த மருத்துவமாக இருந்து வருகிறது. ஆனால் மேல்நாட்டு மருத்துவ முறைகள் வந்ததற்குப்பிறகு, அதிலே நம்பிக்கையும் மற்றவைகளும் குறைந்துகொண்டே வருகிறது. எனவே, அதைப் புதுப்பிக்கும் நோக்கத்தோடு, அது பலனளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சித்த வைத்திய முறை விரிவு படுத்தப்பட்டு வருகிறது. சித்த மருத்துவ மனைகளை ஆங்காங்கே நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அமைந்திருக்கிற மருத்துவ மனைகளிலே ஒரு விங் என்று சொல்லப்படும் பகுதி சித்த மருத்துவத்திற்கு ஒதுக்கப்படுகிறது. நாளடைவில் தனி மருத்துவ மனையாக ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் வைக்க வேண்டுமென்ற நோக்கமும் இருந்துகொண்டு வருகிறது. அந்த முறையிலேதான் இதற்கென்று தனி மசோதா வரவேண்டுமென்று குறிப்பு தரப்பட்டிருக்கிறது. ஹோமியோபதிக்குத் தனி மசோதா இருப்பதைப்போல், இதற்கும் தனி மசோதா வரவேண்டுமென்று குறிப்பு தரப்பட்டிருக்கிறது. ஹோமியோபதி, சித்த மருத்துவம் இரண்டுக்கும் சேர்த்து முதலிலே மசோதா வந்தது. தனித்தனி மசோதாவாக வருவது நல்லது என்று சொல்லி, இப்பொழுது ஹோமியோபதி மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதே அடிப்படையில், சித்த மருத்துவத்திற்கும் நாளடைவில் தனி மசோதா கொண்டு வருவதன்மூலமாக, அதிலேயிருக்கும் சித்த மருத்துவ முறைகளுக்கும் வாழ்வளிப்பது மட்டுமல்லாமல் சித்த மருத்துவக் கல்லூரிகள் மேலும் வளர்ச்சியுறச் செய்வதன் மூலம் சித்த மருத்துவக் கல்வியை அதிகமாக்கலாம் என்று முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, இந்தச் சர்வேயின் விளைவாக, ஒவ்வொரு மூலிகையைக் கொண்டும் என்ன பலன் கண்டுபிடிக்கப்பட்டது, என்ன மருந்து தயாரிக்கப்பட்டது என்பதைப்பற்றிப் பிரசுரம் ஏதாவது வெளியிடும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ? இல்லையென்றால் என் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஆராய்ச்சி செய்து அதிலே என்ன பலன் இருக்கிறது என்று கண்டுபிடித்து, முடிவுகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இங்கு அந்த மாதிரி வெளியிடப்படவில்லை.

[1970 மார்ச் 25

**திரு. எம். எஸ். மணி :** தலைவரவர்களே, சித்த மருத்துவத்தைப்பற்றி சித்தர்கள் பாடியிருக்கிறார்கள். அதிலே ஒரு பாட்டு, 'இம்புரு வேர் இல்லாமல் இருமி இருமி செத்தாண்டி' என்று இம்புரு வேர் என்றால் அதை எப்படிக் கண்டுபிடித்து, எப்படிச் சேகரிப்பது என்பது ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதுபற்றிய ஆராய்ச்சி செய்வதுபற்றிதான் மருத்துவக் கல்லூரிகளும், ஆராய்ச்சிக் கழகமும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. தாங்கள் தாங்கள் கண்டுபிடித்து பிறருக்குத் தெரியக்கூடாது என்ற முறையில் நம்முடைய மருத்துவர்கள் இருந்ததால் தாங்கள் அறிந்ததைத் தங்களுடனே அழித்துக் கொண்டதன் காரணமாக அதன் முழுப்பலனும் கிடைக்கவில்லை. ஆனால் மேல்நாட்டு மருத்துவத்தில், எந்தெந்த மருந்துகள், அதில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன, என்னென்ன பர்சன்ட்டேஜ் இருக்கிறது என்று தருவார்கள். எனவே நம்முடைய மருத்துவத்தில் உள்ளவை பற்றியெல்லாம் ஆராய்ந்து, அதைப் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆராய்ச்சிக் கழகங்கள் ஆங்காங்கு அமைக்கப்படுகின்றன.

**திரு. டி. மார்டின்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்திய மருத்துவக் கல்லூரியில் சேர்ந்துள்ள மாணவர்கள், அறுவைச் சிகிச்சைப் பயிற்சியில், எம்.பி.பி.எஸ். படிக்கும் மாணவர்களோடு தங்களுக்கும் சேர்த்துப் பயிற்சியளிக்க வேண்டுமென்று பாளையங்கோட்டையிலிருந்து அரசாங்கத்திற்கு விண்ணப்பம் அனுப்பியிருந்தார்கள். அதை அனுமதித்து அந்த விதமான எம்.பி.பி.எஸ். படிக்கும் மாணவர்களோடு சேர்ந்து படிக்கத் திட்டமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மூலக்கேள்விக்கும் துணைக்கேள்விக்கும் தொடர்பில்லையென்றாலும், அவர்கள் அறுவை சிகிச்சைசெய்து பழக்கப்பட வேண்டுமென்று அல்ல. ஆனால் இந்த முறைகளையும் ஓரளவு அறிந்துகொள்ளலாம் என்ற முறையில், 2, 3 வார காலப்பயிற்சி என்று வைத்து, இந்திய மருத்துவம் பயிலும்போது, அல்லோபதி மருத்துவ சிகிச்சையைக் காணலாம் என்ற முறையில், அப்சர்வேஷன் என்ற முறையில் பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியிலே அனுமதிக்கப் பட்டார்கள். அதற்கு முதலிலே எதிர்ப்பு இருந்தது. பிறகு கூப்பிட்டு வைத்து, இந்த நோக்கத்தைத் தெரிவித்த பிறகு, ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனென்று நோய்களின் தன்மை எப்படி என்று அறிந்துகொள்ளத் தானே தவிர, பழக்கப்படுத்தும் முறையல்ல, அறுவைச் சிகிச்சை முறைகளைச் சொல்லிக்கொடுத்து, அதைப்பார்த்து, நிலைமைகளைப் புரிந்து கொள்ள பயிற்சி அளிக்க வேண்டுமென்று குறிப்பிட்ட நாட்களுக்கு அந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.



1970 மார்ச் 25]

**திரு. நா. வீராசாமி :** துணைத் தலைவரவர்களே, இந்திய மருந்துகள்குறித்த மத்திய ஆராய்ச்சிக் கழகத்திலே யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள். நம்முடைய நாட்டு மூலிகைகளைப் பற்றி அறிந்தவர்கள் அதில் இடம் பெற்றிருக்கிறார்களா அல்லது வெளிநாட்டுக்காரர்கள் இடம் பெற்றிருக்கிறார்களா? பொதுவாக நம்முடைய இலக்கியங்களிலே பார்க்கும் நோக்கில், கீரியும் பாம்பும் சண்டை போட்டால், கீரியைப்பாம்பு கடித்துவிட்டால் கூட விஷம் ஏறாத அளவுக்கு கீரி அந்த மூலிகைகளில் புரளுவதாகச் சொல்லப்படுகிறதே, இதையெல்லாம் அந்தக் கழகம் ஆராய்ச்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மத்திய ஆராய்ச்சிக் கழகத்தில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற விவரக் குறிப்புகள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம். ஆனால் எந்தெந்த மருந்துகளால் என்னென்ன விளைவுகள் உண்டாகின்றன என்று அவர்கள் ஆராய்ச்சி செய்து வெளியிடுகிறார்கள். நாம் எது எது பலனளிக்கும் என்று தெரிவிக்கும் நிலையில், பல்வேறு மருத்துவர்களைக் கொண்டு சொல்லப்படுகின்றவைகள் எந்த அளவுக்குப் பலன் தரும் என்பதைக் கண்டறிய ஆராய்ச்சிக் கழகம் இருக்கிறது. இந்த ஆராய்ச்சி இப்பொழுது எங்கு பார்த்தாலும் நடந்து வருகிறது. தமிழகத்திலும் நடத்த வேண்டுமென்று, இது தொடர்பான செயற்குறிப்புகள் வரப்பெற்று ஆய்விலுள்ளன. நல்ல பலன்களைத்தந்தால் அதன்மூலம் தயாரிக்கப்படும் மருந்துகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்ற அளவில் இப்பொழுது சில பல மருந்துகள், மூலிகைகள், மூலிகைப் பொருள்கள் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு இந்தக் கழகம் இருக்கிறது.

### *Connemara Public Library*

* 533 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether any complaints have been received from the public by the Chief Secretary or the Secretariat Complaints-Cell or the Chief Minister against the Librarian with regard to the working of the Connemara Public Library; and

(*b*) if so, the nature of the complaints and the action taken thereon ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :**

(அ) ஆம்.

(இ) இது பரிசீலனையில் உள்ளது.

* 534 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether any prescribed norms are being observed in the matter of selection of books in the Connemra Public Library;

(b) whether the librarian ensures that all the "Free of Cost" copies are sent to him by the publishers as per law;

(c) if not, the steps taken to acquire the same; and

(d) the time taken to index new books?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :**

(அ) கன்னிமாரா பொது நூலகத்திற்கு நூல்கள் தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படைக் கோட்பாடுகள் எவையும் விதிக்கப்படவில்லை.

(இ) & (உ) 1954-ம் ஆண்டு நூல்கள் ஒப்படைப்பு (பொது நூலகங்கள்) சட்டத்தின்படி (மத்தியச் சட்டம் 27/1954) நூல் வெளியிடுவோர் தாங்கள் வெளியிடும் நூல்கள் ஒவ்வொன்றிலும் ஒரு படியை நூல் வெளியான தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் தங்கள் சொந்தச் செலவிலேயே ஒப்படைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அவ்வாறு ஒப்படைக்கத் தவறுகிற நூல் வெளியீட்டாளர்கள் பற்றி, புது டில்லி, இந்திய அரசாங்கக் கல்வி அமைச்சக உதவிச் செயலாளருக்குத் தெரிவிக்கப்படுகிறது. நூல்கள் ஒப்படைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கே இவ்வாறு செய்யப்படுகிறது.

(எ) நூலகத்தில் பெறப்படும் நூல்களைப் பெறுதல் பதிவேட்டில் பதிவுசெய்து, வகைப்படுத்தி, அட்டவணையிட்டுப் பொது மக்களுக்குக் கிடைக்குமாறு செய்கிறார்கள். பெறப்படும் எண்ணிக்கையையொட்டியும், இவ் வேலையைக் கவனிக்கப் பல்வேறு மொழிகளில் பணியாளர்கள் கிடைப்பதைப் பொறுத்தும், இதற்கும் சிறிது காலம் ஆகிறது.

DR. H. V. HANDE : Sir may I know whether it is a fact that in the Connemara Public Library things are in a very confused state and whoever wants to get any book immediately is not able to get it because there is no proper co-ordination. Also may I know whether it is a fact that a person from the office of the Director of Public Instruction has been absorbed in this Library as Bibliographer (Grade II) instead of promoting a person in that Library and what action has been taken with regard to the complaint given two years ago?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கன்னிமாரா நூலகத்தில் பணியாற்றுகின்ற அலுவலர் பற்றியும் அங்குள்ள நிர்வாகம்பற்றியும் பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறி பல்வேறு மனுக்கள் வந்திருக்கின்றன. 1967-68—இலேதான் கொடுத்திருக்கிறார்கள். நிர்வாக ஊழல் இருக்கிறது என்றும் கையாடல் நடைபெறுகிறது என்றும், கேட்ட புத்தகம் கேட்ட நேரத்தில் கிடைக்கவில்லை என்றும், குறிப்பிட்ட ஒருவர் பதிவு செய்து வைத்து அவருக்குக் கிடைக்காமல் அந்தப் புத்தகம் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் இப்படிப்பட்ட பல குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறார்கள். அவைகளெல்லாம், நூலகக் கல்வி இயக்குநரிடத்தில், பள்ளி கல்வி இயக்குநரவர்கள்தான்



அதற்கும் இயக்குநராக இருக்கிறார்கள், குற்றச்சாட்டுகளைப்பற்றி விரைவில் விசாரணைசெய்து முடிவைக் கூறும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. விசாரணை செய்துகொண்டிருக்கிறார்கள். உறுப்பினர் கூறியபடி இரண்டு ஆண்டுக் காலமாகியும் இதற்குப் பதில் வராததால், அதை விரைவுபடுத்தச் சொல்லப்பட்டிருக்கிறது. விரைவிலே பதில் வந்த பிறகு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

DR. H. V. HANDE : Sir, may I know whether the Government have made any arrangements for making periodical inspections and verifications with regard to the Library's accounts, contingent bills, cash book and actual cash balance, bills for the books supplied, binding grant, etc. ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மேற்படி பீரியாடிக்கல் இன்ஸ்பெக்ஷன் இருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது எந்த நிலையிலே இருக்கிறது என்பதுபற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்ற அத்தகைய குற்றச்சாட்டுகள் இருந்தால் தனிக் கேள்வி போட்டாலோ அல்லது என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்தாலோ அதுபற்றி விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*Aid to Technical Institutions*

* 535 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether any code to aid Technical Institutions in the State has been received from the Union Ministry?

**மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் :** தெளிவான விளக்கங்கள் அடங்கிய உதவிமானிய விதிக்கோவையை வகுப்பதற்கென்று இந்திய அரசினால் அமைக்கப்பட்ட உதவிமானிய விதிக்கோவைக் குழுவின் பரிவுரைகளை இணைத்து இந்திய அரசு கடிதம் ஒன்றை இம்மாநிலத்திற்கு அனுப்பியுள்ளது. தமிழ்நாட்டிற்கான உதவிமானிய விதிக்கோவை மாநில அரசினால் முன்பு ஏற்கெனவே வகுக்கப்பட்டுள்ளது. இந்த விதிக்கோவையே அவர்களது பரிவுரைக்கு மாதிரியாகப் பயன்படுத்தப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த மாநிலத்தில் உள்ள தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மானியம் எந்த அடிப்படையில் அளிக்கப்படுகிறது? கடந்த ஆண்டு தமிழகத்தில் இந்தக் கல்வி நிறுவனங்களுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது? இதை உயர்த்துவதுபற்றி அரசு பரிசீலிக்குமா? மத்திய அரசு அனுப்பியுள்ள விதிக் கோவைக்கும், மாநில அரசின் விதிக் கோவைக்கும் என்ன மாறுபட்ட கருத்துகள் இருக்கின்றன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த விதிக்கோவையின்படி இப்பொழுது பொறியியல் கல்லூரி, பல்தொழில் நுட்பப் பள்ளி (பாலிடெக்னிக்) ஆகியவைகளுக்கு ஆண்டு விழுகின்ற

தொகையில் ஏற்கனவே 66 2/3 சதவிகிதம் என்ற அளவுக்கு இருந்ததை 75 சதவிகிதத்திற்கு உயர்த்தியிருக்கிறோம். ஆகவே, 25 சதவிகிதம் அரசு மானியமாகத் தருகிறது. மற்றவற்றை அந்த நிறுவனமே போட்டுக்கொள்ளவேண்டும். தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளியைப் பொறுத்தவரையில் 100 சதவிகிதத்தையும் அரசே ஏற்றுக்கொண்டிருக்கிறது. பல்தொழில் நுட்பப் பள்ளி, அதற்கெல்லாம் அவர்கள் அறக்கட்டளை வைத்து, அதன் மூலம் வருகிற வருவாயில் ரூ. 40,000 தொழில் நுட்பப் பள்ளியை நடத்துவதற்குத் தரவேண்டும் பொறிஇயல் கல்லூரிக்கு ரூ. ஒரு லட்சம் தரவேண்டும் என்று நிர்வாகத்தினருக்கு விதிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விதிக்கோவையைப் பொறுத்த அளவில் அகில இந்திய அரசு நம்முடைய விதிக்கோவையை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு, விதிக்கோவையைத் தயாரித்து எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பியிருக்கிறது. அந்த வகையில் அதிகமான வேறுபாடுகள் கொள்ளவேண்டிய அவசியமில்லை. திருத்தங்கள் செய்யவேண்டிய அவசியமில்லை. நம்முடைய விதிக்கோவையை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு, வேறு மாநிலங்களும் கடைப்பிடிக்கக்கூடிய அளவுக்கு மத்திய அரசு மேற்கொண்டிருக்கிறது. அதனால், அதிக மாற்றம் இல்லை.

*Age of retirement of non-teaching staff in high schools*

* 536 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) The age of retirement for non-teaching staff of aided secondary schools in Tamil Nadu;

(b) whether they are allowed to work up to the age of sixty years; and

(c) the numbers of such persons who are now affected by the new orders?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :**

(அ) 55 வயது.

(இ) ஆம்.

(உ) ஓய்வு பெறும் வயதை 55 ஆக நிர்ணயித்தும், 55க்கு மேல் தொடர்ந்து பணியிலிருந்து அனுமதிக்கக் கூடாதென்றும் போடப்பட்ட ஆணையை மீண்டும் ஆய்வு செய்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது ஒருவரும் பாதிக்கப்படவில்லை.

**திரு. கே. விநாயகம் :** டீச்சிங் ஸ்டாபாக இல்லாமல் அலுவலகத்தில் பணிசெய்கின்ற அலுவலர்களுடைய ஓய்வு பெறுகின்ற வயதை 58-ஆக உயர்த்துவதில் அரசாங்கத்திற்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1963-ம் ஆண்டு வரையில் ஆசிரியர்கள், எழுத்தர்கள் ஆகியோர்களின் ஓய்வு பெறும் வயது 55 என்றுதான் நிர்ணயிக்கப்பட்டிருக்



கிறது. ஆனால், அதற்குப் பிறகு நிர்வாகத்தினர்கள் விரும்பினால், அவர்களை வேலைக்கு மீண்டும் வைத்துக்கொள்ளலாம் ரி-எம்ப்ளாய்மெண்டு என்ற முறையில் மறுபடியும் அத்தகைய முறையில் வேலைக்கு அமர்த்திக்கொள்ளலாம். அப்படி அமர்த்துவது 60 வயது வரை செல்லலாம் என்று இருந்தது. 1963-ம் ஆண்டில் ஆசிரியர்களின் ஓய்வுபெறும் வயது 58 ஆக உயர்த்தப்பட்டது. ஆனால் எழுத்தாளர், ஆகியோர்களின் ஓய்வுபெறும் வயது 55 ஆக வைக்கப்பட்டது. என்றாலும், நிர்வாகத்தினர் விரும்பினால் 60 வயது வரையில் நீடிக்கலாம் என்ற தன்மை இருந்தது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிற காரணத்தினால், படித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தினால், அரசு உத்தியோகஸ்தர்களுக்கு 58 வயதிற்கு மேல் உத்தியோகம் தருவதற்கில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது. அதன் காரணமாக ஆசிரியர்கள் அல்லாத எழுத்தாளர் போன்ற பிற பணியாளர்களின் ஓய்வுபெறும் வயது 55 என்று நிர்ணயிக்கப்பட்டது. அவர்களை மறுபடியும் வேலைக்கு அமர்த்தக்கூடிய வாய்ப்பு எடுக்கப்பட்டுவிட்டது. ஓய்வு பெற்ற ஆசிரியர்களையும், பிற அலுவலர்களையும் மறுபடியும் பணியில் இருத்துகின்ற முறை இருந்தது. அந்த முறையை மாற்றிக்கொள்ளவேண்டும் என்று சொன்னது வேலை வாய்ப்பை இளைஞர்களுக்கு அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தில்தான். அப்படி 55 வயதோடு நிறுத்தப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்ட பிறகு, அவர்களுக்குச் சிலபல சங்கடங்கள் இருக்கின்றன என்றும், மற்ற இடங்களில் ஓய்வு பெற்றவர்களுக்குக் கிடைக்கின்ற சிலபல வாய்ப்புகள், வசதிகள் தங்களுக்கும் கிடைக்கும்படி செய்துவிட்டு, 55 வயதோடு ஓய்வு பெறுகின்ற அளவுக்கு உத்தரவிட்டால் அது பொருத்தமாக இருக்கும் என்று முறையிடப்பட்டது. அந்த வசதிகள், வாய்ப்புகள் இல்லாமல் 55 வயது என்று நிர்ணயித்தால் சங்கடங்கள் இருக்கின்றன, ஆகவே அந்த உத்தரவை அமல் நடத்தக்கூடாது என்று சொல்லப்பட்டது. ஆகவே, அந்த உத்தரவை நிறுத்திவைத்திருக்கிறோம். அவர்களுடைய சங்கடங்களைப்பற்றி ஆய்ந்தபிறகு, அவர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படாமல், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற முறையிலும், அரசாங்கத்தினுடைய கருத்துக்கள், கொள்கைகளை நிறைவேற்றுகின்றவகையிலும் திட்டங்கள் தீட்டலாம் என்று கருதி அந்த உத்தரவு நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கோரிக்கைகளைப் பற்றி ஆய்ந்து வருகின்றார்கள். அதற்குப்பிறகு அவர்களின் சிபார்சின் பேரில், தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

Dr. H. V. HANDE : While the Non-teaching staff are very grateful to the Ministry for suspending that Government Orders will the Hon. Ministtr be able to tell us whether the Ministry has not received a series of requests on behalf of the non-teaching staff that they are neither fish nor flesh, neither they have the advantage of the teaching staff nor the security of tenure of

Government servants. In view of that compaint, will the Hon. Minister be able to give a categorical answer saying whether they can be treated as Government servants or as teaching staff?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் அல்லாத அலுவலர்கள் கல்வி நிலையங்களில் பணிபுரிந்தாலும், அவர்களையும் ஆசிரியர்களோடு வைத்து, அவர்களுக்கும் ஆசிரியர்களை ஒத்த தகுதி அளிக்க முடியாது. விடுமுறை, மற்ற எல்லா வகைகளிலும் ஆசிரியர்களை நாம தனியாகக் கவனித்துக் கொண்டிருக்கிறோம். பள்ளிகளில் பணிபுரிகிற அலுவலர்கள், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்கள். மற்ற அலுவலர்கள் எந்த அளவுக்குக் கவனிக்கப்படுகிறார்களோ அதே அளவுக்குக் கவனிக்கப்படுவார்கள். இவர்கள் சொல்வது என்னவென்றால், பிற அலுவலர்களுக்குத் தரப்படுகிற சலுகைகள், வேறு பல வசதிகள் தங்களுக்கு அளிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட வசதிகள் இல்லாமலும், ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிற வசதிகளும் தங்களுக்கு இல்லாமலும் தாங்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆகவே, 55 வயதில் ஓய்வு பெறுவதில் சங்கடங்கள் அதிகமாக இருக்கின்றன என்று சொன்னதற்குப் பிறகு இதை ஆராய வேண்டும். மற்ற அலுவலகங்களில் பணிபுரிகிற அலுவலர்களுக்கு தரப்படுகின்ற வசதிகள், வாய்ப்புகள் மற்றவைகள் இவர்களுக்கும் ஏற்படுவதன்மூலம், இவர்களுடைய குறைகள் நீக்கப்பட்டு, மற்ற அலுவலர்களோடு ஒப்பிட்டு, அந்த அளவுக்கான வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும் என்ற அளவில், அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

*திரு. நா. வீராசாமி :* துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் அல்லாத பிற பணியாளர்கள், அதாவது டெப்யூடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் போன்றவர்கள் 55 வயதில் ரிடையர் ஆகவேண்டியிருக்கிறது, ஆனால் அவர்கள் திரும்பவும் ஹெட்மாஸ்டர் அல்லது ஆசிரியர்களாகப் பணி செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டால், அவர்கள் 58 வயதில் ரிடையர் ஆகலாம். ஆக, ஒரே துறையில் இருப்பவர்களுக்கு ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கு 58 வயது என்றும், ஆசிரியர்கள் அல்லாதவர்களுக்கு 55 வயது என்றும் இருக்கிறது. அதனால் அங்கிருக்கக்கூடிய பணியாளர்களிடையே கருத்துவேறுபாடுகள் இருக்கின்றன. இதைப் போக்கி, எல்லோருக்கும் 55 வயது என்று நிர்ணயிக்க அரசு முன் வருமா?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* இப்பொழுது கிட்டவட்டமாகத் தெளிவாகத் கல்வி இயக்குநரால் அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஆசிரியர் துறைக்கு வந்தால் 58 வயது வரையில் போகலாம், அல்லது நிர்வாகத் துறைக்கு வந்து, மாவட்டக் கல்வி அதிகாரி, தலைமைக் கல்வி அதிகாரியாக வரவேண்டும்என்ற எண்ணம் இருந்தால், அவர்கள் 55 வயதில் ஓய்வு பெறவேண்டும். 54 வயது வரையில் அதில் வேலை பார்த்துவிட்டு, 55-வது வயதில் நான் மீண்டும் ஆசிரியாக வந்து 58 வயது



வரை போகிறேன் என்று சொன்னால், அதற்கு இடம் அளிக்க முடியாது. இப்பொழுதே இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அவரவர் விருப்பத்திற்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நிர்வாகத் துறையில் இருக்கவேண்டுமென்றால் அதிலேயே மேலும் ஓங்கி வந்து, 55 வயதில் ஓய்வு பெற வேண்டும். ஆசிரியர் துறைக்கு வந்தால் 58 வயது வரையில் போகலாம் என்ற அளவுக்கு, இப்பொழுதே அவர்கள் எந்தத் துறை வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதற்காக அவர்களுடைய விருப்பம் அறிந்து, அம்மாதிரிச் செய்யப்படும். அதற்கான நடவடிக்கை எடுக்க இயக்குநர் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்.

THIRU T. MARTIN : What is the prescribed scale of pay for these non-teaching staff under Government service? May I request the Hon. Minister to state whether any such prescribed scales of pay is there for aided high schools receiving aid from Government or whether the institutions pay as they like, the pay differing from institution to institution ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :* தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசாங்கப் பள்ளிகளில் பணிபுரிந்துகொண்டிருந்தவர்களுக்கு ஒருவித ஊதியம் கொடுத்துக்கொண்டிருந்தோம். தனியார் பள்ளிகளில் அவரவர்கள் பலவிதமாக ஊதியம் தந்துகொண்டிருந்தார்கள். அரசாங்கம் இலவசக் கல்வியை அமலுக்குக் கொண்டுவந்தபிறகு, அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு அரசாங்கப் பள்ளிகளில் எந்தச் சம்பள விகிதம் நிர்ணயித்திருந்தோமோ அதேதான் எல்லாப்பள்ளிகளிலும் இருக்கவேண்டும் என்ற அளவுக்கு ஒரு முறையைக் கொண்டுவந்து. அது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. எல்லாப் பள்ளிகளிலும் ஊதியத்தை ஒரேபடியாக ஆக்கவேண்டும் என்ற முயற்சியில் மெல்ல மெல்ல அரசாங்கம் ஈடுபட்டிக்கொண்டிருக்கிறது தனியார் பள்ளியில் பணிபுரிகிற அலுவலர்கள் ஏற்கெனவே தாங்கள் வாங்கிய சம்பளம் வாங்காமல் ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது. அது கவனிக்கப்படவேண்டும் என்று கூறுகிறார்கள். அதைப்பற்றி என்ன செய்வது என்பதுபற்றிப் பரிசீலனையில் இருந்துவருகிறது. ஒரேயடியான சூழ்நிலை எல்லாப் பள்ளிகளிலும் ஏற்படவேண்டும்; பள்ளிக்குப் பள்ளி வேறுபாடு காட்டுவதன்மூலம் பலவேறு சங்கடங்கள் ஏற்படும் என்று கருதி, ஒரேயடியாக ஆக்குவதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. அரசாங்கப் பள்ளியாக இருந்தாலும்சரி, நகராட்சிப்பள்ளியாக இருந்தாலும்சரி, தனியார் பள்ளியாக இருந்தாலும்சரி, இவைகளிலெல்லாம் வேறுபாடு இல்லாமல் செய்யவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தான் இப்பொழுது முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் கண்டு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஒரு குழுவை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்தக் குழு மாநிலங்களில் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று, இந்தப் பிரச்னைகளை ஆய்ந்து,

பிறகு அதுபற்றி ஒரு முடிவு எடுக்கப்படும். அரசு அதை ஆராய்ந்து தக்க முடிவை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. என். வரதராஜன்*** : தலைவர் அவர்களே, 55 வயது என்று குறைக்கும் போது வேறு சில பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன. குறைந்த வருவாய் உள்ள ஆசிரியர்களுக்கு 58 வயது என்றும், உயர்ந்த உத்தியோகத்தில் வசதியில் இருப்பவர்களுக்கு வயது 55 என்று ஆக்கும் அந்த அடிப்படையில் திட்டம்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்*** : தலைவர் அவர்களே, ஆசிரியர்களில் குறைந்த ஊதியம், அதிக ஊதியம் பெறுபவர்கள் என்று பாகுபாடு செய்ய முடியாது. நிர்வாகத்தில் இருப்பவர்கள் 55 வயது என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். தனியார் பள்ளியில், ஆங்கிலோ-இந்தியன் பள்ளியில் ஆசிரியர்கள் வயது 60 என்று இருக்கிறது. மற்றப் பள்ளிகளில் 58 வயது என்று இருக்கிறது. இனியும் அதைக் குறைக்கக் கூடாது, 'ஸ்டேட்டஸ்கோ' என்று சொல்லப்படுகின்ற நிலை காப்பாற்றப்பட வேண்டும் என்ற வகையில் செய்யப்படுகிறது. மேலும் ஆசிரியர் கழகத்தினர் வேறு பல துறைகளில் உயர்வுகள் வரும், ஆசிரியர்களுக்கு அதிகமான உயர்வு எதுவும் கிடையாது, அதிகமாக வந்தால் தலைமை ஆசிரியர் பதவி ஒன்றுதான் அந்த அளவில் இருப்பதால், மற்றையத் துறைகளைவிட இந்தத் துறையில் அவர்களுக்கு 58 வயது என்று இருக்க வேண்டும் என்று கோரும் நிலை இருப்பதால், அந்த வகையில் செய்யப்பட்டிருக்கிறது.

***திரு. எஸ். சிவசுப்பிரமணியம்*** : தலைவர் அவர்களே, அரசாங்கப் பள்ளிகளில் ஆசிரியர்களைப் போடுவதுபோல், அரசு மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளிகளிலும் மற்றப்பள்ளிகளிலும் அரிசனங்களுக்கு விகிதாசாரம் போடாவிட்டால், அவர்களுக்குக் கொடுக்கும் மானியத்தை அரசாங்கம் நிறுத்துமா ? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்*** : தலைவர் அவர்களே, இந்த விகிதாசார அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன. மற்ற நடவடிக்கை எடுக்க சட்ட திட்டத்திலே சரியான விதிகள் இல்லாததால், இப்போழுது குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அது ஆராய்ந்து வருகிறது. அதன் சிபாரிசு வந்தபிறகு, அதன் அடிப்படையில் சட்டத்தைத் திருத்த, புதுச் சட்டம் கொண்டுவந்து தக்க நடவடிக்கை எடுக்க முடியும். இப்பொழுது எதாவது செய்வது என்றால் மானியத்தை நிறுத்துவதுதான். ஆனால் அதன்மூலம் ஆசிரியர்களுக்கு வேலையில்லாமல் போகும், மாணவர்களுக்குப் படிக்க முடியாமல் போகும் குழுவின் சிபாரிசின் மேல் சட்டத்தைத் திருத்திவிட்டால் எல்லாம் எளிதாக முடியும்.





### *Stipends for teachers training*

* 537 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the Government has decided not to grant stipends in future for teacher trainees; and

(*b*) if so, the reason for such decision?

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்*** : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

***திரு. கே. விநயகம்*** : பெரும்பாலும் இந்த டீச்சிங் ட்ரெயினிங் எடுக்க வருகிற மாணவ மாணவிகள் ஏழைகளாக இருப்பதால் கொடுத்து வந்த உதவிச் சம்பளத்தை, அவர்களுக்கு இது பெரும் உதவியாக இருப்பதால் தொடர்ந்து கொடுப்பதில் அரசாங்கத்திற்கு என்ன அதிகப்படியான செலவு ஆகிவிடும் ? கோரிக்கையைக் கேட்டு அந்தத் தொகையை மீண்டும் தருவதற்கு என்ன கஷ்டம் இருக்கிறது ?

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்*** : தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர் பயிற்சிக்கு வரும் மாணவர்களுக்கு 'ஸ்டைபண்ட்' என்ற முறையில் உதவித் தொகை தரப்பட்டு வந்தது அதற்கு அடிப்படையான காரணம் இந்த ஆசிரியர் துறைக்குப் பலரையும் ஈர்க்க வேண்டும் என்று ஸ்டைபண்ட் கொடுக்கப்பட்டது. மேலும், அப்பொழுது ஆசிரியர் பயிற்சிக்கு வருபவர் எண்ணிக்கை குறைவாக இருந்ததும் காரணம். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேண்டும் என்கிற நிலை இருந்தது. ஆகவே, அந்தத் துறையை கவர்ச்சிகரமாக்க ஸ்டைபண்ட் கொடுத்தோம். அந்த நிலை இப்பொழுது மாறி, 300 இடங்களுக்கு 3,000 விண்ணப்பங்கள் வரும் நிலை ஏற்பட்டு விட்டதால் அந்தத் தொகையை நிறுத்திவிடலாமா என்ற யோசனை இருந்தது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களின் கருத்தும் இருந்ததால், ஸ்டைபண்டை நிறுத்த வேண்டாம் என்றும், ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கும் உதவியாக இருக்கட்டும் என்றும், நிறுத்தும் யோசனையை நிறுத்திவிட்டுத் தொடர்ந்து அளிக்கப்படுகிறது. அது எடுக்கப்படவில்லை. அப்படிப்பட்ட யோசனை இருந்தது சீனியர் பேசிக்குக்கு 16,06,543 ரூபாயும் செகண்டரி கிரேடுக்கு 2,44,388 ரூபாயும், ஜூனியர் பேசிக் பிரிவுக்கு 5,09,219 ரூபாயும், ஹையர் கிரேடுக்கு 65,242 ரூபாயும், ஆகமொத்தம் 24,25,392 ரூபாய் ஸ்டைபண்ட் என்ற வகையில் சென்ற ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது.

### இந்தி ஆசிரியர்களின் குறைகள்

*538 விஞ—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் இந்தி பிரசார சமிதியின் சார்பில் இந்தி ஆசிரியர்கள் குறைகளைப்பற்றி 29-1-1968 தேதியில் மாண்புமிகு முதல் அமைச்சர், கல்வி அமைச்சர் ஆகியோருக்கு எழுதியுள்ளார்களா ?

*1970 மார்ச் 25]*

*(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?*

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** *(அ) இல்லை. ஆனால் 29—1—1968 நாளிட்ட முறையீடு ஒன்று பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்டது.*

*(இ) அம்முறையீட்டில் கண்ட கிர்மானங்களின்மேல் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பள்ளிக் கல்வி இயக்குநர் எடுத்துள்ளார்.*

***திரு. வி. கே. கோதண்டராமன் :*** *இந்தி ஆசிரியர்களுக்கு, வேலையிழந்ததற்கு, வேறு பல வேலைகள் அவர்களுக்குக் கொடுக்க சர்க்கார் முன்வந்தார்கள். அதன் விளைவாக ஒரு சிலருக்கு அவர்கள் செய்ய முடியாத கிளார்க்கு போன்ற வேலைகளையும், மற்றவர்களுக்குத் தமிழ் பண்டிதர் படித்தவர்களாக இருந்தாலும் அந்த வேலையை அவர்களுக்குக் கொடுக்காமல வேறு சில செய்ய முடியாத வேலையைக் கொடுத்திருக்கிறார்கள் என்ற புகார் வந்து இருக்கிறதா? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று அறியலாமா?*

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** *தலைவர் அவர்களே, இந்தி மொழி ஆசிரியர்களுக்கு மாற்று வேலை தரவேண்டும் என்ற திட்டத்தை மேற்கொண்டு, வேலை வாய்ப்புகள் தரப்படுகின்றன. அந்த வகையில் அவர்களுடைய கல்வித் தகுதிக்கு ஏற்ப, பொருத்தமான வேலைகள் தரப்படுகின்றன. எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்தவர்களாக இருந்தால் அவர்களுக்கு எழுத்தர் போன்ற, நூலக பொறுப்பாளர் போன்ற பல்வேறு பணிகள் கொடுக்கப்பட்டன. பயிற்சித் தகுதிகளைப் பெறும் அளவில் வாய்ப்புக்கள் தரவேண்டும் என்றும் தரப்படுகிறது. அந்த வகையில் தமிழ்மொழி தகுதி பெற்றவர்கள் 67 பேர்கள் வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறார்கள். வேறு பி.டி. அஸிஸ்டெண்ட், செகன்டரி அஸிஸ்டெண்டு மற்ற ஹையர்கிரேட் டீச்சர் போன்றவர்களுக்கு அவரவர்களுடைய தகுதிக்கேற்ப வேலைகள் கொடுக்கப்படுகின்றன. 1063 இந்தி ஆசிரியர்கள் அவர்களுக்குத் தகுதி வாய்ப்பு ஏற்படும்போது தகுதி இடங்களுக்குத்தரலாம் என்றும், ஊதியம் குறைக்காமல் காப்பாற்றப்பட வேண்டும். என்றும் அந்த நோக்கத்தின் அடிப்படையில், இந்தி ஆசிரியர்கள் எந்த வகையில் என்ன இன்க்ரிமென்ட் போன்றவைகள் காப்பாற்றபட்டு, தகுதி திறமை அடையக்கூடிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சில இடங்களில் இப்பொழுது தராமல் இருந்தாலும் வேலை வாய்ப்பு இல்லை ? என்று அர்த்தம், பின்னால் சந்தர்ப்பம் வரும்போது கொடுக்கப்படும்.*

THIRU K. VINAYAKAM : Sir, consequent on the two-language formula adopted by us, namely to encourage Tamil and English and to discard Hindi in whatever manner it is now being taught, may I know how many of the ex-Hindi Pandits, who



*1970 மார்ச் 25]*

were teaching either in Government schools or schools under private management, are now out of employment or whether all of them have been given alternative jobs ?

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** *தலைவர் அவர்களே, ஏற்கனவே நிரந்தரமாக உள்ள இந்தி ஆசிரியர்கள் அனைத்துப் பேருக்கும் மாற்று வேறுகள் தரப்பட்டிருக்கின்றன. அத்தனை பேர்களுக்கும் சம்பளம் முதலியவை காப்பாற்றப்பட்டிருக்கிறது. 505 பேர்கள், 'அன்க்வாலிபைட்', தற்காலிகமாக வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள், 'டெம்பரரி அப்பாயின்ட்மெண்ட்ஸ்' என்பவர்கள் வேலை இப்பொழுது இழந்து இருந்தாலும், தகுதி பெற்றவர்கள் வேறு பல வேலைகளுக்கு விண்ணப்பித்தால், அவர்களுக்குச் சலுகை காட்டி, அவர்களை ஏற்றுக் கொள்ளும் நோக்கத்தின் அடிப்படையில் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அன்க்வாலிபைட் என்றோ, தாற்காலிகமாக எடுக்கப்பட்டவர்கள் என்ற காரணத்திற்காகவோ எடுத்தவர்களாக இருந்தால், போதுமான தகுதி இல்லாத காரணத்தால் நிறுத்தப்பட்டிருப்பவர்கள் 505 பேர்கள். அவர்களை மறுபடியும் தகுதிபெற்றபிறகு, அவர்கள் செகண்டரி ஆசிரியர்களாக வந்தால், அவர்களுக்குச் சலுகை தரலாம் என்ற, அந்த வகையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.*

***திரு. இராம. அரங்கண்ணல் :*** *தலைவர் அவர்களே கட்டாய இந்தியை ரத்து செய்ததன் விளைவாகத் தமிழ் நாட்டில் இருக்கும் இந்தி சொல்லிக் கொடுத்துவந்த ஆசிரியர்கள் வேலையை இழந்து விடக்கூடாது என்கிற காரணத்தால், அவர்களுக்கு மறுபடியும் ஏதாவது வேலை கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவு இட்டது. அந்த ஆணையை ஆங்காங்கேயுள்ள நிர்வாகிகள் செய்ய வேண்டுமா ? அல்லது அது அரசின் பொறுப்பா ?*

***மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :*** *தலைவர் அவர்களே, அவர்களுக்கு மாற்று வேலை தருவது அரசினுடைய பொறுப்பாக இருக்கிறது. அவர்களை எந்தெந்த வேலைகளில் அமர்த்தலாம் என்பதற்கு அவர்களுடைய தகுதிகளைப் பார்த்து, அவர்களை மாற்று வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசு சிபாரிசு செய்திருக்கிறது. அதற்கான ஆணையும் பிறப்பித்திருக்கிறது. தனியாருடைய பள்ளிகளில் அவர்களுக்கு மாற்று வேலை தர வேண்டுமென்று அரசு சிபாரிசு செய்திருக்கிறது. அரசாங்கப் பள்ளியைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு மாற்று வேலை அளிக்கப்பட்டு வருகிறது.*

### *American aid for Agricultural Production*

* 539 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to place on the Table of the House, the details of the United States Technical Aid for Agricultural Production in this State?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பேரவை முன் அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. கோமதிசங்கர திட்சிதர் :** தலைவர் அவர்களே, அமெரிக்க தொழில் நுட்ப உதவி கிடைப்பதன்மூலம் நம்முடைய விவசாயம் அபிவிருத்தியடைந்திருக்கிறதா? அது நடைமுறையில் கவனிக்கப்பட்டிருக்கிறதா? உயர்ந்த விவசாயப் படிப்பு பெறுவதற்காக எத்தனை அதிகாரிகள் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, மேஜையின்மீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையிலே, 1-7-1969 முதல் 30—9—1959 முடிய 435 கட்புல விளக்கங்களும் கூட்டங்களும் நடத்தப்பட்டன. அதன்மூலம் கோயம்புத்தூர், வட ஆர்க்காடு மாவட்டங்களில் மொத்தம் 16,342 உழவர்கள் பயன் பெற்றனர் என்று குறிப்பிட்டிருக்கிறோம். நமது மாநிலத்திலிருந்து பல அதிகாரிகள் அமெரிக்காவில் பயிற்சி பெறுவதற்காக அனுப்பப் பட்டிருக்கிறார்கள். உயர்நிலை அதிகாரி வேளாண்மைத் துறை செயலாளர் சென்ற ஆண்டில் மூன்று திங்கள் காலம் நேரில் கண்டறியும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் திட்டத்தின் அடிப் படையில் சென்று வந்தார். இந்த ஆண்டு வேறு ஒரு அதிகாரி செல்ல இருக்கிறார்.

THIRU B. VENKATASWAMY : Sir, according to the Paper laid on the table of the House, 435 demonstrations were held benefiting 16,342 farmers in the districts of Coimbatore and North Arcot. Will this Government extend this kind of demonstration to other backward districts like Dharmapuri, Salem and Ramanathapuram?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும் பல மாவட்டங்களிலும் செய்வதற்குப் பரிசீலனை செய்து வருகிறோம்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை அதிகாரி பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார் என்று சொல்லப்படுகிறது. அப்படிப் பயிற்சிக்காகச் செல்கிற அதிகாரி பயிற்சி முடிந்து திரும்பி வந்தவுடன் வேறு பல துறைகளுக்கு மாற்றப்படுகிறார்கள். அவர்களுடைய பயிற்சியின் பயன் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே, இனிமேலாவது விவசாயிகளை இதுபோன்ற பயிற்சிகளுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா? இந்த மாதிரியான பயிற்சிக்கு அனுப்பப்படுகிறவர்களை வேறு துறைகளுக்கு மாற்றாமலிருக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, விவசயத்தைத் தனிக் கல்வியாக எடுத்துப் படித்தவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுகிறார்கள்.

* 655-657ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



விவசாயத் துறையிலும் மற்றத் துறையிலும் இருக்கின்றவர்களை அனுப்புகின்ற செயற்குறிப்பு இருக்கின்ற காரணத்தால் அனுப்புகின்றோம். விவசாயத்தைத் தனிச் சிறப்புக் கல்வியாக எடுத்துப் படிக்கின்றவர்களைத்தான் அனுப்புகின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினா எண் 540—மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின் பேரில் ஒற்றிவைக்கப்படுகிறது.

*Arrests of rice mill owners at Madurai*

* 541 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. Minister for Food and Commercial Taxes be pleased to state :

(a) whether a number of rice mill owners in Madurai has been arrested in December 1969; and

(b) the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:**

(அ) திண்டுக்கல்லில் திரு. ஓ. எஸ். கண்முகவேலு என்ற அரிசி அரைவை ஆலை உரிமையாளர் 12-12-1969 அன்று கைது செய்யப்பட்டார்.

(ஆ) இதுகுறித்துப்பல புலனாய்வுகள் நடந்து கொண்டிருப்பதால் விவரங்கள் தருவது உசிதமல்ல என்று கருதப்படுகிறது.

THIRU K. VINAYAKAM : Sir, what is the alleged offence committed by this mill-owner, for which he has been arrested?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பில் அவர்களிடத்திலே கொடுக்கப்பட்ட நெல்லை அரைத்து, அரிசியாகத் தரும்போது குறிப்பிட்ட சதவிகித அரிசி கொடுக்கப்பட வேண்டும் என்று விதி இருக்கிறது. அம்மாதிரி குறிப்பிட்ட சதவிகித அரிசி கொடுக்கப்படவில்லை. மேலும், அரசாங்கத்தின் சார்பிலே இருக்க வேண்டிய ஸ்டாக்கும் அவரிடம் இல்லாமல் குறைந்திருந்தது. ஆகவே, அவர் கைது செய்யப்பட்டார்.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் கைது செய்யப்பட்டிருக்கிறாரே அவர் மொத்தம் 12 லட்சம் ரூபாய் மோசடி செய்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறதே, அந்த 12 லட்சம் ரூபாயை ஒரே நாளில் மோசடி செய்துவிட முடியாது. தொடர்ந்து ஓராண்டு, இரண்டு ஆண்டுகளில் செய்து வந்ததாகவும் அந்த மோசடிக்கு உறுதுணையாக அதிகாரிகள் சிலர் இருந்ததாகவும் சொல்லப்படுகிறதே, அவர்களின்மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? 12 லட்சம் ரூபாயை மோசடி செய்தவர் திடீரென்று கைது செய்யப்பட்டு, பின்னர் வெளியே வந்துவிட்டாரே, அது எந்த அடிப்படையில்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் மொத்த மோசடி 12 லட்சம் ரூபாய் அல்ல. 7,42,374 ரூபாய் மோசடி செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதிகாரிகள் இதில் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்கள்மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொண்ட நெல்லை ரைஸ் மில்காரர்கள் பூரணமாக அரைத்து குறிப்பிட்ட சதவிகித அரிசியைக் கொடுத்தார்களா? அப்படிக் குறிப்பிட்ட சதவிகித அளவு கொடுக்காமல் எத்தனை ரைஸ் மில்காரர்கள் இருக்கிறார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அரசாங்கத்திடமிருந்து நெல்லைப் பெற்றுக்கொண்டு, அரைத்து, அரிசியாக மாற்றி இத்தனை சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று ரைஸ்மில்காரர்களுக்கு கூறப்பட்டிருக்கிறது. 64.5 சதவிகிதம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக 64 சதவீதம் என்று வைத்தோம். அந்த அளவு கொடுக்காமல் குறைவாகக் கொடுத்தார்கள். அரசாங்கத்தின் சார்பில் இருக்க வேண்டிய ஸ்டாக்கும் இல்லாமல் குறைந்திருந்த காரணத்தினால்தான் கைது செய்யப்பட்டார். மொத்தம் குறிப்பிட்ட சதவிகித அளவு கொடுக்காத நபர்கள் எத்தனை பேர்கள் என்று கேட்டார்கள். அந்த எண்ணிக்கை பற்றிய தகவல் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

**திரு. மு. ச. சிவசாமி:** தலைவர் அவர்களே, இந்த அரிசி ஆலை உரிமையாளர் யார் என்பதை இந்த மன்றம் அறியலாமா? யார் பொறுப்பில் கைது செய்யப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, கைது செய்யப்பட்டவருடைய பெயர் திரு. ஓ. எஸ். சண்முகவேலு. அவர் உயர்நீதிமன்றத்தால் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

### விருதுநகர் பள்ளிகளில் மதிய உணவுக்கான அரிசி

*542. வினா—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு உணவு, வரி-வணிகத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் 1968 ஆகஸ்ட் மாதத்தில், பள்ளிகளில் மதிய உணவுக்காகப் போடப்பட்டு வந்த அரிசி நிறுத்தப்பட்டதா?

(இ) ஆம் எனின், அதன் காரணம் என்ன?

(உ) அதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:**

(அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.





**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, விருதுநகரில் பள்ளிகளில் மதிய உணவுக்காகப் போடப்பட்ட அரிசி நிறுத்தப்பட்டதா? அந்தக் குறிப்பிட்ட மாதத்தில் இல்லாமல் போனாலும், அதற்கு முன்னாலாவது அல்லது பின்னாலாவது போடப்படவில்லையா? ஆம் என்றால் என்ன காரணம்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின்படி ஆகஸ்ட் மாதத்தில் 75 குவிண்டால் அரிசி அந்த ஊராட்சிமன்றங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மற்ற விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

### பால்பொடி தயாரிப்பு

*543 வினா—**திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பால்பொடி ( Milk Powder ) தயார் செய்யும் தொழிற்சாலை ஒன்று மதுரை பால் பண்ணையில் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:**

ஆம்.

**திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, பால்பவுடர் தொழிற்சாலையை அமைக்கப்போவது சர்க்கார் துறையிலா அல்லது தனியார் துறையிலா? இதற்கான கெபாசிட்டி என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, சர்க்கார்தான் தொடங்க இருக்கிறது. இதற்கு மொத்தம் 21 லட்சம் ரூபாய் செலவாகும்.

### *Firing of pellets near Puduchattiram*

*529 Q.—THIRU N. S. V. CHITHAN:
THIRU R. KARUPPIAH: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Deputy Inspector-General of Police, C.I.D., enquired into the firing of pellets near Puduchattiram about 29th October 1969; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:**

(அ) ஆம்.

(இ) முயல் வேட்டையாடிப் பழக்கப்பட்ட அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர், இந்த நிகழ்ச்சிக்குக் காரணமாயிருந்தார் என்று புலனாய்விலிருந்து தெரியவந்தது. அவர், ஒரு முயலைக் குறிவைத்துக் கொண்டிருந்தபோது, திருச்சிராப்பள்ளி செல்லும் 153 என் விரைவு ரயில் வண்டி அவ்வழியைக் கடந்து சென்றது.

எஸ்.பி.எம்.எல். துப்பாக்கியிலிருந்து வெளிவந்த ரவைக்குண்டுகள் ரயில் வண்டியையும் அதிலிருந்த ரயில் பணியாளர்களையும் தாக்கின. இந்தச் துப்பாக்கிச் சூட்டில் எந்தவிதமான உள் நோக்கமும் இல்லை. குற்றவாளி துப்பாக்கியைக் கவனக்குறைவாகப் பயன்படுத்தியதற்காக பறங்கிப்பேட்டை குற்றத்துறைத் துணை நீதிபதி அவருக்கு ரூ. 50 அபராதம் விதித்தார்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் எத்தனை பேர் காயம் பட்டார்கள் ? அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது துப்பாக்கிப் பிரயோகம் அல்ல. முயலுக்கு குறி வைத்தார், அது ரயிலுக்குப் போனது. இதனால் ரயில் டிரைவருக்கும் பயர்மேன் இரண்டு பேர்களுக்கும் சிறு காயம் ஏற்பட்டது. அவர்களுக்கு நஷ்ட ஈடு எதுவும் தரப்படவில்லை.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, இது போன்ற நிகழ்ச்சிகள் இனிமேல் ஏற்படாமலிருப்பதற்காக அரசு முன் ஏற்பாடுகள் ஏதாவது செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, துப்பாக்கி லைசென்ஸ் பெற்றிருப்பவர்கள் ஒழுங்காகக் குறி பார்ப்பதுதான் தக்க ஏற்பாடு.

### *Betting on New York Cotton*

* 530 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state whether any special drive to check betting on New York Cotton is under taken by the Madras City Police?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:**

ஆம்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, நியூயார்க் பருத்தியின்பேரால் நடத்தப்படும் சூதாட்டத்தினால் பல பேர்கள் கெட்டுப் போய்விட்டார்கள். ஆகையால் இதை வன்மையாகத் தடுப்பதற்கு அதிகமான கவனத்தை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இதற்கு காவல் துறையில் தனிப்பிரிவுகள் அமைக்கப்பட்டு இந்தச் சூதாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்றுதான் முன்பு முயற்சிகள் எடுக்கப்பட்டன. கலைக்கப்பட்ட தனிப் பிரிவை மீண்டும் ஏற்படுத்துவதன் அடிப்படையிலேயும், மீண்டும் விழிப்பாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலேயும் போலீஸ் கமிஷனர் அறிவுறுத்தப்பட்டு, அவரும் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.





**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்த காட்டன் மார்க்கெட் சூதாட்டத்தைத் தடுப்பதற்கு இப்போது தனியான ஒரு பிரிவையே ஏற்படுத்தியிருந்தாலும், பகிரங்கமாக ராசி பலன் என்ற பெயராலே, எதிர்காலம் என்ற பெயராலே 5 பைசா வெளியீடு வருவதும் முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? மேலும் தீவிரமான நடவடிக்கை எடுக்க, மேலும் பல நடவடிக்கைகளை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு மேலும் என்ன? மேலும் மேலும் மேலும் தீவிர முயற்சி எடுக்கப்படும்.

**திரு. கே.விநாயகம்:** பஞ்சு விலைகள் வைத்து சூதாடுகிற போக்கு மூன்றாண்டுகளுக்கு முன்னாலே அதிகமாக இருந்தது, பின்னர், ஒழிக்கப்பட்டது. திரும்பவும் அதிகமாகத்துவங்கியிருக்கிறது. சாக்பீசில் ரோடுகளில் எழுதுகிறார்கள். இதைப் போலீஸ் அதிகாரிகள் விட்டிருக்கிறார்களே, இதைக் கண்டுபிடிக்க ஸ்பெஷல் விங் போட்டாலும் தீவிர வேறு நடவடிக்கைகளையும் எடுக்க உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இது பற்றி இப்போதுதான் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. காவல்துறை அதிகாரிகளுடன் கலந்து பேசி தக்க முடிவு எடுக்கப்படும்.

**திரு. கே. போஜன்:** நியுயார்க் காட்டன் மார்க்கெட்டிங் பெட்டிங் போல குதிரைப் பந்தயத்திலும் பலர் பெட் கட்டி அழிகிறார்களே, குதிரைப் பந்தயத்தையும் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** குதிரைப் பந்தயத்தை நீக்கிவிட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் கொள்கை. ஆனால் மாநில அளவில் இதை நாம் நிறுத்திவிட்டால் இந்த மாநிலத்திற்குக் கிடைத்துக்கொண்டிருக்கிற வருமானம் வேறு மாநிலத்திற்குத்தான் செல்லக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே இது அகில இந்திய ரீதியில் தடுக்கப்பட வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தின் கொள்கை. ஆகவே இந்திய சர்க்கார் இதுபற்றி ஒரு முடிவு எடுத்தால்தான் அவர்களைக் காப்பாற்ற முடியும்.

**திரு. மு. ச. சிவசாமி:** சாதாரண ஜனங்கள் பருத்தி சூதாட்டத்தில் ஈடுபடுவது பத்திரிகைகளில் வருகிற நியுயார்க் காட்டன்விலை பற்றிய புள்ளிவிவரங்களைக்கொண்டுதான். மக்களுக்கு அதன் விலை இன்னதென்று தெரியாத வகையில், பத்திரிகையில் அந்தப் புள்ளிவிவரம் போடாதிருக்க தக்க வழிவகை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பத்திரிகையில் புள்ளிவிவரம் போடுவதைத் தடுக்க எந்தவிதமான வழியும் இல்லை

## படாளத்தில் போலீஸ் அவுட் போஸ்ட்.

* 531 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் வட்டத்தில் படாளத்தில் போலீஸ் O.P. திறக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:**

இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** படாளம் ஒரு தொழிற்சாலைப் பகுதியாகையால் ஆலை நிர்வாகத்தினர் இனமாக ஒரு கட்டிடம் கட்டித் தர முன் வந்தால் ஒரு அவுட் போஸ்ட் போலீஸ் ஸ்டேஷன் ஏற்படுத்த அரசு முன் வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படிக் கொடுத்த பிறகு வேண்டுமானால் அதைப்பற்றி யோசிக்கலாம்.

## Sub-Court for Kancheepuram.

* 544 Q.—THIRU K. VINAYAKAM :
THIRU V. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether a sub-court has been opened in Kancheepuram, Chingleput District; and

(b) the reason therefor?

**மாண்புமிகு. திரு. செ. மாதவன்:**

(அ) ஆம்.

(இ) தலைமைத் துணை நீதிமன்றம், கூடுதல் துணை நீதிமன்றம் என்று செங்கற்பட்டில் இரண்டு துணை நீதிமன்றங்கள் இருந்தன. செங்கற்பட்டு, பூவிருந்தவல்லி, காஞ்சிபுரம், திருவள்ளூர், திருத்தணி முன்சீப்களடங்கிய செங்கற்பட்டு மாவட்டம் முழுவதிலும் அவற்றிற்கு அதிகாரவரம்பு உண்டு. இந்த நீதிமன்றங்களில் பல வழக்குகள் முடிவு பெறுமலேயே இருந்தன. பணி முழுவதையும் இரண்டு துணை நீதிபதிகளால் கவனிக்க இயலவில்லை, அதன் விளைவாக, கூடுதல் துணை நீதிபதி ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை பெரிதும் உணரப்பட்டது. வழக்காடும் பொதுமக்களின் நலனுக்காகவும், வளர்ந்துவரும் காஞ்சிபுரம் நகரத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டும் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள துணை நீதிமன்றத்திற்கு கூடுதல் துணை நீதிபதி ஒருவரை நியமிக்க ஒப்பளிப்பு வழங்குவதற்குப் பதிலாக, காஞ்சிபுரம், திருத்தணி, திருவள்ளூர் முன்சீப்கள் மீது அதிகார வரம்புள்ள வகையில் காஞ்சிபுரம் நகரில் துணை நீதிமன்றம் ஒன்றை அமைக்க 1969 அக்டோபர் திங்களில் அரசு முடிவு செய்தது. காஞ்சிபுரத்திலுள்ள துணை நீதிமன்றம் 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5-ம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது.



THIRU K. VINAYAKAM: After the opening of the sub-court at Canjeevaram, the number of cases are not so much as to justify its existence. That is the complaint of the Judge himself. What steps are bting taken by Government so as to justify it or make it a viable unit? Will the Government extend its area of operation by including one more taluk under the jurisdicon of that Court?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாவட்ட நீதிபதிகளின் பரிந்துரையின் மேல் உயர் நீதிமன்றம் வருகிற வழக்குகளைக் கணக்குப்பார்த்துதான் புதியதாக துணை நீதிமன்றம் ஏற்படுத்துகிறோம். வேலை இல்லை என்று தெரிந்தால் அதை எடுத்துவிடுவோம்.

## அரக்கோணத்தில் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலை.

* 545 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரத்தில் ரஷ்ய நாட்டு ஒத்துழைப்புடன் ஸ்டீல் காஸ்டிங் பிளான்ட் ( steel casting plant )தொழிற்சாலை நிறுவும் வேலை எந்த நிலையில் உள்ளது?

(இ) மேற்படி தொழிற்சாலைக்கான கட்டடம், இயந்திர சாதனங்களுக்காக ஆரம்ப முதல் இன்று வரையில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(உ) எத்தனை பொறியியல் வல்லுநர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:**

(அ) இத்தொழிற்சாலைக்கு வேண்டிய நிலம் கையகப்படுத்தப்பட்டு, இத்திட்டத்திற்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் மின்சக்தி வழங்க உறுதி தந்துள்ளது. தனித் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

பொதுச் சுகாதாரப் பொறியியல் பணித்துறை, நீர் வழங்கு வசதிகள் செய்து தந்துள்ளது. தேவைப்படும் மேல் நிலைத் தொட்டிகளும் சேமிப்புத் தொட்டிகளும் கட்டப்பட்டுள்ளன. தொழிற்சாலைப் பகுதி வரை கிளை-இருப்புப்பாதை அமைக்கப்பட்டுள்ளது; அதன் வழி வண்டிகள் சென்று வருகின்றன.

இயந்திரங்கள், சாதனங்களில் 90 சத விகிதம், தொழிற்சாலைப் பகுதியை வந்தடைந்துள்ளது. உள் நாட்டில் உற்பத்தியான கருவிகளும் வாங்கப்படுகின்றன.

பல்வேறு கட்டிட வேலைகள் நடந்தேறி வருகின்றன. வேலையினங்களில் பல முடிவடைந்துள்ளன.

(இ) இத்தொழிற்சாலைக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 7 கோடியில் இதுவரை ரூ. 163.56 லட்சம் இதற்காகச் செலவிடப்பட்டுள்ளது.

(உ) தொடர் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலைக்காக 15 தொழில் நுட்பப் பொறியாளர்களும் 22 கட்டிடப் பொறியாளர்களும் வேலையிலமர்த்தப்பட்டுள்ளனர்.

DR. H. V. HANDE: May I know whether the capital cost per tonne of production compares favourably with other steel casting plants in India? Is it not a fact that there is increase in the capital cost per tonne after the construction has commenced and the plant started working? Is it not a fact that there is a report by Dastur & Company or somebody else that the cost per tonne is much more than similar factories in India?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களின் விலையைப் பற்றி திட்டத்தைத் தொடங்கிய காலத்திலேயே ஆராய்ந்திருக்கிறார்கள். அப்போது லாபகரமாக நடக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. டீ வால்யுவேஷன் செய்த காரணத்தினால் விலைகள் அதிகமாகப்போய்விட்டன. இதன் காரணமாக உற்பத்திச் செலவும் கூடலாம் என்ற நிலை இருக்கிறது. பொதுவாக லாபமாக நடைபெற முயற்சி எடுக்கப்படுகிறது.

*திரு. இல. பலராமன்:* இந்தத் திட்டத்தை ஏற்படுத்தியபோது எந்தக் காலத்திற்குள் முடியவேண்டுமென்று திட்டமிடப்பட்டது? எப்போது முடியும்? இரும்பின் விலை என்னவாக இருக்கும் என்பதுபற்றி தோராயக் கணக்கு கொடுக்க முடியுமா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* போதுமான இரும்பு, உருக்குப் பொருள்கள் கிடைக்காத காரணத்தினால்தான் தாமதம் ஆகிறது. இந்த மாத இறுதிக்குள் நமக்குத் தேவையானவற்றை மத்திய அரசு ஒதுக்கித்தரும் என்று எதிர்பார்க்கிறோம். ஒதுக்கித் தந்தால் 1970 டிசம்பர் மாத இறுதிக்குள் வேலை முடிந்துவிடும். 90 சத வீதம் இயந்திர சாதனங்கள் ஏற்கனவே வந்துவிட்டன.

*திரு. எம். பூபதி:* ரஷ்ய நாட்டு ஒத்துழைப்புடன் இது ஆரம்பிக்க இருப்பதாக அமைச்சர் சொன்னார்களே, ரஷ்ய நாட்டார் என்ன என்ன உதவிகளைச் செய்கிறார்கள்?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* ரஷ்ய நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறோம். இயந்திரங்களை (deferred payment) முறையில் கொடுத்திருக்கிறார்கள். அந்நாட்டு நிபுணர்கள் இங்கே தங்கிக்கொண்டு அவற்றை அமைத்துக்கொடுக்கவும் இருக்கிறார்கள்.

### படித்தும் வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு

*548 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

படித்துவிட்டு வேலையில்லாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு வேலை கொடுக்க சர்க்காரின் திட்டமென்ன?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* இந்த வினா பொதுவான வேலைவாய்ப்புக் கொள்கை பற்றியதாகும். தேசியத்தன்மை





வாய்ந்த இச்சிக்கலை பொருளாதாரக் கொள்கையிலிருந்தும் அரசிறை வருவாய்க்குரிய கொள்கையிலிருந்தும் தனித்துப் பிரித்துப் பரிசீலனை செய்ய முடியாது. வேலைவாய்ப்புகள் பொருளாதார வளர்ச்சியுடன் இறுகப் பின்னிப் பிணைந்துள்ளவையாகும். படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்கள் சிக்கல் இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மிகவும் கடுமையானதாகும். ஆயினும் இது பொதுச் சிக்கலின் ஒருங்கிணைந்த பகுதிதான். சமுதாய-பொருளாதார அமைப்பு பொதுவாக மேம்பாடுற்றால்தான் இச்சிக்கலுக்கு மனநிறைவு தரும் வகையில் தீர்வு காண முடியும்.

வேலையில்லாத் திண்டாட்ட நிலையை மத்திய மாநில அரசுகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன. வருங்காலத்தில் இச்சிக்கல் முழுவதும் ஒழிக்கப்படாதபோதிலும் கணிசமான அளவுக்குக் குறைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*திரு. வி. கே. கோதண்டராமன்:* சார், இப்பொழுது திட்டம் இல்லையென்று சொன்னாலும் இதுபோன்ற வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை முழுக்க முழுக்க ஒழிக்கக்கூடிய அளவுக்கு முழுக்க முழுக்க திருப்திசெய்யக்கூடிய நிலைமை இல்லையென்றாலும் ஒரு அளவுக்கு அவர்களுக்கு வாழ்க்கை வசதிக்காக வேண்டி பெரும் வருவாய் இருக்கக் கூடியவர்கள்மீது தனியாக செஸ் போட்டு இதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* திட்டம் இல்லையென்று நான் சொல்லவில்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டுமானால் ஏராளமான தொழில்கள் பெருகவேண்டும். சமுதாயத்தினுடைய முன்னேற்றத்தின் அடிப்படையில் தான் அது முடியும். மொத்த தேசிய பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டால் தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்பது அரசாங்கத்தின் கருத்தாகும். வேலையில்லாத திண்டாட்டம் நாட்டிலே இருப்பதற்காக ஏதாவது வரிபோட்டு, அவர்களுக்குச் சம்பளம் கொடுத்தால் வேலையில்லாத் திண்டாட்டம் போய்விடும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இல்லை.

THIRU K. VINAYAKAM: Sir, will the Minister be pleased to state to the House what exactly is the number of the educated unemployed in the following categories : University Graduates both Graduates and research scholars, engineers, doctors, and S.S.L.C. passed candidates—I know it is not possible to give this kind of statistics so soon—Will the Government come forward to give at least monthly doles to the unemployed to keep them alive instead of making them go about here and there trying their luck with the Employment Exchange and employers, and will the Government subsidise their living till they manage to get jobs; on condition that after employment they should repay the money that the Government given by way of help?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் முன்னாலேயே சொன்னேன். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காகப் பெருமுயற்சிகள் எடுக்கவேண்டும். அதற்காக நாம் நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டிருக்கிறோம். சிறு தொழில்கள் ஏராளமாகத் தொடங்கினால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்று அரசாங்கம் உணர்ந்து அதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தடுப்பதற்கு அரசாங்க நிதியிலிருந்து பணம் கொடுத்தால் வேலையில்லாத் திண்டாட்டம் எப்படி போய்விடும் என்று எனக்குப் புரியவில்லை. அன் எம்ப்ளாய்மெண்ட் இன்ஷூரன்ஸ் ஸ்கீம் என்று மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளிலே இருப்பதாகத் தெரிகிறது. அதுபோன்று மத்திய அரசு அமலாக்க வேண்டுமென்று தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, குறிப்பிட்ட சில வேலைகளுக்கே செல்லவேண்டுமென்ற எண்ணம் இருந்து கொண்டிருக்கிற காரணத்தால்தான் வேலையில்லாத் திண்டாட்டத் தின்தோற்றம் மிகப் பெரிதாகத் தெரிகிறது என்பது அரசினுடைய கருத்தா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படிப்பட்ட கருத்தும் சமுதாய மாறுபாடு ஏற்படும்பொழுது ஏற்படத்தான் செய்யும். இன்றைக்கு தமிழ்நாட்டிலே பதிந்து வைத்திருக்கின்ற வேலையில்லாத நபர்களின் எண்ணிக்கை பள்ளியிறுதி வகுப்பு, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு பெற்றவர்களின் எண்ணிக்கைதான் அதிகமாக இருக்கிறது. புதிய சமுதாயம் அமைந்துவருகின்றபொழுது புதிய வேலை வாய்ப்புகள் கொடுப்பதும் நியாயம். அரசாங்கம் அதை உணர்ந்து அந்த வகையிலே முயற்சி எடுத்துவருகிறது. நம்முடைய நாட்டிலேதான அந்த நிலை. முன்னேற்றமடைந்துள்ள பல நாடுகளில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. திரு. பூவராகன் அவர்கள்கூட மிகவும் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில்கூட இருக்கிறது என்று சொன்னார்கள். அமெரிக்காவிலே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கத்தான் செய்கிறது, பிரிட்டனிலும் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கத்தான் செய்கிறது, ஜப்பானிலும் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. அங்கே உள்ள சதவிகிதம் குறைவு. நம்முடைய நாட்டிலே சதவிகிதம் அதிகம். முன்னேற்றம் அடைந்துவருகின்ற நாடுகளிலே பிரச்சனை தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பணவீக்கம், விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவை கடந்த 23 ஆண்டுக்கால இந்திய அரசினுடைய புரையோடிப்போன பொருளாதாரக் கொள்கை என்பதை அரசு அறியுமா? ஆகவே வளர்ந்துவருகின்ற இந்தப் பிரச்சினையை நிவர்த்திப்பதற்கு மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்ற தன்மை





**ஏற்பட்டால்தான் இந்தப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட முடியும என்பதை அரசு ஏற்றுக்கொள்கிறதா?**

**மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது ஒரு பெரிய அரசியல் போராட்டத் தத்துவம்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா 546 அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

*Workers of Standard Motor Products.*

*547 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the auto workers employed in Standard Motor Products India, Madras went on strike during the months October and November 1969; and

(*b*) if so, for what reasons?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** (அ) ஆம். சென்னை இந்திய ஸ்டாண்டர்டு மோட்டார் பிராடக்ட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 2,000 தொழிலாளர்கள் 12—9—1969 முதல் வேலைநிறுத்தம் செய்தனர்.

(இ) இந்திய ஸ்டாண்டர்டு மோட்டார் பிராடக்ட்ஸ் நிறுவனத்தின் தொழிலாளர் சங்கம் தயாரித்த 1968-ஆம் ஆண்டிற்குரிய பூரிப்பு ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைப் பட்டியலை ஆதரித்து தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர்.

THIRU K. VINAYAKAM : Were their grievances met by the management, what is the position now obtaining in the factory, were all the people who struck work got back employment or were any striking worktrs victimised ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** மேற்கண்ட தொழில் தகராறு பற்றி தொழிலாளர் நலத்துறை ஆராய்ந்ததற்குப் பின்னால் அதை நடுவர் தீர்ப்புக்கு அனுப்பினோம். அதற்குப் பின்னாலே வேலைநிறுத்தம் தொடர்ந்து நீடித்துக்கொண்டே இருந்தது. தொழிலாளர் நல அமைச்சராகிய நானும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் தொழிலாளர் பிரதிநிதிகளையும் மற்றும் தொழிலதிபர்களையும் வரவழைத்துப் பேசிக் கடைசியாக தீர்வு கண்டு அவர்கள் மீண்டும் வேலைக்குப் போனார்கள். தற்போது பிரச்னை நல்லமுறையிலே சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிட்டது.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, வண்டலூர் மோட்டார் கம்பெனித் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தவுடனே அரசு தலையிட்டு வேலை செய்யுங்கள். நடுவர் தீர்ப்புக்கு விடலாம், வேலைக்குப் போகவேண்டும் என்று கூறியது. ஆனால் மறுபடியும் தொடர்ந்து வேலைக்குப் போக வேண்டாமென்று ஒரு அரசியல் கட்சி தூண்டியதால்தான் அவர்கள் வேலைக்குப் போகாமல் இருந்தார்கள் என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா? அரசாங்கம் தலையிட்டதற்குப் பிறகு வேலைநிறுத்தம் முடிந்து தொழிலாளர்கள் வேலையிழப்பு நாட்கள் இருக்கக்கூடாது, வேலைக்குச் செல்ல

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, 12ஆம் தேதி அவர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். 19ஆம் தேதிக்குள் அரசாங்கம் தலையிட்டு நடுவர் தீர்ப்பிற்கு விடலாம், வேலையிழப்பு நாட்கள் இருக்கக் கூடாது, வேலைக்குச் செல்ல வேண்டும் என்று முயற்சிகள் எடுத்தோம். அதற்குப் பிறகும் தொழிலாளர்கள் வேலைக்குப் போகாமல் இருந்தார்கள். அரசாங்கம் தலையிட்டு அவர்களைக் கூப்பிட்டுக் கலந்துபேசி வேலைக்குப் போக வேண்டுமென்று சொன்னோம். அரசாங்கம் முயற்சி எடுத்ததால் அவர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினார்கள்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** இரண்டாயிரம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளதை தமிழகத்து அனைத்துக் கட்சிகளும் அவர்களுடைய கோரிக்கை நியாயம் என்று ஆதரவு கொடுக்கக் கூடிய காலகட்டத்திலே டைரக்டர் வெளிநாட்டிலிருந்து வருகின்ற வரையில் வேலை நிறுத்தம் என்று செய்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகளில் மிக முக்கியமான கோரிக்கை போனஸ் 19 சத வீதம் கொடுக்கவேண்டும் என்பது. அது எந்த அளவுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** அவர் வெளிநாட்டுக்குப் போயிருந்தார் என்று சொல்வது தவறு; உடல்நலம் சரியில்லாததால் சிகிச்சைக்காகப் போயிருக்கிறார். அவர்கள் முதலமைச்சர் அவர்களையும் என்னையும் தனித்தனியாக சந்தித்துப் பேசி ஏற்றுக் கொண்டார்கள். தொழிலாளர்களும் ஏற்றுக்கொண்டார்கள். ஏறக்குறைய அந்தப் பிரச்னை முடிகிற சூழ்நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : May I know which is the political party that was instigating this trouble in the factory?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** கேள்வி கேட்கிற உறுப்பினர் அவர்களுக்கே அது புரியும் என்ற காரணத்தினாலே நான் பதில் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) அறிவிப்பு.

### சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மறுதினம் எடுத்துக்கொள்ளப் படுவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 42-வது விதியின்கீழ் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆ. கு. சுப்பையா, திரு டி. மார்டின், திரு. ஏ. அ. சுப்பராஜா ஆகியோர் தனித்தனியே ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





## (3) 1969-70ம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கை— அளித்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 1969-70ம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கையை இந்த மன்றத்திலே அளிப்பார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1969–70-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின்முன் வைக்கவேண்டி உங்கள் முன் எழுந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான விவர அறிக்கை ஒன்று மன்றத்தின்கண் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மானியக் கோரிக்கைகள் மொத்தம் ரூ. 18.50 கோடி ஆகும். இதில் ரூ. 7.78 கோடி வருவாய்க் கணக்கின்பாற்படும். வழக்கம் போல் இத்துணை மதிப்பீடுகள் வெவ்வேறு தலைப்புகளின் கீழ் தற்போதுள்ள நிதி ஒதுக்கத்திற்குமேல் கூடுதலாக ஆகியுள்ள செலவினத்தை எதிரொலிக்கின்றன. செலவினத்தில் ஏற்பட்டுள்ள இவ்வுயர்வுகளில் பெரும்பாலானவை இம் மன்றத்தின் முன் வரவு-செலவுத் திட்டத்தோடுகூட வைக்கப்பட்ட திருத்த மதிப்பீடுகளில் ஏற்கெனவே காட்டப்பட்டுள்ளன. வெவ்வேறு துறைகள் இதுகாறும் செய்துள்ள செலவினத்தைப் பற்றி நாளது தேதி வரையில் ஆய்வு செய்து, இன்றியமையாத செலவின் உயர்வுகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது துணை மதிப்பீடுகளை இப் பேரவையின் முன் வைத்த பின்னர் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பல "புதுப் பணித்" திட்டங்களும் தற்போதைய துணை மதிப்பீடுகளின் தொகுப்பில் அடங்கும்.

தற்போதைய, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மிகப் பெரிய தனிச் செலவினம், சாட்டிய நிதி ஒதுக்கத்தின் பான்மையிலுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட வழிவகை முன் பணங்களை அவ்வங்கிக்குத் திருப்பிச் செலுத்துவதற்காக ரூ. 9.59 கோடி வகை செய்யப்பட்டுள்ளதுதான் அந்த நிதி ஒதுக்கமாகும். கடந்த ஆண்டில் இறுதித் துணை மதிப்பீடுகளை இப்பேரவையின்முன் வைத்து நான் ஆற்றிய உரையில், இத்தலைப்பின் கீழ் சாட்டப்பட்ட பெரிய நிதி ஒதுக்கங்களைச் செய்ய வேண்டிய தேவையைப்பற்றி சற்று விரிவாக விளக்கியிருந்தேன். இப்போது வேண்டப்படும் இத்தொகைகள் நமது நிதி வாயில்களில் எவ்வித அரிப்பும் ஏற்பட்டு விட்டதாக எதிரொலிக்காவென்றும் இந்திய ரிசர்வ் வங்கிக்கு அன்றாடம் திருப்பிச் செலுத்தப்படும் தொகைகள் முறைப்படிச் செய்யப்படுகிற நிதி ஒதுக்கத்தின் வாயிலாக ஈடு செய்யப்படவேண்டுமென்கிற வரவு செலவுத் திட்ட மரபு முறையை அனுசரிப்பதற்காகவே இந்த நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்யப்படுகி-தெனவும் நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இத்தொகைகளில் பெரும்பாலானவற்றிற்கு நிகராக நமக்கு வருவாய் கிட்டியுள்ளது. எனவே, இத்தலைப்பின் கீழ் வேண்டப்படுகிற நிதி ஒதுக்கம்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 மார்ச் 25

அரசின் நிதி வாயில்கள் மீது அத்தகைய கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்படும் நிகர விளைவைக் குறிக்கிறது என்று சொல்வதைவிட, இந்திய ரிசர்வ் வங்கியிடம் நம் கணக்கிலுள்ள ரொக்க இருப்பில் ஏற்படும் அன்றாட ஏற்றத்தாழ்வுகளின் விளைவை இது எதிரொலிக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

தற்போதைய துணை மதிப்பீட்டின்கண் உள்ள மற்றொரு பெரிய செலவினத்தைப் பற்றியும் நான் இம்மன்றத்தில் பல தடவைகளில் குறிப்பிட்டுள்ளேன். இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்கான செலவினத்துக்காக 31-வது கோரிக்கையின்கீழ் சேர்க்கப்பட்டுள்ள ரூ. 1.28 கோடி அளவிலான நிதி ஒதுக்கத்தைப் பற்றியே நான் குறிப்பிடுகிறேன். வறட்சித் துயர் தணிப்புப் பணிகள் குறித்துச் செய்யப்பட்டுள்ள மொத்தச் செலவினம் ரூ. 18 கோடி அளவில் உள்ளதென்றும், இதில் ரூ. 14.25 கோடி அளவிற்கு இந்திய அரசிடமிருந்து கடன்கள், மானியங்கள் வாயிலாகப் பெறப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதற்குமுன், இம் மன்றத்தின் நாட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ள, தற்போதைய துணை மதிப்பீடுகளின் வாயிலாக வகை செய்யப்பட்டுள்ள அரசின் ஏனைய பிற முடிவுகளில் அடியிற் குறிப்பிட்டுள்ளவையும் அடங்கும் :—

போக்குவரத்துத் துறையின் உயர் அதிகாரக் குழுவினுடைய பரிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு அத்துறையின் தொழிலாளர்களுக்கு நாட்படி வீதங்கள், இரவுத் தங்கல் படி முதலியவற்றை உயர்த்துவதற்காக 30-வது கோரிக்கையில் ரூ 40.59 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மற்றும் தமிழ்நாட்டுக் காவல் படையின் பணி நிலைமைகள், அலுவல்கள், பொறுப்புகள் முதலியன பற்றி ஆய்வு செய்யவிருக்கும் காவல் துறை ஆணைக் குழுவை நிறுவுவதற்குரிய செலவினத்திற்காக 12-வது மானியக் கோரிக்கையின் கீழ் இம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்பட்டுள்ளது. இம் மாநிலத்தின் வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஆரம்ப நிலவள வங்கிகளைத் திறக்கவேண்டுமென்கிற அரசின் முடிவைப் பற்றி நான் ஏற்கெனவே இம்மன்றத்தின் நாட்டத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். அது இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மற்றொரு திட்டமாகும். அத்தகைய 60 வங்கிகளுக்குப் பங்கு மூலதன உதவி அளிக்கும் வகையில் தொகை செலுத்துவதற்காக நடப்பாண்டில் ரூ. 15 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் கண்ணுறலாம்.

இம் மாநிலத்திலுள்ள சிவில், குற்றவியல் நீதி மன்றங்களின் அதிகார வரம்பைச் சீரமைக்க வேண்டும் என்கிற நெடுநாளைய தேவையை நிறைவேற்றும்பொருட்டு, மாநிலம் எங்கணுமுள்ள நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு குறித்த அடங்கல் ஆய்வு ஒன்றை நடத்துவதற்கு அரசு ஒரு குழுவினை அமைத்துள்ளது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருக்கலாம். 10-வது



1970 மார்ச் 25] [திரு. கே. ஏ. மதியழகன்]

மானியத்தின்கீழ் அடையாள நிதி ஒதுக்கம் செய்வதன் வாயிலாக இத் திட்டத்திற்குச் சட்ட மன்றத்தின் முறையான ஒப்புதல் வேண்டப்படுகிறது.

இம் மாநிலத்திலுள்ள சட்ட மன்றப் பேரவைத் தொகுதிகள் அனைத்திற்கும் உரிய வாக்காளர் பட்டியல்களைத் திருத்தி அச்சிடுவதற்காக இத் துணை மதிப்பீடுகளின் வாயிலாக நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டிருப்பது மற்றொரு பெரிய செலவினமாகும். இந்தியத் தேர்தல் ஆணைக் குழுவின் விருப்பத்திற்கிணங்க வாக்காளர்பட்டியல்களைத் திருத்தும் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக 7-வது மானியத்தின்கீழ் ரூ 25.15 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்திற்காகக் கிண்டியில் இரண்டாவது பாற்பண்ணைத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக 40-வது மானியத்தின்கீழ் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருப்பது குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்களின் நாட்டத்தை ஈர்க்க விரும்புகிறேன். வளர்ந்து வரும் நமது தலைநகரத்திற்குக் கிட்டும் பாலின் அளவைப் பெருக்கி, பால் வழங்கல் நிலையைப் பெரிதும் எளிதாக்குகிற இந்தப் பாற்பண்ணைத் திட்டத்திற்கு ரூ 54.55 லட்சம் மூலதன முதலீடு செய்ய வேண்டியுள்ளது. மாதவரத்தில் கால்நடைத் தீவனக் கலவைத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காக இதே மானியத்தின்கீழ் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கத்தைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். மற்றும், மதுரை பாற்பண்ணைத் திட்டத்தின் வாயிலாகக்கிடைக்கும் உபரிப் பாலை, பால் மாவாக மாற்றும் வகையில், மணி ஒன்றுக்கு 2,000 லிட்டர் பாலை, பால் மாவாக மாற்றும் திறனுள்ள பால் மாவுத் தொழிற்சாலை ஒன்றை ரூ. 21 லட்சம் செலவு மதிப்பீட்டில் நிறுவுவதற்காகவும் இம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

திருத்தி வகுக்கப்பட்டுள்ள குடும்ப நலத் திட்டத்தை நமது மாநிலத்தில் மேலும் 100 வளர்ச்சி வட்டாரங்களுக்கு நீட்டிப்பதற்காக 15-வது மானியத்தின்கீழ் வகை செய்துள்ள நிதி ஒதுக்கத்தைக் கண்ணுறுமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இத் திட்டத்திற்காகும் மொத்தச் செலவை இந்திய அரசு ஏற்கிறது. இத் திட்டத்தின் கீழ் நமது மாநிலத்தில் இது காறும் 225 வளர்ச்சி வட்டாரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள வட்டாரங்களையும் இத் திட்டத்தில் சேர்ப்பதற்கான செயற்குறிப்புகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்கான வண்டிகளை வாங்குவதற்கும், கட்டிடங்களைக் கட்டுவதற்கும் முறையே 15-வது, 42-வது மானியங்களின்கீழ் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்கலாம். 23-வது மானியத்தின்கீழ் அடையாள நிதி ஒதுக்கம் செய்வதன் வாயிலாகச் சட்ட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிற மற்றொரு முக்கிய வளங்கொழு திட்டம்,

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 மார்ச் 25

குழந்தைகள் காப்பகங்களை நிறுவுவதைப் பற்றியதாகும். இக் காப்பகங்கள் பள்ளி செல்லும் நிலையை அடையாத குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் பால் வழங்கும்.

இம் மாநிலத்திலுள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் தூய நன்னீரை இடையீடின்றி வழங்குவதற்கு வகை செய்வதற்காக அரசு மேற்கொண்டிருக்கும் துணிவான திட்டத்தினைப் பற்றி இம் மன்றத்தினர் அறிவர். அத்தகைய ஒரு திட்டத்திற்கு மிகப் பெரிய மூலதன முதலீடு தேவைப்படுகிறது. இத் திட்டத்திற்காகும் செலவை ஏற்பதற்கு இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நடப்பாண்டில் நாம் ரூ. 192 லட்சம் அளவிற்கு உதவி பெற இயன்றது. நாம் நிறைவேற்றக் கருதியுள்ள இப் பெருந் திட்டம் காரணமாக, இப் பணியின் நிறைவேற்றத்தில் ஈடுபட்டுள்ள தொழில் நுட்ப அமைப்புகளில் மேலும் பணியாளர்களை நியமிக்க வேண்டியுள்ளது. இதற்கென 15-வது மானியத்தின்கீழ் தேவையான நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது.

இந்தத் துணை மதிப்பீடுகளில் கண்டுள்ள ஏனைய செயற் குறிப்புகள் பற்றி விவர அறிக்கையில் கொடுத்துள்ள விரிவான குறிப்புகளுக்குமேல், சிறப்பான விளக்கம் ஏதும் தேவையில்லை என்று எண்ணுகிறேன்.

இவை கூறி, இத்துணை மதிப்பீடுகளை இம்மன்றம் ஏற்கு மாறு வேண்டுகிறேன்.

### (4) 1970—71-ஆம் ஆண்டிற்கான நிதிக்கோரிக்கைகள் * மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 26—பாசனம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

“ நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ 9,38,27,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்”.

**திரு. இல. பலராமன்:** தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க—

“ நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,38,27,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்” என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

---

657–782-ம் பக்கங்களில் 2, 3, 4, 5 இணைப்புகளில் கொள்கை விளக்கக் குறிப்புகள் அச்சிடப்பட்டுள்ளன.



1970 மார்ச் 25]

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டம் கடும் வறட்சிப் பகுதியான இப்பகுதியில் ஓடும் குடவனாறு நீரை இப்பகுதிக்கு உபயோகப்படும் முறையில் வேடசந்தூர் அருகில் உள்ள லட்சுமணம்பட்டிக்குப் பக்கத்தில் குடவனாற்றில் அணைகட்ட வேண்டும் என்பதை வற்புறுத்த—

“ நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,38,27,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்” என்ற வெட்டு தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி:** தலைவர் அவர்களே, புதிய நீர்ப் பாசன வசதிகளைச் செய்யவும், மராமத்து செய்யவும் திட்டம் உரு வாக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

“ நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,38,27,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்” என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் ஒரு திட்டம் வைத்து, பாசன நீர்வழி கரை உயர்ந்து, வடிகால் வேலைகளை படிப்படியாக செய்வது குறித்து விவாதிக்க—

“ நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,38,27,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ” என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss about the failure of the Government in not taking up the long pending medium irrigation works in Hosur taluk in view of its backwardness, I move—

"That the allotment of Rs. 9.38.27.800 under Demand No. 26, Irrigation be reduced by Rs. 100."

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, கோவை, பல்லடம் தாலுக்காவில் பாசன வசதியில்லாததால் வருகின்ற மழைத் தண்ணீரை குளம் குட்டைகளில் தேக்குவதற்குப் போது மான குளங்கள் கட்ட வேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

“ நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,38,27,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ” என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், கோவில்பட்டி தாலுக்காவிலுள்ள நம்பிபுரம் கண்மாய்க்கு தண்ணீர் தட்டு ஏற்படாமல் இருக்க வைப்பாற்றில் முதுலாபுரம் பக்கம் ஒரு அணை கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்ள—

“ நிதிக் கோரிக்கை எண் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,38,27,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ” என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,22,15,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

**திரு. ஆ. கு. சுப்பையா:** தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி–பாவாக்கோட்டை சாலை, கட்டான்கோவில்–தலைஞாயிறு சாலைகளை அரசாங்கச் சாலைகளாக மாற்றவேண்டியது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,22,15,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** தலைவர் அவர்களே, மதுரை நகரை அழகுறச் செய்ய "மாமதுரை" திட்டத்தை அமலாக்குவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,22,15,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**DR. H. V. HANDE:** Sir, to discuss the remodelling of the Mofassal Bus Stand at Broadway and the construction of a pucca Bus Stand at Mint, I move—

'That the allotment of Rs. 10,22,15,400 under Demand No. 27 Public Works—Works be reduced by Rs. 10.'

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, நெடுஞ்சாலை—கிராமப் பணிகள் துறையின் பொறுப்பில் உள்ள கட்டிடங்களை பழுதுபார்க்காமல் மிகவும் மோசமாக சில இடங்களில் இருப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,22,15,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, திருமங்கலத்துக்குத் தெற்கே ஜீ.எஸ்.டி.ரோட், நெ. 7-ன் குறுக்கே உள்ள ஆற்றுப்பாலத்தை அகலப்படுத்துவதுபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,22,15,400-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



(இ) நிதிக் கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும்

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"நிதிக் கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,37,25,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**திரு. ஏ. அ. சுப்பராஜா:** தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையின் கீழ் செயல்படும் கருவிகளும் இயந்திர சாதனங்களும் பழுது அடைந்த நிலையில் இருப்பதால் எடுத்த வேலைகள் முடிவடையாமல் இருப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,37,25,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சி. கோவிந்தராஜன்:** தலைவர் அவர்களே, அணைக்கட்டு வேலையில் ஈடுபட்ட தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பாமல் தொடர்ந்து மாநிலம் பூராவும் பொது மராமத்து வேலைகளைக் கவனிக்க இராணுவப் படையைப் போல் வைத்துக்கொள்ளும் அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,37,25,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறைக்கு நவீன இயந்திரச் சாதனங்கள் அளிக்கப்படவேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,37,25,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**DR. H. V. HANDE:** Sir, to discuss the need to do away with the continuance of the category of "work charged" employees and to provincialise the staff for efficient working of the Public Works Department, to ketp pace in accordance with the progressive policies of the day, I move—

'That the allotment of Rs. 4,37,25.700 under Demand No. 28, Public Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100.'

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 8 53,02,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

THIRU N. S. V. CHITHAN : Sir, to discuss policy I move—

'That the allotment of Rs. 8,53,02,500 under Demand No. 41 Capital Outlay on Irrigation be reduced by Rs. 100.'

**திரு. கே. என் குமாரசாமி:** தலைவர் அவர்களே, கோவை, அவிநாசி, பல்லடம் ஆகிய பகுதிகளில் ஆண்டுதோறும் மழை குறைவாகப் பெய்து விவசாயம் பாதிக்கப்படுவதால் பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தை மூன்று தாலுகாவிற்கும் பயன்படும் வகையில் மேற்படித் திட்டத்தை அமலாக்குவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,53,02,5-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, குடியாத்தம் தாலுகாவில், மோர்தாழ அணை, பத்தலபல்லி அணை கட்டுவதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,53,02,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், நாங்குனேரி தாலுகாவிலுள்ள 16 மைல் நீளமுள்ள வடமலையான கால்வாய் செடிகள் முளைத்துத் தூர்ந்துபோய் விட்டதால் இக் கால்வாயைத் தூர் எடுத்து துப்புரவு செய்ய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண்41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,53,02,500-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



(உ) நிதிக் கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள் மூலதனச் செலவு.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள் மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 12,99,95,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

**திரு. ஆர். கருப்பையா:** தலைவர் அவர்களே, பாலக்கரையில் அமைந்துள்ள இருப்புப்பாதை குறுக்கிடும் இடத்தில் (லெவல் கிராஸிங்) ஒரு மேம்பாலம் அமைக்கவேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள் மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,99,95,500-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, அவிநாசி நீர்ப்பாசனத் திட்டத்தை உடனே ஆரம்பிக்க வேண்டும் என்பதுபற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 42—பொதுப்பணிகள் மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 12,99,95,500-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிதிக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைய காலை நிகழ்ச்சிகள் பகல் ஒரு மணி அளவில் முடிவடைந்து மீண்டும் பேரவை மூன்று மணி அளவில் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கைகள் மன்றத்தின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன. ஐந்து கோரிக்கைகளுக்குமாகச் சேர்ந்து ரூ. 45,50,66,900-க்கு இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கின்றன. உறுப்பினர்கள் தங்களது விவாதத்தைத் தொடங்குவதற்கு முன்னதாக முன்னுரையாக சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். அந்தக் கருத்துக்கள் உறுப்பினர்களின் விவாதத்திற்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்குவதில், பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதில், நம் மாநிலம் சிறப்பான சாதனைகளைச் செய்து வருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் பருவ நிலைமைகள் சாதகமாக இல்லை. இருப்பினும் பாசன வாயில்களிலிருந்து நீரை விவேகமாகவும், நியாயமாகவும் தேவைப்படும்

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1970 மார்ச் 25

எல்லாப் பகுதிகளுக்கும் வழங்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. கிடைக்கும் நீரைப் பயன்படுத்த வாய்ப்பிருக்கும் இடங்களில், சாத்தனூர், கிருஷ்ணகிரி அணைக்கட்டுகளில் பின்பற்றப்படுவது போன்று கூடுதல் உணவுப் பயிர்கள் பயிரிடப் பட்டன.

காவிரிக் கழிமுகப் பகுதியிலும், காவிரி-மேட்டூர் திட்டப் பகுதியிலும், இருபோகப் பயிர் விளைவிப்பதன் மூலமும், முதல் போகத்தில் உயர் விளைச்சல் தரும் நெல் ரகத்தை விதைத்தும் புதிய விளைச்சல் முறை செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் வெற்றிகிட்ட, ரூ. 66 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் கல்லணைக் கால்வாய்க்கும் காவிரி கழிமுக ஏற்பாட்டிற்கும் மேம்பாட்டுப் பணிகளை நிறைவேற்றுவதற்கான திட்டத்திற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. பருவமழை தவறியபோதும், அதிகரித்த பாசன வாய்ப்பு மூலம் இருபோகப் பகுதியை பெரிதும் உயர்த்தித் தஞ்சாவூர் கழிமுகப் பகுதியில் தொன்றுதொட்டு பின்பற்றப் பட்டு வந்த சாகுபடி முறையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்த அரசுக்கு இயன்றதைச் செயல்படுத்தியது உண்மையில் பாராட்டுக் குரியதாகும்.

உணவு உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு, புதிய கிணறுகள் தோண்டுவதற்கும் திட்டப் பகுதிகளில் கிணறுகளுக்கு மின்சாரம் வழங்குவதை நீட்டிப்பதற்கும் துரித நடவடிக்கைகள் செய்யப் பட்டன. திட்டப் பகுதிகள் அனைத்திலும் 25 ஏக்கர் தொகுதி வரையில் அரசுச் செலவில் கண்ணிக் கால்வாய்களை அமைக்கும் சலுகை ஆயக்கட்டின் விரைவான மேம்பாட்டிற்காக நீட்டிக்கப் பட்டுள்ளது.

1966, 1967-ம் ஆண்டுகளில் இம்மாநிலத்தில் புயல் ஏற்பட்டது. 1966, நவம்பரில் ஏற்பட்ட புயலினால் செங்கற்பட்டு, வடாற்காடு, தென்ஆற்காடு மாவட்டங்களில் பல பாசன வாயில்கள் பாதிக்கப் பட்டன. 1967 அக்டோபர், டிசம்பரில் ஏற்பட்ட புயலினால் இராமநாதபுரம், திருநெல்வேலி, தஞ்சாவூர் மாவட்டங்களில் கடற்கரைப் பகுதிகள் பாதிக்கப்பட்டன. வளைவுக் கடைகள் அமைப்பதற்கும் ஏரிகளிலுள்ள நீரைக் காப்பதற்கும் மட்டுமன்றி உடைப்புகளை நிரந்தரமாக மூடுவதற்கும் உடனடியாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

1968-ம் ஆண்டு, வறட்சி ஆண்டாகும். இம்மாநிலத்தில் பெரும் பாலும் எல்லா மாவட்டங்களிலும் வறட்சித் துயர் தணிப்புப் பணிகள் 2388 நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். தூர் வாரிப் பண்படுத்தும் பணிகளுக்காக மொத்தம் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 198.02 லட்சம் என்றாலும், பொதுப் பணித்துறையினர் ரூ. 258.53 லட்சம் செலவிட்டனர். துயர் தணிப்புப் பணிகளில் குடிநீர்த் திட்டங்களுக்கு 5 கோடியும், சிறு பாசன வேலைகளுக்கு 2 கோடியும், சாலைகளுக்கு 2½ கோடியும், மண்வளப் பாதுகாப்புக்கு 20 லட்சமும், குடிமராமத்துக்கு 10 லட்சமும், பாறைகள்



1970 மார்ச் 25] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

உடைத்தல் பாறை துளைக்கும் கருவிகளுக்கு 60 லட்சமும் ஆக 13 கோடி ரூபாய் சென்ற ஒரு ஆண்டில் மட்டும் செலவிடப்பட்டுள்ளது. நல்ல மழையின் காரணமாக இம்மாநிலத்தின் பல பகுதிகளில் பருவ நிலைமைகள் மேம்பட்டன, துயர் தணிப்புப் பணிகளைத் தொடரும் அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

பழைய பாசன ஏற்பாடுகளை மிகத் திறமையான செயல்படு நிலைமைகளின் கீழ்க்கொண்டு வருவதற்காக அமராவதி தாமிரவருணி, காவிரிக் கால்வாய்களில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப் பட்டன. பல கால்வாய்களில் சீரமைப்புப் பணி நடந்து வருகின்றது; விரைவில் முடிக்கப்படும். 49 கோடி ரூபாய் செலவில் தஞ்சாவூர் கழிமுகப் பகுதியை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு உலக வங்கியின் நாட்டத்தை அரசு ஈர்த்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். காவிரி கழிமுகப் பகுதிக்கு இத்தகைய அடங்கல் திட்டம் வகுக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்; பாசன வசதிகளை மேம்படுத்துவதில் அரசு எந்த அளவிற்கு உண்மையாகவே அக்கறை கொண்டுள்ளது என்பதற்கு இது எடுத்துக் காட்டாகும்.

394 லட்சம் ரூபாய் செலவில் வைகைக் கால்வாயை நவீனப் படுத்தும் மற்றொரு திட்டத்திற்கும் 1968, மார்ச் மாதம் அரசு ஒப்பளித்துள்ளது. 1970, ஜனவரி இறுதி வரையில் இத்திட்டத் திற்கு 5.29 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 1970-71-ம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் 31.86 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

பெரிய திட்டங்களைப் பொறுத்தவரையில் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம், சித்தாறு-பட்டணம்கால் திட்டம், கோமுகி நீர்த்தேக்கம், மணிமுக்தா நதி நீர்த்தேக்கம், கடானா நீர்த்தேக்கம், ராமநதி நீர்த்தேக்கம், வைகைக் கால்வாயை நவீனப்படுத்தும் திட்டம் ஆகியவை போன்ற பணிகளில் முந்தைய வேலைத் திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்துவதில் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் சம்பந்தமாகத் தீர்க்கப்படாமலிருந்த சிக்கல்கள் அனைத்தையும் கேரள அரசுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதில் தற்போதுள்ள அரசு செயல் பட்டிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த இரண்டு மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு இடையேயும் ஓர் ஒப்பந்தம் 1969, மே திங்களில் கையெழுத்தாகியது. 1959-ம் ஆண்டு முதல் தீர்வு காண முடியாத பெரிய சிக்கலை இந்த அரசு தீர்த்துள்ளது உண்மையில் பெருமைப்படத்தக்க ஒரு செயலாகும்.

மூன்றாவது திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்கள், வருவாய்ப் பெருக்கத்தையோ அல்லது ஆதாயக் கோட்பாட்டையோ அடிப்படையாகக் கொண்டவையல்ல; ஆனால், நலன் பயத்தல்-செலவு விகிதாச்சாரத்தையும் இத்திட்டங்களிலிருந்து பெறப்படும் மறைமுக நலனையும் இத்திட்டங்கள் செயல்படும் பகுதிகளின் பொருளாதார வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். இம்மாநிலத்தில், கிடைக்கும் பாசன

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1970 மார்ச் 25

வாய்ப்பில் சுமார் 94 சதவீதம் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு
விட்டது. நிலமேற்பரப்பிலுள்ள பாசன வளங்களை மேலும் மேம்
படுத்துவதற்கான வாய்ப்பு மிகக் குறைவு. பயன்படுத்தாது விடு
பட்ட நீரைப் பயன்படுத்தவும் பழைய பாசன ஏற்பாடுகளைச் சீர
மைத்துப் புதுப்பிப்பதன் மூலம் அதிக அளவில் நீர் வழங்கப்
படவும் நான்காவது திட்டப் பாசன வேலைத் திட்டங்கள்
திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளன. இதனால், நீரைச்
சேமிக்கவும் பாசனத்தை நீட்டிக்கவும் இயலும்.

தொடர்ந்து செயல்படும் திட்டங்களுடன், நான்காவது திட்டக் காலத்தில் 16 பெரிய நடுத்தரப் பாசன திட்டங்கள் நிறைவேற்று வதற்கு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன. இவற்றில் பரப்பலாறு, பொன்னணியாறு, தண்டரை அணைக்கட்டு திட்டங் களுக்கு அண்மையில் திட்ட ஆணைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் இவற்றிற்கு ஒப்பளிப்பு வழங்கப்படும். கீழ்க்காணும் எட்டுத் திட்டங்களுக்கு இந்திய அரசின் ஒப்புதல் வேண்டி 16—11—1968-ல் அவை ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளன :—

சின்னாறு திட்டம்.

தொடஹல்லா திட்டம்.

பாலாறு-பொரந்தலாறு திட்டம்.

வைப்பாறு திட்டம்.

மருதநதித் திட்டம்.

கருப்பநதித் திட்டம்.

பிளவுக்கால் திட்டம்.

நந்தன் கால்வாய்கள் திட்டம்.

மேற்சொன்ன எட்டுத் திட்டங்கள் குறித்தும் இந்திய அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக 1966–67, 1967–68, 1968–69 ஆகிய ஆண்டுகளில் முறையே 433.37 லட்சம் ரூபாயும், 409.25 லட்சம் ரூபாயும், 406.95 லட்சம் ரூபாயும் செலவிடப்பட்டுள்ளன. 1970–71-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 498.45 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

கோயம்புத்தூருக்குச் சிறுவாணியிலிருந்து வழங்கும் குடிநீரின் அளவை அதிகரிக்க கேரள அரசின் இசைவோடு வேலைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். இது மிக இன்றியமையாத, நீண்ட காலமாகத் தேவைப்பட்டு வந்த திட்டமாகும். இது பற்றிய விரிவான திட்ட அறிக்கையும் இப்போது ஆய்வில் உள்ளது; விரைவில் இத்திட்ட நிறைவேற்றப்பணி தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோமுகி, மணிமுக்தா நதி நீர்த்தேக்கத் திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன ; அவற்றின் கீழுள்ள ஆயக்கட்டு பயிரிடப்பட்டு வருகிறது. சித்தாறு-பட்டணம்கால் திட்டமும் பெரும்பாலும் முடி



1970 மார்ச் 25] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

வடைந்துள்ளது. பல திட்டங்கள், நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்றப்படச் சேர்க்கப்பட்டுள்ளன. இம் மாநிலத்தின் நிலமேல்நீர் வாயில்கள் யாவையும் முழுவதும் பயன் படுத்தப்பட்டுள்ளனவென்றாலும் புதிய பகுதிகளுக்குப் பாசன வசதியளிக்கும் பொருட்டு இயன்ற எல்லாப் பாசன வாயில்களையும் பயன்படுத்த இந்த அரசு முயன்று வருகிறது. பிற்பட்ட பகுதிகளுக்கு அரசு தனி நாட்டம் செலுத்தியுள்ளது. தர்மபுரி மாவட்டத்திலுள்ள பகுதிகளுக்கு நலன் பயக்க தொட்டஹல்லா, சின்னாறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. திட்ட ஆணைக்குழுவின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுபாசனச் சிறப்புத் திட்டத்தின்கீழும் தூர்வாரிப் பயன்படுத்தும் திட்டத்தின்கீழும் சிறு திட்டங்களை மேற்கொள்வதில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. சிறுபாசனச் சிறப்புத் திட்ட வேலைகளைப் பொறுத்த வரையில், இத்திட்டங்கள் மிக விரைவில் நிறைவேற்றப்பட்டு உடனடியாகப் பலன் தருமாகையால் அரசு, இதற்கான நிதி ஒதுக்கத்தைத் தொடர்ந்து அதிகப்படுத்தி வருகிறது. 1967-68, 1968-69, 1969-70 ஆகிய மூன்று ஆண்டுகளில் சிறு பாசனச் சிறப்புத் திட்டத்திற்குச் செலவிடப்பட்ட தொகை 8.44 கோடி ரூபாய் ஆகும். 1970-71-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை 2.10 கோடி ரூபாய் ஆகும். பாசனத் திட்டங்கள் குறித்து மேலும் விரிவாக ஆராய்வதற்காக, திருச்சிராப்பள்ளியில் சிறப்பு ஆய்வுப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த அண்மையில் அரசு அனுமதித்துள்ளது. இது, பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்கான திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் பாசனத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கான எல்லா வாய்ப்புகள் குறித்த முழுமையான மதிப்பீடும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

நிலமேல் மட்ட நீர் வாயில்களை இம்மாநிலம் ஏற்கெனவே பயன் படுத்திவிட்டமையால், நில அடிமட்ட நீரைப் பயன்படுத்துவதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனம், பொதுப்பணித்துறையின் நில நீர்க்கோட்டம் ஆகியவற்றால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டத்தின் இரண்டாம் நிலை நிலநீர்த் திட்டம் தஞ்சாவூரில் இப்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது; இது இந்த அரசின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டதாகும்; தஞ்சாவூர் மாவட்டத்தை விரிவாக ஆராயும் பொருட்டு சிறப்பு உதவியளிக்குமாறு இந்த அரசு ஐக்கிய நாடுகள் நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டது. இது திட்டத்தில் சேராத பணியாகும். இதுவரையில் நடந்த ஆய்வு, நம்பிக்கையூட்டும் முடிவைத் தந்துள்ளது. நிலமேல் நீருடன் அதிக அளவு நீரைத் தரும் வகையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பெருமளவு நில நீர் கிட்டுவதற்கு வழியேற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இம்மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் விரிவான நிலநீர் ஆய்வுகளை மேற்கொள்ள இந்த அரசு சிறப்பான முயற்சிகளை எடுத்து வருகிறது; விரைந்து நடவடிக்கை தடைப்

படுவதற்குக் காரணம் நிதிப்பற்றுக்குறையே. விரிவான நிலநீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது தற்போதைய அரசின் முக்கியக் கோட்பாடாகும்.

சென்னை மாநகரில் குடிநீர் நெருக்கடியை நிலநீர் வாயில்கள் மூலம் தீர்க்க 1969-ம் ஆண்டு கோடையில் அரிய பணி மேற்கொள்ளப்பட்டது. இது பெரும் சாதனையாகும்; இதற்கு அரசு பெருமை கொள்ள முடியும். தாமரைப்பாக்கம், பஞ்செட்டி நிலநீர் வாயில்களைப் பயன்படுத்துவதிலும், சென்னை மாநகரில் முனைப்புத் திட்டத்தின்கீழ் 12,000 வடிமுனைக்குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதிலும் அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொண்டிராவிட்டால் நிலைமை மிகவும் சீர்கேடு அடைந்திருக்கும்.

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காக, வீராணம் ஏரியிலிருந்து காவிரி நீரைக் கொண்டுவரும் திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, இப்பணி நிறைவேறி வருகிறது. குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு இந்த அரசு எப்போதும் உயர் முதலிடம் அளித்து வருகிறது. காவிரி நீர் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றும் பணியை மேற்கொண்டிருப்பது இப்போதுள்ள அமைச்சரின் பெரும் சாதனையாகும். இந்த அளவில் சென்னை மாநகருக்கு நீர் வழங்குவதை அதிகப்படுத்த சிறப்பான நடவடிக்கை மேற்கொண்டிருப்பது இதுவே முதன்முறையாகும். இத்துடன், கூவம், பக்கிங்ஹாம் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளும் நிறைவேறி வருகின்றன. இம்மாநகரின் எழிலையும் சிறப்பையும் இப்பணிகள் அதிகப்படுத்தும்.

காவிரி நீரைப் பகிர்ந்து கொள்வது குறித்து, தனது நலனைப் பாதுகாக்கும் வகையில், மாநில அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டதை ஈண்டு சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். மைசூர் அரசுடன் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடு காரணமாக எழுந்த இச்சிக்கலில் தலையிட்டு இச்சிக்கலுக்குத் தீர்வு காண வகை செய்யுமாறு இந்திய அரசைக் கேட்டுக்கொண்டு உரிய காலத்தில் அரசு நடவடிக்கை எடுத்தது. இது தொடர்பாக மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்க அரசு ஒருபோதும் தயங்காது என இம்மன்றத்திற்கு உறுதிகூற விழைகிறேன்.

ஆற்றுநீர் இறைப்புத்திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதற்காகவும், ஏழை விவசாயிக்கு உதவி செய்யும் நோக்கத்துடனும் இப்பணித் திட்டங்களின் கீழ் குடியானவர்கள் எழுதிக் கொடுக்க வேண்டியிருந்த ஒப்பந்தங்களுக்கு அண்மையில் முத்திரைத்தாள் தீர்வையினின்று விலக்கப்பட்டுள்ளது, பாசனத் திட்டங்களைப் புதிய பகுதிகளில் நிறைவேற்றுவதற்கு அரசு முனைப்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதை விளக்கும். சிறப்புச் சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றி, பின்தங்கிய பகுதிகளில் விரைவாக முன்னேற்றம் காண்பதற்காக இச்சிறப்புச் சிறுபாசனத் திட்டங்கள் குறித்த அளவுகோல்களைத் தளர்த்துவது குறித்து அரசு ஆலோசனை செய்து வருகிறது.





சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், நிலக்கிழார்கள், மாண்புமிகு அமைச்சர்கள் ஆகியோர் கலந்து கொள்ளும் பாசன மாநாடுகளை மாவட்டங்களனைத்திலும், ஒவ்வொரு மாவட்டமாகக் கடந்த மூன்று ஆண்டுகளில் நாம் நடத்தி வந்துள்ளோம். இக்கருத்தரங்குகளில், பாசனம் குறித்த சிக்கல்களும், பாசனத்துடன் தொடர்புள்ள வேளாண்மை, சாலைகள், கூட்டுறவு, மின் சக்தி போன்ற பிரச்சனைகளும் விவாதிக்கப்பட்டு உழவர்களின் குறை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒவ்வொரு மாநாட்டிலும் 'அதே இடத்தில்' முடிவுகள் பல மேற்கொள்ளப்பட்டன. நிர்வாகத்தையும், மக்களையும் இக்கருத்தரங்குகள் இணைக்கப்பெருமளவில் உதவியுள்ளன.

பொதுப்பணித்துறையைச் சேர்ந்த கட்டடப்பிரிவு கடந்த மூன்றாண்டுகளில், பல்வேறு கட்டடத்திட்டங்களை மேற்கொண்டுள்ளது. இக்கால அளவில் இப்பிரிவின் சாதனைகள் பாராட்டத் தக்கவையாகும். புதிய கட்டடங்கள் கட்டுவதற்காக ஏற்பட்ட செலவு 1967 ஏப்ரல் முதல் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. 1967-68-ஆம் ஆண்டில் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்காக 275 லட்சம் ரூபாய் செலவு ஏற்பட்டது. 1968-69-ஆம் ஆண்டில், புதிய கட்டடங்களைக் கட்டுவதற்கான செலவு 330 லட்சம் ரூபாயாக அதிகரித்துள்ளது. 1969-70-ம் ஆண்டில் இவ்வகைச் செலவு ரூபாய் 400 லட்சமாகும். நமது அமைச்சரவை அரசு பொறுப்பேற்ற பிறகு நிறைவேற்றப்பட்ட கட்டடத் திட்டங்களைப் பற்றி முக்கியமாக நாம் குறிப்பிட வேண்டியுள்ளது.

(1) ஒவ்வொன்றும் ரூ. 92,000 செலவில் 45 குடும்ப நல நிலையங்களை நிறுவுவதற்கு 1968 அக்டோபர் திங்களில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவற்றில் 16 நிலையங்களுக்கான கட்டடங்கள் முன்னரே கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(2) இரண்டாவது வேளாண்மைக் கல்லூரியை, மதுரையில் அமைப்பதற்கான கட்டடப்பணிகள் ரூ. 72 லட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

(3) ரூ. 35 லட்சம் செலவில் மதுரையில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

(4) காவல்துறைப்பணியாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டங்களின் கீழ் கடந்த இரண்டு நிதி ஆண்டுகளில் ரூ. 14 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதுவரையில் 7,000 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

(5) "குறளகம்" கட்டடத்தின் பெரும்பகுதி ரூ. 70 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு, அவை பயனில் உள்ளன.

(6) காஞ்சிபுரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தையும் காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தையும் ரூ. 19.20 லட்சம் செலவில் கட்டும் பணி முடிக்கப்பட்டுவிட்டது.

கீழ்க்காணும் முக்கிய கட்டடப் பணிகள் நடந்து வருகின்றன—

(1) திருநெல்வேலியில் புதிய மருத்துவக் கல்லூரியை நிறுவுவதற்காக மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது நிலைகளின் கீழ் ரூ. 22.57 லட்சம் செலவில் கட்டடப்பணிகள் விரைவாக நடந்து வருகின்றன. அதேபோல் கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி குறித்தும் ரூ. 20.65 லட்சம் செலவில் மூன்றாவது, நான்காவது நிலைகளின் கீழ், நிறைவேற்ற ஒப்பளிக்கப்பட்ட கட்டடப் பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

(2) ரூ. 5 லட்சம் செலவில் காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிலையம் கட்டுவதற்கான கட்டடப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி 1970 நவம்பர் திங்களுக்கு முன்னர் முடிவடையும்.

(3) ஆம்பூர், ஸ்ரீபெரும்புதூர், தாம்பரம், தேவகோட்டை, தேனீ, சிங்கம்புணரி ஆகிய இடங்களிலுள்ள அரசு மருத்துவ மனைகளுக்காக மொத்தம் ரூ. 56.85 லட்சம் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

(4) ஒவ்வொன்றும் ரூ. 92,000 செலவில் 26 குடும்ப நல நிலையங்களைக் கட்டுவதற்கான கட்டடப்பணிகள் முடிவடையும் தறுவாயிலுள்ளன.

(5) இம்மாநிலத்திலுள்ள 241 இடங்களைத்திலும், குடும்ப நலத் துணை நிலையங்களைக் கட்டுவதற்காக ரூ. 28.92 லட்சம் செலவில் கட்டடப் பணிகளை மேற்கொள்ள அரசு 1970 ஜனவரித் திங்களில் ஒப்புதல் அளித்தது. அப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(6) 30 இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கட்டுவதற்காக மொத்தம் ரூ. 54 லட்சம் செலவில் கட்டடப்பணிகளை மேற்கொள்ள அரசு 1970 ஜனவரித் திங்களில் ஒப்பளிப்பு வழங்கியது. இக்கட்டடப்பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

(7) 1968-69-ஆம் ஆண்டில் வேலூர், தஞ்சாவூர், கடலூர், கிருஷ்ணகிரி, கரூர், நாமக்கல், ராசிபுரம் ஆகிய இடங்களில் புதிய கலைக்கல்லூரிகளைத் தொடங்குவதற்காக மொத்தம் ரூ. 56.40 லட்சம் செலவில் கட்டடப் பணிகளை மேற்கொள்ள அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இக்கட்டடப்பணிகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

அடுத்து தமிழ் நாட்டில் நெடுஞ்சாலைகள், கிராமப்பணிகள் துறையின் கீழ் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் முன்னேற்றம் குறித்த சாதனைகளைப்பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

மக்களுக்கும், உற்பத்திப் பொருட்களுக்கும் வளம் சேர்க்கும் போக்குவரத்தை அளிப்பதாலும், பண்ணையைப் பட்டினத்தோடும், பணிக்களரிகளை நாட்டுப் புறத்தோடும் இணைப்பதாலும், உழவுத் தொழிலைத் தூண்டி அதன் தற்போதைய அண்டி





நிற்கும் பொருளாதார நிலையை உயர்த்துவதாலும், வேளாண்மை, தொழில் வாணிகங்களின் போக்குவரத்துத் தேவைகளை ஏற்கும் வகையில் முழுமை வாய்ந்ததாகவும், திறன் மிக்கதாகவும் உள்ள ஒரு சாலை அமைப்பு மிகவும் இன்றியமையாததாகும்.

1—4—1967 அன்று பல்வேறு சாலைகளின் மொத்த நீளம் 38,471 மைல்களாக இருந்தது. 1—4—1969 அன்று சாலைகளின் மொத்த மைல் அளவு 42,000 ஆக அதிகரித்தது. 1—4—1970 அன்று சாலைகளின் மொத்த மைலளவு 43,400 மைலாக அதிகரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நமது அமைச்சரவை அரசின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு 22 பெரிய பாலங்களும், 2 சுரங்க வழிகளும் கட்டப்பட்டன. அவற்றில் ஒன்று திருவைக்குளம்-கூராங்குடி சாலையில் 16/5 மைலில் வைப்பாற்றின் குறுக்கே ரூ.20.13 லட்சம் செலவில் மூழ்கு பாலம் ஒன்று கட்டப்பட்டது குறித்தும் ரவுண்டானாவில் பாதசாரிகளுக்கான சுரங்கவழி ஒன்று ரூ. 13.75 லட்சம் செலவில் கட்டப்பட்டது குறித்தும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியுள்ளது.

1967-68 முதல், 1969-70 வரையிலுள்ள கால அளவில், மாநிலத்தின் பல்வேறு பணித்திட்டங்களின் கீழ் ஏற்பட்ட மொத்தச் செலவு குறித்த விவரங்களை இப்பொழுது பேரவைக்கு அளிக்க விழைகிறேன்.

| | | |
|---|---|---|
| | | ரூ. லட்சத்தில் |
| 1967–68 | .. .. | 153.93 |
| 1968–69 | .. .. | 143.06 |
| 1969–70 | .. .. | 181.79 |

முப்பது சாலைகளும், பாலங்களும் கட்டப்பட்டு வருகின்றன. அவற்றில் கீழ்க்குறிப்பிட்டுள்ள பணிகள், சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவையாகும் :—

**சாலைப் பணிகள் :**

1. இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 26.57 லட்சம் செலவில் ராமேஸ்வரம் முதல் தனுஷ்கோடி வரையில் சாலை அமைத்து, சரளைக் கற்கள் போடுதல்.

2. மகாபலிபுரம் முதல் மரக்காணம் வரையில் தென் ஆர்காடு மாவட்ட எல்லைகள் வரையில் கிழக்குக்கடற்கரைச் சாலையில் இதுவரை போடப்படாத விட்ட சாலையை ரூ. 32 லட்சம் செலவில் அமைத்தல்.

3. பொன்னேரி–பஞ்செட்டி சாலையில் 2/3 மைலை இணைக்கும் வகையில் சென்னை, எண்ணெய்த் தூய்மை தொழிற்சாலைப் பகுதிக்கு சென்னை-எண்ணூர் விரைவுச் சாலையில் 3/1 மைலில் இருந்து சாலை ஒன்றை அமைத்தல், இதற்கான செலவு மதிப்பீடு ரூ. 32.50 லட்சமாகும்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1970 மார்ச் 25

**பாலங்கள் :**

1. ரூ. 20 லட்சம் செலவில் சென்னை மாநகர எல்லைக்குள் பேசின்பாலம் அருகே 3 பாலங்களை விரிவுபடுத்தல்.

2. 45-வது தேசிய நெடுஞ்சாலையில் (சென்னைமாநகர எல்லைக்குள்) ஜெமினி குறுக்குச் சந்திப்பில் ரூ. 45 லட்சம் செலவில் விரைவு மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல்.

3. 7-வது தேசீய நெடுஞ்சாலையில் 300/2-வது மைலில் உள்ள சுப்பிரமணியபுரம், மதுரை நகர எல்லைகளில் 1/1-2 கி.மீட்டர் ரெயில்வே மைல் கணக்கில், தற்போதுள்ள சாலை இருப்புப்பாதைக் கடவுக்குப்பதிலாக ரூ. 37 லட்சம் செலவில் மேம்பாலம் ஒன்று கட்டுதல்.

4. திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி-செங் கோட்டை சாலையின் 1/4 மைலில் சாலை இருப்புப்பாதைக் கடவுக்குப்பதிலாக, ரூ. 35 லட்சம் செலவில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல்.

5. 7-வது தேசீய நெடுஞ்சாலையில் 300/7 மைலில் (மதுரை நகர எல்லைகளுக்குள் மீனாட்சி ஆலயின் அருகே 496/6-6 ரயில்வே மைல்) தற்போதுள்ள சாலை இருப்புப்பாதைக் கடவுக்குப் பதிலாக ரூ. 31 லட்சம் செலவில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல்.

இவை தவிர, கீழ்க்காணும் பிற முக்கியப் பணிகளை மேற்கொள் வது பற்றியும் அரசு ஆலோசனை செய்து வருகிறது:—

**பாலங்கள்:**

1. சென்னையையும், ஆந்திரப் பிரதேசத்தையும் இணைக்கும் கடற்கரைச் சாலையில் எண்ணூர் உப்பங்கழிகளுக்கு மேல், ரூ. 60 லட்சம் செலவில் பாலம் ஒன்றை அமைத்தல்.

2. முசிறியையும், குளித்தலையையும் இணைக்கும் வகையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரிக்குக் குறுக்கே, பாலம் ஒன்றை ரூ. 80 லட்சம் செலவில் கட்டுதல்.

3. 45-வது எண் தேசிய நெடுஞ்சாலையில் 194/7 மைல் முதல் 195/2 மைல் வரையில் திருச்சிராப்பள்ளியில் காவேரியின்மேல் கட்டப்பட்டுள்ள பாலத்தில் பழுதுற்றுள்ள பகுதிகளை ரூ. 70 லட்சம் செலவில் புதுப்பித்தல்.

4. ரூ. 50 லட்சம் செலவில் சென்னையில் புதிய வாலாஜா பாலத்தைக் கட்டுதலும், வெலிங்டன் பாலத்தை அகலப்படுத்து தலும்.

5. கோயம்புத்தூர் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள 47-வது எண் தேசிய நெடுஞ்சாலையின் சேலம்-கொச்சி சாலையில் 328/7 மைலில் மேம்பாலம் ஒன்றை ரூ. 40 லட்சம் செலவில் கட்டுதல்.



1970 மார்ச் 25] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

**சாலைகள்:**

சோழவந்தானையும், பழனியையும் (மதுரை மாவட்டம்) இணைக்கும் வகையில் ரூ. 75 லட்சம் செலவில் சாலை ஒன்றை அமைத்தல்.

2. சென்னையிலுள்ள தண்டிக்குடி மலைச்சாலையை இணைக் கும் வகையில் பண்ணைப்பட்டி-பாச்சலூர் சாலையில் ஆடலூரி லிருந்து சாலை ஒன்றை ரூ. 26 லட்சம் செலவில் அமைத்தல்.

3. ரூபாய் 25 லட்சம் செலவில் பாச்சலூரிலிருந்து வடக் காட்டிற்கும், அங்கிருந்து மதுரை மாவட்டத்திலுள்ள ஒட்டன் சத்திரத்திற்கும் ரூ. 25 லட்சம் செலவில் சாலை ஒன்றை அமைத்தல்.

உறுப்பினர்களின் கருத்தையறிந்து அதற்குப் பிறகு என்னுடைய பதிலைச் சொல்லுகிறேன் என்று கூறி இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. நா. சௌந்திரபாண்டியன் :** பெருமதிப்பிற்குரிய சட்ட மன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் பாசன சம்பந்தமான கோரிக்கைகளின் மீது எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுத் திருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஆற்றுப் பாசனம், ஏரிப் பாசனம், கிணற்றுப் பாசனம் என்று மூன்று வகையான பாசனங் கள் அமைந்திருக்கின்றன. குறிப்பாக நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் 37,000 ஏரிகள் இருக்கின்றன. ஆனால் இந்த 37,000 ஏரிகளில் பெரும்பான்மையானவை வானம்பார்த்த ஏரி களாகவே அமைந்திருக்கின்றன என்பதை நமது அரசு நன்கு அறியும். ஆனால் மழை பெய்தால் இந்த ஏரிகளுக்குப் பெரும் அளவில் தண்ணீர் வரும் வாய்ப்பு இருந்தும், அந்தத் தண்ணீர் தேங்கி இருக்கும் அளவுக்கு ஏரிகளின் கரைகள் சீர் செய்யப்பட வில்லை. ஏரிகளுக்குத் தண்ணீர் வரும் கால்வாய்கள் தூர் எடுக்கப் பட்டு சரியான நிலைமையில் இல்லை என்பதை இந்த அமைச்சா வைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏரிகளை மேலும் ஆழப் படுத்த வேண்டும். இந்த ஏரிகளில் சில நீர்ப்பாசன இலாக்கா வின் கீழும், சில ஊராட்சி ஒன்றியத்தின் பார்வையின் கீழும், இன்னும் சில பொதுப்பணித்துறையின் கீழுமாக, மூன்று வகை யாக அமைந்திருப்பதால், எப்படிச் செய்வது, யார் செய்வது என்று புரியாமல் இருக்கின்றது. இதை அரசு தீவிரமாக ஆலோ சித்து இந்த ஏரிகளை நல்லபடி மராமத்து செய்தால்தான் வேளாண் மையில் பெருக்கம் ஏற்படும், நாம் வேளாண்மைக்காகப் போடும் திட்டங்களும் வெற்றி அடையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நமது மாநிலத்தில் வரண்ட பிரதேசங்களுக்கு விசேஷ வாய்ப்புகளை அமைக்கும் வகையில் நமது அரசு ஏதாவது காரியங் களில் ஈடுபட்டிருக்கிறதா, திட்டங்களை மேற்கொண்டிருக்கிறதா

என்றால் இல்லவே இல்லை. ஏதோ அதிகமாகத் தண்ணீர் இருக்கும் இடங்களில் எப்படி இருபோகம், மூன்று போகம் சாகுபடி செய்வது என்று ஆராய்ச்சி செய்து பார்க்கிறார்களே தவிர வரண்ட பிரதேசங்களில் விசேஷ வாய்ப்புகளை உண்டாக்கி அந்த மக்களுடைய கஷ்டத்தை எப்படிப் போக்க வேண்டும் என்ற வகையில் இந்த அரசு கவனம் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

குறிப்பாக வறண்ட பிரதேசங்களில் இப்படிப்பட்ட பாசன வசதிகள் சிறியதாக இருந்தாலும்கூட, அவைகள் நல்ல முறையில் செப்பனிடப்பட்டால், அந்தப் பகுதிகளில் குடிநீர்ப் பிரச்னை ஓரளவுக்குத் தீரும் என்பதை அமைச்சரவை நன்றாக உணரவேண்டும். நமது அரசாங்கத்தினிடம் குறிப்பாக பெரிய திட்டங்கள் ஒன்றுமில்லை. சிறிய திட்டங்கள் நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டிருக்கிறதா என்றால், அதையும் காணவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். மேலும், பாசனத் திட்டங்களைப் பொறுத்த அளவில் விருப்பு வெறுப்பின்றி இவைகளைச் செய்யவேண்டும். அரசாங்கம் மேற்கொள்ள இருக்கும் திட்டங்களின் மூலம் மக்கள் நன்மை அடைகிறார்களா, விவசாய மக்கள் நன்மை அடைகிறார்களா, குடிநீர் வசதி, மற்ற வசதிகள் எந்த அளவுக்கு மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்து விருப்பு, வெறுப்பின்றி திட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, எனது தொகுதியில், ராதாபுரம் தொகுதியில், ஆலத்துரையாறு திட்டத்திற்கு ரூ. 14.9 லட்சத்தில் மதிப்பீடு போட்டு, 1966-ம் வருடத்தில் இந்தத் துறையினரால் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது ரெவின்யூ போர்டின் ஆய்வில் இருப்பதாக நான் அறிகிறேன். கிட்டத்தட்ட ஐந்து ஆண்டு காலமாகியும் அரசாங்கம் இதில் ஏதாவது அக்கறை காட்டியிருக்கிறதா என்று பார்த்தால், அக்கறை காட்டவில்லை என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். இந்த ஆலத்துரையாறு திட்டம் நிறைவேற்றப்பட்டால் ராதாபுரம் பெரும் பகுதி, குறிப்பாக பணகுடி, வடக்கன்குளம், தனக்காகுளம், வேப்பிலான்குளம், காவல்கிணறு, ராதாபுரம் முதலிய பகுதிகள் மிகவும் பயன் அடையும். அதோடுகூட குடிதண்ணீர் பிரச்சனையை ஓரளவுக்கு தீர்ப்பதற்கு இது பயன் உள்ளதாக அமையும். இதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. கன்யாகுமரி மாவட்டத்திலிருந்து தண்ணீர் வரக்கூடிய பிரச்சினை இதில் இருக்கிறது என்பதை நான் அறிவேன். ஆனாலும் கூட நமது அரசு வெளிமாநிலங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை மிக விரைவிலே தீர்த்துவிட்டோம் என்று பெருமைப்பட்டுக்கொள்ளக் கூடிய அரசு, உள்மாநிலத்தில் மாவட்டங்களுக்குள் உள்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இவ்வளவு காலதாமதம் ஆவது ஏன் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.





வடமலையான் கால்வாய் என்று ஒரு கால்வாய் இருக்கிறது. அது முன்பு வருவாய்த் துறையினரால் பாராமரிக்கப்பட்டு வந்தது. ஐந்து ஆண்டுகளுக்கு முன் பொதுப்பணித்துறையினரால் பராமரிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஐந்து ஆண்டுகளாகப் பொதுப் பணித்துறை இதை மேற்கொண்டிருந்தும், ஏதாவது செப்பனிடப்பட்டிருக்கிறதா என்றால், செப்பனிடப்படவில்லை. அதிகாரிகளைக் கேட்டால் ரூபாய் ஒரு லட்சம், ஒன்றரை லட்சத்திற்கு மதிப்பீடு தயாரித்து அனுப்பியிருக்கிறோம், சீக்கிரம் வரும் என்று சொல்கிறார்களே தவிர. இன்னும் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்பதை அமைச்சரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திசையன்விளைப் பகுதியில் புலிமான்குளம் என்ற குளம் செப்பனிடுவதற்கு, 1958-ம் வருஷத்திலேயே மதிப்பீடு போடப்பட்டு அனுப்பப்பட்டது. அதிகாரிகள் இதற்கான மதிப்பீட்டைத் தயாரித்து இலாகாவிற்கு அனுப்பியதாகச் சொல்கிறார்கள். இது வரையில் இத்திட்டத்தை முடிக்க அரசு முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வள்ளியூர் பெரிய குளம் என்பது எல்லோருக்கும் தெரியும். பொதுப்பணித் துறை இந்தக் குளத்தை ஆழப்படுத்தி, கரையையும் உயர்த்தவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை பலமாக இருந்துவருகிறது. அதையும் இதுவரையில் செப்பனிட யாதொரு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

ராதாபுரம் கால்வாயைப் பொறுத்த அளவில், திருநெல்வேலி மாவட்டம் ராமநதைபுரம் துணைவட்டம் என்று அறிக்கையில் கூறியிருக்கிறது. இந்த அறிக்கையைப் பார்த்தால், திருநெல்வேலியில் ராதாபுரம் இருக்கிற என்னமே அரசுக்கு இல்லை என்பதைத்தான் காட்டுகிறது என்று சொல்கிறேன். சிற்றாறு-பட்டணங்கால் திட்டத்தில் ராதாபுரம் கால்வாய் சேர்க்கப்பட்டிருக்கிறது. ராதாபுரம் கால்வாய் வேலை அநேகமாக முடிவடையப் போகிறது என்று கருதுகிறேன். அந்தத் திட்டத்தில் உள்ளிட்டு சிற்றாறு முதல் அணை, சிற்றாறு இரண்டாவது அணை வேலை இன்னும் முடியவில்லை. கிட்டத்தட்ட ஐந்து ஆண்டு காலமாகியும் அந்த வேலை இன்னும் ஏன் முடியவில்லை என்பதை நான் அறிய ஆசைப்படுகிறேன். இதைத் துரிதப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்திலுள்ள பட்டணங்கால் திட்டத்தை உடனே அரசாங்கம் நிறைவேற்றினால், அந்தப் பகுதி மக்கள் தண்ணீர்ப் பிரச்சனை ஒருவாறு தீரும் என்று கருதுகிறேன். ராதாபுரம் துணை வட்டத்திலுள்ள 17,000 ஏக்கர் பயன் அடையக்கூடிய திட்டத்தை அரசு உடனே நிறைவேற்ற வேண்டும், அதற்கான வழிமுறைகளை அரசு உடனடியாக நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நம்பியாற்றுப் பாசனம் என்பது மிகப் பழைய பாசனம். அதைச் சீரமைக்க வேண்டும், செப்பனிட வேண்டும் என்று பலமுறை சொல்லப்பட்டும். அதைச் செய்ததாகத் தெரிய

வில்லை. அதிலும் குறிப்பாக பல அணைக்கட்டுகள் இருக்கின்றன. கோவன்குளம் அணைக்கட்டு இருக்கிறது. அந்த அணைக்கட்டு செப்பனிடவேண்டும். அதில் அதிகாரிகள் ஏன் அக்கறை காட்டவில்லை என்பது தெரியவில்லை. அதில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுவிசேஷபுரம் அருகே புதுக்குளமும் இடையன்குடி பக்கம் ஓர் புதுக்குளமும் அமைக்கவேண்டும். இதன் மூலம் திசையன் விளைப் பகுதியிலுள்ள மானாவாரியான பிரதேசங்களுக்குக் குடி தண்ணீர் வசதி கிடைக்கும். பாசன வசதியும் ஏற்படும். இது பற்றிய அறிக்கைகள் அரசாங்கத்திற்கு இலாகாவின் மூலம் அனுப் பப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கைகளைப் பரிசீலித்து உடனே இந்தத் திட்டங்களை நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்பியாற்றில் கோட்டைக் கருங்குளம் பக்கம் ஓர் புது அணை கட்டவேண்டும். இதனால் கிட்டத்தட்ட 1,000 ஏக்கர் பயன் அடையும்.

இவைகளையெல்லாம் பார்க்கும்பொழுது இந்தத் திட்டங்களை என்ன முறையில் இவர்கள் தயாரிக்கிறார்கள் என்றுதான் அறிய முடியவில்லை. குறிப்பாக, மணிமுத்தாறு பாசனத்தில் இன்னும் அதிகக் குளங்களைச் சேர்ப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. சிறு சிறு கால்வாய்கள் வெட்டப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1967-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இப்பொழுது முதல் அமைச்சராக இருக்கக்கூடியவர் அப்பொழுது முன்னாள் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு கருணாநிதி அவர்கள் தலைமையில் நடந்த பாசன அபிவிருத்தி மகாநாட்டில் இந்தத் திட்டங்களையும் மக்களின் கருத்துக்களையும் எடுத்துச் சொன்னபொழுது, வெகு அழகாகப் பதில் சொன்னார்கள். அதாவது, ஆலத்துறையாறுத் திட்டம் 1968 மார்ச்சு இறுதிக்குள் வேலை துவங்கப்படும் என்று உறுதி அளித்தார்கள். அந்த வாக்கு என்ன ஆயிற்று? அந்த மாதிரி ஒவ்வொரு திட்டத்திற்கும் கெடு வைத்து, இன்ன காலத்திற்குள் வேலைகள் துவங்கப்பட்டு முடிக்கப் படும் என்ற அளவுக்கு வாக்குறுதிகள் கொடுத்தார்கள். அந்த வாக்குறுதி என்ன ஆயிற்று? மக்கள் உங்கள் வாக்குறுதிகளை எப்படி நம்ப முடியும்? பாசன வசதியில் பின்தங்கிய பகுதி களுக்கு முதல் இடம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, சாலை பராமரிப்பு பொறுத்தவரையில், இந்த அரசு துரிதமாகத் திட்டங்களை நிறைவேற்றவில்லை. திருநெல் வேலி–நாகர்கோவில் கன்யாகுமரி ரயில்பாதைக்கு ஏன் இந்த அரசு முதல் இடம் கொடுக்கவில்லை? மற்ற இருப்புப் பாதை களுக்கு முதல் இடம் கொடுக்கும்பொழுது ஏன் இந்த இருப்புப்



பாதைக்கு முதல் இடம் கொடுக்கக்கூடாது? திருநெல்வேலி–கன்யாகுமரி சாலை இன்னும் நல்ல முறையில் பழுது பார்க்கப்பட வில்லை. அதை விரைவிலே செய்யவேண்டும். அதை சிமெண்டு சாலையாக மாற்றுவதற்கு இந்த அரசு உடனே முயற்சி எடுக்க வேண்டும்.

மேலும் கிழக்குக் கடற்கரைச் சாலை முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அது நாட்டிற்கு மிகவும் தேவையானது, குறிப்பாக நமது மாநிலத்திற்கு மிகவும் அவசியமான சாலை. மத்திய சர்க் காரிடம் அதை ஒரு பாதுகாப்புச் சாலையாக பயன்படுத்த வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். இதில் மாநில அரசு தன்னுடைய கடமையைச் செய்யத் தவறிவிட்டது. எப்படியாவது இந்தச் சாலையை நல்ல முறையில் செப்பனிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றிய சாலைகளை அரசாங்க சாலை களாக எடுத்துக்கொள்வதற்கு ஒரு வரையறை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் அதற்கான சிபார்சுகள் செய்து அனுப்பப்படுகின்றன. அந்தச் சாலைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது. அதுபற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு வருடத்தில் மாவட்ட அபிவிருத்தி மன்றம் சிபார்சு செய்த வேலைகளில் ஒரு சில வேலைகளை மட்டும் எடுத்துக் கொண்டு, மற்றவைகளை விட்டுவிட்டு பிறகு, அடுத்த வருடம் மாவட்ட அபிவிருத்தி மன்றம் சிபார்சு செய்யக்கூடிய வேலைகளைத் திரும்பவும் எடுத்துக் கொள்வதாக இருந்தால், முன்பு மாவட்ட அபிவிருத்தி மன்றம் சிபார்சு செய்த வேலைகள் என்ன வாயிற்று என்பது தெரியவில்லை. சம்பந்தப்பட்ட இலாகா விற்குச் சொல்லி, இதை எப்படிப் படிப்படியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றித் திட்டம் போட்டு, அதைச் செயல் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பஸ் போகக் கூடிய சாலைகளை அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தும். அவற்றை எடுத்துக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மேலும், ஊராட்சி ஒன்றிய சாலைகளுக்குக் கொடுக்கக்கூடிய மானியம் மிகக் குறைவாக இருக்கிறது. நெடுவழித் துறையிடம் எவ்வளவு தொகை செலவாகும், எவ்வளவு தொகை கொடுக்க வேண்டும் என்பதைக் கேட்டு அதன் மேல் அரசு தீர்மானம் செய்ய வேண்டும். வடக்கன்குளம்-ராதாபுரம் சாலை இரு ஊராட்சிமன்றங் களின் பராமரிப்பில் இருக்கின்றன. 5 மைல் தூரத்தை 23 மைல் சுற்றிவரக்கூடிய நிலையில் இருக்கிறது. அந்தச் சாலையில் அனுமா நதியில் ஓர் பாலம் கட்டவேண்டும் என்று கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளுக்கு முன் மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் விவாதிக் கப்பட்டு, தீர்மானங்கள் போடப்பட்டிருந்தாலும் யாதொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. திசையன்விளை இட்டமொழி சுவி

சேஷபுரம் வழிச் சாலை மூன்று ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் இருக்கிறது. இரண்டு மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிலும், திருநெல்வேலி தெற்கு வடக்கு அபிவிருத்தி மன்றங்களிலும் இந்த சாலை இருக்கிறது. இதை மாவட்ட அபிவிருத்தி மன்றம் அரசாங்க சாலையாக எடுக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. இதை அரசாங்கம் உடனே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நீர்ப்பாசன இலாகாவைப் பொறுத்தமட்டில், இந்த இலாகாவானது உழவர்களின் நண்பனாக இருக்க வேண்டிய இலாகா, அதில் இவ்வளவு தூரம் கால தாமதம் ஏற்படுகிறது என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன் அமைச்சர் அவர்கள் கேட்டிருக்கக் கூடிய தொகை பொதுவாக குறைவாக இருந்தாலும் செய்யப்பட்டிருக்கக் கூடிய வேலைகள் மக்களுக்கு திருப்தி அளிப்பதாக இருக்கவில்லை என்பதைக் கூறி, எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. பி. எஸ். மணியன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையை மனப்பூர்வமாக வரவேற்று ஒரு சில வார்த்தைகள் கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அரசு வந்ததற்குப் பின்னால், நீர்ப்பாசனத் துறையில் பல நல்ல அபிவிருத்திகளை, பின்தங்கிய பகுதி மக்கள் வாழும் இடங்களில் நீண்ட நெடுங்காலமாக நிறைவேற்றப்படாமல் இருந்து வந்த திட்டங்களை நிறைவேற்றி வந்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், என்னுடைய தொகுதியில்; பழனியாண்டவர் அணைக்கட்டுத் திட்டம் என்பதற்கு 1963-ல் மதிப்பீடு போடப்பட்டு, இப்பொழுது வரையில் மதிப்பீட்டோடு இருந்து வந்தது. இந்த ஆண்டு நம்முடைய அரசு ஒப்புதல் தந்து, அதற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அங்கே அடிக்கல் நாட்டக்கூடிய நிலைமை இருந்திருக்கிறது.

மேலும், 12 ஆண்டுக் காலமாக, சோழவந்தான் வடகரை கம்மாய் தூர் வாராமல், எந்த முயற்சியும் இல்லாமல் இருந்தது. இப்பொழுது இந்த அரசு அதற்கு ஒப்புதல் அளித்து அதற்கு 4 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் அளவில் மதிப்பீட்டை அங்கீகாரம் செய்து, அங்கே பொதுப் பணித் துறை அமைச்சர் வருகை தரக் கூடிய சம்பவம் முக்கியமானதாக அமைந்திருக்கிறது. சிறப்பு நீர்பாசனத் திட்டத்தின் கீழ் இதுவரைக்கும் 15 லட்ச ரூபாய்க்கு மேல் முன்னால் இருந்த அரசு மதிப்பீடு தயாரிக்காமல் இருந்த முறையை மாற்றி, 25 லட்ச ரூபாய்க்கு அங்கீகாரம் அளிப்பதற்கும் ஒப்புதல் அளிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருப்பது நம்முடைய அரசின் சாதனைகளில் மிகப் பெரிய சாதனை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



பொதுவாக பாசன அபிவிருத்தி என்ற பகுதியில் இரண்டு முக்கிய திட்டங்களைப் போட வேண்டும். இருக்கக் கூடிய கண்மாய்களையும், கால்வாய்களையும் பழுது அடையாமல சீர்திருத்த வேண்டும். இன்னொன்று, புதிதாக நீர்த் தேக்கங்களை, அணைக் கட்டுகளைக் கட்ட வேண்டும். இரண்டையும் முன்னால் இருந்த அரசு செய்ததை விட இப்பொழுது இருக்கும் அரசு வியக்கும் அளவில், பொதுப் பணித் துறை அதிகாரிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள், இன்னும் மற்றைய பொது நோக்குள்ளவர்கள் இவர்களைக் கொண்டு மாநாடு கூட்டி, நல்ல முறையில் நல்லபல காரியங்களை செய்து வருகிறது. கண்மாய்களைப் பொறுத்தவரையில், ஆயிரக்கணக்கான கம்மாய்கள் நம் நாட்டில் இருக்கின்றன. பல இடங்களில் பார்த்தால், அவைகளெல்லாம் கம்மாய்களா அல்லது ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட சாகுபடிக்காரர்களுடைய நிலங்களா என்று சந்தேகமாக இருக்கிறது. அந்த வகையில் கடந்த 10, 20 ஆண்டுக் காலமாக அந்தக் கண்மாய்கள் தூர் வாராமல், ஆழப் படுத்தப் படாமல் இருக்கும் நிலை இருந்துவருகிறது. இப்பொழுது அதை மாற்றி, முயற்சிகள் எடுத்து, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 கோடிக்கு மேல் தூர்வாரும் முயற்சிக்கு நம்முடைய அரசு பணம் செலவழித்து இருப்பது வரவேற்கத்தக்க நிகழ்ச்சியாக இருக்கிறது.

கண்மாய்களைப் பொறுத்தவரையில், சிறு சிறு கண்மாய்களில், சின்னச் சின்ன பழுதுகளைக்கூட அங்கே இருக்கக்கூடிய லோகல் ஆபீசர்களுக்கு, செக்ஷன் ஆபீசர்கள், அசிஸ்டெண்ட் எஞ்சினியர்கள் இவர்கள் செய்ய முடியாமல் இருப்பது பெரும் குறைபாடு என்று கருதுகிறேன். பொதுவாக இந்த நிலையை மாற்றி, ஊராட்சி ஒன்றியத்திடம் இருப்பதுபோல், 3,000 ரூபாய்க்கு மதிப்பீடுகளையும் தயாரிக்கும் அதிகாரம், அங்கீகாரம் செய்யும் அதிகாரம் செக்ஷன் ஆபீசருக்கும், 10,000 ரூபாய் வரையில் மதிப்பீடு தயாரித்து, கண்ட்ராக்டர்களை ஒப்பந்தம் செய்வது போன்றவற்றை உதவிப் பொறியாளர் செய்யலாம் என்றும் விதிகளைப் போடக்கூடிய முயற்சிகளை நம் அரசு செய்ய வேண்டும்.

பொதுவாக தூர் வாரல் பொறுத்தவரையில், நம் அரசு நல்ல பல காரியங்களைச் செய்துவருகிறது. தூர் வாரல் சம்மந்தப் பட்டவரையில், மாநிலத்திற்கு ஒரே ஒரு நிர்வாகப் பொறியாளர் சென்னையில் இருக்கிறார். அதே போல் இயந்திரங்களை அனுப்பும் காரியத்திற்கு ஒரே ஒரு மேற்பார்வைப் பொறியாளர் சென்னையில் இருக்கிறார். இந்த முறையை மாற்றி, மாவட்டந்தோறும், நிர்வாகப் பொறியாளர்களை, இயந்திரங்கள் அனுப்பும் வகையிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க வேண்டும். அவர்கள் தூர் வாரல் செய்ய வேண்டும். இயந்திரங்களைப் பார்த்து வைக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான், ஆயிரக்கணக்கான கண்மாய்கள் இன்று தூர் நிரம்ப இருக்கின்றன. அவற்றை ஆழப் படுத்தவும், சீராகச் செய்யவும் முடியும்.

பொதுவாக ஒரு கண்மாயிலிருந்து இன்னொரு கண்மாய்க்குச் செல்லும் நேரத்தில், இயந்திரங்களைக் கொண்டுபோக அதிகமான செலவு ஏற்படுகிறது. அதைக் கட்டுப்படுத்தும் வகையில், ஒரு கண்மாய் வேலை செய்யும்போது, சுற்றியிருக்கும் வேலைகளையும் செய்யும் முறையில் வேலைகளைச் செய்யலாம். அப்படிச் செய்வதன் மூலம் சுற்றியிருக்கும் கண்மாய்களிலும் வேலை தொடர்ந்து செய்ய வசதியாக இருக்கும். மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், பல ஆண்டுகளாக நீர்த் தேக்கங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்படாத நிலை இருக்கிறது. அங்கே சோத்துப்பாறை, காக்கன் குளம் திட்டங்கள் இன்னும் முடியவில்லை. இன்னும் நிலக்கோட்டை வட்டத்தில் ராஜதானி கோட்டை திட்டம் போன்றவைகள் முடியவில்லை. என் தொகுதியில் தாடக நாச்சியம்மன் அணைக்கட்டு, தாதகவுண்டன்பட்டி நீர்த்தேக்கம் இவற்றை அன்-எகனுமிக் ஸ்கிம்கள் என்று எடுக்கவில்லை. அன்-எகனுமிக் ஸ்கீம் என்றால், ஒரு டன் உணவுப் பொருளுக்கு 3,000 ரூபாய் செலவிட்டால் அது அன்-எகனுமிக் என்று அரசு....

(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

* **திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மானியம் பற்றி சில கருத்துகள் சொல்ல விரும்புகிறேன்.

கருப்பாநதித் திட்டத்தை செயல்படுத்த உருவாக்கியிருப்பதற்கு நன்றி. ஆனால், 13 திட்டங்களுக்கும் சேர்த்து 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது கடலிலே காயம் கரைத்த மாதிரி வரக்கூடிய நிலை இருக்கக் கூடாதே என்று நினைக்கிறேன். சென்ற ஆண்டே திட்டத்தில் சேர்க்கப்பட விருந்தது. ஒரு வருஷம் கங்கரன்ஸ் இல்லை என்று ஒத்திவைக்கப்பட்டது. இப்பொழுது 13 திட்டங்களுக்கு சேர்த்து 50 லட்சம் ஒதுக்கியிருக்கிறது. இது காணாது. அதிகமாக ஒதுக்க வேண்டும். இர்ரிகேஷன் டெவலப்மெண்ட் போர்டு என்று நிறுவும் யோசனை இருக்கிறது என்று நினைக்கிறேன். அது பரிசிலனை செய்யப்பட்டு, தற்சமயம் ஒத்தி வைத்திருப்பதாக அறிகிறேன். அதைச் செய்தால் பாங்கிலும் பண வசதி கிடைக்கும். பஞ்சப் பிரதேசமாக இருப்பவற்றை சீர்ப்படுத்த வேண்டும். மூன்று பகுதிகளான வாசநல்லூர், கடையநல்லூர், ஆலங்குளம், இவைகளுக்குப் பயன்படும் கருப்பாநதி திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய பிரதம காரியதரிசி வந்தபோது, ப்ளான் பிரியட் உள்ள வேலைகளை அட்வான்ஸ் பண்ணப்பட வேண்டும் என்று சர்க்காருக்கு தெரியப்படுத்தியதாக கேள்விப்பட்டேன். அண்டர் கிரௌண்ட் வாட்டர் சம்பந்தமாக, திருச்சியில் டிவிஷன் வைத்திருக்கிறார்கள். மேல் தண்ணீர் வசதி இல்லை என்று இருக்கும் போது, அண்டர் கிரௌண்ட் வாட்டரைத்தான் எடுக்க வேண்டும். அப்படியிருக்கும்போது, திருச்சியில் டிவிஷனை வைத்துக் கொண்டால், அது வேலை நடக்காது. திருநெல்வேலியில் ஒரு ஏ.ஈ.





கூட போடவில்லை. திருநெல்வேலியில் ஒரு டிவிஷனையே வைக்கலாம். திருநெல்வேலி ராமநாதபுரம் இவற்றைச் சேர்த்து, கன்யாகுமரியையும் சேர்த்து, ஆரம்பத்தில் ஒரு ஏ.ஈ.-யையாவது போட்டு இன்வெஸ்டிகேட் செய்யலாம். இல்லையென்றால் இந்த பஞ்சப் பிரதேசங்களுக்கு புகலிடம் இல்லை. ஆகவே, உடனடியாக ஒரு ஸ்பெஷல் டிவிஷனைப் போட்டு, இன்வெஸ்டிகேஷன் செய்ய வேண்டும். நில நீர் வாய்ப்பில்லை என்றும் சொல்லிவிட்டு, 25 லட்ச ரூபாய்க்கு மேல் உள்ள திட்டங்களைப் பரிசீலனை செய்ய ஒரு டிவிஷன் திருநெல்வேலியிலே ஆரம்பித்து இருக்கிறார்கள். அந்த ஸ்பெஷல் டிவிஷனை பழைய பேப்பர்களை வைத்துக்கொண்டு ஸ்க்ரூடினைஸ் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். போய்க் கேட்டால், 25 லட்சத்திற்கு மேல் திட்டம் இருந்தால் கொடுங்கள் என்கிறார்கள். நம்முடைய அறிக்கை மேல் தண்ணீர் இல்லை என்று சொல்லுகிறது. எப்படி 25 லட்ச ரூபாய் திட்டம் நம்மிடம் இருக்கும்? அவர்களையே அண்டர் கிரௌண்ட் வாட்டர் ஸ்கீமை இன்வெஸ்டிகேட் செய்ய பயன்படுத்தலாம்.

கலெக்டர் கங்கரன்ஸ் சம்மந்தமாக, ரொம்பக் காலதாமதம் ஏற்படுகிறது. வருஷக்கணக்காக ஆகிறது. ஒரு சிஸ்டத்தில் உள்ள வேலைகளுக்கு கலெக்டர் கங்கரன்ஸ் தேவை இல்லை என்று முடிவு செய்யலாம். இரண்டு பகுதியினுள் வேலைகளுக்கு கலெக்டர் கங்கரன்ஸ் எதிர்பார்க்கலாம். அதுவும் ஒரு கால அளவு வைத்து கங்கரன்ஸ் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டும்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். சிலவேலைகளுக்கு இரண்டு மூன்று வருடங்களாகியும் கங்கரன்ஸ் வராமல் இருக்கிறது.

அடுத்து ரீ-ஆர்கனைசேஷனை எடுத்துக் கொண்டால் இன்று என்ன நிலையில் இருக்கிறது என்பதைப் பரிசீலனை செய்ய வேண்டும். இதைப்பற்றி அறிக்கையில் ஒரு வரியும் இல்லை. என்னைப் போன்றவர்கள் கேட்டால் ரெகுலர் ஓர்க்ஸ்தான் நடக்கிறது. ஒரு கால்வாய் இரண்டு தாலுக்காக்களில் செல்கிறது என்றால், அதை இரண்டு எக்சிக்யூடிவ் என்ஜினியர்கள் பார்க்க வேண்டியிருக்கிறது. தஞ்சாவூரிலே ஓரே எக்சிக்யுடிவ் என்ஜினியர்தான் ஒரு சிஸ்டத்தைக் கவனிக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் மூன்று பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள். இப்படி இரண்டு மூன்று எக்சிக்யூடிவ் என்ஜினியர்கள் ஒரு கால்வாயைப் பார்க்க வேண்டியிருக்கிறது. இதை மாற்றுவதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும்.

அடுத்து கூவம் திட்டத்தைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், இது வரவேற்கக்கூடிய திட்டம்தான். ஆனால் சென்னை நகரில் ஓடும் சாக்கடை கழிவு நீருக்கு என்ன வழி என்றே தெரியவில்லை.

சாக்கடை கழிவுநீர் கலந்துவிடுவதால்தான் துர்நாற்றம் ஏற்படுகிறது. சாக்கடை கழிவுநீருக்குப் புகலிடம்தர வேண்டும்.

அடுத்தபடியாக மைனர் இர்ரிகேஷன் எல்லாம் பழையபடியே ரெவின்யூ இலாகா, பஞ்சாயத் யூனியனிலும் இருந்துகொண்டிருக்கிறது. ரெவின்யூ டேங்க், பஞ்சாயத்து டேங்க் என்று இருக்கிறது. ஒரே மேற்பார்வையில் இவைகள் எல்லாம் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எலெக்ட்ரிசிடி போர்டில் இருக்கக்கூடிய என்ஜினியர்களுக்கும், பி.டபிள்யூ.டி.-யில் இருக்கக்கூடிய என்ஜினியர்களுக்கும் ஊதியத்தில் பாகுபாடு இருக்கக் கூடாது எலெக்ட்ரிசிடி போர்டில் இருக்கின்றவர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள் என்ற காரணத்தால் ஊதிய உயர்வு கொடுப்பது பொருத்தமல்ல. எல்லோரையும் சமமாகப் பாவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் திரு. எஸ். முருகையன் பேச அழைக்கப்பட்டார்.)

* திரு. எஸ். முருகையன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின்முன் வைத்துள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சென்ற ஆண்டு நிலவிய வறட்சியின்போது இந்தத் துறை செவ்வனே பணியாற்றியது மிகமிக பாராட்டப்பட வேண்டிய பிரச்சினையாகும். இந்தப் பாராட்டு பொதுப் பணித் துறை அமைச்சருக்கு மட்டுமல்ல, இந்தத் துறையைச் சேர்ந்த எல்லா அதிகாரிகளுக்கும் எல்லா ஊழியர்களுக்கும் உரித்தாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்ட நேரத்தில் அவர்கள் செய்த சேவை இருக்கிறதே, அந்த மாவட்ட மக்கள் என்றென்றைக்கும் மறக்க முடியாத அளவுக்கு அவர்கள் செய்திருக்கிறார்கள். குறிப்பாக குடி-நீர்ப் பிரச்சினைகள் ஏரி மராமத்துகள், வரத்துகக் கால்வாய்கள், ஊற்றுக் கால்வாய்கள் போன்றவற்றைச் சிறந்த முறையில் செப்பனிடச் செய்தார்கள்.

நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பாக குடிமராமத்திலே பல கால்வாய்களை அமைத்திருக்கிறார்கள். அதற்குப் பழைய காலத்தில் மக்கள் உழைப்பைக் கொடுக்கத் தயாராக இருந்தார்கள். ஆனால் இப்போதெல்லாம் அவர்கள் அதைச் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்த வேலைகளையெல்லாம் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வட ஆற்காடு மாவட்டத்திலே பல காட்டாறுகள் இருக்கின்றன. மழைக் காலத்தில் மழைத் தண்ணீர் இந்த ஆறுகள் பெருக்கெடுத்து ஓடி ஆறுகளிலும் சமுத்திரத்திலும் போய் சேர்ந்துவிடுகின்றன. இந்தத் தண்ணீர் எல்லாம் வீணாகிறது. ஆகவே, இப்படி வீணாகும் தண்ணீரை பாசனத்திற்குப்





பயன்படுத்த வேண்டும். இன்வெஸ்டிகேஷன் செக்ஷனிலே இதை நல்லவிதமாகப் பரிசீலனை செய்து ஆங்காங்கே தடுப்பு அணைகளைக் கட்டிக்கொடுத்து, தண்ணீரை ஏரிகளிலும், குளங்களிலும் நிரப்பி கொண்டால் பாசனத்திற்கு வசதியாகும். இதைச் செய்து கொடுத்தால் வட ஆர்காடு மாவட்டம் செழிப்படைவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையிலே பல ஏரிகளை வைத்திருக்கிறார்கள். மைனர் இர்ரிகேஷன்கீழ் பல ஏரிகள் இருக்கின்றன. இந்த ஏரிகளெல்லாம் செப்பனிடாத நிலையில் இருக்கின்றன. இவைகளை செப்பனிட ஊராட்சி ஒன்றியத்திலும், பஞ்சாயத்துக்களிலும் பணவசதி கிடையாது. ஆகவே, இந்த ஏரிகள் எல்லாம் செப்பனிடப்படாத முறையில் இருப்பதால் மழைத் தண்ணீர் தேங்கி நிற்க வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே, எல்லா ஏரிகளையும் பொதுப் பணித் துறையே எடுத்துக்கொண்டு, அவ்வப்போது செப்பனிட்டுத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எல்லா பாசன ஏரிகளையும் பொதுப்பணித்துறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, வட ஆர்க்காடு மாவட்டத்திலே இன்னும் பல புதிய ஏரிகளை அமைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. பல புதிய ஏரிகளை அமைத்துத் தர வேண்டும். இப்படிச் செய்தால் பாசனவசதிக்கு உதவி செய்ய முடியும். மேலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் பாலாறும், செய்யாறும்தான் ஓடுகின்றன. மேலும் இவை குறிப்பிட்ட சில பகுதிகளின் வழியாகத்தான் பாய்கிறது. ஆகவே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் இன்னும் பல புதிய ஏரிகளை அமைத்துத் தருவதற்கான சூழ்நிலை இருக்கிறது. அரசாங்கம் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி புதிய ஏரிகளை ஏற்படுத்த வேண்டும்.

ஒரு திட்டத்தை இன்வெஸ்டிகேஷன் செக்ஷனிலே பரிசிலனை செய்து, அரசாங்கத்திற்கு அனுப்பினாலும், அது ரெவின்யூ போர்டுக்குப் போகவேண்டும். சீப் என்ஜினியர் சிபாரிசு செய்தாலும் உடனடியாக எதுவும் நடப்பதில்லை. காலதாமதமாகிறது. புதிய ஏரிகளை அமைப்பதிலுள்ள தாமதத்தைத் தவிர்க்க வேண்டும். வட ஆர்க்காடு மாவட்டத்தில் போளூர் வட்டம் மேல் சோழகுப்பத்தில் புதிய ஏரி அமைக்க வேண்டுமென்று இரண்டு ஆண்டு காலமாக முயற்சி செய்தும் முடியவில்லை. கலெக்டருக்கும் முறையீடு செய்திருக்கிறோம். இது நல்ல திட்டமாக இருக்கிறது. இந்த ஏரியினால் 600 எக்கர் புஞ்சை நிலங்கள் நஞ்சையாகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து இதை உடனடியாகச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் 30 ஏக்கர், 40 ஏக்கர் என்று வைத்திருக்கக் கூடிய பெரிய விவசாயிகள் இல்லை. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று வைத்திருக்கக் கூடிய சிறிய சிறிய விவசாயிகள்தான் அதிகம் இருக்கிறார்கள். அவர்கள் கிணறு வெட்டி

பம்ப் செட் வைத்து பயிர் செய்கிறார்கள். சிறிய விவசாயி ஒரு கிணறுவெட்டி, பம்ப் செட் வைப்பது என்றால் அவனுக்கு அதிகம் செலவாகிறது. ஆகவே, அரசாங்கத்தின் சார்பாகவே சமுதாயக் கிணறுகளை வெட்டி, பம்ப் செட் போட்டுக் கொடுத்தால், இத்தகைய சிறிய விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கும். வறட்சி நிவாரணப்பணி வேலைகள் செய்தபோது 10 சமுதாயக் கிணறுகளை என் தொகுதியான கலசபாக்கம் தொகுதியில் வெட்டினார்கள். இதற்கு ஏறக்குறைய பத்தாயிரம், பதினைந்தாயிரம் ரூபாய் செலவாகிறது. அந்தக் கிணறுகளினால் ஒவ்வொரு கிணற்றிலும் இன்றைக்கு 40 ஏக்கர், 50 ஏக்கர் என்ற அளவில் பாசனத்திற்கு வசதியாக இருக்கிறது. ஆகவே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் இன்னும் அதிகமான சமுதாயக் கிணறுகளை வெட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சாத்தனூர் திட்டப் பகுதியில் வடிகால் வசதி வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் இருக்கின்றன. இதை உடனடியாகச் செய்து சாகுபடி வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் பாலார் பேசின் ரூல்ஸ் என்று இருக்கிறது. இதனால் விவசாயிகள் தொல்லைப்படுகிறார்கள். இந்த விதியின் காரணமாக யாருக்கும் அத்தாட்சி கிடைப்பதில் தாமதமாகிறது. தேவையில்லாத ஒரு சட்டத்தை வைத்துக் கொண்டு விவசாயிகளுக்குத் தொல்லை கொடுக்கிறார்கள். 1931-ம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்டத்திலே ஒரு திட்டம் போட்டு 40 ஆண்டுக் காலமாக வைத்துக் கொண்டு, ஒரு சர்டிபிகேட் பெறுவதற்கு ஒரு விவசாயி பஸ் சார்ஜ் போன்ற மற்ற செலவுகளுக்காக மொத்தம் 100 ரூபாய் அளவில் செலவு செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இதைக் குறித்து வட ஆர்க்காடு மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து அமைச்சர் அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்திருக்கிறோம். அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்துச் சாலைகள் நல்ல முறையில் செப்பனிடப்படாத நிலையில் இருக்கின்றன. பஞ்சாயத்து ஒன்றியத்திலும் அதற்கான பணம் இல்லை. என்னுடைய தொகுதியில் மேல்பாலூரிலிருந்து வீரளூர் வரைக்கும் உள்ள பஞ்சாயத்து யூனியன் சாலையை லட்சம் ரூபாய் செலவில் போட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ரோட்டைப் போட்டால் இந்தப் பகுதி மக்கள் வீரளூர் செல்ல பத்து மைல் குறையும். அந்த வேலையை இந்த ஆண்டே முடித்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. அ. மாரிமுத்து:** இந்த மானியக் கோரிக்கையின் மீது எனது கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில கருத்துக்களை இந்த அவையில் கூற ஆசைப்படுகிறேன்.





எங்களது தஞ்சை மாவட்டம் நஞ்சைக் காடுகள் நிறைந்த பகுதி என்பதை இந்த அவையில் உள்ள அத்தனை பேர்களும் அறிவார்கள். ஒரு காலத்தில் பகீரதன் பெருமுயற்சி செய்து கங்கையைக் கொண்டு வந்தான் என்று சொல்வது உண்டு. ஆயினும் மன்னியாறு, பழவாறு பாசன—அத்தனை விவசாயிகளும் எவ்வளவோ முயற்சி செய்தும் விவசாயத்திற்கேற்ற தண்ணீரைக் கொண்டுவர முடியவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மன்னியாறு, பழவாறு பற்றி முன்னே இருந்த பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும், இப்போதுள்ள பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் நன்கு அறிவார்கள். மழை பெய்தால்தான் மன்னியாறு, இல்லையென்றால் மணலாறு என்று அந்தப் பகுதியில் உள்ளவர்கள் சொல்வார்கள். பழவாற்றைப் பற்றிச் சொல்லப்போனால் ஏற்கெனவே ஒருகாலத்தில் அது மாயவரம் பகுதி நிலங்களுக்கு வடிகாலாக இருந்தது. சீர்காழி தாலுக்காவுக்குப் பாசனம் அளிக்க ஏற்பாடு செய்தவுடன் இந்தப் பகுதி மக்கள் வடிகால் பாசன வசதியின்றி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், பிரதம என்ஜினியர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவருகிறேன்.

மற்றொன்று. நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுவது என்னவென்றால், பொதுப்பணித்துறை ஆங்காங்குள்ள ஆறுகளை நல்ல முறையில் கவனித்து வருகிறார்கள். ஆனாலும் சிற்சில மிகப் பெரிய குறைகள் காணப்படுகின்றன. எனது ஆடுதுறை தொகுதியை எடுத்துக்கொண்டால் ‘பீமன் வாய்க்கால், நாறை வாயக்கால், பாண்டியன் வாய்க்கால், ஓடை வாய்க்கால், மண்ணி வாய்க்கால், எனப் பல பாசன வாய்க்கால்கள் இருக்கின்றன. இந்தத் தலைப்பு வாய்க்கால்கள் தூர் எடுக்கப்படுவதே கிடையாது. சரியான முறையில் பராமரிக்கப்படுவது கிடையாது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆற்றில் தண்ணீர் வந்தால் போதாது. இந்தத் தலைப்பு வாய்க்கால்கள் நல்ல முறையில் தூர் வாரப்பட்டு, பராமரிக்கப்பட்டு வந்தால்தான் ஆங்காங்கே நல்லமுறையில் விவசாயம் செய்ய முடியும். இதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

அதி தீவிர திட்டம் என்ற பெயராலே ஒரு போக நிலங்களை இருபோகமாக மாற்ற ஆங்காங்கே மகாநாடுகள் நடத்தப்படுகின்றன. கருத்தரங்குகள் நடக்கின்றன. அப்படி இருந்தும் திருப்பனந்தாள் பகுதியில் 32 ஆயிரம் ஏக்கரா நிலம் இருக்கிறது என்றால் 12 ஆயிரம் ஏக்கரா இதுவரை இருபோக சாகுபடி செய்யப்பட்டு வந்தவை ஆகும். தலைப்பு வாய்க்கால்களைச் சரிபடுத்தாத காரணத்தினால் இவ்வாண்டு 12 ஆயிரம் ஏக்கராவில் 6 ஆயிரம் ஏக்கராதான் இருபோக சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. பாக்கி 6 ஆயிரம் ஏக்கரா ஒரு போகத்தோடு நின்று விட்டிருக்கிறது. ஒருபோக

[திரு. அ. மாரிமுத்து] [1970 மார்ச் 25

நிலத்தை யெல்லாம் இருபோகமாகக் கொண்டு வரவேண்டுமென்ற முயற்சி நடக்கிற நேரத்தில் இப்படி இருபோகமாக இருந்த நிலம் ஒருபோகமாக ஆகியிருக்கிறது என்றால் அதி தீவிர திட்டத்தில், உணவு உற்பத்தியில் நமக்குள்ள அக்கறைதான் தெரிகிறது. ஆகவே தலைப்பு வாய்க்கால்களைத் தூர் எடுத்துப் பராமரிக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பழவாற்றின் இரு மருங்கிலும் பத்து கிராமங்களுக்கு மேல் இருக்கின்றன. அவர்கள் அந்த ஆற்றில் ஒரு பாலம் கட்டித் தர வேண்டுமென்று அமைச்சரிடத்திலும், அதிகாரிகளிடத்திலும் பலகாலமாக விண்ணப்பம் கொடுத்து வருகிறார்கள். இதுவரை பாலம் கட்டப்படவில்லை. அவர்களே கரைகளை உடைத்து அதிகத் தண்ணீர் இல்லாத காலங்களில் பாலம் கட்ட முயற்சிக்கிறார்கள். மழைக் காலங்களில் அந்த இடங்களின் மூலமாக வெள்ளம் புகுந்து சாகுபடி செய்யப்படுகிற நிலங்களை பாதிக்கிறது. ஆகவே உடனடியாக ஒரு பாலம் கட்டித்தர வேண்டும் என்றும், தலைப்பு வாய்க்கால்கள் பராமரிக்கப்பட வேண்டுமென்றும் ஆடுதுறைப்பகுதி விவசாய மக்கள் சார்பில் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. என். வரதராசன்:** தலைவர் அவர்களே, வறட்சி பகுதி பிற்பட்ட பகுதிகளுக்கு ஒரு தனி முக்கியத்துவம் கொடுத்து இந்தப் பாசன திட்டங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டும். மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர் பகுதி மிகவும் வறண்ட பகுதியாகும். அது வளம்பெற குடவனாற்றில் ஒரு அணை கட்ட வேண்டுமென்று பலகாலமாக வற்புறுத்தி வருகிறார்கள். உடனடியாக இவ்வாண்டிலாவது அது வருவதற்கு முன் முயற்சி எடுத்துக்கொண்டு அதைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன். வேடசந்தூரில் லட்சுமணப்பட்டி அருகே அந்த அணை கட்டப்பட வேண்டும். அதுதான் உபயோகமாக இருக்கும். கரூர் பகுதிக்குத் தண்ணீரைக் கொண்டுபோக முயற்சி எடுக்கப்படுகிறது என்று பலர் கருதுகிறார்கள். ஓரளவு திருச்சி மாவட்ட கரூர் பகுதி பாசன வசதியுள்ள இடம். ஆகவே, அடியோடு பாசன வசதியற்ற இந்த மதுரை மாவட்ட வேடசந்தூர் பகுதிக்குப் பயன்படுகிற அளவு குடவனாறு திட்டத்தை லட்சுமணப்பட்டி அருகே எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த, திண்டுக்கல் வட்டத்தில் மருதாநதி திட்டம் பற்றி 1967-ம் ஆண்டிலேயே பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஒன்றும் நடக்கவில்லை. அந்த அணையை பீலிகரட்டில் கட்ட வேண்டுமென்று மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுகளும், காங்கிரஸ்காரர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் சொல்லி வருகிறார்கள். ஆனால் பாண்டியன் என்ற நினைவுப்பிரபுவின் ஆட்சேபனை காரணமாக அது தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.



1970 மார்ச் 25] [திரு. என். வரதராசன்]

அமைச்சர் அவர்களே அதை வந்து பார்வையிட்டார்கள். யார் எதிர்த்தாலும் கவலைப்படாது அந்த அணையைப் பீலிகாட்டில் கட்ட வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

குந்தா கழிவுநீர் அணைத் திட்டம் வற்புறுத்தப்பட வேண்டும். மத்திய சர்க்காரிடத்தில் கேட்டால் அதுபற்றிய தகவல் மாநில சர்க்காரிடம் இருந்து எங்களுக்கு வரவில்லை என்கிறார்கள். பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து கொண்டுவர வேண்டும். அப்போதுதான் அவிநாசி, பல்லடம் போன்ற இடங்களில் உள்ள நீர்ப் பற்றாக்குறையை சமாளிக்க முடியும். ஆகவே இதையும் கொண்டுவர முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திண்டுக்கல் குடிநீர்த் திட்டத்தை எடுத்துக் கொண்டால் ஒரு கோடி செலவிட்டிருக்கிறார்கள். ஆயினும் அந்த காமராசர் குடிநீர் திட்டத்தினால் முழுமையான பயன் ஏற்பட்டிருக்கிறதா என்றால் கேள்விக்குறியாகவே இருக்கிறது. அந்த நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர் வராதபடிக்கு ஒரு சிலர் சுவர் எழுப்பித் தடுத்திருக்கிறார். இதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் வந்திருக்கின்றது. நேரே சென்று மாவட்ட கலெக்டர் பார்வையிட்டிருக்கிறார். ஆயினும் அந்தத் தடுப்புச் சுவர் அகற்றப்படவில்லை. நானும் திரு. எ. பாலசுப்பிரமணியன், எம்.எல்.ஏ., அவர்களும் நேரில் சொல்லி விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம். உடனடியாக அந்தத் தடுப்புச் சுவர் அகற்றப்பட்டு போதுமான தண்ணீர் வரத்துக்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என் பகுதியில் வல்லகண்ட சமுத்திரம் என்ற பெரிய குளம் இருக்கிறது. அது தூர்வாரப்பட்டு, பராமரிப்புச் செய்யப்பட 2 லட்சம் ஆகும். அதை உடனடியாக செய்தால் நூற்றுக் கணக்கான ஏக்கராக்கள் பாசனம் பெறும். அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் வறட்டாறு திட்டம், ராஜாக்கவுண்டன் பட்டிக்குளத் திட்டம் ஆகியவற்றைச் சிறப்பு சிறுபாசனத் திட்டங்களின் கீழ் ஆரம்பிக்க வேண்டும்.

அடுத்து காண்டிராக்ட் முறையை படிப்படியாக ஒழித்து விடுவது என்கிற திட்டத்தை கொள்கை அடிப்படையில் ஏற்றுச் செயல்படுத்த வேண்டும். காண்ட்ராக்ட் வேலைகள் மோசம் என்பதை அறிவோம். அதனால் வேலைகளும் சிறப்பாக அமைவதில்லை. ஊழலுக்கும் இடமளிக்கிறது. இவர்கள் பணம் சம்பாதிக்கும் காண்ட்ராக்டர்கள் மட்டுமல்ல, பல பகுதிகளில் அரசியல் காண்ட்ராக்டர்களாகவும் இருக்கிறார்கள். காண்டிராக்ட் வேலையை விட நாமே செய்கிற வேலைகள்தான் சிறப்பாக அமைகின்றன. ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை அளிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே காண்டிராக்ட் முறையையே படிப்படியாக ஒழிக்க வேண்டும். ஒர்க் சார்ஜ் சிப்பந்திகளை நிரந்தரமாக்க வேண்டுமென்று முதல் சம்பள கமிஷன் அறிக்கை

யிலே சொல்லியிருக்கிறது. இப்பொழுது இரண்டாவது சம்பளக் கமிஷன் அமைத்திருக்கிறோம். பக்கத்திலே உள்ள கேரள மாநிலத்திலே அவர்கள் நிரந்தரமாக்கப்பட்டு இருக்கிறார்கள். 40 ஆயிரம் பேர்கள் ஒர்க் சார்ஜ் சிப்பந்திகளாக பணியாற்றுகிறார்கள். வேலை நிரந்தரம் இல்லை. பிராவிடன்ட் பண்டு வசதியில்லை. இதர எந்த வசதியும் இல்லை. இவ்வாறு 20 ஆண்டுகள் உழைத்தவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். காங் மஸ்தூர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக ரோடுகளைப் போடுவதற்குத் தேவைப்படுகின்ற காரணத்தினால் மராமத்து வேலைகளைச் செய்வதற்கு தேவைப்படுவதால் அவர்களை உடனடியாக நிரந்தரமாக்க வேண்டும். இது பரிசீலனையில் இருப்பதாக இந்த அறிக்கையிலே படித்தேன். பரிசீலனையில் இருப்பதை விரைவாக அமலாக்க வேண்டும்.

ரோடுகளைப் பொறுத்தவரையில், நகரசபைகளும் பஞ்சாயத்து யூனியன்களும் அவற்றைப் பராமரிக்க முடியாது. லாரிகள், பஸ்கள் பிளஷர்கள் ஓடி ஓடி ரோடுகள் தேய்ந்து விடுகின்றன. ஆனால் மாநில அரசும் மத்திய அரசும் வருமானத்தைப் பெற்றுக் கொள்கின்றன. நகரசபைகளும் பஞ்சாயத்துக்களும்தான் ரோடுகளை செப்பனிட வேண்டிய நிலைமை வருகின்றது. ஆனால் அவற்றினால் செய்ய முடியவில்லை. கிராமத்தில் உள்ள உட்புற ரோடுகள், நகரத்தில் உள்ள சந்து ரோடுகள் இவற்றை மட்டிலும் அந்த மன்றங்கள் போட்டுக் கொள்ளலாம் என்றும் மற்ற இணைப்புச் சாலைகள், பெரிய சாலைகளை மாநில அரசு ஏற்று பராமரிப்புச் செய்ய வேண்டும். இந்தப் பள்ளம் மேடு குழிகளை நிரப்புவதற்கு ஊராட்சிகளாலே முடியாது.

கூவம் சீரமைப்புத் திட்டம் இன்றைக்கு நடந்து வருகிறது. சிறப்பான திட்டம்தான் அமலாக்கப்பட வேண்டுமென்றுதான் என்னுடைய கட்சி எண்ணுகிறது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சரியான முறையிலே கான்ட்ராக்ட் விடவில்லை, இடையிலே தவறுகள் நடப்பதாகத் தகவல்கள் வருகின்றன. அங்கே உள்ள அதிகாரிகளிடத்திலே பொறியாளர்களிடத்திலே சர்ச்சைகள் இருப்பதாகத் தகவல் வருகின்றன. அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் சிறப்பான திட்டம் என்று சொல்லலாம். ஆனாலும் சிறப்புக்குள்ள சில சிறுமைகளும் இருக்கலாம் என்பதை உணர்த்துகிறேன். லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்ற இந்த திட்டத்தில் ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய இந்தத் திட்டத்தில் சில நபர்கள் புகுந்து பணத்தை விரயமாக்கக் கூடியதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக சேது சமுத்திரத் திட்டம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். பொதுப்பணித் துறை அறிக்கையிலே இந்தத் திட்டம் 1956-ஆம் ஆண்டிலே பரிசீலனை ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்லப்



பட்டு இருக்கிறது. இப்பொழுது நாம் 1970-லே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். இது சிறப்பான திட்டம் என்று சொல்கிறோம், இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் ஆண்டுக்கு இரண்டரைக் கோடி ரூபாய் கிடைக்கும் என்று சொல்கிறோம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றிய பிறகு 10 ஆண்டுகளுக்குப் பிறகு 10 கோடி ரூபாய் வருமானம் வரும் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் ஆரம்பிக்கப்பட்டாலும் சேது சமுத்திரத் திட்டம் அமல் நடத்தப்படாவிட்டால், தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டமே பயன் உள்ள திட்டமாக இருக்காது என்று கருதப்படுகிறது. இன்னும் மத்திய அரசின் அனுமதியைப் பெறவேண்டிய நிலைமையிலேதான் நாம் இருக்கிறோம். சேலம் இரும்பாலைத் திட்டத்தைப்போல், கல்பாக்கம் அணுமின் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தைப்போல், நெய்வேலித் திட்டத்தின் இரண்டாவது சுரங்கத்தைப் போல், சேது சமுத்திரத்தையும் மிக முக்கியமானது என்று கருதி உடனடியாக நிறைவேற்றுவதற்கு விரைவான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த வேலைகளைச் செய்கிறபோது நான் கடைசியாக வற்புறுத்துவது எல்லாம் காண்ட்ராக்ட் முறையை மாற்ற வேண்டும். ஒர்க் சார்ஜ் சிப்பந்திகளை, காங் மஸ்தூர் சிப்பந்திகளை, ரோடுகள் வேலைசெய்யும் சிப்பந்திகளை நிரந்தரமாக்கி அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். கணேசன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பல அரிய செயல்களை, குறிப்பாகப் பொதுப்பணித் துறையிலே சிறப்பாக நீர்ப்பாசனத் துறையிலே செய்த, செய்வதற்கு வழிவகுத்துள்ள இந்த அரசை நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன். வறட்சி துயர் தணிப்புப் பணிகளில் தமிழக அரசு ஆற்றிய சாதனை இமாலய சாதனை என்பதை நாடு அறியும். இந்தத் துறையிலே முயன்று பணியாற்றும் தமிழக அரசையும் அதன் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு கலைஞர் அவர்களையும் நான் பாராட்டுகிறேன். அதுபோல குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு எடுத்துக் கொண்ட பல்வேறு முயற்சிகளும் பாராட்டுக்குரியன. சாதனைகள் என்றாலும், செய்யப்பட வேண்டிய நல்ல காரியங்கள் நிரம்ப இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, அவற்றை அவர்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையைப் பொறுத்தவரையில் பொதுப்பணித் துறை ஆற்றிய காரியங்கள் மிக மகிழ்ச்சியளிக்கத் தக்கனவாக இருக்கின்றன. தஞ்சைப் பகுதியிலே மழை பெய்யும், அதே நேரத்திலே அணை நீரும் நிறையத் திறந்து விடப்படும். மழை நீரும், ஆற்று நீரும் சேர்ந்து வெள்ளக்காடாகப் பெருக்கெடுத்து வெள்ளத்தைத் தடுப்பது என்பது பெரிய காரியம் என்ற நிலைமை இருந்தது. ஆனால் அப்படியில்லாமல் தண்ணீரை வினியோகிக்கின்ற முறையில்

சீரான முறையைக் கையாள்வதால் கடந்த இரண்டு ஆண்டுகளாக நீர்ப் பற்றாக்குறை தவிர்க்கப்படுகிறது. வெள்ளமும் அதிக மில்லாத நிலைமை இருக்கிறது. புதிய ஆற்றுப் பாசனப் பகுதியில் வண்டல் பல ஆண்டுகாலமாக அகற்றப்படாமல் மேடிட்டுப் போதுமான தண்ணீர் விடமுடியாத நிலை இருந்தது. 4,000 க்யூசெக்ஸ் என்று திட்டமிடப்பட்டிருந்தாலும் 3,000 க்யூசெக்ஸ் தண்ணீர் விட்டவுடனேயே உடைப்பெடுக்கின்ற நிலைமையும் இருந்தது. எட்டு மைல் நீளத்திற்கு இருந்த வண்டலை அகற்றி இப்பொழுது 4,000 க்யூசெக்ஸ் தண்ணீர் விடக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதோடு மராமத்துச் செய்யப்படுவதில் ஆறுகள், கிளை ஆறுகள், வாய்க்கால்கள், கிளை வாய்க்கால்கள், குளம் இவற்றில் மராமத்துச் செய்வதிலே நல்ல முறையிலே தீவிரமாக ஈடுபட்டு வருகின்ற இந்த அரசை நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

குறிப்பாக, தஞ்சை, தஞ்சை என்றாலே எல்லோரும் நெற்களஞ்சியம் என்று நினைக்கிறார்கள், தஞ்சையிலே கீழ்த் தஞ்சை இருக்கிறது, மேலத் தஞ்சை இருக்கிறது. கீழ்த் தஞ்சையிலே தண்ணீர் இருக்கும், வெள்ளத்தால் பாதிக்கப்படுகிற வாய்க்கால்கள் வடிகால்கள் இருக்கிற நிலைமையில் உள்ளது. மேலத் தஞ்சை பகுதி புதிய ஆற்றுப் பாசனப் பகுதி என்று சொல்லப்படுகிற பகுதி நீர் குறைவாகப் பெறுகின்ற பகுதி, கடைமடைப் பகுதிகளிலே ஒவ்வொரு ஆண்டும் வரிவஜா செய்யக்கூடிய நிலைமையில் உள்ள பகுதி மேல் தஞ்சைப் பகுதியைப் பொறுத்தவரையிலும் திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று மட்டுமல்ல, உடனடியாக நிறைவேற்ற வேண்டும், இல்லையென்றால் தமிழகம் எதிர்காலத்திலே உணவுத் துறையிலே பெரிதும் அஞ்சத்தக்க நிலையை அடைந்துவிடும். இப்பொழுது மைசூர் அரசுக்கும், தமிழக அரசுக்கும், ஏற்பட்டிருக்கிற இந்த நெருக்கடி குறிப்பாக காவிரி நதியிலிருந்து பெறுகின்ற நீர் அணைகளில் நிச்சயமாகப் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த நேரத்திலே தஞ்சைப் பகுதியிலே குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக பூர்வாங்க வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. கடன் கேட்டு இருக்கிறோம், கடன் கிடைத்தவுடனே நிறைவேற்றப்படும் என்று எல்லாம் சொன்னாலும்கூட இதிலே முக்கியமான கவனம் செலுத்தப்பட வேண்டும். புதிய புதிய ஆற்றுப் பாசனப் பகுதியிலே மூன்றில் ஒரு பங்கு மேடாகவே இருக்கிறது. குழாய்க் கிணறுகள் என்று நான் சொல்லும்பொழுது தனியார்கள் குழாய்க் கிணறுகள் தோண்டுவதற்கு அரசு கொடுக்கின்ற நிலைமையினைப்பற்றிச் சொல்வதாகக் கருதக் கூடாது. அப்படியென்றால் ஊருக்கு ஒருவர் இரண்டு பேர்கள்தான் அவற்றைப் போட முடியும். காரணம் என்னவென்றால், 30 ஏக்கர், 35 ஏக்கர் என்ற அளவுக்கு மிகப் பெரிய அளவில் உள்ள இடத்தில் குழாய்க் கிணறு தோண்டுகிற அளவுக்குப் பொருளாதாரம் இல்லை.



பொருளாதாரம் இருந்தாலும் 35 ஏக்கர் நிலம் ஒரே இடத்தில் இருப்பதில்லை. எனவேதான் அரசு தானே ஆழ் குழாய்க் கிணறுகளைத் தோண்ட வேண்டும். அதற்கான செலவை அரசு முதலீடு செய்ய வேண்டும். பிறகு அதை ஆயக்கட்டுதாரர்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் விதை விதைப்பதற்கு 15 நாட்கள் முன்னாலேயே தண்ணீர் விட வேண்டியதில்லை, 15 நாட்களுக்குப் பின்னாலே அணையிலிருந்து தண்ணீர் விடலாம். தண்ணீர்ப் பற்றாக்குறை வருகிற நேரத்திலே மாற்றுத் திட்டமாகவும் இதைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நீரேற்று நிலையங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வருகிறோம். இருபத்திரண்டு லட்ச ரூபாய் செலவில் ஒக்கநாடு-கீழையூர் நீரேற்று நிலையம் அமைத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதேபோன்று பல இடங்களில் அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற வாய்ப்புகள் இருக்கின்றன என்று பல முறைகள் சொல்லியும், அதிகாரிகளை அணுகிக் கேட்டுக் கொண்டு, பலமுறை அமைச்சர் அவர்களிடத்திலே மனுக் கொடுத்தும் அவர்கள் வருகின்ற நேரங்களில் வேண்டுகோள் விடுத்தும் பயனில்லாத நிலைமைதான் இருக்கிறது.

ஜம்புகாவிரி வாய்க்காலில் அரசுப்பட்டு என்ற இடத்திலும் உளூர் பக்கத்திலே தும்பத்திக்கோட்டை என்ற இடத்திலும் ஆவிக்கோட்டைக்குப் பக்கத்திலே உள்ள ஏரியிலும், வேடங்குறிக்குப் பக்கத்திலே சோழன்குடிக்காடு, பொய்ந்தான்குடிகாடு போன்ற இடங்களிலும் நீரேற்று நிலையங்கள் ஏற்படுத்தலாம்.

இப்படிப் பல திட்டங்கள் இருக்கின்றன. அந்த நீரேற்று நிலையங்கள் வரும்போது ஆற்று நீரை மட்டும் நம்பாமல் வேறு துறையிலும் பெருக்கிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஒரத்தநாடு கீழூரில் 22 லட்சம் ரூபாயில் திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். சிலவேளைகளில் கழிவுநீர் வாய்க்காலாக இருப்பதால் உறுதியாக எப்போதும் நீர் வரும் என்ற உத்தரவாதம் அளிக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இரண்டு அல்லது மூன்று ஆழ் குழாய்க் கிணறுகளைத் தோண்டி கழிவு நீர் தண்ணீர் வராதபோது கிணற்றுத் தண்ணீரைப் பாய்ச்சி, அந்தப் பகுதியைப் பாசனத்திற்கு உறுதி செய்ய வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் ஆற்றுப் பாசனம் வந்த பிறகு பேடன்ட் டாங்க்ஸ் என்று சொல்லி பல ஏரிகளை மராமத்து செய்வதைக் கைவிட்டு விட்டார்கள். இப்போதும் மராமத்து செய்யப்படக் கூடிய ஏரிகளை உடனடியாக மராமத்து செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அதிலே ஒரு இடர்ப்பாடு இருக்கிறது. அதிலே ஆக்கிரமித்துக் கொண்டுள்ளவர்களை அப்புறப்படுத்த முடியாத நிலையில் ஏரிகளைத் தக்கவகையில் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. என்னுடைய தொகுதியில் அருமைந்தேரி என்ற ஏரி

இருக்கிறது. அதிலே இருக்கும் வண்டலைப் போக்கி, ஆழப்படுத்தி, அதிகப்படியாக வருகின்ற தண்ணீரைத் தேக்கி வைக்க வேண்டும். இவை சிறு சிறு திட்டங்களானாலும் பயனுள்ள திட்டங்கள். இந்தத் திட்டங்களை நிறைவேற்றினால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் தஞ்சை மாவட்டமே எல்லாப் பகுதிகளுக்கும் உணவு தானியத்தைக் கொடுக்கக் கூடிய நிலையை அடையும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எல்லா நிலங்களையும் இருபோக நிலமாக மாற்ற வேண்டுமென்று சொல்லி தீவிரமாக முனைந்து ஈடுபட்டிருக்கும் நேரத்தில், பாசனத் துறையில் விரிந்த கவனத்தை செலுத்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன். நன்றி.

* **திரு. தொ. க. சிறைமீட்டான்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த நீர்ப் பாசன மானியத்தை ஆதரித்துச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கடந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலையில் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டத்தினால் 3 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கி, இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிதண்ணீர் இல்லாத கிராமங்களுக்குக் குடிதண்ணீர் திட்டம், கண்மாய்கள், கால்வாய்கள் சீரமைப்பு போன்ற நல்ல திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதற்காக அந்தப் பகுதி மக்கள் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அதே போல் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட மனுநீதித் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட அலுவலர்களும் 5—6—1969 முதல் 5—3—1970 முடிய 1,006 கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள விவசாயிகள், பொதுமக்களிடமிருந்து 72,233 மனுக்களைப் பெற்றுள்ளார்கள். 5—2—1970 முடிய 51,092 மனுக்களின் பேரில் அனுமதி வழங்கி யிருக்கிறார்கள். மற்ற மனுக்கள் பரிசீலனையில் இருக்கின்றன. இந்தத் திட்டம் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு விவசாயக் கிணறுகளைத் தோண்டவும், அரசாங்கக் கடன்களை வாங்கவும் நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கிறது என்பதற்காக அந்தப் பகுதி மக்கள் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த காலத்தில் காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக் காலத்தில் வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் என்று சொல்லிக் கொண்டே வந்தார்களே தவிர செயல்படுத்தவில்லை. நமது அரசு பொறுப்பேற்றுக் கொண்டபிறகு அந்தத் திட்டத்திற்காக பேரறிஞர் அண்ணா அவர்களால் நான்கு கோடி ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டு, அப்போது பொதுப்பணி அமைச்சராக இருந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு ரூ. 31.86 லட்சம் ரூபாய் ஒதுக்கி



உள்ளார்கள். இதை இராமநாதபுரம் மாவட்ட மக்கள், குறிப்பாக கிழக்கு இராமநாதபுரம் மக்கள், விவசாயிகள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் நிறைவேறினால் வறண்ட பகுதியான கிழக்கு இராமநாதபுரம் பகுதி முன்னேற வாய்ப்பாக இருக்கும் என்பதை அந்தப் பகுதி மக்கள் மனதில் கொண்டு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

வைகை ஆற்றிலிருந்து பிரிந்து செல்லும் பல கால்வாய்கள் ஜமீன்தார் காலம் தொட்டு குடிமராமத்தின்கீழ் இருந்து வருகிறது. இதைப் பற்றிப் பொதுப்பணி அமைச்சர் அவர்களிடம் கருத்தரங்கில் கூடக் கூறியிருக்கிறேன். மாவட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் அனைவரும் இதைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதைப் பொதுப்பணித் துறையினரே ஏற்று பராமரிப்புச் செய்தால்தான் அந்தப் பகுதியில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் விவசாயிகள் கிடைக்கும் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பாகவும், வசதியாகவும் இருக்கும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பல கண்மாய்கள், ஆர். ஆர். ஆக்டினால் மராமத்து செய்யப்பட முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. அந்தக் கண்மாய்களை எல்லாம் உடனடியாக மராமத்து செய்ய சிறப்புத் திட்டம் தீட்டி நிறைவேற்றித் தர வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தில் மழை பெய்தாலும் புயலோடு பெய்யும். மழை இல்லாவிட்டாலும் தொடர்ந்து வறட்சியாக இருக்கும். இந்த ஆண்டு கூட வறட்சியால் பாதிக்கப்பட்டுத்தான் இருக்கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்டாலும், தமிழக அரசு நம்மைத் தளர விடாது என்ற தைரியத்தோடு அந்தப் பகுதி மக்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் நீர்ப்பாசன வசதி பெருக வேண்டுமென்றால் ஆர். ஆர். ஆக்டின் கீழ் இருக்கும் கண்மாய்களை சிறப்புத் திட்டத்தின்கீழ் எடுத்து ஆழப்படுத்தி, அந்தப் பகுதியில் விவசாயத்தைப் பெருக்க வழி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை குளம் கோர்வை புஞ்சை நிலங்களை அந்தப் பகுதி விவசாயிகள் தொன்று தொட்டு சொந்தமாக, பட்டா நிலமாக அனுபவித்து வந்தார்கள். காங்கிரஸ்காரர்கள் ஆட்சிக் காலத்தில் திடீரென்று அந்தப் பட்டாவை நீக்கிவிட்டார்கள். பரமக்குடி வட்டத்தில் மட்டும் அந்த மாதிரி பட்டாவிலிருந்து நீக்கப்பட்ட நிலங்களின் மொத்த விஸ்திரணம் 8,500 ஏக்கராகும். இதிலே வசதி பெற்றவர்கள் மட்டும் நீதிமன்றங்கள் மூலம் செட்டில்மென்ட் வாங்கி தங்களுடைய பட்டாவைத் திரும்ப வாங்கிக் கொண்டார்கள். ஆனால் விவரம் தெரியாத ஏழை எளிய விவசாய மக்கள் தண்டத் தீர்வை செலுத்தும் அவல நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். பொதுப்பணித் துறையினால் அங்கிகரிக்கப்பட்டால் தான் பட்டா கிடைக்கும் நிலைமையிருக்கிறது. 22 நாளைக்கு மேல் தண்ணீர் தேங்கும் இடத்திற்குப் பட்டா கொடுக்கக் கூடாது

என பொதுப் பணித் துறையினர் ஆணையிட்டிருக்கிறார்கள். ஆகவே தான் இதைக் கூற வேண்டிய அவசியம் இருக்கிறது. தொடர்ந்து மூன்று மாதம் மழை பெய்தால் கண்மாய்களில் தண்ணீர் இருந்து கொண்டே இருக்கும். அந்த நிலங்களையெல்லாம் குளம் புஞ்சை என்று கூறமுடியுமா? தவிர, அதை விவசாயம் செய்யும் நிலம் என்று தான் கூற முடியும். வசதி உள்ளவர்கள் நீதி மன்றத்தின் மூலம் பட்டாவைத் திரும்பப் பெற்றுள்ளார்கள். அதே போல் ஏழை எளிய விவசாயிகளுக்கும் அந்தப் பட்டாவை வழங்க அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி இதைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நயினார் கோயில், தேவிப்பட்டணம் ரோடு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டும் இன்னும் நிறைவேற்றப் படவில்லை. நானும் அமைச்சர் அவர்களும் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்த நேரத்தில் அந்த இடத்தை விட்டு வர முடியாத சூழ்நிலையில் இரண்டு மணி நேரம் தாமதிக்க நேரிட்டது. நாங்கள் அங்கிருந்து வருவதற்கு அந்தப் பகுதி கிராம மக்கள் உதவினார்கள். அந்தப் பகுதி, போகலூர் பஞ்சாயத்து யூனியன் பகுதி பாதிக்கப்பட்ட பகுதி. அந்தப் பகுதி கடந்த 20 ஆண்டுக் காலத்தில் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. அறுபத்தி நான்கு பஞ்சாயத்துக்கள் கொண்ட அந்தப் பகுதியில் காங்கிரஸ் காரர்கள் பெரிய அளவில் இல்லாத காரணத்தால், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அதிகமாக இருந்த காரணத்தால் அந்தப் பகுதி மிகவும் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. நயினார் கோயில்-தேவி பட்டணம் ரோட்டை இந்த ஆண்டு செயல்படுத்தித் தர வேண்டுமென்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*** திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, இந்த நீர்ப்பாசன மானியக்கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

நமது தமிழ் நாட்டில் பெரிய நீர்பாசனங்கள் இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. விவசாயம் பெருக நீர்நிலைகள் நல்ல முறையில் இருக்க வேண்டும். குறிப்பாக ஒன்றைச் சொல்லிக் கொண்டிருந்தோம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே கிருஷ்ணா கோதாவரித் தண்ணீரை நம் மாநிலத்திற்குக் கொண்டு வந்தால் செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களுக்கு நல்ல முறையில் விவசாயத்திற்குப் பயன்படும், பாசனத்திற்கு வசதியாக இருக்கும் என்று சொன்னோம். 1962-66 வரை இந்த மன்றத்தில் அதுபற்றி பல நேரங்களில் பேசப்பட்டது. ஆனால் 1967-க்குப் பிறகு அந்த வார்த்தையை யாரும் எழுப்புவதாகக் கூடக் காணோம். அதை கைவிட்டு விட்டார்களா அல்லது அது உயிரோடு இருக்கிறதா என்று தெரியவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் அதற்கு தக்க பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இப்போது கூவம் நதி சீர்திருத்தத் திட்டத்தின்கீழ் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்தக் கூவம் நதி சீர்திருத்தத்தினால் எந்த அளவிற்கு நமக்குப் பலன் கிடைக்கும், எந்த அளவிற்கு அது சாதகமாக இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். கிருஷ்ணா கோதாவரித் தண்ணீரைக் கொண்டு வருவது என்றால் பல கோடி ரூபாய் செலவாகும் என்று கூறுகிறார்களே, அதற்காகச் சொல்கிறேன். கிருஷ்ணா கோதாவரித் தண்ணீர் வந்தால் அந்தத் தண்ணீரில் ஒரு பகுதியைக் கூவம் நதியில் விட்டால் நாம் எவ்வளவோ ஆண்டுகளாக வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிற அந்த நாற்றம் மாறி அத்தண்ணீர் சமுத்திரத்தில் போய்ச் சேர்ந்து விடும். இது முடியுமா முடியாதா என்பது பற்றி நான் கூற விரும்பவில்லை. ஆனால் இதுகுறித்துப் புனராலோசனை செய்யும்படி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இந்த நதிகள் எல்லாம் என்ன காரணத்தினாலோ—நம் துர்பாக்கியம்—நம் நாட்டில் உற்பத்தியாகி சமுத்திரத்தில் கலப்பதில்லை. வேறு மாநிலங்களில் உற்பத்தியாகிறது. அதை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற அளவில் இருக்கிறோம். கேரளம், மைசூர், ஆந்திரா போன்ற மாநிலங்களில்தான் அந்த ஜீவ நதிகள் உற்பத்தியாகின்றன. அப்படி நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற எல்லா நதிகளும் அண்டை மாநிலங்களில்தான் உற்பத்தியாகின்றனவே தவிர நம் மாநிலத்தில் அப்படி ஒன்று கூட இல்லை என்பதற்காக மத்திய அரசை அணுகி நம் நாட்டில் சமுத்திரத்தில் கலக்கும் ஜீவநதிகளை எல்லாம்—பாங்குகளை அரசாங்கம் தேசிய மயமாக்கியிருப்பதைப் போல் ஜீவநதிகளை எல்லாம்—தேசிய மயமாக்கி நமக்கும் அதில் பங்கு உண்டு என்றும் நமக்கும் அவற்றின் நீரைக் கொடுக்கவேண்டும் என்ற முறையில் மத்திய அரசை வற்புறுத்தி நல்லதொரு வழிவகையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, சாத்தனூர் அணை இரண்டாம் நிலை முடிந்திருப்பதாகக் கருதுகிறேன். சாத்தனூர் அணையின் நீர்தேக்கத்திற்கு வடபுறத்தில்தான் தண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் தென்புறத்திலும் ஓரளவிற்குத் தண்ணீர் விட்டால் கள்ளக்குறிச்சி தாலூகாவில் உள்ள கிராமங்களுக்கு, பல ஏரிகளுக்குத் தண்ணீர் கிடைக்க வழி ஏற்படும். ஆகவே அதையும் ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாத்தனூர் அணையிலிருந்து வீடூர் அணைக்குத் தண்ணீர் வர ஏதாவது வழி இருக்கிறதா இல்லையா என்பதை நான் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதற்கு யாரும் பதில் கூடச் சொல்லவில்லை. என்ஜினியரிங் டிப்பார்ட்மென்டால் அதைச் செய்ய சாத்தியப்படுமா படாதா என்பது தெரியவில்லை. ஆகவே அதுகுறித்து மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சாத்தனூர் அணையிலிருந்து ஒரு கிளையாவது வீடூருக்கு விட்டால் வீடூர் நீர்தேக்கத்தின்கீழ் உள்ள பல கிராமங்கள், ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள்

[திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்] [1970 மார்ச் 25

பாசன வசதி பெறமுடியும். விடூர் நீர்த்தேக்கத்திலிருந்து மெயின் கால்வாயின் ஒருபக்கத்தில்தான் தண்ணீர் பாய்கிறதே தவிர, எதிர்ப்பக்கத்தில் தண்ணீர் போக சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, ஒரு பக்கத்தில் போகும் தண்ணீரை மறுபக்கத்திலும் போக ஏற்பாடு செய்ய வேண்டும்.

எனது வானூர் தொகுதியில் ஆற்றுப் பாய்ச்சலும் கிடையாது, ஊற்றுப் பாய்ச்சலும் கிடையாது. மழை பெய்தால்தான் உண்டு. இல்லை என்றால் இல்லை. கிணற்றுப் பாசனத்தைத்தான் நாங்கள் நம்பிக் கொண்டிருக்கிறோம். அங்கு கிணறுகளை வெட்டவேண்டுமென்றால் பாறைகள்தான் அதிகமாக இருக்கின்றன. அப்பகுதிகளில் ஐந்தாறு கஜம் வெட்டியும் பாறைகள்தான் தென்படுவதால் விவசாயிகள் அதை அப்படியே விட்டுவிடுகிறார்கள். அதன் காரணமாக கால் காணி, அரைக்காணி பயிர் செய்யவே சங்கடமாயிருக்கிறது. இப்போது அரசினரால் "ராக் ப்ளாஸ்டிங் யூனிட்" அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் இரண்டு என்ஜின்களாவது கொடுத்து பாறைகளை அகற்றி கிணறுகளைத் தோண்டுவதற்கு வசதிவாய்ப்பு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீண்ட நெடும் காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஏரிகள் எல்லாம் தூர் வாரப்பட்டிருக்கின்றன எங்கள் பகுதியில். (மணியடிக்கப் பட்டது.) கால்வாய்கள் எல்லாம் வெட்டப்பட்டிருக்கின்றன. ஊற்றுக்குட்டைகளில் இருந்து மண் எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிகள் எல்லாம் வானூர் பஞ்சாயத்து யூனியன், மரக்காணம்TT பஞ்சாயத்து யூனியன் இவற்றைச் சேர்ந்தது. கிட்டத் தட்ட 20 லட்சம் ரூபாய் அளவிற்கு வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வளவெல்லாம் செய்தும் இன்னும் குடிநீர் கிடைக்காத ஒரு சங்கடகரமான நிலை அங்கு இருந்து கொண்டிருக்கிறது. ரோடுகள் எல்லாம் புயல் வந்தால் ஓடிவிடுகிறது, பஞ்சம் வந்தால் சரிப்படுத்த முடியவில்லை. இந்த நிலையில் எல்லாப் பஞ்சாயத்து யூனியன் ரோடுகளையும் அரசாங்கமே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். 20 லட்சம் ரூபாய் அளவில் வேலைகள் செய்துள்ளதற்காக, அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தித் தந்ததற்காக அரசாங்கத்திற்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு ஜனவரியில் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தரங்கு வைத்தார்கள். அதற்கு எங்களை எல்லாம் கூப்பிட்டார்கள். இதுவரை உங்கள் தொகுதியில் அரசாங்கப் பார்வையில் அகப்படாத வேலைகள் இருக்கின்றனவா, அதிகாரிகள் எந்த அளவிற்கு உதவி இருக்கிறார்கள், உங்களது கருத்துக்களைச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். முக்கியவேலை என்ற ஒரு பட்டியலைக் கொடுத்தேன். இந்த லிஸ்டில் அவை வரும் என்று எதிர்ப்பார்த்தேன். வரவில்லை. அடுத்து வருகிற பகுதியிலாவது நாங்கள் கொடுத்துள்ள லிஸ்டில் உள்ளதை எல்லாம் சேர்த்து எங்கள் பகுதி மக்களுக்கு வேண்டிய நல்ல காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1970 மார்ச் 25] [திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்]

(மணியடிக்கப்பட்டது. திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.)

* திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது நான் ஒருசில வார்த்தைகள் கூற முன் வந்திருக்கிறேன்.

இந்த பொது மராமத்துத் துறையில் இருக்கிற என்ஜினியர்கள், அதிகாரிகள் எல்லாம் மதகுகள், அணைகள், பாலங்கள், கட்டடங்கள் போன்ற எல்லாவற்றையும் கட்டுகிறார்கள். ஆனால் அவற்றைக் கட்டி முடித்தவுடன் இவ்வளவு நேரம் வெய்யிலிலும் மழையிலும் கஷ்டப்பட்டு கட்டி முடித்தவுடன் திறப்பு விழா என்று வரும் போது என்ஜினியர்களுக்கு அங்கே வேலை இல்லை, ரெவின்யூ டிபார்ட்மெண்டார் அதில் தலையிட்டு அவர்கள்தான் தலைமை வகிக்கிறார்கள். இவர்கள் பக்கத்தில் நிற்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது சரியல்ல. பொதுப்பணித் துறைப் பொறியாளரும் தலைமை தாங்குகிறார்கள், விழாவில் கலந்து கொள்கிறார்கள். ரெவின்யூ இலாகா ஒத்துழைப்புத் தருகிறது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : நன்றி, அவர்களுக்கும் இதில் அக்கறை இருக்கவேண்டுமென்றுதான் சொல்கிறேன். பீ.ஈ. படித்தவர்கள், ஏழை எளியவர்கள் பீ.ஈ. முடித்துவிட்டு வரும்போது நமக்கு ஏராளமான வருவாய் வரும், நாட்டுக்கும் நல்லது ஏற்படும் என்று நினைத்து படித்துவிட்டு வந்தவர்கள் ஏன் பீ.ஈ.-யில் சேர்ந்து படித்தோம் என்று கடைசியில் நினைக்கும் வகையில் நிலைமை இருக்கிறது. இந்த ஆண்டு ஓரளவிற்குச் சரியாக இருக்கிறது. நான் சொல்வது, பீ.ஈ. படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கக்கூடாது. அதற்கு நல்லதொரு திட்டத்தை உருவாக்கவேண்டும். எதற்காக பீ.ஈ. படிக்க வைத்தோம் பீ.ஏ. அல்லது பீ.எஸ்ஸி. படிக்க வைத்திருந்தால் எதாவது ட்ரெயினிங்-க்காவது போயிருக்கலாமே என்று நினைக்கக் கூடிய வகையில் நிலைமை இருக்கிறது. ஆனால் இப்போது அரசாங்கம் ஓரளவிற்கு எல்லோருக்கும் வேலை கொடுத்திருக்கிறது என்றாலும் வேலையில்லாதவர்களுக்கு அதிகப்படியான அளவில் வேலைகள் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, பொதுப்பணித் துறை அதிகாரிகள் ஒரு இடத்தில் ஒரு உத்தரவு கொடுக்கிறார்கள், தண்ணீர் எடுக்கலாம் என்று. ஆனால் ரெவின்யூ டிபார்ட்மென்ட்டார் அதை ஆட்சேபிக்கிறார்கள். வீணாகப் போகும் தண்ணீரை உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று உத்தரவு கொடுக்கும்போது அதை ரெவின்யூ டிபார்ட்மென்ட்டார் ஆட்சேபிக்கிறார்கள். ஆகவே அப்படித் தடுக்கக்

[திரு. எஸ். சிவசுப்பிரமணியன்] [1970 மார்ச் 25

கூடாது. சிதம்பரம் தாலூகாவில் குமராட்சி யூனியனில் எம். அரசூர் என்ற ஊரில் கடலில் வீணுகப் போகும் தண்ணீரை கோடை காலப் பயிருக்காக எடுத்துக் கொள்கிறோம் என்று ஐந்தாறு ஆண்டுகளாக எழுதிக் கொண்டே இருக்கிறார்கள். பி.டப்ளியூ.டி. டிப்பார்ட்மென்ட் ஆட்சேபனை இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால் ரெவன்யூ டிபார்ட்மென்ட்டார் ஆட்சேபனை என்று கூறுகிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்து அந்தப் பகுதி மக்களுக்கு உதவிசெய்யும் விதத்தில், குறிப்பாக அதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயிரிப்படலாம், அதனால் உணவு உற்பத்தி பெருகும் என்பதால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிதம்பரம் தாலூகாவில் நந்தனூர் கல்விக் கழக ரோட் என்று ஒரு ரோட் இருக்கிறது. அந்த ரோட் முக்கால் மைல் நீளம் இருக்கும். அந்த ரோட்டுக்கு ரூபாய் பத்தாயிரம் செலவில் கருங்கல் ஜெல்லி போடவேண்டும் என்று மூன்று நான்கு வருஷங்களுக்கு முன்பே எஸ்டிமேட் செய்யப்பட்டிருந்தும் இந்த நிமிஷம் வரையில் எந்த எஸ்டிமேட்டும் போடப்படவில்லை. என்ன காரணம் என்றும் தெரியவில்லை. அது மட்டுமல்ல. இந்த ரோட்டுக்குப் பக்கத்தில் நெல் சேமித்துவைக்கும் அரசாங்க கோடவுன் ஒன்று இருக்கிறது. அதன் காரணமாக அங்கே அடிக்கடி லாரிகள் செல்வதால் அந்த ரோட் மிகவும் மோசமான நிலையில் இருகிறது. அந்த கோடவுனில் ஏராளமாக நெல் இருப்பதால் அடிக்கடி லாரிகள் செல்வதால் அந்த ரோட் மிகவும் பாழ்படுகிறது. அந்த ரோட் விஷயத்தில் தனிப்பட்ட சலுகை காட்டி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிதம்பரம்-புத்தூர் ரோட் நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிதம்பரம்-விருத்தாசலம் ரோட் நல்ல முறையில் சீர்திருத்தப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் சிதம்பரம்-காட்டுமன்னார்குடி ரோட் சீர்திருத்தப்பட வேண்டும்.

வீராணம் ஏரியில் தூர் எடுக்கப்பட வேண்டும். அதன் நீரை சென்னைக்குக் கொண்டு வருவதால் ஏற்கனவே உள்ள பாசன வசதிகள் கெட்டுவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். காட்டுமன்னார்குடி யூனியனைச் சேர்ந்த தொண்டமானத்தம் என்ற ஊரில் ஓது மதகு இருக்கிறது. ஆனால் அந்த மதகு சைக்கிள் கூட திரும்ப முடியாத அளவுக்கு மிகவும் சிறியதாக இருக்கிறது. அந்த மதகு திருத்திக் கட்டப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1970 மார்ச் 25] [திரு. எஸ். சிவசுப்பிரமணியன்]

அடுத்தபடியாக பி.டபிள்யூ.டி. டிபார்ட்மெண்ட்டுக்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் ஆள் எடுக்கும்போது அரிஜனங்கள் விகிதாசாரப்படி போடப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே இருந்த அரசாங்கம் அரிஜனங்கள் விஷயத்தில் ஸ்பெஷல் சலுகை கொடுத்து வந்தது. அந்தச் சலுகையை இந்த அரசாங்கமும் நீடித்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நெடுஞ்சாலை, பொதுப் பணித் துறை இவைகளில் மஸ்தூர்களாகவும், கேங்க் கூலிகளாகவும் வேலை செய்கின்றவர்கள் அரிஜனங்கள். இவர்களுக்கு பர்மனன்ட் வேலை என்பது கிடையாது. பத்து வருஷங்கள் வேலை செய்திருந்தாலும் வீட்டுக்குப் போக வேண்டிய நிலைமையில் உள்ளவர்களாக இருக்கிறார்கள். மஸ்தூர்களாகவும், கேங்க் கூலிகளாகவும், ஏழை எளிய விவசாயிகளாகவும் இருப்பவர்கள் அரிஜனகள் தான். அவர்களைத் தவறாமல் நிரந்தர ஊழியர்களாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிதம்பரம்-தஞ்சாவூர் ரோட்டில் பழைய கொள்ளிடம் அருகில் இருக்கும் மதகிலிருந்து பிரியும் அத்திப்பட்டு ரோட் மிகவும் மோசமாக இருக்கிறது. அதை நம்முடைய அரசாங்கம் பரிசிலித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வல்லம்படுகையில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலம் தண்ணீர் அதிகமாக வந்தால் மூழ்கி விடும் நிலையில் எப்பொழுதுமே இருந்து கொண்டிருக்கிறது. தண்ணீர் இல்லாவிட்டால் காய்ந்து விடும். அதற்கு நல்ல முறையில் மதகு போட்டு அதைச் சீர்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி தெரிவித்துக்கொண்டு, என் உரையை இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி** : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இன்றைய பொதுப் பணித்துறை இலாகாவால் கொண்டு வரப்பட்டுள்ள நிதி நிலை பற்றி நான் எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால், அந்த ஜில்லாவினுடைய நிலை வருங்காலத்தில் எப்படி இருக்கும் என்று ஊகிக்க முடியாத நிலை இருக்கிறது. அந்த ஜில்லாவிலே இருபோக சாகுபடி, மூன்று போக சாகுபடி செய்கின்ற நிலைமை எல்லாம் போய் மாறி அமைகின்ற நிலை எற்படுமோ என்று அச்சம் ஏற்படுகிறது. காவிரி ஆற்றின் நீர் வருங்காலத்தில் வருமா என்பது சர்ச்சையில் இருக்கிறது. அதை உத்தேசித்து, இந்த தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் சர்க்காரால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற ஸ்பெஷல் ஸ்கீம் நடப்பு ஆண்டிலேயே துவக்கப்பட வேண்டும் என்ற கேட்டுக் கொள்கிறேன். தவிர தஞ்சை ஜில்லாவில் உள்ள கழிவு நீர், கொள்ளிடம், உப்பனூர் போன்ற டெயில்எண்ட் ஆறுகளில் உள்ள நீர்—வீணுகப் போகாமல் தடுத்து நிறுத்தப்பட்டு மேற்கொண்டு பம்பிங் ஸ்கீம் மூலமாகப் பாசனத்திற்குப் பயன்

[திரு. கே. பி. எஸ். மணி] [1970 மார்ச் 25

படுத்த முடியுமா என்பதைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஐந்து, ஆறு ஆண்டு காலமாகவே சீர்காழி தாலூகாவைப் பொறுத்த வரையில் கொள்ளிடத்தில் வருகிற கழிவு நீரை சேதுராஜனில் சிட்டு பம்பிங் ஸ்கீம் மூலமாக முன்னதாகவே விட்டு குறுவை சாகுபடி கெடாத அளவுக்குச் செய்ய முடியும் என்ற ஒரு திட்டம் அரசுக்குக் கொடுக்கப்பட்டு அரசு பரிசீலனை இன்னும் முடியாமல் இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து சீக்கிரத்தில் செயல் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் அதே வட்டாரங்களில் இருக்கிற இதர ஆறுகளில் உள்ள தண்ணீரும் உபயோகப் படுத்த முடியாமல் கடலில் போய் வீழ்கிறது. அதையும் பயன்படுத்துவதற்கான வழி வகைகள் செய்யவேண்டும். மேலும் சீர்காழி தாலூகாவைப் பொறுத்த வரையில் திருவாலி ஏரி ஒரு முக்கியமான ஏரி. இந்த ஏரி இப்பொழுது தூர்ந்து போய். நஞ்சை நிலமாக மாற்றப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு ஸ்கீமே எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஏரியை மாற்றி அமைத்து உண்மையாகவே தண்ணீர் தேக்கும் அளவுக்குச் செய்தால் அந்த ஏரி முழுவதுமாக நிரம்புகிற ஏரி நீர் அந்த வட்டாரங்களில் கிட்டதட்ட 5,000 ஏக்கர் நிலத்திற்கு இரண்டாவது சாகுபடிக்குத் தேவையான தண்ணீரைத் தேக்கிக் கொடுக்க முடியும். இது ஏற்கனவே பொதுப் பணித் துறையினரால் பரிசிலனை செய்யப்பட்டிருக்கிறது. இந்த திருவாலி திட்டத்தை இந்த ஆண்டு எடுத்துக் கொண்டு செய்தால்தான் சீர்காழி தாலூகாவில் வருங்காலத்தில் இரண்டு போக சாகுபடியில் நல்ல மகசூல் கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ரோடுகள் சம்பந்தப்பட்ட வரையில் கடற்கரை ஓரமாகப் போடப்பட்ட சில ரோடுகள் முடிந்ததும், முடியாதுமாக இருக்கின்றன. திருமுல்லைவாயலிலிருந்து புதுப்பட்டிணம் வரையில் ஒரு புதிய ரோட் போடப்பட்டு அந்த ரோட் தொடர்ச்சியாக முடியாமல் நிற்கிறது. இன்னும் ஆறு மைல் நீளம் போட்டால் முடிந்து விடும். அதைச் சீக்கிரம் முடித்துக் கொடுத்தால் கடற்கரை ஓரமாக வாழ்கின்ற மீனவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகவும் சௌகரியமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்பொழுது கடற்கரை ஓரமாக கீழை ஊரிலிருந்து மகேந்திரப்பள்ளி வரையில் பஸ் போக்குவரத்து ஏற்பாடு செய்ய முடியும். இதை நடப்பு ஆண்டில் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் இருக்கின்ற பஞ்சாயத்து ரோடுகளை பஞ்சாயத்துகளும் பஞ்சாயத்து யூனியன்களும் மெயின்டனன்ஸ் செய்ய முடியவில்லை. அதற்கும் பொதுப் பணித்துறையில் அதிகப்படி தொகை ஒதுக்கி, அவர்களுக்குக் கொடுத்து உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1970 மார்ச் 25] [திரு. கே. பி. எஸ். மணி]

இறுதியாக இந்த டிபார்ட்மெண்டில் வேலை செய்கின்ற கடைநிலை ஊழியர்களாக இருக்கின்ற கேங்க் கூலிகள், மஸ்தூர்கள், இவர்களுடைய நிலை பரிதாபகரமாக இருக்கிறது. அவர்கள் சம்பந்தப்பட்ட வரையில், எந்த நேரத்திலும் வீட்டுக்கு அனுப்பப்படும் நிலையில் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நிரந்தர ஊழியர்களாக்கிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து உத்தியோக முறையில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தான் எந்த காரணத்தாலோ உயர் பதவிக்கு வர முடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. உத்தியோக உயர்வு தாழ்த்தப்பட்ட நபர் ஒருவருக்கு வருகிறபோது தான் எப்படியோ ஏதோ ஒரு முறையில் தடுத்து நிறுத்தப்பட்டு விடுகிறது. சம்பந்தப்பட்ட தாழ்த்தப்பட்ட அதிகாரிக்கு உயர் நிலை வருகிறபோது அதற்கு முன்னால் இருக்கிறவர்களுக்கு எக்ஸ்டென்ஷன் கொடுத்து பின்னால் இருக்கிறவருக்கு வராமல் போகும் நிலை இருந்து வருகிறது. அந்த நிலை மாறி கான்ஸ்டிடியூஷனில் இருக்கிறபடி விகிதாசாரப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மத்தியிலேயும் சரி, மாநிலத்திலேயும் சரி 16 சதவிகிதம் கொடுக்க வேண்டிய உத்தியோகம் 4 சதவிகிதத்துக்கு மேல் செய்யாமல் இருக்கிறது. அதை, திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் செய்யவில்லையென்று சொன்னால் வேறு எந்தச் சர்க்காராலும் செய்யமுடியாது என்று சொல்லிக் கொண்டு, 4 விகிதாசாரத்திலிருந்து குறைந்தபட்சம் 10 விகிதாச்சாரமாவது கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*திரு. மு. இரத்தினசபாபதி: மாண்புமிகு தலைவரவர்களே, இன்றையதினம் வைக்கப்பட்டிருக்கும் நீர்ப்பாசனம், பொதுப் பணி மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்றையதினம் நீர்ப்பாசனத் துறையானது, விவசாயத்தைப் பொறுத்த வரையில் அதற்கு ஜீவநாடியாக இருந்து வருவதை எல்லோரும் அறிவோம். இப்பொழுதிருக்கும் தண்ணீர் கிடைக்கும் நிலங்களுக்குத் தொடர்ந்து உறுதியான முறையிலே தண்ணீர் கிடைக்கவும், அதே நேரத்தில் வசதியற்ற வறண்ட பூமிகளிலே புதிய குளங்களை அமைத்து அங்குள்ள மக்களை விவசாயத்தில் ஊக்குவிக்கவும் இந்த நீர்ப்பாசனத் துறை பணி செய்து வருவதை நாம் அறிவோம். இப்படிப்பட்ட அந்தத் துறை அவர்களுடைய திட்டங்களைப் பல பிரிவுகளாகப் பிரித்து இந்த நாட்டில் அவர்கள் செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். இன்று, பொதுப்படையாகப் பெரிய பெரிய திட்டங்களை ஒரு புறத்தில் செயல்படுத்திக் கொண்டு வரும் நேரத்திலே, சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் மூலம் அங்காங்கிருக்கும் பகுதிகளிலே எந்தெந்த இடங்களிலே புதுப்புதுக் குளங்களையும், புதுப்புது

அணைக்கட்டுகளையும் கட்ட முடியுமோ அவைகளையும், அதே போன்று குளங்களைத் தூர் எடுக்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டால் தூர் எடுத்து நிலத்திற்குப் பயன்படுத்துவதற்கு, பெரிய, நடுத்தரத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள். அதேபோல, பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரைக் கண்டு பிடித்து, அதைக்கொண்டு விவசாயத்திற்குப் பயன்படுத்தவும், பொதுப் பணித் துறையினர் நிறைவேற்றிக்கொண்டு வரும் ஒரு பணியும் அங்கே செயல் படுத்திக்கொண்டு வருகிறார்கள். இப்படிப் பல துறைகளிலேயும் செயல்படும் இந்தப் பாசனத் துறையானது 1969-70-ம் ஆண்டில் பல திட்டங்களைத் தமிழகத்திற்குத் தந்திருக் கிறது. ரூபாய் 5 இலட்சமும், அதற்கு மேலும் செலவாகும் முக்கிய சிறுபாசன சிறப்புப் பணித் திட்டங்களில் தமிழகத்தில் 33 திட்டங்களுக்கு அனுமதித்திருக்கிறது. அதற்கடுத்தபடியாக, ஆதாயம் தரக்கூடிய திட்டங்கள் 1969-70-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட சிறு பாசன சிறப்புப் பணித் திட்டங்கள், தூர் எடுத்து பண்படுத்தும் பணித்திட்டம் 36 திட்டங்களை தமிழக அரசு அனுமதித்திருக்கிறது. அடுத்தபடியாக தூர் எடுத்து செப்பனிடும் பணித் திட்டங்கள், ஆதாயம் தராத 21 திட்டங்களுக்கு இந்த அரசு அனுமதித்திருக்கிறது. இப்படித் திட்டங்களைத் தயாரித்து அமல்படுத்த, இந்த அரசு பதவிப் பொறுப்பை ஏற்றபிறகு, இந்த நிர்வாகத்திலுள்ள பல திட்டங்களை ஒரே திட்டமாக ஆக்கி, ஒவ்வொரு மாவட்டத்திலும் நல்லமுறையில் செயல்பட எடுத்த முயற்சிக்குப் பிறகு இப்பொழுது இந்தத் திட்டங்கள் நல்ல முறையிலே செயல்பட வேண்டும், கூடிய விரைவில் செயல்பட வேண்டுமென்று 1970 ஏப்ரல் 1-ம் தேதி முதல் சிறப்பு சிறுபாசனத் திட்டங்களுக்கு வரம்பு ரூ. 25 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டு, திட்ட ஆணை குழுவின் அனுமதியில்லாமலேயே ரூ. 25 இலட்சம் வரை செலவாகும் திட்டங்களுக்கு மாநில அரசு ஒப்புதல் வழங்க முடியும் என்ற நிலை உருவாகி இருக்கிறது.

அடுத்தபடியாக, சில வறண்ட இடங்களில் புதிய குளங்களை அமைக்க, அங்கே கூடுதல் உற்பத்தியை மதிப்பிடுவதற்கான வரம்பு திருத்தப்பட்ட, ஒரு முறைப்படி அங்கே புதிய குளங்கள் அமைக்க வாய்ப்பு ஏற்பட அனுமதியளித்திருக் கிறது. இன்று செயல்பொறியாளர்கள் அனுமதிக்கும் மதிப்பீட்டுத் தொகை முன்பிருந்ததைவிட இப்பொழுது அதிகமாக்கப்பட்டு, அதன்மூலம் அந்தத் திட்டங்கள் விரைவாகச் செயல்பட அனுமதித் திருக்கிறது. இதன்மூலம் சிறுபாசனத் துறையின்மூலம், இங்கே யிருக்கும் பொதுமக்களுக்கு நல்ல பயன் உடனடியாகக் கிடைக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுடன் நல்ல திட்டங்களைத் தீட்டி நாட்டிற்கு அளித்திருக்கிறது. இந்த அளவிற்கு உள்ள சிறு பாசனத் துறை மானியக் கோரிக்கையைப் பாராட்டி, என்னு டைய தொகுதியைப் பொறுத்தவரையிலே உள்ள ஒருசில கோரிக்கைகளை இங்கே, இந்த அவையின்மூலம் அமைச்சரவர் களுக்கு வைக்க விரும்புகிறேன்.



இன்றையதினம், விளாத்திகுளம் தொகுதி, தமிழகத்திலே யிருக்கும் எந்தப் பகுதியையும் விட, மிகவும் வறட்சியான பகுதி யாக இருக்கிறது. அங்கே பெய்யும் மழையானது மற்ற இடங் களில் பெய்யும் மழையைவிடக் குறைவாகப் பெய்வதால் அங்கே புஞ்சை விவசாயம் மாத்திரம் செய்யும் நிலைமையில் மக்கள் வாழ் கிறார்கள். ஆனால் அங்கிருக்கும் மக்களுக்கு விவசாய வாய்ப்பு இன்று எப்படியிருக்கிறது என்றால் பல நூறு, 50 மைல்களுக்கு அப்பால் பெய்யும் மழைநீர் கடலிலே வரும் நிலையிலே, பல ஓடை களின் வாயிலாகக் கடலுக்குப் போகிறது. அப்படிப் போகின்ற நேரத்தில் ஓடைகளில் மறித்து, புதிய குளங்களை அமைத்தால் ஒரு வளமான வாழ்க்கையை அவர்களுக்கு உண்டாக்க முடியும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் 4 மாதங்களுக்கு முன்பு மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தப் பகுதிக்கு வருகின்ற நேரத்தில், இப்படி அங்கே ஓர் ஓடையை மறித்து மேலக்கரந்தை யில் குளம் அமைக்கப்படுவதைப் பார்த்த நேரத்தில், அந்தக் குளத்தில் ஏறக்குறைய தொளாயிரம் ஏக்கர் புஞ்சையை நஞ்சை யாக மாற்றுவதில் இன்றுவரையில் அந்தத் திட்டம் அரைகுறை யாக இருக்கும் இந்த நேரத்தில் கூட 500 ஏக்கர்களை விவசாயிகள் நஞ்சையாக ஆக்கி உற்சாகமாகப் பாடுபடுவதைப் பார்த்தார்கள். இப்படிப்பட்ட ஓடைகள் பல அங்கே, அந்தப் பகுதியிலே இருப்ப தால் அவைகளையெல்லாம் புதுக்குளங்களாக உண்டாக்க அமைச் சரவர்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கின்றேன்.

இப்பொழுதுகூட இந்த அரசில், டி. அருணாசலபுரம், இராமச் சந்திரபுரம், சின்னையாபுரம் ஆகிய இடங்களில் புதிய குளங்கள் அமைக்கும் திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன. அவைகளை உடனடியாக அமைத்து அந்தப் பகுதி மக்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். அமைச் சரவர்கள் முன்னுரையில் கூறியபோது, பெரிய நடுத்தரத் திட்டங் களில் வைப்பாற்று நதியின் குறுக்கே அணைத்திட்டம் சேர்க்கப் பட்டிருக்கிறது என்று அறிவித்திருப்பதற்காக, அந்தப் பகுதி மக்களின் சார்பாக நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

*** திரு. கே. என். குமாரசாமி:** மாற்றுத் தலைவரவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்லிவிட்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, நம்முடைய தமிழ் நாட்டிலே பாசன வசதி ஏற்படுத்த வேண்டு மென்ற அக்கறையெடுத்துக் கொண்டு, தீவிரம் காட்டியிருந்தால், அந்த அக்கறை எப்படியிருக்கிறது என்றால், கோவை ஜில்லாவிலே பொள்ளாச்சியிலே சென்ற ஆண்டு நடந்த நீர்ப்பாசனக் கருத் தரங்கிலே அந்தப் பகுதியிலே இருக்கும் விவசாயிகளுக்கு நீர்ப் பாசனத் திட்டம் கொடுக்க வேண்டுமென்பதை அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டும் முறையிலே, அந்த மாநாட்டில் விவசாயிகள்

தெளிவாக அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிலே நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதிலே பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தை அரசாங்கம் ஊக்குவித்து, அந்தத் திட்டத்தின் மூலம் கோவை, பல்லடம், அவிநாசி போன்ற தாலூகாக்களுக்குப் பாசன வசதி உண்டாக்கிக் கொடுக்க முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டது. அந்த முயற்சி இன்றைக்கு அரசாங்கத்தில் எந்த அளவுக்கு இருக்கிறது என்று ஒன்றுமே தெரியவில்லை. அதுசம்பந்தமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போடப்பட முடியும். அந்தத் திட்டத்திலே இந்தத் திட்டம் வந்து சேருமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. அதற்கு அமைச்சரவர்கள் பதிலளிப்பார்கள் என்று நினைக்கிறேன். அந்தத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று, 1965-ஆம் ஆண்டில் எலக்ட்ரிசிட்டிக்கு மட்டும் எடுத்துக்கொள்ள கேரள அரசாங்கத்தோடு ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். அதன் பேரில் மீண்டும் கேரள அரசாங்கத்தோடு பேசும்பொழுது அந்தத் தண்ணீரை பாண்டியாறு, புன்னம்புழா எலக்ட்ரிசிட்டிக்குப் போக மீதி உள்ள தண்ணீரை, கேரள அரசாங்கத்திற்கும் உபயோகமில்லாமல் இருக்கும் அந்தத் தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைக்க முயற்சியெடுத்துக்கொண்டு, அந்த ஒப்பந்தத்தைத் திருத்தியமைக்க அரசாங்கம் முன்முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். காரணம் என்னவென்றால், இந்த மூன்று தாலூகாக்களும் அந்த ஒரு திட்டத்தின்மூலம் பயனடைய முடியும், இல்லையென்றால் அவர்களுக்கு வேறு வழியில்லை என்று கூறி, இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண இந்த அரசாங்கம் முயற்சியெடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தத் திட்டம் வருவதன்மூலம் தான் அந்தப் பிரதேசத்திலேயுள்ள விவசாயிகள் உற்பத்தியை உருவாக்க முடியும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அவிநாசித் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த அவிநாசித் திட்டத்தினால், குந்தா கழிவு நீர்த்திட்டத்தை அமலாக்குவதால், பாக்கியிருக்கும் 3 தாலூகாக்களிலும் குளங்கள், குட்டைகளில் நீர் கொடுக்க முடியும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, அவிநாசித் திட்டம் நிறுத்தப்பட்டு விட்டது. இரண்டு பெரிய திட்டங்களும் வாயளவிலே சொல்லப்பட்டாலும், காரியரூபத்திலே வரக்காணோம் என்று விவசாயிகள் ஏமாற்றமடைந்திருக்கிறார்கள். எப்படி விவசாயம் செய்வது என்ற ஐயப்பாட்டோடு இருக்கிறார்கள். அந்தப் பிரதேசத்தின் நிலைமைகள் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தப் பிரதேசத்தில் நொய்யலாற்றிலிருந்து வரும் தண்ணீர்தான் கிடைக்கிறது. அந்த ஆற்றிலே நீர் கொண்டு வர வேண்டுமென்றால், வெள்ளியங்கிரி மலைச்சாரலில் டாம் கட்டி, தண்ணீரைத் தேக்கி நொய்யலாற்றிற்கு விடுவதற்கு அரசாங்கம் முயற்சியெடுத்துக்கொள்ள வேண்டும். அந்தத் திட்டத்தைப்பற்றி அரசாங்கம் ஒரு



முடிவுக்கு விரைவில் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்தத் திட்டம் முன்னாலேயே போட்டு, அது கைவிடப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பாகச் சொல்லிக்கொள்கிறேன்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

குளம், குட்டைகள் வெட்டுவது போன்ற சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில், குளங்கள், குட்டைகளை வெட்டுவது என்று சொன்னால், குளம், குட்டைகளை எங்கே வெட்ட வேண்டும் என்ற பிரச்னையை அரசாங்கம் நன்கு பரிசிலனை செய்ய வேண்டும். பாசன வசதி உள்ள பகுதிகளில் குளம், குட்டைகளை அதிகமாக வெட்டுவதற்கு ஏற்பாடு செய்து, பாசன வசதி அற்ற பகுதிகளில் அத்தகைய அளவுக்கு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. கோவை மாவட்டத்தில் கொடிவேலி வாய்க்கால் லோயர் பவானி வாய்க்கால் உள்ள பிரதேசத்தில் நான்கு இடங்களில் 32 லட்ச ரூபாய் செலவில் குளம் அமைப்பதற்குத் திட்டம் இருக்கிறது. ஆனால் பெரும் பகுதி பாதிக்கப்பட்ட பகுதியாக இருந்தாலும், எந்த அடிப்படையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்களில் இடம் பெறாமல் இருக்கிறது என்பது தெரியவில்லை. இது மிகவும் வருந்தத்தக்கது. வசதியற்ற பகுதிகளில் இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம், மழைத் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அமைச்சர் அவர்கள் அதைக் கவனித்து உடனடியாகச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அதே நேரத்தில் கேரள அரசாங்கத்தோடு சென்ற ஆண்டு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. அந்த ஒப்பந்தம் எந்த அளவில் இருக்கிறது ? அது சம்பந்தமாக பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் பெரும்பாரி பள்ளம் அணைக்கட்டு தடுத்து நிறுத்தி வைக்கப் பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இந்தத் திட்டத்தை நிறுத்திவைப்பதன் மூலம் பாசனப் பகுதியில் 2½ லட்சம் ஏக்கராவிற்கு ஒரு வருஷம் விட்டு ஒரு வருஷம் தான் தண்ணீர் கிடைக்கிறது. இந்தத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும் என்பது பற்றி அரசு ஒரு திட்டமான முடிவுக்கு வந்து, பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய பகுதியிலுள்ள விவசாய மக்களுக்குப் பாசன வசதி செய்துகொடுக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்தி பெருகவேண்டும் என்பதற்காக நீர் மட்டும் கொடுத்தால் போதாது, நீரோடு மின்சாரமும் கொடுக்கவேண்டும், இரண்டு வசதிகளும் விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்பதில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்திவருகிறது. இருந்தபோதிலும் விவசாயிகள் கொடுக்கும் மின்கட்டணத்தை அரசு உயர்த்தியிருக்கிறது. அந்த மின் கட்டண உயர்வைக் குறைப்பதற்காக கோவை ஜில்லா விவசாயிகள் ஒரு போராட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

விவசாயிகள் பாதிக்கப்பட்டதினால் மின்கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்காக போராட்டம் நடத்தியது பற்றி முதல் அமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்ற நேரத்தில், ஏதோ சில பணக்காரர்கள் அந்தப் போராட்டத்தில் சேர்ந்திருப்பதாகச் சொன்னார்கள். அது ஏதோ பணக்காரர்கள் பற்றிய பிரச்னையைப் பற்றி நடக்கிற போராட்டம் என்ற அடிப்படையில் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள், அதை உள் கருத்தாகச் சொன்னார்கள். இந்த மின்கட்டண உயர்வு விவசாய உற்பத்தியை பாதிக்கின்ற அளவிலே இருப்பதினால், சங்கத்தின் மூலம் இப்படி மின் கட்டணத்தை உயர்த்தியதைக் குறைக்கவேண்டும், கடன் வசூலை ஒத்திவைக்கவேண்டும் என்று திட்டவட்டமாக வற்புறுத்துவதற்குத் தான் போராட்டம் நடந்தது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்தப் போராட்டத்தில் பணக்காரர்கள் சேர்ந்துகொண்டார்கள் என்று அந்த இயக்கத்திலே இருக்கிற கோளாறுகளை எடுத்துச்சொல்கிற மாதிரி, உள்கருத்தாகச் சுட்டிக்காட்டினார்கள். அதே நேரத்தில் நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'விவசாயிகளுக்கு நாங்கள் சலுகை அளித்திருக்கிறோம்' என்று சொன்னார்கள். மற்ற மாநிலங்களில் இல்லாமல் இந்த மாநிலத்தில் 20 சதவிகிதம் சர்சார்ஜ் போடப்பட்டிருக்கிறது. இது மற்ற மாநிலங்களில் கிடையாது. அடிஷனல் செக்யூரிடி டெபாசிட் மற்ற மாநிலங்களில் கிடையாது, அடுத்த மாநிலங்களில் கிடையாது. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம் மாநிலத்தில் குறைத்துப் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி எந்த அர்த்தத்தில் சொன்னார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. விவசாய மக்கள் தங்களுடைய உணர்வுகளை, குறைகளை அரசாங்கத்திற்குத் தெரிவித்தால், அரசாங்கம் அந்த குறைகளை தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கையில்தான் பெரிய போராட்டம் நடைபெற்றது. விவசாயிகளுக்கு நன்மை செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. உணவு உற்பத்தியை அதிகரிக்கவேண்டும், விவசாயிகளுக்குச் சலுகைகளை அளிக்க வேண்டும் என்று அரசாங்கம் சொனுமானால், நிச்சயம் அவர்களுடைய பிரச்சினைகளுக்கு முடிவு காண்கிற வகையில் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கும், கடன் வசூலிப்பதை ஒத்தி வைப்பதற்கும் அரசாங்கம் திட்டவட்டமாக ஒரு முடிவை அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய பாசனத் திட்டங்களுக்காக நாம் போட்டிருக்கிற எஸ்டிமேட் தொகை ரூ. 5 கோடி என்று காட்டியிருக்கிறோம். அதில் ரூ. 2½ கோடி பரம்பிக்குளம்-ஆளியாறு பிராஜெக்ட் வாய்க்கால் பழைய திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கொடுத்துவிட்டால், பாக்கி இருக்கிற ரூ. 2½ கோடி ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ள சிறிய நீர்பாசனத் திட்டங்களுக்குப் போதுமானதாக இருக்காது. ஆகவே, அதிகமான பணத்தை ஒதுக்கி, இந்தத் திட்டத்தை நிறை



வேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். கிட்டத்தட்ட 32 திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. 32 திட்டங்களுக்கும் போதுமான பணம் இல்லை என்று கருதுகிறேன். தஞ்சாவூர் பிரதேசத்தில் உலக பாங்கு கடன் பெற்று, சீக்கிரம் வடிகால்களை சீர்படுத்தி, வேஸ்டு ஆகிற தண்ணீரையெல்லாம் தடுத்து, இன்னும் அதிகப்படியான நிலங்களுக்குத் தண்ணீர் பாய்வதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க, அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய திட்டங்களெல்லாம் உருப்பெறாமல் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டுப் போகிறது. அந்த நிலைமையை மாற்றுவதற்கு, அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்ததற்குத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன்.

* **திரு. எம். கண்ணப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக்கோரிக்கைகளை வரவேற்று, எனது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன் பரம்பிக் குளம்-ஆளியாறு திட்டத்திற்கு ரூ. 67 கோடி மதிப்பிடப்பட்டு, 2,40,000 ஏக்கருக்குத் தண்ணீர் கொடுக்கிற திட்டம். கடந்த 1969-ம் ஆண்டில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் மற்றுமுள்ள பொறியியல் வல்லுநர்களும் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியின் காரணமாக கேரள அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தைகள் முடிந்து ஒரு விரிவான ஒப்பந்தத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். 2,40,000 ஏக்காராவிற்கு ஆண்டுதோறும் ஒரு முறை தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று திட்டம் இருந்தாலும், தற்பொழுது ஒரு லட்சம் ஏக்காராவுக்கு 2½ ஆண்டுகளுக்கு ஒரு முறை தான் நாம் தண்ணீரைக் கொடுத்துக்கொண்டு வருகிறோம் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், 1967-ம் ஆண்டில் உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி வட்டாரத்தில் தண்ணீர் கொடுக்கப்பட்ட நிலங்களுக்கு, இப்பொழுது 1969 செப்டம்பர் திங்களில் சுமார் 2½ ஆண்டுகாலத்திற்குப் பிறகு அந்த நிலங்களுக்குத் தண்ணீர் வந்து சேர்ந்திருக்கிறது. கேரள அரசாங்கத்தோடு நாம் பேசவேண்டிய பேச்சுக்களையெல்லாம் முடித்திருந்தாலும் விரிவான ஒப்பந்தத்தை ஏற்படுத்தவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். விரைவிலே அந்த ஒப்பந்தத்தை முடித்து, அந்த அணைக்கட்டு வேலைகளையெல்லாம் தொடங்கி, நிறைவேற்றவேண்டும் என்று அரசாங்கத்தை இந்த நேரத்தில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை தாலுகாக்களில் இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கிற ஆயக்கட்டு நிலங்களெல்லாம் ஒரு பகுதி இருந்தாலும், அத்தோடு இணைந்திருக்கிற சிறுசிறு நிலத்துண்டுகள், 50 ஏக்கரா, 100 ஏக்கரா ஒரு பகுதியில் இருந்தால்,

அதையொட்டி இருக்கிற 5, 10 ஏக்கரா நிலங்கள், 25 ஏக்கராவுக்கு குறைவாக சிறிய அளவிலே இருக்கிற நிலங்களையும் அந்த ஆயக் கட்டுப் பகுதியோடு சேர்த்துக்கொள்ள அரசாங்கம் முயற்சி மேற் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பொள்ளாச்சி நகரத்தைச் சுற்றி, 3 மைல் சுற்றளவுக்கு உள்ள நிலங்களையெல்லாம் ஆயக்கட்டோடு சேர்த்துக்கொள்ளக் கூடாது, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின்கீழ் தண்ணீர் கொடுக்க முடியாது என்று ஏற்கனவே அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. அந்த முடிவை மாற்றி, பொள்ளாச்சி நகரத்தைச் சுற்றி 3 மைல் சுற்றளவில் உள்ள நிலங்களுக்கெல்லாம் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

உடுமலைப்பேட்டை வட்டாரத்தில் ஏழுகுளம் பாசனப் பகுதி யிலுள்ள கிணறுகளுக்கெல்லாம் பரம்பிகுளம்-ஆளியாறு திட்டத் தில் சேர்த்துக்கொள்வதற்கு முன்பு அங்கே இருக்கிற நிலங் களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதியின் பேரில் மின்சார இணைப்பு கிடைப்பதற்கு வழிவகைகள் இருந்தது. இப்பொழுது பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் ஏழுகுளம் பகுதிகளெல்லாம் சேர்க்கப்பட்ட பிறகு, அங்கே இருக்கிற கிணறுகளுக்கு மின்சார இணைப்பு பெறுவதற்கு தற்பொழுது விதிகள் இடம் கொடுக்க வில்லை. அந்த விதிகளை மாற்றி ஏழுகுளம் பகுதிகளில் இருக்கிற கிணறுகளுக்கு உடனடியாக மின்சார இணைப்புக் கொடுக்க இந்த அரசு உத்தரவிடவேண்டும். ஏற்கனவே உள்ள விதிகளைத் திருத்தி அமைக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி, பரம்பிக்குளம்-ஆளியாறு வாய்க்கால்கள் ஓரங் களில் கிணறுகள் குறிப்பிட்ட தூரத்தில்தான் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அதற்கு சற்று, 5 அடி, 10 அடி உள்ளடக்கி யிருந்தாலும், அவற்றிற்கும் விதிவிலக்கு அளித்து, உணவு உற்பத் தியைப் பெருக்க, மின்சார இணைப்புக் கொடுக்கும் அளவில் விதிகளை தளர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

தண்ணீர் வரியைப் பொருத்த வரையில், 1969-ம் ஆண்டு தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. கணக்குப் பார்த்தால், 1967-ல் முதல் தண்ணீர் கொடுக்கப்பட்டது. இரண்டாவது தண்ணீர் முறை இப்பொழுது 4½ மாதப் பாசனத்திற்குக் கொடுக்கப்பட்டி ருக்கிறது. ஆனால், இதை மூன்றாவது முறை பாசனத்திற்குக் கொடுத்ததாகக் கணக்கிட்டு அந்த அளவில் அதிகப்படியான வரியை போட்டிருக்கிறார்கள். அதிகாரிகளைக் கேட்டால், அவர் கள் சொல்லும் காரணம், புஞ்சைக்கு 10 நாட்களுக்குத் தண்ணீர் விட்டு இருக்கிறது என்கிறார்கள். பத்து நாட்களுக்கு விட்டு இருந்தாலும், அதை ஒரு போகத்திற்குத் தண்ணீர் விட்டதாகக் கணக்கு எடுக்கக் கூடாது. இந்த நிலையை அமைச்சர் அவர்கள் கவனித்து இரண்டாவது வருஷத்திற்குத் தண்ணீர் விட்டதாகத் தீர்வை விதிக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



சாலைகளைப் பொருத்தவரையில், இப்பொழுது வறட்சி நிவாரண வேலைகளில் பெருமளவு செய்திருந்தாலும், சில சாலைகளை அதிக மாக அபிவிருத்தி செய்ய வேண்டும். கோயம்புத்தூரிலிருந்து பொள்ளாச்சி, திண்டுக்கல் வழியாக கன்யாகுமரி சாலையை அடை யும் நெடுஞ்சாலையைத் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றி அமைக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

என்னுடைய தொகுதியில் பல்லடம் பொள்ளாச்சி ரோடு குறுக லானதாக இருக்கிறது. அங்கே போக்குவரத்தும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்தச் சாலையை அகலப்படுத்துவதோடு, குறுக்கே ஓடும் ஓடைகளுக்குக் கல்வர்ட்டுகள் கட்டி அபிவிருத்தி செய்ய ஆவன செய்ய வேண்டும். பொள்ளாச்சி தாராபுரம் ரோடில் பரம்பிக்குளம்-ஆளியாறு தண்ணீர் குறுக்கே ஓடுகிறது. 4, 5 இடங்களில் கல்வர்ட்டுகள் இல்லாததால், தண்ணீர் தேங்கி போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கு சிறிய பாலங்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆண்டு தோறும் 300 மைல் பஞ்சாயத்து யூனியன் ஒன்றியத்தின் ரோடுகளை அரசு ஏற்றுக்கொள்கிறது. ஏராளமான ரோடுகளை பஞ்சாயத்து யூனியன் பராமரிக்க வேண்டியதாக இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் பஸ் ரோடுகள் முழுவதையும் சிறப்புத் திட்டமாக ஏற்றுக்கொண்டு, அந்த ரோடுகளை அரசாங் கமே எடுத்து வேலைசெய்ய உத்தரவு இடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சோலையாறு அணைக்கட்டில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள், வேலை செய்கிறார்கள். பல ஆண்டுகாலமாகப் பல்வேறு அணைக்கட்டுகளில் வேலைசெய்து வந்தவர்கள். அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். அதில் அரசாங்கத்தின் நிலையையும் எண்ணிப்பார்க்க வேண்டும். சமீபத் திலே இந்த மாதம் 8-ம் தேதி பொதுப் பணித் துறை அமைச்சர் வந்த போது, தொழிலாளர்கள் பிரதிநிதிகள், தொழிலாளர்கள், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் சொன்னார் கள், அமைச்சர் அவர்களும் அணைக்கட்டு முடியும் தருவாயில் மாற்று வேலை தர வாய்ப்புக் கொடுக்கிறோம் என்ற நிலையில் வாக்குறுதி சொல்லியிருக்கிறார்கள்.

இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும். பொள்ளாச்சி தாலுகாவில் வறட்சி ஏற்பட்டபோது, ஆயிரக்கணக்கான தென்னை மரங்களை காப்பாற்ற புஞ்சைப்பயிர் களைக் காப்பாற்ற தனியாக ஒரு மாதம் தண்ணீர் விட்டு அரசும் வல்லுநர்களும் உதவி செய்திருக்கிறார்கள் அதற்கு என் நன்றி யறிதலைத் தெரிவிக்கிறேன். கோவையிலிருந்து, சிறுவாணி,

போகும் வழியில் நொய்யல் நதியில் ஒரு பாலத்தைக் கட்ட வேண்டும் என்று பல நாட்களாக சட்டமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தப்பாலத்தை அரசாங்கம் இந்த ஆண்டிலாவது நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றிதெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Mr. Deputy Speaker, Sir, at the very outset I wish to say a few things with regard to Irrigation. I am afraid that our entire irrigation system will not function properly if we do not try to solve the Cauvery problem, which is an Inter-State problem. It is true that out Chief Minister and certain Members of his Cabinet are doing their best to solve this problem. But unfortunately this problem has been eluding solution. I request them on the floor of this House to evolve a method by which the Chief Minister of our State, a few Members of his Cabinet and a few members of political parties and their counterparts in the other States sit across the table as early as possible, discuss in a cordial atmosphere and try to solve this unfortunate problem. It must be made clear that this is not a question of inter-State rivalry, that it is a question relating to the entire Indian population which is one, and that boundaries or borders should not come in the way of or be an obstruction to, the solution of this problem.

I wish to say a few things with regard to the Public Works Department. In this connection I may remind the House that when my revered leader Rajaji became the Chief Minister in 1952, he said half jocularly and half seriously that Public Works Department was his Enemy No. 2. The main reason which prompted him to say this was that there was no co-ordination between the Public Works Department and the parent department.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I want to know from the hon. Member whether he still holds that Public Works Department is Enemy No. 2.

DR. H. V. HANDE : He has not probably applied his mind now, because he is not in the Administration. (Interruption.) It is not my enemy.

Public Works portfolio has been taken over by very able Ministers, formerly by the Minister who is now the Chief Minister and now by the present Minister for Public Works. I am quite sure that their methods of administration and dealing with the Department will dispel such an impression from the minds of the hon. Members if they still have that impression.



The main point I wish to stress is that there is no co-ordination between the Public Works Department and the parent department. For instance, in the General Hospital the authorities want some new constructions and the repair of some old constructions. There is no co-ordination between the Public Works authorities and the Dean or the officers at the helm of affairs in the General Hospital. Those officers have to write to the Public Works Department. God knows when the Public Works authorities will actually take it into their head to complete the work. Some time ago the present Minister for Public Works came to a particular function. In the General Hospital Quarters opposite to the Moore Market, we wanted a small road to be laid. Still nothing has been done.

I have a solution to offer. The Government should permit the departments to execute works costing up to five thousand, ten thousand or, if necessary, even twentyfive thousand. They should take a decision that works costing up to a particular amount may be executed by the parent department without the concurrence of the Public Works Department. Small works like those required by the Public Health Department or the Fisheries Department could straightaway be executed by them without having to approach the Public Works Department. This is a practical suggestion. I hope and trust that the Government will examine and try to implement it.

I come to another point. There is what is known as the work charged establishment in the Public Works Department. This has been there since a number of years. This was a creation of centuries ago when the Britishers were ruling the country. The work charged employees are neither fish nor flesh; they are neither permanent nor temporary. Unfortunately the rules provide for such a category. The House will be shocked to know that a person earning two hundred rupees can be employed or dismissed without having to go through the proper channel. The work charged employees have been feeling sore about this for a number of years. When the first Pay Commission was appointed in 1960 they made epresentations. The Commission made certain important recommendations and not one of them have been implemented even by the previous Government.

Therefore, I request the present Government at least to consider the request of the 'work charged' employees sympathetically. About one year ago when our present Chief Minister was the Minister for Public Works, he presided over a function arranged by the 'work-charged' employees and gave them certain assurances. I was also one of the persons who spoke at that function. The Hon. Chief Minister then assured them on the spot that 6 or 7 demands which did not involve extra expenditure would be implemented immediately and the other demands which involved extra expenditure would be sympathetically considered. I have given notice of a number of cut motions with

regard to the 'work-charged' employees and I request the Government to consider them sympathetically and do the needful in the matter.

Then I come to the other problem relating to the large number of diploma-holders and degree-holders working in the Public Works-Department. There is what is known as Tamil Nadu Engineers Council and this Engineers Council has sent a petition to the Government. I shall now read an extract from that petition which is an authenticated document. It runs as follows—

'We regret to bring to your kind notice that about 300 Supervisors of Tamil Nadu P.W.D., those who have put in a service of 2 to 7 years are facing retrenchment due to current appointments of Junior Engineers in the place of Supervisors by the Madras Public Service Commission.

It is the pitiable stage in the life of the Supervisors that even after putting a considerable service with the maximum age limit which is eligible for recruitment in any Government Service, they are now in a precarious position. If they are retrenched from the department they will not be able to secure any other alternate job in the Government, as many of them already 'have crossed the age limit.'

In the petition, they have suggested—

'Instead of retrenching supervisors there may be more posts for supervisors only if created as follows :—

1. In every division office of P.W.D. and other departments of Tamil Nadu one post of Technical Assistant may be created who will be acting as the P.A. to Executive Engineer in dealing with all the technical matters. This will fill up a much felt vacuum and will increase the efficiency of the departments.

Finally I come to the Cooum Project. As I have already stated on a former occasion, there are two points to be considered. Firstly, in the process of excuting the project, the Government have displaced some pepole like washermen. Perhaps we will be going round the project tomorrow but I would request the Hon. Minister to sympathetically consider their problem. Secondly, there is a feeling among certain sections of the people—I do not know whether it is ill-founded or well founded—that the funds allotted for the Cooum Project are not properly utilised and audited. I do not want to say anything furthtr. I would request the Hon. Minister to see that no such bad name is got by the department because I know the present Minister is doing things very well, and I do not want him to earn a bad name. I request him to send some persons discreetly to find out (1) whether it is a fact that an official diversion of funds has been made and whether the money meant for a particular project has been diverted officially through telephonic orders to some other project and (2) whether there has been any corruption, nepotism etc. in the



matter of giving contracts to a particular set of persons in connection with the execution of the Cooum Improvement Scheme. With regard to point (1) he can get the information directly from the department and find out the truth. As regards point (2), the head of the department will try to justify it but I request the Hon. Minister to send some persons from the C.I.D. Department to find out whether there is any basis for that.

I thank you, Sir, for giving me an opportunity o speak on this occasion.

* **திரு. சி. பழனி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டுக்கான பொதுப் பணி மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தென்னாட்டுக் காந்தி என்று போற்றப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்திலுள்ள ஓமலூர் தொகுதி என்னுடைய தொகுதியாகும். என்னுடைய தொகுதியில் மருத்துவ மனையை விரிவுபடுத்த 83 ஆயிரம் ரூபாய் ஒதுக்கிக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் தொப்பையாறு இருக்கிறது. இதில் அணை ஒன்றைக் கட்ட வேண்டுமென்ற திட்டம் 1913-ல் இருந்து கைவிடப்பட்டுவிட்டு, பின்னர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நானும் இதே சட்டமன்றத்தில் கடந்த மூன்று ஆண்டுக் காலமாக வற்புறுத்தி வருகிறேன். தொப்பையாறு ஸ்கிம் போட்டு அணை கட்டுவதனால் என்னுடைய தொகுதியில் சுமார் 2 ஆயிரம் எக்கர்களும், தர்மபுரி மாவட்டத்தில் 500 எக்கர்களும் பாசனத்திற்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை உடனடியாக ஏற்று நடத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே வேப்பிலை என்ற கிராமத்திலே ஒரு புதிய ஏரியை அமைத்துத் தர வேண்டும். இதற்காக நிலங்கள் சர்வே செய்யப்பட்டும், இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. என்னுடைய தொகுதி பருவ மழையையே நம்பியிருக்கும் தொகுதி. இங்கு ஏழை விவசாயிகள் தான் அதிகமாக இருக்கிறார்கள். இங்கு காவேரிப் பாசனமோ மற்ற ஏரிப் பாசனங்களோ இல்லை. சேலம் மாவட்டத்தில் என்னுடைய தொகுதி முழுக்க முழுக்க பருவமழையை நம்பியிருக்கிறது. கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் அவதிப்படுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, என் தொகுதியில் உள்ள வடமனேரி, குண்டுக்கல் ஏரி, பன்னப்பட்டி ஏரி முதலிய ஏரிகளைத் தூர் எடுத்து, பாசனத்திற்கு வழிசெய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சி. பழனி] [1970 மார்ச் 25

அடுத்து என்னுடைய தொகுதியில் மோரூரிலிருந்து ராம கிருஷ்ணநகரம் வழியாக கேதநாயக்கபுதூர் என்ற ஊருக்கு ரோடு வசதி செய்து கொடுக்க வேண்டும். அது மலைப்பகுதியாக இருக்கின்ற காரணத்தால் ஏழை விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அடுத்து மேச்சேரி பிரிவு ரோடிலிருந்து மாக்கோட்டை வழியாக காரவல்லி என்ற ஊருக்கு வசதி இல்லை. அங்குள்ள பஞ்சாயத்தில் பணம் இல்லாததால் அந்த ரோடைப் போட முடியவில்லை. ஆகவே, இந்த ரோடை ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் எடுத்து, அந்த வேலையைச் செய்ய வேண்டும். வேப்பிலை கிராமத்திலிருந்து பொம்மியப்பட்டிக்கு ரோடு வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

அடுத்து, கிளக்காறு ஆற்றிலே 80 ஆயிரம் ரூபாய் செலவு செய்து ஒரு அணையைக் கட்டியிருக்கிறார்கள். இந்த அணையைக் கட்டி சுமார் ஐந்து ஆண்டுக் காலமாகிறது. இருந்தும் அந்த அணைக்கட்டினால் நீர்ப்பாசனம் பெறுவதற்கு வழி இல்லை. அணையை இன்னும் ஒரு அடி உயரம் உயர்த்திக் கட்டினால் நல்ல பலன் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பொமசூர் பகுதியிலிருந்து செட்டிப்புதூர் போகும் வழியில் புதிய வாய்க்கால் ஒன்றை எடுத்துக் கொடுத்தால் விவசாயத்திற்கு வசதியாக இருக்கும். விவசாயிகள் அதிக நன்மை பெறுவார்கள். ஆகவே, இதை உடனடியாகச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இருபது ஆண்டுக்காலமாக ஆண்ட காங்கிரஸ்காரர்கள் செய்யாத வேலையை இன்றைய முதலமைச்சர் அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள்? நானும் ஏழை, என்னுடைய தொகுதியும் ஏழ்மையான தொகுதி. பஞ்ச நிவாரண வேலைகளின் பொருட்டு இரண்டு லட்சம் ரூபாயை உடனடியாக சாங்ஷன் செய்து. பல திட்டங்களையும் பஞ்ச நிவாரண வேலைகளையும் செய்து கொடுத்ததற்காக, என்னுடைய சார்பிலும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியத்தை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, பொதுப்பணித்துறை-பாசன மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக எனது கருத்துக்களை இந்தச் சபையில் சொல்ல விரும்புகிறேன்.

நீர்ப்பாசனம் சம்பந்தமாக பற்பல திட்டங்களை இந்த 3 ஆண்டு காலமாக பல கோடி ரூபாய்களில் நிறைவேற்றியும் கூட 333 லட்சம் ஏக்காக்கள் பூமி இருக்கிறது என்றால் 150 லட்சம் ஏக்கரா வுக்குத்தான் பாசன வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டில் நிறைய நிலப்பரப்பும், உழைக்கின்ற மக்கள் தொகையும் இருந்தும் கூட நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்க முடியாத பற்றாக்குறை காரணமாக முழு அளவுக்கு உணவு உற்பத்தித்துறை



1970 மார்ச் 25] [திரு. ஆ. கு. சுப்பையா]

யில் செயல்பட முடியவில்லை. ஆகவே இனி அரசு தண்ணீர் பற்றாக்குறையை நீக்கி, இன்னும் அதிகமான நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும் பெருமுயற்சியிலே ஈடுபடவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தண்ணீர் பற்றாக்குறை மாநிலம் என்று சொல்கிற நேரத்தில் மைசூர் அரசு மனது வைத்தால்தான் காவேரியில் இனி தண்ணீர் வரக்கூடும் என்கிற புதிய பிரச்சினை வேறு எழுந்திருக்கிறது. அது பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற போது நமது அரசு மைசூர் அரசுடன் நடத்திய சுமூகமான பேச்சுவார்த்தைகள் மூலம் இதுவரை நமக்கு கிடைத்துவந்த காவேரி ஆற்று நீர் அளவுக்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாத அளவுக்கு அவர்கள் ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்கிற நம்பிக்கையைத் தெரிவித்தார்கள். அதற்காக தமிழக மக்களின் சார்பாக தமிழக அரசை நான் பாராட்டுகிறேன்.

அதோடு ஆந்திரா அரசுடன் கூடவும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய கால கட்டம் வந்திருக்கிறது. இன்றையதினம் கிருஷ்ணா நதித் தண்ணீர் வீணாகக் கடலில் போய் விழுந்துக் கொண்டிருக்கிறது. அந்த நதித் தண்ணீரை தமிழ்நாட்டின் பக்கம் திருப்பிக்கொண்டு வருவதன் மூலமாக தமிழகத்தின் வடபகுதியை விவசாயத்திற்கு ஏற்றதாக அமைக்க முடியும்.

அதேபோல கேரள அரசுடனும் பேச்சுவார்த்தை நடத்தி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் இன்னமும் இறுதியாக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. மீண்டும் பேச்சு வார்த்தை நடத்தி சோலையாறு, கரியாறு, சண்பகவல்லியாறு போன்றவற்றை நிறைவேற்றுவதன்மூலமாக மதுரை. இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் 6 லட்சம் ஏக்கரா பாசன வசதி பெறும் என்று சொல்லப்படுகிறது. அதையும் செய்ய வேண்டும்.

காங்கிரஸ் ஆட்சியின்போது திருச்சி மாவட்டம். கரூர் வட்டத்திலே வில்லங்கிரி மலையிலே நொய்யாறு என்கிற திட்டம் 6 கோடி ரூபாய் அளவில் தீட்டப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டது என்று அறிகிறேன். அதன்மூலம் 40 ஆயிரம் ஏக்கரா பாசன வசதி பெறும் என்று சொல்லப்படுகிறது இன்றையதினம் மிகவும் வறட்சியான பிரதேசமாக அது இருக்கிறது. அந்த நொய்யாறு திட்டத்தையும் அரசாங்கம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சமுதாயக் கிணறுகள் வெட்டுவதாகவும் சில இடங்களில் பஞ்சாயத்து யூனியன் பொறுப்பில் அந்தப் பணி விடப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. பொதுவாக பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களிடம் எந்தவிதமான பாசன வேலைகளையும் ஒப்படைக்கக் கூடாது. அந்த வேலைகளை எல்லாம் பொதுப்பணித் துறை இலாக்காவே எடுத்துச் செய்யவேண்டும் என்பது என் அபிப்பிராயம் ஆகும்.

இன்றைய தினம் விவசாயிகளுக்கு அவர்களுடைய சொத்து அடிப்படையில் கிணறுகள் எடுக்கக் கடன் கொடுக்கிறார்களே தவிர, சொத்தில்லாத விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. இன்றைய தினம் நூற்றுக்கணக்கான விவசாயிகள் கோவில், மடங்களுக்குச் சொந்தமான நிலங்களை வாரத்திற்கு, குத்தகைக்குப் பயிரிடுகிறார்கள். இவர்களுக்கு எல்லாம் இந்தக் கடன் உதவி கிடைப்பதில்லை. ஆகவே பொதுப்பணித்துறை இலாக்காவே அங்கங்கே சமுதாயக் கிணறுகளை எடுத்து இந்த விவசாயிகளுக்குப் பாசனத்திற்கு வழி செய்து கொடுக்க வேண்டும்.

இதற்கு முன்னால் பழைய கிணறுகள், ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் முதலியவற்றை செப்பனிடல், தூர் எடுத்தல் போன்ற காரியங்களைச் செய்தார்கள். இப்போது அவற்றை பி கிளாஸ் சி கிளாஸ் என்று பிரித்து பஞ்சாயத்துகளிடம் ஒப்படைக்கப்படுகிறது. இம்மாதிரி வேலைகளை அரசே செய்யவேண்டும். அதற்காகவும் அரசாங்கம் பணம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திருச்சி மாவட்டத்தில் குடவனாறு, சன்பகனாறு, சிறுவாணி முத்தாறு ஆகியவற்றில் அணைக் கட்டுவதன் மூலமாக பல ஆயிரக் கணக்கான ஏக்கரா நிலங்களைப் பாசனத்திற்குக் கொண்டுவர முடியும் என்று சொல்லப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நணபதியாறு, சாத்தான்குளம் அணைக்கட்டுத் திட்டத்தை முன்பு எடுத்துக்கொள்ள திட்டமிடப்பட்டு கைவிடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அவற்றையும் எடுத்துக்கொள்ள பரிசீலனை செய்தால் ஆயிரக்கணக்கான ஏக்கரா பாசன வசதிபெறும்.

நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரை ஆறுமுகமங்கலம் திட்டம், வடிகால் திட்டம் இவற்றை நிறைவேற்றித்தர ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

மதுரை மாவட்டத்திலும் பல திட்டங்கள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் நிறைவேற்றுவதன் மூலம் தமிழகத்தில் உள்ள தண்ணீர் பற்றுக்குறையைப் போக்க முடியும். ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்ட திட்டங்களை உடனடியாக நிறைவேற்றுவதன் மூலம் பல லட்சக்கணக்கான ஏக்கரா நிலங்களைப் பாசனத்திற்குக் கொண்டுவர முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் 14 லட்சம் ஏக்கரா நிலங்கள் இருக்கின்றன என்றால் 3 லட்சம் ஏக்கராதான் இரு போகத்தில் இருக்கின்றன. வடிகால் வசதி இல்லாத காரணத்தினால் பல லட்சம் ஏக்கரா ஒருபோக சாகுபடியிலேயே இருக்கிறது. மழை காலத்தில் பயிரப்படுகிற நிலங்கள் கூட வெள்ளத்தில் மூழ்கி பயிர்கள் நாசமாகி விடுகின்றன. ஆகவே உலக வங்கியிடம் இருந்து 49 கோடிக்கு உதவி பெற்று அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை போட்டிருக்கிற வடிகால் திட்டத்தை நிறைவேற்றியாகவேண்டும்.





அந்த வடிகால் திட்டம் நிறைவேறினாலேயே 6 லட்சம் ஏக்கரா இருபோக பாசனம் பெறும், 10 லட்சம் ஏக்கரா ஒருபோக பாசனம் பெறும். ஆகவே அந்த வடிகால் திட்டத்தை நிறைவேற்ற தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டாகவேண்டும்.

பாலங்கள் கட்டுவது, புதிய சாலைகள் போடுவது ஆகியவற்றை அரசாங்கப் பொறுப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டும். தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் இந்தச் சாலைகள் பராமரிப்பை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைப்பதில் பயன் இல்லை. அவற்றுக்குப் போதுமான வருவாய் இல்லாத காரணத்தினால் அவற்றைப் பராமரிக்க முடியாமல் இருக்கிறது. குறிப்பாக என்னுடைய வெட்டுத் தீர்மானத்தில் எனது தொகுதி சம்பந்தப்பட்டவரை சில சாலைகளைக் குறிப்பிட்டு அவற்றை அரசாங்கப் பொறுப்பில் ஏற்று நடத்த வேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன். அந்தச் சாலைகளை சர்க்கார் தயவு செய்து எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தச் சாலைகளை எடுத்துக்கொள்வதின் மூலமாக விவசாயத்திற்கு எவ்வளவு ஊக்கம் அளிக்கிறோமோ எவ்வளவு பணம் செலவழிக்கிறோமோ அது பயன்பட வேண்டுமானால், விவசாயிகள் தங்களுக்குத் தேவையான சாமான்களை ஏற்றிச் செல்வதற்கும், விற்பனை செய்வதற்காகத் தானியங்களை மார்க்கட்டுகளுக்குக் கொண்டு வருவதற்கும் அந்தச் சாலைகள் தேவையாக இருக்கின்ற காரணத்தினாலே சாலை வசதிகள் அத்தியாவசியமாக இருக்கின்றன, எனவே அரசாங்கம் அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும். இன்னும்—அரசாங்கத்திலிருந்து பதில் சொல்லலாம்—பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்று. பழைய மாமூல் பழக்கமாகவே அப்படிச் சொல்கின்ற முறை இருந்துகொண்டு இருக்கிறது. எனவே அதை மாற்றி அரசாங்கம் உடனடியாக இவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும். தஞ்சை ஜில்லாவிலே ஒரு தொகுதிக்கு ஒன்று ஒரு வேலை என்ற முறையிலாவது உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது நான்கு அல்லது ஐந்து தொகுதிகளில்தான் அந்த வேலை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு தொகுதிக்கு ஒரு வேலை என்ற முறையிலே எடுத்துக் கொள்ள வேண்டும். அதிகாரிகள் செய்கிறார்களா அல்லது அரசாங்கம் செய்கிறதா என்று தெரியவில்லை. இனிமேலாவது பரவலாக இந்த வேலைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இத்துடன் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் இன்று மாலை 3 மணியளவில் கூடும். வணக்கம்.

பேரவை பிற்பகல் 1.02 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

(இடைவேளைக்குப்பின்—பிற்பகல் 3.00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. நாகலிங்கம் அவர்கள் பேசுவார்கள்.

*** திரு. பா. நாகலிங்கம்:** பெருமதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல முன்வந்துள்ளேன்.

சென்னை நகரத்திற்கே தண்ணீர் இல்லாமல் மிகக் கஷ்டப்பட்ட நேரத்தில், குறிப்பாக செங்கற்பட்டு மாவட்டத்தில் என்னுடைய தொகுதியிலுள்ள பஞ்சட்டி என்ற பகுதியிலிருந்து குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டுவந்து இந்த அரசு நிலைமையைச் சமாளித்தது. வறட்சி நிவாரண நிதியிலிருந்து செலவிட்டு, சென்னை நகரத்திற்கு தண்ணீர் கொடுத்த அந்தப் பணியினை நாம் பார்க்கின்ற நேரத்தில். அதற்குக் காரணமாக இருந்த அமைச்சரவையையும் பொதுப் பணித் துறையில் இத் திட்டத்தினை நிறைவேற்றுவதற்குப் பணியாற்றிய அந்தந்த அதிகாரிகளையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மின்சாரத் துறையினருக்குச் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், பொதுப்பணித் துறையில் பணியாற்றுகின்ற எல்லோருக்கும் நாம் சம்பள உயர்வு கொடுத்து உதவியாக வேண்டும். அப்படி அவர்களை உற்சாகப்படுத்தினால் அவர்கள் மிகச் சிறப்பான பணியை ஆற்றக் கூடும் என்று நான் அமைச்சரவைக்கு இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய தொகுதியில் நாப்பாளையம் மேம்பாலத்தைக் கட்ட வேண்டும் என்று நான் மூன்று ஆண்டுகளாக இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியும், இந்தத் தமிழக அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகும், நம்முடைய நிதிநிலை அறிக்கையினை இந்த ஆண்டு வெளியிட்ட போது அதில், "செங்கற்பட்டு மாவட்டத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய மேம்பாலங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, நாப்பாளையம் மேம்பாலத்தைப்பற்றிக் குறிப்பிடவில்லை. நாப்பாளையம் மேம்பாலத்தை எடுத்துக் கொண்டு விட்டோம் என்ற நல்ல செய்தியைக் காணோம். நம்முடைய அமைச்சரவர்கள் காலையில் சொல்லும் நேரத்தில், பல மாவட்டங்களில் எடுத்துக் கொண்ட பாலங்களினுடைய பட்டியலைச் சொன்னார்கள். அந்தப் பட்டியலில் நாப்பாளையம் மேம்பாலம் இடம்பெற வேண்டிய பாலமாகும். அதிலே இடம்பெற வேண்டியதற்கு என்ன என்ன நியாயங்கள் இருக்கின்றன என்பதை நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் உணருவார்கள். அதனுடைய மதிப்பீட்டை நான் நம்முடைய ஹைவேஸ் இன்ஜினீயர் அலுவலக சீஃப் இன்ஜினீருக்குக் கொடுத்திருக்கிறேன். பொன்னேரி மேம்பாலத்திற்கான மதிப்பீடு 15 லட்ச ரூபாய் என்றும், நாப்பாளையம் மேம்பாலத்திற்கான மதிப்பீடு 12½ லட்ச ரூபாய் என்றும் இந்த இரண்டு மதிப்பீட்டையும் நம்முடைய ஹைவேஸ் இன்ஜினீரிடத்தில் 23—5—1969-ஆம் தேதியிட்ட மதிப்பீட்டைக் கொடுத்திருக்கி



றோம். ஆனால், இது நாள் வரையில் அவற்றின் நிலைமை என்ன ஆகியிருக்கிறது என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. சட்டமன்றத்தில் கேள்வி கேட்டபோதும், "உங்களுடைய மேம்பாலத்தைக் குறித்து அந்தப் பிரச்சினை சர்க்காருடைய கவனத்தில் இருக்கிறது" என்று 25—11—1969 அன்று நான் கடிதம் ஒன்று எழுதியதற்குப் பதிலாக "அரசு கவனத்தில் இருக்கின்றது" என்று பதில் வருகிறதே தவிர, இதுநாள் வரையிலும் அது நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அண்மையில் நம்முடைய அமைச்சரவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்து, அந்த நாப்பாளையம் மேம்பாலம் கட்டவேண்டிய அவசியத்தையும், பொன்னேரி மேம்பாலம் கட்டவேண்டிய அவசியத்தையும் நேரடியாக உணர்ந்தார்கள்.

சென்னைக்கு 16-வது மைலில் இருக்கும் பொன்னேரிக்கும் இடையில் பல்வேறு அரசுப் பேருந்துவண்டிகள் ஓடுகின்றன. தனியார்ப் பேருந்து வண்டிகளும் ஓடுகின்றன. குடத்தலை ஆற்றில் வெள்ளம் பெருகி வரும்போது போக்குவரத்து மிகவும் பாதிக்கப்படுகிறது. ஒரு மாதம் காலம் அந்த ஆற்றில் வெள்ளம் பெருகி, அதன் காரணமாகப் கும்முடிபூண்டியிலிருந்து சென்னைக்கு வருகிற இரயில் வண்டிகள் தடைப்பட்டு விடுகின்றன. வெள்ளத்தினால் ஏற்பட்ட அரிப்பின் காரணமாக தந்திக் கம்பங்களும், தண்டவாளங்களும் பெயர்ந்து போக்குவரத்துக்கு இடைஞ்சலை உண்டாக்குகின்றன. சென்னைக்கு வருகிற கும்முடிபூண்டி லோகல் இரண்டு நாள், மூன்று நாள், ஒரு வாரம், 15 நாட்கள் கூட வரமுடிவதில்லை. அதனால் கும்முடிபூண்டியிலிருந்து சென்னைக்கு வருகிற பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களும், விவசாயப் பெருமக்களும் பாதிக்கப்படுகிறார்கள். அங்குள்ள மக்கள் வைக்கோல், மற்றும் விவசாயப் பொருள்களை சென்னைக்குக் கொண்டுவந்து வியாபாரம் செய்துவிட்டு, தங்களுக்குத் தேவையான பிற பொருள்களையும் சென்னையிலிருந்து வாங்கி எடுத்துச் செல்லவேண்டியவர்களாக இருக்கிறார்கள். விவசாயிகளும், வியாபாரிகளும் தங்களுக்குத் தேவையான பொருள்களை சென்னையிலிருந்து வாங்கிக்கொண்டு பொன்னேரி செல்லுகிற அந்த வழியில் இருக்கும் குடத்தலை ஆற்றினுடைய மேம்பாலத்தைக் கட்ட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்திச் சொல்லுகிறோம். எங்கள் மாவட்டத்தின் சார்பில், எங்களுடைய மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலும் நாங்கள் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, மாவட்டத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் பொதுப் பணித்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்கும் அரசினுடைய கவனத்திற்கும் கொண்டுவந்திருக்கிறோம். பொதுப்பணித்துறை அமைச்சர் தலைமை வகித்த கூட்டத்தில்கூட நாங்கள் மிக விளக்கமாக எடுத்துச் சொன்னோம். இருந்தும், இன்னின்ன வேலைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று இல்லை. என்னுடைய தொகுதியிலே இரண்டு மேம்பாலங்கள் கட்ட

வேண்டியிருக்கிறது. அதிலே ஒன்றையாவது இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கையுடன் அதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

என்னுடைய பகுதியில் பல்வேறு குழாய்க் கிணறுகளை அமைத்திருக்கிறார்கள். ஒருசில குழாய் கிணறுகள் அவசியமில்லையோ என்ற நிலையில் இருக்கிறது. பாக்கி இருக்கும் குழாய்க் கிணறுகள் எல்லாம் விவசாயிகளுடைய நிலத்தில் போடப்பட்டிருக்கிறது. போடப்பட்டிருக்கும் குழாய்க் கிணறுகள் சும்மா இருக்கின்றன. அதற்குச் செலவழித்த பணத்திற்குச் சர்க்கார் கிரயம் போட்டுக் கொடுத்தால் பல ஏழை விவசாயிகள் பிழைப்பதற்கு வழிவகையாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

எங்களுடைய பகுதியில் ஊராட்சி ஒன்றியங்கள் சரியான முறையில் செயல்படவில்லை என்றாலும், இணைப்புச் சாலைகளைப் பஞ்சாயத்திலிருந்துதான் போட வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. அதைப் பொதுப் பணித் துறையில் அல்லது பெருவழித் துறையில் எடுத்துக் கொண்டு இந்தச் சாலைகளைச் சீரமைக்க வேண்டும். இந்த அரசு கடந்த மூன்றாண்டுக் காலத்தில் பல காரியங்களை எங்களுடைய தொகுதிக்குச் செய்து கொடுத்திருக்கிறது. பழவேற்காட்டில் 20 ஆண்டுக் காலமாக தண்ணீர் இல்லாத நிலைமை பஞ்ச நிவாரண வேலைகளை எடுத்துக் கொண்டதன் காரணமாகப் போக்கப்பட்டிருக்கிறது. இப்போது பழவேற்காட்டில் உள்ள மக்களுக்கு ஒரே நேரத்தில் 10,000 கேலன் தண்ணீர் வசதி கிடைக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக இந்த அரசுக்கும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாமத் தீவு என்று சொல்ல வகையில் எண்ணூர் பகுதி அமைந்திருக்கிறது. அந்தப் பகுதியில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற முந்திரிக் காடுகள் நிறைந்திருக்கின்றன. எண்ணூரிலிருந்து பொன்னேரிக்கு வரவேண்டுமென்றால் கெனலில் தான் வரவேண்டும். அங்கு ஒரு மேம்பாலம் அவசியம் தேவை. அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் அப்போது ஒரு கூட்டத்திற்கு எங்களுடைய பகுதிக்கு கெனலைத் தாண்டி வரவேண்டிய நிலை ஏற்பட்டதால் வர இருந்த அமைச்சர் அவர்கள் வரமுடியாத நிலை ஏற்பட்டது. படகிலே செல்லும்போது படகு கவிழ்ந்து நான்கு பேர் உயிரிழந்தார்கள் என்பதும் இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, பொன்னேரிக்குச் செல்வதற்கு அங்கிருந்து ஒரு மேம்பாலத்தை அவசியம் கட்டித் தரவேண்டும். இதனால் அந்தப் பகுதியில் இருக்கக் கூடிய தொழிலாளர்களுக்கு குறிப்பாக அசோக் லேலண்டு போன்றவற்றில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு வசதியாக இருக்கும். அந்தத் தொழிலாளர்களின் குவார்ட்டர்ஸ் எங்கள் பகுதியில்தான் இருக்கிறது. அங்கு ஆயில் ரிபைனரி, உரத்



தொழிற்சாலை ஆகியவையும் இருப்பதால் அந்த மேம்பாலத்தைக் கட்டித்தர ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

* திரு. மா. இராசாங்கம்: தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டு பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுப்பணித் துறை சிறப்பாகப் பணியாற்ற வேண்டுமென்றால் ஐந்தாண்டுத் திட்டங்கள் அடுத்து அடுத்து இருந்து கோடிக் கணக்கான பணத்தை முதலீடு செய்தால்தான் பல காரியங்களை ஆற்றுவதற்கு வழிவகை இருக்கும். இப்போது செப்பனிடுவதற்குள்ள வழிவகைகள்தான் இருக்கின்றனவே தவிர, புதிய பணிகளைக் கூடுதலான பணத்தைச் செலவு செய்து செய்யக் கூடிய நிலைமை இல்லை என்பதை அமைச்சர் அவர்களும் ஒப்புக் கொள்ளுவார்கள். தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களும் நாட்டில் இருக்கின்றன. எப்படியும் பணத்தைச் செலவு செய்து சில காரியங்களைச் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது.

உணவு உற்பத்தியை மனத்திலே வைத்து நாட்டிலே பல திட்டங்களைச் சொல்லிக் கொண்டே இருக்கும் நேரத்தில் திடீர் தேவைகளை அனுசரித்து திட்டங்களைப் போட வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட திட்டங்களில் ஒன்று பெரியாறு இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம்—நாலரை கோடி ரூபாயில் திட்டமிடப்பட்டிருக்கிறது. பல காலமாக அதைப்பற்றிப் பேசிக் கொண்டே இருக்கிறார்கள். அதைப் பற்றிய ஒரு முக்கியத்தைச் சொல்ல விரும்புகிறேன். பரம்பிக்குளம்-ஆளியாறு போன்ற இடங்களில் சிமென்ட் வாய்க்கால்களாகக் கட்டி இருக்கும் காரணத்தால் தண்ணீர் சேதம் ஏற்படாமல் வந்து சேர வாய்ப்பு இருக்கிறது. எங்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாத காரணத்தால் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. வெள்ளையன் காலத்தில் ஆயக்கட்டு நிலையே வேறு. முறையே வேறு. இப்போது அரசியல் கலந்து ஆயக்கட்டுகளின் முறையே மாறிவிட்டது. இரண்டு தாலுகாக்களுக்கு இத்தனை லட்சம் ஏக்கர்களுக்கு என்று இருந்தது திடீரென்று நிலைமை மாறியதின் காரணமாக முதல் பாசனத்திற்கே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. உத்தமபாளையம் தாலுகா, மேலூர் தாலுகா ஆகியவற்றில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. ஜனநாயக நாட்டில் எல்லோருக்கும் தண்ணீர் வழங்க வேண்டுமென்ற நினைப்பு இருப்பதால் அதை நிறைவேற்றும் வகையில் சிமென்ட் வாய்க்கால் போட்டால் தண்ணீர்த் தட்டுப்பாட்டைத் தவிர்க்க முடியும்.

பெரியாறு அணைக்கட்டைப் பொறுத்தவரை வெகு காலத்திற்கு முன்பு கட்டப்பட்டது. புதிய அணைக்கட்டுகளைக் கட்டுவது என்றால் அது பெரிய காரியம் என்பது நமக்கே தெரியும்.

கோடிக்கணக்கான ரூபாய்க்குத் திட்டங்களைப் போடுவது சிரமம். இப்போது அந்த அணைக்கட்டுக்கு சப்போர்ட் டாம் கட்டவேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த அணைக்கட்டுக்கு ஆபத்து வந்துவிட்டால் மீண்டும் கட்டுவது என்பது முடியாத காரியம். அணைக்கட்டு உடைந்துவிட்டாலும் அங்கே எப்போதும் 140 அடி தண்ணீர் நிற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஏற்கனவே துவாரங்கள் போட்டு ஸிமெண்ட் பாலை விட்டு ஓரளவு காப்பாற்றி இருக்கிறார்கள்—பக்ரா நங்கலில் செய்தது போல். அந்தப் பழைய அணைக்கட்டைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்புச் சாலைகள் (லிங்க் ரோட்ஸ்) இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்குக் கீழேதான் கொடுக்க முடிகிறது. பஞ்சாயத்து யூனியன் ரோடுகளில் சர்க்கார் பாலங்களைக் கட்டும் வாய்ப்பு இல்லை. மதுரை மாவட்டத்தில் அந்த மாதிரி ரோடுகள் இருக்கின்றன. அந்த ரோடுகளுக்காக விலை உயர்ந்த வயல்களுக்கு மத்தியில் இடத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பாலம் இல்லாததன் காரணமாக அந்த ரோடுகள் கெட்டுவிடுகின்றன. ஆகவே, அதை மீண்டும் அவர்கள் எடுத்துக் கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, பாலத்தைக் கட்டிக் கொடுத்தால்தான் ரோடுக்கான இடத்தைக் கொடுப்போம் என்றும் சொல்கிறார்கள். அவ்வாறு விலை உயர்ந்த இடங்களை ரோடுகளுக்காகத் தருபவர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் வகையில் காரியங்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பொதுப்பணித் துறையின் கீழ் இயங்குகிற பயணிகள் விடுதிகள் சரியாக இருக்கின்றன, ஆனால் நெடுஞ்சாலையினர் நிர்வகிக்கும் பயணிகள் விடுதிகள் எப்படி ஆரம்பிக்கப்பட்டதோ அப்படியே இருக்கின்றன. ஆகவே சில விஸ்தரிப்பு வேலைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

சிறுபாசனத் திட்டம் மூலம் 15 லட்சம் ரூபாய்க்கு உள்ளிட்ட வேலைகளைச் செய்வதற்கும், ஓடைகளின் குறுக்கே அணைகள் கட்டுவதற்காகவும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆறு, ஏழு லட்சம் ரூபாய் மதிப்பில் அடங்கும் வரட்டாறு என்ற இடத்தை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டிருக்கிறார்கள். ஒரு அணை கட்டும்போது நீர் மட்ட உயர்வு ஏற்படும்போது அடுத்துள்ள புன்செய் நிலங்களுக்கு அந்நீர் பயன்படுகிறது. இப்போது ஆயிரக்கணக்கான கிணறுகள் தோண்டுவதற்கு உதவி அளிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன.

காவிரி நீர் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. "தமிழ் நாட்டு மக்களின் முழு உரிமைகளுக்கு ஊறுபயக்கும் எந்த நடவடிக்கையையும் இந்த அரசு பார்த்துக் கொண்டிராது என்று இந்த அவைக்கு உறுதியளிக்க இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்



கிறேன்" என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஹேமாவதி என்று நினைத்தாலே சற்று சஞ்சலமாக இருக்கிறது. அது எந்த ஜில்லாவைப் பாதிக்கும்? தஞ்சை ஜில்லாவைப் பாதிக்கும் அது எதைப் பாதிக்கும்? அது தமிழ் நாட்டைப் பாதிக்கும். நான் பலரிடம் விசாரித்துத் தெரிந்து கொண்ட மட்டில் சொல்கிறேன். நிஜலிங்கப்பா மைசூருக்குச் சொந்தக்காரர். காமராஜ் அவர்கள் நம் தமிழ் நாட்டுக்குச் சொந்தக்காரர். அகில இந்தியா குறித்த எந்தக் காரியத்தைப் பற்றியும் அடிக்கடி எடுத்துப் பேசும் நம் பெருமதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் இந்த அணைக்கட்டுத் திட்டத்தைப்பற்றி ஒரு வார்த்தை கூட இதுவரையில் சொல்லாததைக் கண்டு நான் மிக்க வருத்தப் படுகிறேன். இதற்கு முன் இந்த அரசுக்கு மத்திய அரசின் மூலம் மத்திய அரசை வைத்துக்கொண்டு சில தொல்லைகள் கொடுக்கலாம் என்று கனவு கண்டிருப்பார்கள். அது முடியாது என்ற நிலைமை ஏற்பட்டவுடனே மாநில அரசாங்கங்களையாவது தூண்டி விட்டு இங்கு ஒரு சிக்கலான நிலைமையை உருவாக்கலாமே என்ற நிலைமை இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். காமராஜ் அவர்கள் இந்த அணைக்கட்டு கட்டப்படுவதைப் பற்றியோ அல்லது அதனால் தஞ்சை ஜில்லா பாதிக்கப்படுகிற நிலை பற்றியோ இது வரை ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை. அந்த அணையைக் கட்டுகிறவர்கள் எங்களுக்கு தேவை இருக்கிறது, ஆகவே கட்டுகிறோம் என்று கூடச் சொல்லவில்லை. அணைக்கட்டைக் கட்டியே தீருவோம் என்று பிடிவாதமாகச் சொல்வதில் இருந்து இதில் ஏதோ உள்ளடங்கிய காரியங்கள் இருக்கின்றன என்று தான் எதிர்பார்க்கிறோம். ஆனால் நம் அரசு துணிச்சலாக எதைச் செய்யமுடியுமோ அதைச் செய்யத் தயங்காது என்று அறிக்கையில் கூறியிருப்பதுபோல் தஞ்சை மக்களுக்கு ஏற்பட்டிருக்கிற பயத்தை போக்கி அவர்களின் நலனை காப்பாற்ற கூடிய விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயங்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. தோ. மு. நல்லசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. 1970-71-ம் ஆண்டுக்காக பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கைகள் 27, 28, 41, இறுதியாக 42 என்ற கோரிக்கைகள் மீது என் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை கூற நான் விரும்புகிறேன்.

காவேரி நதியையும், அதன் உபநதிகள், கிளை நதிகள் இவற்றின் அபிவிருத்திகளைப் பற்றியும் எவ்வளவோ பேசவேண்டியிருக்கிறது. இருப்பினும் இந்தப் பிரச்சனை குறித்து நம் அண்டை மாநிலமான மைசூருக்கும் தமிழ்நாடுக்கும் இடையே காவேரி நதிப்பற்றிய விவாதம் இருக்கும் இந்த நேரத்தில் அதுபற்றி இந்த அவை உறுப்பினர்கள் பேசி விஷயத்தைக் கெடுத்துவிட வேண்டா

மென்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அன்று கோரிக்கை விட்டதற்கிணங்க இதைப்பற்றி பேசாமல் விட்டு விடுவது நல்லது என்று நினைக்கிறேன்.

"செய்தக்க அல்ல செயக்கெடுச் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

என்பதற்கிணங்க அதைப்பற்றி பேசாமல் விட்டுவிடுவதோடு அது பற்றி இறுதியான முடிவைக் காணும் பொறுப்பு தமிழக அரசுக்கு இருக்கிறது என்பதை மட்டும் உணர்த்திக்கொள்ள விரும்புகிறேன்.

நம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் நீர்வழித்துறைகள் அவ்வளவும் ஆராய்ச்சி செய்யப்பட்டு மேற்கொண்டு எந்த ஒரு பெரிய திட்டத்தையும் எடுத்துக் கொள்ளமுடியாத நிலையில் இரண்டே இரண்டு வழிகள்தான் உண்டு என்ற முடிவுக்கு அரசு தீவிரமாக ஆராய்ச்சி செய்த பிறகு வந்திருப்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஒன்று "நில நீர்". அதாவது "க்ரவுண்ட் வாட்டர்." இரண்டாவது, இதுவவரை கிடைத்து வந்திருக்கக் கூடிய "நிலத்திற்கு மேலே கிடைக்கக்கூடிய நீர்." இந்த இரண்டையும் எந்தளவிற்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற முறையில் ஆராய வேண்டும் என்பதை எல்லாத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். பூமிக்கு அடியில் இருக்கக்கூடிய தண்ணீரை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து கண்டறிய வேண்டும் என்ற நோக்கத்தோடு ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்ட நீர் ஆய்வின் ஒரு பிரிவும், பொதுப்பணித்துறையின் நீர் ஆய்வுக் கோட்டம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. கிணறுகள் அமைத்து தண்ணீர் எடுப்பதில் விவசாயத்துறை முயன்று வந்திருக்கிறது தமிழகத்தைப் பொறுத்தவரையில். 300, 350, 400 அடி வரையில் ஆழமாக கிணறுகள் தோண்டுவதற்குச் சிரமப்படுகிறார்கள். உடுமலைப்பேட்டை, தாராபுரம், கரூர், பழனி, நாமக்கல் போன்றவிடங்களில் ஆயிரம் அடிக்கு மேல் கீழே போனாலும் கூட தண்ணீர் பெற முடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே இது வெற்றிகரமாக இல்லை என்று விட்டு விடுவோமானால் எதிர்காலத்தில் நமக்கு ஒரு பெரிய கேடு விளையும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது முடியுமா முடியாதா என்பதுபற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

பஞ்சாபில் பக்ராநங்கல் போன்ற பெரிய அணைக்கட்டுகளைக் கட்டி முடித்த பிறகு, நதி வாயிலாகக் கிடைக்கக்கூடிய தண்ணீரைப் பயன்படுத்திக் கொண்ட பிறகு அவர்கள் ஆழமான கிணறுகள் வெட்டுவதில் கவனம் செலுத்தலானார்கள். அதன் விளைவாக இன்று 25,000 கிணறுகள் இயங்கிக் கொண்டிருப்பதாக அவர்களின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. அங்கு மின்சாரப் பற்றாக் குறை இருக்கிறது. இப்பொழுது 44,000 கிணறுகள் மின்சார இணைப்பிற்காக காத்துக் கொண்டிருக்கிறது. நான்காவது திட்டத்தில் ஒரு லட்சம் ஆழமான கிணறுகள் போடவேண்டு





மென்று போராவல் திட்டம் ஒன்று வகுத்திருக்கிறார்கள். ஆகவே இதுபற்றி யோசிக்க வேண்டியதில்லை. இது சாத்தியப்படும். இதில் தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

அடுத்து, மேல் உள்ள நீர்வளம். அதைச் சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் நம் லட்சியம். அந்த அடிப்படையில் நாம் இயற்றுகிற திட்டங்கள், வெட்டுகிற வாய்க்கால்கள், வெட்டுகிற கிளை வாய்க்கால்கள், இரண்டு பக்கங்களிலும் சிமெண்ட் போட்டு ஸீப்பேஜ் இல்லாமல் தண்ணீரை சிக்கனமாக உபயோகிக்க வேண்டுமென்ற முறையில் நாம் சிறந்த முறையில் நிர்வகிக்க ஆசைப்படுகிறோம். ரீமாடலிங்-க்காக ஏராளமாக செலவிட்டு வருகிறோம். லைடில் சிமெண்ட் போடுவது, மதகுகளை சீர்படுத்துவது, தாம்போதிகள் கட்டுவது தலைப்புகளை சீர்படுத்துவது போன்றவற்றில் அதிகப்படியான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

கரூர் வட்டத்தில் நான் சார்ந்திருக்கும் அமராவதி பாசன வாய்க்கால் இருபது ஆண்டுகளுக்கு முன் எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில்தான் இன்றும் இருந்துவருகிறது. ஆகவே மதகுகளை சரிப்படுத்த வேண்டும். 20 ஏக்கர் உள்ளதற்கும் ஆறு இஞ்ச் குழாய் வைத்துதான் கட்டியிருக்கிறார்கள். 100 ஏக்கர் உள்ளதற்கும் ஆறு இஞ்ச் குழாப் வைத்துதான் கட்டியிருக்கிறார்கள். இதனால் போகிற தண்ணீர் போய்க்கொண்டே இருக்கிறது. ஆகவே அதை ராஷனலைஸ் செய்து பயன்படுத்திக் கொள்வதில் பெருமுயற்சி எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, ரெகுலேட் செய்வதில் சில ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன். இப்போது நீர்ப்பாசன முறைகள் இருக்கின்றன. அதில் ட்யூவல் கண்ட்ரோல் இருக்கிறது. ரெவின்யூ இலாகாவும் பி.டப்ளியு.டி. இலாகாவும் அதை நிர்வகிக்கிறது. இதனால் எத்தனை இடையூறுகள் தெரியுமா? கலெக்டரைப் பார்க்க வேண்டும், தாசில்தாரிலிருந்து கலெக்டர்வரையுள்ள அத்தனை அதிகாரிகளையும் பார்க்க வேண்டும். மேலும் பி.டபிள்யு.டி-யையும் பார்க்க வேண்டும். இரண்டுபேரும் ஒத்துக்கொண்டால்தான் வாய்க்காலுக்குத் தண்ணீர் வரும். இப்படியில்லாமல் ஒரே ஏஜன்சியாகச் செய்ய வேண்டும். பி.டபிள்யூ.டி. என்றால் அவர்கள் ஒருவரே ஏற்றுக்கொள்ள வேண்டும். குறைந்த வருமானம் இருக்கிறது என்றால், ரெவின்யூ இலாக்கா "குடி மராமத்து" மூலம் வேலைகளை செய்து முடிக்க இன்று சாத்தியப்படவில்லை. எனவே ஒரே இலாகாவின் அடிப்படையில் இருக்க வேண்டும். ஒவ்வொரு நீர்ப்பாசன வாய்க்கால்கள் அல்லது குளங்கள் சம்பந்தமாக அங்கேயிருக்கும் நுகர்கின்றவர்கள் என்ன ஆலோசனை சொல்லுகிறார்கள் என்று கேட்க வேண்டும். எல்லாமே கஜானாவிலிருந்து பணத்தைக் கொடுத்து செயல்படுத்துவது என்பது முடியாத காரியம். பயன்படுத்தக் கூடியவர்கள் முன் வந்தால் அவர்களுக்கு எவ்வளவு தூரம் ஒத்துழைப்புக் கொடுத்துப்

பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அவ்வளவு தூரம் கால்வாய்களையும், குளங்களையும் செப்பனிடுவதற்கு பெருமுயற்சியெடுத்துக் கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் எல்.டி. ஒர்க்ஸ் என்று அதாவது லோகல் டெவலெப்மெண்ட் ஒர்க்ஸ் என்று 50 சதவிகிதம் ஊர்ப் பொதுமக்கள் போடுவார்கள், 50 சதவிகிதம் அரசாங்கம் போடும், அதைக்கொண்டு பள்ளிக் கட்டிடங்கள், ஆஸ்பத்திரிக் கட்டிடம் கட்டுவது என்று தமிழகத்தில் இயங்கியது. அதேபோல், ஏற்கனவே இருக்கும் நீர்வழித் துறைகளில் மழைத் தண்ணீர் அடித்துவிட்டது என்றால், அல்லது அதில் சிறிய சிறிய மராமத்து ஏற்பட்டால், எதையெதை இலாக்கா செய்ய வேண்டுமோ அதைச் செய்துவிட்டு, தூர் எடுப்பது போன்ற வேலைகளை, அங்குள்ள நுகர்வோரைக் கலந்துகொண்டு, அவர்கள் சொல்லும் யோசனைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, நீர் நிலைகளைப் பொறுத்தவரையில், முடிவு செய்வதைப் பற்றி ஒவ்வொரு சிறிய காரியத்திற்கும் தலைமை என்ஜினியரைப் பார்ப்பது அல்லது மராமத்து இலாக்கா அமைச்சரைப் பார்ப்பது என்றில்லாமல், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரே தலையிட்டு கோரிக்கைகளின் தன்மைக்கிணங்க உபகாரம் கிடைக்கும் அளவிற்கு ஏற்பாடு செய்தால் நன்றாகயிருக்கும். சென்ற ஆண்டு நிகழ்ந்தது அமைச்சரவர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று கருதுகிறேன். சர்க்கரை ஆலை ஓடுகிறது. கால்வாயில் தண்ணீர் விட வேண்டுமென்றால், கிராமங்களிலுள்ள மக்கள் சென்னைக்கு வந்து அமைச்சரைப் பார்த்துப் பரிகாரம் காண வேண்டியிருக்கிறது. இம்மாதிரி நிலையில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பிலேயே தீர்ந்துவிட வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரோடுகளைப் பொறுத்தவரையில் ஒன்றிரண்டு விவரங்களைச் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். நம்முடைய நாட்டிலேயிருக்கும் முன்னேற்றத்திற்கு மிகவும் அடிப்படையானவை போக்குவரத்து ரோடு. கிராம ரோடாகயிருந்தாலும் சரி அல்லது வில்லேஜ் ரோடாக இருந்தாலும் சரி. பஞ்சாயத்து ரோடாகயிருந்தாலும் சரி எதையெடுத்துக்கொண்டாலும் ரோடுகளில் என்க்ரோச்மெண்ட் இல்லாத ரோடே கிடையாது. அதைப் பற்றி அரசாங்கத்திற்கோ அல்லது அமைச்சருக்கோ கவனத்தில் இருக்கிறதா இல்லையா என்றே தெரியவில்லை. பெரிய பெரிய இயந்திரங்கள் இயங்குவதின் மூலம் அல்லது பெரிய பெரிய வாகனங்கள் போய்த்தான் பல முன்னேற்றங்கள் காண வேண்டும். ஆகவே, எல்லா என்க்ரோச்மெண்ட்டுகளையும், அது கிராமத்துச் சாலைகளாகயிருந்தாலும் அல்லது பெரிய சாலைகளாகயிருந்தாலும் கொஞ்சம் கூட தயவுதாட்சண்யமின்றி அப்புறப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நேஷனல் ஹைவேஸ் ரோடோ அல்லது ஸ்டேட் ரோடோ 100 அடிக்குக் குறையாமல் இருக்கவேண்டுமென்று போட்டாலும், அந்த 100 அடி, 120 அடி ரோடு 40 அடி





யாகச் சுருங்கிவிடுவதைப் பார்க்கிறோம். நாட்டின் முன்னேற்றம் ஒன்று; விபத்துக்களைத் தவிர்ப்பது மற்றொன்று. எனவே, இதிலே ரோடு என்க்ரோச்மெண்ட் விஷயத்தில் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சர்க்கரை ஆலைகள், நம்முடைய தென் பகுதியிலே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், டிராபிகல் கிளைமேட் ஆக இருப்பதால்தான் சர்க்கரை ஆலைகள் நல்லபடியாக இயங்கமுடியும், தேவையான சர்க்கரையை உற்பத்தி செய்ய முடியும், அந்நியச் செலவாணியைப் பெருக்க முடியும். பை-ப்ராடக்ட்ஸ் கிடைக்க முடியும். ஆகையால் நாம் அத் தொழிலை மிகவும் உற்சாகப்படுத்த வேண்டியவர்களாகயிருக்கிறோம். அந்தச் சர்க்கரை ஆலைகளிலே அறுவையாகும் கரும்பில் டன் ஒன்றுக்கு 5 ரூபாய் செஸ் வசூல் செய்து கரும்பு அபிவிருத்திக்குப் போக மீதியைப் போக்குவரத்து அபிவிருத்திக்காக செலவிடுவதன்மூலம் ஆலைகளுக்கு வேகமாக கரும்பு போக வேண்டுமென்று, கரும்பு காய்ந்துவிடாமல் பச்சையாகப் போக வேண்டுமென்ற ஏற்பாடு இருப்பதைப் பார்க்கலாம். ஆனால் செஸ் நிதியில் பாதி நிதியைக் கொண்டு, அந்த ஏரியாவிற்கு வேண்டிய பாலங்கள் மற்றும் தேவைப்படும் முன்னேற்றங்கள் செய்ய எல்லா சர்க்கரை ஆலைகளுக்கும் போக்குவரத்துத் துறையில் சரியான கவனம் செலுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். செஸ் நிதியில் பாதை அமைக்க 'இயர்மார்க்' செய்வதின் மூலம் போதிய தொகை ஒதுக்கி போக்குவரத்து வசதிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, போதிய அவகாசமில்லாத காரணத்தினால் துணைத் தலைவரவர்கள் மணியடித்து உட்கார வைப்பதற்குள்ளாக என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

* **திரு. எம். சி. பாலன் :** மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் பொதுப் பணித் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே கூற விழைகிறேன்.

கடந்த மூன்றாண்டுக் காலமாகத் தமிழக அரசு பாதைகளை அமைத்தும், பாலங்களைக் கட்டியும், சாலைகளை உருவாக்கியும், நீர்ப்பாசனம் அமைத்தும் ஆற்றியிருக்கிற அரிய பணிகளுக்கு முதலில் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். இந்த ஆண்டு கூட எங்களது ஊரிலே நிறைவேறிக் கொண்டிருக்கும் சித்தாறு-பட்டணங்கால் திட்டத்திற்கு, சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட 75.41 இலட்சம் ரூபாயிலிருந்து 78.75 இலட்சம் ரூபாயாக, கிட்டத்தட்ட 3 இலட்சம் ரூபாய் கூடுதலாக ஒதுக்கி அந்த வேலையில் தீவிரமாக முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறது. அதற்காகவும், பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தை மிகத் தீவிரமாக நிறைவேற்ற எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிக்காகவும் என்னுடைய பாராட்டுதலை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

[திரு. எம். சி. பாலன்] [1970 மார்ச் 25

இப்படிப்பட்ட நேரத்தில் நம்முடைய தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் இந்தத் தண்ணீர்ப் பற்றாக்குறையைப் பற்றியும் நீர்ப்பாசனத்திற்காக என்னென்ன காரியங்களை ஆற்ற வேண்டுமென்றும் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அண்டை மாநிலமான கேரளத்தில், அந்த தண்ணீர் கடலில் சென்றாலும் செல்ல விடுவோமே தவிர தமிழகத்திற்குத் தர மாட்டோம் என்று கூறுவதைப் பார்க்கின்றோம். அதைப்போன்றே பக்கத்து மாநிலமான மைசூர் மாநிலமும் 1924-இலே ஏற்பட்ட ஒப்பந்தத்தைத் தூக்கியெறிந்துவிட்டு, நாங்கள் அணைகட்டுவோம், மத்திய சர்க்காரே தலையிட்டாலும் நாங்கள் அணை கட்டப் போகிறோம் என்றுகூட அல்ல, அணை கட்டியே தீருவோம் என்று சொல்லும் நிலைமையையும் பார்க்கிறோம். இதே நேரத்தில் வட இந்தியாவில். இமயத்தில் ஆரம்பமாகி வங்கம் வரைக்கும், கிட்டத்தட்ட 1,500 மைல்தூரம் ஓடிவரும் கங்கை நதியின் தண்ணீர் 92 சதவிகிதம் கடலிலே விழுந்து பாழாகிறது. அப்படிப் பாழாவதோடு மட்டுமல்ல, சில நேரங்களில் ஆயிரக்கணக்கான மக்களை அங்கே பலியாக்கிவிட்டு, பல நகரங்களைப் பாழடித்துவிட்டு, பல வீடுகளைக் கொள்ளைகொண்டு செல்லுகின்ற அளவுக்கு வெள்ளப் பெருக்கோடு ஓடுகின்ற அதே நேரத்தில், தமிழகத்தில் பல ஆறுகள் 11 மாதங்கள் வறண்டு கிடப்பதையும், காவிரியாற்றைத் தவிர மற்ற ஆறுகளெல்லாம் வறண்டு கிடப்பதையும், பார்க்கிறோம். ஆனால் பக்கத்தில் இருக்கும் ஆந்திர மாநிலத்தில், கிருஷ்ணா, கோதாவரி ஆறுகளினால் ஆண்டு . முழுவதும் அங்கே நிறையத் தண்ணீர் கிடைக்கும் நிலையையும் பார்க்கிறோம். இதை மனத்திலே கொண்டு, 1957-இலே ஹென்றி காட்டன் என்பார் ஒரு கருத்தைத் தெரிவித்தார். அவருடைய கருத்து, நாம் இந்தக் கங்கையிலிருந்து காவிரி வரை உள்ள அத்தனை ஆறுகளையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்பது ஒரு பகுதி வறட்சி பெற்றதாகயிருக்கும் பொழுது இன்னொரு பகுதியில் தண்ணீர் வீணாகக் கடலில் போவதோடு மட்டுமல்லாமல் அங்கேயிருக்கும் மக்களை அழிக்கக்கூடிய பெருவெள்ளம் ஏற்படுகிறது. ஆகவே, வட இந்தியாவிலிருக்கும் கங்கை நதியிலிருந்து தென்னிந்தியாவிலிருக்கும் காவிரி வரைக்கும் ஒன்றாக இணைக்கும் திட்டம் உருவாகுமேயானால், தமிழகத்தில் 11 மாதங்கள் வறண்டு கிடக்கும் ஆறுகளுக்குத் தண்ணீர் கிடைக்கும், அதேபோல் வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியா வரையிலுள்ள ஏரி, குளங்களும் நிரம்பும் நிலைமைகளும் உருவாகலாம் என்று கருத்து தெரிவித்தார்கள். இதேபோன்ற கருத்தை 1924-இல் மேல்சபையில் நம்முடைய திரு. சி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியா வரையிருக்கும் அத்தனை ஆறுகளையும் நாம் ஒன்றாக இணைத்தால் முதலில் தண்ணீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க முடியும், இரண்டாவது நீர்வழியாகப் போக்குவரத்து நிலைமைகளை உருவாக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.



1970 மார்ச் 25] [திரு. எம். சி. பாலன்]

இன்னொன்றும் சொன்னார்கள். இன்றைக்கு நாமெல்லாம் மாநிலத்தில் சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில், என்னுடைய கருத்து ஒரு வேளை தவறாகக்கூட இருக்கலாம். ஆனால் சி. பி. ராமசாமி ஐயர் அவர்களுடைய பேச்சும் எழுத்தும் என்ற புத்தகத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது, இந்த நாட்டிலேயிருக்கும் ஒவ்வொரு மாநிலத்திலிருக்கும் நதிகள் அந்த மாநிலத்திற்குச் சொந்தம் என்ற நிலை மாறி, அத்தனை நதிகளும் மத்திய சர்க்காரின் நேரடிப் பார்வையின் கீழ் வர வேண்டுமென்று. அப்படியிருந்தால் கேரளாவிலிருப்பவர்கள் கடலுக்குத் தண்ணீரை அனுப்பினாலும் அனுப்புவோம் தமிழகத்திற்குத் தர மாட்டோம் என்று சொல்லக்கூடிய நிலைமையோ, பக்கத்திலிருக்கும் மைசூர் மாநிலத்திலிருப்பவர்கள், ஒப்பந்தத்தை மீறி அணை கட்டுவோம் என்று சொல்லக்கூடிய நிலைமையோ ஏற்படாது என்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஓரளவுக்கு ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள நதிகளை எல்லாம் மத்திய சர்க்காரின் கீழ் கொண்டுவர இயலாவிட்டாலும் இண்டர்-ஸ்டேட் நதிகளையாவது மத்திய சர்க்காரின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தைப்பொறுத்தவரையில் அண்டை மாநிலங்களின் நதிகளை நம்பித்தான் தண்ணீர் பெற வேண்டிய நிலைமை இருக்கிறபோது, நான் மேற்சொன்ன கருத்தை மனதில் கொள்ள வேண்டும். மத்திய சர்க்கார் சொல்லியிருப்பது கவனத்தில் கொள்ளத் தக்கது. கங்கை நதி நீரை மேலே ஏற்றி, பாட்னா அருகே ஒரு பெரிய அணை கட்டி காவேரி வரை கொண்டு வரமுடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். கங்கை உற்பத்தியாகும் இடத்தில் அணை கட்டி கங்கை ஆற்றை காவேரி வரையில் இணைக்கும் திட்டத்தை நாம் கூறவேண்டும். மத்திய சர்க்கார் மந்திரியே இந்தக் கருத்தை சொல்லியிருக்கிறார். இப்படி சொல்கிறபோது ஒரு பக்கத்தில் இருக்கிறவர்கள், வட நாட்டிலிருந்து தென்னாடு வரையில் உள்ள அத்தனை ஆறுகளையும் 1,500 மைலுக்கு இணைக்க முடியுமா என்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். நான் இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்கிறேன். ரஷ்யாவில் இன்றையதினம் இரண்டு பெரிய நதிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஒன்று வால்கா நதி, மற்றொன்று டான் நதி. இரண்டும் ஒன்றுக்கொன்று எதிர் திசையில் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவை இரண்டையும் இணைத்து இரண்டாயிரம் மைலுக்கு மேல் அங்கே கப்பல் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். சைனாவில் ஒரு நதி, யாங்டீஸ் நதி என்று பெயர். ஓர் ஆண்டில் ஒரு மாதம் மழை பெய்து இந்த நதியில் 12 மாதங்களுக்குத் தண்ணீர் நிரம்ப இருக்கும். அங்கே அந்த ஆற்றுக்கிடையே ஒரு அணை கட்டி தண்ணீரை வீணாக்காமல் உபயோகித்து வருகிறார்கள். நாமும் அப்படி செய்தால் எல்லாவிடங்களிலும் இரண்டு போகம் சாகுபடி செய்ய முடியும், பஞ்சத்தைத் தவிர்க்க முடியும், வேலை இல்லாமலிருக்கும் நிபுணர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க

[திரு. எம். சி. பாலன்] [1970 மார்ச் 25

முடியும். ஆகவே இது விஷயமாக மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று என் கருத்தை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழக அரசு வறட்சி நிவாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒதுக்கிய 53 லட்சம் ரூபாயையும் நல்ல முறையில் பயன் படுத்தி குறுகிய காலத்தில் திட்டங்களை நிறைவேற்றிய அதிகாரிகளையும், சிறப்பாக பொறியியல் வல்லுநர்களையும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக ஒன்றைக் குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் 80 ஆயிரம் ஏக்கர் சாகுபடி செய்யும் நிலையில் இருக்கிறது. ஒரு ஏக்கருக்கு நல்ல விவசாயம் ஆகவேண்டுமானால் 616 மிலி லிட்டர் தண்ணீர் வேண்டும், என்று சொல்கிறார்கள். கடந்த ஆண்டுகளில், 1961-62-ல் 800 மிலி லிட்டரும், 1962-63-ல் 662 மிலி லிட்டரும், 1965-66-ல் 424 மிலி லிட்டரும் கடந்த இரண்டு ஆண்டுகளில் 537 மிலி லிட்டரும் 457 மிலி லிட்டருமாக மழை பெய்திருக்கிறது. நம்முடைய பொறியியல் வல்லுநர்கள் நல்ல முறையில் தண்ணீர் வினியோகம் செய்ததன் மூலமாக ஒரு சென்ட் கூட கருகிப்போகும் நிலை ஏற்படவில்லை. ஆகவே அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். எங்களது மாவட்டத்தில் பொய்கை அணை, மாம்பலத்து அணை, உலக்கை அருவி அணை, ஆகிய இந்த மூன்று அணைக்கட்டுகளும் முக்கியமானவை என்று வெகு காலமாகவே வற்புறுத்தப்பட்டு வருகிறது. திட்டமிட்ட பொருளாதாரம் வருவதற்கு முன்பே இதற்கு வாய்ப்பு உண்டு என்று முடிவு செய்யப்பட்டது.

அடுத்தபடியாக இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதி மணக்குடி, கொளச்சலில் இருக்கிறது. அங்கே ஒரு பாலம் கட்ட வேண்டும் என்று நீண்ட நாட்களாக எங்களது மாவட்டத்தில் இருக்கிற மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களது கன்னியாகுமரி பகுதியில் குளச்சல் அருகே கோடிமுனை என்ற ஒரு பகுதி இருக்கிறது. அதில் ஒரு நாலு பர்லாங் தூரத்திற்கு ரோடு வசதியே இல்லாத காரணத்தால் மருத்துவ வசதி தேவைப்படுவோர்களைத் தூக்கிச் செல்லும் ஒரு நிலை இருந்து வருகிறது. அதே போல் பெரியபள்ளி என்ற ஊரிலும் குட்டிமனை என்ற பகுதியிலும் ரோடு வசதி இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த ரோடு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தில் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1970 மார்ச் 25]

THIRU K. S. KOTHANDARAMIAH : Hon. Deputy Speaker, Sir, I wish to say a few words on the Demands presented to the House viz., Demand No. 26 Irrigation and Demand No. 27—Public Works—Works, and in support of my cut motion.

At the very outset I wish to express my thankfulness to the Government as well as to the Hon. Minister in charge of Public Works because I find the Hon. Minister is taking a lot of interest in the two portfolios entrusted to him. For example, within three months he has been able to convene two conferences, one at Madras and another at Harur in the Dharamapuri district and in these two conferences there was sufficient time to discuss the various needs of Dharmapuri district and the other districts.

With regard to Road and Irrigation Works in the Dharmapuri district, I am confident the Hon. Minister has understood our problem and he gave a patient hearing and also promised to do his best in this regard. From the books that have been given to us on Irrigation and Road Development, we find a number of schemes for improving them. Since the time at my disposal is very limited, I will confine myself to my district and my taluk.

With regard to the monsoon conditions and other climatic conditions for the cultivation of crops, I have to explain certain things with regard to my district. In the entire Tamil Nadu more than 80 per cent of the area remains under the influence of north-east monsoon and only the Dharmapuri district and certain other areas have south-west monsoon as well as north-west monsoon. Unless we get full rain through both the monsoons, it is very difficult to raise even a single crop in the Hosur taluk or the Krishnagiri taluk or the Dharmapuri district. But the Government think of the failure of the rainfall only when the north-east moonsoon rails in the entire State and decide whether there is drought. For example only if there is no water in the Cauvery river or in the Mettur Dam at the proper time, they will think that south-west monsoon has failed but they do not think about the Dharmapuri district and whether it has got rain or not. In the month of June or July or August we get south-west monsoon and if the rainfall fails then it is impossible to raise any crop. Moreover, the cold season begins in the month of October and then it is difficult to raise any crop. Therefore, I request the Hon. Minister to keep all these things in mind and give special consideration to the Dharmapuri district.

With regard to minor irrigation schemes like S.M.I.P., the Government have finished all the major irrigation works. As regards the Special Minor Irrigation Programme, it is stated in the booklet on Irrigation,—

'This is a plan scheme which envisages taking up of irrigation schemes consisting of small works capable of yielding quick results, each costing less than Rs. 15.00 lakhs. . .'

There is a proverb in Telugu which says that if madness is not curred, marriage has to be celebrated and if marriage is not celebrated, madness will not be cured. Similarly, unless schemes yield fruit or profit, there is no use in spending even Rs. 15 lakhs. But if we do not spend money, there will be no yield and this is more or less a vicious circle and I am glad that the Hon. Minister has just loosened the tightened yardstick with regard to the preparation of estimates. There was strict yardstick and unless that was satisfied the engineers used to reject the scheme. But now the Hon. Minister has been kind enough to say that the yardstick has been modified and with regard to small schemes, government will give more consideration. Moreover Rs. 25 lakhs has been set apart for S.M.I.P. Scheme. With regard to Hosur, there are four schemes pending for the last 100 years. The district of Salem came into being during British days 175 years back. During all these years not a single project or dam has been sanctioned for the district. Two dams Doddaballa and Kuppanna cheruvu dams were sanctioned only last year. Kodayalam dam, Byragaudapalli and Dalavai cheruvu dam are yet to be sanctioned. The Hon. Minister has promised to look into them. I hope those dams also will be sanctioned so that Hosur will have irrigation facilities. These have been there without being sanctioned for nearly half a centuary and I hope sanction would be accorded to them immediately by the Hon. Minister.

In Hosur, there are zamindaris. They are three in number. But the zamindars have not cared to repair the tanks with the result they are in bad condition. There are about 600 to 700 tanks. Unless a special scheme is formulated to repair the tanks, the backwardness of the area will not be improved. The zamindars have neglected those tanks and Government should sanction a special scheme to remove the silt in these tanks. There are two things to remember in these tanks. They have become silted. Unless the silt is removed, it is not possible to hold water. The engineers say that the bund can be raised but Hosur, being a table land, we get plenty of sand every year and the tanks get silted up. There is no use of simply raising the bund. So for Dharmapuri district and especially for Hosur taluk attention should be paid to remove the silt first, in addition to raising the bund.

Now I come to ponds. A scheme has been sanctioned for Dharmapuri to repair the ponds. We have got about 800 such things which could hold plenty of water. Government should set apart large sums for repair of these things.

With regard to roads, Hosur is a border taluk and Dharmapuri is a border district; in the east we have Mysore and another side we have Andhra. We do not have inter-State roads. In the Salem-Bangalore road, near the border, there is a gap. Unless the gap is properly repaired, people will not be able to go in buses. There was a master-plan prepared one year back which



would cost only Rs. 75 lakhs. But the Collector said that he would take 1/3rd part, 30 roads, and that he wanted to spend Rs. 15 lakhs. The scheme had been prepared with the help of engineers and it had been sent to Government. I request that it may be sanctioned so that we will have all link roads in Hosur and Dharmapuri.

With regard to Panchayat and Panchayat Union roads, they are in a bad condition. The Panchayats plead want of funds and so they do not have proper roads. You cannot find even one or two good roads. Moreover the Revenue Department takes away certain funds by way of loans. Unless there is a special scheme and this problem is tackled in right earnest, it is difficult to have roads in panchayats.

With regard to bridges, all these 175 years, not a single bridge has been built in Hosur when compared to other taluks like Krishnagiri or Dharmapuri, which have some bridges. We have four rivers, South Pennar, Sanatakuruvena, Doddanalla and Markandya but there are no bridges to cross the rivers. People have to remain on the other side of the river. It is difficult to cross in carts. School boys have to come from the other side and unless the bridges are constructed, it is difficult for the boys to come to school in time. So four or five bridges may be constructed over these rivers.

During drought they sanctioned Rs. 8 lakhs. We have four or five roads. Although the roads have been laid, they have to be metalled for bus traffic. I have represented to the Collector and Panchayat Union Council in this matter. I request the Hon. Minister to see that some amount is allotted for the two roads viz. Kelamangalam-Barandur link road and Sulagiri-Uddannapalli link road. They may be metalled for bus traffic.

I request the Hon. Minister to give consideration to the points I have raised to remove the backwardness of Hosur taluk. With these words, I close my speech.

*திரு. ஏ. அ. சுப்பராஜா. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது ஒருசில கருத்துக்களைப் பேச நான் நினைக்கிறேன். இந்தப் பாசன முறைகளிலே இருக்கக் கூடிய சில நிர்வாகச் சிக்கல்களைக் கூற விரும்புகிறேன். கண்மாய்கள், மானாவாரி கண்மாய்கள் எல்லாம் பஞ்சாயத்தின் நிர்வகத்தில் இருக்கின்றன. மைனர் டேங்குகள் எல்லாம் ரெவின்யூ டிபார்ட்மெண்டின் நிர்வாகத்தில் இருக்கிறது. 250 ஏக்கர் அளவுக்குமேல் பாசனம் பெறக்கூடிய ஆயக்கட்டு டேங்கஸ் எல்லாம் பி.டப்ள்யூ.டியில் இருக்கின்றன. யார், எதை, எப்படிச் செய்வது என்று புரியவில்லை. நிர்வாகச் சிக்கல்கள் அதிகமாக இருக்கின்றன. பஞ்சாயத்தின் கீழே இருப்பவைகளைப்பற்றிக் கேட்டால் (ஏ.இ.) ஹைவேசில் கேட்க வேண்டும் என்கிறார்கள். அவர்கள் அதைப்படித்து எப்போது செய்யப் போகிறார்கள்

[திரு. ஏ. ஆ. சுப்பராஜா] [1970 மார்ச் 25

என்பது தெரியவில்லை. ஹைவேஸ் ரோடு போடுவதற்காக இருக்கிறார்கள். பி.டபிள்யூ.டி. செய்யக் கூடியதை ஹைவேசிடம் ஒப்படைத்தால் எப்படிச் சீக்கிரம் அதைச் செய்வார்கள். மைனர் டேங்க்ஸை மராமத்து செய்ய வேண்டுமென்று ரெவின்யூ டிபார்ட்மென்டில் கேட்டால், அதைப் பஞ்சாயத்து மூலமாகச் செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். பஞ்சாயத்திலே சென்று கேட்டால் ஏ.இ., ஹைவேஸ் செய்யவேண்டும் என்கிறார்கள். இப்படியாக இந்த வேலையை அவர்தான் செய்ய வேண்டும். அவர்தான் செய்ய வேண்டுமென்று சுற்றிச்சுற்றி வருகிற நிலைமை இருக்கிறது. யார் செய்யவேண்டுமென்று தெரியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த மூன்று துறைகளையுமே ஒன்றாக இணைத்து பி.டபிள்யூ.டி.யின் கீழ் கொண்டு வந்துவிட்டால் நிர்வாகச் சிக்கல் இருக்காது. சிவப்பு நாடா முறை இல்லாமல் எவ்வளவு சீக்கிரமாகச் செய்ய முடியுமோ, அவ்வளவு சீக்கிரத்தில் செய்ய முடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அண்டர் கிரவுண்ட் வாட்டர். இப்பொழுது இருக்கக்கூடிய அத்தனை நதிகளின் தண்ணீரையும் நாம் உபயோகித்துவிட்டோம். ஆதிகாலத்தில் ராஜாக்கள் இருந்த காலத்தில் குளங்கள் கட்டி வைத்தார்கள். இந்தக் காலத்தில் நாம் குளங்களை அமைத்துக் கட்ட முடியாது. நமக்கு இருக்கும் ஒரேவழி பூமியில் கிடைக்கும் தண்ணீரை மேலுக்குக் கொண்டுவருவது தான். பூமியின் அடியில் இருக்கும் தண்ணீரை மேலுக்குக் கொண்டுவரும் வேலையை சில இடங்களில் பி.டபிள்யூ.டி. மூலமாகச் செய்கிறார்கள். அதேநேரத்தில் விவசாயத் துறை மூலமாகவும் இந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. விவசாயத் துறையில் டெக்னிகல் பீபிள்ஸ் அதிகமாக இல்லை. பி.டபிள்யூ.டி.-யிலே டெக்னிகல் பீபிள்ஸ் அதிகமாக இருக்கிறார்கள். இவர்கள்தான் இந்த வேலையை நல்லவிதமாகச் செய்ய முடியும். பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரை மேலே கொண்டுவரும் வேலை விவசாய இலாகா மூலமாகவும், பி.டபிள்யூ.டி. மூலமாகவும் செய்வதால் இந்த வேலையில் எப்படி கோ-ஆர்டினேஷன் வரும் என்பது புரியாமல் இருக்கிறது. ஆகையால் இந்த இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து பி.டபிள்யூ.டி. கையில் கொடுத்து விடுவது நல்லது என்று நினைக்கிறேன்.

அதற்குமேலே ரொம்ப முக்கியமான பிரச்சினை வாட்டர் மானேஜ்மெண்டு. அரசாங்கக் காரியதரிசி—அம்மையார் என்று நினைக்கிறேன். அவர்கள் வெளிநாடு சென்று அதுபற்றிப் படித்து வந்ததாகப் பார்த்தேன். இருக்கக் கூடிய தண்ணீர் எப்படி உபயோகப் படுத்திக்கொள்ளப்படுகிறது? போதுமான அளவுக்கு இருக்கிறதா? குறைந்திருக்கிறதா? எந்த எந்த நேரத்தில் தண்ணீர் கழிவு இல்லாமல் எப்படித் தண்ணீர் விடவேண்டும்? சில நேரங்களில் புஞ்சைப் பயிர்கள் என்றால் 3மாதப் பயிர் இருக்கிறது. 5 மாதப் பயிர் இருக்கிறது, 2 மாதப் பயிர் இருக்கிறது, எந்த



1970 மார்ச் 25] [திரு. ஏ. ஆ. சுப்பராஜா]

எந்தப் பயிர்களுக்கு எவ்வளவு தண்ணீர் வேண்டும் என்பதாக எல்லாம் ஒரு திட்டம் வகுத்து பங்கீட்டு முறையை ஒழுங்கு செய்தாலேயே அதிகமான ஏக்கரா சாகுபடி செய்ய முடியும். இந்த வாடர் மானேஜ்மெண்டு பற்றி அந்த அம்மையார் ஏதாவது வெளிநாடுகளில் இருந்து வந்தபிறகு திட்டம் அமைத்து அரசுக்குக் கொடுத்திருக்கிறார்களா? செயற்குறிப்பில் அப்படி ஏதாவது திட்டம் இருக்குமானால் அதையும் கொஞ்சம் எங்களுக்குத் தெளிவுபடுத்தினால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

இதற்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் வாய்க்கால் வழியாகத் தண்ணீர் வரக்கூடிய நேரத்தில் பூமிக்குள்ளே சென்றுவிடுகிறது. அப்படி பூமிக்கு அடியில் போகாதிருக்க இரண்டு பக்கமும் லைனிங் கொடுப்பதுபற்றிப் பேசினார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆங்காங்கு ஸ்டோரேஜ் டாங்குகள் கட்டுவது நல்லது. அப்படிக் கட்டி தண்ணீர் தேக்குவதனால் சுற்றுப்புறங்களில் உள்ள கிணறுகளில் தண்ணீர் ஊற வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இராமநாதபுரம் மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை இருக்கிறது. அந்த மலைகளுக்கிடையே காட்ச்மெண்ட் ஏரியாவில் தடுப்புச் சுவர்கள் போட்டு தண்ணீரை விவசாயத்திற்குக் கீழே பயன்படுத்திக்கொள்ளலாம். அதுபற்றி நிறைய ரெப்ரசென்டேஷன் கொடுத்திருக்கிறோம். எந்த என்ஜினியர்களும் வந்து பார்த்ததாகத் தெரியவில்லை. அதைப்பற்றியும் பரிசீலித்து ஒரு திட்டம் அமைப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கங்கை-காவேரி இணைப்பைப்பற்றி எல்லோரும் பேசினார்கள். மத்திய அரசில் இருந்து நமது அரசாங்கத்திற்கு அதுபற்றி ஒரு திட்டம் அனுப்பப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அப்படிப்பட்ட திட்டம் இருக்குமானால் அதுபற்றி நம் அரசாங்கம் தெரிவித்திருக்கிற அபிப்பிராயம் என்ன? அதுபற்றி அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படாததால் அதுபற்றி விளக்கினால் மிக உதவியாக இருக்கும்.

ஹைவேஸ் என்று எடுத்துக்கொண்டால்—இன்றைக்கு அதிக மக்கள் கிராமத்தில்தான் இருக்கிறார்கள். அவர்கள் நன்றாக இருக்கவேண்டுமென்றால் அவர்கள் விளைவிக்கிற பொருள்கள் நகரத்திற்கு வர நல்ல சாலை அமைப்புகள் இருக்க வேண்டும். முக்கியமாக அவர்களுக்கு உதவியாக இருப்பது லிங்க் ரோடுகள் தான். அதுபற்றி அத்தனைபேர்களும் சொன்னார்கள் என்றாலும் நானும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது நல்ல சான்ஸ். மத்திய சர்க்காரில் இருந்து பஞ்சநிவாரணம் என்று நிதி வாங்கி இந்த லிங்க் ரோடுகளை எல்லாம் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. கிருஷ்ணமூர்த்தி : சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எனது தொகுதியில் உள்ள பாலாறு-பொருந்தலாறு திட்டத்தைப்பற்றி அமைச்சருக்குத் தெரியும். பழனி பகுதி மிகவும் வறண்ட பிரதேசம். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் அந்தப் பகுதி மக்கள் நல்ல முறையில் வேளாண்மை செய்து பொருளாதாரத்துறையிலும் வளர்ச்சி அடைய முடியும். ஆகவே அந்தத் திட்டத்தை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அங்கு இருக்கக்கூடிய கண்மாய்கள் ஆதிகாலத்தில் அமைக்கப்பட்டவை. அதனால் மேடு அடைந்துவிட்டன. தண்ணீர் தேங்கி நின்று பாசனத்திற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. குறிப்பாக பெரிய ஐயம்புளி கண்மாய் இருக்கிறது. தொள்ளாயிரம் ஏக்கரா நஞ்சை நிலம் அதனால் பாசனம் பெறும். அதில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் ஆண்டு தோறும் கோடைக்கானல் ஏரியில் இருந்து மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற்று தண்ணீர் பாய்ச்சிக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. பழனி வட்டத்தில் உள்ள அந்தக் கண்மாயை ஆழப்படுத்தி, மராமத்து செய்து கொடுக்க வேண்டுமாய் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பழனிக்குப் பக்கத்தில் கிரதமா நதித் திட்டம் 23 லட்சத்தில் செயல்பட இருக்கிறது. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் கிழக்குப் பகுதியில் உள்ள ஏராளமான புஞ்சை நிலங்கள் எல்லாம் நஞ்சையாகக்கூடிய நிலைமை இருக்கிறது. அதையும் நிறைவேற்றித்தர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

பழனியில் இருந்து கோடைக்கானலுக்கு நேராக பாதை அமைக்கும் வேலை மத்திய சர்க்காரின் அனுமதியுடன் இருக்கிறது. அதைப் பார்வையிட அமைச்சர் அவர்களே வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சிலர் பல கிராமங்களை சுற்றி அந்த ரோடு அமைக்க சூழ்ச்சி செய்கிறார்கள். அதற்கு இடம் கொடுக்காது கோடைக் கானல்—பழனிக்கு நேராக அந்த ரோடு அமையுமாறு போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பழனிக்கும், கோயம்புத்தூருக்குமிடையே சண்முகா நதியில் உள்ள பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் 7லட்சம் ரூபாய் செலவில் செயல்பட இருக்கிறது. அதைச் செயல் படுத்த வேண்டும்.

மற்றும் சண்முகா நதியில் மிகவும் குறைவாகவே ஆண்டு தோறும் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. பெரிய முதலாளிகள் மேல் பக்கம் பம்பு செட்டுகள் வைத்துத் தண்ணீர் இறைத்துக் கொண்டு விடுவதனால் கீழ்ப் பாசனத்தில் உள்ள அநேக ஆயிரம் விவசாயிகள் விவசாயத்திற்குத் தண்ணீர் இன்றி விவசாயம் செய்ய முடியாது நசித்துப் போகிறார்கள். இதுபற்றி எத்தனையோ மனுக்கள் கொடுத்திருக்கிறோம். ஆகவே, உடனடியாக அந்த பம்பு செட்டுகளை அப்புறப்படுத்தி கீழ்ப் பாசனத்தில் உள்ளவர்களுக்கும் தண்ணீர் கிடைக்கும்படியான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமாய்ப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து பழனிக்கும் பாலசமுத்திரத்திற்கும் இடையே வறட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டவேண்டும். அதற்காக தேவஸ்தானம் 1 லட்ச ரூபாய் தருவதாக ஒத்துக்கொண்டிருக்கிறது. பழனி பஞ்சாயத்து யூனியனும் ஒரு லட்ச ரூபாய் கொடுப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய அரசும் ஒரு லட்ச ரூபாய் கொடுத்து இந்த வேலையைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வேலையைப்பற்றி சென்ற இருபது ஆண்டு காலமாகச் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறநிலைய அமைச்சர் அவர்களும் அந்த ஆற்றின் குறுக்கே கடந்து போனபோது எவ்வளவு கஷ்டப்பட்டார்கள் என்பது தெரியும். எனவே, இதையும் இந்த ஆண்டே செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்திச் சொல்ல விரும்புவது என்னுடைய தொகுதியிலே பாலாறு–பொருந்தலாறு திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ந. தீர்த்தகிரி : தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மானியத்தின்மீது எனது கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நீர்நிலைகள் உள்ள இடங்களில் தண்ணீரைத் தேக்க வேண்டும். பூமியின் உள்ளே உள்ள தண்ணீரை மேலே கொண்டுவரவேண்டும். எங்கே எங்கே அணைகள் கட்டவேண்டிய நிலைமைகள் இருக்கின்றதோ அங்கே தண்ணீரைத் தேக்க வேண்டும். தண்ணீர் கடலில் கலந்து வீணாகப் போய்விடுகிறது. ஏரிகள், குளங்கள், குட்டைகள் இல்லாத இடங்களில்கூட தண்ணீரால் ஏற்படக்கூடிய நன்மைகள் பலவுள. தண்ணீர் எங்கு தேக்கப்படுகிறதோ அங்கு கிணறுகளிலும் தண்ணீர் தேங்குவதற்கு வசதி ஏற்படுகிறது. வறண்ட காலங்களில் தண்ணீர் பூமியினுள்ளேயே கிணறுகளுக்குத் தேக்கம் கொடுக்கிறது. எங்கே ஆறுகள், குளம், குட்டைகள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் அவற்றை ஆழப்படுத்தி தண்ணீரைத் தேக்க வேண்டும். அப்படிச் செய்வதால் விவசாயிகளுக்கு நல்ல பலன் அளிக்கும்.

சிறு சிறு ஆறுகளிலேகூட சிறு சிறு அணைகளைக் கட்ட வேண்டும். பெரிய பெரிய அணைகளைக் கட்டுவதைவிட அந்தந்தப் பகுதிகளிலே ஓடக்கூடிய சிறு சிறு ஆறுகளில் செக் டாம்ஸ் கட்டி

அங்குள்ள கிணறுகளுக்குத் தண்ணீர் தேக்கம் கொடுக்கக்கூடிய முறையை மேற்கொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. நிச்சயமாக சர்க்கார் இதைச் செய்யவேண்டும்.

என்னுடைய தொகுதியிலே வாணியாறு திட்டம் இருக்கிறது. பழைய அரசாங்கம் திட்டம் போட்டு செய்யமுடியாத நிலைமையில் விட்டுவிட்டது. புதிய அரசாங்கம் அதைச் செய்துதரவேண்டும். என்னுடைய பிரதேசம் பஞ்சப் பிரதேசம், நீர்நிலைகள் இல்லை, அணைகள் இல்லை, தண்ணீர் வசதிக்கான ஆறுகள் இல்லை. விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். அங்கே முள்ளிக்காட்டு அணைத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும். அது என்னுடைய தொகுதியிலே உற்பத்தியாகி ஒரு தாலுக்காவை அடைந்து இன்னொரு தொகுதிக்குச் செல்கிறது. இரண்டு பக்கத்திலும் மலைகள் இருக்கின்றன. அது ஏழு ஏரிகளைக் கடக்கின்றது. பயிர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகிற காலத்தில் தண்ணீர் இல்லாத நிலைமையில் அவை காய்ந்து விடுகின்றன. பருவ காலத்தில் அந்தத் தண்ணீரை இந்த ஏரிகளுக்கு விடலாம். வெங்கடசமுத்திரம் ஏரி, ஆலாபுரம் ஏரி, பறைப்பட்டி ஏரி, அரூர் ஏரி, தம்மனப்பட்டி ஏரி போன்ற ஏரிகள் மூலம் பருவ காலத்தில் பயிர் காய்ந்து போகிற நிலைமை ஏற்பட்டால் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். விவசாய மக்கள் தண்ணீர் இல்லாமல் தயங்கி நொந்து கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக இந்த அரசாங்கம் அதை செய்யவேண்டுமென்று அந்த மக்களின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இதைப் பல முறைகளில் இந்த மன்றத்திலே சொல்லி இருக்கிறேன். விவசாய மக்களுக்குக் கூலி வேலை செய்யும் மக்களுக்கு வாய்ப்புகள் இருக்கும், வாழ்க்கைக்கு வசதி இருக்கும். சிறு சிறு குளங்கள், குட்டைகள், இவற்றிலே தண்ணீரைத் தேக்க வேண்டும்.

சில இடங்களில் சில பாலங்கள் குறுகலாக இருப்பதால் பஸ்கள் மோதி இறந்து போனவர்கள் உண்டு. ஒரு மாதத்திற்கு ஒரு முறை தகராறு ஏற்படுகிறது. அமைச்சர் அவர்களிடத்திலேகூட சொல்லியிருக்கிறோம். குஇரண்டு வாரத்திற்கு முன்னர் பஸ்கள் மோதி நின்று கொண்டிருப்பதை நான் பார்த்தேன், கஷ்டமாக இருக்கிறது. எனவே, பாலங்களைப் புதுப்பித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்குள்ள அரிசன மக்களுக்கு தனி இடங்களிலே கிராமங்களுக்குப் போகும்போது பாதையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்குத் தனிப்பாதை செய்துகொடுப்பது என்றால் கஷ்டமாக இருக்கிறது. புதிய அரசாங்கம் ஆங்காங்கு உள்ள கிராமங்களிலே தனிப் பாதையில்லாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு பாதைகளைப் போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் சுடுகாட்டுக்குப் போவதற்குக்கூட கஷ்டமான நிலைமை



இருக்கிறது. அங்குள்ள மக்களுக்கு வாழ்க்கை வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். துரைபாண்டியன் :** தலைவர் அவர்களே, என் கட்சியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இந்த அறிக்கையை நான் பார்க்கும்பொழுது எங்கள் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஏதாகிலும் ஒரு சிறிய திட்டம் இருக்குமென்றால் ஒன்றுமே இல்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் குறிப்பாக நாங்குனேரித் தாலுக்காவில் ஒரு பகுதி மிகவும் வறண்ட பிரதேசம் என்பதை இந்த அரசு நன்கு அறியும். ஆனால் உண்மையாகவே இப்பொழுது இருக்கின்ற முதல்வர் அவர்கள் 1967-ம் ஆண்டில் பி.டபிள்யூ. மினிஸ்டராக இருந்த காலத்தில் திருநெல்வேலிக்கு வந்து ஒரு நீர்ப்பாசன கருத்தரங்கு நடத்தினார்கள். அன்று அவர்கள் வந்த இடத்தில் பொதுமக்கள் அத்தனை பேர்களும் உண்மையாக என்ன சொல்லிக்கொண்டார்கள் என்றால் தமிழக அரசு பதவியேற்றிருக்கிறது, காங்கிரஸ்காரர்கள் செய்யாத பெரிய பெரிய நல்ல காரியங்களை உடனடியாகச் செய்து விடுவார்கள், அரசாங்கத்திலே ஒரு காலத்திலும் கருத்தரங்கு கூட்டவில்லை, இப்பொழுது நீர்ப்பாசனக் கருத்தரங்கு, வேளாண்மைக் கருத்தரங்கு இவையெல்லாம் நடத்துகிறார்கள் என்று நினைத்தார்கள். அன்று எல்லாக் கட்சி உறுப்பினர்களும் வந்து தங்கள் தங்கள் தொகுதியில் உள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லும்பொழுது நாங்களும் சொன்னோம். அன்று அமைச்சர் அவர்கள் இன்று முதல்வராக இருப்பவர்கள் அவர்களுடைய முடிவுரையிலே நாங்குனேரி தாலுக்காவிலே வடமலையான்கால் வெள்ளையர் காலத்தில் இருந்து உள்ளது. அந்த கால்மூலம் நாங்குனேரித் தொகுதி, ராதாபுரம் இரண்டு தொகுதிகளுக்கும் நீர்வளம் பொருந்திய வாய்ப்புகளைக் கொடுப்பதற்கு அந்தக் கால் பிரயோஜனமாக இருந்தது. அந்தக் காலிலே புதிதாக செய்யவேண்டுமென்றால் அதுகூட செய்யவேண்டிய அவசியமில்லை, அது தூர்ந்திருக்கிறது, தூர் எடுக்க வேண்டுமென்று கேட்டோம் விஜயநாராயணன்குளம் காங்கிரஸ் வந்தபிறகு மணிமுத்தாறு கட்டி அதன் மூலமாக தண்ணீர் வருகிறது. அந்தக் கால் வெட்டுவதற்கு முன்னதாக குடமாடியில் உற்பத்தியாகி நம்பியாறு ஓடுகிறது. அந்த ஆற்றிலே விஜயநாராயணன் குளத்திற்கு ஒரு தனிக்கால் இருக்கிறது. சிவஞானம் பிள்ளை என்பவர் தனியாக மதகு ஏற்படுத்தியிருக்கிறார். அதன் மூலம் விஜயநாராயணன் குளம் வடமருகால் மூலமாக திருச்செந்தூர் தாலுக்காவில் உள்ள புத்தன் தருவையிலே தண்ணீர் கட்டியது.

ஆனால் இன்றைய தினம் உள்ள சூழ்நிலையில் அந்தக் கால், அந்த மதகுகள் எல்லாம் சரியான முறையில் செப்பனிடப்படவில்லை. அதற்கு ஒரு சிலர், முன்காலத்தைப் போல் மழை பெய்யவில்லை என்று சொல்லுகிறார்கள். அதன் காரணம் அங்குள்ளவர்களுக்கும்

[திரு. ஆலடி அருணா] [1970 மார்ச் 25

மூன்று ஆண்டுக் காலத்தில் தமிழக அரசினுடைய பொதுப்பணித் துறையின் தீவிர முயற்சி காரணமாக வெற்றி கண்டிருக்கிறது என்பதை நினைத்து தமிழக மக்கள் இந்தத் துறையை நன்றியுள்ளத்தோடு பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள். சென்னைக்கு எப்படி குடிதண்ணீரைக் கொண்டு வருவது, கிருஷ்ணாவில் இருந்து கொண்டு வருவதா, கோதாவரியில் இருந்து கொண்டு வருவதா, கடல் நீரைச் சுத்தப்படுத்துவதா என்று பரிசீலித்துக் கொண்டே பத்தாண்டு காலம் உருண்டோடி விட்டன. இன்றைய தினம் தமிழக அரசு காவிரி நீரை வீராணம் ஏரி மூலமாகக் கொண்டு வருவதற்கான திட்டத்தைத் தீட்டி இந்த ஆண்டு அதற்காக 740 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோன்று பரம்பிக்குளம்–ஆளியாறு திட்டத்தில் இருந்த சிக்கல் 1959-ம் ஆண்டில் இருந்து
பி.ப. 4–30 தீர்க்கப்படாமல் இருந்தது. இரண்டு மாநிலங்களும் வேறு வேறு திசையில் கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தன. ஆனால் தமிழக அரசும் அன்றைய தினம் பொறுப்பில் இருந்த பெருமதிப்பிற்குரிய நம்பூதிரிபாட் அரசும் ஒன்றாக உடன்பாட்டுக்கு வந்து தமிழக மக்களின் உள்ளம் குளிரும் வகையில் 240,000 ஏக்கர் நீர்ப்பாசன வசதி பெறும் வகையில் அந்தத் திட்டத்திற்கு நல்ல முடிவு ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று காவிரி கழிமுகப் பகுதியில் நவீனங்களைப் புகுத்துவதற்காக உலக வங்கியோடு தொடர்பு கொண்டு 49 கோடி ரூபாய்க்குத் திட்டத்தைத் தயாரித்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இந்த அரசாங்கம் தீவிரமாக முயற்சிக்கிறது. கடந்த ஆண்டு மட்டும் பொதுப்பணித்துறையின் தீவிர முயற்சி காரணமாக சுமார் 73,483 ஏக்கர்களுக்குப் பாசனம் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 20,828 ஏக்கர்களுக்குப் புதிய நீர்ப்பாசன வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி எல்லாம் இந்தத் துறை தீவிரமாகப் பணியாற்றுகிற, செம்மையாகப் பணியாற்றுகிற நேரத்தில் தமிழகத்தின் வாழ்வு எதிர்காலத்தில் ஒளி மயமாக இருக்கும் என்று நம்பிக்கை கொண்டிருக்கும் நேரத்தில், நாட்டு மக்கள் பயப்படும் அளவுக்கு, நம்முடைய உணர்ச்சிக் குமுறலைக் கிளப்பும் அளவுக்கு, இதயத்தின் வேதனையைக் கிளப்பி விடும் அளவுக்கு இன்றைய தினம் கர்நாடக அரசு ஹேமாவதியில் ஒரு அணையைக் கட்டியே தீரவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறது.

"வான் பொய்யினும் தான் பொய்யா காவிரி" என்று சொல்லப்படும் காவேரி இந்த மண்ணுக்குச் சொந்தம். அந்தக் காவேரி நதியில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கரிகால் பெருவளத்தான் ஒரு அணையைக் கட்டினான். அது காவேரி நதியில் முதன்முதலாக கட்டப்பட்ட அணை என்பது மட்டுமல்ல, உலகத்திலேயே முதன்முதலாகக் கட்டப்பட்ட அணையாகும் என்றுகூட சிலர் கருதுகிறார்கள். எனவே அதன் தண்ணீர் அனுபவத்தால் நமக்கே சொந்தமானது, நியாயத்தால் நமக்கே சொந்தமானது, சட்டபூர்வமாக நமக்கே சொந்தமானது ஆகும். இன்றைய தினம் நாம் அனுபவித்துக்கொண்டு வரும் தண்ணீரில் பெரும் பகுதியை எடுக்கக்



1970 மார்ச் 25] [திரு. ஆலடி அருணா]

கூடிய அளவிற்கு அல்லது தங்களுக்கு பறித்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு இன்றைய தினம் கர்நாடக அரசு ஹேமாவதியில் அணை கட்ட முயற்சிக்கிறார்கள். மத்திய அரசு தெளிவாகச் சொல்லி விட்டது. அந்த அணையைக் கட்டக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். உங்களது அங்கீகாரம் தேவை இல்லை, உங்கள் அனுமதியும் தேவை இல்லை, உங்கள் ஆதரவும் தேவை இல்லை என்று அந்த அரசு இன்றைய தினம் பிடிவாதமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

1924-ல் உருவாக்கப்பட்ட ஒப்பந்தத்திலும் அதற்கு முன்னால் 1892-ல் ஒப்பந்தம் உருவாகும்போதும் இதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். காவிரி நதியில் மீண்டும் ஒரு அணையைக் கட்டுவதானால் அதற்கு தமிழக அரசின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

' No new irrigation works are to be constructed by the Mysore Government without previous reference to the Madras Government '.

என்று 1892-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் சொல்லியிருக்கிறார்கள். அதே கருத்தைத்தான் மையமாக வைத்து 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்திலும் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தில் அவர்கள் புது முறைகளைக் கையாளலாம், புது பாசனப் பகுதிகளைக்கூட கொண்டு வரலாம், ஆனால் எந்த அளவிற்கு அவர்கள் தண்ணீர் பெற்றுக் பெற்றுக்கொண்டிருக்கிறார்களோ அந்த அளவிற்கு மேல் ஒரு துளி தண்ணீர்கூட அவர்கள் எடுப்பதற்கு உரிமையற்றவர்கள் என்ற அடிப்படையில் அந்த ஒப்பந்தத்தின் 12-வது ஷரத்து மிகத் தெளிவாகச் சொல்கிறது.

' The Madras Government and the Mysore Government further agree that the limits of extension of irrigation specified in clauses (iv) and (v) above shall not perclude extensions of irrigations effected solely by improvement of duty, without any increase of the quantity of water used. . .'

என்று அந்த ஒப்பந்தத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதை கர்நாடக அரசு இன்று வெறும் காகிதமாகக் கருதுமானால் அதைவிட அரசியலில் வேறு எந்தக் கேலிக் கூத்தும் இருக்க முடியாது. இன்றைய தினம் கர்நாடக அரசு ஹேமாவதி நதியின் குறுக்கே கற்களைப் போடுவதாக நான் கருதவில்லை. தமிழக மக்களின் வயிற்றில் கட்டாரியைப் பாய்ச்சுவதாகத்தான் கருதுகிறேன். காவேரி நம்மிடம் இருந்து போகுமானால் நான்கு கோடி மக்களின் வாழ்வும் பாதிக்கப்படும். இது நாடறிந்த உண்மையாகும். எனவே இந்த அரசு உறுதியாகச் செயல்படுகிறது. அதற்கு மத்திய அரசும் செம்மையாக ஒத்துழைக்கிறது. அப்படி ஒத்துழைக்கிற இந்த நேரத்தில் நான் மத்திய அரசிடம் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அணை கட்டாதே என்று நீங்கள் ஆலோசனை சொன்னால் மட்டும் போதாது. ஹேமாவதி நதியில்

ராணுவத்தை இறக்கி அந்த வேலையைத் தடை செய்ய மத்திய அரசு முன்வந்தாக வேண்டும். எங்கேயோ குழப்பம் என்று சொல்லும் போது ராணுவமும் போலீசும் ஓடுகிறபோது நான்கு கோடி மக்களின் நல்வாழ்விற்காக இதைச் செய்யக் கூடாதா என்று இம்மாமன்றத்தின் மூலம் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசைக் கேட்கும் அதே தருணத்தில் எதிர் வரிசையில் உட்கார்ந்திருக்கும் பெருமதிப்பிற்குரிய கருத்திருமன் அவர்களையும் கனிவோடு கேட்டுக் கொள்கிறேன், கர்நாடக மாநிலத்தில் அவர்களது கட்சிதான் ஆட்சியில் இருக்கிறது. எனவே, இவர்கள் சிறிது இருதயத்தைத் திறந்து இந்த நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக கர்நாடக அரசை அணுகி தமிழகத்தில் நியாயமான கோரிக்கைக்கு அவர்களை இணங்கி வைப்பார்களேயானால் தமிழக மக்களின் நம்பிக்கைக்கு அவர்கள் உரியவர்களாவார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : என்னை இழுப்பதால் சொல்கிறேன். அவர்கள் மாகாண சுயாட்சி வேண்டுமென்று சொல்கிறார்கள். அவர்களும் மாகாண சுயாட்சிதான் எங்களுடைய கொள்கையும் என்று சொன்னால் என்ன சொல்வது ?

திரு. ஆலடி அருணா : அதை ஏற்றுக் கொள்வதால், அதை அங்கீகரிப்பதினால் இன்னொரு மாநிலத்திலிருந்து இந்த மாநிலத்திற்கு தண்ணீர் வரக்கூடாது என்ற தடை இல்லை. தமிழக அரசு தன் நியாயமான கோரிக்கையை வற்புறுத்துகிறது. 1924-ம் ஆண்டு ஒப்பந்தப்படி கேட்கிறோம். யாரிடமும் எதையும் சலுகையாகக் கேட்கவில்லை. யாரிடத்திலும் கெஞ்சிக்கொண்டு இருக்கவில்லை. ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தை கர்நாடக அரசு ஒழுங்காக அமுல் நடத்தவேண்டும் என்றுதான் சொல்கிறோம். அதற்கு கருத்திருமன் அவர்களைப் போன்ற பெரியார்கள் ஒத்துழைக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் இதைச் சொல்கிறேனே தவிர வேறு எந்தக் காரணத்திற்காகவும் அல்ல. இன்றைய தினம் தமிழக அரசு ஏற்கனவே காங்கிரஸ் அரசு உருவாக்கியுள்ள திட்டங்களுக்காக பணம் ஒதுக்கி தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

எனக்கு முன்னால் பேசிய திரு. துரைப்பாண்டியன் அவர்கள் பேசும்போது நெல்லை மாவட்டத்திற்காக எதையும் இந்தத் திட்டத்தில் காணோம் என்று சொன்னார்கள். நான் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். கடனா நதித் திட்டத்திற்காக 1966-67-ல் வெறும் 11,000 ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு தமிழக அரசு கடனா நதித்திட்டத்திற்காக 40 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறது. ராமா நதித் திட்டத்திற்காக ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டத்தில் கருப்பா நதித் திட்டம் ஒன்று இருக்கிறது. வைப்பாறு அணைக் கட்டுத் திட்டம் என்று ஒன்று இருக்கிறது. எனவே, தவறான கருத்துக்களை அவர்கள் தந்திருக்கக் கூடாது . . .





திரு. என். துரைபாண்டியன் : என் நாங்குனேரி தாலுகா சம்பந்தப்பட்ட மட்டில் எதையுமே செய்யவில்லை என்பதை திட்டவட்டமாக, ஆணித்தரமாகச் சொல்கிறேன்.

திரு. ஆலடி அருணா : அதைப்பற்றி நான் பேசவில்லை. நெல்லை மாவட்டம் என்றுதான் அவர்கள் ஆரம்பத்திலே சொன்னார்கள். அதற்குத்தான் விடை அளிக்கிறேன். நாங்குனேரி தாலுக்காவிற்கு மணிமுத்தாறு நல்ல பலனை அளித்து வருகிறது என்று சொல்லப்படுகிறது. ஏற்கெனவே நம் அரசு புதுத் திட்டங்களின் கீழ் சுமார் 13½ கோடி ரூபாய் அளவில் புதுத் திட்டங்களை வகுத்துள்ளது. அதன் கீழ் 62,000 ஏக்கர் புதிதாக பாசன வசதி பெற இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களிடம் பணிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, ஜம்பு நதித் திட்டம் இதோடு இணைக்கப்படவில்லை. அது உடனடியாக அங்கீகரிக்கப்பட வேண்டிய திட்டமாகும். 46 லட்சம் ரூபாய் அளவிற்குத்தான் செலவாகும். அதையும் எடுத்துக் கொள்ளவேண்டும். நெல்லையில் நடைபெற்ற நீர்ப்பாசன மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டு அரசினரால் உறுதியளிக்கப்பட்ட திட்டமான ஜம்பு நதித் திட்டத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குலசேகரப்பட்டி கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 1½ லட்சம் ரூபாய் தான் செலவாகும். அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஞ்ச நிவாரணப் பணியின்கீழ் பொதுப்பணித் திட்டங்கள் சிலவற்றை எடுக்க பிப்ரவரி 13-ம் தேதி தலைமைச் செயலாளர் அவர்கள் எங்கள் பகுதிக்கு சுற்றுப்பயணம் வந்தபோது கூறினார்கள் அந்தப் பகுதி ஏற்கனவே வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாகும். எனவே அந்தப் பகுதியில் கால்வாய் திட்டங்களை மேற்கொண்டு வேலை வாய்ப்பு அளிக்கத்தக்க வகையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். கருப்பா நதித் திட்டத்தின் மூலம் வீரசிகாமணிக்கும் அதன் பக்கம் உள்ள ஊத்துமலை போன்ற இடங்களில் பயன் அடையும் நிலையில் உள்ளன. கடையநல்லூர் வரை மூன்று மடைகள் உள்ளன. கால்வாயின் அளவு சுருக்கம் கால்வாயில் உள்ள டிஸ்சார்ஜின் ஃப்ளோவும் குறைவு. ஆகவே அந்தக் கால்வாய் அகலத்தை அதிகப்படுத்த வேண்டும். மடைகளில் சில நேரங்களில் மண் அடைத்து விடுகிறது. அதையும் தடுக்க வேண்டும். அதோடு, ஆலங்குளம் கால்வாய்த் திட்டத்தையும் குலசேகரப்பட்டி கால்வாய் திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

* திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது எங்கள் கட்சி சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில விஷயங்கள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சோலையாறு அணைக்கட்டில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய கோரிக்கைகளை நிறை

வேற்றித்தருமாறு கேட்டுக் கொள்கிறேன். எங்கள் மாவட்டம் பாசன முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. எங்கள் மாவட்டமான தஞ்சை மாவட்டம்தான் தமிழகத்திலேயே அதிக உணவு உற்பத்தியைக் கொடுக்கக் கூடிய மாவட்டம். தமிழக மக்களுக்கு உணவு கொடுக்கக்கூடிய மாவட்டம். அங்கு வருஷா வருஷம் வெள்ளக் காலங்களில் கீழ்த்தஞ்சையில் 6 தாலூக்காக்கள் பாதிக்கப்படுகிறது. சரியான பாசன வசதி இல்லாததால், வடிகால் வசதி இல்லாததால் வெள்ளத்தால் பாதிக்கப்படுவதால், அந்த வடிகால்களைத் திருத்தியமைத்து, வடிகால்களை வெட்டிக் கொடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

விழுந்த மாவடிக்கு, திருப்பூண்டி பம்பு செட்டு மூலம் தண்ணீர் எடுத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. பம்பு செட்டு பழுதடைந்து இருப்பதினுல் கிராமத்திற்குத் தண்ணீர் போக முடியவில்லை. எனவே, திருப்பூண்டி பம்பு செட்டை சீர் செய்து விழுந்த மாவடி கிராமத்திற்குத் தண்ணீர் கிடைக்க வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வெண்ணுர் பாசனத்திற்குத்தானே தவிர வடிகாலுக்கு அல்ல. அதிகாரிகளைக் கேட்டால் அது பாசனத்திற்கு மட்டும்தான் என்று சொல்லுகிருர்கள். வெள்ளக் காலங்களில் தண்ணீரை இராம அரிச்சந்திரா நதியில் திருப்பிவிட வேண்டும். அதிகாரிகள் கவனித்து, வெள்ளக் காலங்களில் தண்ணிரை இராம அரிசந்திரா நதியில் திருப்பிவிட ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதியில், தமிழக முதலமைச்சரவர்களின் கிராமம், திருக்குவளை—மேடான கிராமம். அதிலிருந்து 15 கிராமங்களுக்குத் தண்ணீர் பாயக்கூட வழியில்லாமல் மேடிட்டிருப்பதால், வெள்ளாற்றிலே வலிவலத்திற்கருகில் பாலத்திற்கு மேற்கு ஸ்குரு ஷட்டரஸ் அமைத்துக் கொடுத்தால் சுமார் 1,300 ஏக்கர் நிலங்கள் புதிய பாசனம் பெற்று இருபோக சாகுபடி செய்ய முடியுமென்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நமது தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். சித்தாய்மூர் கிராமத்தில் சக்கிலியன் வாய்க்கால் வடிகால் 15,000 ஏக்கர் நிலங்கள் வெள்ளக் காலத்தில் பாதிக்கப்பட்டு, வருஷா வருஷம் விவசாயம் பாதிக்கப்படுகிறது. எனவே, தண்ணீரை நேரடியாகக் கடலிலே கொண்டுபோய் விடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு சைபன் மணக்குடி பக்கத்திலேயிருக்கிறது. இப்பொழுது நீரோட்டம் போக்குவரத்து நிலைமை மாறியிருக்கிறது. அதிக சாகுபடிக்கு நிலங்கள் வந்திருப்பதால் சைபனில், தண்ணீர் வடியவில்லை. மாற்றி நேரடியாக கடலிலே வடிகாலை விடவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.



என் தொகுதியில் வாள வாய்க்கால் திட்டம் ஒன்றிருந்தது. அது இந்தத் திட்டத்தில் வரவில்லை. அதைப் புதுப்பித்தால் கீழத் தஞ்சைப் பகுதியில் தண்ணீர் பாயும் 15 மைல் தூரமுள்ள நிலங்களுக்குத் தண்ணீர் பாயவேண்டும். மறவனூர் 50 வருஷக் காலமாகத் தூர் எடுக்கப்படாமல், இன்று வெள்ளம் வந்தால் சுமார் 1,000 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது. மறனுற்றிலிருந்து தான் வேளாங்கண்ணி பம்பு செட்டுக்குத் தண்ணீர் எடுக்க வேண்டும். ஆனுல் இங்கு வெள்ளக் காலத்தில் தண்ணீர் வடிய முடியாமல் இருப்பதால் மறவனுற்றை தூர் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

திருத்துறைப்பூண்டி தாலுக்காவில், எக்கல், கடம்பவிளாகம், குன்னலூர் பகுதிகள் வெள்ளத்தின் காரணமாக, விவசாயம் செய்ய வாய்ப்பு வசதிகள் இல்லாமல் இருக்கிறது. தண்ணீர் தேங்கி விடுவதால் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே அதற்காக ஒரு வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வேட்டைக்காரன் இருப்பு என்ற ஊரில் பம்பு செட்டு உதவியை நம்பி ஆயிரக்கணக்கான தரிசு நிலங்கள் இருக்கின்றன. ஆகவே, அங்கு தண்ணீர் பாய்வதற்கு நடவடிக்கை எடுத்து, அந்த மேட்டு நிலங்களுக்கு பம்பு செட்டுகள் மூலம் தண்ணீர் கொடுத்தால் நல்ல விவசாயத்தைத் தர முடியும் என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திருத்துறைப்பூண்டி தாலுக்காவிலிருக்கும் கொத்தங்குடி, ஐயூர், சித்தாய்மூர் கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. சக்கிலியன் வாய்க்காலை நன்ருக அகலப்படுத்தி, ஆழப்படுத்தி நல்ல வடிகால் வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

என்னுடைய தொகுதியில் வெட்டாற்றில் பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும். திருவாரூரில் இன்று கல்லூரி அமைக்கப்படுகிறது. நன்னிலம் தாலுக்காவிலிருந்து குறுக்கு திருமருகல் வழியாக வரலாம். இந்தப் பாலம் அமைத்தால் 10, 15 மைல் நாகூர் அல்லது திருவாரூரைச் சுற்றி வரவேண்டியதில்லை. வெட்டாற்றில் பாலம் கட்டிக் கொடுத்தால் திருமருகல் வழியாக கீவளூர் போக, கல்லூரிக்குப் போக வசதியாக இருக்கும். எனவே வெட்டாற்றில் பாலம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்ளுகின்றேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உதவி சபாநாயகரவர்களே, அவையின் முன் வைக்கப்பட்டிருக்கும் இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வழக்கம்போல, எப்பொழுதையும்விட இந்த மூன்று வருஷத்திலே சிறப்பாக நடந்து வந்திருக்கிறது, இதற்கு முன்னாலே அதிகமாக நடைபெறவில்லை என்று கூறும் குற்றச்சாட்டைக் கேட்டுக் கேட்டு காது புளித்துப் போய்விட்டது. இருந்தாலும்கூட நான் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய சாலை வளர்ச்சியைப் பொறுத்தவரையிலும் சரி, பாசன வசதிகளைப் பொறுத்தவரையிலும் சரி இந்திய தேசத்திலேயே தமிழ்நாடுதான் சிறப்பாக இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. இது இந்த மூன்று வருஷத்திலேதான் வந்ததா அல்லது சுதந்திரம் பெற்றபின் 20 வருஷத்திலேதான் வந்ததா என்பதை நிபுணர்களும், நாட்டு மக்களும், இங்கேயிருப்பவர்களும்தான் உணர வேண்டுமே தவிர இந்தச் சர்க்காரோ அல்லது சர்க்காரைச் சேர்ந்த கட்சியோ உணருகிறார்களா என்று தெரியவில்லை.

சாலை வளர்ச்சி நம்முடைய தேசத்திலே மிகச் சிறப்பாகத் தமிழ்நாட்டிலே மிக மிக வளர்ந்திருக்கிறது. ஆனால் இந்த 3 வருஷங்களிலே எப்படியிருக்கிறது என்றால் தேக்கம் இருக்கிறது, பராமரிப்பு சரியாக இல்லை, மெயின்டனென்ஸ் சரியாக இல்லை என்று சொன்னால் அதற்குக் காரணம் யார்? சம்பந்தப்பட்ட அதிகாரிகளா அல்லது சர்க்காரின் கொள்கையா என்று பார்த்தால், சர்க்கார் வேண்டிய தொகைகளை ஒதுக்கி வைத்தால்தான் சரியாகப் பராமரிக்க முடியுமே தவிர, வசதியைப் பெருக்க முடியுமே தவிர இல்லையென்றால் முடியாது. அந்த அளவிற்கு நல்ல முறையில் பராமரிப்பதற்காக பண வசதி ஒதுக்கப்படவில்லை. 1966–67-ல் 200 கோடி ரூபாய் என்று போட்டு இந்த வருஷம் 300 கோடி ரூபாயாக இருக்கிறது. 50 சதவீதம் அதிகமாக இருக்கிறது என்றாலும், தேவையான பணம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. அதனால்தான் சாலை பராமரிப்பு குறைந்திருக்கிறது. இப்படியிருந்தால் பிற்காலத்தில், இரண்டு மூன்று வருஷங்களுக்குப் பின்னால் மீண்டும் மெயின்டனென்ஸ் செய்வது கஷ்டமான காரியம் என்று குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஒரு வீட்டைக் கட்டி விடலாம், வீட்டைக் கட்டி விடுவது சுலபம், ஆனால் அந்த வீட்டை நன்கு பராமரிப்பதுதான் முக்கியம். அதைப்போல சாலைப் போக்குவரத்திற்குள்ள சாலைகளை அவ்வப்பொழுது பராமரிப்பு செய்யாமல், அதற்கான ஒதுக்கீடுகள் செய்யாமல் இருந்தால் மிகவும் பழுதடைந்து பின்னால் மீண்டும் சரியான முறையிலே இருக்க வேண்டுமானால் அதிகப்படியான பணம் செலவழிக்க வேண்டியதாயிருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ரோடுகளையெல்லாம் ஒரு பக்கத்திலேயே கவனித்துக்கொண்டு வருகிறோம். சமவெளிப் பிரதேசங்களைத்தான் கவனித்து வருகிறோமே தவிர, மலைப்பிரதேசங்கள், பிற்போக்கு இடங்கள் பிற்பட்ட நிலைகள் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்திற்குப் போகும் உல்லாசப்பிரயாணிகள் போகும் ரோடு நன்றாக





யிருக்கிறதே தவிர, பிற்பட்ட இடமாகிய கூடலூரில் போக்குவரத்துக்கு நல்ல ரோடுகள் கிடையாது. அங்கே பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. வருவாய் அதிகமாக இல்லை. ஊருக்கு வெளியே உள்ள ரோடுகளை ஹைவேஸ் எடுத்துக்கொண்டால்தான் பிரயோஜனமாக இருக்கும், மக்கள் போக்குவரத்திற்கு வசதியாக இருக்க முடியுமே தவிர, மற்றபடி முடியாது. மலைப்பிரதேசங்கள், பிற்போக்கான இடங்கள் ஆகியவற்றை, கூடலூரையும் சரி, எங்கெங்கு மலைப்பிரதேசங்கள் இருக்கிறதோ எங்கெங்கு ரோடுகள் வசதிகள் இல்லையோ அங்கு ரோடுகள் வசதி செய்து தர வேண்டும்.

கோபிசெட்டிப்பாளையம் தாலூக்காவில் உள்ள தாளவாடி-பிர்க்கா ரொம்ப நாட்களாக மைசூருக்குப் போக வேண்டுமென்று ஏன் சொல்கிறார்கள் என்றால் ரோடு வசதி, போக்குவரத்து இல்லாததால்தான். எனவே, மலைப் பகுதிகளிலே, மலைப் பிரதேசங்களிலேயிருக்கும் ரோடுகளை முதலில் ஹைவேஸ் எடுத்துக்கொள்ள வேண்டும், அது வடாற்காடு மாவட்டத்திலேயிருந்தாலும் சரி, அமைச்சர் ஊருக்கு பக்கத்திலுள்ள ஊராகயிருந்தாலும் சரி ஹைவேஸ் எடுத்துக்கொள்ள வேண்டும். ஜவ்வாது மலையில் சில கிராமங்களில் 17 இலட்சம் 20 இலட்சம் செலவு செய்து ரோடுகள் வளைந்து வளைந்து அழகாகப் போவதாக இருக்கிறது. அதைப் போல் எங்கள் தொகுதியிலும் செய்து கொடுக்க வேண்டுமென்று உதவி சபாநாயகரவர்கள் மூலம் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

(திரு. ஆர். என். அரங்கநாதன் தலைமை.)

ஆகவே, இந்த ரோடு வசதி மிகவும் முக்கியமானது. பிற்போக்கான இடங்களில் ஹைவேஸ் எடுத்துச் செய்தால் காரியம் நன்றாக நடைபெறும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறைந்தது, நன்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், முதலிலே மலைப்பிரதேசங்களிலும், பிற்போக்கான இடங்களிலும் வேகமாக வேலையை முடித்துவிட்டு, அதற்குப்பிறகு சமவெளிப் பிரதேசத்திற்கு வந்தால் மிகவும் நன்றாகயிருக்கும் என்று ஆலோசனை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு வருஷங்களுக்கு முன்பு, என்னுடைய பகுதியில் சத்தியமங்கலம், கொத்தமங்கலம் வழியாக இருக்கும் ரோடுகளில் பாலம் கட்ட வேண்டுமென்று சொன்னேன். இப்பொழுது இரண்டு இடங்களிலே கட்டப்பட்டு வருகிறது. பெரும் பெரும் பள்ளங்கள். அதிகம் மழைபெய்துவிட்டால் கிராமங்கள் துண்டிக்கப்படும் நிலையிலிருக்கின்றன. கீழ்பவானி புராஜக்ட் வரும் நேரத்தில் ரோடுகளை ஹைவேஸ் எடுத்துக் கொள்ளுமென்று வாக்குறுதி அளித்தது. எல்லாம் காரியம் முடியும்வரையில்தான், காரியம் முடிந்தபிறகு பார்ப்பது கிடையாது. அப்பொழுது சர்க்காரின் சார்பாக வாக்குறுதி கொடுக்கப்பட்டது. அப்பொழுதிருந்த சர்க்கார் கொடுத்த வாக்குறுதியாகயிருந்தாலும், இந்தச் சர்க்கார் அதை நிறைவேற்ற கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த ரோடுகள் இருந்தால்தான் கீழ்பவானி பிரதேசத்தில்

போக்குவரத்துக்கு சௌகரியமாக இருக்கும். எங்கெங்கு பள்ளமிருக்கிறதோ அங்கேயெல்லாம் பாலம் கட்ட வேண்டுமென்று திட்டம் வைத்துக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, நண்பர் ஆல்டி அருணா அவர்கள் சொன்னார்கள், நாங்கள் அந்தத் திட்டத்தை செய்துவிட்டோம், இந்தத் திட்டத்தைச் செய்துவிட்டோம் என்றெல்லாம் சொன்னார்கள். எந்தத் திட்டத்தை செய்வதாகச் சொன்னீர்கள், எந்த திட்டத்தைச் செய்திருக்கிறீர்கள் என்பதைப்பற்றி ஞாபகப் படுத்தலாமா? நான் இப்பொழுது ஞாபகப்படுத்துகிறேன்.

கடல் நீரை குடிநீர் ஆக்குவோம் என்று சொன்னீர்களே ? கடல் நீரை குடி நீர் ஆக்கினீர்களா ? இப்பொழுது கேட்டால் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்லிவிடுவீர்கள். ஏன் அப்பொழுதே அதற்கு அதிகமாக பணம் செலவழிக்க வேண்டியிருக்கும், அது காஸ்டிலியாக இருக்கும் என்று சொல்லியிருக்கலாமே ? சோமசீலா பிராஜக்டைப்பற்றிச் சொன்னீர்கள், வீராணத்தைப்பற்றிச் சொன்னீர்கள். கடல் நீரை குடி நீராக ஆக்குவோம் என்று சொன்னீர்கள். கடல் நீரை குடி நீராக ஆக்கியிருந்தால் நாங்கள் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டிருப்போம். (குறுக்கீடு) நீங்கள் சொல்லவில்லை அப்படி என்று சொல்லிவிடுவீர்கள், அது சகஜம். நாங்கள் எப்பொழுது சொன்னோம் என்று கேட்பீர்கள் ? சபாநாயகர் அவர்கள் கூட டாகுமெண்டரி எவிடன்ஸ் கேட்பார். எந்த இடத்தில் சொன்னோம், எங்கே சொன்னோம், கையெழுத்துப்போட்டுக் கொடுக்க வேண்டும் என்று கூட சொல்வார். (குறுக்கீடு).

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கடல்நீரை குடி நீர் ஆக்குகின்ற முயற்சி வேறு சில நாடுகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, அப்படிப்பட்ட முயற்சி நம் மாநிலத்திலும் மேற்கொள்ளப்படுமா என்று தான் நாங்கள் கேட்டோம். நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபொழுது நாவலர் அவர்களும், நானும் அதைப்பற்றி கேட்டோம். அப்பொழுது அமைச்சராக இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்கள் ' அது ஒரு நல்ல முயற்சி தான், பல இடங்களில் செய்யப்படுகிறது. ஆனால் கடல் நீரைக் குடி நீராக ஆக்குவதற்கு நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்குச் செலவு மிக அதிகமாக ஆகும். ஆகவே, அந்த முயற்சியை எடுத்துக் கொள்வதற்கில்லை ' என்று அப்பொழுது பதில் சொன்னார். இது தான் நடந்த விவரம். நாங்கள் வந்தால் கடல் நீரை குடி நீராக்குவோம் என்று நாங்கள் சொன்னதாகவும், அதை இப்பொழுது சொன்னால், நாங்கள் எப்பொழுது அம்மாதிரி சொன்னோம் என்று சொல்லி தப்பித்துக்கொள்வோம் என்றெல்லாம் சொல்லி, அவர்களுக்கே உரிய மழலைமொழியில் பேசித் தங்களைச் சமாளித்துக் கொள்வதற்காக, அதைப் பயன்படுத்தலாமே தவிர, வேறு ஒன்றுமில்லை.



**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னுடைய மழலை மொழியைக் கேட்டு நீங்கள் இன்புறுவதற்காக என் நன்றி.

" குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்."

என்பது போல், எனது மழலைச் சொல்லைக் கேட்டு மகிழ்வதற்கு முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

அடுத்தபடியாக, மிக முக்கியமான பிரச்சினை காவேரி நதியில் அணைக்கட்டு கட்டுவது. இப்பொழுது மைசூர் சர்க்கார் நம்மையும் மீறி, மத்திய சர்க்காருடைய விருப்பத்திற்கு மாறாக ஹேமாவதி அணைக்கட்டு கட்டப்போவதாகச் சொல்கிறார்கள். ஏற்கனவே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபொழுது, ஹேமாவதி அணைக்கட்டு கட்டுவதில் எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது, ஆனால் எங்களுக்கு வந்து சேரவேண்டிய உரிய பங்கை எந்த விதத்திலும் குறைக்காமல் அவர்கள் கட்டிக் கொள்ளலாம் ஒப்பந்தத்தை மீறாமல் அதைச் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதே சமயத்தில் இன்னொரு அங்கத்தினர் பேசும்பொழுது காமராஜ் அவர்கள் தானம் பண்ணிவிட்டு போய் விட்டார் என்று சொன்னார். இப்பொழுது இருக்கிற முதல் அமைச்சர் ஆட்சேபனை இல்லை, கட்டிக் கொள்ளலாம் என்று சொன்னார். அது அவர்களுடைய பெருந்தன்மையைக் காட்டுகிறது. அதுபோல அப்பொழுது காமராஜ் அவர்களும் மக்களுக்காகத் தான் சொல்லியிருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** திரு. ராஜாங்கம் அவர்கள் திரு. காமராஜ் அவர்கள் தானம் கொடுத்துவிட்டு போய் விட்டார் என்று சொல்லவில்லை. அதைப்பற்றி ஒரு வார்த்தை கூட சொல்லவில்லையே என்று தான் சொன்னார். தானம் பண்ணிவிட்டுப் போய்விட்டார் என்று சொல்லவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** உள்ளே ஒன்று, வெளியே ஒன்று சொல்கிறாரோ என்பது எனக்குத் தெரியாது . . . .

இந்தப் பிரச்சினை சாதாரண பிரச்சினை அல்ல. இது சிக்கலான பிரச்சினை மக்களுடைய வாழ்வுப் பிரச்சினை. நாட்டினுடைய வாழ்வுப் பிரச்சினை. இதிலே உணர்ச்சிவசப்பட்டு பேசக்கூடாது. மிகவும் நல்ல முறையிலே இரு சர்க்கார்களினாலும் எந்த மக்களுக்கும் பாதகம் இல்லாமல் முடிவு செய்யவேண்டிய பிரச்சினை. இதிலே உணர்ச்சி வசப்படக்கூடாது. அவர்கள் செய்வது, நாம் செய்வது என்றெல்லாம் பேசிக்கொண்டே போனால் உணர்ச்சி வசப்பட்டு, தகராறில் போய்த் தான் முடியுமே தவிர தகராறைத் தீர்ப்பதற்கு வழி இருக்க முடியாது.

1924-ம் ஆண்டு ஒப்பந்தப்படி நமக்கு எவ்வளவு தண்ணீர் கொடுக்கப்படுகிறதோ அதை நாம் பெற்றுக்கொள்வதற்கு இந்த சர்க்காருடைய கரத்தை நாங்கள் பலப்படுத்துகிறோம், அதற்கு

உறுதுணையாக இருப்போம், மத்திய சர்க்காரிடம் போய் நீங்கள் வேண்டிய காரியங்களைச் சொல்லி, அதற்குத் தக்க நடவடிக்கை எடுங்கள் என்று நாங்கள், எல்லாக் கட்சியினரும் சேர்ந்து, முதல் அமைச்சர் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம். நமது தமிழ் நாட்டினுடைய நிலைமை இருதலைக் கொள்ளி எறும்பு போல இருக்கக்கூடிய நிலை. காவேரி மைசூரில் உற்பத்தியாகிறது. அங்கு இருக்கக்கூடிய சர்க்கார் அணை கட்டிக்கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். அதே போன்று கேரளாவிற்கு போகக்கூடிய நமது தண்ணீர், இங்கே உற்பத்தியாகிற நமது தண்ணீரை தேக்குவதற்கு நாம் அணை கட்ட வேண்டுமென்றால், கேரள அரசாங்கத்தின் ஒப்பந்தத்தைப் பெறவேண்டியதாக இருக்கிறது. நம்முடைய தமிழ் நாட்டுத் தலைவிதி இப்படி இருக்கிறது. தமிழ் நாட்டின் நிலை இருதலைக் கொள்ளி எறும்புபோல் இருக்கிறது. காவேரி மைசூரில் உற்பத்தியாகிறது. அவர்கள் அதைத் தடுத்து அங்கே அணைக் கட்டுக் கட்டிக்கொள்வதாகச் சொல்கிறார்கள். இங்கிருந்து, தமிழ்நாட்டில் உற்பத்தியாகி, கேரளாவிற்கு போகக்கூடிய நீரைத் தேக்கி அணை கட்டுவதென்றால், கேரள அரசாங்கத்தின் ஒப்புதலைப் பெறவேண்டியிருக்கிறது. நாம் நல்ல பண்போடு, சகிப்புத் தன்மையோடு இருந்துக்கொண்டிருக்கிறோம். இது மிகவும் சிக்கலான பிரச்சினை மட்டுமல்ல, உயர்நீதி மன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் இது தீர்க்கப்படவேண்டுமானால், அப்படி தீர்க்கப்பட வேண்டிய நிலைமை இருக்குமானால், அதற்குக் கண்டிப்பான நிலை இப்பொழுது உருவாகிக் கொண்டிருக்கிறது. 1924-ம் ஆண்டு அக்ரிமெண்டை நான் ஓரளவுக்குப் படித்திருக்கிறேன் . . . .

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஹேமாவதி அணைக்கட்டு பற்றி நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதுவரையிலே பேசியதை நான் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே ஒப்புக் கொள்கிறேன். இதற்குப் பிறகு ஏதாவது பேசிவிடக் கூடாது என்பதற்காக நானும் ஒரு அணை போட விரும்புகிறேன். அது சம்பந்தமாக அவர்கள் இதுவரையில் பேசியதை வார்த்தைக்கு வார்த்தை, எழுத்துக்கு எழுத்து அப்படியே ஒப்புக்கொள்கிறேன். இதில் உணர்ச்சி வசப்படக்கூடாது. இது இரண்டு மாநில முதல் அமைச்சர்களுடைய கௌரவப் பிரச்சினை அல்ல, இரண்டு மாநிலங்களிலுள்ள மக்களுடைய பிரச்சினையாகும். இரண்டு மாநில மக்களும் ஒருமைப்பாட்டுடன் வாழவேண்டும், ஒருவருக்கொருவர் கசப்பு உணர்ச்சியை வளர்க்கக்கூடிய முறையில் நாம் இதை உருவாக்கக் கூடாது. அவர்கள் சொன்னதுபோல சகிப்புத் தன்மைக்குத் தமிழர்கள் எப்பொழுதும் பெயர் பெற்றவர்கள். அந்தக் காரணத்தினால் தான் நாம் எவ்வளவோ சகித்துக்கொண்டிருந்தாலும், தமிழ்ப் பாடகர்கள், தமிழ்க் கலைஞர்கள் இன்றைக்குக் கூட பெங்களூர் போன்ற இடங்களில் போய்ப் பாட முடியாமலும், கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியாமலும், விரட்டியடிக்கப்படுகிற காட்சியைப் பார்க்க வேண்டியவர்களாக



இருக்கிறோம். இங்கே அப்படி இல்லை. இங்கே வருகிற கன்னடக் கலைஞர்களுக்கு எந்தத் தீங்கையும் யாரும் செய்யக் கூடாது என்று நாம் உறுதியாக இருக்கிறோம். அப்படிச் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களை அடக்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

நான் இங்கு வருவதற்கு முன்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆலடி அருணா அவர்கள் இங்கே பேசியதாக நான் கேள்விப் பட்டேன். மத்திய அரசு ஏன் ராணுவத்தை அனுப்பி அந்த அணை கட்டுவதை தடுத்திருக்கக் கூடாது என்று பேசியதாக நான் கேள்விப்பட்டேன். நான் அதற்காகச் சட்டசபைக் கட்சித் தலைவர் என்ற முறையில் வருத்தம் தெரிவித்துக்கொள்கிறேன். ஆலடி அருணா அவர்கள் அப்படிப் பேசியிருக்க வேண்டிய தேவையில்லை. ராணுவத்தின் மூலம் நாம் இப்படிப்பட்ட காரியங்களைத் தீர்த்துக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. இவைகளையெல்லாம் நாம் மனவளத்தில் தீர்த்துக் கொள்ளவேண்டும். வருகிற ஏப்ரல் திங்கள் 17-ம் நாளன்று நானும், மைசூர் மாநில முதல் அமைச்சரும் டெல்லியில் சந்திக்க இருக்கிறோம். நல்ல முடிவு ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முதல் அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசியதற்கு நன்றி. நமக்கு சகிப்புத் தன்மை வேண்டும். நாம் பொறுமையாக காரியங்களைச் சாதித்துக்கொள்ள வேண்டும். ராணுவத்தின் மூலம் இந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கு முடியாது. முதல் அமைச்சர் அவர்கள் இதைப் பற்றி பேசிவிட்டதால், மேலும் நான் இந்தப் பிரச்சினையின் மீது பேசி வளர்த்திக்கொண்டு போகத் தேவையில்லை.

1924-ம் ஆண்டு எக்ரிமெண்டு என்ன ? நமக்கு ஓரளவுக்கு தண்ணீரைக் கொடுத்துவிட்டு, அவர்கள் தேக்கிக் கொள்வதற்கு நாம் ஒத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் சொல்வது என்ன ? தண்ணீரைக் கொடுத்துவிட்டால் கூட அந்தத் தண்ணீரை எப்படி உபயோகப்படுத்தவேண்டும் என்று சொல்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லை என்று நான் நினைக்கிறேன். இத்தனை டி.எம்.ஸி. வாட்டர் தமிழ் நாட்டிற்குக் கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் இருக்கிறது. நாம் அதை 10 லட்சம் ஏக்கராவிற்கு உபயோகப் படுத்தினால் என்ன, 15 லட்சம் ஏக்கராவிற்கு உபயோகப்படுத்தினால் என்ன ? நம்முடைய சாமர்த்தியத்தைப் பொறுத்து, நாம் கையாளுகின்ற விஞ்ஞான முறையைப் பொறுத்து, நம்முடைய விவசாயிகளுடைய ஊக்கத்தைப் பொறுத்து நாம் எப்படி வேண்டுமானாலும் செய்துகொள்வோம். அங்கு இருந்துகொண்டு, நீங்கள் இத்தனை லட்சம் ஏக்கராவிற்கு உபயோகப்படுத்துகிறீர்களே என்று கேட்கக்கூடிய உரிமை அவர்களுக்குக் கிடையாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். 1924-ம் ஆண்டு எக்ரிமெண்டுபடி அத்தனை டி.எம்.ஸி. வாட்டர் நமக்குக் கொடுத்தாக வேண்டும். வெள்ளம் பெருகி வருமானால், உபரித் தண்ணீரை

எப்படி பங்கிட்டுக் கொள்வது என்பது பற்றியும் எக்ரிமெண்டில் கூறப்பட்டிருக்கிறது. கிருஷ்ணராஜ சாகரில் நிரம்பியதற்குப் பின்னுலே நமக்கு எவ்வளவு கொடுக்கலாம் என்றும் ஒப்பந்தத்தில் இருக்கிறது. அதே மாதிரி எத்தனை லட்ச ஏக்கரா இருந்தால் அவர்களுக்கு என்ன ?

உதாரணத்திற்குச் சொல்லப் போனுல், கீழ் பவானியை எடுத்துக் கொண்டால், புஞ்சை தானியங்கள் என்றுதான் சொன்னுர்கள். சோளம், ராகி இவைற்றிற்கு என்றுதான் இருந்தது. ஆனுல், விவசாயிகள் தங்களால் முடிந்தவரைக்கும் முயற்சி செய்து, 3½ மாதம் நெல்வைக்கும் நிலையைச் செய்திருக்கிறுர்கள். அத்தகைய நிலையில் பயிர் கட்டுப்பாடு இருக்க முடியாது. ஆகவே, 1924 அக்ரிமெண்டுக்குப் பிறகு நிலை என்ன என்பதும் இருக்கிறது. உபரித் தண்ணீர் இருந்தால், எப்படி எப்படி பிரித்துக் கொள்வது என்பதும் ஒப்பந்தத்தில் இருக்கிறது என்று தான் எனக்குத் தெரிந்தவரையில் நினைக்கிறேன். தண்ணீர் குறைந்து விட்டால், அப்பொழுது எப்படி எப்படி பகிர்ந்து கொள்வது, அவர்கள் எவ்வளவு நஷ்டத்தை ஏற்றுக் கொள்வது, நாம் எவ்வளவு ஏற்றுக் கொள்வது என்றெல்லாம் இருக்கிறது. அதை விட்டு, அப்படித்தான் நாங்கள் அணைகளைக் கட்டுவோம் என்று சொல்லிவிட்டார்களானுல், மக்களுடைய நிலைமை பாதிக்கப்படும், நாட்டின் ஒற்றுமையேகூட கெடுமோ, இது ஒற்றுமைக்கே உலை வைக்குமோ என்று பயப்படவேண்டிய நிலைகள் இருக்கின்றன. ஆகவே, இது ஒன்றும் சாதாரண விஷயம் இல்லை.

நாட்டின் ஆறுகளெல்லாம் மத்திய சர்க்காருக்குச் சொந்தம். ஒவ்வொரு மாநில சர்க்காருக்கும் தனித் தனி என்று இல்லை என்கிற நிலையும் இருக்கிறது. அதையும் மீறி காரியங்கள் செய்தால், மக்களுக்கு அது பாதகத்தை விளைவிக்கும். அதிகமாகப் பேச நான் தயாராக இல்லை. முதல் அமைச்சர்கள் சந்திக்க இருக்கிறுர்கள். என்ன நிலை வருமோ. அது மறுபடியும் சட்ட சபைக்கு வந்தால், தமிழகத்தின் நான்கு கோடி மக்களின் சார்பில், அந்த நிலை சமாதான முறையில் சண்டையில்லாமல் அமைய நம்முடைய ஆத்ம சக்தி, பலம் எல்லா நம் தானை இந்த சர்க்காருக்கு, எந்த சர்க்காரும் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொண்டு மேலே பேச விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையில் முதல் அமைச்சர்கள் பேசுவதோடு கூட, சீக்கிரத்தில் ஒரு முடிவு எடுக்க வேண்டும். அப்படி முடிவு காணவில்லை என்றால், பின்னுல் எப்படி எப்படி நடக்குமோ என்ற நிலை இருக்கும்.

பாசன வசதிகளைப் பொறுத்தவரையில், தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட 97 சதம் பூரணமாக பயன்படுத்தி விட்டோம். பாக்கி யிருக்கக் கூடியது 3, 2 சதவிகிதம் தான் இருக்கும். காவிரி ஆற்றில் எல்லாவற்றையும் பயன்படுத்தி விட்டோம். தண்ணீர் இல்லாப் பற்ருக் குறைதான். அதிகமான தண்ணீர் என்ற நிலை கிடையாது. இப்பொழுது இருக்கக் கூடிய பிரச்சினையெல்லாம், ஸ்மால்



இர்ரிகேஷன் ப்ராஜெக்ட்ஸ் தான். அந்த அந்த இடங்களில் சிறு, சிறு திட்டங்களைப் போட்டு, அந்தத் திட்டங்களை நிறைவேற்ற ஆக்கமும், ஊக்கமும் கொடுத்துப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவற்றை சீக்கிரமான முறையில் கொண்டு வர வேண்டும். பூரணமாகக் காரியங்களை எடுத்து நடத்த வேண்டும். சில சந்தர்ப்பங்களில் சில உத்தரவுகளைப் போடும்போது, சர்க்காரோ, அதிகாரிகளோ அவற்றை முடிக்கிறதா அல்லது அப்படியே வைத்து இருக்கிறதா என்று தெரியவில்லை. சில சமயங்களில் உத்தரவுகளை மாற்றி விவசாயிகளுடைய நலன்கள் பாதிக்கப்படும் முறையில் உத்தரவுகள் மாற்றி மாற்றி அமைக்கப்படுகின்றன.

கீழ் பவானியில் ஒரு பகுதி ஒற்றை நம்பர் மதகுகளுக்கு ஒற்றை நம்பர் வருஷத்திலும், இரட்டை நம்பர் வருஷத்தில் இரட்டை நம்பர் மதகுகளுக்கும் என்று ஏற்பாடு இருந்தது. ஆனுல் மழை பெய்யாத காரணத்தால், சில சந்தர்ப்பங்களில் அது மாறிவிட்டன. இரட்டை வருஷத்தில் ஒற்றை மதகுகளுக்கு வந்து விட்டன. அது மாதிரியே, வேட்டைக்காரன்புதூரில், பரம்பிக் குளம் ஆளியாறு கனலில் தவறு நடந்திருக்கிறது, சர்க்காருக்கே தெரியுமோ, தெரியாதோ தெரியவில்லை. அமைச்சருக்கு நான் சொல்ல விரும்புகிறேன். வேட்டைக்காரன்புதூரில் 5,045 ஏக்கரா பாசன வசதி உள்ளவை. முதல் பகுதிக்கு தண்ணீர் விட்டபிறகு அடுத்த பகுதிக்கு தண்ணீர் விடப்பட வேண்டும். சர்க்காரே உத்தரவு போட்டிருக்கிறது. அந்த நிலையை மீற முடியாது. 'ஏ' பிளாக், 'பி' பிளாக்கு என்று எடுத்துக்கொண்டால், 'ஏ'-க்கு இந்த வருஷம், 'பி'-க்கு அடுத்த வருஷம் என்று போடப் பட்டிருந்தது. 1969 ஜுன் வரையில் ஒரு பிளாக்குக்கு விடப்பட்டது. அடுத்தபடியாக இன்னொரு பிளாக்குக்கு விட வேண்டும். அப்பொழுதே விவசாயிகள் சந்தேகப்பட்டார்கள். சம்பந்தப்பட்ட அமைச்சரை அணுகி, தண்ணீர் வருமா வராதா எங்களுக்கும் என்று கேட்டபோது, கவலைப்பட வேண்டாம், உத்தரவு போட்டிருக்கிறோம், உங்கள் பிளாக்குக்கு வரும், அதை மாற்ற முடியாது என்று சொல்லியிருக்கிறுர்கள். எஞ்சினியர்களைக் கேட்டதற்கும் அவர்கள் சொல்லியிருக்கிறுர்கள். சட்டப்படி நடக்கும் என்று தெரிவித்திருக்கிறுர்கள். அதையெல்லாம் நம்பி விவசாயிகள், எருவெல்லாம் அடித்து, வேலைகள் செய்த பிறகு ஜுன் மாதம் வரை தண்ணீர் கொடுத்த அதே பிளாக்குக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக் கிறுர்கள். இது வேட்டைக்காரன்புதூரில் நடந்திருக்கிறது. தங்கவேலு கவுண்டர் பட்ட கஷ்டம் நமக்குத் தெரியும். அந்த பிளாக்குக்கு ஜுன் வரை தண்ணீர் கொடுத்துவிட்டு, அதற்கே மறுபடியும் போன வருஷம், அதாவது 1969-ல் செப்டம்பரில் கொடுக்கப்பட்டிருக்கிறது. உத்தரவை மாற்றிக் கொடுக்கப் பட்டது. விவசாயிகளெல்லாம் எருவெல்லாம் போட்டு, வேலை களெல்லாம் செய்துவிட்டார்கள். கொடுத்த பிளாக்குக்கே மறுபடியும் கொடுத்திருக்கிறுர்கள். அதற்கு ஒரு ஜி.ஓ. போட்டிருக்

கிறார்கள். மாற்ற முடியாது என்று சொல்லிப் போட்டு, அதை மாற்றியிருக்கிறார்கள். எனக்கு வந்திருக்கிற புகார்கள், அந்த பிளாக்கில் ஆளும் கட்சியைச் சேர்ந்த சொந்தக்காரர் இருப்பதாகவும், அதனால் மீண்டும் பெற்றுக் கொண்டதாகவும் புகார்கள் வருகின்றன. நாம் ஏன் புகாருக்கு இடம் கொடுக்க வேண்டும்? யாராக இருந்தால் என்ன? பாரபட்சம் இல்லாமல் நடக்க வேண்டும். உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஹைகோர்ட்டுக்கு ரிட் போட்டு போகும்போது, சர்க்கார் உத்தரவை வைத்து தப்பித்துக் கொண்டார்கள். அதன்படி நடக்க வேண்டும் என்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டது. விவசாயிகளுக்கு எத்தனை நஷ்டம்? இவ்வளவு கஷ்டத்தை ஏன் கொடுக்க வேண்டும்? விவசாயிகளுக்கு ஏதோ வருஷத்திற்கு ஒருமுறை தண்ணீர் வருகிறது. அதில் அவர்கள் வாழ்க்கை நிலை அடங்கி யிருக்கிறது. மாற்றி மாற்றி இஷ்டம் போல் செய்தால், உத்தரவுகளைப் போட்டால், இஷ்டம் போல் விவசாயிகளுக்கு சலுகைகள் கொடுத்தால், எப்படி மக்களுக்கு நியாயமான முறை என்று நம்பிக்கை வரும்? அதே மாதிரி பாக்கியிருக்கும் இடங்களிலும்.

இப்பொழுது கூவம் சீரமைப்பு நடக்கிறது. கூவம் ஆற்றுக்கு சீரமைப்பு ஒன்றரைக் கோடி ரூபாயில் செய்கிறோம் என்கிறார்கள், வரவேற்கத்தக்கதுதான். உங்களுடைய திட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள், செய்கிறீர்கள். அந்த வகையில் கூவம் சீரமைப்பு நடக்கிறது. ஆனால், அதற்கு டெண்டர் கால் பார் பண்ணினீர்களா? பதில் என்ன? முறைப்படி நாங்கள் டிபார்ட்மெண்ட் மூலம், இலாகா மூலம் நாங்கள் நடத்துகிறோம் என்று சொல்கிறீர்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதற்கும் முறை இருக்கிறது. ஒரு பகுதியில் கடலாக இருக்கும் பகுதியில் சாதாரண கண்ட்ராக்டர்கள் செய்ய முடியாது. அங்கே பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டுதான், எஞ்சினியர்கள், வல்லுநர்கள் செய்ய வேண்டும். அதுபோக, அதற்குமேல், 30, 40 மைலுக்கு டெண்டர் கால் பண்ணி; இரண்டு மைலுக்கு ஒரு டெண்டர் என்று வகுத்து, இத்தனை நாளில் நடக்க வேண்டும் என்று செய்தால், சீக்கிரமாக வேலை நடக்கும். அது இல்லாமல், பூரணமாக டிபார்ட்மெண்டே நடத்துவது என்றால், செலவு அதிகமாக ஆகும் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இரண்டு, இரண்டு மைலுக்கு என்று செய்தால், கிராமப் பகுதியிலிருந்தும் எஞ்சினியரிங் கண்ட்ராக்டர்கள் வருவார்கள். மக்கள் வந்து இரவு பகலாக உட்கார்ந்து காரியத்தை முடிப்பார்கள். இந்த வறட்சி காலத்தில், பட்டணத்தில் வந்து அழகான கூவத்தினுடைய சீரமைப்பைப் பார்த்து அவர்களும் பங்கு கொள்ள, வேலையை முடிக்க ஏதுவாக இருக்கும். இந்தத் திட்டத்தில் துறைமுகப் பகுதியை விட்டு விட்டு, அதற்குமேல் கூவம் ஆற்றுப் பகுதியில், ஓரோரு மைலுக்கு அல்லது இரண்டு இரண்டு மைலுக்கு ஒரு டெண்டர் வீதம் கால் பார் பண்ணி, அந்த முறையில் இருக்க



வேண்டும் என்று செய்தால், ஆறு மாதத்தில் காரியம் முடிந்து விடும், சிக்கனமாக முடிந்துவிடும், சீக்கிரமாக முடிந்துவிடும், நல்ல வகையில் வேலைவாய்ப்புக்களும் கொடுக்க முடியும்.

இப்படித் திட்டங்களையெல்லாம் பார்த்தால், அநேகமாக எல்லாம் பட்டணத்திற்கே வசதி செய்வதாக இருக்கிறது. வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் வருகிறது, கூவம் சீரமைப்புத் திட்டம், இப்படி முக்கால் வாசித் திட்டங்கள் பட்டணத்திற்கே அதிகமாக இருக்கின்றன. பட்டணத்து மக்கள் வாழவேண்டாம் என்று சொல்லவில்லை. நன்றாக இருக்க வேண்டியதுதான். ஆனாலும், வீராணம் ஏரித் தண்ணீர் கொண்டு வருவதில், நான் விசாரித்த வரையில், போதுமான தண்ணீர் வரக்கூடிய சௌகரியங்கள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். ஏற்கனவே பாசன வசதிகளுக்குத் தண்ணீர் பற்றாக் குறை இருக்கும்போது, கிரேடேஷன் வரும் ஆட்சேபகரமான நிலை இருக்கிறது, டெல்லிக்கு சென்றிருந்தபோது, முதல் அமைச்சர் சோமசீலா திட்டம் மூலம் ஆந்திராவிலிருந்து தண்ணீர் வந்தாலும் வரவேற்பேன் என்று சொன்னார்கள். அதிலே கூட 'ஓபன் கட்' வாய்க்கால் மூலம் வந்தால் கிரேடேஷனில் வரும். சோமசீலா பிராஜக்டினால் இரண்டு மூன்று மாவட்டங்கள் பலனடையும் என்று நினைக்கிறேன். அந்தத் தண்ணீர் வந்தால், அது நெல்லூர் வழியாக வந்து, செங்கல்பட்டு வழியாக வந்து, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு வரை அதனால் வசதியிருக்கும்.

முப்பது, நாற்பது, அறுபது கோடி ரூபாய் திட்டம் என்று இருந்தால், தமிழ்நாடு அரசாங்கமும் ஆந்திர அரசாங்கமும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு, நமது அரசாங்கம் 20 கோடி ரூபாயும், ஆந்திர அரசாங்கம் முப்பது கோடி ரூபாயும் என்று போட்டுக் கொண்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்பொழுது வற்றாத தண்ணீர் கிடைத்துக் கொண்டு இருக்கும். தண்ணீர் பற்றாக்குறை விவசாயிகளுக்கும் இருக்காது என்ற எனது ஆலோசனையைக் கூறிக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சோமசீலா திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆந்திர அரசாங்கம் கூட முன் வர முடியாத நிலைமை இருக்கிறது. காரணம் பணம் பற்றாக்குறை மட்டுமல்ல, சோமசீலா திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால், அதை ஒட்டி இருக்கின்ற பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலச்சொந்தக்காரர்கள் அதைச் சர்க்கார் ஆர்ஜிதம் செய்துகொள்ளச் சம்மதிக்கவில்லை. ஆகவே அந்தத் திட்டத்தை இழுத்துக் கொண்டே இருந்தால் சென்னைக்குக் குடிநீர் வழங்க முடியாது. நான் டெல்லியில் சொன்னது கூட வீராணம் தண்ணீர் வந்து, இதுவும் கிடைக்குமேயானால் அதையும் பயன் படுத்திக் கொள்ளலாம். இன்னும் 10, 15 வருடத்திற்குப் பிறகு தண்ணீர்த் தேவை மேலும் பெருகும் என்ற அடிப்படையில்தான் கூறப்பட்டது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : விளக்கத்திற்கு நன்றி, நான் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தபோது இந்தப் பிரச்சினையைப் பற்றி எடுத்துச் சொன்னேன். இப்பொழுது இருக்கிற திரு. கே. எல். ராவ் அவர்கள்தான் அப்பொழுதும் அமைச்சராக இருந்தார், நான் பேசிய உடனே என்னைக் கூப்பிட்டு 'உங்களுடைய ஆலோசனைப்படி சோமசிலா திட்டம் வரும்' என்று சொன்னார். எதற்காக அதை இப்பொழுது சொல்கிறேன் என்றால் சில நிலச் சொந்தக்காரர்கள் சொல்லும் வாதங்கள் அந்த இடத்தில் சர்க்கார் ஆர்ஜிதம் செய்து கொள்வதற்கு இடையூறாக இருக்கக் கூடாது என்ற நிலைமையில் அரசு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லிக் கொள்கிறேன்.

ஆகவே, இப்பொழுது சோமசிலா திட்டம் முடியாது என்றாலும், கிருஷ்ணா—கோதாவரி இணைப்புத் திட்டம் இருக்கிறது. எதிர் காலத்தில் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தண்ணீர் பஞ்சம் பெரிய பஞ்சமாக வரப்போகிறது. குடிப்பதற்கும் விவசாயத்திற்கும் தண்ணீர் இல்லாத நிலைமை வரும். இப்பொழுது இருக்கும் மழை பொய்க்கும் நிலைமை மேலும் உண்டானால் மிக மோசமான நிலைமை ஏற்படும். நம்முடைய நாட்டு ஒற்றுமை காப்பாற்றப்பட வேண்டுமானால் நம்முடைய நாட்டு நதிகள் அனைத்தும் இணைக்கப்பட வேண்டும். கங்கை—காவேரி இணைப்பு இல்லையே என்பதைப் பற்றிக் கவலை இல்லை. கிருஷ்ணா—கோதாவரி நதிகள் இணைந்து பாலாற்றில் தண்ணீர் கொண்டு வந்து, இந்த மாதிரி சில திட்டங்களுக்கு இப்பொழுதே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் கொண்டு வந்து செய்தால்—எதிர்கால சந்ததியாருக்கு மிக பிரயோஜனமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். அப்பொழுது இருக்கும் நிலைமையில் நமக்கு தண்ணீர் மிக அதிகமாகத் தேவைப்படும். தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கும் இடத்திற்கு தண்ணீர் வர ஏற்பாடு செய்வது தான் நமது திட்டமாக இருத்தல் வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

ஆகவே இருக்கின்ற வாய்க்கால்களையும் சீரமைப்பது மிக முக்கியம். எங்களுடைய ஊரிலே காட்டேரித் திட்டம் என்று ஒன்று இருக்கிறது. பொதுவாக வாய்க்கால்கள் 'வி' மாதிரி இருந்தால் தண்ணீர் நல்லபடி வரும். 'யு' மாதிரி இருந்தால் அவ்வளவாக வராது. இதற்குக் காரணம் அவ்வப்போது மெயின்டனன்ஸ் செய்யப்படவில்லை. இன்ஜினியர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் வாய்க்கால்கள் மூடப்படுவதில்லை. எப்பொழுது வாய்க்கால் மூடப்பட்டிருக்கிறதோ அப்பொழுது தான் டெண்டர் கால் பார் பண்ணுகிறார்கள். முதலிலேயே ரிப்பேர் செய்வதற்குத் திட்டம் போட்டு வாய்க்காலை மூடின உடனேயே அந்தப் பகுதியில் சாமான்களைக் கொண்டு போய்ச் சேர்த்து வேலையைச் செய்தால்தான் செய்ய முடியும். பிப்ரவரி மாதம் 15-ம் தேதி மூடுகிறார். மூடிய பிறகு ஒரு ஜீப்பில் போய் அந்தந்த





இடத்தைப் பார்த்தால் என்ன செய்ய முடியும்? மறுபடியும் ஏப்ரல் மாதம் திறக்க வேண்டியதாக இருக்கிறது. என்னுடைய 20 வருஷ அனுபவத்தில் 18 தடவையாவது இதைப் பற்றிச் சொல்லியிருப்பேன். இதை ஏற்கனவே யோசித்துச் செய்தால் ஒரு மாதத்தில் முடியும். இருப்புக்காட்டு வாய்க்கால் என்று ஒன்றும், மற்றொரு வாய்க்காலும் இது வரை ரிப்பேர் செய்யப்படவில்லை. அதே போல் காலிங்கராயன் வாய்க்கால் ஒன்று ரிப்பேர் செய்யப்படாமல் இருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, unauthorised irrigation என்பது தாராளமாக நடக்கிறது. அவரவர்களுடைய சக்திக்குத் தகுந்த மாதிரி வாய்க்காலில் பம்ப் போட்டு செய்து கொள்ள வேண்டியது. பிறகு அரசியல்வாதிகள் விண்ணப்பம் கொடுக்க வேண்டியது. தவறு செய்த அந்த இடத்தில் ஏற்படும் பாதகத்தோடு போவதில்லை. கடைசியில் டெயில் எண்டில் உள்ள விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படுகிறது. மேலே உள்ளவர்களை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு எப்படித் தண்ணீர் போகும். இதை எல்லாம் சர்க்கார் கண்டிப்பாகப் பார்த்து unauthorised irrigation தவிர்த்து மேலே உள்ள விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டும். இதிலே கண்டிப்பு இல்லாவிட்டால் சாதாரண விவசாயிகளுக்கு ஏற்படும் கஷ்டத்தைச் சொல்லவே முடியாது. ஆகவே இந்த மாதிரியான திட்டங்களை இன்னும் அதிகமாக நிறைவேற்றுவதற்கு அதிகப் பணம் ஒதுக்கி நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. நம்முடைய இன்ஜினியர்கள் எல்லாம் மிகவும் சிறந்தவர்கள். நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கின்ற இன்ஜினியர்களைப் போல் நல்ல முறையில் வேலை செய்யக்கூடிய இன்ஜினியர்களை எங்குமே பார்க்க முடியாது. நம்முடைய இன்ஜினியர்கள்தான் வடக்கே உள்ள கோசி பிராஜக்ட் போன்றவற்றிற்கு ஆலோசனை கூறி இருக்கிறார்கள். அவர்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளும் திட்டங்களை இந்த சர்க்கார் வகுத்து அதற்குத் தேவையான அதிகப் பணத்தை ஒதுக்கி வேலை செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட மன்றத் தொடர் கூட்டத்தில் 11-ம் தேதியிலிருந்து மானியக் கோரிக்கைகள் பிரேரேபிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. இன்று பொதுப்பணித் துறை மானியம் நிறைவேற்றப்பட வேண்டும். காலையிலேயே நிறைவேற்றப்பட வேண்டியது பிற்பகலிலும் தொடர்ந்து விவாதங்கள் நடைபெற்று வந்ததால் இப்பொழுது தான் நிறைவேற்றப்பட இருக்கிறது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1970 மார்ச் 25

மாண்புமிகு உறுப்பினர்கள் அதிக அளவில் விவாதத்தில் கலந்து கொண்டது அவர்கள் இந்தத் துறையில் அதிக அக்கறை காட்டுகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. உறுப்பினர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் அவற்றிற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பொதுப்பணித் துறை பொறியாளர்களும் பொதுப்பணித் துறையும் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டு வருவதாகக் கூறியதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தியா விலேயே மிகச் சிறந்த முறையில் பணியாற்றக் கூடியவர்கள் நமது பொறியியல் இன்ஜினியர்கள் என்று அவர்கள் கொடுத்த பாராட்டுக்கு நன்றி தெரிவிக்கும் அதே நேரத்தில், சில அதிகப் படியான குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார் என்பது தான் வருத்த மாக இருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர் களுடைய குற்றச் சாட்டுகளுக்கு நான் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னிடமாவது அல்லது தலைமைப் பொறியாளர் அவர் களிடமாவது இந்தக் கூவம் சீரமைப்பு பணிகளைப் பற்றி குறிப்புகள், கேட்டிருந்தால், அவர் அந்தக் குற்றச்சாட்டுகளை சுமத்தியிருக்க மாட்டார் என்று நான் நம்புகிறேன்.

கூவம் சீரமைப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. முதல் கட்டத்தில் 32 லட்சம் ரூபாய், இரண்டாவது கட்டத்தில் 62 லட்சம் ரூபாய் மூன்றாவது கட்டத்தில் 16.4 லட்சம் ரூபாய் என்று நடைபெற்று வருகிறது. இங்கே பேசிய சில மாண்புமிகு உறுப்பினர்கள் கூவம் ஆற்று சீரமைப்புத் திட்டத்தில் தவறுகள் ஏற்பட்டு விட்டதாக ஒரு தவறான கருத்தில் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் தங்களது கருத்தை மாற்றிக் கொள்வதற்காக சில விவரங்களை கொடுத்தால் நல்லது என்று நம்புகிறேன். முதல் கட்டமாக—

Construction of a Regulator, monolith, jetty and shore protection works.

35 லட்சம் ரூபாய்க்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நமது அரசு எடுத்த முடிவுப்படி நடவடிக்கைகள் மேற்கொண்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றது. அந்த வேலையிலே இரண்டு பகுதிகள் உள்ளன.

This work is divided into two sub-heads : (1) Regulator and (2) the other items mentioned above.

இந்த இரண்டு வேலைகளும்Both items have been given on tender என்ற அடிப்படையில் டெண்டர் கோரப்பட்டு, விதிமுறைகள் அனுஷ்டிக்கப்பட்டு, வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையில்தான் வேலைகள் நடைபெற்று வருகின்றன.



1970 மார்ச் 25] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

டெண்டர் "நேஷனல் கம்பெனிக்கு"த்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் அவர் உங்கள் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தவர் என்று நான் சொல்கிறேன். வேலைகள் மிகவும் நல்ல முறையிலே நடைபெற்று வருகின்றன என்று பொறியாளரிடத்திலே இருந்து தகவல் வந்திருக்கிறது.

இரண்டாவது கட்டமாக

channelisation of the Cooum river and its north arm plus beautification. The nature of work being done under this phase consists of putting cross bunds across the river, dewatering by employing batteries of departmental and hired pumps, excavation in the bed to the required section with manual labour and providing cement sand slab lining for the sides and walk ways on the beams with cement concrete. Conveyance of excavated earth from one reach to the other in hired lorries and departmental lorries.

இந்த வேலைகளுக்கும் டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன. விதி முறைகள் அனுஷ்டிக்கப்பட்டுத்தான் வேலைகள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. சில இடங்களில் டெண்டர்கள் கோரினாலும் வருவது இல்லை. பொதுவாக காண்ட்ராக்ட் வேலைக்கு வருவதில்லை. சில இடங்களில் பீஸ் ஒர்க்ஸ் என்ற அளவில் பொறியாளர் ஐயாயிரம் ரூபாய் வரைக்கும் அக்ரிமென்ட் செய்து கொண்டு வேலைகள் தரப் படலாம் என்று அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவது கட்டமாக Construction of tenements கூவம் ஆற்றின் கரையில் இருக்கின்றவர்களுக்கு வீடு கட்டும் திட்டமும் இருக்கிறது. அவைகளும் டெண்டர்கள் கோரப்பட்டு, விதிமுறை களின் அடிப்படையில்தான் வேலைகள் கொடுக்கப்பட்டிருக் கின்றன. டெண்டர்கள் கோரியும், வராத இடங்களில்தான் பீஸ் ஒர்க்ஸ் என்ற முறையில் ஐயாயிரம் ரூபாய் வரையில் உள்ள வேலை களுக்கு பொறியாளர்கள் அக்ரிமென்ட் செய்து கொண்டு வேலைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வேலைக்கும் டெண்டர் கோரப்பட்டு, விதிமுறைகள் அனுஷ்டிக்கப்பட்டு, வேலைகள் கொடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கூறினீர்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். கூவம் சீரமைப்புப் பணியில் நல்ல வேலைகள் நடைபெறுகின்றன என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்கிறார்கள். கூவம் முன்பு 400 அடி, 405 அடியாக இருந்ததை மாற்றி, 80 அல்லது 85 அடியாகக் குறைத்திருக்கிறோம். முன்பு ஒரு அடி, ஒன்றேகால் அடி ஆழம்தான் இருந்தது. இப்பொழுது எட்டு அல்லது ஒன்பது அடி ஆழப்படுத்தி, சீரமைப்புத் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. நம்முடைய நண்பர்களையெல்லாம் அங்கு அழைத்துப் போய் காண்பிக்க வேண்டுமென்று நினைந்தோம். நேற்று அந்த இடத்திற்குப் போய் பார்க்க வேண்டு மென்று திட்டமிட்டிருந்தோம். எதிர்பாராத காரணங்களினால் நேற்று போவது தடைப்பட்டுவிட்டது. ஆகவே, நாளைக்கு

நான்கு மணிக்கு அந்தச் சிரமைப்புத் திட்டத்தைப் போய்ப் பார்க்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கட்டாயம் நாளைக்கு வந்து பார்க்க வேண்டும். வந்து பார்த்து விட்டு, அதன் பிறகு குறைகளைச் சொன்னால் நலமாக இருக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இதுவரைக்கும் பதில் சொல்லட்டும் என்பதற்காகத்தான் நான் பேசாமல் இருந்தேன். "ஐயா, எங்களுக்கு இப்படி தகவல் வந்திருக்கிறது" என்று சொன்னோம். நாங்கள் சொன்னதை சரிபார்ப்பது உங்கள் வேலைதான். மேலும் துறைமுகப் பகுதியில் நடப்பதை என்ஜினியர்கள்தான் செய்யவேண்டும். பாக்கியிருப் பதை டெண்டர்கள் கோரி வேலை செய்ய வேண்டும். எங்களுக்குக் கிடைத்த தகவல்களை நாங்கள் சொன்னோம். அதற்கு ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று நீங்கள் சொல்லலாமா? "ஐயா, நாங்கள் டெண்டர்கள் வரவழைத்து வேலைகள் செய்கிறோம்" என்று சொல்லி விட்டால் போதும். இதற்கு ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று சொல்லலாமா ? தப்பித் தவறி நாங்கள் ஏதாவது கேட்டால், "அவரும் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்தான்" என்று சொல்கிறீர்கள். எப்பொழுதோ எங்கள் கட்சியைச் சேர்ந்தவராக இருந் திருப்பார். ஆனால் இப்பொழுது எந்தக் கட்சியைச் சேர்ந்தவரோ? (ஆளும் கட்சித் தரப்பில் சிரிப்பு) "ஐயா, தவறு நடந்திருக்கிறது" என்று நாங்கள் சொல்கிறோம். "இல்லை, சரியான முறையில்தான் நடக்கிறது" என்று பதில் சொல்லிவிட்டுப் போங்கள். நாங்கள் எங்களுக்குக் கிடைத்த தகவல்களை இந்தச் சட்டமன்றத்தில் சொல் லாமல் என்னதான் செய்வது ? எனக்கு ஒன்றும் புரியவில்லையே ! (சிரிப்பு) தயவுசெய்து ஒரு பாடமாவது சொல்லிக் கொடுங்கள். நீங்கள் எல்லாம் எதிர்க்கட்சியில் இருந்தபோது என்ன போடு போட்டீர்கள் (சிரிப்பு) "ஐயா, இப்படி நடந்திருக்கிறதே" என்று சொன்னால், உடனே, "ஆதாரம், ஆதாரம்" என்று சொன்னால் என்ன செய்வது ? உங்கள் ஃபைல்களையெல்லாம் எனக்கு அனுப்பி வையுங்கள். நான் பார்த்துச் சொல்கிறேன். நல்லதற்குத்தான் நான் சொல்கிறேன். எனக்குக் கிடைத்த தகவல்களை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனக்குச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர் களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிற வார்த்தைகளுக்கு இந்த நாட்டிலே பொறுப்பும், முக்கி யத்துவமும் கொடுக்கப்படுகிற நிலை இருப்பது நமக்குத் தெரியும். ஒரு நிலையைப்பற்றிச் சொல்லும்போது, டெண்டர் இல்லாமல் வேலை நடைபெறுகிறது என்று குற்றச்சாட்டு சொன்னார்கள். என்னிடம் கேட்டிருந்தால், அல்லது தலைமைப் பொறியாளர் அவர்களைக் கேட் டிருந்தால் விளக்கம் சொல்லியிருப்போம். எதிர்க்கட்சித் தலைவர்



அவர்கள் கூப்பிட்டால் தலைமைப் பொறியாளர் வந்து சொல்லிவிட் டிருப்பார், இவ்வளவு விளக்கத்திற்கு இடமில்லாமல் இருக்கும். குற்றச்சாட்டு உண்மையாக இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, டெண்டர் இல்லாமல் வேலை நடைபெறுகிறது என்ற குற்றச்சாட்டு சாட்டவில்லையென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட் டார்கள். அவர் நம்முடைய சர்க்காரின் மேல் உள்ள அன்பின் காரணமாகக் கேட்டிருக்கிறார்கள். வெளியே சிலர் பேசுகிறார்கள் என்று சொல்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் டெண்டர் விஷயமாக, பொறியாளரைக் கேட்டிருந்தால், அதற் கான விளக்கம் அவருக்கு மட்டும்தான் கிடைத்திருக்கும். நமக் கெல்லாம் தெரிந்திருக்காது. இந்தச் சட்டசபையில் அதைச் சொன்னால் உலகத்திற்கும் நல்ல விளக்கம் கிடைக்கும் என்ற கார ணத்தினால்தான் இந்த முறையைக் கையாண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதற்காகப் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வருத்தப்பட வேண்டாம்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர் களே, அடுத்து, எல்லா உறுப்பினர்களும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவரவர்கள் தொகுதிகளில் செய்யப்பட வேண்டிய காரியங்களைப்பற்றித்தான் அதிகமாகக் குறிப்பிட்டுச் சொன்னார் கள். பொதுவாக பேசப்பட்டது, மைசூருக்கும் தமிழ்நாட்டிற்கும் காவேரி ஆற்றுத் தண்ணீர் சம்பந்தமாகத்தான். இதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் நல்ல விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். நான் இதற்கு மேலும் விளக்கம் அளிக்கவேண்டியதில்லை. நமது முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமன்றத்தில் 13–9–1969 அன்று ஒரு விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து நம்முடைய அரசு, தமிழகத்திற்கும் மைசூர் மாநிலத் திற்கும் உள்ள பிரச்சினையில் தீவிரமான கவனத்தைச் செலுத்தி காரியம் ஆற்றிவருகிறது. நம்முடைய நிலைகளை எடுத்துக் கூறி, 1892, 1894 ஆகிய ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்த வேலைகள் நடைபெற வேண்டுமென்று நாம் வற்புறுத்தியிருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மீண்டும் டெல்லியில் வருகிற மாதம் 17-ம் தேதியன்று மைசூர் முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க இருக்கிறார்கள். நம்முடைய நிலைகளை நாம் எற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில்தான் பேச்சுவார்த்தை நடைபெறவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம்.

அடுத்து, பரம்பிக்குளம்–ஆளியாறு திட்ட வேலைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். பரம்பிக்குளம்–ஆளியாறு வேலைகள் நடைபெற நல்ல சூழ்நிலை உருவாக, கோவை

மாநில முதலமைச்சர் அவர்களுடன் தொடர்பு கொண்டு, இறுதியாக முடிவு செய்யப்படும் சூழ்நிலை உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. என். குமாரசாமி அவர்கள் பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இந்தத் திட்டம் ஏற்கெனவே 14--10--1966-ம் தேதிய ஒப்பந்த அடிப்படையில் ஹைட்ரோ எலெக்டிரிக் ஸ்கீம் உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் மிகுதியான தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்த முடியுமா என்பதைப் பரிசீலித்து வருகிறது. எஸ்டிமேட் கமிட்டியின் தலைவராக இருக்கக்கூடிய திரு. எ. வி. பி. ஆசைத்தம்பியும் இதை வற்புறுத்தி சொல்லியிருக்கிறார்கள். இதுவும் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

அடுத்து, ஆலத்துறையூர் திட்டத்தைப்பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள். திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரும், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து ஜாயிண்டாக இன்ஸ்பெக்ஷன் செய்து, பிறகு ஒரு முடிவு செய்ய வேண்டுமென்று கருத்தரங்கிலே முடிவு செய்தோம். அந்த இரு மாவட்ட கலெக்டர்கள் இருவரும் பார்வையிட்டு, அறிக்கை ஒன்று அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அனுப்பும் அறிக்கையைப் பரிசீலித்து அரசாங்கம் தக்க முடிவு எடுக்கும். உறுப்பினர்கள் பேசும்போது, " அந்த இரண்டு கலெக்டர்களும் மாற்றப்பட்டு விட்டார்கள், அறிக்கை அரசுக்கு கிடைக்குமா ? " என்றெல்லாம் ஐயப்பட பேசினார்கள். கலெக்டர்கள் மாற்றப்பட்டாலும், வருகின்ற கலெக்டர்கள் அந்தக் காரியங்களைச் செய்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சித்தார்-பட்டணங்கால் திட்டத்தைப்பற்றிப் பேசும்போது பாசனத்திற்கு எப்போது தண்ணீர் விடுவார்கள் என்று கேட்டார்கள். சென்ற ஆண்டே பருவ மழை சிறப்பாக இருந்திருந்தால் தண்ணீர் விடப்பட்டிருக்கும். அந்தத் திட்டம் முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. இவ்வாண்டு பருவ மழை சரியாக இருந்தால் 1970 ஜூன் மாதத்தில் விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்படும் என்ற நிலைமையைத் தெளிவாக்க விரும்புகிறேன்.

பாலாறு பேசின் விதிகளைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதைத் தளர்த்த வேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். 1931-ல் கொண்டுவரப்பட்ட பாலாறு பேசின் ரூல்ஸ் ஏற்கனவே 2 தடவைகள் தளர்த்தப்பட்டிருக்கின்றது. 1948 ஆம் ஆண்டிலும், 1963-லும் தளர்த்தப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு இப்போது அடிநீர் ஊற்று சம்பந்தமான ஆய்வு



பு. என். டி. பி. ஆல் செய்யப்பட்டு வருகிறது. அவர்களுடைய அறிக்கை கிடைத்த பிறகு மேலும் இந்த பாலாறு பேசின் ரூல்ஸை எப்படித் தளர்த்தலாம் என்பதுபற்றி கவனிக்கப்படும். அந்தப் பாலாறு பேசின் ரூல்ஸ்கள் என்ன என்பதை இந்த அவை தெரிந்து கொள்வது நல்லது.

In modification of the previous rules on the subject, in so far as they are applicable, direct that the grant of permission for sinking of wells or installation of pumpsets in the Palar Basin be governed by the following conditions :—

(1) Sinking of new wells or installation of pumpsets within two furlongs of the spring heads and one furlong of the spring channels taking off from the Palar River or from any of its tributaries in the Palar Basin will be strictly prohibited.

(2) If there are any wells in infiltration galleries, etc., sunk in the bed of the Palar River or its tributaries for supply of drinking water to any local body, or, if such scheme is proposed or is under investigation, sinking of wells or tube wells, with or without installation of pumpsets, will be prohibited within a distance of 2,000 feet of such well, infiltration gallery, etc.

(3) The spring channel should be deemed to end at the point at which distributions starts.

(4) In the ayacut of the concerned spring channel itself, there will be no restriction on the sinking of wells and the installation of pumpsets to stabilise the ayacut.

(5) There will be no restriction regarding the crops grown under wells in the Palar Basin.

(6) No well in the Palar Basin shall be allowed to have pumps of more than 5 horse power capacity.

என்ற இந்த விதிமுறைகளை எல்லாம் எப்படித் தளர்த்தலாம் என்பதுபற்றி பரிசீலிக்க யு. என். டி. பி. ரிப்போர்ட்டுக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறோம். அது வந்த பிறகு நல்ல முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் இங்கே பேசிய உறுப்பினர்கள் வொர்க் சார்ஜ்ட் எஸ்டாபிளிஷ்மெண்டு ஊழியர்களைப் பற்றிச் சொன்னார்கள். இன்னும் ஓவர்சியர்கள், என்ஜினியர்கள் ஊதியப் பிரச்சினை பற்றியும் பேசப்பட்டது.

வொர்க் சார்ஜ்ட் எஸ்டாபிளிஷ்மெண்டு தொழிலாளர்கள் ஒரு திட்டத்தை எடுத்துக் கொள்கிறபோது தற்காலிகமாக நியமிக்கப்படுவார்கள். திட்ட வேலை முடிவடைந்தவுடன் அவர்களும் வேலையில் இருந்து நீக்கப்படுவார்கள். அவர்கள் இன்றையதினம் குறிப்பாக 14 கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய ஊதியப் பிரச்சினையைப் பொறுத்தவரை பே கமி

ஷனுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மற்ற அவர்களது 14 கோரிக்கைகள் என்ன என்பதையும் இந்த அவைக்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன் :—

Conversion of work-charged establishment into regular service.

Temporary workers to be paid on a par with permanent workers.

Implementation of the Employees Provident Fund Act.

Implementation of interim relief recommended by the Wage Board.

Fixing of grades of workers according to actual nature of work.

Grant of washing allowance.

Refund of special contribution towards contributory provident fund recovered for forty-one months during the national emergency.

Formulation of a grievance procedure.

Revision of Industrial Employees Act in consultation with the representatives of the union.

Abolition of old rules regarding promotion and to provide promotional opportunities for those who have put in satisfactory service of three years.

Payment of two months bonus treating these workers as industrial workers.

Provision of housing facilities and the enhancement of house rent allowance for those who have not been provided with houses and recovery of house rent allowance only from those who have been provided with houses.

Revision of pay according to Pay Commission's recommendations and giving effect to pay revision.

Abolition of Employees State Insurance Scheme.

Payment of daily allowance for out-door duty at rupees three per day.

Continuity of service for contract labour.

Restoration of fifteen days casual leave by giving three optional holidays.

All these concessions should be extended to the workers of even the Soil Mechanics and Research Division at Poondi.

Cycle advance to workers.

Higher pay for turners, painters, etc.

Protection of pay for workers taken over from contract system of wages.

இந்தக் கோரிக்கைகள் எல்லாமும் பே கமிஷனுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.



திரு. ஹாண்டே அவர்கள் பேசும்போது 300 சூப்பர்வைசர்கள் வேலை இழக்க நேரிடப்போகிறது என்று குறிப்பிட்டார்கள். பொதுவாக இந்த சூப்பர்வைசர்கள் சர்வீஸ் கமிஷன் மூலமாகவே தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள். உடனடியாக வேலையை எடுத்துக்கொள்கிறபோது எமர்ஜென்சி ப்ரொவிஷன் கீழ் இவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். என்றாலும் இவர்கள் சர்வீஸ் கமிஷன் தேர்வில் வெற்றி பெற்று ரெகுலரைஸ் செய்யப்பட வேண்டும். சிலர் அப்படிச் செய்துகொண்டிருக்கிறார்கள். சிலர் சர்வீஸ் கமிஷன் போயும்கூட அங்கே தேர்ந்தெடுக்கப்படவில்லை. இந்த 300 பேர்களைப் பொறுத்தவரை ஸ்பெஷல் ரெக்ரூட்மெண்டின் கீழ் சர்வீஸ் கமிஷன் தேர்வு நடத்தி இவர்களை ரெகுலரைஸ் செய்ய இருக்கிறது. ஆகவே இவர்களை வேலை நீக்கம் செய்யவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சோலையாறு திட்டத்தின் கீழ் பணிபுரிகின்ற ஊழியர்களைப் பற்றி திரு. இராமசாமி அவர்களும், திரு. பூபதி அவர்களும் சொன்னார்கள். ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் அவர்கள் வொர்க் சார்ஜ்ட் எஸ்டாபிளிஷ்மெண்டின் கீழ் வரக்கூடியவர்கள். அந்தத் திட்டம் முடிந்த பிறகு அவர்களுக்கு மாற்று வேலை அளிப்பது பற்றித்தான் அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. இப்போதுள்ள நிலைமையில் அவர்கள் வேலையில் இருந்து நீக்கப்படுவதற்கு இடமில்லை. ஆயினும் மாதத்திற்கு ஒரு கோரிக்கை வைத்து வேலை நிறுத்தம் என்று செய்வது சரியல்ல. அவர்களை நானே நேரில் சந்தித்து இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவிற்குள்ளாக ஓர் அறிவிப்பு செய்யப்படும் என்று சொல்லி வந்தேன். வந்து 2 நாளைக்குள் உண்ணாவிரதம் என்று ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு அந்த உரிமை இல்லை என்று சொல்லவில்லை. இந்த மிரட்டல்களுக்கு அரசு பணிவது என்றால் காரியங்கள் நடக்க முடியாது. எப்படியும் அவர்களுக்கு வேறு வேலை கொடுக்கும் திட்டம் இருக்கிறது. சீனியாரிட்டி அடிப்படையில் வேலை கொடுக்கப்பட்டும் வருகிறது.

அடுத்து திரு. மணி அவர்கள் சேத்துப்பாறை அணைக்கட்டுத் திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா அவர்கள் இந்த கன்கரன்சுக்குப்போய் வருவதில் ஏற்படும் தாமதம் பற்றி சற்று காரமாகவே குறிப்பிட்டார்கள். அவர் சொல்வது உண்மைதான். மதுரை மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரை கன்கரன்சுக்காகப் போய் வருவதில் அதிகமான தாமதம் ஏற்பட்டிருப்பதை நானே பார்த்தேன். அதுபற்றி மாவட்ட ஆட்சியாளர்களிடமும் சொல்லப்பட்டிருக்கிறது. ஓரிரு மாதங்களுக்குள் விரைவுபடுத்த வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. போர்டு மெம்பரும் தக்க

நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இனி காலதாமதமின்றி சீக்கிரமே நிறைவேற்றுவதற்கான நிலைமை உருவாக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் அரசூர் கிராமத்தில் கொள்ளிடம் ஆற்றில் பம்பு வைக்க பொதுப்பணித்துறை அனுமதிக்கிறது என்றும், ரெவின்யூ இலாக்காதான் அதைத் தடைசெய்து வருவதாகவும் குறிப்பிட்டார்கள். லோயர் அணைக்கட்டுப் பகுதியில் பம்பு வைத்துக்கொள்வதற்கு எந்தவிதமான பாதகமும் இல்லாத நிலைமையில் அனுமதி கொடுக்கக்கூடிய உத்தரவுகளை அரசாங்கம் பிறப்பிக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பம்பு ஸ்கீம் முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே 9 திட்டங்கள் 9,970 ஏக்கராவுக்கு வேலை முடிந்திருக்கிறது. இன்னும் 9 திட்டங்கள் 5,850 ஏக்கராவுக்கான வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் 36 திட்டங்கள் இப்போது பரிசீலனையில் இருந்து வருகின்றன. இது பன்னிரண்டாயிரம் ஏக்கராவுக்குப் பயன்படும். ஓர்க் சார்ஜ்டு எஸ்டாபிளிஷ்மெண்டைப் பற்றியும் சூப்பர்வைசர்களைப்பற்றியும் நான் முன்பு குறிப்பிட்டபொழுது எஞ்சினியர்களைப்பற்றிக் குறிப்பிடத் தவறிவிட்டேன். அதைப் பொறுத்தவரையில் பே கமிஷனுக்கு ரெஃபர் செய்திருக்கிற காரணத்தினாலே அது முடிவு செய்தபிறகு அவர்களுக்கும் நல்ல முடிவு ஏற்படும் என்று நம்புகிறேன்.

சேலம் மாவட்டத்தில் உள்ள தோப்பையாறுத் திட்டம்பற்றிச் சொன்னார்கள். அதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று தலைமைப் பொறியாளருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் தலைமைப் பொறியாளர் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

குறிப்பாக இங்கே பேசப்பட்டதிலே தமிழ்நாட்டிலே எல்லா மாவட்டங்களிலும் பான்ட் ஸ்கீம் விரிவுபடுத்தப்படவேண்டுமென்று சொல்லப்பட்டது. சென்னையிலே நடைபெற்ற எம்.எல்.ஏ.-க்கள் கருத்தரங்கிற்குப் பிறகு தஞ்சை மாவட்டத்தைத் தவிர தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களுக்கும் பான்ட் ஸ்கீம் ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதை நிறைவேற்றுவதற்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரையில் சிறிய பாசனம் என்றால் 15 லட்சம் ரூபாய்தான் என்று அளவு வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது 25 லட்சம் ரூபாய் என்ற அளவிற்கு அதை உயர்த்தி சிறிய பாசனத் திட்டங்கள் என்று கொண்டுவரப்பட இருக்கின்றன. இதற்கு எந்த அடிப்படை, அதாவது யார்ட்ஸ்டிக் என்று சொல்வார்களே அதை பரிசீலனை செய்யவேண்டுமென்ற முறையில் அதை ரிவைஸ் செய்வதற்கு யோசித்துக் கொண்டிருக்கிறோம். ஒரு வாரம், பத்து நாட்



களுக்குள் உத்திரவு பிறப்பிக்கப்பட்டவுடன் இப்பொழுது அன் எக்கனமிக் ஸ்கீம் என்று சொல்லப்படுகிறவை எக்கனமிக் ஸ்கீமாக மாறிவிடக்கூடிய நிலைமை ஏற்படும்.

திரு. நல்லசாமி அவர்கள் பேசும்பொழுது வாட்டர் மேனேஜ்மெண்ட் அண்ட் டிஸ்ட்ரிபியூஷன்பற்றிச் சொன்னார்கள். தண்ணீரைப் பகிர்ந்து கொடுக்கின்ற அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் இருந்தால் நல்லது என்று சொன்னார்கள். நான் ஒப்புக் கொள்கிறேன். இப்பொழுதே மாவட்ட ஆட்சித் தலைவரும் பொறியாளரும் கலந்து பேசித்தான் எந்தக் காலத்தில் எவ்வளவு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன, அதன்படி செய்கிறார்கள். ஆனால் அந்த விதிமுறைகளை மீறி சில சமயங்களில் ஸ்பெஷலாக ரிலீஸ் செய்வதற்கு உள்ள அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கொடுப்பதா என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். தவிர்க்க முடியாத நிலைமையில் ஸ்பெஷல் ரிலீஸ் செய்வதற்குத்தான் அப்படி வைத்திருக்கிறோம். திரு. நல்லசாமி அவர்கள் காலையிலே கேட்டார்கள். மாலையிலே உத்திரவு கொடுத்துவிட்டோம். எனவே இதிலே பிரச்னை இருப்பதாகத் தெரியவில்லை.

திருச்சி மாவட்டத்திலே கொல்லிமலைத் திட்டம் பற்றிச் சொல்லப்பட்டது. மாண்புமிகு அழகமுத்து அவர்களுடைய தொகுதியில் கொட்டையூர், குப்பம்பட்டி, முருங்கப்பட்டி ஆகிய வேலைகள் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலைபற்றியும் நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டம் 14 கோடி ரூபாய்த் திட்டமாகும். ஆறு கோடி ரூபாய்த் திட்டத்தை முதலிலே வற்புறுத்தி மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறோம், உத்திரவு வரும் என்று எதிர்பார்க்கிறோம். அதோடு பாம்பன் ரோடு பிரிட்ஜ் வேலைக்காகவும் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி வருகிறோம்.

பல உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். பஞ்சாயத்து ரோடுகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும், பஸ் செல்கிற ரோடுகளை எல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று. நான் போக்குவரத்துத்துறை மானியத்தின்போது இதுபற்றிக் குறிப்பிட்டேன். தலைமைப் பொறியாளர் அவர்களிடம் இதுபற்றி குறிப்புக் கேட்டேன். அவர்கள் குறிப்புத் தந்தார்கள். தமிழ்நாட்டிலே உள்ள பஸ் போகின்ற ரோடுகளை மேம்படுத்துவதற்கு வேண்டிய தொகை 100 கோடி என்று சொன்னால் இப்பொழுது ஒதுக்குவது என்பது சாத்தியமல்ல. சிறுகச் சிறுக அது நிறைவேற்றப்படும். பஞ்சாயத்து ரோடுகளை இப்பொழுது 300 மைல் ரோடுகளை எடுத்து வருகிறோம். உறுப்பினர்கள் இந்த ரோடு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும், அந்த ரோடு எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று எல்லாம் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1970 மார்ச் 25

உறுப்பினர்கள் பஞ்சாயத்து யூனியன் கன்சல்டேடிவ் கமிட்டிக்கு வரும்பொழுது அங்கே அவர்கள் சொல்கிறார்கள், எம்.எல்.ஏ.-க்கள் சொல்வதற்காக எடுத்துக் கொள்ளாதீர்கள், டி.டி.சி.-யிலே அதற்காக பிரையாரிடி கொடுத்திருக்கிறோம், அந்த அடிப்படையிலேதான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் பஞ்சாயத்து யூனியன் ரோடுகளை அதிகமாக எடுத்து வருகிறோம்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது பொதுப்பணித் துறைக்கும் மருத்துவ மனையில் பணியாற்றுகின்றவர்களுக்கும் கோ ஆர்டினேஷன் இல்லை என்று சொன்னார்கள். பொதுப்பணித் துறை, கட்டடத் துறை அதிகமாக மருத்துவத் துறை, கல்வித் துறை ஆகிய இரண்டு துறைகளுக்கான கட்டடங்களை அதிகமாகக் கட்டிக்கொண்டிருக்கின்ற நிலைமை ஏற்படுகிறது. தாமதப்படுத்தக் கூடாது என்பதற்காகத்தான் மாதத்திற்கு இரண்டு முறைகள் தலைமைப் பொறியாளர் அவர்களும் கல்வித் துறைச் செயலாளர் அவர்களும் மருத்துவத் துறைச் செயலாளர் அவர்களும் பொதுப்பணித்துறைச் செயலாளர் அவர்களும் கூடிப்பேசி காலதாமதத்திற்கு இடம் இல்லாமல் வேலைகள் நடக்கின்றன.

சேதுசமுத்திரத் திட்டம்பற்றிச் சொன்னார்கள் முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்றபொழுது தேசிய வளர்ச்சிக் கழகத்திலே இதைப்பற்றி வலியுறுத்தி இருக்கிறார்கள். அதற்கான நல்ல நிலைமை இருக்கிறது.

வட ஆற்காடு மாவட்டத்திலே செங்கம் பாலம் பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருந்துகொண்டு வருகிறது என்று சொன்னார்கள். 1969–70-ம் ஆண்டு திட்டத்திலே இதைச் சேர்க்க வேண்டுமென்றும் சென்ட்ரல் ரோடு பண்டிலே இதைச் சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு ஏற்கெனவே எழுதியிருக்கிறோம். அனுமதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அனுமதி பெற்றபிறகு எடுத்துக்கொள்ளலாம்.

ஜம்பு நதித் திட்டம்பற்றிச் சொன்னார்கள். அது தாமிரவருணி நதியின் கிளை நதியாக இருக்கிறது. அதற்காக 46 லட்சம் ரூபாய் திட்டம் இருக்கிறது. அதற்கான டீடெய்ல்டு இன்வெஸ்டிகேஷன் செய்யப்பட்டு வருகிறது. அது பரிசீலிக்கப்பட்டப் பிற்கு முடிவு செய்யலாம்.

மாண்புமிகு உறுப்பினர் ராஜாங்கம் அவர்கள் பேசும்பொழுது பெரியாறு டாமுக்கு சப்போர்ட் டாம் கட்டவேண்டுமென்று சொன்னார்கள். எதற்காக சப்போர்ட் என்பது தெரியவில்லை, என்ன ஆபத்து என்பது தெரியவில்லை. எந்தவிதமான ஆபத்தும் இல்லை. சட்டமன்றத்திலே பெரியாறு டாமுக்கு ஆபத்து என்று பேசிவிட்டால் விவசாயிகள் உண்மையிலேயே ஆபத்து என்று நினைத்துக் கொள்வார்கள். ஒரு ஆபத்தும் இல்லை. நம்முடைய



1970 மார்ச் 25] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

மாநில பொறியாளர் அவர்களும், கேரள மாநிலப் பொறியாளர் அவர்களும் சில நாட்களுக்கு முன்னால் அங்கே சென்று பார்த்து இருக்கிறார்கள். ஆகவே, எந்தவிதமான ஆபத்தும் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியாறு இம்ப்ரூவ்மெண்ட் ஸ்கீம் பற்றிச் சொன்னார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று சொல்லி அது சென்ட்ரல் வாட்டர் அன்ட் பவர் கமிஷன் அனுமதிக்குப் போய் இருக்கிறது. அனுமதி கிடைத்த பிறகு கவனிக்கலாம் என்று நினைக்கிறேன்.

திரு. ராஜாங்கம் அவர்கள் வறட்டாற்றின் குறுக்கே அணை கட்டவேண்டுமென்று சொன்னார்கள். ஆறு வறட்டாறு என்றாலும் ஒரு நல்ல திட்டம் இருக்கிறது. 4.9 லட்ச ரூபாய் அனுமதி கேட்டு மாவட்ட ஆட்சித் துறையின் அனுமதிக்காக அது காத்திருக்கிறது. அனுமதி கிடைத்தவுடன் துவங்கப்படும்.

திரு. நல்லசாமி அவர்கள் பேசும்பொழுது அமராவதி வாய்க்கால்பற்றிச் சொன்னார்கள். 23 வாய்க்கால்களில் 19 வாய்க்கால்களுக்கு ரீமாடலிங்குக்காக 23 லட்ச ரூபாய்க்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் நான்கு வாய்க்கால்கள் பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கிறது. தண்ணீர் விநியோகத்திற்காக கரூர் தாலுகாவிற்கு அமராவதி வாட்டரை ரெகுலேஷன் செய்வதற்காக திருச்சியில் நடைபெற்ற கருத்தரங்கிலே ஜூனியர் எஞ்சினியர் போடவேண்டுமென்று சொல்லப்பட்டு இப்பொழுது ஜூனியர் எஞ்சினியர் பணி புரிந்து வருகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சுப்பராஜா அவர்கள் மத்திய அரசாங்க அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்கள் கங்கையையும் காவிரியையும் இணைக்கும் திட்டத்தைத் தெரிவித்திருக்கிறார்கள், நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று கேட்டார்கள். அவர்கள் தெரிவித்தார்கள், பத்திரிகையிலே. தனிப்பட்டு பேசும்பொழுது அவர்கள் சொன்னார்கள். இது பெரிய திட்டம் கங்கையையும் காவிரியையும் இணைக்கும் திட்டம் நல்ல திட்டம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அவர்களே 'This will come in the next century' என்றும் சொன்னார்கள். கனவு காண்பது நல்லதுதான். கனவு நினைவாக வேண்டு மென்றுதான் நாமும் விரும்புகிறோம். அரசாங்கத்திலிருந்து தகவல் வந்தபிறகு முடிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைபாண்டியன் அவர்கள் பச்சையாறு ரிசர்வாயர் பற்றிச் சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் துரைபாண்டியன் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒன்றுமே செய்யவில்லை என்றார்கள். பச்சையாறு ரிசர்வாயர் ஸ்கீமை 149 லட்சம் ரூபாயில் நிறைவேற்று

வதற்காக தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து கொள்ளுகிறேன்.

பொதுப்பணித் துறை பொறுத்தவரை நீர்ப்பாசனத் துறை சம்பந்தமாகத்தான் அதிகமாக விவாதம் செய்யப்பட்டது. ரோடுகளைப் பொறுத்தவரை நல்ல வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். காலையிலே குறிப்பிட்டது போல் சில முக்கியமான பாதைகளை இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள இருக்கிறோம். தொடர்ந்து இதிலே கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கட்டடப் பிரிவிலே நல்ல வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. ஆய்வுரைகளிலே அதற்கான விளக்கங்கள் எல்லாம் தரப்பட்டிருக்கின்றன. நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தால் அந்த விவரங்களை எல்லாம் சொல்ல விரும்பவில்லை. இந்த மானியங்களிலே பேசிய உறுப்பினர்களின் கருத்துக்களை எல்லாம் குறித்து வைத்திருக்கிறேன். எல்லா உறுப்பினர்களுக்கும் தனித் தனியாக பெயரைச் சொல்லி பதில் சொல்லாவிட்டாலும் எல்லா உறுப்பினர்களும் கூறிய கருத்துக்கள் அனைத்தும் கவனத்தில் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறி, அக்கறை எடுத்து பல கருத்துக்களைக் கூறி உறுப்பினர்களுக்கு நன்றி கூறி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நாளை கூவத்தின் காட்சிகளைக் காண வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வெட்டுப் பிரேரணைகளை வாபஸ் வாங்கிக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இப்பொழுது நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : ஒரே ஒரு விளக்கம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன். அவர்கள் வேட்டைக்காரன் புதூர் ஸோன் பற்றிச் சொன்னார்கள். வேட்டைக்காரன் புதூரில் 'ஏ' ஸோன், 'பி' ஸோன் என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே இருந்த விதிமுறைப்படி 'ஏ' ஸோனுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்றும், அது தவறிவிட்டால் அந்த ஸோனுக்குத் தண்ணீர் இல்லை என்றும் இருந்தது. நாம் செய்திருக்கும் மாற்றம் ஜுன் மாதத்தில் 'ஏ' ஸோனுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும். ஜுன் மாதத்தில் கொடுக்காவிட்டால் அடுத்த தடவை தண்ணீர் வரும்போது 'ஏ' ஸோனுக்குக் கொடுக்க வேண்டுமென்று செய்திருக்கிறோம். இதற்கு ஆட்சேபணை செய்தார்கள்; ஹைகோர்ட் வரை போனார்கள். பாரபட்சம் என்று சொன்னார்கள்; பொதுப்பணித் துறை அமைச்சர் அந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு நண்பர் என்று சொன்னார்கள். நண்பர் என்ற காரணத்தால் தண்ணீர்விட முடியாது. விதிமுறைகள் இருக்கின்றன. ஹைகோர்ட்டிலும் தள்ளப்பட்டு விட்டது. அதிலே எந்தத் தவறும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





**திரு. பி. ஜி. கருத்திருமன்** : அதை இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஜுன் மாதத்தில் 'ஏ' பகுதிக்கும், செப்டம்பர் மாதத்தில் 'பி' பகுதிக்கும் தண்ணீர் கொடுப்பதாகத் திட்டம். 'ஏ' பகுதிக்கு ஜுன் மாதம் கொடுத்த பிறகும் மீண்டும் செப்டம்பர் மாதம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் புகார். முதலிலே கொடுக்காமல் பின்னால் கொடுத்தால் ஆட்சேபணை இல்லை. அப்படித்தான் பதிலை வி. கே. பழனிசாமிக் கவுண்டர் எழுதியிருக்கிறார். அதைப்பற்றி மீண்டும் விசாரிக்க வேண்டும். ஜுன் மாதத்தில் கொடுத்த பகுதிக்கே மறுபடியும் செப்டம்பர் மாதத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று விசாரித்து தவறு இருந்தால் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : கொடுத்தவர்களுக்கே மறுபடியும் கொடுக்கவில்லை. ஜுன் மாதத்தில் தண்ணீர் இல்லை, ஆகவே கொடுக்கவில்லை. அப்படிக் கொடுக்காத காரணத்தால் அடுத்து தண்ணீர் வருகிறபோது அவர்களுக்குக் கொடுக்காது இருக்கக்கூடாது, கொடுக்க வேண்டுமென்று மாற்றி கொடுத்திருக்கிறோம். முதலிலேயே கொடுக்காததால்தான் பிறகு கொடுக்கப்பட்டது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : நாங்கள் போய் விசாரித்ததில் நான் கூறிய நிலைமைதான் தெரியவந்தது. சீப் என்ஜினியர் அங்கே போய் விசாரித்தால் நல்லது. கொடுக்காத இடத்திற்குக் கொடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கையும். தண்ணீர் கொடுக்கவில்லை என்றால் அந்தப் பகுதிக்கு கொடுக்க வேண்டுமென்று ஜி.ஓ. போட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஜி.ஓ.-படி வழக்கை ஹைகோர்ட்டில் தள்ளி விட்டார்கள். ஆனால் நடைமுறையில் முதலில் கொடுக்கப்பட்டு மீண்டும் கொடுக்கப்பட்டதா என்பதை விசாரிக்க வேண்டும்.

திரு. இல. பலராமன், திரு. சோ. அழகர்சாமி ஆகியவர்களால் கோரிக்கை எண் 26-க்கு கொடுக்கப்பட்டிருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**திரு. என். வரதராஜன்** : தலைவர் அவர்களே, குடகனாறு அணை என்பது நீண்ட நாள் பிரச்சினை. அது என்ன நிலையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் ஒரு வார்த்தை சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குடகனாறு திட்ட பகுதிகளில் ஏராளமாக எஸ்.எம்.ஐ.பி. ஸ்கீம்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். குடகனாறு திட்டத்திற்கு அதிகமாகச் செலவாகும் என்பதால் இப்போது அதை நிறைவேற்றக்கூடிய நிலையில் இல்லை.

திரு. என். வரதராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டது.

திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. கோதண்டராமையா ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. கே. பி. எஸ். மணி, திரு. கே. என். குமாரசாமி ஆகியவர்கள் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாக கருதப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

“ நிதிக் கோரிக்கை என் 26—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,38,27,800-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ”.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரியத் தொகை வழங்கப்பட்டது.

திரு. ஆ. கு. சுப்பையா, திரு. ஏ. அ. சுப்பராஜா ஆகியவர்களால் கோரிக்கை என் 27-க்கு கொடுக்கப்பட்டிருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திருமதி கே. பி. ஜானகியம்மாள், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியவர்கள் அவர்களுடைய இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

“ நிதிக் கோரிக்கை என் 27—பொதுப்பணிகள்—பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,22,15,400-க்கு மேற்படாதத் தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ”.



நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மானியக் கோரிக்கை என் 28-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு. ஏ.அ. சுப்பராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. சி. கோவிந்தராஜன், திரு. ஆர். கருப்பையா, டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியவர்கள் அவர்களுடைய இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

“ நிதிக் கோரிக்கை என் 28—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,37,25,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ”.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மானியக் கோரிக்கை என் 41-க்கு கொடுக்கப்பட்டிருந்த திரு. என். எஸ். வி. சித்தன், திரு. சோ. அழகர்சாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. கே. என். குமாரசாமி, திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியவர்கள் அவர்களுடைய இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டனவாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

“ நிதிக் கோரிக்கை என் 41—பாசன மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,53,02,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ”.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. ஆர். கருப்பையா அவர்களும், திரு. எம். பூபதி அவர்கள் தங்கள் இருப்பிடத்தில் இல்லாததால் கோரிக்கை என் 42-க்கு கொடுக்கப்பட்டிருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

" நிதிக் கோரிக்கை எண் 42—பொதுப் பணிகள் மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,99,95,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் நாளைக் காலை 9-00 மணி அளவில் பேரவை கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## (5) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

170. Notification issued with G.O. Ms. No. 2177 Local Administration, dated the 7th November 1969 in regard to preliminary notification for the Constitution of a Municipality with the name of Virudhachalam in South Arcot District. [Laid on the Table of the House under Section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

171. Notification issued with Rc. No. 173361/68-E3, dated the 4th May 1969 in regard to extension of certain provisions of Tamil Nadu District Municipalities Act, 1920 to the entire area of Ayyalur Town Panchayat, Madurai District. [Laid on the Table of the House under Section 179 (4) of the Tamil Nadu Panchayates Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

### *B. Reports, Notifications and Other papers.*

@ 96. A Review on the Progress made by the Forest Department (Tamil).

@ 97. A Note on the Tamil Nadu Cinchona Department (Tamil).

@ 98. Speech by the Hon. Minister for Religious Endowments on Demand No. 9-A—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. (English and Tamil).

---

@ Despatched to Members on 23—3—1970.





## இணைப்பு I

[519-ம் பக்கத்தில் 539-ஆம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க].

அனைத்து நாடுகளின் வளர்ச்சிக்கான அமெரிக்க ஐக்கிய நாடுகள் உதவி நிறுவனம் (USAID) தமிழ் நாட்டில் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத் திட்டம்.

1. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்திய அரசு செய்கிற முயற்சிகளுக்கு உதவும் பொருட்டு, இந்திய அரசின் உணவு, வேளாண்மை, சமுதாய நல வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சகத்திற்கும் அனைத்து நாடுகள் வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனத்துக்கும் இடையில் கூட்டாக தொழில் நுட்ப உதவித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது.

2. ஆராய்ச்சி வசதிகள் உட்பட வேளாண்மைத்துறைகளின் ஆளுகையின் கீழ் உள்ள ஆதாரங்கள் அனைத்தையும் ஒருங்கு திரட்டுவதில் அவற்றிற்கு உதவும் பொருட்டு, தெரிந்தெடுக்கப்பட்ட மாநிலங்களுக்கு வேளாண்மையியல் விஞ்ஞானிகள் குழு ஒன்றை அனுப்பும்படி இந்திய அரசு அனைத்து நாடுகள் வளர்ச்சிக்கான அமெரிக்க ஐக்கிய நாடுகள் உதவி நிறுவனத்தை வேண்டிக் கொண்டுள்ளது.

3. வேளாண்மை உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம் தமிழ் நாட்டில் 1967-ல் இந்தியாவில் உள்ள அனைத்து நாடுகள் வளர்ச்சிக்கான அமெரிக்க ஐக்கிய நாடுகள் உதவி நிறுவனத்தால் துவக்கப்பட்டது. வளர்ச்சிப் பணியாளர்களுக்குத் தொழில் நுட்ப உதவியை அளிப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான திறமையையும் அறிவையும் அவர்கள் பெறுவதற்கேற்ற வசதிகள் இத்திட்டத்தின் கீழ்ச் செய்து கொடுக்கப்படும், இதில் குறிப்பாக மிகு பயன்தரும் தானிய வகைகளைப் பயிரிடுவது வலியுறுத்தப்படும். இத் திட்டத்தின் கீழ் வளர்ச்சிப் பணிகள், வேளாண்மை, பொருளாதார, கருவிகள் இயந்திர சாதனைகள், மண்வள நீர்ப்பயன் நிர்வாகம், பயிர்ப் பாதுகாப்பு ஆகியவை குறித்து அமெரிக்க வல்லுநர்களின் பணிகள் வேளாண்மைத் துறைக்குக் கிடைக்குமாறு செய்யப்பட்டது. இந்த வல்லுநர்கள், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, செங்கற்பட்டு மாவட்டங்களில் ஐ.ஆர். 8 நெல் வகையையும் கலப்பு ரக மக்காச் சோளத்தையும் பயிரிடுவது குறித்து பல கட்புல விளக்கங்களைச் செய்தனர். பயிற்சித் திட்டங்களின்போது அவர்களது பணி பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

4. 1–7–1968 முதல் 30–9–1969 முடிய 435 கட்புல விளக்கங்களும் கூட்டங்களும் நடத்தப்பட்டன. அதன் மூலம் கோயம்புத்தூர், வட ஆற்காடு மாவட்டங்களில் மொத்தம் 16,342 உழவர்கள் பயன் பெற்றனர்.

[1970 மார்ச் 25

5. அனைத்து நாடுகள் வளர்ச்சிக்கான அமெரிக்க ஐக்கிய நாடுகள் உதவி நிறுவனம், வேளாண்மைத்துறை அலுவலர்களுக்கு பட்டமில்லாத பயிற்சி பெறுவதை Non-Degree Training அமெரிக்காவில் அளிக்கிறது. இத் திட்டத்தின் கீழ் வேளாண்மை உற்பத்தித் தொடர்பான துறைகளில் அமெரிக்காவில் பயிற்சி பெறுவதற்காக, ஒவ்வொராண்டும் சில அதிகாரிகள் அனுப்பப்படுகின்றனர். மேலும் உயர்நிலை அதிகாரி ஒருவர் மூன்று திங்கள் காலம் நேரில் கண்டறியும் சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் வேளாண்மைத் துறை அரசுச் செயலாளர் செல்வி அன்னா ஆர். ஜார்ஜ் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டார். இந்த ஆண்டில் வேளாண்மைத்துறை இயக்குநர் திரு. என். ஹரிபாஸ்கரை அனுப்புவது குறித்துப் பரிசீலிக்குமாறு இந்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது; இது குறித்து இந்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

USAID Agricultural Production Promotion Programme in Tamil Nadu.

1. In order to assist the Government of India's effort to increase agricultural production, a technical assistance project plan has been jointly developed between the Government of India, Ministry of Food, Agriculture, Community Development and Co-operation and the United States Agency for International Development.

2. The United States Agency for International Development is requested by the Government of India to provide a team of agricultural scientists to select States to assist their Agricultural Departments in mobilising the resources at their command, including the research facilities.

3. In Tamil Nadu, the Agricultural Production Promotion Programme was initiated in 1967 with the co-operation of the United States Agency for International Development Mission in India. This programme is intended to provide technical assistance and training facilities to the extension workers in order to equip them with the required skill and knowledge in their efforts to increase agricultural production in the State, particularly through the cultivation of the High Yielding Varieties. Under the programme, the services of United States Experts on Extension, Agronomy, Implements and Machinery, Soil and Water Use Management and Plant Protection have been made available to the Department of Agriculture. These experts have conducted several demonstrations in Coimbatore, Madurai, Tirunelveli and Chingleput districts in raising I.R. 8 paddy and hybrid maize, with improved package of practices. Their services have been utilised for training programmes also.



1970 மார்ச் 25]

4. During the period from July 1st, 1968 to September 30, 1969, 435 demonstrations and meetings were held, benefiting 16,342 farmers in the districts of Coimbatore and North Arcot.

5. The United States Agency for International Development affords facilities for non-degree training in U.S.A. to the Agricultural Department officials. Under this programme, every year, some officers are deputed to this training in U.S.A. in fields relating to Agricultural Production. Besides, there is also provision for one high-level officer's observation tour of 3 months' duration. Last year, Selvi Anna R. George, Secretary to Government, Agriculture Department, was deputed to U.S.A. under this programme. This year Thiru N. Hari Bhaskar, Director of Agriculture has been recommended to the Government of India for consideration for the above training and the decision of Government of India is awaited.

## இணைப்பு II

[531-ம் பக்கத்தில் உள்ள குறிப்புரையைக் காண்க.]

[பாசன மானியக் கோரிக்கைகள் 1970-71—26-ம், 41-ம்.]

கடந்த ஆண்டில் இருந்து வந்த இம்மாநிலம் கண்டிராத அளவிற்கு வறட்சி நிலை நாட்டில் உருவான இயற்கைப் பேரிடரின் காரணமாக இம்மாநில மக்களுக்குப் பாசனத்துறையில் நிலையான நலன்களை நிர்மாணிப்பதற்குப் பயன்படுத்திக் கொண்டோம். ஏராளப் பணி முழுவதும் முடிக்கப்பட்டு, 1969, ஜனவரித் திங்களில் செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களில் முதலில் தொடங்கப்பட்ட வறட்சி நிவாரணப் பணிகள், வறட்சி நிலை கடுமையானதும் நிலைமை மோசமாயிருந்த தமிழ் நாட்டின் ஏனைய எல்லா மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டன. சிறப்புப் பாசன வாய்க்கால்களின் கீழ் பொதுப் பணித் துறையின் உள்ளூர் அலுவலர்கள் பணிகளை நிறைவேற்றுவதற்கு ரூ. 198.02 லட்சம் ஒதுக்கப்பட்டது; அப்பு ஆண்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வறட்சி நிவாரணப் பணித் திட்டத்தின் கீழ் இப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. இந்த நிதி ஒதுக்கத்தை முழுவதும் பயன்படுத்தி 1970 ஜனவரி இறுதி வரையில் 2,388 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

4. புழலேரி, சோழவரம் ஏரி ஆகியவற்றின் நீர் வரத்துப் பகுதிகளில், 1968-ல் வடகிழக்குப் பருவமழை குறைந்த காரணத்தால் போதிய நீரின்றி சென்னைமாநகரில் 1969 மார்ச் முதல் அக்டோபர் வரையில் குடிநீர்ப் பற்றாக்குறை கடுமையாக நிலவியதை இப்பேரவை உறுப்பினர்கள் அறிவர். இந்த நெருக்கடியைப் போக்க, பஞ்செட்டி, தாமரைப்பாக்கம் பகுதிகளில், நிலநீர் வாயில்களைப் பயன்படுத்தி, புழலேரியின் பற்றாக்குறையைத் தணிக்க முயற்சி எடுக்கப்பட்டது; சென்னை நகரின் இப்பகுதியின் நீர்த்தேவை முழுவதும் நிலநீர் வாயில்கள் மூலம் மட்டுமே சரி செய்யப்பட்டது.

இப் பகுதிகளில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் துளையிடப்பட்ட சோதனைத் துளைகள், நீர் உற்பத்திக் கிணறுகளாக மாற்றப்பட்டன ; இவற்றிலிருந்து பொதுப்பணித்துறையின் நில நீர்ப் பிரிவால் அவசர காலத்திற்கு அமைக்கப்பட்ட குழாய்கள் மூலம் புழலேரிக்கு விசையேற்றத்தால் நீர் இறைக்கப்பட்டது. இந்த நில நீரினால் நீர் வழங்கும் நிலை ஓரளவு சரிக்கட்டப்படவில்லையென்றால் நிலைமை மிகவும் சீர்கேடு அடைந்திருக்கும். மேலும் துயர் தணிப்பு உதவியளிப்பதற்கு சென்னை மாநகரில் 12,000 வடிமுனைக் குழாய்களை அமைப்பதற்கான முனைப்புத் திட்டத்தை அரசு நிறைவேற்றியது. பற்றாக்குறையை இம்முயற்சி பெருமளவு தீர்த்துவிட்டது.

5. இம மாநிலப் பொதுப்பணித் துறையின் நில நீர்ப் பிரிவு, கோயம்புத்தூரில் நிலவிய குடிநீர் நெருக்கடியைத் தீர்க்கவும், 1969 கோடையில் அங்கு பணியாற்றியது.

6. நடப்பு ஆண்டில், தென் பகுதி மாவட்டங்களைத் தவிர பருவ மழை பொதுவாக நிறைவளிக்கத்தக்கவாறு இருந்தது. பருவ மழை காவிரி, அமராவதி, பவானி, பெரியாறு, தாம்பரபரணி, கோதையாறு ஆகியவற்றின் நீர்வரவுப் பகுதிகளில் ஜூன் மாதத்தின் பிற்பகுதியில் இயல்பாக வரும் தென் மேற்குப் பருவ மழை, உண்மையில் காலம் தாழ்த்திப் பெய்தது. காவிரி நீர்கோள் பகுதியில் 2 சதவீதமும், பவானியில் 28 சதவீதமும், பெரியாறில் 22 சதவீதமும் மழையின் அளவு குறைந்தது. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் 16 சதவீதமும், பவானிசாகரில் 46 சதவீதமும், பெரியாறு ஏரியில் 36 சதவீதமும், அமராவதி நீர்த் தேக்கத்தில் 48 சதவீதமும், பேச்சிப்பாறையிலும், பேச்சிப்பாறை நீர்த் தேக்கத்திலும் 41 சதவீதமும், பாபநாசத்தில் 33 சதவீதமும், மழையின் அளவு குறைந்தது. தென்மேற்குப் பருவமழை காலம் தாழ்த்திப் பெய்தமையால் மேட்டூர் நீர்த் தேக்கம், பெரியாறு ஏற்பாட்டின் கீழ் பாசனத்திற்கு நீர்விடும் தேதி தள்ளிப் போடப்பட்டது. இந்த ஆண்டிலும் அதிகப் பரப்பில் காவிரிச் சமுகத்தில் இரண்டு போகப் பயிர் விளைவிக்க எண்ணியுள்ள திருத்திய பயிரிடும் முறை பின்பற்றப்பட்டது. கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில் கூடுதலாகப் பயிர் விளைவிக்கச் சிறப்பாக நீர் வழங்கப்படுவது அனுமதிக்கப்பட்டது.

7. இந்த ஆண்டில் வடகிழக்குப் பருவ மழை முழுவதும் சாதகமாகவே இருந்தது. காவிரி நீர் கோள் பகுதியில் 7 சதவீதமும், பவானியில் 6 சதவீதமும், பெரியாறில் 15 சதவீதமும் மழையின் அளவு குறைந்தது. மேட்டூரில் 27 சதவீதமும், பவானியில் 12 சதவீதமும், பெரியாறில் 34 சதவீதமும், அமராவதி நீர்த் தேக்கத்தில் 50 சதவீதமும், பேச்சிப்பாறையில் 17 சதவீதமும், பாபநாசத்தில் 2 சதவீதமும் மழையின் அளவு குறைந்தது. பெருஞ்சாணியில் மட்டும் சாதாரண அளவைவிட 5 சதவீதத்திற்கு மேல் நீர் வரவு ஏற்பட்டது.



8. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் நல்ல மழை பெய்தது. இதனால் எல்லா ஏரிகளிலும் நீர் நிறைந்தது. இந்த ஏரிகளின் நீரைப் பயன்படுத்தி கோடைப் பயிர் விளைவிக்க முடியும். பவானி சாகரில் இருக்கும் நீர் அளவுடன், கீழ் பவானிக் கால்வாயின்கீழ் இரண்டாவது முறைப் பருவத்தில் நீர் வழங்கப்பட்டு வந்தது. மணிமுத்தாறு திட்டம், இந்த ஆண்டில் முதன் முறையாகப் பாசனத்திற்குத் திறந்துவிடப்பட்டது. பெரியாறு ஏற்பாட்டைத் தவிர, மற்ற ஏற்பாடுகளின்கீழ் இந்தப் பருவத்தின் இறுதி வரையில் நீர் வழங்கப்படுவதை அனுமதிப்பதில் இடர்ப்பாடு எதுவும் இருப்பதற்கில்லை. பெரியாறு ஏற்பாட்டில் கிடைக்கும் நீர் அளவு, முறை மாற்று ஏற்பாட்டின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

9. பெரிய நீர்த்தேக்க பாசன ஏற்பாட்டின்கீழ் உள்ள சுமார் 23 லட்சம் ஏக்கரில் பெரியாறு-வைகை ஆயக்கட்டின் ஒரு பகுதியும் அமராவதி ஏற்பாட்டின் ஒரு பகுதியும் கடைசி நிலைகளில் நீரின்மையால் பாதிக்கப்படும்.

10. இம் மாநிலத்தில் இப்போது நிறைவேற்றப்படும் பெரிய பாசனத் திட்டம், பரம்பிக்குளம்–ஆழியாறு பல நோக்கத் திட்டமாகும் ; இத் திட்டம், 1,85,000 கிலோவாட் அளவுக்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதுடன் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 2,40 லட்சம் ஏக்கருக்கு பாசன வசதியளிக்கும். தமிழ்நாடு, கேரளம் ஆகிய இரண்டு மாநிலங்களின் நலனிற்காக மாநிலங்களுக்கு இடையிலான ஆற்றைப் பயன்படுத்த வேண்டியிருப்பதால், கேரள மாநில அரசுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது அவசியமாகிறது. கேரள அரசுடன் இதுபற்றித் தீர்வு காணாமையால் கடந்த ஆண்டுகளில் இத் திட்டத்தின் பல பணிகள் மேற்கொள்ளப்பட முடியவில்லை. இந்த அரசு கேரள அரசின் ஒத்துழைப்புடன் இதுவரை முடிவுறாமல் இருந்த சிக்கல்களில் தீர்வு கண்டு இத் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிவிப்பதில் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனைமலையாறு, நீராறு, மற்றும் பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட ஆறுகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவது சம்பந்தமாக பாசனம், மின்சாரத் துறை, மத்திய அமைச்சரின் நல்ல முயற்சியால் தமிழ் நாடு முதலமைச்சருக்கும், கேரள முதலமைச்சருக்கும் இடையே 1969-ம் ஆண்டு மே மாதம் 10-ம் தேதியில் சில முக்கிய முடிவுகள் ஏற்பட்டன. முதலமைச்சர்களின் சந்திப்பால் ஏற்பட்ட முடிவுகளைத் தொடர்ந்து, விரிவான ஒப்பந்தம் ஏற்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள இரண்டு அரசுகளும் முயன்று வருகின்றன. சோலையாறு அணையின் உபரி நீர் வழியும் மேல் மட்டம் கட்டி முடிப்பது 1970 ஜூன் மாதம் நடக்கும் என்பதையும் சோலையாறு நீர்த் தேக்கத்தில் நீரைத் தேக்குவது 1970 பிப்ரவரியில் தொடக்கப்பட்டதென்பதையும் அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்வார்கள் என்று நம்புகிறேன். நீராற்றுப் பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளது.

**11.** நில மேல் நீர் வாய்ப்புகள் அனைத்தையும் தமிழ் நாடு ஏற்கெனவே பயன்படுத்தியுள்ளதென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். புதிய பாசனப் பணிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு மிகக் குறைவு. எனவே, கீழ்க்கண்டவற்றின் மூலம் மட்டுமே பாசனத்தை விரிவுபடுத்த முடியும்: (அ) நில நீர் குறித்து விஞ்ஞான முறையில் ஆராய்ந்து, அதைக் கண்டறிதல், (ஆ) நில மேல் நீர்வளத்தைக் கட்டுப்பாடான முறையிலும் சிக்கனமாகவும் பயன்படுத்துதல்.

**12.** இக் குறிக்கோள்களை எய்தும்பொருட்டு, நிலமேல் நீருடன் நில நீர் ஆய்வை மேற்கொள்ளும் திட்டத்திற்கும் இம் மாநிலத்திலுள்ள பெரிய பாசனவாய்க்கால்களைச் சீரமைப்புச் செய்யும் திட்டத்திற்கும் அரசு ஆக்கம் அளித்தது. நில நீர் பற்றி அறிவியல் முறையில் ஆராய்ச்சி நடத்தும் பணியை இரண்டு நிறுவனங்கள் மேற்கொண்டன. (அ) ஐக்கியநாடுகள் வளர்ச்சி திட்ட நில நீர் ஆய்வு. (ஆ) பொதுப்பணித் துறையின் நிலநீர் ஆய்வுக் கோட்டம். இந்த இரண்டு நிறுவனங்களும் இப்போது செயல்பட்டு வருகின்றன; நில நீர் ஆய்வின் முடிவையொட்டி, நில நீர் மட்டுமே ஆதாரமாகவுள்ள வறட்சிப் பகுதிகளில் பாசனமளிக்கவும் நில மேல் பாசனவாய்க்கால்களுடன் மற்றப் பகுதிகளில் இதுவும் பயன் அளிக்கவும் ஏற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம், அதன் முதல் நிலை ஆய்வுகளை முடித்துள்ளது. சென்னை மாநகர், அதைச் சுற்றியுள்ள பகுதிகள், பாலாறு, நெய்வேலி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் இந்த ஆய்வு முடிந்துள்ளது. இந்த ஆய்வின் முடிவுகள், எதிர்பார்க்கப்படுகின்றன. 1969 ஜூன் திங்களில், ஐ.நா.வ. திட்டம் அதன் இரண்டாவது நிலைப்பணியைத் தொடங்கியது; நில மேல் நீரையும், நில நீரையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்தும் முறையில் நீரின் பயனைப் பெருக்கக் காவிரிக் கழிமுகப் பகுதியின் நில நீர் வாயில்களை விரிவாக ஆராயும் நோக்கத்துடன் இப்பணி தொடங்கப்பட்டது. இத் திட்டம் 1972 வரையில் தொடரும். ஏற்கெனவே பல சோதனைத் துளைகள் போடப்பட்டுள்ளன; இதன் விளைவு நம்பிக்கையளிப்பதாக உள்ளது.

நிலமேல் நீர் வாயில்களைச் சிறப்பாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தும் நோக்கத்தை எய்த, வைகைக் கால்வாய்களைச் சீரமைக்கும் திட்டம்—1967-68-ல் மேற்கொள்ளப்பட்டது. இப்பணி நடந்தேறி வருகிறது.

**13.** பழைய காவிரிக் கழிமுக ஏற்பாட்டை நவீனப்படுத்துவதற்குரிய விரிவான திட்டம் ரூ. 49 கோடி மதிப்பீட்டுச் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது; உதவிக்காக உலக வங்கியிடம் அளிக்கப்பட்டுள்ளது. திரு. கென்னத் கொப்னரின் தலைமையில் வந்த உலக வங்கிக் குழு இத்திட்டம்பற்றி 1969 செப்டம்பரில் ஆய்ந்தது. இத் திட்டத்தின் பயன் பற்றியும் அமைப்பு பற்றியும் அக்குழு உறுப்பினர்கள் மன நிறைவடைந்தனர் என்பதை மகிழ்வுடன் குறிப்பிடு



கிறேன். நல்ல முறையில் நீரைப் பயன்படுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நிலமேல் நீரையும் நில நீரையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்தவும் தஞ்சாவூர் கழிமுகப் பகுதியின் தற்போதுள்ள பாசன ஏற்பாட்டை முழுமையாக நவீனப்படுத்த இத் திட்டம் நோக்கம் கொண்டுள்ளது. இத் திட்டத்தினால், சுமார் 3.5 லட்சம் ஏக்கர் பரப்பில் இரண்டாவது போகப் பயிர் பயிரிட முடியும். தஞ்சாவூர் மாவட்டத்தில் முக்கிய நதிகள் வளர்ச்சித் திட்டக்குழு இப்போது மேற்கொண்டு நடத்தும் ஆய்வு, இத்திட்டத்தின் தேவைக்கு ஏற்ப ஒருங்கிணைக்கப்படுகிறது. இந்த விரிவான திட்டத்தின்கீழ், கழிமுகப் பகுதியில் வடிகால் சிக்கல்களைச் சரிப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. காவிரி கழிமுக ஏற்பாட்டின் கீழ் இருபத்தொரு (21) கால்வாய்கள், ரூ. 56.14 லட்சம் செலவில் முன்னோடித் திட்டங்களாக நிறைவேற்றுவதற்கு ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை, பின்னர் முக்கியத் திட்டத்துடன் இணைக்கப்படும். மேலும், பன்னிரண்டு கால்வாய்ப் பணிகள் நிறைவேற்றத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**14.** சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் ரூ. 148.10 லட்சம் தொகையை அதாவது 1969 டிசம்பர் வரையில் செலவிட்டுள்ளது. 20,828 ஏக்கர் புதிய பரப்பளவிற்குப் பாசன வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது; தற்போதுள்ள ஆயக்கட்டின் 73,483 ஏக்கருக்குப் பாசனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 1969 நவம்பர் வரையில் 2,846 ஏக்கர் நீரில் மூழ்கிவிடாமல் பாதுகாக்கப்பட்டுள்ளன. 1970 ஜனவரி 1-ம் தேதி முதற்கொண்டு சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின் வேலைத் திட்டங்களின் வரம்பு, ரூ. 25 லட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளதென்பதையும் திட்ட ஆணைக் குழுவிற்குத் தெரிவிக்காமல் ரூ. 25 லட்சம் வரையில் செலவாகும் திட்டங்களுக்கு இப்பொழுது அரசு ஒப்பளிப்பு வழங்க முடியுமென்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆண்டு துவக்கத்தில் சென்னையில் நடைபெற்ற பாசனம் பற்றிய விவாதங்களில், சிறப்புச் சிறு பாசனத் திட்ட வேலைத் திட்டங்களிலிருந்து பெறும் கூடுதல் உற்பத்தியை மதிப்பிடுவதற்கான வரம்பு திருத்தியமைக்கப்பட வேண்டுமென்று இப் பேரவை உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர். இப்போது அந்த வரம்புகள் திருத்தியமைக்கப்படுகின்றன என்பதையும் விரைவில் அரசின் ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அறிவிப்பதில் பெரிதும் மகிழ்கின்றேன்.

**15. காவிரியில் மைசூர் அரசு பாசனத்திற்கான அணை கட்டுதல்.**

மைசூரிலுள்ள காவிரியின் கிளை நதிகளான ஹேமாவதி, கபினி, ஹாரங்கி, சுவர்ணவதி ஆகியவற்றில் பாசனத்திற்கான சில அணைக் கட்டுகளைக் கட்ட மைசூர் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட பணியை மத்திய அரசின் தொழில்

முறை அனுமதியின்றியே மைசூர் அரசு தொடங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. மாநிலங்களுக்கு இடையிலான சிக்கல்கள் கொண்டதும், தமிழ் நாட்டுக்கும் மைசூர் அரசுக்குமிடையே ஏற்பட்ட 1892-ம் ஆண்டு ஒப்பந்தத்தாலும் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தாலும் உட்படுத்தப்படுவதுமான இத்திட்டங்களுக்கு அவசியமாகப் பெறவேண்டிய தமிழ் நாட்டின் இசைவு பெறப்படவில்லை. இந்த அரசின் சட்டப்படிக்கான சில மறுப்புரைகளுக்கு மைசூர் அரசு பதிலளிக்கவும் இல்லை. இந்திய அரசின் முயற்சி வாயிலாக 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் கோட்பாடுகளுக்கு இணங்க மைசூர் அரசுடன் இணக்கமான தீர்விற்கு வர நாம் முயன்று வந்தோம்; ஆனால் இந்தப் பேச்சுவார்த்தைகள் பலனளிக்கவில்லையென்பதைக் குறிப்பிட வருந்துகிறேன்.

16. இப்போது வகுக்கப்பட்டுள்ளவாறான மைசூர் திட்டங்கள், காவிரியின் கீழுள்ள பாசன நலனிற்குப் பெரிதும் தீங்கிழைக்கும் என அஞ்சுகிறோம். மாநிலங்களுக்கு இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விதித்துறைகளுக்கு உட்பட்டு இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுமென்று உறுதியளிக்க மைசூர் அரசு விரும்பவில்லை. இத் தகராறு தீர்க்கப்படும் வகையில் இந்த அணைகள் கட்டப்படுவதை நிறுத்த வேண்டுமென்னும் நமது கருத்திற்கும் மைசூர் அரசு இணங்கவில்லை. இந்தச் சூழ்நிலையில், தமிழ் நாட்டில் காவிரி ஆற்றின்மூலம் தொன்றுதொட்டுப் பாசனம் செய்யப்பட்டு வந்ததைக் கருத்தில் கொண்டும் மைசூர் அரசின் ஒருதலைப்பட்சமான நடவடிக்கையால் எழுந்த பாதகமான சூழ்நிலையை எண்ணியும், 1956-ம் ஆண்டு மாநிலங்களுக்கு இடையிலான நீர்த் தகராறுகள் சட்டத்தின்கீழ் தமிழ் நாட்டுக்கும் மைசூர் அரசுக்குமிடையேயுள்ள தகராறை நடுவர் மன்றத்துக்கு விடுமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளோம். முதலமைச்சர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்குப் பின்னர், அரசால் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

17. தமிழ் நாட்டு மக்களின் முழு உரிமைகளுக்கும் ஊறு பயக்கும் எந்த நடவடிக்கையையும் இந்த அரசு பார்த்துக் கொண்டிராதென்று இந்த அவைக்கு உறுதியளிக்க இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் காவிரியின் கீழுள்ள பாசனத்தைப் பாதுகாக்க அவசியமான எல்லா முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்; அவ்வப்போது இது குறித்து மேற்கொண்டு நடக்கும் நிகழ்சிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

18. சென்னை மாநகருக்கு நீர் வழங்கல், உள்நாட்டு நீர் வழிகள் சம்பந்தப்பட்ட பணிகள் என் பொறுப்பிலிருப்பதால், அவற்றைப் பற்றியும் சில சொற்கள் சொல்ல விழைகின்றேன்.

**19. சென்னை மாநகருக்கு நீர் வழங்குதல்—வீராணம் திட்டம்.**

குடிநீர்த் தேவைகளுக்கு உயர் அளவு முதன்மையளிப்பதே, அரசின் கொள்கையாக இருந்து வந்துள்ளது. இந்தக் கோட்பாட்டை ஒட்டியே, தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வீராணம் ஏரியிலிருந்து நீரைக் கொண்டுவந்து மாநகருக்கு வழங்கப்படும் நீரின் அளவை அதிகப்படுத்த இத்திட்டத்தை அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் முதல் நிலையாக, நாள் ஒன்றுக்கு 400 லட்சம் காலன் நீர் குழாய் வழியாகக் கொண்டுவரப்படும். இரண்டாவது நிலையில், நாள் ஒன்றுக்குக் கூடுதலாக 400 லட்சம் நீரைக் கொண்டுவர இதற்கு இணையாகக் குழாய் அமைக்கப்படும்.



வீராணம் ஏரியில் புதிதாகத் தலை மதகு ஒன்று கட்டப்படுவதன் மூலம் நீர் கொண்டுவர ஏற்பாடாகும். இத் தூய்மையற்ற நீர், நெய்வேலிக்கு அருகில் நீர்ப்பணி நிலையத்திற்கு விசையேற்றம் மூலம் இறைக்கப்படும். தூய்மைப்படுத்தப்பட்ட நீர், சென்னை மாநகரிலுள்ள பிரகாச முதலி தெருவில் அமைந்த தெற்குத் தலைப் பணி நிலையத்திற்கு விசையேற்றம்மூலம் இறைக்கப்படும்; இதற்கு இடையிலுள்ள தொலைவு 201 கிலோ மீட்டர் ஆகும். 66 அங்குல விட்டமுள்ள கான்கிரீட் குழாய்கள் மூலம் நீர் கொண்டுவரப்படுகிறது. இவற்றை நிறுவுவதற்கு ரூ. 21.30 கோடி செலவாகுமென்றும் ஆண்டுதோறும் பேணப்படுவதற்கு ரூ. 35.00 லட்சம் செலவாகுமென்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

20. சம்பந்தப்பட்ட பல்வேறு இனப் பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப்பட்டுள்ளன; ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்டதும் இப்பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும். இத்திட்டத்தை விரைந்தும் சிக்கனமாகவும் நிறைவேற்றும் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. இத்திட்டத்தை முடிப்பதற்கு பொறியாளர்கள் இந்திய நிறுவனம் போன்ற நிறுவனங்களின் அனுபவ அறிவைக் கேட்டுப் பயன்படுத்தக் கருதியுள்ளது.

### கூவம் மேம்பாட்டுத் திட்டம்.

21. இத் திட்டத்திற்கு ரூ. 110.45 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது; மாநகர எல்லைக்குள் இந்த ஆற்றினைக் கால்வாய்ப் போக்குவரத்து அமையும் வண்ணம் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆற்றின் கரைப் பகுதிகளில் பூங்காக்களும் புல்வெளிகளும் அமைக்கப்படும். இந்த ஆற்றைப் போக்குவரத்திற்கு ஏற்றதாகச் செய்யவும், தூய்மையாக்கவும், அழகான நீர் வழியாகச் செய்யவும் வேலை நடந்துவருகிறது. இதனால் மாநகரின் வனப்பு உயரும். கீழ்க்கண்டவாறு, இத்திட்டம் மூன்று நிலைகளில் ஒப்பளிக்கப்பட்டுள்ளன :—

| | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| முதல்நிலை .. .. .. .. | 32.00 |
| இரண்டாம் நிலை .. .. .. | 62·00 |
| மூன்றும் நிலை .. .. .. .. | 16·45 |
| | 110·45 |

22. இம் மேம்பாட்டின் முதல் நிலையின்கீழ், ஆற்றின் வாய்ப் பகுதியில் பொறி மதகு ஒன்று அமைக்கப்படுகிறது. எண்ணூர் அனல் மின் தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் நீரைப் பயன்படுத்தி இந்த ஆற்றை சரிவர வைத்திருப்பதற்கு இது வசதி செய்யும். இரண்டாம் நிலையில் ஒப்பளிக்கப்பட்ட ஆற்றைக் கால்வாய்ப் போக்குவரத்திற்கு ஏற்றதாக்கும் பணி இந்த ஆற்றின் தென்கரையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது ; இப்பணி, சேத்துப்பட்டு ரயில் பாலத்திற்கும் காலேஜ் பாலத்திற்கும் இடையிலும், மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த ஆற்றின் வடக்குக் கரை, ஏற்கனவே கண்கவர் வனப்புடன் நன்கு அமைக்கப்பட்ட புல்வெளியாலும் மலர்த் தோட்டத்தாலும் இயற்கை எழில் நிறைந்து விளங்குகிறது.

23. கூவம் ஆற்றங்கரைநெடுகவுள்ள குடிசை வாழ்வோரை வேற்றிடத்தில் குடியமர்த்தும் பணி மூன்றும் நிலையில் மேற்கொள்ளப்படவிருக்கிறது. செயற்குறிப்பிலுள்ள 941 குடியிருப்புகளில் 159 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியவற்றிக்கு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்படுகிறது. கூவம் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஏற்படும் செலவு 1969-70-ல் 1969-ம் ஆண்டு டிசம்பர் இறுதி வரையில் ரூ. 11.17 லட்சம் ஆகும். இத் திட்டத்திற்கு 1969 டிசம்பர் இறுதிவரையில் ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 17.65 லட்சம். பக்கிங்காம் கால்வாய் பணிகள் ரூ. 44 லட்சம் செலவில் செய்யப்பட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இது கூவம் பணிக்கும் பக்கிங்காம் கால்வாய் பணிக்கும் சாலை இணைப்புகள் செய்தல், இயந்திரங்கள் வாங்குதல் முதலியவற்றைச் செய்து கொள்ள வகை செய்கிறது. இப்பணிகள் சிறப்பாக நடந்தேறி வருகின்றன. 1969-70-ல் 1969 டிசம்பர் இறுதி வரையில் இத்திட்டத்திற்கான செலவு ரூ. 2.35 லட்சம் ஆகும் ; இத்திட்டத்திற்கு 1969 டிசம்பர் இறுதிவரையில் ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 11.12 லட்சம் ஆகும்.

### பொறியாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள்.

24. பொறிகுயாளர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை, ஏற்படுத்தித் தரும்பொருட்டு, 1969 நவம்பரில் 10 கோட்டங்களையும் 40 துணைக் கோட்டங்களையும் அமைக்க அரசு ஒப்பளித்துள்ளது. தமிழ் நாட்டில் பாசனத் திட்டங்களை ஆராய்வதற்கு 1969-70-ல் அரசு 10.00 லட்சம் ஒதுக்கியுள்ளது.

### நெடுஞ்சாலைகள்.

25. வேளாண்மை, தொழில், வர்த்தக வளர்ச்சியின் போக்குவரத்துத் தேவைகளைச் சரிசெய்ய முழுமையான, திறம்பட்ட சாலைப் போக்குவரத்து முறை மிகவும் இன்றியமையாததாகும். புதிய நான்காவது திட்டத்தில் திட்டமிட்ட எல்லாத் திட்டங்களும்



நிறைவேற்றப்பட்டால், தமிழ் நாட்டில் போக்குவரத்து மைல் மொத்தம் நான்காம் திட்ட இறுதிக்குள் 48,434 மைல் வரை உயரும், 1969-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் நிலவரப்படி, நான்காம் திட்டத் தொடக்கத்தில் 42,00 மைலாக இருந்தது. புதிய நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 158 பெரிய பாலங்களும் கரை பாலங்களும் 949 சிறு பாலங்களும் கல் பாலங்களும், 34 மேம் பாலங்களும் கீழ்ப் பாலங்களும் அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

### கட்டடங்கள்.

26. காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவ நிலையத்தை ரூ. 5.00 லட்சம் செலவில் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும் இப்பணி 1970 நவம்பருக்குள் முடிக்கப்படுமென்பதையும் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். அரசின் பல துறைகள் சம்பந்தப்பட்ட முக்கியமான கட்டடப்பணிகள் நடந்து வருகின்றன.

27. பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறைகளைச் சார்ந்த வேலை நிதி ஊழியர்களின் தற்காலிக சேவையில் உள்ளவர்களை நிரந்தரமாக்குதல் ( (Provincialisation) : சம்பள விகிதம், விடுப்பு மற்றும் ஓய்வுகாலச் சலுகைகள் வழங்குதல் ஆகியவை போன்ற நிறைவேற்றப்பட வேண்டிய குறைகளை அரசு அவ்வப்போது பரிவுடன் ஆய்ந்து வருகிறது. பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறைகளைச் சார்ந்த தற்காலிக ஊழியர்கள் அனைவரையும் நிரந்தரமாக்குவதன்மூலம் அரசுக்கு சுமார் 6 கோடி ரூபாய்க்கும் அதிகமாகச் செலவாகும் என மதிப்பிட பட்டுள்ளதாலின் நிதி நிலைமையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் பொழுதுதான் அரசு இப் பிரச்சினைகுறித்து ஆவன செய்ய இயலும். எனினும், அரசு கீழ்க்கண்ட சலுகைகளை நிரந்தர வேலை நிதி ஊழியர்களுக்கு வழங்கியுள்ளது :—

(1) ஒவ்வொரு வருடமும் எல்லா அரசு ஊழியர்களுக்கும் அனுமதிக்கப்படும் விடுமுறைகள் அனைத்தையும் நிரந்தர வேலை நிதி ஊழியர்களுக்கும் வழங்குதல்.

(2) நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையைச் சார்ந்த போக்குவரத்து யந்திர தொகுதிப் பட்டறை (Transport and Machinery Workshop) ஊழியர்களின் சம்பள வீதங்களை மற்ற அரசு பட்டறை ஊழியர் களின் சம்பள வீதங்களுக்கொப்ப மாற்றியமைத்தல்.

நிரந்தரமற்ற ஊழியர்களுக்கு அளிக்கப்படவேண்டிய விடுமுறைகள், விடுப்புச் சலுகைகள் ஆகியவபற்றியும், நிரந்தரமான ஊழியர்களுக்குச் சம்பள விகிதத்தை மாற்றியமைப்பதுபற்றியும், ஊழியர்களின் இதரக் குறைகள்பற்றியும் அரசினால் அமைக்கப்பட்டுள்ள இரண்டாவது சம்பளக் குழுவால் கவனிக்கப்படும்.

நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையிலுள்ள சாலை ஆய்வாளர்கள், கேங்க் கூலிகள் ஆகியோரின் வேலை நிலைமைபற்றி ஆராய்வதற்கென்று அரசால் நியமிக்கப்பட்ட தனி அலுவலரின் அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

28. திட்ட வேலைகளில் காணும் முன்னேற்றம், பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ள விரிவான ஆய்வுரையில் விளக்கப்பட்டுள்ளது.

## இணைப்பு III

[34-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ் நாட்டின் பாசன வசதிகள்—ஆய்வுரை 1969-70.

வெற்றிகரமான மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் ஆண்டுத் திட்டங்கள் மூன்றுக்கும்பிறகு, இந்த ஆய்வுரை ஆண்டு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாகும். 1969-70-ம் ஆண்டு இறுதிவரை பாசனத்திட்டங்களின் முன்னேற்றம் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (1969-70 முதல் 1973-74 வரை) எஞ்சிய நான்கு ஆண்டுகளுக்கான வேலை திட்டமும் இதில் விளக்கப்படுகிறது.

### முதலாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள்.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் தமிழ் நாட்டில் 22,00 லட்சம் ஏக்கர் நிலம் பெரும் பாசனத் திட்டங்களின் கீழ்ப்பாசன வசதி பெற்றது. முதலாவது திட்டக் காலத்தில் ஒன்பது புதிய பாசனத் திட்டங்கள் தொடங்கப்பட்டன. 1,32 லட்சம் ஏக்கர் பரப்புள்ள ஆயக் கட்டுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. இதுதவிர 1.24 லட்சம் ஏக்கர் பழைய ஆயக்கட்டுக்குப் பாசன வசதி உறுதிப்படுத்தப்பட்டது. இரண்டாவது திட்டக் காலத்தில் 1,77 லட்சம் ஏக்கர் புதிய ஆயக் கட்டிற்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது ; 1,15 லட்சம் ஏக்கர் பழைய ஆயக் கட்டுக்குப் பாசன வசதி உறுதிபடுத்தப்பட்டது. முதலாவது, இரண்டாவது திட்டங்களின்போது பாசனத் திட்டங்களுக்கென முறையே ரூ. 20,15 கோடியும், ரூ. 14,45 கோடியும் செலவிடப்பட்டன.

### மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும் 1966-67, 1967-68, 1968-69 ஆண்டுத் திட்டங்களும்.

பரம்பிக்குளம்-ஆழியாறுத் திட்டத்தைத்தவிர, 9 வேலைத் திட்டங்கள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டன. இந்த 9 திட்டங்களில் மூன்றாவது திட்டக்காலத்தில் 5



திட்டங்கள்தான் அரசினால் ஒப்பளிக்கப்பட்டன. அவையாவன : பாலாறு அணைக்கட்டு--கால்வாய்களை மேம்படுத்தும் பணி, சாத்தனூர் திட்டம் II-ம் நிலை, கோமுகி நதித் திட்டம், சித்தாறு—கட்டணங்கால் திட்டம், மஞ்சளாறு திட்டம் என்பன. இவற்றில் முதல் மூன்று திட்டங்களின் பணியும் முடிவுற்று அவற்றின் பயன்களும் பெறப்பட்டன. மஞ்சளாறு நீர்த்தேக்கத் திட்டம் ஐந்தாண்டு திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு, திட்டத்தில் சேராத பணியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. 1963-64-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட சித்தாறு-பட்டணங்கால் திட்டம் நல்ல முறையில் நிறைவேறி வருகிறது. இத் திட்டத்தினால் 1970-71-ம் ஆண்டில் பயன் கிடைக்கும்.

மணிமுக்தா நதித் திட்டமும், கடானா நதித் திட்டமும், ராம நதித் திட்டமும், 1966-67-ல் தொடங்கப்பட்டன. மணிமுக்தா நதித்திட்டம் முடிவடைந்து உள்ளது. கடானா நதி, ராமநதித் திட்டங்கள் நன்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

1967-68-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட “வைகைக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டம்” நல்ல முறையில் நிறைவேறி வருகிறது. 1968-69-ம் ஆண்டில் புதிய திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மூன்றாவது திட்டத்திலும், ஆண்டுத் திட்டங்கள் மூன்றிலும் பெரும் பாசனப் பணித் திட்டங்களுக்கு ரூ. 41,10 கோடி ஒதுக்கப்பட்டது. செலவிடப்பட்ட தொகை ரூ. 44,79 கோடியாகும்.

### (1) பரம்பிக்குளம்—ஆழியாறுத் திட்டம்.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| வேலைத்திட்டத்திற்கான செலவு— | |
| மூலத்தொகை .. .. .. .. | 3,508·00 |
| திருத்தப்பட்ட தொகை .. ... .. .. | 6,753·00 |
| பாசனப்பகுதி .. .. .. .. .. | 48·49 |
| இரண்டாவது திட்டத்தில் செய்யப்பட்ட செலவு .. | 426·71 |
| மூன்றாவது திட்டத்தில் செய்யப்பட்ட செலவு .. .. | 2,621·16 |
| 1966–67-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 312·84 |
| 1967–68-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 253·99 |
| 1968–69-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 262·60 |
| 1968–69-ம் ஆண்டு முடிய செய்த மொத்தச் செலவு.. | 3,877·30 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதிக்கீடு .. .. | 1,124·00 |
| 1969–70-ம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு .. | 250.75 |
| 1969–70-ல், டிசம்பர் 1969 முடிய செய்த செலவு .. | 148·10 |
| 1970–71 திட்ட மதிப்பீடு .. .. .. .. | 270·02 |

பரம்பிக்குளம்—ஆழியாறுத் திட்டம் பலநோக்கத் திட்டமாகும். இப் பணித் திட்டம் இரண்டாவது திட்டக்காலத்தில் தொடங்கப்பட்டதாகும். இது மூன்றாவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து நடத்தப்பெற்று, நான்காவது திட்டக் காலத்தில் எல்லா வகை

களிலும் முடிந்து விடும். இத் திட்டத்திற்கு ரூ. 67.53 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் 2.40 லட்சம் ஏக்கர் பரப்புள்ள நிலத்திற்குப் பாசன வசதி கிடைப்பதுடன், நான்கு மின் நிலையங்களில் 1,85,000 கிலோ வாட் உற்பத்தித் திறனுடன் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையிலும் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

1.1. நீராறு சிற்றணையும் சுரங்கப் பாதையும் கட்டுவதற்குத் தொடர்பான பணிகள் தொடங்கப்பட்டு, நல்ல வகையில் நடந்து வருகின்றன.

2.2. ஆனைமலையாற்றிலிருந்து தமிழ்நாடு அரசினால் திருப்பி விட இருக்கும் 2.5 மில்லியன் கன அடி நீர்குறித்த விவரங்கள் முடிவு செய்யப்பட்டபிறகு கீழ் நீராறு நீர்த்தேக்கம், சுரங்கப் பாதை ஆகியவற்றின் அமைப்பும் இடமும் முடிவு செய்யப்படும்.

3. இத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவரும்போது படிப்படியாக உடனுக்குடன் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது இத் திட்டத்தின் சிறப்புக்குக் கூறுகும். அதாவது, திட்டம்கு முழுவதும் நிறைவேற்றி முடிக்கப்படும்வரை காத்திராமல் பகுதிப் பணி முடிவுற்றதும் தோற்றுவிக்கப்பட்ட பாசனத் திறன் உடனடியாகப் பயன்படுத்தப்படுகிறது.

4. ஆழியாறு அணை, பரம்பிக்குளம் அணை, தூணக்கடவு அணை, சர்க்கார் பதிமின் நிலையம், திருமூர்த்தி அணை, தண்ணீரை எடுத்துச் செல்வதற்கான இடை இணைப்பு ஏற்பாடுகள், நீரை வழங்குவதற்கான நிகரான பாசனக் கால்வாய் ஏற்பாடுகள் ஆகியவை அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 345 அடி உயர முள்ள சோலையாறு அணை (இதுவே தமிழ் நாட்டிலுள்ள மிக உயர மான அணையாகும்) நல்ல முறையில் நிறைவேறி வருகிறது. திட்ட மிட்டவாறே தண்ணீரைத் திருப்பிவிடும் முறை நிறைவேற்றப் பட்டுள்ளது.

4.1. கேரளா வனத் துறையினர் நீர் புகக் கூடிய பகுதியில் உள்ள காட்டை அழித்துக் கொடுக்காத காரணத்தால், பெருவாரிப் பள்ளம் அணைக்கட்டின் பணி பாதியிலேயே நின்று விட்டது. கேரளா அரசின் முடிவான இசைவைப் பெற்றவுடன், இப்பணி மீண்டும் தொடங்கப்படும்.



5. 1. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப்பகுதியில், 1969-ம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை மனநிறைவு அளிக்கும் வகையில் பெய்தது. பரம்பிகுளம்-ஆழியாறு நீர்த் தேக்கங்களில் தேவையான நீர்த் தேக்கத்துடனும், வட கிழக்குப் பருவக் காலத்தில் கிடைத்த நீருடனும் 103,018 ஏக்கர் மொத்த பரப்பளவுக்கான பாசனத்திற்குத் தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு நீர் வழங்கப்பட்ட புதிய ஆயக்கட்டுப் பகுதிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| தொடர் எண். | கால்வாயின் பெயர். | நீர் விடப்பட்ட நாள். | பாசனம் அனுமதிக்கப் பட்ட பரப்பளவு. | பாசனம் நீட்டிக்கப்பட்ட கால அளவு உட்பட பாசனம் மூடப்பட்ட நாள். | பாசனம் செய்யப்பட்ட பகுதி. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 (அ) | பரம்பிகுளம் தலைக்கால்வாய் 0/0 மைல் முதல் 9/5 மைல் வரை .. .. .. .. | 15-7-1969 | 29,193 | 31-12-1969 | 19,502 |
| (இ) | உடுமலைப் பேட்டைக் கால்வாய் .. .. .. .. .. .. .. .. | 15-7-1969 | 18,806 | 31-12-1969 | 13,610 |
| 2 | பரம்பிகுளம் தலைக்கால்வாய் 70/5 மைல் முதல் 78/3 மைல் வரை .. .. .. | 15-8-1969 | 18,861 | 15-2-1970 | 9,981 |
| 3 (அ) | பரம்பிகுளம் தலைக்கால்வாய் 9/5 மைல் முதல் 10/2 மைல் வரை .. .. .. .. | 15-8-1969 | 10,379 | 31-1-1970 | 3,965 |
| (இ) | பரம்பிகுளம் தலைக்கால்வாய் 10/2 மைல் முதல் 18/7 மைல் வரை .. .. .. | 1-10-1969 | 12,539 | 15-2-1970 | 2,151 |
| 4 | மேல் கால்வாய் .. .. .. .. .. .. .. .. .. .. | 25-10-1969 | 6,061 | 25-2-1970 | 1,250 |
| 5 | வேட்டைக்காரன்புதூர் கால்வாய் மண்டலம் "பி" .. .. .. .. .. .. | 30-9-1969 | 5,455 | 28-2-1970 | 909 |
| | | | 1,01,314 | | 51,268 |

*சிறப்பு அதிகாரியின் அறிக்கையின்படி, அனுமதிக்கப்பட்ட 1,01,314 ஏக்கர் மொத்த அளவில் 81,862 ஏக்கர் பரப்பளவில் 31-12-1969 வரை மேம்படுத்தப்பட்ட அளவுகளை மேற்படி இலக்கங்கள் குறிப்பிடுகின்றன. பரம்பிக்குளம்-ஆழியாறுத் திட்டம், சிறப்பு அதிகாரியிடமிருந்து எஞ்சிய பகுதியின் மேம்பாடு குறித்த அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மேம்பாடு ஊக்கமளிக்கும் வகையில் உள்ளது.

மேற்படி இலக்கங்கள் குறிப்பிடுகின்றன. பரம்பிக்குளம்-ஆழியாறுத் திட்டம், சிறப்பு அதிகாரியிடமிருந்து எஞ்சிய பகுதியின் மேம்பாடு குறித்த அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மேம்பாடு ஊக்கமளிக்கும் வகையில் உள்ளது.

இவற்றுடன் கூட, தமிழ்நாடு, கேரளா மாநிலங்களிலே, ஆழியாற்றின்கீழ் சுமார் 26,400 ஏக்கரா பழைய ஆயக்கட்டுக்கும் (அதாவது, தமிழ் நாட்டில் 6,400 ஏக்கர்களும், கேரளாவில் 20,000 ஏக்கர்களும்), தமிழ்நாட்டில் பாலாற்றின்கீழ் சுமார் 3,600 ஏக்கர்களுக்கும் பாசன வசதி அளிக்கப்பட்டது.

பரம்பிக்குளம்-ஆழியாறுத் திட்டம் தொடங்கியதிலிருந்து, அத்திட்டத்திற்கான இலக்குகளையும், செலவுகளையும் காட்டும் விவர அறிக்கை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது.

## (2) சித்தாறு-பட்டணங்கால் திட்டம்.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| திட்டத்தின் மொத்தர் செலவு .. .. .. | 734·88 |
| மூன்றுவது திட்டத்தில் செய்யப்பட்ட செலவு .. | 205·35 |
| 1966–67-ம் ஆண்டில் செய்யப்பட்ட செலவு .. .. | 105·37 |
| 1967–68-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 90·49 |
| 1968–69-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 75·41 |
| 1968–69-ம் ஆண்டு முடிய செய்த மொத்தச் செலவு.. | 476·62 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு .. .. | 222·00 |
| 1969-70-க்கான திருத்த மதிப்பீடு .. .. .. | 78·75 |
| 1960–70-ல் 1969 டிசம்பர் முடிய செய்த செலவு .. | 50·35 |
| 1970–71-க்கான திட்ட மதிப்பீடு .. .. .. | 45·18 |

பேச்சிப்பாறை அணைக்கட்டின்கீழ் கோதையாறுக்குள் விழும் இரு சிற்றாறுகளின் குறுக்காக 2 சிறிய நீர்த்தேக்கங்களை அமைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்போதுள்ள பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளின் முழு நீர்த் தேக்க மட்டங்கள், அவற்றின் கொள் அளவுகளைக் கூடுதல் ஆக்குவதற்காக உயர்த்தப்படும். பட்டணங்கால் கால்வாய் எனப்படும் புதிய கால்வாய் ஒன்றையும் வெட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் துணை வட்டத்தில் 17,000 ஏக்கர் புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்கென தற்போதுள்ள நிலப்பாறை கால்வாயிலிருந்து ஒரு இணைக் கால்வாய் வெட்டப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் 15,000 ஏக்கர் இருபோகப் பரப்பளவும் (மொத்தப் பரப்பு—30,000 ஏக்கர்), திருநெல்வேலி மாவட்டத்தில் 17,000 ஏக்காரவும் புன்செய் பயிரிடுவதற்கென இத்திட்டத்தின்மூலம் பாசன வசதி பெறும். இத்திட்டத்தின் செலவு—பலன் குறித்த விகிதாசாரம் 5 சதவீத வட்டி வீதத்தில் 1.81 ஆகும்; 10 சதவீத வட்டி வீதத்தில் 1.09 ஆகும். நடப்பு ஆண்டில் திட்ட முன்னேற்றத்தைப் பொறுத்த வரையில், பேச்சிப்



பாறை, பெருஞ்சாணி அணைகளை உற்பத்திப்படுத்தும் பணி நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. சித்தாற்றில் அணையில் அணையின் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. ராதாபுரம் கால்வாயில் பணியின் பெரும் பகுதி முடிக்கப்பட்டுள்ளது. பட்டணங்கால் கால்வாயில் கன்னி வாய்க்கால்கள், கிளை நதிகள் குறித்த பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

1966-67-ம் ஆண்டில் மூன்று புதிய திட்டங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அவையாவன : (1) மணிமுக்தா நதித் திட்டம், (2) ராம நதித் திட்டம், (3) கடானா நதித் திட்டம். இவற்றின் சுருக்க விவரம், நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் முதலியவைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

## மணிமுக்தா நதித் திட்டம்.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| திட்டததிற்கான செலவு .. .. .. .. | 117·61 |
| 1966–67-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 20.61 |
| 1967–68-ல் செய்யப்பட்ட செலவு .. .. .. | 37·28 |
| 1968–69-ல் செய்த செலவு .. .. .. | 33·50 |
| 1968–69 முடிய செய்த மொத்தச் செலவு .. .. | 91·39 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு .. .. | 18·00 |
| 1969–70-ம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு .. | 6·48 |
| 1969–70-ல் டிசம்பர் 1969 முடிய செய்த செலவு .. | 5·85 |
| 1970–71-க்கான திட்ட மதிப்பீடு .. .. .. | 0·32 |

தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில் மணிமுக்தா நதியின் குறுக்கே 72 கோடி 80 லட்சம் கன அடி கொள் அளவு உள்ள ஒரு நீர்த் தேக்கம் அமைப்பதும், வலப்புறத்தில் 7½ மைல் நீளமுள்ள கால்வாய் வெட்டுவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். தற்போது பாசனம்பெறும் சுமார் 250 ஏக்கருக்குப் பாசன உறுதி அளிக்கவும், 4,000 ஏக்கர் புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்றவும் இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. கிளை நதிகளிலும், கன்னி வாய்க்கால்களிலும் சில சிறிய பணிகளைத் தவிர, இத்திட்டம் முடிவடைந்துள்ளது. இந்த ஆண்டில் இந்த நீர்த்தேக்கம் பாசனத்திற்காகத் திறந்துவிடப்பட்டது.

## ராம நதித் திட்டம்.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. | 95·70 |
| 1966–67-ல் செய்த செலவு .. .. | 0·11 |
| 1967–68-ல் செய்த செலவு .. .. .. | 9·47 |
| 1968–69-ல் செய்த செலவு .. .. . | 2·35 |
| 1968–69 முடிய செய்த மொத்தச் செலவு .. .. | 11·93 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு .. .. | 75·00 |
| 1969–70-க்கான திருத்த மதிபபீடு . .. | 24·31 |
| 1969–70-ல் டிசம்பர், 1969 முடிய செய்த செலவு .. | 19·19 |
| 1970–71-க்கான திட்ட மதிப்பீடு .. .. .. | 30·02 |

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தாமிரவருணியின் கிளை நதியாகிய ராம நதியின் குறுக்கே 15 கோடி கன அடி கொள் அளவு உள்ள நீர்த் தேக்கம் ஒன்றைக் கட்டுவதும், புதிய கால்வாய் ஒன்று வெட்டுவதும், இத் திட்டத்தின் நோக்கங்களாகும். இத் திட்டத்தின்மூலம் பாசனம் பெறும் 4,170 ஏக்கர் தற்போதைய ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசன உறுதி அளிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். அம்பாசமுத்திரம் வட்டத்திலுள்ள 500 ஏக்கர் புதிய நிலப் பரப்பும் பாசனத்தின்கீழ்க் கொண்டுவரப்படும். ஆனால், இந்நிலங்களில் அக்டோபர்-பிப்ரவரி பருவத்தில் ஒரு போகம் மட்டும் பயிரிடப்படுவதற்குப் பாசன வசதி அளிக்கப்படும். இத் திட்டத்திற்கு 1966 நவம்பரில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இவ்வாண்டில் திட்ட முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில், அணைச் சுவருக்கும் நீர் வழிந்தோடும் கால்வாயில் இடது பிரிவுக்குமான கடைக்கால் தோண்டும் பணி முடிவடைந்திருக்கிறது.

தென்கால் மதகுக்கான அடித்தளம் அமைக்கும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. கல்லைக்கால் மதகுக்கான அடித்தளம் அமைக்கும் பணி நிறைவேறி வருகிறது.

### கடாறு நதித் திட்டம்

| | (ரூபாய் லட்சத்தில்:) |
|---|---|
| திட்டச்செலவு .. .. .. .. .. | 173·80 |
| 1966-67-ல் செய்த செலவு .. .. .. | 0 11 |
| 1967-68-ல் செய்த செலவு .. .. .. | 14·38 |
| 1968-69-ல் செய்த செலவு .. .. | 13·95 |
| 1968-69-ல் முடிய செய்த மொத்தச் செலவு .. | 28·44 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு .. .. | 154·00 |
| 1969-70-க்கான திருத்த மதிப்பீடு .. .. | 29·99 |
| 1969-70-ல் டிசம்பர் 1969 முடிய செய்த செலவு .. | 23·27 |
| 1970-71-க்கான திட்ட மதிப்பீடு .. .. .. | 40·01 |

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், பாப்பான்குளத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவில் கடாறு நதியின் (தாமிர வருணியின் கிளை நதி) குறுக்கே 38 கோடி கன அடி நீர் கொள்ளும் நீர்த் தேக்கம் ஒன்றைக் கட்டி, மேற்படி ஆற்றின் உபரி நீரைத் தேக்கி வைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த ஆற்றினால் பாசனம் பெறும் 7,112 ஏக்கர் கொண்ட தற்போதைய ஆயக்கட்டு நிலத்திற்குப் பாசன உறுதியளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும் இரண்டு பருவங்களில் கூடுதலாக 1,000 ஏக்கர் நிலத்தைப் பாசனத்தின் கீழ்க் கொண்டுவருவதற்கும் இத்திட்டம் வகைசெய்கிறது. இத் திட்டத்திற்கு 1967 ஜனவரியில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1969-70-ல் அடைந்த திட்ட முன்னேற்றத்தைப் பொறுத்தவரை மண் அணை, வடிகட்டிகள் அமைத்தல், பள்ளங்கள் வெட்டுதல் ஆகிய பணிகள் நடந்தேறி வருகின்றன. தலை மதகுக்கான கடைக்கால் தோண்டும் பணி நடந்து வருகிறது.



வைகைக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டத்திற்கு 1967-68-ல் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. நான்காவது திட்டத்தில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கம், 1967-68, 1968-69, 1969-70 ஆண்டுச் செலவு குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### வைகைக் கால்வாய்களைப் புதுப்பித்தல்.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. .. | 394·00 |
| 1967-68-ல் செய்த செலவு .. .. .. | .. |
| 1968-69-ல் செய்த செலவு .. .. .. | 3·91 |
| 1968-69 முடிய செய்த செலவு .. .. .. | 3·91 |
| நான்காவது திட்ட ஒதுக்கீடு .. .. .. | 393·00 |
| 1969-70-க்கான திருத்த மதிப்பீடு .. .. | 13·46 |
| 1969-70-ல் சனவரி 1970 முடிய செய்த செலவு .. | 5·29 |
| 1970-71-க்கான திட்ட மதிப்பீடு .. .. .. | 31·86 |

விராகனூரில் ஒன்றும், பார்த்திபனூரில் மற்றொன்றும் ஆக இரண்டு பொறி மதகுகளை வைகையாற்றின் குறுக்கே கட்டுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்தப் பொறி மதகுகளின் இரு பக்கங்களிலும் பொது வாய்க்கால்கள் அமைக்கப்படும். இதனால் தற்போதுள்ள பல ஏரிகளும், கால்வாய்களும் நீர் பெறும். தற்போது பாசனம் பெறும் 95,882 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் உறுதிப்படுத்தப்படும். இதுவரை பாசன வசதி பெறாத, 13,900 ஏக்கருக்குக் கிட்டும். 1968 மார்ச் திங்களில் இத்திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. பார்த்திபனூர் பொறி மதகிலிருந்து பிரிந்து செல்லும் இடது கால்வாய், தலைக்கால்வாய் ஆகியவற்றை வெட்டும் பணி நடந்தேறி வருகிறது. தலைக்கால்வாய்களில் தணிவு அமைப்புகளை ( drops ) கட்டும் பணியும் நடந்தேறி வருகிறது.

### தஞ்சாவூர்க் கால்வாய்களைப் புதுப்பித்தல்.

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| திட்டச் செலவு .. .. .. .. | 4,900·00 |
| 1967-68-ல் செய்த செலவு .. .. .. | 3·52 |
| 1968-69-ல் செய்த செலவு .. .. .. | 5·04 |
| 1968-69 முடிய செய்த மொத்தச் செலவு .. .. | 8·56 |
| நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கீடு .. .. | 500·00 |
| 1969-70க்கான திருத்த மதிப்பீடு .. .. | 49·58 |
| 1969-70-ல் டிசம்பர் 1969 முடிய செய்த செலவு .. | 7·09 |
| 1970-71-க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு .. | 27·88 |

தஞ்சாவூர் கால்வாய்ப் பகுதியில் இப்பொழுதுள்ள பாசன முறையை முழுவதும் ஒருமுகப்படுத்தி, சீரமைப்பதன்மூலம் அதிக உற்பத்தி கிடைக்கச் செய்வதும், கூடுதல் போகம் விளைவிப்பதும்,

மேற்பரப்பு நீரையும், ஊற்று நீரையும் ஒருங்கே பயன்படுத்தி, அதனால் சிறந்த நீர் நிர்வாகமும் கட்டுப்பாடும் கொண்டுவருவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் முக்கிய கூறுகள் வெள்ளக் காலங்களில் திறமையாகச் சமாளிக்க தலைப் பகுதிப் பணிகளை மேம்பாடு செய்தல் ; (ii) தூர் எடுத்தல், கரைகளை உயர்த்துதல், தெரிந்தெடுக்கப்பட்ட ஆறு, கால்வாய் பகுதிகளில் கசிவு ஏற்படுவதால் விரயம். ஏற்படும் பகுதிகளில் காரை பூசுதல் ; ( iii ) முக்கிய ஆறுகளிலும், கிளை ஆறுகளின் குறுக்கேயும், பொறி மதகு கட்டுதல், படுகை அணைகளைப் பொறி மதகுகளாக மாற்றுதல் ; ( iv ) தேவையான இடங்களில் எல்லாம் முதல்தரக் கால்வாய்களைத் தரமானவையாக்குதல், நீர் பிரிக்கும் அணை கட்டுதல், சுவர்கள் கட்டுதல், திறந்த மடைகளில் குழாய் மதகுகள் அமைத்தல், 50 ஏக்கர் அளவு வரை (35,000 திறந்த மடைகள் தற்பொழுது உள்ளன) ; கண்ணிவாய்க்கால் அமைத்தல், முறிவு உள்ள பகுதிகளை நேராக வெட்டிவிடுதல், மறுமுறை தரம் பிரித்தல், தூர் எடுத்தல் ; (v ) பாசனம்-வடிகால் ஆறுகளுக்கு நீர் வழங்குதலைக் கூடுதலாக்குதல் ; (vi ) நீர்க்கொள்ளிடம் அணைக் கட்டை மேம்பாடு செய்தல்.

வடிகால் நீரை விரைவில் வெளியேற்றுவதற்காகத் தற்பொழுதுள்ள வடிகால் ஆறுகளை நேராக வெட்டிவிடுவதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. நீரில் மூழ்கிய பகுதிகளுக்கு நிவாரணமளித்தல், காவிரியின் மருங்கில் வெள்ளம் புகுவதைத் தடுக்க காவிரியின் குறுக்கே மேல் அணைக்கட்டில் குறுக்கு அணை ஒன்றைக் கட்டுதல், ஆகியவை திட்டமிடப்பட்டுள்ளன.

மேற்பரப்பு நீரையும், ஊற்று நீரையும் ஒருங்கே பயன்படுத்தும் பொருட்டு, 5,000 வடிமுனைக் குழாய்களும், 1,000 ஆழமான துளைக் கிணறுகளும் தோண்டுவது இத்திட்டத்தின் மற்றொரு சிறப்புக் கூறாகும். தனிப்பட்ட பாசன வடிகால் வாய்க்காலுக்கு ஏற்பாடு செய்வதன்மூலம் 3,00,000 ஏக்கர் நிலத்தை மேம்பாடு செய்வதும் இத் திட்டத்தின் நோக்கமாகும்.

### சிறப்புச் சிறு பாசன திட்டம்.

இது ஐந்தாண்டுத் திட்ட வேலையாகும். விரைவான பலனளிக்கக் கூடியவையும், ஒவ்வொன்றும் ரூ. 15 லட்சத்திற்குக் குறைந்த செலவில் சிறு வேலைகளைக் கொண்டவையுமான பாசனத் திட்டங்களை எடுத்துக்கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் வகையைச் சேர்ந்த வேலைகள் எடுத்துக்கொள்ளப்படும் :—

1. உடைப்பு எடுத்த அல்லது கைவிடப்பட்ட ஏரிகளைச் சீரமைத்தல்.

2. ஆறுகளிலிருந்து பிரிந்து செல்லும் பழைய ஊற்று வாய்க்கால்கள் அல்லது வெள்ள வாய்க்கால்களைத் தூர் எடுத்தும் புதுப்பித்து புதிய ஏரிகளை அமைத்தல்.



3. பாசன ஏரிகளுக்குப் போகும் நீரைப் பெருக்குவதற்கு ஆற்றுக் குறுக்கேயும், வடிகாலுக்குக் குறுக்கேயும் முறையே அணைக்கட்டு கட்டுதல், திசை திருப்பும் சாதனங்களை ஏற்படுத்துதல்.

4. உப்பங்கழியால் பாதிக்கப்படும் கடற்கரை அருகில் உள்ள சதுப்பு நிலங்களைத் தக்க வடிகால் வசதி ஏற்படுத்திப் பண்படுத்துதல்.

5. ஆற்று நீரிறைக்கும் திட்டம்.

6. குளத்திற்குக் கீழே 3,000 அடிக்குள் அமைந்த ஊற்றுநீர் மட்டத்தை உயர்த்தும்பொருட்டு, கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, மதுரை மாவட்டங்களில் குளங்கள் அமைத்தல்.

7. ஓடைகளுக்குக் குறுக்கே அணைக்கட்டுகள் கட்டுதல்.

முதல் இரண்டாவது, மூன்றாவது திட்டங்களிலும், 1966–67, 1967–68, 1968–69 ஆண்டுத் திட்டங்களிலும் சிறப்புச் சிறுபாசனத் திட்டத்திற்கு ஏற்பட்ட செலவும், அடைந்த பலன்களும், முடிந்த வேலைகள் முதலியவையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

| | முடிக்கப்பட்ட வேலைகள். | செலவு. | புதிய பாப்பளவு இடைவெளி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூ. லட்சத்தில்) | |
| முதலாவது திட்டம் .. | 2,458 | 290·00 | 32,000 |
| இரண்டாவது திட்டம் .. | 2,250 | 473·52 | .. |
| மூன்றாவது திட்டம் .. | 4,286 | 1,113·99 | 1,35,402 |
| 1966–67 ஆண்டுத் திட்டம் | 935 | 328·91 | 23,059 |
| 1967–68 ஆண்டுத் திட்டம் | 751 | 307·74 | 18·022 |
| 1968–69 ஆண்டுத் திட்டம் | 661 | 213·70 | 22,402 |

| | பலன்கள் நிலை பெற்றவை. | மூழ்கிய நிலங்களை மீட்டல். | கூடுதல் உணவு உற்பத்தி, ஏற்படுத்தப் பட்ட வளம். |
|---|---|---|---|
| | (5) | (6) | (7) |
| முதலாவது திட்டம் .. | 4,30,000 | .. | 69,750 |
| இரண்டாவது திட்டம் .. | 1,87,000 | .. | 20,863 |
| | | | (பொதுப்பணித் துறை பகுதி மட்டும்.) |
| மூன்றாவது திட்டம் .. | 4,10,581 | .. | 1,19,024 |
| 1966–67 ஆண்டுத் திட்டம் | 73,909 | 3,416 | 21,110 |
| 1967–68 ஆண்டுத் திட்டம் | 51,544 | 691 | 15,524 |
| 1968–69 ஆண்டுத் திட்டம் | 68,378 | 8,192 | 20,567 |

நடப்பாண்டில் (ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு பாசன வசதியளிக்கப்படாத பகுதிகள் உள்பட) 21,000 ஏக்கர் புதிய நிலங்களுக்கும், இப்போதுள்ள 49,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி நிலைப்படுத்துவதற்கும், 600 பணிகள் முடிக்கப்படுவதற்குத் திட்ட

மிடப்பட்டுள்ளன. 1969-70-ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 240.71 லட்சமாகும். இதில் ரூ. 148.10 லட்சம் 1969 டிசம்பர் வரை செலவிடப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி 16,630 டன் ஆகும்.

சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின்கீழ் 1970-71-ம் ஆண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் (ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு பாசன வசதியளிக்கப்படாத பகுதிகள் உள்பட), 25,750 ஏக்கர் புதிய பரப்பளவும், இப்போதுள்ள 61,250 ஏக்கர் ஆயக்கட்டுப் பாசன வசதியை உறுதிப்படுத்தி விளைச்சலுக்குக் கொண்டுவரவும், 725 பாசன வேலைகள் முடிக்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றன. 1970-71-ஆம் ஆண்டு திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 200 லட்சமாகும்.

### தூர் வாருதல்—நிலம் பண்படுத்துதல்.

தூர் ஏறிவிட்டதன் காரணமாக கொள் அளவு இழந்துவிட்ட ஏரிகளின் படுகைகளில் தூர் எடுக்கவும், முழு ஏரி மட்டத்தை உயர்த்துவதன் மூலம் இழந்த முழு சேமிப்பு அளவில் ஒரு பகுதியை அல்லது முழு அளவையும் மீட்க இத்திட்டத்தின் கீழ் கருதப்பட்டுள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் சோதனைத் திட்டமாகத் தொடங்கிய இத்திட்டம் மாநிலம் முழுவதும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது. இரண்டாவது, மூன்றாவது திட்டங்களிலும், தொடர்ந்து ஆண்டுத் திட்டங்கள் மூன்றிலும் தூர் எடுத்தல்—நிலம் பண்படுத்துதல் திட்டத்தின் கீழ் ஏற்பட்ட செலவும், முடிக்கப்பட்ட வேலைகளின் எண்ணிக்கையும் பலன்கள் முதலியவையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

| திட்டம். (1) | முடிக்கப்பட்ட வேலைகள் (2) | செலவு. (3) (ரூபாய் லட்சத்தில்.) | பாசன வசதி அளிக்கப்படாத பகுதிகள். (4) | பலன்கள் ஏரி எதிர் வாயில் நிலம் பண்படுத்துதல். (5) | கூடுதல் உணவு உற்பத்தி ஏற்பட்ட வளம். (6) (டன்.) |
|---|---|---|---|---|---|
| இரண்டாவது திட்டம் .. | 38 | 41·75 | 2,208 | 604 | 1,255 |
| மூன்றாவது திட்டம் .. | 53 | 108·05 | 2,039 | 1,038 | 1,279 |
| 1966–67 ஆண்டுத் திட்டம் | 5 | 21·14 | 174 | 45 | 98 |
| 1967–68 ஆண்டுத் திட்டம் | 15 | *(—)5·48 | 489 | 209 | 297 |
| 1968–69 ஆண்டுத் திட்டம் | 10 | 17·75 | 488 | 163 | 285 |

* மற்ற கோட்டங்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்ட யந்திரங்களுக்கு வாடகைக் கட்டணங்கள் பெருமளவிற்கு வசூலிக்கப்பட்டதால், செலவு குறைந்துள்ளது. நடப்பாண்டில் (1969–70) ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு பாசன வசதி அளிக்கப்படாத 500 ஏக்கர் நிலத்திற்குப் பாசனமளிப்பதற்கும் 250 ஏக்கர் ஏரி எதிர்வாயில் நிலங்களைப் பண்படுத்துவதற்கும், 10 வேலைகள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. 1969–70 ஆண்டுக்கான தோராய செலவு ரூ. 12 லட்சமாகும்.



1970-71-ம் ஆண்டுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டு பாசனம் அளிக்கப்படாத 500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறவும் 250 ஏக்கர் ஏரி எதிர்வாயில் நிலங்களைப் பண்படுத்தவும் 10 வேலைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றால் 313 டன் உணவு உற்பத்தித் திறன் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. 1970-71-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 9.26 லட்சம் ஆகும்.

### பெரிய நடுத்தர திட்டங்கள்.

### 1971-72-ம் ஆண்டுக்கான திட்டம்.

1971-72-ம் ஆண்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (1969-70 லிருந்து 1973-74 வரை) இரண்டாவது ஆண்டாகும். இந்த ஆண்டில் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம், சித்தாறு-பட்டணங்கால் திட்டம், ராமநதி, கடானா நதி முதலிய முந்திய திட்டங்களில் விடுபட்ட வேலைத் திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். மேற்கூறப்பட்ட எஞ்சிய வேலை திட்டங்களைத் தவிர, தஞ்சைக் கால்வாய்களைப் புதுப்பிப்பதற்காக ரூ. 22.36 லட்சம் தனியே நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் புதிய பாசனத் திட்டங்களுக்கும் ரூ. 50 லட்சம் ஒரு மொத்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது :—

(1) பெரியாறு வாய்க்கால்களை மேம்படுத்துதல்.

(2) பாலாறு-பொரந்தலாறு திட்டம்.

(3) பரப்பலாறு திட்டம்.

(4) சின்னாறு திட்டம்.

(5) தண்டரை அணைக்கட்டுத் திட்டம

(6) நந்தன் வாய்க்காலை மீண்டும் பயனுக்குக் கொண்டு வருதல்.

(7) மருத நதித் திட்டம்.

(8) கருப்பா நதித் திட்டம்.

(9) வைப்பாற்றுத் திட்டம் (ஆத்தங்கரை).

(10) பொன்னுணியாறு திட்டம்.

(11) பிளவுக்கால் திட்டம்.

(12) தொட்டஹல்லா திட்டம்.

(13) கொல்லிமலைகள் அருகில் அய்யாறுக்குக் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல்.

தண்டரை அணைக்கட்டு, பொன்னுணியாறு, பரப்பலாறு திட்டங்களுக்கு திட்ட ஆணைக்குழுவின் இசைவு பெறப்பட்டுள்ளது.

## திட்டத்தில் சேராத வேலைகள்

ஐந்தாண்டுத் திட்ட வேலைகள் தவிர, திட்டத்தில் சேராத பல வேலைகளும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வராத மிக முக்கியமான வேலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

| திட்டத்தின் பெயர். (1) | மதிப்பிட்ட செலவு. (2) (ரூபாய் லட்சத்தில்). | தற்போதைய கட்டம். (3) |
|---|---|---|
| 1 சொர்ணூருக்கு அருகில் பொன்னியாற்றுக்குக் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல். | 30 (திருத்தப்பட்டது). | ஏறத்தாழ எல்லாப் பணிகளும் முடிந்துவிட்டன. சுமார் 200 யூனிட்டுகளுக்கு வெள்ளக் கட்டுப்பாடு அணை மட்டுமே கட்டி முடிக்கப்பட வேண்டும். இது நடந்தேறி வருகிறது. |
| 2 கோயம்புத்தூர் மாவட்டத்தில் 13 அமராவதி வாய்க்கால்களைப் புதுப்பித்தல். | 13·08 | பல்வேறு கட்டங்களில் முன்னேறி வருகிறது. |
| 3 9 தாமிரவருணி வாய்க்கால்களைப் புதுப்பித்தல். | 24·56 | 5 வாய்க்கால்களின் பணி முடிந்துள்ளது. எஞ்சிய 4 வாய்க்கால்கள் வேலை பல்வேறு கட்டங்களில் முன்னேறி வருகிறது. |
| 4 மஞ்சளாறு திட்டம் .. | 109·00 | மண் அணையின் மேல் பகுதியில் தார் போடுதல், அவசர காலங்களில் பயன்படுத்தும் கதவுகள் அமைத்தல் நீங்கலாக மற்ற எல்லாப் பணிகளும் முடிவுற்றன. |
| 5 திருச்சி மாவட்டத்தில் 7 அமராவதி வாய்க்கால்களைப் புதுப்பித்தல். | 11·72 | 2 வாய்க்கால்களைப் புதுப்பிப்பதற்கு முகவர் முடிவு செய்யப்பட வேண்டும். ஏனைய 6 வாய்க்கால்களின் பணி பல்வேறு கட்டங்களில் முன்னேறி வருகிறது. |

### ஊற்று நீர் ஆய்வு.

#### 1. பொதுப் பணித்துறை நிறைவேற்றும் பணிகள்

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1967–68-ல் செலவானது .. .. .. | 19·00 |
| 1968–69-ல் செலவானது .. .. .. | 15·93 |
| 1969–70 திருத்த மதிப்பீடு .. .. .. | 23·72 |
| 1969–70-ல் டிசம்பர் 1969 முடிய செலவானது .. | 5·67 |
| 1970–71-க்கான திட்ட மதிப்பீடு .. .. .. | 9·41 |



ஐக்கியநாடுகள் வளர்ச்சித் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பகுதிகள் நீங்கலாகத் தமிழ் நாடு முழுவதிலும் ஊற்று நீர் வாயில்கள்பற்றி முழுமையாக ஆய்வு நடத்தி விரிவாகப் பரிசீலனை செய்வதே மேற்படி திட்டத்தின் நோக்கமாகும். தொடக்கத்தில், கீழ்க்காணும் ஆறு மாதிரித் தொகுதிகள் ஆய்வுக்கு மேற்கொள்ளப்படத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் சில பகுதிகள்.

2. கோயம்புத்தூர் மாவட்டம்.

3. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டை பகுதி.

4. வைகை ஆற்று வடிநிலப் பகுதி.

5. இராமநாதபுரம் மாவட்டம்.

6. திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் சில பகுதிகள்.

மேற்படி திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒப்பளிக்கப்பட்ட பிரிவு, 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 3-ம் நாளில் அமைக்கப்பட்டது. திருச்சியில் இதன் தலைமையிடம் உள்ளது. விரிவான ஆய்வை சுமார் 5 ஆண்டுகளில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வெள்ளாறு, வைகை, நொய்யாறு, வைப்பாறு நதி வடிநிலம் ஆகிய பகுதிகளில் 18 சோதனை துளைக் கிணறுகளுக்காக நீரியல், நிலவியல் புள்ளிவிவரம் சேகரிக்கும் பணி முடிவுற்றது. வைகை ஆற்று வடிநிலப் பகுதியில் 8 சோதனைத் துளைக் கிணறுகளும், கோட்டக்கரை ஆற்று வடிநிலப் பகுதியில் 2 சோதனைத் துளைக் கிணறுகளும் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 87.00 லட்சமாக திருத்தப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

#### ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட ஊற்றுநீர் நிறுவனம் நிறைவேற்றிய பணிகள்

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1967–68-ல் செலவானது .. .. .. | 10·61 |
| 1968–69-ல் செலவானது .. .. .. | 20·65 |
| 1969–70-ல் எதிர்பார்க்கப்படும் செலவுகள் .. .. | 27·95 |
| 1969–70 ல், 1969 டிசம்பர் திங்கள் முடிய செலவு .. | 20·13 |
| 1970–71-க்கான திட்ட மதிப்பீடு .. .. .. | 23·43 |

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட ஊற்று நீர் நிறுவன நிதி உதவியுடன் இம்மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் ஊற்று நீர் ஆய்வுத் திட்டத்திற்கு அரசு ஒப்பளித்துள்ளது. கீழ்க்கண்ட பகுதிகள் ஊற்றுநீர் வாய்ப்புகளை ஆய்வு செய்வதும், இந்த வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான தொழில் நுட்ப, பொருளா

[1970 மார்ச் 25

தார வாய்ப்புக் கூறுகளை மதிப்பிடுவதும் இத்திட்டத்தின் நோக்க மாகும். இத்திட்டத்தில் (1) சென்னை மாநகரம் அதன் சுற்றுப் புறங்கள், (2) பாலாறு வடிநிலப் பகுதி, (3) நெய்வேலிப் பகுதி, (4) காவிரி கயவாய்ப் பகுதி ( delta ) ஆகிய பகுதிகள் அடங்கும். இத் திட்டம். 1966-ம் ஆண்டு மார்ச் திங்கள் 7-ம் தேதி செயல்படத் தொடங்கியது. இத்திட்ட ஆய்வுப் பணியின் முதல் நிலை 1969-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் நாளில் முடிக்கப்பட்டது. நிறைவேற்ற எடுத்துக்கொண்ட மூல திட்டத்தில் காவிரி கயவாய்ப்பகுதிக்கு போதிய இடமளிக்க முடியாததால், இரண்டாவது நிலைப் பணிக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்தச் செயல் திட்டத்தின் தலைமையிடம் தஞ்சாவூருக்கு மாற்றப்பட்டது. செயல் திட்டத் தின் இரண்டாம் நிலைப் பணி 1969-ம் ஆண்டு சூலை திங்கள் 9-ம் நாளிலிருந்து தொடங்கப்பட்டது. இரண்டாம் நிலைப் பணிக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்தச் செயல் திட்டத்தின் தலைமையிடம் தஞ்சாவூருக்கு மாற்றப்பட்டது. செயல் திட்டத்தின் இரண்டாம் நிலைப் பணி 1969-ம் ஆண்டு சூலை திங்கள் 9-ம் நாளிலிருந்து தொடங்கப்பட்டது. இரண்டாம் நிலைப்பணி சுமார் 2½ ஆண்டுகளில் முடிக்கப்படும்.

## வீராணம் நீர் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் முதலாவது நிலையாக வீராணம் ஏரியி லிருந்து நாள் ஒன்றுக்கு 40 மில்லியன் காலன் நீர் பெற்று சென்னை மாநகருக்கு அதிக அளவு நீர்வழங்குவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.

வீராணம் ஏரியில் ஒரு புதிய தலை மதகு கட்டி நீர் பெறப் படுகிறது. நெய்வேலிக்கருகில் வடக்குத்து கிராமத்தில் உள்ள தூய்மைப்படுத்தும் நிலையத்திற்கு இந்த நீர் எடுத்துச் செல்லப் படும். தூய்மை செய்யப்பட்ட நீர் 201 கிலோ மீட்டருக்கு மேற் பட்ட தொலைவிற்கு 66 அங்குல விட்டமுள்ள முன்னரே அழுத்தப் பட்ட கற்கலவை குழாய்களின் மூலம் சென்னை மாநகரில் பிரகாச முதலித் தெருவிலுள்ள தென்பகுதி தலைப் பணியிடத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

குழாய்கள் அமைக்க இத்திட்டத்திற்கு ரூ. 21.30 கோடியும் ஆண்டு பேணுதல் செலவிற்கு ரூ. 35.00 லட்சம் எனவும் மதிப் பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு 1,000 காலன் நீரின் மதிப்பு ரூ. 1.30 ஆகும்.

மேற்கொள்ளப்பட்ட பணிகளின் பல்வேறு இனங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப் பட்டவுடன், இப்பணிகள் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்படும். 1970-71-ல் இத்திட்டம் மும்முரமாக நடை பெறும். 1970-71 திட்ட மதிப்பீட்டில் இப்பணி திட்டத் திற்கு ரூ. 740 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.



1970 மார்ச் 25]

## உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து கூவம் ஆறு மேம்பாட்டுப் பணித் திட்டம்

சென்னை நகரில் ஓடும் கூவம் ஆற்றை எழில் மிகுந்ததாகவும், தூய்மையானதாகவும், நீர்ப்போக்குவரத்துக்கு ஏற்றதாகவும் அமைக்கும் பொருட்டு, மூன்று நிலைகளில் நிறைவேற்றப்படக் கூடிய ரூ. 118.50 லட்சம் செலவாகும் பணித் திட்டத்திற்கு 1967-ம் ஆண்டு ஜூலை திங்களில் அரசு ஒப்பளித்துள்ளது.

இத்திட்டத்தின் முதல் நிலையில் கீழ்க்காணும் பணிகள் திட்ட மிடப்பட்டுள்ளன :—

| | (ரூ. லட்சத்தில்) |
|---|---|
| (1) சங்கமுகத்தில் அலைதடுப்பி கலிங்கல் கட்டுதலும், பயிற்சிப் பணிகளும். | 13.70 |
| (2) தூர் எடுத்து அவற்றை அகற்றுவது முதலியவற் றிற்கான செலவு. | 10.30 |
| (3) கூவம் ஆற்றின் சங்கமுகத்தில் மணல் வாரிக் குழாய் நிறுவப்படுவதற்காகத் தோணித்துறை கட்டுதல். | 8.00 |
| | 32.00 |

முதல் நிலையில் சங்கமுகத்தில் பொறி மதகு ஒன்று கட்டப்படும். கடலுக்குச் செல்லும் கால்வாய் அமைக்கப்படும். தோணித்துறை யுடன் கூடிய மணல் வாரிக் குழாய் நிறுவப்படும். முதல் நிலைப் பணி நடந்தேறி வருகிறது. நேப்பியர் பாலத்திற்குக் கீழுள்ள ஆற்றின் இரண்டு பக்கங்களிலும் செய் கரையமைக்கும் பணி முடிக் கப்பட்டுள்ளது. கரைகளுக்குத் தடுப்புச் சுவர் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. பொறி மதகுக்காக, 17 அடி × 11 அடி அளவுள்ள 11 பெரிய கிணறுகளும் 8 அடி, 6 அங். சுற்றளவுள்ள 12 சிறிய கிணறுகளும் வார்க்கப்பட்டு சராசரி 2.26 அடி ஆழத்தில் இறக்கப்பட்டன. மணல் வாரி பம்பு வாங்கி நிறுவுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

1967-68-ல் இத் திட்டத்திற்காக ரூ. 1,23,700 செலவாகியது. 1968-69-ஆம் ஆண்டு இறுதி வரை இத்திட்டத்திற்கான செலவு ரூ. 5,23,995. 1969–70-ஆண்டு குதிருத்த மதிப்பீடு ரூ. 23.76 லட்சமாகும்.

1969–70 ல்31—1—1970 வரை இத் திட்டத்திற்கான செலவு ரூ. 14.88 லட்சமாகும். 1970-71-ல் ரூ. 12.96 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

[1970 மார்ச் 25

### இரண்டாம் நிலை

சேத்துப்பட்டு ரயில் பாலத்திற்கும் நேபியர் பாலத்திற்குமிடையில் ஆற்றின் வடக்கே வாய்க்கால் வெட்டுதல், எழில் பணிகள் ஆகியவை இரண்டாவது நிலையில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

| | (ரூ. லட்சத்தில்) |
|---|---|
| (1) சேத்துப்பட்டு ரயில் பாலத்திற்கும் நேபியர் பாலத்திற்குமிடையில் ஆற்றில் வாய்க்கால் வெட்டுதல். | 40.00 |
| (2) நேப்பியர் பாலத்திலிருந்து இரண்டு வாய்க்கால்களும் சேருமிடம் வரை ஆற்றின் வடக்குப் பகுதியில் வாய்க்கால் வெட்டுதல். | 10.00 |
| (3) எழில் பணிகள், எதிர்பாராதச் செலவினங்கள். | 12.00 |
| | 62.00 |

சேத்துப்பட்டு ரயில் பாலம்—மன்ரோ பாலத்திற்கு இடையேயும், மன்ரோ பாலம்—காலேஜ் பாலத்திற்கு இடையேயும், காலேஜ் பாலம்—கமாண்டர் இன் சிப் பாலத்திற்கு இடையேயும் உள் கால்வாய் கட்டும் பணி நடந்தேறி வருகிறது. ஸ்டான்லி மேல் பாலம் அருகிலும் நேப்பியர் பாலத்திற்கு அருகிலும் மண் எடுக்கும் பணி நடந்தேறி வருகிறது.

எழில் கூட்டும் பணிகளின் கீழ், படகு ஓட்டுநர் கழகம், நீச்சல் குளம் ஆகியவற்றைக் கட்டவும், போர் நினைவுச் சின்னத்துக்கு எதிராக பூங்கா, புல்வெளிகள் ஆகியவை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. படகு ஓட்டுநர் கழகத்துக்காக, 16 இடங்களில் கற்கலவைக் கம்பங்கள் இறக்கப்பட்டுள்ளன. நீச்சல் குளத்திற்கான கடைக்கால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செலவு (அதாவது இரண்டாம் நிலைப் பணிக்கு மட்டும்) 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதி வரை ரூ. 1.62 லட்சமாகும். 1969-70-ம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு ரூ. 21 லட்சமாகும். 1970-71-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 35 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### மூன்றும் நிலை.

மூன்றும் நிலையில், கூவம் ஆற்றின் கரையோரப் பகுதிகளிலுள்ள சேரிகள் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக ரூ. 16.45 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் 941 தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இச் செயற் குறிப்புக்கு 1969-ம் ஆண்டு ஆகஸ்டில் அரசு இசைவளித்தது. முதல்படியாக, இதுவரை 159 தீப்பிடிக்காத



1970 மார்ச் 25]

வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. எஞ்சியவை அவற்றிற்கான மனை தெரிந்தெடுக்கப்பட்டு கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மூன்றும் நிலைக்காக 1969-70-ம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு 1969-ம் ஆண்டு டிசம்பர் மாத இறுதி வரை செலவு ஏதும் செய்யப்படவில்லை. மூன்றும் நிலைக்கு 1970-71 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 6.45 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### பக்கிங்காம் கால்வாய் மேம்பாட்டுப் பணித் திட்டம்.

சென்னை மாநகரிலுள்ள பக்கிங்காம் கால்வாயை மேம்படுத்தும் சிறு அளவுப் பணிகள் மேற்கொள்ளும் திட்டத்திற்கு 1967-ம் ஆண்டு ஆகஸ்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் இப்பணிக்கு ஆகும் மதிப்பீட்டுச் செலவு ரூ. 44 லட்சம், இத்திட்டம், கீழ்க்காணும் பணிகளுக்கு வழி வகுக்கிறது:—

| | (ரூ லட்சத்தில்) |
|---|---|
| 1. மூன்றாவது திட்டத்திலிருந்து மேற்கொண்ட பணிகள். | 0.85 |
| 2. கூவம் பணிக்கு மணல்வாரி விசையேற்றம் வாங்குதல்; பக்கிங்காம் கால்வாய்ப் பணிக்குத் தகுந்த பொருத்திகளுடன் சங்கிலிச் சக்கர வண்டியுடன் இணைக்கப்பட்ட மண்வெட்டி இயந்திரத்தை வாங்குதல். | 19.15 |
| 3. கலோனல் லாஸ் பாலத்திற்கு அருகில் சிந்தாதிரிப் பேட்டையில் சரக்குத் துறை கட்டுதல் | 10.60 |
| 4. (a) தெற்கு பக்கிங்காம் கால்வாயின் 3/0 மைலிலிருந்து 3/5 வரையில் இருமருங்கிலும் பிறுக்கத்தை நிறுத்தி வைப்பதற்கு வலுவூட்டிய காங்கிரீட் சிமிட்டித் தூண்களை அமைத்தல் | 11.42 |
| (b) வடக்கு பக்கிங்காம் கால்வாயின் 1–0+330 முதல் 1–5 வரையில் விறகுத் தோணித் துறையில் சாலைகள் அமைத்தலும் அவற்றிற்குத் தார் போடுதலும் | 1.43 |
| (c) வடக்கு பக்கிங்காம் கால்வாயின் 2–7 முதல் 3–1+300 வரையில் கிளிஞ்சல் தோணித் துறையில் சாலை அமைத்தல் | 0.55 |
| | 44.00 |

மூன்றும் திட்டப் பணிகளின் எஞ்சிய பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. மணல்வாரி விசையேற்றத்துக்கான தேவைக் குறிப்புப் பட்டியல் நிறுவனங்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. விறகு தோணித் துறையிலும், கிளிஞ்சல் தோணித் துறையிலும் சாலைகள்

அமைப்பது முடிக்கப்பட்டு விட்டது. பக்கிங்காம் கால்வாய்ப் பணிக்கென 19 RBதோண்டு கருவிகள் மூன்றும் 10 RB தோண்டு கருவி ஒன்றும் வாங்கப்பட்டுள்ளன. சிந்தாதிரிப்பேட்டையில் தோணித்துறை திட்டமிட்ட 300 அடியில் 282 அடி நீளத்திற்கு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான செலவு 1968–69 இறுதிவரை ரூ. 8.77 லட்சமாகும். 1969–70-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் இதற்கென ரூ. 13 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்கென 1969-ம் ஆண்டு டிசம்பர் இறுதி வரை (1969–70-ல்) ரூ. 2.35 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1970–71 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 21.07 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## பருவ நிலைமைகள்.

1969–70-ல் தென்மேற்குப் பருவ மழை காலங்கடந்து பெய்தது. இம்மழை காவிரி ஆற்றின் நீர் வரவுப் பகுதியில் வழக்கமாகப் பெய்வதைவிட ஓரளவு குறைவாகவும், பவானி, அமராவதி, பெரியாறு, தாமிரவருணி, கோதையாறு ஆகியவற்றின் நீர் வரவுப் பகுதிகளில் இயல்பான அளவிற்குக் குறைவாகவும் பெய்தது. வட கிழக்குப் பருவ மழை இந்த ஆண்டில் மொத்தத்தில் சாதகமாகவே இருந்தது. வட கிழக்குப் பருவ மழை நன்கு பெய்ததன் காரணமாகக் கிடைத்த நீரை, பெரியாறு, வைகை, அமராவதி நீர்த்தேக்கங்களைத் தவிர, பிற திட்டங்களுக்கு மேற்படி பருவ காலம் முடியும் வரை வழங்குவதில் இடர்ப்பாடுகள் எதுவுமில்லை. இந்த இரண்டு திட்டங்களில், முறை ஏற்பாட்டை மேற்கொள்வதன் மூலம் விவேகமுடன் நீர் பகிர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றது.

பாசனப் பருவ காலத்தின் தொடக்கத்திலிருந்தே மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மிகவும் குறைந்த அளவிலேயே நீர் தேங்கி இருந்த காரணத்தினாலும் தென் மேற்குப் பருவ மழை காலங் கடந்து பெய்தாலும் நீர்த்தேக்கம் 1969 ஜூலை 7-ம் நாளன்று தான், அதாவது, 25 நாள் காலந்தாழ்த்திப் பாசனத்திற்குத் திறக்கப்பட இயன்றது. இதன் விளைவாக காவிரி சங்கமுகப் பகுதியில் பெருவாரியான நிலப் பரப்பில் குறுகிய கால அல்லது நடுத்தரக் கால வகையைச் சேர்ந்த இரண்டே பயிர்களை விளைவிப்பதற்காக இயல்பான பயிர் முறையை மாற்றி வேறு முறை பின்பற்ற வேண்டியதாயிற்று. மொர்க்காராவில் காவிரி நீர் வரவுப் பகுதியில் தென்மேற்குப் பருவ மழைக் காலத்தின்போது 2 சதவீதம் குறைவாகவே மழை பொழிந்தது. நீர்த் தேக்கத்தினுள் 16 சதவீதம் குறைவாகவே நீர் வந்து சேர்ந்தது. இந்தக் காலத்தின்போது நீர்த்தேக்கத்திற்குக் கிடைத்த நீரைக்கொண்டு பாசனத்திற்கு நீர் விடுவதை விவேகமுடனும் விழிப்போடும் முறைப்படுத்தியதன் மூலமாக குறுவையும், ஆடுதுறை 27 நெல்லும் செவ்வனே விளைவிக்கப்பட்டன.



வடகிழக்குப் பருவ மழைக் காலத்தின்போது மொர்க்காராவில் 7 சதவீதம் குறைவாகவே மழை பொழிந்தது. மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு நீர் வரவு 27 சதவீதமாகக் குறைந்து விட்டது. எனினும், வட கிழக்குப் பருவ மழைக் காலத்தில் மேட்டூரில் நீர் சேமித்து வைக்கப்பட்டு ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு பெருமளவு நீர் வழங்கப்பட்டது. சம்பாப் பயிர்கள் நன்றாகவே விளைந்து அறுவடை செய்யப்பட்டன. தாளடிப் பயிர்களுக்கு 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ம் தேதிக்குப் பிறகும் நீர் வழங்கப்பட்டு வந்தன. பாசனத்திற்கென 1970-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ம் தேதியன்று நீர்த்தேக்கத்திலிருந்து நீர் விடுவது நிறுத்தப்பட்டது. தாளடிப் பயிர்களும் நன்றாகவே விளைந்து அறுவடை செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய கட்டளை உயர் மட்டக் கால்வாயும், புள்ளம்பாடிக் கால்வாயும், 1969-ம் ஆண்டு ஆகஸ்டு 7-ம் நாளன்று திறந்து விடப்பட்டு 1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதிவரை நீர் வழங்கப்படவும் அனுமதிக்கப்பட்டது. மேட்டூர் கால்வாயும், 1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7-ம் தேதியன்று பாசனத்திற்குத் திறந்து விடப்பட்டது. 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ம் நாள் வரையில் கூடுதலான ஒரு மாத காலத்திற்கு நீர் வழங்கப்படவும் அனுமதிக்கப்பட்டது.

கீழ்பவானிக் கால்வாயின் கீழ் முதல் முறைப் பாசன ஆயக்கட்டிற்கும் 1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம்தேதி முதல் நீர் வழங்கப்பட்டது. இக் கால்வாய் 1969–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதியன்று பாசனத்துக்கு மூடப்பட்டது. நீர்த் தேக்கத்தில் போதிய அளவு நீர் இருப்பதோடு மேற்கொண்டும் நீர் வருவது எதிர்பார்க்கப்பட்டதால், இரண்டாம் முறைப் பாசனத்தின்போது, புன்செய்ப் பயிருக்கென 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் தேதி முதல் நீர் வழங்கப்பட்டு வருகிறது.

அமராவதிக் கால்வாய், வழக்கமான நாளான ஆகஸ்டு திங்கள் முதல் நாளன்று பாசனத்திற்காகத் திறந்து விடப்பட்டது. தென் மேற்கு, வடகிழக்குப் பருவ மழைக் காலங்களில் நீர்த் தேக்கத்தில் இயல்பான அளவில் சுமார் 50 சதவீதம் நீர் சேர்ந்தது. குறைந்த அளவு நீர் வரப்பெற்றதால் அமராவதி புது ஆயக்கட்டு நிலங்களுக்கு 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் தேதி வரை நீர் விடப்பட்டது. நீர்த் தேக்கத்தில் தற்போது மிகவும் குறைந்த அளவே நீர் உள்ளதால் பழைய, புதிய ஆயக்கட்டு நிலங்களுக்குச் சமமாக நீர் பகிர்ந்தளிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே, ஆயக்கட்டு நிலங்களுக்கு இடைப்பிடையில் மட்டுமே நீர் வழங்கப்பட்டு வருகிறது. அமராவதி புது ஆயக்கட்டுக்கு முதல் தடவை நீர் வழங்கப்பட்டுள்ளது. சிறிது கால இடைவெளிக்குப் பிறகு இரண்டாவது தடவை நீர் வழங்கப்படும்.

[1970 மார்ச் 25

பருவத் தொடக்கத்தில், பெரியாறு நீர்த் தேக்கத்தில் நீர் இருப்பு குறைவாக இருந்ததாலும், தென்மேற்குப் பருவமழை காலம் தாழ்த்திப் பெய்ததாலும், கம்பம் பள்ளத்தாக்கில் இரு போகப் பயிர் விளையும் பகுதிகளில் முதல் போகப் பயிருக்கு 7–7–1969 முதற்கொண்டும் பெரியாறு பள்ளத்தாக்கில் 1–8–1969 முதற்கொண்டும் நீர் வழங்க அனுமதிக்கப்பட்டது. தென்மேற்குப் பருவ மழையின்போதும் வட கிழக்குப் பருவமழையின் போதும் நீர்த்தேக்கத்தில் சேர்ந்த நீரின் அளவு வழக்கமான அளவுக்குக் குறைவாகவே இருந்தது. நீர்த் தேக்கத்தில் குறைந்த அளவே நீர் இருந்தமையால், ஒரு போகப் பயிர் விளையும் பகுதிக்கு வழக்கமான நாளான 15–8–1969 அன்று விடப்படும் நீர் 5–9–1969 முதற்கொண்டே விடப்பட்டது. திருமங்கலம் கால்வாய்க்கும் வழக்கமாக ஜூன் 1-ம் நாள் விடப்படும் நீர், 22–10–1969 முதல் விடப்பட்டது. வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்ததால், பெரியாறு பகுதியின் இரண்டாம் பயிருக்கு நீர் வழங்குவதிலுள்ள இடர்ப்பாடுகள் பற்றி உழவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பெரியாறு புதிய விரிவுப் பகுதிக்கும் நீர் வழங்கப்படவில்லை. பெரியாறு, வைகை நீர்த்தேக்கங்களில் சேமித்து வைத்திருக்கும் நீரைக் கொண்டு மாற்று முறையை மேற்கொள்வதன் மூலம் பாசனத்திற்காக, எல்லாப் பகுதிகளுக்கும் விவேகமுடன் தற்போது நீர் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

வைகை பழைய ஆயக்கட்டு நிலங்களுக்கென வைகை நீர்த்தேக்கத்திலிருந்து சிறப்பு நேர்வுகளில் நீர் விட அனுமதிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தில், பரப்பளவு முழுவதிலும் குறுவை பயிர் விளைவிப்பதற்காக, முன்னதாகவே 12–6–1969 முதல் நீர் வழங்குவது அனுமதிக்கப்பட்டது. முதலாம் பயிர் அறுவடை செய்யப்பட்ட நிலங்களில் இரண்டாம் போகப் பயிர் விளைவிப்பதற்காகவும் தற்போது நீர் வழங்கப்பட்டு வருகிறது.

சாத்தனூர் நீர்த் தேக்கத்தில், 21,000 ஏக்கர் பரப்பளவு முழுவதிலும் குறுவை நெல் பயிரிடுவதற்காக 15—1—1970 முதல் நீர் வழங்கப்படுகிறது. நீர்த் தேக்கத்தில் போதுமான அளவுக்கு நீர் இருப்பதால், திருக்கோயிலூர் அணைக்கட்டு அமைப்பின்கீழ், 7,100 ஏக்கர் நிலப் பரப்பளவில் இரண்டாம் போகப் பயிர் பயிரிடுவதற்காக நீர் வழங்கப்படும்.

வீடூர் நீர்த்தேக்கம், அக்டோபர் 1-ம் நாளன்று வழக்கமாக பாசனத்துக்குத் திறந்து விடப்படாமல், 1–11–1969 முதற்கொண்டே திறந்து விடப்பட்டது. ஏனெனில், அக்டோபர் திங்களின் பிற் பகுதியில்தான் நீர்த்தேக்கத்திற்கு அதிக அளவு நீர் வந்தது. பரப்பளவு முழுவதுக்கும் நீர் வழங்கப்பட்டது.

தாமிரவருணி அமைப்பில், பாபநாசம் நீர்த்தேக்கத்தில், பருவத் தொடக்கத்தில் நீர் இருப்பு மிகவும் குறைவாக இருந்தது. தென் மேற்குப் பருவமழைக் காலத்தின்போதும் சேர்ந்த நீர் வழக்கமான



1970 மார்ச் 25]

அளவுக்கு மிகவும் குறைவே. எனவே, மணிமுத்தாறு நீர்த் தேக்கத்திலிருந்து நீர் பெற அனுமதிக்கப்பட்டது. வடகிழக்குப் பருவ மழைக்காலத்தின்போது நீர்த்தேக்கத்திற்கு அதிக அளவு நீர் வந்து சேர்ந்ததால் பாசானப் பயிருக்கு நீர் வழங்குவதில் இடர்ப்பாடுகள் எதுவும் ஏற்படவில்லை.

மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில், 1969 டிசம்பர் திங்களின் பிற்பகுதியில்தான் அதிக அளவில் நீர் வந்து சேர்ந்தது. மணிமுத்தாறு கால்வாய், பரப்பளவு முழுவதுக்கும் பாசனத்துக்காக 1—1—1970 அன்று திறந்து விடப்பட்டது.

கோதையாறு நீர்த் தேக்கம், வழக்கமாக ஜூன் 1-ம் நாளன்று பாசனத்துக்காகத் திறந்து விடப்பட்டது. பாசனக் கால முடிவு வரை, அதாவது, 1970 பிப்ரவரி திங்கள் இறுதிவரை, நீர் வழங்கு வதில் இடர்ப்பாடு எதுவும் இருக்காது என எதிர்பார்க்கப்படு கிறது.

கோமுகி நீர்த்தேக்கம், 5,000 ஏக்கர் பரப்பிற்குப் பாசனம் அளிப்பதற்காக 5–9–1969 அன்று திறந்து விடப்பட்டது. வாய்க்கால் மூலம் நீர் விடுவது 4–4–1970 வரை இரண்டு திங்கள் கூடுதலான காலத்திற்கு அனுமதிக்கப்பட்டு வருகிறது. மஞ்சளாறு நீர்த்தேக்கம், 1,500 ஏக்கர் பரப்பிற்குப் பாசனம் அளிப்பதற்காக 1–11–1969 அன்று திறந்து விடப்பட்டது.

மணிமுக்தா நதி நீர்த்தேக்கம் இவ்வாண்டு 19–9–1969 அன்று முதல் தடவையாகப் பாசனத்திற்கென திறந்து விடப்பட்டது. 9–5–1970 வரையில் நீர் வழங்கப்படுவது நீட்டிக்கப்பட்டுள்ளது.

நெய்யாறு திட்டத்தைச் சேர்ந்த கன்னியாகுமரி கிளைக் கால்வாய்ப் பாசனத்துக்காக 26–5–1969 அன்று திறந்து விடப் பட்டது. 15–2–1970 வரை நீர் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

பெரியாறு–வைகை, அமராவதி பாசன ஏற்பாடுகளைத் தவிர, பிற எல்லா ஏற்பாடுகளிலிருந்தும் போதுமான அளவுக்கு நீர் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த நீர் வரவுப் பகுதிகளில் தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவமழையும் பொய்த்ததன் காரணமாக, பயிர் முதிர்ச்சியடையும் வரை, அவற் றிற்கு நீர் வழங்குவதில் இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இயன்ற இடங்களில் கூடுதலாக நீர் வசதி பெறுவதற்கு உழவர்கள் தாங்களே ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

[1970 மார்ச் 25

## விவர அறிக்கை 1.

### ரூபாய் 5 லட்சமும் அதற்கு மேலும் செலவாகும் முக்கிய சிறு பாசனச் சிறப்புப் பணித் திட்டங்கள்.

### இராமநாதபுரம் மாவட்டம்.

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | செலவு. (2) ரூ. |
|---|---|
| 1 கூத்தங்கால் வரவுகாலைப் புதுப்பித்தல். | 12,30,000 |
| 2 செய்களத்தூர், மற்றும் 26 ஏரிகளுக்கு நீரளிக்க, உப்பாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 10,92,700 |
| 3 ஹனுமந்தக்குடி கிராமத்தில் மணிமுத்தாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 10,16,000 |
| 4 சிறுகாம்பியூர், மற்றும் 12 ஏரிகளுக்கு நீர்வழங்க மணிமுத்தாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 6,40,000 |
| 5 ஆர். எஸ். மங்கலம் ஏரி முதலியவற்றிற்கு மேம்பாடுகள். | 26,40,000 |
| 6 சாத்தூர் வட்டம், வல்லம்பட்டிக்கருகே புது ஏரி அமைத்தல். | 5,06,000 |
| 7 சாத்தூர் வட்டம், சங்கரநத்தம் கிராமத்துக்கருகே வைப்பாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 11,14,000 |
| 8 ஹரயான காவேரி கால்வாய்களைச் சீரமைத்தல். | 10,25,000 |

### தென் ஆற்காடு மாவட்டம்.

| | |
|---|---|
| 1 இராமராஜபுரம் அணையினின்று சிறுபாசன ஏரிகளுக்கு அதிக அளவு நீர் வழங்குவது குறித்த பணிகள். | 14,16,000 |
| 2 தொழுதூர் உயர்மட்டக்கால்வாயின் கடைமடைப் பகுதிக்கு அதிக நீர் வழங்க வகை செய்ய ஆலந்துரைப்பட்டு வடிகாலின் குறுக்கே அணை கட்டுதல். | 7,50,000 |

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

| | |
|---|---|
| 1 பெரம்பலூர் வட்டம், லாடபுரம் கிராமத்தில் கோனேரி ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுதல். | 7,73,500 (திருத்த மதிப்பீடு) 11,50,000 (மூல மதிப்பீடு) |
| 2 முசிரி வட்டம், கொப்பம்பட்டிபுதூர் கிராமத்தில் ஏரி ஒன்றை அமைத்தல். | 13,86,000 |
| 3 முசிரி வட்டம், சோபனபுரம் கிராமத்தில் புதிய ஏரி ஒன்றை அமைத்தல். | 6,05,000 |



1970 மார்ச் 25]

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | செலவு. (2) ரூ. |
|---|---|

### மதுரை மாவட்டம்

| | |
|---|---|
| 1 பழனி வட்டம் நவகனி கிராமத்தில் புதிய ஏரி ஒன்றை அமைத்தல். | 5,39,000 |
| 2 பெரியகுளம் வட்டம், நரசிங்கபுரம் கிராமத்தில் உள்ள பெரியகுளம், சிறுகுளம் இரண்டிற்கும் நீர் வழங்க வைகையின் குறுக்கே அணை கட்டுதல். | 6,30,000 |

### தஞ்சாவூர் மாவட்டம்.

| | |
|---|---|
| 1 நற்பவளக்குடி, மற்றும் 11 ஏரிகளுக்கு அதிக நீர் வழங்க வகைசெய்ய வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டுதல் | 5,05,000 / 9,54,000 |
| 2 பூவனம் கிராமத்தில் அக்கினியாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 9,47,100 |
| | 14,41,000 |

### வட ஆற்காடு மாவட்டம்.

| | |
|---|---|
| 1 கமண்டல நாகநதியின் (ஆரணி வட்டம்) குறுக்கே அணை கட்டுதல். | 2,55,000 (மூல மதிப்பீடு) 6,55,000 (திருத்த மதிப்பீடு) |

### கோயம்புத்தூர் மாவட்டம்.

| | |
|---|---|
| 1 கோபி வட்டம், புஞ்சை புளியம்பட்டி கிராமத்தில் கோயில்புதூர் அருகேயுள்ள பெரியபள்ளம் குறுக்கே ஏரி ஒன்றை அமைத்தல். | 5,55,000 |
| 2 கோபி வட்டம், வேமந்தபாளையம் கிராமத்தில் கொளத்தூர் பள்ளம் குறுக்கே ஏரி ஒன்று அமைத்தல். | 6,00,000 |
| 3 கோபி வட்டம், வரபாளையம் கிராமத்தைச் சேர்ந்த சந்தைபாளையத்தின் அருகில் ஏரி ஒன்றை அமைத்தல். | 5,94,000 |
| 4 பவானி வட்டம், சென்னம்பட்டி கிராமத்தின் அருகில் புதிய ஏரி அமைத்தல். | 7,65,000 |

### சேலம் மாவட்டம்.

| | |
|---|---|
| 1 அம்மாபாளையம் கிராமத்தின் அருகே கல்லாற்றின் குறுக்கே ஏரி ஒன்றை அமைத்தல் | 8,93,000 |
| 2 செம்மலைக்கும் சிவிலிக்காடுக்கும் இடையே பெரிய பள்ளத்தின் குறுக்கே ஏரி ஒன்றை அமைத்தல். | 5,18,000 |

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | செலவு. (2) ரூ. |
|---|---|
| **தருமபுரி மாவட்டம்.** | |
| 1 தருமபுரி வட்டத்தைச் சேர்ந்த மண்டல பள்ளத்தின் குறுக்கே ஏரி ஒன்றை அமைத்தல். | 6,52,000 |
| 2 ஹஒசூர் வட்டத்தைச் சேர்ந்த பைரநாயக்கன்பட்டியிலுள்ள துலுக்கன் ஏரியை மீண்டும் பயன்படும் நிலைக்குக் கொணர்தல். | 4,85,000 |
| **திருநெல்வேலி மாவட்டம்.** | |
| 1 திருநெல்வேலி வட்டத்திலுள்ள கங்கைகொண்டான் கிராமத்திலுள்ள பராக்கிரம பாண்டியன் ஏரியை மீண்டும் பயன்படும் நிலைக்குக் கொணர்தல். | 11,33,425 |
| 2 தூத்துக்குடி வட்டம், கோரம்பள்ளம், பொட்டைக்குளம் ஏரிகளின் முழு ஏரி மட்டத்தை உயர்த்துவது. | 5,17,470 |
| 3 அம்பாசமுத்திரம் வட்டம், கன்னடியன் கால்வாயைப் புதுப்பித்தல். | 5,59,000 |
| 4 திருநெல்வேலி கால்வாயைப் புதுப்பித்தல். | 7,14,600 |
| 5 அலந்தா கிராமத்திற்கருகே ஓடும் காட்டாற்றின் குறுக்கே அணை கட்டுதலும் அதிலிருந்து ஸ்ரீவைகுண்டம் வட்டம், உளக்குடி ஏரிக்கு நீர் வழங்கு கால்வாய் ஒன்றைத் தோண்டுதல். | 5,22,000 |
| 6 கோவில்பட்டி வட்டம், கொள்ளம் பாம்பு கிராமத்தின் அருகே புதிய ஏரி ஒன்றை அமைத்தல். | 9,39,000 |
| **கன்னியாகுமரி மாவட்டம்.** | |
| 1 அருவிக்கரை இடக்கரைக் கால்வாயையும் வலக்கரைக் கால்வாயையும் மேம்படுத்தல். | 5,08,000 |
| **செங்கற்பட்டு மாவட்டம்.** | |
| ஒன்றுமில்லை. | |



## விவர அறிக்கை II

**1969–70-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட சிறுபாசன** சிறப்பு பணித் திட்டங்களும், தூரெடுத்துப் பண்படுத்தும் பணித் திட்டங்களும் (ஆதாயம் தரக்கூடிய திட்டங்கள்).

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | செலவு. (2) ரூ. |
|---|---|
| **திருநெல்வேலி மாவட்டம்.** | |
| 1 திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டம், மேய்ப்பாறை கிராமத்தின் அருகே உப்போடையின் குறுக்கே புது ஏரி ஒன்றை அமைத்தல். | 1,40,000 |
| **மதுரை மாவட்டம்.** | |
| 2 தூரெடுத்துப் பண்படுத்தும் திட்டத்தின் கீழ் உசிலம்பட்டி வட்டத்திலுள்ள முதலைகுளம் ஏரியை மேம்படுத்தும் பணிகள். | 1,22,300 |
| 3 மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம், நரசிங்கபுரம் கிராமத்தின் அருகே வைகையாற்றின் குறுக்கே அணை கட்டல். | 6, 43,000 |
| 4 நிலக்கோட்டை வட்டம் (H.O) குலசேகரன் கோட்டை கிராமத்தின் சிற்றூராகிய வாளிப்பட்டி அருகில் பழனியாண்டவர் ஓடையின் குறுக்கே ஓர் ஏரியை அமைத்தல். | 2,24,600 |
| 5 தூரெடுத்துப் பண்படுத்தும் திட்டத்தின்கீழ், நிலக்கோட்டை வட்டம், சோழவந்தான் வடகரைக் கண்மாயினை மேம்படுத்தல். | 4,10,000 |
| 6 மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தின் மேற்குப் பகுதிகளில் ஏரிப்பணித் திட்டங்களை நீட்டிப்பது குறித்த செயற்குறிப்பு. | 11,00,000 |
| **தஞ்சாவூர் மாவட்டம்.** | |
| 7 தஞ்சாவூர் மாவட்டம், மண்ணியாற்றின் கீழ் அணை 59/7-396 மைலிலிருந்து பொது வரவுகாலை வெட்டுதல். | 2,47,000 |
| 8 பட்டுக்கோட்டை வட்டம், அரசர்குளம் கிராமம் மருதன்குடியாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | 3,50,000 |
| 9 தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் கொறுக்கை அணையை பொறிமதகாக மாற்றியமைத்தல். | 1,20,000 |

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | செலவு. (2) ரூ. |
|---|---|
| **தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி.** | |
| 10 தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, மன்னார் குடி, திருத்துறைப்பூண்டி வட்டங்களில் வடிகால் வசதி செய்ய பாமணியாற்றினின்று கடலுக்கு நேரடியான தொடர்ச்சி வெட்ட. | 12,20,000 |
| 11 தஞ்சாவூர் மாவட்டம் நாகைபட்டினம் வட்டத்தின் 85/72 மைலில் வெள்ளையாற்றின் குறுக்கே ஒரு பொறிமதகைக் கட்டுதல். | 1,45,000 |
| 12 தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் மணக்குடிக் கிராமத்தில் மணக்குடி வடிகாலின் வடிகால் மேம்பாடுகள் குறித்து. | 1,11,000 |
| 13. தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் உம்பளாச்சேரி கிராமத்தில் நீர் இறைக்கும் திட்டத்தின் மூலம் பாசன வசதி செய்ய. | 1,95,000 |
| 14 தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், கீழக்குறிச்சி கிராமத்தில் கண்ணனாற்றின் குறுக்கே ஒரு படுகை அணை கட்டல். | 2,02,000 |
| 15 தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம் தணிக்கை விடுதி கிராமத்தில் நரியாற்றின் குறுக்கே ஒரு படுகை அணை கட்டுதல். | 3,00,000 |
| 16 தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, திருத் துறைப்பூண்டி வட்டங்களில் பாமணியாற்றின் கீழ்ப் பகுதிகளில் வடிகால் மேம்பாடுகள் செய்ய. | 2,62,000 |
| 17 தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டத்தில் மகிளஞ்சேரி வடிகாலை மேம்படுத்தல். | 1,84,000 |
| 18 காவிரியாற்றின் 45–5–615 (கீழ்பவானி) மைல் தூரத்தில் ஓர் தலைமதகு அமைத்து அப்புதிய மதகின் வரவுகாலை தஞ்சாவூர் மாவட்டம், கும்ப கோணம், பாபநாசம் வட்டங்களில் பாயும் மண்ணியாற்றுடன் இணைத்தல். | 3,33,840 |
| 19 தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட் டத்தில் பொறிமதகு ஒன்றைக் கட்டி, வளவ னாற்றின் வடிகாலுக்கு மேம்பாடு | 5,20,000 |
| **செங்கற்பட்டு மாவட்டம்.** | |
| 20 செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், அரண்வாயில் கிராமத்தின் திண்ணனூர் மற்றும் குடப்பாக்கம் ஏரிகளுக்கு நீரளிக்க கூவம் ஆற்றின் குறுக்கே அணை கட்ட. | 3,68,400 |





| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | செலவு. (2) ரூ. |
|---|---|
| **கோயம்புத்தூர் மாவட்டம்.** | |
| 21 கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், அவிநாசி கிராமம், S.F. 6-ம் எண்ணில் நல் லாற்றின் குறுக்கே குளம் ஒன்று அமைத்தல். | 1,20,000 |
| 22 கோயம்புத்தூர் மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு கிராமத்தின் S.F. 635 எண்ணில் ஈரோடு சென்னிமலைச்சாலையில் 3/6 மைலில் குறுக்கிடும் வடிகாலைப் பயன்படுத்தல். | 1,23,000 |
| 23 கோயம்புத்தூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், குளத்துப்பாளையம், நல்லபாளையம் கிராமங்களில் நல்லதங்காள் ஓடைக்குக் குறுக்கே அணை கட்டு தலும் உடையார் குளம் ஏரி மற்றும் அதன் நீர் வரவு காலை மீண்டும் பயன்படுத்தும் நிலைக்குக் கொண்டு வருதலும். | 3,56,630 |
| 24 கோயம்புத்தூர் மாவட்டம், கோபி வட்டம், பூசாரி பாளையம் கிராமத்தில் உள்ள அம்மன்கோவில் பள்ளத்தின் குறுக்கே ஏரி ஒன்றை அமைத்தல். | 1,28,800 |
| **சேலம் மாவட்டம்.** | |
| 25 சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், சிவசங்கர புரம் குடியிருப்பின் அருகே உள்ள மாவூத்து ஓடையின் குறுக்கே புது ஏரி ஒன்றை அமைத்தல். | 2,48,000 |
| 26 சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அம்மன்பாளை யத்திற்கு அருகில் கல்லாற்றின் குறுக்கே ஏரி ஒன்றை அமைத்தல். | 8,93,350 |
| 27 சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம், மணிவிழுந் தான் கிராமத்தில் கல்லாற்றின் குறுக்கே புதிய ஏரி ஒன்றை அமைத்தல். | 70,000 |
| 28 சேலம் மாவட்டம், சேலம் வட்டம், புதுப்பாளையம் கிராமத்தில் கோட்டைப்பள்ளத்தின் குறுக்கே புது ஏரி ஒன்றை அமைத்தல். | 1,35,000 |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்.** | |
| 29 திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், மணியகுறிச்சி கிராமத்துக்கருகே சண்முக நதியின் குறுக்கே ஏரி ஒன்றைப் புதிதாக அமைத்தல். | 2,20,000 |

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | செலவு. (2) |
|---|---|
| | ரூ. |
| **தருமபுரி மாவட்டம்.** | |
| 30 தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டம், வேலனூர் கிராமத்தில் கோவிலாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டுதல். | 1,60,000 |
| 31 தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டம், நரிப்பள்ளி கிராமத்தின் அருகே கல்லாற்றின் குறுக்கே அணை ஒன்று கட்டுதல். | 1,90,000 |
| 32 தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டம், குள்ளூர் கிராமத்தில் குப்பம்மா செருவு ஏரியை மீண்டும் பயன்படுத்தும் நிலைக்குக் கொண்டுவர. | 2,30,000 |
| 33 தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், சின்ன மடாரப்பள்ளி கிராமத்திலுள்ள ரெங்கப்ப நாயக்கன் ஏரியை மீண்டும் பயன்படுத்தும் நிலைக்குக் கொண்டுவர. | 3,00,000 |
| 34 தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், பெரும்பாலை கிராமத்து சாணாரப்பட்டிக்கருகே, நாகவதி ஆற்றின் குறுக்கே அணை ஒன்று கட்டுதல். | 2,80,000 |
| 35 தருமபுரி மாவட்டம், ஓசூர் வட்டம், எல்லப்புடையாம்பட்டி கிராமத்தில் வரட்டாற்றின் குறுக்கே உள்ள எல்லப்புடையாம்பட்டி அணையை மீண்டும் பயன்படுத்தும் நிலைக்குக் கொண்டு வருதலும் அங்கு உள்ள நான்கு ஏரிகளுக்கு நீர் வழங்குவதற்காக வரவுகால் ஒன்றை வெட்டுதலும், அந்த நான்கு ஏரிகளைச் செப்பனிடுதலும். | 3,00,000 |
| **இராமநாதபுரம் மாவட்டம்.** | |
| 36 இராமநாதபுரம் மாவட்டம், சிவகங்கை வட்டத்தில் உள்ள 26 ஏரிகளுக்கு கூடுதல் நீர் வழங்குவதற்காக செய்குளத்தூர் வரவுகால் பிரியும் இடத்தில் உப்பாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டுதல். | 9,93,400 |
| **வட ஆர்க்காடு மாவட்டம்.** | |
| 37 வட ஆர்க்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், தொழுப்பேடு மற்றும் எட்டு ஏரிகளுக்கு நீர் வழங்குவதற்காக வரவுகால் ஒன்றை வெட்டுதல். | 1,74,000 |



## விவர அறிக்கை III.

**சிறு பாசன சிறப்புப் பணித் திட்டங்கள், தூர் எடுத்து செப்பனிடும் பணித்திட்டங்கள் ஆகியவற்றின் பட்டியல்—உரிய ஆதாயம் தராதவை—1969–70-ல் ஒப்பளிக்கப்பட்டவை.**

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | செலவு. (2) |
|---|---|
| | ரூ. |
| 1 சாத்தூர் வட்டத்தில் (முன்னாள் ஜமீன்) கம்சம்பட்டி கிராமத்தில் உப்போடை குறுக்கே புதிய ஏரி ஒன்று அமைத்தல். | 2,45,000 |
| 2 சாத்தூர் வட்டத்தில் மீனம்பட்டி கிராமத்தில் ஒரு புதிய ஏரி அமைத்தல். | 1,94,000 |
| 3 ஸ்ரீ வில்லிப்புத்தூர் வட்டத்தில், ராமச்சந்திரபுரம் கிராமத்தில் அச்சந்தவிர்த்தான் பெரியகுளம் ஏரிக்கு நீர் வழங்க நெடுங்குளம் ஓடைக்கு குறுக்கே அணைக்கட்டு ஒன்று கட்டுதல். | 40,000 |
| 4 சிவகங்கை வட்டத்தில் செம்பானூர் கிராமத்தில் உள்ள கட்டக்கனி ஏரிக்கு சிறப்பு செப்பனிடு பணிகள். | 9,700 |
| 5 திருவாடனை வட்டத்தில் சுக்கிரப்பட்டி கிராமத்தில் உள்ள சுக்கிரபட்டி ஏரிக்கு சிறப்புச் செப்பனிடு பணிகள். | 12,100 |
| 6 திருவாடனை வட்டம் (முன்னாள் ஜமீன்) முத்துராமலிங்கப்பட்டினத்தில் உள்ள மாலக்கரை ஏரிக்கு சிறப்புச் செப்பனிடு பணிகள். | 20,000 |
| 7 திருவாடனை வட்டத்தில் உள்ள சின்னக்கரை ஏரிக்கு சிறப்புச் செப்பனிடு பணிகள். | 14,500 |
| **திருநெல்வேலி மாவட்டம்.** | |
| 8 அம்பாசமுத்திரம் வட்டத்தில் ஊர்க்காடு கிராமத்தில் உள்ள வடக்கு பனைக்குளம் ஏரிக்கு சிறப்புச் செப்பனிடு பணிகள். | 3,500 |
| 9 ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் திம்மராஜபுரம் கிராமத்தில் உள்ள தண்டல்காரன் குளம் ஏரிக்கு சிறப்புச் செப்பனிடு பணிகள். | 2,700 |
| 10 கோயில்பட்டி வட்டத்தில் "எல்" வெங்கடேஸ்வரபுரம் கிராமத்திற்கு அருகில் ஒரு புதிய ஏரி ஒன்று அமைத்தல். | 2,90,000 |
| 11 ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் திம்மராஜபுரம் கிராமத்தில் உள்ள சுட்டிக்குளம் ஏரிக்கு சிறப்புச் செப்பனிடு பணிகள். | 4,366 |

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். (1) | செலவு. (2) |
|---|---|
| | ரூ. |
| 12 தென்காசி வட்டத்தில் குளப்பனேரியில் உள்ள வல்நாயக்கன்குளம் ஏரிக்கு சிறப்புச் செப்பனிடு பணிகள். | 8,400 |
| **திருச்சிராப்பள்ளி மாவட்டம்.** | |
| 13 திருமயம் வட்டத்தில் இடையாத்தூர் கிராமத்தில் உள்ள தனிக் குளம் ஏரியைப் புதுப்பித்தல். | 9,900 |
| 14 குளத்தூர் வட்டத்தில் உப்பிலக்குடி கிராமத்தில் உள்ள ராஜப்பொக்கனிக் குளம் ஏரிக்கு சிறப்புச் செப்பனிடு பணிகள். | 11,500 |
| 15 திருமயம் வட்டம் நல்லூர் கிராமத்தில் உள்ள சிறு கண்மாய்க்குச் சிறப்புச் செப்பனிடு பணிகள். | 9,500 |
| **தருமபுரி மாவட்டம்.** | |
| 16 தருமபுரி வட்டத்தில் எனயெனஹள்ளி கிராமத்தில் உள்ள புது ஏரிக்கு சிறப்புச் செப்பனிடு பணிகள். (முன்னாள் ஜமீன்). | 7,100 |
| **தஞ்சாவூர் மாவட்டம்.** | |
| 17 அறந்தாங்கி வட்டத்தில் குப்பத்தேவன், மற்றுமுள்ள ஏரிகளுக்கு நீர் வழங்க மடின்னுற்றுக்குக் குறுக்கே அணைக்கட்டு ஒன்று கட்டுதல். | 2,14,000 |
| **தென் ஆர்க்காடு மாவட்டம்.** | |
| 18 திருக்கோயிலூர் வட்டத்தில் மருங்கியூர் ஊற்றுக் கால்வாய்க்கு தரைச்சுவர் ஒன்றும் தலை மதகு ஒன்றும் கட்டுதல். | 2,00,000 |
| **மதுரை மாவட்டம்.** | |
| 19 பெரியகுளம் வட்டத்தில் பொட்டிப்புரம் கிராமத்தில் உள்ள கோட்டக்காரன்குளம் ஏரிக்கு சிறப்புச் செப்பனிடு பணிகள். | 5 100 |
| 20 பெரியகுளம் வட்டம் அத்தங்கரைப்பட்டி கிராமத்தில் உள்ள வள்ளல் நாச்சியின் குறுக்கே அணைக்கட்டு ஒன்று கட்டுதல். | 4,80,000 |
| **தார் எடுத்துப் பண்படுத்துதல்.** | |
| **இராமநாதபுரம்.** | |
| 21 ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம், கான்சாபுரம் கிராமத்தில் உள்ள சிவனேரிக்கு தூர் எடுத்துப் பண்படுத்தும் பணித் திட்டத்தின் கீழ் மேம்பாடுகள். | 1,60,000 |



## விவர அறிக்கை IV.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழும், ஆண்டுத் திட்டங்களின் மூன்றின் கீழும் திட்டச் சாதனைகளையும், பிற விவரங்களையும் காட்டுகிற விவர அறிக்கை.

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | எந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. அல்லது நீர்வரவு வாயில். | ஆதாயம் அடைந்த மாவட்டம். | வேலை தொடங்கிய ஆண்டு. | வேலை நிறைவுற்ற ஆண்டு. | செலவு. | செயல் திட்டத்தின் கீழ் முடிவான பரப்பளவு. புதிய பரப்பளவு | செயல் திட்டத்தின் கீழ் முடிவான பரப்பளவு. பழைய ஆயக் கட்டுகளை நிலைப் படுத்தல். | 1969-70 முடிவில் எதிர்பார்க்கப்படும் பாசனப் பரப்பளவு. புதிய பரப்பளவு. | 1969-70 முடிவில் எதிர்பார்க்கப்படும் பாசனப் பரப்பளவு. பழைய ஆயக் கட்டுகளை நிலைப் படுத்தல். | குறிப்புரைகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | (ரூபாய் லட்சத்தில்) | (ஏக்கர்.) | | (ஏக்கர்.) | | |
| **முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது எடுத்துக்கொண்ட பாசனத் திட்டங்கள் (1951-56).** | | | | | | | | | | |
| 1 கீழ் பவானி .. | பவானி .. .. | கோயம்புத்தூர், திருச்சி. | 1949 | 1956 | 1,034·00 | 2,07,000 | .. | 1,95,000 | .. | நெற் பயிருக்குப் பாசன வசதி அதிகரிப்பதால் 1,95,000 ஏக்கர் நிலங்கள் முடிவாகப் பயன்படும் |
| 2 கோதையாறு திட்டம். | கோதையாறு .. | கன்னியாகுமரி .. | 1949 | 1956 | 53·72 | .. | 1,17,400 | .. | 1,17,400 | இரு போகம் பயிரிடுவதால் மொத்தப் பரப்புகொடுக்கப்பட்டுள்ளது.) |

| தொடர் எண்ணும், திட்டத்தின் பெயரும். | எந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது அல்லது நீர் வரவு வாயில். | ஆதாயம் அடைந்த மாவட்டம். | வேலை தொடங்கிய ஆண்டு. | வேலை நிறைவுற்ற ஆண்டு. | செலவு | செயல் திட்டத்தின் கீழ் முடிவான பரப்பளவு. | | 1969–70 முடிவில் எதிர்பார்க்கப்படும் பாசனப் பரப்பளவு. | | குறிப்புரைகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | புதிய பரப்பளவு. | பழைய ஆயக் கட்டுகளை நிலைப் படுத்தல். | புதிய பரப்பளவு. | பழைய ஆ கட்டுகளை நிலைப் படுத்தல். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | | | | | (ரூபாய் லட்சத்தில்) | (ஏக்கர்.) | | (ஏக்கர்.) | | |
| **முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது எடுத்துக்கொண்ட பாசனத் திட்டங்கள் 1951—56—தொடர்ச்சி.** | | | | | | | | | | |
| 3 காவிரி சங்கமுகப் பகுதியில் வடிகால் ஏற்பாடு. | காவிரிச் சங்கமுகப்பகுதி | தஞ்சாவூர் .. .. | 1947 | 1856 | 30·00 | .. | 40,000 | .. | .. | தஞ்சாவூர் மாவட்டத்தில் நீரில் மூழ்கியுள்ள பகுதிகளிலிருந்து நீரை வடிக்கட்டும் வேலை நடைபெறும். |
| 4 மேட்டூர் கால்வாய்த் திட்டம். | காவிரி .. .. | கோயம்புத்தூர், சேலம். | 1949 | 1957 | 1,92·91 | 45,000 | .. | 45,000 | .. | .... |
| 5 மணிமுத்தாறு நீர்த் தேக்கம். | மணிமுத்தாறு .. | திருநெல்வேலி .. | 1950 | 1958 | 5,05·00 | 20,000 | 83,000 | 20,000 | 83,000 | .... |
| 6 அமராவதி நீர்த் தேக்கம். | அமராவதி .. .. | கோயம்புத்தூர் .. | 1953 | 1958 | 3,34·14 | 21,500 | 32,000 | 21,500 | 32,000 | .... |
| 7 வைகை நீர்த் தேக்கம். | வைகை .. .. | மதுரை, ராமநாதபுரம். | 1954 | 1959 | 3,30·00 | 2,280 | .. | 22,020 | .. | .... |
| 8 கிருஷ்ணகிரி நீர்த் தேக்கம். | பொன்னியாறு .. | தர்மபுரி .. .. | 1955 | 1959 | 2,02·43 | 9,000 | .. | 9,000 | .. | .... |
| 9 சாத்தனூர் நீர்த் தேக்கம். | பொன்னியாறு .. | வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு. | 1954 | 1958 | 2,58·00 | 21,000 | .. | 21,000 | .. | .... |
| 10 ஆரணியாறு நீர்த் தேக்கம். | ஆரணியாறு .. | செங்கல்பட்டு .. .. | 1951 | 1957 | 1,05·89 | 2,530 | 2,036 | .. | 6,066 | இத்திட்டத்தின் தலைப்புப் பகுதி ஆந்திரப் பிரதேசத்திற்கு மாற்றப் பட்டுள்ளது. எனவே, தமிழ் நாட்டிலுள்ள பரப்பளவு 6,066 ஏக்கர்கள் மட்டுமே. |
| 11 புதிய கட்டளை உயர் மட்டக் கால்வாய். | காவிரி .. | திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர். | 1957 | 1960 | 2,24·58 | 20,622 | .. | 20,620 | .. | .... |
| 12 புள்ளம்பாடிக் கால்வாய். | காவிரி .. .. | திருச்சிராப்பள்ளி .. | 1957 | 1960 | 2,05·88 | 22,114 | .. | 22,114 | .. | .... |
| 13 வீடூர் திட்டம் .. | வராக நதி .. .. | தென் ஆர்க்காடு, புதுச்சேரி. | 1958 | 1959 | 88·94 | 3,200 | .. | 3,200 | .. | ஆயக்கட்டின் கீழ் முடிவு நடவடிக்கை செய்யப் படுவதற்கான பரப்பளவு 5,800 ஏக்கர் மட்டுமே. |
| 14 நெய்யாறு திட்டம் .. | நெய்யாறு .. .. | கன்னியாகுமரி .. | 1958 | 1966 | 1,09·06 | 5,800 | .. | 5,800 | .. | இப்போதுள்ள கால்வாய்களைப் புதுப்பிக்கும், பழைய ஏரிகளைப் புதுப்பிப்பதும், இப்போதுள்ள பரப்பளவுக்குப் பாசன வசதி மேம்படுத்துவதும் இத் திட்டங்களின் குறிக்கோளாகும் |

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது எடுத்துக்கொண்ட பாசனத் திட்டங்கள் 1951-56—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 பரம்பிக்குளம், ஆழியாறு திட்டம். | பரம்பிக்குளம், ஆழியாறு. | கோயம்புத்தூர் .. | 1959 | .. | 67,53.00 | 247,000 | | 120,000 | .. | .... |
| 16 கன்னியாகுமரி மாவட்டத்தில் நடுத்தரப் பாசனத் திட்டம். | கோதையாறு பாசன ஏற்பாடு. | கன்னியாகுமரி .. | 1957 | 1961 | 22·00 | .. | .. | .. | .. | .... |

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புதிய பாசனத் திட்டங்கள் (1961-66).

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 பாலாறு அணைக்கட்டு—கால்வாய்களை மேம்பாடு செய்தல். | பாலாறு .. .. | வட ஆர்க்காடு, செங்கற்பட்டு. | 1961 | 1966 | 63·00 | 3,285 | .. | 3,285 | .. | .... |
| 18 சாத்தனூர் திட்டம், இரண்டாம் நிலை. | பொன்னியாறு .. | தென் ஆர்க்காடு .. | 1961 | 1966 | 60·00 | 5,000 (இருபோகம்.) | .. | 5,000 | .. | |
| 19 கோமுகி நதித் திட்டம் | கோமுகி .. .. | தென் ஆர்க்காடு .. | 1963 | 1965 | 1,21·00 | 5,000 | .. | 5,000 | .. | .... |
| 20 சித்தாறு—பட்டணங்கால் திட்டம். | கோதையாறு .. | கன்னியாகுமரி, திருநெல்வேலி. | 1963 | .. | 7,34·88 | 32,320 | 14,680 | .. | .. | .... |
| 21 மஞ்சளாறு திட்டம் .. | மஞ்சளாறு .. | மதுரை .. .. | 1963 | 1966 | 1,05·00 | 2,000 | 3,136 | .. | .. | இவ் வேலைத்திட்டம் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து எடுக்கப்பட்டு விட்டது. |

1966-67 ஆண்டுத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புதிய பாசனத் திட்டங்கள்.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 22 மணிமுக்தா நதித் திட்டம். | மணிமுக்தா நதி .. | தென் ஆர்க்காடு .. | 1966 | 1969 | 1,17·61 | 4,000 | 250 | 2,250 | 250 | .... |
| 23 கடானா நதித் திட்டம் | கடானா நதி .. | திருநெல்வேலி .. | 1966 | .. | 1,73·80 | 1,000 | 7,112 | .. | .. | .... |
| 24 ராம நதித் திட்டம் .. | ராம நதி .. .. | திருநெல்வேலி .. | 1969 | .. | .. | 500 | 1,500 | .. | .. | .... |

1967-68ம் ஆண்டுத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புதுத் திட்டம்.

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25 வைகைக் கால்வாய்களைப் புதுப்பித்தல். | வைகை .. .. | மதுரை .. .. | 1967-68 | .. | 3,95·00 | 13,900 | 95,882 | .. | .. | .... |

1968-69 ஆண்டுத் திட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட புதுப் பணித் திட்டங்கள்.

ஒன்றுமில்லை.

## விவர அறிக்கை V.

### 1970–71-க்கான பாசன வேலைத் திட்டம்.

(மேல் எண் : புதிய பரப்பு, கீழ் எண் : பழைய ஆயக்கட்டுகளுக்கு பாசன வசதியை உறுதிப்படுத்துதல்.)

| தொடரிலக்கம், திட்டத்தின் பெயர். (1) | 1970–71-க் கான நிதி ஒதுக்கம். (2) (ரூ. லட்சத்தில்) | திட்டக் குறிக்கோள் அளவு. பாசன வளம். (3) (அலகு: 000 | பயன். (4) ஏக்கர்கள்.) |
|---|---|---|---|
| 1 பரம்பிகுளம்-ஆழியாறு திட்டம் | 270·82 | 140·00 | 140·00 |
| 2 சித்தாறு-பட்டணங்கால் திட்டம் | 45·25 | 25·00<br>5·00 | 19·00<br>5·00 |
| 3 மணிமுக்தா நதித் திட்டம் | 0·16 | 4·00 | 4·00 |
| 4 ராமநதித் திட்டம் | 30·00 | 0·25<br>0·25<br>1·50 | 0·25<br>0·20<br>1·00 |
| 5 கடனா நதித் திட்டம் | 40·00 | 0·50<br>3·00 | 0·50<br>3·00 |
| 6 வைகை வாய்க்கால்களைப் புதுப்பித்தல் | 31·78 | ..<br>10·00 | ..<br>10·00 |
| 7 தஞ்சாவூர் வரவு கால்களைப் புதுப்பித்தல் | 22·36 | 5·00 | 4·00 |
| 8 பெரியாற்றின் வரவுகால்களைப் புதுப்பித்தல் | | | |
| 9 பரப்பலாறு பணித் திட்டம் | | | |
| 10 பாலாறு-பொரான்தலாறு பணித் திட்டம் | | | |
| 11 சின்னாறு பணித் திட்டம் | | | |
| 12 தண்டரைப் பணித் திட்டம் | | | |
| 13 நந்தன் கால்வாய்களைச் சீரமைத்தல் | 50·00 | .. | |
| 14 மருதநதிப் பணித் திட்டம் | | | |
| 15 கருப்பாநதிப் பணித் திட்டம் | | | |
| 16 வைப்பாற்றின் குறுக்கே அணைகட்டல் (ஆத்தங்கரை) | | | |
| 17 பொன்னியாறு பணித் திட்டம் | | | |
| 18 பிளவுக் கால்பணித் திட்டம் | | | |
| 19 தொட்டஹள்ளா பணித் திட்டம் | | | |
| 20 கொல்லிமலைகளின் அருகே அய்யாற்றின் குறுக்கே அணை கட்டுதல் | | | |

## இணைப்பு IV

[34-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

### தமிழ்நாட்டு சாலை வளர்ச்சித் திட்டம்.

### (1969–70-ஆம் ஆண்டுக்குரிய அறிக்கை)

### நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் துறை.

மக்களுக்கும் உற்பத்திப் பொருள்களுக்கும் வளம் சேர்க்கும் போக்கு வரத்தை அளிப்பதாலும் பண்ணையைப் பட்டிணத்தோடும், பணிக்களரிகளை நாட்டுப்புறத்தோடும் இணைப்பதாலும் உழவுத் தொழிலைத் தூண்டி அதன் தற்போதைய அண்டி நிற்கும் பொருளாதார நிலையை உயர்த்துவதாலும், வேளாண்மை, தொழில் வாணிகங்களின் போக்குவரத்துத் தேவைகளை ஏற்கும் வகையில், முழுமை வாய்ந்ததாகவும் திறன்மிக்கதாகவும் உள்ள ஒரு சாலை அமைப்பு மிகவும் இன்றியமையாததாகும். மாநிலத்தின் சாலை அமைப்புக்கும் ஊராட்சி ஒன்றியங்களையும், ஊராட்சிகளையும் சேர்ந்த சாலைப் பணிகளுக்கும் பொறுப்பு வகிக்கும் நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை, சாலைப் போக்குவரத்து குறித்த சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கும் நிதி வசதி கிட்டுவதற்குட்பட்டு இயன்ற அளவு திறமையுடன் மேம்படுத்தல், பேணி வருதல் குறித்த திட்டங்களை வகுக்கிறது.

சாலைத் திட்டம் சாலைகளின் அணுகு வசதி, சாலை நேர்பாடு (alignme t) சாலைத்திறன் என மூன்று வகைப்படும். நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள சாலைகளைவிட நமது மாநிலத்தில் உள்ள சாலைகளின் நீளம் அதிகமாக உள்ளது. இதனால் அணுகு வசதிக்கான தேவைகளை நிறைவு செய்யும் வகையில் நமது மாநிலச் சாலைகள் அமைந்துள்ளன. எனவே, நாம் இதைப்பற்றிப் பெருமிதம் அடையலாம், என்றாலும் பிற்பட்ட மாவட்டங்களில் சாலை அணுகு வசதிகளையொட்டிச் சில மேம்பாடுகள் செய்ய வேண்டியுள்ளது நேர்பாடுகளைப் பொறுத்தவரையில் விட்டுப் போன இணைப்புகளை அமைத்தல், மதகு பாலங்களையும், ஆற்றுக் கடவுகளில் பாலங்களையும் அமைத்தல் நில, வடிவமைப்புகளை மேம்படுத்துதல், வளைவான சாலைகளையும் நோக்குதல் ஆகிய பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. அதிக அளவு போக்குவரத்தைக் குறைந்த செலவில் மேற்கொள்ள இயலும் வகையில் சாலைப் போக்குவரத்தை விரைவுபடுத்துவதற்கு இவை அவசியமாகும். கடைசியாக, ஆனால் முக்கியத்துவத்தில் குறையாததாக இருப்பது, சாலைபோடும் பிரிவின் திறனாகும். பெருகி வரும் மோட்டார் போக்கு வரத்துக்கிணங்க, வளர்ந்து வரும், எதிர் பார்க்கப்படும் தேவைகளை நிறைவு செய்வதற்காக சாலைகளின் திறன் அதிகரிக்கப்படவேண்டும்.





வண்டிகள் செல்வதற்கான ஒரு பாதை அகலப்பிரிவுகள் பல பாதைப்பிரிவுகளாக அகலப்படுத்தப்பட வேண்டும். சாலையோரமுள்ள நடைபாதைகளும், கட்டுமானங்களும் வலுப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் மிகுந்த பாரங்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளும், பெரிய வண்டிகளும் அந்தச் சாலைகளில் செல்ல இயலும், போக்குவரத்துப் பொருளாதாரத்தில் வண்டிகள் போக்குவரத்தில் சிக்கனம் ஏற்பட வழி ஏற்படும்.

திட்டமிடும் பணிக்கு முடிவு என்பதில்லை. அது இடைவிடாமல் தொடர்ந்துவரும் ஒரு நடைமுறையாகும். எனவே மேற்குறிப்பிட்ட சிக்கலைத் தீர்த்து நிதி வாயில்களுக்கும் செலவுகளுக்கும் இடையில் ஒரு சமன நிலையை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய பின்னணியில் நெடுஞ்சாலைகள்-கிராமப்பணிகள் துறையின் நடவடிக்கைகள் குறித்த ஆய்வுரைகள் ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்பட்டபோது தமிழ்நாட்டு சாலைகளின் மொத்த நீளம் 21,198 மைல்களாக (34,115 கிலோ மீட்டர்களாக) இருந்தது. முதல் திட்ட முடிவில் இந்த நீளம் 24,045 மைல்களாக (38,697 கிலோ மீட்டர்களாக) உயர்ந்தது இரண்டாவது திட்டக்காலத்தில் மேலும் 1,822 மைல் (2,932 கிலோ மீட்டர்கள்) கூடிற்று. மூன்றாவது திட்டத் தொடக்கத்தில் சாலைகளின் மொத்த நீளம் 25,867 மைல்களாக (41,629 கிலோ மீட்டர்களாக) இருந்தது. மூன்றாவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளின்மூலம் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் உட்பட 10,889 மைல்கள் (17,524 கிலோ மீட்டர்கள்) சாலை அமைக்க முடிந்தது. 1965–66-ம் ஆண்டு முடிவில் ஊராட்சி-ஊராட்சி ஒன்றியச் சாலைகள் உட்பட, நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையின் பொறுப்பிலிருந்த சாலைகளின் நீளம் 36,756 மைல்கள் (59,153 கிலோ மீட்டர்கள்) ஆகும். 1969 ஏப்ரல் 1-ல் அவைகளின் மொத்த நீளம் 42,000 மைல்களாக (67,592 கிலோ மீட்டர்களாக) இருந்தது. 1969–70-ல் 1,000 மைல் (1,609 கிலோ மீட்டர்கள்) புதிய சாலை போடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டுச் சாலை பற்றிய புள்ளி விவரம், இந்தியாவின் சாலைகள் பற்றிய விவரங்களோடு ஒப்பிடப்பட்டுள்ளது. ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு எத்தனை மைல் நீளமுள்ள சாலை உள்ளதென்ற விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு சாலையின் நீளம். (மைல்களில்.) |
|---|---|
| இந்தியா முழுவதும் .. .. .. | 123 |
| தமிழ் நாடு .. .. .. | 125 |

இதுவரை நிறைவேற்றப்பட்ட சாலைப் பணிகளைப் பற்றியும் 1970–71 ஆண்டுக்குரிய திட்டங்களைப் பற்றியும் கீழே ஆய்வுரை கொடுக்கப்பட்டுள்ளது வளர்ச்சித் தேவைகளுக்கு இன்றியமையாது வேண்டுகிற சாலைப்பணிகளை நிறைவேற்றுதல் அதே நேரத்தில் சாலை அமைக்கும் மூலதனச் செலவை முடிந்தவரை சுருக்குதல் ஆகிய இரண்டு நோக்கங்களும் எய்தப் பெரும் வகையிலேயே அடுத்து வரும் ஆண்டிலும் சாலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

சாலை வளர்ச்சித் திட்டங்கள் கீழ்க்காணும் பெரும் பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன:—

(அ) மத்திய அரசுத் திட்டம்—தேசீய நெடுஞ்சாலைகள்.

(ஆ) மாநிலத் திட்டங்கள்—மத்திய உதவி பெறும் திட்டங்களும் மத்திய அரசுத் திட்டங்களும்.

### (அ) மத்திய அரசுத் திட்டம்—தேசிய நெடுஞ்சாலைகள்.

தேசிய நெடுஞ்சாலைகளென அழைக்கப்படும் முக்கிய நீள பெருஞ்சாலைகளை அமைக்கும் பொறுப்பையும், பேணிவரும் பொறுப்பையும் இந்திய அரசு ஏற்றுள்ளது. ஆயினும், அப்பணிகளை இந்திய அரசின் சார்பில் மாநில நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையே நிறைவேற்றி வருகிறது. நகரங்களுக்கு வெளியே 20,000-ம் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையும் உள்ள இடங்களில் அமைந்துள்ள இத்தகைய சாலைப் பகுதிகளின் மூலச் செலவு முழுவதையும் இந்திய அரசு ஏற்கிறது. நகரங்களில் அமைந்துள்ள இச் சாலைகளில் புதிய அமைப்புகளுக்கான செலவை மாநில அரசும், உள்ளாட்சி மன்றமும் பகிர்ந்து கொள்கின்றன. இவற்றைப் பேணி வருவதற்காகும் செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்கிறது. நகர எல்லைகளுக்குள் உள்ள இத்தகைய சாலைகளைப் பேணி வருவதற்காகும் செலவை இந்திய அரசு கொடுக்கிறது. இவ்வாறு கொடுக்கப்படுகிற செலவுத் தொகை மைல் ஒன்றுக்கு ரூபாய் 5,000 அல்லது நடைமுறையில் ஆகும் செலவு இவற்றுள் எது குறைந்ததோ அதுவேயாகும்.

முதலாவது, இரண்டாவது திட்டக்கால அளவுகளில் தேசிய நெடுஞ்சாலைகளின் மேற்பரப்பை மேம்படுத்தவும், சாலைகள் போடவும் பெரும் பாலங்கள், சிறு பாலங்கள் ஆகியவற்றுக்காகவும் முறையே ரூ. 151 லட்சமும், ரூ. 182 லட்சமும் செலவிடப்பட்டன. மூன்றாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 200 லட்சம். ஆனால் இந்திய அரசு ஒதுக்கிக் கொடுத்தது ரூ. 152 லட்சம் மட்டுமே. செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 152 லட்சமாகும்.

தமிழ் நாட்டில் இத்தகைய நெடுஞ்சாலைகள் அனைத்தும் அநேகமாக இரு அணிப்பாதைகள் கொண்டவை. முக்கிய நகரங்களின் நெரிசலான போக்குவரத்தைத் தவிர்த்து அந்த நகரங்களுக்கு வெளியே புறச்சாலைகள் அமைக்க வேண்டியது



தற்போது அவசியமாகியுள்ளது. மதுரை மாநகரின் வெளிப்புறம் அமைக்கப்பட்டிருக்கும் புறச்சாலை, வைகை ஆற்றின் பாலம், திருச்சி நகரின் வெளிப்புறம் அமைக்கப்பட்டிருக்கும் சுமார் 7 மைல் நீள புறச்சாலை, காவிரிப்பாலம் ஆகியவை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் முடிக்கப்பட்டவையாகும். புறச்சாலை அமைக்கத் தேவையான நிலத்தை அரசுச் சட்டத்தின்படி கையகப்படுத்துவதற்கு பல ஆண்டுகளாகும். எனவே புறச்சாலை அமைக்கத் தேவையான நிலத்தை கையகப்படுத்தும் பணியை மேற்கொள்வதுடன், இரண்டாவது திட்டத்தில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாத வேலைகளை முடிப்பதில் மட்டுமே மூன்றாவது திட்டக்காலத்தில் நாட்டம் செலுத்தப்பட்டது. கீழ்க்காணும் நகரங்களுக்கான புறச்சாலைகளுக்குரிய நிலப்பகுதியை கையகப்படுத்தும் வேலைகள் பல நிலைகளில் நடந்து வருவதுடன் ஆய்விலும் இருந்து வருகின்றன. ஸ்ரீபெரும்பூதூர், பூவிருந்தவல்லி, வாணியம்பாடி, விஷாரம், வேலூர், கோவில்பட்டி, திருநெல்வேலி' இராமநாதபுரம், சென்னை சுமையேற்றிய நிலையில் 12 டன் வரை எடையுள்ள வண்டிகள் செல்வதற்கு ஏற்ற முறையில் சிறு பாலங்கள் பலவற்றை வலுப்படுத்தும் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

இப்போதுள்ள தேசீய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்காகவும், அவற்றின் வளர்ச்சிக்காகவும், நான்காவது திட்டக்காலத்தில் மத்தியத் துறை வேலைத் திட்டத்தின் பகுதியாக இந்திய அரசு ரூ. 22.85 கோடி ஒதுக்கிக் கொடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வாரணாசி, கன்னியாகுமரி சென்னை-பெங்களூர், சென்னை-கல்கத்தா சாலைகள் போன்று இந் நாட்டினை இணைக்கின்ற நீள்பெரும் சாலைகளின் பகுதிகள் தமிழ் நாட்டிலே அமைந்துள்ளன. நான்காவது திட்டக்காலத்தில் இச் சாலைகளின் வளர்ச்சிக்காக ரூ. 18.50 கோடி செலவிடக் கருதியுள்ளது. இதில் வலுவற்ற நிலையிலுள்ள சாலைகளைத் தரமுயர்த்துவதற்காக ரூ. 414 லட்சம் செலவிடப்படும்; புதிய பாலங்கள் கட்ட ரூ. 50 லட்சம் செலவிடப்படும். நான்கு அணிப் போக்குவரத்து நடைபெறும் வகையில் வண்டி செல்பாதைகளை அகலப் படுத்துவதற்கு ரூ. 500 லட்சம் செலவழிக்கப்படும். வேறு சில சாலைகளில் இரண்டு அணிப்போக்குவரத்து நடைபெறும் வகையில் வண்டிச் செல்பாதைகளை அகலப்படுத்துவதற்கும், தார் போடுவதற்கும் ரூ. 145 லட்சம் செலவழிக்கப்படும். ரூ. 216 லட்சம் செலவில் மேம்பாலங்கள் அல்லது சுரங்கப்பாதைகள் கட்டுவதற்கும், ரூ 250 லட்சம் செலவில் புறச்சாலைகள் அமைப்பதற்கும், இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. பாம்பனில் ரூ. 4.35 கோடி செலவில் சாலைப் பாலம் ஒன்றைப் புதிதாகக் கட்டவும் கருத்துரை வழங்கப்பட்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டபின் ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் கால அளவுகளில் அதாவது 1966–67, 1967–68, 1968–69, நான்காவது ஐந்தாண்டுத்

திட்டத்தின் முதல் ஆண்டாகிய 1969-70 ஆகிய ஆண்டுகளில் கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள இந்திய அரசு அனுமதித்துள்ளது:—

| தொடர் எண். (1) | பணியின் பெயர். (2) | மதிப்பீட்டுச் செலவு. (3) (ரூ. லட்சத்தில்.) | பணியின் நிலை (4) |
|---|---|---|---|
| 1 | (செங்கற்பட்டு மாவட்டம்) தாம்பரத்திற்கு அருகில் 16/7-வது மைலில் தற்போதுள்ள சாலை இருப்புப் பாதை கடவுக்குப் பதிலாக 17/4-வது மைலில் கட்டப்படவிருக்கும் மேம்பாலத்திற்கு அணுகு சாலை அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்துதல். | 6·10 | நிலம் கையகப்படுத்துவது வருவாய்த் துறையினால் முடிவு செய்யப்படாமல் உள்ளது. |
| 2 | (செங்கற்பட்டு மாவட்டம்) தாம்பரத்திற்கு அருகில் தெற்கு நெடுஞ்சாலையின் (GST) 17/3-வது மைலில் உள்ள மேம்பாலத்திற்கு அணுகு சாலைகள் கட்டுதல். | 8·82 | பணி முடிவடையும் நிலையில் உள்ளது. |
| 3 | (செங்கற்பட்டு மாவட்டத்தில்) 45-ம் எண் தேசீய நெடுஞ்சாலையில் சுரங்கப்பாதை உட்பட 17/4-வது மைலில் உள்ள பாலத்தின் அணுகு சாலைகளில் குறுக்கு வடிகால்கள் அமைத்தல். | 1·68 | பணி இப்பொழுது தான் முடிவடைந்துள்ளது. |
| 4 | (செங்கற்பட்டு மாவட்டத்தில்) 5-ம் எண் தேசீய நெடுஞ்சாலையில் 32/8-வது மைலில் உள்ள பாலங்களுக்கு அணுகு சாலைகள் அமைத்தல். | 2·02 | பணி நிறைவேறி வருகிறது. |
| 5 | (செங்கற்பட்டு மாவட்டத்தில்) 5-ம் எண் தேசீய நெடுஞ்சாலையில் சென்னை-கல்கத்தா சாலையின் 16/2–4-வது மைலில் கொற்றலையாற்றின் குறுக்கே உள்ள வலுவற்ற பாலத்தைப் புதுப்பித்தல். | 19·60 | பணி நிறைவேறி வருகிறது. |
| 6 | (செங்கற்பட்டு மாவட்டத்தில்) 5-ம் எண் தேசீய நெடுஞ்சாலையில் 32/2-வது மைலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல். | 6·33 | பணி எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. |
| 7 | (மதுரை மாவட்டத்தில்) மதுரை-போடி ரெயில்வே எல்லைகளுக்காக தெற்கு நெடுஞ்சாலையின் 295/4–301/3-வது மைலில் மதுரை புறச்சாலையில் மேம்பாலங்களுக்கு அணுகுசாலைகள் அமைத்தல். | 3·24 | பணி நிறைவேறி வருகின்றது. |



| தொடர் எண். (1) | பணியின் பெயர் (2) | மதிப்பீட்டுச் செலவு. (3) (ரூ. லட்சத்தில்.) | பணியின் நிலை. (4) |
|---|---|---|---|
| 8 | (மதுரை மாவட்டம்) திண்டுக்கல்லில் 45-ம் எண் தேசீய நெடுஞ்சாலை 7-ம் எண் தேசீய நெடுஞ்சாலையில் புறச்சாலை ஒன்று கட்டுதல். | 7·66 | நிலம் கையகப்படுத்துவது முடிவடையவில்லை. |
| 9 | ராமேஸ்வரம் சாலை ரயில் நிலையம் வழியாக ராமேஸ்வரம் நகரிலிருந்து தனுஷ்கோடிக்குச் சாலை அமைத்து சரளைக்கல் பரப்புதல். | 15·59 | பணி நிறைவேறி வருகின்றது. |
| 10 | (ராமநாதபுரம் மாவட்டத்தில்) ராமேஸ்வரம் சாலை ரயில் நிலையம் வழியாக ராமேஸ்வரம் நகரிலிருந்து தனுஷ்கோடிக்குச் செல்லும் சாலையில் குறுக்கு வடிகால் பணிகளும், சிறிய பாலங்களும். | 5·47 | பணி நிறைவேறி வருகின்றது. |
| 11 | (ராமநாதபுரம் மாவட்டத்தில்) ராமேஸ்வரம் சாலை ரயில் நிலையம் வழியாக ராமேஸ்வரம் நகரிலிருந்து தனுஷ்கோடிக்குச் செல்லும் சாலையில் தார் போடுதல். | 2·16 | பணி எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. |
| 12 | மேற்கூறிய சாலையின் மேற்பரப்பில் சாலைக்கல் பரவியிருப்பதற்கு மேல் தார் போடுதல். | 3·35 | பணி எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. |
| 13 | (திருச்சி மாவட்டம்) தேசிய நெடுஞ்சாலை கி.மி. 310, 322-ல் உள்ள புதிய காவிரி பாலத்தின் அணுகுசாலையில் நடைபாதையை வலுப்படுத்துதல். | 7·76 | பணி முடிவடையும் நிலையில் உள்ளது. |
| 14 | (தருமபுரி மாவட்டம்) 7-ம் எண் தேசீய நெடுஞ்சாலையில் 173/7 முதல் 175/7-வது மைல் வரை திருப்பு சாலை ஒன்றை அமைத்தல். | 3·15 | பணி முடிவடையும் நிலையில் உள்ளது. |
| 15 | சேலம்-கொச்சின் சாலையில் 47-ம் எண் தேசீய நெடுஞ்சாலை 308/1-வது மைலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல். | 1·84 | பணி எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. |

சென்னை- திருச்சி-திண்டுக்கல் சாலையின் 86/4 மைலில் ரூ. 11.75 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்ட சங்கராபரணி பாலம் குறித்த வேலை தொடர் பணியாக எடுத்து முடிக்கப்பட்டது. தனுஷ்கோடியில் கடற் பாலத்தை ரூ. 17 லட்சம் செலவில் சீர்படுத்தும் பணி இம் மாநிலத்திற்கு உதவி மானியத்திட்டமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதற்காகும் செலவிற்கு மத்திய நிதியிலிருந்து தொகை வழங்கப்படும். இந்தப் பணி நிறைவேறி வருகின்றது.

(ஆ) மாநிலத் திட்டங்கள்—மத்திய உதவி பெறும் திட்டங்களும் மத்திய அரசு திட்டங்களும்.

(நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்) 1966–71 ஆண்டுக்கென நான்காவது திட்டம் வகுக்கப்பட்டபோதிலும், அது ஏற்பளிக்கப் பட்டு நிறைவேற்றப் படவில்லை. மூன்றாவது திட்டம் முடிவடைந்த பின்னர் 1966-67, 1967-68, 1968-69 ஆண்டுகளுக்குறிய ஆண்டுத்திட்டங்களுக்கு ஏற்பளிக்கப்பட்டு, பணிகள் நிறைவேற்றப் பட்டன. மூன்றாவது திட்ட காலத்திலும் அடுத்துவந்த ஆண்டுத் திட்டக்கால அளவுகள் மூன்றிலும் அதாவது 1966-67, 1967-68 1968-69 ஆண்டுகளில் வேளாண்மை பாங்கான மாவட்டங்களிலே சாலை வளர்ச்சிப் பணியை எத்துணை விரைவாக மேற்கொள்ள வேண்டுமோ, அத்துணை விரைவாக மேற்கொள்ள முடியவில்லை. தொழிற்சாலைப் பணிகளுக்குப் பயன்படுகிற சாலைப் பணிகளுக்கு முதலிடம் அளித்ததே இதற்குக் காரணமாகும். (1) வேளாண்மைப் பகுதிகள், (2) வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள், பின்னிலைப் பகுதிகள், (3) தொழிற்சாலைப் பகுதிகள் ஆகிய பல்வேறு துறைகளிலும் சாலைகள் மேம்படுத்துவதே நான்காவது திட்டக் கருத்தாகும். ரூ. 37 கோடிக்குத் தீட்டி அனுப்பப்பட்ட புதிய நான்காவது திட்டம் (1969-74) முனைப்பாக ஆராயப்பட்டு வருகிறது. இவற்றுள் மத்திய சாலைத் திட்டங்களும் பொருளாதார பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலைத் திட்டங் களும், கிழக்குக் கடற்கரைசாலை திட்டங்களும் அடங்கும். புதிய நான்காவது திட்டத்தில் கூறப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டால் நான்காவது திட்டத் தொடக்கத்தில் (அதாவது) 1—4—1969 அன்றைய நிலவரப்படி தமிழ் நாட்டில் இருந்த சாலைகளின் நீளம் 42,000 மைல்களாக இருக்க நான்காவது திட்ட முடிவில் தமிழ் நாட்டில் மொத்தம் 48,434 மைல் நீளமுள்ள சாலைகள் இருக்கும்.

நான்காவது திட்டத்தின் தொடக்கத்தில் (அதாவது) 1—4—1969 அன்று ஒரு சதுர மைலுக்கு 0.834 மைல் சாலை இருந்தது. ஆனால், நான்காவது ஐந்தாண்டு திட்ட முடிவில் ஒரு சதுர மைலுக்கு 0.962 மைல் சாலை இருக்கும்.

தனித்தனி, திட்டங்களின் சுருக்க விவரம், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு (1969—74), 1966–67, 1967–68, 1968–69 ஆகிய மூன்று ஆண்டுத் திட்டங்களின்போது எய்திய சாதனை, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டாகிய 1969-70-ம் ஆண்டின் சாதனை 1970–71-ம் ஆண்டிற் குரிய வேலை திட்டம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

### மாநில நெடுஞ்சாலைகள்—அரசுச் சாலைகள் மத்திய உதவி பெறுபவை.

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| முதல் திட்டக்கால் அளவு (1951–56) செலவு (கணக்கு) .. | 163·00 |
| இரண்டாவது திட்டக்கால் அளவு (1956–61) செலவு (கணக்கு). | 296·00 |



| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| மூன்றாவது திட்டக்கால அளவு (1961–66) செலவு (கணக்கு) | 572·19 |
| **ஆண்டுத் திட்டக்கால அளவு—(செலவு)** | |
| 1966–67 (கணக்கு) .. .. .. .. | 65·30 |
| 1967–68 (கணக்கு) .. .. .. .. | 52·34 |
| 1968–69 (கணக்கு) .. .. .. .. | 41·54 |
| நான்காவது திட்ட தற்காலிக நிதி ஒதுக்கீடு (1969–74) .. | 900·00 |
| 1969–70 (திருத்த மதிப்பீடு) (நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டு). | 28·16 |
| நான்காவது திட்டத்தின் இரண்டாவது ஆண்டாகிய 1970–71-ன் செலவு (வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு). | 55·69 |

மேற்கூறிய ஆண்டுத் திட்டக் காலங்களின் திட்டச் சாதனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

மாநில அரசினரால் பேணிவரப்படும் சாலைகளின் வளர்ச்சிக்கு இத் திட்டம் வகை செய்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்கப்பட்ட பிறகு நிதி வசதி இடற்பாடாக இருந்த காரணத்தால் ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் கால அளவுகளில் அதாவது 1966–67, 1967–68, 1968–69 ஆண்டுகளிலும் நான்காவது திட்டக் காலத்தின் முதல் ஆண்டிலும் (அதாவது) 1969-70-லும் இதுவரை 49 பணிகள் ரூ. 277.55 லட்சத் திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு நிறைவேற்றி முடிக்கப்பட்டன. இதன் விவரத்தை 1-ம் அட்ட வணையில் காணலாம்.

| தொடர் எண். | வகை. | யூனிட். | ஆண்டுத் திட்டக் காலங்கள் 1966–67. | 1967–68. | 1968–69. | நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டு 1969–70. (எதிர்பார்க்கப்பட்டது). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | தார்போட்ட கற் கலவை. | மை. ப. | 1—2 | .. | .. | .. |
| 2 | தார் போடுதல் .. | ,, | 8—1 | 8—2 | 2—1 | 0—3 |
| 3 | மேம்பாடுகள் .. | எண்ணிக்கை | 2—63 | 1—88 | 6—57 | 6—10 |
| 4 | பெரிய பாலங் களும், மதகுப் பாலங்களும். (Causeways) | ,, | 4—31 | 4—27 | 5—67 | 3—55 |
| 5 | சிறிய பாலங்களும் மதகுப் பாலங் களும். (Culverts) | ,, | 6—67 | 3—68 | 3—60 | 6—53 |
| 6 | சிறிய பாலங்களும் மதகுப் பாலங் களும். | ,, | .. | 2—5 | 11—1 | 8—1 |
| 7 | புதிய சாலை அமைப்புகள். | ,, | .. | .. | 1—2 | .. |

தற்போது எடுத்துக் கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்படுகிற சில பெரிய பாலங்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்படுகின்றன:—

(1) வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வடயலுப்பையும், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பெரும்பாக்கத்தையும் இணைக்கும் வகையில் பாலாற்றின் குறுக்கே நீர்க் கடவுப்பாலம் (செலவு ரூ. 6 லட்சம்).

(2) தென் ஆற்காடு மாவட்டத்தில் பாப்பனப்பட்டி வழுதாவூர் சாலையில் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே பாலம் (செலவு ரூ. 12.00 லட்சம்).

(3) திருநெல்வேலி நகர எல்லையில் திருநெல்வேலி செங்கோட்டை சாலையில் ¼ மைலில் சாலை இருப்புப்பாதை கடவிற்குக் குறுக்கே மேம்பாலம் (செலவு ரூ. 35 லட்சம்).

(4) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை குமாரலிங்கம் சாலையின் 9/8 மைலில் அமராவதி நதியின் குறுக்கே பாலம் (செலவு ரூ. 6 லட்சம்).

(5) தஞ்சாவூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டை மீமிசல் சாலையின் 12/4 மைலில் அக்கினியாற்றின் குறுக்கே பாலம் (செலவு ரூ. 10 லட்சம்).

(6) தஞ்சாவூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டை மீமிசல் சாலையின் 7/4 மைலில் நசுவானியாற்றின் குறுக்கே பாலம் (செலவு ரூ. 4.50 லட்சம்).

(7) தஞ்சாவூர் மாவட்டத்தில் முத்துப்பேட்டை மீமிசல் சாலையின் 21/7–8 மைலில் அம்புலியாற்றின் குறுக்கே பாலம் (செலவு ரூ. 10 லட்சம்).

(8) தஞ்சாவூர் மாவட்டத்தில் பூந்தோட்டம் காரைக்கால் சாலையின் 4/7–8 மைலில் அரசாலாற்றின் குறுக்கே பாலம் (செலவு ரூ. 5 லட்சம்).

(9) திருச்சி மாவட்டத்தில் தஞ்சாவூர்-திருச்சி சாலையின் 28/6 மைலில் ரெயில்வே மேம்பாலம் (செலவு ரூ. 9.37 லட்சம்).

(10) திருச்சி மாவட்டத்தில் தஞ்சாவூர்-திருச்சி சாலையின் 32/6 மைலில் உள்ள இருப்புப் பாதைக் கடவிற்குப் பதிலாக மேம்பாலம் (செலவு ரூ. 8.80 லட்சம்).

1969–70-ல் நிறைவேற்றப்பட்ட சில பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| தொடர் எண்ணும், பணியின் பெயரும். | செலவு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. சுண்ணாம்பேட்டை சாலையின் 1/5 மைலில் பாலம் கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 2.11 |
| 2. சுண்ணாம்பேட்டை சாலையில் 1/7 மைலில் பாலம் கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 3.00 |



| தொடர் எண்ணும், பணியின் பெயரும். | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 3. கடலூர்-விருத்தாசலம் சாலையில் 16/2 மைல் முதல் 21/4 மைல் வரை, 32 அடி சாலை அமைத்து தாரிட்ட பரப்பை 22 அடியாக அகலப்படுத்துதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 3.00 |
| 4 கடலூர்-சிதம்பரம் சாலையின் 2/6 மைலில் பாலம் கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 2.18 |
| 5. விருத்தாசலம்-தொழுதூர் சாலையின் 2/5 மைலில் தற்போதுள்ள வளைவு பாலத்திற்குப் பதிலாக மூழ்குப் பாலம் கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 4.40 |
| 6. விருத்தாசலம்-தொழுதூர் சாலையின் 3/4 மைலில் உள்ள குழாய் நீர்க் கடவுப் பாலத்திற்குப் பதிலாக மூழ்குப் பாலம் ஒன்று கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 5.50 |
| 7. கடலூர்-சிதம்பரம் சாலையின் 0/5–6 மைலில் கடிலம் ஆற்றின் குறுக்கே இரண்டாவது பாலம் கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 24.20 |
| 8. நிலம் கையகப்படுத்தல் செலவு உட்பட விருத்தாசலத்திலிருந்து காட்டுக் கூடலூர் சாலை வரை சாலை அமைத்தல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 7.42 |
| 9. இரண்டு பக்கங்களிலும் நடை பாதை கட்டி, கடலூர்-விருத்தாசலம்-சேலம் சாலையின் 37/7–8 மைலில் மணிமுத்தாறு நதியின் குறுக்கே பாலத்தை அகலப்படுத்துதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 4.95 |
| 10. ஆண்டியூர்-அம்மாப்பேட்டைச் சாலையின் 5/6-7 மைலில் பாலம் கட்டுதல் (கோயம்புத்தூர் மாவட்டம்). | 2.33 |
| 11. தூத்துக்குடி நகரத்தையும், துறைமுகத்தையும் இணைக்கின்ற இணைப்புச் சாலை கட்டுதல் (திருநெல்வேலி மாவட்டம்). | 9.39 |
| 12. பரவக்குடி-கோவில்பட்டி சாலையின் 8/4 மைலில் நீர்க்கடவுப் பாலம் கட்டுதல் (திருநெல்வேலி மாவட்டம்). | 2.00 |
| 13. தூத்துக்குடி-திருச்செந்தூர் சாலையில் சிறு பாலங்களை அகலப்படுத்துதல், வலுப்படுத்துதல், புதுப்பித்தல் (திருநெல்வேலி மாவட்டம்). | 4.50 |
| 14. வேலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கடலூர்-சித்தூர் சாலை மைல் 117/7-லிருந்து 118/2 வரை அகலப்படுத்தியும், உயர்த்தியும் மேம்படுத்தல். | 2.00 |

| தொடர் எண்ணும் பணியின் பெயரும். | செலவு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 15. திருச்செங்கோடு-பள்ளிப்பாளையம் சாலையின் 0/0 மைல் முதல் 10/7 மைல் வரை தற்போதுள்ள மதகுப் பாலங்களையும், சிறிய பாலங்களையும் புதுப்பித்தல் (சேலம் மாவட்டம்). | 1.30 |
| 16. திருச்செங்கோடு-பள்ளிப்பாளையம் சாலையின் 0/0 மைல் முதல் 10/1 மைல் வரை பள்ளத்திற்கு மேல் மதகு பாலங்கள் கட்டுதல் (சேலம் மாவட்டம்). | 1.75 |
| 17. கடலூர்-சிதம்பரம் சாலையின் 0/0 மைல் முதல் 1/5 மைல் வரை மதகுப் பாலங்களை புதுப்பித்தல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 1.00 |
| 18. கடலூர்-சிதம்பரம் சாலையின் 1/6 மைல் முதல் 4/2 மைல் வரை சிறு மதகு பாலங்களை புதுப்பித்தல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 1.10 |
| 19. விருத்தாசலம்-பரங்கிப்பேட்டை சாலையின் 2/8 மைலில் சாலை அணைக்கட்டுதல், 21/4 மைலில் மதகுப் பாலங்களைப் புதுப்பித்தல், 23/5-6 மைலில் குழாய் மதகு பாலங்களைக் கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 0.66 |

நான்காவது திட்டத்தின் இரண்டாமாண்டில் அதாவது 1970–71-ல் (இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 3-வது விவர அறிக்கையின்படி) 2-ஆம் பகுதியின்கீழ் ரூ. 220.80 லட்சம் செலவுள்ள 35 வேலைத்திட்டங்கள் அரசின் ஒப்புதலுக்காகப் பரிந்துரைக்கப் பட்டுள்ளன. இவற்றில் ரூ. 204.80 லட்சம் செலவுத் தொகையிலான 34 வேலைத் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளன. எஞ்சிய வேலைகளுக்கும், புதிய வேலைகளுக்கும் 1970–71-ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 65.69 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஏனைய சாலைகள் (ஊராட்சி—ஊராட்சி ஒன்றியச் சாலைகள்)

(மத்திய அரசின் உதவி பெறுபவை.)

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| முதல் திட்டக்கால அளவு (1951–56) செலவு (கணக்கு) | 159.00 |
| இரண்டாவது திட்டக்கால அளவு (1956–61) செலவு (கணக்கு). | 205.00 |
| மூன்றாவது திட்டக்கால அளவு (1961–66) செலவு (கணக்குகள்). | 107.00 |



### ஆண்டுத் திட்டக்கால அளவுகள் (செலவு).

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1966–67 (கணக்குகள்) ... | 13.51 |
| 1967–68 (கணக்குகள்) ... | 23.41 |
| 1968–69 (கணக்குகள்) ... | 32.46 |

### நான்காவது திட்ட தற்காலிக நிதி ஒதுக்கம்.

| | (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1969-74 ... ... ... ... ... ... ... | 190.00 |
| 1969-70 (திருத்த மதிப்பீடு) (நான்காவது திட்ட முதல் ஆண்டு). ... ... ... ... ... ... | 30.00 |
| 1970-71 (திருத்த மதிப்பீடு) நான்காவது திட்ட இரண்டாம் ஆண்டு). ... ... ... ... ... | 30.00 |

ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் பேணிவருகின்ற முன்னுள் மாவட்ட வாரியச் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளுக்கென "ஏனைய சாலைகள்" என்பதன்கீழ் வகை செய்யப் பட்டுள்ளது. நிதி நிலைமை சாதகமாக இராத காரணத்தால் 169.63 லட்சம் செலவில் 47 வேலைகளுக்கு மட்டுமே (அவை குறித்து 2-ம் விவர அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது) 1966–67, 1967–68, 1968--69 ஆண்டுகளிலும், நான்காவது திட்ட முதலாண்டாகிய 1969–70 ஆண்டிலும் ஒப்பளிப்பு வழங்கப் பட்டன. அப் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

மேற்சொன்ன ஆண்டுத்திட்டக் காலங்களில் எய்திய சாதனைகள் கீழே கொடுக்கப்படுகின்றன:—

| தொடர் எண். | வகை. | யூனிட். | ஆண்டுத் திட்டக் காலங்கள் 1966–67. | 1967–68. | 1968–69. | நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டு 1969–70 (எதிர்பார்க்கப்பட்டது). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | புதிய சாலைகள் அமைத்தல். | மை. ப. | 6—7 | 0—7 | .. | 1—6 |
| 2 | புதிதாக சரளைக்கற்கள் பரப்புதல். | ,, | 2—0 | 4—7 | 3—4 | 3—7 |
| 3 | பெரிய பாலங்கள். | எண்ணிக்கை. | 4—68 | 4—78 | 5—44 | 3—48 |
| 4 | சிறிய பாலங்கள் மற்றும் மதகு பலங்கள். | ,, | 1—01 | 2—41 | 2—31 | 0—24 |
| 5 | மேம்பாடு .. | ,, | .. | .. | 1—44 | 0—01 |

கீழ்க்கண்ட பெரிய வேலைகள் தற்போது எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன:—

1. செங்கற்பட்டு மாவட்டத்தில் வாலாஜாபாத்-திருப்புலிவனம் சாலையின் 0/1–5 மைலில் வலாஜாபாத்தின் அருகே பாலாற்றின் குறுக்காக நீர்க்கடவுப் பாலம் (செலவு ரூ. 7 லட்சம்).

2. வட ஆற்காடு மாவட்டத்தில் விரிஞ்சிபுரம் ரயில்வே கிளை சாலையில் 1/5–6 மைலில், 2/4–6 மைலிலும் பாலாற்றின் குறுக்காக நீர்க்கடவுப் பாலம் (செலவு ரூ. 4.10 லட்சம்).

3. திருநெல்வேலி மாவட்டத்தில் சுந்தரபாண்டியபுரம்-மேலப்பாவூர் சாலையில் 1/2 மைலில் சித்தாற்றின் குறுக்காக மூழ்குப் பாலம் (செலவு ரூ. 5.25 லட்சம்).

4. திருநெல்வேலி மாவட்டத்தில் ஆலடியூரின் அருகே தாமிரவருணி ஆற்றின் குறுக்காக பாலம் (செலவு ரூ. 8.25 லட்சம்).

5. தஞ்சாவூர் மாவட்டத்தில் அம்மாப்பேட்டை-கோவிந்தக்குடி சாலையில் சேரி கிராமத்தின் அருகில் வெட்டாற்றின் குறுக்காக பாலம் (செலவு ரூ. 5.86 லட்சம்).

6. தஞ்சாவூர் மாவட்டத்தில் வேடம்பூரின் குறுக்காக பாலம் (செலவு ரூ. 7.50 லட்சம்).

7. தஞ்சாவூர் மாவட்டத்தில் கோபால சமுத்திரம்-வைமேடு சாலையின் 6/7 மைலில் வளவனாற்றின் குறுக்காக பாலம் (செலவு ரூ. 4.65 லட்சம்).

8. தஞ்சாவூர் மாவட்டத்தில் சிக்கல்-ஒட்டத்தட்டை சாலையின் 3/7 மைலில் கடுவயாற்றின் குறுக்காக பாலம் (செலவு ரூ. 4.90 லட்சம்).

9. தஞ்சாவூர் மாவட்டத்தில் மண்ணுந்தகுடி-வடக்குடி சாலையில் அரசலாற்றின் குறுக்காக பாலம் (செலவு ரூ. 3.45 லட்சம்).

10. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆலங்குடி-தலைஞாயிறு சாலையின் அருகே 20/2 மைலில் அரிச்சந்திர நதியின் குறுக்காக பாலம் (செலவு ரூ. 3.60 லட்சம்).

11. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சங்கரியாறு-கள்ளியாடி சாலையின் கூலபூர் ஆற்றின் குறுக்காக பாலம் (செலவு ரூ. 3.73 லட்சம்).

12. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அன்பில்-திண்ணியத்திற்கு இடையில் கூலயாற்றின் குறுக்காக பாலம் (செலவு ரூ. 3.50 லட்சம்).

13. மதுரை மாவட்டத்தில் பித்தளைப்பட்டி-பனையகண்ணிவாடி சாலையின் 1/2 மைல் அனுமந்தநாராயண கோட்டையின் அருகே காடுவனாற்றின் குறுக்காக பாலம் (செலவு ரூ. 3.00 லட்சம்).



14. இராமனுதபுரம் மாவட்டத்தில் சிங்கம்புனேரி-கிரிகன் கோட்டை சாலையில் 0/0 கி. மீட்டரிலிருந்து 6/2 கி.மீட்டர் வரை சரளைக்கற்கள் பரப்புதல் (செலவு ரூ. 5.03 லட்சம்).

15. தர்மபுரி மாவட்டத்தில் கள்ளவெய்-செம்மந்தஹள்ளி சாலையின் 4/8 மைலில் குன்னியாற்றின் குறுக்காக பாலம் (செலவு ரூ. 6.75 லட்சம்).

1969-70-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட வேலைகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டன:—

| தொடர் எண்ணும் பணியின் பெயரும். | செலவு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. வேளாங்கண்ணி-வேதாரண்யம் சாலையின் 11/0 கி.மீ. முதல் 24/8 கி.மீ. வரை "பிற மாவட்டச் சாலைகள்" என்ற தலைப்பின் கீழ் மேம்பாடுகள் (தஞ்சாவூர் மாவட்டம்). | 3.47 |
| 2. அச்சுதமங்கலம்-மணக்கால் சாலையின் 4/7 மைலில் முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 2.49 |
| 3. பெண்ணகரம்-பத்ரஹள்ளி சாலை (வழி அஞ்சன ஹள்ளி) யில் மதகுப் பாலங்கள் கட்டுதல் (தர்மபுரி மாவட்டம்). | 3.74 |
| 4. ஆளிசூர்-ஆண்டித்தாங்கன் சாலையில் 0/7 மைலில் மதகுப் பாலம், சிறிய பாலம் கட்டுதல் (செங்கற்பட்டு மாவட்டம்). | 1.00 |
| 5. கண்ணேரி-எல்லஹள்ளா சாலையில் 1/7 மைலில் பாலத்தை அகலப்படுத்தல். | 0.49 |
| 6. கண்ணேரி-எல்லஹள்ளா சாலையில் 2/2 மைலில் பாலத்தை அகலப்படுத்தல். | 0.91 |
| 7. கொல்லாப்பட்டியிலிருந்து சாலை வரை சாலை அமைத்தல் (இராமனுதபுரம் மாவட்டம்). | 0.60 |
| 8. பட்டம்புதூர்-மலைப்பட்டி சாலையில் 0/8 மைலில் மூழ்குப் பாலம் கட்டுதல் (இராமனுதபுரம் மாவட்டம்). | 1.67 |
| 9. அப்துல்லாபுரம்-மோரணம் சாலையின் 3/2 மைலிலிருந்து வடஅப்பை சாலையின் 0/0 முதல் 8/0 மைல் வரை சாலை அமைத்தல் (வட ஆர்க்காடு மாவட்டம்). | 2.28 |
| 10. தண்டலம்-பெரும்பாக்கம் சாலையில் 4/7 மைலில் கிளியாற்றின் குறுக்கே மூழ்கு பாலம் கட்டுதல் (செங்கற்பட்டு மாவட்டம்). | 4.60 |

[1970 மார்ச் 25

நான்காவது திட்டத்தின் இரண்டாமாண்டில் அதாவது 1970–71-ல் ரூ. 72-18 லட்சம் செலவில் (இத்துடன் இணைக்கப் பட்டுள்ள 4-வது விவர இணைப்பின்படி) 11-ம் பகுதியின்கீழ் உள்ள 16 வேலைத்திட்டங்கள் அரசின் ஒப்புதலுக்காகப் பரிந் துரைக்கப் பட்டுள்ளன. இவற்றில் ரூ. 68.68 லட்சம் செலவுத் தொகையிலான 14 (1—14) வேலைத் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. 1970–71-ஆம் ஆண்டு வரவு செலவு மதிப் பீட்டில் எஞ்சிய வேலைகளுக்கும் புதிய வேலைகளுக்கும் ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### சாலைகளைப் பேணுதல்.

1960–61 முதல் செயலுக்கு வந்த ஊராட்சிகள்-ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தமான புதிய அமைப்பின்கீழ், முன்னாள் மாவட்ட வாரியத்தின் பொறுப்பில் இருந்த ஏனைய மாவட்டச் சாலைகளின்கீழ் உள்ள கீழ்த்தரச் சாலைகளும் கிராமச் சாலைகளும் இடத்திற்கேற்றவாறு ஊராட்சி ஒன்றியச் சாலைகளாகவும், ஊராட்சி சாலைகளாகவும் மாற்றப்பட்டுள்ளன. இச் சாலைகள் அவற்றால் வருங்காலத்தில் பேணி வரப்படுவதற்குரியவை. பின்னர், பேருந்துகள் செல்லும் சாலைகள் அனைத்தும் அரசுக்குப் படிப்படியாக மாற்றுவதன்மூலம் ஊராட்சி ஒன்றியங்களும் ஊராட்சிகளும் இப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படும். நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து படிப்படியாக நிறைவேற்றப்படும் திட்டத்தின்கீழ் இப் பணிகளைச் செயல்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. இதற்கேற்ப 1960-61 முதல் 1969-70 வரையிலுள்ள 10 ஆண்டு காலத்தில் அரசினால் எடுத்துக் கொள்ளப்பட்ட பேருந்து வழித் தடங்களின் மொத்த நீளம் 5,118 மைல்களாகும். 1970-71-ல் பேருந்து வழித் தடச் சாலைகளில் மொத்தம் 321 மைல் நீளமுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காகவும் பிற்காலத்தில் அவற்றைப் பேணி வருவதற்காகவும் ஆன செயற்குறிப்பைத் தற்போது அரசு பரிசீலித்து வருகிறது. 1970-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி அன்று அரசினால் எடுத்துக் கொள்ளப்பட வேண்டி எஞ்சி நிற்கும் சாலைகளின் மொத்த நீளம் 1,320 மைல் களாகும். தற்சமயம் பேருந்து வழித் தடச் சாலைகள் என அறிவிக்கப்பட்ட சாலைகள் இவற்றில் சேர்க்கப்பட வில்லை. இவை படிப்படியாக அடிப்படை திட்டமாக அரசினால் மேற்கொள்ளப் படும்.

1970–71-ல் பல்வேறு மாநிலச் சாலைகளை (அரசுச் சாலைகள்) பேணி வருவதற்குத் தேவைப்படும் நிதி அளவு ரூ. 5.85 கோடி யாகும். 1969–70 திருத்த மதிப்பீட்டில் இது ரூ. 5.76 கோடியாக இருந்தது. சாலைகளைப் பேணிவருவதற்கான தொகையில் 20 சத விதமே சாலைகள் அமைக்கும் பணிக்காகச் செலவிடப் பட்டது. இக் கட்டுப்பாடு இப்போது தளர்த்தப்பட்டுள்ளது. தற்போதைய போக்குவரத்தைச் சரிகட்டுவதற்குத் தேவையான



1970 மார்ச் 25]

சாலைகளைப் பேணிவருவதற்குத் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கக் கூடிய நிதியைக் கொண்டு புதிதாகச் சாலைகள் அமைக்க அனுமதி யளிக்கப்பட்டுள்ளது.

கருவிகளும் பொறிகளும் (மத்திய அரசு உதவி பெறுபவை).

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951-56) செலவு கணக்குகள். | 99.00 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956–61) செலவு கணக்குகள். | 46.00 |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961–1966) செலவு கணக்குகள். | 69.00 |
| **ஆண்டுத் திட்டங்கள் (செலவுத் தொகை).** | |
| 1966–67 கணக்குகள் | 13.09 |
| 1967–68 கணக்குகள் | 27.22 |
| 1968–69 கணக்குகள் | 5.23 |
| தற்காலிக நான்காவது திட்ட நிதி ஒதுக்கம் | 50.00 |
| 1969–70 திருத்த மதிப்பீடு நான்காம் திட்டத்தின் முதல் ஆண்டு. | 2.06 |
| 1970–71 திட்ட மதிப்பீடு நான்காம் திட்டத்தின் இரண்டாம் ஆண்டு. | 2.00 |

நெடுஞ்சாலைகள் ஆராய்ச்சி நிலையத்திற்கு தேவைப்படும் விஞ்ஞானக் கருவிகளும், சாலைகள், பால வேலைகளுக்காக தேவைப்படும் பொறிகளும், கருவிகளும் ஒவ்வோர் ஆண்டும் வாங்கப்படுகின்றன.

1970-71 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் எஞ்சிய வேலைகளுக்கென ரூ. 2.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்திய சாலை நிதி (ஒதுக்கீடும் இருப்பும்).
(மத்திய அரசு உதவி பெறுபவை.)

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951–57) செலவு கணக்கு.. | 166.00 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956–61) செலவு கணக்கு. | 239.00 |

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் (1961–66) செலவு | 189.00 |
| கணக்கு ஆண்டுத் திட்டக்கால அளவுகள் (செலவு)— | |
| 1966–67 கணக்கு | 32.73 |
| 1967–68 கணக்கு | 23.03 |
| 1968–69 கணக்கு | 21.12 |
| தாற்காலிக நான்காவது திட்டநிதி ஒதுக்கம் (1969–74). | 282.57 |
| 1969–70 திருத்த மதிப்பீடு (நான்காவது திட்டத்தின் முதலாண்டு). | 3[illegible]52 |
| 1970–71 நான்காவது திட்டத்தின் இரண்டாமாண்டு திட்ட மதிப்பீடு. | 35.00 |

இத் திட்டத்தின்கீழ் அரசாங்கச் சாலைகளிலும் மற்ற சாலைகளிலும் வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய சாலை நிதி (இருப்பு நிதி)-யிலிருந்து மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கு, இந்திய அரசு முழுமையாகவோ ஓரளவோ ஒதுக்கும் இருப்பு நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதி வழங்குகிறது. எஞ்சியவற்றிற்கு மத்தியச் சாலை நிதி (செலவு ஒதுக்கீடு)-லிருந்து தான் எடுத்துக்கொள்ள வேண்டும். ரூ.76.10 லட்சம் மதிப்புள்ள மூன்றுவது திட்டத்தின் எஞ்சிய வேலைகளைத்தவிர மத்தியச் சாலை நிதி ஒதுக்கீட்டின்கீழ் செயல்படுத்தப்படுவதற்காக மேற்கொள்ள கீழ்கண்ட இரண்டு பணிகளுக்கு மட்டுமே இந்திய அரசு 1966–67-ல் ஒப்புதல் வழங்கியுள்ளது :—

| தொடர் எண்ணும் வேலையின் பெயரும். | செலவு. (ரூ.லட்சத்தில்.) |
|---|---|
| 1. பெரம்பலூர்-மானுமதுரை சாலை, திருமானூரில் கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் ஒன்றை அமைத்தல் (தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 52.00 |
| 2. கிழக்குக் கடற்கரைச் சாலை-கோவளம் (செங்கற்பட்டு மாவட்டம்) அருகே சிற்றேடை மீது பாலம் ஒன்று கட்டுதல். | 25.00 |



இவ்விரண்டு பணிகளும் தற்போது நிறைவேற்றப்படுகின்றன.

ஆண்டுத் திட்டக் காலங்களில் எய்திய சாதனைகள் கீழே கொடுக்கப்படுகின்றன :—

| தொடர் எண்ணும் வகையும். | யூனிட். | ஆண்டுத் திட்டக் காலம் 1966–67 | 1967–68 | 1968–69 | நான்காவது திட்ட முதலாண்டு (எதிர்பார்க்கப்பட்டது) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 பெரிய பாலங்கள் | எண்ணிக்கை | 3·99 | 2·20 | 0·66 | 0·96 |
| 2 மேம்பாடு .. | எண்ணிக்கை | 0·97 | 0·63 | 1·89 | 0·15 |
| 3 தார் போடுதல் .. | மைல் ப. | 2·2 | 1·0 | .. | .. |
| 4 மதகு பாலங்கள், சிறிய பாலங்கள். | எண்ணிக்கை | 0·46 | 0·32 | 0·12 | .. |
| 5 புதிதாக சரளைக் கற்கள் பரப்புதல். | மைல் ப. | 27·6 | 24·2 | 30·0 | 1·5 |

1969-70-ல் கீழ்க்காணும் இரண்டு பணிகளும் முடிக்கப்பட்டன.

| தொடர் எண்ணும், வேலையின் பெயரும். | செலவு (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1 சேலம், தர்மபுரி மாவட்டங்களிலுள்ள பெண்ணாகரம்—பெரம்பலூர் சாலையின் 16/4—24/4 மைலில் கருங்கல் பரப்புவதன் மூலம் சாலையை மேம்படுத்தல், மதகு பாலங்களைக் கட்டுதல், பள்ளங்களுக்கு தாங்கு சுவர் கட்டுதல், கொண்டை ஊசி வளைவுகளை மேம்படுத்தல். | 2.75 |
| 2. கள்ளக்குறிச்சி-கச்சிராப்பாளையம் சாலை அபிவிருத்தி மைல் 0/5 முதல் 8/5 மைல் வரை (தென் ஆற்காடு மாவட்டம்). | 3.25 |

எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேறிவருகின்ற சில பெரிய வேலைத் திட்டங்கள்.

1. ஒக்கூரிலிருந்து தீயத்தூர் வரை (வழி) எலம்வயல், தீயூர் (தஞ்சாவூர் மாவட்டம்) சாலைகள் தரம் உயர்த்துதல் (செலவு ரூ.11 லட்சம்).

2. ஆலத்தூர்கரை-கொளக்கநத்தம்-அரியலூர் சாலையை (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) தரம் உயர்த்துதல் (செலவு ரூ. 5.28 லட்சம்).

[1970 மார்ச் 25

3. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சமயபுரம்-கரியமாணிக்கம் மதகு சாலையை மேம்படுத்துதல், நீர்க்கடவுப் பாலங்கள் கட்டுதல், மதகு பாலங்களை அகலப்படுத்துதல் உட்பட (செலவு ரூ. 4.62 லட்சம்).

4. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உடையார்பாளையம்- உஜ்ஜயினி செந்துறை சாலையில் புதிய சரளைக்கற்கள் போடுவதன் மூலம் சாலையின் தரம் உயர்த்தல் (செலவு ரூ. 1.65 லட்சம்).

5. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நெடுமங்கோடு, சொர்லக்கோடு சாலையில் 3/6 மைலில் தற்போதுள்ள நீர்க்கடவுப் பாலத்துக்குப் பதிலாக பாலம் ஒன்று கட்டுதல் (செலவு ரூ. 1.75 லட்சம்).

6. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இளையான்குடி-இராச சிங்கமங்கலம் சாலைக்குச் சரளைக்கல் பரவுதல் (செலவு ரூ. 12.00 லட்சம்).

நான்காவது திட்டத்திலுள்ள கீழ்க்கண்ட ஆறு பணிகள் இந்திய அரசின் ஒப்புதலுக்காக மாநில அரசினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. 1969-70-ம் ஆண்டிலேயே அதாவது உரிய நான்காவது திட்டத்தின் (1969-74) முதல் ஆண்டிலேயே அப்பணிகளை நிறைவேற்ற எடுத்துக்கொள்வதற்காக அவை பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

| தொடர் எண்ணும், பணிகளின் பெயரும். | செலவு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. பண்ணைப்பட்டி-பாச்சலூர் சாலையிலுள்ள ஆடலூரிலிருந்து 12/0 ஆவது மைல் அருகே தாண்டிக்குடி மலைச்சாலையை இணையும் வகையில் சாலை ஒன்று அமைத்தல் (மதுரை மாவட்டம்). | 26.00 |
| 2. பாச்சலூரிலிருந்து உடுக்காட்டுக்குச் சாலை அமைத்தல் (மதுரை மாவட்டம்). | 25.00 |
| 3. போளூர்-செங்கம் சாலையின் 23/6 ஆவது மைலில் செய்யாற்றிற்குக் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல் (வட ஆற்காடு மாவட்டம்). | 8.00 |
| 4. கொள்ளேகாலம்-செல்லம்பாளையம் சாலை 34/0 மைலிலிருந்து 59/6 ஆவது மைல் வரை கருங்கல் பாவித் தார்போட்டு மேம்படுத்தல் (கோயம்புத்தூர் மாவட்டம்). | 10.00 |



1970 மார்ச் 25]

| தொடர் எண்ணும், பணிகளின் பெயரும். | செலவு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 5. குறுக்கு வடிகால் பகுதிகளை மேம்படுத்துவது உட்பட எமனேசுவரம்-நயினார் கோயில் சாலையில் 5-7/5 மைல் வரை கருங்கல் பாவித் தார்போட்டு மேம்படுத்துதல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 5.00 |
| 6. கோடைக்கானலைப் பழனியுடன் இணைப்பதற்கான சாலை அமைத்தல் (மதுரை மாவட்டம்). | 75.00 |
| மொத்தம் — | 149.00 |

மேலே 4, 5, 6 ஆவது இனங்களுக்கு இந்திய அரசின் ஒப்புதல் இப்போது கிடைத்துள்ளது.

இத் திட்டத்திற்காக 1970-71 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பெருநகரங்களின் சாலை மேம்பாட்டுத் திட்டம்.**

(நகர சாலைகள் மேம்பாடு உட்பட)

(மத்திய அரசு உதவிபெறும் திட்டங்கள்).

(ரூபாய் லட்சத்தில்)

| | |
|---|---|
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் (1951-56) செலவு கணக்கு. | முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலும் இத்தகைய திட்டம் எதும் இல்லை. |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956-61) செலவு கணக்கு. | |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961-66) செலவு கணக்கு. | (91·15 மட்டுமே) நகரச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மட்டுமே ஒப்புதலளிக்கப்பட்டது. |

ஆண்டுத் திட்ட காலங்கள் (செலவு):—

| | | |
|---|---|---|
| 1966-67 (கணக்கு) | — | 35.19 லட்சம். |
| 1967-68 (கணகு) | — | 22.38 லட்சம். |
| 1968-69 (கணக்கு) | — | 21.73 லட்சம். |

நான்காவது திட்ட தாற்காலிக நிதி ஒதுக்கம்:—

| | | |
|---|---|---|
| 1969-74 | — | 600.00 லட்சம். |
| 1969-70 திருத்த மதிப்பீடு | — | 41.700 லட்சம். |

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டு சென்னை மாநகராட்சி செலவிடப்பட வேண்டிய தொகையும் இதில் அடங்கும்.

1970-71 நான்காவது ஐந்தாண்டு திட்டத்தின் இரண்டாவது ஆண்டு (திட்ட மதிப்பீடு.) 73.33 லட்சம்.

[1970 மார்ச் 24

சென்னை மாநகரம் விரைந்து வளர்ச்சி அடைந்து வருகிறது. நேர் போக்குவரத்து இடையீடின்றி இயங்க வேண்டும். சென்னை மாநகரில் 17 மைல்கள் 5 பர்லாங்கு தொலைவுள்ள 3 தேசிய நெடுஞ்சாலைகளையும் 1964 ஆம் ஆண்டில் அரசாங்கம் எடுத்துக் கொண்டது. சென்னை மாநகரத்தில் போக்குவரத்து அதிகரித்துள்ளதால் பல உந்துப் போக்குவரத்து வசதிகளுடன் சாலைகள் அகலப்படுத்தப்பட்டன.

ஆண்டு வாரியான செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| தொடர் எண்ணும், ஆண்டும். | செலவு. | | மொத்தம். |
|---|---|---|---|
| | மாநகரச் சாலை மேம்பாடு. | பெருநகரச் சாலை மேம்பாட்டுத் திட்டம். | |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலம்— | | | |
| 1 1964–65 .. .. | 35·13 | .. | 35·13 |
| 2 1965–66 .. .. | 56·02 | .. | 56·02 |
| மொத்தம் .. | 91·15 | .. | 91 15 |
| ஆண்டுத் திட்ட காலங்கள்— | | | |
| 3 1966–67 .. .. | 35·19 | .. | 35·19 |
| 4 1967–68 .. .. | 12·30 | 9·99 | 22·38 |
| 5 1968–69 .. .. | .. | 21·73 | 21·73 |
| மொத்தம் .. | 47·58 | 37·72 | 79·30 |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் 1969–74— | | | |
| 6 1969–70 (முதலாண்டு) .. | * 41·70 | .. | 41·70 |
| 7 1970–71 (இரண்டாம் ஆண்டு). | .. | 73·00 | 73·00 |

பெருமுக்கியத்துவம் அளிக்கப்படுகிற பல திட்டங்களில் பெருநகர் சாலைகள் வளர்ச்சித் திட்டமும் ஒன்றாகும். சென்னை மாநகரிலுள்ள மக்கட்தொகை 1941 ஆம் ஆண்டில் 7.75 லட்சமாக இருந்தது. 1961-ஆம் ஆண்டில் 17.29 லட்சமாக அதிகரித்து விட்டது. நகரின் பரப்பளவு 1940 ஆம் ஆண்டில் 30 சதுர மைல்களாக இருந்தது. தற்போது 50 சதுரமைல்களாக விரிவடைந்துள்ளது. இவ்வாறு வெகுவேகமாக வளர்ந்து வரும் நகரத்தில் சிறந்த போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தர திட்டமிட்ட முறையில் சாலைகள் அமைக்க வேண்டியது இன்றியமையாததாகும் நகரின் மேம்பாட்டுக்கென முன்னர் வகுத்த திட்டங்களில் தனிப்பட்ட வேலைத் திட்டம் ஏதும் தீட்டப்படவில்லை.

*சென்னை மாநகராட்சி செலவிடப்பட வேண்டிய தொகையும் இதில் அடங்கும்.



1970 மார்ச் 25]

பெருநகர சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அனுமதி அளிக்கப்பட்ட வேலைகளின் பட்டியல் அட்டவணை 5 இல் சேர்க்கப்பட்டுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டப்பணிகளை நெடுஞ்சாலைத்துறையும், சென்னை மாநகராட்சியும் நிறைவேற்றும். ரூ. 100 லட்சம் செலவில் 33 மைல்களுக்குத் தார்போடுதல், தற்போதுள்ள 15 சாலைகளை ரூ. 143 லட்சம் செலவில் மேம்பாடு செய்தல், ரூ. 100 லட்சம் செலவில் 7 பெரிய பாலங்களையும், படுகைப் பாலங்களையும் கட்டுதல், ரூ. 2,56,56 லட்சம் செலவில் மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகள்கட்டுதல் ஆகியவை அனைத்தும் இத்திட்டத்தில் அடங்கும். நிறைவேற்றப்படவிருக்கிற சில முக்கியமான திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

(அ) 45-வது தேசிய நெடுஞ்சாலையில் ஜெமினியருகில் ரூ. 45 லட்சம் செலவில் விரைவு மேம்பாலம் (Fly over) கட்டித்தருதல்.

(இ) சென்டிரல் நிலையத்தில் ரூ. 55 லட்சம் செலவில் மேம்பாலம் கட்டுதல்.

(உ) துரைசாமி சாலை, கண்ணம்மாபேட்டை, கெங்குரெட்டி சாலை, ஹாரிங்டன் சாலை ஆகிய இடங்களில் தற்போதுள்ள சாலை—இருப்புப்பாதை கடவுகளில் ரூ. 100 லட்சம் செலவில் சுரங்கப் பாதைகள் கட்டுதல், துரைசாமி சாலை, கண்ணம்மாபேட்டை சாலை ஆகியவற்றில் சுரங்கப்பாதைகள் அமைக்கும் திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதலளித்துள்ளது. இந்த இரண்டு பணிகளுக்கும் முறையே ரூ. 25.00 லட்சம், ரூ. 25.24 லட்சம் செலவில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு (நெடுஞ்சாலை) தலைமைப் பொறியாளர் தொழில் நுட்ப ஒப்புதலை வழங்கியுள்ளார். இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக அந்த மதிப்பீடுகளைச் சென்னை மாநகராட்சிக்கு அனுப்பியுள்ளார்.

(எ) 4-வது தேசிய நெடுஞ்சாலையில் பொது மருத்துவமனைப் பாலத்தை அகலப்படுத்துதல், 45-வது தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வாலாஜா பாலத்தை அகலப்படுத்துதல், ஆண்ட்ரூஸ் சாலை, ஹாரிஸ் சாலை, கமாண்டர்-இன்-சீப் சாலை, ஆண்டர்சன் சாலை ஆகியவற்றில் கூவத்தின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துதல், எலியட்ஸ் பீச் சாலையிலும், ஏயிட்ஸ் சாலையிலும், பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப்படுத்துதல். இந்த வேலைத்திட்டங்களுக்கு ரூ. 92 லட்சம் செலவிடப்படும்.

(ஐ) அடையாற்றின் குறுக்கே உள்ள எல்பின்ஸ்டன் பாலத்தை ரூ. 50 லட்சம் செலவில் புதுப்பித்துக் கட்டுதல்.

சென்னை-கல்கத்தா சாலை (தேசிய நெடுஞ்சாலை-5) சென்னை—சித்தூர்—பெங்களூர் சாலை (தேசிய நெடுஞ்சாலை-4) சென்னை—திருச்சிராப்பள்ளி—திண்டுக்கல் சாலை (தேசிய நெடுஞ்சாலை-45) ஆகிய சாலைகள் சென்னை நகரின் ஊடே செல்லாமல் உள்வட்டச் சாலை, வெளிவட்டச் சாலை என வழங்கப்படுகிற புறச் சாலைகள்

[1970 மார்ச் 25

மூலம் (தேசீய நெடுஞ்சாலை 45 இன் கீழ் வருகிற பகுதிகள் நீங்கலாக) நேரடியாக இணைப்பு கொடுப்பதற்கான கூடுதல் செயற்குறிப்புகளும் ரூ. 75 லட்சம் செலவில் நிறைவேற்றப்படச் சேர்க்கப்பட்டுள்ளன.

1969-70 ஆம் ஆண்டில் பின்வரும் இரண்டு வேலைத் திட்டங்களும் நிறைவேற்றப்பட அரசு அனுமதி அளித்துள்ளது:—

| | செலவுத் தொகை. |
|---|---|
| | (ரூ. லட்சத்தில்.) |
| 1 45-ஆம் எண் தேசீய நெடுஞ்சாலையில் ஜெமினி சந்திப்பின் அருகில் விரைவு மேம்பாலம் ஒன்றை அமைத்தல் (சென்னை மாநகர எல்லை). | 45.00 |

2. அனைத்திந்திய வானொலி நிலையத்திற்கு எதிரிலிருந்து அடையாறு கழிமுகப் பகுதிக்கு அண்மையில் 19.00 முடிவடையும் வரையில் ஓசியானிக் ஹோட்டல் எதிரே தென் கடற்கரைச் சாலையுடன் சேரும் வகையிலும் விரிவுச் சாலையை அமைத்தல்.

ரூ. 50 லட்சம் செலவில் (1) புதிய வாலாஜா பாலம் ஒன்றை அமைத்தல்; (2) வெலிங்டன் பாலத்தை விரிவுபடுத்துதல் குறித்த பணிகள் 1970–71 ஆம் ஆண்டிற்கான II பகுதிகள் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளன.

வளர்ந்துவரும் "பெருஞ் சென்னையில்" போக்கு வரத்து ஆய்வை நடத்துவதற்காக சென்னை மாநகரத்திற்கான விரிவான பெருந் திட்டத்தைத் தயாரிக்க தனிப்பட்ட போக்கு வரத்துப் பிரிவு ஒன்றை ஏற்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவு நகர அமைப்புத் துறையுடன் ஒருங்கிணைந்து ஏற்கனவே ஆய்வு நடத்தத் தொடங்கிவிட்டது.

(சென்னை மாநகராட்சியின் பங்கு உட்பட.) 1970-71-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ. 73.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சாலை—இருப்புப் பாதை கடவுகளுக்குப் பதிலாக மேம் பாலம்/சுரங்கப் பாதை கட்டுதல்.

**மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள்.**

| | | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் செலவு கணக்கு. | (1951–56) | இந்தத் திட்டக் காலங்களில் இத்தகைய திட்டம் எதுவுமில்லை. |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் செலவு கணக்கு. | (1956–61) | |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் செலவு கணக்கு. | (1961–66) | 100·57 |



1970 மார்ச் 25]

| | |
|---|---|
| ஆண்டுத் திட்ட காலங்கள்— | |
| 1966–67 (கணக்கு) | 15.18 |
| 1967–68 (கணக்கு) | 0.55 |
| 1968–69 (திருத்த மதிப்பீடு) | — |
| நான்காவது திட்ட தாற்காலிக நிதி ஒதுக்கம் 1969–74. | 120.00 |
| 1969–70 திருத்த மதிப்பீடு (நான்காவது திட்டத்தின் முதலாண்டு). | 0.10 |
| 1970–71 நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாவது ஆண்டு (வரவு செலவு திட்ட மதிப்பீடு). | 10.10 |

மூன்றாவது திட்டக் காலத்தில், சென்னை மாநகரில் அடியிற் கண்ட இரு வேலைத் திட்டங்களும் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டன :—

| | மதிப்பீட்டுச் செலவு. |
|---|---|
| | (ரூ.லட்சத்தில்.) |
| 1. திருவொற்றியூர் நெடுஞ்சாலை மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 48.20 |
| 2. உயர்நீதி மன்றத்தின் அருகில் ஸ்பிரிங்ஹேவன் சாலையில் சுரங்கப் பாதை ஒன்றைக் கட்டுதல். | 69.30 |

இந்த இரண்டு வேலைத் திட்டங்களும் நிறைவேற்றி முடிக்கப்பட்டு போக்கு வரத்திற்காகத் திறந்துவிடப்பட்டுள்ளன. கலங்கரை விளக்கம் சுரங்கப் பாதை திட்டத்தில் முடிக்காது எஞ்சியுள்ள வேலைகள் மட்டுமே ரூ. 17.33 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் நிறைவேற்றக் கருதப்பட்டிருந்தன. இவ் வேலைகள் 1966-67-ல் நிறைவேற்றி முடிக்கப்பட்டன. கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் மேம்பாலம் கட்டும் பணி திட்டத்தின்பாற்படாத பணியாக மேற்கொள்ளப்பட்டது. ரூ. 39 லட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத் திட்டச் செலவில் பாதிப் பங்கினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஏற்றுக்கொண்டது. இப்பணி முடிக்கப்பட்டு மூன்றாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் போக்கு வரத்துக்குத் திறந்துவிடப்பட்டது என்பதையும் ஈண்டுச் சுட்டிக்காட்ட வேண்டும். 1966-67-ம் ஆண்டிலும் 1967-68-ம் ஆண்டிலும் புதிய திட்டம் எதற்கும் ஒப்புதலளிக்கப்படவில்லை.

[1970 மார்ச் 25

மதுரை மாநகராட்சி எல்லைக்குள் அடியிற்கண்ட இரண்டு மேம்பாலங்களுக்கு அரசாங்கம் அண்மையில் ஒப்புதலளித்தது:—

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| 1. 7-ம் எண் தேசிய நெடுஞ்சாலையின் 300/2 மைல் தொலைவில் தற்போதுள்ள சாலை-இருப்புப் பாதை கடவுக்குப் பதிலாக மேம்பாலம் கட்டுதல் (சுப்பிரமணியபுரத்தில் 1/1-2 கி. மீட்டர் ரயில் பாதைத்தொலைவு). | 37.00 |
| 2. 7-ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையின் 300/7 மைல் தொலைவில் தற்போதுள்ள சாலை-இருப்புப் பாதை கடவுக்குப் பதிலாக மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல் (மீனாட்சி ஆலையில் 496/5-6 ரயில் பாதைத் தொலைவு). | 31.00 |

இந்த இரண்டு வேலைத் திட்டங்களுக்கும் வேண்டிய மதிப்பீடுகளுக்கு அண்மையில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

செங்கற்பட்டு நகராட்சி எல்லைக்குள் (45-ஆவது தேசிய நெடுஞ்சாலை) சென்னை-திருச்சி-திண்டுக்கல் சாலையில் 34-3-ஆவது மைலில் மேம்பாலம் ஒன்றைக் கட்டும் திட்ட வேலையை ரூ. 15.00 லட்சம் செலவில் 1967-70-ஆம் ஆண்டில் II-வது பகுதித் திட்டத்தின் கீழ் நிறைவேற்ற அனுமதிக்கப்பட்டுள்ளது. விரிவான மதிப்பீட்டையும், திட்டங்களையும் தயாரித்த பின்னர் விரிவாகப் பரிசீலனை செய்து, இந்தப் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

கோயம்புத்தூர் நகர எல்லைக்குள் சேலம்-திருச்சி சாலையில் (தேசிய நெடுஞ்சாலை எண். 47) 328/7 மைலில் ரூ. 40 லட்சம் செலவில் மேம்பாலம் ஒன்றைக் கட்டுவதற்கு இப் பணித் திட்டத்தின் கீழ் 1970-71-ஆம் ஆண்டிற்கான II-ம் பகுதியின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 1970-71-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் ரூ. 10-10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பொருளாதார, பல மாநில முக்கியத்துவத் திட்டம் (மத்திய அரசு ஆதாரவு பெற்றது).**

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் (1951—56) செலவு கணக்கு. | 15.69 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956—61) செலவு கணக்கு. | |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961—66) செலவுக்கணக்கு. | 44.84 |



1970 மார்ச் 25]

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| ஆண்டுத் திட்டக் காலங்களில் செலவு— | |
| 1966–67 (கணக்கு) | 7.48 |
| 1967–68 (கணக்கு) | 5.0[illegible] |
| 1968–69 (கணக்கு) | 20.98 |
| நான்காவது திட்ட தாற்காலிக நிதி ஒதுக்கம் (1969-74)— | |
| 1969–70 (திருத்த மதிப்பீடு) நான்காவது திட்டத்தின் முதலாண்டு). | 16.25 |
| 1970–71 நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாவது ஆண்டு (வரவு-செலவு திட்ட மதிப்பீடு). | 23.01 |

பொருளாதார பல மாநில முக்கியத்துவம் வாய்ந்த சாலைத் திட்டங்களின்கீழ் மேற்கொள்ளப்படும் சாலை அமைப்பு, வளர்ச்சிப் பணிகள் மத்திய அரசினால் தொடங்கப்படுபவை. இந்தச் சிறப்புத் திட்டம், முதல் ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதியில் இந்திய அரசினால் தொடங்கிவைக்கப்பட்டது.

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள எலகிரி குன்றுகளுக்கு மலைச்சாலை அமைத்தல், அரக்கோணம்-திருவள்ளூர் சாலை, பண்ணைக்காடு-மங்கலக்கொம்பு சாலை ஆகியவற்றை மேம்படுத்தல் போன்ற பழைய வேலைகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன. சேலம் மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 31.50 லட்சம் மதிப்புள்ள கீழ்க்கண்ட இரு புதிய வேலைகளுக்கு மூன்றும் திட்டக் காலத்தில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இந்திய அரசு இத்திட்டத்தின் கீழ் மானியமாக வழங்க ஒப்புக்கொண்ட தொகை ரூ. 31.50 லட்சம். இந்த இரு வேலைகளும் எஞ்சிய வேலைகளாக முடிக்கப்படுவதற்காக 1966–67 முதல் எடுத்துக்கொள்ளப்பட்டன.

| | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| 1. தமிழ்நாட்டின் எல்லையில் உள்ள மேட்டூரை மைசூர் மாநிலத்தில் உள்ள மாதேசுவாத்துடன் குளத்தூர் வழியாக இணைக்கும் சாலையில் தமிழ்நாட்டுப் பிரிவுக்கு மேம்பாட்டு வேலைகள். | 17.00 |
| 2. தீர்த்தம்-பேரிகை சாலையை அமைத்தலும், பாலங்கள் கட்டுதலும். | 14.50 |

1966–67-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் இந்திய அரசு கீழ்க்கண்ட ஒரு வேலையை மட்டுமே அனுமதித்துள்ளது :—

சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் கீழ்க் கடற்கரைச் சாலையில் மாமல்லபுரத்திலிருந்து மரக்காணம் வரை தென் ஆற்காடு மாவட்ட எல்லை வரை இணைக்கப் பெறாத பகுதிகளில் சாலை அமைத்தல் இந்த வேலையின் செலவு மதிப்பு 32 லட்சம் ரூபாய். மத்திய அரசு இவ்வேலைக்கான செலவில் பாதிப் பங்கை ரூ. 16 லட்சத்திற்கு மேற்படாமல் மானியமாக அளிக்க முன்வந்துள்ளது. மிகுதியை மாநில அரசாங்கம் ஏற்கவேண்டும். தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் கடற்கரைச் சாலை முழுவதையும் அமைக்கும் 14 கோடி ரூபாய் திட்டத்திற்கு இந்திய அரசு இதுவரை அனுமதி வழங்கவில்லை எனினும், இத்திட்டம் இப்போது இரண்டு நிலைகளில் நிறைவேற்றப்படவிருக்கிறது. கீழ்க்கடற்கரைச் சாலையில் சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்கு சாலை அமைக்கும் முதல் நிலைப் பணியை மேற்கொள்ள ரூ. 6 கோடி ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காவது திட்டத்தில் எடுத்துக்கொள்வதற்காக ரூ. 6.50 கோடி செலவிலான சுருங்கிய திட்டம் ஒன்று நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்வதற்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆண்டுத் திட்டக்காலத்தில் ஏற்பட்ட திட்டச் சாதனைகளின் விவரங்கள் பின்வருமாறு :—

| தொடர் எண்ணும், வகை பிரிவும். | ஆண்டுத் திட்டக் காலம். 1966-67 | 1967-68 | 1968-69 | 1970 நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டில் எதிர்பார்க்கப்பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 மேம்பாடுகள் .. | 0·25 | 0·15 | 0·16 | 0.10 |
| 2 புதிய சாலைகள் .. | 3·2 | 4·0 | 12·5 | 11·1 |
| 3 சிறிய பாலங்கள் சிறு சாலைப் பாலங்கள். | .. | .. | 68 | 54 |

கீழே குறிப்பிட்டுள்ள மூன்று பணிகள் இந்திய அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காக அனுப்பப்பட்டுள்ளன. இப்பணிகளை 1969–70-ஆம் ஆண்டிலேயே அதாவது புதிய நான்காவது திட்டத்தின் (1969–74) முதலாண்டிலேயே மேற்கொள்ளுவது இதன் நோக்கமாகும்—



| தொடர் எண்ணும், வேலையின் பெயரும் | செலவுத் தொகை (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|
| 1. ஆந்திர மாநிலத்திற்குச் செல்லும் கரையோரச் சாலையில் எண்ணூரில் கழிமுகப் பகுதியின் மேல் பாலம் கட்டுதல். | 60.00 |
| 2. முசிரியையும் குளித்தலையையும் இணைப்பதற்காக மணப்பாரை-துறையூர் சாலையில் காவிரியின் குறுக்கே பாலம் கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 80.00 |
| 3. இரகுநாதபுரம்-தஞ்சாவூர் சாலையில் (திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர் மாவட்டங்கள்) சரளைக் கல் தாரிட்டு சாலையை மேம்படுத்தல் | 9.00 |

இத்திட்டத்திற்காக 1970–71-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தின் கீழ் ரூ. 23.1 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**சுங்க வரி.**

மலைச்சாலைகளுக்கும், பாலங்களுக்கும் சுங்க வரி விதிப்பது குறித்து அரசு பரிசீலனை செய்தது. பத்து லட்சம் ரூபாய் மதிப்பிற்குட்பட்ட பாலங்களுக்கும், மலைச்சாலைகளுக்கும், சுங்க வரி விதிப்பதில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது. 1965–66-ஆம் ஆண்டில் இருந்து பத்து லட்சம் ரூபாய் மதிப்பிற்கு மேற்பட்ட பாலங்களுக்கு மட்டுமே சுங்க வரி விதிக்கப்படும். இவைகளிலும் குறிப்பிட்ட வகையான வண்டிகளுக்கு சுங்க வரியினின்று விலக்களிப்பது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம், நெடுஞ்சாலைப் பொறியியல் கலையை நன்கு மேம்படுத்தி நெடுஞ்சாலை பொறியாளர்கள் நலம் பெறும் வண்ணம் அதைத் திறம்படப் பயன்படுத்திச் சாலைப் பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்தது.

**மண் ஆராய்ச்சிப் பகுதியில்.**

மண் வலுவினை முடிவு செய்வதற்கும் கடைக்காலின் தன்மை, சாலைக் கடைக்காலுக்கு வேண்டிய பற்பல பொருள்களின் உறுதித்தன்மை, கலவை அளவு ஆகிய இவற்றை முடிவு செய்வதற்காக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பாலங்கள், சாலைகள் இவை உறுதி குலைந்து சேதமடைவதற்கான காரணங்களை அறிவதற்காகவும், இயன்ற இடங்களில் எல்லாம் அவை ஏற்படாமலிருப்பதற்கான வழி முறைகள்பற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்காகவும் ஆய்வு செய்யப்பட்டன.

கடைக்கால் வடிவமைப்பு குறித்த ஆய்வுப் பணிகள் பல்வேறு அரசுத் துறைகளாலும் தனியார் பிரிவுகளாலும், இப்பிரிவிற்கு அனுப்பப்பட்டன. எல்லா நேர்வுகளிலும், விரிவான, முறையான நேரடி ஆய்வும் ஆய்வுக்கூடச் சோதனைகளும் நடத்தப்பட்டு அதன் முடிவுகளும் அது குறித்த விரிவான அறிக்கைகளும் தகுந்த ஆலோசனைகளும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பப்பட்டன. நடைபாதைகள் அமைப்பைப் பொறுத்தவரையில் நெய்வேலி சாம்பல், ராமேச்வரம்-தனுஷ்கோடி சாலையில் சோதனை அடிப்படையில் நடைபாதைகளை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. இதனால் சாலை அமைப்பில் கணிசமான சிக்கனம் ஏற்பட்டது. உலக வங்கித் திட்டத்திற்காக தேசிய நெடுஞ்சாலைகள் எண் 7, எண் 47 இவற்றை வலுப்படுத்துவதற்காக மண்வளப் பரிசோதனைகள் செய்யப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மண்வளப் பொறியியல், கடைக்கால் பொறியியல் ஆகியவற்றில் ஆறு தொழில் நுட்ப ஆசிரியப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

### நிலக்கீல்—சரளைக் கல் ஆய்வுக்கூடத்தில்.

நிலக்கீல் ( bitumen ) பொருட்கள், சாலைக் கற்கள் (aggregate) நிலக்கீல் கலவை ( bitumen mixture ) ஆகியவற்றைச் சோதனை செய்யும் பணி இங்கு மேற்கொள்ளப்படுகிறது. நடைப்பாதைக்கான கலவை அமைப்பும் இங்கு செய்யப்படுகின்றது.

சாலையமைப்புப் பணிகளுக்கான தார்ப் பொருள்களும், சரளைக் கற்கள் மாதிரிகளும் வாலாயமாகப் பரிசோதனை செய்யப்படுவதைத் தவிர இப் பிரிவில் ஆராய்ச்சித் திட்டங்கள் பலவும் மேற்கொள்ளப்படுகின்றன. சாலைகளை ஒரேயடியாகப் புதுப்பிப்பதையும், பெருஞ் செலவில் அவற்றை முழுவதும் மீண்டும் அமைப்பதையும் தவிர்க்கும் வகையில் தார் மேற்பரப்பு தகர்ந்து விடுவதைத் தடுப்பதற்காகப் புதிய முறைகள் மேற்கொள்வதற்கான ஆய்வும் மேற்கொள்ளப்படுகின்றது. உள்ளூரில் கிடைக்கும் மரப்பிசினையும் ( resin ), சரளைக் கற்களையும் கலந்து சாலைப் பணிகளுக்குப் பயன்படுத்துதல், வழவழப்பான மேற்பரப்புள்ள நடைபாதைகளில் சரளைக் கற்களைப் பயன்படுத்துதல் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கல்வெட்டும் இடங்களிலிருந்து அனுப்பப்படும் சரளைக்கல் மாதிரிகளைச் சோதனை செய்து, அச்சோதனையிலிருந்து கண்டறிந்தவற்றைப் பதிவேடு ஒன்றிலும் அட்டைகளிலும் பதிந்து வைத்தல் ஆகியவை இங்கு நடைபெற்றுவரும் முக்கியமான சில ஆராய்ச்சித் திட்டங்களாகும்.

### கான்கிரீட் கட்டுமான ஆய்வுக்கூடம்.

இந்த ஆய்வுக் கூடத்தில் சிமிட்டி கான்கிரீட் பொருட்கள் சோதனை செய்யப்படுகின்றன. கான்கிரீட் கலவை முறையும், இங்கு உருவாக்கப்பட்டு பரிசோதனை செய்யப்படுகின்றது. கட்டுமான ஆய்வுக்கூடம் பாலங்களையும், பிற கட்டுமானங்களையும்





சோதனை செய்கின்றது. பீஜப்பூர் அருகே உள்ள பாலத்தின்மீது சுமைச்சோதனை ( load test )செய்யுமாறு மைசூர் அரசு இந்த ஆய்வுக் கூடத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது. பல்வேறு வகையைச் சேர்ந்த எஃகுப் பாலங்கள் கொண்டு உறுதி ஆக்கப்பட்ட சிமிட்டிக் கான்கிரீட் விட்டங்கள் சோதனை செய்யப்பட்டதன் மேல் சுவையான பல தகவல்கள் கிடைத்தன.

### போக்குவரத்து ஆய்வுக்கூடத்தில்

(1) அடையாளமிடும் பொருள், (2) செலவு குறித்த ஆய்வு, (3) வேகமும், தாமதமும், (4) நடந்து செல்வோர், (5) சாலைகளின் இயல்புகள், (6) வண்டிகளும், சாலைகளைப் பயன்படுத்துபவர்களும், (7) போக்குவரத்தில் சிக்கனம்—ஆகியவை குறித்த ஆய்வுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. சென்னை மாநகரம், வெளியூர்களில் உள்ள போக்குவரத்துக் கட்டுப்பாடு நிர்வாகம் ஆகியவற்றுடன் இப்போக்குவரத்துப் பிரிவு தொடர்பு கொண்டிருந்தது. ஷெல் எண்ணெயுடன் சிலிக்ஸ் வண்ணங்களைக் கலந்து பயன்படுத்தியதனால் கிடைத்த பயன் தற்பொழுது சாலையில் அடையாளமிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் கில்லாண்டர் வண்ணங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது. நமது மாநிலத்தில் சாலைகளில் செல்லும், பல இருசுகள் கொண்ட வண்டிகள், லாரி போன்ற பெரிய வண்டிகள் ஆகியவை ஏற்றிச் செல்ல அனுமதிக்கத்தக்க மொத்த சுமையின் அளவு முடிவு செய்யப்பட்டது. பாலங்கள், நடந்து செல்வோருக்கான சுரங்கப் பாதைகள் ஆகியவற்றைக் கட்டுவதனால் பொருளாதார முறையில் ஏற்படக்கூடிய சிக்கனத்தைக் கண்டறிவதற்காக அவற்றின் நன்மைகள் மதிப்பிடப்பட்டன.

1968–69-ம் ஆண்டில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் மேற்கூறிய ஆய்வுக் கூடங்களின் பணிகள் குறித்த சுருக்கம் கீழ்க்கண்ட விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:—

| தொடர் எண். | ஆய்வுக்கூடத்தின் பெயர். | கிடைத்த மாதிரிகளின் எண்ணிக்கை. | நடத்தப்பட்ட ஆய்வுக் கூட பரிசோதனைகள். | நடத்தப்பட்ட களப் பரிசோதனைகள். | ஏனைய துறைகள் அல்லது நிறுவனங்களிடமிருந்து கிடைத்த விசாரணைகள். | எடுத்துக் கொள்ளப்பட்ட மேம்பாடுகள். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | மண் .. .. | 1,178 | 5,024 | 347 | 19 | 14 |
| 2 | நிலக்கீல் சூளைக் கற்கள் | 259 | 8,007 | 210 | 11 | 13 |
| 3 | கற்கலவை, பாலங்கள் கட்டடங்கள். | 754 | 3,320 | 2 | 11 | 10 |

போக்குவரத்துப் பிரிவில் ஆறு ஆய்வுகள் நடத்தப்பட்டன. ஆறு ஆராய்ச்சித் தாள்கள் தயாரிக்கப்பட்டன.

[1970 மார்ச் 25

நெடுஞ்சாலை ஆய்வு நிலையத்திற்கு இந்தியாவிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் தகவுடையோர் நால்வர் வருகைதந்தனர். பதினைந்து ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கும், பட்ட மேற்படிப்பு மாணவர்கள் இருவருக்கும் பயிற்சி வசதிகள் அளிக்கப்பட்டன. இந்தியா முழுவதிலுமுள்ள பல்வேறு பொறியியல் கல்லூரிகளிலிருந்தும், பல தொழிற் பயிற்சிப் பள்ளிகளிலிருந்தும், 861 மாணவர்களும், இமாசலப் பிரதேசச் சட்ட மன்றப் பேரவையிலிருந்து 11 உறுப்பினர்களும் சென்னையிலுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகை தந்தனர். இந்த நிலையத்தின் இயக்குநர் மண்வளத் தன்மைகள் பற்றி அனைத்திந்திய வானொலியில் பொதுமக்களுக்குப் பயனுள்ள வகையில் சிறு உரை ஒன்றை நிகழ்த்தினர்.

### போக்குவரத்து-கருவிகள் பிரிவு

நிலக்கீல், உருளைக்கலவை இயந்திரம்( Drawn Mixers ) பல அளவைகளில் தார் காய்ச்சும் கலன்கள், கையால் துளையிடும் கருவிகள், இழுவண்டிகள், குளிர்ந்த ஆஸ்பால்ட் கலவை இயந்திரங்கள், நெடுஞ்சாலை ஆய்வுக் கூடத்துக்குத் தேவையான கருவிகள், கற்கலவை இயந்திரங்கள் ஆகியவை இந்தப் பிரிவில் தயாரிக்கப்படுகின்றன. தவிர, உள்ளாட்சி மன்றங்களுக்காகவும், அரசாங்கத்தின் ஏனைய துறைகளுக்காகவும், உருளைக்கலவை இயந்திரம், கையால் தள்ளும் சிறு வண்டி, கழிவுப் பொருள் எடுத்துச் சேர்க்கும் கலன்கள் ஆகியவை போன்ற பிறர்க்கான பணிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

### போக்குவரத்துப் பொறியியல் பகுதி

இப் பகுதியில், சென்னை மாநகரின் வெவ்வேறு சாலைச் சந்திப்புகளிலும், முக்கிய சாலைகளிலும், பார்வையிடலும் அமைப்புத் திட்டம் நடத்தப்பட்டன. மாநகராட்சி, காவல்துறை ஆகியோரின் துணைகொண்டு தகுந்த செய்முறைகளும், போக்குவரத்தை வழிப்படுத்தும் அமைப்புகளும், போக்குவரத்துப் பொறியியல் கோட்டப் பொறியாளரால் திட்டமிடப்பட்டன.

### சாலைத்திட்ட ஆய்வுத் திட்டம்

மாநிலத்தின் முக்கியமான சாலைத் திட்டங்களையும், பாலங்கள் கட்டும் பணிகளையும் மேற்கொள்ளுமுன் அவற்றிற்குரிய மதிப்பீடுகளையும் வரை முறைகளையும் தயார் செய்ய முன்னோடியான ஆய்வுகளை அவற்றிற்குரிய தலத்தில் நிகழ்த்திக் கணக்கிடுதல் இவ்வட்டத்தின் முக்கிய பணியாகும். கரும்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும் வேலைகளுக்காகத் தனியே ஒரு கோட்டம் இருக்கிறது. இதுவும் ஆய்வுத்துறை



1970 மார்ச் 25]

வட்டப் பொறுப்பிலுள்ளது. 1968–69-ம் ஆண்டில் இவ்வாறு ஆய்வுகள் நடத்தி ஒப்பளிக்கப்பட்ட பணிகளின் எண்ணிக்கையும், அவற்றின் மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| தொடர் எண்ணும் இனத்தின் விவரமும். | பணிகளின் எண்ணிக்கை. | வேலைகளின் மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| 1 தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்ட செயற்குறிப்புகள். | 65 | 2,944 |
| 2 தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்ட விவரமான செயற்குறிப்புகள். | 53 | 392 |
| 3 தொழில்நுட்ப ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணிகள். | 79 | 38 |

### உலக வங்கி வட்டம்

உலக வங்கித் திட்டத்தின்கீழ் தமிழ் நாட்டிற்குப் பொருந்தக் கூடிய தாற்காலிகத் திட்டம் ஒன்று குறித்து இந்திய அரசு கருத்து தெரிவித்துள்ளது. அதை ஏற்றுக்கொள்ளும் வகையில் தேசிய நெடுஞ்சாலை எண் 7, எண் 47 ஆகியவற்றை வலுப்படுத்தி இருவழிப் போக்குவரத்துக்கென அகலப்படுத்துவதற்காக ரூ. 11 கோடி அளவுக்குத் தோராயமான செலவு விவரங்கள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் உள்ளவையும் (தருமபுரி, சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்கள்), மைசூர் மாநிலத்திலுள்ள பங்களூரையும், கேரளத்திலுள்ள கொச்சினையும் இணைப்பவையுமான 7-வது 47-வது தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளவும், வரைபடங்களையும் மதிப்பீட்டையும் தயாரிப்பதற்காகவும் நான்கு சிறப்புக் கோட்டங்களுடன் சிறப்புப் பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தி உள்ளது. ஆய்வுக்கான தொடக்கச் செலவு மாநில நிதிகளிலிருந்து செய்யப்படவிருக்கின்றது. இத்தொடக்கச் செலவு இந்திய அரசால் பின்னர் அளிக்கப்படும் மானியத்திலிருந்து இறுதியில் சரிகட்டப்படும்.

### நகராட்சி சாலைகள்

### (திட்டப் பணிகள்).

பிற பணித்திட்டங்களின் கீழ் எடுத்துக் கொள்ள இயலாத சாலைப் பணிகளை நிறைவேற்றுவதற்காக நகராட்சிகளுக்கும், நகரியங்களுக்கும் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் முக்கிய சாலைகளில் நெருக்கடியான போக்குவரத்துள்ள பகுதிக்கு சிமெண்ட் கற்கலவை போடுவது, புதிய பாலங்கள் கட்டுவது முதலிய முக்கியமான பணிகள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்படும். 1970–71-ம் ஆண்டில் கடன் தலைப்பின் கீழ் திட்டப்பணியாக வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டில் ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

[1970 மார்ச் 25

## திட்டத்தில் சேராத பணித் திட்டங்கள்

நகராட்சி மன்றங்களும், நகரியக் குழுக்களும் தங்கள் பொறுப்பின் கீழ் உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக அவற்றிற்கு அரசு, கடன்களும் மானியங்களும் வழங்குகின்றது. சாலைகளுக்கு தூசி படியாத மேற்பரப்பிடுவதற்காக நகராட்சி மன்றத்திற்கு மானியங்கள் வழங்கும் பொருட்டு 1969–70-ம் ஆண்டில் மாநில வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. மேற்கூறிய நோக்கத்திற்குக் கடன்கள் வழங்குவதற்காகவும், பாலங்களின் பணிகளுக்காகவும், 1969–70-ம் ஆண்டில் ரூ. 13.3 லட்சம் ஒதுக்கப்பட்டது. சாலைகள் பேணுவதற்காக நகராட்சி மன்றங்களுக்கும், நகரியக் குழுக்களுக்கும் 1969–70-ம் ஆண்டில் ரூ. 7.5 லட்சம் மானியத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

சாலைகளுக்கு தூசில்லாத மேற்பரப்பிடுவதற்காக மானியம் வழங்குவதற்கு ரூ. 10 லட்சமும், சாலைகள் பாலங்கள் குறித்த பணிகளுக்காக ரூ. 13.5 லட்சமும், 1970–71-ம் ஆண்டு வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சாலைகள் பேணிவருவதற்கான மானியங்கள் அளிப்பதற்காகவும் 1970–71-ம் ஆண்டில் ரூ. 10 லட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## கிராமப்பணித் திட்டங்கள்

தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள கிராமப்பணித் திட்டங்களை ஊராட்சி ஒன்றியங்கள் மிக்க ஊக்கத்துடன் செயல்படுத்தி வருகின்றன. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கிராமப் பணிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஒன்று சேர்க்கப்பட்டு திட்ட முழுமையும் கிராமப் புறங்களுக்கு தண்ணீர் வழங்குதல் (கிணறுகள் தோண்டுதலும் குழாய் மூலம் தண்ணீர் வழங்குதலும்) இணைச் சாலைகளை அமைத்தல், பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுதல் ஆகிய மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. தேசீயத் திட்டத்தினால் விளையும் பயன்களும் பரந்த அளவில் எல்லா மக்களுக்கும் கிட்டுமாறு செய்வதும் மக்களின் முக்கியத் தேவைகள் யாவையும் குறுகிய காலத்தில் பூர்த்தி செய்யப்படுவதுமே நோக்கமாகும். 1968-69-ம் ஆண்டில் இத் திட்டத்திற்கான செலவு ரூ. 211.00 லட்சம் ஆகும். 1969–70-ல் ரூ. 247.95 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. 1970–71-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 308.30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. கிராமப்பணித் திட்டங்களின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கத்தில் ரூ. 63.07 லட்சம் ஊராட்சி ஒன்றியங்களால் இணைப்புச் சாலைகள் போடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இவை சமுதாய நலவளர்ச்சித் திட்டத்தின் கீழ் 11-ம் நிலை வட்டாரப் பணியாக முடிக்கப்பட்டுள்ளன. "37 சமுதாய நல



1970 மார்ச் 25]

வளர்ச்சித்திட்டம், 50. பொதுப் பணிகள் ஆகியவைகளின் கீழ் பகுதியாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது." "50 பொதுப் பணிகள் என்பதன் கீழ் ரூ. 3.71 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது."

3. அரிசனங்கள், மீனவர்கள், மற்றும் பிற்பட்ட வகுப்பினர்களின் நலனுக்காக மட்டுமே நிறைவேற்றப்பட்ட கிராமப் பணித் திட்டங்களுக்காக பொது மக்களிடமிருந்து பெறும் உதவித் தொகை அரசினரால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அரிசன நலத்துறையின் நிதியிலிருந்து 15 சதவீதம் நீர் வழங்கும் பணிகளுக்காவும், 10 சதவீதம் இணைப்புச் சாலைகளை அமைப்பதற்கும் உதவித் தொகை பெறப்படுகிறது. அரிசன மக்களுக்கு மட்டும் பயன்தரும் பணிகளுக்காக கிராமப்பணிகள் மானியத்திலிருந்து 20 சதவீதம் நிதி ஒதுக்கம் செய்யுமாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரசு கட்டளைகள் அனுப்பியுள்ளது.

## பொதுப்பணித் துறையின் (கட்டிடப் பிரிவு) பணிகள் குறித்த ஆய்வுரை.

### (1969–70-ம் ஆண்டிற்குரியது.)

மாநில அரசின் பல்வேறு துறைகளுக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டித் தருவதே பொதுப் பணித் துறையிலுள்ள கட்டிடப் பிரிவின் தலையாய அலுவலாகும்.

பல்வேறு துறைகளின் தேவைகளுக்கேற்பத் திட்டம் வகுத்து, வடிவமைத்துக் கட்டிடம் கட்டுவது கட்டிடப் பிரிவின் பொறுப்பாகும். இவற்றைத் தவிர மத்திய அரசுத் துறைகளுக்காகவும் ஓரளவு அரசுச் சார்புள்ள நிறுவனங்களுக்காகவும் அவ்வப் பணிகளின் சிறப்புக் கருதி, முகவராகச் செயற்பட்டு அக்கட்டிடப் பணிகளை நிறைவேற்றித் தருகிறது. மாநில அரசின் கட்டிடங்களைப் பேணி வரும் பொறுப்பும் பொதுப்பணித்துறையையே சாரும்.

27-வது கோரிக்கையில் ரூ. 20,000 வரையில் மதிப்புள்ள புதிய கட்டிடப் பணிகள் அனைத்தும் அடங்கியதாகும். மத்திய உதவி பெறும் திட்டங்களுக்குக் கிடைக்கும் மத்திய நிதி உதவியைக் கணக்கில் கொண்டு, இவற்றிற்கு ஆகும் செலவுத் தொகை மூலதனக் கணக்கிலிருந்து வருவாய் கணக்கிற்கு எடுத்தெழுதப் படுகிறது. பொதுப் பணித் துறையின் பொறுப்பிலுள்ள கட்டிடங்களைப் பேணி வருவதற்கு ஏற்படும் செலவும் அவற்றிற்குரிய சொத்து வரியும் இக்கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. இத் தலைப்பின் கீழ் 1969–70-ம் ஆண்டில் புதிய கட்டிடப் பணிக்காக ரூ. 35.826 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1969-70-ம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் இதற்கு நிகராக ரூ. 49.828 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

"50-டி. மராமத்துக்கள்" என்ற தலைப்பின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 142.799 லட்சமாக இருந்ததற்கு மாறாக 1969–70-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு ரூ. 170.014 லட்சம் ஆகும். இந்தச் செலவினம் கட்டிடங்களைப் பேணும் செலவு, சிறப்பு மராமத்துகள் சொத்துவரி ஆகியவற்றிற்குரியதாகும்.

ரூபாய் 20.000-க்கு மேல் பெறுமானமுள்ள பெரிய கட்டிடங்களைப்பொறுத்த வரையில் 1969–70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் மூலதன முதலீட்டின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த தொகை ரூ. 384 லட்சமாயிருக்க 1969-70-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு ரூ. 562.914 லட்சம் அளவில் உள்ளது.

## மருத்துவம்.

மருத்துவமனைகளுக்கும் ஏனைய மருத்துவ நிலையங்களுக்கும் வேண்டியுள்ள கட்டிடங்களைக் கட்டுவதே பொதுப்பணித் துறையின் பெரும் பகுதிப் பணியாக அமைகிறது. இக் கட்டிடங்களுக்காக 1969--70-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டின்படி முதலீடு செய்துள்ள தொகை ரூ. 176.377 லட்சமாகும். செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்ட மூன்று மருத்துவக் கல்லூரிகள் படிப்படியான திட்டத்தில் மேம்பாடு அடைந்து வருகின்றன. இந்தப் படிப்படியான திட்டத்தின்படி இக் கட்டிடப் பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

முதல் இரண்டாவது நிலைகளின் கீழ் செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்காக, கல்லூரிக் கட்டிடங்களும் மாணவர் இல்லக் கட்டிடமும் ஆசிரியர் குடியிருப்புகளும் சுமார் ரூ. 36.77 லட்சம் செலவில் கட்டப்பட்டன. செங்கற்பட்டில், மூன்றாவது நிலையில் ரூ. 8.47 லட்சம் செலவிலும் நான்காவது நிலையில் ரூ. 1.95 லட்சம் செலவிலும் கட்டிடங்கள் கட்டப்பட்டுவருகின்றன.

இது போன்றே, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கும் முதல் நிலையிலும் இரண்டாம் நிலையிலும் ரூ. 45.80 லட்சம் செலவில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மூன்றும், நான்காம் நிலைகளில் ரூ. 20.90 லட்சம் செலவில் ஒப்பளிக்கப்பட்ட பணிகள் நடந்து வருகின்றன.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்கு முதல் நிலையில் ரூ. 12.54 லட்சம் செலவில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 2-ம் நிலையில் ரூ. 18.40 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்ட கட்டிடங்கள் முடிவுறும் நிலையில் உள்ளன; ரூ. 11.90 லட்சம் செலவில் மூன்றும் நிலையில் கட்டிடங்கள் கட்டும் பணி நிறைவேறி வருகின்றது.

ரூபாய் 8.75 லட்சம் செலவில் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்கான மாணவர் இல்லக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், ரூ. 1.67 லட்சம் செலவில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்





கான கால்நடை இல்லமும் பட்டறையும் அமைப்பதற்கான கட்டிடங்கள் கட்டுவதற்கும் ஆன பணி இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தவிர இப்போதுள்ள மருத்துவக் கல்லூரிகளும் அவற்றுடன் இணைந்துள்ள மருத்துவ மனைகளும் பல்வேறு நிலையங்களின் அதிகரித்த தேவையை ஈடு செய்வதற்காக விரிவாக்கப்பட்டு வருகின்றன. சென்னையில் அரசுப் பொது மருத்துவ மனையில் இதய நோய்ச் சிகிச்சைப் பிரிவிற்காக ரூ. 16 லட்சம் செலவில் ஏழு மாடிக் கட்டிடம் முடிவுறும் நிலையிலுள்ளது. இக் கட்டிடத்தில் ரூ. 1.70 லட்சம் செலவில் மேலும் ஒரு மாடி கட்டும் பணி, இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சென்னை அரசுப் பொது மருத்துவ மனையில் நரம்பியல் மருத்துவப் பிரிவிற்கான நான்கு மாடிக் கட்டிடம் ரூ. 16.50 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளது.

கண் மருத்துவ மனைக்கான புற நிலைப் பிணியாளர் பிரிவு ஒன்று ரூ. 15.48 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இக் கட்டிடத்தில் ரூ. 8.75 லட்சம் செலவில் மேலும் ஒரு மாடி கட்டும் பணியும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

எழும்பூரிலுள்ள மகளிர், சிறுவர் மருத்துவ மனையில் ரூ. 5.00 லட்சம் செலவில் வட்டாரக் குடும்பநலத் திட்ட நிலையம் ஒன்று கட்டப்பட்டுவருகிறது. மகப்பேறு, மகளிர் நோய் ஆய்விற்கான ஆராய்ச்சி, பயிற்சி நிலையம் ஒன்று அமைப்பதற்காக மற்றொரு கட்டிடம் ரூ. 5.77 லட்சம் செலவில் கட்டுவதற்கும் அண்மையில் ஒப்பளிக்கப்பட்ட பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கீழ்ப்பாக்கத்திலுள்ள மருத்துவ மனையில் ரூ. 10.06 லட்சம் செலவில் புறநிலைப் பிணியாளர்ப் பிரிவு, காச நோய் பிரிவு, சமையற் கூடப் பிரிவு ஆகியவற்றுக்கான புதுக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் பிணியியல் பிரிவும், நுண்ணுயிரியில் பிரிவும் ரூ. 6.50 லட்சம் செலவில் கட்டும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது. ராயப்பேட்டை அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்தும் பணியும் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. முடநீக்கப் பிரிவு "எக்ஸ்ரே" பிரிவு முதலானவை அமைவதற்கான 3 மாடிக் கட்டிடம் ஒன்று ரூ. 6.2 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டு இப் பணியும் முடிவுறும் நிலையில் உள்ளது.

இந்திய மருத்துவ முறைக்குப் போதிய ஊக்கம் அளிக்கும் பொருட்டு, அரும்பாக்கத்தில் இந்திய மருத்துவ முறை மருத்துவ மனை 100 படுக்கைகளுடன் ரூ. 8.18 லட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இப் பணி விரைந்து நிறைவேறி வருகின்றது. இது விரைவில் கட்டி முடிக்கப்படும்.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் ரூ. 10.05 லட்சம் செலவில் கூடுதல் மாணவர் இல்லக் கட்டிடங்கள் கட்டும் பணியும் ரூ. 8.57 லட்சம் செலவில் இப்போதுள்ள செவிலியர் குடியிருப்புக்களை மேம்படுத்துவதுடன் மேற்கொண்டும் செவிலியர் குடியிருப்புகள் கட்டும் பணியும் முடிவடைந்துள்ளன. மதுரை எர்ஸ்கின் அரசு மருத்துவமனையில் ரூ. 5.00 லட்சம் செலவில் கண் சேமிப்பு பிரிவுக்காகவும், விழி வெண் படலம் ஒட்டும் பிரிவிற்காகவும் கட்டிடங்கள் கட்டுவதைத் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் நடப்பு ஆண்டில் புதிய மருத்துவ மனைகள் கட்டப்பட்டு வருவதுடன் இப்போதுள்ள மருத்துவ மனைகள் விரிவுபடுத்தப்பட்டும் வருகின்றன.

அறந்தாங்கியில் நடப்பு ஆண்டில் ரூ. 8.72 லட்சம் செலவில் அரசு மருத்துவ மனைக்கான புதிய கட்டிடம் கட்டும் பணி முடிவடைந்துள்ளது. ஆம்பூரில் ரூ. 7.50 லட்சம் செலவிலும், ஸ்ரீபெரும்புதூரில் ரூ. 9.70 லட்சம் செலவிலும், தாம்பரத்தில் ரூ. 11.965 லட்சம் செலவிலும், தேவகோட்டையில் ரூ. 10.00 லட்சம் செலவிலும், தேனியில் ரூ. 8.60 லட்சம் செலவிலும், இராமநாதபுரம் மாவட்டம் சிங்கம்புணரியில் ரூ. 9.00 லட்சம் செலவிலும், அரசு மருத்துவ மனைகளுக்கான கட்டிடங்கள் கட்டும் பணி நடந்தேறிவருகின்றது. ரூ. 2.75 லட்சம் செலவில் உதகையிலும், ரூ. 7.33 லட்சம் செலவில் பவானியிலும், ரூ. 10.00 லட்சம் செலவில் கீழக்கரையிலும், ரூ. 6.37 லட்சம் செலவில் திருத்தணியிலும், ரூ. 1.45 லட்சம் செலவில் விருத்தாசலத்திலும், ரூ. 2.87 லட்சம் செலவில் திண்டிவனத்திலும் நடப்பு ஆண்டில் அரசு மருத்துவ மனைகளுக்கான கட்டிடங்கள் கட்டும் பணியைத் தொடங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. காஞ்சிபுரத்தில் ரூ. 5.00 லட்சம் செலவில் அறிஞர் அண்ணா நினைவு புற்று நோய்ச் சிகிச்சை நிலையம் ஒன்று கட்டும் பணி நடப்பு நிதி ஆண்டு முடிவதற்கு முன்பே தொடங்கப்படும்.

### தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டங்கள்.

இத் திட்டத்தின்கீழ் கட்டிடங்கள் கட்டும் பொறுப்பை தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைத்துள்ளது. கட்டிடங்களுக்கான எல்லாச் செலவையும் ஈட்டுறுதிக் கழகம் ஏற்றுக்கொள்கிறது. இதுவரையில் இத் திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட கட்டிடப் பணிகளின் மொத்தமதிப்பு ரூ. 5 கோடியாகும். இதில் இதுகாறும் சுமார் 4.30 கோடி செலவிடப்பட்டுள்ளது.

தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட 39 மருந்தகங்களில் 33 மருந்தகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. திருவல்லிக்கேணியில் கட்டப்பட்டு வரும் கட்டிடம் முடியும் நிலையில் உள்ளது. அரசு ஈட்டுறுதிக் கழகத்தால் விக்கிரமசிங்கபுரம் 11, எழும்பூர், தாம்பரம், தல்லா



குளம், உசிலம்பட்டி ஆகிய இடங்களில் கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்ட 5 மருந்தகங்கள் நிதி நிலை இடர்ப்பாட்டின் காரணமாக, கட்டும் பணி தள்ளிவைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த இடங்களில் கட்டிடப் பணியைத் தொடங்க முடியவில்லை. தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் இம் மாநிலத்தில் கட்டிடங்கள் கட்டும் திட்டத்தைத் தளர்த்தியுள்ளது. எனவே தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின்கீழ் திட்டச் செலவு பெருமளவு குறைந்துள்ளது.

### குடும்பநலத் தனி மருத்துவ மனைகளும் ஆரம்ப சுகாதார நிலையங்களும்.

ஒவ்வொன்றும் ரூ. 92,000 செலவில் திட்டமிடப்பட்டுள்ள 45 குடும்ப நலத்திட்ட நிலையங்களில் பதினொரு இடங்களில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 31 இடங்களில் கட்டிடங்கள் கட்டும் பணி பல நிலைகளில் உள்ளன. இப்பணிகள் 31—3—1970-க்குள் முடிவடையும். ரூ. 58.50 லட்சம் மொத்தச் செலவில் மேலும் 78 இடங்களில் குடும்ப நலத் திட்ட நிலையங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு அண்மையில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 241 இடங்களில் குடும்ப நலத்திட்ட துணை நிலையங்களுக்கான கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 28.92 லட்சம் செலவிடவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ரூ. 54 லட்சம் மொத்தச் செலவில் 30 ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கட்டுவதற்கும் 1970 ஜனவரியில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்கள் தவிர சென்னை கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையில் ரூ. 1.20 லட்சம் செலவிலும், மதுரை எர்ஸ்கின் அரசு மருத்துவ மனையில் ரூ. 1.00 லட்சம் செலவிலும் சேலம், நாகர்கோயில் ஆகிய இடங்களிலுள்ள அரசுத் தலைமையிட மருத்துவ மனைகளில் ஒவ்வொன்றிலும் ரூ. 1.08 லட்சம் செலவிலும் குடும்ப நலத்திட்டத்திற்கான வார்டுகளையும் அறுவைச் சிகிச்சைக்கான கட்டிடங்களையும் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### வேளாண்மை.

மதுரையில் இரண்டாவது வேளாண்மைக் கல்லூரிக்கான கட்டிடங்களை ரூ. 72 லட்சம் செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. இத்துடன் ரூ. 13.90 லட்சம் செலவில் இரண்டாவது மாணவர் விடுதிக் கட்டிடமும் ரூ. 5.65 லட்சம் செலவில் வாயு இல்லம் (Gas House ) ரூ. 1.00 லட்சம் செலவில் ஆசிரியர் குடியிருப்புகளும் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரிக்கு ரூ. 1.00 லட்சம் செலவில் ஆசிரியர் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

மதுரையில் ரூ. 2.40 லட்சம் செலவில் டிராக்டர் பட்டறைக்கான கட்டிடம் கட்டும் பணி முடிவடைந்து இப்பட்டறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத் தலைப்பின்கீழ்ப் பல்வேறு பணிகள்

[1970 மார்ச் 25

மாநிலம் முழுவதிலும் நடைபெற்றுவருகின்றன. ரூ. 1.10 லட்சம் செலவில் குடியாத்தத்தில் மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடமும், நவலாக்கில் ரூ. 1 லட்சம் செலவில் விவசாயிகள் பயிற்சி நிலையமும், பெரியகுளம் வட்டம், பண்ணைக்காட்டில், ரூ. 1.07 லட்சம் செலவில் மலைவாழைப்பழ ஆராய்ச்சி நிலையமும், சிவகங்கையில் ரூ. 1.54 லட்சம் செலவில் அலுவலகக் கட்டிடமும், பட்டறையும், திருவாரூரில் ரூ. 1.40 லட்சம் செலவில் வேளாண் மைக்கருவிகள் பட்டறையும் கட்டும் பணி நிறைவேறி வருகின்றது.

### கால்நடை வளர்ப்பு.

இத்தலைப்பின்கீழ் நிறைவேற்றிவரும் முக்கிய பணிகளில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) ஒசூரில் கால் நடைக்கான கொட்டகைகளைத் திருத்தி யமைக்கும் வேலை ரூ. 1.57 லட்சம் செலவிலும், (2) சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் உயர் மின் அழுத்த நிலையம் ரூ. 1,58,000 செலவிலும், (3) செங்கற்பட்டில் கால்நடை மருத்துவ மனை அமைக்கும் பணி ரூ. 1.25 லட்சம் செலவிலும், (4) கொருக்கையில் உள்ள கால்நடைப் பண்ணையை மேம்படுத்தும் பணி ரூ. 2.73 லட்சம் செலவிலும் நடந்தேறிவருகின்றன. ஓரத்த நாட்டிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் மேம்பாட்டுப் பணிகள் ஏற்கெனவே செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையத்தில் ரூ. 14,80,000 செலவில் அம்மைப் பால் உற்பத்தி மற்றும் ஆய்வுப் பகுதிக்கான கட்டிடம் கட்டச் செயற் குறிப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது.

### மீனளம்.

தூத்துக்குடியில் மீனளம் பயிற்சி நிலையத்திற்கான கட்டிடம் ரூ. 0.31 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. வீடூர், சாத்தனூர், கோமுகி, பவானிசாகர், கிருஷ்ணகிரி, மஞ்சளாறு, மணிமுத்தார் ஆகிய இடங்களில் உள்ள அரசு மீன் பண்ணைகளில் ரூ. 8.00 லட்சம் செலவில் கட்டிடங்களும் மீன் பண்ணைகள் அமைத் தலும் முடிவுறும் நிலையில் உள்ளன. அவலாஞ்சி திருமூர்த்தி நீர்த்தேக்கங்களிலும், வைகை அணையிலும் ரூ. 1.30 லட்சம் செலவில் மீன் பண்ணைகள் அமைக்கும் புதிய திட்டங்களும் விரைவில் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

கல்பாக்கம் அணு மின் திட்டப்பகுதியில் பாதிக்கப்பட்ட மீன வர்களுக்கான மறு வாழ்வுத் திட்டத்திற்கு ரூ. 2.715 லட்சம் செலவில் 181 வீடுகள் கட்டும் வேலை நடந்து வருகின்றது. ரூ. 25,000 செலவில் சமுதாய நிலையம் அமைக்கும் பணி முடிவடைந் துள்ளது. தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபட்டினத்தில் ரூ. 2.79 லட்சம் செலவில் மீனவர்களுக்கு 60 வீடுகள் கட்டும் பணி முடி



1970 மார்ச் 25]

வடைந்துள்ளது. இரண்டாவது நிலையாக ரூ. 2,629 லட்சம் செலவில் அம்மாபட்டிணம் மீனவர்களுக்கு 70 வீடுகள் கட்டும் திட்டமும் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. மெரினு படகு கட்டும் தளத்தை ராயபுரத்திற்கு மாற்றுவதற்கு ரூ. 4.215 லட்சம் செலவில் கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

### கல்வி.

1968–69-ம் ஆண்டில் அரசு அனுமதித்த கீழ்க்காணும் கல்லூரி களுக்கான கட்டிடங்கள் கட்டும் பணி சிறப்பாக நடந்தேறி வருகின்றது:—

1. முத்துரங்கம் கலைக் கல்லூரி, வேலூர்—ரூ. 8.50 லட்சம்.
2. அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்—ரூ. 8.50 லட்சம்.
3. அரசினர் கலைக் கல்லூரி, கடலூர்—ரூ. 7.40 லட்சம்.
4. அரசினர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி—ரூ. 8.50 லட்சம்.
5. அரசினர் கலைக் கல்லூரி, கரூர்—ரூ. 6.50 லட்சம்.
6. அரசினர் கலைக் கல்லூரி, நாமக்கல்—ரூ. 8.50 லட்சம்.
7. அரசினர் கலைக் கல்லூரி, இராசிபுரம்—ரூ. 8.50 லட்சம்.

நடப்பு ஆண்டில் திண்டிவனம், நாமக்கல், இராமநாதபுரம், திருப்பூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றுக்கும் ரூ. 8.50 லட்சம் செலவில் அரசினர் கலைக் கல்லூரிக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த நடப்பு ஆண்டிலேயே கட்டிடப் பணிகளை மேற்கொண்டு அடுத்த கல்வி ஆண்டு தொடங்கு வதற்கு முன்னர் இப் பணியை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. மேற்சொன்ன பணிகளுடன், குடியாத்தம் அரசினர் கலைக் கல்லூரியில் ரூ. 4.90 லட்சம் செலவில் மாணவர் விடுதியும், திருச்சி பெரியார் ஈ.வே.ரா. கலைக் கல்லூரி மாணவர் விடுதி ரூ. 4.30 லட்சம் செலவிலும், கரூர் கலைக் கல்லூரி மாணவர் விடுதி ரூ. 4.30 லட்சம் செலவிலும், மீனாட்சி மகளிர்க் கல்லூரி மாணவிகள் இல்லம் ரூ. 4.30 லட்சம் செலவிலும், கும்பகோணம் மகளிர் கல்லூரி மாணவிகள் இல்லம் ரூ. 615 லட்சம் செலவிலும் கட்டுவதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தப் புள்ளிகள் சரி செய்யப்பட்ட பின்னர் இப் பணிகளை நிறைவேற்று வதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

இவை தவிர இது வரை துவக்கப்படாத மாவட்டக் கழக அரசினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் பொதுப் பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### அரிசனர் வகுப்பினர் நலன்.

இத்திட்டத்தின் கீழ், மாணவ, மாணவிகள் இல்லக் கட்டிடங் கள் கட்டும் பணி பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

### கட்டிட ஆராய்ச்சி.

கட்டிடக் கட்டுமான வேலைகளைப் பெருவாரியான அளவில் மேற்கொண்டு நிறைவேற்றும் ஒரு துறைக்கு, ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று இன்றியமையாததாகும். பொதுப்பணித் துறையைச் சார்ந்த க்ட்டிடப் பிரிவுக் கோட்டம் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளது.

### நில வருவாய்.

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரத்தில் வருவாய்க் கோட்ட அதிகாரி அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்காக ரூபாய் 1.60 லட்சம் அரசு ஒப்பளித்துள்ளது. இந்த நடப்பு ஆண்டில் கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

### சிறைச்சாலைகள்.

பாளையங்கோட்டையிலுள்ள "பார்ஸ்டல்" பள்ளிக்கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன. 25 இடங்களில் நீரடிக்கழிப்பிடங்கள் அமைக்கும் பணியும் நடந்து வருகின்றது. சென்னை, புரசைப்பாக்கத்தில் ரூ. 5.00 லட்சம் செலவில் அரசினர் மாணவ, மாணவிகள் புகலிடம் அமைக்கும் பணி விரைவில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### பத்திரப் பதிவுத் துறை.

மைலாப்பூர், பழூர், திருவண்ணாமலை, கோட்டாரம், திருவட்டாறு ஆகிய இடங்களில் துணைப்பதிவாளர் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 1.85 லட்சம் செலவிட ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. இப் பணிகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

### பொதுப்பணிகள்.

சைதாப்பேட்டையிலுள்ள டாட்ஹண்டர் நகரில் குடியிருப்போருக்காகச் சமுதாய நிலையம் ஒன்றும், மூன்று கடைகளும் ரூ. 1.00 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூரில் ரூ. 3.00 லட்சம் செலவில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி அலுவலகம் கட்டும் பணி நடந்து வருகின்றது.

### பலவகைத் துறைகள்.

திருச்சிராப்பள்ளி, சேலம், உதகை ஆகிய இடங்களிலுள்ள வர்த்தக வரி அலுவலகங்கள் அனைத்திற்கும் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 23.60 லட்சம் செலவிட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டில் இப்பணிகளை நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. கடலரிப்பைத் தடுக்கும் திட்டத்திற்கான கட்டிடம் கட்ட ரூ. 1.00 லட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோருக்காக மண்டபம், தனுஷ்கோடி, ராமேஸ்வரம் ஆகிய இடங்களில் அனுமதிக்கப்பட்ட மறுவாழ்வளிப்புப் பணிகள் நிறைவேறி வருகின்றன.





### அட்டவணை 1.

மாநில சாலைகள் (அரசு சாலைகள்)—புதிய வேலைகள் 1966–67 முதல் 1969–70 வரை அங்கீகரிக்கப்பட்டவை.

| வரிசை எண். | வேலையின் விபரம். | மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1966–67— | | |
| 1. | சென்னை எல்லைக்குட்பட்ட பேசின் பாலத்திற்கு அருகாமையில் உள்ள மூன்று பாலங்களையும் அகலப்படுத்துதல். (சென்னை-சைதாப்பேட்டை.) | 20.00 |
| 2. | ஊட்டி-மேட்டுப்பாளையம் சாலையில் மைல் 12/7-ல் இருப்புப்பாதைக்கு அடியில் பாலம் கட்டுதலும் சாலையை நேராக ஒழுங்குபடுத்துதலும். (நீலகிரி.) | 4.00 |
| 3. | சென்னை-திருத்தணி சாலையில் 53/1 மைலிலும், மற்றும் அரக்கோணம்-ரேணிகுண்டா சாலை 9/1 மைலிலும் நந்தி ஆற்றின் குறுக்கே பாலங்கள் அமைப்பதை தவிர்க்க நதிக்கு இணையாக ஒரு மாற்று சாலை அமைத்தல். (செங்கல்பட்டு மாவட்டம்.) | 1.00 |
| 4. | அறந்தாங்கி-பள்ளப்பட்டி சாலை 1/3–4 மைலில் வெள்ளாற்றின் குறுக்கே உள்ள நீர்கடவுப் பாலத்திற்குச் செல்லும் அணுகு சாலையை அபிவிருத்தி செய்தலும். (தஞ்சாவூர் மாவட்டம்.) | 0.46 |
| 5. | திருநெல்வேலி-சந்திப்பிற்கு அருகாமையில் உள்ள திருநெல்வேலி-செங்கோட்டை சாலை மைல் 1/4 உள்ள சாலை இருப்புப்பாதை கடவுக்குப் பதிலாக ஒரு மேம்பாலம் கட்டுதல். (திருநெல்வேலி மாவட்டம்.) | 35.00 |
| 6. | மேற்கே செல்லும் பெரிய சாலையிலிருந்து மைல் 10/2-லிருந்து பிரிந்து சென்று ஸ்ரீ தேவி கருமாரியம்மன் கோவிலுக்குச் செல்லும் கிளைச் சாலை மைல் 0/1-ல் கூவம் ஆற்றின் குறுக்கே உள்ள கடுகைப் பாலத்தை புதுப்பித்து கட்டுதல். (செங்கல்பட்டு மாவட்டம்.) | 3.20 |

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | மதிப்பு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| **1966-67—தொடர்ச்சி** | |
| 7. கோவை-மேட்டுப்பாளையம் சாலை மைல் 3/2-ல் ஒரு பாலம் கட்டுதல். (கோயம்புத்தூர் மாவட்டம்) பாதுகாப்பு வேலை. | 0.35 |
| 8. சென்னை-எண்ணூர் துரிதசாலையிலிருந்து 3/1 மைலில் சென்னை சுத்திகரிப்பு பகுதிகட்கு சென்று திருவொற்றியூர், பொன்னேரி-பஞ்செட்டி சாலை மைல் 2/3-ல் இணைக்கும் ஒரு புதிய சாலையமைத்தல். (செங்கல்பட்டு மாவட்டம்). | 32.50 |
| (1966-67) மொத்தம். | 96.51 |
| **1967-68—** | |
| 9. திருச்சிராப்பள்ளி-கோயம்புத்தூர் சாலையையும் மற்றும் தேசீய சாலை 7-யும் மைல் 46/0-ல் ஏற்படும் சந்திப்பையும் அபிவிருத்தி செய்தல். இது கரூர் நகராண்மை எல்லைக்குட்பட்டது. (திருச்சிராப்பள்ளி மாவட்டம்.) | 1.20 |
| 10. பக்கிங்காம் கால்வாய் கரையில், எல்லியட் கடற்கரைச் சாலையிலிருந்து ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட சாலையை அமைத்தல். சென்னை நகர எல்லைக்குட்பட்டது. (சென்னை நகரம்-செங்கல்பட்டு மாவட்டம்.) | 3.00 |
| 11. சூளைம்பேட்டை சாலையில் 1/5 மைலில் ஒரு பாலம் கட்டுதல். (தென் ஆற்காடு மாவட்டம்.) | 2.12 |
| 12. சூளைம்பேட்டை சாலையில் 1/7 மைலில் மற்றொரு பாலம் கட்டுதல். (தென் ஆற்காடு மாவட்டம்). | 3.00 |
| 13. மாவூர்-சத்தியக்குடி மைல் 1/7—4/5-க்கு சரளைக் கற்கள் பரப்புதலும், தார் போடுதலும். (பலவீனமான பாலங்களை புதுப்பித்தலும் சேர்ந்தது.) (தஞ்சாவூர் மாவட்டம்.) | 4.20 |
| 14. ஆண்டியூர்-அம்மாப்பேட்டை மைல் 5/6—7-ல் ஓர் பாலம் கட்டுதல். (கோயம்புத்தூர் மாவட்டம்.) | 2.60 |
| 15. நொய்யல் ஆற்றின் குறுக்கே உடுமலைப்பேட்டை திருப்பூர் சாலை மைல் 38/4-ல் உள்ள பாலத்தை அகலப்படுத்துதல். திருப்பூர் நகர எல்லைக்குட்பட்டது. (கோயம்புத்தூர் மாவட்டம்.) | 5.75 |



| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | மதிப்பு (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| (1) | (2) |
| **1967-68—தொடர்ச்சி** | |
| 16. வேதாரண்யம் கால்வாய் குறுக்கே மைல் 23/7-ல் ஆலங்குடி-தலைஞாயிறு சாலையில் ஒரு பாலம் கட்டுதல். (தஞ்சாவூர் மாவட்டம்.) | 3.00 |
| 17. வேளாங்கண்ணி-வேதாரண்யம் சாலை மைல் 0/1—10/4, சரளைக் கற்கள் பரப்புதல். (தஞ்சாவூர் மாவட்டம்.) | 3.15 |
| 18. முதுகளத்தூர்-சிக்கல் சாலை மைல் 0/1—12/3-க்கு சரளைக் கற்கள் பரப்புதல், வடிகால் வேலைகளும் சேர்ந்தது (ராமநாதபுரம் மாவட்டம்.) | 3.70 |
| 19. வேலூர் நகர எல்லைக்குட்பட்ட கடலூர்-சித்தூர் சாலை மைல் 117/7-லிருந்து 118/2 (கி.மீ. 188/6—189/2) வரை அகலப்படுத்தியும், உயர்த்தியும் அபிவிருத்தி செய்தல். | 2.00 |
| (1967-68) மொத்தம் | 33.72 |
| **1968-69—** | |
| 20. தஞ்சாவூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட தஞ்சாவூர்-கந்தர்வகோட்டை சாலை மைல் 0/3-ல் இருப்புப் பாதையின்கீழ் சாலையை அமைத்தல். (தஞ்சாவூர் மாவட்டம்). | 0.40 |
| 21. சதுரங்கப்பட்டினம்-சூரப்பன் சாலை மைல் 40/0 முதல் 40/8 வரை அகலப்படுத்தி தார் போடுதல். (ஒரு மைல் காஞ்சீபுரம் நகர எல்லையில் உள்ளது). (செங்கல்பட்டு மாவட்டம்). | 1.11 |
| 22. காஞ்சீபுரம் நகர எல்லைக்குட்பட்ட செங்கல்பட்டு-கஞ்சீபுரம் சாலை மைல் 3/4-8 (5-பர்லாங்குகள்) சாலை அகலப்படுத்துதலும் தார் போடுதலும் (செங்கல்பட்டு மாவட்டம்) | 0.91 |
| 23. காஞ்சீபுரம் நகர எல்லைக்குட்பட்ட பொன்னேரிக்கரை—காஞ்சீபுரம் சாலை மைல் 18/2-8 (7 பர்லாங்கு) உள்ள சாலையை அகலப்படுத்தலும், தார் போடுதலும் செங்கல்பட்டு மாவட்டம்). | 1.00 |
| 24. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஓசூர்-தாலி சாலை மைல் 11/6-ல் உள்ள பாலத்தை மறுபடியும் கட்டுதல். (தர்மபுரி மாவட்டம்). | 0.30 |

[1970 மார்ச் 25

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். (1) | மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்.) (2) |
|---|---|
| 1968-69—தொடர்ச்சி | |
| 25. குள்ளன்சாவடி-காட்டு கூடலூர் சாலை மைல் 1/2-ல் உள்ள மூழ்கு பாலத்தை கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்.) | 1.50 |
| 26. ஆவுடையார்கோவிலிலிருந்து ஓக்கூருக்கு செல்லும் சாலை அபிவிருத்தியும் பாம்பாற்றின் குறுக்கே பாலம் கட்டுதலும் சேர்ந்தது. (தென் ஆற்காடு மாவட்டம்.) | 6.00 |
| 27. பாப்பனப்பட்டி வழுதாவூர் சாலை மைல் 1/4—5-ல் சங்கராபரணி ஆற்றின் குறுக்கே ஓர் மூழ்கு பாலம் கட்டுதல். (தென் ஆற்காடு மாவட்டம்). | 12.00 |
| 28. முத்துப்பேட்டை மிமிசால் சாலை மைல் 12/4-ல் அக்னி ஆற்றின் குறுக்கே ஓர் மூழ்கு பாலம் கட்டுதல். (தென் ஆற்காடு மாவட்டம்). | 10.00 |
| 29. நத்தம்-செந்துறை சாலை மைல் 10/3-ல் பாலாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். (மதுரை மாவட்டம்). | 1.50 |
| 30. நத்தம்-செந்துறை சாலை மைல் 12/8-ல் மூடமலை ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். (மதுரை மாவட்டம்). | 1.00 |
| 31. மதுரை-தேனீ சாலையில் 42/1 மைலிலிருந்து வைகை அணைக்குச் செல்லும் 4 மைல் நீளமுள்ள சாலையை அபிவிருத்தி செய்தல். (மதுரை மாவட்டம்). | 0.60 |
| 32. திண்டுக்கல்-வட்டனம் சாலை மைல் 34/3-ல் பாலாற்றின் குறுக்கே ஓர் பாலம் கட்டுதல். (மதுரை மாவட்டம்.) | 1.80 |
| 33. திருப்பத்தூர்-நட்ராம்பள்ளி சாலை மைல் 4/7-ல் கோட்டூர் ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். (வட ஆற்காடு மாவட்டம்). | 0.60 |
| 34. மதுரை-மேலூர் சாலையில் உள்ள சத்தியார் ஓடை மைல் 3/8-ல் உள்ள பாலத்திற்கு கண்களை அதிகப்படுத்தல். (மதுரை மாவட்டம்). | 0.90 |
| 35. மதுரை-அழகர்கோவில் சாலை மைல் 4/1-ல் உள்ள பாலத்திற்கு கண்களை அதிகப்படுத்துதல். (மதுரை மாவட்டம்). | 1.25 |
| (1968-69) மொத்தம் | 40.87 |



1970 மார்ச் 25]

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். (1) | மதிப்பீட்டுச் செலவு. (ரூ. லட்சத்தில்.) (2) |
|---|---|
| 1969-70— | |
| 36. சீர்காழி-பனங்காட்டாங்குடி சாலை 4/8-வது மைலில் புது மணியாற்றின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டுதல். (தஞ்சாவூர் மாவட்டம்). | 3.25 |
| 37. பூந்தோட்டம்-காரைக்கால் சாலை 4/7–8-வது மைலில் அரிசிலாற்றின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டுதல். (தஞ்சாவூர் மாவட்டம்). | 5.00 |
| 38. முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் 17/4-வது மைலில் நாசுன்னியாற்றின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டுதல். (தஞ்சாவூர் மாவட்டம்). | 4.50 |
| 39. தஞ்சாவூர் கீழ் அணைக்கட்டுச் சாலை 174/7-வது மைலில், சுந்தர பெருமாள் கோயில் அருகில் உள்ள சாலை, இருப்புப்பாதை கடவை வேறு இடத்திற்கு மாற்றுதலும், அனுகுசாலை அமைத்து, சரளைக்கல் பரப்புதலும். | 0.75 |
| 40. முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் 21/7–8 வது மைலில், அம்புலியாற்றின் குறுக்கே பாலம் ஒன்றைக்கட்டுதல். (தஞ்சாவூர் மாவட்டம்). | 10.00 |
| 41. ஓடுமலைப்பேட்டை-குமாரலிங்கம் சாலை 9/8-வது மைலில் அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டுதல். (கோயம்புத்தூர் மாவட்டம்.) | 6.00 |
| 42. உதகமண்டலம்-அவலாஞ்சி சாலை 1/8-வது மைலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல் (நீலகிரி மாவட்டம்). | 1.25 |
| 43. முசிரி-துறையூர்-முருகூர், எரகுடி சாலை 19/5-வது மைலில் தாழையாறு கால்வாயின் மேலுள்ள, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பாலத்தைப் புதுப்பித்தல். | 1.00 |
| 44. வேப்பஞ்சேரி-கூவத்தூர்-மூகையூர் - ஏனைய ஊர்கள் வழியாக வயலூரிலிருந்து, சிக்கண்ணண்குப்பம் வரை செல்லும் சாலைக்குத் தார் போடுதல் உள்பட மேம்பாடுகள். (செங்கல்பட்டு மாவட்டம்). | 3.75 |
| 45. கொளப்பாடு சாலை 0/0 மைலிலிருந்து 5/0 மைல் வரை, தார்போடுதல் உட்பட மேம்பாடுகள். (தஞ்சாவூர் மாவட்டம்.) | 2.50 |

[1970 மார்ச் 25

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். (1) | மதிப்பீட்டு செலவு. (ரூ. லட்சத்தில்.) (2) |
|---|---|
| 1969–70—தொடர்ச்சி. | |
| 46. பாலாற்றின் குறுக்கே, வட ஆற்காடு மாவட்டம் வட இலுப்பை, செங்கற்பட்டு மாவட்டம் பெரும்பாக்கம் ஆகியவைகளை இணைக்கும் நீர்க் கடவுப் பாலம் ஒன்று கட்டுதல். (வட ஆற்காடு மாவட்டம்). | 6.00 |
| 47. நத்தம்-செந்துறை சாலை 1/4-வது மைலில் விரசுளியாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல். | 2.00 |
| 48. விழுப்புரம்-திருவண்ணாமலை சாலை 41/6-வது மைலில் கண்டாச்சிபுரம் அருகில் உள்ள ஓடையின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல். (தென் ஆற்காடு மாவட்டம்). | 0.45 |
| 49. கடலூர்-சித்தூர் சாலையில் 119/2-6-வது மைலில் பாலாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல். | 60.00 |
| மொத்தம் 1969–70 | 106.45 |

## மொத்தச் சுருக்கம்.

| | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| 1966–67 (1 முதல் 8 வரை) | 96.51 |
| 1967–68 (9 முதல் 19 வரை) | 33.72 |
| 1968–69 (20 முதல் 35 வரை) | 40.87 |
| 1969–70 (36 முதல் 49 வரை) | 106.45 |
| மொத்தம் | 277.55 |



1970 மார்ச் 25]

## அட்டவணை 2.

(ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி சாலைகள்) மற்ற சாலைகள் 1966–67 முதல் 1969–70 வரை அனுமதிக்கப்பட்ட புதிய சாலைகள்.

| வரிசை எண்ணும் வேலையின் விபரமும். (1) | மதிப்பீட்டுச் செலவு. (ரூ. லட்சத்தில்) (2) |
|---|---|
| 1966–67— | |
| 1. வேலந்தாங்கல்-அத்திப்பட்டு மேல்மலையனூர் சாலை அபிவிருத்தி. மைல் 0/0-3/4 (தென் ஆற்காடு மாவட்டம்.) | 0.88 |
| 2. ராப்பூசல் சாலை, கொளத்தூர் பாக்குடி சாலை சந்திக்கும் வரை சரளைக்கற்கள் பரப்புதல், மைல் 0/0-4/6 மற்றும் 6/1-8. (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 0.97 |
| 3. மைல் 0/0-1/2 வரை நாகதீர்த்தம் சாலைக்கு கருங்கற் சரளைக்கற்கள் பரப்புதலும், மைல் 15-ல் சிறிய பாலம் கட்டுதலும். (மதுரை மாவட்டம்). | 1.00 |
| 4. ஓடம்பள்ளி-பாப்பம்பாளையம் சாலைக்கு சரளைக் கற்கள் பரப்புதல், மைல் 1/7–6/1. (சேலம் மாவட்டம்). | 0.98 |
| 5. புவனகிரி-குறிஞ்சிப்பாடி சாலையில் மைல் 7/2-3-ல் பரவனாற்றில் ஓர் மூழ்கு பாலம் கட்டுதல். (தென் ஆற்காடு மாவட்டம்). | 8.00 |
| 6. பட்டம்புதூர் மேலைப்பட்டு சாலையின் மைல் 0/3-ல் கௌசிக ஆற்றின் குறுக்கே ஓர் மூழ்கு பாலம் கட்டுதல். (ராமநாதபுரம் மாவட்டம்.) | 2.25 |
| 7. குண்டடம்-கோவிந்தபுரம் சாலை 6/4-5-ல் உப்பார் ஆற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல். (கோயம்புத்தூர் மாவட்டம்) | 3.50 |
| 8. சேரி கிராமத்தில் அம்மாபேட்டை-கோவிந்தகுடி சாலையில் வெட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல். (தஞ்சாவூர் மாவட்டம்.) | 8.00 |
| 1966-67 மொத்தம் | 25.58 |
| 1967–68— | |
| 9. ஆலடியார் என்னும் இடத்தில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஓர் உயர் மட்ட பாலம் கட்டுதல். (திருநெல்வேலி மாவட்டம்.) | 8.25 |

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். (1) | மதிப்பீட்டுச் செலவு. (ரூ. லட்சத்தில்.) (2) |
|---|---|
| 1967-68—தொடர்ச்சி. | |
| 10. மேலப்பட்டி சாலையில் மைல் 1/2-ல் சிறுபாலம் கட்டுதலும் 1/5 மற்றும் 2/8-ல் நீர்க்கடவுப் பாலங்கள் கட்டுதலும் (திருநெல்வேலி மாவட்டம்.) | 4.00 |
| 11. ஆலங்குளம்*நெட்டூர் சாலையில் நெட்டூருக்கு அருகில் சிற்றாற்றில் ஒரு பாலம் கட்டுதல். (திருநெல்வேலி மாவட்டம்.) | 3.50 |
| 12. பரமக்குடி-முதுகளத்தூர் சாலையில் உள்ள வன்னி வாய்க்காலிலிருந்து தேசிய சாலை 49-ல் உள்ள பாண்டகண்மாய் புகைவண்டி நிலையத்திற்கு ஒரு சாலை அமைக்க. (வழி) வெங்கட்ட குறிச்சி (14 மைல் 3 பர்லாங்கு) (ராமநாதபுரம் மாவட்டம்). | 14.27 |
| 13. சிங்கம்புணரி- கிரிகன்கோட்டை ஆறு வரை சரளைக் கற்கள் பரப்புதலும், கி.மீ.0/0 முதல். 6/2 வரை, உப்பாற்றிலும், பாலாற்றிலும் பாலங் களை கட்டுவதை சேர்த்து (ராமநாதபுரம் மாவட்டம்.) | 3.00 |
| 14. பள்ளப்பட்டி-பிரான் மலை சாலையில் மைல் 0/6-ல் பாலாற்றின் குறுக்கே ஒரு மூழ்கு பாலம் கட்டுதல். (மதுரை மாவட்டம்). | 1.90 |
| 15. விருதத்தூர்-கைக்களத்தூர் சாலை மைல் 9/7-ல் ஒரு நீர்க் கடவுப் பாலம் கட்டுதல். (திருச்சிராப் பள்ளி மாவட்டம்). | 1.50 |
| 16. விரிஞ்சிபுரம் இருப்புப்பாதைக்கு செல்லும் பாதை யில் மைல் 1/5-6 மற்றும் 2/4-6 நீர்க்கடவுப் பாலங் கள் கட்டுதல். (வட ஆற்காடு மாவட்டம்). | 4.10 |
| 17. பிலாசூர் படாகனூர்—மான்சூரபாத் சாலை மைல் 4/3-லிருந்து 10/6 வரை பரப்புதல். (வட ஆற்காடு மாவட்டம்). | 2.15 |
| 18. கலவை-சமந்தஹல்லி சாலை மைல் 4/8-ல் பொன்னி யாற்றின் குறுக்கே ஒரு நீர்க்கடவுப் பாலம் கட்டுதல். (தர்மபுரி மாவட்டம்). | 6.75 |
| 1967–68 மொத்தம் | 51.42 |
| 1968-69 | |
| 19. வலங்கைமான் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெடாம்பூருக்கு அருகில் வெட்டாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். (தஞ்சாவூர் மாவட்டம்). | 7.50 |



| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். (1) | மதிப்பீட்டுச் செலவு. (ரூ. லட்சத்தில்.) (2) |
|---|---|
| 1968–69—தொடர்ச்சி. | |
| 20. வாலாஜாபாத்-திருப்பாலைவனம் சாலையில் மைல் 0/1-5 வாலாஜாபாத்துக்கு அருகில் ஒரு படுக்கைப் பாலம் பாலாற்றின் குறுக்கே கட்டப்படுவது. (செங்கல்பட்டு மாவட்டம்). | 7.00 |
| 21. மாருதிப்பட்டி எஸ். எஸ். கோட்டை சாலை மைல் 0/7-ல் முறையூருக்கு அருகில் பாலாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டுதல். (ராமநாதபுரம் மாவட்டம்). | 2.50 |
| 22. சாலை-கிராமம், சருகனி சாலையில் 2/6-வது மைலில் இருந்து ஆனந்தூருக்கு சாலை அமைத்தல் (வழி) வண்டல், மற்றும் ஆர்யன் கோட்டையிலிருந்து இளையான்குடி இருப்புப்பாதை நிலையம்வரை சாலை அமைத்தலும், மங்கலம் சாலை முதல் ராமநாதபுரம் நாயனர் கோவில் சாலையில் உள்ள காவனூரை சந்திக்கும்வரை சாலை அமைத்தல் (வழி) பி. கோடி குளம்-பெருங்குளம் முதலியவை. (ராமநாதபுரம் மாவட்டம்). | 15.00 |
| 23. சேலூர் அணைக்கட்டில் வெட்டாற்றின் குறுக்கே. சாலைப் பாலம் கட்டுவதும், பொறிமதகு கட்டுவதும் (தஞ்சாவூர் மாவட்டம்.) | 1.78 |
| 1968-69 மொத்தம் | 33.78 |
| 1969–70 | |
| 24. அலியூர்-ஆண்டித்தாங்கல் சாலையின் 0/7-வது மைலில் மதகு பாலமும், சிறிய பாலமும் கட்டுதல் (செங்கற்பட்டு மாவட்டம்). | 1.06 |
| 25. வண்டலூர்-வாலாஜாபாத் சாலை 21/2-வது மைலி லிருந்து பிரியும் ஆதனூர் சாலையில் 0/1-வது மைலில் பாலம் ஒன்று கட்டுதல் (செங்கற்பட்டு மாவட்டம்). | 0.60 |
| 26. மின்னல் ரயில் நிலையத்திலிருந்து கிழவீதி சாலை 0/0-4/6 மைல் வரை சரளைக்கல் பரப்புதல் (வட ஆற்காடு மாவட்டம்). | 1.20 |
| 27. புது செய்யார் பாலத்தை, திருவத்திபுரத்தோடு இணைக்கின்ற இணைப்புச் சாலை அமைத்தல். (வட ஆற்காடு மாவட்டம்). | 3.00 |
| 28. தாதக்குளம்-மேலமலையனூர் சாலை மைல் 0/0-3/0, மேம்படுத்தல். (தென் ஆற்காடு மாவட்டம்). | 0.75 |

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். (1) | மதிப்பீட்டுச் செலவு. (ரூ. லட்சத்தில்.) (2) |
|---|---|
| 1969-70—தொடர்ச்சி. | |
| 29. மெருமுக்கல் கணப்பாக்கம் சாலை மைல் 0/0 3/2-இல் சரளைக்கல் பரப்புதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 0.75 |
| 30. ஆலங்குடி-தலைஞாயிறு சாலை 20/2 மைல் அருகில் அரிச்சந்திரா நதியின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதலும் பிரிஞ்சி முனையிலிருந்து பாலம் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கும் இடம் வரை அரிச்சந்திரா நதியின் இடக் கரையை அகலப் படுத்தலும் (தஞ்சாவூர் மாவட்டம்.) | 3.60 |
| 31 அவிலவ நல்லூரிலிருந்து ஆரூர்க்குச் செல்லும் சாலைக்கு 0/0-7/6 மைல், சரளை பரப்புதல் (தஞ்சாவூர் மாவட்டம்). | 1.50 |
| 32. அம்பில்-திண்ணியத்திற்கு இடையே கலையாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 0.50 |
| 33. பேட்டைவாய்த்தலை சாலையில், 1மைல் 2 பர்லாங்கு நீளத்திற்குத் தார்போடுதல். (திருச்சிராப்பள்ளி மாவட்டம்.) | 0.50 |
| 34. பிள்ளைவலம்-சங்கிரை சாலை 10/2-8 மைலிலிருந்து 13/1-7 மைல் வரை கருங்கல் பரப்புதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்). | 0.50 |
| 35. குழிப்பாறை-பனையபட்டி ரங்கையசாலை 0/0-1/4 மைல் கருங்கல் பரப்புதல் (திருச்சி மாவட்டம்). | 0.50 |
| 36. அனுமந்தராயன்கோட்டை அருகில் பித்தளைப்பட்டி, பழையகன்னிவாடி சாலை 1/2-வது மைலில் கொடுவனாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல் (மதுரை மாவட்டம்). | 3.00 |
| 37. வாவிடமருதூர்-சிவகப்பட்டி சாலையில் 2/0-வது மைலிலிருந்து 6/0-மைல் வரை சரளைக்கல் பரப்புதல் (மதுரை மாவட்டம்). | 2.00 |
| 38. பனைமரத்துப்பட்டி-மங்களாபுரம் சாலை கி.மீ. 0/0 விருந்து 28.40 வரை 12 அடி அகலத்திற்கு 2 அங்குல கனத்திற்கு கருங்கல் பரப்பி சாலையின் தரத்தை உயர்த்தல் (சேலம் மாவட்டம்). | 2.00 |
| 39. பட்டணம் புதூரிலிருந்து திருச்சி-கோயம்புத்தூர் முக்கியசாலை, மைல் 0/0-4/1 வரை சாலையை மேம்படுத்தல் கண்கள் அமைந்த படுக்கைப் பாலங்கள் 2/7, 3/3, 3/6-வது மைல்களில் கட்டுதலும் | 1.75 |



| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | மதிப்பீட்டுச் செலவு. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|
| 1969-70—தொடர்ச்சி. | |
| 2/5, 3/1, 3/4-வது மைல்களில் உள்ள சிறு பாலங்களை அகலப்படுத்தலும் உள்பட (கோயம்புத்தூர் மாவட்டம்.) | |
| 40. வேட்டகோணம், புத்தனூறு, உப்பாறு சாலை 1/7-வது மைலில் பிரியும் வேட்டைக்காரன் புதூர் களத்துப் புதூர் சாலையில் உப்பாற்றின் குறுக்கே நீர்க் கடவுப்பாலம் ஒன்று கட்டுதல் (கோயம்புத்தூர் மாவட்டம்). | 1.20 |
| 41. நாச்சிப்பாளையம்-வழுக்குப்பரை சாலையில் 0/5-வது மைலில் மூழ்குபாலம் ஒன்று கட்டுதல் (கோயம்புத்தூர் மாவட்டம்). | 1.00 |
| 42. தாளவாடி-இராகன ஹள்ளிசாலை (வழி) தூதகஜனூர் 0/0-8/3 மைல், சாலையை மேம்படுத்துதல், 0/1 மைலில் பாலம் கட்டுதலும், ஏனைய மேம்பாடு வேலைகளும் உள்பட (கோயம்புத்தூர் மாவட்டம்). | 14.00 |
| 43. குன்னூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மேலூர் நகரப் பஞ்சாயத்தில் உள்ள கல்லுக்கும்பை தோதர் மட்டம் வண்டித்தடத்தில் பாலம் ஒன்று கட்டுதல் (நீலகிரி மாவட்டம்). | 0.70 |
| 44. இரந்தையைராவிளாகம் கிராமம் அருகே பெண்ணாற்றின் குறுக்கே நீர்கடவுப் பாலம் ஒன்று கட்டுதல் (தென் ஆற்காடு மாவட்டம்). | 10.00 |
| 45. மறவமங்கலம்-இருவயல் சாலை அமைத்தல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 2.40 |
| 46. மறவமங்கலம்-நாட்டரசன் கோட்டை சாலை அமைத்தல் (இராமநாதபுரம் மாவட்டம்). | 2.40 |
| 47. திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வேரையூர்-தண்டரை சாலை, 0/6-வது மைலில் துரிஞ்சலாற்றின் குறுக்கே நீர்க்கடவுப் பாலம் கட்டுதல். | 2.00 |
| மொத்தம்—1969-70. | 58.85 |

[1970 மார்ச் 25

**மொத்தச் சுருக்கம்.**

| | | (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| 1966–67 (1 முதல் 9 வரை) | .. | 25.58 |
| 1967–68 (10 முதல் 19 வரை) | .. | 51.42 |
| 1968–69 (20 முதல் 23 வரை) | .. | 33.78 |
| 1969–70 (24 முதல் 27 வரை) | .. | 58.85 |
| மொத்தம் | .. | 169.63 |

**அட்டவணை 3.**

**1970–71-ஆம் ஆண்டிற்கான 2-ம் பகுதியின்கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட வேலைகள்.**

**மாநில நெடுஞ்சாலைகள் திட்டம்.**

**அரசுச் சாலைகள்.**

| தொடர் எண். | வேலையின் பெயர் | செலவு (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **அ. தேசிய நெடுஞ்சாலைகள்.** | |
| | **திருச்சிராப்பள்ளி கோட்டம்.** | |
| 1. | தேசிய நெடுஞ்சாலை-45-ல் 195/2-வது மைலில் (தே. நெ. நகர் இணைப்பு) திருச்சிராப்பள்ளியில், காவேரி ஆற்றின் குறுக்கே இருந்து வரும் பாலத்தின் வலுவற்ற மேல்பகுதியைச் சீர்படுத்துதலும், அடித்தளத்தை அகலப்படுத்தியோ அல்லது தனியாகவோ, கூடுதலாகவோ இரண்டு சிறு பாதைகள் அமைத்தல். | 70.00 |
| | **ஆ. மாநில நெடுஞ்சாலைகள்.** | |
| | **கோயம்புத்தூர் கோட்டம்.** | |
| 2. | கோயம்புத்தூர்—திண்டுக்கல் சாலையில் 17/4 மைலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல் (மா.நெ.). | 1.90 |
| | **திருச்சிராப்பள்ளி மாவட்டம்.** | |
| 3. | சிந்தாமணி அருகில் திருச்சிராப்பள்ளி-கோயம்புத்தூர் சாலையின் 0/0-வது மைலிலிருந்து 9/7-வது மைல் வரை புறப்பாதை அமைத்தல் (மா.நெ.). | 9.00 |



1970 மார்ச் 25]

| தொடர் எண் | வேலையின்பெயர். | செலவு. (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **விழுப்புரம் கோட்டம்.** | |
| 4. | உளுந்தூர்பேட்டை-சேலம் சாலையில் 36/0 மைலிலிருந்து 46/0-வது மைல் வரை எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் 22 அடி அகலத்திற்கு தார் போடுதல் (மா. நெ.) | 2.60 |
| | **கடலூர் கோட்டம்.** | |
| 5. | உளுந்தூர்பேட்டை—சேலம் சாலையில் 46/0-வது மைலிலிருந்து 73/5-வது மைல் வரை எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் 22 அடி அகலத்திற்குத் தார் போடுதல் (மா. நெ.). | 7.40 |
| | **திண்டுக்கல் கோட்டம்.** | |
| 6. | கோயம்புத்தூர்-திண்டுக்கல் சாலையில் பழனியருகில் சண்முக நதியின் குறுக்கே உள்ள பாலத்தை புதுப்பித்தல் (மா. நெ.). | 7.00 |
| | **நாகப்பட்டினம் கோட்டம்.** | |
| 7. | தஞ்சாவூர்-நாகப்பட்டினம் சாலையை கி. மீ. 39 முதல் 49 வரை அகலப்படுத்தி மேம்படுத்தல் (மா. நெ.). | 6.00 |
| | **திண்டுக்கல் கோட்டம்.** | |
| 8. | திண்டுக்கல்-பழனி சாலையில் 0/0 மைல் முதல் 35/5 மைல் வரை தேவையான இடங்களில் 22 அடி அகலத்திற்குத் தார் போடுதல் (மா. நெ.). | 10.00 |
| | **இ. மாவட்ட பெருஞ்சாலை** | |
| 9. | அந்தியூர்-ஆத்தனி சாலையில் 0/3-வது மைலில் தவிட்டுப்பாளையத்தின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல் (மா. பெ. சா.). | 2.00 |
| | **சிவகெங்கை கோட்டம்.** | |
| 10. | அபிராமம்-முதுகுளத்தூர் சாலை 0/0 மைல் முதல் 8/1 மைல் வரை சரளைக்கல் பரப்புதல் (மா.பெ. சா.). | 4.00 |
| | **சைதாப்பேட்டை கோட்டம்.** | |
| 11. | ஆதார மருத்துவ அறிவியல் மனைக்குச் செல்லும் சாலை ஒன்று அமைத்தல் (மா. பெ. சா.). | 2.00 |

[1970 மார்ச் 25

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | மதிப்பீட்டுச் செலவு. (ரூ. லட்சத்தில்) |
|---|---|
| (1) | (2) |
| **கிருஷ்ணகிரி கோட்டம்.** | |
| 12. ஓசூர்-அதமன் கோட்டைச் சாலையில் 33/8-வது மைலில் உள்ள பாலத்தைப் புதுப்பித்தல் (மா. பெ. சா.). | 1.25 |
| **நாகப்பட்டினம் கோட்டம்.** | |
| 13. அரசலாற்றின் கரையிலுள்ள பூந்தோட்டம்-காரைக்கால் சாலையை 0/0-8/6, 9/1-2, 10/1 மைல் வரை அகலப்படுத்தி சரளைக்கல் பரப்பி மேம்படுத்தல் (மா. பெ. சா.). | 7.00 |
| **நாகர்கோவில் கோட்டம்.** | |
| 14. நாகர்கோவில்-ஆரல்வாய்மொழி சாலையில் மைல் 42/0 மைல் முதல் 53/3 வரை 22 அடி அகலத்திற்குத் தார் போடுதல் (மா. பெ. சா.). | 1.50 |
| **நாகப்பட்டினம் கோட்டம்.** | |
| 15. நாகப்பட்டினம் நகராட்சி எல்லைக்குள் நாகப்பட்டினம்-வேளாங்கன்னிச் சாலையில் 0-2-வது மைலில், உப்பனாற்றின் குறுக்கே பாலத்தைப் புதுப்பித்தல் (அரசு மா. பெ. சா.). | 3.60 |
| **திருச்சிராப்பள்ளி கோட்டம்.** | |
| 16. திருச்சிராப்பள்ளி, விராலிமலை, மதுரை சாலையில் 199/0 மைல் முதல் 210 மைல் வரை 22 அடி அகலத்திற்குத் தார் போடுதல் (அரசு மா. பெ. சா.). | 3.50 |
| **புதுக்கோட்டை கோட்டம்.** | |
| 17. திருச்சிராப்பள்ளி-விராலிமலை-மதுரை சாலையில் மைல் 210/0 முதல் 239/5 வரை 22 அடி அகலத்திற்கு தார் போடுதல் (அரசு மா.பெ.சா.). | 7.00 |
| **மதுரைக் கோட்டம்.** | |
| 18. திருச்சிராப்பள்ளி-விராலிமலை-மதுரை சாலையில் 239/5 மைல் முதல் 259-4 வரை 22 அடி அகலத்திற்கு தார் போடுதல் (அரசு மா பெ. சா.). | 6.00 |
| **செங்கற்பட்டு கோட்டம்.** | |
| 19. மானூந்தூர் உத்திரமேரூர் சாலை 8/1-வது மைலில் பாலம் ஒன்று கட்டுதல் (அரசு மா. பெ. சா.). | 5.25 |



1970 மார்ச் 25]

| தொடர் எண். | வேலையின் பெயர். | செலவு (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **செங்கற்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி.** | |
| 20. | தென் ஆர்க்காடு எல்லைச் சாலையில் மைல் 1/8, 2/2, 2/3 ஆகிய இடங்களில் உள்ள பள்ளங்களுக்கு மேலாக உயர்மட்ட பாலங்கள் கட்டுதல் (அரசு மா. பெ. சா.). | 3.00 |
| | **உதகமண்டலம் கோட்டம்.** | |
| 21. | குன்னூர்-குந்தா சாலை 4/3-வது மைலில் பாலம் ஒன்று கட்டுதல் (அரசு மா. பெ. சா.). | 1.75 |
| 22. | உடுமலைப்பேட்டை-திருப்பூர் சாலையை (பல்லடத்திலிருந்து-திருப்பூர் வரை) மைல் 20/1 முதல் 38/5 வரை அகலப்படுத்துதல் (அரசு.மா.பெ.சா.). | 2.50 |
| | **(ஈ) பிற மாவட்டச் சாலைகள்.** | |
| | **திண்டுக்கல் பகுதி.** | |
| 23. | தாளையூத்து-கள்ளமந்தயம் சாலை 8/2-3-வது மைலில் சண்முக நதியின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல் (பி. மா. சா.). | 5.00 |
| | **நாகப்பட்டினம் கோட்டம்.** | |
| 24. | நல்லாடையிலிருந்து, மாநில எல்லை வரை உள்ள செம்பனூர் கோயில்-நல்லாடை சாலையின் மணற் பகுதியை மேம்படுத்தல் (பி. மா. சா.). | 1.00 |
| | **திருவண்ணாமலை கோட்டம்.** | |
| 25. | ஆரணி-வல்லம்பந்தல் சாலை 6/7-8-வது மைலில் கமண்டல நாக நதியின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல் (பி. மா. சா.). | 2.50 |
| | **கிருஷ்ணகிரி கோட்டம்.** | |
| 26. | பாலக்காடு-காசாஹள்ளி சாலை 5/7-வது மைலில் சின்னாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல் (பி. மா. சா.). | 3.00 |
| | **சிவகெங்கை கோட்டம்.** | |
| 27. | திண்டுக்கல்-வட்டாணம் சாலையில் மைலில் 73/2-ல் இருந்து 92/0 மைல் வரை 5 அங்குல கனத்திற்கு கருங்கல் பரப்புதல் (பி. மா. சா.). | 6.00 |

| தொடர் எண். (1) | வேலையின் பெயர். (2) | செலவு (ரூ. லட்சத்தில்.) (3) |
|---|---|---|
| | **செங்கற்பட்டு கோட்டம்.** | |
| 28. | நெல்வாய்-திருக்கழுக்குன்றம் சாலை 9/8-வது மைலில் பாலம் ஒன்று கட்டுதல் (பி. மா. சா.) | 3.00 |
| 29. | நெல்வாய்-திருக்கழுக்குன்றம் சாலை, 14/8-வது மைலில் பாலம் ஒன்று கட்டுதல் (பி. மா.சா.). | 1.00 |
| | **ஈரோடு கோட்டம்.** | |
| 30. | சாதி-கொத்தமங்கலம் சாலையில் மைல் 1/7, 6/1-ல் உள்ள பள்ளங்களில் மேல் கண்கள் அமைந்த நீர்க் கடவுப் பாலம் கட்டுதல் (பி. மா. சா.). | 3.00 |
| | **மதுரை கோட்டம்.** | |
| 31. | மதுரை-வீராடனூர் சாலையில் மைல் 8/3, 9/6-ல் பாலங்கள் கட்டுதல். | 2.75 |
| | **வனத்துறைச் சாலைகள்.** | |
| 32. | திம்மம்-தாளவாடி சாலையை 0/0 மைலிலிருந்து 14/0 மைல் வரை மேம்படுத்தல் (வ. து. சா.) | 8.00 |
| | **தஞ்சாவூர் மாவட்டம்.** | |
| 33. | பட்டுக்கோட்டை-சேதுபாவாசத்திரம் சாலையில் 9/5-6-வது மைலில் பாபாக்கினியாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் (அரசு மா. பெ. சா.). | 4.50 |
| | **தென் ஆர்க்காடு மாவட்டம்.** | |
| 34. | குறிஞ்சிப்பாடி-பானூர் சாலை 4/6-வது மைலில் பாலம் ஒன்று கட்டுதல் (அரசு பி. மா. சா.). | 1.80 |
| | மொத்தம் | 204.80 |

## அட்டவணை 4.

**1970–71-ம் ஆண்டிற்காக II-ம் பகுதியின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட்ட வேலைகள்.**

ஏனைய சாலைகள் திட்டம்—(ஊராட்சி ஒன்றியச் சாலைகள், ஊராட்சிச் சாலைகள்).

| தொடர் எண் (1) | வேலையின் பெயர் (2) | செலவு (ரூ. லட்சத்தில்.) (3) |
|---|---|---|
| | புதுக்கோட்டை கோட்டம். | |
| 1. | பள்ளத்து விடுதி சாலையில் கி. மீ. 1-8 முதல் 2.00 கி.மீ. வரை உபரி வாய்க்கால் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல். | 2.50 |



| தொடர் எண். (1) | வேலையின் பெயர். (2) | செலவு (ரூ. லட்சத்தில்.) (3) |
|---|---|---|
| | புதுக்கோட்டை கோட்டம்—தொடர்ச்சி. | |
| 2. | நத்தம் பண்ணை-பூசத்துறை சாலை 0/3-வது மைலில் பாலம் ஒன்று கட்டுதல். | 1.50 |
| | **கோயம்புத்தூர் கோட்டம்.** | |
| 3. | உப்பாறு-அலியாறு கூடும் இடத்தருகே உப்பாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல். | 2.00 |
| | **ஈரோடு கோட்டம்.** | |
| 4. | அவல் பூந்துறை, பண்ணைக் கிணர் சாலையில் 2/1, 2/3 மைலில் வெள்ளத்தால் பாழடைந்த நீர்க்கடவுப் பாலத்தைப் புதுப்பித்தல். | 4.20 |
| | **நாகப்பட்டினம் கோட்டம்.** | |
| 5. | சத்தியகுடி-திருக்கோவலை சாலைக்கு வடிகால் வேலைகள் உட்பட தார் போடுதலும் அதன் தரத்தை உயர்த்தலும். | 5.00 |
| | **செங்கற்பட்டு கோட்டம்.** | |
| 6. | டமால்-பனப்பாக்கம் சாலையில் 2/2 மைலில் மக்களின் கால்வாய்க்குப் பாலம் ஒன்று கட்டுதல். | 0.65 |
| | **கடலூர் கோட்டம்.** | |
| 7. | செம்மேடு-வேட்டவலம் சாலையில் 2/2 -வது மைலில் கெடிலம் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல். | 4.00 |
| | **சிவகெங்கை கோட்டம்.** | |
| 8. | கண்டவராயன்பட்டி-சேவூர் சாலை 6 மைல், 7 பர்லாங்கு நீளத்திற்கு சரளைக்கல் பரப்புதல். | 3.00 |
| | **தஞ்சாவூர் கோட்டம்.** | |
| 9. | பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில் மேகளத்தூர் அருகே வெண்ணாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல். | 8.00 |
| 10. | தஞ்சாவூர் மாவட்டம், ரகுநாதபுரம் அருகே வெட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல். | 6.56 |
| | சிவகெங்கை கோட்டம். | |
| 11. | பரமகுடி-முதுகுளத்தூர் சாலையில் வன்னி வாய்க்காலில் இருந்து பாண்டி கண்மாய் ரயில் நிலையத்திற்குச் சாலை அமைத்தல். | 14.27 |

[1970 மார்ச் 25

| தொடர் எண். | வேலையின் பெயர். | செலவு (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | **சிவகெங்கை கோட்டம்—தொடர்ச்சி.** | |
| 12. | சிவகங்கை-இளையான்குடி சாலை 14/6-வது மைலில் இருந்து இளையான்குடி- மறவமங்கலம் சாலையை 3/2-வது மைலில் சந்திக்குமாறு, பிறந்தமங்கலம் வழியாக சாலை அமைத்தல். | 1.50 |
| | **நாகப்பட்டினம் கோட்டம்.** | |
| 13. | செங்கத்தலை பாலத்திலிருந்து தோப்புத்துறைக்குச் செல்லும் சாலைக்கு சரளைக்கல் பரப்புதலும், மேம்பாடுகளும். | 7.50 |
| | **கோயம்புத்தூர் கோட்டம்.** | |
| 14. | கனியூர்-கடத்தூர் சாலை 1/1-வது மைலில் அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுதல். | 9.00 |
| | **கோயம்புத்தூர் கோட்டம்—தொடர்ச்சி** | |
| 15. | கோயம்புத்தூர் நகராட்சி அருகில், காந்திபுரம் 7-வது தெருவில் (ஊராட்சி ஒன்றியம் பகுதி) செங்கனூர் பள்ளம் ஆற்றின் குறுக்கே நீர்க்கடவு பாலம் ஒன்று கட்டுதல். | 1.75 |
| | **செங்கற்பட்டு பகுதி.** | |
| 16. | மாரியமங்கலம்-பழையகேசவரம் சாலையில் 0/2-வது மைலில் நீர்க்கடவுப் பாலம் ஒன்று கட்டுதல். | 1.75 |
| | மொத்த ரூபாய் | 72.18 |

## அட்டவணை 5.

### பெருநகர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணிகள்.

| தொடர் எண். | பணியின் பெயர். | மதிப்பீட்டுச் செலவு ரூபாய். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சென்னை-எண்ணூர் விரைவு வழிச்சாலையில் 3/1-வது மைலிலிருந்து சென்னை-திருவொற்றியூர்-பொன்னேரி-பாஞ்செட்டி சாலையை 2/3-வது மைலில் இணைக்கும் வகையில் சென்னை எண்ணெய் சுத்திகரிப்புப் பகுதி வரை சாலை அமைத்தல். | 32,50,000 |



1970 மார்ச் 25]

| தொடர் எண். | வேலையின் பெயர். | செலவு (ரூ. லட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 2. | நகர எல்லைக்குள் பேசின் பாலம் அருகே, மூன்று பாலங்களை அகலப்படுத்தல். | 20,00,000 |
| 3. | பேசின் பாலம், வியாசர்பாடி ஆகிய பகுதிகளில் சென்னைத் துறைமுகத்திலிருந்து, சென்னை-கல்கத்தா சாலை 5/5-வது மைல் வரை, இணைக்கும் சாலைகளை மேம்படுத்தல் (நிலம் கையகப்படுத்தலுக்கு மட்டும்). | 21,00,000 |
| 4. | மார்மலாங்கு பாலம்-இரும்புலியூர் சாலையை மேம்படுத்துவதற்காக நிலம் கையகப்படுத்தல். | 3,00,000 |
| 5. | மார்மலாங் பாலம்-இரும்புலியூர் சாலையையும், மாமல்லபுரம் சாலையையும் இணைக்கும் இணைப்புச்சாலை அமைத்தலும், வேளச்சேரி, தாம்பரம் ஆகிய இடங்களின் துணை வழிகளை அமைத்தலும். | 5,22,000 |
| 6. | அனைத்து இந்திய வானொலி நிலையத்திற்கு எதிரிலிருந்து அடையாறு கழிமுகப் பகுதி முடிய "ஓட்டல் ஓசியானிக்" எதிரில் தெற்குக் கடற்கரைச் சாலையோடு இணைக்கும் வகையில் சாலையை விரிவுபடுத்தல். | 19,00,000 |
| 7. | சென்னை நகர் எல்லைக்குள், ஜெமினி சந்திப்பில் 45-ம் எண் நெடுஞ்சாலையில் விரைவு மேம்பாலம் ஒன்றைக் கட்டுதல். | 45,00,000 |
| | மொத்தம் | 145,72,000 |

## இணைப்பு—V

[34-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களின் பணிகுறித்து ஆய்வுரை 1969–70.

தமிழ் நாட்டில், கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் மூன்று நடுத்தரத் துறைமுகங்கள் உள்ளன. பரங்கிப் பேட்டை, தொண்டி, பாம்பன், ராமேஸ்வரம், கீழக்கரை, குலசேகரப்பட்டினம், கொளச்சல், வேப்பலோடை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் ஒன்பது சிறு துறைமுகங்கள் உள்ளன.

2. மாநிலச் சிறு துறைமுகங்கள் நிதி, மாநில ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டணநிதி, மாநிலக் கப்பல் வழிகாட்டுக் கட்டணநிதி (State Pilotage Fund ) ஆகியவற்றிலிருந்து மாநிலத் துறைமுகச் செலவு சரிக்கட்டப்படுகிறது. துறைமுகங்கள் நிதி, இம்மாநிலத்தின் எல்லாச் சிறு துறைமுகங்களுக்கும் பொதுவாகும்.

[1970 மார்ச் 25

ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டண நிதிகள் ஒவ்வொரு துறைமுகத்துக்கும் தனித்தனியாக இருக்கும். கடல்துறைத் துறைமுக நிதிகளை இம்மாநிலத் தொகு நிதியுடன் இணைக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. இம் முடிவைச் செயல்படுத்த அவசியமான சட்டம் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.

3. தூத்துக்குடியில் தற்போதுள்ள நடுத்தரத் துறைமுகம் சட்டப்படி நிறுவப்பட்டுள்ள வாரியத்தினால் தொடர்ந்து நிர்வகிக்கப்பட்டு வரும். புதிய துறைமுகம் செயல்படத் தொடங்கும்போது தற்போதுள்ள நடுத்தரத் துறைமுகத்தின் நிர்வாகம், புதிய பெரிய துறைமுகத்தின் நிர்வாகத்துடன் இணைக்கப்படும். இதன் நிர்வாகம், புதிய துறைமுகப் பொறுப்பாண்மைக் கழகத்திடம் நிலை பெறும். தற்போதுள்ள துறைமுகமும் ரூ. 210 லட்சம் செலவில் மீன்பிடித் துறைமுகமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

## 4. வளர்ச்சித் திட்டங்கள்.

தமிழ் நாட்டிலுள்ள சிறு துறைமுகங்கள் சம்பந்தப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் பொதுப்பணித் துறையுடன் இணைக்கப்பட்ட கடல் துறைப் பணிகள் சரகத்தால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முடிவுறாத வேலைத் திட்டங்களின் தொடர்ந்த முன்னேற்றம்.

**கடலூர் துறைமுகம்:**—தற்போது நிறைவேற்றப்பட்டு வரும் கடலூர் துறைமுக வளர்ச்சித் திட்டம் மத்திய அரசின் திட்டமாகும். இத் திட்டத்தில் கீழ்க்காணும் பணிகள் அடங்கும்:—

1. ஆற்றை ஓரிடத்தில் நிலையாக்கும் பணி.
2. துறைமுகக் கான்கிரிட் அணைக் கரையைக் கட்டுதல், மணல்வாரிக் குழாய்கள் நிறுவுதல்.
3. தென் பகுதியில் அலை தாங்கியைக் கட்டுதல்.
4. மணல் வாரி ஆழப்படுத்துதல்.

ஆற்றை ஓரிடத்தில் நிலையாக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

அலைத் தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கான வடிவமைப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக, கான்கிரிட் மேடை ஒன்றின்மீது மணிக்கு 350 டன் ஒருங்கிணைந்த கொள் அளவுகொண்ட இரண்டு மணல் வாரிக் குழாய்களைத் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. கான்கிரிட் மேடை இப்போது கட்டப்படுகிறது. இத் திட்டம் முழுவதும் 1971 மார்ச் மாதம் முடிக்கப்படவிருக்கிறது. இத் திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 139.24 லட்சம், 1969 டிசம்பர் வரையில் ஏற்பட்ட செலவு ரூ. 55 லட்சம்.



1970 மார்ச் 25]

**நாகப்பட்டினம் துறைமுகம்:**—நாகப்பட்டினம் துறைமுகத்தில் பயணிகள் தங்குவதற்கான நிலையம் ஒன்றைக் கட்டுவது மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டமாகும். இதன் மதிப்பீட்டுச் செலவு ரூ. 8.80 லட்சம். இக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு அனுபோகத்தில் உள்ளது.

**தூத்துக்குடித் துறைமுகம்:**—தூத்துக்குடித் துறைமுகத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக இந்திய அரசு ரூ. 27 லட்சம் ஒதுக்கியுள்ளது. நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | |
|---|---|
| 1. 390 குதிரைத் திறனுள்ள டீசல் இழுபடகு ஒன்று வாங்குதல். | வாங்கி செயல்படுத்தப்பட்டது. |
| 2. இயங்கும் பளு தூக்கிகள் இரண்டு வாங்குதல். | வாங்கி செயல்படுத்தப்பட்டது. |
| 3. மண் எடுத்துச் செல்லும் 100 டன் திறனுள்ள மூன்று தோணிகளை வாங்குதல். | வாங்கி செயல்படுத்தப்பட்டது. |
| 4. 300 டன் திறனுள்ள மூன்று சரக்கு தோணிகளை வாங்குதல். | வாங்கி செயல்படுத்தப்பட்டது. |
| 5. நீரைக் கலக்கி மண்ணை வெளியேற்றும் விசையேற்றத்துடன் குழாய்த் தொடர்புகள் கூடிய சரக்குத் தோணி ஒன்றை வாங்குதல். | வாங்கி செயல்படுத்தப்பட்டது. |
| 6. பணிமனைக் கருவி அமைப்பு .. | பணிமனை செயல்படத் தொடங்கியது. |

### நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வளர்ச்சித் திட்டங்கள்.

இம் மாநிலத்தில் இப்போதுள்ள நடுத்தரத் துறைமுகங்களையும் சிறு துறைமுகங்களின் மேம்பாட்டுக்கும் எண்ணூர், வெப்பலோடை, புன்னைக்காயல் ஆகிய இடங்களில் புதிய துறைமுகங்களின் வளர்ச்சிக்கும் ரூ. 607 லட்சம் செலவு மேற்கொள்ளப்பட வேண்டுமென சிறு துறைமுகம்குறித்து மாநிலச் செயற்குழு பரிந்துரை செய்தது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரே ஒரு துறைமுகத்தின் வளர்ச்சிக்கு நிதி உதவியளிக்க இந்திய அரசு திட்டமிட்டது. இந்த அரசு கடலூர் துறைமுகத்தை மேம்படுத்துவதற்குக் கருத்தறிவித்துள்ளது. நான்காவது திட்டச் செலவில் ஏற்படும் மிச்சத்தைக்கொண்டு நாகப்பட்டினம் துறைமுகம் சம்பந்தப்பட்ட திட்டங்களை மேற்கொள்ள திட்டத்தின் மத்தியக்காலப் பகுதியில் இந்திய அரசிடம் வலியுறுத்த இந்த அரசு கருதியுள்ளது. இணைப்பு 1-ல் விவரித்துள்ள கடலூர் சம்பந்தப்பட்ட திட்டங்கள் 1970-71-ல் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன.

**தூத்துக்குடித் துறைமுகத் திட்டம்:**—ஆண்டுக்கு ஏறத்தாழ 10 லட்சம் டன் சரக்குகளை இறக்கவும் அனுப்பவும் பயன்பட்டு வரும் தற்போதுள்ள தூத்துக்குடித் துறைமுகம் நடுத்தரத் துறை

முகங்களில் மிகப் பெரியதாகும். என்றாலும இத் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சுமிடம் கடற்கரைக்கு அப்பால் 6 மைல் ஆழமான இடத்தில் முயல் தீவுக்குக் கிழக்கில் அமைந்துள்ளது. கடற்கரைக்கு வந்து சரக்குகளை எடுத்துச்செல்லும் படகுகள் மூலம் கப்பலில் சரக்குகள் ஏற்றவும் இறக்கவும் முடிகின்றது. இதனை ஆழ்கடல் துறைமுகமாக மாற்றவேண்டுமென்று நடுத்தரத் துறைமுக வளர்ச்சிக் குழு 1960-ம் ஆண்டில் பரிந்துரை செய்தது. இப்பரிந்துரையை இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. இத் திட்டம் 1961-ம் ஆண்டில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. ரூ. 14 கோடி செலவில் துறைமுகம் கட்டுவதற்கான செயற்குறிப்பில் தொடக்கச் செலவு மதிப்பீடு அடிப்படையில் 1961-ம் ஆண்டிற்காக ரூ. 5 கோடி ஒதுக்கப் பட்டது. இப்பணியை 1963-ம் ஆண்டில் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அப்போது இத் திட்டத்திற்கான தலைமைப் பொறியாளரும், நிர்வாக அதிகாரியும் நியமிக்கப்பட்டனர். இத் திட்டம் இந்திய அரசால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இவ் வேலைத் திட்டத்தைத் தமிழ் நா) அரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 258-ஏ பிரிவின்கீழ் இந்தியவரசிடம் ஒப்படைத் துள்ளது.

தெற்கு, வடக்கு அலைத் தடுப்புச் சுவர்களை அமைப்பதன் மூலம் செயற்கை ஆழ்கடல் துறைமுகம் ஒன்றை அமைப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். இந்த அலைத் தடுப்புச் சுவர்கள் ஒவ்வொன்றும் கடலுக்குள் 4,000 மீட்டர் நீளமுடையதாகவும், 1,275 மீட்டர் பரந்தும், 122 மீட்டர் அகலமுள்ள நுழைவுடன் அமைந்திருக்கும். 30 அடி அதிக அளவு அமிழ் ஆழத்திற்கு நான்கு கப்பல் தங்குமிடம் அமையும் முறையில் உத்தேசிக்கப் பட்டுள்ளது. இரண்டு இடங்கள் பின்னர் 35 அடி அமிழ் ஆழத்திற்கு ஆழப்படுத்த முடியும் வகையில் அமையும். இப் பகுதியின் தொழில் வளர்ச்சி அடிப்படையில் போக்குவரத்து வாய்ப்புகள் கூட்டுக் குழுவினால் ஆராயப்பட்டது. இக் கூட்டுக் குழுவில் தமிழ் நாடு அரசின் பொதுப்பணித்துறை முன்னாள் செயலாளரான திரு. திருமலையும், திட்ட ஆணைக் குழுவின் போக்குவரத்துப் பிரிவுத் தலைவர் திரு. ஒத்ராவும் இருந்தனர். தொடக்கத்தில் 2.235 மில்லியன் டன்களும், 1975–76-ம் ஆண்டில் 3.510 மில்லியன் டன்களும், 1980-81-ல் 4.420 மில்லியன் டன்களும் இத் துறைமுகத்தின் வழியாகப் போக்குவரத்து நடைபெறக் கூடுமென பல்வேறு காலப் பகுதிக்கு இக் குழு எதிர்பார்த்துக் குறிப்பிட்டுள்ளது. தூத்துக்குடியில் எல்லாக் காலங்களிலும் பயன்படக்கூடிய துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு 1968 ஜூன் மாதத்தில் ரூ. 24.40 கோடிக்கு இந்திய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. முதல் நிலையில் நான்கு கப்பல் தங்குமிடங்களை அமைத்து முடிப்பதற்காகச் செலவிட ரூ. 21.76 கோடிக்கான ஒப்பளிப்பை 1969 ஜூலையில் இந்திய அரசு வழங்கியுள்ளது.





**பணி முன்னேற்றம் :—** இத் திட்டத்தின் கடற்கரைப் பணிகளின் கட்டுமானம் 1963-ம் ஆண்டின் மத்தியில் தொடங்கப்பட்டது. கரைக்கு அப்பாலுள்ள வேலைகளை அமைக்கும் பணியை 1964 நவம்பர் 5-ல் இந்தியப் பிரதமர் மறைந்த லால்பகதூர் சாஸ்திரி துவக்கிவைத்தார்.

(a ) **கடற்கரைப் பணிகள் :—** நிலம், கடல், அகழ்தல், நீர்ப் பரப்பியல் ஆய்வு, நிலம் கையகப்படுத்துதல் ஆகியவற்றின் பூர்வாங்கப்பணிகள் முடிவு பெற்றுள்ளன. மாநில அரசு நிலங்கள், துறைமுகப் பொறுப்புக் கழக நிலங்கள், மத்திய அரசு நிலங்கள், பட்டா நிலங்கள் ஆகியவை அடங்கிய 3,097.99 ஏக்கர் மொத்தப் பரப்பு துறைமுக எஸ்டேட்டுக்கும் கற்கள் உடைத்தெடுக்கு மிடத்திற்கும் ரயில்வே ஒதுக்குப்பாட்டைக்கும் ஒதுக்கக் கருதப் பட்டுள்ளது. இதில் துறைமுக எஸ்டேட்டுக்கான பரப்பு 2,377.22 ஏக்காராகும். நிலம் கையகப்படுத்தும் பணி பெரும்பாலும் முடிவுற்றது. துறைமுகப் பணியாளர் குடியிருப்புகள் கட்டுதல், மருந்தகம், துவக்கப்பள்ளி அமைத்தல் போன்ற பிற வசதிகளும் துறைமுக எஸ்டேட்டுக்குள் சாலைகளையும் பாலங்களையும் அமைத்தல், மீளவிட்டானிலிருந்து துறைமுகக் கோடி வரை யில் ரயில் துணைப் பாதையமைத்தல் ஆகிய பணிகள் கடற்கரைப் பணியில் அடங்கும். நீர் வழங்குதல், மின்சார வசதி செய்து தருதல், சாக்கடை அகற்றுதல் முதலிய பணிகள் முடிவுற் றுள்ளன.

(b ) **கரைக்கு அப்பால் செய்யும் பணிகள்:—** அலைத் தடுப்புச் சுவர்கள் எழுப்புதல், தோணித்துறை அலைதாங்கிகள் அமைத்தல், அணுகுப் புறத்தைப் பண்படுத்தல் ஆகிய பணிகள் இதில் அடங்கும். தெற்கு அலைத் தடுப்பு மொத்தம் 3,797 மீட்டர் நீளத்தில் 1,321 மீட்டர் நீளத்திற்கு எல்லா வகையிலும் முடிவுற் றுள்ளது. எல்.எஸ். 1,321 மீட்டரிலிருந்து எல். எஸ். 1,830 மீட்டர் வரையிலான பாதை அமைப்பு நடந்தேறி வருகிறது. எல்.எஸ். 1,650 மீட்டர் வரையில் பெரும்பாலும் முடிந்துவிட்டது. 4,142 மீட்டர் மொத்த நீளத்தில் கடற்கரையிலிருந்து 1,515 மீட்டர் நீளம் வரையில் வடக்கு அலைத்தடுப்பு அமைக்கப் பட்டுள்ளது. எல்.எஸ். 1,515 மீட்டர் முதல் எல்.எஸ். 1,775 மீட்டர்வரையில் மேற்கொண்டும் வேலை நடந்தேறி வருகிறது.

சாலைகளுக்கும் ரயில் பாதைகளுக்கும் வழி தரும் கிட்டிச் செல்லும் பாதைப் பகுதியை இறுதிவரையில் சீரமைப்பது மேற் கொள்ளப்பட்டு கடற்கரையிலிருந்து 666 மீட்டர் நீளத்திற்குச் செயல்படுத்தப்பட்டுள்ளது. 81 மீட்டர் அகலமும் (—) 2.00 மீட்டர் ஆழமும் அமைக்கப்பட்டுள்ளது. எல்.எஸ். 666 மீட்டரி லிருந்து எல்.எஸ். 735 மீட்டர் வரையில் 61 மீட்டர் அகலத்திற்கு அப்பரப்பில் பாதையமைப்புப் பணி முடிவுற்றுள்ளது. எல்.எஸ். 735 மீட்டர் முதல் எல்.எஸ். 1321 மீட்டர் வரையிலான பாதையில் வேலை நடைபெற்று வருகிறது. எஞ்சிய கீழ்க்காணும் பணி களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அமைச்சகத்

தில் இவை பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. ஒப்பந்தப் புள்ளி களை இந்திய அரசு முடிவு செய்ததும் மேற்சொன்ன பணிகளை 1970 மார்ச் திங்களில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1. எல்.எஸ். 1,830 மீட்டரிலிருந்து எல்.எஸ். 3,797 மீட்டர் வரையில் தெற்கு, கிழக்கு அலைத்தடுப்புகளை அமைத்தல்.

2. எல்.எஸ். 1,775 மீட்டரிலிருந்து எல்.எஸ். 4,142 மீட்டர் வரையில் வடக்கு அலைத்தடுப்பை அமைத்தல்.

3. மூன்று கப்பல் துறைப் பாலங்களைக் கட்டுதல்.

4. சரக்குத் துறைச் சுவரைக் கட்டுதல்.

5. சரக்குத் துறைப் பகுதியைச் சீரமைத்தலும் அணுக் கால்வாயைச் சீர்ப்படுத்தலும்.

1970 ஜனவரி இறுதிவரையில் இத்திட்டத்திற்குச் செலவிடப் பட்ட தொகை ரூ. 11.14 கோடி. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட செயற்குறிப்புகளில் இத்துறைமுக அமைப்பிற்குத் துறை முகங்கள் குறித்த திட்டத் துணைக்குழு ரூ. 17.70 கோடி ஒதுக்கி யுள்ளது. இரண்டு கப்பல் தங்கும் தளங்கள் 1972 அக்டோபரில் முடிக்கப்பட்டுச் செயல் தொடங்குமெனவும் எஞ்சியவை 1973 மார்ச் மாதம் முடிக்கப்படுமெனவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**மாநில அரசு நிறைவேற்றும் பணிகள்.**

தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் சம்பந்தமான அடித்தள வேலைகளை நிறைவேற்றுவதில் மாநில அரசு குறிப்பிடத்தக்க அளவுக்கு உதவியளித்துள்ளது. சாலை போடுதல், நீர் வழங்கு தல், மின்சார வசதி செய்து தருதல் மற்றும் இது போன்ற பிற வசதிகள் உட்படத் துறைமுகப் பகுதிக்கு வேண்டிய வசதிகள் அனைத்தையும் தன் செலவிலேயே செய்து தரவும் அது தொடக்கத் திலேயே ஒப்புக்கொண்டது.

துறைமுக வேலை முடிவதில் ஏற்படும் முன்னேற்றத்துடன் துறைமுகத்தையொட்டித் தொழிற் பிரிவுகள் திட்டமிட்ட முறையில் அமையும்வகையில் சுமார் 5,000 ஏக்கர் தொழிற்சாலைத் தேவைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. சீர்படுத்தும் காரியத்திற்கு மண் எடுப்பதற்காக மணல் எடுப்பு இடத்திற்கு 1,049.47 ஏக்கர் பரப்பை அவர்கள் கையகப்படுத்தியுள்ளனர். நிலம் கையகப் படுத்தும் வேலையை விரைவாக இறுதி செய்வதற்குத் தமிழ் நாடு அரசு நிலம் கையகப்படுத்தும் பணியாளர்களை வேலைக்கமர்த்தி யுள்ளது. இப் பணியாளர்களின் வினிதாச்சாரச் செலவு, துறைமுக நிர்வாகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

துறைமுகத்திற்கும் துறைமுகத்திலிருந்து வெளிச் செல்லவும் போக்குவரத்து எளிதாக நடைபெறும் நோக்கத்தில் தமிழ் நாடு அரசின் செலவில் ரூ. 63.45 லட்சம் செலவில் துறைமுக எல்லைக்கு வெளியே முக்கிய சாலையமைப்புப் பணியை மேற்கொண்டது. இந்த முக்கியச் சாலையில் தூத்துக்குடி-பாளையங்கோட்டை சாலை யிலிருந்து பிரிந்து துறைமுகத்திற்குச் செல்லும் 6.14 கி.மீட்டர்



நீளத்திற்குள்ள விரைவு நெடுஞ்சாலையும் தூத்துக்குடி-திருச் செந்தூர் சாலையிலிருந்து 2.6 கி.மீட்டர் தொலைவிற்குப் பிரிந்து செல்லும் சாலையும், தூத்துக்குடி நகரத்தின் கடற்கரைச் சாலையைத் துறைமுகத்துடன் இணைக்கும் 1.72 கி. மீட்டர் தொலைவிற்கான இணைப்புச் சாலையும் அடங்கும். இச் சாலைப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

முக்காணிக்கு அருகிலுள்ள வாழவல்லானில் உள்ள தாம்பிர பரணி ஆற்றிலிருந்து 3 மில்லியன் காலன் அளவுள்ள நீரை வழங்குவதற்கான திட்டத்தைத் தமிழ் நாடு அரசு தொடங்கி யுள்ளது. துறைமுகத்திற்காகமட்டும் 1 மில்லியன் காலன் நீரையும் துறைமுகப் பகுதிக்கு அடுத்து வளர்ந்து வரும் தொழில் களுக்கு எஞ்சிய 2 மில்லியன் காலன் நீரையும் வழங்கும் நோக்கத் தில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 76.50 லட்சம். இத்திட்டம் பெரும் பாலும் முடிக்கப்பட்டுள்ளது. துறைமுகத்திற்கும் வழியிலுள்ள கிராமங்களுக்கும் நீர் வழங்கப்பட்டு வருகிறது. தொழில் வளர்ச்சியின் தேவையை ஈடுசெய்யும் பொருட்டு நாள் ஒன்றுக்கு 10 மில்லியன் காலன் நீர் வழங்கு திட்டத்திற்கான ஆய்வுப் பணி களும் முடிவுற்றுள்ளன. 1970-ம் ஆண்டின் இறுதிக்குள் தூத்துக்குடித் துறைமுகத்தில் கப்பல் தங்கும் இடம் ஒன்றை அமைத்து முடிப்பதில் அரசு மிகுந்த குறிக்கோள் கொண்டுள்ளது. இந்திய அரசு அமைத்த திரு. ஆர். வெங்கட்ராமன் தலைமையின் கீழுள்ள பெரிய துறைமுகங்கள் ஆணைக்குழுவிடம் 1969 ஜூன் திங்களில் இக்குழுவினர் தூத்துக்குடிக்கு வந்தபோது இந்த அவசியம்பற்றிப் பெரிதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. கப்பல் தங்கும் இடம் ஒன்றையாவது 1970–71-க்குள் முடிக்கவும், துறைமுக வேலை முழுவதையும் 1971–72-க்குள் முடிக்கவும், கணிச மான ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கோரி மத்திய அரசிற்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. நமது வேண்டுகோளை மத்திய அரசு மனத்தில் வைத்துள்ளது.

**சேது சமுத்திரத் திட்டம்** :—இந்தியாவின் மேற்குக் கரை யையும் கிழக்குக் கரையையும் இணைக்கும் கடற்பாதையின் நீளத்தைக் குறைக்கும்பொருட்டும் மேம்படுத்தும் நோக்கத்திலும் மன்னார் வளைகுடாவை வங்காள விரிகுடாவுடன் இணைப்பதே சேது சமுத்திரத் திட்டத்தின் நோக்கமாகும். இதனால் 30 அடிவரையில் ஆழப்பகுதியமைந்த பெரிய கப்பல்கள், இலங்கையைச் சுற்றியும் அதன் தென்முனையைச் சுற்றியும் வளைத்துப் போவதைத் தவிர்ப் பதுடன் சுற்றி வளைத்துப் போகும் இலங்கை வழியில் சில சமயம் சுழற்காற்றும் புயலும் வீசுவதால் இக்கடற்பாதையை அபாயமின்றிப் பயன்படுத்தவும் முடியும்.

**ஆய்வுப் பணி** :—சுதந்திரத்திற்குப் பிறகு, சேது சமுத்திரத் திட்டம்குறித்த முதல் ஆய்வுப் பணி 1956-ல் நடத்தப்பட்டது. திரு. ஏ. ராமசாமி முதலியாரின் தலைமையின்கீழ் அமைந்த

குழுவால் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. மண்டபம் நிலப் பகுதிக்குக் குறுக்காகக் கால்வாய் ஒன்றை அமைக்க வேண்டுமென்றும் சேதுசமுத்திரத் திட்டம் தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் ஆகிய இரண்டினையும் ஒரே சமயத்தில் மேற்கொண்டு நிறைவேற்றுவது அவசியமென்றும் இக்குழு பரிந்துரைத்து வலியுறுத்தியது.

மேலும், இதுபற்றி ஆராய்வது அவசியமென்பதை உணர்ந்து 1964-ல் உயர்நிலைக்குழு ஒன்றை இந்திய அரசு நியமித்தது. உண்மையான திட்டமதிப்பீடு தயாரிப்பதென்று இக்குழு முடிவு செய்தது. இது காரியத்திற்காக மத்திய அரசின் தலைமைப் பொறியாளர் திரு. சி. வி. வெங்கடேஸ்வரன் 1965-ல் நியமிக்கப் பட்டார். இதற்காக உருவாக்கப்பட்ட சிறப்புப் பொறியியல் சரகம் அவருக்குத் துணையாக இருந்தது. தலைமைப் பொறியாளரும் சேது சமுத்திரத் திட்ட ஆலோசகருமான இவர் 1968 ஜூன் திங்களில் தனது திட்ட அறிக்கையை அளித்தார்.

**திட்ட அறிக்கை** :—திட்ட அறிக்கையின் சிறப்புக் கூறுகள் வருமாறு :—

இக் கால்வாயின் பல்வேறு அமைப்பு வரைகள் செயல்படுத்தக் கருதப்பட்டுக் கீழ்க்காணும் இரண்டு அமைப்புவரைகள் சாத்தியமாகுமெனக் கண்டறியப்பட்டது. (1) மண்டபம் அமைப்பு வரை (2) ராமஸேஸ்வரம் அமைப்பு வரை.

ஒவ்வொரு அமைப்பு வரையின் கீழும் கீழே குறிப்பிட்டவாறு இக்கால்வாயில் நான்கு அணுகுக் கால்வாய்கள் அமையும்:—

(1) தெற்கு அணுகுக் கால்வாய்.

(2) தரைக் கால்வாய்.

(3) வடக்கு அணுகுக் கால்வாய்.

(4) வங்காள விரிகுடாக் கால்வாய்.

இந்த இரண்டு அமைப்பு வரைகளின் ஒப்புநோக்கு விவரங்களும் அவற்றின் மதிப்பீட்டுச் செலவும் கீழ்வருமாறு :—

| தொடர் எண்ணும், விபரமும். | மண்டபம் அமைப்பு. | ராமேஸ்வரம் அமைப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் லட்சத்தில்). | |
| 1 தெற்கு அணுகுக் கால்வாய் .. | 1,034·48 | 601·08 |
| 2 தரைக் கால்வாய் .. | 1,064·22 | 271·69 |
| 3 வடக்கு அணுகுக் கால்வாய் .. | 349·85 | 211·80 |
| 4 வங்காள விரிகுடாக் கால்வாய் | 1,053·93 | 1,053·93 |
| மொத்தம் .. | 3,502·48 அல்லது 35·02 கோடி | 2,138·50 அல்லது 21,38 கோடி |



இதிலிருந்து மண்டபம் அமைப்பு, இராமேஸ்வரம் அமைப்பை விட அதிகச் செலவுடையதென்று அறியலாம்.

மண்டபம் அமைப்பைவிட ராமேஸ்வரம் அமைப்பு எவ்வாறு குறைந்த தொலைவுடையதென்பது கீழ்க்காணும் அட்டவணை காட்டுகிறது :—

| விபரம். | கால்வாயின் நீளம். மண்டபம் அமைப்பு. | ராமேஸ்வரம் அமைப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (அடி) | (அடி) |
| தெற்கு அணுகுக் கால்வாய் .. | 33,600 | 13,000 |
| தரைக் கால்வாய் .. .. | 20,400 | 11,500 |
| வடக்கு அணுகுக் கால்வாய் .. | 90,400 | 19,200 |
| | 1,44,400 | 43,700 |

செலவைக் குறைக்கும் நோக்கத்தில், ராமேஸ்வரம் அமைப்பு வரைத் திட்டத்தின்கீழ் தெற்கு அணுகுக் கால்வாய்க்கு 1,500 அடி கிழக்கில் சிறிதளவு மாற்றியமைக்கப்படக் கருதப்பட்டது. இந்தத் திருத்திய அமைப்பு வரைத்திட்டத்தில் தெற்கு அணுகுக் கால்வாய், தரைக் கால்வாய், வடக்கு அணுகுக் கால்வாய் உடபட இக்குறுக்கு வழியின் மொத்த நீளம் 6 மைல் ஆகும். முன்பு திட்டமிட்ட அமைப்பு வரைத்திட்டத்தில் இதன் நீளம் 7 மைல் ஆகும். திட்ட அறிக்கையில் இத் திருத்திய ராமேஸ்வரம் அமைப்பு வரைத்திட்டமே இறுதியானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மண்டபம் அமைப்பு வரைத்திட்டம் ராமேஸ்வரம் அமைப்பு வரைத்திட்டத்தை விடத் தெற்கு அணுகுக் கால்வாயின் கடற் பாறைத் தொடரில் செயல் தொடங்குவது மிகவும் இடர்பாடுடையதாகும். ராமேஸ்வரம் அமைப்பு வரைத்திட்டம், மண்டபம் அமைப்பு வரைத்திட்டத்தை விடக் குறைந்த தொலைவுடையதாகும் ராமேஸ்வரம் அமைப்பு வரைத் திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு 30 அடி அமிழ் அளவுக்கு ரூ. 37.50 கோடியாகும். மண்டபம் அமைப்பு வரைத்திட்டத்திற்கு ரூ. 55.60 கோடி செலவாகும். எனவே, ராமேஸ்வரம் அமைப்பு வரைத்திட்டமே இந்த அறிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**வருவாய்** :—இக் கால்வாய் திறக்கப்பட்டபின் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு கீழ்க்கண்ட வகையில் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

| மொத்த டன் அளவு லட்சத்தில். | வருவாய் டன் ஒன்றுக்கான வீதம். | மொத்தம் லட்சத்தில். | செலவு லட்சத்தில். | நிகர ஆதாயம் லட்சத்தில். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. | ரூ. | | ரூ. |
| 155 | 1·50 | 232 | செயல்படுத்தல் பேணுதல் : 49 | .. |
| | | | தேய்மானம்: 21 | 162 |
| | | | 70 | |

*போக்குவரத்து வாய்ப்புகள் :*—சேதுசமுத்திரத் திட்டம் பொருளாதார வகையில் வளம் தரக்கூடியதாகும். இத் திட்டம் 1970-ல் ஒப்பளிக்கப்பட்டால் இக்கால்வாய் 1975-ல் ரூ. 232 லட்சம் மொத்த வருவாய் அளிக்கக்கூடும். 1975-ல் கால்வாய் போக்கு வரத்துக்கு விடப்படும் என்று கருதப்படுகிறது. வேறு வகையில் சொன்னால் முதற்கண் இத்திட்டம் 4½ சதவிதம் ஆதாயம் அளிக்கும். அது செயல்படத் தொடங்கிய முப்பதாம் ஆண்டில் 14 சதவீதம் ஆதாயம் அளிக்கும். இக் கால்வாயின் மொத்த வருவாயில் சுமார் 80 சதவிதம் அந்நியச் செலவாணியில் இருக்கும். இக் கால்வாயினால் சராசரி 360 கடல் மைல் தொலைவு குறைவாகும். சுற்று வழிப் பயணத்தில் இதனால் ஒருநாள் பயண நேரம் அல்லது இரண்டு நாட்கள் பயண நேரம் குறையும், இதனால் விகிதாச்சார நிறுத்தக் கட்டணங்கள் மிச்சப்படுவதுடன், நிகர ஆதாயமும் அதிகரிக்கும். இத் திட்டம் தூத்துக்குடி துறை முகத்திற்குப் பெரிதும் முக்கியத்துவம் அளிக்கும். இக் கால் வாயின் நேரடி வழியில் இப்போது அது அமையும். தூத்துக்குடி துறைமுகத் திட்டமும் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டமும், தூத்துக்குடி சேதுசமுத்திரத்தையடுத்துள்ள கடற்கரை உட்பகுதி களில் தொழில் வளர்ச்சி வாய்ப்பைப் பெருக்கும். இக் கால்வாயில், வாணிகக் கப்பல், கடற்படைக் கப்பல் ஆகியவற்றிற்கு காப்புள்ள நீர் வழிப் போக்குவரத்து வசதியளிக்கப் பட்டுள்ளதால் விரைந்து தேய்மானமவைது தடுக்கப்படுகிறது.

*முடிவு:*—ஆலோசகரால் அளிக்கப்பட்ட புலனாய்வும் ஆய்வுரை களும் கீழ்க்காணும் முடிவுகளுக்கு வழி கோலுகின்றன.

1. இத்திட்டம் தொழில் நுட்ப ரீதியில் இயன்ற ஒன்றாகும்.

2. மண்டபத்தில் ஒன்றும் ராமேஸ்வரத்தில் ஒன்றுமாக இரண்டு மாற்று இடங்கள் ஆலோசனையில் இருந்தன. இவை இரண்டு பற்றியும் ஆய்வு செய்யப்பட்டு ராமேஸ்வரம் வழியே முன் சொன்ன காரணங்களுக்காக ஏற்றுக் கொள்ளத் தக்கதெனக் கண்டறியப்பட்டது.





3. மேற்கிலிருந்து வரும் எல்லாப் போக்குவரத்திற்கும் பொது மையமாக அமைந்துள்ள கன்னியாகுமரி முனையிலிருந்து சென்னை, விசாகப்பட்டினம், கல்கத்தா ஆகிய இடங்களுக்கு முறையே 353, 295, 259 கடல் மைல்களைக் குறைக்கிறது. தூத்துக்குடி துறைமுகம் வழியாகச் செல்லும் கப்பல்களுக்குக் குறையும் மேற் சொன்ன மைல்களுடன் தொலைவில் 81 மைல் அதிகமாகக் குறையும்.

4. தற்போது அமிழ் ஆழம் 30 அடி அமைக்கப்பட்டால் போது மானதென்று தெரிகிறது. பின்னர் இது 32 அடிக்கு அதிகப் படுத்தப்படலாம். நாளாவட்டத்தில் அனுபவத்தின்மூலம் அமிழ் ஆழத்தை அதிகப்படுத்துவது பற்றி நிர்மானிக்கலாம்.

5. நிகர ஆதாயம் படிப்படியாக உயரும். காலம் செல்லச் செல்ல அதிக அளவில் பெருகி வளரும்.

ஆலோசனைப் பொறியாளர் 1968 ஜூன் மாதத்தில் தனது திட்ட அறிக்கையைத் தமிழ் நாடு அரசிற்கும் இந்திய அரசிற்கும் அளித்தார். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த வேலை திட்டத்தைச் சேர்க்குமாறு இந்த அரசு மத்திய அரசை வலி யுறுத்தி வருகிறது. இந்த அரசின் கடிதத்திற்குப் பதில் அளிக்கும் முறையில் பல்வேறு மத்திய அமைச்சர்களின் கருத்தி னையொட்டி இத்திட்ட அறிக்கையை ஆராய்ந்து வருவதாகவும் அரசின் முடிவை வகுக்க சில காலம் ஆகும என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது. 1969 நவம்பர் திங்களில் பொதுப் பணித்துறைச் செயலாளர், இந்திய அரசின் அலுவலர்களுடன் டில்லியில் கலந்து பேசியதிலிருந்து இதுபற்றி இன்னும் ஆலோசிக் கப்பட்டு வருகிறதென்று அறியப்படுகிறது. இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியபின் இப்பணி மேற்கொள்ளப்படும்.

## இணைப்பு V—அ.

### 1970–71-ம் ஆண்டுக் காலத்தில் மேற்கொள்ள எண்ணியுள்ள வேலைகள்.

| துறைமுகத்தின் பெயர். (1) | தொடர் எண்ணும், வேலையின் பெயரும். (2) | செலவு மதிப்பீடு. (3) | 1969 வரை செய்யப்பட்ட செலவுகள். (4) | 4-வது திட்ட முதலீடு. (5) | 1970–71-க்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கம். (6) |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. லட்சத்தில்.) | | | |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எஞ்சிய வேலைத் திட்டங்கள்— | | | | | |
| கடலூர் துறைமுகம் வளர்ச்சித் திட்டம் .. | .. அலைத் தடுப்பிகளைக் கட்டுதலும் ஆற்று பயிற்சி வேலைகளும். | 1,39·24 | 50·00 | 89·24 | 47·81 |
| | மொத்தம் .. | 1,39·24 | 50·00 | 89·24 | 47·81 |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் புதிய வேலைத் திட்டங்கள்— | | | | | |
| கடலூர் .. .. .. | 1. தற்போதுள்ள "எர்ஸ்கின்" என்னும் தூர்வாரி இயந்திரத்திற்குப் பதிலாக (நீர்க்கடியில் தூர் வாருவதற்காக 12 அங் குல அளவு உறிஞ்சுவாய் அமைப்புடைய தும் குழாய்த் தொடர் உடையதும் ஆகிய) தூர் வாரி இயந்திரம் ஒன்றை வாங்குதல். | 11·00 | .. | 11·00 | 5·70 |
| | 2. மரக் கலங்களை இழுப்பதற்காக 300 குதி ரைத் திறனுடைய இழு படகு ஒன்றை வாங்குதல். | 7·00 | .. | 7·00 | 4·00 |
| | மொத்தம் .. | 18·00 | | 18·00 | 9·70 |



## இணைப்பு V—ஆ.

### மத்திய அரசின் கீழுள்ள வளர்ச்சி வேலைத் திட்டங்களுக்காக தமிழகத் துறைமுகத் துறையினர் மூன்றாவது திட்டக் காலத்தில் செய்யப்பட்ட செலவு விவரங்களைக் காட்டும் அறிக்கை

| தொடர் எண்ணும் வேலைத் திட்டத்தின் பெயரும். (1) | மூன்றாவது திட்டக் கால முடிவு வரை ஏற்பட்ட செலவு. (2) | 1968–69 வரை ஏற்பட்ட செலவு. (3) | 1969–70-ல் எதிர் பார்க்கும் செலவு. (4) | 1970–71-ல் முதலீடு. (5) | குறிப்புரை. (6) |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. லட்சத்தில்.) | | | |
| **கடலூர் துறைமுகம்.** | | | | | |
| 1. அலைத் தடுப்பு அமைப்புகளைக் கட்டுதல்—ஆற்றுப் பயிற்சிப் பணிகள் (மதிப்பீடு ரூ. 1,39·24 இலட்சம்). | 50·00 | 50·00 | 15·72 | 47·81 | வேலை நடந்துகொண்டிருக்கிறது. |
| **நாகப்பட்டினம் துறைமுகம்.** | | | | | |
| 2. பயணிகள் தங்கும் நிலையம் ஒன்றைக் கட்டுதல் (மதிப்பீடு ரூ. 8·8 லட்சம்). | .. | 8·08 | .. | .. | வேலை முடிவெய்தியது. |
| **தூத்துக்குடி துறைமுகம்.** | | | | | |
| 3. 300 குதிரைத் திறனுடைய டீசல் இழு படகு ஒன்றை வாங்குதல். | 10·83 | 12·92 | .. | .. | வேலை முடிவடைந்தது. |
| 4. இரண்டு டன் சுமை எடுக்கும் இயங்கும் சுமை தூக்கி இயந்திரங்களை வாங்குதல். | 2·50 | 4·37 | .. | .. | ஷை |
| 5. மண் எடுத்துச் செல்லும் 100 டன் திறனுள்ள 3 தோணிகளை வாங்குதல். | 2·50 | 4·78 | .. | .. | ஷை |

## இணைப்பு V—ஆ—தொடர்ச்சி.

| (1) | (2) | (3) (ரூ. லட்சத்தில்.) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 6. 300 டன் கொள் அளவுள்ள 3 சரக்குத் தோணிகள் வாங்குதல். | 5·00 | 11·77 | .. | .. | வேலை முடிவடைந்தது. |
| 7. நீரைக் கலக்கி மண்ணை வெளியகற்றும் பம்புகள் குழாய்த் தொடர்களுடன் கூடிய தோணி ஒன்றை வாங்குதல். | 3·00 | 13·93 | .. | .. | ஷை |
| 8. தொழிற்பட்டறை சாதனம் முதலியன அமைத்தல். | 2·00 | 2·01 | .. | .. | ஷை |
| | .. | 1,07·86 | 15·72 | 47·81 | |

தூத்துக்குடி துறைமுகத்திற்கு மட்டும்.

குறிப்பு.—ரூ. 27 இலட்சத்திற்கு மேல் தூத்துக்குடி துறைமுகத்தால் செலவு செய்யப்பட்ட தொகை, தூத்துக்குடி துறைமுகப் பாதுகாப்புக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டது.



## இணைப்பு V—இ.

### நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வளர்ச்சிப் பணிகள்.

| துறைமுகத்தின் பெயரும் பணியும். (1) | மதிப்பீட்டுத் தொகை. (2) ரூபாய். |
|---|---|
| **அ. கடலூர் துறைமுகம்.** | |
| தொடர்ச்சிப் பணி— | |
| அலைத் தடுப்பு அமைப்புகளைக் கட்டுதல் ஆற்றுப் பயிற்சிப் பணிகள் .. .. .. .. .. (திருத்திய மதிப்பீடு ரூ. 1,39·24 இலட்சத்தில் செலவு செய்தது ரூ. 50·00 இலட்சம் போக.) | 89,24,000 |
| **புதுப்பணிகள்.** | |
| முதலாவது முதன்மை— | |
| 1. தற்போதுள்ள 28 ஆண்டுகளாக உபயோகித்த "எர்ஸ்கின்" என்னும் தூர்வாரி இயந்திரத்திற்குப் பதிலாக (நீர்க்கடியில் தூர் வாருவதற்காக 12 அங்குல அளவு உறிஞ்சுவாய் அமைப்புடையதும் குழாய்த் தொடர் உடையதுமாகிய) தூர்வாரி இயந்திரம் ஒன்று வாங்குதல். | 11,00,000 |
| 2. மரக்கலங்களை இழுப்பதற்காக 300 குதிரை திறனுடைய இழுபடகு ஒன்று வாங்குதல் .. .. .. | 7,00,000 |
| 3. 100 டன் கொள்மானமுடைய எஃகாலான சிறு கப்பல் (சாதனங்களுடன்) .. .. .. .. | 3,60,000 |
| 4. தெற்கு, வடக்கு, மத்திய நாவாய் குறடுகளுக்கு சிமெண்ட் காரை போடுதல் .. .. .. .. | 4,33,000 |
| 5. வடக்கு, மத்திய நாவாய்க் குறடுகளை இணைக்கும் நாவாய் குறடு கட்டுதல் .. .. .. .. | 2,40,000 |
| 6. தரை நீர்த் தொட்டி ஒன்று கட்டுதல், நகராட்சி நீர் தேக்கத்திலிருந்து அவசியமான பம்புகளையும் குழாய்த் தொடர்களையும் எடுத்து வருதல். | 1,00,000 |
| மொத்தம் .. | 29,33,000 |

| துறைமுகத்தின் பெயரும் பணியும். (1) | மதிப்பீட்டுத் தொகை. (2) |
|---|---|
| இரண்டாவது முதன்மை— | ரூபாய். |
| 7. ஒரு தூர்வாரி கப்பலையும் (Grab Dredger) இரண்டு மண் சுமக்கும் அடி தட்டையான படகு களையும் வாங்குதல். | 13,30,000 |
| 8. 1,500 அடிக்கு உப்பளத்தின் வடக்கு, கிழக்கு பக்கங்களில் சுவர் கட்டி அந்தப் பகுதிக்கு மின்சார வசதி செய்தல். | 10,00,000 |
| 9. உப்பளத்தை சீர்ப்படுத்தவும் பாதைகளை அமைக்கவும் .. .. .. .. .. .. .. | 5,00,000 |
| மொத்தம் .. | 28,30,000 |
| ஆக மொத்தம் .. .. | 57,63,000 |
| **ஆ. நாகப்பட்டினம் துறைமுகம்.** | |
| முதலாவது முதன்மை— | |
| 1. பயணிகளைச் சுமந்து செல்லும் மரக்கலங்களை இழுப்பதற்காக இழு படகு ஒன்றை வாங்குதல் .. | 7,00,000 |
| 2. சரக்குக் கொட்டகை ஒன்றை கட்டுதல் .. .. .. .. .. .. .. .. .. | 75,000 |
| மொத்தம் .. | 7,75,000 |
| இரண்டாவது முதன்மை— | |
| 3. உறிஞ்சுவாய் அமைப்புடன் கூடிய சிறு தூர்வாரி ஒன்றை வாங்குதல் .. .. .. .. .. | 5,52,000 |
| மூன்றாவது முதன்மை— | |
| 4. தூர்வாரி கப்பலையும் இழுபடகையும் பழுது பார்க்க நழுவுப் பாதை அமைத்தல் .. .. | 4,00,000 |
| மொத்தம் .. | 9,52,000 |
| ஆக மொத்தம் .. | 17,27,000 |



## இணைப்பு V—ஈ

### 1969-70-ம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீட்டில் சேர்த்துள்ள பணிகள்

| துறைமுகத்தின் பெயர். (1) | பணியின் பெயரும் தொடர்ச்சி எண்ணும். (2) | மதிப்பீட்டுத் தொகை. (3) | திருத்திய மதிப்பீடு 1969-70. (4) |
|---|---|---|---|
| | | (ரூ. லட்சத்தில்.) | |
| தொடர்ந்த பணிகள்— | | | |
| கடலூர் .. .. .. .. | 1 அலைத்தடுப்புகளைக் கட்டுதலும்—ஆற்றுப் பயிற்சி வேலைகளும். | 1,39·24 | 47·61 |
| | மொத்தம் .. | | 47·61 |
| புதுப் பணிகள்— | | | |
| கடலூர் .. .. .. | 1 தற்போதுள்ள "எர்ஸ்கின்" என்னும் தூர்வாரி இயந்திரத்திற்குப் பதிலாக (நீர்க்கடியில் தூர் வாருவதற்காக 12 அங்குல அளவு உறிஞ்சுவாய் அமைப்புடையதும் குழாய்த் தொடர் உடையதும் ஆகிய) தூர் வாரி இயந்திரம் ஒன்றை வாங்குதல். | 11·00 | 9·30 |
| | பெரு மொத்தம் .. | | 56·91 |

இணைப்பு V—உ

1960–61 முதல் 1968–69 முடிய தமிழகத்தில் உள்ள துறைமுகங்களின் மூலமாகச் சென்ற மொத்தச் சரக்குகளின் பெறுமானம் (டன் கணக்கில்).

| துறைமுகத்தின் பெயர். (1) | 1960–61 (2) | 1961–62 (3) | 1962–63 (4) | 1963–64 (5) | 1964–65 (6) | 1965–66 (7) | 1966–67 (8) | 1967–68 (9) | 1968–69 (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 தூத்துக்குடி .. .. | 9,59,366 | 8,42,533 | 10,25,173 | 9,34,893 | 10,50,272 | 9,93,734 | 9,53,880 | 10,80,207 | 9,24,295 |
| 2 கடலூர் .. .. | 4,28,913 | 4,66,850 | 4,67,811 | 4,98,478 | 5,45,494 | 4,16,440 | 3,97,375 | 2,40,370 | 1,96,455 |
| 3 நாகப்பட்டினம் .. | 39,813 | 40,757 | 57,619 | 52,340 | 71,929 | 72,162 | 91,179 | 1,11,331 | 1,55,390 |
| 4 பரங்கிப்பேட்டை .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 5 தொண்டி .. .. | 971 | .. | .. | .. | .. | .. | 2 | 15 | .. |
| 6 பாம்பன் .. .. | 3,105 | 1,420 | 1,478 | 6,129 | 2,094 | 8,152 | 7,436 | 10,245 | 9,806 |
| 7 தனுஷ்கோடி .. | 8,125 | 7,753 | 7,221 | 7,430 | 3,581 | .. | துறைமுகம் மூடப்பட்டது. | | .. |
| 8 இராமேஸ்வரம் .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1,600 |
| 9 கீழக்கரை .. .. | 1,426 | 1,302 | 1,058 | 1,538 | 1,243 | 4,795 | 436 | 922 | 12,492 |
| 10 குளச்சல் .. .. | 9,800 | .. | .. | 14,455 | 25,598 | 26,900 | 29,230 | 39,413 | 36,600 |
| 11 குலசேகரப்பட்டினம் .. | 782 | 644 | 252 | 800 | 150 | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 14,52,301 | 13,61,259 | 15,60,612 | 15,16,063 | 17,00,361 | 15,22,183 | 14,79,538 | 14,82,503 | 13,36,638 |
| தூத்துக்குடி நீங்கலாக .. | 4,92,935 | 5,18,726 | 5,35,439 | 5,81,170 | 6,50,089 | 5,28,449 | 5,25,658 | 4,02,296 | 4,12,343 |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

SEVENTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*21st March to 25th March 1970.*

(Volume XXIX—Nos. 1 to 4.)

*Pages*

A

ABDUL GHAFFOOR SAHIB, THIRU M.—
Sugar Mill, Wallajah taluk, North Arcot district. 177

ACCIDENTS—
Fire accident, Madras ... ... ... ... 357–359

ACT(S)—
Suppression of Immoral Traffic Act, cases ... 188–189

AGRICULTURE—
Agricultural products, Wallajah Panchayat Union Council, shortage ... ... ... ... 166–167

AID—
American Aid for agricultural production ... 519–521

ALADI ARUNA, THIRU—
Budget, 1970–71, Voting—
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 619–623

PAGES

A—*cont.*

ALAGARSWAMI THIRU S.

Budget, 1970–71, Voting—

Cinchona ... ... ... ... ...
Forest Department ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... ...

Irrigation ... ... ... ... ... 441, 446–447
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ... ...
Capital Outlay on Public Works ... ... ...

Khadi ... ... ... ... ... ... 537, 540
Community Development Projects, etc. ...
Public Works—Grants-in-aid ... ...

Motor Vehicles Acts—Administration ... 230
Road Transport Schemes ... ... ...
Capital Outlay on Road Transport Schemes.

Drought relief, amount received from Central Government ... ... ... ... ... 37, 38, 84–85

ARANGANNAL, THIRU RAMA—

Allotment of separate seats for the party functioning under the leadership of Thiru G. Bhoovarahan (point of order) ... ... ... 203

ASAITHAMBI, THIRU A. V. P.—

Budget 1970–71, Voting—

Motor Vehicles Acts—Administration ... 28
Road Transport Schemes ... ...
Capital Outlay on Road Transport Schemes.

Estimates Committee, Report on Madras, Record Office (now Tamil Nadu Archives) ... ... 62–67

Estimates Committee Report on the action taken by the Government on the recommendations of the committee, contained in the Report on the Directorate of Handlooms and on forests, presentation ... ... ... ... ... ... 25, 227



PAGES

A—*cont.*

AUTOMOBILES—

Auto Cycles, production of ... ... ... 375
Tourist taxis, rates, revision of ... ... ... 379–380

B

BALAKRISHNAN, THIRU A. G.—

Budget, 1970–71, Voting:

Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... } 572–575

BALAN, THIRU M. C.—

Budget, 1970–71, Voting:

Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... } 605–608

Motor Vehicles Acts—Administration ...
Road Transport Schemes ... ... ...
Capital Outlay on Road Transport Schemes. } 74–78

BALARAMAN, THIRU L.—

Budget, 1970–71, Voting:

Cinchona ... ... ... ... ... ...
Forest Department ... ... ... ...
Capital Outlay on Forest ... ... ... } 441

Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... } 536

Pages

BALARAMAN, THIRU L.—cont.

Budget, 1970-71, Voting—cont.

Khadi ... ... ... ... ... ...

Community Development Projects, etc. ... 229, 267

Public Works—Grants-in-aid ... ... 269

BETTING—

New York Cotton, check by Police ... ... 524-525

BHUPATHY, THIRU M.—

Budget, 1970-71, Voting:

Irrigation ... ... ... ... ...

Public Works—Works ... ... ...

Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ... 541

Capital Outlay on Irrigation ... ... ...

Capital Outlay on Public Works ... ...

Khadi ... ... ... ... ... ...

Community Development Projects, etc. ... 241-243

Public Works—Grants-in-aid ... ...

Textool Factory at Coimbatore ... ... ... 13-14

BHUVARAHAN, THIRU G.—

Budget, 1970-71, Voting:

Khadi ... ... ... ... ... ...

Community Development Projects, etc. ... 251-254

Public Works—Grants-in-aid ... ...

BILL(S)—

Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1970. ... ... 25

Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1970 ... ... ... ... ... 227

Int.

Message from Governor ... ... ... ... 227

BOAT CLUB—

Cooum near Napier Bridge ... ... ... 182-184



BOJAN, THIRU K.—

Budget, 1970-71, Voting:

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. 393

Khadi ... ... ... ... ... 229,

Community Development Projects, etc. ... 255-256

Public Works—Grants-in-aid ... ... ...

Motor Vehicles Acts—Administration ...

Road Transport Schemes ... ... ... 37, 55-57

Capital Outlay on Road Transport Schemes.

BOOKS AND PUBLICATIONS—

Writings of late Thiru C. N. Annadurai ... ... 366-368

BRIDGE—

Bridge across Cauvery, Tiruchirappalli ... ... 378-379

Jammanai Bridge, Tiruppur, crack ... ... 181

BUILDINGS—

Girls' High School at Tiruttani ... ... ... 8-9

Police Quarters, Nilgiris district ... ... ... 192-193

Union School, South Mangudi, Chidambaram taluk ... ... ... ... ... ... 382-383

## C

CALLING ATTENTION—

Failure of the Electricity Board to implement the recommendations of the Electricity Wage Board and the decision taken by the various Employees' Associations of the Board to resort to direct action and the consequent hardship to the public ... ... ... ... ... ... 21-25

CEMENT—

Manufacture, establishment of small factories ... 376-377

PAGES

C—*cont.*

CHAIR :

*Announcements* :

Adjournment Motion, consideration ... ... 532

Seats, party-wise allotment ... ... ... 219–221

*Rulings and observations.*

*Adjournment motions* :

*Non-acceptance of the Fourth Five-Year Plan by the Tamil Nadu Government* :

Consent was withheld in the light of the explanatory statement made by the Chief Minister 392

Debate :

***Allegations*** :

On 23rd March 1970 a Member alleged that in his statement about the agriculturists' agitation in Coimbatore, the Chief Minister had cast aspersions against his party by stating that they were the stooges of landlords. He also stated that he had given notice of an adjournment motion.

The Chair observed that the Member could seek clarification from the Chief Minister when he was present in the House.

The Minister for Law quoting the Chief Minister's statement clarified that the Chief Minister had never made the statement attributed to him by the Member and hence the remarks made by the Member should be expunged.

The Chair observed that if the Member stated that the Chief Minister had made certain remarks which he had actually not made, it would amount to breach of privilege. However, as the Member was not present in the House when the Chief Minister made the statement, he might ask for a copy of the Chief Minister's speech which would be forwarded to him. After perusing the speech, the Member might seek such clarification as he might desire necessary.



*pages.*

C—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

DEBATE—*cont.*

*Allegations*—cont.

As for the adjournment motion referred to by the Member, he had already refused his consent in his Chamber. Members should abide by the decision of the Chair even supposing they considered it wrong.

When the Member persisted in making his remarks, the Chair observed that he had the responsibility to conduct the proceedings of the House as per the Agenda and could not allow any discussion against the Rules.

Then that Member staged a walk-out stating that there was no use in his remaining in the House and discussing the matter if he could not get any remedy.

A little later the Speaker informed the House that after perusal of the Chief Minister's speech, he found that he had only complimented the party to which the hon. Member belonged and at no place he had cast aspersions as alleged by the Member. Thus the Member had given a distorted version of the Chief Minister's speech and it was a breach of privilege. However, as that Member was not present in the House just then, with a view to afford him an opportunnity to explain his stand, he deferred his ruling on the matter ... ... ... ... 218, 221–226, 271–275

Demands for grants :

*Points of clarification* :

After a Minister had replied to the debate on a Demand for Grant, it was not possible to allow all the Members who had moved cut motions to seek clarification. A Member could seek clarification only on the matters referred to by the Minister in his reply and the Members could not raise new points and make a speech after the Minister's reply.

Ministers could not be expected to reply to points in the minds of the Members; nor

pages.

B—*cont.*

CHAIR—*cont.*

RULINGS AND OBSERVATIONS—*cont.*

Demands for grants—*cont.*

*Points of clarification*—cont.

could they be expected to reply to all the points made by the Members in the course of discussion ... ... ... ... ... 107–109

*Members' Seats :*

On 21-3-1970, a Member belonging to the Congress Party led by Thiru Nijalingappa rose on a point of order and wanted to know the reasons for the delay in allotting separate seats to Thiru Bhuvarahan and some other Members who had broken away from his party as the continued occupation of the same seats by them Caused considerable embarrassment and inconvenience to them.

The Leader of the Opposition endorsing the point made by the Member of his party remarked that if separate seats were not allotted to those Members the next day the members of his party would not attend the House.

Holding that the hon. Member's seeking the reasons for the delay was not a point of order, the Chair made the following observations:

"Besides Thiru Bhuvarahan, the Members belonging to the Forward Bloc hal also informed him of their intention to function separately in the House. The Leaders of Parties had been addressed in the matter, and after receipt of replies from all the Leaders, seats would be re-allotted. Though he was not bound to consult the leaders in the matter, as a matter of courtesy and convenience, he consulted them.

Members had to occupy the seats allotted to them by the Chair. The allotment of seats was for 'Members' and not for 'parties'. If there was to be party-wise allotment of seats, the rules had to be accordingly amended.

Though it was not in order to challenge the Chair, he did not consider the challenge made by the Leader of the Opposition as a challenge,



pages.

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and observations—*cont.*

*Members' Seats*—cont.

in keeping with what Thiruvalluvar had stated, namely :—

"The useless talk indulged at length by one sans gain or aim

Will one's own complete lack of worth to all the world proclaim."

The Leader of the Opposition's assertion that they would not attend the House the next day would be construed as his failure to discharge his duties to the public.

Walk-out from the House as a protest against the ruling of the Chair was not in order ... ... 26–35

On 23rd March, 1970 the Chair announced reallotment of seats to the various parties ... ... 219–221

*Point of order* :

A point of order could not be raised to seek clarification on a statement made by a Minister. Such clarification could be sought only when the Minister concerned was present in the House ... 218–219

On a Minister saying that he was not yielding when a point of order was raised, another Member raised another point of order and enquired whether the Minister was entitled not to yield when a point of order was raised.

The Chair observed that a Minister was entitled to say that he was not yielding.

Recalling a decision taken at the Whips' Conference that points of order should not be raised unnecessarily, the Chair observed that simply for the sake of giving expression to their views Members should not raise points of order. He reiterated the earlier ruling that a situation might arise when he would be forced to take such action as was provided in the rules when frivolous points of order were repeatedly raised ... ... ... ... ... 290–293

POINT OF PERSONAL EXPLANATION :

A Member could speak on a point of personal explanation only if a reference was made about him and not about officials who would be defended by the Department and the Minister concerned. 439

CHAIR—*cont.*

Rulings and observations—*cont.*

PRIVILEGE MATTER :

*Publication in 'Malai Murasu'* :

On 24th March 1970 an hon. Member belonging to the Opposition Party raised a privilege matter against the Tamil daily 'Malai Murasu' that in its issue, dated 18th March 1970 the daily gave prominence to the ruling of the Chair alone holding the allegations against the Hon. Thiru S. B. Adityan as 'not proved' and the 'warning' given to the Leader of the Opposition but the other portions of the relevant proceedings of the House were not reported or reported insufficiently. He also pointed out that the daily had published it in the above manner even though the Chair had given a ruling on 12th March 1970 that the Press should publish the proceedings of the House without distortion and imputing motives. He, therefore, requested the Chair to refer the matter to the Committee of Privileges and till that Committee sent its report to the House for consideration, the Press pass issued to the daily might be kept suspended.

The Chair observed that only if it was a case of wilful distortion or imputation of motives it would constitute a breach of privilege. Simply because the daily did not publish the explanatory statement of the Leader of the Opposition in full, it could not constitute a breach of privilege. Moreover, it did not cast a slur on the Leader of the Opposition. However, the Chair made a fervent appeal to the Press that in cases where there was clash of views, they should give prominence to both the views without any distortion and imputation of motives ... ... ... ... ... 385–387

QUESTIONS AND ANSWERS :

*Supplementary Questions* :

*Accusations* :

Supplementary questions should not contain accusations ... ... ... ... 187

*Brevity* : 184

**Questions should be brief** ... ... ... ... 367



RULINGS AND OBSERVATIONS—*cont.*

CHAIR—*cont.*

QUESTIONS AND ANSWERS—*cont.*

*Supplementary Questions*—cont.

*General* :

Instead of putting too many questions at a time, if Members put one question and after it was answered, if further questions were put, it would enable the Ministers to answer them ... ... 183–184

Members should only put questions and should not explain the situation in their districts, as that was not admissible during question-hour ... 173

*Non-inclusion in the Order Paper* :

With reference to a point of order raised by a Member that though he had given notice of more than 1,600 questions, answers were given to 225 questions only even after a lapse of three years, the Chair explained that the answers had to come from the concerned Departments and he had written letters to the respective Ministers and the Member could not accuse the Chair. The Chair added that that matter could not be raised in the House under a "Point of Order ". He expressed the hope that the Ministers present in the House would take note of the Member's complaint and expedite the answers relating to their Departments ... ... ... ... 383–384

*Relevancy* :

A supplementary put by a Member which did not relate to the main question was disallowed and the next starred question was taken up ... ... ... ... ... ... 175

Supplementaries should relate to the main question ... ... ... ... ... 2,379

*Quotation* :

With reference to a point of order raised by a Member as to whether the prior permission of the Chair had been obtained by the Chief Minister to quote from a bit notice, the Chair held that as the Chief Minister had only mentioned abost the contents of that bit notice and was not leaving it on the table, no prior permission was necessary. Only when any document was laid on the Table, his consent was necessary. 305–306

PAGES

C—cont.

CHEEMAICHAMY, Thiru K.:
Cooum Improvement Scheme, time of completion ... 182

CHITHAN, Thiru N. S. V.:
Aid to Technical Institutions, Code ... ... 511–512
Alleged misreporting in Tamil Daily "Malai Murasu" (P.M.) ... ... ... ... 385
Auto Cycles, production ... ... ... 375
Budget, 1970-71, Voting:
Cinchona ... ... ... ... ... 440
Forest Department—Capital Outlay on Forests. Irrigation ... ... ... ... ... ... 538, 540
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ...
Khadi ... ... ... ... ... ... ... 228
Community Development Projects, etc. ... ...
Public Works—Grants-in-aid ... ... ...
Central Jail, Tiruchirappalli ... ... ... 16–17
Coffee, quantity of production ... ... ... 198
Drought relief, amount received from Central Government ... ... ... ... ... 203
Fire Service stations, Madurai District ... ... 218
Firing of pellets near Puduchattiram ... ... 523–524
Herbs, Survey by Central Council of Research ... 503–509
Indian Administrative Service Officers in Tamil Nadu ... ... ... ... ... ... 214
Indian Police Officers, Madras City ... ... 214
Kilpauk Medical College, Madras ... ... ... 362–363
Kilpauk Medical College, Madras medical requirements, purchase ... ... ... ... ... 208
Land Development Banks, loan, disbursement ... 210–211
Land Development Banks, purpose of opening ... 210
Libraries in schools, financial aid ... ... 369–377
Madras Women's Cottage Industries Central Co-operative Society, donation of lands ... ... 13
Metered Parking Places, for Motor Cars, Madras City ... ... ... ... ... ... 212
Midday meals, rice supply in Virudhunagar school. 522–523



Pages.

C—cont.

CHITHAN, Thiru N. S. V.—cont.
Nursing course at Medical College, Madras ... ... 364–366
Petroleum-based industry at Tuticorin ... ... 16
Police Quarters, Nilgiris District ... ... 192–193
State Transport Employees' strike, Madurai ... 381–382
Tea, quantity of production ... ... ... 197
Tool and Die Designing Training Centre, Dindigul ... ... ... ... ... ... 192
Tractor Workshop, Madurai ... ... ... 168–169

COLLEGES:
Kilpauk Medical College, Madras ... ... ... 362–363
Kilpauk Medical College, Madras, medical requirements, purchase ... ... ... ... ... 208
Madras Medical College, Pilot project in Medical Research ... ... ... ... ... ... 1–2

COMMITTEES:
Estimates:
Report on Madras Record Office (now Tamil Nadu Archives) ... ... ... ... ... 25
Report on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on the Directorate of Handlooms and on Forests ... ... ... 227
State Industries Development Committee, reconstitution ... ... ... ... ... ... 204–208

CO-OPERATIVES:
Draft Ordinance ... ... ... ... ... 17–18
Land Development Banks, loan, disbursement ... 210–211
Purpose of opening ... ... ... ... ... 210
Madras Women's Cottage Industrial Central Co-operative Society, donation of lands ... ... 13

COOUM IMPROVEMENT SCHEME:
Amount spent ... ... ... ... ... 181
Boat Club near Napier Bridge ... ... ... 182–184
Time of completion ... ... ... ... 182

COURTS:
Sub-Court for Kancheepuram ... ... ... 526–527

Pages.

D

DAIRIES:

Milk Project, Madurai, production of bottle ... 11–12

DHANUSHKODI, THIRU P. S.:

Budget, 1970-71, Voting:

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... 392

416–418

Cinchona ... ... ... ... ... ... 447–448

Forest Department ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ...

Irrigation ... ... ... ... ... ... 623–625
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ...

Khadi ... ... ... ... ...
Community Development Projects, etc. ... ...
Public Works—Grants-in-aid ... ... 230

Government fallow lands, Vedaranyam Revenue Firka, Thanjavur District ... ... ... 196–197

DHARMALINGAM, THIRU N.—

Budget, 1970–71, Voting:

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... 412–414

Express Bus between Vedaranyam and Tiruchirappalli ... ... ... ... ... ... 180

Instructors in Industrial Training Centres, regularisation of services ... ... ... ... 178

DISEASES:

Jaundice cases treated in Madurai Erskine Hospital ... ... ... ... ... 2–5

DRAINAGE SCHEME:

Madras Corporation, loan ... ... ... ... 189–190

DROUGHT:

Relief, amount received from Central Government ... ... ... ... ... ... 203



Pages.

D—*cont.*

DURAIPANDIAN, THIRU N.:

Budget, 1970–71, Voting:

Irrigation ... ... ... ... ...

PUBLIC WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

Public Works—Works.

Capital Outlay on Irrigation ... ...
Capital Outlay on Public Works ... ... ... 617–619

DURAISAMY, THIRU S.:

Butter produced in Madurai Milk Project ... ... 11–12

Drought relief, Amount received from Central Government ... ... ... ... ... 203

Jammanai bridge, Tiruppur, crack ... ... 181

Land Development Banks, purpose of opening ... 210

Lands given to the landless ... ... ... 194–195

Police Commission, constitution ... ... ... 359

Police Stations, Tirupur, increase ... ... 361–362

E.

EMPLOYEES:

Aided Colleges, City Compensatory Allowance, payment ... ... ... ... ... ... 368–369

Catering establishment ... ... ... ... 18–20

Co-operative Spinning Mill, Manalmedu, Mayuram, discharge of workers ... ... ... ... 186–188

Cotton Mills taken over by the Textile Corporation, salary and dearness allowance of workers. 170–174

Government Press, Madras, bread and bun, supply to workers ... ... ... ... ... 198–199

Instructors in Industrial Training Centres, regularisation of services ... ... ... ... ... 178

Municipal Councils, security deposits ... ... 200–203

Non-teaching staff in Schools, retirement age ... 512–516

State Transport Employees' strike, Madurai ... 381–382

EMPLOYMENT:

For educated unemployed ... ... ... ... 528–531

Pages.

F.

FACTORIES:

Fish canning factory, Tuticorin ... ... ... 191–192
Textool factory, Coimbatore ... ... ... 13–14
Tractor workshop, Madurai ... ... ... 168–169

FAMILY PLANNING:

Operations, number ... ... ... ... 214–215

FAMINE:

Drought relief, amount received from Central Government ... ... ... ... ... 203

FINANCIAL BUSINESS:

Budget, 1970–71, Voting:

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959. 392–439
Cinchona ... ... ... ... ... ...
Forest Department ... ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 439–459
Irrigation ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ... 536–654
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ...
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc. ... ...
Public Works—Grants-in-aid ... ... ...
228–271
275–283
285–290
293–305
306–307

Motor Vehicles Acts—Administration, Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... ... 35–111

DSG (Final) 1969–70:

Presentation ... ... ... ... ... 533–536

FIRE SERVICE STATION:

**Madurai** district ... ... ... ... ... **218**

FISHERIES:

Harbour, Leepuram, Kanyakumari district ... 161–162



Pages.

G.

GANESAN, THIRU L.:

Budget, 1970–71, Voting:

Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... 567–570
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ...

GOMATHYSANKARA DIKSHIDAR, THIRU G.:

American aid for agricultural production ... 519–521
Betting on New York Cotton, check by Police ... 524–525
Boat Club at the Cooum near Napier bridge ... 182–184
Border highways, epansion ... ... ... 377–378
Bridge across Cauvery, Tiruchirappalli ... ... 378–379
Budget, 1970–71, Voting:
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc. ... 247–249
Public Works—Grants-in-aid ... ... ...
Damages caused by rains ... ... ... ... 190
Draft Ordinance on Co-operation ... ... ... 17–18
Fish canning factory, Tuticorin ... ... ... 191–192
Government Press, Madras, Workers, bread and bun, purchase ... ... ... ... ... 198–199
Government Press, newsprint purchase ... ... 199
Industrial Investment Corporation, working capital. 175–177
N.C.C., supply of garments ... ... ... 6–8
Police Commission, constitution ... ... ... 359
Rice Mill owners, arrests ... ... ... ... 521–522
Sri Ramakrishna Mission Schools in City ... 9–10
Tourist taxis, revision of rates ... ... ... 379–380

GOVERNMENT PRESS:

Binders, appointment ... ... ... ... 199–200
Newsprint, purchase ... ... ... ... 199
Workers, bread and bun, supply ... ... ... 198–199

PAGES.

G—*cont.*

GOVINDARAJAN, THIRU C.:
Budget, 1970-71, Voting:

IRRIGATION:
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... . 539

Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Schemes ... ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ... 35-36, 59-62

H

HANDE, DR. H. V.:

Budget, 1970-71, Voting:
Cinchona ... ... ... ... ...
Forest Department ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 440-441

Irrigation ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant.
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 538-539, 588-591

Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc. ... ...
Public Works—Grant-in-aid ... ... ... 228, 230-231, 238-240

Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Schemes ... ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ... 36-38
Colour sarees, production by powerlooms, ban ... 174-175
Connemara Library, complaints ... ... ... 509-511
Drainage Scheme, Madras Corporation, loan ... 189-190
Failure of the Electricity Board to implement the recommendation of the Electricity Wage Board and the decision taken by the various Employees' Associations of the Board to resort to direct action and the consequent hardship to the public ... ... ... ... ... ... 21-24



PAGES.

H—cont.

HANDE, DR. H. V.—*cont.*
Jaundice cases located in Madurai Erskine Hospital 2-5
Medical College, Kilpauk, Madras ... ... 362-363
Employees of aided colleges, city compensatory allowance, payment ... ... ... ... 368-369
Fire accidents in Madras ... ... ... ... 357-359
Government Printing Press, binders, appointment. 199-200
Police Commission, constitution ... ... ... 359-361
Smoke. emenating from diesel buses, prevention. 178-179

HARBOUR:
Porto Novo, development as a harbour, recommendation ... ... ... ... ... ... 184-185

HARIJANS:
Motor Transport Society for—, in Madurai district 9-10

HIGHWAYS:
Border Highways, expansion ... ... ... 377-378

HOSPITALS AND DISPENSARIES:
General Hospital, Madras, bed strength ... 197
Madurai Erskine Hospital, Jaundice cases treated in ... ... ... ... ... ... ... 2-5
Thirumangalam Government Hospital, X-ray Unit 5

I

INDUSTRIAL ESTATE:
Thisiyanvilai, Tirunelveli district ... ... 16

INDUSTRIAL INVESTMENT CORPORATION:
Working Capital ... ... ... ... ... 175-177

INDUSTRIES:
Milk powder producing unit, starting at Madurai Dairy ... ... ... ... ... ... ... 523
Petroleum based industry at Tuticorin ... ... 16
Production of Small Scale Industries, exhibition. 15
Steel Casting Plant at Arakonam ... ... ... 527-528

INSTITUTIONS:
Aid to Technical Institutions, Code ... ... 511-512

Pages.

I—*cont.*

IRRIGATION :
Springs, occurrence ... ... ... ... ... 162–164, 164–166

J.

JAILS :
Central Jail, Tiruchirappalli ... ... ... 16–17
Open Air Jail in Thanjavur, number of prisoners ... 194
Open Air Jails, establishment ... ... ... 193–194

JAMES, THIRU J. :
Budget, 1970–71, Voting :
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc. ... ...
Public Works—Grants-in-aid ... ... ... 304
Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Schemes ... ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ... 70–74

JANAKI AMMAL, THIRUMATHI K. P. :
Budget, 1970–71, Voting :
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ... 538
Capital Outlay on Public Works ... ...
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc. ... ...
Public Works—Grants-in-aid ... ... ... 229
State Transport buses, Virudhunagar-Vadamalaikurichi road, plying ... ... ... ... 179–180
X-Ray unit for Government Hospital at Thirumangalam ... ... ... ... ... 5

K

KANAGASABHAI, THIRU R. :
Budget, 1970–71, Voting :
Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Schemes ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ... 35



Pages.

K—cont.

KANNAPPAN, THIRU M. :
Budget, 1970–71, Voting :
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 585–588

KARUNANIDHI, THIRU M. :
Agitation by Coimbatore Agriculturists against the rise in electricity charges ... ... ... 284–285
Budget, 1970–71, Voting :
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 628–629, 630–631, 635–641
Fourth Five-Year Plan, Non-acceptance by Tamil Nadu during Chief Ministers' Conference at Delhi (A.M.) ... ... ... ... 389–392
Minister's refusal to yield when a member rose on a Point of order ... ... ... ... 291

KARUPPIAH, THIRU R. :
Budget, 1970–71, Voting :
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... 539, 541
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ...
Firing of pellets near Puduchattiram ... ... 523–524

KARUTHIRUMAN, THIRU P. G. :
Allotment of separate seats for the party functioning under the leadership of Thiru G. Bhuvarahan (Point of Order) ... ... 26, 27, 28, 29, 30, 31, 32, 34
Budget, 1970–71, Voting :
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... 418–423

PAGES.

K—cont.

KARUTHIRUMAN, THIRU P. G.:
Budget, 1970–71, Voting—*cont.*
Irrigation ... ... ... ... ...
Public Works-Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Irriagtion ... ... ...
Capital Outlay on Public Works ... ... 625–637
Khadi ... ... ... ... ...
Community Development Projects, etc, ... ...
Public Works—Grants-in-aid ... ... 275–283

KASIRAMAN, THIRU N.:
Budget, 1970–71, Voting:
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 393–397
Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Schemes ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ... 85–93
Postal Mail bags carried by State Transport Buses 380–381

KATHIRAVAN, THIRU K. M.:
Budget, 1970–71, Voting:
Cinchona ... ... ... ... ...
Forest Department ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 443–444

KHADI:
Dyeing of Khadi Cloth ... ... ... ... 17
Sales ... ... ... ... ... 198
Sales, Tiruchirappalli District ... ... ... 198

KITTAPPA, THIRU N.:
Cement manufacture, establishment of small factories ... ... ... ... ... 376–377
Co-operative Spinning Mills, Manalmedu, Mayuram, Discharge of workers ... ... ... ... 186–188
Cooum Improvement Scheme, amount spent ... 181
Drought relief, amount received from Central Government ... ... ... ... ... 203
Family Planning, Operation, number of persons ... 214–215
High Schools, Panchayat Union Council area. Mayuram ... ... ... ... ... 216
Metered Parking places for Motor cars, Madras City ... ... ... ... ... 212



*Pages.*

K—cont.

KITTAPPA, THIRU N.—*cont.*
Open Air Jail, Thanjavur, number of prisoners ... 194
Open Air Jails, establishment ... ... ... 193–194
Prisoners, release on the occasion of the birthday of Arignar Anna ... ... ... ... 216
Writings of late Thiru C. N. Annadurai, former Chief Miniser ... ... ... ... 366–368

KOLATHUR KOTHANDAM, THIRU:
Loans granted to washermen and barbers, waiver 10–11
Police outpost, opening at Padalam ... ... 526

KOTHANDARAMAN, THIRU V. K.:
Allotment of separate seat for the party functioning under the leadership of Thiru C. Bhuarahan (Point of Order) ... ... 34
Budget, 1970–71, Voting:
Cinchona ... ... ... ... ...
Forest Department ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 440, 441
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ... 540
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works—
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc., ...
Public Works—Grants-in-aid. ... ... ... 228
Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Schemes ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ...
Employees of Catering establishments ... ... 18–20
Employment for educated unemployed ... ... 528–531
Hindi Teachers, grievences ... ... ... 517–519
Khadi cloth, dyeing ... ... ... ... 17
Questions unanswered (Point of Order) ... ... 383, 384
Travelling allowance for Police ... ... ... 213

Pages.

**K—cont.**


KOTHANDARAMIAH, THIRU K. S. :

Budget, 1970–71, Voting :

Cinchona ... ... ... ... ... ...
Forest Department ... ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 442–443
Irrigation .. ... ... ... ... ...
Public Works—Works ... ... ... 537,
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ... 609–611
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... ...

KRISHNAMOORTHY, THIRU K. :

Budget, 1970–71, Voting :

Irrigation ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ..
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ... 614–615
Capital Outlay on Irrigation
Capital Outlay on Public Works

KRISHNAN, THIRU N. :

Budget, 1970–71, Voting :

Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Schemes ... ... ... ... 82–83
Capital Outlay on Road Transport Schemes ...

KRISHNASAMY GOUNDER, THIRU R. :

Budget, 1970–71, Voting :

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959 ... ... ... ... ... ... 405–408, 438

KUMARASWAMY, THIRU K. N. :

Budget, 1970–71, Voting :

Irrigation ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ... 537, 540.
Capital Outlay on Irrigation ... ... ... 581–585
Capital Outlay on Public Works ... ... ...




Pages.

**K..cont.**


KUMARASWAMY, THIRU K. N. : (*cont.*)

Budget, 1970–71, Voting : (*cont.*)

Motor Vehicles Acts—Administration ... ... 36.
Road Transport Schemes ... ... ... ... 78–80
Capital Outlay on Road Transport Schemes ...


**L**


LANDS :

Government fallow lands, Vedaranyam Revenue Firka, Thanjavur district ... ... ... 196–197
Landless people, distribution ... ... ... 194–195

LAW AND ORDER :

Murder in 1969 ... ... ... ... ... 213

LIBRARIES :

Connemara Library, complaints ... ... ... 509–511
Financial aid to School Libraries ... ... ... 369–371

LOANS :

Backward Class people, Coimbatore district, loan for Industrial development ... ... ... 209
Washermen and Barbers, waiver ... ... ... 10–11


**M.**


MADHAVAN, THIRU S. :

Coimbatore incidents, Chief Minister's reference against a particular group ... ... ... 221–223, 226

MALAICHAMY, THIRU P. :

Products of Small Scale Industries, exhibition ... 15

MANI, THIRU K. B. S. :

Budget, 1970–71, Voting :

Irrigation ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 537, 577–579

Pages.

M—cont.


MANI, THIRU M. S.:

Budget 1970–71, Voting:
Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Schemes ... ... ... ...
Capital outlay on Road Transport Schemes ... 50–51, 52–55

MANI, THIRU V. S. S.:
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc., ...
Public Works—Grants-in-aid ... ... ... 236–238

MANIAN, THIRU P. S.:
Budget, 1970–71, Voting:
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 556–558

Motor Transport Society for Harijans in Madurai district ... ... ... ... ... ... 9–10

MARIMUTHU, THIRU A.:
Budget, 1970–71, Voting:
Irrigation ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 562–564

Khadi ... ... ... ... ...
Community Development Projects, etc., ...
Public Works—Grants-in-aid ... ... ... 259–261

MARIMUTHU, THIRU A. R.:

Agitation by Coimbatore Agriculturists against the rise in electricity charges, personal explanation ... ... ... ... ... ... 283, 284

Budget 1970–71, Voting:
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc., ...
Public Works—Grants-in-aid ... ... ... 256–259




Pages.

M—cont.


MARTIN, THIRU T.:
Agricultural products, Wallajah Panchayat Union Council, shortage. ... ... ... ... 166–167
Budget, 1970–71, Voting:
Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Schemes ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ... 45–50
Chief Minister's quotation from a bit notice, permission from the Chair ... ... ... ... 305
Fourth Five-Year Plant non-acceptance by Tamil Nadu during Chief Minister's Conference at Delhi (A.M.) ... ... ... ... ... 387–388, 398
Point of Order, supplementary questions ... 164
Radial collector pipe wells, Tirunelveli district ... 372
Suppression of Immoral Traffic Act, cases ... ... 188–189

MARUDACHALAM, THIRU N.:
Backward classes people, Coimbatore District, Loan for Industrial development ... ... 209

MATHIALAGAN, THIRU K. A.:
DSG (Final), 1969–70, presentation ... ... 533–536

MEDICINES:
Herbs, survey by Central Council of Research 503–509

METHA, THIRU M.:
Budget, 1970–71, Voting:
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc., ... 261–262

Public Works—Grants-in-aid.

MIDDAY MEALS SCHEME:
Rice supply in Virudhunagar school ... ... 522–523

MILLS:
Modernisation of sick mills taken over by the Tamil Nadu Textile Corporation ... ... ... 170
Sugar Mill, Wallajah taluk, North Arcot district 172

MINES AND MINERALS:
Redockre found in Chenkeeraikadu, Thirumayam taluk, lease. ... ... ... ... ... 185–186

PAGES

M—cont.

MOTION(S) :
Ad. Motions :
Fourth Five-Year Plan, non-acceptance by Tamil Nadu during Chief Minister's Conference at Delhi ... ... ... ... ... ... 378–392
Privilege :
Alleged misreporting in Tamil daily 'Malai Murasu' ... ... ... ... ... 385–387

MURUGAIAN, THIRU S. :
Budget, 1970–71, Voting :
Irrigation ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment, Tools and Plant
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 560–562

MUTHIAH, THIRU M. :
Murders in 1969 ... ... ... ... ... 212

MUTHUSELVAN, THIRU P. S. :
Budget, 1970–71, Voting :
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc., ...
Public Works—Grants-in-aid. ... ... ... 254–255

MUTHUSWAMY, THIRU M. :
Budget, 1970–71, Voting :
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc., ...
Public Works—Grants-in-aid ... ... ... 228, 229, 231, 263–264, 285–290, 293–305

N.

NAGALINGAM, THIRU P. :
Budget, 1970–71, Voting :
Irrigation ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment, Tools and Plant
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 596–599

PAGES.

N—*cont.*

NALLASIVAM, THIRU K. R. :
Coimbatore incidents, Chief Minister's reference against a particular group ... ... ... 221, 224, 226

NALLASWAMY, THIRU T. M. :
Budget, 1970–71, Voting :
Irrigation ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment, Tools and Plant
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 601–605

N.C.C :
Supply of garments ... ... ... ... 6–8
Syllabus Orientation ... ... ... ... 5

NEDUNCHEZHIAN, THIRU V. R. :
Allotment of separate seats for the party functioning under the leadership of Thiru G. Bhuvaraghan, point of order ... ... ... ... 27, 28, 32, 33, 35

NURSES' TRAINING :
Course in Nursing at the Medical College, Madras ... ... ... ... ... ... 364–366

O

OFFICERS :
Indian Administrative Service Officers in Tamil Nadu ... ... ... ... ... ... 214

P

PACHAIYAPPAN, THIRU S. P. :
Budget, 1970–71, Voting :
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc., ...
Public Works—Grants-in-aid ... ... ... 249–251

PAGES

P—cont.

**PALANI, THIRU C.:**

Budget, 1970–71, Voting:

Irrigation ... ... ... ... ... ...
Public Works—Works ... ... ... ...
Public Works—Establishment, Tools and Plant
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works

PALANIAMMAL, THIRUMATHI V. P.:

Budget, 1970–71, Voting:

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... 397–400

PANCHAYATS:

Union Councils, Model unions in 1968–69 ... 211

PAPERS LAID ON THE TABLE:

Action taken on the recommendations of the Estimates Committee contained in the report on the Directorate of Handlooms, report ... ... 307
Cinchona Department, note ... ... ... 654
Committee on Estimates on Forests Report ... 307
Community Development and Panchayat Development 1970–71—Policy note ... ... ... 461
District Municipalities Act, 1958, Notification ... 654
Erratum—Notification ... ... ... ... 461
Estimates Committee, Report on Madras Record Office ... ... ... ... ... ... ... 112
Financial supplement to Demand under Community Development, 1970–71 ... ... ... ... 461
Forest department, review ... ... ... ... 654
Hindu Religious and Charitable Endowments Demand, Minister's speech ... ... ... 654
Industrial development in Tamil Nadu, Review ... 112
Tamil Nadu Khadi and Village Industries Board, Policy Note ... ... ... ... ... 461
Motor Vehicles Acts—Administration, Minister's speech ... ... ... ... ... ... ... 307
Nationalised Transport, review ... ... ... 307
Payment of Salaries Act, 1951, notification ... 460
Panchayats Act, 1958, notification ... ... 460–654
Public Works—Grants-in-aid, policy note ... ... 307
Road Transport in Tamil Nadu, review ... ... 112, 307
Unstarred questions and answers, list ... ... 307



PAGES

P—cont.

PARAMASIVAM, THIRU P. N.—

Budget, 1970–71, Voting:

Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc. ... ...
Public Works—Grants-in-aid ... ... ... 240–241

PARKING PLACE—

Metered, motor cars, Madras city ... ... 212

PEER MOHAMMED, HAJI M. M.—

Budget, 1970–71, Voting:

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959 ... ... ... ... ... ... 408–410

PERSONAL EXPLANATION—

Agitation by Coimbatore Agriculturits against the rise in electricity charges ... ... ... ... 283–285

PLANTATIONS—

Coffee, production, quantity ... ... ... 198
Tea, production, quantity ... ... ... 197

POINT OF INFORMATION—

Coimbatore incident, Chief Minister's reference against Thiru K. R. Nallasivam and others ... 221–226

POINTS OF ORDER—

Allotment of separate seats for the party functioning under the leadership of Thiru G. Bhoovarahan ... ... ... ... ... ... 25–35
Chief Minister's quotation from a bit notice, permission from the Chair ... ... ... ... 305–306
Minister's refusal to yield when a Member rose on a point of order ... ... ... ... ... 290–293
Questions, un answered ... ... ... ... 383–384
Statement of Chief Minister on the agitation at Coimbatore due to rise in electricity charges ... 218–219
Supplementary questions ... ... ... ... 164

PAGES

P—cont.

POLICE—
Betting on New York cotton, check ... ... 524–525
Commission, constitution of ... ... ... 359–361
Firing of pellets near Puduchattiram ... ... 523–524
Indian Police Officers, Madras city ... ... ... 214
Out-post, opening at Padalam ... ... ... 526
Rice mill owners, arrests ... ... ... ... 521–522
Stations, Tirupur, increase ... ... ... 361–362
Travelling Allowance ... ... ... ... 213

PONNAMBALAM, PULAVAR P.
Redochre found in Chenkeeraikadu, Thirumayam taluk, lease ... ... ... ... ... 185–186

PONNAPPA NADAR, THIRU R.— ...
Budget, 1970–71, Voting:
Cinchona ... ... ... ... ...
Forest Department ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 440
448–454
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc.
Public Works—Grants-in-aid. ... ... ... 289

PRIMARY HEALTH CENTRE—
Tamil Nadu, establishment ... ... ... 212–213

PRISONERS—
Release on the occasion of the birth day of Arignar Anna ... ... ... ... 216

PRIVILEGES—
Alleged misreporting in Tamil Daily 'Malai Murasu' (M) ... ... ... ... ... 385–387

R

RAINS—
Damages caused ... ... ... ... ... 190–191

RAJA, THIRU A. M.—
Milk powder producing unit, starting at Madurai Dairy ... ... ... ... ... ... 523



PAGES.

R—cont.

RAJANGAM, THIRU M.—
Budget, 1970–71, Voting:
Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 599–601

RAJAVELU, THIRU T.A.—
Budget, 1970–71, Voting:
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc., ...
Public Works—Grants-in-aid ... ... 246–247

RAMACHANDRAN, THIRU S.—
Failure of the Electricity Board to implement the recommendation of the Electricity Wage Board and the decision taken by the various Employees Associations of the Board to resort to direct action and the consequent hardship to the Public ... ... ... ... 21, 23–24
Public meeting, security ... ... ... 209–210

RAMAMOORTHY, THIRU K.—
Budget, 1970–71, Voting:
Khadi ... ... ... ... ... ...
Community Development Projects, etc. ...
Public Works—Grants-in-aid ... ... ... 230
Motor Vehicles Acts—Administration ...
Road Transport Schemes ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ... 36, 38
Failure of the Electricity Board to implement the recommendations of the Electricity Wage Board and the decision taken by the various Employees' Association of the Board to resort to dirrect action and the consequent hardship to the public ... ... ... ... ... 21, 24

R—*cont.*

RAMAN, THIRU O.P.—

Budget, 1970–71, Voting:

Cinchona ... ... ... ... ...
Forest Department ... ... ... ...
Capital Outlay on Forests ... ... ... 454–458

Failure of the Eelectricity Board to implement the recommendations of the Electricity Wage Board and the decision taken by the various Employees' Associations of the Board to resort to direct action and the consequent hardship (C A.St.) ... ... ... ... ... 21–23, 24–25

RAMASAMI GOUNDER, THIRU K. M.—

Budget, 1970–71, Voting:

Motor Vehicles Acts—Administration ...
Road Transport Schemes ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ... 80–82

RAMASWAMY, THIRU S. J.—

Budget 1970–71, Voting:

Motor Vehicles Acts—Administration ... ...
Road Transport Schemes ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ... 57–59

Primary Health Centres, establishment ... 212–213

Steel Casting Plant at Arakonam ... ... 527–528

RATHINASABAPATHY, THIRU M.—

Budget, 1970–71, Voting:

Irrigation ... ... ... ... ...
Public Works—Works ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... ... 579–581

REFUGEES—

Burma refugees, number of persons, Tiruchirappalli district ... ... ... ... ... 211–212



S

SADIQ PASHA, THIRU S. J.—

Budget, 1970–71, Voting:

Irrigation:
Public Works ... ... ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Capital Outlay on Irrigation ... ... ...
Capital Outlay on Public Works ... ... 536, 538, 539, 540, 541, 551, 637–651, 652

Motor Vehicles Acts—Administration ...
Road Transport Schemes ... ... ... ...
Capital Outlay on Road Transport Schemes ...35, 36, 38, 39–45, 93–107

SAHADEVA KANDER, THIRU K.—

General Hospital, Madras, Bed strength ... ... 197

Pilot Project in Medical Research ... ... 1–2

SANKARIAH, THIRU N.—

Employees working in the Cotton Mills taken over by the Textile Corporation, salary and dearness allowance ... ... ... 170–174

SCHOOL(S)—

Girls High School at Tiruttani, separate building. 9

High Schools, Panchayat Union Council area, Mayuram ... ... ... ... ... 216

Industrial Training Schools in Tiruchirappalli district ... ... ... ... ... ... 12

Sri Ramakrishna Mission Schools in City. ... ... 9

SECURITY:

Public meeting ... ... ... ... ... 209–210

SEENIVASAN, THIRU P.—

State Transport Workshop, Virudhunagar ... 381

PAGES

S—*cont.*

SHANMUGHAM, THIRU P.U.—

Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1970 ... ... ... ... 227

SIRAIMEETAN, THIRU T. K.—

Budget, 1970-71, Voting—

Irrigation—Public Works—Works—Public Works—Establishment and Tools and Plant—Capital Outlay on Irrigation—Capital Outlay on Public Works ... ... ... ... ... 570–572

SIVAGNANAM, THIRU M. P.—

Budget, 1970-71, Voting:

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 400-405, 434

Khadi—Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... 244-246

SIVASAMI, THIRU M. S.—

Budget, 1970-71, Voting:

Khadi—Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... 265-267

SIVASUBRAMANIAM, THIRU S.—

Budget, 1970-71, Voting:

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 410-412

Irrigation—Public Works—Works—Public Works—Establishment and Tools and Plant—Capital Outlay on Irrigation—Capital Outlay on Public Works ... ... ... ... ... ... ... 575–577

Building, Union School at South Mangudi, Chidambaram Taluk ... ... ... 382–383

Porto Novo, development as a harbour, recommendation ... ... ... ... ... 184–185

SMOKE—

Emanating from diesel buses, prevention ... 178–179



PAGES

S—*cont.*

SOUNDARAPANDIAN, THIRU N.—

Budget, 1970-71, Voting:

Irrigation—Public Works—Works—Public Works—Establishment and Tools and Plant—Capital Outlay on Irrigation—Capital Outlay on Public Works ... ... ... ... ... ... 551–556

Fishing harbour, Leepuram, Kanyakumari district ... ... ... ... ... ... 161–162

Industrial Estate at Thisayanvilai, Tirunelveli district ... ... ... ... ... 16

STATE TRANSPORT—

Buses, Virudhunagar—Vadamalai-Kurichi Road, plying ... ... ... ... ... 179–180

Express bus between Vedaranyam and Tiruchirappalli ... ... ... ... ... 180

Workshop, Virudhunagar ... ... ... 381

STEEL PLANT—

Salem, implementation ... ... ... 216–217

STIPENDS—

Teacher trainees ... ... ... ... 517

STRIKE—

By workers of Standard Motor Products ... 531–532

SUBBARAJA, THIRU A. A.—

Budget, 1970-71, Voting:

Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 393

Cinchona—Forest Department—Capital Outlay on Forests ... ... ... ... ... 440–441

Irrigation—Public Works—Works—Public Works Establishment and Tools and Plant—Capital Outlay on Irrigation—Capital Outlay on Public Works ... ... ... ... ... ... 537, 538, 539, 611–613

Khadi—Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... 228, 229, 230, 269–271

Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 36, 37

S—*cont.*

SUBBIAH, THIRU A. K.—
Budget, 1970-71, Voting:
Irrigation—Public Works—Works—Public Works—Establishment and Tools and Plant—Capital Outlay on Irrigation—Capital Outlay on Public Works ... ... ... ... 538, 592–595
Khadi—Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... ... 263, 264 265
Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 35

SUBBIAH, THIRU K. V.—
Budget, 1970-71, Voting:
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 424–438, 439

SUBBIAH MUDALIAR, THIRU A. R.—
Budget, 1970-71, Voting:
Irrigation—Public Works—Works—Public Works—Establishment and Tools and Plant—Capital Outlay on Irrigation—Capital Outlay on Public Works ... ... ... ... ... 558–560

SURENDRAN, THIRU M.—
Allotment of separate seats for the party functioning under the leadership of Thiru G. Bhoovaraghan (Point of Order) ... ... ... 30, 31
Budget, 1970-71, Voting:
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 414–416
Land Development Banks, purpose of opening ... 210
Steel Plant at Salem, implementation ... ... 216–217

SWAMINATHAN, THIRU V.—
Budget, 1970-71, Voting:
Khadi—Community Development Projects, etc., Public Works—Grants-in-aid ... ... 231–235
Burma refugees—Number of persons—Tiruchirappalli District ... ... ... ... 211–212
Industrial Training School for Girls in Tiruchirappalli District ... ... ... ... ... 12





S—*cont.*

SWAMINATHAN, THIRU V.: (*cont.*)
Khadi, sales ... ... ... ... ... 198
Khadi—sales in Tiruchirappalli District ... 198
Panchayat Union Councils, Model Unions in 1968-69 ... ... ... ... ... 211
Police Commisson, consttuton of ... ... ... 359
Springs, occurrence ... ... ... ... 162–164, 166
Sub-Court for Kancheepuram ... ... ... 526–527

T

TAXES—
Urban Land, Madras City ... ... ... 374–375

TEACHERS—
Hindi teachers, grievances ... ... ... 517–519

TEMPLES—
Sri Ranganathaswamy Temple, Srirangam—renovation—Government grant ... ... ... 204

TEXTILES—
Colour sarees, production by powerlooms, ban 174–175

THEERTHAGIRI GOUNDER, THIRU T.—
Budget, 1970-71, Voting:
Irrigation—Public Works—Works—Public Works—Establishment and Tools and Plant—Capital Outlay on Irrigation—Capital Outlay on Public Works ... ... ... ... ... ... 615–617
Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... 67–70

TOWN PLANNING—
Master Plan for the development of Madras Metropolitan area ... ... ... ... ... 363–364

TRAINING CENTRE—
Tool and Die Designing, Dindigul ... ... 192

TRANSPORT—
Diesel buses, smoke ... ... ... ... 178–179
Motor Transport Society for Harijans in Madurai District ... ... ... ... ... 9–10

TRANSPORT AND COMMUNICATION—
Mail bags carried by State Transport buses ... 380–381

PAGES

V

VARADARAJAN, THIRU N.—

Budget, 1970-71, Voting:

Irrigation—Public Works—Works—Public Works—Establishment and Tools and Plant—Capital Outlay on Irrigation—Capital Outlay on Public Works ... ... ... ... ... ... 537, 564–567

Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... ... 37

VEERASAMI, THIRU N.—

Allotment of separate seats for the party functioning under the leadership of Thiru G. Bhoovaraghan, point of order. ... ... ... 31

VELUSAMY, THIRU P.—

Budget, 1970–71, Voting:

Cinchona—Forest Department—Capital Outlay on Forests ... ... ... ... 445–446

Point of order, Statement of Chief Minister on the agitation at Coimbatore due to rise in electricity charges ... ... ... ... ... 218–219

VEZHAVENDAN, THIRU K.—

Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1970, ... 25

VINAYAKAM, THIRU K.—

Allotment of separate seats for the party functioning under the leadership of Thiru G. Bhoovaraghan (Point of Order) ... ... ... 25–26

Budget, 1970-71, Voting:

Motor Vehicles Acts—Administration—Road Transport Schemes—Capital Outlay on Road Transport Schemes ... ... ... 107, 108, 109

Damages caused by rains ... ... ... 190–191

Drought relief, amount received from Central Government ... ... ... ... ... 203



PAGES

V—*cont.*

VINAYAKAM, THIRU K. (*cont.*)

Employees, Municipal Councils, security deposits 200–203

Girls High School at Tiruttani, separate building 8–9

Master Plan for Madras City ... ... ... 363–364

Metered parking places for motor cars, Madras City ... ... ... ... ... 212

Minister's refusal to yield when a member rose on a Point of Order ... ... ... ... 290, 292

Modernisation of sick mills taken over by Tamil Nadu Textile Corporation ... ... ... 170

National Cadet Corps, Tamil Nadu ... ... ... 5

Non-teaching staff in Schools, retirement age ... 512–516

Police Commission, constitution of ... ... 352

Smoke emanating from diesel buses ... 178–179

Sri Ranganathaswamy temple, Srirangam, renovation, Government grant ... ... ... 204

State Industries Development Committee, reconstitution ... ... ... ... ... 204–208

Stipends to teacher trainees ... ... ... 517

Strike by workers of Standard Motor Products 531–532

Sub-Court for Kancheepuram ... ... ... 526–527

Urban Land Tax, Madras City, ... ... 374–375

W

WELLS—

Radial collector pipe wells, Tirunelveli District 372

61484

நன்றாகத் தெரியும், உத்தியோகஸ்தர்களுக்கும் நன்றாகத் தெரியும். இன்று இருக்கும் பெரிய உத்தியோகஸ்தர்கள் எல்லாம் திருநெல்வேலியில் இருக்கும்போது அந்த ஆற்றில் எவ்வளவு காலம் மழை பெய்து தண்ணீர் ஓடிற்று, எவ்வளவு தண்ணீர் கடலுக்கு வீணாகச் செல்லுகிறது என்பதை எல்லாம் நன்றாக அறிந்தவர்கள். கருத்தரங்கிலும் தெள்ளத் தெளிவாக அத்தனை பேரும் சொன்னோம். அந்த நேரத்தில் கனம் அமைச்சர் அவர்களுடைய முடிவுரையில் அந்தத் திட்டங்களை எல்லாம் வெகு சீக்கிரத்தில் செய்து முடிப்போம், அவை நல்ல ஸ்கீம்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அது ரேடியோ மூலமாகவும், பஞ்சாயத்துக்கள் மூலமாகவும் ஒவ்வொரு ஊரிலும் விளம்பரப்படுத்தப்பட்டது. கடைசியாக முடிவு என்னவாயிற்று ? நாங்கள் சிறு பிள்ளைகளாக இருந்தபோது 'பார் பார் பட்டணம் பார்' என்று காலணாவுக்குப் படம் காட்டுவார்கள். அதே மாதிரிதான் அந்த விளம்பரங்களும் முடிந்து விட்டதே தவிர இதுவரை ஒன்றும் நடக்கவில்லை. பைபிளில் உள்ள வார்த்தையைப் போல் 'உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும் ; இல்லாதவர்களிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்' என்ற நிலைமைதான் தெரிகிறது.

காவிரிப் பகுதியை சீரும் சிறப்புமாக உருவாக்குவதற்காக உலக பாங்கில் இருந்து 49 கோடி ரூபாய் வாங்கிச் செலவு செய்வது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் மக்களிலே பாகுபாடு காணக் கூடாது. உண்மையிலேயே வறண்ட பகுதிகள் இருக்கின்றன. அங்கே வறட்சிப் பணிகள் என்ன நடந்திருக்கிறது ? செங்கற்பட்டு ஜில்லாவை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு மரத்திலும் பச்சை இலைதான் இருந்ததே தவிர, காய்ந்த இலை ஒன்றுகூடப் பார்க்க முடியாது. ஆனால் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எங்களுடைய பகுதியில் காய்ந்த இலையைத் தவிர ஒரு பச்சை இலை கூடக் கிடையாது. அந்த அளவுக்குப் பனைமரமும் பட்டது. அங்கே சிறப்பாகப் பணம் ஒதுக்கி எந்த வேலையும் செய்யப்படவில்லை. என்னுடைய பகுதியில் மணிமுத்தாறு ஓடுகிறது என்ற பெயர் இருந்தாலும் கூட விஜயநாராயண காலில் நான்காவது ரீச் என்று சொல்லப்படுகிற இடந்தான் இருக்கிறது. கடந்த காலத்தில் விளைச்சல் இல்லை, இந்தக் காலத்தில் ஒழுங்காகத் தண்ணீர் பாய்வதில்லை. அந்த இடங்களில் குடிப்பதற்குக்கூடத் தண்ணீர்க் கஷ்டம். இடைமலிக்கும் திசையன்விளைக்கும் இடையே ஒரு ரோடு இருக்கிறது. 'பொதாவில் அடியாள் புழுத்துச் செத்தாள்' என்ற முறையில் அந்த ரோடு மூன்று யூனியன்களைச் சார்ந்திருக்கிறது. சாத்தான்குளம் யூனியன், நாங்குனேரி யூனியன், ராதாபுரம் யூனியன் ஆகிய இந்த மூன்று யூனியன்களுக்கு மத்தியில் உள்ள அந்த ரோடு ஐந்து மைல் தூரம் பாழாகிக் கிடக்கிறது. டி.டி.சி. மீட்டிங்கிலும் அதைப்பற்றிச் சொன்னோம். அங்கிருந்து தீர்மானம் போட்டு அனுப்பினோம்.

பிரசாரம் பலமாக இருக்கிறதே தவிர, எங்கள் பகுதியில் எங்கு சென்றாலும் பாழாகவே இருக்கிறது. குறிப்பாக, பச்சையாற்றிலே ஒரு அணை கட்ட வேண்டுமென்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்



இருந்தே, சட்டசபை மெம்பராக வந்ததில் இருந்தே சொல்லிக் கொண்டு வருகிறோம். இதுவரை ஒவ்வொரு கூட்டத்திலும் கத்திக் கொண்டுதான் இருக்கிறோமே தவிர ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. அங்கு இருப்பவர்கள் எஸ்டிமேட் போட்டு அனுப்பப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். திருநெல்வேலி மாவட்ட கலெக்டரும், கன்னியாகுமரி மாவட்ட கலெக்டரும் கூடிப் பேசி அனுமதி கொடுக்க வேண்டுமென்றார்கள். நல்ல திட்டம் என்று அமைச்சர் அவர்களும் இண்டரஸ்ட் ஆகச் சொன்னார்கள். எங்கள் தொகுதியிலே அவர்கள் காலத்தில் இதாவது செய்யப்பட்டது என்ற வகையிலே செய்துகொடுக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். அதற்குள்ளாக திருநெல்வேலி கலெக்டரும், கன்னியாகுமரி கலெக்டரும் மாறிவிட்டார்கள். ஆபீசர்கள் இப்படி மாறுவதால் ஸ்கீம் அப்படியே நின்று விடுகிறது. பச்சையாற்றுத் திட்டத்திற்கு எஸ்டிமேட் போட்டு அனுப்பிவிட்ட காரணத்தால் இந்த பட்ஜெட்டிலே இடம் பெறும், நாங்குனேரி குளத்திற்குக் கால் வரலாம் என்று நினைத்தோம். நாங்குனேரி-மணிமுத்தாறு கால் என்று பெயர்தானே தவிர பலன் இல்லை. நல்லகண்ணன் என்று பெயர், பக்கத்தில் போய்ப் பார்த்தால் ஒரு கண் பொட்டையாக இருக்கிறது. நாங்குனேரி குளத்திற்குத் தண்ணீர் வருவதில்லை. அது நான்கு குளங்களைக் கொண்டது. நாங்குனேரி குளம் விஜயநாராயண குளம், திருக்குறுங்குடி குளம், வள்ளியூர் குளம் இவற்றைச் செப்பனிட்டு சீராக்கி தண்ணீரைத் தேக்கி வைத்தால் உண்மையாகவே நாங்குநேரி பஞ்சப் பிரதேசமாக இருக்காது. இதை உடனடியாகச் செய்து தருவதோடு அந்தப் பகுதியில் கிணறுகளை எடுப்பதற்கும் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பாக சில இடங்களில் மானாவாரி குளங்கள் கிடையாது. கால் வராத குளமும் கிடையாது. ஆகவே, அயல்நாட்டுப் பணம் வரும்போது போரிங் போட்டு கீழே இருக்கும் தண்ணீரை மேலே எடுக்க சர்க்கார் வாய்ப்பு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இவர்கள் ஏதோ புதிதாக என்னவெல்லாமோ செய்யப் போகிறார்கள் என்று மக்கள் நினைத்தார்கள். ஆனால் பழைய கருப்பனே கருப்பன்— அவாளுக்கு இவாள் எழுந்து உண்பாள் என்ற கதையில்தான் முடிந்து விட்டதுஎன்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஆலடி அருணா: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த மேலான அவையின் முன் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

கடந்த பத்தாண்டுகளாகத் தீர்க்கப்படாத பிரச்சினைகளும், முடிவு எடுக்கப்படாத பிரச்சினைகளும், மக்களிடத்தில் ஐயப்பாட்டை உருவாக்கிக் கொண்டிருந்த பிரச்சினைகளும் கடந்த